உதயணனின்

கடல் கோட்டை

வரலாற்று நாவல்

சீதை பதிப்பகம்

கடல் கோட்டை

வரலாற்று நாவல்

உதயணன்

சீதை பதிப்பகம்
சென்னை - 600 005.
☎ 9790706549 / 9790706548

நூல் கிடைக்குமிடம்

கௌரா புத்தக மையம்

9,செயிண்ட் ஜான் சர்ச் வணிக வளாகம், ராக்கின்ஸ் சாலை,
திருச்சிராப்பள்ளி-1 ☎ : 99520 34876 / 0431 2419584

விலை : ₹ 600.00

* முதற் பதிப்பு : 2015
* © உரிமை : பதிப்பகத்திற்கே
* பதிப்பாசிரியர் : எஸ். கௌமாரீஸ்வரி M.A., M.L.I.S.,
* நூலின் பெயர் : கடல் கோட்டை
* பொருள் : வரலாறு
* பக்கங்கள் : 944
* ஒளி அச்சு : ஜெய் ஜீனா
* வெளியீடு : சீதை பதிப்பகம்
4/7, ராஜா அனுமந்தா தெரு,
திருவல்லிக்கேணி, சென்னை - 5.
* ISBN : 978-93-82689-40-9
* அச்சிட்டோர் : கிளாசிக் பிரிண்டர்ஸ் செ - 2

CODE : 1357

கௌரா ஏஜென்ஸீஸ்

4A / 186, வி.ஆர். பிள்ளை தெரு, திருவல்லிக்கேணி, சென்னை - 5.
☎ : 044-2844 3791 / 97907 06548 / 97907 06549
www.gowrabookfair.com : E-mail : gowra09@gmail.com



அன்னவருக்கு...

பதிப்புரை

சரித்திர நாவல்கள் எழுதும் நாவல் ஆசிரியர்களுக்குப் பெரும் புதையலாக அமைந்திருப்பது பல்லவர் காலம். அது வல்லவர் காலமாகவும் இருந்திருக்கிறது. அவர்களுடைய வரலாறுகள் முழுமையாக எழுதப்படாத நிலையில் அங்கங்கே கிடைக்கும் வரலாற்றுக் குறிப்புகளை ஆதாரமாகக் கொண்டு அவர்களுடைய வீர தீரச் செயல்களை உணர்த்தும் வரலாற்றை முழுமையாக்க நிகழ்ச்சிக்குச் சான்றாகத் திகழ்பவை வரலாற்று நாவல்கள் என்னும் சரித்திர நாவல்கள்.

நரசிம்மவர்ம பல்லவனுக்குப் பின் காஞ்சியை ஆண்டவன் மன்னன் இராஜசிம்மன் என்பவன். இவனே காஞ்சியில் கைலாயநாதன் கோயிலைக் கட்டியன். இக்கோயிலே பின்னால் தஞ்சைப் பெரிய கோயில் கட்டுவதற்கு அடிப்படையாக அமைந்ததென்பர். அவர் சிறந்த வீரராகவும் திகழ்ந்துள்ளான். பல்லவர்கள் மேல் படையெடுத்து வந்த சாளுக்கிய மன்னன் விக்கிரமாதித்தனைத் தோற்கடித்தான். பின்னர் சாளுக்கிய நாட்டிற்கும் படையெடுத்துச் சென்று அதனை வென்றான். அரேபியர்களையும் திபெத்தியர்களையும் அவன் வென்றான் என்பது வியக்க வைக்கும் செய்தியாக உள்ளது. அவன் மட்டுமே இலட்சத்தீவுகளை வென்றான். அராபிய திபெத்தியரின் கடலாதிக்கத்தை முடியடித்தான். அவர்களுடைய கடல் கோட்டையத்தை தகர்த்தான். இந்த வரலாற்றுச் சிறப்பு மிக்க நிகழ்வை ஆதாரமாகக் கொண்டு அமைந்ததே கடல் கோட்டை என்னும் இந்தச் சரித்திர நாவல்.

வரலாற்று நால்களை ஆய்வுச் சான்றுகளின் துணைகொண்டு அற்புதமாக வடிவமைத்துள்ளார் நாவலாசிரியர் திரு. உதயணன் அவர்கள் மக்களிடையே ஈர்ப்பையும் எடுப்பான விழிப்புணர்ச்சியையும் ஏற்படுத்தியுள்ள பல சரித்திர நாவல்களை எழுதியுள்ள அவருடைய நடை நுட்பமும் திட்பமும் இந்த நாவலிலும் காணப்படுகின்றது.

அவருடைய வரலாற்று நால் வரிசையில் இந்நாவலையும் எமது பதிப்பகத்தின் மூலம் வெளியிட்டு மகிழ்கிறோம். வழக்கம்போல வாசக அன்பவர்கள் இந்தநாவலையும் படித்து மகிழ்வர் என நம்புகிறோம்.

பதிப்பகத்தார்.

முன்னுரை

பல்லவர்கள் என்று சொல்லும் போதே மகேந்திரவர்மரும் நரசிம்மவர்மரும் தான் பிரதானமாகத் தெரிவார்கள். மகேந்திர வர்மர் சர்வகலா வல்லவராய் இருந்தார். நரசிம்மவர்மர் மாவீரராய்த் திகழ்ந்தார். இந்திய வரலாறு எதை மறைத்தாலும் அவரது வாதாபி வெற்றியை மறைக்க முடியாது. அப்படியொரு பிரசித்தியைத் தந்தவர் நரசிம்மவர்மர்.

ஆனாலும் அவருக்குப் பின்னால் காஞ்சியை ஆண்ட ராஜசிம்மர் இந்த இருவருக்கும் மேலே ஒருபடி உயர்ந்து நிற்கிறார். மகேந்திரவர்மர், நரசிம்மவர்மர் ஆகிய இருவருமே வியக்கும் வண்ணம் காஞ்சியில் கைலாசநாதர் கோயிலையும் மாமல்லபுரத்தில் கடற்கரைக் கோயிலையும் சிறப்பாக அமைத்தனர். சோழ மாமன்னரான ராஜராஜ சோழர் காஞ்சி கைலாயநாதர் கோயிலைக் கண்டு அசந்து போனார் என்றும் தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டுவதற்கு இக்கோயில்தான் தூண்டுதலாக இருந்தது என்று வரலாறு சொல்கிறது.

கலை விஷயம் இப்படி என்றால் போர் விஷயத்திலும் ராஜசிம்மர் சூரராகவே விளங்கினார். பல்லவ நாட்டின் மீது படையெடுத்து வந்த மேலை சாளுக்கிய மன்னன் விக்கிர மாதித்தனை தோற்கடித்தார். சாளுக்கிய நாட்டிற்கும் படையெடுத்துச் சென்று வென்றார்.

இவையெல்லாவற்றையும் விட அவரைப் பற்றி என்னை எழுதத் தூண்டிய விஷயம் அவர் அராபியர்களையும் திபெத்தியர்களையும் வென்றார் என்பதுதான்.

எப்படிப்பட்டச் சாதனை இது?

இச்சாதனையைப் பற்றிய குறிப்புகள் பல்லவர்களைப் பற்றிக் கூறும் எல்லா வரலாறுகளிலும் காணப்படவில்லை. நீலகண்ட சாஸ்திரியார் எழுதிய 'தென்னிந்தியாவில் அயல் நாட்டினர் குறிப்புகள்' என்ற நூலிலும் டி.வி.மகாலிங்கம் எழுதிய 'பழங்காலத்தில் காஞ்சிபுரம்' என்ற நூலிலும்தான் சற்று விவரமாகக் காணப்படுகின்றன. ருசிகரமான தகவல்களும் கிடைக்கின்றன.

அவற்றையெல்லாம் கொண்டு ஆராய்ந்தேன். எந்தப் பல்லவ மன்னரும் கடலில் தங்கள் வலிமையைக் காட்டவில்லை.

Scanned by CamScanner

அதிகபட்சமாக இலங்கையோடு மோதியிருக்கிறார்கள். அவ்வளவுதான்.

ராஜசிம்மப் பல்லவர் மட்டுமே லட்சத் தீவுகளை வென்றார். அராபிய - திபெத்தியரின் கடலாதிக்கத்தை அழித்தார். அவர்களது கடல்கோட்டையைத் தகர்த்தார். சிறப்பு மிகுந்த இந்த வரலாற்றை இதுவரை யாரும் எழுதவில்லை.

திரு.சாண்டில்யன் 'ராஜதிலகம்' நாவலின் பின்னுரையில் இந்தச் சிறப்பான வரலாறு பற்றி எழுதப் போவதாகக் கூறியிருந்தார். ஆனால் காலம் அவரை அழைத்துக் கொண்டு விட்டது.

எனவே பல்லவ ஆட்சியின் மகோன்னதமான கால கட்டத்தையே 'கடல்கோட்டை'யாக வாசகர்களுக்கு வழங்கி யிருக்கிறேன்.

படிப்பவர்கள் இதில் பெருமை கொள்ளலாம்.

வழக்கம்போல் என் கதைகளில் இருக்கும் வாசகர்களுக்குப் பிடிக்கும் அனைத்து அம்சங்களும் நிறைவாகவே உள்ளன.

இந்த நாவலை மனமுவந்து சிறப்பாக வெளியிட்டுள்ள சிதை பதிப்பகத்திற்கு என் நெஞ்சார்ந்த நன்றிகள்

சென்னை 600 061.
செல்: 9655035140

உதயணன்



கடல் கோட்டை

முதல் பாகம்

1 உதய சந்திரன்

வானத்திலே வெள்ளியைப் போல மிளிரக்கூடிய மின்னல் ஒன்று பூமிக்கு வந்தது போல் நடைபோட்டுக் கொண்டிருந்த வெண்ணிறப் புரவியொன்றின் மீது தேவலோகத்துச் சுந்தர புருஷனைப் போல வாலிபன் ஒருவன் வீற்றிருந்தான். மின்னலைப் போன்று மின்னிய அப்புரவியின் பக்கத்திலேயே கார்மேகத்தைப் போன்ற கரிய யானையொன்றும் வந்து கொண்டிருந்தது. அந்த வாலிபன் அப்புரவியின் மீதும் கரிய யானையின் மீதும் மாறி மாறி பயணம் செய்ததை வழிநெடுகப் பலரும் பார்த்து வியந்தார்கள். ''யார் இந்தப் பிள்ளை?'' என்று கேட்டுக் கொண்டு பலவாறு ஊகித்துக் கொண்டார்கள். பேசிக் கொண்டார்கள்.

வாலிபனோ யாரைப் பற்றியும் கவலைப்படவில்லை. எதைப் பற்றியும் கவலைப் படுவதாகவும் தெரியவில்லை. கருமமே கண்ணாகக் கொண்டவனைப் போல பயணம் செய்தான். தேவைப்பட்ட இடங்களில் இறங்கிக் கொண்டான். ஆற்றிலோ அல்லது தடாகங்களிலோ நீராடினான். மாற்றுடைகளை அணிந்து கொண்டான். அன்னசாலைகளில் உணவை உண்டு தங்க நாணயங்களை எண்ணிக் கொடுத்தான். தேவைக்கு மேலே ஒரு வார்த்தையையும் அவன் பேசவில்லை.

ஒரு சிலர் அவனை யாரென விசாரித்தபோது, ''யாதும் ஊரே யாவரும் கேளிர்'' என்று மட்டும் சொன்னான் அவன்.

அவன் கூறிய வார்த்தைக்கு அர்த்தம் தெரிந்தவர்கள் வியந்தார்கள். தெரியாதவர்கள் குழம்பினார்கள். அறிவாளி என்றார்கள் சிலர். திமிர் பிடித்தவன் என்று நினைத்தார்கள் சிலர். அவனோ அவர்களைப் பற்றி எதுவும் நினைக்கவில்லை.

அவனுக்கு வயது இருபத்தைந்து இருக்கலாம். உடலெங்கும் இளமை துள்ளியது. இளமையோடு சேர்ந்து ஆண்மையும் புலப்பட்டது. உடல் பயிற்சியின் காரணமாக அவனது உடல்

வயிரம் பாய்ந்திருந்தது. விலையுயர்ந்த ஆடைகளையும் அணிகலன் களையும் அணிந்திருந்த விதமானது அவன் செல்வச் செழிப்பு மிகுந்த குடும்பத்தைச் சேர்ந்தவன் என்பதைப் பறைச்சாற்றியது. எடுப்பான நாசியும், திறந்த மார்பும், திரண்ட தோள்களும், அகன்ற நெற்றியும், நீண்ட கைகளும் அவன் அழகன் மட்டுமல்ல வீரனும் கூட என்று சொல்லின.

அவன் பயணம் செய்த புரவி மீதும் யானையின் மீதும் மூட்டை முடிச்சுக்கள் இருந்தன. அவற்றில் மாற்றுடைகளும் கழல்களும் மட்டுமின்றி ஆயுதங்களும் இருந்தன. அவன் இடையிலேயே கூட நீண்ட உடைவாள் ஒன்று தொங்கியது. தனது பயணத்தின் போது தேவைப்படும் என்று தான் விதவிதமான ஆயுதங்களைக் கொண்டு வந்திருந்தான் அவன். அவனை அனுப்பி வைத்தவர்கள் கூட, ''நீ போகும் வழியில் கொள்ளையும் கொலையும் நடக்கும். அவற்றை எதிர் கொள்ள உன் உடல் பலம் போதாது. ஆயுதங்களும் அவசியம் தேவை. ஆகவே நீ பயின்ற ஆயுதங்கள் எல்லாவற்றிலும் இரண்டிரண்டு எடுத்து வைத்துக்கொள்'' என்று தான் சொல்லியிருந்தார்கள். ஆனால் வழி நெடுக அவற்றுக்கு அவசியம் இல்லாமல் இருந்ததைக் கண்டு அவன் வியக்கவே செய்தான். 'வழிப்பறியும் கொள்ளையும் புராண காலத்திலிருந்தே இருக்கும் விஷயங்களாயிற்றே? அவையெல்லாம் போய்விட்டதா? நாடுகள் திருந்திவிட்டனவா?' என்று தனக்குள் கேட்டுக் கொள்ளவும் செய்தான்.

பயணத்தைத் தொடங்கியபோது போய்ச் சேர வேண்டிய இடத்தை அடைய ஒரு வார அவகாசம் தேவைப்படும் என்று சொல்லியிருந்தார் அவன் தந்தை. அவனோ பத்து நாட்கள் ஆனாலும் பரவாயில்லை என்று நினைத்து புரவிக்கும் யானைக்கும் போதுமான ஓய்வையும் உறக்கத்தையும் அளித்து மெதுவாகவே பயணம் செய்தான்.

ஒரு வார காலம் ஆனதும் தான் செல்ல வேண்டிய இடத்தைப் பற்றி அறிந்துகொள்ள விரும்பிய அவன் பிரதான அன்னசாலை ஒன்றில் ஓய்வெடுத்துவிட்டு முதியவர் ஒருவரிடம் வினவினான்.

அவன் அவனை ஏற இறங்கப் பார்த்து விட்டு, 'பாவம்' என்று முணுமுணுத்தார்.

அவரது சொல்லுக்கு பொருள் விளங்கவில்லை ஆதலால், ''உங்கள் அனுதாபம் எனக்கு விளங்கவில்லை'' என்றான்.

அவரோ அவனது வார்த்தைகளைப் பற்றிக் கவலைப் படாமல், ''இந்தப் புரவியும் யானையும் உனக்குச் சொந்தமா?'' என்று கேட்டார்.

வாலிபன் கலகலப்பாகப் பேசக்கூடியவன்தான். சில நேரங்களில் 'இவன் பேச்சை நிறுத்தமாட்டானா?' என்று பலர் நினைப்பதுண்டு. பேச்சினாலேயே சூழ்ந்திருக்கும் சோர்வுகளை துரத்திவிடும் சுபாவம் கொண்டவனான அவன் பயணத் துவக்கத்திலிருந்து மௌனத்தையே கடைப்பிடித்து வந்தான் என்றால் அதற்கு அவனது தந்தையின் எச்சரிக்கை தான் காரணமாய் இருந்தது. ''நீ போய்ச் சேரும் இடம் வரை நீ பேசாமல் இருப்பது தான் உத்தமம். இல்லாவிட்டால் நீ வேறு இடத்திற்குப் போய்விடுவாய்'' என்று சொன்னார் தந்தை.

''சாப்பிடவாவது வாய் திறக்கலாமா?'' என்று துடுக்காகக் கேட்டான் அவன்.

''நீ சாப்பிடாமல் பழகிக் கொள்வது நல்லது. அது நீ ஏற்கப் போகும் பதவிக்கு உகந்ததாக இருக்கும்'' என்றார் தந்தை.

அவரிடம் வார்த்தை விளையாட்டுகளை அவன் காட்டுவ தில்லை. எனவே அவருக்குத் தலையாட்டிவிட்டு தந்தை சொல்லே மந்திரம் என்று கருதி புறப்பட்டான். முடிந்த வரை பேசுவதை வெகுவாகக் கட்டுப்படுத்திக் கொண்டான்.

ஆனால் தேவையான கேள்வி ஒன்றைக் கேட்டபோது முதியவர் அதற்குப் பதிலைச் சொல்லாமல் அனுதாபச் சொற்களை உதிர்த்ததால் சற்றே பொறுமை இழந்த அந்த வாலிபன் தன்னைக் கட்டுப்படுத்தவும் முயன்று , ''ஆமாம் இவை என் சொந்தங்கள். என் செல்வங்கள். புரவியின் பெயர் மின்னல். யானையின் பெயர் கார்மேகம்'' என்றான்.

''நீ செல்வந்தர் வீட்டுப் பிள்ளையா?'' என்று கேட்டார் அவர்.

''ஆமாம்'' என்றான் வாலிபன்.

முதியவர் மீண்டும், ''ஐயோ பாவம்'' என்று முணு முணுத்தார்.

வாலிபனுக்குச் சற்று கோபம் உண்டாயிற்று.

''பெரியவரே, நான் கேட்டதற்கு பதில் சொல்லாமல் என்னை கேள்வி கேட்கிறீர்கள்? தொண்டை நாடு சான்றோர் உடைத்து என்று கேள்விப்பட்டிருக்கிறேன். ஆனால் இங்கே உங்களைப் போன்றவர்கள் இருப்பார்கள் என்பது தெரியாது'' என்றான் வாலிபன்.

''நான் அனுதாபப்படுவதற்குக் காரணம் இருக்கிறது.''

''என்ன காரணம்?''

''உன் சொந்தங்களையும் நீ இழக்கப்போகிறாய். அதை எண்ணித்தான் அனுதாபப்படுகிறேன்.''

''தனது உடமைகளை என்றாவது ஒரு நாள் மனிதன் இழந்துதான் ஆக வேண்டும். ஆகவே, என் செல்வங்களை இழப்பது பற்றிய கவலை உங்களுக்கு வேண்டாம். தயவு செய்து காக்கை மடு எங்கிருக்கிறது? அதற்கு எத்தனை நாளைக்குப் பயணம் செய்ய வேண்டியிருக்கும் என்பதை மட்டும் சொல்லுங்கள்.''

''சோழ நாட்டிற்கு என்ன ஆயிற்று? இந்த வருகை எப்போது நிற்கும்?'' என்று முணுமுணுத்துக் கொண்ட பெரியவர் அவனது கேள்விக்கான பதிலைச் சொன்னார்.

அவரிடம் நன்றி தெரிவித்துவிட்டு புறப்பட்டான் வாலிபன்.

ஒருநாள் வடக்கு திசையில் பயணம் செய்த அவன் மூன்று சாலைகள் பிரியும் முக்கூடலுக்கு வந்து நின்றான். எந்த சாலை வழியாகச் செல்வது என்று குழம்பினான். அச்சாலைகள் சந்திப்பில் இருந்த சந்தை வெளிக்குச் சென்று அங்கிருந்த வியாபாரியிடம் ''காக்கை மடுவிற்கு எந்த வழியில் செல்ல வேண்டும்?'' என்று கேட்டான்.

அவர் அவனைப் பார்த்ததும் ஏதோ கணக்கு போட்டுவிட்டு, ''நீ இரண்டாயிரத்து நான்கு'' என்றார்.

''நீங்கள் சொல்வது எனக்கு விளங்கவில்லை. நான் கேட்ட கேள்விக்கு இது பதிலும் இல்லை'' என்றான் வாலிபன்.

''வடமேற்காகச் செல்லும் பாதையில் செல்'' என்றார் வியாபாரி.

''நீங்கள் ஏதோ என்னைச் சொன்னீர்களே?'' என்று கேட்டான் வாலிபன்.

''நான் என்னைப் பற்றிச் சொன்னபோது நீ பதிலைக் கேட்டாய். நான் பதிலைச் சொல்லும்போது நீ என்னைப் பற்றிக் கேட்கிறாய். இந்த எண் என்னிடம் வழிகேட்ட வாலிபர்களின் எண்ணிக்கையை குறிக்கிறது'' என்றார் வியாபாரி.

''இரண்டாயிரத்து மூன்று பேர் இதுவரை இந்த வழியாக வந்திருக்கிறார்களா? என்ன விசேஷம்?'' என்று கேட்டான் வாலிபன்.

''விசேஷமில்லை. விசனம்தான். நீயே தெரிந்து கொள் போ'' என்று சொன்ன வியாபாரி 'பாவம்' என்று மெல்லச் சொல்லிக் கொண்டு உள்ளே இருந்த சந்தைவெளி அம்மன் கோயிலை நோக்கிச் சென்றார்.

இதைப்போலவே வேறு சில இடங்களிலும் அவனுக்குப் பதில் சொல்லியவர்கள் அவனுக்காக அனுதாபப்பட்டபோதுதான் அந்த வாலிபன் சற்றே யோசிக்க முனைந்தான். அவனை அனுப்பி வைத்த அவனது தந்தை இரண்டு ஓலைகளைக் கொடுத்து, செல்ல வேண்டிய இடம், சந்திக்க வேண்டிய நபர் ஆகியோரைப் பற்றி மட்டுமே சொல்லியிருந்தாரேதவிர பயணத்திற்கான காரணத்தைப் பற்றி எதையும் கூறவில்லை. அவனும் அதைப் பற்றி கேட்கவில்லை. போய்ச் சேர்ந்த பிறகு தெரிந்துவிடும் என்று எதையும் கேட்காமல் புறப்பட்டான். ஆனால் செல்ல வேண்டிய இடம் பற்றி விசாரிக்க முற்பட்ட பிறகு பதில் கூறியவர்களெல்லாம் அவனுக்காக அனுதாபப் பட்டபோது தான் செல்ல வேண்டிய இடம் பற்றிய கேள்விகளும் அதையொட்டிய குழப்பங்களும் அவனுக்குள் எழுந்தன. ஏதோ மர்மம் இருப்பதாக உணர்ந்தான்.

அதேசமயம் தான் விசாரித்த நபர்கள் அனைவரும் ஆடவர்களாகவே இருந்ததால் அவனுக்குச் சந்தேகமாக இருந்தது. பெண்மணி யாரிடமாவது கேட்டுப் பார்க்கலாம் என்று தீர்மானித்துக் கொண்டான். அதற்கேற்ப அவனது பயண வழியில் இடைப்பட்ட சிற்றூர் ஒன்றில் பெண்கள் அதிக அளவில் காணப்பட்டார்கள். அப்பெண்களில் பெரும் பாலானவர்கள் இளம் பெண்களாகவும் அழகானவர்களாகவும் இருந்தார்கள். மலர்கள் பல பெண் வடிவமெடுத்து நடமாடுவது போல் தோன்றியது அவர்களது நடமாட்டம். சில பெண்கள் யானை மீது அமர்ந்து வந்து கொண்டிருந்த அவனைக் கண்டு 'யார் இந்த மன்மதன்?' என்று எண்ணியவர்களைப் போல அகன்ற கண்களால் அவனை ஊன்றிப் பார்க்கவும் செய்தார்கள். யானையை நிற்கச் செய்து கீழே இறங்கி நடந்த அந்த வாலிபன் பெண்களில் ஒருத்தியை அழைத்து, ''இங்கே ஒரே பெண்கள் கூட்டமாக இருக்கிறதே, என்ன விசேஷம்?'' என்று கேட்டான்.

அவள் லேசாகச் சிரித்தாள். ''இதைக் கேட்கத்தான் யானையை விட்டுக் கீழே இறங்கினீர்களா?'' என்று கேட்டாள்.

வாலிபனுக்கு ஒரு மாதிரியாகிவிட்டது. ''இந்த தொண்டை நாட்டில் எல்லோருமே இப்படித்தான் இருப்பார்களா? கேட்ட

கேள்விக்குப் பதில் சொல்லாமல் எதிர் கேள்விகளைத் தான் கேட்பார்களா? இவர்களுக்கு மரியாதையே தெரியாதா?'' என்று உள்ளுக்குள் கேட்டுக் கொண்ட அவன் ''நீ யார் என்பதையாவது சொல்ல முடியுமா?'' என்று கேட்டான்.

''பார்த்தால் எப்படி தெரிகிறது?'' என்று கேட்டாள் அந்தப் பெண்.

''பெண் என்று தெரிகிறது. ஆனால், பெண் தானா என்பது உறுதியாகத் தெரியவில்லை'' என்றான் அவன் கோபத்தை அடக்கிக் கொண்டு.

''ஏன் அப்படி?'' என்று கேட்டாள் அவள்.

''பெண்ணே, பெண்ணாக இருப்பவர்களிடம் இருக்கக் கூடிய குறைந்த பட்ச பரிவு கூட உன்னிடம் இருப்பதாகத் தெரியவில்லை. வழிப்போக்கனிடம் விவரம் சொல்லாமல் குறும்பு பேசுகிறாய்.''

''வழிப்போக்கர்களுக்கு விவரம் சொல்வதற்காக நாங்கள் பிறக்கவில்லை.''

''அதற்காகப் பிறக்க வேண்டாம். தெரியாமல் கேட்பவர் களுக்கு நேரான பதில்களைச் சொல்லலாம் அல்லவா?''

''உங்களுக்கு என்ன விவரம் வேண்டும்?''

''ஒரு சந்தேகம்.''

''என்ன?''

''காக்கை மடுவிற்கு வழி கேட்டேன். வழி சொன்ன பலரும் என்னை ஏற இறங்கப் பார்க்கிறார்கள். அனுதாபப்படுகிறார்கள். ஏன் என்று தான் தெரியவில்லை.''

''ஐயா, வாலிபனே, போகாத இடந்தன்னில் போக வேண்டாம் என்ற மூதுரை ஒன்றிருக்கிறது. அது தெரியுமா உங்களுக்கு?''

''அதற்கென்ன?''

''அப்படிப் போகிறவர்களைக் கண்டால் நல்லவர்கள் கவலைப்படுவது இயற்கை.''

''காக்கை மடுவிற்கு நான் போகக் கூடாதா?''

''தாராளமாகச் செல்லுங்கள். எனக்கென்ன?''

''உன் அபிப்ராயம் இருக்கட்டும். காக்கை மேட்டில் அப்படி என்ன இருக்கிறது?''

''காக்கைகள் இருக்கலாம்.''

''மீண்டும் உன் குறும்பைத் துவங்கிவிட்டாய். தொண்டை நாட்டவர்கள் எல்லாம் உன்னைப்போலத்தான் இருப்பார்களா?''

''நீங்கள் எந்த நாடு?''

''உன் கேள்வி எனக்கு வேண்டாம். என் கேள்விக்குப் பதில் சொல்.''

''பதில் சொன்னால் வந்த வழியே திரும்பிப் போய் விடுவீர்களா?''

''மாட்டேன்.''

''அப்படியானால் பதில் சொல்வதில் பயனில்லை. நீங்களே போய் தெரிந்து கொள்ளுங்கள். இங்கிருந்து தெற்கே சென்று மேற்கே திரும்பி காததூரம் கடந்தால் நிறைய காக்கைகள் பறந்து கொண்டிருக்கும். அதுதான் காக்கை மடு'' என்றாள் அப்பெண்.

''காக்கை மடுவிற்குப் போன பிறகு உன்னைக் கவனித்துக் கொள்கிறேன். உன்னை மட்டுமல்ல. இந்தத் தொண்டை நாட்டவர்களை கவனிக்கிறேன்'' என்று கூறிவிட்டு புரவியில் ஏறி புறப்பட்டான் வாலிபன்.

''பாவம்'' என்று முணுமுணுத்தாள் அந்தப் பெண்.

அவள் கூறிய திசையில் காத தூரம் பயணம் செய்தான் அவ்வாலிபன். ஆனால், அந்தப் பெண் கூறியது போல் காக்கைகள் எதுவும் தென்படவில்லை. சுற்றிலும் வனாந்திரமாகவே இருந்தது. அதைக் கண்டபோது ஒரு வேளை தான் பாதைமாறி வந்துவிட்டோமா என்று தோன்றியது அவனுக்கு. கண்ணுக்கெட்டியவரை ஆள் நடமாட்டம் எதுவுமில்லை. மாலை நேரம் வேறு மயங்கிக் கொண்டிருந்ததால் இரவில் காட்டிற்குள் ஆரம்பப் பகுதியிலேயே இரவைக் கழிக்கலாம் என்றும் தீர்மானித்தான். அதுதான் சரி என்பது போல் அவனது இரண்டு வாகனங்களும் தலைகளை ஆட்டின. அவற்றுடன் ஏதோ நயனமொழிகளைப் பேசிய அவ்வாலிபன் காட்டுப் பகுதியில் தென்பட்ட இடிபாட்டுப் பகுதிக்குச் சென்றான். நன்றாகக் கட்டப்பட்ட மண்டபம் ஒன்று பராமரிப்பின்றி இடிந்து விழுந்துகிடந்தது. அப்போதைக்கு அது போதும் என்று கருதிய அவ்வாலிபன் பந்தம் ஒன்றைக் கொளுத்தி நட்டுவிட்டு தனது மூட்டை முடிச்சுக்களை மண்டப இடிபாடுகளின் மீது பரப்பிவிட்டுப் படுத்தான். அவனுக்குத் துணை செய்வது போல் புரவியும் யானையும் இரு பக்கங்களிலும் நின்றன. அவனும் அசதியால் தூங்கிப் போனான்.

தூக்கம் கெட்ட கனவுகளால் குலைந்தது. அவனை யாரோ அசைப்பதுபோல் தோன்றவே கண்களைத் திறந்தபோது, அவனைச் சுற்றி பலர் நின்றிருப்பது தெரிந்தது. கண்களைக் கசக்கிவிட்டுக் கொண்டு பார்த்தான். சுற்றியிருந்தவர்களின் தோற்றத்திலிருந்து அவர்கள் நல்லவர்களல்ல என்று தோன்றியது. புரவியையும் யானையையும் காணவில்லை.

அவன் கண் விழித்ததைக் கண்டதும் சுற்றியிருந்தவர்களில் ஒருவன் அவனிடம், ''எழுந்திரு'' என்றான் முரட்டுக் குரலில்.

''முடியாது'' என்றான் வாலிபன்.

''முடியாதா? ஏன்?''

''நான் தூங்க வேண்டும். தொந்தரவு செய்யாதீர்கள்.''

வாலிபனின் பதில் அவர்களை அசர வைத்தது.

''நாங்கள் யாரென்று தெரியாமல் மடத்தனமாகப் பேசுகிறாய். எழுந்திரு'' என்றான் முரடன்.

''எழுந்து கொண்டால் எப்படி தூங்க முடியும்?'' என்று கேட்டான் வாலிபன்.

''நின்று கொண்டே தூங்கு. இப்போதைக்கு எழுந்திரு. உனக்குக் கீழே இருக்கும் மூட்டைகள் எங்களுக்கு வேண்டும்.''

''என்னைத் தள்ளிவிட்டு எடுத்துக்கொள்ள வேண்டியது தானே?''

''உன்னை அசைக்க முடியவில்லை. பாறையைப் போல இருக்கிறாய்.''

''கொன்று விட வேண்டியதுதானே?''

''தூங்குபவனை நாங்கள் கொல்வதில்லை.''

''நல்ல எண்ணம்தான்'' என்று சொன்ன வாலிபன், ''உங்களையெல்லாம் வெட்டி வீழ்த்த என்னால் முடியும். ஆனால் தூங்கிக் கொண்டிருந்த என்னைக் கொல்லத் துணியாததால் உங்களை விட்டுவிடுகிறேன். போய்விடுங்கள்'' என்று கூறி எழுந்து கொண்டான்.

''வெறுங்கையோடு போகும் பழக்கம் எங்களுக்கில்லை. எங்களுக்கு தேவை உன் மூட்டைகளில் இருக்கும் செல்வம். நீயாகக் கொடுத்தால் உத்தமம். இல்லையென்றால் விலகு. நாங்கள் எடுத்துக் கொள்கிறோம்'' என்றான் முரடன்.

''இங்கே இருந்த புரவியும் யானையும் எங்கே?'' என்று கேட்டான் வாலிபன்.

''உன் கேள்விக்கு பதில் சொல்ல நாங்கள் வரவில்லை. விலகு'' என்று முரடன் சொன்னதும் விரல்களை உதட்டுக்கிடையில் வைத்து விசித்திர ஒலியெழுப்பினான் வாலிபன்.

அதையடுத்து காட்டிலிருந்து அவனது புரவியும் யானையும் வந்தன. அவனும் உடைவாளை உருவினான்.

அடுத்த சில நிமிடங்களில் முரடர்கள் அதாஹதம் செய்யப்பட்டார்கள்.

அவர்களில் ஒருவனைப் பிடித்து, ''காக்கை மடு எங்கிருக்கிறது?'' என்று கேட்டான் வாலிபன்.

''காக்கை மடுவா? நீங்கள் அதற்கு எதிரான திசையில் பயணம் செய்கிறீர்கள். வந்த வழியே சென்று அரைக்காத தூரத்தில் மேற்கே திரும்புங்கள்'' என்றான் அவன்.

தன்னிடம் இருந்த நாணயங்களையும் ஆபரணங்களையும் எடுத்து முரடர்களிடம் நீட்டிய அவ்வாலிபன், ''என் நம்பிக்கை பொய்த்துவிட்டது. நடக்காது என்று நினைத்த வழிப்பறி நடந்துவிட்டது. இவற்றை நானே உங்களுக்குக் கொடுக்கிறேன். ஆயினும் ஒரு வார்த்தை. வழி தெரியாமல் தவிப்பவர்களிடம் வழிப்பறி செய்வதை இன்றோடு நிறுத்திக் கொள்ளுங்கள். தவிப்பவர்களுக்கு தொல்லை கொடுத்தால் அத்தொல்லை அவர்களுக்கே வந்து சேரும்'' என்று சொல்லி எல்லாவற்றையும் கொடுத்தான்.

தனக்கு தவறான வழிகாட்டிவிட்ட பெண்ணை நினைத்தபடி திரும்பிப் பயணம் செய்த வாலிபன் மறுநாள் காலை காக்கை மடுவை அடைந்தான்.

அங்கே பெரியதோர் விஹாரம் இருந்தது.

அங்கிருந்த காரியஸ்தரிடம் தனது வசமிருந்த ஓலைகளை நீட்டி, ''நான் தான் உதயசந்திரன். நாகைப்பட்டிணத்திலிருந்து வருகிறேன்...'' என்று ஆரம்பித்தான்.

அதையடுத்து காரியஸ்தன் நடந்து கொண்ட முறை அவனைத் திகைப்படைய வைத்ததோடு பல விஷயங்களும் புரியலாயின.

★ ☆ ★



2

பொன்னாமி

கொள்ளைக்காரன் கூறிய வழியில் அந்த இரவு நேரத்திலேயே பயணம் செய்த உதயசந்திரன் என்னும் வாலிபன் பனமூர் என்று அழைக்கப்பட்ட ஊரை விடியற்காலை நேரத்தில் வந்து சேர்ந்தான். அந்த ஊருக்கு மிக அருகிலேயே காக்கை மடு என்ற இடமும் இருந்தது. அதை உணர்த்தும் விதமாக அப் பிராந்தியத்தில் ஏராளமான காக்கைகள் பறந்து கொண்டிருந்தன. அப்பகுதியில் மக்கள் நடமாட்டமும் அதிகமாக இருந்தது. வரவேண்டிய இடத்தை உறுதி செய்து கொண்ட உதயசந்திரன் தான் சந்திக்க வேண்டிய மனிதரின் பெயரைச் சொல்லி விசாரித்தபோது, ''அதோ அந்த விஹாரத்தின் இடப்பக்கம் இருக்கும் மாளிகைக்குப் போ. அங்கே இருக்கும் காரியஸ்தரிடம் உன்னைப் பற்றிய விவரத்தைச் சொல். உனக்குத் தேவையானவற்றைச் செய்வார்'' என்று சொன்னார்கள்.

''இது என்ன விஹாரம்?'' என்று கேட்டான் உதயசந்திரன்.

''சமண விஹாரம். காஞ்சியில் இருக்கும் திருப்பருத்திக் குன்றத்தையடுத்து சமணர்களது பெரிய விஹாரம் இதுதான்'' என்றார் ஒருவர்.

'எதுவானால் எனக்கென்ன?' என்று தனக்குள் சொல்லிக் கொண்ட உதயசந்திரன் விஹாரத்திற்கு பக்கத்தில் இருந்த மாளிகைக்குச் சென்று காரியஸ்தரை சந்தித்து தன்னிடமிருந்த இரண்டு ஓலைகளையும் கொடுத்து ''நான் தான் உதயசந்திரன். நாகைப்பட்டினத்திலிருந்து வருகிறேன்'' என்று சொல்ல ஆரம்பித்ததும் பொறுமை இல்லாதிருந்த காரியஸ்தர் ''நாகைப்பட்டினத்தில் உன் இம்சை தாங்கவில்லை. நீ உருப்படுவதற்கு ஒரே வழி இங்கு வரவேண்டியதுதான். உன்னைத் துறவியாக்க வேண்டியது அகளங்கரின் கடமை. இதுதானே ஓலையில் இருக்கும் செய்தி? இதைத்தானே உன் தந்தை எழுதியிருக்கிறார்?'' என்று எரிச்சலோடு சொன்னார்.

அதிர்ந்து போனான் உதயசந்திரன்.

''ஓலையைப் பார்க்காமலேயே விஷயத்தைச் சொல்கிறீர்களே அது எப்படி?'' என்று வினவினான்.

''ஓலைதான் அன்றாடம் வந்து கொண்டிருக்கிறதே போதாதா?'' என்று அலுத்துக் கொண்டார் காரியஸ்தர்.

''தினமும் ஓலை வருகிறதா? தாங்கள் சொல்வது எனக்கு விளங்கவில்லை.''

''ஓலை வருவது ஓர் இம்சை என்றால் அதைக் கொண்டு வருபவர்களுக்கு பதில் சொல்வது பெரும் இம்சை'' என்று மேலும் அலுத்துக் கொண்ட காரியஸ்தர், ''சோழ நாட்டிலிருந்து துறவறம் பெறுவதற்காக உன் போன்ற நபர்கள் இங்கே வருவது இரண்டாயிரத்தைத் தாண்டிவிட்டது'' என்றார்.

''துறவறம் பெறுவதற்காகவா? இல்லை ஐயா. அதற்காக இருக்காது. தாங்கள் ஓலையைப் படித்துப் பாருங்கள்'' என்றான் உதயசந்திரன் பதட்டத்துடன்.

''நீயே படி. எதற்குச் சந்தேகமும் பதட்டமும்?'' என்று கேட்ட காரியஸ்தர் ஓலையைப் பிரித்து அவனிடமே கொடுத்தார்.

''பனமூர் விஹாரத்து தலைமைத்துறவி அகளங்க அடிகளுக்கு நாகைப்பட்டிணத்து பெருவணிகன் பெருஞ்சாத்தன் வணக்கத்துடன் விடுக்கும் விண்ணப்பமாவது. எனது ஒரே பிள்ளை உதயசந்திரன் மாவீரன். அவன் அறியாத வர்மக்கலை இல்லை. நாகையில் மட்டுமின்றிச் சோழ நாட்டிலேயே அவன் தான் வீரனாகத் திகழ்கிறான். ஆனால் அவனது பிரசித்தமே அவனுக்குப் பகையாக இருக்கிறது. அவனைத் தீர்த்துக்கட்ட விரோதிகள் பலர் உண்டாகிவிட்டார்கள். அவனும் அடங்குபவனாக இல்லை. ஆர்ப்பாட்டமாகவே இருக்கிறான். அவனை எங்களால் சமாளிக்க முடியவில்லை. அவன் வாழ்வு நல்வாழ்வாக அமைய வேண்டுமானால் அவன் துறவறம் மேற்கொள்வதுதான் உகந்தது. அத்துறவறத்தை தங்களைத் தவிர வேறு யாராலும் திறம்பட அளிக்க இயலாது. அவனுக்கு இல்லற இன்பங்கள் துன்பங்களையே தரும் என்பது என் அபிப்பிராயம். வீடு பேறு என்னும் மகத்தான இன்பத்தை அவன் துய்க்க வேண்டும். அதற்கு துறவறமே சிறந்தது. தாங்களே அதை அளிக்கத் தகுந்தவர். அருள் புரிய வேண்டும்'' என்று எழுதியிருந்ததைக் கண்டான் உதயசந்திரன்.

வழி நெடுக பலரும் தன்னைப் பார்த்து அனுதாபப் பட்டதற்கான காரணம் அவனுக்குப் புரிந்தது. இளைஞனான தான்

துறவறம் மேற்கொள்வதை எண்ணியே பலரும் அனுதாபப் பட்டிருக்கிறார்கள் என்பதை உணர்ந்தான். அதோடு தன்னிடம் பேசிய இளம் பெண்கூட அதே விதத்தில் அனுதாபப் பட்டதோடு மட்டுமின்றி தான் துறவறத்தை மேற்கொள்ளக் கூடாது என்ற எண்ணத்திலேயே காக்கை மடுவிற்குப் போகும் வழியைச் சொல்லாமல் தப்பான வழியைச் சொல்லியிருக்க வேண்டும் என்று நினைத்தான் அவன்.

வழியில் பேசிய ஒருவர், ''இதுவரை இரண்டாயிரத்து மூன்று பேர் இந்த வழியாக வந்திருக்கிறார்கள்'' என்று சொன்னதையும், ''சோழ நாட்டிலிருந்து துறவறம் பெறுவதற்காக உன் போன்ற நபர்கள் இங்கே வருவது இரண்டாயிரத்தை தாண்டும்'' என்று காரியஸ்தர் சொன்னதையும் இணைத்துப் பார்த்தான் உதயசந்திரன்.

''துறவறம் பெறுவதற்காகச் சோழ நாட்டிலிருந்து இவ்வளவு பேர் வந்ததற்கு என்ன காரணமாக இருக்க முடியும்?'' என்று தனக்குத்தானே கேட்டுக் கொண்ட அவனுக்கு விடை தெரியவில்லை.

அதற்கு விடை தெரியவில்லை என்றாலும் தன் விஷயத்தில் விடை தெரிந்துவிட்டதால் ''தந்தை எதற்காக இப்படியொரு முடிவுக்கு வந்தார்? வீரக்கலைகள் அனைத்தையும் கற்கச் செய்து அவர் மேன்மேலும் வீரனாக உயர்த்த விரும்பாமல் துறவியாக்கி விட எப்படி முனைந்தார்? துறவியாகிவிட்டால் ஒன்றுமே செய்ய முடியாதே! வீரத்தால் பற்பல சாதனைகளைச் செய்ய வேண்டும் என்று தான் கட்டிய கனவுகள் எல்லாம் துறவியாகி விட்டால் எப்படி நிறைவேறும்? சமணத் துறவியாகி ஆசைகளை நீக்கி விட்டு காவியணிந்து காலம் தள்ளவா நான் பிறந்தேன்?'' என்றெல்லாம் பலவாறு நினைத்த உதயசந்திரன் ஒரு முடிவுக்கு வந்தவனாய் காரியஸ்தரை நோக்கி ''மன்னிக்க வேண்டும் ஐயா. துறவியாக எனக்கு விருப்பம் இல்லை'' என்றான் உறுதியான குரலில்.

''உனக்கேது விருப்பம்? இங்கு வந்துவிட்டால் துறவியாக வேண்டியதுதான்'' என்றார் காரியஸ்தர்.

''அப்படி கட்டாயம் எதுவும் இல்லை காரியஸ்தரே. என் சம்மதமில்லாமல் யாரும் என்னைத் துறவியாக்க முடியாது'' என்றான் உதயசந்திரன்.

''உன் சம்மதம் யாருக்கு வேண்டும்? அதோடு உன் சம்மதத்தைச் சொல்வதற்கு உனக்கு உரிமை கிடையாது. நீ எங்கள் உடமை'' என்றார் காரியஸ்தர்.

''நான் உங்கள் உடமையா? என்ன பிதற்றுகிறீர்கள்?''

''பிதற்றுவது நானல்ல. நீ கொண்டு வந்த இரண்டாவது ஓலையைப் பார்'' என்று சொல்லி ஓலையைப் பிரித்துக் கொடுத்தார் காரியஸ்தர்.

''என் ஒரே மகன் உதயசந்திரன் என் சொந்தமல்ல. பனமூர் விஹாரத்துக்கும் அதன் தலைமைத் துறவி அகளங்க அடிகளுக்கும் தான் இனி உடமை. இதை எனது பூரண ஒப்புதலுடன் எழுதிக் கொடுக்கிறேன்'' என்று அவனது தந்தை எழுதியிருந்தார்.

ஓலையைக் கண்ட பிறகு பல கேள்விகள் அவனுக்குள்ளே எழுந்தாலும் அவற்றைக் காரியஸ்தரிடம் கேட்க அவன் தயாராக இல்லை. எனவே ஓலையை அவரிடமே கொடுத்துவிட்டு ''மிக்க நன்றி'' என்றான்.

அவனை வெற்றி கொண்ட மாதிரி ஒரு பார்வை பார்த்த காரியஸ்தர் ''இப்போது என்ன சொல்கிறாய்?'' என்று கேட்டார்.

''எதுவுமில்லை ஐயா'' என்றான் உதயசந்திரன்.

''இது சரி'' என்று சொன்ன அவர் பணியாட்கள் இருவரை அழைத்து அவர்களிடம் அவனை ஒப்படைத்தார்.

பணியாட்கள் அவனை விஹாரத்திற்குள் அழைத்துச் செல்ல முற்பட்டபோது ''என் யானை? குதிரை?'' என்று கேட்டான் அவன்.

''அவற்றைப் பற்றிய நினைவுகளை நீ விட்டுவிடு. நீயே எங்கள் உடமையாகிவிட்ட பின் யானையாவது பூனையாவது'' என்றார் காரியஸ்தர்.

பிறகு அவன் விஹாரத்திற்குள் அழைத்துச் செல்லப் பட்டான்.

விஹாரம் விஸ்தாரமானதாக இருந்தது. உள்ளே நிறைய பிட்சுக்கள் இருந்தாலும் ஆரவாரம் எதுவும் இல்லை. அமைதியே நிலவியது. இதுதான் துறவறத்தின் சிறப்பு போலும் என்றெண்ணிக் கொண்டான் உதயசந்திரன். அவனை உள்ளே இருந்த தனி மாடம் ஒன்றுக்கு அழைத்துச் சென்ற பணியாட்கள் அங்கிருந்த கூடம் ஒன்றில் அமரச் சொல்லி ''இங்கேயே இருங்கள். உங்களுக்குச் செய்ய வேண்டியவற்றைச் செய்யும் நபர் வருவார்'' என்று சொன்னார்கள்.

போகும்போது ''உங்களுக்கு ஏதாவது தேவையா?'' என்று கேட்டார்கள்.

''எனக்குத் தேவையானது இங்கே இல்லை'' என்றான் உதயசந்திரன்.

அவர்கள் சென்றுவிட்டபின் எதைப் பற்றியும் யோசிக்காமல் தலையிலேயே படுத்தான். உடல் சோர்வும் மனத்தில் உண்டான வெறுப்பும் அவனுக்குத் துக்கத்தை அளித்தன.

இரண்டு நாழிகை நேரத்திற்கு உறங்கினான் உதயசந்திரன். அவனை யாரும் எழுப்பவில்லை. அவனாகவே விழித்து எழுந்ததும் ''என்ன? நிம்மதியாக உறங்கினீர்களா?'' என்று இனிமையானதொரு குரல் கேட்டது.

அக்குரலுக்குரிய பெண்ணொருத்தி அவனுக்கு முன்னால் வந்து நின்றாள். கண்களைக் கசக்கிக் கொண்டு அவளைப் பார்த்தான் உதயசந்திரன்.

அவள் அழகு சுந்தரியாக இருந்தாள். ஒப்பனைகள் எதுவும் இல்லாமலேயே அவளிடம் அபார அழகு குடி கொண்டிருந்தது. அங்கங்கள் ஒவ்வொன்றும் அளவெடுத்து அழகுபடுத்தியது போல் கச்சிதமானவைகளாக இருந்தன. அவளது அழகைப் பார்ப்பதிலேயே ஒரு சுகம் இருப்பதாகக் கருதினான் உதய சந்திரன்.

அவனது மன ஓட்டங்களையும் வியப்பையும் ஊகித்துக் கொண்ட அப்பெண் உள்ளுக்குள் சிரித்துக் கொண்டு, ''நிம்மதியாக உறங்கினீர்களா என்று கேட்டேனே, காதில் விழவில்லையா?'' என்று கேட்டாள்.

உதயசந்திரன் சுதாரித்துக் கொண்டு, ''உறக்கம் என்பதே சுகமானது தான்'' என்றான்.

''துறவறத்தை அடைவதற்கு முன்பாகவே உண்மையை உணர்ந்து கொண்டிருக்கிறீர்கள்'' என்றாள் அப்பெண். அவளே தொடர்ந்து ''இங்கே பலர் வருகிறார்கள். பெரும்பாலானவர்கள் துறவியான பிறகு உண்மையை உணருகிறார்கள். ஒரு சிலர் உண்மையை உணர்ந்து கொண்டு துறவியாகிறார்கள். நீங்கள் இரண்டாவது ரகம்'' என்றாள்.

''துறவிகள் வாழும் இந்த விஹாரத்திற்குள் உன்னைப் போன்ற அழகான... இல்லை இல்லை... உன்னை போன்ற பெண்களுக்கு என்ன வேலை...?'' என்று கேட்டான் அவன்.

''அதென்ன ஏதோ சொல்ல வந்து நிறுத்திவிட்டீர்கள்?''

''அது... அதாவது உன்னைப் போன்ற அழகான பெண் என்று சொல்ல வந்தேன்.''

''ஏன் நிறுத்திவிட்டீர்கள்? நான் அழகாக இல்லையா?''

''அப்படிச் சொல்லவில்லை. துறவியாக மாறப்போகும் நிலையில் அழகைப் பற்றிப் பேசுவது சரியாகாது என்று தான் விட்டுவிட்டேன்.''

''நல்லது. அப்படித்தான் இருக்க வேண்டும்'' என்று சொன்ன அவள் ''உங்கள் உடமைகள் எதுவும் இல்லையா?'' என்று கேட்டாள்.

''இல்லை. கொண்டு வந்ததையெல்லாம் கொள்ளைக் காரர்களுக்கு கொடுத்துவிட்டேன். கடைசி வரை என்னோடு வந்த என் யானையும் புரவியும் கூட போய்விட்டன'' என்றான் உதயசந்திரன்.

''அதுவும் நல்லதுதான். உங்களுக்கு உரியது காவியுடை ஒன்றுதான்'' என்று சொன்ன அவள் காவி ஆடை ஒன்றைக் கொண்டு வந்து கொடுத்து, ''இந்த உடையை அணிந்து கொண்டு அதோ அந்த கோடிக்கு வாருங்கள்'' என்று சொன்னாள்.

அவனும் அவ்வாறே அணிந்து கொண்டு கோடிப் பகுதிக்குச் சென்றான். அங்கே நெடியதோர் நீச்சல் குளம் இருந்தது. அதில் இறங்கி நீராடச் சொன்னாள் அவள்.

''குளம் அழகாக இருக்கிறது'' என்று ஏதோ சொன்னான் உதயசந்திரன்.

''எந்த அழகையும் ரசிக்க வேண்டாம். போய் குளியுங்கள்'' என்றாள் அவள்.

அவன் குளத்தில் இறங்கி நீந்தி நீராடினான்.

நீண்ட நேரமாகியும் அவன் கரையேறாததால் அங்கு வந்த அப்பெண் அங்கே வந்தாள். நீச்சல் குளத்தில் நின்றிருந்த உதயசந்திரனைப் பார்த்துவிட்டு, ''குளித்தது போதும். வெளியே வாருங்கள்'' என்றாள்.

''முடியாது'' என்றான் உதயசந்திரன்.

''குளத்திலேயே குடியிருக்கப் போகிறீர்களா?''

''அதில்லை. அணிந்திருந்த ஆடை நழுவிவிட்டது. அதனால்தான்...''

''கர்மம்...கர்மம்'' என்று உள்ளுக்குள் சொல்லிக் கொண்ட அவள் ''இருங்கள் வருகிறேன்'' என்று சொல்லிவிட்டுச் சென்று வேறொரு ஆடையுடன் வந்து அவனை நோக்கி வீசிவிட்டு, ''இதையும் நழுவ விட்டுவிடாதீர்கள்'' என்று சொல்லிவிட்டு அகன்றாள்.

அவன் அந்த ஆடையை அணிந்து கொண்டு கரைக்கு வந்தான். சுற்றிலும் யாருமில்லை என்பதைத் தெரிந்து கொண்டு உடலைத் துடைத்துக் கொண்டான். அந்தப் பெண் அங்கே மீண்டும் வந்து உலர்ந்த ஆடையொன்றைக் கொடுத்துவிட்டுப் போனாள். பிறகு உணவுத் தட்டுடன் வந்து அவனிடம் கொடுத்து ''மெதுவாக உண்ணுங்கள். அவசரம் வேண்டாம்'' என்று சொன்னாள்.

''எல்லாவற்றுக்கும் நீங்கள் தானா? ஆண்கள் யாருமில்லையா?'' என்று கேட்டான் உதயசந்திரன்.

''அதெல்லாம் உங்களுக்கெதற்கு? சாப்பிடுங்கள் முதலில்.''

''உன் பெயர் என்ன என்பதையாவது நான் அறிந்து கொள்ளலாமா?''

''பௌர்ணமி. அது தான் என் பெயர்.''

''உன் பெயர் தான் எனக்கும்.''

''என்ன உளறுகிறீர்கள்.''

''உன் பெயர் பௌர்ணமி. என் பெயர் சந்திரன். இரண்டும் ஒன்றுதானே?''

''தேவையில்லாத பேச்சுக்களை விட்டுவிட்டு சாப்பிடுங்கள் முதலில்'' என்று கூறிவிட்டுச் சென்றாள் அவள்.

''பௌர்ணமி. பௌர்ணமி. நல்ல பெயர். பொருத்தமான பெயர். அவளது முகம் பௌர்ணமி மாதிரித்தான் இருக்கிறது. அவளைப் பெற்றவர்கள் வாழ்க'' என்று சொல்லிக் கொண்ட உதயசந்திரன் உணவை உண்ணலானான்.

உணவொன்றும் பிரமாதமானதாக இல்லை என்றாலும் கொலைப் பசியில் இருந்த அவனுக்கு அது அமிர்தமாக இருந்தது. உணவின் அளவும் கணிசமானதாக இருந்ததால் நன்றாக சுவைத்து சாப்பிட முற்பட்டான்.

அப்போது நீச்சல் குளத்தில் ஏதோ சலசலப்பு கேட்கவே உணவுத் தட்டை வைத்துவிட்டு அங்கு சென்றான்.

குளத்தில் பௌர்ணமி குளித்துக் கொண்டிருந்தாள். தன்னை விட அமைதியாகவும் லாவகமாகவும் நீந்திக் கொண்டிருந்த அவளை விழுங்கிவிடுவது போல் பார்த்தான் அவன். அவனப்படி அங்கு வந்து நிற்பதைக் கண்டுவிட்ட அவள் நீருக்குள் கழுத்து வரை ஆழ்த்திக் கொண்டு, ''இங்கே எதற்காக வந்தீர்கள்? பெண் குளிப்பதைப் பார்த்துக் கொண்டிருப்பது தான் சோழ நாட்டவர் நாகரீகமா?'' என்று சத்தமாகக் கேட்டாள்.

அவன் ஏதோ பேச முற்பட்டபோது அவளே பேசமுற்பட்டு, ''அப்படியே உட்காருங்கள்'' என்றாள்.

''இங்கா?''

''ஆமாம். உட்காருங்கள். என்னைப் பார்த்துக் கொண்டு அல்ல. முதுகை காட்டிக் கொண்டு.''

''நான் வீரன். முதுகை காட்ட முடியாது.''

''இங்கே என்ன போரா நடக்கிறது? அதோடு நீங்கள் இங்கே வந்திருப்பது துறவறம் பூண. ஞாபகமிருக்கட்டும். சொன்னதைச் செய்யுங்கள்.''

அவன் முதுகை காட்டிக் கொண்டு அமர்ந்தாலும் அடிக்கடித் திரும்பி திருட்டுத்தனமாக அவளைக் காணவே செய்தான்.

சிறிது நேரத்தில் அவள் குளத்தை விட்டு வேறு பக்கமாக வெளியேறினாள். அரை நாழிகை கழித்து அங்கு வந்து அவனைப் பார்த்து, ''இன்னும் இங்கேயே தான் அமர்ந்திருக்கிறீர்களா?'' என்று கேட்டாள்.

''உத்தரவு வரவில்லை. ஆகவே தான் அமர்ந்திருக்கிறேன்.''

''அப்படியா? அப்படியே கண்ணை மூடிக் கொண்டு மகான் மஹாவீரரை நினைத்து தியானம் செய்யுங்கள். நான் சொல்லும் வரை கண்களைத் திறக்க வேண்டாம்.''

இப்படிச் சொல்லிவிட்டு அவள் சென்ற பின் அவள் கூறியபடியே கண்களை மூடினான் உதயசந்திரன். அவனது மனக்கண்களில் மஹாவீரர் தெரியவில்லை. பௌர்ணமியே தெரிந்தாள். அவளது அழகையும் அங்க லாவண்யங்களையும் எண்ணியபடி அமர்ந்திருந்தான்.

இதற்கிடையில் அவனருகே யாரோ சிலர் வந்து அமர்வது போல் ஓர் உணர்வு ஏற்பட்டது உதயசந்திரனுக்கு. அதோடு நாசியைத் துளைக்கும் நறுமணமும் எழுந்தது.

கண்களை மூடிக் கொண்டிருக்க அவனால் முடியவில்லை.

திறந்தான்.

☆☆☆



3 விஹாரத்தில் விகாரங்கள்

உதயசந்திரனால் தன் கண்களையே நம்ப முடியவில்லை.

அவனைச் சுற்றி வட்ட வடிவில் ஐந்து பெண்கள் அவனைப் பார்த்தபடி அமர்ந்திருந்தார்கள். அனைவரும் இளம் பெண்களாகவே இருந்தார்கள்.

துறவிகள் வாழும் விஹாரத்தில் பௌர்ணமி என்ற பெண் இருந்ததே பொருத்தமில்லாததாக இருக்க தற்போதோ ஒன்றுக்கு ஐந்து பெண்கள் தன்னைச் சுற்றி அமர்ந்திருந்தது அவனுக்கு பெருவியப்பாக இருந்தது. ''இது விஹாரம் தானா?'' தனக்குள் கேட்டுக் கொண்ட அவன் அப்பெண்களைப் பார்த்து, ''நீங்களெல்லாம் யார்?'' என்று கேட்டான்.

''நான் பத்மஸ்ரீ''

''நான் பாவ ஸ்ரீ''

''நான் கர்ம ஸ்ரீ''

''நான் தர்ம ஸ்ரீ''

''நான் வருண ஸ்ரீ''

- என்று ஐந்து பெண்களும் தத்தம் பெயர்களைச் சொன்னார்கள்.

''எதற்காக என்னைச் சுற்றி அமர்ந்திருக்கிறீர்கள்?'' என்று புரியாமல் கேட்டான் அவன்.

''அறைக்குள் போகலாமா?'' என்று கேட்டாள் பத்மஸ்ரீ.

''அறைக்குள் போவதா? நாமெல்லோருமா? எதற்கு?'' கேட்டான் உதயசந்திரன்.

''அஞ்ஞாத வாசத்திற்கு'' என்றாள் பாவ ஸ்ரீ.

''அஞ்ஞாத வாசமா?''

''ஆமாம். யாரும் பார்க்கக் கூடாதல்லவா?''

''ஏன் பார்க்கக் கூடாது?''

''உங்களுக்கு மூளையே இல்லையா? இதையெல்லாம் மற்றவர்கள் எப்படி பார்க்க முடியும்?'' என்றாள் தர்மஸ்ரீ.

''அப்படி நாம் என்ன செய்யப் போகிறோம்?''

உதயசந்திரன் இப்படிக் கேட்டதும் ''பத்மஸ்ரீ! மன்மதனுக்கு ஒன்றும் தெரியாது போலிருக்கிறது. கேட்கிறார். பதில் சொல்'' என்றாள் தர்மஸ்ரீ.

''தெரியவில்லையென்றால் கற்றுக் கொடுத்துவிட்டால் போகிறது'' என்றாள் பத்மஸ்ரீ.

உதயசந்திரன் சற்றே தடுமாறிப் போய், ''பௌர்ணமி எங்கே?'' என்று கேட்டான்.

''இன்று அமாவாசை. பௌர்ணமி வராது'' என்றாள் வருணஸ்ரீ.

''நான் அந்தப் பௌர்ணமியைக் கேட்கவில்லை. சற்று முன் இருந்தாளே அவளைக் கேட்கிறேன்.''

''அவள் தான் வேண்டுமா?''

''அவளை முதலில் கூப்பிடுங்கள்.''

''முதலில் அவள். பிறகு நாங்களா?'' என்றாள் பாவஸ்ரீ.

''எங்களைப் பிடிக்கவில்லையா?'' என்று கேட்டாள் கர்மஸ்ரீ.

''எங்களைப் பிடிக்கவில்லை என்று இதுவரை யாரும் சொன்னதில்லை'' என்றாள் பத்மஸ்ரீ.

''ஒரு விஹாரத்திற்குள் பேசுகிற பேச்சாக உங்கள் பேச்சு இல்லை'' என்றான் உதயசந்திரன்.

''நீங்கள் சொன்னால் பேச்சை நிறுத்திவிடுகிறோம். பேச்சு இங்கே தேவையில்லாததுதான்.''

உதய சந்திரனுக்கு தற்போதுதான் அவர்களது பேச்சின் அர்த்தம் புரிந்தது.

தனது தோரணையை மாற்றிக் கொண்டு, ''என்னைப் பற்றி உங்களுக்கு எதுவும் தெரியாது'' என்றான்.

''சொன்னால் தெரிந்து கொள்கிறோம்.''

''சொல்வதைவிட செயலிலேயே காட்டிவிடுகிறேன். ஆனால் ஒன்று.''

''என்ன?''

''உங்களில் யாருக்காவது எலும்பு நொறுங்கலாம். பரவாயில்லை என்றால் வாருங்கள். அறைக்குள் செல்ல

வேண்டாம். இங்கேயேதான் தயார்'' என்று கூறி பாவழரீ என்னும் பெண்ணை இழுத்து தன்னோடு இறுக்கி அணைத்தான்.

அவள் அதை எதிர்பார்க்கவில்லை.

எந்தப் பெண்ணுமே எதிர்பார்க்கவில்லை.

அவனால் இறுக்கமர்க அணைக்கப்பட்ட பாவழரீ, ''ஐயோ'' என்றாள்.

அவனும் பிடியை விட்டுவிட்டதால் சுருண்டு விழுந்தாள் அவள்.

அவளுக்கு ஏதோ சேதாரம் உண்டாகியிருக்க வேண்டும் என்று எல்லோருக்குமே தோன்றியது.

கைகளைத் தட்டிப் பணியாளர்களை அழைத்தார்கள்.

பாவழரீ அங்கிருந்து அகற்றப்பட்டாள்.

உதயசந்திரன் அங்கிருந்த அறையொன்றில் அடைக்கப்பட்டு கதவுகள் பூட்டப்பட்டன.

அன்று முழுவதும் அவன் அந்த அறையிலேயே இருந்தான். யாரும் அண்டவில்லை. உணவும் தரப்படவில்லை.

மறுநாள் பணியாள் ஒருவன் கதவைத் திறந்து பார்த்தான். உதயசந்திரன் நிஷ்டையில் அமர்ந்திருப்பதைப் பார்த்து விட்டு திரும்பிச் சென்றான்.

பகல் நேரத்தில் வேறொருவன் வந்தபோது உதயசந்திரன் படுத்துக்கிடந்தான். ''பசி எடுக்கவில்லையா?'' என்று கேட்டான் வந்தவன்.

''இந்தக் கேள்வியை ஏன் நேற்றைக்கு கேட்கவில்லை?'' என்று கேட்டான் உதயசந்திரன்.

''பட்டினி போட்டும் உன் திமிர் அடங்கவில்லை'' என்றான் வந்தவன்.

''நீ சோறு போட்டால் கூட உண்பதற்கு நான் தயாராக இல்லை'' என்றான் உதயசந்திரன்.

''ஏன்?''

''உங்கள் இஷ்டப்படி உணவளித்து அதை உண்பதற்கு நானொன்றும் ஆடோ மாடோ அல்ல.''

''இந்தப் பேச்சுக்கள் உன்னிடம் நீடித்தால் உனக்கு நிரந்தரமாகவே உணவு கிடைக்காது.''

''அது நல்லதுதான்.''

''உயிர் போவது உனக்கு நல்லதா?''

''பிடிக்காத சூழ்நிலை - தேவையற்ற பேச்சு - புரிந்து கொள்ளாத மனிதர்கள் - இவைகளையெல்லாம் விட மரணம் நல்லதுதான். அதற்கு நான் தயாராகிவிட்டேன். யாரும் எனக்குத் தொல்லை தர வேண்டாம்.''

உதயசந்திரன் இப்படிச் சொன்னதற்கு பிறகு அங்கே வந்த மனிதன் போய்விட்டான். அரை நாழிகை கழித்து உணவு கொண்டு வந்து வைக்கப்பட்டது.

''இது வேண்டியதில்லை. எடுத்துச் செல்'' என்றான் உதயசந்திரன்.

''உணவை உண்ணும்படி உத்தரவு'' என்றான் பணியாளன்.

''உணவை மறுப்பது என்பது என் முடிவு'' என்றான் உதயசந்திரன்.

''உணவை மறுத்தால் காரியஸ்தர் இங்கே வருவார்.''

''காலனே வந்தாலும் கவலையில்லை.''

பணியாளன் அகன்றான்.

சிறிது நேரம் கழித்து நான்கு மல்லர்கள் வந்தார்கள்.

''உணவைச் சாப்பிடு'' என்றார்கள்.

''முடியாது என்று ஏற்கெனவே சொல்லிவிட்டேன்'' என்றான் உதயசந்திரன்.

மல்லர்களில் ஒருவன் அவனைத் தாக்க முற்பட்டான்.

உதயசந்திரன் எழுந்து கொண்டு ''என்னைச் சீண்டாதீர்கள். போய் விடுங்கள்'' என்றான்.

''சிங்கத்தையும் சீண்டுகிறவர்கள் நாங்கள்'' என்றான் மல்லன்.

அதையடுத்து உதயசந்திரனின் பேச்சு நின்றது. கைகள் செயல்பட்டன. அவனே புயலாக மாறினான். தனக்குத் தெரிந்த நரம்படிகளை லாவகமாகக் கொடுத்தான். அந்த வர்மக் கலையைப் பற்றி அறியாத மல்லர்கள் மலைகளைப் போல மல்லாந்து விழுந்தார்கள்.

சிறிது நேரத்தில் அவர்கள் அகற்றப்பட்டதும் காரியஸ்தர் அங்கு வந்தார்.

''உதயசந்திரா! நீ செய்திருப்பது தண்டனைக்குரியது. தெரியுமா?'' என்று மிரட்டினார் காரியஸ்தர்.

''நான் செய்த குற்றம் என்ன?''

''சாப்பிடச் சொன்ன மல்லர்களைத் தாக்கியிருக்கிறாய்.''

''இல்லை. என்னைத் தாக்க வந்தவர்களிடமிருந்து என்னைக் காத்துக் கொண்டேன். அது குற்றமல்ல.''

''உன்னைத் தாக்காத பெண்ணை நொறுக்கியிருக்கிறாய். எலும்பு முறிந்திருக்கிறது.''

''அவர்களை நான் எச்சரித்தேன். ஆனால் கேட்கவில்லை.''

''அவர்களை அனுப்பியவன் நான்.''

''வியப்பாக இருக்கிறது.''

''எது?''

''துறவறம் மேற்கொள்ள வருபவனிடம் பெண்களை அனுப்புவதும் தனியறைக்குப் போய் சல்லாபம் செய்யச் சொல்வதும் வியப்பிற்குரிய விஷயங்கள் என்பது எப்படி. காரியஸ்தருக்குத் தெரியாமல் போய்விட்டன?''

''தெரியும். தெரிந்து தான் செய்கிறேன். யார் யாருக்கு எதைச் செய்ய வேண்டும் என்பதை முடிவு செய்ய வேண்டியது நான்தான் என்பதை நீ உணர்ந்து கொள்வது நல்லது.''

''உங்கள் உரிமைகளைப் பற்றி நான் கேட்கவில்லை. இது சமண விஹாரம். இங்கே நான் துறவியாவதற்கு அனுப்பப் படுகிறேன். ஆனால் இங்கேயோ அதற்கு நேர்மாறாகப் பெண்கள் காணப்படுகிறார்கள். சும்மா இருந்தாலும் பரவாயில்லை. வம்பு செய்கிறார்கள். தகாத காரியத்திற்குத் தூண்டுகிறார்கள். இதை செய்யச் சொல்லியதே நீங்கள் தான் என்கிறீர்கள். இந்த விவஸ்தையற்ற முரண்பாட்டை நான் தடுப்பதோ அதைப் பற்றிக் கேள்வி கேட்பதோ உங்களுக்குத் தவறாக இருக்கிறது. காரியஸ்தர்கள் அவர்களே! இங்கே என்ன நடக்கிறது? துறவறமா அல்லது வேறு ஏதாவதா?''

''துஷ்டனே! ஏற்கெனவே நீ எங்கள் உடமை என்பதை உணர்த்திவிட்டேன். எங்கள் கட்டளைகளுக்கு கீழ்படிவதே உன் கடமை. நீ இங்கே அடிமை. கேள்வி கேட்பதை நிறுத்திவிட்டு ஒழுங்காக நடந்து கொள். உண்ணாவிரதம் இருக்க முற்பட்டால் சித்திரவதைகள் துவங்கும்'' என்று உறுதியான குரலில் கூறிவிட்டு அங்கிருந்து அகன்றார் காரியஸ்தர்.

உதயசந்திரனுக்கு ஒரு புறம் சங்கடமாகவும் மறுபுறம் வெறுப்பாகவும் இருந்தது. நடக்கிற காரியங்கள் எல்லாம் துறவறத்திற்கு நேர்மாறாக நடப்பதைச் சகிக்க முடியாமல் சங்கடப்பட்ட அவன் -

முரண்பட்ட விஷயங்களைப் பற்றி கேள்வி கேட்க முற்படும்போது 'நீ எங்கள் உடமை' என்று சொல்லி காரியஸ்தர் வாயை அடைக்க முற்பட்டதால் வெறுப்படைந்தான்.

''தந்தையே! நான் செய்த தவறுதான் என்ன? வீரத்தைக் காட்டியதா தவறு? அதுவும் நீங்கள் கற்றுத் தந்த வீரத்தை வாழ்க்கையாக்கியது உங்களுக்குத் தவறாகப் போய்விட்டதா? வீரக்கலை பயின்று கோழையாக வாழ வேண்டும் என்பதுதான் உங்கள் விருப்பமா? அதுதான் உங்கள் விருப்பமென்றால் என்னை வீட்டை விட்டுத் துரத்தியிருக்கலாமே? காக்கை மடுவிற்கு ஏன் அனுப்ப வேண்டும்? அதுவும் துறவியாகும் படி ஏன் கட்டளையிட வேண்டும்? அதோடு நிறுத்திக் கொண்டிருக்கக் கூடாதா? இந்த விஹாரத்துக்கு நான் உடமை என்று ஏன் என்னை இங்கே தத்து கொடுக்க வேண்டும்? இங்கே துறவியாவதற்குள் என்னென்ன பாடு பட வேண்டும் என்று தெரியவில்லையே! இங்கே ஒரு முட்டாள்தனமான காரியஸ்தர் இருப்பது உங்களுக்குத் தெரியாதா? இவரிடம் போய் என்னை மாட்டிவிட்டு விட்டீர்களே! இவர் என்னை அடிமை என்றே பட்டம் கட்டிவிட்டாரே! இவர் சொல்வதையெல்லாம் நான் கேட்க வேண்டுமாமே! இது என்ன சோதனை?'' என்று தந்தையை எண்ணிப் புலம்பினான் உதயசந்திரன்.

அந்த விஹாரத்திற்கு வந்ததிலிருந்து எல்லாமே பொருளற்ற காரியங்களாகவே இருப்பதாகக் கருதிய அவன் அதற்கு மற்றவர்களை காரணம் காட்டுவது பயனற்றது என்றும் கருதினான். இந்த பொருளற்ற வாழ்க்கையிலிருந்து விடுபட வேண்டும் என்றால் யாரையும் நம்பி பயனில்லை என்பதையும் தானாக எதையாவது செய்தால் தான் உண்டு என்பதையும் உணர்ந்து யோசனையில் ஆழ்ந்தான்.

காரியஸ்தர் போனதற்குப் பிறகு யாரும் வந்து அவனுக்குத் தொல்லை தரவில்லை. இரவு நேரம் வந்தது, சமண விஹாரமாக இருந்ததால் பந்தம் எதுவும் ஏற்றப்படவில்லை. அனைவரும் தத்தம் அலுவல்களை மாலை நேரத்திலேயே முடித்து விட்டார்களாதலால் அந்தப் பகுதி அமைதியில் ஆழ்ந்தது. ஆனால் சமணர்கள் கட்டுப்பாடுகளைப் பற்றிய விவரமெதுவும் அறியாத ஆந்தைகள் மட்டும் விட்டுவிட்டு இரைச்சலிட்டு அமைதியைச் சோதித்தன.

அதோடு தங்கள் அலுவல் நேரம் இரவே ஆதலால் பொந்துகளில் அடைந்து கிடந்த அந்த பட்சிகள் பொந்துகளை விட்டுவிட்டு விஹாரத்தின் பல பகுதிகளில் பரவலாக அமர்ந்து சமணத்துறவிகளை அலட்சியமாகப் பார்த்தன. சாதாரணமாக பகல் நேரங்களில் ஒன்றிரண்டு ஆந்தைகள் பொந்துகளை விட்டு வெளியே பறந்தால் அவற்றை நான்கைந்து காக்கைகள் துரத்துவதும்

தாக்குவதும் இயல்பு. ஆனால் காக்கை மடுவில் காக்கைகளின் எண்ணிக்கை மிகவும் அதிகமாக இருந்ததால் இந்த ஆந்தைகள் மறந்தும் கூட பகல் நேரங்களில் வெளியே வருவதில்லை. இரவு நேரம் வந்துவிட்டால் மொத்தமாக வெளிப்பட்டு காக்கைகளுக்கு சவாலிடுவது போல் பறப்பது அவற்றின் வாடிக்கையாக இருந்தது. சில ஆந்தைகள் இரவுக் காலங்களில் காக்கைகளைத் தேடிச் சென்று தாக்கவும் செய்தன.

இவ்வாறு ஆந்தைகள் தங்கள் விருப்பம் போல் இரைந்து கொண்டிருந்த இரவுப் பொழுதில் நரிகளும் போட்டியிடுவது போல் சில நேரங்களில் ஊளையிட்டன. அதே நேரத்தில் தனது அறையை நோக்கி ஜல்ஜல் என்ற மெல்லிய ஒலி நகருவதை உணர்ந்தான் உதயசந்திரன். தன்னை பயமுறுத்த காரியஸ்தர் ஒருவேளை பேயை அனுப்புகிறாரா என்று வேடிக்கையாக நினைத்தான் அவன்.

நல்லவேளையாக பேய் எதுவும் வரவில்லை.

அதற்கு நேர் மாறான பேரழகியான பௌர்ணமியே வந்தாள்.

கதவைத் திறந்து 'நான் தான்' என்று அவள் கூறியதுமே அடையாளம் தெரிந்து கொண்டான் உதயசந்திரன்.

''ஒரே இருட்டாக இருக்கிறதே கஷ்டமாக இல்லையா?'' என்று கேட்டாள் அவள்.

''பௌர்ணமி தான் வந்தாயிற்றே இனி ஏது இருள்?'' என்றான் உதயசந்திரன்.

அவள் மெல்லச் சிரித்துவிட்டு, ''நீங்கள் கூடச் சந்திரன் தானே?'' என்று கேட்டாள்.

''இந்தச் சந்திரனுக்கு கிரகணம் பிடித்துவிட்டது'' என்றான் அவன்.

''நன்றாகத்தான் பேசுகிறீர்கள். ஆனால் பிடிவாதம் எதற்கு? இதோ உணவு கொண்டு வந்திருக்கிறேன். சாப்பிடுங்கள்'' என்றாள் பௌர்ணமி.

''எனக்கு உணவு ஒரு பிரச்சனை அல்ல. பத்து நாட்கள் வரை கூட பட்டினி கிடக்க என்னால் முடியும். தயவு செய்து என் சந்தேகங்களைத் தீர்த்து வை. அதுவே எனக்குச் சாப்பிட்ட மாதிரிதான்'' என்று அலுத்துக் கொண்ட உதயசந்திரன் ''இது வரை இரண்டாயிரம் பேர் சோழ நாட்டிலிருந்து இங்கே துறவு மேற்கொள்ள வந்திருக்கிறார்களாமே அது உண்மையா? என்ன காரணம்?'' என்று கேட்டான்.



4 உதய சந்திரனின் போக்கு

''ஆணவத்திற்கு அடையாளமான உங்களது சிகை நீக்கப்படும்'' என்றாள் பௌர்ணமி.

''ஆவணத்திற்கும் தலைமுடிக்கும் என்ன சம்பந்தம்?'' என்று பதிலைத் தெரிந்தே கேட்டான் உதயசந்திரன்.

''உங்களைப் போன்ற வாலிபர்களுக்கும் பருவப் பெண்களுக்கும் அழகைத் தருவது கூந்தல்தான். கூந்தலின் அழகை எண்ணி அவர்கள் பெருமையும் கர்வமும் கொள்வது இயற்கை. அதை நீக்கிவிட்டால் அழகு போய்விடுகிறது. ஆணவம் அழிகிறது. இரண்டும் அழியும் போது பணிவும் அடக்கமும் வருகிறது. ஆகவேதான் இந்த ஏற்பாடு.''

பௌர்ணமி பதில் சொல்லிக் கொண்டிருந்த அதே நேரத்தில் சிகை நீக்கப்பட்டால் தனது நிலை கேவலமாகிவிடும் என்பதை உணர்ந்து உள்ளுக்குள் அதிர்ச்சியே அடைந்தான் உதயசந்திரன். தலை மொட்டையாக்கப்பட்டால் ஆணவமானது உடனடியாக அடங்கி மானம் பறிபோகுமாதலால் அதை தடுப்பதற்கு என்ன செய்யலாம் என்று யோசித்தான்.

அவன் பதில் சொல்லாததை கவனித்த பௌர்ணமி ''என்ன பேச்சையே காணோம்?'' என்றாள்.

உதயசந்திரன் சற்றே தெளிவடைந்தவனாய் ''சிகையை நீக்கிவிட்டால் ஆணவம் போய்விடும் என்று நிச்சயமாகச் சொல்ல முடியாது பெண்ணே'' என்றான்.

''நீக்கிய பிறகு கவனிக்க வேண்டிய விஷயம் வாலிபரே'' என்று சொன்ன பௌர்ணமி ''சிகை இழந்த பிறகும் கர்வம் விலகவில்லை என்றால் வேறு பல வழிகள் இருக்கின்றன'' என்றாள்.

''என்ன வழிகள்?''

ஒன்றிரண்டைச் சொன்னாள் அவள்.

''இது சமண விஹாரமா அடிமைக்கூடமா என்பது தெரியவில்லை. ஒருவனைத் துறவியாக்கும் வழி இதுவாகவும் தெரியவில்லை'' என்று சொன்ன உதயசந்திரன், ''எதுவானால் என்ன பௌர்ணமி? என்னிடமிருந்து சிகையை நீக்கினாலும் சரி, வேறு எதை நீக்கினாலும் சரி நான் ஏற்றுக் கொள்கிறேன். போய் காரியஸ்தரிடம் சொல்'' என்று சொல்லிவிட்டு உணவை உண்ணத் துவங்கினான்.

தனது கேள்விகளுக்கு பதில் தான் தேவையேயன்றி உணவல்ல என்று ஆரம்பத்தில் பேசிய அவன் பதில்களைப் பற்றியோ சிகையை நீக்குவது பற்றியோ கவலைப்படாமல் உணவை உண்ண முற்பட்டதை அறிந்த அவள் அவனது போக்கை எதிர்பார்க்காததால், ''என்ன இப்படி பேசுகிறீர்கள்? வேண்டாம் என்று போராடப் போவதில்லையா?'' என்று கேட்டாள்.

''எதை வேண்டாம் என்று போராட வேண்டும் நான்?''

''சிகையை நீக்குவதைத்தான்.''

''துறவிக்குச் சிகை எதற்கு? இங்குள்ள துறவிகள் சிகையற்றுத்தானே இருக்கிறார்கள்?'' என்று கேட்ட அவன் ''நான் பதில் கேட்டதற்கே இங்கே இருப்பவர்கள் மல்லர்களை வைத்து மிரட்டுகிறார்கள். போராட ஆரம்பித்தால் என்ன செய்வார்களோ? அதோடு நான் துறவியாக வேண்டும் என்று என்னைப் பெற்ற தந்தையே முடிவு செய்துவிட்ட பிறகு எனக்கு எதற்கு போராட்டமும் பிடிவாதமும்?'' என்றான்.

''ஓர் ஆண் பிள்ளை இப்படியா அடிபணிவது? சோழ நாட்டில் தான் இதுதான் வழக்கமா?''

''இங்கே இருப்பவர்கள் ஒழுங்காக பதில் சொல்வதற்கே தயாராக இல்லாது போது ஆண்பிள்ளைகளைப் பற்றியோ சோழ நாட்டைப் பற்றியோ எதற்காக குறை கூற வேண்டும்? இதோ பார் பெண்ணே, எல்லாருமாகச் சேர்ந்து என்னை அடிமைப்படுத்தியது போதும். அதை நான் ஏற்றுக் கொண்டுவிட்டேன். நீ எதற்காக என்னை உசுப்பிவிடுகிறாய்? நான் நினைத்தால் உன்னை இங்கேயே பலாத்காரப்படுத்திவிட்டு துறவறத்திற்கு அருகதையற்றவனாக ஆக்கிக் கொள்ளவும் உங்கள் நடவடிக்கைகளை அர்த்தமில்லாதவைகளாக மாற்றவும் முடியும். என் தந்தையின் விருப்பத்தை நிறைவேற்றவே விரும்புகிறேன். தந்தை சொல்மிக்க மந்திரமில்லை.''

இப்படி கூறிவிட்டு உணவை உண்டு முடித்த உதயசந்திரன் பௌர்ணமி மௌனமாக இருப்பதைக் கண்டு ''நல்லது

பௌர்ணமி. நீயாக எனக்கு உணவு கொண்டு வந்ததற்கு மிகவும் நன்றி. போய் வா. போய் நாவிதரை அனுப்பு'' என்றான்.

''நீங்கள் இங்கே வந்ததிலிருந்து உங்களுக்கு நடந்ததெல்லாம் சோதனைகள்'' என்றாள் பௌர்ணமி திடீரென்று.

''சோதனைகளா?''

''ஆமாம். பெண்ணைக் கொண்டு உங்களுக்கு உபசாரங்கள் நடந்தன. பிறகு பெண்களை அனுப்பி உங்கள் உணர்ச்சிகள் தூண்டப்பட்டன. நீங்கள் அதற்கெல்லாம் அடிபணிந்து விடுகிறீர்களா வெல்கிறீர்களா என்று சோதிக்கப்பட்டது. உங்களுக்குள் சிறுசிறு சலனங்கள் இருந்தாலும் அடிபணிந்து விடவில்லை. ஆசையைத் தூண்டிய பெண்ணின் எலும்பையே முறித்துவிட்டீர்கள்.''

''பாவம். நான் வேண்டுமென்று அப்படிச் செய்யவில்லை.''

''மீதியைக் கேளுங்கள். நீங்கள் பெண்களிடம் அடி பணியாததால் பட்டினி போடப்பட்டது. நீங்களோ கவலைப்பட வில்லை. மல்லர்களை விட்டு உண்ணும்படி மிரட்டப்பட்டது. நீங்களோ அவர்களை மண்ணைக் கவ்வச் செய்துவிட்டீர்கள். உங்களிடம் அடக்கமும் இருக்கிறது ஆவேசமும் இருக்கிறது என்பதை உணர்ந்த காரியஸ்தர் நேரில் வந்து நீங்கள் இங்கே அடிமை என்பதை உணர்த்தினார். உண்ணாவிரதம் இருந்தால் தண்டனை என்று மிரட்டினார். அதற்கும் நீங்கள் மசியவில்லை. கடைசியாக உங்கள் பிடிவாதத்தை அகற்றுவதற்கு என்னையே உணவோடு அனுப்பி வைத்தார்.''

''மொத்தத்தில் நீங்கள் எல்லாம் எதிர்பார்த்தபடி நான் நடந்து கொள்ளவில்லை.''

''ஆமாம்.''

''நான் துறவியாவதற்கு தகுதியாகிவிட்டேன் இல்லையா?''

''ஆமாம்.''

''பிறகென்ன? உன் காரியம் நல்லபடியாக முடிந்து விட்டதல்லவா? மகிழ்ச்சியோடு போய் காரியஸ்தரிடம் சொல்ல வேண்டியதுதானே?''

''நான் இதை எதிர்பார்க்கவில்லை.''

''எதை?''

''சற்று முன் சம்மதித்தீர்களே அதைத்தான்.''

''சிகையை அகற்றுவதற்குத் தயார் என்றேனே அதையா சொல்கிறாய்?''

''அவரை இங்கே அழைக்க உங்களுக்கு உரிமையில்லை.''

''அவர் வராவிட்டால் நீங்கள் என்னைத் தொடவும் அனுமதிக்க மாட்டேன்.''

''ஐயா, நான் என் பணியைத் தான் செய்கிறேன்.''

''என் விருப்பத்திற்கு மாறாகப் பணியைச் செய்ய முற்பட்டால் உங்களுக்கு கை இருக்காது.''

உதயசந்திரன் மல்லர்களை வீழ்த்திய நிகழ்ச்சி அவருக்குத் தெரிந்திருந்ததால் அவனை பலவந்தப்படுத்த அவர் விரும்ப வில்லை.

அங்கிருந்து சென்று அரை நாழிகை கழித்து காரியஸ்தரோடு வந்தார்.

''என்ன உதயசந்திரா, அடிமையாக இருந்துகொண்டு எஜமானனை அழைக்கிறாயா? உடம்பு எப்படி இருக்கிறது?'' என்று மிரட்டலாகவே கேட்டார் காரியஸ்தர்.

''காரியஸ்தர் அவர்களே, தவறாக நினைக்க வேண்டாம். உங்களை நான் அழைத்தது ஆணவத்தால் அல்ல. கோரிக்கை விடுக்கத்தான்'' என்றான் உதயசந்திரன்.

''அதற்கெல்லாம் உனக்கு உரிமையில்லை என்று எத்தனை முறை சொல்வது?''

''முதலில் நான் சொல்வதைக் கேளுங்கள்.''

''என்ன விஷயம்?''

''என் சிகையை நீக்குவதற்கு முன் இந்த விஹாரத்தின் தலைமைத்துறவி அகளங்கர் அடிகளை நான் காண வேண்டும்.''

''எதற்கு?''

''அவரிடம் சில வார்த்தைகள் பேச வேண்டும்.''

''என்ன வார்த்தைகள்?''

''அவரிடம்தான் சொல்ல முடியும்.''

''அது முடியாது.''

''ஏன்?''

''அவர் ஊரில் இல்லை.''

''ஊருக்கு வரட்டும். வந்தபின் பார்த்துப் பேசுகிறேன்.''

''அவர் எப்போது வருவார் என்பது தெரியாது.''

''வரும் வரை நான் காத்திருக்கிறேன்.''

''நீ காத்திருக்கலாம். ஆனால் அந்த அவசியம் எங்களுக்கில்லை. விஹாரத்தின் உடமையான நீ நாங்கள் சொல்வது படி நடந்து கொள்.''

''மன்னிக்க வேண்டும் காரியஸ்தரே. நான் விஹாரத்தின் உடமை என்றால் அதன் தலைவர் அகளங்கருக்குத்தான் உடமையே தவிர காரியஸ்தரான உங்களுக்கல்ல. இதை நீங்கள் உணர்ந்து கொள்வது நல்லது.''

''உதயசந்திரா, யாரிடம் என்ன பேசுகிறோம் என்பதை உணர்ந்து தான் பேசுகிறாயா?''

''நீங்களும் என்னை யார் என்பதை உணர்ந்து கொள்வது நல்லது.''

''அடிமையான உன்னைப் பற்றி அறிந்து கொள்ள எதுவுமில்லை.''

''அடிமையைப் பற்றிய பேச்சு இங்கு வேண்டாம். என்னைப் பற்றி தெரிந்து கொள்ளுங்கள். நான் முரடன். யாருக்கும் பணியாதவன். என்னிடம் மோதிய பலர் சோழ நாட்டில் கை கால்களை இழந்து தவித்துக் கொண்டிருக்கிறார்கள். அந்த நிலையை இந்த விஹாரத்தில் உண்டாக்க என்னால் முடியும். அந்த அபகீர்த்திக்கு என்னை ஆளாக்க முயலாதீர்கள். இல்லாத உரிமையை என் மீது காட்டி அடக்க முற்படாதீர்கள். மேன்மேலும் என்னைச் சீண்டினால் இந்த விஹாரத்தையே எரித்துச் சாம்பலாக்கிவிடுவேன்.''

உதயசந்திரன் இவ்வாறு உணர்ச்சிவசப்பட்டு வார்த்தைகளைக் கொட்டியதோடு அறையை விட்டு வெளியே வந்து நின்றான். அவனது பேச்சைக் கேட்டு காரியஸ்தர் ஆடிப்போய்விடவில்லை என்றாலும் சிறிது நேரம் மௌனமாக இருந்துவிட்டு அங்கிருந்து புறப்பட்டுச் சென்றார்.

''எது நடந்தாலும் நடக்கட்டும். ஒரு கை பார்த்து விடுகிறேன்'' என்று தான் இருந்தான் உதயசந்திரன்.

ஆனால் அவன் எதிர்பார்த்த மாதிரி எதுவும் நடக்கவில்லை. காரியஸ்தர் எதிர் நடவடிக்கை எதிலும் இறங்கவில்லை. பணியாளர்கள் சிலர் வந்தார்கள். அவனது தேவைகளை கவனித்துக் கொண்டார்கள்.

''ஐயா, இது உங்கள் அறை. இங்கே நீங்கள் தங்கி ஓய்வெடுக்கலாம். குளியல் தடாகத்தில் குளிக்கலாம். உணவு அவ்வப்போது வழங்கப்படும். நிம்மதியாக இருங்கள். ஆனால்

இப்பகுதியை விட்டு வெளியில் மட்டும் செல்ல வேண்டாம். இது எங்கள் வேண்டுகோள்'' என்றார்கள் பணியாளர்கள்.

''எத்தனை நாட்களுக்கு இந்தக் கட்டுப்பாடு?'' என்று சாதாரணமாகவே கேட்டான் உதயசந்திரன்.

''தெரியவில்லை. அனேகமாக அகளங்க அடிகள் வரும் வரை இருக்கலாம்'' என்றார்கள் பணியாளர்கள்.

அவனும் மேற்கொண்டு எதையும் கேட்கவில்லை.

இரண்டு நாட்கள் அமைதியாகவும் எந்தவிதமான ரசாபாசங்கள் இல்லாமலும் நகர்ந்தன.

மூன்றாவது நாள் அவன் இருந்த பகுதியின் பக்கமாக வந்தார் ஒரு துறவி.

அவரை வணங்கிய உதயசந்திரன் ''சுவாமி, தாங்கள் சமணத் துறவியா?'' என்று கேட்டான்.

''இல்லை. பௌத்தத் துறவி'' என்றார் அவர்.

''தங்களிடம் என் சந்தேகம் ஒன்றைக் கேட்கலாமா?''

''கேள்.''

''துறவறம் என்றால் என்ன?''

''அனைத்தையும் துறந்து வாழும் வகைக்குப் பெயர் துறவறம்.''

''இருப்பதை எதற்காக சுவாமி துறக்க வேண்டும்?''

''அன்பனே, நீ அதிகமாக விரும்புவது எது?''

''நிறைய இருக்கின்றன சுவாமி.''

''எவ்வளவு இருந்தாலும் அவை இன்பம் அல்லது சந்தோஷம் என்ற வார்த்தையில் அடங்கிவிடும் அல்லவா?''

''உண்மை சுவாமி.''

''பொதுவாக மனிதன் எப்போதும் விரும்புவது சந்தோஷம்.''

''ஆம் சுவாமி.''

''அந்த சந்தோஷம் கிடைக்க வேண்டும் என்று ஆசைப் படுவது மனிதனின் இயல்பு.''

''ஆம் சுவாமி.''

''ஆனால் ஆசைப்படுவதெல்லாம் அவனுக்குக் கிடைத்து விடுவதில்லை. கிடைக்காமல் இருந்தால் அதை விட்டுவிட அவன் தயாராக இல்லை. சந்தோஷம் தரக்கூடிய விஷயங் களுக்காக ஆசைப்படும் அவன் பல்வேறு முயற்சிகள் செய்கிறான். ஆனால்

அந்த முயற்சி பெரும்பாலும் அவனுக்குச் சந்தோஷத்தை தருவதில்லை. துன்பத்தையும் கவலையையும் தருகின்றன. ஆக சந்தோஷத்தை எதிர்பார்த்து அவன் ஆசைப்படுவதெல்லாம் கவலையாகவும் துயரங்களாகவும் முடிகின்றன. அவற்றைத் தாங்க முடியாமல் வேதனைப்படுகிறான். மனிதன் எதிர்பார்ப்பது ஒன்று. கிடைப்பது வேறொன்று. இதற்கெல்லாம் காரணம் ஆசை. அதை விட்டு விட்டால் அவன் துயரப்பட வேண்டியதில்லை. கவலைப்பட வேண்டியதில்லை. ஆசையை விட்டவன் அனைத்தையும் துறந்தவனாகிறான். அவனே துறவி.''

''இல்லறம் என்று சொல்கிறார்களே சுவாமி அது பொருளற்றதா?''

''அப்படி இல்லை. இல்லறம் இன்றித் துறவறம் இல்லை என்று சான்றோர் கூறுவதுண்டு. அது எல்லோருக்கும் சாத்தியமாவதில்லை. இல்லறத்தில் நுழைபவன் அதிலேயே உழல்கிறானேயன்றித் துறவறத்திற்கு வருவதில்லை. இல்லற ருசியானது மனிதனை தன்னை நோக்கியே இழுக்கும். அந்த முதலைப் பிடியிலிருந்து மீண்டு துறவறத்திற்கு வருபவர் மிகச் சிலர்தான். மாறாக தொடக்கத்திலேயே ஆசையை அறுத்து அதன் மூலம் கிடைப்பவைகளைத் துறந்து நிற்பவன் தான் உயர்ந்த துறவியாகிறான். அவனது அறமே உயர்ந்த துறவறம்.''

ஏதோ கேட்க நினைத்த உதயசந்திரன் அதைக் கேட்காமல் நிறுத்திக் கொண்டு, ''தங்கள் பதில்களுக்கு மிக்க நன்றி சுவாமி'' என்று கூறிக் கொண்டான்.

அன்று மாலை அவனது இருப்பிடம் மாற்றப்பட்டது.

விஹாரப் பகுதியிலிருந்து அவன் அகற்றப்பட்டான்.

பனமூர் பகுதியில் இருந்த சிறியதொரு வீட்டிற்கு மாற்றப் பட்டான்.

இடம் மாறினாலும் கண்காணிப்பு அகலவில்லை. பராமரிப்பும் குறையவில்லை.

இதெல்லாம் ஏன் எதற்கு என்று உதயசந்திரனுக்குப் புரியவில்லை.

மறுநாள் அதை அவனுக்குப் புரிய வைத்தாள் பௌர்ணமி.

அவள் கூறியதைக் கேட்டு அதிர்ச்சி அடைந்தான் உதயசந்திரன்.

☆☆☆



5 பௌர்ணமியின் விவரணம்

காக்கை மடு சமண விஹாரத்திலிருந்து மாற்றப்பட்டு பனமூரின்* பகுதியிலிருந்த தனி இல்லத்திற்கு கொண்டுவரப் பட்ட உதயசந்திரனுக்குத் தொல்லைகளோ கஷ்டங்களோ எதுவும் இல்லையென்றாலும் குழப்பம் மட்டும் நீடித்தது. துறவறத்திற்காக அனுப்பப்பட்டு, பிறகு விஹாரத்தின் உடமையாக முத்திரை குத்தப்பட்டு, சோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டு முடிவில் சிகை நீக்கம் நடைபெறவிருந்த போது தனது மிரட்டலைக் காட்டியதற்குப் பின் எல்லாமே அடங்கிப் போனது அவனுக்குப் புரியாதப் புதிராக இருந்தது. தனது மிரட்டலைக் கண்டு காரியஸ்தர் பயந்து போய் நடவடிக்கைகளை கைவிட்டு ஒதுங்கியிருப்பார் என்று எண்ணிக் கொள்ள அவன் தயாராக இல்லை. அதேசமயம் அதற்குப் பிறகு அவனிருந்த பக்கமாகக் கூட அவர் தலையை காட்டாதது அவனுக்கு வியப்பாக இருந்தது. அதைக் காட்டிலும் தன்னை அப்பகுதியை விட்டு அகற்றாமல் பலத்த கண்காணிப்பிற்குள் வைத்திருந்தது தான் அவனது குழப்பத்தை அதிகரித்தது.

அவனிருந்த பகுதியில் மக்கள் நடமாட்டம் இருந்தது. சாதாரண மக்களும் துறவறம் மேற்கொள்ளாதச் சமணர்களுமாய் பலர் அங்கே காணப்பட்டார்கள். அவர்களிடம் பேச்சு கொடுக்கலாமா என்று முதலில் விரும்பினாலும் தன்னைச் சுற்றி இருந்த கண்காணிப்பைக் கண்ட உதயசந்திரன் பேச்சில் ஈடுபடவில்லை. தனது ஒவ்வொரு வினாடியும் வீணாகக் கழிவதை எண்ணி சோர்ந்து போனான்.

நல்ல வேளையாக அவனது சோர்வுக்கு மருந்தளிப்பது போல அவனது இல்லத்திற்கு வந்தாள் பௌர்ணமி. அவள் வந்தது இரவு

* காஞ்சிபுரத்திற்கு தென்மேற்கே பதினைந்து கிலோ மீட்டர் அருகில் தற்போது உள்ள கரந்தை என்ற கிராமமே திருப்பனமூர் என்று அழைக்கப்பட்டது.

முகிழ்க்கவிருந்த நேரமாயிருந்தபடியால் கையில் விளக்கோடு வந்த அவள் இல்லத்தில் இருந்த மாடங்களில் வைக்கப்பட்டிருந்த விளக்குகளையும் ஏற்றி பிரகாசப் படுத்தினாள். அவள் ஒளியை உண்டாக்குவதற்கும் சுற்றுப்புரம் இருள் போர்வையை இழுத்துக் கொள்வதற்கும் சரியாக இருந்தது.

''பெண்கள் தான் வீட்டில் விளக்கேற்றி வைப்பார்கள் என்று சொல்லக் கேள்விப் பட்டிருக்கிறேன். அது எத்தனைப் பொருத்த மானது என்பதையும் அழகானது என்பதையும் இப்போதுதான் கண்டேன். வீட்டைப் பொறுத்தவரை பெண்களால் தான் இருள் நீங்குகிறது என்று எனக்குத்தோன்றுகிறது'' என்றான் உதய சந்திரன் உண்மையான மகிழ்ச்சியுடன்.

''அப்படியா?'' என்று வினவிய பௌர்ணமி ''மற்ற இருட்டுகளை யார் போக்குகிறார்கள்?'' என்று கேட்டாள்.

அவள் அப்போது பூரண அலங்காரத்தில் இருந்தபடியால் அழகு ராணியாகக் காட்சியளித்தாள். அந்த அழகை தன் விழிகளுக்கு அளித்துவிட்ட உதயசந்திரன் ''மன இருளை உபாத்தியாயர் நீக்குகிறார். மக்களது வாழ்வில் படியும் இருளை மன்னன் நீக்குகிறான். இந்த மண்ணுலகைச் சூழும் இருளைக் கதிவரன் நீக்குகிறான். அனைத்துலக இருளையும் ஆண்டவன் நீக்குகிறான்'' என்றான்.

''நீங்கள் விசித்திரமான மனிதர்'' என்றாள் பௌர்ணமி.

''எப்படி?''

''துறவிக்குரிய லட்சணங்களுடன் பேசுகிறீர்கள். அதே சமயம் துறவுக்கும் உங்களுக்கும் தூரம் மிக அதிகம் என்பதையும் நிரூபிக்கிறீர்கள்.''

''இரண்டுமே உன்னால் தான் வெளிப்பட்டன என்பது தெரியவில்லையா உனக்கு?''

''என்னாலா?''

''விஹாரத்திற்குள் இருந்து கொண்டு நீ தான் என்னைப் பேச வைத்தாய். இயங்கவும் வைத்தாய். இப்போதைய நிலைக்கும் நீதான் காரணம்.''

''நானா?''

''நீ தானே என்னிடம் சிகையை நீக்க வேண்டாம் என்றாய்? அதன்படி நான் நடந்து கொண்டதால் தானே இப்போது இங்கே இப்படி இருக்கிறேன்?''

''நான் கேட்டுக் கொள்ளாமல் இருந்திருந்தால்?''

''இந்தக் கேள்விக்கு இப்போது பதில் தேவையில்லை பௌர்ணமி. நடந்ததைப் பற்றி மட்டும் பேசுவோம். நீ சாதாரணமாகச் சொல்லியிருந்தால் பரவாயில்லை. உன் உயிரைக் காட்டி அல்லவா கேட்டுவிட்டாய்? உன் உயிரை விட இந்தச் சிகை பெரிதா?''

''மிகவும் நன்றி வீரரே. என் உயிருக்கு மதிப்பளித்ததற்கு மிகவும் நன்றி'' என்று சொன்ன பௌர்ணமி ''என் உயிருக்காக நீங்கள் விளைவுகளைப் பற்றிக் கவலைப்படாமல் காரியஸ்தரிடம் மிரட்டினீர்களே - உங்கள் உயிர் மீது உங்களுக்குப் பயமில்லையா?'' என்று கேட்டாள்.

''நன்றாகக் கேட்டாய். நாகைப்பட்டிணத்தில் பொறாமை காரணமாக எனக்கு விரோதிகளே அதிகம். என் உயிரோடு விளையாடுபவர்கள்தான் அதிகம். ஆகவே என் உயிரைப் பற்றி நான் எப்போதும் கவலைப்பட்டதில்லை. எனக்கு ஒரு நம்பிக்கை உண்டு. என் உயிரைப் படைத்தவனாலன்றி வேறு யாராலும் அதைப் பறிக்க முடியாது.''

''சரியான முரட்டுப் பேர்வழிதான்'' என்று சொன்னாள் பௌர்ணமி.

அப்போது இருவருக்குமே உணவு கொண்டுவரப்பட்டது.

அதை இருவரும் உண்ண முற்பட்டபோது ''முன்பு நான் இருந்த இடத்தில் நீ வந்தபோது விளக்கேற்றப்படாமல் இருண்டே கிடந்தது. இங்கே விளக்கேற்றப்பட்டிருக்கிறது. இந்த வித்தியாசத்திற்குக் காரணம்?'' என்று கேட்டான் உதயசந்திரன்.

''விஹாரம் துறவறப்பகுதி. துறவிகள் நிரம்பிய பகுதி. விளக்குகள் ஏற்றப்பட்டால் அந்த வெளிச்சத்தில் பல நுண்ணுயிர்கள் இறக்க நேரும் என்பதால் அங்குள்ள துறவிகள் மாலைப் பொழுதிலேயே தங்கள் அலுவல்களை முடித்துக் கொள்கிறார்கள். அதனால் இரவில் விளக்குகளை ஏற்றுவ தில்லை. நாம் இருக்கும் இந்தப் பகுதி மக்கள் வாழும் பகுதி. இங்கே எல்லாமும் உண்டு'' என்று சொன்ன பௌர்ணமி ''நீங்கள் சிகையை நீக்க முற்பட்டால் என் உடலில் உயிர் இருக்காது என்று சொன்னேனே அப்போது என்ன நினைத்தீர்கள்?'' என்று கேட்டாள்.

''ஓர் உயிரைக் காப்பாற்றுவதற்கு காரணம் வேண்டுமா என்ன? அதை விட பௌர்ணமி, இந்த இல்லத்தில் விளக்கேற்றி

இருளை நீக்கி நீ இப்போதாவது எனக்குள்ளே இருக்கும் குழப்ப இருளை நீக்கு. என்னைச் சுற்றி பலர் இருந்து கொண்டு தாக்கியபோதுகூட நான் கவலைப்பட்டதில்லை. ஆனால் காக்கை மடு குழப்பங்கள் எனக்கு கவலையை அளிக்கின்றன'' என்றான் உதயசந்திரன்.

இருவரும் சாப்பிட்டு முடித்ததும் பணியாளன் ஒருவனை அழைத்த பௌர்ணமி ''யாரையும் என் அனுமதியின்றி உள்ளே அனுமதிக்க வேண்டாம்'' என்று கட்டளையிட்டாள்.

பிறகு உதயசந்திரனைப் பார்த்து ''எதற்காகக் குழம்பு கிறீர்கள்?'' என்று இதமாகக் கேட்டாள்.

''இங்கே நடப்பது எதுவும் சரியாக இல்லை. நான் துறவறம் மேற்கொண்டு தான் ஆக வேண்டுமானால் அரை நாளில் அதைச் செய்துவிடலாம். அதை விட்டுவிட்டு சோதனைகள் - மிரட்டல்கள் என்றெல்லாம் எதற்கு? என் மிரட்டலைக் கண்டு காரியஸ்தர் மௌனமாக வேண்டிய அவசியமென்ன? என்னை ஏன் இங்கேயே கண்காணிப்புடன் வைத்திருக்கிறார்கள்?'' என்று கேட்டான் உதயசந்திரன்.

''வீரரே, உங்களுக்குப் பல்லவ மாமன்னர் ராஜசிம்மரைப் பற்றித் தெரியுமா?'' என்று கேட்டாள் பௌர்ணமி.

தான் கேட்ட கேள்விகளுக்கும் பல்லவ மாமன்னருக்கும் என்ன சம்பந்தம் என்று தனக்குள் கேட்டுக் கொண்ட உதயசந்திரன், ''இதென்ன பௌர்ணமி, பல்லவப் பேரரசர் ராஜசிம்மரைப்பற்றி பாரத நாடே அறியும்? எனக்குத் தெரியாமலா இருக்கும்? சாளுக்கிய சக்கரவர்த்தி விக்கிரமாதித்தரை புறங்கண்டு பல்லவ சாம்ராஜ்யத்தின் மானத்தைக் காப்பாற்றிய மாவீரர் அல்லவா? அவரை அறியாதவன் சோழ நாட்டில் இருக்க முடியுமா? அங்குள்ள புல் பூண்டுகள் கூட அவரை எண்ணிப் பூரிக்கும் போது எனக்கெப்படி தெரியாமல் போகும்?'' என்றான்.

''வீரரே, சாளுக்கிய சக்கரவர்த்தி காஞ்சியை நோக்கிப் படையெடுத்தபோது பல்லவ மன்னரான பரமேச்சுர வர்மரும் இளவரசரான ராஜசிம்மரும் காஞ்சியில் இல்லை. இருவரும் பிரிந்திருந்தார்கள். அந்த நிலை சாளுக்கிய சக்கரவர்த்திக்கு மட்டுமின்றி கங்க மன்னனுக்கும் அனுகூலமாகப் போயிற்று. காஞ்சியை விக்கிர மாதித்தர் கைப்பற்றிய அதே நேரத்தில் கங்க மன்னனும் பல்லவ நாட்டில் ஊடுருவ முயன்றான். அவனது முயற்சியை தடுக்க பல்லவ மன்னர் பரமேஸ்வர வர்மரிடம்

போதிய படைபலம் இல்லை. இருப்பினும் அதற்காகத் தயங்கிக் கொண்டிருக்காமல் கங்கப் படைகளை எதிர்த்தார். அப்போரில் கங்க மன்னனின் படைப்பலமும் போர்த் தந்திரங்களும் வென்றன. கடைசி நேரத்தில் போர்க்களத்திற்குப் போய்ச் சேர்ந்த பல்லவ இளவரசர் ராஜசிம்மர் தனது தந்தையான பரமேஸ்வர வர்மரின் உயிரைக் காத்து மீட்டார்.

''தனக்கு நிலைமைகள் சாதகமாவதை உணர்ந்த சாளுக்கிய சக்கரவர்த்தி காஞ்சியை மட்டுமின்றி பல்லவ சாம்ராஜ்யம் முழுவதையுமே தன் ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வரத் தீர்மானித்தார். அத்தீர்மானம் இளவரசர் ராஜசிம்மருக்கு பல்வேறு பொறுப்புகளையும் சவால்களையும் சுமத்தின. முதலில் தனது தந்தையும் பல்லவ மன்னருமான பரமேஸ்வர வர்மரை தலைமறைவு வாழ்க்கையை மேற்கொள்ளும்படி செய்தார். தனது இணையற்ற ராஜதந்திரத்தால் சாளுக்கிய சக்கரவர்த்திக்கு உதவவிருந்த கங்க மன்னனையும் பாண்டிய மன்னனையும் தனது நண்பர்களாக்கிக் கொண்டு தன் பக்கம் ஈர்த்துக் கொண்டார். இதனால் பெரும் கோபத்திற்கும் ஏமாற்றத்திற்கும் ஆளான சாளுக்கிய சக்கரவர்த்தி பல்லவ மன்னரையும் இளவரசரையும் கண்டுபிடித்து அழிக்கத் தீர்மானம் செய்தார்.

''இளவரசர் ராஜசிம்மரும் இந்த நிலையில் சரியான முடிவுகளை எடுத்தார். அதன்படி பரமேஸ்வர வர்மரை ஆந்திர நாட்டிற்கு அனுப்பி அங்குள்ள காடுகளில் மறைந்திருந்து ரகசியமாகப் படைகளைத் திரட்டப் பணித்தார். அதேசமயம் கவனிப்பில்லாமல் இருந்த சாளுக்கிய தலைநகரான வாதாபிக்கு சிறு படையுடன் ரகசியமாகச் சென்ற இளவரசர் தலைநகரில் இருந்த செல்வங்களையெல்லாம் பெருமளவில் கொள்ளை யடித்தார். அதைக்கொண்டு பெரும் படையைத் திரட்டிய அவர் சாளுக்கிய சக்கரவர்த்தியை போருக்கு வரும்படி அறைகூவல் விடுத்தார். இளவரசரின் படையும் மன்னரின் படையும் இணைந்தன. பெருவளநல்லூரில் அப்படையை எதிர்கொண்டது சாளுக்கியர் படை. இளவரசர் ராஜசிம்மர் தனது வீரத்தையும் சாமர்த்தியத்தையும் ஒருங்கே காட்ட அப்போரில் பெரு வெற்றி பெற்றார். தனது படைகள் பெருமளவில் சேதமாகிய நிலையில் சாளுக்கிய சக்கரவர்த்தி விக்கிரமாதித்தர் விழுப்புண்களுடன் வாதாபிக்குத் திரும்பினார். காஞ்சி மீண்டது. பரமேஸ்வர வர்மர் மீண்டும் அரியணை ஏறினார்'' என்று சொல்லி நிறுத்தினாள் பௌர்ணமி.

''நீ கூறிய விவரங்கள் எல்லாமே நாடறிந்தவை பௌர்ணமி'' என்றான் உதயசந்திரன்.

அவளோ கனவுலகில் பேசுவது போல் தொடர்ந்து பேசினாள்.

''காலம் ஓடியது. பல்லவ மன்னர் பரமேஸ்வர வர்மர் மறைந்து ராஜசிம்மர் அரியணையில் ஏறினார். சாளுக்கிய சக்கரவர்த்தி விக்கிரமாதித்தரும் அவரது புதல்வர் வினயாதித்தனும் கூட மாண்டார்கள். வினயாதித்தனின் புதல்வன் விஜயாதித்தன் சாளுக்கிய மன்னனானான். இந்த நிலையில் பல்லவ நாட்டை கடும் பஞ்சம் பீடித்துக் கொண்டது. இது உங்களுக்குத் தெரியுமா வீரரே?'' என்று கேட்டாள் பௌர்ணமி.

''பஞ்சமா? பல்லவ நாட்டிலா?''

''ஆம் வீரரே. பல்லவ நாடு சாளுக்கியரை வென்ற நாடு தான் என்றாலும் அந்த வெற்றிக்கான விலை அதிகம். காஞ்சி மீது படையெடுத்த சாளுக்கியர்கள் பல்லவ நாட்டை பெரிதும் சேதப்படுத்திவிட்டார்கள். ராஜசிம்மர் வாதாபியில் சாளுக்கிய அரண்மனையில் மட்டும் கொள்ளையடித்தார். சாளுக்கியர்களோ பல்லவ நாட்டில் ஓர் இடத்தையும் விடாமல் கொள்ளையடித்த தோடு மட்டுமின்றி கிணறுகள் ஏரிகள் போன்றவற்றை தூர்த்துவிட்டுப் போய்விட்டார்கள். அதைத் தொடர்ந்து பல்லவ நாட்டில் நான்கு ஆண்டுகளாக மழை பெய்யவில்லை. படை வீரர்களைக் கொண்டு நீர் நிலைகள் நிர்மாணிக்கப்பட்டாலும் மழை இல்லாததால் அவை வறண்டு கிடக்கின்றன. விவசாயம் செய்ய வேண்டிய நிலங்கள் நீரின்றி பாளம் பாளமாகப் பிளந்து கிடக்கின்றன. மக்கள் பல்வேறு இடங்களில் பட்டினியால் வாடுகிறார்கள். அரசாங்கம் தன்னால் முடிந்த முயற்சிகளை யெல்லாம் செய்து வருகிறது. பஞ்சவார வாரியத்தை அமைத்து பொருள் திரட்டுகிறது. அதன் ஒரு பகுதியாகத் திகழ்கிறது இக்காக்கை மடு சமண விஹாரம்.''

''நீ சொல்வது விளங்கவில்லை பௌர்ணமி.''

''வீரரே. தற்போது நம் நாட்டில் பௌத்த மதத்தை விட சமண மதம் செல்வாக்கும் செழிப்பும் பெற்றுத் திகழ்கின்றன. பாரத நாட்டில் தற்போதிருக்கும் செழிப்பான மற்றும் சிறப்பான சமணரது கலைப்பீடங்கள் நான்கு. அவற்றில் காஞ்சியில் இருக்கும் திருப்பருத்திக்குன்றம் ஒன்று*. அதன் கிளைப் பீடம்

* Page 1 Tirupparthikundram and its temples by T.N.Ramachandran

தான் காக்கை மடு விஹாரம். இந்த விஹாரங்களில் செல்வச் செழிப்பு கணிசமாக இருக்கிறது. இக்கலைப் பீடத்தின் தலைவர்தான் துறவி அகளங்கர். காஞ்சியில் பௌத்தர்களுடன் சமண-பௌத்த வாதம் செய்து தோற்கடித்து பெரும்பாலான பௌத்தர்களைக் காஞ்சியை விட்டு விரட்டியவர் அவர். காஞ்சியில் பௌத்தர்களது செல்வாக்கை அழித்து வருபவர் அவர். அதே காஞ்சியிலும் பல்லவ மண்டலத்திலும் சமணம் வளர வேண்டுமானால் அதற்கு இதுதான் சரியான நேரம் என்று உணர்ந்தவர் அவர். சமண மதத்தில் பெருவாரியானவர்கள் சேருவதற்கு தக்க உபாயத்தைக் கண்டார். சமண மதத்தில் அரசாங்கமோ அல்லது அதன் சார்பாகவோ மக்களை சமண மதத்தில் சேர்த்தால் சேர்க்கப்படும் ஒவ்வொருவருக்கும் தலைக்கு இத்தனை பொன் அரசாங்கத்திற்குத் தரப்படும் என்று அறிவித்தார் அவர். பல்லவ அரசாங்கம் ஷீணித்த நிலையில் இருந்ததால் அவரது இக்கோரிக்கையை பஞ்ச வாரியம் ஏற்று அறிவிப்பு செய்தது. அறிவிப்பானது. பல்லவ நாட்டில் வெளிப்படையாகவும் சோழ நாடு, பாண்டிய நாடு ஆகியவற்றில் அந்நாட்டு மன்னர்கள் மூலமாகவும் வெளியிடப்பட்டது. அதையடுத்து பல்லவ மண்டலத்தவர் ஏராளமானவர்கள் காஞ்சியில் இருக்கும் திருப்பருத்திக்குன்றத்தில் சமண மதத்தை தழுவலானார்கள். தென்னாட்டவர்கள் துறவு மேற்கொள்ள காக்கை மடுவிற்கு அனுப்பப்பட்டார்கள். அவர்களில் ஒருவராகத்தான் நீங்களும் வந்திருக்கிறீர்கள். உங்கள் தலைக்கு இவ்வளவு பொன் என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கும். அது பல்லவர் அரசாங்கத்திற்குப் போய்ச் சேரும்'' என்று சொல்லி நிறுத்திய பௌர்ணமி ''இப்போது புரிகிறதா நிலைமை?'' என்று கேட்டாள்.

உதயசந்திரனுக்குப் புரிந்தது. ஆனால் கசந்தது.

போர் முடிந்த நிலையிலும் மழை பெய்யாத நிலையிலும் நாட்டில் பஞ்சம் ஏற்படுவது இயற்கை. அதை போக்குவதற்கு மன்னன் பல விதங்களில் முயல்வதும் இயல்பானதுதான். ஆனால் இதுபோன்ற சந்தர்ப்பங்களை தங்கள் மதங்கள் வளர்வதற்குச் சாதகமாகப் பயன்படுத்தும் மதவாதிகளின் போக்குதான் அவனுக்குப் பிடிபடவில்லை. அதுவும் சமண மதம் இத்தகைய போக்கை கடைப்பிடித்தது அவனுக்கு வெறுப்பாக இருந்தது. காஞ்சியின் சமணப் பீடத்தின் தலைவரான அகளங்கரைப் பற்றி ஓரளவிற்கு அவனுக்குத் தெரிந்திருந்தது. வட பாரதத்திலிருந்து சமணம் தழைக்க காஞ்சிக்கு வந்து குடியேறியிருந்தார் என்பதும்,

சிறந்த கருணைமான் என்பதும், பெரும் அறிவாளி என்பதும் அவனுக்குத் தெரிந்திருந்தன. புத்த மதத்தவர்களுக்கு அவர் சிம்ம சொப்பனமாக இருந்தார் என்று சோழ நாட்டில் சிலர் சொல்ல கேள்விப்பட்டிருந்தான். பௌர்ணமி சொன்ன தகவலிலிருந்து அவர் காஞ்சியில் சமயவாதம் செய்து பௌத்தர்களை வென்று அவர்களில் நிறைய பேர்களை நகரை விட்டு விரட்டியிருந்தார் என்பதும் தெரிந்தது. ஆனால் அவர் பல்லவ நாட்டில் நிலவும் பஞ்சத்தை தனது சமண மதம் வளர்வதற்குச் சாதகமாகப் பயன்படுத்துகிறார் என்ற விஷயம் தான் புதுமையானதாகவும் கேள்விப்படாத கொடுமையாகவும் தோன்றியது உதய சந்திரனுக்கு. ஆனால் அவரைப் பற்றி பௌர்ணமியிடம் விசாரிக்கவோ விவாதிக்கவோ அவன் விரும்பவில்லை.

''நான் துறவியாவதால் பல்லவ அரசாங்கத்திற்கு கிடைக்கக்கூடிய பொன்னை கிடைக்காமல் செய்து விட்டாயே பௌர்ணமி. இது நியாயமா?'' என்று கேட்டான்.

''அதனால் என்ன? இங்கே வருவதற்கு ஆட்கள் இல்லாமலா போய்விட்டார்கள்? நாளைக்கு கூட நால்வர் வரப் போவதாகத் தகவல் வந்திருக்கிறது'' என்றாள் பௌர்ணமி.

''என்னை மட்டும் ஏன் தடுத்துவிட்டாய் பௌர்ணமி?''

''தெரியவில்லை.''

''தெரியவில்லையா?''

''புரியவில்லை.''

''இதென்ன பேச்சு? தெரியாமலும் புரியாமலும் கூட ஒருவரை தன் வசப்படுத்த முடியுமா? நான் கேள்விப்பட்ட தில்லையே?''

''இங்கே பார்ப்பதாக வைத்துக் கொள்ளுங்களேன்.''

''இல்லை பௌர்ணமி. உன் செயலுக்கு நிச்சயமாக ஒரு காரணம் இருக்கிறது.''

''தெரிந்தால் சொல்லுங்களேன்.''

''சொல்லிவிட்டால் அதன் மகத்துவம் போய்விடும்.''

''சொல்லாவிட்டால் எப்படித் தெரியும்?''

''அது உன்னிடம் சொல்லாமலேயே உன்னிடம் உருவாகி வளர்ந்துவிட்டது.. புரியாதது போல் நடிக்கிறது. மனத்திற்கு புரிந்துவிட்ட ஒரு விஷயத்தை உதடுகள் சொல்ல முடியாமல்

தவிப்பதுண்டு. அந்தத் தவிப்புதான் உன்னிடம் இருக்கிறது. அதன் பெயர்தான் காதல்.''

பௌர்ணமி வெட்கத்துடன் தலையைத் திருப்பிக் கொண்டாள்.

''ஏன் வெட்கப்படுகிறாய் பௌர்ணமி? விஷயம் தான் புரிந்துவிட்டதே?''

''அதனால் தான் வெட்கம்.''

''வெட்கத்தை நான் போக்கட்டுமா?'' என்றான் உதயசந்திரன்.

அச்சமயத்தில் ''இது தான் நீ துறவறம் மேற்கொள்ளும் லட்சணமா?'' என்று ஒரு குரல் குறுக்கிட்டது.

திரும்பினான் உதயசந்திரன்.

அங்கே அவனது தந்தை நின்றிருந்தார்.

அவருடன் காரியஸ்தரும் வந்திருந்தார்.

☆☆☆



6 இருளில் இரு உருவங்கள்

தன் தந்தையைச் சிறிதும் எதிர்பார்க்காத உதயசந்திரன் அதிர்ச்சியடைந்து எழுந்து நின்று, ''தந்தையே! நீங்கள் எப்படி வந்தீர்கள்?'' என்று கேட்டான்.

தந்தையான பெருஞ்சாத்தன் பந்த ஒளியில் ருத்திரனைப் போல காட்சியளித்தார். ''இருக்கும் இடத்தில்தான் பிரச்சனை என்று பார்த்தால் வந்த இடத்திலும் பிரச்சனைதானா? அடங்கவே மாட்டாயா நீ?'' என்று சீறினார்.

''தந்தையே! நான் தங்களுக்கு என்ன தீங்கு செய்தேன் என்று எனக்கு இந்த தண்டனையை அளித்துவிட்டீர்கள்? நான் துறவியாவதால் உங்களுக்கென்ன பயன்?'' என்று கேட்டான் உதயசந்திரன்.

''எனக்கு ஒரு பயனுமில்லை. எல்லா பயனும் ஊருக்குத்தான்.''

''நான் துறவியாவதால் ஊருக்கென்ன பயன் தந்தையே?''

''நீ என்றில்லை. துறவிகளாலும் அவர்களது தியாகங்களாலும் உலகம் சுபிட்சமடைகிறது.''

''நான் ஒருவன் துறவியாகாமல் இருந்தால் உலக சுபிட்சம் போய்விடுமா?''

''உன்னைப்போல ஒவ்வொருத்தனும் நினைக்க முற்பட்டுவிட்டால் துறவிகளே இருக்கமாட்டார்கள்.''

''அதனால் என்ன தந்தையே? துறவறமும் துறவிகளும் இல்லாவிட்டால் உலகம் அழிந்தா போய்விடும்?''

''உன்னிடம் வீண் விவாதம் செய்ய உன்னிடம் வரவில்லை உதயசந்திரா. எல்லா விஷயங்களும் யோசிக்கப்பட்டு ஆராயப்பட்டு முடிவு செய்யப்பட்டு முடிந்துவிட்டன. நீ துறவியாக வேண்டியதுதான்.''

''அதோடு நீங்கள் விடவில்லையே தந்தையே. இந்த விஹாரத்துக்கு அடிமை என்று வேறு சாசனம் எழுதிக் கொடுத்து விட்டீர்களே அது ஏன்?''

''அடிமைச்சாசனம் எழுதியும் கூட அடங்காமல் இருக்கும் நீ அச்சாசனமில்லாமல் அனுப்பப்பட்டிருந்தால் என்ன செய்திருப்பாய்? அதை யோசித்துத்தான் அடிமை சாசனம் எழுதி அனுப்பினேன்.''

''தனது ஆசைப் புதல்வனை அவனது ஆசைப்படி வளக்காமல் சன்னியாசியாக ஆக்குவது தான் தந்தையின் கடமையா?''

''அந்த விவாதமெல்லாம் முடிந்துபோன ஒன்று. துறவியாக வந்த நீ பெண்ணொருத்தியுடன் தனிமையில் அதுவும் இரவில் பேசிக் கொண்டிருப்பது துறவிக்குரிய லட்சணம் அல்ல.''

''நான் எந்த பெண்ணையும் அழைக்கவில்லை தந்தையே. அந்த கைங்கரியங்களையெல்லாம் இத்தனை நாட்களாகச் செய்து வருவது உங்களுக்குப் பின்னால் நிற்கும் மகா புருஷர் காரியஸ்தர் தான்.''

உதயசந்திரன் இவ்வாறு கூறியதும் காரியஸ்தரைப் பார்த்து பெருஞ்சாத்தன் ''இவனிடம் பேச ஆரம்பித்தால் பேசிக் கொண்டே இருக்க வேண்டியதுதான். ஆகவே தாங்கள் செல்லுங்கள். நான் பேசும் விதமாகப் பேசி அவனைப் பணிய வைக்கிறேன்'' என்றார்.

காரியஸ்தரும் அவர் சொன்னதை ஒப்புக் கொண்டு அங்கிருந்து அகன்றார். பௌர்ணமியும் அவரோடு சென்றாள்.

இருவரும் சென்றபின் கதவைச் சாத்தி தாளிட்ட பெருஞ்சாத்தன் ''உள்ளே வேறு யாருமில்லையே?'' என்று கேட்டார்.

''இல்லை'' என்று சொன்ன உதயச்சந்திரன் ''தந்தையே, உங்களைக் கெஞ்சிக் கேட்டுக் கொள்கிறேன். என்னை என் வழியில் போக விடுங்கள். துறவியாவதற்கு எனக்கு விருப்பமில்லை. என்னோடு பேசிக் கொண்டிருந்த பெண்ணுக்கும் விருப்பமில்லை. இருவரும் ஒருவரையொருவர் விரும்புகிறோம். எங்காவது போய் கௌரவமாக வாழ்ந்து பிழைத்துக் கொள்வோம். தயவு செய்து அனுமதி கொடுங்கள்'' என்று கெஞ்சினான்.

''உன்னுடன் பேசிக் கொண்டிருந்த அந்தப் பெண் யாரென்று தெரியுமா?'' கேட்டார் தந்தை.

''தெரியாது.''

''திருப்பருத்திக் குன்றத்தின் தலைமைத் துறவி அகளங்கரின் வளர்ப்பு மகள்.''

''அப்படியா?''

''வியப்பெல்லாம் இருக்கட்டும். நான் உன்னோடு தனியாகப் பேச வந்ததற்கான காரணமே வேறு.''

''என்ன தந்தையே?''

''நாகைப்பட்டிணத்திலிருந்து நீ புறப்பட்டுச் சென்ற இரண்டு நாட்களுக்குப் பிறகு உன்னைப் பற்றிய வதந்தி ஒன்று வந்தது. அது வதந்தியாகவே இருந்தால் நல்லது. ஆனால் உண்மை என்ன என்பது இன்னும் தெரியவில்லை. ஆகவே நாளை இரவு இங்கிருந்து நீ தப்ப வேண்டும். தப்பி அருகே இருக்கும் கணி கிலுப்பை கிராமத்திற்கு வந்துவிடு. அங்கே நானிருப்பேன். நீ வந்த பிறகு மேற்கொண்டு செய்வது பற்றிப் பேசிக் கொள்ளலாம்.''

தந்தையின் வார்த்தைகள் உதயசந்திரனின் செவிகளில் அமுதமாக விழுந்தன. இதை அவன் முற்றிலும் எதிர்பார்க்க வில்லை. துறவறத்திலிருந்து விடுதலை கிடைப்பது மட்டுமின்றி பனமூரிலிருந்து தப்பிச் செல்ல வேண்டும் என்ற செய்தியும் ஆனந்தமாக இருந்தது அவனுக்கு.

''இன்றே தப்பினால் என்ன தந்தையே?'' என்று கேட்டான்.

''வேண்டாம். நான் இப்போது காரியஸ்தனை சந்திக்கா விட்டால் அவனுக்குச் சந்தேகம் வந்துவிடும். அதோடு நாளை காலை அகளங்கர் இந்த விஹாரத்திற்கு வருகிறார். அவர் உன்னைக் கூப்பிட்டாலும் கூப்பிடலாம். அவரைச் சந்திக்க வேண்டும் என்று நீ சொல்லியிருப்பதாக காரியஸ்தர் சொன்னார். ஆகவே நீ நாளை அகளங்கரைச் சந்தித்து இயல்பாகப் பேசு. இரவு நேரமானதும் நீ எங்கிருந்தாலும் சரி உன் சாமர்த்தியத்தால் தப்பி வந்து விடவேண்டும். இங்கிருந்து நாலு கல் தொலைவில் இருக்கிறது கணிகிலுப்பை கிராமம். அங்கே வந்துவிடு.''

''அங்கே நீங்கள் எங்கே இருப்பீர்கள்?''

''ராஜவீதிக்கு இடப்புறம் தெரு ஒன்றிருக்கிறது. அதில் ல்லம் எண் 18. அங்கே வந்து கதவை மூன்று முறை தட்டிவிட்டு புலி'' என்ற சொல்லைச் சொல். போதும். கதவு திறக்கும்.''

''தந்தையே, என்னைப் பற்றிய வதந்தி என்று சொன்னீர்களே, அது என்ன?''

''அதைப் பற்றியெல்லாம் இங்கே பேச வேண்டாம். விஹாரத்திற்கு வடப்புறம் புரவுக் கொட்டடி இருக்கிறது. உனது புரவி மின்னல் அங்கே தான் இருக்க வேண்டும். புரிகிறதா?''

தலையை ஆட்டினான் உதயசந்திரன்.

பெருஞ்சாத்தன் விடைபெற்றுக் கொண்டார்.

அன்றிரவு பௌர்ணமி மீண்டும் வரவில்லை. வேறு இடையூறு எதுவும் கூட இல்லை. எனவே நிம்மதியாக உறங்கினான் உதயசந்திரன்.

பொழுது விடிந்து அவன் எழுந்து கொண்டபோது விஹாரப் பகுதியில் கண்டாமணிகளின் ஓசை சிறிது நேரத்திற்கு கேட்டது. மங்கள வாத்தியங்களும் இசைத்ததை அவன் கேட்டான். தானிருந்த இடத்தின் முன்புறத்திற்கு வந்து பார்த்தபோது சமணத்துறவிகள் கூட்டம் கூட்டமாக விஹாரத்தை நோக்கிச் சென்று கொண்டிருந்தார்கள். அங்கே இகம்பரர்களும் திகம்பரர்களும் காணப்பட்டார்கள்.

தன் தந்தை கூறியதுபோல் தலைமைத் துறவி அகளங்கர் விஹாரத்திற்கு வருகை புரிந்திருக்க வேண்டும் என்று தோன்றியது உதயசந்திரனுக்கு. அங்கே வந்த பணியாளனும் அதை உறுதிப்படுத்தினார்.

அவனது தேவைகளை கவனித்துக் கொண்டான் பணியாளன். பணியாளர்கள் மாறினார்களேதவிர காரியஸ்தரும் பௌர்ணமியும் அந்தப் பக்கம் தலைகாட்டவில்லை.

தந்தை கூறியபடி தப்புவதில் தான் அவனது முழு கவனமும் இருந்தது. எப்படி தப்புவது என்பது பற்றியே யோசித்துக் கொண்டிருந்தான்.

இந்த நிலையில் அன்று பிற்பகலில் அவனை அகளங்கர் அழைத்தாகச் சொல்லி இரண்டு பணியாளர்கள் அழைத்துச் சென்றார்கள்.

விஹாரத்தின் மத்திய பகுதி விசாலமாகவும் காற்றோட்ட மானதாகவும் இருந்தது. அதன் கூரைப்பகுதி முழுவதும் மஹாவீரரின் வாழ்க்கை நிகழ்ச்சியைப் பற்றிய வண்ண ஓவியங்கள் இடம்பெற்றிருந்தன.

அக்கூடத்தின் கோடியில் அமைக்கப்பட்டிருந்த கல் பத்மாசனத்தில் அமர்ந்திருந்தார் தலைமைத் துறவியான அகளங்கர். ஒற்றை நாடி சரீரம் கொண்டிருந்த அவர் மிகவும்

எளிமையானவராய் இருந்தார். கண்பார்வையில் ஒளியும் தீட்சண்யமும் தெரிந்தன.

உதயசந்திரனை அழைத்து வந்தவர்கள் அவனுக்கு முன்னால் நிற்கச் செய்துவிட்டு அகன்றார்கள். அங்கே அந்த இருவரைத் தவிர வேறு யாரும் இல்லை.

''உட்கார்'' என்றார் அகளங்கர்.

உட்கார்ந்தான் உதயசந்திரன்.

''சொல்'' என்றார் அகளங்கர்.

உதயசந்திரன் அமைதியாகவே இருந்தான். பேச்சு வரவில்லை.

''சொல் அன்பனே, என்னிடம் ஏதோ கேட்க வேண்டும் என்று சொன்னாயாமே? என்ன அது?'' என்று கேட்டார் அகளங்கர்.

''சுவாமி, வாழ்க்கையில் எதுவுமே செடியில் இலை உருவாகி வருவதுபோல் இயற்கையாக வரவேண்டும் என்று என் உபாத்தியாய பெருமக்கள் கூறியிருக்கிறார்கள். துறவும் அவ்வாறு வரவேண்டும் என்பது என் அபிப்ராயம். ஆனால் இங்கே அது கட்டாயப்படுத்தப்படுகிறது. இது சரியா என்பதுதான் என் கேள்வி'' என்றான் உதயசந்திரன்.

''உனக்குத் துறவு ஏன் பிடிக்கவில்லை?'' என்று கேட்டார் அகளங்கர்.

''எப்படி சுவாமி பிடிக்கும்? எனக்கு வயது இருபத்தைந்து தான்.''

''அதனாலென்ன? நான் துறவறம் மேற்கொண்ட போது எனக்கு வயது பதிமூன்றுதான். இங்கே இருக்கும் பல துறவிகளும் இளம் பிராயத்திலேயே சன்னியாசம் பூண்டவர்கள் தாம். வயதுக்கும் துறவுக்கும் சம்பந்தமில்லை.''

''சம்பந்தமில்லாமல் இருக்கலாம். சம்மதம் தேவை அல்லவா? வேண்டாம் என்று ஒதுங்குபவனை வா என்று கட்டாயப்படுத்துவது நியாயமாகுமா?''

''அன்பனே, துறவறம் என்பது எத்தகையது என்பது தெரியாததால்தான் நீ என்னென்னவோ சொல்கிறாய். துறவறம் என்பது பரமானந்தம். எல்லோரும் இதைத் தேடித்தான் வந்து தீர வேண்டும். இல்லறம் என்ற மாற்றுப் பாதையில் சென்று சுக துக்கங்களில் சிக்கி வெறுத்துப்போய் சக்தியை யெல்லாம் இழந்த பின் துறவறத்திற்கு ஈர்க்கப்பட்டு பேரானந்தத்தை துய்க்க மனிதன்

விரும்புகிறான். எதற்கு அந்த அலைக்கழிப்புகள்? இது கிடைக்கும் அது கிடைக்கும் என்ற எதிர்பார்ப்புகளும் ஏமாற்றங்களும் சம்சாரத்தில் உண்டு. துறவறத்தில் ஆனந்தத்தைத் தவிர வேறு எதுவும் இல்லை. இந்த அவஸ்தைகள் வேண்டாம் என்று தான் பலரையும் துறவறத்திற்கு அழைக்கிறோம். இது ஒரு கருணாகாரியமே தவிர கட்டாயப்படுத்தும் செயல் அல்ல.''

பௌர்ணமி கூறிய விஷயம் அவனது நினைப்புக்கு வந்தது. பல்லவ ராஜாங்கத்திற்கு பணம் ஈட்டித் தருவதற்காகவே பல்வேறு நாட்டிலிருந்து மக்கள் சமண மதத்தில் சேர்க்கப் படுகிறார்கள் என்று பௌர்ணமி சொல்லியிருந்தாலும் அது உண்மையா என்று தெரியாத நிலையில் அதைப்பற்றி அகளங்கரிடம் கேட்க அவன் முற்படவில்லை.

''நான் அப்படி நினைக்கவில்லை சுவாமி. எனது உடலையும் உடல் பலத்தையும் கொண்டு இந்த நாட்டிற்கு சேவை செய்வதையே சிறந்த அறமாக நினைக்கிறேன். அதுதான் எனக்கு ஆனந்தத்தைத் தரக்கூடியது என்று கருதுகிறேன். என்னை மன்னிக்க வேண்டும்.''

''அதனால்தான் பௌர்ணமியைக் காதலிக்கிறாயா அன்பனே?''

''நாங்கள் ஒருவரையொருவர் விரும்புவது உண்மைதான் சுவாமி.''

''அவளோடு கடைசி வரை வாழ்க்கை நடத்துவதில் நீ தீர்மானமாக இருக்கிறாயா?''

''ஆமாம் சுவாமி.''

''உன்னை துறவறத்திலிருந்து விடுவிக்க வேண்டுமென்றால் பௌர்ணமியை நீ துறக்க வேண்டும். சம்மதமா?'' என்று கேட்ட அகளங்கர், ''உன் பதிலை இப்போதே சொல்ல வேண்டும் என்றில்லை. நாளைக்குச் சொன்னால் போதும்'' என்றார்.

பிறகு ''நீ போகலாம்'' என்றார்.

பணியாட்கள் வந்து உதயசந்திரனை பழைய இடத்திற்கே அழைத்துச் சென்றார்கள். காவலுக்கு நான்கு வீரர்களை பணியமர்த்திவிட்டு, ''ஐயா, உங்களுக்குத் தேவையான உணவு நேரத்திற்கு வந்து சேரும்'' என்று தெரிவித்தார்கள்.

''பௌர்ணமியை இங்கே அழைத்து வர முடியுமா?'' என்று கேட்டான் உதயசந்திரன்.

''அதற்கு எங்களுக்கு அதிகாரம் இல்லை ஐயா'' என்று சொல்லிவிட்டு அகன்றார்கள் பணியாட்கள்.

உதயசந்திரனுக்கு தான் வந்திருக்கும் இடம் சமண விஹாரமா அல்லது சதிக்கூடமா என்று சந்தேகமாக இருந்தது. ஏனென்றால் அவன் வந்ததிலிருந்து முரண்பாடான சம்பவங்களே நடந்து கொண்டிருந்தன. கட்டாயத் துறவறம் என்று ஆரம்பமே முரண்பாடானதாக இருந்தது. அதையொட்டி பௌர்ணமியின் வரவு, பஞ்ச ஸ்திரீகளின் விளையாட்டு, மல்லர்களால் மிரட்டல், காரியஸ்தரின் கெடுபிடி, பௌர்ணமியின் காதல், என்று எல்லாமே துறவுக்குச் சம்பந்தமில்லாதச் சம்பவங்களே அடுத்தடுத்து நடந்தன. அவனைத் துறவுக்கு அனுப்பி வைத்த தந்தையே திடீரென அங்கு விஜயம் செய்து புதிராகப் பேசி அங்கிருந்து தப்பி விடும்படிச் சொல்கிறார். இதெல்லாம் போதாதென்று கடைசியாக தலைமைத் துறவி அகளங்கர் போட்ட நிபந்தனையோ விசித்திரமானதாக இருந்தது.

பௌர்ணமியின் காதல் வரை அவர் அனைத்தையும் அறிந்திருந்தார்.

துறவு தான் பரமானந்தம் என்று விளக்கிய அவர் அதை ஏற்கவில்லை என்றால் பௌர்ணமியின் மீதான காதலை துறக்க வேண்டும் என்று நிபந்தனை விதித்தார்.

துறவை விடுவதற்கும் அகளங்கரின் வளர்ப்பு மகளான பௌர்ணமிக்கும் என்ன சம்பந்தம் என்பது உதயசந்திரனுக்கு விளங்கவில்லை.

அவளை கைவிடுவதென்றால் துறவிலிருந்து விலக்கு பெறலாம் என்று தலைமைத் துறவி கூறியது புதிராகவே இருந்தது.

அதையெல்லாம் எண்ண எண்ண அவனுக்குக் குழப்பம் தான் அதிகரித்தது.

''இங்கிருந்து இன்றிரவு தப்ப வேண்டும் என்று வந்துவிட்ட பிறகு அகளங்கரைப் பற்றியோ சமண விஹாரத்தைப் பற்றியோ எதற்காக கவலைப்பட வேண்டும்? இங்கிருப்பவர்கள் எக்கேடு கெட்டால் நமக்கென்ன?'' என்று கேட்டுக் கொண்ட அவன் தப்புவது பற்றி யோசிக்கலானான்.

அதற்கான திட்டத்தை வகுத்துக் கொண்டான்.

இரவு அவனுக்கு உணவு கொண்டு வந்த பணியாளனை லாவகமாகப் பிடித்து மூர்ச்சையடைய வைத்தான். உணவை உண்டுவிட்டு பணியாளனின் உடைகளை எடுத்து அணிந்து கொண்டான்.

''நான் உறங்க வேண்டும். இனி யாரையும் அனுப்பாதே. பௌர்ணமி வருவதென்றாலும் வேண்டாம்'' என்று உரத்த குரலில் சொல்லிவிட்டு உணவுத் தட்டை எடுத்துக் கொண்டு பணியாளனைப் போல பவ்யமாக நடந்து வெளியே வந்தான்.

வெளியே காவல் காத்துக் கொண்டிருந்த வீரர்களில் ஒருவன் உதயசந்திரனைப் பார்த்து ''நில்'' என்றான்.

உதயசந்திரன் எதற்கும் தயாரான நிலையில் பதட்டப் படாமல் நின்றான்.

''தண்ணீர் பானையில் தண்ணீர் இருக்கிறதா என்று பார்த்தாயா?'' என்று கேட்டான் காவல் வீரன்.

உதயசந்திரன் தன் குரலைச் சற்றே மாற்றிக்கொண்டு, ''இருக்கிறது'' என்றான்.

''உன் குரல் ஏன் ஒரு மாதிரி இருக்கிறது?'' என்று கேட்டான் காவல் வீரன்.

''இதெல்லாம் ஒரு கேள்வியா? தொண்டை கட்டி யிருக்கிறது.''

''சரி சரி. போ.''

உதயசந்திரன் மெல்லவே நடந்து வெளியேறினான். இரவு நேரமாக இருந்ததாலும் வாயிற்பகுதியில் அதிகமாக வெளிச்சம் இல்லாததாலும் ஆள் மாறாட்டத்தை காவல் வீரர்களால் அறிய முடியவில்லை.

ஓரளவிற்குத் திருப்தியோடு வெளியே வந்த உதயசந்திரன் புரவிக் கொட்டடி இருக்கும் இடத்தைத் தேடிச் சென்றான்.

அதே சமயத்தில் இருட்டுப்பகுதியில் பதுங்கியிருந்த இரண்டு உருவங்களில் ஓர் உருவம், ''இது நல்ல சந்தர்ப்ப மாயிற்றே? இவனை இப்போதே கடத்திவிடலாம் அல்லவா?'' என்று கேட்டது.

''இங்கே அவனைப் பிடிக்க முயற்சித்தால் ரசாபாசமாகி விடும். வெளியில் தான் வந்துவிட்டானே! இனி என்ன கவலை? எங்கே போகிறான் என்று பார்ப்போம். சரியான இடத்தில் வளைத்துக் கொள்வோம்'' என்றது மற்றொரு உருவம்.

☆☆☆



7

பரகாயப் பிரவேசம்

தன்னை கண்காணிக்கும் உருவங்களை அறியாத உதயசந்திரன் தப்பிய இல்லத்திலிருந்து வலப்பக்கமாகவே சென்றான். தனதுவிரல்களை உதடுகளுக்குள் வைத்து தனக்குப் பழக்கப்பட்ட குரலை எழுப்பினான். அடுத்த சில நிமிடங் களிலேயே அக்குரலுக்கு பதிலளிக்கும் விதத்தில் புரவியின் கனைப்பு கேட்டது. அது வந்த திசையை நோக்கிச் சென்றான் உதயசந்திரன். புரவிக் கொட்டடி இருந்த இடத்தையும் கண்டுபிடித்தான்.

புரவிக் கொட்டடி விசாலமான கொட்டகையொன்றில் இருந்தது. அந்தப் பகுதியில் காவல் தேவையில்லை என்று கருதியதாலோ என்னவோ ஒரு காவல் வீரனைக் கூட பார்க்க முடியவில்லை. கொட்டகையில் மூங்கில் வேலிகள் அமைக்கப் பட்டு புரவிகள் தனித்தனி அடைப்புகளில் பாதுகாப்பாக நிறுத்தப்பட்டிருந்தன. பந்தங்கள் சில கொட்டகையின் ஓரங்களில் வைக்கப்பட்டிருந்தாலும் அந்தப் பகுதி இருட்டாகவே இருந்தது.

பந்தம் ஒன்றை எடுத்துக் கொண்டு கொட்டடிக்குச் சென்ற உதயசந்திரன் தனது புரவியான மின்னலை அடையாளம் கண்டு அருகில் சென்று தடவிக் கொடுத்தான். அது சந்தோஷ மிகுதியால் துள்ளியது.

''வா.வா. இனி நாம் இந்தச் சிறையில் இருக்க வேண்டாம்,. சுதந்திரமாகப் போகலாம்'' என்று புரவியிடம் சொல்லிக் கொண்ட உதயசந்திரன் கயிற்றை அவிழ்த்து புரவியை கொட்டகைக்கு வெளியே கொண்டு வந்தான். தன்னை யாரும் கவனிக்கவில்லை என்பதை உறுதி செய்து கொண்ட பின் புரவியின் மீது ஏறி அதை தட்டிவிட்டான். காக்கை மடுவிற்கு வந்த பாதையிலேயே திரும்பி புரவியைச் செலுத்தினான்.

கரிய உருவங்கள் இரண்டும் பிசாசுகளைப் போல பதுங்கியிருந்து அவன் செல்வதைக் கவனித்த பின் தங்கள் புரவிகளில் பின் தொடர்ந்தன.

விரைவிலேயே உதயசந்திரன் பயணம் செய்த இடத்தை அறிந்த அந்த கரிய உருவங்களில் ஒன்று "இவன் கணிகிலுப்பைக்கு அல்லவா செல்கிறான்? இந்த இடம் பல்லவ அரச குலத்தவர்கள் இருக்கும் இடமாயிற்றே?* இங்கே இவனுக்கு என்ன வேலை இருக்க முடியும்?" என்று கேட்டது.

"அதைப் பற்றி நமக்கென்ன? நமக்கு வேண்டியவன் இவன் தான். இவன் இங்கேயே தங்கிவிடப் போவதில்லை. எங்கே போகிறான் என்று கவனிப்போம். வலையை வீசுவோம்" என்றது மற்றொரு உருவம்.

ராஜவீதிக்கு வந்தான் உதயசந்திரன். நள்ளிரவு நேரம் நெருங்கிக் கொண்டிருந்தாலும் பல்லவ அரச குலத்தவர் குடியிருந்த இடம் கிராமமாக இருந்ததால் ராஜவீதி ஒளிமயமானதாகவும் கலகலப்பானதாகவும் திகழ்ந்தது. மக்கள் நடமாட்டமும் குறையவில்லை. காவல் வீரர்களும் புரவிகளில் வலம் வந்து கொண்டிருந்தார்கள்.

தனது தந்தை கூறிய ராஜவீதி அதுதான் என்று நினைத்தான் உதயசந்திரன். தந்தை கூறியிருந்த இல்லத்தின் எண் நினைவிலிருந்ததே தவிர வீதி நினைவிற்கு வரவில்லை. ராஜவீதியின் இடதுபுறத் தெருவிற்குப் போக வேண்டிய அவன் தவறுதலாக வலதுபுறத் தெருவிற்குச் சென்றான்.

அந்த வீதியில் வெளிச்சம் அவ்வளவாக இல்லை. ஆனால் அங்கே இளம் பெண்களின் நடமாட்டம் அதிகமாக இருந்தது. புரவியை விட்டு இறங்கிய உதயசந்திரன் இளம்பெண் ஒருத்தியை பதினெட்டாம் இலக்கத்திற்குரிய வீடு எது என்று விசாரித்தபோது "அதோ அந்த மருதமரம் இருக்கிறதே அந்த வீடு தான்" என்று சொல்லிவிட்டு அவனது கன்னத்தில் ஓர் இடி இடித்துவிட்டுச் சென்றாள் சிரிப்புடன்.

"பைத்தியக்காரப் பெண். போகட்டும்" என்று சொல்லிக் கொண்டு குறிப்பிட்ட இல்லத்துக்கு முன்னால் சென்று புரவியை மருத மரத்தில் கட்டினான்.

"இரு மின்னல் புரவியே! இதோ வந்துவிடுகிறேன்" என்று சொல்லிவிட்டு இல்லப் படிக்கட்டுகளில் நடந்தான்.

இல்லம் விசாலமானதாக இருந்தது.

---

* பக்கம் 17 மகேந்திரவர்மன் by மயிலை, சீனி.வேங்கடசாமி.

படிக்கட்டுகளில் ஏறி இல்லத்தின் கதவைத்தட்ட முற்பட்டபோது ''யாரது?'' என்று கேட்டபடி வந்தாள் ஒரு பெண்மணி. அவளுக்கு வயது ஐம்பது இருக்கலாம்.

அவளது குறுக்கீட்டை விரும்பாத உதயசந்திரன் ''நான் யாராயிருந்தால் என்ன?'' என்று கேட்டான் முரட்டுத்தனமாக.

''உள்ளே போகப் போகிறாயா?'' என்று கேட்டாள் அந்தப் பெண்மணி.

''ஆமாம்.''

''நீ போகக் கூடாது.''

''ஏன்?''

''போகக் கூடாதென்றால் கூடாதுதான்.''

''இதை இன்னொரு முறை நீங்கள் இதுவரை போகாத இடத்திற்கு உங்களை அனுப்பி விடுவேன். பெண் பாவத்திற்கு என்னை ஆளாக்க வேண்டாம். திரும்பிச் செல்லுங்கள்'' என்று கூறிய அவன் கலையழகு நிறைந்த கதவைத் தட்டினான்.

கதவு தானாகவே திறந்தது.

உள்ளே சென்றதும் அதைச் சாத்தி தாளிட்டான்.

உள்ளே விசாலமான கூடம் இருந்தது. கூடம் முழுவதும் பந்தங்களால் ஒளிர்ந்தது. அந்த ஒளியில் கூடச் சுவர்களில் வரையப்பட்டிருந்த ஓவியங்கள் தெளிவாய்த் தெரிந்தன. அவை அனைத்துமே காமக் கூத்துகளாக இருந்ததைக் கண்டு முகம் சுளித்து உதயசந்திரன், ''இங்கேயா இருக்கிறார் தந்தை? இடம் ஒரு மாதிரியானதாக இருக்கும் போலிருக்கிறதே?'' என்று நினைத்தான்.

அப்போது அங்கே பிரவேசித்தாள் ஒரு பெண்.

அவனைப் பார்த்ததுமே ''அட! மன்மதன்! நீங்கள் தானா? விஹாரத்தில் இருக்க வேண்டியவராயிற்றே? எப்படி இங்கே வந்தீர்கள்? இதென்ன கோலம்? ராஜகுமாரனைப் போல் இருந்தீர்களே! இந்த அலங்கோலம் எப்படி வந்தது?'' என்று சகஜமாயும் சரளமாயும் கேட்டாள்.

அவள் யார் என்பது அவனுக்கு நினைவிற்கு வந்தது.

காக்கை மடுவிற்கு வழிகேட்டு வந்த போது இளம்பெண்கள் அதிகமாக இருந்த ஓர் ஊரில் அவனுக்குத் தவறான வழியைக் காட்டிய பெண் தான் அவள்.

அவளை அடையாளம் கண்டு கொண்டாலும் அவளைப் போல அவனால் சரளமாகப் பேச முடியவில்லை.

''பெருஞ்சாத்தன் இல்லையா?'' என்று தட்டுத்தடுமாறிக் கேட்டான்.

''பெருஞ்சாத்தனாவது! குறுஞ்சாத்தனாவது! என்ன உளறுகிறீர்கள்?'' என்று கேட்டாள் அவள்.

பந்தயங்களின் செவ்வொளியில் ஓவியங்களுக்கிடையில் அவளே ஓர் ஓவியம் போல் கண்கள் கூசும் விதத்தில் கருத்தை அள்ளும் உருவமாகக் காட்சியளித்தாள். ஆடைகள் குறைவாகவும் அணிகலன்கள் அதிகமாவும் அணிந்திருந்த அவள் பேரழகோடு விளங்கினாலும் பேராபத்தானவளாகவும் தோன்றினாள். ஆடவர்களை ஒரு நொடியில் அசத்திவிடக் கூடிய அவளது அளப்பரிய தோற்றம் - இரவு நேரம் - தனிமையானச் சூழ்நிலை - காமக் கூத்துகளைக் கொண்ட ஓவியங்கள் - இவை அனைத்தையும் உணர்ந்த உதயசந்திரன் தான் தவறான இடத்திற்கு வந்துவிட்டதையும் உணர்ந்தான்.

''மன்னிக்க வேண்டும் பெண்ணே. நான் தவறான இடத்திற்கு வந்துவிட்டதாக நினைக்கிறேன்'' என்றான்.

''இல்லை. தவறான இடத்திற்குச் செல்ல இருந்தீர்கள். இப்போது சரியான இடத்திற்கு வந்துவிட்டீர்கள்'' என்றாள் அவள் தெளிவான மற்றும் இனிமையான குரலில்.

''இதுவா சரியான இடம்?''

''வாலிபரே. இந்த வயதில் சமண விஹாரமா சரியான இடம்? துறவறமா சரியான வழி? அந்தந்த வயதுக்கு ஏற்ற இடமாகப் பார்த்துச் செல்வதுதானே உகந்தது? ஆகவேதான் உங்களுக்கு விஹாரத்திற்குப் போவதற்கான வழியைக் காட்டவில்லை. புரிகிறதா?'' என்று கேட்ட அவள் அதோ அந்த அறைக்குச் செல்லுங்கள். அங்கே புத்தாடைகள் நிறைய இருக்கின்றன. உங்களுக்கு எது தேவையோ அதை அணிந்து கொண்டு வாருங்கள். இந்த கோலத்தில் பார்க்கவே பிடிக்கவில்லை'' என்றாள்.

உதயசந்திரனுக்கும் தான் அணிந்திருந்த ஆடைகளை பிடிக்காததால் அவள் கூறிய அறைக்குள் சென்றான். அங்கே எண்ணிலடங்காத உயர் ஆடைகள் ஏராளமாக இருந்தன. அவற்றில் தனக்குப் பிடித்த ஆடைகளை எடுத்து அணிந்து கொண்டு வந்தான்.

''இதுதான் சரி. இப்போது தான் ராஜகுமாரனைப் போல இருக்கிறீர்கள்'' என்றாள் அப்பெண்.

''மிக்க நன்றி. இங்கே கொடுக்க வேண்டிய விஷயங்கள் மாறிவிட்டன. எனக்கு இங்கே ஆடை அணிகலன்களை நீ கொடுக்கிறாய். அபூர்வமாக இருக்கிறது'' உதயசந்திரன்.

அவளோ ''அபூர்வங்கள் எங்கேயாவது நடந்து கொண்டு தான் இருக்கும். அதற்காக வியப்படைய வேண்டாம்'' என்று சொல்லிவிட்டு ''என் பெயர் லீலாவதி. அது எனக்கு வீட்டில் வைத்த பெயர். ரதிதேவி. இது இங்கு வந்தவர்கள் எனக்கு வைத்த பெயர். நன்றாக இருக்கிறதா?'' என்று கேட்டாள்.

கூடத்தில் இருந்த பட்டு மஞ்சம் விரிக்கப்பட்ட மரகதக் கட்டிலில் அமர்ந்து கொண்டு அவள் இப்படி கேட்டவிதம் உதயசந்திரனுக்கு மனதை அலைபாய வைக்கக்கூடியதாக இருந்தது.

அதேசமயம் சற்றே சுதாரித்துக் கொண்ட அவன் ''பெயர் நன்றாக இருக்கிறது. நீயும் அழகாகத்தான் இருக்கிறாய். ஆனால் ரசிக்கக்கூடிய நிலையில் நானில்லை'' என்றான்.

அவள் லேசாக சிரித்துவிட்டு ''என்னை ரசிப்பதற்காகப் பலர் காத்திருக்கிறார்கள். தெரியுமா?'' என்று கேட்டாள்.

''மிக்க மகிழ்ச்சி பெண்ணே. நான் உன் நிலையைப் பற்றி குறை கூறவில்லை'' என்றான்.

''உங்கள் நிலைக்கு மட்டும் என்ன வந்துவிட்டது? இந்த வயதில் சன்னியாசத்தை தான் ரசிக்க விரும்புகிறீர்களா?''

இப்படிக் கேட்டுவிட்டு வெட்டுப்பார்வை ஒன்றை வீசினாள் ரதிதேவி.

''அப்படியெல்லாம் இல்லை ரதிதேவி. துறவறத்திற்கு நான் தயாராக இல்லை என்று தான் காக்கை மடுவில் எல்லோரிடமும் சண்டை போட்டேன்'' என்றான் உதயசந்திரன்.

''பிறகென்ன? துறவறத்தை தொட மறுத்துவிட்டீர்கள். சமண விஹாரத்தை விட்டுவிட்டு சரச மாளிகைக்கு வந்துவிட்டீர்கள். எல்லாம் சரியாகத்தானே இருக்கிறது? எதற்கு தயக்கம்?''

''நான் இதற்கு வரவில்லை.''

''ரொம்பவும் குழம்பித்தான் போயிருக்கிறீர்கள். நான் ஆடட்டுமா? பல்லவ அரசின் ராஜ நர்த்தகி நான்.''

''வேண்டாம்.''

''பாடட்டுமா? பல்லவ மகாராணிக்கு இசையை பயில்விப்பவள் நான்.''

''வேண்டாம்.''

''இதோ பாருங்கள் வீரரே! என்னைக் கண்டு உன்மத்தம் கொண்டவர்களே அதிகம். அதுதான் இந்த மாளிகையின் மகத்துவம். ஆனால் நிலைமை தலைகீழாக மாறிவிட்டது. உங்களைக் கண்ட உணர்ச்சிக் கொந்தளிப்பில் இருக்கிறேன் நான். இன்றைக்கு மட்டுமல்ல. உங்களைக் கண்டேனே அன்றைக்கும் எனக்கு இதேநிலைதான். நான் விரும்பாதவர்கள் என்னைத் தொட முடியாது. நீங்கள் தொட வேண்டும் என்று நான் விரும்புகிறேன். உங்களுக்கு கசக்கிறதா?''

''ரதிதேவி, இந்த ஊரில் இருப்பவர்கள் எல்லாம் உன்னைப் போன்றவர்கள்தானா? அதாவது...''

''வீரரே, இது பல்லவ ராஜ குடும்பத்தவர் வசித்து வந்த ஊர். அரச குடும்பத்தினர் பல ஆண்டுகளுக்கு முன் இந்த ஊரை விட்டுவிட்டு பல்லவபுரத்திற்குச் சென்றுவிட்டார்கள். அதற்குப் பிறகு இந்த ஊரில் ராஜாக்களுக்கு உரிய ஆசைப் பெண்கள் இங்கே வைத்து வளர்க்கப்பட்டார்கள். பல்லவ மாமன்னர் ராஜசிம்மர் ஒருமுறை இங்கே வந்து தேவி என்ற பெண்ணை விரும்பி காஞ்சிக்கு அழைத்துச் சென்றார். அவளை மணந்து லோகமாதேவி என்ற பட்டத்தை அளித்து இரண்டாவது ராணியாக்கிக் கொண்டார். அதற்குப் பிறகு அவர் இங்கு வருவதில்லை. ராஜப் பிரமுகர்கள் சிலர் அவ்வப்போது வருவார்கள். அதிலிருந்து இக்கணிக் கிலுப்பை கிராமம் கணிகையர் கிராமமாகிவிட்டது. வெளியே இது கிராமம். உள்ளேயோ ஒரு சொர்க்கம். உங்களுக்கோ ஒரு நரகமாகப் படுகிறது போலிருக்கிறது. ஊரின் கதை இதுதான். போதுமா? வேறு ஏதாவது சொல்ல வேண்டுமா?'' என்று கேட்ட ரதிதேவி, ''இந்த இடத்திற்கு வந்து பேச்சால் நேரத்தை வீணடிப்பவன் முட்டாள். நீங்கள் அந்தப் பட்டியலில் சேர வேண்டாம். வாருங்கள். இருவரும் சேர்ந்து இதுவரை காணாத சொர்க்கத்தைப் படைப்போம்'' என்று கூறி கட்டிலை விட்டு எழுந்து வந்து அவனது கரத்தைப் பற்றி பலமாக இழுத்தாள்.

ஆண்களின் இழுப்புக்கே அசையாதவனான உதயசந்திரன் ரதிதேவியின் இழுப்பில் அசையவில்லை. மாறாக அவள் நிலை குலைந்து அவனது மடியில் விழுந்தாள். எதிர்பாராத விதமாக விழுந்ததால் இடுப்பு வலித்தது. ''அப்பா'' என்றுச் சொல்லி வலித்த இடத்தில் கையை வைத்தாள்.

அவளை அப்படியே மான் குட்டியைப் போல் தூக்கி கட்டிலில் கிடத்திய உதயசந்திரன், ''எங்கே வலிக்கிறது? இடுப்பிலா?'' என்று கேட்டான்.

அப்போது ரதிதேவியின் உடல் அசாதாரணமாகத் துள்ளியது.

''யாரடா அவன்? என் முன்னே நிற்பது?'' என்று கேட்டாள் அவள்.

குரலானது ரதிதேவியின் தேன் குரலாக இல்லை. ஆண் குரலாக இருந்தது.

திடுக்கிட்டான் உதயசந்திரன்.

கட்டிலை விட்டுச் சடாரென எழுந்து கொண்ட அவள், ''இன்னுமா நிற்கிறாய்? போடா போ. நிற்காதே இங்கே'' என்று அதே ஆண் குரலில் சொல்லி அவனைப் பிடித்துத் தள்ளவும் முற்பட்டாள்.

உதயசந்திரனோ அவளது தோளைப் பிடித்து ''ரதிதேவி! என்ன ஆயிற்று? ஏன் இப்படிப் பேசுகிறாய்?'' என்று கேட்டான்.

அவளோ அவனை உதறிவிட்டு கூடத்தில் இங்குமங்குமாய் கூச்சலிட்டபடி ஓடினாள். கைகளுக்கு கிடைத்த பொருட்களை எடுத்து கண்டபடி வீசி எறிந்தாள்.

அதேசமயம் கூடத்தின் கதவு வெளிப்பக்கம் தட்டப்படவே உதயசந்திரன் கதவைத் திறந்தான்.

வெளியேயிருந்து நான்கைந்து பெண்மணிகள் வந்தார்கள். அவர்களில் உதயசந்திரனை உள்ள போக வேண்டாம் என்று தடுத்த பெண்மணியும் இருந்தாள்.

எல்லோரும் போய் ரதிதேவியைப் பிடித்து கட்டிலில் படுக்க வைத்து கயிற்றால் கட்டினார்கள்.

பிறகு யார் யாரோ அங்கு வந்து ஏதேதோ சடங்குகளைச் செய்தார்கள்.

இதற்கிடையில் தன்னை துரத்திய பெண்மணியை தனியே அழைத்த உதயசந்திரன், ''ரதிதேவிக்கு என்ன ஆயிற்று? நன்றாகத்தானே பேசிக் கொண்டிருந்தாள்?'' என்று கேட்டான்.

''சமீப காலமாகத்தான் இந்தப் பரகாயப் பிரவேசம் அவளை இந்தப் பாடு படுத்துகிறது தம்பீ'' என்றாள் அப்பெண்மணி.

''பரகாயப் பிரவேசமா? அதென்ன?'' என்று கேட்டான் உதயசந்திரன்.

''அது ஒரு சோகக்கதை ஐயா. நாங்கள் கணிகையர் குலம்தான் என்றாலும் ரதிதேவி மட்டும் அபூர்வமானவள். சேற்றில்

பிறந்தாலும் அவள் கறைபடியாத செந்தாமரை மலராகவே இருக்க விரும்பினாள். ஆனால் குலம் அவளை அவ்வாறு இருக்கவிடவில்லை. அந்த மலரை சேற்றில் மிதக்க வைத்துப் பார்க்க விரும்பியது. வேறு வழி இல்லாமல் அவள் கறைப்பட்டாள். ஆனாலும் தான் விரும்பாதவனை அணுக விடவில்லை. இந்த நிலையில்தான் பாழும் துறவி ஒருவன் அவளை விரும்பினான். அவளைச் சுற்றிச் சுற்றி வந்தான். துறவியாக இருந்து கொண்டு இவ்வாறு ஈனத்தனமாக அவன் நடந்து கொண்டதை ரதிதேவி இகழ்ந்தாள். அவனோ உறவு தான் வேண்டுமென்றும் அது கிடைப்பதாக இருந்தால் துறவை விட்டுவிடுவதாகவும் சொன்னான். அவளோ அவனை அடியோடு வெறுத்துப் புறக்கணித்தாள். அவன் செல்வங்களைக் காட்டி அவளை அடைய முயன்று தோற்றுப் போனான். அவமானமும் ஆத்திரமும் கொண்டான். பரகாயப் பிரவேசம் என்னும் கூடு விட்டு கூடு பாயும் கலையைக் கைக் கொண்டிருந்த அந்தச் சண்டாள சன்னியாசி அடிக்கடி இவளது உடலில் புகுந்து கொண்டு ஆட்டிப் படைக்கிறான். அவள் சரசமாட முற்படும் போது பரகாயப் பிரவேசம்* செய்து அவளை அலைக் கழிக்கிறான். இதனால் தான் உன்னை உள்ளே போக வேண்டாம் என்று சொன்னேன். இப்போது புரிகிறதா காரணம்?'' என்று கேட்டாள் பெண்மணி.

உதயசந்திரனுக்கு ஒரு கணம் என்ன செய்வதென்றும் சொல்வதென்றும் தோன்றவில்லை. தன்னை வரவேற்று நல்லாடைகளைக் கொடுத்து நல்லவிதமாகப் பேசி தன் மீதான ஆசையை வெளிப்படுத்திக் கொண்டு அதை நிறைவேற்றிக் கொள்ள முற்பட்டபோது அப்பெண்ணுக்கு இப்படியொரு சிக்கல் உண்டானதைக் கண்டு வருந்தினான். சிக்கலானது விபரீதமானதாக இருந்தது.

அதேசமயம் அச்சிக்கல் மட்டும் வராதிருந்தால் அங்கே ரசாபாசம் உண்டாகியிருக்கும் என்பதையும் தனது முரட்டுத் தனத்தைக் காட்டியே அவளிடமிருந்து தப்ப வேண்டியிருக்கும் என்பதையும் உணர்ந்த அவனுக்கு அச்சிக்கல் தனக்கு நல்லது செய்திருப்பதாக எண்ணினான்.

---

* பரகாயப் பிரவேசம் - பிற உடலில் புகுதல். இப்படியொரு சம்பவம் நடந்ததாக மாமண்டூர் கல்வெட்டு ஒன்று கூறுகிறது.

பக்கம் 145 தமிழ்நாட்டு வரலாறு (முதற்பகுதி)தமிழ் நாடு அரசு வெளியீடு.

அவனுக்குத் தன் தந்தையின் இருப்பிடத்தைக் கண்டு பிடித்து மேற்கொண்டு நடக்க வேண்டியவைகளைப் பற்றி ஆவன செய்ய வேண்டும் என்று தோன்றியது. அதற்கு தற்போதைய சந்தர்ப்பமே சிறந்தது என்று கருதியவனாய் அங்கிருந்து மெல்ல நழுவி வெளியே வந்தான். மருத மரத்தில் கட்டியிருந்த தன் புரவியை அவிழ்த்தான்.

அப்போது பின்னால் வந்த புரவி மனிதன் ஒருவன், ''ஐயா, நீங்கள் தானே உதயசந்திரன்?'' என்று கேட்டான்.

''ஆமாம், நீ யார்?'' என்று கேட்டான் உதயசந்திரன்.

''ஐயா, நான் பௌர்ணமி தேவியின் பணியாளன். காக்கை மடுவிலிருந்து உங்களைத் தொடர்ந்து வருகிறேன்'' என்றான் புரவி மனிதன்.

''எதற்காக என்னைப் பின்தொடர வேண்டும்?''

''அது தேவியின் கட்டளை.''

''பௌர்ணமியின் கட்டளையா?''

''ஆமாம். தங்களை விஹாரத்திற்கு மீண்டும் வரவேண்டாம் என்று தங்களிடம் சொல்லச் சொன்னார். வேறு இடத்திற்கு அழைத்து வரும்படி கட்டளையும் இட்டார்.''

''வேறு இடமா? எங்கே?''

''அருகே இருக்கும் குரங்கணில் முட்டத்திற்கு.''

''அங்கே எதற்கு?''

''தேவி அங்கே காத்திருப்பாராம். ஆகவே தான் உங்களை அழைத்து வரச் சொன்னார். அங்கே சென்றபின் இருவருமாக வேறு இடத்திற்குச் சென்றுவிடலாம் என்பது அவரது விருப்பம்.''

புரவி மனிதன் கூறியதில் சந்தேகப்பட எதுவும் இல்லாதிருந்தது உதயசந்திரனுக்கு.

தனது துறவறத்தை விரும்பாமல் தன்னை விரும்பிய அவள் இப்படியொரு திட்டம் தீட்டியிருந்தால் அது சரிதான் என்று நினைத்தான்.

அதேசமயம் தன் தந்தையைச் சந்திக்காமல் எப்படிச் செல்வது என்பது விளங்கவில்லை.

ஆகவே, ''வீரனே, உன் தேவியார் கூறியபடி நடந்து கொள்ள நான் தயார். அதற்கு முன் இங்கே ஒருவரை நான் சந்திக்க வேண்டும்'' என்றான்.

''ஐயா, தாங்கள் விஹாரத்தில் காணாமல் போன விஷயம் தெரிந்துவிட்டால் உங்களைப் பிடிக்க நாலாபுறமும் வலை வீசப்படும். பிறகு உங்களால் தப்ப இயலாது. ஆகவே தான் தாமதமில்லாமல் உங்களை குரங்கணில் முட்டத்திற்கு அழைத்து வரச் சொன்னார் தேவி. இந்த மாளிகைக்குப் போனதில் ஏற்கெனவே தாமதமாகிவிட்டது. மேலும் தாமதிப்பது ஆபத்து.''

''குரங்கணில் முட்டத்திற்குப் போனால் மட்டும் ஆபத்தில்லாமல்போய்விடுமா?''

''ஐயா, அந்த ஊர் எங்கள் தேவியாருக்கு மிகவும் வேண்டிய ஊர். அங்கே உங்களுக்கு எந்த ஆபத்தும் வராது. வராத வண்ணம் தேவி ஏற்பாடு செய்திருப்பார்.''

இதற்கு மேல் மறுப்பு சொல்ல உதயசந்திரன் தயாராக இல்லை. புரவி வீரனுடன் சென்றான்.

ஆனால் குரங்கணில் முட்டத்திற்குச் சென்று பிறகு தான் அங்கே பௌர்ணமி இல்லை என்பதையும் தான் ஏமாற்றப்பட்டு விட்டோம் என்பதையும் உணர்ந்தான் உதயசந்திரன்.

☆☆☆



8

சுலைமான்

கணிகிலுப்பை கிராமத்திற்குப் போய் தனது தந்தையைச் சந்தித்தபின் சூட்டோடு சூடாக பனமூருக்கு வந்து எப்படியாவது பௌர்ணமியைச் சந்தித்து தனது காதலுக்கு உறுதியான அடிக்கல்லை நாட்டிவிட்ட பிறகே பிற வேலைகளை கவனிப்பது என்பது உதயசந்திரனின் திட்டமாக இருந்தது.

ஆனால் கணிகிலுப்பை கிராமத்திற்கு வந்ததும் ஏதேதோ நடந்துவிட்டதால் சற்றே குழம்பித்தான் போனான் அவன்.

இந்த நிலையில் பௌர்ணமியின் பணியாளன் ஒருவன் வந்து தன்னைக் குரங்கணில் முட்டத்திற்கு பௌர்ணமி அழைத்து வரச் சொன்னதாகக் கூறி அதற்கு அவன் கூறிய காரணம் சரியாகவே இருந்ததால் அதை உதயசந்திரன் நம்பினான். அவநம்பிக்கை அடைய எந்த ஏதுவும் இல்லாதிருந்தது. தந்தையை அப்போதைக்குச் சந்திக்க வேண்டாம் என்றும், விஹாரத்தை விட்டு வெளியே வந்துவிட்டதால் எப்போது வேண்டுமானாலும் அவரைச் சந்தித்துக் கொள்ளலாம் என்றும் நினைத்த அவன் பௌர்ணமி வரச் சொன்ன இடத்திற்கே செல்வது என்று தீர்மானித்து அதுவரை தான் இருந்த மாளிகையைத் திரும்பிப் பார்த்தான். ரதிதேவியை நினைத்து அனுதாபப்பட்டான். தனக்கு நல்லாடைகளைக் கொடுத்த அவளுக்கு உதவ முடியாமல் போகிறோமே என்று ஆதங்கப்பட்டான். பிறகு வேறு வழியில்லாமல் பெருமூச்சு விட்டுவிட்டு தன்னை அழைத்த பணியாளனுடன் புறப்பட்டு அரை நாழிகைப் பொழுதில் குரங்கணில் முட்டம்* என்ற சிறிய கிராமத்தை அடைந்தான்.

---

* வாலி குரங்கு வடிவிலும் இந்திரன் அணில் வடிவிலும் எமன் காக்கை வடிவிலும் வந்து அவ்வூர் சிவனான வாலீஸ்வரரை வழிபட்ட இடமாதலால் அவ்வூர் குரங்கணில் முட்டம் (குரங்கு+அணில்+முட்டம்) என்ற பெயரிலும் வாலீஸ்வரம் என்ற பெயரிலும் அழைக்கப்பட்டது. இக்கோயிலில் குடிகொண்ட ஈஸ்வரனை சம்பந்தர் பெருமான் பத்துப் பாசுரங்களால் பாடிச் சிறப்பித்துள்ளார்.

அக்கிராமத்தில் வாலீஸ்வரர் என்னும் சிவன் கோயிலைத் தவிர வேறு எதுவும் பிரமாதமாகச் சொல்லிக் கொள்ளும்படி இல்லை. ஆங்காங்கே ஒரு சில குடியிருப்புகள் இருந்தன. அவர்கள் அங்கு சென்ற போது நள்ளிரவு நேரமாகிவிட்ட படியால் ஆள் அரவம் எதுவும் இல்லை. ஏறக்குறைய வனாந்திரப் பகுதி அருகில் இருந்த காரணத்தாலோ என்னவோ விலங்குகளின் அரவங்கள் தான் கேட்டுக் கொண்டிருந்தன. ஆலயப் பகுதியில் தங்கியிருந்த ஆந்தைகள் தங்களுக்கு உகந்த ராத்திரி நேரம் மலர்ந்துவிட்ட மகிழ்ச்சியில் நன்றாக இரைந்தும் இஷ்டப்படி பறந்தும் திரிந்தன. அதுவரை எந்த சந்தேகத்திற்கும் ஆளாகாமல் இருந்த உதயசந்திரன் சுற்றுப்புறரத்தை உற்றுப் பார்த்துவிட்டு பணியாளனைப் பார்த்து, ''ஆள் நடமாட்டமே இல்லையே! இங்கேயா வரச் சொன்னாள் பௌர்ணமி?'' என்று சந்தேகத்துடன் கேட்டான்.

''இதுபோன்ற இடத்தில்தான் விஹார ஆட்கள் உங்களைத் தேடி வரமாட்டார்கள். ஆகவே தான் தேவி இந்த இடத்தை தேர்ந்தெடுத்தார். அதோ பாருங்கள் மினுக்மினுக்கென்று ஒரு விளக்கு எரிவதை. அதுதான் நாம் போக வேண்டிய இடம். வாருங்கள் போவோம்'' என்றான் பணியாளன்.

உதயசந்திரன் மேற்கொண்டு எதுவும் பேசாமல் விளக்கு வெளிச்சம் தெரிந்த இடத்தை நோக்கிப் புரவியைச் செலுத்தினான். அங்கே சென்றதும் குடிசை வாயிலில் காத்திருந்த பணியாளன் ஒருவன் உதயசந்திரனைக் கண்டதும் ''வாருங்கள் ஐயா. உங்களுக்காகத்தான் தேவி காத்துக் கொண்டிருக்கிறாள்'' என்றதும் புரவியை விட்டு இறங்கிய உதயசந்திரன் குடிசையை நோக்கிச் சென்றான். உள்ளே நுழைந்ததுமே பின்புறத்திலிருந்து அவனது மண்டை கட்டையால் தாக்கப்பட்டது. எதுவும் செய்ய இயலாதவனாய் மயங்கி விழுந்தான்.

உதயசந்திரன் மயக்கத்திலிருந்து கண்விழித்ததும் தான் ஒரு மரக்கட்டிலில் கிடத்தப்பட்டிருப்பதையும் தலையில் ஒரு கட்டு போடப்பட்டிருப்பதையும் உணர்ந்தான். அவனுக்கருகே பணியாளர்கள் இருவரும் நின்றிருந்தார்கள். கணிக்கிலுப்பை கிராமத்திலிருந்து தன்னை வரவேற்றவன் ஒருவன் என்பதும் குடிசையை நெருங்கியபோது வரவேற்றவன் மற்றொருவன் என்பதும் உதயசந்திரனுக்குப் புரிந்தது. ஆனால் அவர்கள் பணியாளர்களாக இல்லாமல் வாட்களை ஏந்திய வீரர்களாக இருந்தார்கள். அதோடு அவர்களின் தோற்றம் மிகவும்

மாறுபட்டதாக இருந்தது. தங்களை உதயசந்திரன் உணர்ந்து கொண்டதை தெரிந்து கொண்ட அவர்களும் ''தப்ப முயல வேண்டாம்'' என்று எச்சரித்தார்கள்.

உதயசந்திரன் படுத்த நிலையிலேயே இருந்தபடி, ''நீங்கள் இருவரும் இஸ்லாமியர்களா?'' என்று வினவினான்.

''ஆம்'' என்றார்கள் இருவரும். அதோடு, ''உன்னை பத்து நாட்களுக்கு மேலாகத் தொடர்ந்து வருகிறோம். ஆனால் நெருங்க முடியவில்லை. சமண விஹாரத்திலிருந்து நீ தப்பிய பிறகு தான் உன்னை நெருங்க முடிந்தது. இங்கே அழைத்து வர முடிந்தது'' என்று மேலும் சொன்னார்கள்.

''எதற்கு என்னிடம் பின்தொடர்ந்தீர்கள்?'' கேட்டான் உதயசந்திரன்.

''உன்னைக் கொண்டு வரும்படி எங்கள் தலைவர் கட்டளையிட்டிருக்கிறார். அதனால்தான்.''

''யார் அந்தத் தலைவர்?''

''அதைச் சொல்ல எங்களுக்கு உரிமையில்லை.''

''உங்கள் பெயர்களைச் சொல்வதற்காகவாவது உரிமை இருக்கிறதா?''

''என் பெயர் முகமத். அவன் பெயர் அகமத்.''

''உங்கள் தலைவரின் கட்டளையை என்னிடம் வெளிப்படையாகவே சொல்லியிருக்கலாமே? எதற்காக இவ்வளவு சிரமம்? எதற்காக இந்தத் தாக்குதல்?''

''சிங்கத்தை தந்திரத்தால் தான் பிடிக்க வேண்டும் என்று சொன்னார் எங்கள் தலைவர்.''

இதைக் கேட்டு லேசாகச் சிரித்த உதயசந்திரன், ''அப்படியானால் என்னைப்பிடித்து விட்டதாக உங்கள் எண்ணமா?'' என்று கேட்டான்.

அவன் கூறியதைக் கேட்டு இஸ்லாமிய வீரர்கள் இருவரும் அசந்து போனார்கள். தலைவர் எச்சரித்தது சரிதான் என்று சொல்லிக் கொண்ட அவர்கள் பிறகு சுதாரித்துக் கொண்டு ''இக்குடிசைக்கு வெளியே குண்டோதரர்கள் இருக்கிறார்கள். ஒவ்வொருவரும் ஒரு மலைக்குச் சமானம்'' என்றார்கள்.

''அதைப் பற்றியெல்லாம் எதற்காக என்னிடம் சொல்கிறீர்கள்? உங்களிடமிருந்து தப்பும் எண்ணம் எனக்கில்லை. எங்கே போக வேண்டும்?'' என்று கேட்டான் உதயசந்திரன்.

''காஞ்சிக்கு'' என்று சொன்ன முகமது, ''உதயசந்திரரே, நாங்கள் சொல்வதுபோல நீங்கள் நடந்து கொண்டால் பூவைப் போல உங்களை காஞ்சிக்கு கொண்டு செல்வோம். தகராறு செய்ய முற்பட்டால் தயவு தாட்சன்யமின்றி வெட்டிக் கொன்று விடும்படி தலைவர் உத்தரவிட்டிருக்கிறார். ஆகவே நாங்கள் சொல்வதை கேளுங்கள்'' என்றான்.

உதயசந்திரன் எந்த மறுப்பும் சொல்லவில்லை. இக்கட்டான சூழ்நிலையில் விவரம் தெரியாத இக்கிராமப் பகுதியில் இருப்பதைவிட காஞ்சிக்குப் போவது மேல் என்றும் அங்கு போய் விட்டால் எப்படியாவது தப்பித்துக் கொள்ளலாம் என்றும் நினைத்துக் கொண்டான்.

அதையடுத்து அவனுக்கு மந்திரவாதிக்குரிய ஒப்பனைகள் செய்யப்பட்டன.

''இது எதற்கு?'' என்று கேட்டான் உதயசந்திரன்.

''போகப் போகப் புரியும்'' என்று சொன்னான் முகமது.

அவனும் அகமதுவும் கூட தங்களை இஸ்லாமியர்களாகக் காட்டிக் கொள்ளாத அளவிற்கு பணியாளர்களாக ஒப்பனை செய்து கொண்டார்கள்.

குடிசைக்கு வெளியில் இருந்த பல்லக்கில் உதயசந்திரனை அமரச் செய்தார்கள்.

பல்லக்கை குண்டோதரர்கள் நால்வர் தூக்கிச் செல்ல, அகமதுவும் முகமதுவும் அதன் முன்பும் பின்புமாக புரவியில் பவனி வந்தார்கள்.

பல்லக்கு புறப்படும் போது பொழுது நன்றாக விடிந்திருந்தது. காஞ்சிக்கும் கணிகிலுப்பை கிராமத்திற்கும் கணிகையர், ராஜ குடும்பத்தினர் மற்றும் பெருந்தனக்காரர்கள் பல்லக்கு பயணம் மேற்கொள்வது சகஜமானதாக இருந்த படியால் உதயசந்திரனின் பல்லக்குப் பயணமும் இடையூறு எதுவுமின்றி நடந்தது.

காஞ்சியின் தெற்கு கோட்டை வாசலை அடைந்த நிலையில் காவலர்கள் விசாரணை நடத்தினர்.

''பல்லக்கில் இருப்பது யார்?'' என்று வினவினார்கள்.

''அவர் ஒரு மந்திரவாதி. பல்லவ மகாராணியாரின் சிகிச்சைக்காக அகளங்கர் அனுப்பி வைத்தார்'' என்றான் அகமது.

காவலர்கள் சிறிது யோசித்துவிட்டு ''சரி, போகலாம்'' என்று அனுமதி கொடுத்தார்கள்.

அதற்குப் பிறகு எந்த விசாரணையும் குறுக்கிடவில்லை.

பல்லக்கு காஞ்சியின் நகரத்துப் பகுதியில் சென்று மேற்கே இருந்த சிங்கமேட்டை* அடைந்தது.

அங்கே இருந்த குடியிருப்பு வளாகம் ஒன்றின் நடுவே இருந்து மாளிகைக்கு முன்னால் பல்லக்கு இறக்கப்பட்டது. உதயசந்திரனை அகமதுவும் முகமதுவும் உள்ளே அழைத்துச் சென்றார்கள்.

அங்கே அவனுக்கு நல்ல உணவும் ஓய்வும் வழங்கப்பட்டன.

அன்று மாலை அவனைத் தலைவனுக்கு முன்னால் அழைத்துச் சென்றார்கள். தலைவனும் இஸ்லாமியனாகவே இருந்தான்.

பிரம்மாண்டமான அவனது உருவம் புராண காலத்து அரக்கனை நினைவுபடுத்தக் கூடியதாக இருந்தது. விசாலமான நெற்றிக்குக் கீழே சிறிதும் பொருத்தமில்லாத விதத்தில் கண்கள் மிகச் சிறியதாக இருந்தன. ஆனால் எதிரே நிற்பவர்களை ஊடுருவிப் பார்க்கக்கூடிய கூர்மை அக்கண்களில் இருந்ததை உதயசந்திரன் கவனித்தான். அதோடு அவனது முரட்டு உதடுகளில் விஷமச் சிரிப்பு படர்ந்து கிடந்ததையும் உதயசந்திரன் கவனிக்கத் தவறவில்லை. அவனது விஷமப் பாவனைக்கு ஒத்துழைப்பது போல் நீண்ட தாடி ஒன்றும் அவனுக்கு இருந்தது. அந்தத் தாடியைத் தடவிவிட்டபடியே அமர்ந்திருந்த அவன் தான் இருந்த இடத்தை ஒரு முறை நோட்டம் விடுவதுபோல் பார்த்தான். அங்கே உதயசந்திரனைத் தவிர அகமதும் முகமதுவும் மட்டுமே இருந்ததைக் கண்டு திருப்தியோடு தலையை அசைத்தான்.

''முசல்மான் தலைவர் சுலைமானுக்கு வணக்கம் சொல் உதயசந்திரா'' என்றான் அகமது.

''நான் எதற்காக இங்கே என் விருப்பத்திற்கு மாறாக அழைத்து வரப்பட்டிருக்கிறேன் என்பது தெரியும் வரை யாருக்கும் வணக்கம் தெரிவிக்க முடியாது'' என்று தீர்க்கமான குரலில் சொன்னான் உதயசந்திரன்.

''இரண்டிற்கும் என்ன சம்பந்தம்?'' என்று கேட்டான் சுலைமான் தாடியை நன்றாகத் தடவிவிட்டபடி.

''நான் வணக்கம் தெரிவிக்கும் நபர் மரியாதைக்குரியவராக இருக்க வேண்டும். என்னைக் கடத்தி வந்ததிலிருந்து உங்களை அத்தகையவராகக் கருத என்னால் முடியவில்லை'' என்றான் உதயசந்திரன்.

* இது தற்போது செவிலிமேடு என்று அழைக்கப்படுகிறது.

''உதயசந்திரா, நீ என்னை மதிக்க மறுத்தாலும் உன்னை நான் மதிக்கிறேன். அதனால் தான் நீ கௌரவமாக அழைத்து வரப்பட்டிருக்கிறாய். சாதாரணமாக எனக்குத் தேவைப்படும் நபர்களை நாய்களைப்போல இழுத்து வருவதுதான் என் வழக்கம்'' என்றான் சுலைமான்.

''என் விருப்பத்திற்கு மாறாக எது நடந்தாலும் அதை நான் அவமரியாதையாகத்தான் கருதுவேன். அதைப் பற்றிய விவாதம் இப்போது எதற்கு? என்னை எதற்காக இங்கே கொண்டு வந்தீர்கள்?'' என்று கேட்டான் உதயசந்திரன்.

''நான் எதிர்பார்த்ததற்கு மேலாகவே இருக்கிறாய் நீ. எனக்கு மிகவும் சந்தோஷம்'' என்றான் சுலைமான் தாடியைத் தடவியபடி.

''எனக்கு சந்தோஷமாக இல்லை.''

''ஏன்?''

''நான் எதிர்பார்த்தபடி நீங்கள் இல்லை.''

''நீ எப்படி எதிர்பார்த்தாய்?''

''தேவையில்லாமல் இப்படி நிறைய பேசுவீர்கள் என்று நான் எதிர்பார்க்கவில்லை.''

இதைக் கேட்டு கடகடவெனச் சிரித்த சுலைமான் அகமதுவையும் முகமதுவையும் வெளியேறும் படி உத்தர விட்டான்.

இருவரும் அகன்றபின், ''உட்கார் உதயசந்திரா. நாம் பேச வேண்டியது நிறைய இருக்கிறது'' என்று கூறிய சுலைமான் உதயசந்திரன் உட்கார்ந்ததும், ''நான் சொல்வதை கவனமாகக்கேள். எனது பிரம்மாண்டமான கனவுகள் நிறைவேறுவதற்கு நிறைய முயற்சிகளை எடுத்து வருகிறேன். அதில் ஒரு முயற்சிதான் உன்னைப் போன்ற துணிச்சலும் சாமர்த்தியமும் கொண்ட வீர வாலிபர்களைத் தேடிப் பிடித்து என் ஊழியர்களாக பல்வேறு காரியங்களுக்கு நியமித்திருக்கிறேன். எனது ஒற்றர்கள் பாரத நாடு முழுவதும் இருக்கிறார்கள். அவர்களது பிரதான வேலை மேலே சொன்ன திறமைசாலிகளைக் கண்டறிவதும் அவர்களைத் தொடர்ந்து கண்காணித்து எனக்குத் தெரியப் படுத்துவதும்தான். எனக்குத் தெரியப்படுத்திய பின் விவரங்களை ஆராய்வேன். விவரங்கள் திருப்திகரமாக இருந்தால் அந்தச் சாமர்த்தியசாலிகளை என்னிடம் கொண்டு வரும்படி சொல்வேன். என் ஒற்றர்களான அகமதுவும் முகமதுவும் உன்னை நாகைப்பட்டிணத்தில்

கண்டுபிடித்து ஆறு மாத காலமாகத் தொடர்ந்து கண்காணித்து வந்தார்கள். என்னிடம் தெரிவித்தார்கள். உன்னைக் கடத்தி வரும்படி கட்டளையிட்டேன். இதற்கிடையில் நீயே காக்கை மடுவிற்குப் புறப்பட்டு விட்டதால் என் ஒற்றர்களைத் தொடர்ந்து கண்காணிக்கும்படிச் சொன்னேன். நீ புறப்பட்டதற்கான காரணம் - காக்கை மடு விஹார விவரங்கள் அனைத்தையும் ஒற்றர்கள் என்னிடம் கூறினார்கள். உன்னைத் துறவியாக மாற்றுவதற்குள் அங்கிருந்து கொண்டு வந்து விடும்படி உத்தரவிட்டேன். இங்கேயும் வேறுவிதமாக நடந்தது. நீயாகவே தப்பி விஹாரத்தை விட்டு வெளியே வந்தாய். கணிக்கிலுப்பை கிராமத்திற்குச் சென்றாய். அதற்கு மேலும் தாமதிக்கக் கூடாது என்று தீர்மானித்து அகமதுவும் முகமதுவும் உன்னை இங்கே கடத்தி வந்து விட்டார்கள். உன்னிடம் முரட்டுத்தனமாக எங்கேயாவது நடந்து கொண்டார்களா?'' என்று கேட்டு நிறுத்தினான் சுலைமான்.

உதயசந்திரன் அவனது கேள்விக்குப் பதில் சொல்லாமல், ''அரபு நாட்டவரான நீங்கள் கனவு காண்பதில் தவறோ வியப்போ இல்லை. ஆனால் அதை நிறைவேற்ற பாரத நாட்டவர்களைத் தேர்ந்தெடுப்பதும் பயன்படுத்துவதும்தான் விந்தையாக இருக்கிறது'' என்றான்.

உதயசந்திரனின் பேச்சு சுலைமானை அசர வைத்தது. ஆனாலும் அதைக் காட்டிக் கொள்ளாத அவன், ''நல்ல கேள்வியைக் கேட்டாய் வீரனே. ஆனால் நீ ஒன்றைப் புரிந்து கொள். கனவும் ஆசையும் எல்லாவற்றையும் கடந்தவை. அரபு நாட்டான் பாரத நாட்டான் என்ற வித்தியாசத்தைப் பார்க்காமல் மனிதன் என்று பார். எந்த வியப்பும் இருக்காது'' என்றான்.

''அந்த நினைப்பு இருந்துவிட்டால் பிரச்சனைகளே வராது அராபியத் தலைவரே. பாரத நாட்டிலேயே கூட அந்த நினைப்பு இல்லை. இங்கே நூற்றுக்கணக்கான அரச வம்சங்கள் இருக்கின்றன. ஒன்றுக்கொன்று வித்தியாசம் பாராட்டி பகைமை கொண்டிருக்கின்றன.''

''உன் பேச்சுப் படியே வைத்துக் கொள். உனது நாட்டுக்குள்ளேயே வித்தியாசங்களும் பகைமையும் இருக்கும் போது வேற்று நாட்டவனான எனக்கு இந்நாட்டின் மீது ஆசையும் கனவும் உண்டாவதில் தவறென்ன? அந்த ஆசையை நிறைவேற்ற அராபியர் மட்டும்தான் முயல முடியும் என்றில்லை. சொல்லப் போனால் அராபியரை விட இந்நாட்டவர்களால்தான் பல காரியங்களை வெற்றிகரமாக நிறைவேற்ற முடியும்.''

''என் விரல்களைக்கொண்டே என் கண்களைக் குத்துவதுதான் உங்கள் கனவா?''

''அப்படி ஏன் நினைக்கிறாய் உதயசந்திரா? நீ சோழ நாட்டவன். உன் நாட்டு மன்னன் பல்லவ மன்னனுக்கு அடங்கி கப்பம் கட்டுகிறவன். சரியான சந்தர்ப்பம் கிடைத்தால் சோழ மன்னன் பல்லவ மன்னன் மீது போர் தொடுப்பான். மன்னர்கள் அளவில் அது நியாயமாக இருக்கும்போது மக்கள் அளவில் ஏன் நியாயமாக இருக்க முடியாது? யோசித்துப்பார் உதயசந்திரா. சோழ நாட்டவனான உனக்கு பல்லவர் ஆதிக்கம் பிடித்திருக்கிறதா? அவர்கள் பிடியிலிருந்து விடுபட்டு சுதந்திரக் காற்றைச் சுவாசிக்க வேண்டும் என்ற விருப்பமில்லையா?''

''ஆதிக்கமும் அடக்குமுறையும் மன்னர்களுக்கிடையே தான். மக்கள் எங்கேயும் ஒரே இனமாகத்தான் இருக்கிறார்கள். அதோடு இது எங்கள் நாட்டுப் பிரச்சனை. குடும்பப் பிரச்சனையைப் போல் வரும். போகும். இந்த நாட்டில் அராபியர் நுழைவது அப்படிப்பட்டதல்ல.''

''பைத்தியக்காரத்தனமாகப் பேசாதே. இன்றைக்கு உங்கள் மீது ஆதிக்கம் செலுத்தும் பல்லவர்கள் யார்? தமிழர்களா? இந்த மண்ணின் மைந்தர்களா? எங்கிருந்தோ வந்தவர்கள் தானே? இந்த மண்ணிற்கும் பண்பாட்டிற்கும் சம்பந்தம் இல்லாத பல்லவர் களுக்கும் அராபியர்களுக்கும் என்ன வித்தியாசம்? எதுவும் இல்லை.''

உதயசந்திரனுக்கு இந்த விவாதம் தேவையற்றதாகத் தோன்றியது.

''உங்கள் கனவுதான் என்ன? அதைச் சொல்லுங்கள்'' என்று கேட்டான்.

சுலைமானின் கண்கள் கூர்மையாக உதயசந்திரனை நோக்கின.

''என் கனவுகளைப் பற்றிப் பேச இது சந்தர்ப்பமல்ல உதயசந்திரா. கனவுகளுக்குத் தடைகளாய் இருப்பவை எவை என்பதைப் பற்றி மட்டும் அறிந்து கொள். அவற்றை நீக்குவதில் உன் பங்கு என்ன என்பதைத் தெரிந்து கொள்'' என்று சொல்லிவிட்டு உதயசந்திரன் ஆற்ற வேண்டிய பணியைப் பற்றிச் சொன்னான் சுலைமான்.

அதைக்கேட்டு அதிர்ச்சி அடைந்தான் உதயசந்திரன்.

★★★



9

மாந்தரீகம்

''இது எனக்கு அதிர்ச்சியை அளிக்கிறது அராபியத் தலைவரே'' என்று தனது உணர்ச்சியை வெளிப்படையாகவே தெரிவித்தான் உதயசந்திரன்.

''உன்னைப்போன்ற வீரர்களுக்கு அதிர்ச்சி என்பது எப்போதுமே வரக்கூடாது உதயசந்திரா. அதிர்ச்சிக்கு ஆளாகிறவன் வீரனல்ல. கோழை'' என்றான் சுலைமான்.

''நீங்கள் சொல்வது வீரனுக்குரிய காரியமாகத் தெரிய வில்லை.''

''உதயசந்திரா, உனது நாட்டில் சிறப்பாகப் பேசப்படும் இதிகாசங்களில் மகாபாரதமும் ஒன்று. இது உனக்குத் தெரியுமல்லவா?''

''அதற்கென்ன?''

''அதில் போர்க்களத்தில் போர் என்ற பெயரில் கொலைகள் நடந்துள்ளன. அவற்றை கோழைத்தனம் என்று யாரும் சொல்வதில்லை.''

''அராபியர்தலைவரே, எங்கள் நாட்டு இதிகாசங்களைப் பற்றி நீங்கள் பேசாமலிருப்பது நல்லது.''

''நான் உனக்கிட்டிருக்கும் பணி கோழைத்தனம் என்று தோன்றினால் வேறு உபாயம் இருக்கிறது. ஆனால் அது சற்று கடினமானது'' என்று சொல்லி மாற்று உபாயத்தைச் சொன்ன சுலைமான் ''உபாயம் எதுவாக இருந்தாலும் முடிவு ஒன்றுதான். மகேந்திரன் உயிரோடு இருக்கக் கூடாது'' என்றான்.

''மகேந்திரன் தான் உங்களுக்கிருக்கும் தடையா? அவன் நீங்கிவிட்டால் உங்கள் கனவுகள் பலித்துவிடுமா?'' என்று கேட்டான் உதயசந்திரன்.

''அப்படியல்ல. என் கனவுகளுக்குப் பல தடைகள் இருக்கின்றன. அவற்றில் ஒன்றுதான் மகேந்திரன். அவனை நீக்க

உன்னைத் தேர்ந்தெடுத்தது போல் பலரை பலவிதமான தடைகளை நீக்க நியமித்திருக்கிறேன்.''

''இக்காரியத்தைச் செய்வதால் எனக்கென்ன நன்மை?''

''அதை இப்போது சொல்ல முடியாது உதயசந்திரா. ஆனால் நிச்சயமாக நன்மை உண்டு. நீ எதிர்பார்க்காத விஷயமாக அது இருக்கும்.''

''என்னிடம் போதுமான செல்வம் இருக்கிறது. அதைப் பெருக்கிக் கொள்ளும் வழி எனக்குத் தெரியும். இதைத் தவிர வேறு எதை நீங்கள் எனக்குத் தந்துவிட முடியும்?''

''உன் வாளுக்கும் வீரத்திற்கும் ஏற்ற பரிசைத் தர முடியும்? அதைச் சோழ நாடோ பல்லவ நாடோ தர முடியாது.''

''பதவியைச் சொல்கிறீர்களா?''

''பதவி என்ற வார்த்தை சிறியது. உன் பரிசு அதைவிடவும் பெரியது.''

''எங்கிருந்தோ வந்த அராபியரான நீங்கள் எங்கள் நாட்டுக்குள்ளே இருந்து கொண்டு எங்கள் நாட்டுக்கு எதிராக என்னைத் திருப்பி பரிசு கொடுக்க முற்படுவது வினோதமானதாக இருக்கிறது. இருந்தாலும் அந்தப் பணியை ஏற்கிறேன். ஆனால் அதை என் வழியில் செய்வேனே தவிர உங்கள் வழியில் அல்ல.''

''அதுவும் சரிதான். எனக்கு வேண்டியது தடை நீக்கம். அது உன் வழியாக இருந்தால் என்ன? என் வழியாக இருந்தால் என்ன?'' என்று சொன்ன சுலைமான் கைகளைத் தட்டி பணியாளனை அழைத்து அவனிடம் அரபு மொழியில் ஏதோ சொன்னான்.

பணியாளனும் சிறிது நேரத்தில் பட்டுத் துணியால் பாதுகாக்கப்பட்ட பொருள் ஒன்றை சுலைமானிடம் கொண்டு வந்து கொடுத்தான்.

அதை வாங்கி கண்ணில் ஒற்றிக் கொண்ட அந்த அராபியத் தலைவன், ''உதயசந்திரா, இது தான் புனித குரான். உனக்குப் பணித்த பணியிலிருந்து பின் வாங்குவதில்லை என்றும் அது சம்பந்தமாக துரோகத்தில் ஈடுபடுவதில்லை என்றும் இதன் மீது கையை வைத்து ஆணையிடு'' என்றான்.

''இது என்ன?'' என்று கேட்டான் உதயசந்திரன்.

''வீரனே, உங்களுக்கு இருக்கும் இராமாயணம், மகாபாரதம் ஆகியவற்றை போல் இஸ்லாமியர்களுக்கு கிடைத்த வேதம் தான்

புனித குரான். இன்றைக்கு நூற்று இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னால் அரபு நாட்டில் தேவ தூதராக அவதரித்தவர் நபிகள் நாயகம்.* இஸ்லாமியரின் நல்வாழ்விற்காக அவர் உருவாக்கித் தந்த வேத நூல் இது. அவர் விண்ணுலகிற்குச் சென்றபின் அரபு நாட்டின் காலிப்பாக விளங்கிய அபுபக்கர் நபிகள் நாயகத்தின் வேத ஆகமங்களைத் தொகுத்து புனித குரனாக உலகிற்கு அறிமுகம் செய்து வைத்தார்.** இதன் மீது ஆணையிட்டவர்கள் மீற மாட்டார்கள். மீறினால் தேற மாட்டார்கள்.''

''உங்கள் புனித நூலை நீங்கள் பயன்படுத்தும் விதம் சரிதானா? இதற்காகத்தான் இந்த வேதம் தோற்றுவிக்கப் பட்டதா?''

''இது உனக்குத் தேவையில்லாத கேள்வி. சத்தியம் செய் முதலில்.''

''என் மீது நம்பிக்கை இல்லையா?''

''நீ செய்யப் போகும் காரியம் வெறும் நம்பிக்கையின் அடிப்படையில் விட்டுவிடக் கூடியதல்ல. அதற்கு சத்தியப் பிரமாணம் மிகவும் அவசியம்.''

''ஆணை செய்வதற்கு நான் மறுத்தால்?''

''உன் குடும்பம் பூண்டோடு அழிக்கப்படும்.''

''ஐயா, நான் என் தாய் மீதும் தந்தையின் மீதும் பாசம் உள்ளவன் தான். ஆனாலும் அவர்களின் மரணத்தை என்னால் தடுத்து நிறுத்த முடியாது. ஆகவே அவர்களின் உயிரைக் காட்டி என்னைப் பயமுறுத்துவது பயனற்றது.''

''உன்னைச் சித்திரவதை செய்து கொல்வேன்.''

''நான் நாகைப்பட்டிணத்தில் தினமும் செத்து செத்து வாழ்ந்து வந்தவன். எனக்கு என் உயிர் மீது ஆசையில்லை.''

''உன் பிறவி மீது கூட ஆசையில்லையா?''

''பிறவி மீதா? நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?''

''நீ சோழ நாட்டவனல்ல. பெருஞ்சாத்தன் உன் தந்தையுமல்ல.''

''இதென்ன பிதற்றல்?''

---

* நபிகள் நாயகம் பிறந்தது கி.பி.574

** பக்கம் 72-73 இஸ்லாமிய மதம், பா.ராகவன்.

''பிதற்றல் அல்ல. உண்மை. இதோ எங்கள் புனித குரான் மீது ஆணையாகச் சொல்கிறேன். நான் கூறுவது சத்தியம்.''

''ஐயா, என்னைக் குழப்பாதீர்கள். நீங்கள் சொல்வது உண்மை என்றால் நான் யார்? என் தந்தையார்? தாய் யார்? எது என்னுடைய நாடு?'' என்று பதட்டமடைந்தவனாகக் கேட்டான் உதயசந்திரன்.

பெற்றோரின் உயிரைக் குறிப்பிட்டு சுலைமான் மிரட்டிய போது காட்டிய விவேகத்தை உதயசந்திரன் தற்போதும் காட்டியிருக்கலாம்.

மனிதர்கள் எப்போதுமே விவேகமானவர்களாக இருப்ப தில்லை என்பதற்கு உதாரணமாக இருந்தான் உதயசந்திரன்.

இத்தனை ஆண்டுகளாகிவிட்டன. இனி என் பிறவியைப் பற்றித் தெரிந்து கொண்டு என்ன ஆகப் போகிறது என்று கேட்காமல் பதட்டமடைந்தான்.

ஆவலால் உந்தப்பட்டான்.

''உதயசந்திரா, உன் பிறவி ரகசியத்தைப் பற்றி முழுமையாகத் தெரிந்தவன் தற்போது வாதாபிச் சிறையில் இருக்கிறான். நீ போக வேண்டிய இடமும் வாதாபி தான். அவனைச் சந்தித்து நான் கூறியதாகச் சொல்லி நான் தரும் இலச்சினையைக் காட்டினால் தான் அவன் இது விஷயமாக வாயைத் திறப்பான். நான் கூறியபடி நீ நடந்து கொண்டால் எனது இலச்சினை உன்னைத் தேடி வரும். நீ அந்த மனிதனைச் சந்திக்கலாம். பிறப்பு ரகசியத்தை தெரிந்து கொள்ளலாம்.''

சுலைமான் இவ்வாறு கூறியதும் வேறு எதுவும் பேசாமல் குரானின் மீது கையை வைத்து சத்தியம் செய்துவிட்டு ''இப்போது நான் என்ன செய்ய வேண்டும்?'' என்றான்.

''அப்படிக் கேள். அது தான் சரி'' என்று சிலாகித்த சுலைமான், ''நீ இந்த மந்திரவாதி வேடத்திலேயே அரண்மனைக்குச் சென்று அங்கு நிலவும் அரசியல் சூழ்நிலைகளை வேவு பார்த்துவிட்டு என்னிடம் வந்து சொல். பிறகு நீ வாதாபிக்குப் புறப்படுவது குறித்து நான் சொல்கிறேன்'' என்றான்.

''அரண்மனையில் போய் வேவு பார்ப்பதற்கு மந்திரவாதி வேடத்தில் எதற்காகப் போக வேண்டும்?''

''அரண்மனை வட்டாரத்தில் வெளியாட்கள் எளிதாக நுழையவோ, நடமாடவோ வேவு பார்க்கவோ முடியாது. பல்லவ மகாராணியான லோகமாதேவிக்கு இப்போது பேய்

பிடித்திருக்கிறது. *கொஞ்சகாலமாகப் பேயை ஓட்டுவதற்கு மந்திரவாதிகளும் துறவிகளும் அரண்மனைக்குச் சென்று வருகிறார்கள். அந்த வகையில் நீ பேய் ஓட்டும் மந்திரவாதியாக அரண்மனைக்குள் சென்று தங்கலாம். துப்பறியலாம். உன்னைப் போன்ற புத்திசாலிக்கு துப்பறிய இரண்டு நாட்கள் போதும்.''

''துப்பறிவது சரி. பேயை ஓட்ட எனக்கு எதுவும் தெரியாதே?''

''பேயை ஓட்ட வேண்டியதில்லை. ஓட்டுவது போல் பாவனை செய்தால் போதும். மந்திரவாதியாக எப்படி நடிப்பது பேசுவது என்பதையெல்லாம் ஒரே நாளில் உனக்குக் கற்றுத் தருகிறேன். அதற்குத் தேவையான உபகரணங்களையும் அளிக்கிறேன். உனக்கு வழி காட்ட அகமதுவும் முகமதுவும் வருவார்கள். சிரமப்படாதே.''

''எப்போது உங்களை மீண்டும் சந்திப்பது? இங்கேயேவா?''

''நான் இங்கே இருக்க மாட்டேன் உதயசந்திரா. பாதுகாப்பு கருதி இடத்தை மாற்றிக் கொண்டே இருப்பேன். தேவைப் பட்டால் தோற்றத்தையும் மாற்றிக் கொள்வேன். என் இருப்பிடத்தைப் பற்றிக் கவலைப்படாதே. அதைப் பற்றிய தகவல் உனக்குத் தானாக வந்துசேரும்'' என்றான் சுலைமான்.

மறுநாள் முழுவதும் உதயசந்திரனுக்கு மந்திரவாதியாக நடந்து கொள்வது எப்படி என்பதற்கான பாடத்தைக் கற்றுக் கொடுத்தான் அராபியர் தலைவனான சுலைமான். கற்றுக் கொடுத்தவனும் கற்றுக் கொண்டவனும் திறமைசாலிகளாக இருந்தபடியால் பாடமும் பயிற்சியும் இனிக்கவே செய்தன. இனி இவன் பார்த்துக் கொள்வான் என்ற நம்பிக்கை வந்ததும் உதயசந்திரனைத் தட்டிக் கொடுத்த அராபியத் தலைவன் ''நாளைக்கு நீ அரண்மனைக்குச் செல் உதயசந்திரா. அகமதுவும் முகமதுவும் பல்லக்கிலேயே உன்னை அழைத்துச் செல்வார்கள். அரண்மனை வளாகத்திற்குச் சென்றதும் அநேகமாக அகமதுவும்

---

* பல்லவ மாமன்னன் ராஜசிம்மனின் ராணியரில் ஒருவரான லோகமாதேவிக்கு பேய் பிடித்திருந்ததாகவும் சமணத் துறவியான கௌதமன் என்பவன் பேயை அகற்றியதாகவும் ராஜசிம்மன் காலத்து கல்வெட்டு கூறுகிறது.

''மாதேவியாரை பிரம்ம ராட்சஷம் பற்ற
கௌதம செந் சமணன் மாதேவியை மாதைரய
பட்டினத்து அறங்களெல்லாம் இறங்கல் மீட்டு....''

பக்கம் 176 தமிழ்நாட்டு வரலாற்று கருத்தரங்கு. பதிப்பாசிரியர் டாக்டர்.இரா.நாகசாமி.

முகமதுவும் திருப்பியனுப்பப்படுவார்கள். பல்லக்குத் தூக்கிகள் மட்டும் உன்னோடு வருவார்கள். அதற்குப் பின் நீதான் சமாளித்துக் கொள்ள வேண்டும்'' என்றான்.

உதயசந்திரன் புரிந்து கொண்டதற்கு அடையாளமாகத் தலையை ஆட்டியதும், ''நீ சுதந்திரமடைந்துவிட்டதாக எண்ணி தப்பவோ வாக்கு தவறவோ முற்படாதே உதயசந்திரா. குரானின் மீது ஆணையிட்டிருக்கிறாய். அது ஞாபகமிருக்கட்டும். அதோடு உன் பிறப்பு ரகசியமும் இருக்கிறது'' என்று எச்சரித்தான் சுலைமான்.

மறுநாள் மாலை நேரம் முகிழ்ந்ததும் பல்லக்கில் ஏற்றப் பட்டு நகருக்குள் கொண்டு செல்லப்பட்டான் உதயசந்திரன்.

நாகைப்பட்டிணத்திலிருந்து புறப்பட்டது முதல் தனது பயணம் யானையின் மீதும் புரவியின் மீதும் கடைசியாக பல்லக்கிலும் தொடர்வதை உணர்ந்த அவனுக்கு இனிப்பாயும் இருந்தது. கசக்கவும் செய்தது. காலாற நடந்து திரிய வேண்டும் போல் தோன்றினாலும் அது நடக்காது என்பதை உணர்ந்து பொறுமையாக இருந்தான்.

பல்லக்கில் சாய்ந்தபடி பல்லவர் கோநகரான காஞ்சியின் அழகைக் காண்பது சுகமாக இருந்தது உதயசந்திரனுக்கு. புராண காலம் தொட்டு சிறப்பான இடம் வகித்து வந்த காரணத்தால் காஞ்சிநகரின் அழகு கண்களுக்கு விருந்தாகவே இருந்தது. விசாலமான வீதிகளும் வானுயர்ந்த மாளிகைகளும் அந்த நகரை தேவேந்திரனின் பட்டிணமாகவே எண்ண வைத்தது. அது வரை அவன் காஞ்சிக்கு வந்ததில்லையாதலால் நகரின் பல்வேறு பகுதிகளையும் காண முடிந்ததே தவிர அறிய முடியவில்லை. ஏகம்பவாணர் கோயில். திருவெஃகா, திருஅத்தியூர், திருப் பாடகம் ஆகிய ஆலயங்களை அவன் கண்டாலும் இன்னின்ன ஆலயங்கள் என்று அறிந்து கொள்ள முடியவில்லை. நகரில் சிவ விஷ்ணு ஆலயங்களை விட புத்த விஹாரங்கள் அதிகமாக இருந்ததையும் புத்த பிட்சுக்களின் நடமாட்டம் கணிசமாக இருந்ததையும் கவனித்தான். சமணப் பள்ளிகள் அவ்வளவாகத் தென்படவில்லை. சமணர்களது கலைப்பீடமான திருப்பருத்திக் குன்றம் தனியாகப் பிரிந்து வேகவதியாற்றுக்குத் தென்கரையில் இருந்த விஷயம் அவனுக்குத் தெரிந்திருக்கவில்லை. நாகையில் இருக்கும் போது காஞ்சியின் சிறப்பு பற்றி அவனது தந்தை பெருஞ்சாத்தன் அவனிடம் நிறையவே கூறியிருந்தார். இந்த உலகம் இருப்பதற்குக் காரணமே காஞ்சி சிறப்பாக விளங்குவதால்தான் என்று ஒரு

பாடலைச் சொல்லி அதன் சிறப்புகளை விளக்குவார். *அதையெல்லாம் அப்போது நம்பாத உதயசந்திரன் தற்போது நம்பவே செய்தான்.

ஒரு நாழிகைப் பயணத்திற்குப் பிறகு அரண்மனை வாயிலை அடைந்தது பல்லக்கு.

அரண்மனையின் வாயிலில் பலத்த பாதுகாப்பு இருந்தது. வாயிலின் முகப்பில் இருந்த காரியஸ்தர் மாளிகைக் காவலரிடம் அகமது பல்லக்கில் வந்திருப்பது யார் என்ற விவரத்தைச் சொன்னான். காவலர்கள் காரியஸ்தனிடம் தெரிவித்தார்கள். காரியஸ்தன் நேரில் வந்து பார்வையிட்டு உதயசந்திரனிடம் ''எங்கிருந்து வருகிறீர்கள்?'' என்று கேட்டான்.

உதயசந்திரன் தனது குரலைச் சற்றே மாற்றிக் கொண்டு ''காக்கை மடுவிலிருந்து வருகிறோம். அகளங்கர் அனுப்பி வைத்தார்'' என்றான்.

காரியஸ்தன் தன்னிடம் இருந்த ஓலை நறுக்குகளை சரிபார்த்துவிட்டு ''கோட்டைக்குள் நேற்று முன் தினமே வந்து விட்டதாகத் தெரிகிறது. உடனே ஏன் இங்கே வரவில்லை?'' என்று கேட்டான்.

உதயசந்திரன் அசரவில்லை.

''பரிகாரப் பொருட்கள் சிலவற்றை காஞ்சியில் சேகரிக்க வேண்டியதாக இருந்தது. ஆகவே தான் தாமதம்'' என்றான்.

''சரி. நீங்கள் இங்கேயே பல்லக்கை விட்டு இறங்கி விட வேண்டியதுதான். உங்கள் பொருட்களைச் சுமந்து வர பல்லக்குத் தூக்கிகளில் ஒருவரை பயன்படுத்திக் கொள்ளலாம். மற்றவர்கள் இங்கு இருக்கக் கூடாது. சாலையர் வீதியில் இருக்கும் சத்திரத்தில் தங்கியிருக்கலாம்'' என்றான்.

சுலைமான் சொல்லியபடியே அனைத்தும் நடந்ததைக் கண்டு வியந்து உதயசந்திரன் வியப்பை வெளிக்காட்டிக் கொள்ளாமல் பல்லக்கை விட்டு இறங்கினான். பல்லக்கில் இருந்த சடங்குப் பொருட்களை பல்லக்குத் தூக்குகளில் ஒருவனான குண்டோதரன் சுமந்து கொண்டான். இருவரையும் உள்ளே அழைத்துச் சென்றான் காரியஸ்தன்.

அரண்மனையானது பொன்மயமானதாக இருந்ததால் கண்கள் கூசுமளவிற்கு பளபளத்தது. உதயசந்திரனையும் பல்லக்கு

* வண்மைசால் சான்றவருங் காஞ்சி வண்பதியும்
உண்மையால் உண்டிவ் வுலகு.

தூக்கியான குண்டோதரனையும் அழைத்துச் சென்ற காவலன் இருவரையும் அமைச்சரது மாளிகைக்குள் இருந்து பார்வையாளர் அரங்கில் அமர வைத்துவிட்டு வெளியே நின்றான். அங்கே அமைச்சர் பெருமானைச் சந்திப்பதற்காக வேறு சிலரும் காத்திருந்தார்கள்.

சில நிமிடங்கள் கழித்து மாளிகையின் உள்ளறைக்கு ஒவ்வொருவராக அனுமதிக்கப்பட்டார்கள் உள்ளே இருந்த அமைச்சரை சந்திப்பதற்காக. கடைசியாக உதயசந்திரன் அழைக்கப்பட்டான்.

பல்லவ நாட்டின் அமைச்சரான வல்லபர் தோரணையிலேயே தன்னை உணர்த்தக் கூடியவராக கம்பீரமான தோற்றத்தில் காட்சியளித்தார். அறுபது வயது மதிக்கத் தகுந்தவராய் காட்சியளித்த அவர் சுறுசுறுப்பானவராகவும் சூட்சுமம் அறிந்தவராகவும் தோன்றினார். எதிரே நிற்பவர்களைத் தன் பார்வையாலேயே எடை போடக்கூடியவர் என்பதை அவரது விரிந்த கண்கள் பறைசாற்றின.

உதயசந்திரனை அமரச் சொன்ன அவர், ''உமது பெயர் என்ன?'' என்று கேட்டார்.

ஒருகணம் தடுமாறிய உதயசந்திரன், ''எனது பெயர் சங்கடன்'' என்றான் வேகத்துடன்.

''பெயரைச் சொல்ல எதற்காகப் பதட்டம்? ஏதாவது சங்கடமா?'' என்று வினவினார் அமைச்சர்.

அசந்து போனான் உதயசந்திரன். அவசரத்தில் எதையோ ஒரு பெயரைச் சொல்லியதையும் அது உண்டாக்கிவிட்ட சங்கடத்தை அமைச்சர் கவனித்து வினா தொடுத்ததையும் உணர்ந்த அவன், ''உண்மையைப் பேசும்போது சங்கடங்கள் வருவதில்லை. சங்கடமெல்லாம் பொய்யைப் பேசும்போதுதான்'' என்று தனக்குள் சொல்லிக் கொண்டு, ''எந்தச் சங்கடமும் இல்லை ஐயா. மகாராணியாரையே நினைத்துக் கொண்டிருந்தேன். அந்த நினைப்பை தாங்கள் அறுத்துவிட்டதால் பதில் சொல்லும்போது தடுமாற வேண்டியதாகிவிட்டது'' என்றான்.

''நாம் எங்கே இருக்கிறோம் என்பதும் யாரைச் சந்திக்கிறோம் என்பதும் நினைவில் இருந்தால் பதட்டங்கள் வராது. எனக்கு முன்னால் அமர்ந்து கொண்டு மகாராணியைப் பற்றி எண்ணிக் கொண்டிருக்கிறீர்கள் என்றால் மகாராணியின் முன்னால்

இருக்கும்போது யாரை நினைத்துக் கொள்வீர்கள்? இது தவறல்லவா?'' என்று கேட்டார் அமைச்சர்.

அவரோடு மிகவும் ஜாக்கிரதையாகப் பேச வேண்டும் என்பதை உணர்ந்த அவன், ''நான் அத்தகையவன் அல்ல அமைச்சர் பெருமானே. இப்போதைய நிலையைப் பொறுத்த வரை மகாராணியை சீர்படுத்துவது ஒன்றே நினைவில் தீவிரமாக ஓடிக் கொண்டிருக்கிறது. உண்மையைச் சொல்ல வேண்டு மென்றால் உங்களைப் பற்றிய நினைவு கூட எனக்குப் பெரிதாக இல்லை. என்னை மன்னிக்க வேண்டும்'' என்றான் சுதாரித்துக் கொண்டு.

அமைச்சர் ஆடிப்போய்விடவில்லை.

''உங்களை அகளங்கர் அனுப்பியதற்கு காரணம் என்ன?'' என்று கேட்டார்.

''இக்கேள்வியைத் தாங்கள் அவரிடம்தான் கேட்க வேண்டும். மகாராணியைச் சீர்ப்படுத்துவதில் அவர் பல விதங்களில் முயற்சி செய்கிறார். அந்த வகையில் அவருக்கு அறிமுகமாயிருந்த என்னை இங்கே அனுப்பி வைத்தார்.''

''உமக்கும் அவருக்கும் எவ்வளவு காலமாகத் தொடர்பு?''

''ஓராண்டு இருக்கலாம்.''

''மகாராணியாரின் நிலைமை என்ன என்பது உமக்குத் தெரியுமா?''

''கேள்விப்பட்டதை வைத்துக் கொண்டு என்னால் எதுவும் சொல்ல முடியாது ஐயா. நேரில் பார்த்த பிறகு தான் எதுவும் சொல்ல முடியும்.''

''உம்மால் மகாராணியாரை சரி செய்துவிட முடியுமா?''

''இதுபோன்ற கேள்விகளுக்குத் தங்களால் கூட பதில் கூற இயலாது அமைச்சர் பெருமானே. நம்பிக்கையோடு முயற்சி செய்ய முடியும். நம்பிக்கைக்கும் வெற்றிக்கும் இடையே கடவுளது அருள் வேலை செய்ய வேண்டும்.''

அமைச்சர் மேற்கொண்டு எதுவும் பேசவில்லை.

''புறப்படும்'' என்று சொல்லி அவனை அழைத்துச் சென்றார்.

உதயசந்திரனுக்கு சங்கடமாக இருந்தது. நாகைப் பட்டிணத்திலிருந்து புறப்பட்டது முதல் ஒவ்வொரு விஷயமும் தான் எதிர்பாராதவிதமாக நடந்து வருவதையும் அவை அனைத்துமே தனக்குப் பிடிக்காத விஷயங்களாகவும் திருப்பங்களாக இருப்பதையும் எண்ணிப் பார்த்த அவன்

இவையெல்லாம் நல்லதிற்குத்தானா என்று கேட்டுக் கொள்ளவும் செய்தான். அதேசமயம் இவ்வளவுக்கிடையில் பௌர்ணமியின் விஷயம் மட்டும் முட்களுக்கிடையே எழுந்து மலரைப் போல் இதமான அனுபவமாகத் தனித்து ஒளிர்ந்ததையும் உணரவே செய்தான்.

இதற்கிடையில் மகாராணியின் இருப்பிடத்தை அவர்கள் அடைந்தார்கள். அந்தப்புரப்பகுதிக்கு அருகாமையில் தனியாக ஒரு மலர் வனம் அமைக்கப்பட்டு அங்கே ஒரு குடிலுக்குள் கட்டிலில் கிடந்தார் மகாராணி லோகமாதேவி.

அவரது தோற்றத்தைக் கண்டதும் மிகவும் வேதனைப் பட்டான் உதயசந்திரன். நல்ல நிலையில் இருந்தால் இதே மகாராணி லட்சுமிகரமாக தெய்வீகத்துடன் காட்சியளித் திருப்பாள். ஆனால், பேய் பிடித்திருந்த நிலையில் கிழிந்த நார் போல் காணப்பட்டாள். வானில் பறந்து கொண்டிருந்த தேவதை யொன்று நோய் வாய்ப்பட்டு பூமியில் விழுந்து சேதாரப் பட்டதுபோல் இருந்தது அவளது நிலை.

தனது சடங்கைத் தொடங்குவதற்கு முன்பு பட்டுக் கம்பளத்தை தரையில் விரித்து முழந்தாளிட்டு அமர்ந்து அல்லாவைத் தொழும்படிச் சொல்லியிருந்தான் சுலைமான்.

ஆனால் பதட்டத்தில் தனது பெயரை சங்கடன் என்று சொல்லிவிட்டதால் இஸ்லாமியத் தொழுகையைச் செய்தால் அமைச்சருக்குச் சந்தேகம் வந்துவிடும் என்பதை உணர்ந்தான்.

அதோடு அமைச்சர் தன்னோடு கூடவே இருப்பார் என்பதையும் அவன் எதிர்பார்க்கவில்லை.

அவரோ எமதர்மனைப்போல அங்கிருந்த ஆசனத்தில் அமர்ந்து கொண்டு கண் கொத்திப் பாம்பைப்போல கவனித்துக் கொண்டிருந்தார்.

எனவே இஸ்லாமிய தொழுகையை கைவிட்ட உதயசந்திரன் தன்னிடம் இருந்த செம்புக் கரண்டியில் நெருப்புத் தணலைக் கொண்டு வரும்படிச் சொல்லிவிட்டு தரையில் அமர்ந்து கண்களை மூடி தஞ்சையில் இருந்த துர்க்கையை எண்ணித் தொழுதான்.

பிறகு எழுந்து மகாராணியை நெருங்கிப் பார்த்தான்.

அவள் அரை மயக்கத்தில் இருந்தாள்.

மயிலிறகால் அவரது தலையையும் முகத்தையும் சுலைமான் சொல்லிக் கொடுத்தபடி லேசாக வருடினான் உதயசந்திரன்.

மகாராணியின் உடல் சிலிர்த்தது.

திடீரென எழுந்து அமர்ந்த மகாராணி உதயசந்திரன் கையில் இருந்த மயிலிறகைப் பிடுங்கி எறிந்துவிட்டு ''யார் நீ? யாரடா நீ?'' என்று கர்ஜித்தாள்.

அவளிருந்த உடல்நிலையில் முனகத்தான் முடியும். அவளுக்குள் இருந்த பைசாசம் தான் இந்த கர்ஜனையைப் புரிகிறது என்று கருதிய உதயசந்திரன் சற்றே அதைரியப் பட்டாலும் சுதாரித்துக் கொண்டு அருகிலிருந்த பணிப் பெண்களிடம், ''மகாராணியாரை அப்படியே அசையாமல் பிடித்துக் கொள்ளுங்கள்'' என்று கூறினான்.

அதையடுத்து மகாராணியின் முகத்தில் கொஞ்சம் கொஞ்சமாக நீரைத் தெளித்து உதயசந்திரன் ஏதேதோ மந்திரங்களை முணுமுணுத்தான்.

அமைச்சர் குறுக்கிட்டு, ''நீங்கள் சொல்வது என்ன? இது எந்த மொழி?'' என்று கேட்டார்.

அவன் அவரைப் பொருட்படுத்தாமல் கொஞ்ச நேரத்திற்கு முணுமுணுப்பைத் தொடர்ந்தான்.

சுலைமான் சொல்லிக் கொடுத்தவற்றை அடிப்படையாக வைத்துக் கொண்ட உதயசந்திரன் சடங்குகளை சுயமாகத் தான் செய்யத் துவங்கினான். பேய் ஓட்டுவது போன்ற மாந்தரீக காரியங்களை அவன் செய்ததில்லையே தவிர அவற்றைப் பற்றிய கேள்வி ஞானம் இருந்தது.

எனவே முணுமுணுப்புகளை நிறுத்திக் கொண்டு, ''என்ன கேட்டீர்கள் அமைச்சர் பெருமானே?'' என்று கேட்டான்.

''நீங்கள் உச்சரிப்பது என்ன மொழி? எங்கேயும் கேட்ட மாதிரி இல்லையே?''

''ஐயா, இது பைசாச மொழி. பைசாசங்கள் பேசும் மொழி. பைசாசங்கள் ஒரு காலத்தில் இடுகாட்டில் புலம்பிக் கொண்டிருந்தனவாம். அப்போது வான வீதியில் சென்று கொண்டிருந்த ஆஞ்சநேயர் இதைக் கவனித்துவிட்டு பூமிக்கு வந்து வினயத்தோடு விசாரித்தாராம். அப்போது பேய்க்கணங்கள் தாம் அளாவளாவிக் கொள்ள மொழி ஏதும் இல்லையே என்று சைகைகளால் தெரிவித்தனவாம். அதைக்கேட்ட ஆஞ்சநேயர் அனுதாபப்பட்டு அவற்றுக்கென ஒரு மொழியினை அருளிச்

செய்தாராம். அதற்குப் பெயர்தான் பைசாச மொழி. அந்த மொழியைத்தான் பைசாசங்கள் பேசுகின்றன. என்னைப் போன்ற மந்திரவாதிகள் மட்டுமே இம்மொழியை அறிந்து வைத்துக் கொண்டு பைசாசங்களோடு உரையாடுகிறார்கள். நான் செய்ததும் அதுதான்'' என்று சொன்னான் உதயசந்திரன்.

இதற்கிடையில் நெருப்புத் தணல் கொண்டுவரப்பட்டது.

தணல் கரண்டியை வாங்கிய உதயசந்திரன் அதில் கொஞ்சம் கொஞ்சமாக சாம்பிராணித் தூளைப் போட்டு புகையை மகாராணிக்கு காட்டி காட்டி பழையபடி முணுமுணுத்தான்.

இந்த நிலையில் பிட்சு ஒருவர் வந்து அமைச்சரின் காதில் ஏதோ முணுமுணுத்தார்.

அதை ஓரக் கண்களால் கண்ட உதயசந்திரன் தனக்கு ஆபத்து வருவதை உணர்ந்தான்.

அவனது கை அவனது நெற்றியைத் தடவியது.

☆☆☆



10 காமாந்தகன்

பிட்சு ஒருவர் வந்து அமைச்சரின் காதில் கிசுகிசுத்ததை ஓரக் கண்களால் கண்டதும் 'இந்த பிட்சு அகளங்கரைச் சேர்ந்தவராகவும் அவர் அனுப்பியவராகவும்தான் இருக்க வேண்டும். அது உண்மையானால் நான் காக்கை மடுவிலிருந்து தப்பிய விஷயத்தைத்தான் அவர் அமைச்சருக்குச் சொல்லிக் கொண்டிருக்க வேண்டும். அமைச்சருக்கு உண்மை தெரிந்து விட்டால் தனக்குப் பாதாளச் சிறை தான் கிடைக்கும். அது ஆபத்தானது. அவரிடம் ஏற்கெனவே தட்டுத்தடுமாறி சுதாரித்துக் கொண்டதே பெரும் பாடாகிவிட்டது. பிடிபட்டால் அவ்வளவு தான்' என்று கருதிக் கொண்ட உதயசந்திரன் தப்புவதற்குத் தயாராகி கையில் இருந்த கரண்டியால் சாம்பிராணித் தூளை அள்ளிப் போட்டானாதலால் புகை பெருகியது. மேலும் தூளைப் போட்டதால் பெரும் புகை மண்டலம் உருவாகி சுற்றுப்புறத்தை மறைத்தது. அதோடு மாலைப் பொழுதும் நீங்கி இரவுப் பொழுது துவங்கிவிட்டதால் அதுதான் சரியான தருணம் என்று கருதியவனாய் கரண்டியை போட்டுவிட்டு அங்கிருந்து கண் மூடித்தனமாக ஓடினான். விரைவிலேயே இருள் பகுதி அவனை மறைத்தது.

அவன் ஊகித்திருந்த படிதான் பிட்சு அமைச்சரிடம் விஷயத்தைச் சொல்லியிருந்தார். அதைச்சொல்லி முடிப்பதற்குள் திடீரெனப் புகை மண்டலம் உருவாகி விடவே முதலில் சற்றே குழம்பினாலும் பிறகு ஓரளவிற்கு என்ன நடந்திருக்கும் என்று ஊகித்துக் கொண்டார். உதயசந்திரனை விட அவருக்கு மகாராணியாரைப் பற்றிய கவலையே அதிகமாக இருந்ததால் அவருக்கு எதுவும் நடந்துவிடக்கூடாது என்ற எண்ணத்தில் ''யாரங்கே? பந்தங்களைக் கொளுத்துங்கள். தணலை அகற்றுங்கள். மகாராணியாரைச் சுற்றி நில்லுங்கள்'' என்று குரல் கொடுத்தார்.

அடுத்த சில நிமிடங்களில் அனைத்தும் நடந்து முடிந்தன. தணல் அகற்றப்பட்டதால் புகையும் அகன்று அப்பகுதி

நிர்மலமானதாக ஆயிற்று. குடிலுக்குள் மகாராணி பத்திரமாக இருப்பதைக் கண்டதும் திருப்தி அடைந்த அமைச்சர் அங்கே உதயசந்திரன் காணாததையும் கவனித்தார். குண்டோதரனையும் காணவில்லை.

''சாலியர் தெரு சத்திரத்திற்குச் செல்லுங்கள். அங்கே இந்த மந்திரவாதியுடன் வந்தவர்கள் இருக்கிறார்களா என்று பாருங்கள்'' என்று காவலர்களுக்கு உத்தரவிட்டுவிட்டு தனது மாளிகைக்கு வந்தார் அமைச்சர். அவருடன் பிட்சுவும் இருந்தார்.

சாலியர் தெரு சத்திரத்தில் முகமதுவோ அல்லது அகமதுவோ அல்லது பல்லக்கு தூக்கிகளோ யாரும் இல்லை. அப்படி யாரும் அங்கே வரவில்லை என்றும் தெரிந்தது. விவரத்தை அமைச்சரிடம் காவலர்கள் தெரிவித்தார்கள்.

அமைச்சர் அமைதியாக இருந்ததைக் கண்ட பிட்சு, ''அமைச்சர் பெருமானே, உதயசந்திரனைப் பிடிக்க யாரையும் அனுப்பவில்லையா?'' என்று கேட்டார்.

''தப்புபவர்களைத் துரத்துவது எனக்குப் பழக்கமில்லை. வலையை விரிப்பேன். அதில் அவர்கள் சிக்குவார்கள்'' என்று சகஜமாகச் சொன்ன அமைச்சர் பிட்சுவைப் பார்த்து ''நீங்கள் புறப்படுங்கள். மற்றதை நான் பார்த்துக் கொள்கிறேன்'' என்றார் அமைதியாக.

இதே நேரத்தில் ராணியார் குடிலிலிருந்து புகை மண்டலத்தில் தப்பி ஓடிய உதயசந்திரன் எங்கே செல்வது என்பதை அறியாமல் ஓடினான். இரவுப் பொழுது நன்றாக முகிழ்த்துவிட்ட காரணத்தால் தெருக்களில் ஆங்காங்கே விளக்குத் தூண்களில் தீபங்கள் ஏற்றப்பட்டிருந்தன. அதோடு இல்லங்களில் உள்ளும் புறமும் பலவிதமான விளக்குகள் ஏற்றப்பட்டிருந்ததால் தெருக்கள் பிரகாசமாகவே இருந்தன. உதயசந்திரன் காஞ்சிக்குப் புதியவனாதலால் அவனுக்கு திக்கு தெரியவில்லை. பெருந் தெருக்களைத் தவிர்த்து விட்டு சிறு சந்துகளில் புகுந்து சென்ற அவன் பெரியதோர் வாய்க்கால் ஓடுவதைக் கண்டான். வாய்க்கால் நிரம்பி வழியவில்லை என்றாலும் ஓரளவிற்கு தண்ணீர் ஓடிக் கொண்டிருந்தது. தனது மந்திரவாதிக்குரிய ஒப்பனைகளையும் ஒட்டு ஆபரணங் களையும் களைந்து வாய்க்காலில் எறிந்தான். வாய்க்காலின் மறுகரையில் வரிசையாக பல மாளிகைகள் இருந்தன. அவற்றின் பின்புறச் சுவர்கள் வாய்க்காலின் கரைப்பகுதியில் இருந்தன. அந்தச் சுவர்களில் ஆங்காங்கே

கொக்கிகள் இருப்பதைக் கண்டான் உதயசந்திரன். அவை எதற்கு என்பது அவனுக்குத் தெரியாவிட்டாலும் தனக்கு தற்போது பயன்படக் கூடியவை என்று கருதிய அவன் வாய்க்காலில் இறங்கி மறு கரையை அடைந்தான்.

மஞ்சள் நீர் வாய்க்கால் என்று அழைக்கப்பட்டு வந்த அந்த ஓடையைக் கடந்து மறுபுறத்திற்கு வந்த உதயசந்திரன் மாளிகையொன்றின் சுவற்றில் இருந்த கொக்கிகளைப் பிடித்துக் கொண்டு மேலே ஏறினான். மிகவும் சிரமப்பட்டு சுவற்றில் ஏறி சாளரத்தில் குதித்தான். மாளிகையின் உட்புறத்தில் வெளிச்சம் அவ்வளவாக இல்லை. அதுவும் நல்லதுதான் என்று சொல்லிக் கொண்ட உதயசந்திரன் சாளரத்திலிருந்து உட்புற தளத்திற்குத் தாவினான். அங்கிருந்த தூணைப் பற்றி குரங்கு போலவே கீழே இறங்கினான். மாளிகையின் நடுப்புறத்திற்கு வந்தபோது ஏதோ பேச்சுக் குரல் கேட்கவே இருட்டிலேயே ஒதுங்கி நின்றான்.

உட்புற அறையிலிருந்துதான் பேச்சுக் குரல் வந்தது. ஆடவனின் குரலும் பெண்ணின் குரலுமாக மாறி மாறிக் கேட்டது. குரலுக்குரியவர்கள் பேசியது தெளிவாகவே கேட்டது உதயசந்திரனுக்கு.

''உங்களுக்கு இதே வேலைதானா? வேறு வேலையே இல்லையா?'' என்று கேட்டது பெண் குரல்.

ஆடவன் இதைக் கேட்டு பெரிதாகச் சிரித்துவிட்டு, ''இதைவிடப் பெரிய வேலை என்ன இருக்கிறது?'' என்றான் கட்டையான குரலில்.

''லட்சணம்தான். மகா சேனாதிபதிக்கு இதுதான் பெரிய வேலை என்றால் போரிடுவது சிறிய வேலையா?'' என்று கேட்டாள் பெண்.

''போர் வரும்போதுதான் அதைப் பற்றிச் சிந்திக்க வேண்டும் பெண்ணே. இப்போது எதற்கு? அதோடு இதுவும் ஒரு விதத்தில் போர்தான்.''

''என்ன உளறுகிறீர்கள்?''

''உளறவில்லை பெண்ணே. காமம் என்பது ஒரு கோட்டை மாதிரிதான். அதைப் பிடிக்க ஒவ்வொருவனும் ஈடுபடுவது ஒரு போரைப் போலத்தான்.''

''அது எப்படி?''

''ஒரு கோட்டையைப் பிடிப்பதற்கு முன் கோட்டையை மோப்பம் விட வேண்டும். அதன் பலத்தை அறிய வேண்டும். பிறகு பலத்தை முறியடிக்க திட்டமிட்டு செயல்பட வேண்டும். அப்போது உண்டாகும் தாக்குதலை எதிர்கொண்டு முறியடிக்க வேண்டும். பல எதிர்ப்புகளைத் தகர்த்து கோட்டையை பிடிக்க வேண்டும். இங்கேயும் அதே கதைதானே? உன்னைப் பற்றி அறிந்து கொண்டு உனது பலத்தை முறியடித்து உன் தாக்குதல் களையும் உனக்கு வேண்டியவர்களின் எதிர்ப்புகளையும் தகர்த்து உன்னை அடைய முடிந்தது. உண்மையா இல்லையா?''

''இவ்வளவு விவரமாக நீங்கள் சொல்வதை கேட்டால் நீங்கள் இந்த மாதிரி கோட்டைகளைத் தான் அதிகமாகப் பிடித்திருப்பீர்கள் போலிருக்கிறது.''

''இருக்கலாம். எதிரியின் கோட்டையைப் பிடிக்கும் வாய்ப்பு எப்போதாவது தான் வரும். ஆனால் இதுபோன்ற கோட்டையைப் பிடிக்கும் வாய்ப்பு எப்போதும் வரும். நான் வாய்ப்புகளைத் தவறவிடாதவன். அதுவும் காமக் கோட்டைகளை தகர்க்காமல் விட்டதே இல்லை.''

''நீங்கள் சேனாதிபதியல்ல. காமாதிபதி'' என்று சொன்ன அப்பெண் ''ஹா'' என்று பெரிதாகக் குரல் கொடுத்து ''இதென்ன உதட்டை இப்படி கடித்துவிட்டீர்கள்? ரத்தம் வருகிறது'' என்றாள்.

''வேறு என்ன செய்யச் சொல்கிறாய்? பேச்சு தேவை யில்லாத நேரங்களில் பேச்சை பிரதானமாக்கும் பெண்களின் பேச்சை நிறுத்த இதுதான் சரியான உபாயம்'' என்றான் சேனாதிபதி என்று சொல்லப்பட்ட அந்த ஆடவன்.

''சரியான வெறியர் நீங்கள்.''

''காமத்துக்கு வெறி அவசியமானது. இல்லையென்றால் அது சுவைக்காது.''

பெண் மறுபடியும் கத்திவிட்டு, ''இதென்ன இங்கே போய் கடிக்கிறீர்கள்?'' என்றாள்.

''நீ பழமாக இருக்கும்போது கடிக்காமல் என்ன செய்வது? எந்த இடத்தில் கடிப்பது? எந்த இடத்தை விடுவது?''

''சீ! உங்களுக்கு வெட்கம் இல்லை''

''இங்கே வெட்கம் என்பது தேவையில்லாதது என்பது உனக்குத் தெரியாதா? நீ என்ன எனக்குப் புதியவளா?''

''நான் பழையவள் தான். உங்கள் கடி தான் புதியதாக இருக்கிறது.''

''நாளுக்கு நாள் புதிய விஷயங்கள் இருந்தால் தான் காதலும் காமமும் புளிக்காமல் இருக்கும்.''

''நல்ல கதை''

''கதையல்ல விஜயகுமாரி, உண்மை. முழுக்க முழுக்க உண்மை. காமத்திலும் சரி போர்க்களத்திலும் சரி புதுபுது செயல்பாடுகள்தான் வெற்றியைத் தரும்.''

இதையடுத்து பேச்சு நின்று முணுமுணுப்புகளும் சிணுங்கல் களும் தொடர்ந்தன.

மேலும் அங்கே இருக்க விரும்பாத உதயசந்திரன் அங்கிருந்து புறப்பட முயன்றபோது அந்தப் பெண்ணின் பேச்சு தடுத்து நிறுத்தியது.

''பகதத்தரே, தினமும் ஒரு கதை பேசி என்னிடம் நீங்கள் பெற்றுச் செல்வதுதான் வாடிக்கையாக இருக்கிறதே தவிர கொடுப்பது என்பது இல்லையே! எப்போது கொடுப்பீர்கள்?'' என்று கேட்டாள் விஜயகுமாரி.

''தினமும் கொடுத்து கொண்டுதானே இருக்கிறேன்'' என்று சொல்லி சத்தத்துடன் முத்தமொன்றைக் கொடுத்தார் சேனாதிபதி பகதத்தன்.

''விளையாடாதீர்கள் பகதத்தரே. நான் எப்படிப்பட்டவள் என்பது உங்களுக்குத் தெரியும். தேடித் தேடிச் சுற்றி வந்த வாலிபர்களையெல்லாம் விட்டுவிட்டு உங்கள் அழைப்பை ஏற்று நீங்கள் விரும்பும் போதெல்லாம் விருந்தாக இருந்து வருபவள் நான். நீங்களோ தினம் தினம் விருந்துண்பதோடு சரி.''

''நீ எண்ணிப் பார்க்க முடியாத பொன்னை கொண்டு வந்து கொடுக்கிறேனே அதற்கென்ன பெயர்?''

''அது யாருக்கு வேண்டும்? நீங்கள் கொடுத்த பொன்னெல்லாம் பானையில் போட்டு வைத்திருக்கிறேன். எப்போது வேண்டுமானாலும் எடுத்துச் செல்லலாம்.''

''வேறு என்ன வேண்டும் விஜயகுமாரி?''

''பல்லவ அரியணை.''

''எதற்கு? வைத்து விளையாடுவதற்கா?''

''இல்லை. அமர்ந்து ஆட்சி புரிவதற்கு.''

''சரி, ஏற்பாடு செய்து விடுகிறேன்.''

''சேனாதிபதி, விளையாடாதீர்கள். நான் ஆபத்தானவள். வெடித்தால் எரிமலையாய் வெடிப்பேன். ஞாபகம் இருக்கட்டும்.''

''நீ கேட்டதை தருவதாகத்தானே சொன்னேன். எதற்கு இந்தக் கோபமும் மிரட்டலும்?''

''பல்லவர் அரியணை என்பது உங்கள் இல்லத்து விளையாட்டுப் பொருளல்ல எனக்கு எடுத்துக் கொடுப்பதற்கு.''

''அப்படி நான் சொல்லவில்லையே?''

''பல்லவ அரியணையை நான் கேட்கிறேன் என்றால் நான் இந்த நாட்டின் ராணியாக வேண்டும் என்று அர்த்தம்.''

''ஒரு சேனாதிபதிக்கு இதுகூடவா தெரியாது விஜய குமாரி?''

''அந்த அரியணை அமர்வதற்கு ஆளில்லாமல் அனாதையாக இல்லை. ராஜசிம்மர் அமர்ந்திருக்கிறார். அவருக்குப் பிறகு அரியணையில் அமர மகேந்திர வர்வனும் பரமேச்சுவர வர்மனும் இருக்கிறார்கள்.''

''இதெல்லாம் இந்நகரத்தில் இருக்கும் குழந்தைகளுக்குக் கூடத் தெரியும்.''

''அப்படி இருக்கும்போது பல்லவ அரியணையில் நான் எப்படி அமர முடியும்?''

''முதலில் நான் அமர்ந்து பார்த்துவிட்டு பிறகு உன்னை அமர வைக்கிறேன்.''

''பகதத்தரே.''

''கோபமோ அவசரமோ வேண்டாம் விஜயகுமாரி. நான் உன்னோடு வீண் பேச்சு பேசிக் கொண்டிருக்கவில்லை. பல்லவ அரியணையில் அமர்ந்திருப்பவரையும் அமர விருப்பவர் களையும் அகற்றிவிட்டால் அதில் நானும் நீயும் அமரலாம் அல்லவா?''

''அது எப்படி முடியும்?''

''அதைப் பற்றி உனக்கென்ன? கோட்டைகளைப் பிடிக்கும் என்னால் அரியணையைப் பிடிக்க முடியாதா? இதோ பார் விஜயகுமாரி! பல்லவர் அரியணையில் அமரும் ஆசை எனக்கே இருக்கிறது. அதற்கான சர்வ முயற்சிகளையும் செய்து கொண்டிருக்கிறேன். அந்த விவரமெல்லாம் உனக்குத் தெரிய வேண்டியதில்லை. அத்தி மரத்தில் பூப்பது தெரியாது. காய்ப்பது மட்டுமே தெரியும். உனக்கு காய் போதுமல்லவா?''

''தாங்கள் சொல்வதெல்லாம் உண்மையா?''

''நம்புவதும் நம்பாததும் உன் இஷ்டம். சாளுக்கிய நாட்டை நோக்கி பல்லவ இளவரசன் மகேந்திரன் படையெடுத்துச் செல்கிறான். நானும் சில நாட்களில் போகப் போகிறேன். அங்கே மகேந்திரன் என்னால் கொல்லப்படுவான். இளையவனான பரமேச்சுரன் அகற்றப்படுவான். ராஜசிம்மர் தற்கொலை செய்து கொள்வார். போதுமா?''

''இதெல்லாம் நடக்குமா?''

''நடக்க முடியாதது எதுவும் உலகத்தில் இல்லை. நான் புறப்படுகிறேன்.''

''பகதத்தரே.''

''என்ன?''

''அதற்குள் புறப்பட்டு விட வேண்டுமா?''

''அப்படியென்றால்?''

''மீண்டும் விருந்துண்ணலாம் அல்லவா? இப்போது நான் புதிய விருந்தைப் படைக்கிறேன். உண்டு களித்து விட்டுச் செல்லலாமே?''

''நீ சொன்னால் சரி.''

இதையடுத்து இருவரிடையேயும் காமாந்தகப் பேச்சுக்கள் வெடித்தன.

அவர்களது பேச்சுக்களால் அதிர்ச்சியடைந்திருந்த உதய சந்திரன் அவர்களது விரச வார்த்தைகளைக் கேட்கப் பிடிக்காமல் வெளியே வந்து வந்த வழியாகவே மாளிகையை விட்டு வெளியேறி மஞ்சள் நீர் வாய்க்காலின் மறுகரைக்கு வந்தான்.

சாதாரணமாகப் பசிக்கு அடிமையாகும் பழக்கம் இல்லாதவனான அவனுக்கு அன்றைக்குப் பசித்தது.

பிச்சை எடுப்பதற்கு மனம் வரவில்லை.

தன்னைத் தேடிக் கொண்டு காவலர்கள் யாரும் முயல்வதாக அவனுக்குத் தோன்றவில்லை. ஊர் அத்தகைய பரபரப்பு எதுவும் இல்லாமல் இருந்தது.

காலாற நடந்தான் உதயசந்திரன்.

பாண்டவத் தூதப் பெருமாள் ஆலயத்தருகே வந்தான்.

கோயிலுக்குள் சென்றால் பிரசாதம் ஏதாவது கிடைக்குமா என்ற எண்ணத்துடன் உள்ளே நுழைந்து பெருமானை வணங்கிவிட்டு அர்ச்சகரை அணுகிக் கேட்டான்.

''பிரசாத விநியோகமெல்லாம் முடிந்துவிட்டதே! கதவை மூடும் நேரமாகிவிட்டது. இப்போது வந்து கேட்கிறாயே அப்பனே?'' என்று சொன்ன அர்ச்சகர் ''கொஞ்சம் பொறு. கதவை மூடிவிட்டு வருகிறேன். இல்லத்தில் ஏதாவது இருக்கிறதா என்று பார்க்கலாம்'' என்றார்.

ஆலயக் கதவுகளை மூடி பீக முத்திரையிட்டுவிட்டு கனமான சாவிகளைத் தோளில் போட்டுக் கொண்டு ஆலயத்தின் சன்னதி வீதியிலேயே இருந்த தன் இல்லத்திற்கு அழைத்துச் சென்றார் அர்ச்சகர். நல்ல வேளையாக அவரது இல்லத்தில் வெண் பொங்கல் பிரசாதம் மீதமிருந்ததால் மந்தாரை இலையொன்றில் அதை வைத்து மூடி நெய்யானது முழங்கையில் வழிய வழிய உதயசந்திரனிடம் கொடுத்தார்.

பாற்கடலைக் கடைந்து எடுக்கப்பட்ட அமுதத்தைப் போலிருந்தது வெண்பொங்கல்.

அர்ச்சகருக்கு நன்றி தெரிவித்துவிட்டு பொங்கலை வாங்கி வயிறார உண்டான் உதயசந்திரன். அவர் கொடுத்த தண்ணீரையும் பருகிவிட்டு களைப்பு மிகுதியால் இல்லத்து திண்ணையிலேயே படுத்தான். சில நிமிடங்களில் உறங்கவும் செய்தான்.

அர்ச்சகர் வந்து பார்த்தார். அவனை எழுப்பி விரட்ட வில்லை. ''அசலூர்காரன் போலிருக்கிறது. உறங்கட்டும்'' என்று சொல்லிக் கொண்டு கதவைச் சாத்திக் கொண்டார்.

காலையில் கண் விழித்தபோது பொழுது விடிந்திருந்தது.

அர்ச்சகருக்கு நன்றி தெரிவிக்காதது மட்டுமின்றி அவரது அனுமதியின்றி வீட்டுத் திண்ணையில் படுத்து உறங்கிவிட்டதை எண்ணி வெட்கமடைந்த உதயசந்திரன் அவருக்கு தற்போதாவது நன்றி தெரிவித்துவிட்டுப் போகவேண்டும் என்று கருதியவனாய், ''ஐயா'' என்று அழைத்தான்.

''யாரது?'' என்று கேட்டபடி வெளியே வந்தாள் ஒருத்தி.

அவளைக் கண்டு வியந்தான் உதயசந்திரன்.

அவள் -

பௌர்ணமி.

☆☆☆



11

பாண்டவ தூதப் பெருமாள் ஆலயம்

தான் முற்றிலும் எதிர்பார்க்காத மந்திரவாதி வேடத்தைத் தாங்கி, தனக்குப் பரிச்சயம் இல்லாத மாந்தரீகத்தைச் செய்து, தனது போலித்தனம் வெளிப்படவிருந்தபோது அமைச்சரிடமிருந்து தப்பி, தன்னை மறைத்துக் கொள்ள ஒதுங்கிய மாளிகையில் பல்லவச் சேனாதிபதி பகதத்தனின் காமத்தைச் சகிக்காமல் விலகி, தன் பசி தீர அலைந்து பாண்டவ தூதப் பெருமாள் ஆலய அர்ச்சகரின் இல்லத்தில் பிரசாதத்தை உண்டு மனச்சோர்வும் உடல் சோர்வும் அடைந்து உறங்கி எழுந்த நிலையில் பௌர்ணமியைக் கண்டபோது வானத்துப் பௌர்ணமியைக் கண்ட மலர்ச்சி உதயசந்திரனின் முகத்தில் உண்டாயிற்று.

அவளைக் காண வேண்டும் என்று கணிகிலுப்பை கிராமத்தில் விரும்பியபோது அவள் காண விரும்புவதாகச் சொல்லி இஸ்லாமிய ஒற்றர்கள் தன்னைக் குரங்கணில் முட்டத்திற்கு அழைத்துச் சென்று ஏமாற்றிவிட்டதை எண்ணிப் பார்த்துக் கொண்ட அவன் தனது ஏக்கத்திற்கு ஏற்ற பரிகாரமாக பௌர்ணமி வந்திருப்பது போலவே தோன்றியது.

''பௌர்ணமி! நீயா? நீதானா?'' என்று வியப்போடு கேட்டான்.

''நானேதான். ஏன் என்னைப் பிடிக்கவில்லையா?'' என்று கேட்டாள் பௌர்ணமி.

''உன்னை எப்படி எனக்குப் பிடிக்காமல் போகும்?'' என்று கேட்டான் உதயசந்திரன்.

''அதனால்தான் சொல்லாமல் கொள்ளாமல் காக்கை மடுவை விட்டு இங்கே வந்தீர்கள் போலிருக்கிறது'' என்றாள் பௌர்ணமி.

வறட்சியாகச் சிரித்தான் உதயசந்திரன்.

''எதற்காகச் சிரிக்கிறீர்கள்?''

''நாகைப்பட்டிணத்திலிருந்து நான் புறப்பட்ட வேளை நல்ல வேளையில்லை போலிருக்கிறது. புறப்பட்டதிலிருந்து நடந்தவைகளெல்லாம் என் விருப்பத்திற்கு மாறானவை. இக்காஞ்சிக்கு வந்ததும் அப்படித்தான். இங்கே நானாக வரவில்லை. வரவழைக்கப்பட்டேன். நீ எப்படி இங்கே வந்தாய்?''

''நீங்கள் அங்கே இல்லை என்று தெரிந்ததும் அங்கே எனக்கு இருப்பு கொள்ளவில்லை. இங்கே வந்து விட்டேன்.''

''இந்த இடம்?''

''இது எனக்கு வேண்டப்பட்டவர்கள் இல்லம். காஞ்சிக்கு வரும் போதெல்லாம் இங்குதான் வருவேன். நீங்கள் எப்படியும் இங்கு வருவீர்கள் என்று தெரியும்.''

''அதெப்படி?''

''காக்கை மடுவில் உங்களுக்கு விரும்பாத காரியம் நடக்கவிருந்தது. அகளங்கர் வந்ததும் நெருக்கடி உண்டாகியது. அதற்கு மேலும் நீங்கள் அங்கிருக்க மாட்டீர்கள் என்று நினைத்தேன். அந்த இடத்தை விட்டால் உங்களைப் போன்றவர்கள் வரக்கூடிய இடம் காஞ்சியாகத்தான் இருக்கும். ஆகவே தான் இங்கு வந்து உங்களைப் பிடிக்கலாம் என்று உடனடியாக வந்தேன்.''

''என்ன? என்னைப் பிடிக்கவா?''

''ஆமாம். நீங்கள் தான் ஆண்சிங்கம் ஆயிற்றே? உங்களைப் பிடிக்கத்தானே வேண்டும்?''

''இல்லை பௌர்ணமி. எல்லோருமாகச் சேர்ந்து என்னை சூடாக மாற்றிவிட்டார்கள். நீ இருப்பதாகவும் அழைப்பதாகவும் சொல்லி என்னை குரங்கணில் முட்டத்திற்கு அழைத்து வந்தார்கள். உன்னைப் பார்க்கப் போகும் ஆவலில் நானும் மதியிழந்தேன். ஏமாற்றப்பட்டேன். ஏமாற்றியவர்கள் தான் என்னைக் காஞ்சிக்குக் கொண்டு வந்தார்கள். மந்திரவாதி யாக்கினார்கள். அதிலும் ஆபத்து வரவிருந்தது. தப்பி வந்து இங்கே சேர்ந்தேன். ஆலய அர்ச்சகர் பெரும் கருணைமான். பசியைப் போக்கி திண்ணையும் கொடுத்தார்'' என்று சொன்ன உதயசந்திரன், ''நீ அகளங்கரின் வளர்ப்பு மகளா, சொல்ல வில்லையே நீ?'' என்று கேட்டான்.

அவள் தலையை ஆட்டினாள்.

''அப்படியானால் உன் தாய் தந்தையர் யார்? எங்கே இருக்கிறார்கள்?''

''தெரியாது.''

''தெரியாதா? என்ன சொல்கிறாய் நீ?''

''நான் நினைவுபடுத்த விரும்பாத விஷயங்களை நீங்களும் நினைவுபடுத்தாதீர்கள்'' என்று சொன்ன பௌர்ணமி ''உள்ளே வாருங்கள். உங்களை அறிமுகப்படுத்தி வைக்கிறேன்'' என்று சொல்லி உள்ளே அழைத்துச் சென்று அர்ச்சகர் மனைவியிடம் அறிமுகப்படுத்தினாள்.

''சோழ நாட்டுப் பிள்ளையா, வா, மகனே. எங்களுக்கும் உன் வயதில் ஒரு மகன் இருக்கிறான்'' என்று சகஜமான குரலில் பேசி உபசரித்தாள் அர்ச்சகரின் மனைவி.

உதயசந்திரன் நீராடுவதற்கான ஏற்பாடுகளைச் செய்த பௌர்ணமி மாற்றுடைகளையும் கொடுத்துவிட்டு, ''சிற்றுண்டி அருந்திவிட்டு கோயிலுக்கு வாருங்கள், அங்கே நான் இருக்கிறேன்'' என்று கூறிவிட்டுச் சென்றாள்.

நீராடி புது ஆடைகளை அணிந்த பின்பு தான் தெம்பும் சுறுசுறுப்பும் அடைந்தான் உதயசந்திரன். அர்ச்சகர் இல்லத்து சிற்றுண்டியும் அமிர்தமாகத்தான் இருந்தது. அர்ச்சகரையும் அவரது மனைவியையும் வாயார வாழ்த்திக் கொண்டு கோயிலுக்குப் புறப்பட்ட அவன், ''தாயே, உங்கள் மகன் என்று சொன்னீர்களே, அவன் எங்கே?'' என்று கேட்டான்.

''கோயிலில்தான் இருக்கிறான். போய் பார்'' என்றாள் அர்ச்சகர் மனைவி.

என்றைக்கும் இல்லாத தெம்பும் பாண்டவ தூதப் பெருமாள் ஆலயத்திற்குச் சென்றான் உதயசந்திரன். ஆலயத்தில் பக்தர்களின் கூட்டம் கணிசமாக இருந்தது. முன்னாள் இரவு பஞ்சடைத்த கண்களுடன் தரிசனம் செய்திருந்த அவன் தற்போது புத்துயிர் பெற்ற கண்களோடு தரிசனம் செய்தான். அவனைக் கண்டதும் துளசி பிரசாதத்தைக் கொடுத்து அர்ச்சகர் ''பெருமாள் கிருபையால் உனக்கு இனி நல்லதே நடக்கும். எல்லா சந்தர்ப்பத்திலும் ஸ்ரீகிருஷ்ண பகவானை நினைத்துக் கொள். ஒரு குறைவும் வராது'' என்று ஆசிர்வதித்தார்.

ஆலயப் பிரகாரத்தில் சுற்றி வந்த அவன் மடைப்பள்ளிக்கு அருகில் வந்தபோது அங்கே இருந்த இளைஞன் ஒருவன் ''வாருங்கள் சோழ நாட்டு வீரரே. உங்களைப் பற்றி பௌர்ணமி சொன்னாள். காஞ்சிக்கு நீங்கள் வந்த வேளை நல்லதா கெட்டதா என்று தெரியாது. இக்கோயிலுக்கு வந்த வேளை மிகவும் நல்லது.

இல்லத்தில் இருங்கள். வேலைகளை முடித்துவிட்டு வருகிறேன்'' என்றான்.

ஒல்லியான தேகமும் கட்டுக்குடுமியும் திருமண் காப்புமாக காட்சியளித்த அந்த இளைஞன் தான் அர்ச்சகரின் மகனாக இருக்க வேண்டும் என்று நினைத்த உதயசந்திரன், ''உன் பெயர் என்ன? இங்கே என்ன பணி புரிகிறாய்?'' என்று கேட்டான்.

''எனது பெயர் அரிச்சந்திரன். எனக்கு இங்கே பெருமாளுக்குப் பிரசாதம் தயாரிக்கிற பணி. தற்காலிகமாகத்தான் செய்கிறேன். விரைவில் நீலிக்கோட்டத்திற்குப் போய் விடுவேன்'' என்றான் அந்த இளைஞன்.

''நீலிக்கோட்டமா? அப்படியென்றால்?''

''வீரர்களின் பயிற்சிக்கூடம். அங்கே தான் போகப் போகிறேன். விரைவில் பல்லவர் படையில் சேருவேன்.''

வியப்பாக இருந்தது உதயசந்திரனுக்கு.

கட்டுக்குடுமியும் திருமண்காப்பும் கொண்ட இந்த அந்தண இளைஞனா வீரர்கள் பயிற்சிக் கூடத்தில் சேரப் போகிறான் என்று வியந்தான்.

அவனுக்கு வாழ்த்து சொல்லிவிட்டு ஆலயத்தின் நந்தவனப் பகுதிக்கு வந்தபோது அங்கே பௌர்ணமி பூக்களை பறித்துக் கொண்டிருந்தாள்.

அவள் பூக்களைப் பறிப்பது கூட ஒரு கலையழகோடு இருந்ததைக் கண்ட உதயசந்திரன், ''பூக்களை பூவே பறிப்பது போல் இருக்கிறது நீ பூக்களைப் பறிக்கும் அழகு'' என்றான் மகிழ்ச்சியான குரலில்.

''நீங்களா? வாருங்கள்'' என்று வரவற்றே பௌர்ணமி, ''இது ஆலயம். கவனத்துடன் பேசுங்கள்'' என்றாள்.

''நான் தவறாக எதையும் பேசவில்லையே?'' என்றான் உதயசந்திரன்.

''பெண்களைப் பார்த்து அசடு வழிய பேசும் இடம் ஆலயம் அல்ல'' என்றாள் பௌர்ணமி.

''நான் உண்மையைத்தான் சொன்னேன் பௌர்ணமி. அதோடு ஒரு விஷயம். இந்த ஆலயத்தில் இருப்பவர் யார்? பகவான் கிருஷ்ணர். கிருஷ்ணர் புரியாத லீலைகள் உண்டா? கோகுலத்தில் ஸ்திரீகளுடன் லீலைகள் புரிந்தவர் அவர். அவர் நமது பேச்சுக்களுக்குத் தடை செய்வார் என்று நினைக்கிறாயா?''

''அவர் செய்ய மாட்டார். ஆலயத்தில் இருக்கும் அர்ச்சகர் தடை செய்வார். பக்தர்கள் ஆட்சேபிப்பார்கள்.''

பௌர்ணமி இப்படிச் சொல்லிக் கொண்டிருக்கும்போது ஆலயத்திற்குள் ஏதோ ஆரவாரம் கேட்டது.

''வாருங்கள் போய் பார்ப்போம்'' என்றாள் பௌர்ணமி.

இருவரும் அர்த்த மண்டபத்திற்குச் சென்றபோது அவர்கள் கண்ட காட்சி அதிர்ச்சிதரத் தக்கதாக இருந்தது.

கோயில் அர்ச்சகரை இரண்டு முரடர்கள் முரட்டுத்தனமாகப் பிடித்துக் கொண்டிருந்தார்கள். அவருக்கு முன்னால் அவரது மகன் அரிச்சந்திரன் கீழே விழுந்து மயக்க நிலையில் இருந்தான். தலையில் அடிப்பட்டிருந்ததற்கு அடையாளமாக ரத்தக்கறை தென்பட்டது. வேறு இரண்டு முரடர்கள் அர்ச்சகரை மிரட்டிக் கொண்டிருந்தார்கள்.

''டேய் கிழவா, மரியாதையாக கதவுக்கான சாவி எங்கே இருக்கிறது என்பதைச் சொல். மறுத்தால் இதே இடத்தில் பிணமாவாய்'' என்றான் ஒரு முரடன்.

''இதென்ன பௌர்ணமி. என்ன நடக்கிறது இங்கே? கோயிலில் போய் இப்படி அநியாயம் நடக்கிறதே தட்டிக் கேட்க யாரும் இல்லையா?'' என்று அதிர்ந்துபோய் கேட்டான் உதயசந்திரன்.

''சமீப காலமாக இங்கே ஏதேதோ நடந்து வருகின்றன வீரரே. இதுபோன்றச் சம்பவங்கள் ஊருக்குள் பணக்காரர்களது இல்லங்களில் நடைபெறுவதாகக் கேள்விப்பட்டிருக்கிறேன். ஆலயத்திலேயே இப்படி நடப்பதை இப்போதுதான் பார்க்கிறேன்'' என்றாள் பௌர்ணமி.

அவள் கண்களில் அச்சம் தெரிந்தது.

உதயசந்திரன் அவளோடு மேற்கொண்டு எதுவும் பேசாமல் முரடனைப் பார்த்து ''உனக்கு எதற்காக ஆலயத்தின் சாவி?'' என்று கேட்டான்.

அங்கே கூடியிருந்த பக்தர்கள் செய்வதறியாமல் திகைத்திருந்த நிலையில் உதயசந்திரன் இவ்வாறு கேட்டதும் வியப்புடன் அவனைப் பார்த்தார்கள்.

முரடர்களுக்கும்கூட வியப்பாகத்தான் இருந்தது.

ஆனால் அதைக் காட்டிக் கொள்ளாமல் ''அதைப் பற்றி உனக்கென்ன?'' என்று கேட்டான் ஒரு முரடன்.

''இந்த ஆலயத்தின் புதிய அறங்காவலன் நான். கதவுக்கான சாவி என்னிடம் இருக்கிறது. ஆகவே தான் கேட்கிறேன்'' என்றான் உதயசந்திரன்.

அவன் நின்றிருந்த தோரணை - பதட்டமில்லாமல் பேசிய விதம் - இவையெல்லாம் முரடர்களுக்கு ஒரு மாதிரியாகத்தான் இருந்தது.

''உள்ளே இருக்கும் நகைகள் வேண்டும். அதை எடுக்க கதவைத் திறக்க வேண்டும். திறப்பதற்குச் சாவி வேண்டும்'' என்றான் முரடன்.

''சாவி என்னிடம் இருக்கும்போது அர்ச்சகரை ஏன் மிரட்டுகிறீர்கள். விடுங்கள் அவரை'' என்றான் உதயசந்திரன்.

முரடர்கள் அர்ச்சகரை விட்டுவிட்டு உதயசந்திரனை நெருங்கினார்கள்.

''நம் எல்லோருக்கும் கொடுப்பவன் இறைவன். அவனுக்கு நாம் தான் கொடுக்க வேண்டுமே தவிர அவனிடமிருந்து எதையும் எடுக்கக் கூடாது'' என்று சொன்ன உதயசந்திரன் அதே நேரத்தில் முரடன் ஒருவனை நெருங்கி அப்படியே தூக்கி இதர முரடர்கள் மீது வீசினான்.

ஒரே நேரத்தில் நான்கு முரடர்களும் தரையில் விழுந்தார்கள். உதயசந்திரனால் தூக்கி வீசப்பட்ட முரடன் கல்தரையில் வேகமாக விழுந்ததால் தலையில் அடிபட்டுவிடவே ''ஐயோ'' என்று அலறினான். எழுந்து கொள்ள முடியவில்லை.

மற்ற மூன்று முரடர்கள் எழுந்தார்கள். அதைக்கண்ட உதயசந்திரன் அருகே சுவற்றில் சாத்தி வைக்கப்பட்டிருந்த சுவாமிக்கான பிரபையால் மூவரையும் மூர்க்கமாகத் தாக்கினான்.

இம்முறை அவர்களும் காயப்பட்டார்கள். அவர்களை நிலை கொள்ள விடாமல் பிரபையால் மீண்டும் தாக்கினான் உதயசந்திரன்.

பிரபை இரண்டாக ஒடிந்தது. ஒடிந்த பிரபை தூக்குவதற்கும் தாக்குவதற்கும் இலகுவாக இருந்ததால் அதை வாளைப்போலப் பயன்படுத்தி வீசியதால் படுகாயம் அடைந்த முரடர்கள் நால்வரும் தப்பித்தால் போதும் என்ற முடிவில் தாறுமாறாக ஓடினார்கள் ஆலயத்தின் வாயிலை நோக்கி. பக்தர்களில் சிலர் அவர்களைத் துரத்திக் கொண்டு ஓடினர்.

அர்ச்சகரின் வீடு.

அரிச்சந்திரனுக்கு வைத்தியர் வந்து தலையில் கட்டுப் போட்டுவிட்டு ''காயம் பலமாக இல்லை. பயம் வேண்டியதில்லை'' என்று கூறிவிட்டுச் சென்றார்.

வயோதிகரான அர்ச்சகருக்கு காயங்கள் எதுவும் இல்லையென்றாலும் முரடர்களின் முரட்டுப்பிடி தாங்காமல் பல இடங்கள் கன்றிப் போயிருந்தன. அவரது மனைவியும் பௌர்ணமியும் வெண்ணீர் ஒத்தடம் கொடுத்து சிகிச்சை செய்தார்கள்.

எதிர்பாராத விதமாக வந்து அநியாயம் செய்ய முற்பட்ட முரடர்களை அனாயாசமாக முறியடித்து விரட்டிய உதயசந்திரனைப் பார்த்த அர்ச்சகர் ''உனக்கு மிகவும் நன்றி அப்பனே, நான் காப்பாற்றப்பட்டது பெரிய விஷயமில்லை. பகவானுக்குரிய நகைகள் காப்பாற்றப்பட்டதுதான் முக்கியமானது. அவற்றைக் காப்பாற்றிக் கொடுத்த உனக்கு என்னால் என்ன பிரதி உபகாரம் செய்ய முடியும் என்று தோன்றவில்லை'' என்றார் மனம் நெகிழ்ந்தவராய்.

''அதெல்லாம் இருக்கட்டும் ஐயா. இப்படியொரு சம்பவம் ஆலயத்தில் பட்டப் பகலில் பகிரங்கமாக நிகழ்வது எப்படி? என்னால் நம்ப முடியவில்லையே!'' என்றான் உதயசந்திரன்.

''இன்னும் எத்தனையோ சம்பவங்கள் ஊரில் அவ்வப் போது நடக்கின்றன. எது எங்கே எப்படி நடக்கும் என்று தெரியாத காரணத்தால் காவலர்களால் எதையும் செய்ய முடியவில்லை. இதுபோன்ற அசம்பாவிதம் நடக்குமென்று எதிர்பார்த்து தான் பகவானுக்குரிய நகைகளையெல்லாம் மன்னர் வசம் ஒப்படைத்துவிடலாம் என்று முறையிட்டோம். மன்னர் தான் ஒப்புக் கொள்ளவில்லை. ''என்னால் ஆண்டவனுக்கு எதுவும் செய்ய முடியவில்லையே என்று ஏங்கிக் கொண்டிருக்கிறேன் நான். இந்த நேரத்தில் ஆண்டவனுக்குரியதை என்னிடம் ஒப்படைப்பதாவது! கூடவே கூடாது என்று சொல்லிவிட்டார். எங்களால் எதுவும் செய்ய முடியவில்லை'' என்றார் அர்ச்சகர்.

''இப்படி நடப்பதற்குக் காரணம் என்ன?''

''நாட்டில் போருக்குப் பின்னால் விளையும் அவலங்களில் பஞ்சமும் ஒன்று. காஞ்சியில் தற்போது கொடிய பஞ்சம் நிலவுகிறது. அரண்மனை களஞ்சியங்கள் காலியாகிவிட்டன. இரண்டு ஆண்டுகளாக மழையும் பெய்யவில்லை. ஏரிகள் வரண்டு போய் விவசாயம் நின்றுவிட்டது. மக்கள் பரிதவிப்புக்கு

ஆளாகியிருக்கிறார்கள். அரசாங்கக் காவலர்களுக்குச் சம்பளம் இல்லாததால் அவர்கள் பணிகளைச் சரிவரச் செய்வதில்லை. இது கொள்ளைக்காரர்களுக்கும் கொலைகாரர்களுக்கும் சமூக விரோதிகளுக்கும் சாதகமாகிவிட்டன. திடீர் திடீரெனத் தோன்றி இதுபோன்ற அட்டூழியங்களைச் செய்து வருகிறார்கள். இதே நிலைமை நீடித்தால் ஆலயங்களை மூடி வைக்கும் அவலமும் வரலாம்'' என்றார் அர்ச்சகர்.

மேற்கொண்டு எதுவும் பேசாத உதயசந்திரன் ஆலயத்திற்கு வந்தான். மத்ஸய தீர்த்தம் என்னும் ஆலயத் திருக்குளத்திற்கு வந்தான். குளம் வற்றிப் போயிருந்தது. அதே சமயம் குளத்திற்கு நடுவே இருந்த கிணற்றில் நீர் இருந்தது. அந்தக் கிணற்றுச் சுவற்றில் கோயில் புறாக்கள் அமர்வதும் சண்டை போட்டுக் கொண்டு பறப்பதுமாக இருந்தன. குளக்கரைச் சுவற்றில் இருந்த புறாக்கூண்டுகள் சிலவற்றில் ஆந்தைகள் சில அமர்ந்திருப்பதைக் கண்டான் உதயசந்திரன்.

''இந்த ஆந்தைகளைப் போலத்தான் முரடர்களும் இடம்மாறி வந்திருக்கிறார்கள்'' என்று சொல்லிக் கொண்ட அவன் பாண்டவ தூதப் பெருமாளை மனதில் எண்ணிக் கொண்டு, ''கிருஷ்ண பகவானே! பாண்டவர்களுக்குத் தூதுவனாகச் சென்ற நீ பகவத் கீதையை மட்டும் அளிக்கவில்லை. பாண்டவர்களுக்கு வெற்றியையும் தந்தாய். அதற்காக எத்தனையோ லீலைகளை குருசேத்திரப் போர்க்களத்தில் செய்தாய். அப்பேர்பட்ட நீ பஞ்சத்தில் வாடும் இந்தப் பல்லவ நாட்டுக்கு கருணை காட்டக் கூடாதா? உன் கருணையல்லாது வேறு எதனால் இப்பஞ்சம் தீரும்?'' என்று வேண்டிக் கொண்டான்.

நண்பகல் நேரம் வரை கோயிலைப் பாதுகாப்பது போல் அங்கேயே இருந்தான் உதயசந்திரன். விரும்பத்தகாத சம்பவம் நடந்த பிறகு கோயிலின் கர்ப்ப கிரஹ வாயில் மூடியே இருந்தது. கோயிலுக்கு வந்த பக்தர்களின் எண்ணிக்கையும் குறைந்தது. வந்தவர்களும் ஆலயத்தில் நடைபெற்ற சம்பவத்தைப் பற்றி விசாரிப்பவர்களாகவே இருந்தார்கள்.

கோயிலின் வாயில் கதவைச் சாத்திக் கொண்டு அர்ச்சகரின் வீட்டிற்கு வந்தான் உதயசந்திரன். உண்பதற்கு உணவு தயாராக இருந்தாலும் உண்ணும் மனநிலையில் அவனில்லை. காலையில் துள்ளி வரும் இளங்காளை போலத் தோற்ற மளித்தவனும், கட்டுக்குடுமியோடு தோன்றி மடைப்பள்ளி பணியை சுறுசுறுப்பாக கவனித்தவனும், விரைவிலேயே அப்பணியை

விட்டுவிட்டு நீலிக் கோட்டத்திற்குப் போய் போர் வீரனாக பயிற்சி பெறப் போவதாக உற்சாகமாகச் சொல்லியவனுமான அரிச்சந்திரன் தலையில் காயம் பட்டு படுத்துக் கிடந்ததாலும், தனக்கு அன்னமிட்ட அர்ச்சகர் அசதியுற்று இருந்ததாலும் உணவை உண்ண விருப்பமில்லாமல் இருந்தான் உதயசந்திரன்.

அதை உணர்ந்து கொண்ட அர்ச்சகர் அவனைப் பார்த்து, ''இச்சம்பவமெல்லாம் இப்போது சகஜம். யாருக்கு என்ன நடக்கும் என்பதைச் சொல்ல முடியாது. இதற்காக நீ மனமொடிந்து விடாதே. முரடர்களைக் கண்டு பக்தர்கள் வாளாயிருந்ததற்கு காரணம் பூனைக்கு யார் மணியைக் கட்டுவது என்பது போன்ற குழப்பம்தான். நீ அந்த குழப்பத்தைப் போக்கிவிட்டாய். அதனால் தான் பக்தர்களில் பலர் தைரியமாக முரடர்களை விரட்டிக் கொண்டு போயிருக்கிறார்கள். அநேகமாக அவர்களை அடித்துக் கொன்றாலும் வியப்பதற்கில்லை. நாளையிலிருந்து பக்தர்களே இக்கோயிலுக்கு கவசமாக நிற்பார்கள். அரிச் சந்திரனுக்கும் பெரிதாக காயமில்லை. நீ வீணாகக் கவலைப் படாதே. எங்களைக் காப்பாற்றிய நீ உண்ணாமல் இருப்பது எங்களுக்கு கவலையை அளிக்கிறது. வந்து சாப்பிடு'' என்றார்.

''பௌர்ணமி எங்கே?''

''அவள் ஓரிடமாக இருக்கமாட்டாள். வானம் பாடியைப் போன்றவள். பறந்து கொண்டே இருப்பாள். உன்னை சாயுங் காலம் பார்ப்பதாகச் சொன்னாள். தாராதேவி கோயிலுக்கருகே உள்ள சோலைக்கு வரும்படிச் சொல்லிவிட்டுப் போனாள்.''

ஓரளவு திருப்தியடைந்த உதயசந்திரன் உணவை அருந்திக் கொண்டே கேட்டான்.

''இந்தச் சம்பவம் பற்றி விசாரிக்க யாரும் வரமாட்டார்களா?''

''வரலாம். அநேகமாக இன்று மாலையோ அல்லது நாளை காலையோ வருவார்கள். அவர்களால் தான் என்ன செய்ய முடியும்?''

அன்று மாலை பௌர்ணமி கூறிய சோலைக்குப் புறப்பட்டான் உதயசந்திரன்.

சோலைக்குப் போகும் வழியை அர்ச்சகரிடமே தெரிந்து கொண்டு நடந்தான்.

ஏகம்பவாணன் ஆலயம் வழியாகச் சென்றபோது ஆலய வாயிலில் காவல் வீரர்கள் பலர் இருந்ததைக் கண்டான்.

அதுபோன்ற காவல் வீரர்கள் பாண்டவ தூதப் பெருமாள் ஆலய வாசலில் ஏன் இல்லை என்று தனக்குத்தானே கேட்டுக் கொண்டான். விடை கிடைப்பதாக இல்லை.

ஏகம்பவாணன் கோயிலுக்கருகே காபாலிகர் மடம் ஒன்றிருந்ததையும் அதனருகில் மண்டை ஓட்டு மாலையும் ஜடாதாரிகளுமாக காபாலிகர் பலர் நடமாடிக் கொண்டிருந் ததையும் கண்டான்.

அடுத்து தாராதேவி ஆலயத்திற்குச் செல்லும் பாதையில் புகுந்து நடந்தபோது அத்தெருவில் ஓர் இல்லத்திலிந்து அவலக்குரல் எழுந்தது. அது பெண்ணின் குரல். ''ஐயோ ஐயோ!'' என்று அப்பெண் அலறியது தெளிவாகக் கேட்டது.

அந்த இல்லத்தை நோக்கிச் சென்றான்.

உள்ளே அவன் கண்ட காட்சி அவனை அதிர வைத்தது.

☆☆☆



12 சோலையும் சந்திப்பும்

தாராதேவி ஆலயம் இருந்த திருச்சோலைத் தெருவிற்கு உதயசந்திரன் வந்தபோது அங்கிருந்த இல்லம் ஒன்றிலிருந்து பெண்ணின் அலறல் சத்தம் கேட்கவே அது இன்னதென அறியாமல் மேலே நடக்க விரும்பாமல் இல்லத்திற்குள் சென்றான்.

இல்லத்தின் வெளிக்கதவு திறந்தே இருந்தது. உள்ளே முற்றத்தில் நடுத்தர வயதுள்ள மனிதர் ஒருவர் இளம் பெண்ணொருத்தியை சாட்டையால் அடித்து விட்டு சொற்களாலும் அடித்துக் கொண்டிருந்தார். கடுஞ்சொற்களைப் பொருட்படுத்தவில்லை யென்றாலும் கொடிய சாட்டையடியை தாங்க முடியாத நிலையில், ''ஐயோ! ஐயோ'' என்று அப்பெண் அலறினாள். ''அடிக்காதீர்கள். அடிக்காதீர்கள்'' என்று கெஞ்சிக் கதறினாள். கந்தல் ஆடைகளை அணிந்திருந்த அந்த இளம் பெண்ணின் உடலும் இதே ரீதியில் சாட்டையடி தொடர்ந்தால் கந்தலாகிவிடும் என்பதை உணர்ந்த உதயசந்திரன் ''நிறுத்துங்கள். எதற்காக இந்தப் பெண்ணை இப்படி கொடுமைப் படுத்துகிறீர்கள்?'' என்று கேட்டான்.

அவனது குறுக்கீடு சாட்டையடி மனிதனுக்கு அறவே பிடிக்கவில்லை என்பதை முகமே காட்டியது. உதயசந்திரனைப் பார்த்து, ''இதைக் கேட்க நீ யார்?'' என்று கேட்டான்.

''யாராக இருந்தால் என்ன? கொடுமை நிகழ்வதைப் பார்த்துவிட்டு தட்டிக் கேட்காதவன் எப்படி மனிதனாக இருக்க முடியும்?'' என்று கேட்டான் உதயசந்திரன்.

''கேட்டு விட்டாய் அல்லவா? வந்த வழியே திரும்பிச் செல்'' என்றான் சாட்டையடி மனிதன்.

''தட்டிக் கேட்பது என்றால் பெயருக்குக் கேட்டுவிட்டுப் போவதல்ல. பிரச்சனையைத் தீர்ப்பதுதான்.''

''இங்கு எந்தப் பிரச்சனையும் இல்லை. இப்பெண் எனது அடிமை. கொடுக்கப்பட்ட வேலைகளை இவள் சரிவர செய்யாததால் அடிக்கிறேன். அதற்கு எனக்கு உரிமை உண்டு.''

''அடிமையா? இந்த இளம் பெண்ணா? இதென்ன பிதற்றல்?''

''பிதற்றுவது நீ தான். இவளது பெற்றோர் இவளை எனக்கு நூறு பொற்காசுகளுக்கு விற்றிருக்கிறார்கள். இவள் என் உடமை. என் பணிகளைச் செய்ய வேண்டியது இவள் கடமை. இது தெரியாமல் குறுக்கிடுவது உன் மடமை. போ வெளியே.''

''இது உண்மையா? இவளை எதற்காகப் பெற்றவர்கள் உங்களுக்கு விற்க வேண்டும்?''

''பெற்றவர்கள் பிழைக்க வேண்டாமா? பிழைப்பதற்கு பொன் வேண்டாமா? பொன்னுக்கு மாற்று தற்போது பெண்தான். பல்லவ ராஜ்ஜியத்தில் இது எங்கும் நடக்கிறது.''

சாட்டை மனிதன் சொன்னது ஜீரணிக்க முடியாத விஷயமாக இருந்தது உதயசந்திரனுக்கு.

சுருங்கிய சுறுக்குப் பையைப் போல துவண்டு கிடந்த அந்த பெண்ணைப் பார்த்து, ''பெண்ணே, இது உண்மையா?'' என்று கேட்டான்.

அவள் தலையை ஆட்டினாள். அவள் தலையை ஆட்டியது பூஞ்செடியின் கிளையானது முறிந்து விழுவது போல இருந்தது.

''ஆகா! என்னிடம் தான் எவ்வளவு பொன் இருந்தது? எல்லாவற்றையும் கொள்ளையர்களிடம் கொட்டி விட்டோமே! இருந்திருந்தால் அதை இந்த இரக்கமற்றவனிடம் இறைத்து விட்டு இவளை மீட்டிருக்கலாமே?'' என்று நினைத்த உதயசந்திரன்; ''இவளைப் போல அடிமையாய் விற்கப் பட்டவர்கள் எத்தனை பேர் இருப்பார்களோ? அவர்களை யெல்லாம் எப்படி மீட்பது?'' என்று கேட்டுக் கொண்டான்.

பிறகு அந்த மனிதனைப் பார்த்து, ''ஐயா, இந்தப் பெண் உங்கள் அடிமையாகவே இருக்கட்டும். அதற்காக இப்படி கொடுமைப்படுத்த வேண்டுமா? இரக்கத்துடன் நடந்து கொள்ளக்கூடாதா? ஆடு மாடுகளை நடத்துவதை விடக் கொடுமையாக நடத்துகிறீர்களே?'' என்று கேட்டான்.

''உப்பு பெறாத உன் கோரிக்கைக்கு இங்கே இடமில்லை. மரியாதையாகப் போய்விடு'' என்றான் சாட்டையடி மனிதன்.

சில நியாயங்களை கேட்கக் கூடியவர்கள் தான் தட்டிக் கேட்க முடியும் என்பதை தற்போது உணர்ந்து கொண்டான் உதயசந்திரன்.

தட்டிக் கேட்பதற்கு சட்டங்களை வைத்திருக்கும் பல்லவ அரசாங்கமே தனது பல்லை இழந்துவிட்ட நிலையில் இருப்பதால் அதனால் எதையும் செய்ய முடியாது என்பதையும் உணர்ந்து வேதனையுடன் வாயை மூடிக் கொண்டு வெளியே வந்தான்.

தனது சோழ நாட்டில் கூட இப்படியொரு நிலையை அவன் கண்டதில்லையாதலால் காஞ்சியின் நிலை அவனை வெகுவாக பாதித்தது. தனது தந்தையிடம் உள்ள செல்வங்களையெல்லாம் கொண்டு வந்து காஞ்சியில் உள்ள மக்களுக்கு கொடுத்தால் என்ன என்று தோன்றியது அவனுக்கு. அதேசமயம் கணிகிலுப்பை கிராமத்திற்குத் தன்னை வரச் சொன்ன அவரது நிலை என்ன என்பது தெரியாததால் செல்வங்களை காஞ்சிக்கு கொண்டு வருவது எப்படி இயலும் என்றும் தனக்குத்தானே கேட்டுக் கொண்டான்.

பல்வேறு நினைப்புகளால் நடந்த அவன் பௌத்தர்களின் தெய்வமான தாராதேவி ஆலயத்தருகே வந்தான். *காஞ்சியில் ஏழாம் நூற்றாண்டில் தாராதேவிக்கான ஆலயம் ஒன்றிருந்தது. **ஆதியில் இருந்த இந்த ஆலயம் பின்னாளில் அகற்றப்பட்டு அங்கே காமாட்சியம்மன் ஆலயம் கட்டப்பட்டதாகச் சொல்வோரும் உண்டு. இது எந்த அளவிற்கு உண்மை என்பது தெரியாது. அதேசமயம் தற்போது காஞ்சியில் காமாட்சியம்மன் ஆலயம் தான் இருக்கிறதே தவிர தாராதேவி ஆலயம் காணப்படவில்லை. வரலாற்று ஆசிரியர் கூறுவது போல் காமாட்சி அம்மன் கோயில் மற்றும் கச்சபேஸ்வரர் கோயில் ஆகியவற்றில் புத்தர் சிற்பங்கள் காணப்படுகின்றன. காமாட்சியம்மன் அருகில் உள்ள பள்ளிக்கூடத்தில் பெரியதோர் புத்தர் சிலையும் காணப்படுகிறது.

உதயசந்திரன் கண்ட தாராதேவி ஆலயம் சிறியதாக இருந்தாலும் சிறப்பானதாக இருந்தது. ஏராளமான புத்த பிட்சுக்கள் ஆலயத்திற்குள் காணப்பட்டார்கள். சமணத் துறவி அகளங்கர் சமயவாதம் செய்து பௌத்தர்களை காஞ்சியை விட்டு விரட்டிய நிகழ்ச்சி பல ஆண்டுகள் கழித்து நடந்திருந்ததால் தற்போதைக்கு புத்த மதம் காஞ்சியில் செழிப்பாகவே இருந்தது. பௌத்தர்களின் பிரதான விஹாரமான ராஜ விகாரம் புத்தர் சேரியில் இருந்தது. அங்கே அசோகர் காலத்தில் கட்டப்பட்ட நூறடி உயர பௌத்த

---

* பக்கம் 6 செங்கை மாவட்ட வரலாற்று கருத்தரங்கு. பதிப்பு. டாக்டர் இரா.நாகசாமி.

** பக்கம் 11-115 பௌத்தமும் தமிழும். - மயிலை, சீனி.வெங்கடசாமி.

ஸ்தூபியும் இருந்தது. தாராதேவி கோயிலும் நன்கு பராமரிக்கப்பட்டு வந்தது.

இந்த விவரங்கள் எதுவும் தெரியாத நிலையில் தாராதேவி ஆலயத்திற்குப் பின்னால் இருந்த சோலைக்குச் சென்றான் உதயசந்திரன். சோலை இருந்த காரணமாகவே சோலைத் தெரு என்று வழங்கப்பட்ட அந்த வீதியில் இருந்த சோலை பிரம்மாண்டமானதாக இருந்தது. தாராதேவி ஆலயத்தைச் சேர்ந்தவர்கள் பராமரித்து வந்த காரணத்தால் அது மலர்வனமாகவே விளங்கியது. எங்கேயும் கண்டறியாத மலர்கள் அங்கே அழகழகாகப் பூத்துக் கிடந்ததைக் கண்ட உதய சந்திரனுக்கு இதமாக இருந்தது.

சோலைக்குள் சென்றதும் காற்றும் மலர் மணமும் சேர்ந்து அவனைச் சொக்க வைத்தன. அவற்றைக் காட்டிலும் ஆறு மடங்கு அதிகமாக சொக்க வைக்க வைக்க முடியும் என்று சொல்வதைப் போல் சொர்ணசிலையாக நின்றிருந்த பௌர்ணமி ''வாருங்கள். எப்படி இருக்கிறது. இந்த இடம்?'' என்றுத் தேனூறும் சொற்களால் கேட்டாள்.

''வீதியின் ஆரம்பத்தில் இருந்த இல்லத்தில் கொடுமையான காட்சியைக் கண்டேன் பௌர்ணமி. அப்பாவிப் பெண்ணொருத்தியை மனித மிருகம் ஒன்று சாட்டையால் அடித்துக் கொண்டிருந்தது'' என்றான் உதயசந்திரன்.

''இடத்திற்கு ஏற்ற பேச்சு உங்களுக்கு வராதா? இங்கு வந்த பிறகு அங்கு நடந்தது பற்றிய பேச்சு எதற்கு?'' என்று கேட்டாள் பௌர்ணமி அவனது பேச்சு பிடிக்காததால்.

''இதென்ன நீ இப்படிப் பேசுகிறாய்? பருவப்பெண் ஒருத்தி அல்லல்படுவது உனக்கு வேதனையாக இல்லையா?'' என்று கேட்டான் உதயசந்திரன்.

''அப்படி யார் சொன்னது? அதோடு அந்த இல்லத்து கொடுமையைப் பற்றி நாம் பேசுவதால் என்ன பயன் கிடைக்கப் போகிறது? அவலங்களும் கொடுமைகளும் ஆங்காங்கே நடக்காமலில்லை. பஞ்சம் இல்லாத பகுதிகளில் கூட அவை நடக்கின்றன. அதையெல்லாம் எவ்வளவு தூரத்திற்குத் தூக்கிக் கொண்டு சுமக்கப் போகிறீர்கள்? கோயிலுக்குள் வந்தால் பேச்சானது பக்தியைப் பற்றியும் பகவானைப் பற்றியும் இருக்க வேண்டும். போர்க்களத்திற்கு வந்தால் பேச்சானது படையைப் பற்றியும் போரைப் பற்றியும் இருக்க வேண்டும். அவலம்

நடந்துவிட்ட இடத்தில் பேச்சானது சோகத்தைப் பற்றியும் அதன் சேதாரத்தைப் பற்றியும் இருக்க வேண்டும். சோலைக்குள் வந்துவிட்டபின் - அதுவும் என்னை முன்னால் வைத்துக் கொண்டு நீங்கள் பேசக் கூடியது இதுதானா?'' என்று விடுவிடுவென்று கேட்டாள் பௌர்ணமி.

அவளது சொல் வீச்சானது மலர்கள் வீசப்படுவதுபோல் இருந்தது.

உதயசந்திரன் சிரித்தான்.

''எதற்காகச் சிரிக்கிறீர்கள்?'' - கேட்டாள் பௌர்ணமி.

''சோலையில் தானே சிரிக்க முடியும்? கொடுமை நடந்த வீட்டில் முடியாதல்லவா?''

''அது சரி. அதற்காக காரணமில்லாமல் சிரிக்க வேண்டுமா என்ன?''

''அழுவதற்கும் அச்சப்படுவதற்கும் காரணம் அவசியம் பௌர்ணமி. சிரிப்பதற்கு எந்த காரணமும் வேண்டியதில்லை.''

''காரணமே இல்லாமல் சிரித்தால் தவறாக நினைப்பார்கள்.''

''நீ அப்படித்தான் நினைக்கிறாயா?''

இதைக் கேட்டதும் பௌர்ணமிக்குச் சிரிப்பு வந்துவிட்டது.

''பௌர்ணமி.''

''என்ன?''

''இந்தச் சோலை மிகவும் அழகாக இருக்கிறது.''

''ம்.''

''இங்கே உள்ள பலவித வண்ண மலர்களும் ரம்மியமாக இருக்கின்றன.''

''ம்.''

''இந்தப் பூஞ்செடிகளில் கூடிக் குலவும் சின்னப் பறவைகள்கூட அழகாகத்தான் இருக்கின்றன. ஆனாலும்...''

''ஆனாலும்?''

''இவையெல்லாம் உன் ஒருத்தியின் அழகிற்கு ஈடாகுமா?''

''நான் ஒன்றைச் சொல்லட்டுமா?''

''சொல்.''

''உலகத்தில் எங்கே போனாலும் சரி இந்த ஆண்கள் எல்லோரும் ஒரே மாதிரியாகத்தான் இருக்கிறார்கள்.''

''எப்படிச் சொல்கிறாய்?''

''பெண்ணின் அழகைப் புகழும் விவகாரத்தில் எல்லா ஆண்களும் இப்படித்தான் இருக்கிறார்கள்.''

''நானும் அப்படித்தான் என்று சொல்கிறாயா?''

''பின்? நீங்களும் அப்படித்தானே நடந்து கொள்கிறீர்கள்?''

''பௌர்ணமி''

''என்ன?''

''நீ ஒரு பேயைப் போல இருக்கிறாய். உன் முகம் குரங்கைப் போல இருக்கிறது. உதடுகள் வேகவைத்த கிழங்கைப் போல் இருக்கிறது...உன்...''

''போதும்.''

''ஏன் நிறுத்திவிட்டாய்? நான் சொல்வதை சகிக்க முடியவில்லையா உன்னால்?''

''நான் பேயைப் போலவா இருக்கிறேன்?''

''சொன்னால் கோபம் வருகிறதல்லவா?''

''அதற்காகப் பொய் சொல்ல வேண்டுமா?''

''முதலில் சொன்னேனே அதுவும் பொய்யா? நீ அழகாக இருப்பது உண்மையில்லையா? பௌர்ணமி நான் ஒன்றைச் சொல்லட்டுமா?''

''சொல்லுங்கள்.''

''இந்த உலகத்தில் மட்டுமல்ல தேவலோகத்தில் கூட பெண்கள் எல்லோரும் ஒரே மாதிரியாகத்தான் இருக்கிறார்கள். தங்கள் அழகை ஆண்கள் புகழ்ந்து கொண்டே இருக்க வேண்டும் என்று விரும்பாத பெண்கள் எங்கேயும் இல்லை. நீயும் அப்படித்தான். ஆனால் விரும்பாதது போல் பாசாங்கு செய்வதுதான் ஏன் என்று தெரியவில்லை. ஒருவேளை இதுவும் பெண்களின் இயல்புதானோ?''

''பெண்களைப் பற்றி நன்றாகத்தான் அறிந்து வைத்திருக் கிறீர்கள். உங்களைப் போய் துறவியாக்க முயன்றார்களே?''

''அவர்கள் என்னைத் துறவியாக்கியிருந்தால் வேஷம் தான் மாறியிருக்குமே தவிர குணம் மாறியிருக்காது. இயல்பிற்கும் விருப்பத்திற்கும் மாறாக ஒருவன் துறவியானாலும் ஆக்கப் பட்டாலும் அவன் போலித்துறவியாகத்தான் வாழ்வான். துறப்பது என்பது மிகவும் அரிய குணம். அதற்கென்றே

அவதரித்தவர்களால்தான் அப்படி இருக்க முடியும். அதைவிடு போலித்துறவியாகாமல் நீ தான் தடுத்து விட்டாயா?'' என்று சொன்ன உதயசந்திரன், ''உன்னை ஒன்று கேட்க வேண்டும் என்றிருந்தேன் பௌர்ணமி. காக்கை மடு விஹாரத்தில் உன் வளர்ப்புத் தந்தை அகளங்கரிடம் நான் துறவறம் மேற்கொள்ள விரும்பவில்லை என்று சொன்ன போது அவர் ஒரு நிபந்தனை விதித்தார். அது என்ன தெரியுமா உனக்கு?'' என்றான்.

''என்ன சொன்னார்?''

''உன்னைத் துறவறத்திலிருந்து விடுவிக்க வேண்டு மென்றால் பௌர்ணமியைத் துறக்க வேண்டும் என்றார். நான் துறவறத்தை ஏற்காததற்கும் உனக்கும் என்ன சம்பந்தம்? உன்னை எதற்காக நான் துறக்க வேண்டும்? உன் வளர்ப்புத் தந்தையின் நிபந்தனைக்கு என்ன அர்த்தம்?''

''எனக்கெப்படி அது தெரியும்?''

உதயசந்திரன் சற்று மௌனமாக இருந்துவிட்டு, ''வளர்ப்பு தந்தையாக இருந்து கொண்டு உன் மனதையும் அவர் அறியவில்லை. உன் விருப்பத்தையும் தெரிந்து கொள்ள வில்லை. விசித்திரமாக இருக்கிறது'' என்றான்.

பிறகு அவனே தொடர்ந்து, ''நான் விஹாரத்திலிருந்து தப்பியிருக்கிறேன். அகளங்கர் என்னைத் தேட மாட்டாரா?'' என்று கேட்டான்.

''தேடலாம். இல்லை என்று எப்படிச் சொல்ல முடியும்?''

''தேடுவது போல எதுவும் தெரியவில்லையே?''

''வேடன் வீசும் வலை விலங்குகளுக்குத் தெரிவதில்லை.''

''வலை வீசிக் கொண்டிருப்பார்கள் என்கிறாயா? வீசட்டும். வீசட்டும். என்னை யார் என்று அவர்களுக்குக் காட்டுகிறேன்'' என்று சொல்லி இடை பகுதியில் கையை வைத்தான் உதயசந்திரன்.

இடைக்கச்சையில் ஏதோ உறுத்தியது. வெளியே எடுத்தான். குறுவாள்.

''இது என்னுடையதில்லையே! எப்படி வந்தது?'' என்று கேட்டான்.

''நான்தான் உங்கள் ஆடையில் மறைத்து வைத்தேன். வீரர்கள் வாளில்லாமல் இருக்கக் கூடாதல்லவா?'' என்றாள் பௌர்ணமி.

''ஆரம்பத்திலிருந்தே என் விஷயத்தில் ஒன்வொன்றையும் கவனித்துத்தான் செய்து வருகிறாய் பௌர்ணமி. உனக்கு நன்றி சொன்னால் அது அற்பமானதாகத்தான் இருக்கும்.''

''அதைவிடுங்கள். உங்களை நான் இங்கே ஏன் வரச் சொன்னேன் தெரியுமா?''

''சொல் பௌர்ணமி. எதற்காக என்னை வரச்சொன்னாய்?''

''உங்கள் உத்தேசம் என்ன? திட்டம் என்ன?''

''நீ கேட்பது புரியவில்லை பௌர்ணமி.''

''நாகைப்பட்டிணத்திலிருந்து எதற்காக வந்தீர்கள்?''

''எனக்கு எந்த காரணமும் இல்லை. தந்தை கொடுத்த ஓலையை எடுத்துக்கொண்டு வந்தேன். அது விபரீத ஓலை என்பது விஹாரத்தில் தான் தெரிந்தது.''

''விஹாரத்தை விட்டு தப்பினீர்களே அது ஏன்''

சொன்னான் உதயசந்திரன்.

''விஹாரத்தை விட்டு தப்பிய நீங்கள் தந்தையைச் சந்தித்தீர்களா?''

''இல்லை.''

''ஏன்?''

விவரத்தைச் சொன்னான் உதயசந்திரன்.

''ஆரம்பத்திலிருந்து எதுவுமே நீங்கள் எதிர்பார்த்த மாதிரி நடக்கவில்லை. வீரராகிய நீங்கள் துறவியாகவிருந்த அதிலிருந்து தப்பி மந்திரவாதியாக காஞ்சியில் நுழைந்து மகாராணியாருக்கு மாந்தரீகம் செய்திருக்கிறீர்கள். அதிலும் முற்று பெறாமல் தப்பி பாண்டவ தூதப் பெருமாளிடம் தஞ்சம் அடைந்தீர்கள். எல்லாம் போகட்டும். இனி நீங்கள் செய்யப் போவது என்ன? செல்லப் போவது எங்கே?''

''நான் யோசிக்க வேண்டியதை நீ சொல்லிவிட்டாய் பௌர்ணமி. ஆனால் என்ன செய்வது என்று தோன்றவில்லை.''

''நாகைப்பட்டிணத்திற்கே திரும்பிப் போய்விட வேண்டியதுதானே?''

''போக முடியுமா என்று தெரியவில்லை. போக விடுவார்களா என்றும் தெரியவில்லை. அதோடு...''

''அதோடு என்ன?''

''நீ இருக்கிறாய்.''

''அதனால் என்ன?''

''உன்னை விட்டுவிட்டு நான் எப்படிப் போக முடியும்?''

''ஏன் முடியாதா?''

''உன்னால் என்னைத் துறக்க முடியும் என்றால் என்னால் உன்னை மறக்க முடியும்.''

இதற்கு பதில் சொல்ல முடியாமல் அவள் மௌனமாய் இருந்தாள். நெஞ்சுக்குள் நிலவிக் கொண்டிருந்த மௌன ராகத்தின் சோக எதிரொலி அவளை வாட்டியது.

''எங்கோ இருந்த நீங்கள் எதற்காக காக்கை மடுவிற்கு வந்தீர்கள்? எங்கிருந்தோ வந்த உங்களை நான் எதற்காகச் சந்திக்க வேண்டும்? சந்தித்ததோடு நில்லாமல் உங்களிடம் ஏன் சிந்தையை பறிகொடுக்க வேண்டும்? விஹாரத்தை விட்டு நீங்கள் போய்விட்டீர்கள் என்பதை அறிந்ததும் அந்த இடம் ஏன் எனக்குச் சூன்யமாகத் தெரிய வேண்டும்? வளர்த்த இடம், வளர்ப்புத் தந்தை ஆகியவற்றை உதாசீனப்படுத்திவிட்டு எதற்காகப் பதறிக் கொண்டு காஞ்சிக்கு வர வேண்டும்? எதற்காக இப்போது நான் தவிக்க வேண்டும்?'' என்று கேட்டாள். அவளது கண்கள் சற்றே கலங்கியிருந்தன.

''கலங்காதே பௌர்ணமி. இதுவரை எனக்கு எந்த உத்தேசமும் இல்லை. திட்டமும் இல்லை. இப்போது விளங்கிவிட்டது. இனி உன்னை எல்லா சிக்கல்களிலும் விடுவித்து உன்னை அடைவது தான் என் திட்டம்'' என்றான்.

அவள் ஏதோ பேசமுற்பட்டு எதையோ பார்த்துவிட்டு மிரண்டாள்.

''என்ன ஆயிற்று?'' என்று கேட்டுவிட்டுத் திரும்பினான் உதயசந்திரன்.

அங்கே பல்லவ பேரமைச்சர் நின்றிருந்தார்.

அவருக்குப் பின்னால் உருவிய வாளுடன் நான்கு வீரர்கள் நின்றிருந்தார்கள்.

☆☆☆



13 கூரங்கமும் சொர்க்கமும்

''மந்திரவாதி! இங்கிருந்து நீ தப்ப முடியாது. எந்தவிதமான தந்திரமும் பலிக்காது. வீரர்கள் எனக்குப் பின்னால் மட்டும் இல்லை. உனக்குப் பின்னாலும் இருக்கிறார்கள. சந்தேக மாயிருந்தால் திரும்பிப் பார்'' என்று கணீரென்ற குரலில் சொன்னார் அமைச்சர்.

உதயசந்திரன் திரும்பவில்லை. அவனது விரல்கள் நெற்றியைத் தொட்டுக் கொண்டிருந்தன.

''என்ன யோசிக்கிறாய்? அரண்மனையில் விட்டுவிட்டு இங்கே உன்னை எப்படிப் பிடித்தேன் என்று நினைக்கிறாயா? அதில் தான் சூட்சுமம் இருக்கிறது'' என்றார் அமைச்சர்.

''என்ன சூட்சுமம்?'' நெற்றியிலிருந்து விரல்களை எடுக்காமலேயே கேட்டான் உதயசந்திரன். அவனுக்குள் சிந்தனை ஓடிக் கொண்டிருந்தது.

''தப்புபவர்கள் எல்லோரையும் துரத்திப் பிடிக்க முடியாது. சிலரை தப்பவிட்டுவிட்டு வலையை விரித்தால் அவர்கள் தாமாக வந்து சிக்குவார்கள். உனக்கேற்ற வலை பௌர்ணமி தான் என்பதை அறிந்தேன். உனக்கு முன்பாகவே காஞ்சிக்கு வரவழைத்தேன். வலையைத் தேடி மருந்தாகிய நீ வந்து விட்டாய்'' என்றார் அமைச்சர்.

''நான் உங்கள் மாளிகைக்கு வந்தபோதே என்னைப் பிடித்திருக்கலாமே?''

''உன் அயோக்கியத்தனம் எவ்வளவு துரம் போகிறதென்று பார்ப்பதற்கு கொஞ்சம் விட்டுப் பிடித்தேன்.''

''அமைச்சர் பெருமானே! தங்களிடம் சிக்கிக் கொள்ள இப்போது நான் விருப்பவில்லை.''

''உன் விருப்பத்தை அங்கீகரிக்க நான் வரவில்லை. பேசாமல் சரணடைந்துவிடு.''

உதயசந்திரன் திடீரென இடையில் இருந்த குறுவாளை எடுத்து பௌர்ணமியின் கழுத்தில் வைத்து, ''அமைச்சர் பெருமானே! என்னைக் கைது செய்யும் எண்ணத்தை இப்போது விட்டுவிடுங்கள். எனது வேலைகள் முடிந்ததும் நானாக வந்து உங்களிடம் சரணடைகிறேன்.''

''மந்திரவாதி, நீ யார் என்பது எனக்கு தெரியும். பௌர்ணமி உன் காதலி என்பதும் தெரியும். அவளை உன்னால் கொல்ல முடியாது வீண் மிரட்டலை கைவிடு.''

''பௌர்ணமி என் காதலி அல்ல. எப்போது அவள் உங்கள் வலையாக மாறினாளோ அப்போதே அவள் உங்கள் ஆயுதங்களில் ஒன்றாகிவிட்டாள். அவளை நான் விரும்பவில்லை. வெறுக்கிறேன். ஆகவே வீண் மிரட்டல் விடுவதாக எண்ணி யாரும் என்னை நெருங்க வேண்டாம். யாராவது ஒருவர் அசைந்தாலும் இவளது நெஞ்சில் குறுவாள் இறங்கிவிடும். நீங்களும் உங்களுக்குப் பின்பும் எனக்குப் பின்பும் இருக்கும் வீரர்களும் வாட்களைக் கீழே போட்டுவிட்டு பின்னால் செல்லுங்கள். ம். சீக்கிரம்.''

அவர்கள் ஆயுதங்களைப் போட்டுவிட்டு பின் வாங்கிய அதேநேரத்தில் குறுவாளை அகற்றிவிட்டு பௌர்ணமியின் கையைப் பிடித்துக் கொண்டு சோலைக்குள் ஓடினான் உதயசந்திரன்.

அப்போது மாலை நேரம் மயங்கிக் கொண்டிருந்ததால் வானத்தை மூட முற்படுவதுபோல் இருள் போர்வை உருவாகத் தொடங்கியது. அதோடு சோலையானது அடர்ந்தப் பூஞ்செடிகளால் நிறைந்த மலர்வனமாகவே இருந்தபடியால் மறைந்து ஓடுவதற்கு அவர்களுக்கு ஏதுவாக இருந்தது. தன்னைத் துரத்திக் கொண்டு சோலைக்குள் வீரர்கள் குரல் கொடுத்தபடி ஓடி வருவது தெரிந்தாலும் அதைப் பற்றிக் கவலைப்படாமல் சோலைக்குள்ளாகவே ஓடினான் உதயசந்திரன். ஓரிடத்தில் தற்செயலாகத் தரையில் ஏதோ ஒன்று காலில் பட்டு அவனைத் தள்ளி விடவே பௌர்ணமியை அணைத்தபடி கீழே விழுந்தான். விழுந்த இடம் புல்வெளியாக இருந்ததால் மெத்தையில் விழுந்த மாதிரியே இருந்தது. தன்னை இடறி விட்ட இரும்பு முனையைப் பிடித்து ஆத்திரத்துடன் இழுத்தான். எதிர்பாராத விதமாக அந்த இரும்பு முனை நகர்ந்து இடம்விட்டது. அந்த இடமானது இரண்டு பேர் நுழையும் அளவிற்கு அகலமானதாக இருந்ததால் அதை உற்றுப் பார்த்தான். அந்தத் துவாரம் சுரங்கப் பாதையின் வாயிலைப்

போலத் தோன்றியது. எதுவானாலும் அப்போதைக்கு அந்த துவாரத்தை விட பாதுகாப்பான மறைவிடம் வேறு இருக்க முடியாது என்று கருதியவனாய், ''வா பௌர்ணமி'' என்று கூறி அந்த துவாரத்திற்குள் காலை வைத்தான். அவன் எதிர்பார்த்தபடியே உள்ளே படிக்கட்டுகள் இருந்தன. எனவே முதலில் அவன் இறங்கி பௌர்ணமியை பிறகு இறக்கினான். சுரங்கத்தின் வாயிலை மூடுவதற்கு முயன்று சுவற்றுப்பகுதியைத் தடவியபோது விசையொன்று கையில் பட்டது. அதை ஆட்டியும் திருகியும் பார்த்தான். பயன் கிடைத்தது. சுரங்கத்தின் வாயில் மூடிக் கொண்டது.

வாயில் மூடிக் கொண்டதால் உள்ளே காரிருள் சூழ்ந்தது.

''பயப்படாமல் வா பௌர்ணமி. நம்மைத் துரத்தும் காவலர்களை விட இந்த இருளொன்றும் ஆபத்தானதல்ல'' என்று கூறி அவளது கரத்தைப் பலமாகப் பிடித்துக் கொண்டு கீழே இறங்கினான் உதயசந்திரன்.

பத்துப்படிகள் இறங்கியதும் நடைபாதை வந்தது. அது மேலும் இருட்டாக இருந்தது. சிறிது நேரம் வரை கண்களை மூடிக் கொண்ட உதயசந்திரன் அவளையும் மூடிக் கொள்ளும்படிச் சொன்னான்.

பிறகு கண்விழித்தபோது அவர்களால் இருளை ஓரளவிற்குக் கூர்ந்து பார்த்து நடக்கவும் முடிந்தது.

''இந்தச் சுரங்கப்பாதை எங்கே போய் முடியும்?'' என்று கேட்டாள் பௌர்ணமி.

''சொர்க்கத்திற்குப் போனாலும் சரி. நரகத்திற்குப் போனாலும் சரி. அதைப்பற்றி கவலை இல்லை'' என்று சொன்ன உதயசந்திரன், ''பௌர்ணமி! அமைச்சர் கூறியது உண்மையா? உன்னையா என்னைப் பிடிக்க வலையாகப் பயன்படுத்தினார்?'' என்று கேட்டான்.

''காக்கை மடுவிலிருந்து நானாகத்தான் புறப்பட்டேன். ஆனால் காஞ்சிக்குள் நுழைந்ததுமே என்னை அமைச்சரிடம் கொண்டு போனார்கள். அவர் தான் என்னை வலையாக்கினார். உங்களைப் பிடிக்க சாமர்த்தியமாகச் செயல்படும்படிச் சொன்னார்.''

''என்னிடம் இதை ஏன் சொல்லவில்லை நீ?''

''அரச கட்டளை என்பதால் சொல்வதற்கு பயந்தேன். கடைசியில் இந்த சோலைக்கு உங்களை வரவழைப்பதாக

அமைச்சரிடம் சொல்லிவிட்டு உங்களையும் வரச் சொன்னேன். இங்கே வந்து உங்களுடன் பேசிய பிறகு தான் என் மனம் என்னை வாட்டியது. அமைச்சரிடம் சிக்கிவிட்டால் உங்கள் கதி என்னாகுமோ என்று கலங்கிய நான் உங்களிடம் வலையைப் பற்றிச் சொல்ல வாயெடுத்தேன். அமைச்சர் வந்துவிட்டதால் சொல்ல முடியவில்லை. என்னை மன்னித்துவிடுங்கள்.''

''நீ என்னிடம் சொல்லாமல் விட்டதால் என்ன ஆகி விட்டது இப்போது? உன்னையும் அறியாமல் நீ செய்த உதவியால் தான் நாமிப்போது தப்பியிருக்கிறோம்.''

''என்ன சொல்கிறீர்கள்?''

''என் இடைக்கச்சையில் நீ குறுவாளைச் செருகி வைத்ததால் தானே அதைப் பயன்படுத்தி தப்பினோம்?'' என்று சொன்ன உதயசந்திரன் ''நாம் இருவருமே பெயரளவில் சந்திரனாக இருந்தாலும் இந்த இருளை அகற்ற முடியவில்லை பார்த்தாயா? இந்த நிலை உனக்கு கவலையை அளிக்கிறதா பௌர்ணமி?'' என்று கேட்டான்.

''என் கவலையை அகற்றும் மருந்து நீங்கள்தான். எனக்கு கவலை எப்படி வரும்?'' என்றாள் பௌர்ணமி.

''எனக்கும் அப்படித்தான் பௌர்ணமி. எனது மகிழ்ச்சி எது என்றால் அது நீ தான். என் சுறுசுறுப்பு எது என்றால் அது நீ தான். என் விழிப்புணர்வும் நீ. வீரமும் நீ. நீ இருக்கும் இடமே எனக்கு சொர்க்கம். என் வெற்றி உன் அண்மையினால்தான்'' என்று சொன்ன உதயசந்திரன் உணர்ச்சி மிகுதியால் அவளை இறுக அணைத்தான்.

அந்த நிலையில் பௌர்ணமிக்கும் அது தேவையாக இருந்ததால் அவனது அணைப்பால் ஆனந்தத்தை உணர்ந்து அவனோடு இழைந்தாள்.

அபாயங்களை மறந்து அவர்கள் சிறிது நேரம் வரை ஆனந்த அணைப்பில் ஆறுதலடைந்திருந்தார்கள்.

ஓரிருமுறை அவனது உதடுகள் அவளது உதடுகளைத் தடவின. கைவிரல்கள் சற்றே நகர்ந்தன. அத்து மீறினால் அவள் அடங்கியே இருப்பாள் என்பதும் அவனுக்குப் புரிந்தது.

ஆனால், ''பாவம். என்னை நம்பி ஆறுதலாக என் அணைப்பில் இருக்கிறாள். இந்த பலவீனத்தைப் பயன்படுத்த நினைப்பது தகாது'' என்று சொல்லிக் கொண்ட அவன், ''பௌர்ணமி'' என்று மெல்ல அழைத்தான்.

அவள், ''ம்'' என்றாள் பலவீனமான குரலில்.

''எல்லாவற்றையும் மறந்துவிட்டாயா என்ன?''

''ஆமாம்.''

''ஏன்?''

''எதுவானால் என்ன? எனக்கு இது போதும்.''

''வேண்டாம் பௌர்ணமி. நான் கொந்தளிப்பில் இருக்கிறேன். என்னையும் உன்னைப்போல் பலவீனனாக்கி விடாதே.''

''உங்களுக்கு நினைவிருக்கிறதா?''

''எது?''

''உங்களைச் சுற்றி விஹார கூடத்தில் ஐந்து பெண்கள் இருந்து கொண்டு மயக்கினார்களே அப்போது உங்களுக்கு வரவில்லையா இந்தக் கொந்தளிப்பு?''

''உண்மையாகவே வரவில்லை பௌர்ணமி. இத்தனைக்கும் அவர்கள் அத்து மீறத் தயாராகி பேசவும் செய்தார்கள். நானோ அவர்களை வெறுத்தேன். ஒருத்தியின் எலும்பைக் கூட முறித்துவிட்டேன்.''

''என்னிடம் மட்டும் ஏன்...?''

''பௌர்ணமி.''

''ம்.''

''நீ அவர்களல்ல. நீ பவித்திரமானவள் என்று மனம் சொல்கிறது. அதுதான் காரணம்'' என்று சொல்லி தனது அணைப்பிலிருந்து அவளை விடுவித்தான் உதயசந்திரன்.

''உங்களையும் இப்படித்தான் அன்றைக்கே புரிந்து கொண்டேன் நான். அப்போதே நான் உங்களுக்குடையவள் என்று தீர்மானித்தேன். அதனால் தான் உங்களைப் பிடிக்க என்னை அமைச்சர் வலையாகப் பயன்படுத்தியபோது விருப்பத்தோடு ஏற்றேன்'' என்றாள் பௌர்ணமி.

அவள் குரலில் மகிழ்ச்சி இருந்தது.

பிறகு இருவரும் மகிழ்ச்சியோடு நடந்தார்கள்.

ஒரு நாழிகைப் பொழுது கடந்தும் நடைப்பாதை நீண்டதே தவிர முடியுமிடம் எதிர்ப்படவில்லை.

''சோர்வாக இருக்கிறதா பௌர்ணமி?''

''இல்லை.''

''பசியாக இருக்கிறதா?''

''இல்லை.''

''கஷ்டமாக இருக்கிறதா?''

''இல்லை.''

''வேறு எப்படித்தான் இருக்கிறது?''

''ஆனந்தமாக இருக்கிறது.''

''ஏதாவது ஓரிடத்தில் சுரங்கம் முடிந்துவிடும் பௌர்ணமி.''

''அதுதான் என் கவலை.''

''இந்தச் சுரங்கத்திலேயே இருந்துவிட முடியுமா பௌர்ணமி? மயக்கத்திலிருந்து விடுபடு'' என்று சொன்ன உதயசந்திரன் ''நான் சொல்வதைக் கேட்பாயா?'' என்றான்.

''சொல்லுங்கள்.''

''இந்தச் சுரங்கம் முடிவடையும் இடத்திற்கு வந்த பிறகு நீ அர்ச்சகர் இல்லத்திற்குப் போய்விடு. நான் சிக்கல்களைத் தீர்த்துவிட்டு உன் இருப்பிடத்திற்கு வருகிறேன்.''

''சரி.''

அதற்குப்பிறகு இருவரும் எதுவும் பேசாமல் நடந்தார்கள்.

மேலும் அரை நாழிகைப் பொழுது நடந்தபிறகு மேலே ஏறுவதற்கான படிகள் தென்பட்டன.

அப்படிகளில் ஏறிய உதயசந்திரன், ''நான் சொன்னது ஞாபகமிருக்கட்டும்'' என்று சொல்லிவிட்டு அவற்றைத் தடவி விசையைப் பற்றிச் சுழற்றினான்.

அரங்கத்தின் மூடி விலகியது.

மேலே வெளிச்சமாகவும் இருந்தது.

தெம்புடன் ஏறி வெளியே வந்தான் உதயசந்திரன். பௌர்ணமியும் வெளியே வந்தாள்.

''என் கணக்கு தவறுவதேயில்லை மந்திரவாதி'' என்ற குரல் அவனை வரவேற்றது.

வரவேற்றவர் அமைச்சர்.

வீரர்கள் பாய்ந்து வந்து உதயசந்திரனைப் பிடித்துக் கொண்டார்கள். குறுவாளை அகற்றவும் செய்தார்கள்.

அமைச்சர் இரு வீரர்களை அழைத்தார் பௌர்ணமியைப் பார்த்து, ''இவர்கள் பாதுகாப்புடன் நீ அர்ச்சகர் இல்லத்திற்குப் புறப்படு பௌர்ணமி'' என்றார்.

உதயசந்திரனின் விருப்பமும் அதுவாக இருந்ததால் அவனை ஒருமுறை நோக்கிவிட்டு புறப்பட்டாள் பௌர்ணமி.

உதயசந்திரனைப் பார்த்த அமைச்சர், ''என்ன பார்க்கிறாய் உதயசந்திரா? என் வலையில் சிக்கித் தப்பிய உன்னை எப்படிப் பிடித்தேன் என்று யோசிக்கிறாயா? சோலையில் அரை நாழிகை வரை தேடிய வீரர்கள் உங்கள் இருவரையும் காணவில்லை என்று சொன்னார்கள். சோலையை விட்டு நீ வெளியே போக முடியாது என்பது எனக்குத் தெரியும். அதோடு சோலைக்குள் சுரங்கம் ஒன்று இருப்பதும் தெரியும். அச்சுரங்கம் என் அறையுடன் தொடர்பு கொண்டது என்பதும் தெரிந்த விஷயமேயாதலால் வீரர்களை அழைத்துக் கொண்டு இங்கே வந்துவிட்டேன். நீயும் வந்துவிட்டாய்'' என்றார்.

''நான் சுரங்கப் பாதையில் முன்னேறி வராமல் வந்த வழியாகவே போயிருந்தால்?'' என்று கேட்டான் உதயசந்திரன்.

''சுரங்க வழியைக் கண்டுபிடித்து இறங்குபவர்கள் பெரும்பாலும் அது எங்கே முடிவடைகிறது என்பதை அறியும் ஆவலில் தான் இருப்பார்கள். பின்னோக்கித் திரும்புவதில்லை. ஒரு வேளை கூரறிவு கொண்டவனான நீ அவ்வாறு செய்திருந்தாலும் உன்னை வேறு வழியில் பிடித்திருப்பேன். என் தீர்மானத்தை மீறி யாரும் இதுவரை தப்பியதில்லை.''

அமைச்சர் கூறியதைக் கேட்டு வறண்ட சிரிப்பொன்றை வெளியிட்ட உதயசந்திரன், ''குற்றமேதும் புரியாத தனி மனிதனான என்னைப் பிடிப்பதற்கு இத்தனை அக்கறையும் தீவிரமும் காட்டும் பல்லவ அமைச்சர் பெருமான் இப்பல்லவக் கோநகரில் பட்டப்பகலில் பாண்டவ தூதுப் பெருமாள் ஆலயத்தில் அர்ச்சகரை ஆடவாட்டாமல் செய்து அங்கிருந்த ஆண்டவனின் அணிகலன்களை அபகரிக்க முயன்ற அநியாயக் கொள்ளையர்களைப் பிடிக்க முயற்சித்திருந்தால் பெருமையாக இருந்திருக்கும். இல்லாமை காரணமாக அடிமைகளாக விற்கப்பட்டு இருப்பவர்களை இல்லங்களில் அல்லப்டும் அபலைப் பெண்களைக் காப்பாற்றியிருந்தால் காருண்யமாக விளங்கியிருக்கும். நாநயம் இல்லாமல் பேசும் பணக்கார பச்சோந்திகளுக்குப் பாடம் புகட்டியிருந்தால் பேசும்படியும்

பாராட்டும்படியும் திகழ்ந்திருக்கும். எனக்காக தாங்கள் நேரத்தை வீணாக்கியிருக்க வேண்டுமா?'' என்று கேட்டான்.

''காஞ்சிக்கு வந்த ஒரே நாளில் இங்குள்ள நிலைமைகளைப் புரிந்து கொண்டிருப்பதற்காக உன்னை பாராட்டுகிறேன். அதேசமயம் இவ்வளவு விஷயங்களைப் பேசுகிற நீ ஆபத்தான ஒற்றனாகவும் இருக்கலாம் அல்லவா? உன்னைப் பிடிப்பது இன்றியமையாதது அல்லவா?'' என்று கேட்டார் பேரமைச்சரான வல்லபர்.

''வண்ணத்திற்கும் சுண்ணத்திற்கும் வித்தியாசம் தெரியாத தங்களைப் பார்த்தால் எனக்கு வருத்தமாக இருக்கிறது ஐயா.''

''வண்ணத்திற்கும் சுண்ணத்திற்குமான வித்தியாசம் பார்த்த மாத்திரத்தில் தெரிந்துவிடுவதில்லை. சோதித்துப் பார்த்தால்தான் தெரிகிறது'' என்று சொன்ன அமைச்சர், ''உன்னிடம் பேசிக் கொண்டிருப்பதுதான் வீண் வேலை. உன்னைப் பேசவைப்பது அபாயமும்கூட'' என்று சொல்லிவிட்டு வீரர்களைப் பார்த்து, ''இவனை இன்றிரவு தனியறையில் அடைத்து வைத்துப் பூட்டுங்கள். அறையைச் சுற்றிக் காவலிருங்கள்'' என்றார்.

அதோடு, ''அறையில் ஏதாவது சுரங்கம் இருக்கிறதா என்று ஒருமுறை சோதித்து விடுங்கள்'' என்று கூறிவிட்டு அகன்றார்.

முரண்டு பிடிக்கும் நிலையிலோ தப்பும் நிலையிலோ உதயசந்திரன் இல்லாததால் காவலர்களோடு அமைதியாக நடந்தான்.

அவன் அடைக்கப்பட்ட அறை சிறை அறையாக இல்லாமல் சிறப்பான அறையாக சகல வசதிகளுடனும் இருந்தது. சுவையான உணவும் தரப்பட்டது.

சிறைப்பட்டிருக்கும் கூண்டு தங்கக் கூண்டு என்பதால் அதில் அடைபடும் யாரும் ஆனந்தப்படுவதில்லை.

அந்த நிலையில்தான் இருந்தான் உதயசந்திரன்.

சிக்கல்களே தொடர்ந்து வந்து கொண்டிருந்ததைக் கண்ட உதயசந்திரன், ''தான் புறப்பட்ட வேளை சரியில்லை. ஏதோ ஒரு யமகாதகப் பூனை தான் குறுக்கே வந்திருக்க வேண்டும்'' என்று வராத பூனையின் மீது கடிந்து கொண்டான்.

அமைச்சர் இனி என்னவெல்லாம் செய்வாரோ என்பது புதிராக இருந்தாலும் அதைப் பற்றியெல்லாம் கவலைப் படுவதில்

ஒரு பயனும் இல்லை என்பதை உணர்ந்த அவன் உறங்க முற்பட்டான்.

''சீக்கிரமாக உறங்குங்கள். கனவில் நான் வர வேண்டும்'' என்று பௌர்ணமி சொல்வது போல் இருந்தது.

உறங்கினான் உதயசந்திரன்.

பொழுது விடிந்ததும் காவலர்கள் அவனது தேவைகளைப் பூர்த்தி செய்ததோடு மட்டுமின்றி புத்தாடைகளையும் சத்தான உணவுகளையும் கொடுத்தார்கள். நீண்ட வாள் ஒன்றைக் கொடுத்து இடுப்பில் அணியும்படிச் சொன்னார்கள்.

அதற்கான காரணம் அவனுக்குப் புரியவில்லை.

ஒருவேளை இவையெல்லாம் பலியாட்டிற்கு நடக்கும் விசேஷங்களைப் போன்றவைகளாக இருக்குமோ என்று நினைத்தான்.

''புறப்படுங்கள்'' என்றார்கள் காவலர்கள்.

''எங்கே?'' என்று கேட்டான் உதயசந்திரன்.

''அது போனதும் தெரிந்துவிடும்.''

'தொண்டை மண்டலக்காரர்கள் இடக்கானவர்கள்தான் சந்தேகமே இல்லை' என்று உள்ளுக்குள் நினைத்துக் கொண்ட அவன் மேற்கொண்டு எதுவும் பேசவில்லை.

காவலர்கள் அரண்மனைப் பகுதியிலேயே அழைத்துச் சென்றார்கள்.

''சிறிது நேரத்தில் மணியோசை எழும். கதவு திறக்கும். கைகளை கூப்பி வணங்கிய நிலையிலேயே உள்ளே செல்'' என்றனர் காவலர்கள்.

மணி ஒலித்தது.

கதவு திறந்தது.

கைகளைக் கூப்பிய நிலையில் உள்ளே நுழைந்தான் உதயசந்திரன்.

அங்கே அவன் கண்ட நபர் அவனை பேராச்சரியப்பட வைத்தார்.

புல்லரித்துப் போனான் உதயசந்திரன்.

★★★



14 ராஜசிம்மன்

பல்லவர் வீரத்தையும் பேராண்மையையும் பாரெலாம் உணர்த்தி வாதாபி கொண்டான் என்ற வீரவிருதுப் பெயரைக் கொண்ட நரசிம்ம வர்மரின் பேரனும், கூரம் பட்டயம் கூவாத குறையாக வானளாவ விரிந்து போற்றப்பட்ட பரமேஸ்வர வர்மரின் புதல்வனும், ரணரசிகனான சாளுக்கிய விக்கிரமாதித்தனை பெருவள நல்லூரில் புறங்கண்டு ரணசயன் என்று பாராட்டப்பட்டவனும், களப்பிர மன்னனான கூற்றுவனை வென்று கூற்றுவனுக்குக் கூற்றுவன் என்று பொருள்படும்படி காலகாலன் என்று சிறப்பாக அழைக்கப் பட்டவனும், தனது மூதாதையர்களைப் போலவே சிற்பக் கலையில் சிறந்து விளங்கி காஞ்சியிலும் கடல் மல்லையிலும் கற்றளிகளை எழுப்பி கோயில் கட்டிடக்கலைக்கு முதலானவனாக விளங்கியவனும் இசைக் கருவிகளை இசைப்பதில் புலமை பெற்றிருந்த காரணத்தால் ஸ்ரீ வாத்ய வித்யாதரன் என்ற விருதைப் பெற்றவனும், பரமசிவ பக்தனாய் விளங்கி சிவாலயங்களை எழுப்பி அச்சிவனுக்குத் தொண்டு புரிந்ததால் சிவ சூடாமணி என்று அனைவராலும் புகழப்பட்டவனும், தனது வாழ்நாளில் பாரத நாட்டிற்கு அப்பாலிருந்து லட்சத் தீவுகளில் தனது ஆதிக்கத்தைக் கொண்டு வந்ததோடு அராபியருக்கும் திபத்திற்கும் சிம்ம சொப்பனமாக விளங்கி இராஜாக்களின் சிங்கமாகத் திகழ்ந்த காரணத்தால் ராஜசிம்மன் என்ற பட்டப் பெயரைச் சூடியவனுமான பல்லவ மாமன்னனைக் கண்டதும் மெய் சிலிர்த்தான் உதயசந்திரன்.

சோழ நாட்டு உறையூரில் ஓரிருமுறை பல்லவ மன்னனை அவன் கண்டிருந்த காரணத்தால் தற்போது அடையாளம் கண்டு கொள்வதில் அவனுக்குச் சிரமமாக இல்லை.

பல்லவ மாமன்னனான ராஜசிம்மன் உண்மையிலேயே ராஜராஜனாகவும் ராஜசிம்மமாகவும்தான் காட்சியளித்தார். மன்னன் என்றால் இவன் மன்னன். கம்பீரம் என்றால் இது கம்பீரம் - தோரணை என்றால் இது தோரணை என்று இம்மூன்றுக்கும் உரிய

மெய்ப்பொருள் போல ஒளிச் சுடராய் அரியணையில் அமர்ந்திருந்தார் ராஜசிம்மர். விசாலமான முகமும் விரிந்த கண்களும், எடுப்பான நாசியும், அளவான மீசையும் உறுதியான உதடுகளும், நீண்ட கைகளும், திடமான கால்களும், அங்காபரணங்களுமாகச் சேர்ந்து அவரை தேவராஜனாகக் கருத வைத்தது. கல்வெட்டுகளில் அவர் அர்ஜுனனுக்கு நிகரானவர் என்றும் ராமனைப் போன்றவர் என்றும்* குறிப்பிட்டுள்ளதை உண்மையென நிரூபிப்பது போல் இருந்தது அவரது தோற்றம்.

மனித உருவம் பெற்று வந்த கதிரவனைப் போல அமர்ந்திருந்த மன்னர், ''வா, உதயசந்திரா, வா. உன் வரவு பல்லவ ராஜ்யத்திற்கு நல்வரவாகட்டும்'' என்று கூறியபோது தான் காண்பது கனவா என்று எண்ணி மதிமயங்கினான் உதயசந்திரன்.

அவன் எதிர்பார்த்ததெல்லாம் நீதி மன்றம் - குற்றச்சாட்டு - விசாரணை - மூர்க்கத்தனம் - தண்டனை - பாதாளச் சிறை ஆகியவற்றைதான்.

அதற்கெல்லாம் மாறாக தெய்வ தரிசனம் கிடைத்த மாதிரி பல்லவ மன்னரின் தரிசனம் கிடைத்ததோடு மட்டுமின்றி மன்னர் வாய் திறந்து வரவேற்கவும் செய்ததால் நம்ப முடியாத நிலையில் பரவசப்பட்டு நின்றான் உதயசந்திரன்.

''நின்றதும், பார்த்ததும், வியந்ததும் போதும் போதும் உதயசந்திரா. வா, இங்கே வந்து உட்கார்'' என்று மன்னர் மீண்டும் குரல் கொடுத்தபோதுதான் தெளிவடைந்தான் அவன்.

மன்னருக்கு அருகில் சென்று வணங்கி ''பரவசத்தில் தங்களை வணங்கவும் மறந்துவிட்டேன் மன்னவா. மன்னிக்க வேண்டும்'' என்றான் நெகிழ்ந்துபோன குரலில்.

''பாதகமில்லை. அந்த ஆசனத்தில் உட்கார்.''

''அதில் உட்கார எனக்குத் தகுதியிருப்பதாகத் தோன்ற வில்லை மன்னவா. நான் நிற்கிறேன்.''

''இங்கே தகுதியை நிர்ணயம் செய்வது நீயல்ல. நான். எல்லா குழப்பங்களையும் விட்டுவிட்டு உட்கார் உதயசந்திரா. நிறைய பேச வேண்டியிருக்கிறது'' என்றார் மன்னர்.

அதற்குப் பிறகு மறுக்க முடியாமல் உதயசந்திரன் அமர்ந்தானே தவிர முள் மீது அமர்வது போலவே அமர்ந்தான்.

---

* பக்கம் 151 பல்லவர் வரலாறு, மா.ராசமாணிக்கம்.

''என்னைப் பற்றித் தாங்கள் அறிந்து வைத்திருப்பது பெரும் வியப்பளிக்கிறது மன்னவா'' என்றான் உதயசந்திரன்.

''வீரர்களுக்கு அவர்களது பராக்கிரமங்களே போதும். வேறு அறிமுகம் தேவையில்லை'' என்று தெளிவான குரலில் சொன்ன பல்லவ மன்னர், ''உதயசந்திரா! நீயும் அப்படித்தான். உன் வீரச்செயல்கள் உன்னை எனக்கு அடையாளம் காட்டிவிட்டன. நீ எனக்கு வேண்டும் என்று பெருஞ்சாத்தனிடம் கேட்டேன். என்னைக் காக்க அவன் ஒருத்தன்தானே இருக்கிறான் என்று அவர் தயங்கினார். நாட்டிற்கு அவன் தேவை. உங்களுக்கு நீங்கள் முக்கியமா நாடு முக்கியமா என்று கேட்டேன். நாடு தான் என்று ஒப்புக் கொண்ட அவர் என்னை விட்டு அவன் வரமாட்டானே என்றார். காக்கை மடுவிற்கு அனுப்பி வைக்கும்படிச் சொன்னேன். செய்தார்'' என்றார்.

''காக்கை மடு விஹாரத்தில் துறவியாவதற்காகவா என்னை அனுப்பச் சொன்னீர்கள் மன்னவா?''

''ஊரார் பேச்சு அப்படித்தான் இருக்க வேண்டும் என்று சொல்லி வைத்தவன் நான். உன் விஷயத்தில் மட்டுமல்ல. காக்கை மடுவிற்கு வரும் எல்லா இளைஞர்கள் விஷயத்திலும் அப்படித்தான் சொன்னேன்.''

''நான் கேள்விப்பட்டவரை அங்கு வந்தவர்கள் எல்லோரும் துறவியாகும் முடிவோடு தான் வந்தார்கள் என்று தெரிந்தது. இன்னொரு விஷயமும் தெரிய வந்தது. அதைத் தங்களிடம் சொல்ல முடியவில்லை.''

''எதுவானாலும் சொல். இங்கே ரகசியங்கள் தேவை யில்லை.''

''சமணத் துறவி அகளங்கர் இப்படி இளைஞர்களை தனது மதத்தில் சேர்க்கிறார் என்றும் அது தங்கள் ஆணைப்படி நடக்கிற ஏற்பாடு என்றும் அப்படிச் சேருகிற ஒவ்வொரு இளைஞனுக்கும் அவர் பல்லவ அரசாங்கத்திற்கு நூறு பொற்காசுகள் வழங்குகிறார் என்றும் கேள்விப்பட்டேன்.''

''உதயசந்திரா! தற்போது அகளங்கர் செய்து வரும் உதவி மிகச் சிறப்பானது. ராஜ்யம் பஞ்சத்தில் இருக்கும் நிலையில் படையைத் திரட்ட வேண்டிய கட்டாயம். இளைஞர்களைத் திரட்டலாம். பராமரிப்புக்குப் பணம் வேண்டாமா? நான் திகைத்தேன். அப்போதுதான் அகளங்கர் இந்த யோசனையைச் சொன்னார். காக்கை மடுவிற்கு வரும் இளைஞர்களை துறவறம் பெறுவதற்கு

வருவதாக வதந்தியைப் பரப்பச் செய்து அந்த இளைஞர்களை படையில் சேர நீலிக் கோட்டங்களுக்கு அனுப்பிவிடலாம் என்றும் அவர்களுக்குப் பிணைத் தொகையாக ஒவ்வொருவனுக்கும் நூறு பொற்காசுகளை அரசாங்கத்திற்கு வழங்குவதாகவும் சொன்னார். என்னை ஒப்புக் கொள்ள வைத்தார். செய்யவும் செய்தார்.''

''மன்னவா! எதற்காக இந்தச் சுற்றுவழி? இளைஞர்களை நேராகப் படைப்பயிற்சியிடத்திற்கு அனுப்பிவிட்டு அகளங்கர் அப்பயிற்சிக்குத் தேவையான செல்வத்தை தங்களுக்கு வழங்கியிருக்கக் கூடாதா?''

''நல்ல கேள்விதான் உதயசந்திரா. சாளுக்கியருடன் நடந்த பெருவளநல்லூர் போரின்போது நடுநிலைமை வகித்து ஒதுங்கியிருந்து பல்லவர்களின் வெற்றிக்கு வழிவகுத்தவர்கள் பாண்டியர்களும் கங்கர்களும். அவர்கள் மட்டும் நடுநிலை வகிக்காமல் சாளுக்கியர்களுடன் சேர்ந்திருந்தால் பெருவளநல்லூர் போரில் சாளுக்கியர்களை நான் வென்றிருக்க முடியாது. அவர்களை நமது நாட்டிலிருந்து விரட்டியிருக்கவும் முடியாது. ஆகவே பாண்டியர்களும் கங்கர்களும் சரியான நேரத்தில் நண்பர்களாயினர். போருக்குப் பிறகு பல்லவர்கள் படை திரட்டும் முயற்சியில் ஈடுபடக்கூடாது என்று நண்பர்களான எங்கள் மூவருக்குமிடையே வாய்மொழி ஒப்பந்தம் உண்டாயிற்று. இது சகஜமான ஒன்றுதான். ஆனால் போருக்குப் பின்னால் ஏற்பட்ட இந்த ஒப்பந்தத்தை மீற வேண்டிய சூழ்நிலை எங்களுக்கு ஏற்பட்டது.''

''ஏன் மன்னவா?''

''சாளுக்கிய நாட்டில் புல் முளைக்காது என்று கருதி யிருந்தோம் நாங்கள். ஆனால், அங்கே புதரே முளைத்து விட்டதாக செய்தி கிடைத்தது. சாளுக்கிய விக்கிரமாதித்தன் மாண்ட பிறகு அவனது மகன் வினயாதித்தன் சில வருடங்கள் ஆண்டு மாண்டு போனான். அதோடு சாளுக்கிய நாட்டிற்கு ஒளி மறைந்துவிட்டது. விடிவு விளையப் போவதில்லை என்று எண்ணிக் கொண்டிருந்த வேளையில் வினயாதித்தனின் மகன் விஜயாதித்தன் கிளர்ந்து எழுந்துவிட்டதாகவும் காஞ்சியின் மீது படையெடுக்க உத்தேசித்து விட்டதாகவும் ஒற்றர்கள் செய்தி கொண்டு வந்தார்கள். நாட்டிலோ பெரும் பஞ்சம் தலை விரித்தாடுகிறது. தினசரி உணவுக்கே மக்கள் திண்டாடி வருகிறார்கள். இந்த நிலையில் சாளுக்கிய படையெடுப்பு நடந்தால் பல்லவர்கள் தோற்று காஞ்சியை

இழப்பது உறுதி என்று கருதினேன் நான். சாளுக்கியர் படை காஞ்சிக்கு வரக்கூடாது என்று தீர்மானித்துக் கொண்டேன். அப்படையை அவர்களது நாட்டிலேயோ நாட்டிற்குப் புறம்பிலேயோ சந்தித்து அழிக்க வேண்டும் என்று கருதி இங்கிருந்த படைகளைத் திரட்டி எனது மகனும் இளவரசனுமான மகேந்திரன் தலைமையில் சாளுக்கிய நாட்டிற்கு அனுப்பியிருக்கிறேன். ஆனால், அந்தப் படை போதாது. மேலும் படை திரட்டி அனுப்ப வேண்டும். படை திரட்டக்கூடாது என்ற ஒப்பந்தம் இருந்ததால் ரகசியமாகப் படை திரட்ட எண்ணியே அகளங்கர் திட்டத்தையும் ஏற்றேன். அவரது செல்வத்தையும் ஏற்றேன்.''

''அப்படியானால் காக்கை மடுவிற்கு வந்த இளைஞர் களெல்லாம் நீலிக் கோட்டங்களில் தான் இருக்கிறார்களா மன்னவா?''

''நீலிக் கோட்டங்களில் இருப்பது உண்மை. ஆனால் நீலிக் கோட்டங்கள் இங்கில்லை. ரகசிய இடங்களில் இருக்கின்றன.''

''மன்னவா, இப்படி ரகசியமாகப் படை திரட்டுவதை விட காஞ்சிக்கு உண்டாகியிருக்கும் ஆபத்தைச் சொல்லி தங்கள் நண்பர்களான பாண்டியர்களிடமும் கங்கர்களிடமும் படை யுதவி கோரியிருக்கலாமே?''

''உதயசந்திரா, அரசியலில் அரசர்கள் எப்போதுமே எதிரிகளாகவும் இருக்கமாட்டார்கள். நண்பர்களாகவும் இருக்கமாட்டார்கள். சாளுக்கிய மன்னன் விக்கிரமாதித்தன் காஞ்சியை வென்று பிறகு பல்லவ நாடு முழுவதையும் அடையும் பேராசையில் என்னை முறியடிக்க பெருவளநல்லூர் போரில் ஈடுபட்டபோது பாண்டியர்களும் கங்கர்களும் நடுநிலைமை வகித்ததற்கு வேறு ஒரு காரணமும் உண்டு. அவ்வாறு அவர்கள் ஒதுங்கியிராவிட்டால் சாளுக்கியர் படைகள் பாண்டிய நாட்டின் மீதும் கங்க நாட்டின் மீதும் பாய்வதற்கான வாய்ப்பு இருந்தது. அந்த ஆபத்தை தவிர்க்கவும் பாண்டியர்களும் கங்கர்களும் நடுநிலைமை வகித்தார்கள். நான் சாளுக்கியரைத் தோற்கடித்து விரட்டியடித்தேன். பாண்டியர்களுக்கும் கங்கர்களுக்கும் சாளுக்கியர் மீதான அச்சம் நீங்கிவிட்டது. அதனால் அரசர்களுக்கே உரிய ஆசை உண்டாகலாம் அல்லவா? நட்பைத் துறந்து விட்டு இருவருமாக பல்லவர் மீது படையெடுக்கலாம் அல்லவா? அப்படியொரு ஆசை எழும் பட்சத்தில் நமக்குப் படையுதவி அளிப்பார்களா? ஒவ்வொரு முறையும் சாளுக்கியர்களுக்கு எதிராக

நமக்கு உதவிக் கொண்டே இருப்பார்களா? ஏற்கெனவே பல்லவர்களின் ஆதிக்கத்தில் இருக்கும் நீங்கள் - அதாவது சோழர்கள் ஆதிக்கத்திலிருந்து விடுபட்டுச் சுதந்திரம் பெறத் துடித்துக் கொண்டிருக்கிறார்கள். தமிழ் மன்னர்களெல்லாம் ஒன்று சேர்ந்து கங்க நாட்டுப் படைகளோடு பல்லவ நாட்டைத் தாக்கிக் கைப்பற்ற விரும்பலாம் அல்லவா? ஆகவே தான் அவர்களிடம் தற்போது படையுதவி கேட்க முடியாது. ஒப்பந்தப்படி கைகளை கட்டிக்கொண்டும் இருக்க முடியாது. ஆகவே தான் ஒப்பந்தத்திற்கு மாறாகப் படை திரட்டுகிறேன். அதேசமயம் நம்மீது பாய்ந்துவிடாமல் இருக்க பாண்டியரிடமும் கங்கரிடமும் தொடர்ந்து நட்பு பாராட்டிக் கொண்டிருக்கிறேன்.''

சிக்கலான நிலையில் பல்லவ மன்னர் மிகச் சரியான ராஜதந்திரத்தை கையாளுவதாகக் கருதி அதற்காக மனதிற்குள் பாராட்டிக் கொண்ட உதயசந்திரன் ''தங்கள் நிலைப்பாடு சரியானதுதான் மன்னவா. என் விஷயம்தான் குழப்பமாக இருக்கிறது. காக்கை மடு விவகாரத்தில் என்னைத் துறவியாக்கத் தான் கடுமையாக முனைந்தார்கள்'' என்றான்.

''அதெல்லாம் என் சொற்படி நடந்த சோதனைகள்தான்.''

''பௌர்ணமி விஷயம்?''

''அதுவும்தான்.''

''அகளங்கர் பேசியதெல்லாம் கூட தாங்கள் சொல்வது போலத்தானா?''

''ஆமாம்''

''மன்னவா, அகளங்கர் என்னைத் துறவறத்திற்கு வற்புறுத்தினார். துறவறத்திலிருந்து விலக வேண்டுமென்றால் பௌர்ணமியை நான் துறந்து விட வேண்டும் என்றார். அது ஏன்?''

''பௌர்ணமியுடனான உனது காதல் அவருக்குப் பிடிக்காமல் இருக்கலாம்.''

''அதுதான் உண்மையான காரணமா மன்னவா?''

''அதை அவரிடம் தான் கேட்க வேண்டும். இப்போது அதைப் பற்றிய பேச்சு எதற்கு? நீதான் துறவறத்தை விட்டு விட்டாயே! பௌர்ணமியும் உன்னைத் தொடர்ந்து தானே வந்துவிட்டாள்? அதோடு அகளங்கருக்கும் சில அந்தரங்கம் இருக்கும் அல்லவா? வளர்த்த தந்தையாயிற்றே?''

''மன்னவா, அகளங்கர் பல்லவ நாட்டிற்குச் செய்யும் மகத்தான இந்த உதவிக்கு காரணம் இருக்க வேண்டுமல்லவா?''

இதைக் கேட்டுப் பெருமூச்செறிந்த பல்லவ மன்னர் ஆசனத்தை விட்டு எழுந்து நடந்தார். அருகே இருந்த படிகளில் ஏறி நிலா மாடத்திற்கு வந்தார். உதயசந்திரனும் எதுவும் பேசாமல் பின்னாலேயே சென்றான். நிலா மாடத்திற்கு வந்து உதய சந்திரனிடம் ஒன்றைச் சுட்டிக் காட்டி, ''இது என்ன தெரியுமா?'' என்று கேட்டார்.

''தெரியவில்லை மன்னவா.''

''அதுதான் பௌத்தர்களின் பிரதான விஹாரம். ராஜவிஹாரம் என்று பெயர். அதற்கு அருகில் உயரமான ஒரு ஸ்தூபி இருக்கிறது. அது அசோகர் காலத்தில் கட்டப்பட்ட பௌத்தர்களுக்கான ஸ்தூபி. பௌத்த விஹாரங்கள் இந்த நகரத்தில் பல இடங்களில் இருக்கின்றன. புத்த பிட்சுக்கள் இங்கே ஆயிரக்கணக்கில் வசிக்கிறார்கள். ஏறக்குறைய பௌத்தமும் சமணமும் இரட்டையாகப் பிறந்து வளர்ந்தவை. காஞ்சியிலும் அவை அப்படியே வளர்ந்தன. ஆனால் மகா ராஜா மகேந்திரர் காலத்தில் சமண மதத்திற்கு காஞ்சியைப் பொறுத்தவரை ஒரு பெரிய தொய்வு உண்டாயிற்று. ஏன் தெரியுமா?''

''ஏன் மன்னவா?''

''சமணராக இருந்த மகேந்திரப் பல்லவர் சைவ மதத்தைத் தழுவினார். மக்களும் அவர் வழி நடந்தார்கள். நாட்டை ஆளும் மன்னர் எந்த மதத்தை ஆதரிக்கிறாரோ அந்த மதம் செழிப்படைவதும் அவர் மதிக்காமல் புறக்கணிக்கும் மதம் சேதாரப்பட்டுப் போவதும் எங்கேயும் நடக்கும் விஷயம் தான். சந்திர குப்த மௌரியர் சமணத்தை ஆதரித்தார். அது வளர்ந்தது. அவரது பேரனாகிய அசோகர் புத்த மதத்தைப் பின்பற்றினார். அது வளர்ந்தது. காஞ்சியில் நடந்ததும் அதே கதைதான். நாட்டை ஆண்ட மன்னர் சமணத்தைத் துறந்ததோடு அதைப் புறக்கணிக்கத் தொடங்கியதும் அந்த மதம் ஆட்டம் கண்டது. அது மட்டுமல்ல. சைவ மதமும் வைணவ மதமும் இங்கே நுழைந்து ஆதிக்கம் பெற்றன. நாவுக்கரசர் போன்ற சைவப் பெரியோர்களும் திருமழிசை பிரானைப் போன்ற வைணவப் பெரியோர்களும் திறம்படச் செயல்பட்டு சைவத்தையும் வைணவத்தையும் வளர்த்து மக்களைக் கவர்ந்ததால் சமணத்திடமும் பௌத்தத் திடமும் மக்களுக்கு இருந்த ஈர்ப்பு குறைந்தது. பௌத்தர்களுக்குப் போதுமான பலமும் வாழ்விடங்களும் இருந்தன.

சமணர்களுக்கோ அவ்வாறு இல்லை. அந்த சமயத்தில் சமணர்கள் விடுத்த கோரிக்கையை ஏற்று பரம சைவனான நான் அவர்களை அங்கீகரிக்கும்விதமாக வேகவதியாற்றங்கரையில் இருந்த திருப்பருத்திக் குன்றத்தில் சமணர்களின் எட்டாவது தீர்த்தங்கரரான சந்திரப் பிரபாவுக்கு கற்றளி ஒன்றை கட்டித் தந்தேன். *இது அவர்களுக்கு மறுமலர்ச்சியை அளித்தது. திருப்பருத்திக்குன்றம் சமணர்களின் வாழ்விடமாகியது. சமணக்காஞ்சி என்று அழைத்துக் கொண்ட அவர்கள் சமணர்களின் நான்காவது கலைப்பீடமாக அமைத்துக் கொண்டார்கள். அதன் நன்றியுணர்ச்சியாகத்தான் அகளங்கர் எங்களுக்கு உதவுகிறார்.''

''சிவ சூடாமணியான தாங்கள் சிவபெருமானுக்கு ஆலயத்தைக் கட்டாமல் சமணர்களுக்கு கற்றளி எழுப்பியிருப்பது விந்தையாக இருக்கிறது மன்னவா?''

''என் சிவபெருமானுக்கு இப்போதைக்கு ஆலயம் கட்ட வில்லையே தவிர இப்படியே இருந்துவிடப் போவதில்லை. என் ஆட்சி காலத்தில் அத்திருப்பணி நடந்தாலும் நடக்கலாம். யாருக்குத் தெரியும்? அதோடு சந்திர பிரபா ஆலயத்தை நான் மன்னனாக இருந்து எழுப்பித் தந்திருக்கிறேனே தவிர சமணனாக மாறிவிடவில்லை. சமணர் சார்பினனாக ஆகிவிடவில்லை.''

''மன்னவா, தங்களுக்கு இணையான ஒருவரை என்னால் சொல்ல இயலாது. மகேந்திரப் பல்லவர் கூட சமணத்தைத் துறந்து சைவத்தை புதுப்பித்தார். தாங்களோ சைவத்தில் இருந்து கொண்டே சமணருக்கு கற்றளி எழுப்பியிருக்கிறீர்கள். இது மகத்தானது அல்லவா?'' என்றான் உதயசந்திரன் பரவசத்துடன்.

''மன்னனாக இருப்பவன் மத விஷயங்களில் சமமானவனாகவும் சார்பற்றவனாகவும் இருக்க வேண்டும் உதயசந்திரா. நாட்டின் அமைதிக்கு அது முக்கியம். அதைவிடு உன்னை அடையாளம் கண்டு பலவிதங்களில் சோதித்து எதற்காக இங்கே வரவழைத்தேன் தெரியுமா?''

''சொல்லுங்கள் மன்னவா.''

சொன்னார் மன்னர்.

ஸ்தம்பித்து நின்றான் உதயசந்திரன்.

☆☆☆

* Page 14. Tirupparuthi Kundram and its temples. by. T.N. Ramachandran.



15 மன்னனின் விவரணம்

உதயசந்திரன் ஸ்தம்பித்து நின்றதைக் கண்ட மன்னர் ''என்ன உதயசந்திரா, நான் சொன்னது உனக்குப் பிடிக்க வில்லையா?'' என்று கேட்டார்.

''தாங்கள் சொன்ன முதல் காரியம் மிகவும் சரி. ஆனால் இரண்டாவது காரியம்...'' என்று இழுத்தான் உதயசந்திரன்.

''உதயசந்திரா, நீ காஞ்சிக்குள் வந்தாயே இங்கே என்ன கண்டாய்?'' - கேட்டார் மன்னர்.

''அநியாயங்களையும் கொடுமைகளையும் கண்டேன் மன்னவா. கோயிலில் பட்டப்பகலில் நடந்த கொள்ளை முயற்சியைக் கண்டேன். திருச்சோலை வீதியில் அடிமையாக விற்கப்பட்ட இளம் பெண் ஒருத்தி கொடுமைப்படுத்தப் படுவதைக் கண்டேன். பல விஷயங்களைக் கேள்விப் பட்டேன்.''

''நீ அறியாததும் காணாததும் நிறைய இருக்கிறது உதயசந்திரா. களஞ்சியங்கள் காலியாக இருக்கின்றன. சோற்றுக்கு வழியில்லாதவர்கள் செல்வந்தர்களிடம் தங்களை விற்று பிழைப்பு நடத்தி வருகிறார்கள். அரசாங்க காரியங்களைச் செய்கிற அதிகாரிகள் பலர் பிழைப்பைத் தேடி வெளியூர்களை நாடிச் செல்கிறார்கள். மக்களிடம் நாநயம் இல்லை. வீட்டிற்கு உரியவர்கள் வீணர்களால் விரட்டப்பட்டு புறாக்கள் குடியிருந்த இடங்களில் ஆந்தைகள் குடிவந்த கதையாக ஆக்கிரமிப்பு செய்கிறார்கள். தோட்டமும் துரவுகளும் குரங்குகளிடம் அகப்பட்ட பூமாலைபோல் பொசுக்கப்படுகின்றன. சாலைகள் பழுது பார்க்கப்படாமல் குண்டும் குழியுமாய் இருக்கின்றன. மழை இல்லை. விவசாயம் இல்லை. ஏரிகளும் குளங்களும்

வற்றிவிட்டன. *மழை வேண்டி வேதியர்கள் செய்த யாகங்கள் பொய்த்துவிட்டதால் வேதியர் பலர் தங்களை மாய்த்துக் கொண்டனர். சிலர் தங்களை அடிமைகளாக விற்றுக் கொண்டு வேற்றுத் தொழில்களுக்குப் போய்விட்டார்கள். எனவே வேள்விகள் நின்றுபோய் வளமார்ந்த இந்த நகரம் வெறிச்சோடிக் கிடக்கிறது. கஞ்சிக்கு வழியின்றி காஞ்சி தவிக்கிறது'' என்று சொல்லி நிறுத்தினார் மன்னர்.

சிறிது நேரம் வரை யோசனையில் ஆழ்ந்தார்.

உதயசந்திரன் மெல்ல குறுக்கிட்டு, ''போர் நடந்து முடிந்தால் இப்படித்தான் பஞ்சம் வருமா மன்னவா?'' என்று கேட்டான்.

''இல்லை உதயசந்திரா. வெறும் போர்களால் மட்டும் பஞ்சம் வராது. மௌரிய ராஜ்யத்தில் பிந்துசாரர் ஆட்சி புரிந்த காலத்தில் போர் ஏதும் நடவாதபோதே பஞ்சம் உண்டாயிற்று. மழை பொய்த்தால் பஞ்சம் நிச்சயம். தற்போது மழை பெய்யாமல் போனது ஒரு காரணம் என்றாலும் நரசிம்ம வர்மர் வாதாபியை எரியூட்டியதற்குப் பழிவாங்க இங்கே படையெடுத்து சாளுக்கிய விக்கிரமாதித்தன் காஞ்சியைக் கைப்பற்றினான். முதல் வெற்றி பெற்ற அவன் காஞ்சியை சூறையாடினான் கொள்ளைக்காரனைப்போல். அரண்மனைக் கருவூலம், களஞ்சியம் ஆகியவற்றில் இருந்த செல்வங்களையும் தான்யங்களையும் கைப்பற்றினான். ஆலயங்களில் இருந்த செல்வங்களையெல்லாம் தன்னிடம் ஒப்படைக்கும்படிக் கட்டளையிட்டு அனைத்தையும் பெற்றான். தனவந்தர்களின் இல்லங்களும் சூறையாடப்பட்டன. தலைநகரில் இருந்த நீர்நிலைகள் தூர்க்கப்பட்டன. இப்படி காஞ்சியை கபளிகரம் செய்துவிட்டு பெருவள நல்லூருக்கு வந்தான் விக்கிரமாதித்தன். அவனது பேராசை பெருநஷ்டமாகியது. தோற்றோடினான். இப்போது சொல். பஞ்சத்திற்கு எது காரணம்? படையெடுப்பும் போரும் அல்ல. சாளுக்கிய விக்கிரமாதித்தன் இரக்கமற்ற முறையில் நகரைச் சூறையாடியதால்தான். இதனால்தான் உன்னிடம் இரண்டாவது காரியத்தைச் சொன்னேன்'' என்று சொல்லி நிறுத்தினார் மன்னர்.

---

* ராஜசிம்மன் காலத்தில் ஏற்பட்ட பஞ்சம் காரணமாக மேற்கண்ட கொடுமைகள் உண்டானதாக 'அவனி சுந்தரி கதை' கூறுகிறது.

* பக்கம் 223 'பெரிய புராண ஆராய்ச்சி. மா.ராசமாணிக்கனார்.

* பக்கம் 219 'தமிழ்நாட்டு வரலாற்று கருத்தரங்கு' பதிப்பாசிரியர். டாக்டர் இரா.நாகசாமி.

''மன்னவா, இந்தக் கொடிய பஞ்சம் எப்படித் தீரும்? எப்போது தீரும் மன்னவா?'' என்று கேட்டான் உதயசந்திரன்.

''நாட்டிற்குச் சோதனை வரும்போது மக்கள் நம்பிக்கையை இழந்துவிடுகிறார்கள். அதனால் அவர்களது இயல்பான குணங்கள் மாறிவிடுகிறது. தங்கள் இஷ்டம்போல வாழ முற்படுகிறார்கள். மழை பெய்து விவசாயம் துவங்கும் வரை கொஞ்சம் சிரமமாகத்தான் இருக்கும். அதேசமயம் நிவாரணத்திற்கு வழி இல்லாமல் போய்விடவில்லை. இதுபோன்ற இக்கட்டுகள் எப்போது வேண்டுமானாலும் வரலாம் என்று எதிர்பார்த்து பல்லவ அரசாங்கம் பஞ்சவார வாரியங்களை* ஏற்கெனவே அமைத்திருக்கிறது. பல்லவ நாட்டிலும் சரி பல்லவ ஆதிக்கம் இருக்கும் நாடுகளிலும் சரி விவசாயம் நல்லபடியாக நடக்கிறபோது இந்த வாரியத்திற் கென்று குறிப்பிட்ட அளவிலான நெல்லும் தானியங்களும் பெறப்படும். கோட்டத் தலைவர்களிடமிருந்தும் சிற்றரசர் ஆகியோரிடமிருந்தும் மிதிகளும் பல்வேறு பொருட்களும் பெறப்படுகின்றன. அவை கணிசமான அளவு சேர்ந்திருப்பதாக கருமத்தலைவர் சொல்லியிருக்கிறார். இரண்டொரு நாட்களில் அவை இங்கே வந்துவிடும். காஞ்சி இயல்பு நிலைக்குத் திரும்பிவிடும். இந்த ஆண்டு இறுதியிலாவது மழை பெய்த தென்றால் அடுத்த ஆண்டு எல்லாமே வழக்கம் போல இயல்புக்கு வந்துவிடும்'' என்றார் மன்னர்.

மன்னர் எல்லா விஷயத்திலும் தெளிவாகவும் உறுதியாகவும் இருக்கிறார் என்பதை உணர்ந்து கொண்ட உதயசந்திரன் அராபியர் தலைவன் சுலைமான் தன்னைக் கடத்திய விவகாரங்கள் சம்பந்தமான விவரங்களை மன்னனிடம் சொல்லலாமா வேண்டாமா என்று நினைத்தான். சுலைமான் தனக்குக் கொடுத்த பணியும் மன்னர் தனக்குக் கொடுத்த பணியும் நேர்மாறானவைகளாய் இருந்தன. எங்கோ இருந்த தன்னை நம்பி மிகப் பெரிய பொறுப்பை மன்னர் ஒப்படைத்ததையும் அந்தரங்கமானவர்களுடன் மட்டுமே பேசக்கூடிய ரகசியங்களை தன்னிடம் பேசியதையும் எண்ணிப் பார்த்த உதயசந்திரன், ''மன்னர் அறியாத ரகசியம் எதுவும் இருக்கக்கூடாது'' என்றுத் தீர்மானித்தவனாய், ''மன்னவா, தங்கள் வீரப் புதல்வர் மகேந்திரரைக் காப்பாற்றிக் கொண்டு வரும்படி எனக்குக் கட்டளையிட்டிருக்கிறீர்கள். ஆனால் அதே மகேந்திரரை சமயம்

* பக்கம் 240 'பல்லவ வரலாறு', டாக்டர்.மா.ராசமாணிக்கனார்.

பார்த்து கொன்றுவிடும்படி சுலைமானிடம் சத்தியம் செய்து கொடுத்திருக்கிறேன்'' என்றான்.

''யார் அந்த அராபியனா? அவன் உன்னைக் கடத்தியது தெரியும். உன்னிடம் பேசிய விவரங்கள் எனக்குத் தெரியாது. நானே உன்னிடம் கேட்க வேண்டுமென்றிருந்தேன்'' என்றார் மன்னர்.

''மன்னவா, முதலில் மகேந்திரரை வஞ்சகமாகக் கொன்றுவிடும்படிச் சொன்னான். அது வீரன் செய்யக்கூடியச் செயலன்று என்று நான் மறுத்தேன். அப்படியானால் சாளுக்கியப் படையில் சேர்ந்து சாளுக்கிய வீரனாகப் போரிட்டு போரில் அவனைக் கொல் என்றான். அராபிய புனித நூலான குரானின் மீது சத்தியம் வாங்கிக் கொண்டான்.''

''எதற்காக சத்தியம் செய்தாய்?''

''அவ்வாறு செய்து மகேந்திரரைக் கொன்றால் எனது பிறப்பு குறித்த ரகசியத்தை அறியச் செய்வதாகக் கூறினான்.''

''அவன் சொன்னதையெல்லாம் முழுமையாகச் சொல்.''

சொன்னான் உதயசந்திரன்.

''என்ன செய்வதாக உத்தேசம்?''

''சத்தியத்தைக் காணும் வரை அசத்தியத்தின் ஈர்ப்பில் நான் இருந்தேன். இப்போது எனக்கு சத்திய தரிசனம் கிடைத்து விட்டது. இனி என் சுவாசம் உங்களுக்காகத்தான் இருக்கும்.''

''உன் பிறப்பு சம்பந்தமான ரகசியம் இருப்பது உண்மை. அதற்கான திறவுகோல் வாதாபியில் இருப்பதும் உண்மைதான். ஆகவே உன் பிறப்பு ரகசியத்தைப் பற்றி அறியும் ஆர்வம் உனக்கிருப்பது இயற்கைதான்.''

''இருப்பதுதான் இயற்கை மன்னவா. இல்லாததைத் தேடி எதற்காக இடர்ப்பட வேண்டும்? என் பிறப்பு ரகசியம் எதுவாக இருந்தால் தான் என்ன? பல்லவ மாமன்னரின் நம்பிக்கைக்குப் பாத்திரமான மனிதனாக இங்கே நிற்கிறேனே இதைவிட வேறு பேறு எதுவும் எனக்கு வேண்டாம். இந்த நிலை நீடித்தால் அதுவே எனக்கு நிலையான திருப்தியாக இருக்கும் மன்னவா.''

''உன் நிலைப்பாட்டைப் பாராட்டுகிறேன் உதயசந்திரா. இந்த அராபியத் தலைவனான சுலைமான் ஒட்டு மொத்த அரபு நாட்டிற்குமான தலைவன் அல்ல. இந்நாட்டிற்குள் பல இடங்களில் காலெடுத்து வைத்திருக்கும் பல கூட்டங்களில் ஒன்றுக்கு அவன் தலைவன். கொம்புத் தேனுக்கு ஆசைப்படும்

முடவனைப் போல பேராசையில் அல்லாடும் மனிதர்களில் அவனும் ஒருவன். நண்டானது வளையை விட்டு வந்தால் அதைக் கழுகு கவ்விச் சென்றுவிடும். ஆகவே தான் நண்டுகள் வளையை விட்டு வெளியே வருவதில்லை. அப்படி இருந்தார்கள் அராபியர்கள். அவர்களுக்கு இப்போது திபத்தியர்களின் கூட்டு கிடைத்திருக்கிறது. அந்த தைரியத்தில் வளைகளை விட்டு வெளியே வந்து ஆகாச கோட்டைகளை கட்டி வருகிறார்கள். உன் போன்ற இளைஞர்களைக் கடத்தி மூளைச் சலவை செய்து தனது கீழ்த்தரமான கோழைச் செயல்களுக்குப் பயன்படுத்தி வருகிறார்கள். இங்கே பல்லவ ராஜ்யம் இதர அரசுகளை விட பலமானதாக இருப்பதால் இதை அசைத்து விட்டால் மற்ற ராஜ்யங்களை ஆட்டி விடலாம் என்று தப்புக் கணக்கு போடுகிறார்கள். அவர்களது கணக்கும் சரி, கனவும் சரி நிறைவேறப் போவதில்லை. அவர்களைப் பற்றிய உண்மையான அச்சம் வேறு ஒன்றிருக்கிறது. அது குறித்து சீன நாட்டிலிருந்து இருமுறை தூதுவர்கள் காஞ்சிக்கு வந்து போயிருக்கிறார்கள். அது பல்லவ ராஜ்யத்திற்கு மிகப்பெரும் சவாலாக இருக்கும். அதில் உனது பங்கு எந்த அளவிற்கு இருக்கும் என்பதை இப்போது சொல்ல முடியாது.''

மன்னர் கூறிய விவரங்களைக் கேட்டு பிரமித்துப் போனான் உதயசந்திரன்.

''மன்னவா, தங்கள் தலைநகரிலேயே இருந்து கொண்டு இடர்களை இறைத்து வரும் அராபியர்களை தாங்கள் கைது செய்து சிறையில் அடைக்க முடியாதா?'' என்று கேட்டான் உதயசந்திரன்.

''புலிகளை எதிர்கொள்ள வேண்டிய நிலையில் இருக்கும் பல்லவ நாடு பிள்ளைப் பூச்சிகளைத் தேடி அலைந்து கொண்டிருக்க முடியாது உதயசந்திரா. அவர்களைச் சுதந்திரமாக விட்டு வைத்திருப்பதும் ஒருவிதத்தில் உபயோகம்தான். அவர்களைப் பற்றிய கவலையை விடு. இப்போதைக்கு நாம் பேசியது போதும். போய் சற்று ஓய்வெடு. அர்ச்சகர் வீட்டிற்குப் போக வேண்டாம். உனக்கென்று தனியாக ஒரு மாளிகை ஒதுக்கப்பட்டிருக்கிறது. அங்கு போ. அங்கே உன் மின்னல் தயாராக இருக்கும்.''

''என் புரவியா?''

''ஆம். புரவி உன்னிடம் இருக்கட்டும். உன் யானையான கார்மேகம் என்னிடம் இருக்கட்டும். எனக்கு யானைகள் என்றால்

திகையும் பிடிக்கும். எனக்கு நாகப்பிரியன்* என்று ஒரு பெயர் இருப்பது உனக்குத் தெரியாதல்லவா?''

உதயசந்திரனுக்கு வானத்தில் பறப்பது போல் இருந்ததால் எதுவும் பேசவில்லை. மன்னனிடம் விடைபெற்றுக் கொண்டான்.

மன்னனின் மாளிகை வாயிலில் காத்திருந்த காவலர்கள் அவனை நுனிமாளிகைக்கு அழைத்துச் சென்றார்கள். அங்கே சகல வசதிகளும் இருந்தன. ஏவல் புரியவும் பணியாட்கள் இருந்தார்கள்.

உதயசந்திரனின் மனம் திருப்தியாக இருந்தது.

நாகையில் புறப்பட்டபோது யமகாதக பூனை தான் குறுக்கே வந்திருக்க வேண்டும் என்றும் அந்த துர்ச்சகுனத்தால் தான் சிக்கல்கள் அடுத்தடுத்து வந்ததாகவும் அதுவரை எண்ணியிருந்த அவன் அந்த எண்ணத்தை மாற்றிக் கொண்டான்.

நல்லவேளையில் நாகைப்பட்டினத்தை விட்டுப் புறப் பட்டதால்தான் பல சிக்கல்கள் வந்தாலும் முடிவில் கனவில்கூட காண முடியாத பாக்கியம் தனக்குக் கிடைத்திருக்கிறது என்று நினைத்தான்.

தனது தைரியத்திற்கும் வீரத்திற்கும் தகுந்த அங்கீகாரம் கிடைத்துவிட்டதாகக் கருதி மகிழ்ந்த அவன் வீரனுக்குத் தேவை அது தானே தவிர பிறப்பு ரகசியங்களோ மர்மங்களோ அல்ல என்று தெளிந்தான்.

'புனித நூலின் மீது சத்தியம் செய்திருக்கிறாயே?' என்று கேட்டது மனம்.

''நூல் புனிதமானதாக இருக்கலாம். ஆனால் சத்தியத்தைக் கோரியவன் குணவான் அல்ல. கொலைகாரன். அந்நியன். அவன் கோரியது உலக ஷேமத்தையல்ல. கலப்படமில்லாத சுயநலம். ஆகவே சத்தியத்தை மீறுகிறேன். அப்படி மீறுவதால் இடர்கள் வருமானால் வரட்டும். சந்திக்கிறேன்'' என்று அவன் இதயம் பதில் சொல்லியது.

''அப்படிப் பார்த்தால் சோழ நாட்டவனான உனக்குப் பல்லவன் அந்நியன் தானே?'' என்று கேட்டது மனம்.

''அந்நியன் அல்ல. அடுத்த வீட்டுக்காரன். அதோடு இப்போது சோழ நாட்டு எஜமானர்கள் பல்வர்கள்தான். அவர்களுக்கு உதவுவது எஜமான விசுவாசம். தவறல்ல'' என்றது அவனது இதயம்.

* page 120 'Kanchipuram in Early South Indian History by. T.V.Mahalingam

அதோடு மனத்தின் கேள்வி நின்று போயிற்று.

தனது இருப்பிடத்தை விட்டு வெளியே வந்த அவன் நகரைச் சுற்றிப் பார்க்க விரும்புவதாகவும் துணைக்கு விவரமான ஓர் ஆள் வேண்டும் என்றும் தெரிவித்தான்.

முதலில் அவனது புரவி 'மின்னல்' வந்து நின்றது.

அதை ஆசையோடு தடவிக் கொடுத்த உதயசந்திரன் ''உன் அண்ணன் கார்மேகத்திற்கு வந்த அதிஷ்டத்தைப் பார்த்தாயா? மன்னரிடம் போய் விட்டான்?'' என்று அதனோடு பேசிவிட்டு மேலேறி அமர்ந்தான்.

அவனுக்கு வழிகாட்டியாக நடுத்தர வயதானவர் ஒருவர் புரவியில் வந்து நின்றார்.

அதுவரை திருடனைப் போல தெருக்களில் மறைந்து ஓடிய உதயசந்திரனுக்கு மன்னனின் அரவணைப்புடன் புரவியின் மீது அமர்ந்து உலா செல்வது இன்பமாக இருந்தது.

கூட வந்த மனிதர் தனது பெயர் சத்திய சந்தர் என்றும் விருந்தினர்களின் வழிகாட்டி என்றும் சொல்லிக் கொண்டு உதயசந்திரனை காஞ்சியின் அனைத்துப் பகுதிகளுக்கும் அழைத்துச் சென்று அறிமுகப்படுத்தினார்.

ஓரிடத்தில் பிரம்மாண்டமான கட்டிடம் ஒன்று பூட்டப் பட்டுக் கிடந்ததையும் பொலிவிழந்து காணப்பட்டதையும் கண்ட உதயசந்திரன் அதைப்பற்றி வினவினான்.

''ஐயா, வடபாரத்தில் நாளந்தா மற்றும் தட்சஷீலம் ஆகிய இடங்களில் உள்ள சர்வ கலா சாலையைப் போன்ற கல்விக்கூடம் இது. இதன் பெயர் கடிகை. பல்லவ மன்னர்கள் சமஸ்கிருத மொழியைப் போற்றி பாராட்டி வருபவர்கள்*. ஆதலால் இப்பல்கலைக் கழகம் சமஸ்கிருத கலைப்பீடமாகத் திகழ்கிறது. சாளுக்கிய படையெடுப்பின் போது தாக்குதலுக்கு ஆளானது. போரையடுத்து பஞ்சம் தலைதூக்கியதால் இது மூடப்பட்டது'' என்றார் சத்தியசந்தர்.

''இக்கலைப் பீடம் மீண்டும் திறக்கப்படுமா?'' என்று கேட்டான் உதயசந்திரன்.

''பஞ்ச நிலைமையைச் சற்று சமாளித்த பிறகு கடிகையைத் திறக்கும் உத்தேசத்தில் இருக்கிறார் மாமன்னர். ஆனால் இது மூடப்பட்டதில் பல்லவர் அவைக்களப் புலவரும் மன்னரின் ஆசானுமான தண்டி அவர்களுக்கு பெரிய வருத்தம். அதன்

* P127 Kanchipuram in early South Indian History by, T.V.Mahalingam.

காரணமாகவோ என்னவோ அவர் காஞ்சியை விட்டு நீங்கிவிட்டார். கடிகை திறக்கப்பட்டால் தான் மீண்டும் இந்நகருக்கு வருவேன் என்று அவர் கூறிவிட்டுச் சென்றதாகப் பேசிக் கொள்கிறார்கள்**'' என்றார் வழிகாட்டி சத்தியசந்தர்.

அதையடுத்து காஞ்சி கோயில்கள், பௌத்த விஹாரங்கள், சமணப் பள்ளிகள் என பலவற்றுக்கும் உதயசந்திரனுக்கு அறிமுகப்படுத்திய வழிகாட்டி அவனை அவனது மாளிகையில் அழைத்து வந்துவிட்டு விட்டு விடைபெற்றுக் கொண்டார்.

அன்று மாலை அவனது இருப்பிடத்திற்கே வந்த பேரமைச்சர் வல்லபர், ''என்ன உதயசந்திரா, காஞ்சி நகர் முழுவதையும் சுற்றிப் பார்த்துவிட்டாயா? பார்க்க வேண்டிய இடம் ஏதாவது பாக்கியிருக்கிறதா?'' என்று கேட்டதும் உடனடியாக பதில் சொல்லத் திணறிய உதயசந்திரன், ''அமைச்சர் பெருமானே, தங்கள் மகத்துவம் அறியாமல் அவசரப்பட்டு விட்டேன். மன்னிக்க வேண்டும்'' என்றான்.

''எங்கோ இருந்த நீ என்னைப் பற்றியோ மன்னர் பிரானைப் பற்றியோ மற்றவர்கள் பற்றியோ அறியாமல் போனது ஒன்றும் வியப்பானதில்லை. ஆனால் எங்கோ இருந்த உன்னை மகாராஜா கண்டறிந்து இங்கே கொண்டு வந்ததுதான் வியப்பானது. மன்னரின் பார்வை உன் மீது பட்டது உனது பாக்கியம். அதை சரிவர பயன்படுத்திக் கொள்வது உன் கடமை'' என்றார் பேரமைச்சர்.

''நிச்சயமாக நீங்கள் கூறியபடி நடந்து கொள்வேன் அமைச்சர் பெருமானே.''

மறுநாள் மன்னர் அவனை அழைத்து, ''நீ சாளுக்கிய நாட்டிற்கு சேனாதிபதி பகதத்தருடன் புறப்பட வேண்டியிருக்கும் தயாராக இரு'' என்று சொன்னதும் -

''அவருடனா? அவர்... அவர்...'' என்று தடுமாறினான் உதயசந்திரன்.

''எதற்காகத் தடுமாறுகிறாய் உதயசந்திரா?''

''சேனாதிபதி மிகவும் ஆபத்தானவர். பல்லவ அரியணையைக் கவர சதி தீட்டியிருக்கிறார்.''

''சேனாதிபதியா? என்ன உளறுகிறாய்?''

தான் காதால் கேட்டதைச் சொன்னான் உதயசந்திரன்.

மன்னர் அதைக் கேட்டு கடகடவெனச் சிரித்தார்.

☆☆☆

** P110 Kanchipuram in early South Indian History by T.V.Mahalingam.



16 மணற்கோயில்

பேரமைச்சரிடம் பேசிவிட்டு நிம்மதியாக உறங்கி இரவைக் கழித்த உதயசந்திரனுக்கு அதிகாலையிலேயே மன்னனிடமிருந்து கட்டளை வரவே புரவியில் ஏறி அரண்மனைக்குச் சென்றான். அரண்மனையின் பின் பகுதியில் இந்த மன்னரைக் கண்டதும் வணங்கினான் உதயசந்திரன்.

''நான் நேற்று உன்னிடம் கூறிய விஷயங்களைப் பற்றி ஏதாவது யோசித்துப் பார்த்தாயா?'' என்று கேட்டார் மன்னர்.

''எதையும் யோசிக்கவில்லை மன்னவா'' என்றான் உதயசந்திரன்.

''ஏன்?''

''தாங்கள் கூறியவை அனைத்தும் நிறைவாகவும் தெளிவாகவும் இருந்தது. சந்தேகங்களோ தயக்கங்களோ எழவில்லை. ஆகவே யோசிக்கவில்லை.''

''மிகவும் நல்லது'' என்று சொன்ன மன்னர் அருகில் இருந்த ஒன்றைச் சுட்டிக்காட்டி, ''இது என்ன சொல்'' என்றார்.

மன்னர் காட்டிய பொருளைப் பார்த்துவிட்டு, ''மணற் கோயில்'' என்றான் உதயசந்திரன்.

''மணல் கோட்டை கட்டுவதாகச் சொல்வதுண்டு. நடக்க முடியாத விஷயத்தைக் குறிப்பிடும்போது இப்படிச் சொல்வதுண்டு. நீ இதை மணற்கோயில் என்று சொல்கிறாய். ஆனால் இது நடக்க முடியாத விஷயத்திற்கான அடையாளம் இல்லை. நடக்கப் போகிற கலை பொக்கிஷத்தின் மாதிரி வடிவம்.''

''மணலால் கட்டப்பட்டிருந்தாலும் மிக நுட்பமாகக் கட்டப்பட்டிருக்கிறது. மன்னவா. இந்த வடிவத்தில் கோயில் அமைக்கப் போகிறீர்களா? யாருக்கு?''

''உதயசந்திரா, நேற்று நான் சமணருக்கு கற்றளி எழுப்பியது குறித்துச் சொன்னேன். உனது ஊரான நாகைப்பட்டினத்தில்

பௌத்தர்களுக்கான விஹாரம் ஒன்றையும் அமைத்து தரவிருக்கிறேன். எனது பாட்டனார் நரசிம்மவர்மரும் சரி மகேந்திர வர்மரும் சரி சிவனுபாவர்களாக இருந்தாலும் காஞ்சியில் சிவாலயம் எதையும் எழுப்பவில்லை. அவர்கள் செய்த சிற்ப விசித்திரமெல்லாம் பல்லவர் கோநகரில் அமையாமல் மாமல்லபுரத்திலேயே அமைந்தன. இதை மிகப் பெரும் குறையாக மக்கள் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். எனக்கே கூட அது ஒரு குறைதான். அதைப் போக்கும் விதமாகவும் உலகமே வியக்கும் விதமாகவும் காஞ்சியில் கைலாய நாதனுக்கு கற்றளியொன்றை எழுப்பத் தீர்மானித்திருக்கிறேன். எனது பாட்டனார் தனது கைவண்ணத்தைக் காட்டிய மாமல்லபுரத்திலும் கடலே வியக்கும் வண்ணம் கடற்கரையில் சிவாலயம் ஒன்றை உருவாக்க விருக்கிறேன். இவ்விரு ஆலயங்களும் காலத்தை கடந்து நிற்கும். மணற் கற்களால்* மிகவும் புதுமையான முறையில் இவ்விரு ஆலயங்களையும் உருவாக்கப் போகிறேன். மணற்கற்களால் உருவாக விருக்கும் கோயில்களின் மாதிரி வடிவங்களை மணலால் அமைத்திருப்பது பொருத்தமானதல்லவா?''

''மிகவும் பொருத்தம் மன்னவா.''

''ஆனால் நாடு இருக்கும் நிலையில் இப்போது இது நடக்காது. இது நடப்பது உன் கைகளில்தான் இருக்கிறது.''

''என் கைகளிலா மன்னவா?''

''ஆமாம். உன்னிடம் ஒப்படைத்துள்ள இரண்டு பணிகளில் இரண்டாவது பணியை நீ நிறைவேற்றினால் இது நிறைவேறும்.''

''என்னை நம்பி இத்தனைப் பெரிய பணியை ஒப்படைத்திருக்கிறீர்களே மன்னவா - என் உயிர் போவதானாலும் இப்பணியை நிறைவேற்றாமல் விட மாட்டேன்.''

''எனக்கு நீயும் வேண்டும். நீ இல்லாமல் எது வந்தாலும் நான் ஏற்க மாட்டேன் என்பதை நினைவில் வைத்துக்கொள். பணி நிறைவேறும் வரை எனது கனவு மணற்கோயிலாக இருக்கட்டும்.''

''நான் எப்போது புறப்பட வேண்டும் மன்னவா?''

''அது சம்பந்தமான விவரங்களை சேனாதிபதி பகதத்தரிடம் கேட்டுத் தெரிந்து கொள். அவரோடுதான் நீ போகும்படி இருக்கும்.''

---

* Sand Stone (மணற்பாறைகள்)

இதைக்கேட்டு திகைப்படைந்த உதயசந்திரன், ''அவரா? அவருடனா போக வேண்டும்? மன்னவா, அவர் மகா அயோக்கியர். சதிகாரர்'' என்றான் பதட்டத்துடன்.

''என்ன உளறுகிறாய்?''

''உளறவில்லை மன்னவா. நானே என் காதால் கேட்டேன்.''

''என்ன கேட்டாய்?''

''தங்களையும் இளவரசரையும் தீர்த்துவிட்டு பல்லவ அரியணையில் அமரப் போகிறாராம்.''

''அப்படியா? யாரிடம் இவ்வாறு சொன்னார்?''

''யாரோ ஒரு பெண்ணிடம்.''

இதைக் கேட்டு பெரிதாகச் சிரித்த மன்னர், ''இவ்வளவு தானா விஷயம்? நான் என்னவோ ஏதோ என்று நினைத்து விட்டேன்'' என்று சொன்னதோடு, ''சேனாதிபதி ஒரு பெண் பித்தர். பெண்களை மடக்குவதற்கு இப்படி ஏதாவது பொய்களைக் கூசாமல் சொல்வார். அதைப் பற்றி நாம் கவலைப்பட வேண்டியதில்லை. மற்றபடி அவர் மஹாவீரர். அவரது தந்தை வாதாபி கோட்டையைப் பிடிப்பதில் உறுதுணையாக இருந்தவர். அவரது அச்சாகவே இருப்பவர் பகதத்தர்'' என்றார்.

உதயசந்திரனால் நம்பவே முடியவில்லை.

''மன்னவா, தாங்கள் சொல்வது உண்மைதானா? எனக்கென்னவோ அப்படித் தோன்றவில்லை'' என்றான்.

''வீணாக அச்சப்படாதே உதயசந்திரா, இப்போது அவரை நீ சந்தித்துவிட்டு வா. உனக்கே புரியும்'' என்றார் மன்னர்.

''தங்களிடம் ஒரு விஷயம் கேட்கலாமா மன்னவா?''

''கேள்.''

''தங்கள் மகாராணியாருக்கு என்ன நேர்ந்தது? அன்று நான் அவரது நிலையைக் கண்டபோது மிகவும் கலங்கிவிட்டேன்.''

''அது ஒன்றும் தீர்க்க முடியாத பிரச்சனை இல்லை உதயசந்திரா, ராணிக்கு பிரம்மராட்சதன் பிடித்திருப்பதாக சமணமுனிவர் கௌதமர் கண்டறிந்திருக்கிறார். அகளங்கரின் சீடர் அவர். அவர் தான் இப்போது ராணியை கவனித்து வருகிறார். அவரது சடங்குகள் பூரணமடைந்து விரைவிலேயே ராணி குணமடைவாள்'' என்று சொன்ன மன்னர், ''இப்போதைக்கு உன் பணி விஷயம் ரகசியமாகவே இருக்கட்டும். சேனாதிபதியின் படைக்கு உன்னை ஓர் உபதலைவனாக நியமித்து ஆணையிட்டு

விட்டேன். சேனாதிபதிக்கும் தெரிவிக்கப்பட்டுவிட்டது. நீ போய் அவரைப் பார்த்து அறிமுகம் செய்து கொள். மற்றதை அவர் கவனித்துக் கொள்வார்'' என்றார்.

''மன்னவா, போர் எதிலும் கலந்து கொள்ளவில்லை. படையில் பணியாற்றிய அனுபவமும் இல்லை. வெற்று மனிதனான என்னை உபதலைவனாக நியமிக்கிறீர்களே?'' என்று கேட்டான் உதயசந்திரன்.

''அனுபவத்தால் சிலர் பதவியை அடைகிறார்கள். சிலரோ பதவியால் அனுபவப்படுகிறார்கள். நீ இரண்டாவது ரகம். அந்தச் சிந்தனையெல்லாம் வேண்டாம். அதோடு சேனாதிபதி கவனித்துக் கொள்வார். கவலைப்படாதே'' என்று சொல்லி விட்டு உதயசந்திரனை அனுப்பினார் மன்னர்.

உதயசந்திரனும் ஒருவித குழப்பமான மனநிலையிலேயே சேனாதிபதியிடம் சென்றான்.

சேனாதிபதியின் மாளிகை கிழக்கு ராஜவீதியில் இருந்தது. பலத்த பாதுகாப்புடன் இருந்தது.

உதயசந்திரன் சென்றபோது அங்கே இருந்த காரியஸ்தன் விவரத்தைக் கேட்டுக் கொண்டு உள்ளே சென்றுவிட்டு வெளியே வந்தான்.

''உங்களை மாலையில் சந்திப்பதாகத் தான் கால அட்டவணையில் இருக்கிறதாம். மாலையில் வரச் சொன்னார் சேனாதிபதி. இப்போது அவருக்கு முக்கிய அலுவல் இருக்கிறதாம். போகச் சொன்னார்'' என்றான் காரியஸ்தன்.

உதயசந்திரனுக்கு ஏமாற்றமாக இருந்தது.

சேனாதிபதியைப் பற்றி மன்னன் வைத்திருந்த அபிப்ராயத்திற்கும் தனக்கிருந்த அபிப்ராயத்திற்கும் இருந்த இடைவெளி அதிகமாகிக் கொண்டு போவதாகவே தோன்றியது உதயசந்திரனுக்கு.

எதுவும் சொல்லாமல் அகன்றான்.

முக்கிய அலுவலில் இருப்பதாகச் சொல்லப்பட்ட சேனாதிபதி விஜயகுமாரியை புரட்டி எடுத்துக் கொண்டிருந்தார்.

''இதென்ன அக்கிரமம் அதுவும் பட்டப்பகலில்?'' என்று சிணுங்கினாள் விஜயகுமாரி.

அவரோ, ''மிருகங்கள் கால நேரம் பார்ப்பதில்லை'' என்று சொல்லிவிட்டு செயலைத் தொடர்ந்தார்.

''நீங்களென்ன மிருகமா?'' என்று கேட்டாள் விஜயகுமாரி இன்ப அவஸ்தைகளைச் சகித்துக் கொண்டு.

''காமத்தில் ஈடுபடும்போது எல்லோருமே மிருகங்கள்தான்'' என்று சொல்லி மிருகமாகவே இயங்கலானார் சேனாதிபதி.

''ஐயோ! இதென்ன இப்படி? வேண்டாம்... விடுங்கள்'' என்று சிணுங்கிய விஜயகுமாரி அவரது சேஷ்டைகளை பேச்சில்தான் மறுத்தாளே தவிர செயலில் மறுக்கவில்லை.

காமத்தில் முனைப்பு காட்டும் போது வெளிப்படும் வார்த்தைகளுக்கு அர்த்தம் இருப்பதில்லை. பெரும்பாலும் அவை உளறல்களாகவும் பொய்களாகவும் தான் இருக்கும்.

இதை சந்தேகமற உணர்ந்திருந்த சேனாதிபதி இதுபோன்ற காலகட்டங்களில் பேசுவதில்லை. எங்கெங்கே எது தேவையோ அங்கங்கே அவற்றை மட்டுமே செய்வதென்பது அவரது வழக்கம்.

எனவே விஜயகுமாரியிடம் பேசவும் விரும்பவில்லை. அவள் பேசியதையும் விரும்பவில்லை. பேருக்கு அவளது கேள்விகளுக்கு சில சொற்களை வீசிய அவர் அவள் மேன்மேலும் பேசாத விதத்தில் அவளது உதடுகளை திசை திருப்பினார். உதடுகளை பேசமுடியாமல் செய்ய இப்படியொரு புதிய வித்தை இருந்ததை தற்போது தான் உணர்ந்தாள் விஜயகுமாரி. அது அவளுக்குப் பிடித்திருந்தது. 'சேனாதிபதி இதில் யமகாதகர்' என்று சொல்லிக் கொண்டு பிற விஷயங்களை மறந்துவிட்டு ஒரே விஷயத்தில் சொக்கிப் போய்க் கொண்டிருந்தாள்.

ஒரு கட்டத்தில், ''ஐயோ போதும். போதும்'' என்று அவள் சொன்னாள்.

''எனக்குப் போதாதுதான். ஆனால் நீயே போதும் என்று சொல்லிவிட்டாய். சரி.'' என்று சொல்லிவிட்டு விலகினார் சேனாதிபதி.

சுதாரித்துக் கொண்டு சாதாரண நிலைக்கு வர இருவருக்குமே சிறிது நேரமாயிற்று.

விஜயகுமாரி சற்றே மது அருந்தினாள். சேனாதிபதிக்கு அந்தப் பழக்கம் இல்லையாதலால் செம்பு நிறைய தண்ணீரை எடுத்துக் கடகடவென குடித்தார்.

அவள் மெல்ல பேச ஆரம்பித்து, ''என்ன சேனாதிபதியாரே, அடுத்த வாரம் சாளுக்கிய நாட்டிற்குப் புறப்பட முடிவாகிவிட்டது போலிருக்கிறதே'' என்று கேட்டாள்.

''நான்தான் சொன்னேனே? எல்லாம் திட்டப்படி தான் நடக்கிறது'' என்றார் சேனாதிபதி.

''தாங்கள் சொன்னதெல்லாம் நினைவிருக்கிறதா?''

''நான் சொல்வதை மறப்பது இல்லை. உனக்கு மறந்துவிட்டிருந்தால் நினைவுபடுத்திக்கொள்.''

''சேனாதிபதியாரே, நான் ராஜநாகத்தைப் போன்றவள்.''

''எப்படி வேண்டுமானாலும் இருந்து கொள். அது உன் விருப்பம்.''

''நான் சொல்வது வேறு. ராஜ நாகம் மிகவும் கொடியது. அதனுடன் யாராவது விளையாட முற்பட்டால் கொடூரமாகக் கொத்திவிடும்.''

''இவ்வளவு நேரமாக உன்னோடு நான் விளையாடத்தானே செய்தேன்? கொத்தவில்லையே?''

''சேனாதிபதி, விஜயகுமாரியிடம் விளையாடியதைச் சொல்லவில்லை. ராஜநாகத்துடன் விளையாடுவதைப் பற்றிச் சொல்கிறேன். இரண்டுமே வேறு வேறு. நீங்கள் என்னிடம் கூறியவற்றையெல்லாம் விளையாட்டாக எண்ணிவிட வேண்டாம் என்று எச்சரிக்கிறேன். என்னிடம் ஆசை காட்டி மோசம் செய்ய முயற்சிக்காதீர்கள்.''

''நீயாகவே சந்தேகித்துக் கொண்டு எச்சரிக்கை விடுப்பது அர்த்தமற்றது. கூடிய விரைவில் நீ பல்லவ அரியணையில் அமர்வாய்.''

''நீங்கள் இப்படிச் சொல்வதைக் கேட்கும் போது உடம்பெல்லாம் பூரிக்கிறது. பல்லவ அரியணையில் அமர்ந்தால் மயக்கம் வந்து விடுமோ என்று பயமாக இருக்கிறது.''

'ஆசையைப் பார்? பல்லவ அரியணையை பார்க்கக் கூட யோக்யதை இல்லாத உனக்கு இத்தனை பேராசையா? முட்டாள் பெண்ணே. இரு இரு. காஞ்சியை விட்டு புறப்படும்போது உன்னைக் களப்பலியாக்கிவிட்டுச் செல்கிறேன்' என்று உள்ளுக்குள் சொல்லிக் கொண்ட சேனாதிபதி ''மயக்க மடைந்தால் தெளிய வைக்க நானிருக்கிறேன். கவலைப் படாதே'' என்றார்.

☆

சேனாதிபதியை சந்திக்க முடியாத நிலையில் பௌர்ணமியைப் போய் பார்த்துவிட்டு வந்தாலென்ன என்று தோன்றியது உதயசந்திரனுக்கு.

பல்லவ மன்னனுக்கு வேண்டிய அந்தரங்கப் பணியாளனாக தான் ஆகிவிட்டதை அறிந்தால் பௌர்ணமியை விட அதிகமாக மகிழக்கூடியவள் யாரும் இருக்க முடியாது என்று கருதிய அவன் பாண்டவ தூதப் பெருமாள் கோயிலுக்குச் சென்றான்.

ஒரு சில நாட்களுக்கு முன்னால் உண்பதற்கு உணவில்லாத நிலையில் அங்கே சென்றதையும் தற்போது நல்லத் தெம்புடன் புரவியின் மீது ஆரோகணித்து வந்து இறங்கியதையும் உணர்ந்த அவன், ''எத்தனை வேகமாக என் வாழ்க்கையில் மாற்றங்கள் வந்துவிட்டன? அதோடு கனவிலும் கருத முடியாத நிலை யல்லவா இது?'' என்று சொல்லிக் கொண்டான்.

வித்தியாசமான நிலைமை ஆலயத்திலும் இருந்தது. ஆலயத்திற்கு வரும் பக்தர்களில் சிலர் காவலர்களாகி கையில் நீண்ட கழியுடன் ஆலயத்தைக் கண்காணித்து வந்தார்கள். அரசாங்கக் காவலர்கள் சிலரும் ஆலய வாசலில் ஆயுதப் பாணிகளாக நின்றிருந்தார்கள்.

பக்தர்களில் சிலர் உதயசந்திரனைக் கண்டதும் விசாரித்தார்கள். அன்போடு பேசினார்கள்.

''அந்த முரடர்கள் என்ன ஆனார்கள்?'' என்று கேட்டான் உதயசந்திரன்.

''அவர்களைக் கொன்றுவிடத்தான் அடித்தோம். பிறகுதான் யோசித்தோம். உயிரோடு பிடித்து ஒப்படைத்தால் கொள்ளையர் களைப் பற்றிய பல தகவல்கள் கிடைக்கலாம் என்று எண்ணி அவர்களைப் பிடித்து சிறையதிகாரிகளிடம் ஒப்படைத்து விட்டோம்'' என்றார்கள் பக்தர்கள்.

அர்ச்சகரும் அவனோடு மகிழ்ச்சியோடு பேசினார்.

''நான் சொன்னது பலித்துவிட்டது பார்த்தாயா? பாண்டவ தூதனை தரிசித்துவிட்டுப் போகிறவர்களுக்கு நல்ல காலம் வராமல் போனதில்லை. இது என் அனுபவம். என் பிள்ளை அரிச்சந்திரன் கூட நீலிக் கோட்டத்திற்குப் போய்விட்டான்'' என்றார்.

''பௌர்ணமி இருக்கிறாளா?''

''அவள் இல்லையே! அவள் காற்று மாதிரி. ஓரிடத்தில் நிற்கமாட்டாள். காக்கை மடுவிற்குப் போவதாகச் சொல்லி நேற்றே கிளம்பிவிட்டாள்.''

அர்ச்சகர் சொன்ன பதில் பெரும் ஏமாற்றத்தைத் தந்தது உதயசந்திரனுக்கு.

தன்னிடம் ஒரு வார்த்தைகூடச் சொல்லாமல் அவள் சென்றுவிட்டது அவனுக்குப் புதிராகத்தான் இருந்தது.

எனவே வருத்தத்துடன் அங்கிருந்து புறப்பட்டு காஞ்சி நகரை மீண்டும் ஒருமுறை - ஆனால் தனியாக - வலம் வந்தான்.

அராபியர் தலைவன் சுலைமான் தன்னை மந்திரவாதியாக அனுப்பி அரண்மனை விஷயங்களைத் துப்புத் துலக்கும்படிச் சொல்லியிருந்ததை உதயசந்திரன் செய்யவில்லை. தன்னை விட்டு தப்ப முடியாதென்றும் தனது ஒற்றர்களின் கண்காணிப்பு தொடர்ந்து இருக்கும் என்றும் எச்சரித்திருந்தான் அராபியர் தலைவன். ஆனால் அப்படியொரு கண்காணிப்பு தன் மீது இருப்பதாக உதயசந்திரனுக்குத் தெரியவில்லை. அந்தப் புரப்பகுதிக்கு வந்ததற்குப் பிறகிலிருந்து அகமதுவையோ முகமதுவையோ அவனால் காண முடியவில்லை. பல்லக்கையும் காணவில்லை. பல்லக்குத் தூக்கிகளையும் பார்க்க முடியவில்லை. தான் சுதந்திரமாக இருப்பதாகவே உணர்ந்தான்.

எதற்கும் சுலைமான் தங்கியிருந்த சிங்கமேடு பகுதிக்குச் சென்று பார்க்கலாம் என்று தோன்றியது அவனுக்கு. தன்னிடம் புரவி இருந்ததாலும் குறுவாளும் உடைவாளும் இருந்ததாலும் தைரியத்துடனேயே அங்கு சென்றான். ஆனால் அங்கே சுலைமான் இல்லை. சுலைமான் இருந்த இடம் கேட்பாரற்றுக் கிடந்தது. அந்தப் பகுதி முழுவதும் மீன் விற்கும் சந்தையாகக் காணப்பட்டது. மாமல்லபுரத்திலிருந்து கொண்டுவரப்பட்ட மீன் வகையறாக்கள் பலவும் அங்கே விற்கப்பட்டுக் கொண்டிருந்ததால் வர்த்தகர் கூட்டம் மிகுந்திருந்தது. அதே சமயம் பஞ்சம் காரணமாக வாங்குவோரின் எண்ணிக்கை குறைந்திருந்ததால் வணிகர்கள் அங்கே வந்திருந்த தனவந்தர்களை மொய்த்துக் கொண்டு மீன்களைத் தலையில் கட்ட முனைந்து கொண்டிருந்தார்கள். சுலைமானைப் பற்றி ஒரு சிலரிடம் விசாரித்தான் உதயசந்திரன். யாரும் அவனைப் பற்றி எந்தத் தகவலையும் தெரிவிக்கவில்லை.

அதற்கு மேலும் நேரத்தை வீணடிக்க விரும்பாத உதய சந்திரன் தன் இருப்பிடத்திற்கு வந்து நீராடிவிட்டு புதுத்தெம்புடன் சேனாதிபதியைச் சந்திக்கச் சென்றான்.

அப்போது கதிரவன் மேல் திசையில் நன்றாக இறங்கி மேகக்கூட்டங்களுக்குள் மறைந்துவிட்டதால் வானவெளி துக்கம் தாளாமல் துவண்டுவிட்டது போல் இருள் குவியத் தொடங்கியிருந்தது. சுற்றித் திரிந்து கொண்டிருந்தப்

பறவையினங்கள் ஆங்காங்கே பெருமரங்களில் திரும்ப வந்து தங்கி அதை அறிவிப்பது போல் கீச்கீச்சென்று எழுப்பிக் கொண்டிருந்த சப்தங்கள்கூட மங்கிக் கொண்டிருந்தன.

சேனாதிபதியின் மாளிகைக்குச் சென்றபோது அவர் அங்கில்லை. தும்பை வனத்திற்கு அருகில் இருந்த நீலிக் கோட்டத்திற்குச் சென்றிருப்பதாகவும் உதயசந்திரனை அங்கே வந்துவிடும்படி உத்தரவிட்டதாகவும் தெரிவித்தான் மாளிகையின் காரியஸ்தன்.

காஞ்சி மாநகரில் நீலிக்கோட்டங்கள் பல இருந்தன.* அங்கே படையில் சேரும் இளைஞர்களுக்குப் போர்ப்பயிற்சி அளிக்கப்பட்டு வந்தது. மன்னர் தன்னிடம் பேசியபோது நீலிக்கோட்டங்கள் காஞ்சிக்கு வெளியே ரகசியமாக இயங்குவதாகச் சொல்லியிருந்ததால் காஞ்சிநகருக்குள் தும்பை வனத்துக்கு அருகே இருந்த நீலிக்கோட்டம் மட்டும் எப்படி பகிரங்கமாக இயங்க முடியும் என்று தனக்குள் கேட்டுக் கொண்ட அவன் எதையும் பேசிக் கொள்ளாமல் நீலிக்கோட்டத்திற்குச் சென்றான்.

நீலிக்கோட்டம் காலியாக இருந்தது. சேனாதிபதியை தேடிக் கொண்டு உள்ளே சென்றான் உதயசந்திரன். அங்கே அவனை இருவர் வரவேற்றார்கள். ஒருவன் முகமது. மற்றொருவன் அகமது!

☆☆☆

* பக்கம் 2 "செங்கை மாவட்ட வரலாற்று கருத்தரங்கு" பதிப்பு டாக்டர்.இரா.நாகசாமி.



17 சோதனை மேல் சோதனை

''வா. உதயசந்திரா. நலமா?'' என்று பதட்டமில்லாமல் வினவினான் முகமது.

''உன்னைச் சுதந்திரமாக விட்டுவிட்டதாக கணக்குப் போட்டுவிட்டாயா?'' என்று கேட்டான் அகமது.

உதயசந்திரன் உணர்ச்சிவசப்படாமல், ''எங்கே இருக்கிறார் உங்கள் தலைவர்?'' என்று கேட்டான்.

''எங்களிடம் சிக்கிவிட்டதால் தலைவரைப் பற்றி விசாரிக்கிறாயா? தலைவரை யாரும் ஏமாற்ற முடியாது'' என்றான் முகமது.

''முட்டாள். தலைவரைப் பற்றி உங்களிடம் தான் கேட்க முடியுமே தவிர அமைச்சரிடமா கேட்க முடியும்? அதோடு நீங்கள் தான் என்னைச் சந்திக்க வேண்டுமே தவிர நான் எப்படி சந்திக்க முடியும்? எங்கே சந்திக்க முடியும்?'' என்று கேட்டான் உதயசந்திரன்.

''உண்மைதான்.'' என்று ஒப்புக்கொண்ட முகமது, ''தலைவர் உன்னை அழைத்திருக்கிறார். நாளை சந்திக்க வேண்டும்'' என்றான்.

''எங்கே?''

''அதே இடம். அதே மாளிகை.''

''எப்போது?''

''நாளை இரவு. இதே நேரம்.''

''சரி.''

உதயசந்திரன் சரி என்று சொல்லிவிட்டு அங்கிருந்து புறப்பட்டான்.

அவனுக்கு சுலைமானை விட சேனாதிபதியின் மீதுதான் கோபம் வந்தது.

'எதற்காக இவர் இப்படி அலைக்கழிக்கிறார்?' என்று கேட்டுக்கொண்ட அவன் நேராக அவரது மாளிகைக்கே சென்றான்.

உதயசந்திரனைக் கண்ட காரியஸ்தன், ''உடனே மாளிகையின் மாடிக்குச் செல். அங்கே இருக்கிறார் சேனாதிபதி'' என்றான்.

''இங்கே இருந்து கொண்டு எதற்காக நீலிக்கோட்டத்திற்குப் போகும்படிச் சொல்ல வேண்டும்?'' கேட்டான் உதயசந்திரன்.

''இந்தக் கேள்வியை அவரிடம் தான் நீ கேட்க வேண்டும்'' என்றான் காரியஸ்தன்.

உதயசந்திரன் எதுவும் பேசாமல் விடுவிடுவென மாளிகையின் மொட்டை மாடிக்குச் சென்றான். மாடி இருண்டு கிடந்தது.

''உதயசந்திரா, எடு உன் வாளை. தொடு போரை'' என்ற குரல் அவனுக்கு கட்டளையிட்டது.

அது சேனாதிபதியின் குரல்தான்.

அதை உறுதிப்படுத்திக் கொண்ட உதயசந்திரன், ''இங்கேயா போரிட வேண்டும்? இந்த இருட்டிலா? ஒன்றும் தெரிய வில்லையே சேனாதிபதி?'' என்று கேட்டான்.

''எனக்கு பதில் இங்கே எதிரி இருந்தால் இப்படிதான் கேட்பாயா?'' என்று கேட்டார் சேனாதிபதி.

அதைக் கேட்டதும் சுரீரென்றது உதயசந்திரனுக்கு. உடைவாளை உடனே உருவினான்.

சேனாதிபதியின் உருவத்தைக் கவனிப்பதை விட்டுவிட்டு அவரது அசைவை நுட்பமாக உணரமுற்பட்டு அதற்கேற்றபடி வாளைச் சுழற்றினான் உதயசந்திரன். சேனாதிபதி ஏற்கெனவே இருளில் இருந்தாராதலால் உதயசந்திரன் இருப்பதைக் காண முடிந்தது. எனவே அவர் சிரமப்படாமல் அவனைத் தாக்கினார். உதயசந்திரனுக்கு முதலில் சிரமமாக இருந்தாலும் இருட்டானது கொஞ்ச நேரத்திலேயே பழகிவிட்டபடியால் சுதாரித்துக் கொண்டு சரளமாகப் போரிட்டான். சேனாதிபதி ஹுங்கார மிட்டபடி குதித்துக் குதித்து போரிட்டார். அவரது வாள் பெரும்பலத்துடன் உதயசந்திரனின் வாளைத் தாக்கியது. காமத்தில் மட்டுமல்ல வாட்போரிலும் அவர் எமகாதகன் தான் என்பதை உணர்ந்து கொண்ட அவன் தன் திறமையையும் தந்திரத்தையும் காட்டத் தொடங்கினான். சரீர பலம் கொண்ட அவர் தனது வாளை இடிபோல் மோதுவதற்கு பிரயத்தனம் செய்து கொண்டு செய்தார். உதயசந்திரனோ அவரது வாளைச் சந்திக்காமல் போக்குக்காட்டிக்

கொண்டே இருந்தான். இதனால் பலமுடன் இறக்கப்பட்ட தனது வாள் இலக்கைத் தாக்காமல் போனதால் அவரது கைகள் சளைத்தன. அதிலிருந்தே உதயசந்திரனின் போர்த் தந்திரம் அவருக்கு விளங்கியது.

''போதும் நிறுத்து'' என்று குரல் கொடுத்த சேனாதிபதி, ''பந்தங்களையும் ஆசனங்களையும் கொண்டு வா'' என்று கீழே இருப்பவர்களுக்கு கேட்கும்படி பெரிதாகச் சத்தமிட்டார்.

உடனே காவலர்கள் இரண்டு ஆசனங்களைப் போட்டு விட்டு பந்தங்களை மாடி முழுவதுமாக நட்டுவிட்டுச் சென்றனர்.

தனது ஆசனத்தில் அமர்ந்து கொண்ட சேனாதிபதி ''நீயும் உட்கார்'' என்றார் உதயசந்திரனிடம்.

ஆசனத்தில் அமர்ந்தான் உதயசந்திரன். அதுவரை அவரது குரலை மட்டுமே கேட்டிருந்த அவன் முதன்முதலாக உருவத்தைக் கண்டான். சேனாதிபதி பகதத்தர் ஏறக்குறைய அரக்கனைப் போலவே பிரம்மாண்டவராக இருந்தார். எதிரியை அப்படியே தூக்கி வீசக்கூடியவரைப் போல தேகபலத்துடன் காணப் பட்டார். உடம்பெல்லாம் வழிந்து கொண்டிருந்த வியர்வையைப் பொருட்படுத்தாமல் பெருமூச்செறிந்து கொண்டிருந்தார்.

அவர் மீதான கோபம் உதயசந்திரனிடம் அப்படியே இருந்ததால் ''சேனாதிபதியாரே! எதற்காக என்னைத் தேவையில்லாமல் அலையவிட்டீர்கள்?'' என்று கேட்டான்.

அவர் குவளையில் இருந்த நீரை கடகடவென குடித்து விட்டு, ''ரொம்பவும் தான் அலைந்துவிட்டாயோ? ஆயிரம் யோசனை தூரத்திற்கு அலைந்திருப்பாயா?'' என்று உதாசீனமாகவே கேட்டார்.

'எல்லோரிடமும் இவருக்கு அலட்சியம்தானா?' என்று தனக்குள் கேட்டுக் கொண்ட உதயசந்திரன் ஏதோ பேச முற்பட்டபோது அவரே முந்திக்கொண்டு, ''திடீர் உப தலைவனான உனக்கு உப்பு பெறாத விஷயங்கள்கூடப் பெரிதாகத் தோன்றுகின்றன. உன்னைப்போல ஒரு வினாடியில் சேனாதிபதியானவனல்ல நான். சாதாரண வீரனாகப் படையில் வந்தேன். காவற்படை, தூசிப்படை, போர்ப்படை என பல்வேறு படைகளில் சாதாரண வீரனாகப் பணிபுரிந்து சாகசங்களைச் செய்து படிப்படியாக உயர்ந்து பதவிக்கு வந்த இருபது வருடங்களுக்குப் பிறகு சேனாதிபதியாக இருக்கிறேன். தெரியுமா?'' என்றார்.

உதயசந்திரன் கோபப்படவில்லை. ''உண்மைதான் சேனாதிபதி. உங்களது உழைப்பு என்னிடம் இல்லை. நீங்கள்

பட்டபாடுகளை நான் படவில்லை. அதிர்ஷ்டம் காரணமாக மாமன்னரால் உபதலைவனாக்கப்பட்டேன். நீங்கள் என்னை நீலிக்கோட்டத்திற்கு வரச் சொன்னதும் அங்கே நீங்கள் இல்லாமல் போனதும் மிகச் சிறிய விஷயங்கள். இவற்றைப் பெரிதாக எண்ணி உங்களிடம் கோபப்பட்டு கேள்வி கேட்டது சரியல்ல. என்னை மன்னித்துவிடுங்கள்'' என்றான் பணிவான குரலில்.

அவர், ''சரி எழுந்திரு. வாளை உருவிக் கொள்'' என்றார்.

அவனும் உருவிய வாளுடன் நின்றான்.

''நம்மைச் சுற்றி எத்தனைப் பந்தங்கள் இருக்கின்றன என்று சொல்'' என்றார் அவர்.

''முப்பது'' என்றான் உதயசந்திரன்.

''இப்போது நாம் போரிட வேண்டும். போரிட்டபடியே பந்தங்களை அடித்து வீழ்த்த வேண்டும். யார் அதிகப் பந்தங்களை வீழ்த்துகிறார்களோ அவரே வெற்றி பெற்றதாக அர்த்தம்'' என்று சொல்லிவிட்டு வாளை வீசிய சேனாதிபதி உடனடியாக ஒரு பந்தத்தை வெட்டிச் சாய்த்துவிட்டு அவனோடு மோதினார்.

உதயசந்திரனும் போரைத் துவக்கினான் என்றாலும் பந்தங்களை வீழ்த்துவதில் முயலவில்லை. அவரோடு மும்முரமாக மோதுவதிலேயே கவனம் செலுத்தினான். தனது வாள் வீச்சின் நுட்பத்தையும் வெளிப்படுத்தினான். அதை உணர்ந்த சேனாதிபதி, ''நிறுத்து'' என்றார்.

நிறுத்தினான்.

''நான் சொன்னது என்ன? நீ செய்வது என்ன? பந்தங்களை ஏன் வீழ்த்தவில்லை?'' என்று கேட்டார் சேனாதிபதி.

''ஐயா, பந்தங்களை வெட்டி வீழ்த்துவது வேண்டாத வேலை. அவற்றை வீழ்த்திவிட்டால் இங்கிருக்கும் வெளிச்சம் அகன்று இருட்டு தான் சூழும். அது எதற்கு? போரில் முனைப்பு காட்டுவதுதான் அர்த்தமுடைய செயல் என்பதால் அதில் முனைப்பு காட்டினேன்'' என்றான் உதயசந்திரன்.

''அடுத்த அலுவலுக்குப் போக வேண்டும். உனக்கு எவ்வளவு நேரம் ஓய்வு தேவைப்படும்?'' என்று கேட்டார் சேனாதிபதி.

''உங்களுக்கு ஓய்வு தேவைப்பட்டால் எடுத்துக் கொள்ளுங்கள். நான் காத்திருக்கிறேன்'' என்றான் உதயசந்திரன்.

''எனக்கா ஓய்வு கொடுக்கிறாய்? ஆணவக்காரனே! இப்போது நமக்குள் நடக்கப்போவது மல்யுத்தம். அது ஆரம்பிப்பதற்குள்

குலதெய்வத்தை வேண்டிக் கொள். மல்யுத்தத்தில் எலும்புகள் முறிந்து நீ மரணமடைய நேர்ந்தாலும் நேரலாம்'' என்றார் சேனாதிபதி.

அடுத்து இருவருக்கும் மல்யுத்தம் துவங்கியது. சேனாதிபதி மலை போல இருந்ததால் உதயசந்திரனால் ஈடுகொடுக்க முடியவில்லை. அதே நிலை தொடர்ந்தால் அவர் கூறியபடி எலும்புகள் நொறுங்கி மரணமடைவது உறுதி என்பதை உணர்ந்த அவன் இதுபோன்ற இக்கட்டான சந்தர்ப்பங்களில் வர்மக்கலைதான் உகந்தது என்று கருதினான்.

அவரது கழுத்துப் பகுதியில் இரண்டு நரம்புகளை அவன் அழுத்திவிட்டு அதேசமயம் தொடைப்பகுதியில் வெட்டுவது போல் கைகளால் தாக்கியதும் சேனாதிபதி திடீரென சிலிர்த்துக் கொண்டு மரக்கட்டையைப் போல விறைத்து விழுந்தார். நினைவு பறிபோயிற்று.

அதே நேரத்தில் -

''பிரமாதம். பிரமாதம். சேனாதிபதியையே வீழ்த்தி விட்டாயே? நீ யார்? உன் பெயரென்ன?'' என்று கேட்டபடி அங்கு வந்தாள் விஜயகுமாரி.

''நான் சாதாரண வீரன் தான் அம்மணி. என் பெயர் உதயசந்திரன்'' என்றான் உதயசந்திரன்.

''நீ செய்த போர்களை முதலிலிருந்து ரகசியமாகப் பார்த்து ரசித்தேன். உன் வீரம் மட்டுமல்ல உன் பேச்சும் பிரமாதமாக இருக்கிறது. உன்னைப் போன்றவனை நான் பார்த்ததில்லை. உன்னை எனக்கு மிகவும் பிடித்திருக்கிறது'' என்று சொன்ன விஜயகுமாரி ''சேனாதிபதியைக் கொன்றுவிட்டாயா?'' என்று கேட்டாள்.

''இல்லை. வர்ம அடிகளால் மயக்கமடையச் செய்திருக்கிறேன். இதோ இப்போது எழுப்பிவிடுகிறேன்.''

''இரு இரு. நானிங்கு வந்தது சேனாதிபதிக்குத் தெரிய வேண்டாம். நாளை இரவு என் இருப்பிடத்திற்கு நீ அவசியமாக வரவேண்டும்'' என்றாள் விஜயகுமாரி.

''எதற்கு?''

''நீ வந்தால் பேசிக் கொள்ளலாம்.''

''நாளை இரவு வேறு வேலையிருக்கிறது. அடுத்த நாள் வேண்டுமானால் வருகிறேன்.''

''பரவாயில்லை. அவசியமாக வா.''

''உங்கள் இருப்பிடம்.''

''புத்தர் சேரி. புது மாளிகை என்றால் குழந்தைக்குக் கூட தெரியும்'' என்று சொல்லிவிட்டு இருட்டைக் கிழிக்கும் மின்னலைப் போல சடாரென வெளியேறினாள்.

உதயசந்திரன் பிறகு சேனாதிபதிக்கு நரம்பு சிகிச்சை செய்து தெளிவடையச் செய்தான்.

கண் விழித்து எழுந்தபோது புத்துணர்வோடு இருப்பது போல் இருந்தது சேனாதிபதிக்கு.

''என்னை என்ன செய்தாய்?'' என்று கேட்டார்.

''வர்ம அடிகளை பிரயோகித்தேன்.''

''மல்யுத்தம் நடைபெறும்போது அதற்கு புறம்பாக வர்ம அடிகளை எப்படி நீ பிரயோகிக்கலாம்?''

''சேனாதிபதியாரே, நான் அப்படிச் செய்யாது போனால் நீங்கள் சொல்லியது போல நான் மரணமடைந்து விட்டிருப்பேன். மல்யுத்தமாக இருந்தாலும் நம்மிடையே சமபலம் இல்லை. அதோடு போர் என்று வந்துவிட்ட பின் எதிரியை வீழ்த்துவது எத்தனை முக்கியமோ அத்தனை முக்கியமானது தற்காப்பு. அதைத்தான் நான் செய்து கொண்டேன். தங்களைக் கொல்ல வில்லை.''

''ஏன் கொல்லவில்லை?''

''அதற்காக உங்களிடம் நான் தங்களிடம் வரவில்லை. தாங்கள் சேனாதிபதி. மாமன்னர் உங்களிடம் பணிபுரிவதற்காக என்னை அனுப்பினார். தாங்களோ போருக்கு அழைத்தீர்கள். தாங்கள் எதிரியாக இருந்திருந்தால் கொன்றிருப்பேன்.''

''ரொம்பவும் கர்வப்படாதே. இப்போதைக்கு நீ செல்லலாம். நாளை காலையிலிருந்து மாலை வரை நகர் முழுவதும் நீ ஒட்டகத்தில் பயணம் செய்ய வேண்டும். பயணம் செய்துவிட்டு இங்கே வா'' என்றார் சேனாதிபதி.

தன் இருப்பிடத்திற்கு உதயசந்திரன் வந்தபோது நள்ளிரவாகி விட்டது.

சேனாதிபதியைப் பற்றிய சிந்தனையில் சிறிது நேரம் கழித்து அவன் பிறகு உறங்கிப் போனான்.

காலையில் அவனது இல்லத்தின் முன்பு ஒட்டகம் ஒன்று தயாராக இருந்தது.

சேனாதிபதியின் காவலர்கள் அதைக் கொண்டுவந்ததாகத் தெரிவித்தான் பணியாள்.

எதற்காக ஒட்டகத்தின் மீது ஏறிக் கொண்டு ஒரு நாள் முழுக்கப் பயணம் செய்ய வேண்டும் என்பது உதயசந்திரனுக்குப் புரியவில்லை.

ஒட்டகத்தின் மீது அவன் அது வரையில் பயணம் செய்ததில்லை.

இருப்பினும் சுதாரித்துக் கொண்டு ஒட்டகத்தை உட்கார வைத்து அதன் மீது ஏறி அமர்ந்து பின் அதை எழ வைத்தான்.

முதுகில் அமர்வதற்கு நூலாசனம் ஒன்று போடப் பட்டிருந்தது.

ஒருவாறாக அந்த ஒட்டகத்தைப் பக்குவமாக இயக்கி நகரைச் சுற்றி வந்தான்.

நண்பகல் வேளையில் சத்திரம் ஒன்றுக்கு முன்னால் இறங்கி தானும் உண்டான். ஒட்டகத்திற்கும் உணவளிக்கச் செய்தான்.

இதே நேரத்தில் மன்னர் ராஜசிம்மரிடம் பேசிக் கொண்டிருந்தார் சேனாதிபதி.

''எப்படி இருக்கிறான் உதயசந்திரன்?'' என்று கேட்டார் மன்னர்.

''அந்தப் பிள்ளை நான் வைத்த சோதனைகளிலெல்லாம் தேறிவிட்டான் மகாராஜா. சட்டென்று கோபம் வருகிறது. அதேபோல் அதை அடக்கியும் கொள்கிறான். நான் சொல்வதைச் செய்யும்போது யோசிக்கிறான். என்னிடம் தவறிருந்தால் சுட்டிக்காட்டத் தயங்குவதில்லை. விஷயத்தைப் புரிந்து கொள்வதில் தீயைப் போல இருக்கிறான்'' என்றார் சேனாதிபதி.

''அவனை உங்களுக்கு உபதலைவனாக நியமித்தது சரியா?''

''அவன் தலைவனாவதற்கு தகுதி படைத்தவன். வயது தான் குறைவாக இருக்கிறது.''

''ஒட்டகப் பயணம் எதற்கு?''

''சொகுசாகப் பயணம் செய்து பழக்கப்பட்டவன். அவனுக்கு அதற்கு நேர்மாறான பயணத்தைப் புரிய வைக்க வேண்டும். அதனால்தான். ஒட்டகத்தின் மீது சவாரி செய்தால் உடம்பெல்லாம் உயிர் போகிற மாதிரி இருக்கும். அதை அவன் தாங்குகிறானா என்று பார்க்க விரும்பினான்.''

''நிச்சயமாகத் தாங்குவான். நான் தேர்ந்தெடுத்த எவனும் சோடை போனதில்லை'' என்று சொன்ன மன்னர் ''சாளுக்கிய

நாட்டுப் பயணம் பன்முகம் கொண்டது. நிச்சயமாக வெற்றி பெற வேண்டும். மற்ற விஷயங்கள் உங்களுக்கே தெரியும்'' என்றார். பிறகு அவனே தொடர்ந்து, ''சில விஷயங்களில் உதயசந்திரனை அவன் போக்கில் விடுங்கள்'' என்றார்.

''தங்கள் சித்தம்'' என்றார் சேனாதிபதி.

அன்று மாலை அவரது மாளிகைக்கு முன்னால் ஒட்டகத்தில் வந்து இறங்கினான் உதயசந்திரன்.

''பயணம் சுகமாய் இருந்ததா?'' என்று கேட்டார் சேனாதிபதி.

''ரொம்ப நாட்களாகவே ஒட்டகப் பயணம் செய்ய வேண்டும் என்ற ஆவல் இன்று நிறைவேறியது சேனாதிபதி'' என்றான் உதயசந்திரன்.

''நான் அதைக் கேட்கவில்லை. பயணம் சுகமாக இருந்ததா என்று கேட்டேன்.''

''சுகம் என்பது மனத்தைப் பொறுத்தது ஐயா. பயணத்தைப் பொறுத்தது. மனத்தில் எது இருக்கிறதோ அதுதான் விஷயங்களில் பிரதிபலிக்கும்'' என்றான் உதயசந்திரன்.

''சுற்றி வளைத்துப் பேசுவது எனக்குப் பிடிக்காது. சரி சரி. போய் வா. இரண்டு நாள் கழித்து எதற்கும் ஆயத்தமாக வா. சாளுக்கிய நாட்டிற்குப் புறப்பட வேண்டும்'' என்றார் சேனாதிபதி.

அன்றிரவு சுலைமானைத் தேடி சிங்க மேட்டிற்குப் போகலாமா வேண்டாமா என்று யோசித்தான் உதயசந்திரன்.

அவனைச் சந்திக்க வேண்டிய அவசியம் எதுவும் இல்லை.

இருப்பினும் சந்தித்துப் பார்க்கலாம் என்று தோன்றியது அவனுக்கு.

ஒட்டகப் பயணம் காரணமாக உடம்பெல்லாம் வதைத்ததால் புரவியைப் பயன்படுத்தாமல் சிங்கமேட்டிற்கு நடந்தே சென்றான் உதயசந்திரன்.

ஆனால் முகமதுவும் அகமதுவும் சொன்னபடி அங்கே இருந்த மாளிகையில் சுலைமான் இல்லை.

வாயிற்கதவு பூட்டியிருந்தது.

வெளியே நாலைந்து பிச்சைக்காரர்கள்தான் படுத்துக் கிடந்தார்கள்.

★★★



18 மீண்டும் சுலைமான்

''வேண்டாதவன் இல்லாமல் போனதே நல்லது'' என்று உதயசந்திரன் திரும்பி நடந்தபோது -

''அவன் போகிறான் தலைவரே'' என்றான் ஒரு பிச்சைக்காரன்.

''அவனை நம்பலாம் என்றுதான் தோன்றுகிறது'' என்றான் இன்னொரு பிச்சைக்காரன்.

பிச்சைக்காரன் வேடத்தில் இருந்த சுலைமான், ''எப்படிச் சொல்கிறாய்?'' என்று கேட்டான்.

''இங்கே வந்ததிலிருந்து தெரியவில்லையா? நம்மை மதித்து வரவேண்டிய அவசியம் அவனுக்கில்லையே'' என்றான் அதே பிச்சைக்கார வேடத்தில் இருந்த முகமது.

''அவன் குரான் மீது ஆணையிட்டிருக்கிறான். அந்த பயம் தான் அவனை வரவழைத்திருக்கிறது'' என்றான் சுலைமான்.

''தலைவரே! தாங்கள் சத்தியம் வாங்கியது குரானின் மீதல்ல. செங்கலின் மீது.''

''அது உனக்குத் தெரியும். அவனுக்கெப்படி தெரியும்?''

''தலைவரே, உதயசந்திரனின் அப்போதைய நிலை அனாதை நிலை. இப்போதைய நிலை அசரக்கூடிய நிலை. நாம் தான் பாதுகாப்பு கருதி அனாதையாக பிச்சைக்காரர்கள் வேடத்தில் இருக்கிறோம். அவனுக்குப் பின்னால் இப்போது பெருமலைகள் பலமாக இருக்கின்றன. உங்களைக் கண்டு அஞ்ச வேண்டிய அவசியமோ இங்கே வரவேண்டிய அவசரமோ அவனுக்கில்லை.''

''சரி, அவனைக் கூப்பிடு.''

பிச்சைக்கார வேடத்தில் இருந்த அகமது சென்று உதயசந்திரனை அழைத்து வந்தான்.

''உட்கார் உதயசந்திரா. நீ சந்திக்க வந்த சுலைமான் தான் நான். நாங்கள் வேடம் போட்டிருப்பது பாதுகாப்பிற்கு. நீ வருகிறாயா இல்லையா என்பதை கவனிப்பதற்கு'' என்றான் சுலைமான்.

மணலில் உட்கார்ந்து கொண்ட உதயசந்திரன், ''நான் இங்கே வரமாட்டேன் என்று எப்படி எதிர்பார்த்தீர்கள்?'' என்று கேட்டான்.

''துரோகிகள் வரமாட்டார்கள் அல்லவா?'' என்று கேட்டான் சுலைமான்.

''நான் துரோகியாகிவிட்டேன் என்பதுதான் உங்கள் தீர்மானமா?''

''அதிலென்ன சந்தேகம்? உன் நடவடிக்கைகள் எனக்குத் தெரியாது என்று நினைக்க வேண்டாம். மகாராணிக்கு மந்திரிக்க வேண்டிய நீ பாதியில் ஓடியதே அதற்கு அத்தாட்சி.''

''ஓடாமல் போயிருந்தால் அமைச்சரிடம் சிக்கியிருப்பேன். உங்களைப் பற்றிச் சொல்லியிருப்பேன். நீங்களும் சிக்கியிருப்பீர்கள்.''

''என்னைச் சிறையிட யாராலும் முடியாது.''

''என்னால் முடியும். இப்போதே முடியும்.''

''எப்படி?''

''நானிங்கு தனியாக வரவில்லை. என்னோடு ஐநூறு பேர் இருக்கிறார்கள். இப்போது இங்கே வணிகர்களாக இருக்கிறார்கள். நான் ஒரு குரல் கொடுத்தால் போதும். நீங்கள் அனைவரும் வளைக்கப்படுவீர்கள்.''

''இது துரோகச் செயல் இல்லையா?''

''உங்கள் சிந்தனை துரோகத்தைத்தவிர நல்ல விஷயங்களில் செல்லாது போலிருக்கிறது. குரானின் மீது சத்தியம் செய்து விட்டுப் போனவன் நான். அதை மீறுவேன் என்று நீ நினைத்ததே சத்தியத்தைப் பெறும் தகுதி உனக்கில்லை என்பதைத்தான் காட்டுகிறது. உனக்கு உதவுவதற்காக அரண்மனைக்குள் சென்ற நான் அங்கு நிலவும் நிலைமைகளுக்கேற்பத்தான் நடந்து கொள்ள முடியுமே தவிர நீ சொல்வதுபோல் நடந்து கொள்ள முடியாது. எப்படியானால் என்ன? முடிவு தானே முக்கியம்? தப்ப வேண்டிய நேரத்தில் தப்பினேன். சிக்க வேண்டிய நேரத்தில் சிக்கினேன். மன்னர் முன்பு நிறுத்தி வைக்கப்பட்டேன். ஒவ்வோர் இடத்திலும் சாமர்த்தியமாகச் செயல்பட்ட காரணத்தால்தான் அரண்மனை வட்டாரம் என்னை நம்புகிறது. அந்த நம்பிக்கையில்தான் எனக்கு ஐநூறு வீரர்களின் பாதுகாப்பு கிடைத்திருக்கிறது. என்னோடு

எப்போதும் வெவ்வேறு வேடங்களில் அவர்கள் இருப்பார்கள். நான் இப்போது உபதலைவன் பதவியில் இருக்கிறேன்.''

உதயசந்திரனின் இப்பேச்சு சுலைமானை அதிர வைத்தது. உதயசந்திரனை நம்பவும் முடியவில்லை. நம்பாமல் இருக்கவும் முடியவில்லை. தன்னை மரியாதையில்லாமல் அவன் ஒருமையில் பேசியதைக் கவனித்தபோது அவன் சொல்வது உண்மையாக இருக்கலாம் என்று தோன்றியது.

''நீ சொல்வதை என்னால் நம்ப முடியவில்லை'' என்றான் சுலைமான் அரைமனதோடு.

''அதைப் பற்றி எனக்கு கவலையில்லை'' என்றான் உதயசந்திரன்.

''இல்லை உதயசந்திரா. உன்னை நம்புகிறேன். ஆனால் நம்ப முடியவில்லை. ஆச்சரியமாக இருக்கிறது'' என்றான் சுலைமான்.

''உன் ஒற்றர்களைப் பற்றி பெரிதாகச் சொல்லிக் கொள்கிறாயே அவர்களுக்கு நான் உபதலைவன் ஆனது தெரியாதா? போய் விசாரித்து தெரிந்து கொள். நான் புறப்படுகிறேன்.''

''எங்கே? அரண்மனைக்கா?''

''பிறகு? உன்னுடன் இங்கே பிச்சைக்காரன் வேடத்தில் இருக்கச் சொல்கிறாயா? அடுத்த வாரம் சாளுக்கிய நாட்டை நோக்கி படை செல்கிறது. நான் உபதலைவனாகச் செல்கிறேன். எனக்கு நிறைய வேலை இருக்கிறது.''

''அரண்மனை செய்தி என்னவென்று சொல்ல வில்லையே!''

''நீ தான் என்னையே நம்பத்தயாராக இல்லையே! என் செய்தியை மட்டும் எப்படி நம்புவாய்?''

''செய்தியைச் சொல். நம்புவதும் நம்பாததும் என் பொறுப்பு.''

''என்னை நம்பாத உன்னிடம் எதற்காக நான் சொல்ல வேண்டும்? ஒன்றை நீ நன்றாகத் தெரிந்து கொள். இப்போது உன் பிடியில் நானில்லை. என் பிடியில் தான் நீ இருக்கிறாய். உன்னை லட்சியம் செய்ய வேண்டிய அவசியம் எனக்கில்லை. புனித குரான் மீது செய்த சத்தியம் காரணமாகத்தான் நான் உன் பக்கம் இருக்கிறேன். உனக்கு உதவுகிறேன். இந்த நிலையில் என்னை நம்புவதற்கு நீ தயங்கினால் உனக்கு உதவ வேண்டிய கட்டாயம் எனக்கில்லை. நம்பாதவர்கள் வாங்கும் சத்தியத்திற்கு நான் கட்டுப்பட வேண்டியதில்லை.''

உதயசந்திரனின் உறுதியான பேச்சு சுலைமானுக்கு இருந்த கொஞ்ச நஞ்ச சந்தேகத்தையும் நீக்கியது.

''உன்னைப் பூரணமாக நம்புகிறேன் உதயசந்திரா. அரண்மனை செய்தி என்ன என்பதைச் சொல்.''

சொன்னான் உதயசந்திரன்.

சுலைமான் உண்மையாகவே அதிர்ந்து போனான்.

★

சுலைமானைச் சந்தித்துவிட்டு வந்த விஷயத்தை மன்னனிடம் தெரிவித்துவிடுவது நல்லது என்று தீர்மானித்த உதயசந்திரன் மறுநாள் முதல் வேலையாக மன்னனைச் சந்தித்து தெரிவிக்கவும் செய்தான்.

''இனிமேல் சுலைமானை எதற்காகவும் நீ சந்திக்க வேண்டியதில்லை உதயசந்திரா'' என்றான் மன்னர்.

''சுலைமானிடம் ஒரு பொய்யைச் சொல்லிவிட்டேன் மன்னவா.''

''என்ன அது?''

''அராபிய நாட்டைத் தாக்கப் பல்லவர் கடற்படை தீர்மானித்திருக்கிறது என்று சொன்னேன். சுலைமான் அதைச் சிறிதும் எதிர்பார்க்கவில்லை. அதிர்ந்து போனான்.''

''நீ சொன்ன பொய் உண்மையாக மாறினால் வியப்பதற் கில்லை. உன் வாழ்க்கையின் இரண்டாவது பாகம் அதுவாகவும் இருக்கலாம்'' என்று சொன்ன மன்னர், ''சாளுக்கிய படையெடுப்பு பற்றிய சிந்தனைகளை வளர்த்துக் கொள். சாளுக்கிய நாட்டு பூகோள அமைப்புகளை அறிந்து கொள். உனக்கு ஏற்கெனவே பழக்கப்பட்ட வழிகாட்டி சத்தியசந்தனிடம் இது விஷயமாகப் பேசு'' என்று சொல்லி விடை கொடுத்தார்.

மன்னரிடமிருந்து விடைபெற்றுக் கொண்டு இல்லத்திற்குத் திரும்பியபோது அங்கே தன் தந்தை காத்திருந்ததைக் கண்டு வியந்தான் உதயசந்திரன்.

மன்னனிடம் தொடர்பு ஏற்பட்ட பிறகு ஏறக்குறைய தன் தந்தையின் நினைப்பே அவனிடம் இல்லாதிருந்தது. அதை தற்போது அவரை நேரில் கண்டபோதுதான் அவன் உணர்ந்தான். தனது பிறப்பு குறித்த கவலையை மன்னருக்கு முன்னால் அவன் விட்டிருந்தாலும் தந்தையைக் கண்டதும் அந்த நினைவு வந்து பற்றிக் கொண்டது. இவர் உண்மையிலேயே தன்

தந்தையில்லையோ என்ற எண்ணம் ஒரு கணம் தோன்றி மறைந்தது. 'எப்படி இந்த எண்ணம் எனக்கு வந்தது. யாரோ ஒருவன் திடீரென சொன்ன ஒரு வார்த்தையை வைத்துக் கொண்டு பல ஆண்டுகளாக என்னைக் கண்ணும் கருத்துமாய் வளர்த்து வீரனாக ஆளாக்கியவரைப் போய் சந்தேகிப்பது எப்படி நியாயமாகும்? முகம் தெரியாத எவர்களுக்காகவோ இவரை புறக்கணிக்க நினைப்பது எப்படி தர்மமாகும்?' என்று தன்னை எண்ணி வெட்கப்பட்டுக் கொண்ட உதயசந்திரன் அவரை வரவேற்று உள்ளே அழைத்துச் சென்றான்.

அவர் உள்ளே வந்து அமர்ந்து கொண்டதும், ''நாளை நான் நாகைக்குப் புறப்படுகிறேன்'' என்றார்.

அவர் அப்படி திடீரென ஊருக்குப் புறப்படுவது பற்றி பேசியது அவனுக்கு என்னவோ போலிருந்தது.

''என்ன சொல்கிறீர்கள் தந்தையே? வந்ததும் வராததுமாக செல்வதைப் பற்றிச் சொல்கிறீர்களே?'' என்று வினவினான்.

''நான் வந்த வேலை முடிந்துவிட்டது. கவலையும் நீங்கிவிட்டது. எனவே ஊருக்குத் திரும்ப வேண்டியதுதான்'' என்றார் அவர்.

''என்னைப் பற்றிய கவலையோடு காக்கை மடுவிற்கு வந்தீர்கள். ஏன் எதற்கு என்பது தெரியவில்லை. அதற்குள் கவலை நீங்கிவிட்டதாகச் சொல்கிறீர்கள். எனக்கு ஒன்றும் புரியவில்லை தந்தையே.''

''உதயசந்திரா, எல்லா விவரங்களையும் மாமன்னர் உன்னிடம் விளக்கிச் சொல்லிவிட்ட பிறகு நான் கூறுவதற்கு என்ன இருக்கிறது? ஒரு மாதத்திற்கு முன்பு மாமன்னர் என்னை காஞ்சிக்கு வந்து சந்திக்கும்படி கட்டளையிட்டார். நானும் வந்து சந்தித்தேன். 'உன் மகன் உதயசந்திரன் பெருவீரனாக இருக்கிறான். அவன் எனக்கு வேண்டும். தருகிறீர்களா?' என்று கேட்டார். பதில் கூற முடியாமல் தயங்கிய என்னைப் பார்த்து 'என்ன தயக்கம்?' என்று கேட்டார். 'எனக்கிருப்பது அவன் ஒருவன்தான். அவனை விட்டுவிட்டு நானெப்படி இருக்க முடியும்?' என்று கேட்டேன். 'உங்களுக்கென்ன குறை? ஏதாவது இருந்தால் நான் நிவர்த்தி செய்கிறேன். மற்றபடி வீர வாலிபர்கள் நாட்டின் சேவைக்கு உரியவர்கள். அவர்களை இல்லத்திற்குள்ளேயே கட்டிப் போடக்கூடாது' என்றார். அதற்குப் பிறகு என்னால் பேச முடியவில்லை. நாடு உன்னை அழைக்கிறது. மாமன்னர் உன்னை

அழைக்கிறார். காலம் உன்னை அழைக்கிறது என்று கருதிய நான் சம்மதித்தேன். அதற்கு பிறகு அவர் சொல்லியபடியே காக்கை மடுவிற்கு அனுப்பினேன். உன்னை அனுப்பிவிட்டு மனம் பொறுக்காத நான் காக்கை மடுவிற்கு வந்தேன். அங்கே இஸ்லாமியர் இருவர் தற்செயலாகப் பேசியதைக் கேட்டேன். உன்னைக் காக்கை மடுவிலிருந்து கடத்திக் கொண்டு போக அவர்கள் திட்டமிடுவதை அறிந்தேன். எனக்கு அச்சமாகி விட்டது. மன்னர்பிரான் விரும்பியது போல் நடக்காமல் போய்விடுமோ என்ற கவலை உண்டாயிற்று. அதை உன்னிடம் தெரிவித்து உன்னை நேரடியாக காஞ்சிக்கு அழைத்துச் செல்ல முடிவு செய்தேன். அதற்கு விஹார ஆட்களை நம்பாமல் நானே உன்னைச் சந்தித்து அங்கிருந்து தப்பி வரும்படியும் கணிகிலுப்பை கிராமத்திற்கு வந்து என்னைச் சந்திக்கும்படியும் சொன்னேன். நீயோ என்னை சந்திக்கவில்லை. பதறிப்போன நான் காஞ்சிக்கு வந்து மன்னரிடம் விஷயத்தை தெரிவித்தேன். 'நீங்கள் கவலைப்பட வேண்டாம். நான் கவனித்துக் கொள்கிறேன்' என்றார் மன்னர். ஆனாலும் காஞ்சியிலேயே சில நாட்கள் இருந்தேன். உன்னைப் பற்றி அறிந்து கொள்வதற்கு. நேற்று மன்னரின் மூலம் அனைத்து விவரங்களையும் அறிந்தேன். என் கவலை நீங்கியது. ஆகவே நாகைக்கு கிளம்ப முடிவு செய்து உன்னிடம் சொல்லிவிட்டுப் போகவே இங்கு வந்தேன்'' என்று விளக்கமாகச் சொல்லிவிட்டு நிறுத்திய அவனது தந்தை சிறது நேரம் கழித்து, ''உதயசந்திரா! உன்னைப் பிரிய எனக்கு மனமில்லை என்றாலும் என் பிரியப்படிதான் உன் எதிர்காலம் அமையப் போகிறது என்பதை உணர்ந்ததும் மகிழ்ச்சியே அடைகிறேன். சாளுக்கிய நாட்டிற்குப் போகப் போவதாகக் கேள்விப்பட்டேன். அதற்காகவும் எனக்கு மகிழ்ச்சிதான். தனக்காகப் பயன்படும் மகனைவிட நாட்டிற்காகப் பயன்படும் மகனையே தந்தை விரும்ப வேண்டும். அதுதான் நடந்திருக்கிறது. இனி நீ பல்லவ சாம்ராஜ்யத்திற்குச் சொந்தம். அதன் சேவைக்காக அர்ப்பணித்துக் கொள்ள வேண்டியவன் நீ. இதை உன் உயிர் உள்ளவரை மறந்துவிடாதே'' என்றார்.

அவரது பேச்சு உதயசந்திரனுக்கு ஆறுதலாகவும் ஆற்றுப் படுத்துவதாகவும் இருந்தது.

''மிகவும் மகிழ்ச்சி தந்தையே. நான் எதிர்பார்த்துக் கொண்டிருந்ததும் நாட்டுச் சேவைதான்'' என்று சொன்ன அவன் அவருக்கு உணவளித்து நாகைக்கு அனுப்பி வைத்தான்.

இருவருமே பிறப்பு ரகசியம் பற்றிய பேச்சை எடுக்க வில்லை.

☆

தந்தை போனதிற்குப் பிறகு நீண்ட நேரம் சிந்தனை வயப்பட்டிருந்தான் உதயசந்திரன். மகத்தான சேவையை நோக்கிச் செல்லப் போகும் ஆர்வம் அவனை பரவசப் படுத்தியது. அச்சேவைக்கான வாயிற்கதவுகள் திறக்கப்பட்ட மாதிரியும் மன்னரே வந்து அந்த வாயிலுக்கு வந்து வழியனுப்புவது மாதிரியும் கனவுக் காட்சிகள் அவனது மனக்கண்களில் தோன்றின. அக்காட்சிகளுக்கிடையில் அவனது மனத்தைக் கவர்ந்த பௌர்ணமியின் உருவம் தோன்றியது.

''ஆகா! என் மனத்தைக் கொள்ளை கொண்டவளைக் காண முடியவில்லையே! சொல்லப்போனால் அவள் தான் அவன் மீது ஆசைப்பட்டாள். துறவறம் மேற்கொள்ளக் கூடாதென்று சொல்லி கட்டாயப்படுத்தி காதல் கொள்ளும்படிச் செய்தாள். தனக்கு முன்னாலேயே காஞ்சிக்கு வந்து காத்திருந்தாள். அப்படிப்பட்டவள் நூலறுந்த பட்டமாக சொல்லாமல் கொள்ளாமல் பாதியிலேயே காக்கை மடுவிற்குப் போய் விட்டாளே ஏன்? காஞ்சியில் தானிருக்கும்போது காக்கை மடுவில் என்ன இருக்கிறது அவளுக்கு?' என்றெல்லாம் நினைத்த அவன் 'காக்கை மடுவிற்கே போனாலென்ன?' என்று யோசித்தான்.

என்ன காரணத்தாலோ காக்கை மடு பக்கம் செல்வதற்கு அவனுக்கு விருப்பமாக இல்லை. அவளை எப்படிச் சந்திப்பது என்று யோசிக்க முற்பட்டபோது விஜயகுமாரி அவனை தனது இருப்பிடத்திற்கு வரும்படி சொன்னது நினைவிற்கு வந்தது.

அவள் விஜயகுமாரிதான் என்பது அவனுக்கு உறுதியாகத் தெரியாது. அதேசமயம் அவள் சேனாதிபதியின் மாளிகையில் இருந்ததாலும் அவரைப் பற்றி பேசியதாலும் அவரோடு சரசமாடிய பெண் அவளாக இருக்கலாம் என்று உத்தேசமாக நினைத்தான்.

அவளை எதற்காகப் போய் பார்க்க வேண்டும் என்று தான் முதலில் நினைத்தான் உதயசந்திரன்.

அவளுக்கும் அரசியல் நடப்புகளுக்கும் ஏதாவது தொடர்பு இருக்கலாம் என்ற நினைப்பு ஆவலாக மாறியது. அவளைச் சந்திக்கப் புறப்பட்டான்.

'புத்தர் சேரி - புது மாளிகை' என்று அவள் கூறிய விலாசத்தைத் தேடி புத்தர் சேரிக்குச் சென்றான்.

அவன் புறப்பட்டபோது இரவு நேரம் மலர்ந்திருந்தது.

புத்தர் சேரியானது முழுக்க முழுக்க பௌத்தர்களின் வாழ்விடமாக காஞ்சி நகரின் பிரதானப்பகுதியிலே இருந்தது. பௌத்தர்களின் தலைமைப் பீடமான ராஜ விஹாரம் அங்கே இருந்தது. விஹாரத்திற்கு முன்னால் அசோகர் காலத்து ஸ்தூபம் ஒன்று கம்பீரமாகக் காணப்பட்டது. புத்த பிட்சுக்களே அங்கே தென்பட்டார்கள். ஒரு பெண்மணி கூட தென்படாத அப்பகுதியில் விஜயகுமாரி எப்படி இருப்பாள் என்று யோசித்த உதயசந்திரன் பிட்சு ஒருவரிடம் விசாரித்தான்.

''விஜயகுமாரியின் இல்லமா? நீ போக வேண்டிய இடம்தான். இந்த வீதியின் கடைசி இல்லம் அவளுடையது தான். சந்தோஷமாகச் செல்'' என்றார் பிட்சு.

''ஐயா, சந்தோஷமாகச் செல்லும்படிச் சொல்கிறீர்களே அது ஏன்?'' என்று கேட்டான் உதயசந்திரன்.

''அப்பனே! விஜயகுமாரியின் இல்லத்திற்கு துறவிகளான நாங்கள் போக முடியாது. உன்னைப் போன்ற இளம் வாலிபர்கள் தான் போக முடியும். அவளும் நல்ல அழகி. சந்தோஷத்திற்கு என்ன குறைச்சல்?'' என்றார் பிட்சு.

'இந்த பிட்சு விஷமக்காரராக இருப்பார் போலிருக்கிறது' என்று உள்ளுக்குள் சொல்லிக் கொண்டே உதயசந்திரன் வீதியின் கடைசி இல்லத்தை அடைந்தான்.

இல்லமானது புதுப்பிக்கப்பட்டு தீப ஒளியில் பிரகாசமாக இருந்தது. 'இதனால் தான் இது புது மாளிகை என்று அழைக்கப்படுகிறதோ' என்று எண்ணிக் கொண்ட உதயசந்திரன் சாத்தியிருந்த மாளிகையின் கதவை தட்டினான்.

கதவு திறந்தது.

உள்ளேயிருந்து விஜயகுமாரி வரவில்லை.

பிட்சு ஒருவர் தோன்றினார்.

☆☆☆



19 நீருக்குள் நெருப்பு

விஜயகுமாரிக்கு பதில் பிட்சு வந்ததைக் கண்டு சற்றே தடுமாறிய உதயசந்திரன், ''உங்களை இங்கே எதிர்பார்க்க வில்லை'' என்றான்,.

பிட்சு சிரித்தார்.

''ஏன் சிரிக்கிறீர்கள்?''

''என் இல்லத்திற்கு வந்துவிட்டு என்னை எதிர்பார்க்க வில்லை என்று சொன்னால் சிரிக்காமல் என்ன செய்வது?''

''இது உங்கள் இல்லமா?''

''ஆமாம்.''

உதயசந்திரனுக்கு மேலே என்ன பேசுவதென்று தெரியவில்லை.

அதைக்கண்ட பிட்சு சற்றே அனுதாபப்பட்டவராய், ''என்ன குழப்பம் உனக்கு?'' என்று வினவினார்.

''குழப்பம் எதுவுமில்லை. தவறான விலாசத்திற்கு வந்துவிட்டேன் போலிருக்கிறது.''

''நீ தேடி வந்த விலாசம் என்ன?''

''புத்தர் சேரி. புது மாளிகை.''

''அது இதுதான்.''

''தெருவின் ஆரம்பத்திலேயே உங்களைப் போன்ற பிட்சு ஒருவரிடம் உறுதிப்படுத்திக் கொண்டுதான் வந்தேன்.''

''பிறகென்ன குழப்பம்?''

''இங்கே நீங்கள் இருப்பதாக பிட்சு கூறவில்லை. விஜயகுமாரி என்று ஒரு....''

''விஜயகுமாரியா? அவள் இங்கே தான் இருக்கிறாள்?''

கீரியும் பாம்பும் எப்படி சேர்ந்திருக்க முடியும் என்று நினைத்த உதயசந்திரன், ''இது உங்கள் இல்லம் என்று தானே சொன்னீர்கள்?'' என்று கேட்டான்.

''இப்போதும் சொல்கிறேன். இது என் இல்லம்தான். விஜயகுமாரி வாடகைக்கு குடியிருக்கிறாள்.''

''இந்த பிட்சுவும் சரியான விஷமிதான். நேரடியாகச் சொல்ல வேண்டிய விஷயத்தை தேவையில்லாமல் சுற்றி வளைத்துச் சொல்லி தடுமாற வைத்துவிட்டாரே?'' என்று நினைத்த உதயசந்திரன் ''பஞ்சும் நெருப்பும் எப்படி பற்றிக் கொள்ளாமல் இருக்கும்?' என்று தனக்குள் கேட்டுக் கொள்ளவும் செய்தான்.

அவனது ஊகங்களை ஓரளவுக்கு யூகித்துக் கொண்ட பிட்சு லேசாகச் சிரித்தார்.

''மாடிக்குச் செல். அங்கேதான் அவள் இருக்கிறாள்'' என்று சொல்லி படிக்கட்டுகளைக் காட்டிவிட்டு உள்ளே சென்றார்.

பிட்சுவை சபித்துக் கொண்டே மாளிகையின் மாடிக்குச் சென்றான் உதயசந்திரன்.

அவன் ஏறி வருவதைக் கண்ட விஜயகுமாரி வாயிலுக்கு வந்தாள். அபிநயம் பிடித்த நாட்டிய மங்கையைப் போல நின்றாள். அவனை வரவேற்காமல் சிலைபோல் அசையாதிருந்தாள்.

அவளது கோலம் அழகுக் கோலமாய் இருந்தது.

கவர்ச்சிகரமான அழகுகளை யெல்லாம் கொள்ளையடித்துக் கொண்டு வந்து தனக்குள்ளே பிரவகித்துக் கொண்ட மாதிரி கவர்ச்சி சிலையாகவும் கவர்ச்சி அலையாகவும் காட்சியளித்தாள் விஜயகுமாரி.

பந்தங்களும் எண்ணை விளக்குகளும் பல இடங்களில் ஏற்றப்பட்டிருந்ததால் அந்த ஒளியில் தங்கப் பதுமையாக காட்சியளித்தாள் அவள்.

தனக்கு முன்னே வந்து நின்ற உதயசந்திரனைப் பார்த்து, ''எப்படி இருக்கிறேன் நான்? அழகாய் இருக்கிறேனா?'' என்று கேட்டுவிட்டு, அவனை அலட்சியமாகப் பார்த்தாள்.

''உன் அழகைப் பற்றி நான் அபிப்ராயம் சொல்வதால் என்ன வந்துவிடப் போகிறது?'' என்று கேட்டான் உதயசந்திரன்.

''கேட்கும்போது சொல்வதற்கென்ன? சொல்லலாமே'' என்றாள் விஜயகுமாரி.

''நான் அபிப்ராயம் சொன்னாலும் சரி சொல்லாவிட்டாலும் சரி உன் அழகில் எதுவும் குறைந்துவிடப் போவதில்லை. அது இயற்கையாகவே உன்னிடம் இருக்கிறது'' என்றான் உதயசந்திரன்.

''அழகாகப் பேசுகிறாய். எனக்குப் பிடித்தமாதிரி பேசுகிறாய். உள்ளே வா. அந்த ஆசனத்தில் உட்கார்'' என்று சொல்லிவிட்டு

கவர்ச்சிகள் குலுங்க நடந்து உள்ளே சென்று ஆசனத்தில் அமர்ந்தாள்.

''நீ வருகிறாய் என்பதால் நான் நிறைய ஒப்பனைகளை செய்து கொண்டேன்'' என்றாள் அவள் பெருமையுடன்.

''அனாவசியமான வேலை'' என்றான் உதயசந்திரன்.

அவளது முகம் சுருங்கியது.

''என்ன சொல்கிறாய்?''

''இயற்கையான அழகிற்கு ஒப்பனைகள் எதற்கு? அவை செயற்கை அல்லவா?''

அவளது முகம் மலர்ந்தது.

''சமத்காரமான பேச்சு உன் பேச்சு'' என்றாள்.

''இல்லை.''

அவளது முகம் சுருங்கியது.

''என்ன பேசுகிறாய் நீ?''

''நான் சமத்காரமாகப் பேசவில்லை. உண்மையைச் சொல்கிறேன்.''

அவளது முகம் மலர்ந்தது.

''உன் வாள் வீச்சைப் போலவே வாய் வீச்சும் இருக்கிறது உனக்கு. என் அழைப்பை ஏற்று வந்ததற்கு மிகவும் நன்றி. என் அழைப்பை எப்படி ஏற்றாய்?''

''மறுப்பதற்குக் காரணம் எதுவும் இல்லாததால்.''

கலகலவென்று சிரித்தாள் விஜயகுமாரி.

''இதுபோன்ற பேச்சுக்களை நான் கேட்டதில்லை'' என்றாள் சந்தோஷத்துடன்.

''பேச்சுக்கள் தேவையற்ற இடங்களில் இருப்பவர்களிடம் பேசுவதற்கு யார் விரும்புவார்கள்?''

தன்னைப் பற்றி அவனுக்குத் தெரிந்தவிட்டதோ என்று நினைத்த அவள், ''நீ மட்டும் எப்படி விரும்பிப் பேசுகிறாய்?'' என்று கேட்டாள்.

''நான் இங்கே எதையும் எதிர்பார்த்து வரவில்லை. ஆகவே இயல்பாகப் பேசுகிறேன்'' என்றான் உதயசந்திரன்.

''உதயசந்திரா! என்னை இந்தக் கோலத்தில் கண்ட உனக்கு பேசுவதில்தான் விருப்பமாக இருக்கிறதா? வேறு எதிலும் இல்லையா?''

''என்னை எதற்காக அழைத்தாய்?'' என்று பேச்சை மாற்றினான் உதயசந்திரன் ஓரளவிற்கு அவளது உள்ளுணர்வு களைப் புரிந்து கொண்டவனாய்.

''உன்னை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை!'' என்றாள் அவள்.

''புரிந்து கொள்ளாமலா இங்கே வரும்படிச் சொன்னாய்?''

''புரிந்து கொள்வதற்காகத்தான் உன்னை அழைத்தேன்'' என்று சொன்ன அவள் ''ஏதாவது பானம் பருகுகிறாயா? இங்கே எல்லாவித பானங்களும் இருக்கின்றன'' என்றாள்.

''தண்ணீர் கொடுத்தால் போதும்?''

''தண்ணீரை விட உயர்ந்த பானங்கள் இருக்கின்றன. அமிர்தம்கூட இருக்கிறது.''

''எங்கும் கிடைக்கும் நீரை விரும்புவதுதான் சரியானது. அமிர்தத்திற்கு ஆசைப்பட்டால் அது எங்கேயோதான் கிடைக்கும். அதோடு தண்ணீர் மட்டுமே நிர்மலமானது.''

உதயசந்திரனின் பேச்சைக் கேட்டு அசந்து போனாள் விஜயகுமாரி.

இவ்வளவு கச்சிதமாகப் பேசும் இவனிடம் தனது ஆசைகள் நிறைவேறுமா என்ற சந்தேகம் அவளிடம் துளிர்த்தது.

மறுநிமிடமே தனது அழகைப் பற்றிய ஆணவம் ஐயத்தை அகற்றியது.

'அழகிற்கும் பெண்ணின் அங்கங்களுக்கும் அடி பணியாதவன் எங்கும் இல்லை' என்று நினைத்துக் கொண்டு அந்த நினைப்பை வெளிப்படுத்துகிற மாதிரி ஒரு சிரிப்பு சிரித்தாள்.

அவனைத் தன் வசமாக்கி வீழ்த்தும் வரை அவனிடம் தனது திட்டம் பற்றி எதுவும் பேசக்கூடாது என்றும் தீர்மானித்துக் கொண்டாள்.

''உதயசந்திரா, நீ என் இல்லத்திற்கு வரும்போது இந்த புத்தர் சேரியில் என்ன கண்டாய்?'' என்று கேட்டாள் ஏதோ பீடிகை போடுவதுபோல.

அவனுக்கும் அது விஷயமாக வியப்பாகவே இருந்ததால் அது பற்றி தெளிவுபடுத்திக் கொள்ள விரும்பி ''புத்தர் சேரி முழுவதும் புத்த பிட்சுக்கள் நிறைந்து காணப்பட்டார்கள்'' என்றான்.

''இது பௌத்தர்கள் வாழும் பிரதானப்பகுதி. இங்கே பிட்சுக்களைக் காண்பது வியப்பான விஷயமல்ல. வேறு என்ன கண்டாய்?'' என்று கேட்டாள் அவள் அலட்சியமாக.

''ஒரு பெண்ணையும் இந்த வட்டாரத்தில் காணவில்லை.''

''துறவுகள் வாழும் இடத்தில் பெண் எங்கே இருப்பாள்?''

''அப்படியானால் நீ யார்?''

''அதைப் பற்றித்தான் உன்னிடம் பேசவிருந்தேன். முற்றும் துறந்த துறவிகளுக்கிடையில் நான் ஒருத்தி மட்டுமே இருக்கிறேன். அதோடு இந்த இல்லத்திலேகூட அதன் சொந்தக்காரரான பிட்சு ஒருவர் இருக்கிறார். நானும் இருக்கிறேன். இது உனக்கு வியப்பைத் தரவில்லையா?''

''வியப்பாகத்தான் இருக்கிறது? பிட்சுக்கள் உன்னை எப்படி அனுமதித்தார்கள்? அதுவும் அவர்களது தலைமை விஹாரம் இருக்கும் வீதியில் எப்படி அனுமதித்தார்கள்?''

''துறவிகள் இருந்தால் எனக்கென்ன? நான் அவர்களுக் கிடையில் இருந்தால் என்ன ஆகிவிடும்?''

''பஞ்சுக்குப் பக்கத்தில் நெருப்பு இருந்தால் பற்றிக் கொண்டுவிடாதா?''

''நான் பஞ்சு. துறவிகள் நெருப்பா?'' என்று கேட்டுவிட்டு கேலியாகச் சிரித்த விஜயகுமாரி ''தன் பக்கத்தில் பஞ்சிருந்து அதனோடு உடனே பற்றிக் கொள்வதாக இருந்தால் இவர்கள் துறவிகளாவார்களா? துறவுக்குச் சம்பந்தமில்லாத நீயே பற்றிக் கொள்ளாதபோது துறவிகள் எப்போது பற்றிக் கொள்வார்கள்?'' என்று கேட்டாள்.

''நான் கட்டுப்பாடாக இருக்கிறேன்.''

''நீயே அவ்வாறு இருக்கும்போது துறவி இருக்க முடியாதா? அவர்களை அத்தனை கேவலமாகவா நினைக்கிறாய்?''

''அப்படி நான் நினைக்கவும் இல்லை. சொல்லவும் இல்லை. அதோடு கட்டுப்பாடு என்பது மனதைப் பொறுத்ததே தவிர கோலத்தில் இல்லை. துறவி என்ற பெயரிலும் இல்லை.''

''நீ பேசுவதைப் பார்த்தால் இங்கே இருக்கும் புத்த பிட்சுக்கள் உண்மையான துறவிகள் அல்ல என்று நினைப்பது போலிருக்கிறது.''

''உன் கற்பனைகளை எனது எண்ணங்களாக எண்ணிக் கொள்ள வேண்டாம். நான் பொதுவாகத்தான் சொன்னேன்.''

பேச்சில் அவனை பிடிக்க முடியாததை எண்ணி சற்றே அசந்து போன அவள் ''உதயசந்திரா, முதன்முதலாக இங்கே வந்து நான் இருப்பதற்கு இருப்பிடம் கேட்டபோது இங்கிருந்தவர்களில்

ஒருவர் கூட ஒப்புக் கொள்ளவில்லை. துறவிகள் வாழும் இடத்தில் பெண்ணுக்கு இடம் கிடையாது என்றார்கள்'' என்று சொல்லி நிறுத்தினாள்.

உதயசந்திரன் மௌனமாக இருந்தான்.

அவள் தொடர்ந்தாள்:

''நான் ராஜ விஹாரையின் தலைமைத் துறவிகளைச் சந்தித்து இது அநியாயம் என்றேன். பிட்சுக்களின் ஒழுக்கம் கெட்டுவிடும் என்றார் அவர். பிட்சுக்கள் உண்மையான துறவிகளாக இருந்தால் ஒழுக்கம் எப்படிக் கெடும் என்று கேட்டேன். பிட்சுக்கள் வாழும் இடம் பொதுவில் இருக்கும் நகரில் பெண்கள் மட்டும் தனியிடத்தில் வாழ வேண்டுமா என்று விவரித்தேன். உங்கள் துறவிகள் மீது உங்களுக்கு நம்பிக்கை இல்லை என்றால் எனக்கு இங்கே இடமளித்துவிட்டு துறவிகளை இங்கிருந்து இடம் பெயரச் சொல்லுங்கள் என்றேன். அதற்கு மேலும் மறுப்பதற்கு அவரிடம் வார்த்தைகள் இல்லாததால் அனுமதித்தார். அதுவும் ஒரு பிட்சுவின் இல்லத்திலேயே குடியிருக்க அனுமதித்தார். இதற்கு என்ன சொல்கிறாய்?''

''நான் ஏற்கெனவே சொன்னதுதான். பிட்சுக்களிடையே பெண்ணொருத்தி வாழ்வதும் பெண்களுக்கிடையே பிட்சு ஒருவர் வாழ்வதும் முடியக்கூடிய காரியம்தான். அதற்கு முக்கியமாக வேண்டியது மனக்கட்டுப்பாடுதான்'' என்றான் உதயசந்திரன்.

அவனது வார்த்தைகளைப் பொருட்படுத்தாத அவள் ''இங்கே நான் குடி வந்ததும் இந்த பௌத்த துறவிகளின் மீது பெருங்கோபம் கொண்டேன். தங்கள் மீது கர்வம் கொண்டிருக்கும் அந்த பிட்சுக்களைப் பழிவாங்கினால் என்ன என்று யோசித்தேன். என் சாகசத்தைக் காட்டினால் பிட்சுக்கள் பலரை என் காலடியில் கிடக்கச் செய்ய முடியும். அது ஒன்றும் முடியாத காரியமல்ல. ஓரிருவரிடம் எனது நிழலை மட்டுமே காட்டினேன். அவர்கள் நிழலைத் தழுவிக் கொண்டு கூத்தாடினார்கள். நல்லவேளையாகத் தலைமைத் துறவி குறுக்கிட்டு என்னை மிகவும் வேண்டிக் கொண்டார். பிட்சுக்களிடம் ஒழுக்கம் கெட்டால் அது பௌத்த மதத்திற்கே களங்கமாகிவிடும் என்று சொல்லி மன்றாடினார். நானும் சரி என்றேன். காஞ்சியில் பௌத்தம் பிழைத்தது'' என்றாள்.

''இதெல்லாம் எதற்கு? நீ குடியிருப்பதற்கு காஞ்சியில் வேறு இடமே இல்லையா?'' என்று கேட்டான் உதயசந்திரன்.

''நான் விரும்பும் இடத்தில் வாழ எனக்கு உரிமை உண்டு. அதைத் தடுக்க இந்த பிட்சுக்கள் யார்? அதோடு புத்தர் சேரியில்

பெண்கள் வசிக்கக் கூடாதென்று பல்லவர்கள் சட்டமா இயற்றியிருக்கிறார்கள்?'' என்று கேட்டாள் விஜயகுமாரி.

லேசாகச் சிரித்தான் உதயசந்திரன்.

''எதற்காகச் சிரிக்கிறாய்?'' என்று கேட்டாள் விஜயகுமாரி.

''உன்னிடம் அழ முடியுமா நான்?'' என்று கேட்டான் உதயசந்திரன்.

அவனது பேச்சில் இருந்த மாற்றத்தைக் கவனித்த அவள் உள்ளுக்குள் மகிழ்ச்சியும் அடைந்தாள்.

''சிரிப்புக்கு காரணம் கேட்டால் அழுகையைப் பற்றிச் சொல்கிறாய்'' என்றாள். ஏதோ சொல்ல வேண்டும் என்பது போல் -

''நான் எதற்கு சிரித்தேன் தெரியுமா?''

''அதைத்தான் கேட்டேன் நான்.''

''நீ மட்டும் பழிவாங்க முற்பட்டிருந்தால் இந்த புத்தர் சேரி என்னாகியிருக்கும் என்று நினைத்தேன். இந்த இல்லத்தைச் சுற்றி பிட்சுக்கள் ஈக்களைப் போல மொய்த்துக் கொண்டிருக்கும் காட்சி மனக்கண்ணில் விரிந்தது. சிரிப்பு வந்துவிட்டது.''

''நல்ல குறும்புக்காரன்தான் நீ'' என்று சொன்ன அவள், ''இரு, தண்ணீர் கொண்டு வருகிறேன்'' என்று சொல்லி எழுந்தாள்.

''எனக்குத் தண்ணீர் வேண்டாம்.''

''பின்?''

''பன்னீர் வேண்டும்.''

''கொண்டு வருகிறேன்.''

''எங்கேயிருந்து?''

''அப்பன்னீரைப் பருகினால் போதை வருமா?''

''பன்னீரில் எப்படி போதை வரும்? உனக்கு வேண்டியது போதைதான் என்றால் தரமான மதுவைத் தருகிறேன்.''

''மது அருந்தினால் போதை வருமா?''

''இதென்ன அர்த்தமில்லாத கேள்வி?''

''உன் உதடுகள் உருவாக்கும் பன்னீர் தராத போதையை மது தந்துவிடுமா?''

''நீ பேசுவது நன்றாகத்தான் இருக்கிறது. ஆனால் உண்மையா என்று தான் தெரியவில்லை.''

''உன் பெயர் என்ன?''

''விஜயகுமாரி.''

''விஜயா.''

''சொல்.''

''நீ பயங்கரமானவள்.''

''எப்படிச் சொல்கிறாய்?''

''பிட்சுக்களையும் உன்னையும் இணைத்துப் பேசி என்னை உசுப்பிவிட்டாய். என் கட்டுப்பாடுகளை தகர்த்து விட்டாய். தாபத்தில் ஆழ்த்திவிட்டாய்.''

''உண்மையாகவா சொல்கிறாய்?''

''திரும்பத் திரும்ப நீ இதே கேள்வியைக் கேட்பது என்னை அவமானப்படுத்துகிறது. உன்னைப் பற்றி நீ சொல்லிவிட்டாய். ஆனால் என்னைப் பற்றித் தெரிந்து கொள்ளவில்லை. நான் உன்னைக் காட்டிலும் அபாயகரமானவன். உன்னை அடைய வேண்டும் என்று முடிவு கட்டிவிட்டால் அதை தடுக்கும் சக்தி இந்தப் பூவுலகில் யாருக்கும் கிடையாது. இதை நீ தெரிந்து கொள்வது நல்லது.''

அவனது மிரட்டல் அவளுக்கு ஆனந்தமாக இருந்தது. அவனாகவே மயங்கியது அவளுக்கு கர்வத்தை அதிகப் படுத்தினாலும் அவனை விட்டுவிட அவள் தயாராக இல்லை. சேனாதிபதியிடம் காண முடியாத காம விந்தைகளை உதயசந்திரனிடம் காணும் ஆவல் அவளுக்கு உண்டாயிற்று. நீருக்குள் நெருப்பாக உண்டான அந்த ஆவல் அவளை அவனை நோக்கி விரட்டியது. அவன் விரும்பிய பன்னீரை தனது இதழ்களின் மூலம் அவனுக்கு அளிக்க முற்பட்டு அவனுக்கருகில் வந்து குனிந்தாள்.

சுகங்களையும் சுகந்தங்களையும் சுமந்து கொண்டிருந்த அந்தச் சந்தன மேனியின் தங்க உதடுகள் அவனது உதடுகளை நெருங்கி, ''நான் யார் தெரியுமா?'' என்று முணுமுணுத்தன.

''சொல்'' என்றான் உதயசந்திரன்.

☆☆☆



20 புத்துயிரும் புதுத்துயரும்

''சொல்'' என்று உதயசந்திரன் சொன்னதும் சொல்வதற்கு இதழ்களை அசைத்தாள் விஜயகுமாரி.

அப்போது -

''குமாரி! குமாரி!'' என்று குரல் கேட்கவே சடாரென விலகினாள் அவள்.

திறக்கப்பட்ட சொர்க்கவாசல் மூடப்பட்ட மாதிரி இருந்தது அவளுக்கு.

வழவழத்த உதடுகள் பரிசைப் பெறாமல் பிரிந்தன.

உதடுகளைத் துடைத்துக் கொண்டாலும் உள்ளே எழுந்து தாபத்தைத் துடைத்துக் கொள்ள முடியவில்லை.

தவிப்பில் அவளிருந்தபோது உள்ளே நுழைந்த பிட்சு அவள் காதில் ஏதோ சொன்னார்.

'இவர் எதற்கு இந்த வேளையில்?' என்று வெறுத்தாள் விஜயகுமாரி.

சேனாதிபதியை நீக்கி விட்டு அந்த இடத்தில் உதயசந்திரனை அமர்த்திக் கொள்ள எண்ணி அந்த எண்ணம் ஈடேறவிருந்த நேரத்தில் சேனாதிபதி வருவதாக புத்த பிட்சு அறிவித்தது அவளுக்கு அடியோடு பிடிக்கவில்லை.

பொருத்தமானவன் என்று தேர்ந்தெடுக்கப்பட்ட உதய சந்திரன் பொருந்தவிருந்த சமயத்தில் பெருச்சாளி குறுக்கிட்டுக் குடைவது போலிருந்தது சேனாதிபதியின் வருகை.

எதுவானாலும் உதயசந்திரனை விட்டுவிட அவள் தயாராக இல்லை. எப்படியாவது சேனாதிபதியைச் சமாளித்து அனுப்பிவிட்டு உதயசந்திரனிடம் சாதித்துக் கொள்ள வேண்டும் என்று நினைத்த அவள் பிட்சுவை அனுப்பிவிட்டு, ''நீ அப்படி உள்ளே மறைந்து கொள். நான் கூப்பிட்ட பிறகு வந்தால் போதும்'' என்றாள்.

அவனுக்கு ஓரளவிற்கு விஷயம் புரிந்தாலும் ''என்ன விஷயம்?'' என்று கேட்டான்.

''பிறகு சொல்கிறேன். நீ போ அங்கே'' என்று சொல்லி அவனை அங்கிருந்த அறைக்குள் அனுப்பி கதவைச் சாத்தி தாளிட்டாள்.

சில நிமிடங்களில் இடிமுழக்கங்களுடன் பெய்த மழையைப் போல அங்கே பிரவேசித்தார் சேனாதிபதி.

''வாருங்கள். இதென்ன திடீர் விஜயம்? அதுவும் இங்கே?'' என்றாள் விஜயகுமாரி.

''உன்னிடம் வருவதற்கு எனக்கு நேரகாலம் ஏது? அதோடு நான் இங்கு வராதவன் இல்லையே?'' என்று சகஜமாகச் சொன்ன சேனாதிபதி, ''உன் முகம் ஏன் இத்தனை வியர்த்திருக்கிறது? பதட்டமாக இருக்கிறாயே ஏன்?'' என்று கேட்டார்.

''எனக்கெதற்கு பதட்டம் அதுவும் என் இருப்பிடத்தில்? ஒன்றுமில்லை'' என்றாள் அவள். ஆனால் அவளது குரலில் தடுமாற்றம் இருந்தது.

அது சேனாதிபதிக்கு நன்றாகவே தெரிந்தது.

''பொய் சொல்லாதே விஜயகுமாரி. பதட்டம் என்பது உன் அகராதியில் கிடையாது என்பது எனக்குத் தெரியும். ஆனால் நீ இன்று பதட்டப்படுகிறாய்? என்ன ஆயிற்று சொல். ஒருவேளை இங்கே வேறு விருந்தாளி வந்துவிட்டானா?'' என்று கேட்டார்.

இனியும் பதட்டப்பட்டால் காரியம் கெட்டுவிடும் என்பதை உணர்ந்த அவள் கஷ்டப்பட்டு சிரித்தாள்.

''இதென்ன கேள்வி சேனாதிபதியாரே? என்னை என்ன அந்த மாதிரியான பெண் என்று நினைத்துவிட்டீர்களா? எனக்கு உங்களைத் தவிர வேறு விருந்தாளிகள் ஏது? மகத்தான காரியத்திற்காக என்னை உங்களிடம் அர்ப்பணித்திருக்கும்போது என்னிடமா இப்படி கேட்கிறீர்கள்?'' என்று கேட்டாள் சுதாரித்துக் கொண்டு.

'எது மகத்தான காரணம்? பல்லவ அரியணைக்குப் பேராசைப்படுவதா? மண்டை கனம் பிடித்தவளே! உனக்குப் பிச்சை எடுப்பதற்குக்கூட பாண்டம் கிடைக்கப் போவதில்லை. உன்னுடனான இந்தச் சந்திப்பு தான் எனக்கு கடைசி சந்திப்பு. அதற்குப் பிறகு உன்னைச் சீந்துவதற்கு ஈ காக்கை கூட இருக்கப் போவதில்லை' என்று உள்ளுக்குள் சொல்லிக் கொண்ட

சேனாதிபதி கடைசி சந்தர்ப்பத்தை பூரணமாகப் பயன்படுத்திக் கொள்ளத் தீர்மானித்து, ''உன்னை எனக்குத் தெரியாதா? உன்னைப் பூரணமாகத் தெரிந்துதானே உன்னை அணுகினேன்? ஏதோ பேச்சில் விளையாடினால் கோபித்துக் கொள்கிறாயே! நமக்குப் பேச்சும் வேண்டாம். பொல்லாத கோபமும் வேண்டாம்'' என்று சொல்லி அவளை உள்ளேயிருந்த மரகதப் பஞ்சணைக்கு அழைத்துச் சென்றார்.

வழக்கத்தை விட உற்சாகமாகவும் வேகமாகவும் தான் அவர் ஈடுபட்டார்.

அவளுக்கோ உற்சாகமும் வேகமும் வழக்கம்போல இல்லை.

அவரிடம் புதுமைகளையும் மிருகத்தனங்களையும் கண்டு அவற்றை கேட்டு கேட்டுப் பெறும் அவள் விட்டால் போதும் என்று அயர்வுடன் இருந்தாள்.

அவளது மனக் கிலேசங்களையும் கள்ளத்தனங்களையும் பற்றிக் கவலைப்படாத சேனாதிபதியோ கருமமே கண்ணாய் இருந்து சுகங்களை அள்ளிக் கொண்டிருந்தார்.

பிடிக்காத காமம் நரகத்திற்கு இணையானது.

அந்த அவஸ்தையில் இருந்த விஜயகுமாரி போதும் என்று சேனாதிபதியிடம் சொல்ல முடியாமல் திணறித் தவித்தாள்.

அவராகவே திருப்திப்பட்டு விலகியபோதுதான் மூச்சே வந்தது அவளுக்கு.

உதயசந்திரனைத் தேர்ந்தெடுத்துவிட்டதாலோ என்னவோ தற்போது சேனாதிபதியின் சமீபம்கூட அவளுக்குப் பிடிக்க வில்லை.

'இந்த மாமிச மலை எப்போது ஒழியும்?' என்று உள்ளுக்குள் கேட்டுக் கொண்டாள்.

சேனாதிபதி வழக்கம் போல நிறைய நீர் அருந்திவிட்டு புறப்பட்டார்.

விஜயகுமாரிக்கு உதயசந்திரனை அந்த நிலையில் பார்ப்பதற்கு என்னவோ போலிருந்தது.

எனவே நீராடிவிட்டு புத்தாடைகளை அணிந்து புதிய ஒப்பனைகளைச் செய்து கொண்டு உதயசந்திரன் இருந்த அறைக் கதவைத் திறந்தாள்.

உள்ளே உதயசந்திரனைக் காணவில்லை.

திடுக்கிட்ட விஜயகுமாரி கதவைச் சாத்திவிட்டு கீழே இறங்கி வந்த பிட்சுவை அழைத்து வந்து காட்டி விஷயத்தைச் சொன்னதும், ''உன்னை யார் இந்த அறையில் அடைக்கச் சொன்னது?'' என்று கோபப்பட்டார் பிட்சு.

''ஏன்? என்ன?''

''இந்த அறையில் சுரங்கம் இருக்கிறது.''

''இது இந்த இல்லத்தின் மாடி அல்லவா? இதில் எப்படிச் சுரங்கம் இருக்க முடியும்?''

''இதோ பார். அறையின் வடக்குப் பக்கச் சுவரில் ஓவியம் ஒன்றிருப்பதை. இதுதான் திறவுகோல். இதைத் தலைகீழாகச் சுழற்றினால் கதவொன்று திறக்கும். உள்ளே படிக்கட்டுகள் இருக்கும். அவற்றின் வழியாக இறங்கினால் இந்த இல்லத்தின் பின்பக்கத்தில் பூமிக்கு அடியில் இருக்கும் சுரங்கத்திற்கு கொண்டு போய் சேர்க்கும்.''

''சுரங்கம் எங்கே போய் முடிகிறது?''

''தாராதேவி ஆலயத்தில்''

''இச்சுரங்கம் இருப்பதை எனக்கேன் சொல்லவில்லை?''

''எல்லோருக்கும் சொல்லிவிட்டால் இது சுரங்கமாக இருக்காது.''

''பிட்சு! நீர் பேசுவது யாரிடம் என்பதை மறந்துவிட்டீரா?''

''அம்மணி! தவறாக நினைக்க வேண்டாம். எனக்கிட்ட கட்டளையைத்தான் நான் நிறைவேற்றுகிறேன்.''

''கட்டளையா? யாருடைய கட்டளை?''

''எனக்கு யார் கட்டளையிட முடியும்? ராஜ விஹாரத்தின் தலைமைத் துறவி ஹீனாயானர்தான்.''

''ஓகோ! இரட்டை வேடம் போடுகிறாரா உங்கள் தலைவர்? பார்த்துவிடுகிறேன்'' என்று கறுவிக் கொண்ட விஜயகுமாரி, ''இப்போது என்ன சொல்கிறீர்கள்?'' என்று கேட்டாள்.

''என்ன சொல்லச் சொல்கிறாய்?''

''இச்சுரங்கம் மூலமாகச் சென்றால் அவனைப் பிடித்துவிட முடியுமா?''

''சுரங்கத்திலேயே அவன் உட்கார்ந்து கொண்டிருந்தால் பிடித்துவிடலாம்.''

''உமக்கு என்னைக் கிண்டல் செய்யும் தைரியம் வந்துவிட்டதா? பிட்சு! ஜாக்கிரதை!''

''அப்படியெல்லாம் நினைக்காதே விஜயகுமாரி. சேனாதிபதி இங்கு வந்து தங்கியிருந்த நேரம் ஒரு நாழிகைக்கு மேல் இருக்கும். அந்த காலக்கட்டத்தில் அவ்வாலிபன் சுரங்கப் பாதையைக் கடந்து போயிருப்பான்.''

''சுரங்கப்பாதையைக் கடக்கலாம். சுரங்கத்தை விட்டு வெளியேற முடியுமா? வெளியேறும் இடம் தாராதேவி ஆலயம் என்றீர்கள். அங்கே சுரங்க வாயிலை கண்காணிக்க யாரும் இருக்க மாட்டார்களா?''

''இருப்பார்கள். ஆனால் சுரங்க வழியாக வெளியே வருபவனை எதுவும் செய்ய மாட்டார்கள்.''

''ஏன்?''

''இச்சுரங்கம் மிகமிக ரகசியமானது. இது இருப்பது நான்கைந்து பிட்சுக்களுக்கு மட்டுமே தெரியும். அவர்களில் ஒருவர் தான் தாராதேவி ஆலயத்தில் சுரங்க வாயிலை கண்காணிப்பார். இந்தச்சுரங்கம் மூலமாக ஒருவர் வெளியேறினால் அவர் மிகவும் நம்பத்தகுந்தவர் என்றும் அந்தரங்கமானவர் என்றும் கருதுவார். பெயருக்கென்று விசாரித்துவிட்டு அனுப்பி வைப்பார். இந்த வாலிபனைப் பார்த்தால் திறமைசாலியாகவே தோன்றுகிறது. சமத்காரமாக பதில் சொல்லிவிட்டுத் தப்பியிருப்பான்.''

சிறிது நேரம் வரை யோசித்த விஜயகுமாரி, ''தகுந்த நபரை தாராதேவி ஆலயத்திற்கு அனுப்பி அந்த வாலிபன் வெளியேறிச் சென்றானா என்பது குறித்து விசாரிக்கச் சொல்லுங்கள். பிறகு உங்கள் தலைமைத்துறவி ஹீனாயானரை உடனே வந்து என்னைச் சந்திக்கச் சொல்லுங்கள்'' என்றார்.

''என்ன சொல்கிறாய் விஜயகுமாரி? ஹீனாயானர் இங்கே வந்து உன்னைச் சந்திப்பதா? அதுவும் இந்த நள்ளிரவிலா?'' என்று அதிர்ந்து போய் வினவினார் பிட்சு.

''இது என் விருப்பம். அவசியம். போய் அவரிடம் சொல்லுங்கள். வராவிட்டால் நஷ்டம் எனக்கில்லை என்பதை தெரிவியுங்கள்'' என்றாள் விஜயகுமாரி.

வாயடைத்துப்போன பிட்சு வெளியேறிச் சென்றார்.

விஜயகுமாரிக்கு ஆத்திரமாகவும் அவமானமாகவும் இருந்தது.

கைக்கு எட்டியது வாய்க்கு எட்டாமல் போனது ஏமாற்றமாக இருந்தாலும் அவளது ஆத்திரம் உதயசந்திரனின் மீது எழவில்லை. ராஜ விஹாரத்தின் தலைமைத் துறவியின் மீதே உண்டாயிற்று. அந்த இல்லத்தின் பிட்சுவின் மீதும் எழுந்தது.

அறையில் சுரங்கம் இருக்கும் விவரம் தெரிந்திருந்தால் உதயசந்திரனை அவள் அங்கே அடைத்திருக்க மாட்டாள்.

சுரங்க விஷயம் அவளுக்கு மறைக்கப்பட்டு விட்டதால் உதடுகளுக்கு அருகில் இருந்த உதயசந்திரன் ஒரு காத தூரத்திற்கு ஓடிவிடும்படி ஆகிவிட்டது என்பதை உணர்ந்த அவள் கொதித்தாள்.

ஏற்கெனவே சேனாதிபதி வேண்டாத விருந்தாளியாக வந்து ஹிம்சை செய்துவிட்டுப் போயிருந்த நிலையில் விரும்பிய விருந்தாளியான உதயசந்திரன் விலகிவிட்டது அவளை வாட்டியது.

சேனாதிபதியை அனுப்பிவிட்டு நீராடி புத்தாடையணிந்து புத்துயிர் பெற்று உதயசந்திரனைச் சந்தித்து சந்தோஷ அத்தியாயங்களை எழுத முற்பட்ட நிலையில் சுரங்கம் அவனைப் பிரித்துவிட்டது அவளுக்கு ஆற்றாமையை உண்டாக்கியது.

எனவே புத்துயிர் பெற்றவள் புதுத்துயர் அடைந்தவளாய் அசதியுற்றாள்.

சுரங்கம் இருந்த அறையில் உதயசந்திரன் இல்லை யென்றாலும் அவன் இருந்த இடம் என்று நினைத்து தாபத்துடன் தவித்தாள்.

அனுபவிக்காத சுகம் என்று எதுவும் இல்லையென்றாலும் உதயசந்திரன் புதியவனாதலால் அவனை அடைந்து பெறாத சுகம் சுகமே இல்லை என்று சோர்வுடன் நினைத்த அவள் அந்த அறையை விட்டு வெளியே வந்து உள்ளே சென்று மது பானங்கள் வைக்கப்பட்டிருந்த மர அடுக்கிற்குச் சென்று கைக்குக் கிடைத்த கலயத்தை எடுத்து அதிலிருந்த மதுவை அரக்கத் தனமாகக் குடித்தாள். கோலமுகம் ஒரு கணம் கோரமுகமாகியது.

இதே நேரத்தில் சுரங்கம் இருந்த அறையில் அதன் கதவைத் திறந்து கொண்டு மெல்ல வெளியே வந்த உதயசந்திரன் அங்கே யாரும் இல்லாததைக் கண்டு திருப்தியடைந்து அறைக்கு வெளியே வந்தபோது யாரோ வரும் சத்தம் கேட்டதால் கூடத்தில் இருந்த திரைக்குப் பின்னால் மறைந்து கொண்டான்.

விஜயகுமாரி தான் உள்ளேயிருந்து தடுமாறியபடி வந்தவள், அங்கிருந்த ஆசனத்தில் அமர்ந்தாள்.

மது அருந்துவதில் அவளுக்கு நல்ல பழக்கம் இருந்தாலும் தடுமாறிய நிலையில் கூட புத்தித் தெளிவு இருந்தது.

உதயசந்திரன் தப்பிவிட்டது ஒரு புறம் இருந்தாலும் அவன் எதற்காக தப்பினான் என்ற எண்ணம் உருவாயிற்று அவளிடம்.

தன்னிடம் மயங்கிவிட்டதாக ஒப்புக் கொண்டு இழக்கவும் தயாராகிவிட்ட நிலையில் எப்படி தப்பிச் சென்றான்? தப்பிச் சென்றது உண்மையானதா அல்லது தற்செயலாக நடந்ததா என்று உள்ளுக்குள் வினவிக் கொண்ட அவளுக்கு அவனது நோக்கம் இன்னதெனத் தெரியாததால் குழப்பமாக இருந்தது.

''உண்மையாகவேதான் அவன் தன்னிடம் மயங்கி யிருக்கிறான். சுரங்கம் இருப்பது தற்செயலாகத்தான் தெரிந்திருக்கும். தெரிந்தபின் அது எங்கு செல்கிறது என்ற ஆவலால் அதற்குள் சென்றிருப்பான்'' என்று தனக்குத்தானே சமாதானமும் சொல்லிக் கொண்டாள்.

உதயசந்திரனைப் பொறுத்தவரை ஏதோ ஒரு சந்தேகத்தின் பேரில் தான் அவளது அழைப்பிற்கு இணங்கி அவளது இல்லத்திற்கு வந்தான்.

அவள் காம வலையை விரிக்க முயன்றபோது வெறுத்தான்.

சாகச சத்தியைப் பற்றி விவரித்தபோது அவளிடம் ஏதோ ஒளிவு மறைவு இருக்கிறது என்று நினைத்தான்.

அதை அறியவேண்டுமானால் அவள் வழியில் செல்வது போல நடிப்பது தான் நல்லதென்றெண்ணி மயங்கிவிட்டது போல் நடித்தான்.

அவளோ அதை உண்மை என்றே எண்ணி காம வேட்கை மிகுந்த நிலையில் தன்னைப் பற்றி சொல்ல வாயெடுத்தாள்.

அந்த நேரத்தில் சேனாதிபதி வந்துவிடவே அவனைச் சுரங்க அறையில் வைத்தாள்.

அந்த அறையில் இருந்த உதயசந்திரனுக்கு சேனாதிபதியின் குரல் கேட்டது.

விஜயகுமாரி சேனாதிபதியின் சல்லாப மங்கைதான் என்பதை உறுதிப்படுத்திக் கொண்டான்.

சேனாதிபதியின் வரவோ அவரது சல்லாபமோ அவனைப் பொறுத்தவரை புளித்துப் போன பழைய விஷயங்கள்.

அதில் அவனுக்கு அக்கறையோ ஆர்வமோ இல்லை.

அவள் யார் என்பதை அறிவதில்தான் ஆர்வம் இருந்தது.

ஆகவே அறையிலேயே காத்திருக்க முடிவு செய்தான்.

அப்போது தற்செயலாக சுரங்க வழி இருந்தது அவனுக்குத் தெரிய வந்தது.

அதில் கொஞ்சதூரம் வரை சென்று பார்த்தான்.

சுரங்கப் பாதை இருண்டு கிடந்தது.

சுரங்கப் பாதைக்கும் விஜயகுமாரிக்கும் சம்பந்தம் இருக்கும் என்று நினைத்த அவன் அதை அறிய விரும்பியதால் சுரங்கப்பாதையில் மேற்கொண்டு செல்லாமல் திரும்பி அறைக்கே வந்தான்.

அறை மூடப்பட்டே இருந்தது.

என்ன செய்வதென்று தெரியாமல் அங்கேயே இருந்தான்.

அப்போது விஜயகுமாரியின் குரலும் பிட்சுவின் குரலும் கேட்கவே அறையில் இருக்க வேண்டாம் என்று தீர்மானித்து சுரங்கப்பாதை கதவைத் திறந்து கொண்டு பின் உள்ளே இறங்கி கதவைச்சாத்திவிட்டு அதன் பின்புறம் நின்று கொண்டான்.

விஜயகுமாரியும் பிட்சுவும் பேசிய பேச்சு நன்றாகவே அவனுக்குக் கேட்டது.

சுரங்கப்பாதை முடிவடையும் இடம் பற்றித் தெரிந்து கொண்டான்.

விஜயகுமாரி சுரங்கப் பாதையில் வர முயலவில்லை என்பதை அறிந்த போது மகிழ்ச்சியாக இருந்தது.

அதேசமயம் அவளைப் பற்றிய சந்தேகம் வலுத்ததால் அவளைப் பற்றித் தெரிந்து கொள்ளாமல் போகக் கூடாது என்று தீர்மானித்தான்.

பழையபடி அவளிடம் நாடகமாடவும் முடிவு செய்தான்.

சிறிது நேரம் காத்திருந்துவிட்டு மெதுவாகக் கதவைத் திறந்து கொண்டு அறைக்கு வந்தான்.

அறைக்கதவு திறந்து கிடந்ததால் அறையை விட்டு வெளியே வந்தான்.

அப்போது உள்ளேயிருந்து விஜயகுமாரி தள்ளாடியபடி வருவதைக் கண்டதும் திரைச்சீலையின் பின் ஒளிந்து கொண்டான்.

அப்படி ஒளிந்து கொண்டது நல்லதாய் போயிற்று.

அவளது அறைக்குள் ராஜ விஹாரத்தின் தலைமைத் துறவி நுழைந்ததைக் கண்டான்.

தன்னை முற்றிலுமாய் மறைத்துக் கொண்டான்.

பெரியதொரு போர்வையைப் போர்த்திக் கொண்டு வந்த தலைமைத்துறவியைக் கண்ட விஜயகுமாரி அடையாளம் தெரிந்து கொண்டு, ''வந்துவிட்டீர்களா?'' என்றாள்.

அவர் போர்வையைக் களைந்துவிட்டு எதிரே இருந்த ஆசனத்தில் அமர்ந்து கொண்டு, ''விஜயகுமாரி, நீ இப்படி என்னை நடுநிசியில் உன் இருப்பிடத்திற்கு அழைத்திருப்பது அடாதது. யாராவது பார்த்தால் தவறாக எண்ண மாட்டார்களா?'' என்று கேட்டார்.

''இங்கே இருப்பவர்கள் உங்கள் பிட்சுக்கள் தானே, அவர்கள் ஏன் தவறாக நினைக்கப் போகிறார்கள்?'' என்று கேட்டாள் விஜயகுமாரி.

''பிட்சுக்கள் தவறாக நினைக்கக் கூடாது என்று கட்டாயம் எதுவும் இல்லை. அவர்களும் மனிதர்கள்தான்.''

''மனிதர்கள் சரி. துறவிகள் அல்லவா? உணர்வுகளை வென்றவர்கள் அல்லவா?''

''இதோ பார் விஜயகுமாரி. இங்குள்ள பிட்சுக்களைப் பற்றி உனக்குத் தெரியும். எதற்கு தேவையில்லாமல் பேசுகிறாய்? என்னைச் சந்திக்க உனக்கு வேறு நேரமில்லையா? வேறு இடம் தான் இல்லையா? தாராதேவி ஆலயத்தில் சந்தித்தால் போதாதா? அது தானே வழக்கம்?'' என்று தன் நிலையை மறந்து கடுகடுத்த தலைமைத்துறவி, ''நீ இப்போது குடித்திருக்கிறாயா? அழகுதான்'' என்றார்.

''நான் உங்களையோ உங்கள் துறவறத்தையோ ஒன்றும் செய்துவிடமாட்டேன்'' என்று சொல்லிக் கொண்ட விஜயகுமாரி, ''நன்றி மறப்பவர்களை எனக்கு அறவே பிடிக்காது. அவர்கள் யாராக இருந்தாலும் அழித்துவிட்டுத்தான் வேறு வேலை பார்ப்பேன். நீங்கள் நன்றி மறந்துவிட்டதால் தான் உடனே இங்கே வரச் சொன்னேன்'' என்றாள்.

''நான் நன்றி மறந்தேனா? இது என்ன விசித்திரம்?''

''விசித்திரம் அல்ல. உண்மை. இந்த இல்லத்தில் சுரங்கம் இருக்கிறது. இதை என்னிடம் ஏன் தெரிவிக்கவில்லை? இது பற்றி ரகசியமாக வைத்திருக்கும்படி பிட்சுவிடம் சொன்னீர்களாமே!

எனக்குத் தெரியாத ரகசியம் ஒன்று நானிருக்கும் இடத்திலேயே இருப்பது நியாயமா? இதுதான் உங்கள் விசுவாசமா? இது நன்றி கொன்ற செயலல்லவா?''

''என்ன பேசுகிறாய் விஜயகுமாரி? உனக்கு ஒத்துழைப்பது என்பது எங்கள் கடமை. அதை இதுவரை பிழையில்லாமல் செய்து வருகிறோம். உனக்கே தெரியும். இதற்கும் சுரங்க விஷயத்திற்கும் என்ன சம்பந்தம்? நாங்கள் கட்டியுள்ள சுரங்கங்களைப் பற்றியெல்லாம் தெரிவிக்க வேண்டிய அவசியம் என்ன? சுரங்க ரகசியமானது எதிரிகளுக்கு மட்டுமல்ல நம்மவர்களுக்கே கூட அதிகம் தெரியக் கூடாத ஒன்று. எங்கள் பிட்சுக்களுக்கே கூட இது தெரியாது. இதுபற்றி உனக்குத் தெரியாததால் என்ன குடி முழுகிவிட்டது?''

தலைமைத் துறவியின் இந்தப் பேச்சையடுத்து விஜயகுமாரி உதிர்த்த வார்த்தைகளை திரைமறைவில் இருந்த உதயசந்திரன் கேட்டதும் பேரதிர்ச்சி அடைந்தான்.

☆☆☆



21

அரசகுமாரி

''சாளுக்கிய ராஜகுமாரியிடம் இவ்வளவுச் சாதாரணமாகப் பேசி சமாளித்துவிட முடியும் என்று நினைத்தது அபத்தமானது'' என்ற விஜயகுமாரி கூறியதை திரைமறைவிலிருந்து கேட்ட உதயசந்திரன் பேரதிர்ச்சி அடைந்தான்.

அவள் மீது அவனுக்குச் சந்தேகம் இருந்தது உண்மை.

அவள் ஒரு கைகாரியாக இருக்கக்கூடும் என்ற நினைப்பு அவனுக்கு இருந்தது உண்மை.

ஆனால் அவள் சாளுக்கிய ராஜகுமாரியாக இருப்பாள் என்று கனவிலும் கருதாததால் பெரும் அதிர்ச்சிக்கு ஆளானான்.

காஞ்சிக்குள் பகைவரின் எண்ணிக்கை அதிகமாக இருக்கும் என்று தோன்றியது அவனுக்கு.

இதற்கிடையில் விஜயகுமாரியின் பேச்சைக் கேட்டு சற்றே அசதியடைந்த தலைமைத் துறவி ''நீ பேசுவது எனக்கு விளங்கவில்லை'' என்றார் அவளது பேச்சு உண்மையிலேயே புரியாததால்.

விஜயகுமாரி எழுந்து உள்ளே சென்றாள். வாயை நன்றாகக் கொப்பளித்துவிட்டு தூய நீரைப் பருகினாள். வாசனை திரவியங்களான திரவத்தை எடுத்து கொப்பளித்தாள். பிறகு கூடத்திற்கு வந்து ஆசனத்தில் அமர்ந்தாள்.

''துறவியாரே! பழைய நிலையைக் கொஞ்சம் எண்ணிப் பாரும். காஞ்சியில் பௌத்தர்களின் நிலைமை கவலைக் கிடமாகிக் கொண்டு வந்தது. சைவமும் வைணவமும் வளர்ந்து மக்களைக் கவர்ந்த காரணத்தாலும் மன்னர்கள் புத்த மதத்திற்கு அளித்து வந்த நிவந்தங்களை நிறுத்திவிட்ட காரணத்தாலும் இளைத்துப் போனது உங்கள் மதம். சமண மதத்தவர்கள் உங்களுக்கு விரோதிகளானார்கள். உங்களைக் காஞ்சியை விட்டுவிரட்ட முழு மூச்சாக ஈடுபட்டார்கள். அந்த நிலை நீடித்திருந்தால் ராஜ விஹாரம் மூடப்பட்டு நீங்களும் பிட்சுக்களும் நாடு பெயர்ந்து

போயிருப்பீர்கள். இந்தச் சேரி காடாகிப் போயிருக்கும். உங்கள் அதிஷ்டமோ என்னவோ காஞ்சியில் பௌத்தம் சாகாமல் செழிப்பதற்காகச் சாளுக்கிய சக்கரவர்த்தியைத் தேடி நீங்கள் வந்தீர்கள். உதவியை நாடி அவரிடம் அடிபணிந்தீர்கள். தன் அடி பணிந்துவிட்டால் அவன் எதிரியே ஆனாலும் ஏற்றம் பெற வைக்கும் பண்பாளரான சாளுக்கிய சக்கரவர்த்தி உங்களுக்கு உதவ முன்வந்தார். தாராளமாக உதவ முன்வந்தார். தேவையான நிதி உதவி, வாகன உதவி என்று நீங்கள் கேட்டதையெல்லாம் வாரி வழங்கினார். அதற்காக அவர் உங்களிடம் கேட்ட உதவி ஒன்றே ஒன்றுதான். நீங்கள் உங்களைச் சேர்ந்தவர்களும் சாளுக்கிய ஒற்றர்களாக காஞ்சியில் இருக்க வேண்டும். காஞ்சியில் ஈ அசைந்தாலும் கவனித்து சக்கரவர்த்திக்கு செய்தி அனுப்ப வேண்டும். இதுதான் சாளுக்கிய சத்யாச்ரயர் கேட்ட உதவி. அவரால் காஞ்சியில் உங்கள் பௌத்தமதம் பிழைத்தது. புத்தர் சேரியும் ராஜ விஹாரமும் செழிப்படைந்தன. சமணர்களால் தொட முடியாத அளவிற்கு நீங்கள் ஏற்றம் பெற்றீர்கள். ஒற்றர் பணியைச் செய்து கொண்டிருக்கிறீர்கள்'' என்று சொல்லி நிறுத்தினாள் விஜய குமாரி.

''நானும் அதைத்தானே சொல்கிறேன்?'' என்றார் தலைமைத்துறவி.

''துறவியாரே, சாளுக்கிய சக்ரவர்த்தி உங்களிடம் கோரிய உதவிக்கு அர்த்தமென்ன? அடிப்படை என்ன? அவருக்கு ஏவல் புரிய ஒற்றர்களே இல்லையா? எதற்கு உங்களையெல்லாம் தேர்ந்தெடுத்தார்? நீங்களெல்லாம் காஞ்சியைச் சேர்ந்தவர்கள். இங்கேயே வசிப்பவர்கள். பிறரை விட காஞ்சியைப் பற்றி பரிபூரணமாக அறிந்து வைத்திருப்பவர்கள். இங்கே இலை அசைந்தாலும் சிலை அசைந்தாலும் பிறரை விட உங்களுக்கு நன்றாகத் தெரியும். பிறருக்கு ஒன்று தெரிந்தால் உங்களுக்கு ஒன்பது தெரியும். அந்த அனுகூலத்தால்தான் உங்களைத் தேர்ந்தெடுத்தார். அதோடு விடாமல் என்னையும் சாதாரணப் பெண்ணாக அனுப்பி வைத்தார். நான் உங்களைப் போலத் துறவியும் அல்ல. துறந்தவளுமல்ல. ஒற்றர் பணி எனக்கு உரியதுமல்ல. சாளுக்கிய நாட்டில் எக்கவலையுமின்றிச் சுகபோகமாக வாழக்கூடியவள் நான். அதிகாரம் காட்டி அனைத்தையும் அடையக் கூடியவள். அப்படிப்பட்ட என்னைச் சாதாரணப் பெண்ணாக சக்ரவர்த்தி இக்காஞ்சிக்கு எதற்காக அனுப்பி வைத்தார்? வேடிக்கை பார்ப்பதற்காக அல்ல. நாமிருவரும் விசுவாசத்துடன் ஒருங்கிணைந்து பணியாற்ற

வேண்டும். அதுதான் எல்லாவற்றுக்கும் அடிப்படை. அப்படி பணியாற்ற வேண்டுமானால் நமக்குள் வித்தியாசமோ ரகசியமோ இருக்கக் கூடாது. ரகசியம் இருக்கிறதென்றால் நமக்குள் வித்தியாசம் இருப்பதாகத்தானே அர்த்தம்? இங்கிருக்கும் சுரங்கம் எனக்குத் தெரியக் கூடாதென்றால் அதற்கென்ன பொருள்? வேறு யாருக்கு இதைக் காட்டுவீர்கள்? இதை எனக்கு மறைக்கிறீர்கள் என்றால் சாளுக்கியர் மீதான உங்கள் விசுவாசம் சிதிலமடைந்திருக்கிறது என்றுதான் பொருளாகிறது? நன்றிகாட்ட வேண்டிய நீங்கள் கொஞ்சம் கொஞ்சமாக அக்கடமையிலிருந்து விலகி வருகிறீர்கள் என்று தானே நினைக்க முடியும் நான்? இந்த நிலைமைக்கு நான் கோபப்படாமல் வேறு யார் கோபப்படுவார்கள்?''

விஜயகுமாரியின் வாதம் சரியாகவே இருந்தாலும் சாளுக்கியர் மீதான தனது நன்றியும் விசுவாசமும் அப்பழுக்கற்று தான் இருக்கிறது என்பதை உணர்ந்திருந்தார் தலைமைத் துறவி. விஜயகுமாரி கௌரவப் பிரச்சனையாக நினைத்துக் கொண்டு சண்டை போடுவதாகவே கருதிய அவர் ''அரசகுமாரி, நான் கேட்பதை தவறாக எண்ண வேண்டாம். இந்த இல்லத்து சுரங்கப்பாதை மூலமாக வாலிபன் ஒருவன் தப்பிவிட்டதாக பிட்சு சொன்னார். அவன் யார்? அவனை எதற்காக இங்கே அழைத்தாய்?'' என்று கேட்டார்.

''துறவியாரே, உமது பணி ஒற்றறிவது மட்டும்தான். எனக்கு அப்படியல்ல. பல்வேறு பொறுப்புக்களை நான் என் நாட்டிற்காகச் சுமந்து கொண்டிருக்கிறேன். அதற்காகப் பல தொடர்புகளை வைத்திருக்கிறேன். இந்த அளவிற்கு நீங்கள் தெரிந்து கொண்டால் போதும்'' என்றாள் விஜயகுமாரி.

தலைமைத் துறவிக்கு அதற்கு மேல் அவளிடம் பேசுவதற்கு விருப்பமில்லை. ஏறக்குறைய அவளும் அவரிடம் பேச வேண்டியதை பேசிவிட்டிருந்தாள்.

''சரி விஜயகுமாரி, உன் மன வருத்தத்திற்கு நான் காரணமாகிவிட்டேன். இனி இதுபோன்றச் சங்கடம் நேராது. நான் விடைபெற்றுக் கொள்ளட்டுமா?'' என்றார் அவர்.

''ஏன் தூக்கம் வருகிறதா?'' என்று கேட்டாள் அவள்.

''தூக்கம் கலைந்து வெகுநேரமாகிவிட்டது. அதோடு நான் தூங்கும் நேரம் மிகவும் குறைவு'' என்றார் அவர்.

''துறவியாரே தாங்கள் எங்கள் மன்னர் பிரானுக்கு அனுப்பி வைத்த செய்திகளைப் பற்றி நான் அறியலாமா?''

''உனக்குத் தெரியாத விஷயம் ஒன்றுமில்லை. சாளுக்கிய நாட்டை நோக்கி பல்லவர் படையொன்று இளவரசன் மகேந்திரன் தலைமையில் சென்றிருக்கிறது. காஞ்சி இப்போது நிராதரவான நிலையில் இருக்கிறது. இங்கே பஞ்சம் தாண்டவமாடுகிறது. அரசவைக் கவிஞர் கோபித்துக் கொண்டு காஞ்சியை விட்டு வெளியேறிவிட்டார். அவர் சாளுக்கிய நாட்டிற்கு வந்தாலும் வரலாம். பல்லவ மகாராணியான உலகமகா தேவிக்குப் பேய் பிடித்திருக்கிறது. சேனாதிபதி பகதத்தன் தலைமையில் மேலுமொரு படையொன்று சாளுக்கிய நாட்டிற்கு புறப்படக்கூடிய வாய்ப்பிருக்கிறது. இந்தச் செய்திகளை அடுத்தடுத்து அனுப்பியிருக்கிறேன்.''

''சேனாதிபதியின் தலைமையிலான படை எப்போது புறப்படுகிறது?''

''அடுத்த வாரம்.''

''அந்தப் படை எங்கே திரட்டப்படுகிறது? காஞ்சியில் உள்ள நீலிக்கோட்டம் எதிலும் படைகள் இல்லை.''

''அந்தப் படை எங்கே இருக்கிறதென்று தெரியவில்லை. ரகசியமாகத் திரட்டப்படுகிறது.''

''அதைத்தான் நீங்கள் கண்டுபிடிக்க வேண்டும். ரகசியப் படை தானாக வந்து உங்களிடம் தெரிவிக்காது'' என்று சொன்ன விஜயகுமாரி, ''துறவியாரே, கங்க நாடும் பாண்டிய நாடும் இப்போது பல்லவர்களுக்கு நட்பு நாடுகளாகத்தானே இருக்கின்றன?'' என்று கேட்டாள்.

''ஆமாம்'' என்றார் தலைமைத்துறவி.

''ஏன்?''

''ஏனென்றால்?''

''பகை நாடுகளாக இருந்த கங்க நாடும் பாண்டிய நாடும் பல்லவர்களின் நட்பு நாடுகளாக ஏன் மாறின?''

''உண்மையைச் சொல்ல வேண்டும் என்றால் அவ்விரு நாடுகளும் உங்களோடு தான் நட்புறவு கொள்ள முனைந்தன. ஆனால் பெருவளநல்லூரில் நடந்த பல்லவ-சாளுக்கியர் போரில் எதிர்பாராதவிதமாக சாளுக்கியர் படை தோற்றது. சாளுக்கிய சத்யாச்ரியரான விக்கிரமாதித்த மகாராஜா கந்தையைக் கட்டிக் கொண்டு ஓடி ஒளிந்தான் என்று பல்லவர்கள் சொல்லிக் கொண்டார்கள். நிலைமை இப்படித் தலைகீழாகி விட்டதால் பாண்டியர்களும் கங்கர்களும் தங்கள் நிலைப்பாட்டை மாற்றிக்

கொண்டார்கள். பல்லவர்களோடு நட்பு பாராட்டத் தொடங்கினார்கள்.

''நாங்கள் தோற்றது உண்மைதான். போர் நடந்து முடிந்த நேரத்தில் பல்லவர் தரப்பிலும் பெரும் சேதம் ஏற்பட்டு படைபலம் குறைந்திருக்க வேண்டும். படைகளிடம் சோர்வும் ஏற்பட்டிருக்க வாய்ப்புண்டு. இச்சமயத்தில் பாண்டியர்களும் கங்கர்களும் சேர்ந்து பல்லவர் படையைத் தாக்கியிருந்தால் வெற்றி பெற்றிருக்கலாம் அல்லவா? அதுதானே அரசியல் விவேகம்? அப்படி ஏன் இப்பாண்டியர்களும் கங்கர்களும் செய்யவில்லை?''

''உன் கேள்வி சரியானதுதான் விஜயகுமாரி. ஆனால் ஒன்று, பெருவளநல்லூர் போரில் சாளுக்கியர் தோற்றதற்கு முக்கிய காரணம் பல்லவர் படை அல்ல. அதற்குத் தலைமை வகித்த பல்லவ இளவரசர் ராஜசிம்மன் தான் காரணம். அந்த ராஜசிம்மன் உயிரோடு இருக்கிறான். அதேர்டு வெற்றி பெறும் படை சோர்வடையாது. உற்சாகத்தில்தான் இருக்கும். ஆகவே அந்த நேரத்தில் பாண்டியரும் கங்கர்களும் தாக்குதலைச் செய்திருந்தால் வெற்றி பெற்றிருப்பார்கள் என்று சொல்ல முடியாது. நிச்சயமில்லாத போர் ஒன்றை அவசரமாக நடத்துவதை விட நீண்ட கால பயன்தரக்கூடிய விஷயமாகக் கருதி பல்லவர்களுடன் பாண்டியரும் கங்கரும் நட்பு பாராட்டியிருக்கலாம் என்பது என் ஊகம்.''

''பெரிய நாடுகள் திடீர் திடீரென நட்பு பாராட்டுகிறதென்றால் அது சாதாரணமாக நடந்துவிடாது துறவியாரே. அதற்குப் பின்னால் பலமான உடன்படிக்கைகள் இருக்கும். பாண்டிய - கங்கர் தரப்பு பல்லவரோடு நட்பு கொண்டிருப்பதற்குப் பின்னால் ஏதோ ரகசிய உடன்படிக்கை நடந்திருக்க வேண்டும் என்பது என் ஊகம். அது உறுதியாகிறதோ இல்லையோ - நான் சொல்லும் ஒரு காரியத்தைச் செய்வீர்களா?''

''சொல்.''

''பல்லவர்கள் சாளுக்கிய நாட்டின் மீது படையெடுப்பது - படை திரட்டுவது - காஞ்சி நிர்க்கதியில் இருப்பது - ஆகியவற்றை பாண்டிய மன்னனுக்கும் கங்க மன்னனுக்கும் சிறந்த ஒற்றனின் மூலம் செய்தியனுப்ப வேண்டும். இக்காரியத்தைச் செய்யத்தான் உதயசந்திரனை இங்கே வரவழைத்தேன். உங்கள் சுரங்கம் காலை வாரிவிட்டது.''

''கவலைப்படாதே விஜயகுமாரி. நானே ஒற்றனாகப் பாண்டிய நாட்டிற்கும் கங்க நாட்டிற்கும் செல்கிறேன். உனக்குத்

திருப்திதானே?'' என்று சொன்ன தலைமைத் துறவி ''இதனால் என்ன நன்மை?'' என்று கேட்டார்.

''நன்மை என்பதை விட விளைவு என்று கேளுங்கள். நாம் அனுப்புகிற செய்தி பாண்டியருக்கும் கங்கருக்கும் பல்லவர் மீதான நட்பை முறிக்கும் என்பது என் ஊகம். விளக்கமாகக் கேட்காதீர்கள். என் ஊகம் உண்மையானால் பாண்டியர் படை காஞ்சியை நோக்கி வரும். அதற்கு கங்கர் படை உதவி செய்யும். படையற்று இருக்கும் காஞ்சி பாண்டியர் கையில் விழும். அதேசமயம் எங்கள் நாட்டை நோக்கி வரும் பல்லவர் படைகளை சாளுக்கியர் படை அழிக்கும். ஒரே சமயத்தில் பல்லவர் தலைநகரும் பல்லவர் படையும் வீழும். என்ன சொல்கிறீர்கள்?''

''சரியானதுதான்.''

''நல்லது துறவியாரே. நீங்கள் புறப்படுங்கள். சிரமத்திற்கு மன்னித்துக் கொள்ளுங்கள். உங்களுக்கு மேற்கொண்டு நிதியளிக்க சக்கரவர்த்திக்கு நான் ஓலை அனுப்புகிறேன்'' என்று சொல்லி தலைமைத் துறவி ஹீனாயானரை அனுப்பி வைத்தாள் விஜயகுமாரி.

திரை மறையில் இருந்த உதயசந்திரன் விஜயகுமாரி எத்தனை அபாயகரமானவள் என்பதையும் திறமை வாய்ந்தவள் என்பதையும் சந்தேகமறப் புரிந்து கொண்டான்,

அவள் நகர்த்தும் காய்கள் அவள் நினைக்கும்படி நகர்ந்தால் அவளது ஊகங்கள் நிச்சயமாகப் பலிக்கும் என்பதிலும் அவனுக்குச் சந்தேகம் வரவில்லை.

அங்கிருந்து தப்புவது எப்படி என்று யோசித்தான்.

சுரங்கத்தின் மூலம் தப்ப முடியாது என்பது அவனுக்குப் புரிந்தது.

தாராதேவி கோயிலுக்கு பிட்சு சென்று விசாரித்துவிட்டால் அங்கே உள்ள சுரங்க வாயில் சிறை வாயிலாக மாறிவிடும்.

எனவே அதன் வழியாகச் செல்ல நினைப்பது தெரிந்தே செய்யும் முட்டாள்தனம்.

விஜயகுமாரியின் இல்லத்திலிருந்து தான் தப்ப வேண்டும் என்று நினைத்து அதற்கான திட்டத்தையும் உருவாக்கிக் கொண்ட உதயசந்திரன் அதைச் செயல்படுத்த முனைந்தபோது பிட்சு அங்கே வந்தார்.

சயனத்திற்காக உள்ளே செல்லவிருந்த விஜயகுமாரி சற்றே எத்தனித்து விட்டு பிட்சுவை விசாரித்தாள்.

''தாராதேவி கோயிலில் இருக்கும் சுரங்கவாயில் வழியாக யாரும் வெளியேறவில்லை என்பது உறுதியாகிவிட்டது விஜயகுமாரி. யாராவது வாயில் வழியாக வெளியே வந்தால் கைது செய்துவிடும்படிச் சொல்லியிருக்கிறேன்'' என்றார் பிட்சு.

''சரி- நீங்கள் போகலாம்'' என்று கூறி அவரை அனுப்பிய விஜயகுமாரி கதவைச் சாத்திப் பூட்டிவிட்டு சாவியை எடுத்துக் கொண்டு சயன அறைக்குள் சென்று கதவைச் சாத்திக் கொண்டு மஞ்சத்தில் படுத்தாள்.

மஞ்சம் மென்மையாக இருந்தாலும் அவளுக்குத் தூக்கம் வரவில்லை.

உதயசந்திரனைப் பற்றிய சிந்தனை அவளை வாட்டி யெடுத்தது.

அறையில் வைத்து மறைக்கப்பட்ட அவன் சுரங்க வழியாக மாயமாகிவிட்டதை அறிந்தபோது அவளுக்கு ஏமாற்றமாக இருந்தது.

புலியிடம் சிக்கிய மான் கூட தப்பலாம். தன்னிடம் சிக்கும் வாலிபன் தப்ப இயலாது என்று கர்வம் கொண்டிருந்த அவளுக்கு கர்வபங்கம் ஏற்பட்டுப் போனதாய் தோன்றியது.

சுரங்கத்தின் மூலம் அவன் வெளியேறிவிட்டானா என்பதை அறிய புத்த பிட்சுவை தாராதேவி ஆலயத்திற்குச் சென்று விசாரிக்கும்படிச் சொன்னாள்.

விசாரித்துவிட்டு வந்த பிட்சு தாராதேவி ஆலயத்தின் சுரங்க வாயில் மூலம் உதயசந்திரன் வெளியேறவில்லை என்று சொன்னதும் ''எங்கே மாயமாக மறைந்துவிட்டான்?'' என்று தனக்குள் கேட்டுக் கொண்டாள் அவள்.

'அப்படியானால் உதயசந்திரன் சுரங்கத்திற்குள்ளேயே இருக்கிறானா? அப்படி இருப்பது உண்மையென்றால் அவனைச் சுரங்கத்திலேயே போய் பார்த்தாலென்ன?' என்று தோன்றியது அவளுக்கு.

'போய் பார்க்கலாம்' என்று முடிவு செய்து மஞ்சத்தை விட்டு எழுந்தபோது அறையின் கதவு தட்டப்படவே 'ஒருவேளை அவனாக இருக்குமோ?' என்று நினைத்து கதவைத் திறந்தாள்.

வெளியே உதயசந்திரன் தான் நின்றிருந்தான்.

''நீயா?'' என்று வியப்போடு கேட்டாள் அவள்.

''நானே தான். உன் இல்லத்தில் இருக்கும் நான் உனக்குத் தெரியாமல் எப்படிப் போக முடியும்?'' என்று கேட்டான் உதயசந்திரன்.

''என்னிடம் பொய் பேசாதே. எனக்கு எல்லாம் தெரியும்.''

''என்ன தெரிந்துவிட்டது?''

''உன்னை அந்த அறையில் அடைத்தேன். திறந்து பார்த்தபோது நீ அங்கில்லை. சுரங்க வழியை அறிந்து அதில் சென்றுவிட்டாய்.''

''அது உண்மைதான்.''

''சுரங்கவழி மூலமாக நீ ஏன் தப்பவில்லை?''

''நான் எதற்காகத் தப்ப வேண்டும்? என்ன நடந்துவிட்டது என்று தப்ப வேண்டும்? உன் வீட்டிற்கு நான் ஏன் வர வேண்டும்?'' என்று கேள்விகளை அவன் அடுக்கியபோது அவன் சொல்வது உண்மையாகத்தான் இருக்க வேண்டும் என்று நினைத்த அவள், ''இதுவரை நீ எங்கிருந்தாய்?'' என்று கேட்டாள்.

''நான் சற்று உட்காரலாமா? மிகவும் சோர்வாக இருக்கிறது'' என்றான் உதயசந்திரன்.

அதுவரை ஒருவித குழப்பத்தில் இருந்த அவள் சற்றே தெளிந்து, ''வா உள்ளே.'' என்று சொல்லி மஞ்சத்திலேயே அமரச் சொன்னாள்.

அவன் மறுப்பேதும் சொல்லாமல் மஞ்சத்தில் அமர்ந்து கொண்டு தன் கால்களைத் தடவிவிட்டுக் கொண்டான்.

அவள் குவளையை ஒன்றை நீட்டி, ''இந்த நீ கேட்ட கலப்படமில்லாத தண்ணீர் குடி'' என்றாள்.

அவனும் அதை வாங்கிக் குடித்துவிட்டு ''நன்றி'' என்றான்.

''இப்போது சொல்'' என்றாள் அவள்.

''நீ திடீரென என்னை அறையில் அடைத்ததும் குழம்பினேன் நான். அச்சமயத்தில் கூடத்தில் ஆடவர் குரல் கேட்டது. உன் குரலும் கேட்டது. அதிலிருந்து வந்திருப்பது சேனாதிபதி என்பதை அறிந்தேன். சிறிது நேரத்தில் குரல் எதுவும் கேட்கவில்லை. நீ கதவைத் திறப்பாய் என்று பார்த்தேன். திறக்கவில்லை. அப்போது தான் சுரங்கப்பாதை இருப்பதை தற்செயலாகக் கண்டேன். உள்ளே இறங்கி சிறிது தூரம் சென்றேன். மிகவும் இருட்டாக இருந்தது. பந்தம் இல்லாமல் மேற்கொண்டு செல்ல முடியாது. சுரங்கம் எங்கே செல்கிறது என்பதும் தெரியாது. அதில் போக வேண்டிய அவசியமும் எனக்குக் கிடையாது. எனவே அங்கேயே சிறிது

நேரம் இருந்தேன். தூங்கியிருப்பேன் போலிருக்கிறது. கண் விழித்து சுரங்கப் பாதையிலேயே வந்து அறையை அடைந்தேன். அறை திறந்திருந்தது. உன்னைக் காணவில்லை. உள்ளே சென்றிருப் பாயோ என்றெண்ணி கதவைத் தட்டினேன்'' என்றான் உதயசந்திரன்.

அவன் சொன்னதில் பொய் இருப்பதாக அவளுக்குத் தோன்றவில்லை.

வேறு மாதிரி நினைப்பதற்கும் அவளுக்குச் சந்தேகம் வரவில்லை.

அவள் உடனடியாகப் பேசாததால் ''என்ன என் மீது நம்பிக்கை வரவில்லையா? வராவிட்டால் எனக்கொன்றும் நஷ்டமில்லை. நான் செல்கிறேன்'' என்று சொல்லி எழுந்தான் உதயசந்திரன்.

''உட்கார் உதயசந்திரா. நான் யார் என்பது தெரிந்தால் நீ அவசரப்படமாட்டாய்'' என்றாள் அவள்.

அவன் பழையபடி உட்கார்ந்து கொண்டு, ''நீ யார் என்பதைச் சொல்ல வந்தாய். அப்போது குறுக்கிட்டார் பிட்சு'' என்றான்.

''நான் சாளுக்கிய ராஜகுமாரி'' என்றாள் அவள்.

''இது உண்மையா?''

''நம்புவதும் நம்பாததும் உன் இஷ்டம்'' என்றாள்.

அவன் எழுந்து கொண்டு ''நம்புகிறேன்'' என்றான்.

''அதற்காக எழுந்து கொள்ள வேண்டுமா என்ன?''

''நீங்கள் ராஜகுமாரி என்று தெரிந்துவிட்டபின் உட்கார்ந்திருப்பது சரியல்ல.''

அவள் சிரித்தாள்.

''பரவாயில்லை. மரியாதை மனத்தில் இருந்தால் போதும். உட்காருவதிலும் நிற்பதிலும் வேண்டியதில்லை.''

''இல்லை அரசகுமாரி. மரியாதையானது அகமும் புறமும் சேர்ந்திருப்பதுதான் சரி.''

''உன்னிடம் என்னைப் பற்றிச் சொன்னது தவறாகி விட்டது.''

''சொன்னது சரிதான் அரசகுமாரி. நீங்கள் அதிகாரமாக இங்கே வரச்சொன்னதும் நான் ஊகித்திருக்க வேண்டும். அது தவறுதான். இப்போது சொல்லுங்கள். என்னை எதற்காக அழைத்தீர்கள்?''

சொன்னாள் அவள்.

இதென்ன விபரீதம் என்று நினைத்தான் உதயசந்திரன்.

☆☆☆



22 விவஸ்தையற்றவளும் வினயமானவளும்

''என்னை மணந்து கொள்கிறாயா?'' என்று விஜயகுமாரி கேட்டதும் அதிர்ந்து போனான் உதயசந்திரன்.

அவளை அபாயகரமானவள் என்றும் -

திறமையானவள் என்றும் கருதியிருந்த அவன் 'இவள் விவஸ்தையற்றவள் போலிருக்கிறதே?' என்றும் நினைத்தான்.

சேனாதிபதிக்கும் அவளுக்கும் இருந்த உறவு நன்றாகவே தெரிந்துவிட்டிருந்தது.

இப்படியொரு அந்தரங்க உறவை வைத்திருக்கும் அவள் எப்படி தன்னிடம் இப்படிக் கேட்டாள் என்றெண்ணி அசதியடைந்தான்.

''என்ன உதயசந்திரா மௌனமாகிவிட்டாயா? நான் கேட்டது வியப்பாக இருக்கிறதா? வெறுப்பாக இருக்கிறதா?'' என்று கேட்டாள் அவள் அவனை ஆழம் பார்ப்பதுபோல்.

''அரசகுமாரி, எனக்கொரு காதலி இருக்கிறாள். அவளைத் தவிர வேறு யாரையும் என்னால் மணக்க இயலாது'' என்றான் உதயசந்திரன்.

''அவளென்ன ராஜகுமாரியா?''

''என் நெஞ்சை ஆள்பவள்.''

''மிக்க மகிழ்ச்சி. உன்னைப் பரிசோதிக்கத்தான் அப்படிக் கேட்டேன். பயந்து விடாதே.'' என்று சொன்ன விஜயகுமாரி ''எனக்கு மிகவும் அந்தரங்கமான நம்பிக்கையான உதவியாளன் வேண்டும். அதற்கு நீ தயாராக இருக்கிறாயா?'' என்று கேட்டாள்.

உதயசந்திரன் சற்று யோசித்தான்.

''என்ன யோசிக்கிறாய்?'' - கேட்டாள் அவள்.

''எனக்கு மிகவும் முக்கியமான பணி இருக்கிறது அரசகுமாரி. அது முடிவதற்கு சில காலம் ஆகலாம். அதுவரையில் நீங்கள் தரும் பதவியை என்னால் ஏற்க முடியாது'' என்றான் உதயசந்திரன்.

''அப்படி என்ன பணி அது?''

''நாகையில் வாணிக விஷயமாக என் தந்தை என்னைப் பணித்திருக்கிறார். அதை நிறைவேற்ற உடனடியாகப் போக வேண்டும்.''

''வாணிபமாயிற்று! விஷயமாயிற்று! இதெல்லாம் ஒரு விஷயமா?'' என்று அலட்சியமாகச் சொன்ன விஜயகுமாரி, ''உன்னை நான் பார்த்தது பெரிய விஷயம். உன்னிடம் பேசியது அதைவிட பெரிய விஷயம். உன்னைப் பாராட்டியது அதையும் விட பெரிய விஷயம். உன்னை இங்கே அழைத்தது எல்லாவற்றையும் விட பெரிய விஷயம். அப்படி அழைத்து உனக்குப் பதவி தருவது நீ கனவிலும் கருதாத விஷயம். இதைவிட பெரிய விஷயம் உனக்கு இருக்கிறதா?'' என்றாள்.

உதயசந்திரன் ஏதோ பேச முற்பட்டபோது அதைத் தடுத்த அவள் ''பார்த்த இரண்டே நாட்களில் உன்னை நான் நம்புகிறேனே - இது உனக்கு கசப்பாகவா இருக்கிறது? சாதாரணமாகவா இருக்கிறது? உன்னை எந்த அளவிற்குத் தகுதியுடையவனாகக் கருதியிருந்தால் உன்னை இந்தப் பதவிக்காக அழைப்பேன்? உன் தந்தையின் பணியை வேறு யாராவது பார்த்துக் கொள்ளட்டும். என் பணியை நீ தான் செய்கிறாய். என்ன?'' என்று ஒரு தோரணையுடன் கேட்டாள்.

பெரிதும் திணறுவதைப் போல் நடித்த உதயசந்திரன் ''என்ன சொல்வதென்று தெரியவில்லை அரசகுமாரி. சாதாரணமானவன் நான். என்னைப் போய் இந்த அளவிற்கு நம்புவது என்னைப் பரவசப்படுத்துகிறது'' என்றான்.

''நீ செய்ய வேண்டிய பணி என்ன தெரியுமா?'' என்று கேட்டாள் அவள்.

''சொல்லுங்கள் அரசகுமாரி.''

''என் சார்பாக நீ பாண்டிய நாட்டிற்குச் செல்ல வேண்டும்.''

''பாண்டிய நாட்டிற்கா? நானா?''

''ஆமாம். பாண்டிய மன்னருக்கு முக்கியச் செய்தியை நீ கொண்டு போக வேண்டும். செய்தி அடங்கிய ஓலையைத் தயார் செய்கிறேன். நாளைக்கு ஓலை மற்றும் முத்திரை மோதிரம் ஆகியவற்றைத் தருகிறேன். புரவி ஒன்றையும் தயார் செய்கிறேன். உடனடியாகப் புறப்பட வேண்டும். என்ன சொல்கிறாய்?''

''நான் என்ன சொல்ல முடியும் ராஜகுமாரி? என் வார்த்தைகளுக்குத்தான் பூட்டு போட்டுவிட்டீர்களே?''



22 விவஸ்தையற்றவளும் வினயாமானவளும்

''என்னை மணந்து கொள்கிறாயா?'' என்று விஜயகுமாரி கேட்டதும் அதிர்ந்து போனான் உதயசந்திரன்.

அவளை அபாயகரமானவள் என்றும் -

திறமையானவள் என்றும் கருதியிருந்த அவன் 'இவள் விவஸ்தையற்றவள் போலிருக்கிறதே?' என்றும் நினைத்தான்.

சேனாதிபதிக்கும் அவளுக்கும் இருந்த உறவு நன்றாகவே தெரிந்துவிட்டிருந்தது.

இப்படியொரு அந்தரங்க உறவை வைத்திருக்கும் அவள் எப்படி தன்னிடம் இப்படிக் கேட்டாள் என்றெண்ணி அசதியடைந்தான்.

''என்ன உதயசந்திரா மௌனமாகிவிட்டாயா? நான் கேட்டது வியப்பாக இருக்கிறதா? வெறுப்பாக இருக்கிறதா?'' என்று கேட்டாள் அவள் அவனை ஆழம் பார்ப்பதுபோல்.

''அரசகுமாரி, எனக்கொரு காதலி இருக்கிறாள். அவளைத் தவிர வேறு யாரையும் என்னால் மணக்க இயலாது'' என்றான் உதயசந்திரன்.

''அவளென்ன ராஜகுமாரியா?''

''என் நெஞ்சை ஆள்பவள்.''

''மிக்க மகிழ்ச்சி. உன்னைப் பரிசோதிக்கத்தான் அப்படிக் கேட்டேன். பயந்து விடாதே.'' என்று சொன்ன விஜயகுமாரி ''எனக்கு மிகவும் அந்தரங்கமான நம்பிக்கையான உதவியாளன் வேண்டும். அதற்கு நீ தயாராக இருக்கிறாயா?'' என்று கேட்டாள்.

உதயசந்திரன் சற்று யோசித்தான்.

''என்ன யோசிக்கிறாய்?'' - கேட்டாள் அவள்.

''எனக்கு மிகவும் முக்கியமான பணி இருக்கிறது அரசகுமாரி. அது முடிவதற்கு சில காலம் ஆகலாம். அதுவரையில் நீங்கள் தரும் பதவியை என்னால் ஏற்க முடியாது'' என்றான் உதயசந்திரன்.

''அப்படி என்ன பணி அது?''

''நாகையில் வாணிக விஷயமாக என் தந்தை என்னைப் பணித்திருக்கிறார். அதை நிறைவேற்ற உடனடியாகப் போக வேண்டும்.''

''வாணிபமாயிற்று! விஷயமாயிற்று! இதெல்லாம் ஒரு விஷயமா?'' என்று அலட்சியமாகச் சொன்ன விஜயகுமாரி, ''உன்னை நான் பார்த்தது பெரிய விஷயம். உன்னிடம் பேசியது அதைவிட பெரிய விஷயம். உன்னைப் பாராட்டியது அதையும் விட பெரிய விஷயம். உன்னை இங்கே அழைத்தது எல்லாவற்றையும் விட பெரிய விஷயம். அப்படி அழைத்து உனக்குப் பதவி தருவது நீ கனவிலும் கருதாத விஷயம். இதைவிட பெரிய விஷயம் உனக்கு இருக்கிறதா?'' என்றாள்.

உதயசந்திரன் ஏதோ பேச முற்பட்டபோது அதைத் தடுத்த அவள் ''பார்த்த இரண்டே நாட்களில் உன்னை நான் நம்புகிறேனே - இது உனக்கு கசப்பாகவா இருக்கிறது? சாதாரணமாகவா இருக்கிறது? உன்னை எந்த அளவிற்குத் தகுதியுடையவனாகக் கருதியிருந்தால் உன்னை இந்தப் பதவிக்காக அழைப்பேன்? உன் தந்தையின் பணியை வேறு யாராவது பார்த்துக் கொள்ளட்டும். என் பணியை நீதான் செய்கிறாய். என்ன?'' என்று ஒரு தோரணையுடன் கேட்டாள்.

பெரிதும் திணறுவதைப் போல் நடித்த உதயசந்திரன் ''என்ன சொல்வதென்று தெரியவில்லை அரசகுமாரி. சாதாரணமானவன் நான். என்னைப் போய் இந்த அளவிற்கு நம்புவது என்னைப் பரவசப்படுத்துகிறது'' என்றான்.

''நீ செய்ய வேண்டிய பணி என்ன தெரியுமா?'' என்று கேட்டாள் அவள்.

''சொல்லுங்கள் அரசகுமாரி.''

''என் சார்பாக நீ பாண்டிய நாட்டிற்குச் செல்ல வேண்டும்.''

''பாண்டிய நாட்டிற்கா? நானா?''

''ஆமாம். பாண்டிய மன்னருக்கு முக்கியச் செய்தியை நீ கொண்டு போக வேண்டும். செய்தி அடங்கிய ஓலையைத் தயார் செய்கிறேன். நாளைக்கு ஓலை மற்றும் முத்திரை மோதிரம் ஆகியவற்றைத் தருகிறேன். புரவி ஒன்றையும் தயார் செய்கிறேன். உடனடியாகப் புறப்பட வேண்டும். என்ன சொல்கிறாய்?''

''நான் என்ன சொல்ல முடியும் ராஜகுமாரி? என் வார்த்தைகளுக்குத்தான் பூட்டு போட்டுவிட்டீர்களே?''

''நீ ஒப்புக் கொண்டதற்கு மிகவும் நன்றி உதயசந்திரா'' என்று சொன்ன விஜயகுமாரி ''நீ பன்னீர் கேட்டாயே, வேண்டாமா?'' என்று கேட்டாள்.

இவளுக்கு காமம் தான் ரத்தத்தில் ஓடுகிறதா என்றெண்ணிக் கொண்ட உதயசந்திரன் ''என்னை மன்னிக்க வேண்டும்'' என்றான்.

''எதற்கு?''

''தங்களிடம் போய் பன்னீரைக் கேட்டேனே அரசகுமாரி? தவறில்லையா? அதற்காகத்தான் மன்னிப்பு கேட்டேன்.''

''அந்தஸ்துகள் மறக்கப்படும் நேரம் தான் ஆண் பெண்களுக்கிடையே வரக்கூடிய இனிமையான நேரம். புரிகிறதா நான் சொல்வது?''

''புரிகிறது அரசகுமாரி. அதற்கு நான் கொடுத்து வைத்திருக்க வேண்டும். இருந்தாலும் -''

''இருந்தாலும் என்ன?''

''இப்போது நான் மிகவும் சோர்ந்து போய்விட்டேன். சோர்வான நிலையில் சுகம் இனிக்காது. நீங்கள்தான் நாளைக்கு வரச் சொல்லியிருக்கிறீர்களே, அப்போது...''

சிரித்தாள் விஜயகுமாரி.

''ஏன் சிரிக்கிறீர்கள்?''

''நீ சொல்வது சரிதான். அதேசமயம் என்னை உதறிவிட்டுப் போகிறாயே - அதை நினைத்தால் எனக்கு வியப்பாக இருக்கிறது. அதனால் தான் சிரித்தேன்.''

'நீயும் உன் சிரிப்பும். நான் ஏற்கெனவே ஒருத்தியைக் காதலிப்பதாகச் சொன்ன பிறகும் காமக் கடை விரிக்க அழைப்பு விடுகிறாயே - நீ ஒரு பெண்ணா, நீ எப்படி அரசகுமாரியாவாய்?' என்று உள்ளுக்குள் வெறுத்துக் கொண்ட அவன், ''அரசகுமாரி, தாங்கள் எனக்கிட்ட பணியில் ஒரு சிறு திருத்தத்தைச் சொல்லலாமா?'' என்றான்.

''சொல்லேன்.''

''ஓலை தருவதாகச் சொன்னீர்கள். அது வேண்டாம். வழியில் பறி போனாலும் போகும். செய்தி வாய் வழிச் செய்தியாக இருப்பதே நல்லது. எனக்கு ஆபத்து வந்தாலும் செய்தி பிறருக்குத் தெரியாது. முத்திரை மோதிரத்தை மட்டும் கொடுங்கள். செய்தி என்ன என்பதைச் சொல்லிவிடுங்கள்.''

''நீ திறமையானவன் என்று நான் நம்பியதற்கு உன் இந்தப் பேச்சும் ஓர் அத்தாட்சிதான். மிகவும் மகிழ்ச்சி. நாளை நள்ளிரவுக்கு முன் இங்கே வந்துவிடு. எல்லாம் தயாராக இருக்கும்.''

''எனக்கு விடை கொடுங்கள் அரசகுமாரி.''

''போய் வா.''

கதவைத் திறந்துவிட்டாள் அவள். அவனும் வெளியேறினான்.

☆

தன் இருப்பிடத்திற்கு வந்தான் உதயசந்திரன்.

நடந்ததெல்லாம் ஒரு கனவு போல இருந்தது அவனுக்கு.

சாளுக்கிய அரசகுமாரி ஒருத்தி காஞ்சியிலேயே இருந்து கொண்டு ஒற்றறிகிறாள். அவளுக்கு ராஜ விஹாரத்து தலைமைத் துறவியும் பிட்சுக்களும் உதவுகிறார்கள். பல்லவர் படை யெடுப்பு பற்றி செய்திகளை சாளுக்கிய நாட்டிற்கு அனுப்புகிறார்கள்.

மன்னரோ அல்லது அரண்மனை வட்டாரமோ இதை யெல்லாம் அறிந்ததாகத் தெரியவில்லை.

அவள் ராஜகுமாரி என்பதை அறியாமல் காமக்கள்ளி என்று நினைத்த சேனாதிபதி சல்லாபம் செய்கிறார்.

அதோடு அந்த ராஜகுமாரியான விஜயகுமாரி தன்னையும் ஒற்றனாகப் பயன்படுத்த விரும்புகிறாள்.

இதையெல்லாம் எண்ண எண்ண அவன் மனம் பதைபதைத்தது.

காஞ்சிக்கு மறைமுகமான ஆபத்துக்கள் எப்படியெல்லாம் உருவாகியிருக்கின்றன என்பதை உணர்ந்து அவன் கலங்கினான்.

இல்லத்தை அடையும்போதே நள்ளிரவு கடந்து பல நாழிகைகள் ஆகிவிட்டதால் விடிவதற்கு கொஞ்ச நேரமே இருந்தது.

எனவே உறங்குவதற்கு முற்படாத உதயசந்திரன் நீராடிவிட்டு புத்துயிர் பெற்றான்.

விஜயகுமாரி விஷயத்தை மன்னரிடம் தெரிவிப்பதே உகந்தது என்று கருதிய அவன் பாண்டவ தூதப் பெருமாள் ஆலயத்திற்குச் சென்று வழிபட்டான்.

அவனிடம் நலம் விசாரித்தார் அர்ச்சகர்.

''எனக்கு குறையொன்றும் இல்லை சுவாமி. காஞ்சியை நினைத்தால்தான் பயமாயிருக்கிறது. அதோடு மாமன்னரை நினைத்தால் தூக்கமே வராது போலிருக்கிறது'' என்றான் உதயசந்திரன்.

''உன் சக்திக்கு அப்பாற்பட்ட கவலைகளை நீ சுமக்காதே. ஆண்டவனிடம் இறக்கி வைத்துவிடு. இதோ தர்மத்தின் தலைவனான ஸ்ரீ கிருஷ்ணபரமாத்மாவின் திருவடிகளில் சுமைகளை இறக்கிவிட்டு நம்பிக்கையுடன் புறப்படு. அவன் தன்னை நம்பியவர்களை கைவிட மாட்டான்'' என்றார் அர்ச்சகர்.

ஓரளவிற்கு ஆறுதலடைந்த உதயசந்திரன், ''பௌர்ணமி வந்தாளா சுவாமி?'' என்று கேட்டான்.

''இன்று அமாவாசை'' என்றார் அர்ச்சகர்.

அவரிடம் எதுவும் பேசாமல் அரண்மனைக்குச் சென்றான் உதயசந்திரன்.

மாமன்னர் காஞ்சியிலேயே இல்லை என்று அறிந்தபோது பெரும் ஏமாற்றமாக இருந்தது அவனுக்கு.

''ஏன்? ஏதாவது முக்கிய விஷயமா?'' என்று கேட்டார் பேரமைச்சர்.

அவரிடம் விஜயகுமாரியைப் பற்றிய விஷயத்தைச் சொல்வதற்கு அவன் விரும்பவில்லை.

எனவே, ''விசேஷம் எதுவுமில்லை அமைச்சர் பெருமானே! நாளைக்கு சாளுக்கிய நாட்டிற்குப் புறப்பட வேண்டும். சொல்லிவிட்டுப் போகலாம் என்று வந்தேன்'' என்றான்.

''அவர் வருவதற்கு ஒரு வாரகாலம் ஆகலாம். வந்ததும் நான் சொல்கிறேன்'' என்றார் பேரமைச்சர்.

உதயசந்திரனுக்கு மனம் கொள்ளவில்லை.

நேராகப் பட்டத்து மகாராணியான ரங்கப்பதாகை தேவியைச் சந்திக்க விரும்பி அந்தப்புரத்திற்குச் சென்றான்.

அவனைச் சந்திக்க மகாராணியும் அனுமதி கொடுத்ததால் போய் பார்த்தான்.

லட்சுமிதேவி போல் மங்கள கோலத்துடன் தெய்வத் தாயாகக் காட்சியளித்த ராணியை வணங்கினான் உதயசந்திரன்.

''வா உதயசந்திரா. நலமாக இருக்கிறாயா?'' என்று விசாரித்தார் ராணி.

''மாமன்னரின் நிழலில் இருக்கும் எங்களுக்கு நலத்திற்குக் குறைவில்லை தாயே! மாமன்னரைக் கண்டு முக்கிய விஷயம் ஒன்றைச் சொல்ல விரும்பினேன். அவர் காஞ்சியில் இல்லாததால் வேறு யாரிடம் சொல்வதென்று விளங்கவில்லை. நாளை சாளுக்கிய நாட்டிற்குப் புறப்பட வேண்டும். ஆகவே தங்களிடமாவது சொல்லிவிட வேண்டும் என்று தோன்றியது. ஆகவேதான் வந்தேன்.''

''சொல்.''

சொன்னான் உதயசந்திரன்.

''முக்கண்ணனை எக்காலமும் துதிக்கும் மன்னருக்கு ஆயிரம் கண்கள் உண்டு. அவருக்குத் தெரியாத விஷயங்கள் இருக்காது. நீ கவலைப்படாதே மகனே. வெற்றிப் பயணத்தை தொடங்கு'' என்றார் மகாராணி.

''தாயே! மற்றுமொரு வேண்டுகோள்.''

''சொல்.''

''தேவி உலகமாதேவியாரைக் கண்டதிலிருந்து மனம் வேதனைப்பட்டுக் கொண்டிருக்கிறது. அவர் நலம் பெற தாங்கள் தான் கவனிக்க வேண்டும்.''

''அவள் நலம் பெறுவாள். நீ வெற்றியோடு திரும்பும்போது உன்னை வாழ்த்த வருவாள்.''

''இப்போது தான் எனக்கு நிறைவாக இருக்கிறது தாயே. விடைபெற்றுக் கொள்கிறேன்.''

''வெற்றி உண்டாகட்டும் மகனே.''

☆

ராணியாரின் சந்திப்புக்குப் பிறகு ஓரளவு தெம்பை அடைந்தான் உதயசந்திரன்.

மறுநாள் பயணம் செய்ய வேண்டியிருந்ததால் தனது இருப்பிடத்திலேயே ஓய்வெடுத்துக் கொள்ளத் தீர்மானித்தான்.

விஜயகுமாரியிடமிருந்து விடுபடுவதற்காகத்தான் அவன் அவளுக்கு இசைவதுபோல நாடகமாடினானே தவிர அவளுக்கு அந்தரங்க உதவியாளனாக அமருவதற்கு அவன் தயாராக இல்லை. ஆகவே அவளை மீண்டும் போய் சந்திப்பதற்கும் அவன் ஆயத்தப்படவில்லை.

இல்லத்திலேயே ஓய்வெடுத்தான்.

அவனுக்கு உணவுகொண்டு வந்த பணிப்பெண் ''ஐயா, உணவை நன்றாகச் சாப்பிடுங்கள்'' என்றாள்.

''சரி'' என்றான் உதயசந்திரன்.

''இதை நானே சமைத்தேன். அருமையாக இருக்கும்'' என்றாள் பணிப்பெண்.

அதற்கும், ''சரி'' என்று மட்டும் சொன்னான் அவன்.

அவள் தொடர்ந்து, ''ஐயா, என்னை உங்களுக்குப் பிடித்திருக்கிறதா?'' என்று கேட்டாள்.

அதுவரை எங்கேயோ பார்த்தபடி பதில் சொல்லிக் கொண்டிருந்த உதயசந்திரன் எரிச்சலடைந்து அவளைப் பார்த்தான்.

அவளது முகம் குரங்கு போலிருந்தது.

மகா வெறுப்படைந்த உதயசந்திரன் பொறுமையை இழக்காமல், ''இதோ பார் பெண்ணே நீ ஒரு பணிப்பெண். பணிப்பெண்ணாக மட்டும் நடந்து கொள். எல்லை மீறாதே'' என்றான்.

''நீங்கள் தயக்கமோ அச்சமோ கொள்ளத் தேவையில்லை. இங்கே எத்தனையோ பேர் தங்கியிருக்கிறார்கள். எப்படி யெல்லாமோ நடந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு விருந்து படைப்பதும் பணிப்பெண்கள்தான். விருந்தாவதும் பணிப்பெண்கள்தான். நீங்கள் ஏன் தயக்கப்படுகிறீர்கள்?'' என்றாள் அவள் தொடர்ந்து.

அவள் மீது அறுவறுப்படைந்த உதயசந்திரன் ''இங்கு வந்தவர்கள் யாருமே உன் குரங்கு முகத்தைப் பார்த்ததே இல்லையா?'' என்று அநாகரீகமாகக் கேட்டான்.

''முகத்தில் என்ன ஐயா இருக்கிறது?'' என்று கேட்ட அப்பெண், ''நல்ல முகத்தோடு இருக்கும் பணிப்பெண்ணை வேண்டுமானால் அனுப்பி வைக்கிறேன். மகிழ்ச்சி யடைவீர்களா?'' என்று கேட்டுவிட்டுப் போனாள்.

உதயசந்திரனுக்கு என்னவோ போலிருந்தது. பணிப்பெண் பேசியது அநாகரீகம் தான் என்றாலும் அவளது முகத்தைக் குறை கூறி பேசியது அதைவிட அநாகரீகமானது என்று நினைத்து வருத்தப்பட்டான்.

சிறிது நேரத்தில் அங்கு வந்து நின்றாள் பௌர்ணமி.

சற்று முன் வந்த பணிப்பெண்ணுக்கு நேர்மாறாக முழு நிலவாகவே வந்து நின்ற பௌர்ணமியைக் கண்ட உதயசந்திரன் வியப்புடன், ''நீயா?'' என்று கேட்டான்.

''ஏன்? குரங்கு முஞ்சி பணிப்பெண்தான் வேண்டுமா?'' என்று கேட்டாள் பௌர்ணமி.

''பணிப்பெண் உனக்குத் தெரிந்தவளா?''

''அவள்தான் என்னை அனுப்பினாள்.''

''எதற்கு?''

''அவளை உங்களுக்குப் பிடிக்காததால்.''

''அப்படியொன்றும் நான் சொல்லவில்லையே?''

''அப்படியா? சரி, போய் அவளையே அனுப்புகிறேன்.''

''உன்னால் அது முடியாது.''

''ஏன்?''

''நீ தான் அவள். அவள் தான் நீ.''

''அதெப்படி சொல்கிறீர்கள்?''

''உற்றுப் பார்த்தேன். தெரிந்தது.''

''என்ன தெரிந்தது.''

''ஒப்பனைகள் சரியாக அழிக்கப்படவில்லை என்பது'' என்று சொன்ன உதயசந்திரன் ''குரங்கு முகத்தைப் போல எதற்காக ஒப்பனை செய்து கொண்டு வந்தாய்?'' என்று கேட்டான்.

''சோதித்துப் பார்ப்பதற்காகத்தான்.''

சிரித்தான் உதயசந்திரன்.

''எதற்குச் சிரிப்பு?''

''நான் காக்கைமடுவிற்கு வந்ததிலிருந்து என்னைப் பல பேர் சோதித்துவிட்டார்கள். நீ தான் பாக்கியிருந்தது. அதை இப்போது செய்துவிட்டாய். எதை சோதித்தாய் என்னிடம்?''

சொல்வதற்குத் தயங்கினாள் அவள்.

''நான் பெண் பித்தனாக இருப்பேனா என்று சோதிக்க முற்பட்டாயா? அதைத்தான் காக்கை மடு விஹாரத்திலேயே உனக்குத் தெரிந்து சோதித்துவிட்டார்களே! கட்டழகிகள் ஐந்து பேர் சுற்றிக் கொண்டு இறுக்கிய போதே கவிழாத நான் குரங்கு முகத்திற்காக வீழ்ந்துவிடுவேன்?''

''அதெல்லாம் ஒன்றுமில்லை. விளையாட்டிற்காகத்தான் அப்படிச் செய்தேன்.''

''எங்கிருந்தாய் பௌர்ணமி? அர்ச்சகர் வீட்டில் வந்து பார்த்தேன். நீ காக்கை மடுவிற்குப் போய்விட்டதாகச் சொன்னார்களே!''

''அங்கே இருக்க முடியாமல்தானே நான் காஞ்சிக்கு வந்தேன்?''

''பிறகு நீ எங்கே தான் இருந்தாய்? இன்று கூட அர்ச்சகரைப் பார்த்து பௌர்ணமி வருவாளா என்று கேட்டேன். அவரோ இன்றைக்கு அமாவாசை என்று கிண்டலாகச் சொன்னார்.''

அவளது முகம் லேசாக கலங்கவே, ''என்ன ஆயிற்று பௌர்ணமி?'' என்று கேட்டான்.

அவள் கண்களைக் கசக்கிக் கொண்டு, ''உங்களிடம் ஏன் தான் மனதைப் பறி கொடுத்தேனோ என்று நினைக்கிறேன்'' என்றாள்.

''ஏன் அப்படி நினைக்க வேண்டும் பௌர்ணமி? என் மீது ஏதாவது குறை கண்டாயா?'' என்று கேட்டு அவளைத் தன் பக்கத்தில் உட்காரவைத்துக் கொண்ட உதயசந்திரன், ''சொல் பௌர்ணமி! என் மீது ஏதாவது குறை இருக்கிறதா?'' என்றான்.

இல்லை என்பதுபோல் தலையாட்டினாள் அவள்.

''பின்? என் மீது நம்பிக்கை இல்லாமல் போய்விட்டதா?''

''பெண்களுக்கு புருஷர்களை நினைத்து உருகுவதுதான் வேலையாகப் போய்விட்டது'' என்று சொல்லி கலங்கிய அவள் ''நம்பிக்கை இல்லாமலா உங்களிடம் தனிமையில் வருகிறேன்? நம்பிக்கை இருக்கிறது. ஆனால் அதுமட்டும் போதுமா வீரரே? நம்பிக்கை என்பது கடவுள் மாதிரி. அது செயல்பட வேண்டுமே தவிர சிலையாக இருந்துவிடக் கூடாது. நமக்குள் பரஸ்பர நம்பிக்கை இருக்கிறது. ஆனால் நம்மால் சந்தித்து நான்கு வார்த்தைகளைப் பேசிக்கொள்ள முடியவில்லை. என்னால் முடியவில்லை உதயசந்திரரே. முடியவில்லை. பரிதவித்துப் போகிறேன். உங்களை எப்போதும் நினைக்க முடிந்தாலும் பார்க்க முடியாததால் சோர்ந்து போகிறேன். உங்களைத் தேடித் தேடித் தோற்கிறேன். வெறும் நம்பிக்கையால் நான் நிம்மதி அடைய முடியுமா? உங்களைப் பார்க்காமல் பேசாமல் நான் நிம்மதியடைய முடியுமா? மகிழ்ச்சியடைய முடியுமா?'' என்று சொல்லி நிறுத்தினாள்.

அவளைத் தடவிக் கொடுத்த அவன், ''சரியாகத்தான் சொன்னாய் பௌர்ணமி. தவிப்பது நீ மட்டுமல்ல. நானும்தான். சொல்லப் போனால் சோலைச் சுரங்கத்தில் நாம் நம் எதிர்காலத்தைப் பற்றித்தான் திட்டமிடவிருந்தோம். ஆனால் அமைச்சரால் நாம் பிரிய வேண்டியதாயிற்று. அதற்குப் பின் அடுத்தடுத்து அதிசயங்களை நான் சந்திக்க வேண்டியதாயிற்று.

உன்னைச் சந்திக்க முடியவில்லை. இருந்தும்கூட இடையில் ஒரு முறை உன்னைத் தேடி பாண்டவ தூதப் பெருமாள் ஆலயத்திற்கு வந்தேன். நீயோ காக்கைமடுவிற்குச் சென்றுவிட்டதாகச் சொல்லப்பட்டது. அங்கே வர எனக்கு நேரமும் இல்லை. விருப்பமும் இல்லை. என்னிடம் சொல்லாமல் கொள்ளாமல் மாயமாய் மறைந்தது நீதான். இப்போது கலங்குவதும் நீதான்'' என்று சொல்லிவிட்டு, ''இந்த நிலையெல்லாம் தற்காலிகமாகத் தான் பௌர்ணமி. எங்கோ இருந்த என்னை காக்கை மடுவிற்கு வரவழைத்து உன் அன்பிற்குப் பாத்திரமாக்கியது யார்? விதி தானே பௌர்ணமி? அது பொய்யாகிவிடுமா?'' என்றான்.

''நீங்கள் சாளுக்கிய நாட்டிற்குப் போகப் போகிறீர்களாமே?''

''ஆம் பௌர்ணமி. நாளைக்குப் புறப்பட வேண்டும். அதைச் சொல்லி உன்னிடம் விடைபெறத்தான் உன்னைத் தேடி வந்தேன்.''

''விடைபெற்றுக் கொள்ளவா? உங்களை அனுப்பிவிட்டு இங்கே நானென்ன செய்வது? உங்களுடன் நானும் வருகிறேன்.''

''ஆர்வத்தில் செல்லக்கூடிய பயணமல்ல பௌர்ணமி. வேலும் வாளும் பயணம் போகும் பாதையில் மலரும் மாலையும் பயணம் போக முடியாது.''

''நீங்கள் இல்லாமல் நான் உயிரோடு இருக்க மாட்டேன்.''

''அப்படிச் சொல்லாதே பௌர்ணமி. மகாராணியாரைப் பார். அவர் மாமன்னர் மீது கொண்டிருக்கும் அன்பு நீ என் மீது கொண்டிருக்கும் அன்பிற்குக் குறைந்தது அல்ல. அதற்காக மன்னர் செல்லும் தடங்களிலெல்லாம் கூடவே செல்ல பிடிவாதம் பிடிக்கிறாரா? இல்லை பௌர்ணமி. அப்படி பிடிவாதம் செய்திருந்தால் பெருவளநல்லூர் போர் வெற்றி கரமாக நடந்திருக்குமா? வாளேந்திய வீரன் போருக்குச் செல்லும்போது அவனது அன்பிற்குரியவள் வாழ்த்தி வழியனுப்ப வேண்டுமே தவிர வழி நெடுக வருவேன் என்று சொல்லக் கூடாது.''

''இதைத்தான் ஆரம்பத்திலேயே நான் சொன்னேன். புருஷர்களை எண்ணி கண்ணீர் விட்டு காத்திருப்பதுதான் பெண்களின் வேலை என்று.''

''தவறு பௌர்ணமி. நீ எதற்காக கண்ணீர் விட வேண்டும்? அன்பு விஷயத்தில் என் மீது நம்பிக்கை கொண்ட நீ என் வீரத்தில் வைக்கவில்லையா? சாளுக்கிய நாட்டு போருக்குப் போகிற நான் அங்கேயே சமாதியாகிவிடுவேன் என்பதுதான் உன் எண்ணமா? மாமன்னர் எப்படிப்பட்டவர்? அவர் என்னை நம்பி உப

தலைவனாக ஒரே நிமிடத்தில் நியமனம் செய்து போருக்கு அனுப்புவது எத்தனை மகத்தானது? உன் அன்பு எனக்கு கிடைத்ததுகூட நான் செய்த புண்ணியம்தான். மகாலட்சுமியான மகாராணியார் வாய் நிறைய வாழ்த்தியனுப்பியிருக்கிறார். எத்தனைச் சிறப்போடு செல்கிறேன் நான்? இப்படிச் செல்லும் நான் போரில் தோற்றுவிட்டா ஓடிவிடுவேன்? இல்லை பௌர்ணமி. உணர்ச்சிவசப்படாமல் நிதானமாகப் பேசு. உன்னோடு ஆனந்தமாகச் செல்லும் பயணம் நிச்சயம் உண்டு. ஆனால் அது இதுவல்ல. உன்னைத் தேற்றிக் கொண்டு எனக்கு விடைகொடு. அது தான் எனக்குத் தெம்பைத் தரும்.''

அவனது பேச்சால் கலங்குவதை விட்டுவிட்டு தெம்பை அடைந்த பௌர்ணமி மொட்டு மலர்ந்தாற்போல் முகம் மலர்ந்தாள்.

''போய் வாருங்கள் வீரரே. நாட்டுச் சேவைக்காக நல்லபடியாகச் சென்று வாருங்கள். நீங்கள் வெற்றியோடு திரும்பி வரும்வரை காஞ்சியிலேயே நான் இருப்பேன். காமக்கண்ணியின் ஆலயத்தில் தினமும் விளக்கேற்றி உங்கள் வெற்றிக்காக வேண்டிக் கொள்வேன்'' என்று சொன்ன அவள் சடாரென அவனுக்கருகில் சாய்ந்து அவனது கன்னத்தில் தன் தங்க உதடுகளால் ஒரு முத்திரையைப் பதித்து, ''என்னை மறந்தாலும் இதை மறக்காதீர்கள்'' என்று சொல்லிவிட்டுப் பறந்தாள்.

உதயசந்திரனுக்கு பூரணத் திருப்தியாக இருந்தது.

அன்று மாலை வழிகாட்டியான சத்தியசந்தர் வந்து அவனோடு நிரம்பப் பேசினார். சாளுக்கிய நாட்டிற்குச் செல்லும் பயணத்தில் இருந்த பூகோள அமைப்புகளைப் பற்றி விளக்கமாகப் பேசினார். நதிகள், மலைகள், காடுகள், கோட்டைகள் ஆகியவற்றைப் பற்றி விவரித்துவிட்டு விடைபெற்றார்.

நாளை எங்கே வரவேண்டும் என்பது பற்றி சேனாதிபதி யிடமிருந்து செய்தி வரவில்லையே என்ற சிந்தனையில் அவன் ஆழ்ந்திருந்தபோது சுற்றுப்புறத்தை கவனிக்கவில்லை.

அச்சமயத்தில் பின்னால் நெருங்கிய ஒரு மனிதன் உருளைக் கட்டையால் பின் மண்டையில் அடித்தான்.

உதயசந்திரன் மயங்கி விழுந்தான்.

அவனைக் கட்டையால் அடித்தவன் -

அர்ச்சகர் மகன் அரிச்சந்திரன்.

☆☆☆



23 படைப்பிரிவின் பயணம்

உதயசந்திரனுக்கு கொஞ்சம் கொஞ்சமாக நினைவு திரும்பிக் கொண்டிருந்தது.

தான் கீழே கிடத்தப்பட்டிருப்பதையும் பின் மண்டையில் லேசான வலி இருந்து கொண்டிருந்ததையும் அவனால் உணர முடிந்தது.

ஆயுதங்களின் சப்தங்களும் மனிதர்கள் இங்குமங்குமாக நடமாடிக் கொண்டிருந்த அரவங்களும் கேட்டன. போர்க்களத்தில் இருக்கிறோமா என்றச் சந்தேகம் வந்துவிட்டது அவனுக்கு. கண்களைத் திறந்து பார்க்க முயன்றான். யாரையும் தெளிவாகப் பார்க்க முடியவில்லை.

இந்நிலையில், ''மன்மதன் எழுந்துவிட்டானா?'' என்று கணீரென்ற குரல் எழுந்தது.

அது சேனாதிபதியின் குரல்தான் என்பது தெரிந்தது உதயசந்திரனுக்கு.

அவரது குரலையடுத்து அவனை யாரோ நெருங்கி வந்து பார்த்துவிட்டு, ''கண் விழித்துவிட்டார்'' என்று குரல் கொடுத்ததும், ''எழுப்பி நீராடச் செய்யுங்கள். உணவு கொடுத்து அழைத்து வாருங்கள்'' என்று சேனாதிபதியின் குரல் மீண்டும் ஒலித்தது.

உதயசந்திரன் எழுந்து உட்கார்ந்தான்.

அவனை வீரர்கள் இதமாகப் பேசி அழைத்துச் சென்று உபசரணைகளைச் செய்தார்கள்.

''இது எந்த இடம்?'' என்று கேட்டான் உதயசந்திரன்.

''காஞ்சிக்கு நேர் வடக்கே இருக்கும் தக்கோலம் என்ற இடத்தில் நாம் இருக்கிறோம் உபதலைவரே'' என்றான் ஒரு வீரன்.

அந்த இடத்தில் கட்டிடம் எதுவும் இல்லை. இடிந்த மண்டபம் ஒன்று மட்டுமே இருந்தது. மற்றபடி பெரியதோர் ஆலமரமும் அதையடுத்து வேலமரங்களும் காணப்பட்டன.

''இங்கே இருப்பது யார்?'' என்று கேட்டான் உதயசந்திரன்.

''பல்லவ சேனாதிபதி இருக்கிறார். அவரைச் சேர்ந்த புரவி வீரர்கள் நூறு பேர் இருக்கிறார்கள்'' என்றான் வீரன்.

''நான் இங்கே எப்படி வந்தேன்?'' என்று கேட்டான் உதயசந்திரன்.

''காஞ்சியில் உங்கள் இருப்பிடத்திலிருந்து மயங்கிய நிலையில் பார வண்டியில் கொண்டுவரப்பட்டிருக்கிறீர்கள்.''

''ஏன் அப்படி?''

''நீங்கள் செல்ல வேண்டிய இடம் யாருக்கும் தெரியக் கூடாது என்பதால்தான் அப்படி.''

''நீங்கள் எல்லோரும் கூட அப்படித்தான் வந்தீர்களா?''

''இல்லை. நீங்கள் உபதலைவர். முக்கியமானவர். ரகசியப் படைப்பிரிவு இருக்கும் இடத்திற்கு நீங்கள் புரவியில் வந்தால் உங்களையும் அறியாமல் எதிரிகள் யாரேனும் பின்தொடரலாம். ஆகவே அதைத் தடுக்கத்தான் இந்த நடவடிக்கை.''

''இது சேனாதிபதியின் கட்டளையின் பேரில் நடந்ததா?''

''ஆமாம்.''

''என் பின் மண்டையில் அடித்தது நீதானா?''

''இல்லை. அரிச்சந்திரன்.''

''யார்? அர்ச்சகர் மகனா?''

''ஆம். அவர் இப்போது படைப்பிரிவில் இருக்கிறார்.''

''நம் பிரிவிலா?''

''ஆமாம்.''

இதற்குப் பிறகு எதுவும் கேட்க விரும்பாத உதயசந்திரன், ''போகலாமா?'' என்றான்.

''இந்த உடைகளை அணிந்து கொள்ளுங்கள்.''

''இதென்ன உடை?''

''வேடர்களுக்குரிய உடை. இந்த உடைகளை அனைவரும் அணிந்து வேடர்களாகப் பயணம் செய்ய வேண்டும். இதுதான் சேனாதிபதியின் ஏற்பாடு.''

உதயசந்திரன் மாற்றுடைகளை அணிந்து கொண்டான்.

பிறகு சேனாதிபதியிடம் அழைத்துச் செல்லப்பட்டான்.

ஆலமரத்தடியில் மண்டபத்தூண் ஒன்றின் மீது கடோத் கஜனைப் போல அமர்ந்திருந்த சேனாதிபதி உதயசந்திரனைக்

கண்டதும், ''மன்மதனா? வா வா'' என்று சகஜமாக வரவேற்றுவிட்டு ''சாப்பிட்டாயா?'' என்று கேட்டார்.

தலையாட்டினான் உதயசந்திரன்.

''நன்றாகச் சாப்பிட்டாயா?'' என்று கேட்டார் சேனாதிபதி.

பக்கத்தில் இருந்த வீரன், ''உபதலைவர் சரியாக உண்ணவில்லை'' என்றான்.

''உணவு மீதம் ஏதாவது இருக்கிறதா?'' என்று கேட்டார் சேனாதிபதி.

''புளியோதரை கொஞ்சம் இருக்கிறது.''

''அதைக் கொண்டு வந்து மன்மதனுக்குக் கொடு.''

''எனக்கு வேண்டாம்'' என்றான் உதயசந்திரன்.

''இது என் கட்டளை. சாப்பிட்டுத்தான் ஆகவேண்டும்.''

''சாப்பிட்டால் வாந்தி வந்துவிடும்.''

''நாம் உடனடியாகப் பயணம் மேற்கொள்ளுகிறோம். அடுத்த வேளை உணவு எங்கே கிடைக்கும் எப்படிக் கிடைக்கும் என்று சொல்ல முடியாது. கிடைக்காமல் போனாலும் போகலாம். ஆகவே கிடைக்கும் போது ஒரு பிடி பிடித்துவிட வேண்டும். இது படை முகாமிற்கு உரிய நிபந்தனை.''

''தெரியும் சேனாதிபதியாரே. இப்போது இதற்கு மேல் உண்ண என்னால் முடியாது. நான் பத்து நாட்கள் வரை பட்டினியைத் தாங்குவேன்.''

''நாம் மேற்கொள்ளவிருப்பது துறவறமில்ல. நீண்ட தூரப் பயணமும் போரும் ஆகும். இதற்கு உடல் வலிமை மிகவும் அவசியம். கிடைக்கும்போது நன்றாகச் சாப்பிட்டு உடலைக் கவனித்துக் கொள்ள வேண்டும்'' என்று சொன்ன சேனாதிபதி. மீதியிருந்த புளியோதரையைக் கொண்டு வரச் சொல்லி இரண்டு கவளங்களாக உருட்டி வாயில் போட்டுக் கொண்டார். வழக்கம் போல நிறைய தண்ணீரைப் பருகினார். பெரியதாக ஏப்பமும் விட்டார்.

''போகலாமா?'' என்று கேட்டார்.

அதையடுத்து வீரர்கள் புரவிகளைக் கொண்டு வந்தார்கள்.

அனைவரும் புரவிகளில் ஏறி அமர்ந்தார்கள்.

உதயசந்திரனும் ஒரு புரவியில் ஏறி அமர்ந்தான்.

சேனாதிபதி முன்னே செல்ல அவருக்குப் பின்னால் இடைவெளி விட்டு பத்து பத்து வீரர்களாக நகர்ந்தார்கள்.

கடைசி பிரிவில் உதயசந்திரனும் ஒன்பது வீரர்களும் சென்றார்கள்.

மெதுவாக ஆரம்பித்த புரவிச் சவாரி விரைவிலேயே வேகம் பெற்று கடகடவென விரைந்து சென்றது.

ஒழுங்கான பாதை எதுவும் இல்லை. புதர்கள் மண்டிய காட்டு வழியாக இருந்தது. ஆனால் புரவிகள் அதையெல்லாம் பொருட்படுத்தாமல் பாய்ந்தோடின.

எல்லாப் புரவிகளும் நீண்ட தூர பயணத்திற்குப் பழக்கப் பட்டவைகளாக இருக்க வேண்டும் என்று நினைத்துக் கொண்டான் உதயசந்திரன்.

சுமார் ஒரு யோஜனை* தூரம் பயணம் சென்றதும் வீரர்கள் புரவிகளை நிறுத்தினார்கள். அந்த இடத்திற்கு அருகில் இருந்த நீரோடையில் வீரர்கள் நீரைப் பருகினார்கள். புரவிக்கும் அளிக்கப்பட்டது. சில நிமிடங்கள் மட்டுமே ஓய்வெடுத்த படை வீரர்கள் மீண்டும் பயணத்தை தொடங்கினார்கள். பழையபடியே புயல் வேகப்பயணம் தொடர்ந்தது. மேலும் ஒரு யோஜனை தூரம் பயணம் தொடர்ந்தது. மாலை நேரம் முகிழ்க்கத் தொடங்கியது. சேனாதிபதியின் கட்டளையை அடுத்து வீரர்கள் பயணத்தை நிறுத்தினார்கள். வீரர்கள் பலருக்கு பல்வேறு கட்டளைகளையிட்ட சேனாதிபதி உதயசந்திரனை அழைத்து ''வேட்டைக்குப் போ'' என்றார். அவனோடு ஒரு வீரனையும் அனுப்பினார்.

ஏன் எதற்கு என்பது புரியாவிட்டாலும் கேள்வி எதுவும் கேட்காமல் வீரனுடன் புறப்பட்டான் உதயசந்திரன். நாகைப்பட்டினத்தில் அவனது வீரம் பேசப்பட்டது என்றால் பேசும்படியான சாகசங்களை அவன் செய்திருந்தான். அவனது வீரம் வனாந்திர வேட்டைகளிலும் போர்களிலும்தான் வெளிப்பட்டதில்லை. ஆனால் அவை குறித்த கேள்வி ஞானம் இருந்தது. அதை மனதில் கொண்டு வேட்டைக்குப் புறப்பட்டான். புரவியை அங்கேயே விட்டுவிட்டு இருவரும் கிளம்பினார்கள். அந்த இடத்திலிருந்து மேற்கு திசையில் அடர்ந்த காடு இருந்ததை உணர முடிந்ததால் அந்த திசையிலேயே சென்றார்கள். இருட்டு நெருங்கிக் கொண்டிருந்ததால் வனாந்திரப் பகுதியை விரைந்து அடைந்தார்கள். வேடர்களாக வேடமிட்டபோதே அவர்களுக்கு வில்லும் அம்பும் ஆயுதங்களாகியிருந்ததால் வேட்டைக்கு ஏற்றவையாய் இருந்தன.

* ஒரு யோஜனை என்பது 16 மைல் தூரத்தைக் குறிக்கும்.

''நீ இதற்கு முன் வேட்டைக்குச் சென்றிருக்கிறாயா?'' என்று கூட இருந்த வீரனிடம் கேட்டான் உதயசந்திரன்.

''இல்லை ஐயா.''

''வனத்திற்குள் சென்றுவிட்டால் நாம் விலங்குகளை கண்காணிப்பதைவிட விலங்குகள் நம்மை கண்காணிக்கும் என்பதுதான் உண்மை. இரையைத் தேடி அலையும் விலங்குகளுக்கு கண் பார்வையின் சக்தி மிக அதிகம். அதுமட்டுமல்ல. வனங்களில் விலங்குகளே எப்போதும் திரிவதால் அரிதாக அங்கே மனிதர்கள் பிரவேசிக்கும்போது மனித வாசனையை அவை எளிதாக மோப்பம் பிடித்துவிடும். நமக்கோ அந்த இயல்பு கிடையா. ஆகவே நாம் அவற்றை அணுகுவதைவிட வேகமாக அவை நம்மை அணுகித் தாக்கும். எனவே வேட்டைக்குச் செல்லும் வேடர்கள் தங்கள் வாசனையை மறைக்க தங்கள் உடம்பில் வாசனை வீசும் மூலிகைச் செடிகளைக் கட்டிக் கொள்வார்கள்.''

''நாமும் அவ்வாறு செய்ய வேண்டுமா உபதலைவரே?''

''நமது வேலை ஒருநாள் கூத்து. இதற்கு அந்த முறை தேவையில்லை. முடிந்த வரை சுற்றுப்புரத்தில் அதிக கவனம் செலுத்தினால் போதும்.''

இவ்வாறு பேசிக் கொண்டே அவர்கள் வனத்தை அடைந்தபோது இரவு முகிழ்த்து சுற்றுப்புரத்தை நன்றாக போர்த்துக் கொண்டிருந்தது. மரங்கள் அடர்த்தியாகவும் உயரமாகவும் இருந்தன.

''முடிந்தவரை புதர்களை சிதைக்காமலும் கிளைகளை வெட்டாலும் போக வேண்டும். வனம் விலங்குகளின் வாழ்விடம் அதை நாம் சேதாரப்படுத்தாத வரை அவை நம்மீது கோபம் கொள்வதில்லை. அவற்றின் சீற்றத்தைக் கிளப்பி எதிர் கொள்வது வீரத்திற்கு ஏற்றதாக இருக்கலாம். ஆனால் வேட்டைக்காரர்களுக்கு ஏற்றதல்ல'' என்றான் உதயசந்திரன்.

அவனது கேள்வி ஞானம் வீரனைக் கவர்ந்தது. அதேசமயம் கேள்வி ஞானம் எந்த அளவிற்கு உதவும் என்று அவனுக்கு விளங்கவில்லை. எதுவும் பேசாமல் சென்றான். காட்டுப்பகுதிக்குள் செல்லச் செல்ல வனவிலங்குகளின் இரைச்சல்கள் பயமுறுத்துவதாக இருந்தன. ''சரியாக பார்க்க முடியாத நிலையில் பாம்புகள் கடித்துத் தொலைக்கலாம். நரிகள் துள்ளிப் பாய்ந்து தாக்கலாம். மலைப்பாம்புகள் வளைத்து

இழுக்கலாம். காட்டு வெளவால்கள் பறந்து வந்து கடிக்கலாம். இவற்றிலிருந்து மீண்டால் தான் வேட்டையாட முடியும்'' என்றெல்லாம் பயந்து கொண்டிருந்த வீரனை திடீரென்று ''நில்'' என்றான் உதயசந்திரன்.

தனது வில்லிலிருந்து அம்பொன்றை எய்துவிட்டு ''வா. அந்த மரத்தில் ஏறிக் கொள்ளலாம்'' என்று சொன்னான் உதயசந்திரன். இருவரும் அருகே இருந்த மருத மரத்தின் மீது விறுவிறுவென ஏறினார்கள். அதேசமயம் அந்தப் பிராந்தியமே கிடுகிடுப்பது போல விலங்கின் உறுமல் எழுந்தது. சப்தம் வந்த திசையிலேயே பார்த்துக் கொண்டிருந்த உதயசந்திரன் ''அதோ!அதோ!'' என்றான்.

அவன் சுட்டிக்காட்டிய இடத்தில் பெரும் அசைவு தெரிந்தது.

''அம்பை விடு'' என்று சொன்ன உதயசந்திரன் அசைவு தெரிந்த இடத்தை நோக்கி அடுத்தடுத்து அம்புகளை விடுத்தான்.

தற்போது எழுந்த ஒலி வித்தியாசமாக இருந்தது. உறுமலாக இல்லாமல் இருமலாக இருந்தது.

இருவரும் மரத்தை விட்டு இறங்கி இருமல் எழுந்த இடத்திற்குச் சென்றார்கள்.

அதேசமயம் அந்த இடத்திலிருந்து புலியொன்று அவர்கள் மீது பாய்ந்து இருவரையும் கீழே தள்ளியது.

கீழே தள்ளிய அப்புலி அவர்களுக்கு அப்பால் விழுந்தது. உயிரை விட்டது.

உதயசந்திரனும் சக வீரனும் எழுந்து புலியைக் கண்டார்கள்.

அவர்கள் எய்த அம்புகள் தான் புலியின் உயிரை வாங்கிவிட்டது என்பது அவர்களுக்குப் புரிந்தது.

''தங்கள் அம்புகள் தான் புலியை வீழ்த்தியிருக்கின்றன. நான் அம்பு எய்ய முயன்றேனே தவிர எய்யவில்லை'' என்று சொன்ன சக வீரன் ''அது எப்படி வெறும் அசைவைக் கண்டு மிகச் சரியாக எய்தீர்கள்'' என்று கேட்டான்.

''இப்போது அந்த விஷயங்கள் தேவையில்லாதவை வீரனே. நாம் இப்போது செய்ய வேண்டியது காட்டுக் கொடிகளை அறுத்து இப்புலியைக் கட்டி நமது இருப்பிடத்திற்கு இழுத்துச் செல்வோம், சேனாதிபதி பாராட்டுவார்'' என்றான் உதயசந்திரன்.

இருவரும் அவ்வாறே செய்தார்கள்.

சேனாதிபதி உயிரற்ற அப்புலியைப் பார்த்தார். பிறகு உதயசந்திரனை வெறுப்புடன் நோக்கினார்.

''முட்டாள். புலியை விழுத்தவா உன்னை அனுப்பினேன்? அதோ பார். நம் வீரர்கள் மான்களையும் முயல்களையும் வேட்டையாடி வந்திருக்கிறார்கள். அங்கே பார். தீயை மூட்டி மாமிசத்தை வாட்டிக் கொண்டிருக்கிறார்கள். இரவு உணவுக்கு வேண்டியவை இவைதான். புலியல்ல. புலியை யாராவது தின்பார்களா? இங்கு என்ன வீர விருதா வழங்கப்படுகிறது புலியை வேட்டையாடி வந்திருக்கிறாயே - போய் இதை குழி தோண்டிப் புதைத்துவிடு'' என்று இகழ்ந்து பேசவும் செய்தார்.

வீரர்கள் முன்னிலையில் அவர் இவ்வாறு பேசியது உதயசந்திரனுக்கு அவமானமாக இருந்தது.

அதேசமயம் அவர் கூறியதில் இருந்த நியாயத்தை உணர்ந்த உதயசந்திரன் ''மன்னிக்க வேண்டும் சேனாதிபதியாரே. அனுபவம் இல்லாததால் சாமர்த்தியமாக நினைக்க முடியாமல் போய்விட்டது'' என்று கூறிவிட்டு புலியைப் புதைப்பதில் முனைந்தான்.

சிறிது நேரத்தில் மாமிச உணவு பரிமாறப்பட்டபோது தனக்கு ''பழங்கள் மட்டும் போதும்'' என்றான் உதயசந்திரன்.

''இங்கே அவரவரும் அவரவர் விருப்பப்படி செயல்பட முடியாது. எல்லோருக்கும் ஒரே விதிதான். உனக்குப் பரிமாறப்பட்டதை சாப்பிடு. பழங்கள் வேண்டுமானால் கூடுதலாக சாப்பிடலாம்'' என்றார் சேனாதிபதி.

உதயசந்திரன் அவரை எதிர்த்துப் பேசவில்லை.

சாப்பிட்டு முடித்ததும் ''முறை வைத்துக் கொண்டு உறங்கலாம். காவல் புரியலாம்'' என்றார் சேனாதிபதி.

சிலரை அழைத்து ''நீங்களெல்லாம் புரவிகளை முறை வைத்துக் கொண்டு காவல் செய்யுங்கள்'' என்றார்.

வேறு சிலரிடம் ''புரவிகளுக்கு உணவு கொடுத்தாகி விட்டதா? காலையில் அவற்றுக்கான உணவுக்கு ஏற்பாடு செய்துவிட்டீர்களா?'' என்று கேட்டார்.

ஒரு சிலரிடம் ''புரவிகளை நன்றாகத் தேய்த்துவிடுங்கள். அவை நமைச்சலோடு இருந்தால் பயணத்திற்கிடையே தொல்லையாக அமைந்துவிடும்'' என்றார்.

பொதுவாக எல்லோரையும் பார்த்து, ''யாருக்காவது உடல்நலம் சரியில்லையென்றால் உடனடியாகச் சொல்லி விடுங்கள். பயணம் செய்ய முடியாமல் இருந்தாலும் சொல்லி

விடுங்கள். உடல்நலக் குறைவுள்ளவர்களை இங்கே கழித்து விடுவதற்குத் தான் கேட்கிறேன்'' என்று சொன்னார்.

அவற்றையெல்லாம் கவனித்த உதயசந்திரனுக்கு அவர் சேனாதிபதி என்ற அந்தஸ்த்திற்கு அப்பாற்பட்டு அக்கறை காட்டி படை வீரர்களை கவனித்துக் கொள்வதாகவே தோன்றியது.

தனக்கு ஒதுக்கிய பத்து வீரர்களைத் தூங்கச் சொல்லிவிட்டு காவல் பணியை மேற்கொண்டான் உதயசந்திரன்.

அதேசமயம் சேனாதிபதி அர்ச்சகர் மகன் அரிச்சந்திரனிடம் நீண்ட நேரமாகப் பேசிக் கொண்டிருந்ததை கவனித்தான்.

மாமன்னரால் உபதலைவனாக நியமிக்கப்பட்டத் தன்னை விட்டு அரிச்சந்திரனுடன் சேனாதிபதி விவாதித்துக் கொண்டிருந்தது வருத்தமாக இருந்தது. ஆனாலும் அதில் அவன் குறுக்கிட வில்லை.

இதற்கிடையில் பேச்சை முடித்துக் கொண்ட சேனாதிபதி அதே இடத்தில் மரம் போல் சாய்ந்தார். சிறிது நேரத்திலேயே உறங்கிவிட்டதற்கு அடையாளமாக பெரும் குறட்டையொலி எழுந்தது அவரிடமிருந்து.

அரிச்சந்திரன் அவரிடமிருந்து விடைபெற்றுக் கொண்டு ஒரு சுற்று சுற்றிவிட்டு உதயசந்திரனிடம் வந்தான்.

''என்ன உதயசந்திரா, காவல் பணி செய்கிறாயா? இவ்வளவு நேரமாக சேனாதிபதியிடம் பல்வேறு விஷயங்களை விவாதித்துக் கொண்டிருந்தேன். அவருக்கு அடிக்கடி சந்தேகம் வந்து விடுகிறது. அவற்றைச் சேர்த்து வைத்துக் கொண்டு என்னிடம் கேட்கிறார். எனக்கோ தூக்கமாக இருந்தது. ஒரு வழியாக விவாதத்தை முடித்துக் கொண்டு வந்துவிட்டேன். உறங்க வேண்டும். வரட்டுமா?'' என்று கூறிவிட்டுச் சென்றான்.

தன்னை உபதலைவனாக மதிக்காமல் போனாலும் 'அண்ணா' என்று அழைத்து வந்த பாச உச்சரிப்பையும் விட்டுவிட்டு பெயரைச் சொல்லி அரிச்சந்திரன் அழைத்தது கூட உதயசந்திரனுக்கு ஒரு பொருட்டாக இல்லை.

சேனாதிபதியின் சந்தேகங்களைத் தீர்த்துவைத்துவிட்டு வந்ததாகச் சொன்னது தான் அதிசயமாகவும் அதிகப்பிரசங்கித் தனமாகவும் இருந்தது.

மாமன்னரையும் மகாராணியையும் ஒரு முறை நினைத்துப் பார்த்துக் கொண்ட அவன், ''இந்த பிள்ளை மட்டும் ஏன் இப்படி இருக்கிறான்?'' என்று கேட்டுக் கொண்டான்.

நள்ளிரவுக்குப் பிறகு நான்கு வீரர்கள் காவல் பணியை மேற்கொண்டதும் உதயசந்திரன் உறங்கமுற்பட்டான்.

மறுநாள் காலை பயணம் தொடர்ந்தது.

பதினைந்து நாட்களுக்கு இதே ரீதியில் நடந்த பயணத்தில் சேனாதிபதி உதயசந்திரனை சிறிதும் பொருட்படுத்தவில்லை. எந்த விஷயத்திலும் ஆலோசிக்கவில்லை. அடிக்கடி குறை சொல்லி இகழ்ந்தார். அவனை உதயசந்திரன் என்று அழைக்காமல் மன்மதன் என்று குறிப்பிட்டே அழைத்து வந்தார்.

மன்மத லீலைகளை அவர் புரிந்து கொண்டு தன்னை மன்மதன் என்று அழைத்தது வினோதமாக இருந்தாலும் அழைத்துக் கொண்டு போகட்டும் என்று விட்டுவிட்டான்.

அரிச்சந்திரனின் அதிகப் பிரசங்கித்தனமும் அதிகரித்துக் கொண்டு வந்தது. சேனாதிபதிக்கு நிகராகத் தன்னை எண்ணிக் கொண்டு பீற்றிக் கொண்டது அநாகரீகமாக இருந்தது. சேனாதிபதியே அதைக் கண்டு கொள்ளாதபோது மற்றவர்களும் அதைப் பொருட்படுத்தவில்லை.

இந்த நிலையில் படைப்பிரிவானது வடபெண்ணை யாற்றைக் கடந்திருந்தபோது சாளுக்கிய ஒற்றன் ஒருவன் சிக்கினான்.

அவனை சேனாதிபதியும் அரிச்சந்திரனும் தனிமையில் கொண்டு போய் விசாரித்தார்கள்.

விசாரித்து முடிந்ததும் சேனாதிபதி இட்ட கட்டளை கொடூரமாக இருந்தது.

☆☆☆



24 அரிச்சந்திரன்

சாளுக்கிய ஒற்றனை வீரர்கள் மடக்கிப் பிடித்து வந்து நிறுத்தியதும் அவனைத் தனியே அழைத்துப் போனார் சேனாதிபதி. அவருடன் அரிச்சந்திரனும் சென்றான்.

''சாப்பிட்டாயா?'' என்று ஒற்றனை வினவினார் சேனாதிபதி.

''இல்லை'' என்றான் ஒற்றன்.

அவனது மொழியிலேயே விசாரித்த சேனாதிபதி ''உணவு வேண்டுமா?'' என்று கேட்டார்.

''ஆமாம்'' என்றான் ஒற்றன்.

''உணவு வேண்டுமானால் செய்தியைச் சொல்'' என்றார் சேனாதிபதி.

''செய்தியா? என்ன செய்தி?''

''இதோ பார் ஒற்றனே! சாளுக்கிய நாட்டிலிருந்து வருகிற நீ ஊர் சுற்றிப் பார்க்க வரமாட்டாய் என்பதை குழந்தை கூட அறியும். எனவே பசப்ப வேண்டாம். எங்கே செல்கிறாய்? யாரிடம் செல்கிறாய்? என்ன செய்தியுடன் செல்கிறாய்? இவற்றைத்தான் நீ சொல்ல வேண்டும்.''

''நான் உண்மையாகச் சொல்கிறேன். செய்தி எதுவும் கொண்டு செல்லவில்லை.''

சேனாதிபதி அரிசந்திரனைப் பார்த்து ''இவனை இந்த மரத்தில் தலைகீழாகக் கட்டித் தொங்கவிடு'' என்றார்.

''ஐயா, நான் சாளுக்கிய தலைநகரிலிருந்து வருகிறேன். பல்லவர் படை இதுவரை தலைநகருக்கு வந்து சேரவில்லை. அது எங்கே இருக்கிறது? எப்படி வருகிறது என்பதை அறியத்தான் நான் அனுப்பப்பட்டேன். நிலைமையை அறிந்து கொண்டு சாளுக்கிய தலைநகருக்குப் போக வேண்டும். அவ்வளவுதான்.''

''நிலைமையை அறிந்து கொண்டாயா?''

''தங்கள் படைப்பிரிவை மட்டும் பார்த்தேன். இதுபோல நூற்றுக்கணக்கான படைப் பிரிவுகள் சாளுக்கிய தலைநகரை நெருங்குவதாகத் தோன்றுகிறது.''

''உன்னைப் போல இந்த விஷயத்தில் எத்தனை ஒற்றர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள்?''

''தெரியாது.''

''பல்லவரைப் பற்றி ஊகிக்கும் உன்னால் சாளுக்கியரைப் பற்றி ஊகிக்க முடியாதா? யோசித்துச் சொல்.''

''ஐநூறு பேர் இருக்கலாம் ஐயா.''

சேனாதிபதி மேற்கொண்டு எதுவும் பேசாமல் எல்லா வீரர்களையும் அழைத்தார். ஒற்றன் கூறிய விவரங்களைச் சொல்லி ''இவன் கூறிய விஷயங்கள் எல்லாமே நம்மால் ஊகிக்கக்கூடியதுதான். எதிர்பார்த்ததும்தான். எதையும் இவன் புதிதாகச் சொல்லிவிடவில்லை. எதுவானாலும் இவன் சாளுக்கிய ஒற்றன். இவனை உயிருடன் விட வேண்டிய அவசியம் இல்லை. இங்கேயே தலையைச் சீவி விடுங்கள்'' என்றார்.

அப்போது உதயசந்திரன் குறுக்கிட்டு ''இந்த ஒற்றனைக் கொல்ல வேண்டாம் சேனாதிபதியாரே, அதனால் ஒரு பயனும் இல்லை. அதற்குப் பதிலாக இவனை நமக்கு வழிகாட்டியாக நம்மோடு அழைத்துச் செல்வோம். நமக்குத் தேவையான விஷயங்களையும் அறியலாம்'' என்றான்.

சேனாதிபதி ஒரு கணம் யோசித்துவிட்டு ''அப்படியே ஆகட்டும். ஆனால் ஒன்று. இவனை உன் பொறுப்பில் வைத்திருக்க வேண்டும்'' என்றார்.

உதயசந்திரன் சம்மதித்தான்.

அப்போது அரிச்சந்திரன் குறுக்கிட்டு, ''வேண்டாம் சேனாதிபதி. நெருப்பை மடியில் கட்டிக் கொண்டு பயணம் செய்வது ஆபத்து. கொல்வதுதான் சரி. என் யோசனையை ஏற்றுக் கொள்ளுங்கள்'' என்றான்.

''பேசாமல் கிட'' என்றார் சேனாதிபதி.

அரிச்சந்திரன் சும்மாயிராமல், ''உதயசந்திரா, ஒற்றனின் கைகளைக் கட்டிவிடு. அதுதான் பாதுகாப்பு'' என்றான்.

சேனாதிபதி அவனை எரித்து விடுவதுபோல் பார்த்ததோடு பற்களையும் கடித்ததால் வாயை மூடிக் கொண்டான் அவன்.

அது முதற்கொண்டு தன் பொறுப்பில் இருந்த ஒன்பது வீரர்களின் வளையத்திற்குள்ளாகவே ஒற்றனை இருக்கும்படி பார்த்துக் கொண்டான் உதயசந்திரன்.

அதோடு ஒற்றனை ஒற்றனாகவே கருதி நடத்தாமல் சக வீரனைப் போலவே நடத்தினான்.

சுதந்திரம் ஒன்றைத் தவிர வேறு எதுவும் பாதிக்காத நிலையில் ஒற்றனும் அமைதியாக இருந்தான். அவனோடு சம்பிரதாய பேச்சுக்களைத் தவிர வேறு எதையும் உதயசந்திரன் பேசவில்லை.

அதைக் கண்ட அரிச்சந்திரன், ''இதென்ன சேனாதிபதி! இந்த உதயசந்திரன் மௌனமாக இருக்கிறானே தவிர ஒற்றனின் வாயைக் கிளறி விஷயத்தை கறக்கவில்லையே?'' என்று கேட்டான்.

''ஒற்றன் என்ன பசுமாடா அவனைப் பிடித்துக் கறப்பதற்கு?'' என்று வெறுப்புடன் சொன்ன சேனாதிபதி ''உதயசந்திரன் உனது பணியாள் அல்ல. உபதலைவன். எனக்கு அடுத்த பதவி வகிப்பவன். இதை நீ நினைவில் வைத்துக்கொள்'' என்றார்.

பயணம் மேலும் பதினைந்து நாட்களுக்கு நீடித்தது.

உதயசந்திரனை அழைத்த சேனாதிபதி, ''உதயசந்திரா, அடுத்து நாம் நகரப் பகுதியொன்றில் பிரவேசிக்க வேண்டியிருக்கும். என்ன வேடம் பொருத்தமாக இருக்கும்?'' என்று கேட்டார்.

''வணிகர்களாகச் செல்லலாம் ஐயா'' என்றான் உதயசந்திரன்.

''எல்லோருக்கும் சொல்லிவிடு'' என்றார் சேனாதிபதி.

மறுநாள் படைப்பிரிவானது வணிகப் பிரிவாகப் பிரவேசித்தது.

அவர்கள் பிரவேசித்த நகரானது சாளுக்கியரின் ஆதிக்கத்தில் இருந்து வந்தது. அங்கே சாளுக்கியர்கள் கணிசமாக காணப் பட்டார்கள்.

சேனாதிபதி ஏற்கெனவே நரசிம்மவர்மரின் காலத்தில் சாளுக்கிய நாட்டிற்கு ஒற்றராகச் சென்று வந்தவராதலால் வாதாபி மார்க்கத்தைப் பற்றியும் வழித்தடங்கல்கள் மற்றும் நகரப் பகுதிகள் ஆகியவை பற்றியும் நன்கு அறிந்திருந்தார். அந்த வகையில் வணிகர்கள் தங்கும் சத்திரத்திலேயே தன் படைப்பிரிவைத் தங்க வைத்துவிட்டு அவர் மட்டும் வெளியே சென்றார்.

அவர் வெளியே புறப்பட்டபோது மாலை நேரமாகி விட்டிருந்தது. நகரத்தில் நடமாட்டம் அதிகமாக இருந்ததால்

வீதிகள் சுறுசுறுப்பாக இருந்தன. படைப்பிரிவைச் சேர்ந்த வீரர்களில் சிலரும் சுற்றிப் பார்த்துவிட்டு வருவதாக உதய சந்திரனிடம் சொல்லி அனுமதி பெற்றுக் கொண்டு சென்றார்கள்.

உதயசந்திரனுக்கு ஆர்வமாக இருந்தாலும் சத்திரத்தை விட்டு வெளியே செல்லவில்லை. அதோடு ஒற்றனைப் பாதுகாக்க வேண்டிய அவசியம் அவனுக்கிருந்தது.

அவனை அருகில் வைத்துக் கொண்டு, ''நண்பனே, நீ எங்களோடு சேர்ந்து நாட்கள் பல ஆகியும் உன் பெயரைச் சொல்லவில்லையே! என்ன உன் பெயர்?'' என்று வினவினான்.

''ஐராவதன்'' என்றான் ஒற்றன்.

''ஒற்றர் பணியை எவ்வளவு காலமாகச் செய்கிறாய்?''

''கடந்த ஓராண்டு காலமாகச் செய்கிறேன்.''

''ஒற்றர் பணியானாலும் உனக்கு அது நாட்டுப்பணிதான். உன்னை இப்போது விடுவித்தால் சாளுக்கிய நாட்டிற்குப் போகத் தயாரா?''

''என் நாட்டிற்குத் திரும்ப நான் எப்போதும் தயாராக இருக்கிறேன்.''

''ஐராவதா, நீ பல்லவர் படை பற்றி சாளுக்கிய மன்னரிடமோ தளபதியிடமோ தெரிவிக்கப் போகிறாய். அது ஒன்றும் பிரமாதமான செய்தியாக இருக்கப் போவதில்லை. யாராலும் எளிதாக ஊகித்துக் கொள்ளக்கூடிய விஷயம்தான். ஆகவே உன்னை எங்களோடு வைத்துக் கொள்வதால் பெரிய ஆதாயம் எதுவுமில்லை. நீ பிடிபட்டபோதே அதை நான் உணர்ந்து கொண்டேன். அப்போதைய நிலையில் சேனாதிபதி உன் தலையைச் சீவ முற்பட்டதால் உன்னை விடுவிக்க என்னால் முடியவில்லை. எதையோ சொல்லி உன் உயிரைக் காப்பாற்றினேன். இப்போது நல்ல சந்தர்ப்பம் வந்திருக்கிறது. இங்கிருந்து தப்பிவிடு. யாரும் உன்னைத் தடுக்காமல் நான் பார்த்துக் கொள்கிறேன்.''

உதயசந்திரனின் பேச்சில் எந்த ஒளிவுமறைவும் இல்லை. எனவே சாளுக்கிய ஒற்றன் ஐராவதன் அங்கிருந்து வெளியேறினான். யாரும் அவனைத் தடுக்கவில்லை.

இதேசமயத்தில் அரிச்சந்திரனின் மனம் அவமானத்தால் அரித்துக் கொண்டிருந்தது. எந்தவிதத்தில் பார்த்தாலும் சாதாரண வீரன் ஒருவனுக்குரிய தகுதியை விட அவனது தகுதி அதிகமில்லை

என்பதுதான் உண்மையென்றாலும் பிஞ்சில் பழுக்க முயன்ற காரணத்தாலோ என்னவோ சேனாதிபதியை விட பெரிய மனிதனாகத் தன்னை எண்ணிவிட்டான் அரிச்சந்திரன். சேனாதிபதி தன்னை மதித்துப் பேசிய போதெல்லாம் மதமதர்த்து போனதோடு மட்டுமின்றி உதயசந்திரன் உட்பட இதர வீரர்களை அவமதிக்கவும் முற்பட்டிருந்தான் அவன். திடீரென்று நீலிக்கோட்டத்தில் வந்து சேர்ந்த தன்னிடம் சேனாதிபதி எதற்காக இவ்வளவு மரியாதை காட்டுகிறார் என்பதை அவனது மாசு படிந்த மனம் எண்ணிப் பார்க்கவில்லை. உபதலைவனாக பதவி வகிக்கும் உதயசந்திரனை சேனாதிபதி எதற்காக மட்டம் தட்டிப் பேசுகிறார் என்பதையும் யோசிக்க மறுத்தது அவனது குறைபட்டுவிட்டிருந்த குறுமனம்.

இப்படி பகல் கனவில் மிதந்து கிடந்த அவனைத் திடீரெனச் சேனாதிபதி காரணமில்லாமல் மட்டம் தட்டிப் பேசியதை அவனால் தாங்க முடியவில்லை. அதோடு உதயசந்திரனை மதிக்கும்படி அவர் சொல்லியது தகாத விஷயத்தை தட்டில் வைத்துத் தந்த மாதிரி இருந்தது. அடிப்படையில்லாமல் வருகிற மரியாதை திடீரென விலகிவிட்டால் அது பெரும் ஏமாற்றத்தையும் அவமானத்தையும் தரும் என்பதை அவன் உணரவில்லை என்றாலும் அவ்விரண்டும் நேர்ந்துவிட்டதை மட்டும் அறிந்தான்.

புத்தி தடுமாறியது. ஆணவம் அவனை விரட்டியது. உதயசந்திரனிடம் சென்றான்.

''சாப்பிட்டாகிவிட்டதா?'' என்று கேட்டான் ஏதோ பேச வேண்டும் என்பதற்காக.

''சேனாதிபதி வரட்டும் என்று காத்திருக்கிறேன்'' என்றான் உதயசந்திரன்.

''நள்ளிரவு தாண்டிவிட்டது.''

''இருக்கட்டும்.''

''சேனாதிபதி எங்கே போயிருப்பார் தெரியுமா?''

''அதைப் பற்றி நமக்கென்ன?''

''பரத்தையைத் தேடிக் கொண்டு போயிருப்பார். அது இல்லாமல் அவரால் இருக்கவே முடியாது. அவர் ஒரு காமமலை. காமக் கடலில் விழுந்துவிட்ட அவர் எப்போது கரையேறுவது? அவர் வருவதற்குள் வைகறை வந்துவிடும்.''

சேனாதிபதியின் காமத்தைப் பற்றி உதயசந்திரனுக்குப் புதியதாக தெரிய வேண்டியது எதுவுமில்லை. ஆகவே அரிச்சந்திரன் கூறியதைக் கேட்டதும் அவன் அயர்ந்துவிட வில்லை. அதேசமயம் அவரைப் பற்றி அரிச்சந்திரன் கூறிய விதம் அநாகரீகமாக இருந்தது.

''அரிச்சந்திரா, நம்மை விட வயதிலும் தகுதியிலும் மூத்தவர்களைப் பற்றிப் பேசும்போது நாகரீகம் வேண்டும். வாய்க்கு வந்தபடி பேசிவிடக் கூடாது'' என்றான்.

''நான் சொல்வது உண்மை. இதை நிரூபிக்க என்னால் முடியும்.''

''நீ பேச வேண்டிய உண்மைகளும் நிரூபிக்க வேண்டிய விஷயங்களும் நல்லவைகளாக இருக்கட்டும் அரிச்சந்திரா. சேனாதிபதி எங்கே சென்றிருந்தாலும் அதைப் பற்றிய கவலை இல்லை. அவர் எப்போது வேண்டுமானாலும் வரட்டும். நீயும் அவரைப் பற்றிக் கவலைப்பட வேண்டாம்'' என்றான் உதயசந்திரன்.

அரிச்சந்திரனின் அரிப்போ மகா அரிப்பாக இருந்தது. எனவே அதைத் தீர்த்துக் கொள்ள மேலும் முயன்று பிற வீரர்களிடம் சென்றான். சேனாதிபதியைப் பற்றி உதய சந்திரனிடம் சொன்னதைப் போலவே சொன்னான். வீரர்கள் அவனை அடிக்க முற்படவே தீராத அரிப்புடன் திரும்பினான் அரிச்சந்திரன்.

சேனாதிபதி சத்திரத்திலிருந்து புறப்பட்டு அந்த நகரின் தெற்குப் பகுதியில் இருந்த சுடுகாட்டிற்குச் சென்றார். அங்கு சென்றபோது இருட்டிவிட்டிருந்ததால் மயானப் பகுதியில் பல இடங்களில் பிணங்களுக்கு மூட்டியிருந்த தீ பெரிதாக எரிந்து செந்நிற ஜ்வாலையைத் தெளிவாகக் காட்டியது. அந்நகருக்கு அச்சுடுகாடுதான் பிரதானமாக இருந்தபடியால் பிணங்களின் போக்குவரத்து அதிகமாயிருந்தது. அதையொட்டி பிணங் களுக்குரிய சொந்த பந்தங்களின் கூட்டமும் கணிசமாக இருந்ததால் காடு கலகலப்பாக இருந்தது. சேனாதிபதியை யாரும் கண்டு கொள்ளவில்லை.

சந்திக்க வேண்டிய இடம் அச்சுடுகாடுதான் என்று முன்கூட்டியே தீர்மானிக்கப்பட்டிருந்ததால் சேனாதிபதி அங்கே வந்து நின்றதும் ஒவ்வொருவராக அவரைச் சந்தித்துவிட்டுப் போனார்கள். 'நந்தி' என்ற அடையாளத்தைச் சொல்லி பேசிய அவர்கள் பல்லவ படைப் பிரிவுகளின் வழிகாட்டிகள்தான்.

சேனாதிபதியின் தலைமையிலான பல்லவர் படை ரகசிய நீலிக் கோட்டத்திலிருந்து மொத்தமாகப் புறப்படவில்லை. நூறு நூறு வீரர்கள் கொண்ட பிரிவுகளாகப் பிரிந்து ஒவ்வொன்றும் ஒரு வழிகாட்டியின் தலைமையில் காட்டு வழிகளில் பயணம் செய்தது. பயண தூரம், பயண பாதை, பயண வேகம் ஆகியவற்றைக் கணக்கிட்ட சேனாதிபதி முப்பது நாள் பயணத்தில் தற்போதைய நகரை அடைய முடியும் என்று தீர்மானித்தார். முப்பது நாள் முடியும்போது படைப்பிரிவைச் சேர்ந்த வீரனோ அல்லது வழிகாட்டியோ இந்த நகரின் சுடுகாட்டில் சந்தித்து விவரத்தைச் சொல்ல வேண்டும் என்று கட்டளையிட்டிருந்தார்.

அதன்படியே சந்திப்பு கச்சிதமாக நடந்தது. அவரைச் சந்தித்தவர்கள் அனைவருமே தங்கள் படைப்பிரிவு சாளுக்கிய நாட்டை நோக்கி முன்னேறுவதில் எந்தவிதமான சிரமமும் இல்லை என்று தெரிவித்தார்கள். தங்களிடம் சாளுக்கிய ஒற்றர்கள் சிக்கிய விவரத்தையும் கூறினார்கள். ஒற்றர்களிடம் செய்தியை வாங்கிக் கொண்டு நாக்கை அறுத்துவிட்டதாகச் சிலரும் கொன்றுவிட்டதாகச் சிலரும் சொன்னார்கள்.

''ஒற்றர்களிடமிருந்து அறிந்த செய்தி என்ன?'' என்று கேட்டார் சேனாதிபதி.

எல்லோருமே ஒற்றன் ஐராவதன் கூறிய செய்தியைத்தான் சொன்னார்கள்.

சேனாதிபதிக்கு அவர்களது பதில் திருப்தியாக இல்லை.

நூறு பேர்களுக்கு மேல் சந்தித்துவிட்ட நிலையில் மேன்மேலும் சந்திக்க அவர் விரும்பவில்லை.

ஒருவனை மட்டும் அங்கேயே நிறுத்தி இனி வருபவர்களிடம் சேனாதிபதியைச் சந்திக்க வேண்டியதில்லை என்று சொல்லி திருப்பி அனுப்பிவிடும்படியும் அடுத்த சந்திப்பு அடுத்த முப்பது நாட்கள் முடிவில் நடக்கும் என்றும் அது நடக்க வேண்டிய இடம் எது என்றும் தெரிவித்தார்.

அச்சந்திப்பு சுடுகாட்டிலேயே பல நாழிகைகளுக்கு நடந்ததால் வைகறை நேரம் எட்டிப் பார்த்துக் கொண்டிருந்தது.

சுடுகாட்டிற்கு வந்து கொண்டிருந்தவர்களின் எண்ணிக்கையும் வெகுவாகக் குறைந்துவிட்டிருந்ததால் அங்கே இருக்க சேனாதிபதி விரும்பவில்லை.

எனவே சத்திரத்திற்குத் திரும்பி சோர்வுபோக நீராடினார்.

காலை உணவை வரவழைத்து வழக்கத்தை விட அதிகமாகவே ஒரு பிடி பிடித்தார்.

உண்டு முடித்ததும் அவர் விட்ட ஏப்பம் சத்திரம் முழுவதும் கேட்டது.

அப்போது அவரை அணுகிய அரிச்சந்திரன், ''ஒரு முக்கிய விஷயம் சேனாதிபதியாரே'' என்றான்.

''நான் தூங்க வேண்டும். அப்புறம் பேசு'' என்றார் சேனாதிபதி.

''இது மிகவும் முக்கியமான விஷயம் ஐயா.''

''அட இழவே! சொல்லித்தொலை. அப்படியென்ன தலை போகிற விஷயம்!''

''உபதலைவர் உங்களுக்குத் துரோகம் செய்துவிட்டார்.''

''என்ன உளறுகிறாய்?''

''உளறவில்லை ஐயா. உண்மை.''

''என்ன உண்மை?''

''சாளுக்கிய ஒற்றனை நீங்கள் உபதலைவரின் பொறுப்பில் விட்டீர்கள் அல்லவா?''

''அதற்கென்ன?''

''உபதலைவர் அந்த ஒற்றனை விடுவித்துவிட்டார்.''

''உண்மையாகவா?''

''ஆமாம் ஐயா. உபதலைவரை அழைக்கட்டுமா?''

''எதற்கு?''

''விசாரிப்பதற்கு.''

''வேண்டியதில்லை. ஒற்றனை நானே விடுவித்துவிட நினைத்தேன். அதை உபதலைவனே செய்துவிட்டான். நான் பாராட்டியதாகப் போய் தெரிவி'' என்று சொல்லிவிட்டு படுத்துக் கொண்டார் சேனாதிபதி.

மகா வெறுப்பாகி விட்டது அரிச்சந்திரனுக்கு. உதயசந்திரன் மீதும் சேனாதிபதியின் மீதும் அவனுக்கு வெறுப்பு உண்டாயிற்று. செய்வதறியாமல் தவித்தான்.

இதற்கிடையில் வீரர்களுக்கு உதயசந்திரன் பூரண சுதந்திரத்தை அளித்திருந்தான்.

''மீண்டும் நாம் காட்டுவழி பயணத்தை மேற்கொள்ள நேரலாம். எனவே இச்சந்தர்ப்பத்தை பயன்படுத்திக் கொண்டு இந்த

நகரிலேயே வேண்டியதை வாங்கிச் சாப்பிட்டுவிடுங்கள்'' என்றான்.

அவன் கூறியதையடுத்து அரிச்சந்திரனும் வெளியே சென்றான்.

சேனாதிபதி நன்றாக உறங்கிவிட்டு எழுந்தார்.

உதயசந்திரனை அழைத்தார்.

''ஒற்றனை விடுவித்துவிட்டாயாமே?'' என்று கேட்டார்.

''ஆமாம் சேனாதிபதியாரே. நான் வேறு மாதிரி எதிர்பார்த்து விடுவித்து கண்காணித்தேன். அவனோ இங்கேயே திரும்பி வந்துவிட்டான்'' என்றான் உதயசந்திரன்.

''உன் பழக்கதோஷம். சரி இதுவும் நல்லதுதான். அவனை ஒரு வழியாக்கிவிடு'' என்றார் சேனாதிபதி.

இரவு பொழுதைக் கழித்துவிட்டு விடியும் போது நகரை விட்டுப் புறப்படலாம் என்று ஏற்பாடாகியிருந்தது.

பகலில் நன்றாக உறங்கிவிட்ட சேனாதிபதி இரவு முகிழ்த்ததும் சபலத்தில் வீழ்ந்தார்.

நகரம் அவருக்கு ஏற்கெனவே பரிச்சியமாகியிருந்தபடியால் சொர்க்கம் கிடைக்கும் இடங்கள் தெரிந்திருந்தன.

எனவே சந்தர்ப்பத்தை வீணாக்க விரும்பாமல் சொர்க்கத்தைத் தேடிச் சென்றார்.

விரும்பும் வரை அதை அனுபவித்துவிட்டு சத்திரத்திற்குத் திரும்பினார்.

எல்லோரும் உறக்கத்தில் ஆழ்ந்திருந்தபோது அரிச்சந்திரன் மட்டும் விழித்துக் கொண்டான்.

பூனை போல நகர்ந்து சத்திரத்தை விட்டு வெளியேறினான்.

நகரில் இருந்த காரியஸ்தரின் மாளிகையை அடைந்தான்.

காரியஸ்தரிடம், ''என்ன, வீரர்கள் தயாராக இருக்கிறார்களா? புறப்படுங்கள் சத்திரத்திற்கு. பல்லவ வீரர்களை அப்படியே வளைத்துக் கொள்ளலாம்'' என்றான்.

காரியஸ்தனும் தலையை ஆட்டி கைகளை அசைக்கவே இருநூறு புரவி வீரர்கள் சத்திரத்தை நோக்கிப் புறப்பட்டார்கள்.

☆☆☆



25

கோணல் மனம்

நகரைச் சுற்றிப் பார்த்துவிட்டு வரும்படி வீரர்களிடம் உதயசந்திரன் கூறியபோது அரிச்சந்திரனும் சத்திரத்தை விட்டு வெளியேறினான். அவனது மனம் முழுவதுமாகத் தூர்ந்து விட்டிருந்தது. நல்ல எண்ணங்கள் பூரணமாக விலகி துர் எண்ணங்களும் தூராசையும் மேலோங்கியிருந்தன.

அர்ச்சகரின் மகனான அரிச்சந்திரன் பாண்டவ தூதப் பெருமாள் ஆலயத்தில் தந்தைக்கு உதவியாக மடைப்பள்ளி கைங்கரியத்தைச் செய்து கொண்டிருந்தபோது நல்ல பிள்ளையாகவே இருந்தான். நாணயமும் நாநயமும் கொண்டவனாகவே இருந்தான். சேவை மனப்பான்மை அவனிடம் குடி கொண்டிருந்தது. எனவே பெருமாள் ஆலயத்தில் சேவை செய்வதை விருப்பத்துடன் செய்து அதில் தன்னை அர்ப்பணித்துக் கொண்டான்.

அச்சமயத்தில் பல்லவர் படையில் சேர்வதற்கு இளைஞர்கள் தேவைப்படுவதாக கேள்விப்பட்டபோது அவனுக்குள் லேசான சபலம் உண்டாயிற்று. கட்டுமஸ்தான உடலை வைத்துக் கொண்டு சமையல் வேலைகளைச் செய்வது பொருத்தமற்றது என்றும் படையில் சேர்ந்து வீரசாகசங்களை புரிவதுதான் சிறப்பானது என்று அவனது மனம் நினைக்க லாயிற்று. வீரனாயிருப்பதிலும் வீரசாகசங்கள் செய்வதிலும் பெருமை இருப்பதாக எண்ணி அக்கனவில் மூழ்கத் தொடங்கினான்.

படையில் சேர்வதற்கு உரிய இடங்களுக்கு அடிக்கடி சென்று தனது விருப்பத்தை தெரிவித்து வந்தான். உதயசந்திரன் பெருமாள் கோயிலுக்கு வந்தபோது தான் நீலிக்கோட்டத்திற்கு விரைவில் போய் விடுவதுபோல் தெரிவித்து பெருமைப்பட்டுக் கொண்டான்.

தந்தையிடம் தன் விருப்பத்தை தெரிவித்தான். தன்னிட மிருந்து மகனை விட அவருக்கு விருப்பமில்லை. ஆனால் அவனது விருப்பத்தை மதித்தார். அவனது உடல்கட்டிற்கு அவன்

விரும்பும் வேலைதான் உகந்தது என்பதை ஒப்புக் கொண்டார். சம்மதித்தார்.

அவர் சம்மதித்த வேளை நல்லவேளையாக இருந்ததால் அவனுக்கு அழைப்பு வந்தது. ரகசிய நீலி கோட்டத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டான். அங்கே இரண்டு நாட்கள் போர்ப்பயிற்சி நடந்தது. அவனுக்கிருந்த ஆர்வம் அவனது திறமையை வெளிப்படுத்தியது. மற்றவர்களை விட அவன் சொற்ப காலத்தில் போர்க்கலையை கைவரப் பெற்றதால் சேனாதிபதி நேரில் அவனைப் பாராட்டினார்.

அந்த நிமிடமே அவனுக்கு கெட்ட நேரமாகிப் போயிற்று. சேனாதிபதி பாராட்டியது சம்பிரதாயமான பாராட்டுதான் என்பதை உணராமல் அப்பாராட்டில் சொக்கிப் போன அவன் ஆணவக் குழியில் விழுந்தான். இரண்டொரு முறை சேனாதிபதி அவனை நலம் விசாரித்தபோது உச்சாணிக் கொம்பிற்கே வந்துவிட்டதாகக் கருதினான். உதயசந்திரனை பின் மண்டையில் அடித்து மயக்கமாக்கி ரகசிய நீலிக்கோட்டத்திற்கு கொண்டு வரும்படி சேனாதிபதி அவனைப் பணித்தபோது பதவி உயர்வு கிடைத்துவிட்ட மாதிரி பூரித்துப் போனான். உதயசந்திரனை நீலிக் கோட்டத்திற்கு கொண்டு வந்து சேர்த்ததும் பெரும் சாதனையை செய்து முடித்த மாதிரி மதமதர்த்துப் போனான்.

உதயசந்திரனை உதாசீனப்படுத்தி சேனாதிபதி பேசியபோது உதயசந்திரனை விட தான் உயர்ந்துவிட்டதாக நினைத்தான். சேனாதிபதியின் வலது கரமாகிவிட்டதாகக் கருதிக் கொண்டு உதயசந்திரனை அலட்சியப்படுத்தத் தொடங்கினான். உபதலைவனான உதயசந்திரனை விட்டுவிட்டு சேனாதிபதி தன்னிடம் பேச முற்பட்டதும் தன்னைச் சேனாதிபதியாகவே எண்ணி மயங்கிய அரிச்சந்திரன் தனது இயல்பிலிருந்து முற்றிலும் மாறி புகழ் போதையில் மிதந்தான்.

மாயையில் மிதந்த கொண்டிருந்த அரிச்சந்திரனை சேனாதிபதி திடீரென மட்டம் தட்டிப் பேசிவிட்டதால் கர்வபங்கம் நேரிட்டது போல் நினைத்து கொண்ட அவன் மிதப்பிலிருந்து விழுந்துவிட்டதால் மனக்காயங்கள் பெரிதாக ஏற்பட்டன. தன்னால் அலட்சியம் செய்யப்பட்ட உதயசந்திரனுக்கு திடீரென மரியாதை உயர்ந்துவிட்டதால் கூடுதலான காயங்கள் உண்டாகி அவனை நிலைகுலையச் செய்தது. தேச சேவை, தேச பக்தி எல்லாமே மறந்துபோய் சேனாதிபதியிலிருந்து உதயசந்திரன் வரை அனைவருமே அவனுக்கு விரோதியானார்கள்.

அவர்களை அழித்தால் தான் தனது காயம் ஆறும் என்று அவனது கோணல் மனம் எண்ணியது.

எப்படி அழிப்பது என்று யோசித்தபோது 'தற்போது தங்கியிருக்கும் நகரம் சாளுக்கியர் ஆதிக்கத்தில் உள்ள நகரம்தானே?' என்று குரங்காகிவிட்டிருந்த மனம் கூறியது. கோணல் புத்தியும் தீவிரமாக வேலை செய்தது. 'சாளுக்கியர் ஆதிக்கத்தில் இருக்கும் நகரை சாளுக்கியன் எவனாவது தான் ஆண்டு கொண்டிருப்பான். அவனிடம் காட்டிக்கொடுத்து விட்டால் போதும். அனைவரும் அழிந்து போவார்கள்' என்றுத் தீர்மானித்த அவன் சத்திரத்தை விட்டு வெளியேறி பலரிடம் விசாரித்தான்.

நகரமானது சாளுக்கிய காரியஸ்தனின் பொறுப்பில் இருக்கிறது என்பதைத் தெரிந்து கொண்ட அவன் காரியஸ்தனின் விலாசத்தை அறிந்து கொண்டு அவனது இருப்பிடத்திற்குச் சென்றான். காரியஸ்தனிடம் பல்லவர் படைப்பிரிவு ஒன்று சத்திரத்தில் ரகசியமாகத் தங்கியிருப்பதாகவும் வீரர்களுடன் சென்றால் அவர்களை வளைத்துக் கொள்ளலாம் என்றான் அரிச்சந்திரன்.

காரியஸ்தன் கேட்டான். ''நீ யார்?''

அரிச்சந்திரன் சற்றே தடுமாறினாலும் சுதாரித்துக் கொண்டு, ''நான் யாராயிருந்தால் என்ன காரியஸ்தரே? விஷயம் என்ன என்பதை கவனியுங்கள்'' என்றான்.

''வீதியில் போகிற விலாசமில்லாதவர்கள் சொல்லும் செய்திகளையெல்லாம் நான் மதிப்பதில்லை'' என்றான் காரியஸ்தன்.

''நான் விலாசமற்றவனல்ல காரியஸ்தரே. இவ்வூர்க்காரன் தான் நான். வாணிகன். பார்த்தால் தெரியவில்லையா-''

''நீ இந்த ஊர்க்காரனா? எந்தப் பகுதியில் இருக்கிறாய்?''

''காரியஸ்தரே, உங்களைப் போல மந்தமான மனிதரை நான் கண்டதில்லை. சத்திரத்தில் உள்ள சாளுக்கிய பகைவரைப் பற்றி விசாரித்தால் உபயோகமாக இருக்கும். அதைவிட்டு என்னைப் பற்றி விசாரித்துக் கொண்டிருக்கிறீர்களே! பகைவர்கள் இருக்கும் செய்தியை சாளுக்கிய மன்னரே வந்து உங்களிடம் சொல்லுவார் என்று எதிர்பார்க்கிறீர்களா? ஒற்றர்கள் எதற்கு இருக்கிறார்கள்? எனக்கென்ன நான் போகிறேன். மன்னரைச் சந்திக்கும்போது

உங்களைப் பற்றி புகார் செய்வேன்'' என்று கூறிவிட்டு புறப்பட எத்தனித்தான் அரிச்சந்திரன்.

''நில்'' என்று தடுத்த காரியஸ்தன், ''சத்திரத்தில் எத்தனை பேர் இருக்கிறார்கள்?'' என்று கேட்டான்.

''நூறு பேர்.''

''அப்படியானால் அவர்களைப் பிடிக்க குறைந்தது நூறு பேர் தேவை. உடனடியாக அனுப்புகிறேன்.''

''தயாராக வைத்திருங்கள். இப்போது போக வேண்டாம். விழித்திருக்கும் அவர்கள் உங்கள் வீரர்களைத் தாக்குவார்கள். ஆகவே இரவாகட்டும். அவர்கள் தூங்கிய பின் நான் வந்து சொல்கிறேன்.''

காரியஸ்தன் சம்மதித்தான்.

இரவில் பூனை போல் வந்து செய்தியைச் சொன்னதும் வீரர்கள் சத்திரத்தை நோக்கிச் சென்றார்கள்.

''விரோதிகள் ஒழிந்தார்கள்'' என்று மகிழ்ச்சியோடு சொல்லிக் கொண்ட அரிச்சந்திரன், ''காரியஸ்தரே, பல்லவ வீரர்களைப் பிடித்து கைது செய்யும் பட்சத்தில் உமக்குப் பணமும் கிடைக்கும். பாராட்டும் கிடைக்கும். அதற்கு காரணமான எனக்கு கொஞ்சம் பொன் தரக்கூடாதா?'' என்று கேட்டான்.

''நீயும் நானும் செய்வது தேச சேவை. இதற்கெதற்கு பொன்?''

''நான் ஒற்றர் பணி செய்யவில்லை. வணிகனாக இருக்கிறேன். விஷயம் தெரிந்ததால் உங்களிடம் சொன்னேன். வறுமை காரணமாகத்தான் பொன்னைக் கேட்டேன். இல்லை என்றால் சரி.''

''சத்திரத்திற்குச் சென்ற வீரர்கள் கைதிகளோடு வரட்டும். பிறகு பார்க்கலாம்'' என்று கூறிவிட்டு உள்ளே சென்றுவிட்டான் காரியஸ்தன்.

அரிச்சந்திரனுக்கு ஏமாற்றமாகத்தான் இருந்தது. காரியஸ்தனின் மாளிகையிலும் இருக்கப் பிடிக்கவில்லை. சத்திரத்துப் பக்கம் போகவும் தைரியமில்லை. அதேசமயம் சேனாதிபதி உட்பட கைதிகளாக வரும் காட்சியைக் கண்டு ரசிக்க விரும்பிய அவன் அதற்கு வசதியாக வீதியின் மறுபுறத்தில் புரவியோடு போய் நின்று கொண்டான்.

பழக்கமில்லாத ஊரில் அர்த்த ராத்திரியில் அனாதையைப் போல் நிற்பது அவனுக்கு ஒரு மாதிரியாக இருந்தாலும் சகித்துக் கொண்டான்.

ஆனால் அவன் எதிர்பார்த்த காட்சி அவனுக்குக் கிடைக்க வில்லை. சத்திரத்திற்குச் சென்ற சாளுக்கிய வீரர்கள் போனது போலவே வெறுங்கையுடன் திரும்பி வந்தார்கள். சேனாதிபதியும் தனது சகாக்களும் சத்திரத்தில் இல்லை என்பது அவனுக்குப் புரிந்துவிட்டது. இந்த நிலையில் காரியஸ்தரின் கண்ணில் பட்டால் தன்னை ரத்தத்தில் தோய்த்தெடுத்து விடுவார்கள் என்று உணர்ந்த அரிச்சந்திரன் ஏமாற்றமும் அச்சமும் அடைந்தவனாய் புரவியில் ஏறி இருளில் மறைந்தான்.

☆

அரிச்சந்திரனின் பேச்சு, சேனாதிபதியிடம் அவன் செய்த புகார், சக வீரர்களிடம் நடந்து கொண்ட முறை ஆகியவற்றை தவறாமல் கவனித்து வந்த உதயசந்திரன் அவனை கணிக்கவும் செய்தான். அவனால் சும்மா இருக்க முடியாது என்று அவனுக்குத் தோன்றியதால் கண்காணித்தபடி இருந்தான். காரியஸ்தனின் இல்லத்திற்குச் சென்றுவிட்டு வந்து ஏது மறியாதது போல படுத்துக் கொண்டதையும் கவனித்த உதயசந்திரன் அவன் நடு இரவில் பூனை போல் வெளியேறியதையும் கண்டவுடன் திட்டத்தை ஓரளவிற்குப் புரிந்து கொண்டான்.

சேனாதிபதியிடம் நிலைமையை எடுத்துச் சொன்னான்.

''அத்தனை கயவனா அவன்? காரியஸ்தனின் மாளிகைக்கு நாமே போய் தாக்கி அவனையும் கழுத்தை நெறித்து கொன்றால் என்ன?'' என்று கேட்ட சேனாதிபதி, ''வேண்டாம் வேண்டாம். நீ சொன்னது தான் சரி. உடனடியாகச் சத்திரத்தை விட்டு வெளியேறி நகரை விட்டு போய்விடுவோம்'' என்றார்.

அடுத்த சில நிமிடங்களில் சத்திரம் காலியாயிற்று.

☆

காரியஸ்தனின் வீரர்கள் பின்தொடரக்கூடிய சாத்தியம் இருந்ததால் சேனாதிபதி தனது படைவீரர்களை வேகமாக இயக்கி நகருக்கு அடுத்திருந்த காட்டுப் பகுதியில் நுழைந்தார். இரவு நேரமானாலும் காரியஸ்தனின் வீரர்களின் கைகளில் சிக்கக் கூடாதென்ற காரணத்தால் பயணம் தொடர்ந்தது. காட்டு வழியே

தொடர்ந்து கொண்டிருந்ததால் தன்னைப் பின் தொடர்பவர்கள் சோர்ந்து போவார்கள் என்று நினைத்தார் சேனாதிபதி.

பொழுது விடிந்த சமயத்தில் காட்டுப் பகுதியிலேயே பயணத்தை நிறுத்திக் கொண்டு வீரர்கள் ஓய்வெடுத்தார்கள். வழக்கம் போல காட்டில் வேட்டையாடி உணவுக்கு ஏற்பாடு செய்து கொண்டார்கள்.

அப்போது சாளுக்கிய ஒற்றன் ஐராவதனுடன் பேச்சு கொடுத்த உதயசந்திரன், ''உன்னை விடுவித்தும் நீ ஏன் திரும்பி வந்துவிட்டாய்?'' என்று கேட்டான்.

''ஐயா, நீங்கள் என்னை விடுவித்தபோது சந்தோஷப்பட்டது உண்மை. அதுமட்டுமல்ல நகரப் பொறுப்பாளனிடம் உங்கள் படையைக் காட்டிக் கொடுக்க விரும்பியதும் உண்மை. அதற்காக காரியஸ்தனின் இருப்பிடத்தை நோக்கிச் சென்றேன். என்ன காரணத்தாலோ அவனது மாளிகைப் படிகளில் ஏறிய நான் அவனைச் சந்திக்காமலேயே இறங்கினேன். அங்கேயிருந்த புத்த விஹாரத்திற்குச் சென்றேன். புத்தரை வணங்கினேன். அவர் எனக்கு ஏதோ செய்தி சொல்வது போலிருந்தது. என்னவென்று திட்டமாகத் தெரியவில்லை. சாளுக்கிய நாட்டிற்குப் போகாமல் சத்திரத்திற்கே வந்துவிட்டேன்'' என்றான் ஐராவதன்.

விரோதி நாட்டைச் சேர்ந்தவனாக இருந்தும் விடுபட்ட போதும்கூட காட்டிக் கொடுக்க முற்படாத ஐராவதனையும் தாய்நாட்டைச் சேர்ந்தவனாய் இருந்தும் சாதாரண மனத் தாங்கலைப் பெரிதாக கருதிக் கொண்டு தனது சக வீரர்களையே விரோதிகளிடம் காட்டிக் கொடுத்த அரிச்சந்திரனையும் ஒப்பிட்டுப் பார்த்துக் கொண்ட உதயசந்திரன், ''நீ எங்களைக் காட்டிக் கொடுத்திருந்தால் அது தவறில்லை. அது உன் தாய் நாட்டிற்குச் செய்யும் சேவைதான். ஏன் பின் வாங்கிவிட்டாய்?'' என்று கேட்டான்.

''என் சேவையை வீரத்தால் மட்டும் செய்ய விரும்புகிறேன் ஐயா. இதுதான் புத்தர் எனக்குத் தெரிவித்த செய்தியாக இருக்குமோ என்னவோ?'' என்று சொன்ன ஐராவதன், ''நான் உங்களுக்கோ உங்கள் படைப்பிரிவுக்கோ சத்தியமாகத் துரோகம் செய்யமாட்டேன். என் வேண்டுகோள் ஒன்றுக்குச் செவி சாய்ப்பீர்களா?'' என்று கேட்டான்.

''சொல்.''

சொன்னான் ஐராவதன்.

''அதற்கு ஏன் காத்திருக்க வேண்டும்? இப்போதே புறப்படலாம் அல்லவா?''

''வேண்டாம் ஐயா. உங்களிடமிருந்து விடுபட்டாலும் இதர பிரிவுகள் வசம் நான் சிக்கிவிடக் கூடிய அபாயம் இருக்கிறது. உங்களைப் போல உயிரைக் காப்பாற்றக்கூடியவர்கள் எல்லா இடங்களிலும் இருப்பார்கள் என்று சொல்ல முடியாது. இப்போதைக்கு உங்கள் பிரிவில் இருப்பதுதான் பாதுகாப்பானது.''

ஐராவதன் கூறியதை ஒப்புக் கொண்ட உதயசந்திரன் ''சாளுக்கிய சக்கரவர்த்தியாக தற்போது இருப்பது விஜயாதித்தர்தானே?''என்று கேட்டான்.

''ஆம் ஐயா.''

''வாதாபியில் தானே அவர் இருக்கிறார்?''

''இல்லை. ரணரசிகபுரத்தில் இருக்கிறார்.''

''ரணரசிகபுரமா?''

''ஆம். பல்லவ நரசிம்மவர்மர் வாதாபியை தீக்கிரையாக்கி நாசப்படுத்தியதோடு நகரின் மையத்தில் ஜெயஸ்தம்பம் ஒன்றையும் நாட்டிவிட்டுப் போனார். மகாராஜா புலிகேசிக்குப் பிறகு வந்த விக்கிரமாதித்தர் இதைக்கண்டு கொதித்தெழுந்து காஞ்சியை நோக்கிப் படையெடுத்தார். காஞ்சியை அவர் கைப்பற்றியதும் பிறகு பெருவளநல்லூர் போரில் பல்லவ ராஜசிம்மரால் தோற்கடிக்கப்பட்டு காஞ்சியைக் கைவிட்டு சாளுக்கிய நாட்டிற்குத் திரும்பினார். அவரால் வாதாபியில் இருக்க முடியவில்லை.வாதாபியை அவமானச் சின்னமாகக் கருதினார். அவரும் அவரது புதல்வருமான வினயாதித்தருமாக ஆலோசித்து தலைநகரை மாற்றத் தீர்மானித்தார்கள். வாதாபிக்கு வடமேற்கே இருந்த நகரொன்றைத் தேர்ந்தெடுத்து அதற்கு ரணரசிகபுரம் என்ற பெயரைச் சூட்டி அதையே சாளுக்கிய தலைநகராக்கிக் கொண்டார். அவர் காலமானதும் அவரது புதல்வரான வினயாதித்தர் ரணரசிகபுரத்தை தலைநகரத்திற்குரிய பாதுகாப்பையும் அந்தஸ்த்தையும் உயர்த்தினார். சாதாரண நகரமாயிருந்த ரணரசிகபுரம் பலமான கோட்டையாகிவிட்டது. வினயாதித்தர் சில ஆண்டுகள் பதவி வகித்து பதவியைத் துறந்தார். அதையடுத்து தலைநகரில் ஏதேதோ குழப்பங்கள் ஏற்பட்டன. வினயாதித்தியரின் புதல்வர் விஜயாதித்தர் அரியணை ஏறினார். அவர்தான் தற்போது சாளுக்கிய மாமன்னராய் இருக்கிறார்'' என்று கூறி நிறுத்தினான் ஐராவதன்.

அதற்குப் பிறகு ஐராவதனிடம் எதையும் பேசாத உதயசந்திரன் சேனாதிபதியிடம் இந்தத் தகவலை தெரிவித்த போது அவர் சிறிது ஆச்சரியப்படவே செய்தார். அவருக்குள் ஏதோ யோசனை ஓடியது.

''இந்த விவரம் நம் இளவரசர் மகேந்திரருக்குத் தெரியுமா என்று தெரியவில்லை'' என்றார்.

''இளவரசர் இப்போது எங்கே இருக்கிறார் சேனாதிபதி யாரே?''

''அவர் காலாட்படையை தலைமை வகித்து நாம் புறப்படுவதற்கு மூன்று மாதங்களுக்கு முன்பாகப் புறப்பட்டுச் சென்றார். நம்மைப் போல் பல பிரிவுகளாகவும் தலைமறை வாகவும், காட்டு வழியாகவும் செல்லவில்லை. முப்பதாயிரம் படைகளை அழைத்துக் கொண்டு முறையான வழித்தடத்தில் சென்றிருக்கிறார். நான் கணக்கிட்டபடி நடந்திருந்தால் அவர் வாதாபிக்கு சமீபத்தில் இருக்க வேண்டும்.''

அவருடன் மேலும் சிறிது நேரம் பேசியிருந்துவிட்டு வந்தான் உதயசந்திரன்.

மாலை வரை ஓய்வெடுப்பது என்றும் பிறகு பயணத்தை தொடர்வது என்றும் முடிவாயிற்று. பயணப்பாதை காடுகளும் மலைகளும் நிறைந்ததாகையால் வீரர்கள் கொள்ளைக் காரர்களைப்போல வேடமிட்டுக் கொண்டார்கள்.

அவர்கள் புறப்பட எத்தனித்த போது சலசலப்பு உண்டாயிற்று.

''என்ன?'' என்று வினவினார் சேனாதிபதி.

வீரர்கள் அரிச்சந்திரனை அவருக்கு முன்னால் நிறுத்தினர்.

''யார்? துரோகியா? இவன் எப்போது வந்தான்? பின்னால் சாளுக்கியர்களை வரவிட்டு முன்னே இவன் வந்திருக்கிறானா?'' என்று கர்ஜித்தார் சேனாதிபதி.

அரிச்சந்திரனோ அவரது கால்களில் விழுந்து, ''ஐயா, என்னை மன்னித்துவிடுங்கள். புத்திப் பேதலித்து என்னென்னவோ செய்துவிட்டேன். நான் முற்பட்டது மிகவும் கீழ்மையான காரியம்தான். இப்போது மனம் திருந்தி வந்திருக்கிறேன். என்னை ஏற்றுக் கொள்ளுங்கள்'' என்று கெஞ்சினான்.

''ஏற்றுக் கொள்வதா? உன்னையா? அடே அற்பப்பதரே! காரியஸ்தனின் வீரர்களிடம் நாங்கள் சிக்கியிருந்தால் நீ இப்படி கெஞ்சுவாயா? உன் நரித்திட்டம் தோற்றுவிட்டதால் எங்களிடம்

ஓட்டிக் கொண்டு உறவாட வந்துவிட்டாயா? இன்னும் என்னென்ன சதித்திட்டங்களை நிறைவேற்ற திட்ட மிட்டிருக்கிறாய்? சொல். சொல்லாவிட்டால் நீ ரத்தம் கக்குவாய்'' என்று மிரட்டினார் சேனாதிபதி.

அவனோ மீண்டும் மீண்டும் கெஞ்சினான். கதறினான்.

''அற்பனே! துரோகிகளை மன்னித்து எனக்குப் பழக்கமில்லை'' என்று சொன்ன சேனாதிபதி அருகில் இருந்த வீரர்களைப் பார்த்து ''இவனை இந்த மரத்தில் தலைகீழாகக் கட்டி தோலை உரியுங்கள்'' என்றார்.

அப்போது குறுக்கிட்டான் உதயசந்திரன்.

அரிச்சந்திரனைப் பார்த்து, ''அரிச்சந்திரா, உன் திட்டம் தோற்றுவிட்ட பிறகு உன் வழியில் போக வேண்டியதை விட்டு எங்களிடம் எதற்காக வந்தாய்?'' என்று கேட்டான்.

''எதற்கு வந்திருப்பான்? மீண்டும் சமயம் பார்த்து நம் காலை வாருவதற்காகத்தான்'' என்றார் சேனாதிபதி.

''அப்படியில்லை சேனாதிபதி. என்னை நம்புங்கள். நான் நமது நாட்டு சேவை காரணமாகத்தான் படையில் சேர்ந்தேன். இடையில் புத்தி கெட்டுவிட்டது உண்மைதான். அதை உணர்ந்து கொண்டேன். பழையபடி தேச சேவையில் ஈடுபடுத்திக் கொள்ள விரும்பினேன். அதுதான் என் செயலுக்கான பரிகாரம் என்று கருதி உங்களுடன் வந்து சேர்ந்தேன்.''

''எல்லாவற்றையும் நீயே முடிவு செய்துவிட்டாயாக்கும்! அழகுதான். நீ சொல்வதை நம்பி மோசம் போவதற்கு இங்கே யாரும் தயாராக இல்லை'' என்றார் சேனாதிபதி.

உதயசந்திரன் மீண்டும் குறுக்கிட்டு, ''சேனாதிபதியாரே, உங்கள் கட்டளையை மீறி நான் குறுக்கிடுவதற்காக என்னை மன்னியுங்கள். இடையில் தனது நடத்தையில் மாறுபட்டு விட்டாலும் இயற்கையில் அரிச்சந்திரன் நல்லவன்தான். நல்ல குடும்பத்தில் பிறந்த பிள்ளை. திருந்திவிட்டதாக வருந்திச் சொல்கிறபோது தண்டிக்க முற்பட வேண்டாம். அவன் மீது எனக்கு நம்பிக்கை இருக்கிறது. தண்டனையை ரத்து செய்து அவன் சேவை புரிய வாய்ப்பைத் தாருங்கள்'' என்றான்.

''உன் வேண்டுகோள் எனக்குப் பிடிக்கவில்லை உதயசந்திரா. துரோகிகள் அடிபட்ட பாம்புகளைப் போன்றவர்கள். கடிக்காமல் விடமாட்டார்கள். இது உனக்குப் புரியாமல் போனது எனக்கு

வியப்பாக இருக்கிறது. நீ என் உபதலைவன் என்பதால் உன் யோசனையை இப்போதைக்கு ஏற்கிறேன். ஆனால் ஒன்று. இவன் மீது எனக்கு மீண்டும் சந்தேகம் வந்தால் நானே என் வாளால் துண்டு துண்டாக வெட்டுவேன்'' என்றார் சேனாதிபதி.

அரிச்சந்திரன் பிழைத்தான்.

பயணம் தொடர்ந்தது.

ஒருவாரம் கழிந்த நிலையில் மலையடிவாரம் ஒன்றில் படைவீரர்கள் ஓய்வெடுக்கலானார்கள்.

''மலைக்கு அப்புறத்தில் நகரம் ஒன்றிருக்கிறது. நாளை வைகறையில் மலையைக் கடந்து சென்று நகரத்தில் ஒரு நாள் தங்கலாம். இப்போது வீரர்கள் வேட்டைக்குச் சென்று உணவுக்கு வழி செய்யுங்கள். உண்டுவிட்டு ஓய்வெடுங்கள்'' என்றார் சேனாதிபதி.

அன்று அரிச்சந்திரன் இரண்டு வீரர்களோடு வேட்டைக்குச் சென்று மான்களையும் முயல்களையும் வேட்டையாடிக் கொண்டு வந்ததால் இரவு உணவு திருப்திகரமாக முடிந்தது.

வீரர்கள் தங்களைச் சுற்றி பாதுகாப்பிற்காக பத்து பந்தங்களை ஏற்றி வைத்து உறங்க முற்பட்டார்கள்.

ஒரு நாழிகை கழிந்த நிலையில் 'டம் டம்' என்று முரசொலி ஒன்று கேட்டது. அமைதியான இரவு நேரத்தில் திடீரென கேட்ட அந்த முரசொலி திடீரென நின்றது. மலை உச்சியில் ஒரு சில விளக்கு வெளிச்சங்கள் தோன்றின.

அவற்றை உதயசந்திரனுக்குச் சுட்டிக்காட்டினான் அரிச்சந்திரன்.

அதேசமயம் மலை உச்சி விளக்குகள் மாயமாய் மறைந்தன.

உதயசந்திரன் தனது நெற்றியை வருடிக் கொண்டான்.

ஆபத்தான நேரங்களில் அது அவனது வழக்கமாக இருந்தது.

☆☆☆



26 மலைக்கள்ளர்கள்

''மலை உச்சியில் தெரிந்த வெளிச்சங்கள் தீப்பந்தங்கள் தானே உபதலைவரே?'' என்று கேட்டான் அரிச்சந்திரன்.

''ஆமாம்'' என்றான் உதயசந்திரன் நெற்றியில் இருந்த கையை எடுக்காமலேயே.

''பந்தங்கள் அணைக்கப்பட்டுவிட்டனவா?'' அதற்கும் தலையை ஆட்டினான் உதயசந்திரன்.

''எதற்காக அணைக்க வேண்டும்?''

''நம்மைப் பார்த்துவிட்டிருக்கலாம்.''

''அதற்கு பந்தங்களை அணைக்க வேண்டிய அவசிய மென்ன?''

''நாம் விழித்திருப்பது அவர்களுக்குத் தெரியாதல்லவா? நாம் உறங்கிக் கொண்டிருக்கிறோம் என்று நினைத்துக் கொண்டு பந்தங்களை அணைத்துவிட்டு நம்மை நோக்கி வருகிறார்கள். அநேகமாக அவர்கள் கொள்ளைக்காரர்களாக இருக்கலாம். நம்மை வணிகர்களாக எண்ணியிருக்கலாம். நம்மை வளைத்துக் கொண்டு கொள்ளையடிக்கத் திட்டமிட்டிருக்கலாம்.''

''இந்த நடுக்காட்டில் கொள்ளையர்கள் எப்படி வணிகர்களை எதிர்பார்க்க முடியும்?''

''சேனாதிபதி சொன்னது நினைவில்லையா? மலைக்கு அப்புறத்தில் நகரம் ஒன்று இருக்கிறதென்று. அதற்குப் போக வேண்டுமானால் வணிகர்கள்கூட இந்த மலையில் ஏறித்தான் இறங்கவேண்டும் போலிருக்கிறது. ஆகவே கொள்ளையர்கள் மலையுச்சியில் இருந்து கொண்டு இந்தப் பக்கமாக வருபவர்களை கண்காணித்து தாக்கலாம் அல்லவா?''

''நம்மிடம் கொள்ளையிட எதுவும் இல்லையே.''

''கொள்ளையர்களுக்கு அது தெரியாது. பெரிதாக எதிர்பார்த்து வந்து ஏமாறுவார்கள். ஏமாற்றத்தைத் தாங்க முடியாமல் நம்மைக் கொலை செய்வார்கள்.''

''அது உண்மையாக இருந்தால் அவர்கள் வரும் வரை நாம் இங்கே எதற்காக இருக்க வேண்டும்? பந்தங்களை அணைத்து விட்டு தப்பிவிடலாம் அல்லவா?''

''இருக்கும் ஒரே வழி மலையின் மூலம் தான் என்கிறபோது தப்பும் மார்க்கம் ஏது? வந்த வழியாகவே வேண்டுமானால் ஓடிவிடலாம். ஆனால் அவர்கள் பிடித்துவிடுவார்கள்.''

''வேறு வழி?''

''இருக்கிறது. அதற்குச் சேனாதிபதியின் ஒப்புதல் வேண்டும். வா. அவரைப் போய் பார்ப்போம்.''

சேனாதிபதி உதயசந்திரன் கூறியதை யெல்லாம் கேட்டதும் ''நீ நினைப்பது சரி'' என்றார். ''நம்மை அவர்கள் வெட்டுவதற்கு முன் அவர்களை நாம் வெட்ட வேண்டும்'' என்றார்.

''என் எண்ணமும் அதுதான் ஐயா. ஆனால் அவர்களது பலத்தை அறிய வேண்டும். அதற்குப் பிறகுதான் தாக்க முடியும்'' என்ற கூறி தனது திட்டத்தைச் சொன்னான்.

''நமது வேடத்திற்கேற்ற செயல்'' என்றார் சேனாதிபதி.

''நம்மைத் தேடி வரும் வாய்ப்பு இது. பயன்படுத்திக் கொள்வோம்'' என்றான் உதயசந்திரன்.

சேனாதிபதி ஏற்றுக் கொண்டார்.

☆

உதயசந்திரன் நினைத்தது போல் கொள்ளைக்காரர்கள் தான் மலையுச்சியில் இருந்து கீழே இறங்கி வந்து கொண்டிருந்தார்கள். மலையானது நகரத்திற்கு அருகில் இருந்ததாலும் நகருக்கு வரவும் நகரிலிருந்து தெற்கே செல்லவும் அந்த மலை தான் பிரதானமாயிருந்தது. எனவே கொள்ளைக்காரர்கள் அந்த மலைப்பகுதியை அடுத்த வனாந்திரத்தையே தங்கள் வாசஸ்தலமாகக் கொண்டு மலை வழியாக வருபவர்களைத் தாக்கியும் கொள்ளையடித்தும் வந்தார்கள். இரவு நேரங்களில் அவர்கள் அந்த மலையில் உலா வருவது சகஜமாக இருந்தது. அந்த மாதிரியான உலா வந்தபோதுதான் மலை உச்சிக்கு வந்தார்கள். மலையின் தென்திசை அடிவாரத்தில் பல்லவர் படை தங்கியிருந்ததை பந்தங்கள் ஏற்றி வைக்கப்பட்டிருந்ததிலிருந்து

தெரிந்து கொண்டார்கள். தங்கியிருப்பது வணிகர்களாகத்தான் இருக்க வேண்டும் என்றும் இரவுப் பொழுதை அடிவாரத்தில் கழித்துவிட்டு பொழுது விடிந்தபின் மலையேறி நகருக்குப் போகத் திட்டமிட்டிருப்பார்கள் என்றும் கருதிக் கொண்ட கொள்ளைக்காரர்கள் இரவு கழிவதற்குள் அவர்களைத் தாக்கி கொள்ளையடித்துவிடத் தீர்மானித்தார்கள். தங்களது பந்தங்களை அணைத்துவிட்டு இருளில் தங்களை ஆழ்த்திக் கொண்ட அவர்கள் பல்லவப் படைப் பிரிவை நோக்கி மலைச்சரிவில் இறங்கத் தொடங்கினார்கள்.

ஆட்டு மந்தையை நோக்கிச் செல்லும் புலிகளைப் போல ஆர்வத்தோடு இறங்கினார்கள் கொள்ளையர்கள். அடிவாரத்தில் பந்தங்கள் எரிந்து கொண்டிருந்தன. எந்தவிதமான அசைவோ ஆரவாரமோ அங்கே இருக்கவில்லை.

அதைக் கவனித்த கொள்ளையர் தலைவன் ''வணிகர்கள் அசந்து தூங்கிக் கொண்டிருப்பதாகத் தெரிகிறது. நாம் ஐம்பது பேர் இருக்கிறோம். நம்மிடம் எல்லாவிதமான ஆயுதங்களும் இருக்கின்றன. எல்லோருமாகச் சென்று அவர்களைச் சூழ்ந்து கொண்டு அவர்கள் விழித்துக் கொள்வதற்குள் வெட்டி வீழ்த்திவிட்டு அவர்களிடம் உள்ள பொருட்களைக் கவர்ந்து கொள்ள வேண்டும்'' என்றான்.

கொள்ளையர்களுக்குள் இருக்கும் பேராசை அவர்களிடம் பெரிதாக விரிந்தது.

நான்கைந்து நாட்களாக அந்த மலைப்பக்கத்தில் அவர்கள் கொள்ளையிட இரை எதுவும் வரவில்லை. இரைக்காக ஏங்கியிருந்த நிலையில் தற்போது மலை அடிவாரத்தில் வணிகர்கள் வந்திருப்பதாகக் கருதியதால் அவர்களது மனம் ஆரவாரப்பட்டுக் களித்தது.

ஆனால், அடிவாரத்திற்கு வந்ததும் அவர்களது ஆரவாரம் காணாமல் போயிற்று. ஏனென்றால் அங்கே பந்தங்கள் தான் இருந்தனவே தவிர ஆட்கள் ஒருவரும் இல்லை.

''நம்மை ஏமாற்றிவிட்டார்கள்'' என்று கடுகடுத்தான் கொள்ளையர் தலைவன்.

''நம்மை ஏமாற்றிவிட்டு எங்கே சென்றுவிட முடியும்? இந்தப் பகுதியிலேயே எங்காவது தான் மறைந்திருக்க வேண்டும்'' என்றான் ஒரு கொள்ளையன்.

''அப்படியானால் நாம் மலை உச்சிக்கு வந்தபோது இவர்கள் பார்த்திருக்க வேண்டும். நாம் கொள்ளையர்கள் என்பதையும் உணர்ந்திருக்க வேண்டும். இப்பகுதிகளுக்கு அவர்கள் பரிச்சியமானவர்களாக இருக்க வேண்டும். எனவே நம்மை ஏமாற்ற பந்தங்களை அணைக்காமல் விட்டுவிட்டு எங்கோ போய் ஒளிந்து கொண்டிருக்க வேண்டும்'' என்று சொன்ன கொள்ளையர் தலைவன், ''இது அடர்ந்த காட்டுப் பகுதி. ரொம்ப தூரத்திற்கு அவர்கள் போயிருக்க முடியாது. அதோடு இந்த மலை மூலமாகத்தான் நகருக்குப் போக வேண்டும். ஆகவே எல்லோருமாக இப்பகுதியில் வலை வீசுவோம். அவர்கள் சிக்குவார்கள்'' என்றான்.

அச்சமயத்தில் கொள்ளையன் ஒருவன் 'ஹா' என்று அலறி கீழே விழுந்தான்.

''என்ன ஆயிற்று?'' என்று கொள்ளையர் தலைவன் கேட்டு முடிவதற்குள் மற்றொரு கொள்ளையன் அதேபோல் அலறி விழுந்தான்.

அவர்களுக்கு இருபுறங்களிலிருந்தும் அம்புகள் தொடர்ந்து விழவே கொள்ளையர்கள் பவர் அம்புகளால் தாக்கப்பட்டு முறிந்த கிளைகளைப் போல் மண்ணில் விழுந்தார்கள். பல்லவ வீரர்கள் இருட்டில் மறைந்திருந்தாலும் கொள்ளையர்கள் இருந்த பகுதி பந்த வெளிச்சத்தில் ஒளிர்ந்ததால் கொள்ளையர்களை நன்றாக கவனித்து அம்பெய்ய முடிந்தது. வெளிச்சத்தில் இருந்த கொள்ளையர்களால் இருட்டில் இருந்த வீரர்களை காண முடியவில்லை.

தங்களைத் தாக்குவது யாரென்று உறுதியாகத் தெரியா விட்டாலும் நிச்சயமாக அவர்கள் வணிகர்களாக இருக்க முடியாது என்பது புரிந்தது கொள்ளையர் தலைவனுக்கு. இருபக்க அம்புத் தாக்குதலில் இருபதுக்கும் மேற்பட்ட கொள்ளையர்கள் வீழ்ந்துவிட்டதால் நிலைமையின் விபரீதத்தைப் புரிந்து கொண்ட கொள்ளையர் தலைவன் ''இங்கே இருப்பது வணிகர்கள் அல்ல. எனவே எல்லோரும் கலைந்து ஓடுங்கள். தப்புங்கள்'' என்று இரைந்தான்.

ஆனால் தப்புவது இயலாத காரியமாக இருந்தது.

பல்லவ வீரர்கள் மறைவிடத்தை விட்டு நீங்கி கொள்ளை யர்களைச் சூழ்ந்து கொண்டு தாக்கினார்கள். கொள்ளையர்களின்

எண்ணிக்கையை விட பல்லவ வீரர்களின் எண்ணிக்கை மூன்று மடங்கு அதிகமாக இருந்ததாலும் அவர்களது தாக்குதல் வேகமாக இருந்ததாலும் கொள்ளையர்கள் நிலைகுலைந்தார்கள். ஐந்து பேர் மட்டுமே எஞ்சிய நிலையில் போரை நிறுத்திச் சரணடைந்தான் கொள்ளையர் தலைவன்.

அந்த ஐவர் நிராயுதபாணிகளாக்கப்பட்டார்கள். கைகள் முதுகுப் புறத்தில் வைத்து கட்டப்பட்டன.

''உன் இருப்பிடம் எங்கே இருக்கிறது? அங்கே எத்தனை பேர் இருக்கிறார்கள்?'' என்று கேட்டார் சேனாதிபதி.

கொள்ளையர் தலைவனுக்கோ பதிலைச் சொல்வதைத் தவிர வேறு வழி எதுவும் இல்லாமல் இருந்தது. சொன்னான்.

அதையடுத்து கொள்ளையர்களில் நால்வரை அங்கேயே கட்டிப்போட்டுவிட்டு தலைவனை மட்டும் அழைத்துக் கொண்டு படை வீரர்களுடன் அவனது இருப்பிடத்திற்குச் சென்றார் சேனாதிபதி.

மலையின் மறுபுரத்தில் அடிவாரப் பகுதியில் குடையப் பட்டு அங்கே தனது இருப்பிடத்தை அமைத்திருந்தான் கொள்ளையர் தலைவன். குகையின் வாயிலை மூடியிருந்த பாறைகளைப் பல்லவ வீரர்கள் அகற்றினார்கள். தீபங்களை ஏற்றிக் கொண்டு உள்ளே சென்றார்கள். உள்ளே ஏராளமான நகைகளும் நாணயங்களும் கொட்டிக் கிடந்தன.

''இவை எல்லாமும் கொள்ளையில் கிடைத்ததுதானா?'' என்று கேட்டார் சேனாதிபதி.

''ஆமாம்'' என்றான் கொள்ளையர் தலைவன்.

''இந்த மலைப்பகுதியில் வருபவர்களை மட்டும் கொள்ளையடித்துச் சேர்த்தவைகளா இவை?''

''அதுமட்டுமல்ல. இந்த நகரத்திலும் கொள்ளையடிப்போம். பக்கத்து ஊர்களிலும் கொள்ளையடிப்போம்'' என்றான் கொள்ளையர் தலைவன்.

''இந்த நகரத்தின் தலைவன் உன் நடவடிக்கைகளை தடுக்கவில்லையா? உன்னை அழிப்பதற்கு முற்படவில்லையா?''

''கொள்ளையில் அவருக்கும் பங்கு தருவதால் எங்கள் விஷயத்தில் தலையிடுவதில்லை என்று உடன்படிக்கை செய்து கொண்டிருக்கிறார் நகரத் தலைவர். மூன்று ஆண்டு காலமாக நாங்கள் ஒற்றுமையாக இருக்கிறோம்.''

''நகரத்தலைவன் உன்னைக் காட்டிலும் மோசமானவனாக இருக்கிறான். அவன் பெயர் என்ன?''

''சாணூரன்.''

''உன்னிடம் இருப்பதைவிட அவனிடம் அதிகமாக இருக்கும் அல்லவா?''

''ஆமாம்.''

''அப்படியானால் அவையும் எங்களுக்குத் தேவை.''

''எடுத்துக் கொள்ளுங்கள்.''

''சாணூரானிடம் இருக்கும் செல்வம் பலத்த பாதுகாப்புடன் இருக்கும் அல்லவா? வீரர்களும் அங்கே கணிசமாக இருப்பார்கள் அல்லவா? அங்கு போய் எங்களால் என்ன செய்ய முடியும்? ஆகவே அவனிடம் உள்ள செல்வங்களை நாங்கள் பெறுவதற்கு நீ தான் உதவ வேண்டும்.''

''நானா? அதெப்படி?''

''எங்களோடு நீயும் வா. சாணூரனை எங்கே ரகசியமாகச் சந்திப்பாயோ அங்கே அழைத்துப் போ. அவனை வாள் முனையில் வைத்துக் கொண்டு செல்வங்களைக் கொண்டு வரச் சொல்வோம்.''

அப்போது உதயசந்திரன் குறுக்கிட்டு ''அப்படி வேண்டாம் ஐயா. கொள்ளையர் தலைவனிடம் ஓர் ஓலையை எழுதி வாங்கிக் கொண்டு சாணூரனைச் சந்திக்கலாம். பல்லவர் படை நகரத்திற்குள் வரப் போவதாகவும் அவர்களால் செல்வங்கள் சூறையாடப்படக்கூடும் என்றும் அதை தவிர்க்க செல்வங்கள் அனைத்தையும் ரகசிய இடத்திற்கு உடனடியாக மாற்றி விடும் படியும் அந்த ஓலையில் கொள்ளையர் தலைவனை எழுதச் சொல்வோம். நாம் கொள்ளையர்களாக வேடமிட்டுக் கொண்டு போவோம். சாணூரான் தனது செல்வங்களை ரகசிய இடத்திற்கு மாற்றுவதற்குச் சம்மதிப்பான். நாமே அவற்றை ரகசிய இடத்திற்கு கொண்டு போவதாகச் சொல்லி மூட்டைகளாகக் கட்டி புரவிகளில் கொண்டு செல்வோம். நம்முடன் அவனது வீரர்களும் கூட வருவார்கள். அவர்களைச் சமயம் பார்த்து வேலை தீர்த்துவிட்டு நாம் முன்னேறிச் சென்றுவிடுவோம்'' என்றான்.

சேனாதிபதி அதற்கு ஒப்புக் கொண்டார்.

சாணூரானைப் பற்றி வேறு தகவல்களையும் கேட்டுத் தெரிந்து கொண்ட உதயசந்திரன் கொள்ளையர் தலைவனிடம் ஓலையை

எழுதி வாங்கிக் கொண்டான். வீரர்கள் குகைக்குள் அள்ளிப் போட்டுக் கொண்டு புரவி மீது ஏற்றினார்கள். கொள்ளையர் தலைவனின் வாயையும் கண்ணையும் கட்டி குகைக்குள்ளேயே விட்டுவிட்டு வெளியேறினார்கள். குகை வாயிலை பாறைகளால் மூடிவிட்டு புரவி மீது ஏறி நகரை நோக்கி நகர்த்தினார்கள்.

சேனாதிபதி உதயசந்திரனை தனியே அழைத்து ''உதயசந்திரா, கொள்ளையனைத் தாக்கி அவனிடமிருந்த செல்வங்களைக் கைப்பற்றினோம். அது நமக்கு எளிதாக இருந்தது. ஆனால் சாணூரானிடமிருக்கும் செல்வத்தைக் கவர்வது லேசான காரியமல்ல. ஆபத்தானதும்கூட. இந்த முயற்சியை நாம் கைவிட்டால் என்ன? நமக்கு முன்னால் போர் இருக்கிறது. போர்க்களம் தான் நமது இலக்கு. அதை அடையும் பயணத்தில் இருக்கும் நாம் இந்த வேலையில் ஏன் இறங்க வேண்டும்?'' என்று கேட்டார்.

''உண்மைதான் சேனாதிபதி. அதோடு நாம் கொள்ளைக் காரர்களையோ அவர்களது செல்வங்களையோ எதிர்பார்த்து வரவில்லை. அவன் மூலமாகச் சாணூரானிடம் நிரம்ப செல்வம் இருப்பது தெரிய வந்தது. அந்தச் செல்வம் அநியாயமான முறையில் சம்பாதிக்கப்பட்டது என்பதும் தெரிந்துவிட்டது. அதைக் கவர்ந்தாலென்ன என்பதுதான் என் எண்ணம். இப்படி நான் செய்வதற்கு மிக முக்கிய காரணம் ஒன்றிருக்கிறது'' என்று சொன்ன உதயசந்திரன் அந்தக் காரணத்தை சேனாதிபதியிடம் காதோடுச் சொன்னான்.

''அப்படியா? அப்படியானால் இது மிகவும் முக்கியம். எத்தனை ஆபத்தாக இருந்தாலும் முயல வேண்டியதுதான்'' என்று சொன்ன சேனாதிபதி, ''உதயசந்திரா, இப்போது நாம் கைப்பற்றியுள்ள செல்வங்களை நகருக்குக் கொண்டு செல்ல வேண்டாம். பத்திரமான ஓர் இடத்தில் பூமிக்கடியில் புதைத்து வைப்போம். வணிகர்களாக நகருக்குள் செல்வோம். மாலை நேரம் வரை பல்லவர் படை நகரை நெருங்குவதாகச் செய்திகளை பரப்பி நோட்டம் பார்ப்போம். இரவு நேரத்தில் கொள்ளையர் வேடம் அணிவோம். நீ மட்டும் சாணூரனை ரகசிய இடத்தில் சந்தித்து ஓலையைக் காட்டு. நாங்கள் உனக்குத் தெரியாமல் பாதுகாப்பாக இருப்போம். பிறகு என்ன நடக்கிறது என்பதை பார்ப்போம்'' என்றார்.

உதயசந்திரனும் அதை ஆமோதித்தான்.

கொள்ளையடிக்கப்பட்ட செல்வங்கள் தகுந்த இடத்தில் பூமிக்கடியில் பாதுகாப்பாக வைக்கப்பட்ட பின் பல்லவ வீரர்கள் வணிகர்களாக வேடம் புனைந்து நகரத்திற்குள் பிரவேசித்தார்கள். முன்பு போல் அனைவரும் சத்திரத்தில் தங்காமல் தனித்தனியாக திரிந்தார்கள். பல்லவர் படை அந்த நகரத்தைச் சூறையாட வரப் போகிறதென்ற வதந்தி அவர்களாலேயே நகர மக்களிடம் பரப்பப்பட்டது. அதுவேகமாகப் பரவி மக்கள் அது குறித்து பரபரப்புடன் பேசிக் கொள்ளத் தொடங்கினார்கள். ஏற்கெனவே பல்லவ நரசிம்மவர்மரின் தலைமையின் கீழ் பெரும் படையொன்று சில ஆண்டுகளுக்கு முன்னால் அந்த நகர் வழியாகத் தான் வாதாபிக்குச் சென்றது. ஆனால் அந்தப் படை நகரைச் சூறையாடவில்லை. அமைதியாகவே கடந்து சென்றது. தற்போதைய படை சூறையாடப் போவதாகச் செய்தி வரவே மக்களிடம் பீதி உண்டாயிற்று. தங்களிடம் இருந்த செல்வங்களை பலரும் பாதுகாக்க முனைந்தனர்.

இந்த வதந்தி நகரத்தின் காவலனும் சாளுக்கிய உப தலைவர்களில் ஒன்றானவனுமான சாணூரனுக்கும் எட்டியது.

ஒற்றர் தலைவனை அழைத்து ''இது உண்மையா?'' என்று வினவினான்.

''வதந்தி பலமாக இருக்கிறது'' என்றான் ஒற்றர் தலைவன்.

''நான் வதந்தியைப் பற்றிக் கேட்கவில்லை. உண்மை நிலையைக் கேட்கிறேன்.''

''எங்களுக்குத் தெரிந்து பல்லவர் படை எதுவும் கண்களில் படவில்லை. அதேசமயம் பல்லவ இளவரசர் தலைமையில் பெரும் காலாட்படையொன்று நமது தலைநகரை நெருங்குவதாகக் கேள்விப்படுகிறோம். அதுபோன்ற மற்றொரு படைப்பிரிவு வரலாம்.''

''இதைச் சொல்ல ஒற்றன் எதற்கு? நானே போதும். நீ போய் உண்மை நிலையை அறிந்து வா.''

இப்படிச் சொல்லி ஒற்றர் தலைவனை அனுப்பி வைத்த சாணூரன் வதந்தி மட்டும் உண்மையாய் இருந்தால் தனது நிலை மோசமானதுதான் என்று நினைத்தான். நகரத்திற்குப் பல்லவர் படை நுழைந்து சூறையாட முற்பட்டால் தனது இருப்பிடம் தான் முதலாவதாக இருக்கும் என்பது அவனுக்குச் சந்தேகமில்லாமல் தெரிந்தது.

அரசாங்க நிதியை விட கொள்ளையர் மூலம் பெற்ற பங்கு நிதியே தன்னிடம் அதிகமாக இருந்ததால் அவனது கவலையும் அதிகமாக இருந்தது. உடனடியாக தனது செல்வங்களை இடம் மாற்றாவிட்டால் அனைத்தும் பல்லவர் கைகளுக்குப் போய் விடும் என்பதை உணர்ந்த அவன் என்ன செய்வதென்று யோசித்தான்.

அப்போது சப்பையான கொம்பொலி ஒன்று அரண்மனையின் பின்புறத்திலிருந்து எழுந்தது.

அதைக் கேட்ட சாணூரன் ''ஆஹா! இது கொள்ளையர் தலைவனின் கொம்பொலி அல்லவா? நம்மை ரகசிய இடத்திற்கு அழைக்கும் அடையாளமாயிற்றே? இந்த இக்கட்டான நேரத்தில் எதற்காக அழைக்கிறான்? ஒருவேளை வதந்தி அவனுக்கும் தெரிந்துவிட்டதா? இருக்கலாம். அவனது வரவு நல்லதுக்குத்தான். செல்வங்களை இடம் மாற்ற அவன் யோசனை சொன்னாலும் சொல்லலாம்'' என்று நினைத்துக் கொண்டான்.

அப்போது இரவு நேரம் தொடங்கியிருந்தது. இரவு தொடங்கும் நேரத்தில் கொம்பொலியானது அரண்மனையின் அருகில் எழுவதும் அதையடுத்து ஒரு நாழிகைப் பொழுது கழிந்ததும் நகரின் மேற்கே உள்ள இடிந்துபோன சமண விஹாரத்திற்கருகே கொள்ளையர் தலைவனைச் சந்திப்பதும் சாணூரனுக்கு வழக்கமாக இருந்தது.

எனவே நேரத்தைக் கணக்கிட்டுக் கொண்ட சாணூரன் தனது மெய்க்காவலர்களிடம் ஏதோ சொல்லிவிட்டுப் புரவியில் ஏறி ரகசிய இடத்தை அடைந்தான்.

அங்கே சென்று புரவியை விட்டு இறங்கி எதிரே நின்றிருந்த உதயசந்திரனைக் கண்டதும் சற்றே குழம்பிய சாணூரன் ''யார் நீ?'' என்று கேட்டான்.

''கொம்பொலியைக் கேட்டுவிட்டுத்தானே வந்தீர்கள்? பிறகு எதற்கு இந்தக் கேள்வி?'' என்று கேட்டான் கொள்ளையர் வேடத்தில் இருந்த உதயசந்திரன்.

''நீ அவனில்லை'' என்றான் சாணூரன்.

''அவரது ஊழியன் நான். அவர் அவசரமாக அனுப்பி நான் வந்திருக்கிறேன்.''

''என்ன விஷயம்?''

ஓலையை நீட்டினான் உதயசந்திரன். அதோடு பந்தம் ஒன்றையும் தயாரித்து ஓலைக்கு ஒளியை அளித்தான்.

''சாளுக்கிய உபதலைவரே! அபாயம். நகரை நோக்கி பல்லவர் படை வருகிறது. நகரத்தை அப்படை சூறையாடப் போகிறது. சூறையாடினால் முதலில் உங்கள் ரகசிய பெட்டகம்தான் கபளீகரம் செய்யப்படும். ஆகவே அதில் உள்ள செல்வங்களை உடனடியாக என் இருப்பிடத்திற்கு மாற்றி விடவும். எனது ஆட்கள் நகரில் தான் இருக்கிறார்கள். அவர்கள் துணையுடன் செல்வங்களை மாற்றுவது முக்கியம். சீக்கிரம்'' என்று ஓலையில் எழுதியிருந்தான் கொள்ளையர் தலைவன்.

ஓலையைப் படித்துவிட்டுச் சிறிது நேரம் யோசித்த சாணூரன் ''உன் பெயர் என்ன?'' என்று கேட்டான்.

''சூரன்'' என்றான் உதயசந்திரன்.

அதையடுத்து இடியெனச் சிரித்த சாணூரன், ''அட அற்பனே! சாணூரனிடம் இன்று நீ விளையாடிவிட்டாய். இன்றே உனக்கு இறுதி நாள்'' என்றான்.

☆☆☆



27

சாணூரன்

சாணூரனின் பேச்சு உள்ளுக்குள் இலைப்பைத் தந்தாலும் அவன் விஷயமாக ஏற்கெனவே திட்டங்களைத் தீட்டி யிருந்தானாதலால் சுதாரித்துக் கொண்ட உதயசந்திரன், ''நீங்கள் சொல்வது விளங்கவில்லை'' என்றான்.

''முட்டாளே! கொள்ளையர் தலைவனுக்கு எழுதவும் தெரியாது. படிக்கவும் தெரியாது. அப்படிப்பட்டவன் எனக்கு ஓலை அனுப்பியிருப்பதாகச் சொல்கிறாயே இப்போது விளங்குகிறதா நீ ஏமாற்றுக்காரன் என்பது'' கூறிச் சிரித்த சாணூரன் வாயில் விரலை வைத்து விசித்திரக்குரல் எழுப்பினான். அதையடுத்து அவனது மெய்க்காவலர்கள் இருபது பேர் வந்து உதயசந்திரனைச் சூழ்ந்து கொண்டார்கள்.

''என்ன சொல்கிறாய் இப்போது?'' என்று கேட்டான் சாணூரன்.

''நகரத் தலைவனே! பேசும்போது நிதானம் இருக்க வேண்டும். அவசரப்பட்டு வார்த்தைகளை விட்டுவிடக் கூடாது'' என்றான் உதயசந்திரன்.

''என்ன சொல்கிறாய் நீ?''

''ஓலையை நான் கொண்டு வந்தது உண்மை. ஆனால் அதை கொள்ளையர் தலைவன் எழுதியதாகச் சொன்னேனா? எதற்காக அவசரப்பட்டுக் கொக்கரிக்கிறாய்?''

''அவன் எழுதவில்லை என்றால் வேறு யார் எழுதியது? கொள்ளையர்களில் ஒருவனுக்கும் எழுதப் படிக்கத் தெரியாது.''

''ஓலையை எழுதியது நான்தான்.''

''உனக்கு மட்டும் எப்படி எழுதத் தெரியும்?''

''நான் கொள்ளையனல்ல.''

''வேறு யார்?''

''பல்லவர் படை உபதலைவன் உதயசந்திரன்.''

இதைக் கேட்டதும் உண்மையிலேயே ஆடிப்போய் விட்டான் சாணூரன். இதை அவன் சிறிதும் எதிர்பார்க்கவில்லை.

''நீ சொல்வதை உண்மை என்று எப்படி நம்புவது?''

''சிறிது நேரத்தில் நீ நம்புவாய்.''

''சிறிது நேரத்தில் என்றால்?''

''இந்த நகரத்தில் எனது வீரர்கள் பல்வேறு வேடங்களில் பிரவேசித்துவிட்டார்கள். முக்கிய காரணத்தை முடித்ததும் கொம்பொலி செய்வார்கள். அப்போது நீ என்னை நம்புவாய்'' என்று சொன்ன உதயசந்திரன், ''உனது வீரர்களை அனுப்பி விடு. நாம் தனிமையில் பேச வேண்டியது இருக்கிறது.'' என்றான்.

சாணூரனின் மனம் குழம்பிவிட்டிருந்தது. உதயசந்திரனை நம்பவும் முடியவில்லை. நம்பாமலும் இருக்க முடியவில்லை. சற்று யோசித்துவிட்டு மெய்க்காப்பாளர்களைப் போகும்படி உத்தரவிட்டான்.

அவர்கள் சென்றதும், ''இப்போது சொல் உனது வீரர்கள் இப்போது என்ன செய்து கொண்டிருக்கிறார்கள்?'' என்று கேட்டான் சாணூரன்.

''இதோ பார் சாணூரா. மறுபடியும் அவசரப்படாதே. எனக்கு கொள்ளையர் தலைவனை எப்படித் தெரியும் என்ற கேள்வி எழவில்லையா உனக்கு?'' என்று கேட்டான் உதயசந்திரன்.

''உண்மைதான். அவனை உனக்கு எப்படித் தெரியும்?''

''எனது வீரர்கள் அவனையும் அவனைச் சேர்ந்த கொள்ளையர்களையும் முறியடித்துவிட்டு மலைக்குகையில் அவன் குவித்து வைத்திருந்த செல்வங்களை அள்ளிக் கொண்டார்கள்.''

''இது உண்மையா?''

''நேரம் கிடைத்ததும் மலைக்குகைக்குச் சென்று பார். உண்மையா பொய்யா என்று தெரியும்.''

''கொள்ளையர் தலைவனைக் கொன்றுவிட்டாயா?''

''இல்லை.''

''ஏன்?''

''அவன் எங்களுக்கு முக்கியச் செய்தியைச் சொல்லியிருக்கிறான். அவனைக் கொண்டுதான் விஷயத்தை முடிக்க வேண்டும்.''

''என்ன சொன்னான் அவன்?''

''உன் அயோக்கியத்தனத்தைச் சொன்னான்.''

''அயோக்கியத்தனமா?''

''ஆமாம். நகரத்தின் தலைவனாக இருந்து கொண்டு நகர மக்களை காப்பாற்றாமல் இங்கேயும் மலைப்பக்கமும் வருகிறவர்களை அக்கொள்ளையர்களை விட்டுக் கொள்ளை யடிப்பதும் அக்கொள்ளையில் சரிபாதியை நீ பங்காகப் பெறுவதும் அயோக்கியத்தனம் இல்லையா? உன்னை நம்பி இந்த நகரத்தை உன்னிடம் ஒப்படைத்திருக்கும் சாளுக்கிய அரசாங்கத்திற்கு நீ செய்வது துரோகமில்லையா?''

''இல்லை. இல்லை. நான் அப்படி எதுவும் செய்ய வில்லை. கொள்ளையர் தலைவன் உன்னிடம் உளறி யிருக்கிறான்.''

''அவன் இப்போது எங்கள் வீரர்களோடு இந்த நகரில்தான் இருக்கிறான். ஊர் மக்களைத் திரட்டி வைத்து அவனைப் பேசச் சொன்னால் அவன் உளறுகிறானா உண்மையைச் சொல்கிறானா என்பது விளங்கிவிடும். ஊர் மக்களும் உன்னைப் பற்றித் தெரிந்து கொள்வார்கள்.''

இல்லை என்று மறுத்தாலும் உதயசந்திரன் கூறியது உண்மை என்பது நன்றாகவே தெரிந்திருந்தது சாணூரனுக்கு. ஊர் மக்களின் முன்னால் தனது சாயம் வெளுத்துவிட்டால் அவர்கள் தன்னைச் சித்திரவதை செய்து அதை விழாவாகக் கொண்டாடி மகிழ்வார்கள் என்பதும் அவனுக்குப் புரிந்தது.

எனவே தனது நிலையை நன்றாக உணர்ந்த அவன் ''பல்லவ உபதலைவரே, கொள்ளையர் தலைவன் கூறியதெல்லாம் உண்மைதான்'' என்றான்.

''மிகவும் மகிழ்ச்சி. இனி நாம் பேசப்போகும் விஷயம் தான் முக்கியமானது. கவனமாகக் கேள்'' என்று பீடிகையைப் போட்ட உதயசந்திரன், ''நீ செல்வக் குவியல்களை எங்கே வைத்திருக் கிறாய் என்பது கொள்ளையர் தலைவனுக்குத் தெரியுமா?'' என்று கேட்டான்.

''தெரியாது.''

''தெரியும் என்று சொல்கிறான் அவன். அவனை வைத்துக் கொண்டுதான் எனது வீரர்கள் ரகசிய இடத்தை நெருங்கிக் கொண்டிருக்கிறார்கள்.''

''அவர்கள் எவ்வளவு நேரம் தேடினாலும் அந்த இடத்தைக் கண்டுபிடிக்க முடியாது.''

''அது தெரிந்துதான் நான் உன்னிடம் வந்தேன். அந்த ரகசிய இடம் எங்கே இருக்கிறது?''

''எதற்கு கேட்கிறாய்?''

''முட்டாள். வேடிக்கை பார்க்கவா கேட்பேன்? எதற்கு என்பது புரியவில்லையா உனக்கு? நீ சேர்த்து வைத்திருக்கிற செல்வங்கள் அனைத்தும் எங்களுக்கு வேண்டும்.''

''இது அநியாயம். அதர்மம்.''

''சாணூரா! நீ உழைத்து சம்பாதித்த எதையும் நான் கேட்கவில்லை. அநியாய வழியில் நீயும் கொள்ளையர் தலைவனுமாகச் சேர்த்து குவித்து வைத்திருப்பதைத்தான் கேட்கிறேன்.''

''அதைக் கேட்க உனக்கென்ன உரிமை இருக்கிறது?''

''கொள்ளையர்கள் கொள்ளையடித்ததில் பங்கு கேட்டாயே அது எந்த உரிமையில் கேட்டாய்? நீயும் கொள்ளையனாக மாறியுதால் கேட்டாய். எனக்கு அதுபோன்ற அவலம் எதுவுமில்லை. நாங்கள் உங்கள் எதிரி. உங்களை அழிக்கவும் உங்கள் செல்வங்களைக் கவரவும் புறப்பட்டிருக்கிறோம். அந்த உரிமையில்தான் கேட்கிறோம். உரிமைப்படி முழுவதுமாகச் செயல்படுவதாக இருந்தால் ஊர் முழுவதையும் சூறையாடி யிருக்க வேண்டும். மக்களை அடித்துத் துன்புறுத்தியிருக்க வேண்டும். இங்கே உள்ள நீர் நிலைகளை மக்கள் பயன்படுத்த முடியாதபடி விஷத்தைக் கலந்திருக்க வேண்டும். பயிர் பச்சைகளை அழித்துவிட்டு பசுக்களையும் குதிரைகளையும், வண்டிகளையும், உணவுப் பொருட்களையும் கவர்ந்திருக்க வேண்டும். அவற்றிலெல்லாம் நாங்கள் இறங்கவில்லை. உனது அடாவடித்தனமான கொள்ளைகளையும் நிதிக் குவியல்களையும் பற்றிக் கேள்விப்பட்ட பின் நீ ஒருவன் போதும் என்று தீர்மானித்தோம். உன்னிடம் இருப்பது அநியாய வழியில் குவிக்கப்பட்டவை. அவற்றை எடுத்துக் கொள்வது அநியாயமும் அல்ல. அதர்மமும் அல்ல. நீயாக வந்து இடத்தைக் காட்டிவிட்டால் நீ உயிர் பிழைக்கலாம்'' என்றான் உதயசந்திரன்.

''பாதிபாதியாகப் பிரித்துக் கொள்ளலாம்.''

''அப்படியெல்லாம் பிரிப்பதற்கு நான். கொள்ளைக் காரனுமல்ல. பிச்சைக்காரனுமல்ல.''

''உனக்கு முக்கால். எனக்கு கால்.''

''ரகசிய இடத்தை மட்டும் காட்டு. வேறு எதையும் நீ பேச வேண்டாம்.''

''நான் காட்டாவிட்டால்?''

''உன் குடும்பத்தைச் சார்ந்தவர்கள் என் வீரர்கள் வசம் இருக்கிறார்கள். அவர்களது உயிர் முதலில் போகும். பிறகு உன் மீதான சித்திரவதை தொடங்கும்'' என்று சொன்ன உதயசந்திரன் தன் கழுத்தில் தொங்கிய கொம்பை எடுத்து ஊதியதும் ஐம்பது பல்லவ வீரர்கள் அங்கு வந்து சேர்ந்தார்கள்.

அதற்கு மேல் சாணூரன் வீண் பேச்சில் இறங்கவில்லை. ரகசிய இடத்தைக் காட்டினான். அங்கே இருந்த செல்வங்கள் கொள்ளையர் குகைக்குள் இருந்த செல்வங்களை விட அதிகமாக இருந்தன. அவற்றை ஒன்று விடாமல் பைகளில் அள்ளினார்கள் பல்லவ வீரர்கள்.

''எனக்கு எதுவும் இல்லையா?'' என்று கேட்டான் சாணூரன்.

''உழைத்து சேர்த்துக் கொள்'' என்றான் உதயசந்திரன்.

பிறகு சாணூரனை அந்த ரகசிய இடத்திலேயே கட்டிப்போட்டுவிட்டு எல்லோரும் புறப்பட்டார்கள்.

முன்பு கொள்ளையர் தலைவனிடமிருந்து கைப்பற்றிய செல்வங்களை எங்கே புதைத்தார்களோ அங்கேயே இவற்றையும் புதைத்துவிட்டுச் செலவுக்குத் தேவையான பொன் நாணயங்களை மட்டும் எடுத்துக் கொண்டார்கள்.

பயணத்தைத் தொடர்ந்தார்கள்.

ஒரு நாள் முழுவதும் இடைவிடாமல் பயணம் செய்து இரவு நேரத்தில் கிராமம் ஒன்றை அடைந்தார்கள்.

அப்போது அவர்கள் வேடர்களைப் போல வேடம் தரித்திருந்தார்கள்.

பெரியதோர் ஆலமரத்தின் கீழே தங்கினார்கள்.

காவலுக்குப் பாதி உறக்கத்திற்குப் பாதி என்று வழக்கப்படி முறைவைத்துக் கொண்டார்கள்.

சேனாதிபதி மட்டும் உறங்கவில்லை.

வழக்கம்போல அவருக்கு வேண்டிய இடத்திற்குப் போய் காமக் குளியல் போட்டுவிட்டு வந்தார்.

உதயசந்திரன் அவர் சென்றதையும் வந்ததையும் கவனித்தான்.

ஆலமரத்தடியை விட்டு விலகி அருகே வெட்ட வெளியில் இருந்த வட்டப்பாறை ஒன்றின் மீது அமர்ந்து வானத்தைப் பார்த்தான்.

பௌர்ணமி சந்திரன் நடுவானத்தில் தெரிந்தது. மேகங்களின் தொந்தரவுகள் எதுவுமின்றி வானத்தில் தெளிவாகத் தெரிந்த பூர்ணசந்திரனைக் கண்ட உதயசந்திரன் தனது இதயத்தைக் கொள்ளை கொண்ட பௌர்ணமியை நினைத்துக் கொண்டான். அவள் கொடுத்த பூவிதழ் முத்திரையை நினைத்துக் கொண்டான். அவள் பூக்களாய் உதிர்த்த சொற்களையும் நினைத்துக் கொண்டான். ''எப்படி இருக்கிறாய் பௌர்ணமி? நலமாக இருக்கிறாயா?'' என்று தனக்குத்தானே கூறிக் கொண்டான்.

சந்திரனைக் கண்டான். இதமான அதன் தண்ணொளி அவனது மனதை வருடியது.

''நிலவே, உனக்கும் எனக்கும் ஒரே பெயர்தான். ஆனால் அந்த ஒற்றமையைத் தவிர மற்ற எல்லா விஷயங்களிலும் வித்தியாசங்கள்தான். உனக்கிருக்கும் சுதந்திரம் எனக்கில்லை. பூமியில் இருக்கும் அனைவரும் பார்க்கும்படி ஆகாயத்தில் நீ அழகாக வந்து போகிறாய். குழந்தைகள் முதல் முதியவரும் விரும்பிப் பார்க்கக்கூடிய ஒரே அழகு நீதான். உன்னைப் பகைத்துக் கொள்ளக்கூடியவர்கள் என்று ஒருவருமில்லை. என்னைப் போல பொறாமைப்படக் கூடியவர்கள் வேண்டு மானால் இருக்கலாம். நீ எல்லோருக்கும் பொது. எல்லோருக்கும் ஆனந்தம். உன் பெயரைத்தான் பௌர்ணமியும் வைத்திருக்கிறாள். நாம் மூவருமே பெயரில் ஒன்றுபட்டு ஒவ்வொருவரும் எட்ட முடியாத இடத்தில் இருக்கிறோம். ஆலகால விஷத்தை உண்ட சிவபெருமானின் திருமுடியை அலங்கரிக்கும் நிலவே அந்த சிவபெருமானிடம் நீ தூது செல்வாயா? என் பௌர்ணமியை சீக்கிரமாக என்னிடம் சேர்க்கச் சொல்வாயா?'' என்று முணுமுணுத்தான்.

''நிலவே நீ ஒரு சேதி சொல்வாயோ?''

ஆலம் உண்ட திரு நீலகண்டனிடம்''*

என்று அவனது மனம் பாடியது.

''என்ன? காதலியைப் பற்றிய நினைவு வந்துவிட்டதா தனியாக வந்துவிட்டாய்?'' என்று கேட்டபடி அங்கு வந்து அமர்ந்த சேனாதிபதி அவனை ஒரு தட்டு தட்டினார்.

* பாடலாசிரியருக்கு நன்றி

அவரது யமகாதகத் தட்டலால் நினைப்புகள் அறுபட்டுத் தெளிந்த உதயசந்திரன் எழுந்து நின்று ''வாருங்கள் ஐயா'' என்றான்.

''அதுதான் வந்துவிட்டேன். உனக்கு இடைஞ்சலாக உட்கார்ந்தும்விட்டேனே இன்னும் என்ன? உட்கார்'' என்ற சேனாதிபதி அவன் உட்கார்ந்ததும் ''எதைப் பற்றி யோசனை? காதலியைப் பற்றியா?'' என்று வினவினார்.

''ஆமாம்'' என்றான் உதயசந்திரன்.

''அப்படியா? என்ன சொல்கிறாள் உன் காதலி? என்னை எண்ணி எண்ணி ஏங்கிக் கொண்டிரு என்கிறாளா?'' என்று கேட்டார் சேனாதிபதி.

''இல்லை சேனாதிபதி. நான்தான் அவளை எண்ணிக் கொண்டிருந்தேன்.''

''எதற்கு?''

''இதென்ன கேள்வி ஐயா? காதலியைப் பற்றி எண்ணிப் பார்ப்பதற்குக் காரணம் தேவையா?''

''எண்ணிப் பார்த்தாயே என்ன கிடைத்தது உனக்கு? ஆறுதல் கிடைத்ததா? ஏக்கம் தானே மிஞ்சியது?'' என்று கேட்ட சேனாதிபதி ''ஏக்கங்களைச் சுமந்து கொண்டு இருப்பது என்பது வீதியில் இருக்கும் கல்லைத் தூக்கித் தலையில் வைத்துக் கொண்டு கஷ்டப்படுவதைப் போன்றது. இது தேவையா? அதுவும் மகத்தான காரியத்தை நோக்கிச் சென்று கொண்டிருக்கும் உனக்கு இது வீண் வேலை. ஏக்கங்கள் நமது முன்னேற்றத்திற்குத் தடை. ஏக்கப்படுவதற்கு எனக்குக்கூட விஷயங்கள் இருக்கின்றன. ஆனால் அவற்றைக் காஞ்சியிலேயே இறக்கி வைத்துவிட்டேன். அதனால்தான் நான் சுமையற்றுச் சுதந்திரமாகவும் சுகமாகவும் இருக்கிறேன். நீ ஏன் அப்படிச் செய்யவில்லை?'' என்று கேட்ட சேனாதிபதி, ''இப்போதும் மூழ்கிவிடவில்லை. உன் ஏக்கங்களை மூட்டைக் கட்டி இங்கேயே வைத்துவிட்டு சுகங்களை அனுபவிக்கத் தொடங்கு. சுறுசுறுப்பு உண்டாகும்'' என்றார்.

அவர் எதைக் குறிப்பிடுகிறார் என்பது உதயசந்திரனுக்குத் தெரிந்தது.

''ஐயா, உங்கள் வழி வேறு. என் வழி வேறு'' என்றான்.

''எல்லோரது வழியும் ஒன்றுதான். நீ தயங்குகிறாய். நான் தயங்குவதில்லை. அதுதான் வித்தியாசம். இதோபார் உதயசந்திரா,

போருக்குப் போகும் நமக்கு சந்தர்ப்பம் என்பது மிகவும் முக்கியம். அது கிடைக்கும்போது தவறவிடக் கூடாது. இதை ஏதோ போர்க்களத்துக்கோ கோட்டையைப் பிடிப்பதற்கு மட்டுமோ நான் சொல்வதாக எண்ணிவிடாதே. எல்லா விஷயங்களிலும்தான். மனித உடலில் தோன்றும் இயற்கையான உணர்வுகளைக் கட்டுப்படுத்த முயற்சி செய்யாதே. அப்படி முயற்சி செய்து தோற்ற துறவிகள் பலர் நம்மிடையே இருக்கிறார்கள். அப்படிப்பட்ட இயற்கை உணர்வுகளில் காமமும் உண்டு. அது எப்போது வரும் எப்படி வரும் என்று சொல்ல முடியாது. வந்துவிட்டால் தீர்த்துக் கொண்டு விடுவதுதான் விவேகமானது. காமத்தை கவனித்துக் கொண்டால் கடமைகள் சீராக நடக்கும். காமத்தை தவிர்க்கவும் புறக்கணிக்கவும் முற்பட்டால் கடமையில் கவனம் தவறும். சோர்வும் வெறுப்பும் உண்டாகும். நானும் சரி நம்மைச் சேர்ந்த வீரர்களும் சரி இந்த விஷயத்தில் மிகவும் சரியாக நடந்து கொள்கிறார்கள். நீ தான் துறவி போல இருக்கிறாய். நீ துறவி இல்லை. நீதான் தனிமையில் அமர்ந்து ஏங்கிக் கொண்டிருக் கிறாயே நீ எப்படித் துறவியாக முடியும்? நான் சொல்வதை கவனத்தில் வைத்துக் கொள். காதலி என்பவள் கிணற்று நீர். அது பத்திரமாக இருக்கும். காமம் என்பது அருவி நீர். அது எங்கேயும் எப்போதும் இருக்காது. இருக்கும்போது நன்றாகக் குளித்துவிடு'' என்று சொன்ன சேனாதிபதி, ''நாளைக்கு நாம் அடுத்த கிராமத்திற்குப் போனதும் நான் உங்களை விட்டுப் பிரிந்து விடுவேன். நீ தான் இனிமேல் இந்த படைப்பிரிவை நடத்திச் செல்ல வேண்டும். உனக்கு வழிகாட்ட திறமையான வழிகாட்டியை துணையாக அனுப்புகிறேன். நாம் இருவரும் சாளுக்கிய தாலைநகரில் சந்திப்போம். அனேகமாக சாளுக்கிய தலைநகரை அடைய ஒரு மாதம் ஆகும் என்று நினைக்கிறேன். என்னோடு அரிச்சந்திரனை அழைத்துச் செல்கிறேன்'' என்றார்.

பொழுது விடியும் வரை சேனாதிபதி கூறிய அறிவுரைகளை அசை போட்டுக் கொண்டிருந்தான் உதயசந்திரன்.

பொழுது விடிந்ததும் படை புறப்பட்டது.

ஒரு நாள் பயணத்திற்குப் பின் சேனாதிபதி கூறியது போலவே கிராமம் ஒன்றை அடைந்தது.

வணிகர்கள் வேடத்தில் இருந்த வீரர்கள் அன்றிரவு சத்திரத்தில் தங்கி ஓய்வெடுத்தார்கள்.

சேனாதிபதி அரிச்சந்திரனை அழைத்துக் கொண்டு புறப்பட்டார்.

''காலையில் புறப்படக் கூடாதா?'' என்று கேட்டான் உதயசந்திரன்.

''இல்லை உதயசந்திரா. இப்போது புறப்படுவதுதான் சரியாக இருக்கும்.''

''வழிகாட்டி வரவில்லையே?''

''விடிவதற்குள் வந்துவிடுவார்.''

உதயசந்திரன் மேற்கொண்டு எதுவும் பேசாமல் அவர்களை வழியனுப்பிவிட்டு சத்திரத்தில் படுத்தான்.

உறக்கம் அவனை மறக்க வைக்க முயன்றபோது யாரோ இருவரது குரல் உறக்கத்தை அகற்றியது.

யார் பேசுவது என்று கவனித்தான் உதயசந்திரன். குரல்கள் அவனுக்குப் பரிச்சயமானதாக இருந்தன.

எழுந்து சென்றான் உதயசந்திரன்.

★★★



28

வழிகாட்டி

குரல் வந்த இடத்தை நோக்கிச் சென்றான் உதயசந்திரன்.

சத்திரத்தின் பின்புறக் கட்டிலிலிருந்துதான் பேச்சுக்குரல் வந்து கொண்டிருந்தது.

உதயசந்திரன் அங்கே சென்றபோது இரண்டு பேர் படுத்துக் கொண்டு பேசிக் கொண்டிருப்பது தெரிந்தது.

இருட்டாக இருந்த காரணத்தால் அவர்களைப் பார்க்க முடியவில்லை என்றாலும் குரலை வைத்துக் கொண்டு அடையாளம் தெரிந்து கொள்ள முடிந்தது.

அவர்கள் முகமதுவும் அகமதுவும்தான்.

அவர்களை அடையாளம் தெரிந்து கொள்ள முடிந்த உதயசந்திரனால் அவர்கள் என்ன பேசுகிறார்கள் என்பதைத் தெரிந்து கொள்ள முடியவில்லை.

ஏனென்றால் அவர்கள் அரபு மொழியில் பேசிக் கொண்டிருந்தார்கள்.

காக்கை மடுவிலும் காஞ்சிபுரத்திலும் தனக்குத் தெரிந்த மொழியிலே பேசிய அவர்கள் இக்கிராமத்தில் அரபு மொழியில் பேசிக் கொண்டதிலிருந்து அவர்கள் பேசுவது பிறருக்குப் புரிந்துவிடக் கூடாது என்பதுதான் காரணமாக இருக்க வேண்டும் என்று நினைத்தான் உதயசந்திரன்.

சத்திரத்திற்கு தான் வந்திருப்பது அவர்களுக்குத் தெரிந்திருக்கவில்லை என்பதை உணர்ந்து கொண்ட உதயசந்திரன் அவர்களுக்கு முன்னால் போய் நிற்கவோ பேசவோ விரும்பவில்லை. அதேசமயம் அவர்கள் என்ன பேசுகிறார்கள் என்பதை அறிய விரும்பினான்.

தனது வீரர்கள் யாருக்காவது அரபு மொழி தெரியுமா என்று விசாரித்தான். பல்லவ வீரர்கள் யாருக்கும் அந்த மொழி தெரியவில்லை. ஆனால், சாளுக்கிய ஒற்றனான ஐராவதனுக்குத்

தெரிந்திருந்தது. வேறு வழியில்லாமல் அவனையே அனுப்பி முகமதுவும் அகமதுவும் என்ன பேசுகிறார்கள் என்பதை அறிந்து வரும்படி அனுப்பினான் உதயசந்திரன்.

இரண்டு அரபு வீரர்களும் பேசி முடிக்கும் வரை ஒட்டுக் கேட்டுவிட்டு அவற்றின் சாராம்சத்தை உதயசந்திரனிடம் சொன்னான் ஐராவதன்.

அதிலிருந்து அகமதுவும் முகமதுவும் சாளுக்கிய தலைநகருக்குச் செல்லவிருப்பதாகவும் அங்கே போர் நிகழும் சமயத்தில் பல்லவ இளவரசனை எப்படியாவது கொன்று விடுவது என்று முடிவு கட்டியிருப்பதாகவும் தெரிந்தது உதயசந்திரனுக்கு.

இளவரசன் மகேந்திரனுக்கு எந்தவிதமான ஆபத்து வந்தாலும் அதிலிருந்து அவனைக் காப்பாற்ற தன்னை ராஜசிம்மப் பல்லவர் பணித்திருந்ததை நினைவு கூர்ந்தான் உதயசந்திரன்.

இளவரசனைக் கொல்ல தன்னிடம் சத்தியம் வாங்கிய அராபியத் தலைவனான சுலைமான் தன்னை நம்பாமல் அகமதுவையும் முகமதுவையும் சாளுக்கிய தலைநகருக்கு அனுப்பி இருக்கிறான் என்பது உதயசந்திரனுக்குப் புரிந்தது.

இது அவன் ஓரளவிற்கு எதிர்பார்த்ததுதான்.

சதிகாரர்கள் தங்கள் சூழ்ச்சி வெற்றி பெற ஒருவனை மட்டுமே நம்பமாட்டார்கள் என்பதும் ஒரு மார்க்கத்தை மட்டுமே வைத்திருக்க மாட்டார்கள் என்பதும் உதயசந்திரனுக்குப் புரியாமல் இல்லை.

யோசித்தான்.

அப்போது குறுக்கிட்ட ஐராவதன், ''உபதலைவரே, இந்த இருவரால் உங்கள் இளவரசரின் உயிருக்கு ஆபத்து என்பது உறுதியாகிவிட்டது. இவர்களை இங்கேயே வெட்டிப் போட்டால் என்ன?'' என்று கேட்டான்.

''எளிதான காரியம்தான். ஆனால் பல்லவ இளவரசரின் உயிருக்கு ஆபத்து விளைவிக்கக் கூடியவர்கள் இவர்கள் இருவர் மட்டும்தான் என்று சொல்ல முடியாது. இவர்களைச் சேர்ந்த வேறு பலரும் இருக்கலாம். எனவே இவர்களை அழிப்பதால் ஆபத்து ஒட்டு மொத்தமாகத் தீர்ந்துவிடப் போவதில்லை. அதற்குப் பதிலாக இவர்களை வைத்துக் கொண்டே இவர்களைச் சேர்ந்தவர்களையும் அவர்களால் உண்டாகக்கூடிய ஆபத்து பற்றியும் அறிந்து கொள்வதுதான் சரியாக இருக்கும்'' என்றான் உதயசந்திரன்.

''அதற்கும் இதுதான் வாய்ப்பு உபதலைவரே. இருவரையும் இங்கேயே சிறை செய்து விசாரிக்கும் விதத்தில் விசாரித்தால் விவரங்களைச் சொல்லிவிட்டுப் போகிறார்கள்'' என்றான் ஐராவதன்.

''அது முடியாது ஐராவதா. இளவரசரைக் கொல்வதாக இவர்களுக்கு முன்பாக புனிதகுரானின் மீது நான் சத்தியம் செய்து கொடுத்திருக்கிறேன். நீ சொல்வது போல் நடந்து கொண்டால் சத்தியத்தை மீறிய செயலாகிவிடும்'' என்று சொல்ல முடியாத நிலையில் இருந்த உதயசந்திரன், ''அது வேண்டாம் ஐராவதா. சாளுக்கியனான உன்னை அவர்களுக்கு அடையாளம் தெரியாது. எனவே நீ அவர்களோடு சேர்ந்து கொள். எங்களையும் சாளுக்கிய உளவுப்படையாக அவர்களிடம் சொல். எல்லோரும் ஒன்றாகவே பயணப்படுவோம். பயணத்தின் போது நீ அவர்களின் வாயைக் கிளறி விவரங்களைத் தெரிந்து கொள்ள முயற்சி செய். முழுவதையும் தெரிந்து கொண்டபின் அவர்களை அனுப்ப வேண்டிய இடத்திற்கு அனுப்பி வைக்கலாம்'' என்றான்.

உதயசந்திரன் அவ்வாறு கூறியபோது சத்திரத்திற்கு வெளியே ஏதோ இரைச்சல் கேட்டது.

என்னவென்று பார்ப்பதற்காக இருவரும் சத்திரத்திற்கு வெளியே வந்தார்கள். பல்லவ வீரர்கள் கூட உறக்கம் கலைந்து சத்திரத்தை விட்டு வெளியே வந்து பார்த்தார்கள்.

வெளியே வீதியில் நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் கூடியிருந்தார்கள். அவர்களுக்கு முன்னால் பூரண கவசமணிந்த ஒருவன் புரவியில் அமர்ந்தபடி அவர்களோடு பேசிக் கொண்டிருந்தான். பிரச்சனை என்ன என்பது தெரியவில்லை. ''அர்த்த ராத்திரியில் எதற்காக இவர்கள் கூடியிருக்கிறார்கள்? யார் இவர்கள்?'' என்று எண்ணிக் கொண்டிருந்தான் உதயசந்திரன்.

அப்போது அவர்களை நெருங்கிய மனிதன் ஒருவன், ''இங்கே உபதலைவர் உதயசந்திரன் யார்?'' என்று கேட்டான்.

பல்லவ வீரன் உதயசந்திரனை அடையாளம் காட்டியதும் அவனை அணுகிய அந்த மனிதன் மெல்லிய குரலில், ''ஐயா, நீங்கள் தங்கியுள்ள இந்தச் சத்திரம் எந்த வினாடியிலும் கொளுத்தப்படலாம். எனவே அனைவரும் புறப்படுங்கள். கிராமத்தை விட்டு வெளியேறிவிடுங்கள்'' என்று சொல்லி விட்டு பதிலை எதிர்பாராமல் அகன்று சென்றான்.

புதிய இடங்களில் ஆபத்து ஏன் வரும். எப்படி வரும் எப்போது வரும் என்பதைச் சொல்ல முடியாது. எனவே சத்திரம்

கொளுத்தப்படப் போவதாகச் சொன்ன செய்தியை உதயசந்திரன் அலட்சியப்படுத்தவில்லை. உடனே வீரர்களை வெளியேறுமாறு கட்டளையிட்டான். அதேநேரத்தில் சத்திரத்தின் பின்புறம் ஏதேதோ குரல்கள் எழுந்தன. சத்திரத்தின் பின்புறமும் கொஞ்ச நேரத்தில் தீப்பற்றிக் கொண்டு எரியலாயிற்று. தீவாளிகள் பல சத்திரத்தின் மீது வந்து விழவும் செய்தன.

செய்தி உண்மையாகிவிட்டதை அறிந்த உதயசந்திரன் புரவிகளோடு புறப்பட்டான். கிராமத்தை விட்டு வேகமாக வெளியேறிவிடுவது நல்லது என்று கருதிய அவன் புரவிகளை முடுக்கிவிடவே அவை புயலெனக் கடுகிச் சென்றன.

ஒரு நாழிகைப் பொழுதில் கிராமத்தை விட்டு வெளியேறி காட்டுப் பகுதிக்கு வந்தபோது, ''உபதலைவரே, உங்கள் எதிரிகளான அரபு நாட்டவர் இருவரை விட்டுவிட்டு வந்துவிட்டோமே?'' என்று கேட்டான் ஐராவதன்.

''உண்மைதான் ஐராவதா. நாம் புறப்படும்போதே சத்திரம் எரியத் தொடங்கிவிட்டதே! நாம் எப்படி உள்ளே போக முடியும்?'' என்று கேட்ட உதயசந்திரன் ''அவர்களை விடு. நாமிருந்த சத்திரத்தைக் கொளுத்தியவர்கள் யார்? அழிவிலிருந்து நம்மைக் காப்பாற்றியவர் யார்? விளங்கவில்லையே'' என்றான்.

''உபதலைவரே, சாளுக்கியரது வேவுப்படை இதுபோன்ற சிறு கிராமங்களில் அடையாளம் தெரியாமல் மக்களோடு மக்களாக இருப்பது உண்டு. அத்தகைய படைதான் இக் காரியத்தைச் செய்திருக்க வேண்டும். அதில் எனக்கு வியப்பில்லை. நமக்கு உதவி செய்தவர்கள் யார் என்பதில்தான் வியப்பாக இருக்கிறது'' என்றான் ஐராவதன்.

''நமக்கு வேண்டியவர்களைத் தவிர வேறு யாரும் உதவியிருக்க முடியாது. இது உண்மையாக இருந்தால் அவர்கள் நம்மைத் தேடி வருவார்கள். இப்போதைக்கு நாம் பயணத்தைத் தொடருவோம்'' என்றான் உதயசந்திரன்.

அன்று இரவு ஓய்வெடுக்க முற்பட்டு பழையபடி காட்டுப் பகுதியைத் தேர்ந்தெடுத்து அங்கே சென்றபோது அங்கே ஏற்கெனவே ஒரு கூட்டம் பந்தங்களை நட்டு வைத்துக் கொண்டு உணவு தயாரித்துக் கொண்டிருந்தது.

சத்திரம் தீக்கிரையாகப் போகிறது என்றத் தகவலைக் கொடுத்த மனிதன் உதயசந்திரனைப் பார்த்ததும், ''வாருங்கள் உபத்லைவரே'' என்று வரவேற்றான்.

''நீங்களெல்லாம் யார்?'' என்று கேட்டான் உதயசந்திரன்.

''பல்லவ வீரர்கள்தான்.''

''அப்படியா? எவ்வளவு பேர் இருக்கிறீர்கள்?''

''இருநூறு பேர் இருக்கிறோம்.''

''கிராமத்தில் என்ன நடந்தது?''

''நாங்கள் நேற்று காலை அக்கிராமத்திற்கு வந்தோம். வந்ததுமே வணிகர்களாக வேடம் போட்டுக் கொண்டு கிராமத்தைக் கண்காணித்தோம். அங்கே அப்போதுதான் சாளுக்கியரின் வேவுப்படை ஒன்று வந்து சேர்ந்தது. அதில் ஐம்பது பேர் இருப்பார்கள். அவர்களைக் கண்காணித்தோம். அப்படிக் கண்காணித்தபோதுதான் உங்கள் படைப்பிரிவு அக்கிராமத்திற்கு வரப்போகிறது என்றும் படைப்பிரிவு தங்கும் சத்திரத்தை நள்ளிரவில் திடீரெனக் கொளுத்தி உங்களை யெல்லாம் அழித்துவிட அந்த வேவுப்படை திட்டம் தீட்டியது எங்களுக்குத் தெரிய வந்தது. உங்களை எப்படி காப்பாற்றுவது என்று யோசித்துக் கொண்டிருந்தோம். நீங்களும் உங்கள் படையும் இன்று வந்து சத்திரத்தில் தங்கியதைக் கண்டோம். உங்களுக்குச் செய்தி சொல்லி வெளியேற்றுவதைவிட உங்களை யெல்லாம் வெளியே வருவதற்கு வேறு திட்டம் வகுத்து நள்ளிரவில் சத்திரத்திற்கு முன்னால் நாங்கள் கூட ஏதோ பிரச்சனை செய்வது போல் ஆரவாரம் செய்தோம். நாங்கள் எதிர்பார்த்தபடியே நீங்கள் எல்லோரும் சத்திரத்தை விட்டு வெளியே வந்தீர்கள். வந்த பின் உங்களிடம் செய்தியைச் சொன்னோம். நீங்களும் விவேகமாக நடந்து கொண்டீர்கள். நீங்களெல்லாம் வெளியேறிச் சென்றபின் சாளுக்கிய வேவுப் படையினரை தாக்கி வீழ்த்திவிட்டு குறுக்கு வழியில் இங்கே வந்து சேர்ந்தோம். உங்களை எதிர்பார்த்து உணவு தயாரிக்கச் சொன்னோம். ஒரு சில நிமிடங்களில் உணவு தயாராகிவிடும். எல்லோரும் உண்டுவிட்டு ஓய்வெடுக்கலாம். எல்லோருமாகச் சேர்ந்து நாளை புறப்படலாம்.''

''இதற்கெல்லாம் திட்டம் தீட்டியது யார்? பூரணக் கவசத்துடன் புரவி மீது அமர்ந்திருந்த நபர்தானா?''

''ஆமாம்.''

''எங்கே அவர்?''

''சிறிது நேரத்தில் அவரே வந்து உங்களைச் சந்திப்பார். முதலில் நீங்கள் உணவருந்துங்கள்.''

உணவு அருந்தி முடிந்தபின் அங்கே இருந்த இருநூறு பல்லவ வீரர்களும் உதயசந்திரனுக்கு அறிமுகம் செய்யப் பட்டார்கள். உதயசந்திரன் பல்லவர் படையின் உபதலைவன் என்பதும் அறிவிக்கப்பட்டது.

அதையடுத்து வழக்கப்படி வீரர்கள் ஓய்வெடுக்கலானார்கள்.

உதயசந்திரனுக்கு சேனாதிபதியின் போர்த்திட்டம் பற்றி எதுவும் தெரியவில்லை. அவரும் சொல்லவில்லை. அதோடு தனக்கு முன்னால் சாளுக்கிய நாட்டிற்குச் சென்றிருக்கும் பல்லவ இளவரசன் மகேந்திரனைப் பற்றியோ அவனது படை எண்ணிக்கை பற்றி கூடச் சேனாதிபதி அவனிடம் எதுவும் சொல்லவில்லை. அவர் எப்போது சொல்வார் என்பதை அனுமானிக்கவும் முடியவில்லை. அது விஷயமாக தானாக ஒரு போர்த்திட்டத்தை வகுத்துக் கொள்வது நல்லது என்று தீர்மானித்தான். ஆனால், அது குறித்து யாரிடம் பேசுவது என்பதுதான் அவனுக்கு விளங்கவில்லை.

இந்த நேரத்தில் புதிய படைப்பிரிவுக்கு தலைவனான பூரண கவசமணிந்தவனை உதயசந்திரனிடம் அழைத்து வந்து நிறுத்திய ஒரு வீரன், ''உபதலைவரே, இவர் தான் இதுவரை எங்கள் படை பிரிவிற்குப் பொறுப்பாளராக இருந்தார். இனி நீங்கள்தான் எங்களுக்குப் பொறுப்பு வகிக்க வேண்டும்'' என்றான்.

''இவர் ஏன் பூரண கவசம் அணிந்திருக்கிறார்?'' என்று கேட்டான் உதயசந்திரன்.

''எப்போதுமே இவர் பூரண கவசம்தான் அணிந்திருக்கிறார்'' என்றான் வீரன்.

''அது எதற்காக என்றுதான் கேட்கிறேன்.''

''அதை அவரிடம்தான் கேட்க வேண்டும். ஆனால் அவர் இப்போது பேசமாட்டார்.''

''ஏன்?''

''இன்றைக்கு அவருக்கு மௌனவிரதம்.''

''மௌனவிரதமா? எதிரி திடீரென வந்துவிட்டால் என்ன செய்வார்?''

''நீங்கள் தான் வந்துவிட்டீர்களே?''

''இதோ பார் வீரனே, உங்கள் தலைவன் தான் அர்த்தமில்லாமல் மௌனவிரதம் இருக்கிறான் என்றால் நீயும் ஏன் அர்த்தமில்லாமல் பேசுகிறாய்? நீயும் போ. உன் தலைவரையும்

அழைத்துப்போ. மௌனவிரதம் இருக்கும் மாவீரரிடம் நான் என்ன பேச முடியும்?'' என்று கூறிவிட்டு கண்களை மூடினான்.

சிறிது நேரத்தில் ஏதோ சலசலப்பு கேட்டதும் கண்களைத் திறந்தான்.

அவன் கண்ட காட்சி அவனை வியக்க வைத்தது.

பூரண கவசதாரியாக இருந்தவர் தனது கவசங்களைக் கழற்றிக் கொண்டிருந்தார்.

கவசங்கள் அகல அகல அந்த நபர் ஆணல்ல பெண் என்பது தெரிந்ததும் வியப்புடன் அவளது நடவடிக்கைகளைப் பார்த்தான் உதயசந்திரன்.

அவளோ அவன் கண்களைத் திறந்ததையோ தன்னைப் பார்ப்பதையோ அறியாதவளாய் கவசங்களை ஒவ்வொன்றாகக் கழற்றிவிட்டு தனது ஆடையை நெகிழ்த்துவிட்டு பிறகு சரிசெய்து கொண்டாள். கொண்டைக்குள் அடங்கிக் கிடந்த கூந்தலை விடுதலை செய்து அளைந்தபோது நாசியைத் துளைக்கும் சுகந்தம் வீசியதைக்கண்ட உதயசந்திரன் பெண்களின் கூந்தலுக்கு இயற்கையிலேயே மணம் உண்டு என்று சிவ பெருமான் நக்கீரரிடம் வாதிட்டது உண்மைதான் போலிருக்கிறது என்று நினைத்தான். அப்பெண் முற்றிலுமாகப் பெண்ணாக மாறிச் சரி செய்து கொண்டு திரும்பியபோது உதயசந்திரன் தன்னைப் பார்த்துக் கொண்டிருந்ததை கவனித்துவிட்டு ''எப்போதிலிருந்து நீங்கள் பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள்?'' என்று கேட்டாள்.

''கவசங்களை அகற்றும் போதிலிருந்து பார்த்தேன்'' என்றான் அவன்.

''முதலிலிருந்தே பார்த்துவிட்டீர்களா? இதுதான் பண்பா? கண் விழித்துவிட்டதைச் சொல்லக் கூடாதா? நீங்கள் உறங்கிக் கொண்டிருக்கிறீர்கள் என்றல்லவா நினைத்தேன் நான்?'' என்று பொரிந்தாள் அவள்.

அவன் லேசாக சிரித்தான்.

''எதற்காக இந்தச் சிரிப்பு?''

''கவசங்களை அகற்றும்போது சுற்றுப்புரங்களை நன்றாக கவனித்துவிட்டு செயல்பட வேண்டியது உன் கடமை. அதை உணராமல் என் மீது கோபப்படுகிறாய். அது போகட்டும். நீ கவசங்களை அகற்றியதால் எதைப் பார்த்துவிட்டேன் நான்? அல்லது நீ தான் எதைக் காட்டிவிட்டாய்? நீ பெண் என்பது

தெரிந்தது அவ்வளவு தானே?'' என்று சொன்ன உதயசந்திரன் ''நீ மௌன விரதம் இருப்பதாகச் சொன்னானே உன்னை அழைத்து வந்தவன்? விரதம் எப்போது முடிந்தது?'' என்று கேட்டான்.

''நான் சொன்னதை அவன் பேசினான். அவ்வளவுதான். விரதம் என்றெல்லாம் ஒன்றுமில்லை.''

''எதற்கு இந்தப் பொய்யெல்லாம்?''

''உபதலைவர் மிகவும் கோபக்காரர் என்றெல்லாம் நிறைய கேள்விப்பட்டேன். அதையெல்லாம் கொஞ்சம் சோதித்துப் பார்க்க ஆசைப்பட்டேன்.''

''என்னைப் பற்றி உனக்குச் சொன்னது யார்?''

''சேனாதிபதி.''

''யார்? நமது சேனாதிபதியா?''

''பிறகு? சாளுக்கிய சேனாதிபதியா சொல்வார்?''

''உன் பெயர் என்ன?''

''சந்திரலேகா''

''உன் வயதென்ன...? ச்சீ... இல்லை. உன்னை எதற்காக... இல்லை... நீ எதற்காக இங்கே வந்தாய்?''

''உங்கள் துணையோடு காட்டில் தவம் செய்ய'' என்று சொன்ன சந்திரலேகா, ''என்னை அனுப்பியது சேனாதிபதி. என் பதவி உங்களுக்கெல்லாம் வழிகாட்டுவது'' என்றாள்.

''நீயா? வழிகாட்டியா?''

''ஏன்? நான் வழிகாட்டக் கூடாதா?''

''நீ பெண்.''

''பெண்ணாக இருந்தால் என்ன? அவளால் வழிகாட்ட முடியாதா?''

''இது காட்டு வழி...''

''எதுவானால் என்ன உபதலைவரே? மடியில் கனமில்லை என்றால் வழியைப் பற்றிய கவலையில்லை. தெரியாதா உங்களுக்கு?''

''கிராமத்துச் சத்திரத்தில் எங்களையெல்லாம் தீக்கிரை யாக்காமல் காப்பாற்றியது உன் திட்டப்படிதானா?''

''ஆமாம்.''

''மிக்க நன்றி.''

''நன்றி இருக்கட்டும். என் மீது நம்பிக்கை இருக்க வேண்டும். அது இருக்கிறதா உங்களிடம்?''

''நம்பிக்கையில்தான் வாழ்க்கை இருக்கிறது.''

''நான் உங்களிடம் வேதாந்தம் கேட்கவில்லை. என்னிடம் உங்களுக்கு நம்பிக்கை இருக்கிறதா என்றுதான் கேட்டேன்.''

''அது நீ இனிமேல் காட்டும் வழியில் இருக்கிறது.''

''மிக்க மகிழ்ச்சி'' என்று கூறிவிட்டு அங்கிருந்து சென்றாள் சந்திரலேகா.

மறுநாள் வழக்கப்படி பயணம் தொடர்ந்தது.

சந்திரலேகா பயண வழியைக் காட்டியபடிச் சென்றாள். உதயசந்திரனிடம் அதிகமாகப் பேசவில்லை.

ஒருவாரப் பயணம் மேலும் நடந்தது.

அந்த ஒரு வாரப் பயணத்தில் பல இடங்களில் பல்லவப் படைப் பிரிவைச் சேர்ந்த பலர் உதயசந்திரனோடு வந்து சேர்ந்தார்கள்.

ஒரு வாரகால முடிவில் அவனது படைப்பிரிவின் எண்ணிக்கை இரண்டாயிரத்தை தாண்டியது.

''உபதலைவரே, அடுத்து நாம் செல்லப்போவது சாளுக்கியரின் முக்கிய ஊர்களில் ஒன்றான கொல்லாபுரி. அங்கே கணிசமான சாளுக்கிய வீரர்கள் இருப்பதற்கு வாய்ப்புண்டு. கொல்லாபுரியை எப்படி கடக்க திட்டமிட்டிருக்கிறீர்கள்?'' என்று கேட்டாள் சந்திரலேகா.

அவளது குரலில் உறுதியிருந்தது.

★★★



29 கொல்லாபுரி

சந்திரலேகா கேட்ட கேள்வியை காதில் வாங்கிக் கொண்ட உதயசந்திரன்—"என்னோடு சேர்ந்து கொண்ட படைப்பிரிவுகளுக்குரிய தலைவர்கள் இருக்கிறார்களா? அவர்களுக்கு சாளுக்கிய நாட்டிற்குச் சென்ற அனுபவம் உண்டா?" என்று கேட்டான்.

"சாளுக்கிய நாட்டிற்கு ஏற்கெனவே சென்று வந்த அனுபவம் இருப்பவர்கள்தான் படைப்பிரிவுகளுக்குத் தலைமை வகிக்கிறார்கள். உங்கள் பிரிவுக்குத் தலைமை வகித்த சேனாதிபதி அகன்றுவிட்டதால்தான் வழிகாட்டியாக நான் அனுப்பப் பட்டிருக்கிறேன். அந்தத் தலைவர்களை அழைக்கட்டுமா?" என்று கேட்டாள் சந்திரலேகா,

"வேண்டாம். நீ சாளுக்கிய நாட்டுப் பகுதிகளுக்கு பரிச்சியம் உள்ளவள் தானே? என் சந்தேகங்களை நீயே தீர்த்துவை" என்று சொன்ன உதயசந்திரன் "சாளுக்கியர் ஊரான கொல்லாபுரியில் சாளுக்கிய படை எண்ணிக்கை எவ்வளவு இருக்கும்?" என்று கேட்டான்.

"சாளுக்கிய நாட்டிற்குச் செல்லும் வழியில் உள்ள ஊர்கள் எல்லாமே கோட்டைகள் அல்ல. சுவர்கள் கூட இல்லாத திறந்த புத்தகங்களைப் போன்ற ஊர்கள் தான் அவை. படையெடுத்து வரும் எதிரிகள் இந்த ஊர்களில் போர் எதையும் செய்வதில்லை. தேவைப்பட்டால் ஊர்களைச் சூறையாடுவார்கள். இதுவரை சாளுக்கிய தலைநகரை நோக்கி படையெடுத்தது பல்லவ மன்னர் நரசிம்மவர்மர் மட்டும்தான். அவரது படை வாதாபியைத்தான் சூறையாடியதே தவிர இடைப்பட்ட ஊர்களில் கொள்ளைகளில் ஈடுபடவில்லை. அந்தப் படையும் பெரும்படையாக வந்ததால் கொல்லாபுரி முதலிய ஊர்கள் படைக்கு வழிவிட்டனவே தவிர தடை செய்யவோ போரிடவோ இல்லை. எனவே நகர பாதுகாப்பு படை என்ற பெயரில் ஆயிரம் வீரர்கள் கொல்லா புரியில் இருக்கலாம். எண்ணிக்கை அதிகமாகலாமே தவிர குறைய வாய்ப்பில்லை" என்றாள் சந்திரலேகா.

''நீ சொல்வதிலிருந்து கொல்லாபுரியில் நமக்குப் பிரச்சினை எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை. இந்த ஊரை நாம் கடந்து செல்லலாம்'' என்றான் உதயசந்திரன்.

''கொல்லாபுரியின் நிலைமையைப் பற்றிச் சரியாகப் புரிந்து கொள்ளாமல் ஊருக்குள் போவது நல்லதல்ல. படைவீரர்களோடு மக்களும் சேர்ந்து நம்மை அழிக்க முற்பட்டால் நம்மில் எவரும் தப்ப முடியாது.''

''மக்கள் எதற்காக நம்மைத் தாக்க வேண்டும்?''

''மக்கள் போர்ப்படையில் இல்லாமல் இருக்கலாம். ஆனால் பல்லவப் படை வீரர்களுக்கு அவர்கள் எதிரிகள் தானே? தங்கள் தலைநகரைத் தாக்குவதற்குச் செல்லும் எதிரிகளை அழிப்பதற்கு அவர்கள் விரும்பலாம் அல்லவா?''

''பல்லவ இளவரசரின் காலாட்படை இந்த ஊரின் வழியாகத்தானே போயிருக்கும்? அதை ஏன் ஊர் மக்கள் தாக்கவில்லை?''

''பல்லவ இளவரசரின் காலாட்படையின் எண்ணிக்கை முப்பதாயிரம் என்று கேள்வி. அப்படிப்பட்ட பெரிய படையை எதிர்க்க யாரும் துணிய மாட்டார்கள். தங்களை எதுவும் செய்யாமல் போதும் என்ற எண்ணம்தான் அவர்களுக்கு இருந்திருக்கும். நம்மிடம் இருக்கும் படையின் எண்ணிக்கை வெறும் இரண்டாயிரம்தான். இதை ஒரு பொருட்டாகவே கருதமாட்டார்கள். தாக்கி அழிக்க விரும்புவார்கள்.''

''எனக்கென்னவோ அப்படித் தோன்றவில்லை பெண்ணே'' என்று சொன்ன உதயசந்திரன், ''நாம் சாளுக்கியர்களாகவே நம்மை மாற்றிக் கொண்டு கொல்லாபுரி மக்களோடு கலந்து ஊரைக் கடந்து சென்றால் என்ன?'' என்று கேட்டான்.

''உங்கள் விருப்பம்'' என்றாள் சந்திரலேகா.

பிறகு உதயசந்திரனே பேசமுற்பட்டு ''ஏன் சந்திரலேகா, நமது படைப்பிரிவுகள் சிறு சிறு அணியாகப் பிரிக்கப்பட்டதற்கு காரணமே அவற்றைப் பற்றி எதிரிகள் தெரிந்து கொள்ளக் கூடாது என்பதும், வழக்கமான வழிகளைத் தவிர்த்துவிட்டு காட்டுவழி மலைவழி என்று முரட்டு வழி மூலம் முன்னேற வேண்டும் என்பதுதானே? அப்படியிருக்கும்போது கொல்லாபுரியின் உள்ளே சென்று கடக்க வேண்டிய அவசியமென்ன? இந்த ஊரைத் தவிர்த்துவிட்டு மாற்றுவழியில் போக முடியாதா?'' என்று கேட்டான்.

''ஒரே ஒரு மாற்றுவழிதான் இருக்கிறது. பெரியதோர் மலையைச் சுற்றிக் கொண்டு செல்ல வேண்டும். அதைச் சுற்றிக் கொண்டு மேற்கே உள்ள காட்டுப் பாதைக்கு வந்தால் கொல்லாபுரியைக் கடந்துவிடலாம். ஆனால் அந்தப்பாதைக்கு வர ஒருவார காலம் ஆகும். அதோடு அந்தச் சுற்று வழியில் மலைப்பாம்புகள் அதிகம். அவற்றிலிருந்து வீரர்கள் தப்புவது கஷ்டம். அதுமட்டுமின்றி அக்காட்டுப் பகுதியில் பேய் நடமாட்டம் அதிகம். வினோதமான மிருகங்கள்கூட இருப்பதாகச் சொல்வதுண்டு. அந்த மார்க்கமாகச் சென்றவர்களும் இல்லை. சென்றவர்கள் மீண்டதுமில்லை'' என்றாள் சந்திரலேகா.

''நீ சொல்வது நம்பமுடியாததாக இருக்கிறது பெண்ணே. யாரோ அவ்வாறு பயமுறுத்தி வைத்திருக்கிறார்கள் என்பது என் எண்ணம். நாங்கள் இதுவரை வந்த பாதையொன்றும் ராஜ பாட்டையல்ல. காடுகள், மலைகள், புதர்கள் என்று கடுமையான வழிதான் என்பது வழிகாட்டியான உனக்குத் தெரிந்திருக்கும். அதுபோன்றதொரு வழிதான் இப்போது நீ சொல்வதும். வீண் வதந்திகளை நம்பாமல் அந்த வழியிலேயே நாம் செல்லலாம்.''

''உபதலைவரே, நான் வழிகாட்டியாக பல ஆண்டுகள் இருந்ததாலும் பல வழிகளைப் பற்றி தெரிந்திருப்பதாலும் தான் எங்கெங்கே என்னென்ன ஆபத்துகள் உண்டு என்பதை தெரிந்து வைத்திருக்கிறேன். அதனால்தான் அந்த வழியை நான் தேர்ந்தெடுக்கவில்லை. இப்படையின் தலைவர்கள் கூட இந்த வழியைப் பற்றி தெரிந்தவர்களாகவே இருப்பார்கள். ஆகவே அவ்வழியாகச் செல்வதற்கு அவர்கள் ஒப்புக் கொள்ள மாட்டார்கள். வேண்டுமானால் அவர்களை அழைத்து கேட்டுப் பார்ப்போம்.''

''வேண்டியதில்லை. இங்கிருந்து கொல்லாபுரி எவ்வளவு தூரத்தில் இருக்கிறது?''

''ஒரு கல் தொலைவு இருக்கும்.''

''நல்லது. நானும் ஐராவதனும் சென்று கொல்லாபுரியின் நிலைமையை அறிந்து கொண்டு வருகிறோம். அதற்குப் பிறகு முடிவு செய்யலாம்'' என்று சொல்லிவிட்டு ஐராவதனுடன் கொல்லாபுரிக்குப் புறப்பட்டான் உதயசந்திரன்.

இருவரும் வணிகர்களைப் போலவே வேடமணிந்து சென்றார்கள்.

கொல்லாபுரி கோட்டை நகரமாக இல்லையென்றாலும் கணிசமான பரப்பளவு கொண்டதாகவே இருந்தது. இதர

ஊர்களிலிருந்தும் கிராமங்களிலிருந்தும் தனித்துக் கிடந்ததால் மக்கள் தொகை அவ்வளவாக இல்லாமல் குறைந்தே இருந்தது.

ஐராவதன் சாளுக்கிய நாட்டவனாதலால் அவனையே பல இடங்களில் பேச வைத்தான் உதயசந்திரன்.

சில நாட்களுக்கு முன்பு பல்லவ இளவரசர் தலைமையில் பெரும்படையொன்று கொல்லாபுரி வழியாகச் சென்றதாகவும் மக்களைத் துன்புறுத்தாமல் அமைதியாகவே சென்றதாகவும் தெரிவித்த மக்கள் பல்லவ இளவரசரைப் பற்றி நல்லவிதமாகவே சொல்லிக் கொண்டார்கள்.

கொல்லாபுரியின் படைத்தலைவன் மிகவும் நல்லவன் என்றும் வீண் விஷயங்களில் தலையிடாதவன் என்றும் மக்களின் மூலமாகவே தெரிந்து கொண்ட உதயசந்திரன் அவனை நேரில் சந்திக்க விரும்பினான்.

கொல்லாபுரியின் படைத்தலைவனும் உதயசந்திரனை நல்லமுறையில் வரவேற்றுப் பேசினான்.

உதயசந்திரன் தனது படைகளைப் பற்றிச் சொல்லி அவற்றை கொல்லாபுரி மூலம் கடந்து செல்ல அனுமதிக்கும்படி இயல்பாகவே கேட்டான்.

சாளுக்கிய படைத்தலைவன் லேசாகச் சிரித்துவிட்டு, ''உங்கள் படைப்பிரிவை அனுமதிப்பதால் பெரிய பாதகம் எதுவும் வந்துவிடப் போவதில்லை. ஏனென்றால் ஏற்கெனவே பல்லவரின் பெரும்படை ஒன்றைச் சில நாட்களுக்கு முன்னால் நான் தான் அனுமதித்தேன். அதோடு ஒப்பிடும்போது உங்கள் படைப்பிரிவு ஒரு தூசு தான். ஆனால் இந்தமுறை அதிர்ஷ்டம் உங்கள் பக்கம் இல்லை'' என்றான்.

''அதிர்ஷ்டமா?'' என்று உண்மையிலேயே புரியாமல் கேட்டான் உதயசந்திரன்.

''ஆம். நீங்கள் நேற்று வந்திருந்தால் நான் அனுமதியளித்திருப்பேன். இன்றைக்கு அது முடியாது.''

''ஒரு நாள் பொழுதில் அப்படி என்ன ஆகிவிட்டது?''

''மாற்றம் நிகழ்வதற்கு ஒரு நாள் வேண்டியதில்லை. ஒரு நிமிடம் போதும்.''

''என்ன மாற்றம் ஏற்பட்டுவிட்டது இப்போது?''

''சாளுக்கிய தளபதியிடமிருந்து இன்று காலையில் தான் எனக்கு ஓலை வந்தது.''

''என்ன ஓலை?''

''பல்லவ இளவரசரின் படைகளுக்குப் பிறகு எதிரிப்படை எதையும் அனுமதிக்க வேண்டாம் என்றும் அழித்துவிடும் படியும் உத்தரவிட்டிருக்கிறார் தளபதி.''

''அவரது உத்தரவுக்கும் நான் அனுமதி கேட்பதற்கும் என்ன சம்பந்தம்?''

உதயசந்திரனின் இக்கேள்வியால் சற்று குழம்பினாலும் சுதாரித்துக் கொண்ட சாளுக்கிய படைத்தலைவன், ''எதிரிப் படையை அனுமதிக்க எனக்கு உத்தரவு இல்லை'' என்றான்.

''எதிரிப்படையா? யார் எதிரிப்படை?'' என்று கேட்டான் உதயசந்திரன்.

''நீங்கள் எதிரிப்படையில்லாமல் வேறு யார்?''

''நாங்கள் எதிரிகள் என்று யார் சொன்னது? நான் சொன்னேனா?''

''நீங்கள் பல்லவர் படை பிரிவுதானே?''

''யார் சொன்னது? படைத்தலைவரே, உங்களுக்கு மூளை கலங்கிவிட்டதா? நீங்களோ பல்லவரின் எதிரி. அப்படி யிருக்கும்போது பல்லவர் படை உங்களிடமா வந்து அனுமதி கேட்கும்?''

சாளுக்கிய படைத்தலைவன் குழம்பினான்.

''இதென்ன உளறல்? பல்லவர் இல்லை என்றால் நீங்கள் யார்?'' என்று கேட்டான் குழப்பத்துடன்.

''நாங்கள் யாரா? என்னாயிற்று உங்களுக்கு? நம்மவர்களைப் போய் யாரென்று கேட்கிறீர்களே! வந்திருப்பது சாளுக்கியர் தூசிப் படை. என்ன ஐராவதா, ஏன் மௌனமாக இருக்கிறாய்? படைத்தலைவரிடம் சொல்ல வேண்டியதுதானே?''

''ஆமாம் படைத்தலைவரே, நாங்கள் தூசிப்படைதான்.''

''தூசிப்படையா? சாளுக்கிய தூசிப்படையா? அப்படி யென்றால் என் அனுமதி எதற்கு?''

இங்கே குறுக்கிட்ட உதயசந்திரன் ''சம்பிரதாயம் என்று ஒன்றிருக்கிறது. அதை நாம் மதிக்க வேண்டுமே தவிர மீறக் கூடாது'' என்றான்.

''சம்பிரதாயமா? என்ன சொல்கிறீர்கள்?''

''தூசிப்படையாக இருந்தாலும் ஊருக்குள் ஊடுருவும் போது உரியவரிடம் அனுமதி பெறுவதுதானே சம்பிரதாயம்? மரியாதை?

அதனால்தான் படையை அரைக்காத தூரத்தில் நிறுத்திவிட்டு நாங்கள் மட்டும் வந்தோம். மரியாதை நிமித்தமாக'' என்றான் உதயசந்திரன்.

அவனது பேச்சில் சாளுக்கிய படைத்தலைவனால் குறை கண்டுபிடிக்க முடியவில்லை.

''எல்லாம் சரி. உங்களை சாளுக்கிய தூசிப்படை என்று எப்படி நம்புவது?'' என்று கேட்டான் சந்தேகத்துடன்.

உதயசந்திரன் ஐராவதனைப் பார்த்து, ''என்ன துரதிஷ்டம் பார்த்தாயா ஐராவதா! நம்மவர்களுக்கே நம்மை அடையாளம் தெரியவில்லை. உன்னிடம் ஒற்றர்களுக்கான முத்திரை மோதிரம் இருக்குமல்லவா? அதைக் காட்டு படைத்தலைவருக்கு'' என்றான்.

அவன் எதேச்சையாகத்தான் சொன்னான். ஆனால் ஐராவதனிடம் உண்மையாகவே சாளுக்கிய ஒற்றனுக்குரிய பதக்கம் இருந்ததால் அதை எடுத்துக் காட்டினான் அவன்.

சாளுக்கிய படைத்தலைவனுக்கு ஓரளவு திருப்திதான் ஏற்பட்டது.

அதை கவனித்தான் உதயசந்திரன். சாளுக்கிய படைத் தலைவனின் சந்தேகத்தை வளரவிடுவது நல்லதல்ல என்பதை உணர்ந்தான்.

அதுவரை நின்று கொண்டே பேசிக் கொண்டிருந்த உதயசந்திரன் அங்கிருந்த ஆசனம் ஒன்றில் அமர்ந்து கொண்டு சாளுக்கிய படைத்தலைவனைப் பார்த்து, ''உன் பெயரென்ன?'' என்று மரியாதையைக் கைவிட்டு கேட்டான்.

இதை சாளுக்கிய படைத்தலைவன் எதிர்பார்க்கவில்லை. ''என் பெயர் எதற்கு?'' என்று கேட்டான் குழப்பத்துடன்.

''புகார் சொல்வதற்கு பெயர் வேண்டாமா?'' என்று முரட்டுக் குரலில் கேட்ட உதயசந்திரன், ''என்னை என்ன வென்று நினைத்துவிட்டாய்? உன் தயவை எதிர்பார்க்கும் பணியாளன் என்று நினைத்துவிட்டாயா? முட்டாள். இதோ இருக்கிறானே ஐராவதன் - இவன் தான் தூசிப்படைத் தலைவன். இவனுக்கு வேண்டுமானால் உன் அனுமதி தேவையாக இருக்கலாம். எனக்கு அது கடுகளவு கூடத் தேவையில்லை. நான் புகார் செய்தால் சாளுக்கிய சத்யாச்ரியர் உன்னைப் பதவி நீக்கம் செய்வார். துங்கபத்திரை ஆற்றங்கரை வரை என் சொல்தான் கட்டளை. இது கூடத் தெரியாமல் எப்படி நீ இங்கே தலைவனாக இருக்கிறாய்? சகோதர மரியாதைக்காக உன்னை வந்து சந்தித்தால் நீ என்னை விட

பெரியவனாகிவிட்டாயா?'' என்று காட்டமாகப் பேசிவிட்டு ஐராவதனைப் பார்த்து ''ஐராவதா, நீ சென்று தூசிப்படைகளை அழைத்து வா. சாளுக்கிய மன்னரை வாழ்த்தும் ஒலி விண்ணதிர வேண்டும். இப்படைத்தலைவனின் காதுகள் கிழிய வேண்டும்! வீரர்களை முழங்கச் சொல். இவன் என்ன செய்துவிடுகிறான் என்று பார்த்துவிடுகிறேன். ஸ்ரீராம புண்ய வல்லபருக்கு இழுக்கு வருவதை என்னால் தாங்க முடியாது'' என்றான்.

இதைக் கேட்டதும் அதிர்ந்து போன சாளுக்கியப் படைத்தலைவன், ''என்ன? சாளுக்கிய பேரமைச்சர் ஸ்ரீராம புண்ணிய வல்லபரா? அவருக்கு இழுக்கா?'' என்று பதட்டத்துடன் கேட்டான்.

அவனது பதட்டத்தைக் கவனித்த உதயசந்திரன், ''நீ என்னைச் சந்தேகப்படுவதும் தேவையற்ற கேள்விகளைக் கேட்பதும் அந்த மகா புருஷருக்குத்தான் இழுக்கை உண்டாக்கக் கூடியது. அவரிடம்தான் உன்னைப் பற்றிய புகாரை வைக்கப் போகிறேன். அவரது அதிகாரம் பற்றியும் ஆங்காரத்தைப் பற்றியும் நான் சொல்ல வேண்டியதில்லை'' என்றான்.

இதற்குப் பிறகு சாளுக்கிய படைத்தலைவனுக்கு சந்தேகம் அறவே நீங்கியது.

அதையடுத்து ஐராவதன் சென்று பல்லவப் படைகளை அழைத்து வந்தான்.

படை வீரர்களும் சாளுக்கிய மன்னனை வாழ்த்தியபடி கொல்லாபுரியைக் கடந்தன.

உதயசந்திரனும் படைகளோடு சேர்ந்து கொண்டான்.

சாளுக்கிய படைத்தலைவனுக்கு எல்லாமே அதிசயமாகத் தெரிந்தது.

ஆனால் அதைப் பற்றிய கவலையில்லாமல் பல்லவர் படை கொல்லாபுரியைக் கடந்து பலகாத தூரத்திற்குச் சென்றது.

ஐராவதன் சிரித்தான்.

''எதற்காக சிரிக்கிறாய்?'' என்று கேட்டான் உதயசந்திரன்.

''என்னிடம் அவ்வப்போது கேட்ட தகவல்களை வைத்துக் கொண்டு சாளுக்கிய படைத்தலைவரை இப்படி கதிகலங்க வைப்பீர்கள் என்று நான் எதிர்பார்க்கவில்லை'' என்றான் ஐராவதன்.

''இது பெருமைப்படக்கூடிய விஷயமல்ல ஐராவதா. வெட்கப்பட வேண்டிய விஷயம். சுத்த வீரனான சாளுக்கியப்

படைத்தலைவனை ஏமாற்றிவிட்டு வந்திருக்கிறோம். அதே சமயம் வேறு வழியும் இல்லை. சாளுக்கிய தலைநகரத்திற்குப் போகும்வரை வீரர்களை பத்திரமாகக் கொண்டு போக வேண்டும். மாற்று வழியில் பயணம் செய்ய வீரர்கள் தயாராக இல்லை. என்ன செய்ய முடியும்? கொல்லாபுரியைப் பற்றி அறிந்து கொள்ள நாம் வந்தோம். இங்கே உள்ளப் படைத்தலைவனை நல்லவன் என்று மக்கள் சொன்னார்கள். ஆகவே அவனுக்குத் தெரிந்து அவனது அனுமதியோடு வீரர்களை அழைத்துச் செல்லலாம் என்றுதான் அவனைச் சந்தித்தேன். ஆனால் சாளுக்கிய சேனாதிபதியின் ஓலை எதிர்பாராமல் வந்துவிட்டது. நமக்குக் காப்பாற்றிக் கொள்ள வேறு வழி இல்லாமல் போனதால்தான் பொய்யும் புரட்டும் பேச வேண்டியதாயிற்று. அதோடு இதில் உன் ஒத்துழைப்பு மட்டும் இல்லாமல் போயிருந்தால் என்ன ஆகியிருக்குமோ? சொல்ல முடியாது.'' என்றான் உதயசந்திரன்.

''நான் ஒத்துழைக்காமல் இருந்திருந்தால் நீங்கள் வேறுவழியைக் கண்டுபிடித்திருப்பீர்கள். எப்படியானாலும் பதட்டமே இல்லாமல் நீங்கள் விஷயத்தை புரட்டிப் போட்டு படைத்தலைவன் பதட்டத்தில் ஆழ்த்தியதை என்னால் பாராட்டாமல் இருக்க முடியாது'' என்றான் ஐராவதன்.

பலகாததூரம் கடந்த பிறகு இரவு நேரம் மலர்ந்தபோது படைகளுக்கு ஓய்வு கொடுத்தான் உதயசந்திரன்.

ஓய்வெடுத்த இடம் வனாந்திரம்தான்.

அதில் தனக்கென்று மரமொன்றைத் தேர்ந்தெடுத்து அதன் கீழே காலை நீட்டிப் படுத்தான் உதயசந்திரன்.

அவனுக்காகக் காத்திருந்ததுபோல் மரக்கிளைகள் குலுங்கி அவன் மீது மலர்களைக் கொட்டின.

''இங்கே பௌர்ணமி இருந்தால் எப்படி இருக்கும்?'' என்று கேட்டுக் கொண்டு கண்களை மூடினான்.

அவனது மார்பின் மீது ஏதோ ஒன்ற சாய்வதுபோலத் தோன்றியது.

பௌர்ணமிதான் வந்து விட்டாளோ என்று நினைத்து ''பௌர்ணமி'' என்று முணுமுணுத்தான் உதயசந்திரன்.

''பௌர்ணமியல்ல. நான் சந்திரலேகா'' என்றது அவன் மீது சாய்ந்த உருவம்.

★★★



30

மோகம்

சந்திரலேகா என்ற பெயரைக் கேட்டதுமே எழுந்து கொள்ள முயற்சித்தான் உதயசந்திரன்.

''ஏன் எழுந்து கொள்கிறீர்கள்? என்ன அவசரம்?'' என்று கேட்டபடி சந்திரலேகா மேலும் சாய்ந்தபோது அவளது முன்னெழில்கள் முகத்தில் மோதியதால் திணறிப் போனான் உதயசந்திரன். அவளது உடலிலிருந்து எழுந்த அபரிமிதமான சுகந்தம் அவனை மூச்சுத் திணற வைத்தது.

அதேசமயம் அவனது முகத்தில் தனது முன்னெழில்கள் மோதிய அதேகணத்தில் உணர்ச்சி கொந்தளிப்புக்கு ஆளான சந்திரலேகா பிடிப்பை இழந்ததால் அவன் மீதே விழுந்தாள்.

உதயசந்திரனின் கைகள் தன்மீது விழுந்த பூவுடலை அணைக்கத் துடித்தன.

''என்னை மறந்து விடாதீர்கள்'' - என்று பெளர்ணமியின் குரல் உள்ளுக்குள் ஒலித்ததால் அணைக்கத் துடித்த அவனது கைகள் அவளைப் புரட்டித் தள்ளின.

அவனது கைகள் தன்னை அள்ளிக் கொள்ள எழுந்ததை கவனித்த அவள் ஆனந்தக் கதவுகள் திறப்பதாக எண்ணித் திளைத்தாள். ஆனால் அவனது கைகளோ அப்படி நடந்து கொள்ளாமல் திடீரென தன் உடலைப் புரட்டிப் போட்டதைக் கண்டதும் பெரும் ஏமாற்றமாக இருந்தது அவளுக்கு. கண் முன்னால் வந்து நின்ற சொர்க்கம், கண நேரத்தில் மறைந்து போனதை அவளால் நம்ப முடியவில்லை.

ஏன் தன்னை உதறினான் என்பது அவளுக்கு விளங்க வில்லை.

கண நேரத்திற்குள் மனம் மாறி இப்படி உதறிவிடக் கூடியவர்கள் கூட உண்டா என்று கேட்டுக் கொண்டாள் அவள்.

அந்த நிமிஷத்தில் உதயசந்திரன் அவளுக்கு ஆச்சரிய மானவனாகத் தோன்றினான்.

தன்னை உதறி எழுந்த கணத்திலேயே எழுந்து சென்று விட்டாலும் அவன் தன் மீது பதிந்திருப்பதாகவே பிரமையாக இருந்தது அவளுக்கு.

பிரமை உடனடியாக விலகியபோது அவன் மீது ஏக்கமும் பொறாமையும் கொண்டாள் அவள்.

'இவனல்லவா ஆண்? என்னைப் போன்றவளை உதறி விட்டுப் போகும் இவனல்லவா காளை? காமத்தளை பிணைக்கவிருந்த நிமிடத்தில் அதை விலக்கக் கூடிய உறுதி கொண்ட இவனல்லவா மனிதன்?' என்று அவனைப் பல கோணங்களில் எண்ணி எண்ணி மாய்ந்து போனாள் சந்திரலேகா.

கொல்லாபுரியில் அவனது அறிவு வல்லமையைப் பற்றி ஐராவதன் விவரித்தபோது அவளுக்கு உதயசந்திரனின் மீது ஏதோ ஒன்று உருவாகி நிமிடத்திற்கு நிமிடம் பெரிதாகி அவளையே விழுங்கவல்ல உணர்ச்சியாக வளர்ந்து நின்றது.

அவனோ ஆரம்பத்திலிருந்து உபதலைவனாகத்தான் நடந்து கொண்டானேதவிர அழகியொருத்தியின் முன்னால் ஒழுகி நிற்கும் ஆடவனாக நடந்து கொள்ளவில்லை.

தன்னைக் கண்டாலே வாய்ப்பேச்சுக்கு வாய்ப்பு கிடைக்குமா என்று எந்த ஆடவனும் ஏங்கக்கூடிய நிலையில் உதயசந்திரன் மட்டும் பேசக் கிடைத்த வாய்ப்பை கடமைக்காக பயன்படுத்தியதை உணர்ந்த அவள் அவன் சாதாரணமானவன் அல்ல என்பதை உணர்ந்தாள்.

தன்னை விரும்பும் - தனக்காக ஏங்கும் ஆடவனை விட தன்னை உதாசீனம் செய்யும் ஆடவனிடம் தான் பெண்களுக்கு அதிக மோகம் உண்டாகிறது.

அப்படியொரு நிலைதான் சந்திரலேகாவுக்கு உண்டாயிற்று.

மோகம் என்பது வேகமாக வளரக்கூடியது. அது அனுபவத்தில்தான் தீருமே தவிர ஆயிரமாயிரம் வார்த்தைகளால் தீராது. தேயாது. தீர்க்கப்படாதவரை அது வளர்ந்து கொண்டே போவதுதான் இயல்பு.

மூன்று ஆண்டுகளுக்கு முன்னால் வழிகாட்டியாக நியமனமாகி நாடு நகரங்களையெல்லாம் தனியாகவும் கூட்டாகவும் சுற்றித் திரிந்தபோது ஏறக்குறைய அவள் ஆணாகவே தன் இயல்புகளால் மாறிவிட்டிருந்தாள். உடல் கூறுகள் கூட ஆண்களைப் போலவே கெட்டிப்பட்டுக் கிடந்தன.

ஆனாலும் கூட அங்கங்கள் அவள் அணங்கு என்பதையே ஆடவர்களுக்கு உணர்த்தியதால் பலரும் அவளை உரசிப் பார்க்கவும் அவளோடு உருண்டு கிடக்கவும் ஆர்வம் கொண்டார்கள்.

எவ்வளவுக்கெவ்வளவு ஆடவர்கள் தனக்காக ஏங்கிச் சுற்றிச் சுற்றி வந்தார்களோ அவ்வளவுக்கவ்வளவு வெறுப்புதான் அவர்கள் மீது வந்தது சந்திரலேகாவுக்கு.

'இவர்களுக்கு வேறு வேலை இல்லையா? வேறு பெண் தான் கிடைக்கவில்லையா?' என்று அவர்கள் மீது அலுத்துக் கொண்டாள் அவள்.

ஆடவர் என்ற வார்த்தைக்கு அலுப்பு - அருவருப்பு என்றெல்லாம் அர்த்தம் கொண்டு அவர்களை அடித்துவிரட்டாத குறையாக விரட்டியடித்தாள்.

இந்த நிலையில் தான் சேனாதிபதி பகதத்தர் அவளை உதயசந்திரனின் படைப்பிரிவுக்கு வழிகாட்டியாக அனுப்பினார்.

அவளுக்கு அப்போது அவரது உத்தரவு சாதாரணமாகத்தான் இருந்தது.

ஆனால் சேனாதிபதி அவளிடம், ''நீ வெறும் வழி காட்டியாக நடந்து கொண்டு பயனில்லை. உதயசந்திரனின் புதிய வாழ்க்கையின் வழிகாட்டியாகவும் இருக்க வேண்டும்.'' என்று கூறியபோது அவளுக்கு ஏதோ அசாதாரணம் இருப்பதுபோல் தோன்றியது.

எனவே, ''யார் அந்த உதயசந்திரன்?'' என்று கேட்டாள் ஆவலுடன்.

''என் உபதலைவன்'' என்று மட்டுமே சொன்னார் சேனாதிபதி.

அவளுக்கு அந்த பதிலில் திருப்தியில்லை.

அதோடு உதயசந்திரன் உபதலைவனாக இருந்தாலும் ஆடவன் தானே என்று எண்ணி வழக்கமான வெறுப்புடனேயே இருந்தாள்.

உதயசந்திரன் சேனாதிபதிக்கு உபதலைவன் என்றால் சேனாதிபதி அளவிற்கு இருப்பான் என்பது அவளது அனுமானமாக இருந்தது.

நேரில் பார்த்தபோது நேர்மாறாக இருந்தான் உதயசந்திரன். உதயசந்திரனைப் போலவே இளவழகு முகமும் உகந்த உடற்கட்டும் கொண்டவனாய் மன்மதனைப் போல் காட்சியளித்த

அவனைக் கண்டபோது சந்திரலேகா பெண்ணானாள். மயங்கியது அவளுள்ளம்.

அதேசமயம் அவள் அதுவரை வெறுத்து வந்த ஆடவர்களைப் போலவே உதயசந்திரனும் பெண் மோகம் மிகவும் கொண்டவனாய் இருப்பானோ? அதைத் தணிக்கத்தான் சேனாதிபதி தன்னிடம் மறைபொருளாகச் சொன்னாரோ? பெண் என்றால் அவளுக்கு இதுதான் வாழ்க்கையா? கண்டவருக்கும் இணங்குவதும் இயங்குவதும் தான் விதியா?' என்று லேசான வெறுப்பு அவளுக்குத் தலைகாட்டியது.

ஆனால் அவனது முகத்தில் களை இருந்ததே தவிர காமம் இல்லை. அவனது கண்கள் பெண்களைத் தேடும் கண்களாக இல்லை. நிர்மலக் கண்களாகவும் அதேசமயம் காந்தம் போல் ஈர்ப்பதாயும் இருந்தன.

அவளோடு பேசியபோது அசடு வழியவில்லை. அசட்டுத்தனத்தை விரட்டியடிக்கக்கூடிய பேச்சுக்களாக இருந்தது அவனது பேச்சு.

''என் மீது நம்பிக்கை இல்லையா?'' என்று அவள் கேட்டபோது ஒட்டுமொத்தமாக விழுந்து அவன் சரணடைய வில்லை.

''போகப் போகத்தான் தெரியும்'' என்று சொன்னபோது அவன் அசாதாரணமானவன் என்பதை உறுதி செய்து கொண்டாள்.

அதுவரை அவளை அணுகிய எந்த ஆடவனும் அப்படிப் பேசியதில்லை. நடந்து கொண்டதில்லை.

அவள் வாயை அசைத்தாலே வாளை கீழே போட்டுவிட்டு வாழ்நாள் முழுக்க அவள் காலடியில் காலணியாய் கிடக்கத் தயாராக இருந்தார்கள்.

உதயசந்திரனோ உண்மையிலேயே வானத்து சந்திரனைப் போலவே அரிதானவனாய் இருந்தான். வானுலகத்து இந்திரனைப் போல தனிக் கம்பீரத்துடன் காட்சியளித்தான்.

அவன் தான் ஆடவன் என்று நினைத்தாள் சந்திரலேகா. அது உண்மை என்றால் ஆடவன் என்ற சொல்லுக்கு அர்த்தம் அரிதானவன். இனிப்பானவன். ஏக்கத்திற்குரியவன் - என்பதுதான் என்று கற்பித்துக் கொண்டாள்.

அதேநேரத்தில் அவளிடமும் மாற்றம் பளிச்சென்று தோன்றியது.

ஆண் தன்மைகள் விலகி பெண்மை தன்மைகள் புலன்களில் புகுந்தன. வெட்கப்படவும் செய்தாள்.

மொத்தத்தில் ஆடவன் ஒருவனும் பெண் ஒருத்தியும் சந்தித்துக் கொண்டார்கள் போலும்.

சந்திரலேகாவுக்கு மந்திரித்துவிட்ட மாதிரி இருந்தது.

உதயசந்திரனை நிமிஷத்திற்கு நிமிஷம் விரும்பிக் கொண்டே போனாள்.

கொல்லாபுரிச் சம்பவம் அவனது வல்லமையை உணர்த்தியதும் அவளது விருப்பம் ஆசையாகி ஆறாக ஓடி கரைகளை உடைத்துக் கொண்டு மோகக் கடலாக முற்றிலுமாக மாறிவிட்டிருந்தது.

மோகக் கடல் பொங்கிய போதுதான் இரவில் அவனது இருப்பிடம் தேடிச் சென்று அவனை அணுகினாள்.

அணைக்க முற்பட்டவளை அகற்றிப் போட்டுவிட்டு எழுந்தும் போய்விட்டதால் பொங்கிய மோகக் கடல் பேரலைகளை பெருக்கியது.

தாகமும் மோகமும் தீர்க்கப்பட்டால்தான் ஓயுமாதலால் மறுநாள் இரவும் அவனை அணுகினாள் சந்திரலேகா.

ஆடவன் எப்படிப்பட்டவன் ஆனாலும் அவனுக்கு முன்னால் அழகாகச் சிங்காரித்துக் கொள்ளத்தான் எந்தப் பெண்ணும் விரும்புகிறாள்.

இங்கே உதயசந்திரனை மயக்க வேண்டிய அவசியம் இருந்ததால் சிறப்பாகச் சிங்காரித்துக் கொண்டு அவனுக்கு முன்னால் போய் நின்று, ''நான் எப்படி இருக்கிறேன்?'' என்று கேட்டாள்.

அவன் லேசாகச் சிரித்துவிட்டு, ''எப்படி இருக்க வேண்டும் என்று விரும்பினாயோ அப்படி இருக்கிறாய்'' என்றான்.

அவனது பதில் அவளை அசர வைத்தது.

''என்ன சொல்கிறீர்கள்?'' என்று கேட்டாள்.

''எதற்காக நிற்கிறாய்? உட்கார்'' என்றான் உதயசந்திரன்.

அவள் ஆசையோடு அமர்ந்தாள். பந்த ஒளியில் அவளது அங்கங்கள் பளபளத்தன.

''நீங்கள் சொன்னதற்கு அர்த்தம் விளங்கவில்லை எனக்கு'' என்றாள்.

''புரிந்து கொள்ள முடியாத புதிரையொன்றும் நான் போடவில்லை சந்திரா. பெண்கள் அலங்கரித்துக் கொள்வதும் தங்களை அழகாகக் காட்டிக் கொள்வதும் இயல்புதானே? அதைத்தான் நானும் சொன்னேன்.''

அவன் தன்னை 'சந்திரா' என்று அழைத்தது அவளுக்கு இன்பமாக இருந்ததால், ''நீங்கள் என்னை இப்படியே அழையுங்கள். அதுதான் எனக்குப் பிடித்திருக்கிறது'' என்றாள்.

''உனக்கு எங்கே கிடைத்தன அலங்காரப் பொருட்கள்?'' என்று கேட்டான் உதயசந்திரன்.

''அவரவர் தேவைகளை அவரவர்கள் கவனித்துக் கொள்கிறார்கள். உங்களைப் போன்றவர்கள் இடைப்பட்ட ஊர்களில் என்னென்ன வாங்குவீர்களோ தெரியாது. பெண்ணான நான் அலங்காரப் பொருட்களைத்தான் கிடைக்குமிடங்களில் வாங்கிக் கொள்வேன். ஆமாம். நீங்கள் என்ன வாங்குவீர்கள்?''

''நான் இடங்களுக்கேற்ப வேடங்களைப் போடுகிறேன். வேடத்திற்கேற்ப பொருட்களை வாங்குவேன்.''

''நேற்று இரவு நீங்கள் போட்டது அத்தகைய வேடங்களில் ஒன்றா?''

''நீ எதைச் சொல்கிறாய்?''

''என்னைத் தூக்கித் தள்ளிவிட்டு எழுந்து சென்றீர்களே - அதைத்தான் சொல்கிறேன்.''

''பல்லவர் படையின் பாதுகாப்பிற்காகப் போடப்பட்ட வேடங்களைத் தவிர வேறு எந்த விஷயத்திலும் எனக்கு வேடம் அவசியமில்லை.''

''அப்படியானால் உங்கள் செய்கைக்கு அர்த்தம்?''

''அலங்கரித்துக் கொண்டு அலங்காரமானத் தேரைப்போல வந்திருக்கும் உனக்கு அதன் அர்த்தம் விளங்கவில்லையா?''

''உதயசந்திரரே, அலட்சியம் என்பது ஆடவர்களுக்கு சகஜமானது. அதுவும் பெண்கள் விஷயத்தில் அது இன்னும் சகஜமானது.''

''இருக்கலாம். ஆனால் இப்போது என்னைப் பற்றி மட்டும் பேசுவதுதான் சரி.''

''நீங்கள் மட்டும் என்ன விதிவிலக்கா?''

''முதலில் உன் வழக்கென்ன என்பதைச் சொல். குற்றச் சாட்டைப் பிறகு பார்க்கலாம்.''

''உபதலைவரே, ஆடவர்களை அலட்சியம் செய்தவள் நான். வெறுப்பு என்ற வார்த்தைக்கு அர்த்தம் ஆடவர் என்று கருதியவள் நான். என்னிடம் அடிமைப்பட்டு வாழத் துடித்த ஆடவர் கூட்டத்தை அலறும்படி அடித்துத் துரத்தியவள் நான். இதுவரை ஆடவர் என்னைத் தொட்டதில்லை. எனது விரல்கள் முதன் முதலாக தீண்டிய முதல் ஆடவர் நீங்கள்தான். தெரியுமா உங்களுக்கு?''

''தெரியாது.''

''இப்போதாவது தெரிந்து கொள்ளுங்கள். சரச சல்லாப வயதில் ஆண்களின் சகவாசத்தையும் சுவாசத்தையும் முற்றிலுமாக வெறுத்து கன்னி விரதமிருந்து வந்தவள் நான். உங்களைக் கண்டபின் தான் கன்னி விரதக் கட்டுகள் சின்னாபின்னப்பட்டுப் போயின. ஆடவர் மீதான அலட்சியமும் வெறுப்பும் அகன்று உங்களை என் மனம் அங்கீகரித்து ஏற்றது. உங்களுக்கு உரியவள் நான் என்று என் நெஞ்சம் கூறியது. அதற்குப் பின் எனக்குள் தடைகளோதடுப்புக்களோதயக்கங்களோ இல்லை. பூவாக இருந்த நான் புழுவாகத்துடித்தேன். பின் புயலாகப் புறப்பட்டேன். ஆசை வெட்கமறியவில்லை. உங்களைத் தேடி வந்துத் தீண்டினேன். நீங்களோ பாம்பைக் கண்டதுபோல என்னைத் தள்ளிவிட்டுச் சென்றுவிட்டீர்கள். இது அலட்சியம் இல்லையா? ஆணவம் இல்லையா?''

''சந்திரா, நான் உன்னை உதறியபோது நீ என்ன சொன்னாய் என்பது உனக்கு நினைவிருக்கிறதா? நான் பௌர்ணமியல்ல. சந்திரலேகா என்றாய். அது என்ன உணர்த்தியது உனக்கு? எனக்குரியவள் பௌர்ணமி என்பதை உணர்த்தவில்லையா? பௌர்ணமி என்பவள் எனக்காக இருக்கும்போது உன்னை எப்படி என்னால் ஏற்க முடியும்? அதுவும் என் அனுமதியில்லாமல் என் மீது சாய்ந்து அத்து மீறும்போது உதறாமல் வேறு என்ன செய்ய முடியும்? இது எப்படி அலட்சியமாகும்? ஆணவமாகும்?''

''இது ஒரு அற்ப காரணம். இதைப்போய் நீங்கள் சொல்லலாமா? பௌர்ணமி இருந்தால் என்ன இல்லாவிட்டால் என்ன? தினமும் மூன்று வேளை சாப்பிடுபவனுக்கு அமுதம் ஒன்றுவலுவில் வந்தால் சுவைக்க மாட்டானா? இதுதான் ஆடவர் இயல்பா? அப்படிப்பட்ட ஆடவன் எங்கிருக்கிறான்?''

''நான் முதலிலேயே சொன்னேன். ஆடவரைப் பற்றி பேசாதே. என்னைப் பற்றிப் பேசு. எனக்குப் பௌர்ணமியே அமுதம்தான். வேறு யாரும் எனக்குத் தேவையில்லை.''

''நீங்கள் பேசுவது பொய். உள்ளொன்று வைத்து புறம் ஒன்று பேசுகிறீர்கள்.''

''உன் விஷயத்தில் அப்படிப் பேச வேண்டிய அவசியம் எனக்கு வரவில்லை சந்திரா. மிகவும் சிரமமான வழிகாட்டி பதவியில் இருந்து கொண்டு ஆடவர்களை அண்ட விடாமலும் அண்டி வாழ விரும்பாமலும் கன்னி விரதம் பூண்ட நீ சிறந்தவள். நீ விரதத்தை முடிக்க எண்ணிய இடம்தான் மாறிவிட்டது. உனக்கேற்றவன் நானல்ல.''

''அந்தக் கவலை உங்களுக்கு எதற்கு? நான் உங்கள் தகுதியை அங்கீகரித்துவிட்ட பிறகு உங்களிடம் தயக்கம் ஏன்?'' என்று கேட்ட சந்திரலேகா, ''இதோ பார் உதயசந்திரா, நான் இப்போது மோகத்தின் உச்சியில் இருக்கிறேன். இது சீறும் ராஜநாகத்தின் நிலைக்கு ஒப்பானது. என்னை அலட்சியம் செய்யாதே. ஏற்றுக் கொள்'' என்று கூறி அவன் மீது பாய்ந்து அவனைக் கட்டிப்பிடித்தாள்.

மோகத்தின் வேகம் அவளை மிருகமாக்கியது.

அதை உதயசந்திரனும் உணர்ந்து அவளை தன்னிடமிருந்து விலக்கித் தள்ளினான்.

அவள் அவமானத்தால் குறுகிப் போனாள்.

அழுதுகொண்டே சென்றாள்.

சிறது நேரம் கழித்து அவள் திரும்பி வந்தபோது அவளோடு சுமார் ஐநூறு வீரர்கள் இருந்தார்கள்.

★★★



31

புகார்

சந்திரலேகா அழுது கொண்டே சென்றதைக் கண்டபோது உதயசந்திரனுக்கு வருத்தமாகத்தான் இருந்தது.

அவளது மோகமும் அதனால் அவள் கொண்ட வேகமும் அவனுக்குத் தவறாகத் தோன்றவில்லை.

'வழிகாட்டி என்னும் கடினமான பணியை ஏற்று காடு மேடு என்று கண்டபடி திரிந்த அவள் காமவயப்படுவதற்கும் அதைத் தீர்த்துக் கொள்வதற்கும் வாய்ப்புகள் இருந்தபோதும் அவற்றைப் பயன்படுத்திக் கொள்ளாமல் கன்னிவிரதம் காத்தது அபூர்வமான விஷயம். அப்படிப்பட்டவள் தன்னைக் கண்டதும் ஏதோ ஒரு விதத்தில் ஈர்க்கப்பட்டதும் அது மோகமாய் வளர்ந்ததும் தவறு சொல்ல முடியாத ஒன்றுதான். அந்த மோகத்தைத் தீர்த்துக் கொள்ள தன்னிடம் மூர்க்கமாக மோதியதும் அநியாயம் என்று சொல்வதற்கில்லை' என்று நினைத்த உதயசந்திரன், 'தனக்காக பௌர்ணமி என்னும் பேதைப் பெண் காத்திருக்கும் போது இவளை எப்படி ஏற்பது?' என்று கேட்டுக் கொண்டான்.

அவனது மனம் வேறு மாதிரி அவனைத் தூண்டியது. சேனாதிபதி இப்படியெல்லாமா தயங்கிக் கொண்டிருந்தார்? அவருக்காக மனைவியும் பிள்ளையும் காத்திருக்கவில்லையா? அவர் அவர்களைப் பற்றியெல்லாமா கவலைப்பட்டார்? பெண்கள் விஷயத்தில் கிடைக்கும் வாய்ப்புகளைப் பயன் படுத்திக் கொள்ள வேண்டும் என்று அவர் சொல்லவில்லையா? அப்படிப்பட்ட வாய்ப்பு தானே இது? அதுவும் அவளாக வந்து உன் மீது உருளும்போது நீயும் சேர்ந்து உருள வேண்டியதுதானே? யாருக்குத் தெரியப் போகிறது? பௌர்ணமிக்குத் தெரிந்துவிடும் என்று பயமா? இருந்தால்தான் என்ன? என்ன செய்துவிடுவாள் பௌர்ணமி? ஆண்கள் இப்படியும்அப்படியும்தான் இருப்பார்கள் என்பது அவளுக்குத் தெரியாதா? நாடாளும் மன்னவர்கள்

நங்கையர்கள் பலரைச் சேர்த்துக் கொண்டு அந்தப்புரத்தில் ஆனந்தக் கூத்தாடுவதில்லையா?'' என்றெல்லாம் மனத்தின் மறுபுறம் அவனை மருட்டியது.

அவன் மருளவில்லை.

'இதற்கு நான் தயாராக இல்லை' என்று சொல்லிக் கொண்டு தரையிலேயே படுத்து கண்களை மூடினான்.

உறக்கம் வருவதாக இல்லை.

சில நிமிடங்கள் கழிந்ததும் தனக்கருகில் இரைச்சல்கள் கேட்கவே கண்ணைத் திறந்ததோடு எழுந்தும் உட்கார்ந்தான்.

சந்திரலேகா ஒரு பெருங்கூட்டம் புடை சூழ வந்து கொண்டிருந்தாள்.

கூட்டத்தினரின் எண்ணிக்கை ஐநூறு இருக்கலாம் என்று தோன்றியது.

சந்திரலேகாவின் கோலம் அலங்கோலமாய் இருந்தது. கண்களை கசக்கியபடி அவள் வந்து நின்றாள். அவளோடு வீரர்களும் நின்றார்கள்.

ஓரளவிற்கு விஷயத்தை ஊகித்துக் கொண்ட உதயசந்திரன் வீரர்களைப் பார்த்து ''என்ன விஷயம்?'' என்று கடுமையாகக் கேட்டான்.

வீரர்கள் உடனடியாகப் பேசவில்லை. ''நான் கேட்டது காதில் விழவில்லையா?'' என்று தொடர்ந்து கேட்டான் உதயசந்திரன்.

வீரர்களில் ஒருவன் முன் வந்து சந்திரலேகாவைச் சுட்டிக்காட்டி ''இவர் ஒரு புகார் சொல்கிறார்'' என்றான்.

''யார் மீது?''

''தங்கள் மீதுதான்.''

''என் மீதான புகாரை உன்னிடம் கொடுத்தாளா இவள்.''

''எங்கள் எல்லோரிடமும்தான் கொடுத்தார்.''

''நீங்கள் என்ன நீதிபதிகளா உங்களிடம் புகார் கொடுப்பதற்கு? புகாரை எடுத்துக் கொண்டு விசாரிக்க வந்து விட்டீர்களா? உபதலைவனை விசாரிக்கும் அதிகாரத்தை உங்களுக்கு யார் கொடுத்தது?'' என்று சரமாரியாகக் கேட்டு சற்று நிறுத்திய உதயசந்திரன் பிறகு கேட்டான் ''என்ன புகார் என் மீது?''

''நீங்கள்... நீங்கள்... இவரைச் சீரழித்து விட்டீர்களாம்'' - என்றான் ஒரு வீரன் தடுமாறியபடி..

''அதற்கென்ன?'' என்றான் உதயசந்திரன் அசராமல்.

பதட்டப்படுவான் என்று எதிர்பார்க்கப்பட்டவன் சகஜமாக இருந்து கொண்டு எதிர் கேள்வி தொடுத்ததைக் கேட்டு சற்றே வியந்த வீரர்கள், ''உபதலைவரே, இது முறையல்ல'' என்றார்கள்.

''எது முறையல்ல?''

''தாங்கள் பேசியது.''

''அப்படி நான் என்ன பேசினேன்?''

''குற்றத்தை ஒப்புக் கொள்கிறீர்கள்.''

''குற்றமா? என்ன குற்றம்.''

''இவரது புகாரை தாங்கள் ஒப்புக் கொண்டீர்கள் அல்லவா?''

''எப்போது ஒப்புக் கொண்டேன்?''

''அதற்கென்ன என்று கேட்டீர்களே அதற்கு அர்த்தம்?''

''குற்றத்தை ஒப்புக் கொண்டேன் என்று அர்த்தம் செய்து கொண்டீர்களா? புகாரைச் சொன்னீர்கள். அதற்கென்ன என்று கேட்டேன். பதில் சொல்ல வேண்டியது நீங்கள். அதை விட்டுவிட்டு ஏதேதோ பேசுகிறீர்கள்.''

உதயசந்திரன் பேசிய விதம் வீரர்களை குழப்பிவிட்டது.

அதைக் கவனித்த உதயசந்திரன், ''இவள் கூறிய புகார் உண்மைதான். அதற்காக என்ன செய்வதாக உத்தேசம்?'' என்று கேட்டுவிட்டுத் தொடர்ந்தான்.

''வீரர்களே, நாம் மேற்கொண்டிருப்பது நெடும் பயணம். அதோடு கடும் பயணம். இதன் முடிவு என்ன என்பது நமக்குத் தெரியாது. உயிரோடு திரும்புவோம் என்ற நிச்சயமும் இல்லை. இப்படி இருக்கும் போது சுகமான வாய்ப்புகள் வரும்போது ஏன் வீணாக்க வேண்டும்? நீங்களெல்லாம் மனிதர்கள் தானே? மனித உணர்வுகளுக்குக் கட்டுப்பட்டவர்கள் தானே? இதுவரை வந்த பயணத்தில் இதுபோன்ற வாய்ப்பை நீங்கள் பயன்படுத்திக் கொண்டதில்லையா? என்னோடு வந்த நூறு வீரர்களை நானே பல இடங்களில் அதற்கு அனுமதித்திருக்கிறேன். அவர்களை அனுமதித்துவிட்டு நான் மட்டும் துறவியாக இருக்க வேண்டும் என்பது தான் உங்கள் எண்ணமா?''

''நாங்கள் அப்படிச் சொல்லவில்லை.''

''பிறகு எப்படிச் சொல்கிறீர்கள்?''

''வழிகாட்டியின் விருப்பத்திற்கு மாறாக நீங்கள் நடந்து கொண்டிருக்கிறீர்கள். அதுதான் புகார்.''

''அப்படியா?'' என்று கேட்டு சந்திரலேகாவைப் பார்த்தான் உதயசந்திரன்.

அவளோ தலையைக் குனிந்தபடி நின்றாள்.

வீரர்களைப் பார்த்த உதயசந்திரன் ''வீரர்களே! நீங்கள் பேசுவதில் அர்த்தம் எதுவும் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. நமக்குக் கிடைக்கும் நேரமும் சரி வாய்ப்பும் சரி, அரிதானது. இதில் விருப்பத்தைக் கேட்டு சம்மதத்தை பெற்று அதன்படி நடந்து கொள்வதென்பது நடக்கக் கூடியதா? அப்படி ஒவ்வொருவரும் நடந்து கொள்ள முடியுமா?'' கேட்டுவிட்டு ''அர்த்தமற்ற நினைப்புகளையும் அர்த்தமற்ற கேள்விகளையும் இதோடு நிறுத்திக் கொள்ளுங்கள். அதோடு உபதலைவனை கண்காணிக்கும் பணி உங்களுக்குரியதல்ல. அவனை விசாரிக்கும் அதிகாரமும் உங்களுக்கு கிடையாது. என் கட்டளைக்குக் கீழ்படிவதாக இருந்தால் இங்கிருங்கள். முடியாதென்றால் படையை விட்டு விலகுங்கள். ஏற்கெனவே என் விருப்பத்திற்கு மாறாக நடந்து கொண்டிருக்கிறீர்கள்...'' என்றான்.

''உபதலைவரே, இது சரியல்ல. நாங்கள் உங்கள் விருப்பத்திற்கு மாறாக நடந்து கொள்ளவில்லை.''

''கொல்லாபுரிக்குள் நுழையாமல் மலையைச் சுற்றிக் கொண்டு செல்ல விரும்பினேன். அதை வழிகாட்டியும் விரும்பவில்லை. நீங்களும் விரும்பவில்லை.''

''அதற்கு காரணம் அந்த வழி அபாயகரமானது என்பதால்தான்.''

''காரணத்தை ஆராய்வது என் வேலையே தவிர உங்கள் வேலையல்ல. அதோடு நாம் மேற்கொள்ளும் எல்லா வழிகளுமே அபாயகரமானவைதான். கொல்லாபுரிக்குள் நுழைந்து செல்ல விரும்பினீர்கள். ஆனால் அதன் படைத் தலைவன் நம்மையெல்லாம் கைது செய்ய முயன்றான். அது ஆபத்தில்லையா? விபரீதம் இல்லையா? முடிந்த வரை பலமுறை யோசித்துவிட்டுத்தான் நான் கட்டளையிடுகிறேன். அதற்குக்

கட்டுப்படாமல் உங்கள் விருப்பம் என்றும் உங்கள் வழி என்றும் நடக்க முயன்றால் அதை நான் அனுமதிக்க முடியாது. நடந்தவையெல்லாம் போகட்டும். இனியாவது கட்டுப்பாட்டுடன் இருங்கள். என்னைப் பற்றிய கவலை உங்களுக்கு வேண்டாம். ஏனென்றால் உங்களையெல்லாம் பற்றிக் கவலைப்படவும் வழி நடத்தவும் நான் இருக்கிறேன். அதுதான் என் கடமை.''

உதயசந்திரனின் இந்த திட்டவட்டமான பேச்சையடுத்து வீரர்கள் எதையும் பேசாமல் திரும்பிச் சென்றார்கள்.

தனியாக நின்ற சந்திரலேகா உதயசந்திரனை ஏறெடுத்துப் பார்த்தாள்.

மோகம் முழுவேகத்தைப் பெற்றிருந்த நிலையில் அது நிறைவேறாமல் போய் உதயசந்திரனால் உதாசீனப்படுத்தப் பட்டபோது அடிபட்ட வேங்கையாய்ச் சென்ற அவள் எதையாவது செய்தாவது உதயசந்திரனை அடைய வேண்டும் என்று தீர்மானம் கொண்டாள்.

பலவிதத்தில் யோசித்தாள்.

படை வீரர்களிடம் போய் உபதலைவன் தன்னைக் கட்டாயப்படுத்தி விருப்பத்திற்கு மாறாகச் சீரழித்துவிட்டான் என்று ரசாபாசம் செய்தால் வீரர்கள் தன் மீது அனுதாபப் படுவார்கள் என்றும் அதன் காரணமாகத் தன்னை உதயசந்திரனிடம் வலுவில் கொண்டு போய் சேர்ப்பார்கள் என்றும் முடிவு செய்து வீரர்களிடம் போய் கண்ணீரும் கம்பலையுமாய் முறையிட்டாள்.

அவள் மீது ஆசைப்பட்டு அதற்கு அவள் இடம் கொடுக்காமல் அவளால் அவமானப்படுத்தப்பட்ட வீரர்கள் சிலர் அங்கே இருக்கவே செய்தார்கள்.

அவர்களுக்கு அவள் கூறிய புகார் ஆறுதலாக இருந்தது.

யாருக்கும் அடங்காமலும் இணங்காமலும் ஆணவத்தோடு திரிந்த சந்திரலேகாவை உபதலைவன் சீரழித்துவிட்டான் என்ற செய்தியைக் கேட்டதும், ''இவளுக்கு இது வேண்டியதுதான். இவளுக்கு உபதலைவன் சரியானவன். இவளது ஆணவம் இனியாவது அடங்கட்டும்'' என்று நினைத்து வேடிக்கை பார்த்தபடி நின்றார்கள்.

ஆனால் மற்றவர்களுக்கு அவளைப் பார்த்து பரிதாபமாகத்தான் இருந்தது.

''எங்களை என்ன செய்யச் சொல்கிறாய்?'' என்று கேட்டார்கள்.

''ஐயா, நான் கௌரவமான குடும்பத்தைச் சேர்ந்தவள். ஆபத்தான பணியில் இருந்து கொண்டு எனது கற்பைக் காத்து வந்தேன். எனக்குப் பிடித்தவர் கிடைத்ததும் அவரைத் திருமணம் செய்து கொண்டு பணியிலிருந்து விலகிவிட நினைத்தேன். ஆனால் அதற்குள் இப்படியொரு மோசம் நடக்கும் என்று நான் எதிர்பார்க்கவில்லை. உபதலைவரான உதயசந்திரர் என்னைத் தனிமையில் அழைத்தார். தன் அதிகாரத்தைக் காட்டி மிரட்டினார். நான் என் நிலைமையைச் சொன்னேன். அவரோ அதைப் பொருட்படுத்தாமல் என் இஷ்டவிரோதமாக நடந்து கொணடு பாழாக்கிவிட்டார். எனக்குக் களங்கம் உண்டாகிவிட்டது. என்னை இனி வேறு யாரும் மணக்க முன் வரமாட்டார்கள். எனவே என்னைப் பாழாக்கிய உபதலைவரை மன்னிக்கத் தயாராக இருக்கிறேன். அவரோடு என்னைச் சேர்த்து வைத்துவிடுங்கள். அவரை என் கணவராக்கிவிடுங்கள். அதுபோதும். நீங்கள் எல்லோருமாக வந்து சொன்னால் அவரால் மறுக்க முடியாது'' என்றாள்.

வீரர்களுக்கு அவள் கூறியது சரியாகவே பட்டது.

சுமார் ஐநூறு வீரர்கள் அவளுக்காக நியாயம் கேட்க அவளோடு புறப்பட்டார்கள்.

ஆனால் உதயசந்திரனோடு பேசிய பிறகு தான் அவனைக் கேள்வி கேட்கும் அதிகாரம் தங்களுக்கு இல்லை என்பது அவர்களுக்குப் புரிந்தது. அவனும் பிசிறில்லாமல் உறுதியாக தனது நிலையைப் பற்றிச் சொன்னதோடு எச்சரிக்கையும் விடுத்தானாதலால் விட்டால் போதும் என்றெண்ணி பேசாமல் திரும்பினார்கள்.

தான் எதிர்பார்த்தது நடக்கவில்லை என்ற ஏமாற்றம் ஒரு புறம் இருந்தாலும் எப்படிப்பட்ட பிரச்சனையாக இருந்தாலும் அதை லாவகமாகச் சமாளித்து வீரர்கள் தன்னை எதுவும் செய்ய முடியாதவாறு செய்த உதயசந்திரனின் மதிநுட்பம் மறுபுறம் அவளை அயரவைத்தது.

இப்பேர் பட்டவனைக் காதலனாகப் பெற்ற பௌர்ணமி பெரும் பாக்கியசாலி என்று சொல்லிக் கொண்ட சந்திரலேகா மேற்கொண்டு எதுவும் பேச விரும்பாதவளாகவும் பேச இயலாதவளாகவும் திரும்பிச் சென்றாள்.

அவளது காமத்தையும் அதனால் உண்டான மனநிலை யையும் நன்றாக உணர்ந்திருந்த உதயசந்திரன் கோபப்பட வில்லை. அனுதாபமே கொண்டான்.

ஏமாற்றத்தால் சந்திரலேகாவிடம் உண்டாகியிருந்த அவமானம் இரண்டு நாட்களுக்கு நீடித்தது.

ஆனால் மூன்றாம் நாள் அவள் வெகுவாக மாறிப் போனாள்.

உதயசந்திரன் விஷயத்தில் அத்து மீறியதெல்லாம் தான் தான் என்பதை உணர்ந்தாள்.

தனது மனநிலையில் உண்டான கோளாறுகள்தான் தன்னை வெட்கங்கெட்டவளாக மாற்றிவிட்டது என்பதை உணர்ந்த அவள் அதற்காக வெட்கப்பட்டாள்.

ஏதோ ஒரு தீர்மானத்துடன் உதயசந்திரனை அணுகிய அவள், ''உபதலைவரே, என்னை இந்த வழிகாட்டி பதவியிலிருந்து விலகுவதற்கு அனுமதிக்க வேண்டும்'' என்றாள்.

''எதற்காக நீ இந்தப் பதவியிலிருந்து விலக வேண்டும்?'' என்று சாதாரணமாகவே கேட்டான் உதயசந்திரன்.

''இந்தப் பதவி எனக்குப் பிடிக்கவில்லை.''

''காரணம்?''

''இத்தனை காலமாக வேறு எதைப்பற்றியும் யோசிக்க வில்லை. எதிர்காலத்தைப் பற்றி நினைத்தும் பார்க்கவில்லை. அதைப் பற்றியெல்லாம் யோசிக்கத் தொடங்கினேன். இந்தப் பதவி எதிர்காலத்திற்கு ஏற்றதல்ல என்றும், எதிர்காலத்திற்கு குந்தகம் விளைவிக்கக் கூடியது என்றும் தோன்றியது. ஆகவே தான் விலகிக் கொள்ள விரும்புகிறேன்.''

''நீ விலகிவிட்டால் எங்களுக்கு யார் வழிகாட்டுவார்கள்?''

''இப்படைப்பிரிவில் பலர் இருக்கிறார்கள். அவர்கள் வழிகாட்டுவார்கள். அதோடு தங்களுக்கு எந்த வழிகாட்டியும் தேவையில்லை. நீங்களே எல்லோருக்கும் வழிகாட்டக் கூடியவர்.''

''தவறு சந்திரா. சாளுக்கிய நாட்டிற்குச் செல்லும் வழி எனக்குத் தெரியாது. மற்றவர்கள் வழிகாட்டினால்தான் உண்டு. அப்படி வழிகாட்டுவதற்கு படைப்பிரிவில் பலர் இருக்கலாம். ஆனால் இந்த விஷயத்தில் உன்னைத்தான் நான் நம்புகிறேன். நீதான் வழிகாட்ட வேண்டும்.''

சந்திரலேகாவுக்கு இதற்கு மேல் மறுப்பு சொல்ல முடியவில்லை. அவன், ''உன்னைத்தான் நான் நம்புகிறேன்'' என்று கூறிய வார்த்தைகள் அவளுக்குள் பரவசப்படுத்தின. கோபமோ குரோதமோ எதுவுமின்றி இயல்பாகவும் இனிமையாகவும் அவன் பேசிய பேச்சுக்கள் அவளைக் கவர்ந்தன.

வழிகாட்டியாகத் தொடர்ந்தாள்.

இருவரிடமும் பழைய நினைப்புகள் எதுவும் இல்லாததால் நல்ல நண்பர்களாகப் பழக ஆரம்பித்தார்கள்.

எதிர்பார்ப்புகள் எதுவுமின்றிப் பழகியபோது அவளால் இயல்பாகப் பேச முடிந்தது. அவனிடம் கனிவோடும் கலகலப்பாகவும் பேசி சுற்றுப்புரத்தைச் சுகந்தப்படுத்தினாள்.

இடையே ஓரிடத்தில் காட்டு வேடர்களின் மறைமுகத் தாக்குதலில் உதயசந்திரனின் இடது தோள்புறத்தில் அம்பொன்று தைத்தது.

அச்சமயத்தில் அவனுக்கு உரிய சிகிச்சைகளைச் செய்து கூடவே இருந்து குணப்படுத்தினாள் சந்திரலேகா.

அவனைத் தொடவும் தொட்டு அணைக்கவும் அணைத்து மகிழவும் மோகம் கொண்டு அலைந்த அவள் சிகிச்சையின் போது அவனைத் தன் மார்பிலேயே தாங்கினாள். அவனது நெற்றியிலும் கண்களிலும் முத்தமிட்டாள். ஓரிரு முறை அவனது உதடுகள் வறண்டபோது தனது தேனதரங்களால் ஈரப் படுத்தினாள்.

ஆனால் அச்செயல்களில் மோகம் இல்லை. வேகம் இல்லை. காமமோ சரசமோ இல்லை. அவனுக்கும் அப்படித் தான். தனக்கு சிகிச்சை செய்த போதெல்லாம் அவள் தென்றலைப் போல் இருந்ததாகவே உணர்ந்தான் உதயசந்திரன்.

தன் மீது மட்டும் அவள் அக்கறை காட்டியது ஏன் என்று அவனுக்குத் தோன்றியது.

அதேசமயம் அவள் அவ்வாறு அக்கறை காட்டியது அவளது பெருந்தன்மையை உணர்த்துவதாகவே உணர்ந்து அமைதி யடைந்தான்.

அவளது மாற்றம் நம்பமுடியாததாகத் தெரிந்தாலும் அவள் மீது அவநம்பிக்கை கொள்ள அவன் முயற்சிக்கவில்லை.

சிகிச்சை காரணமாக இரண்டு நாட்களுக்குப் பயணம் தாமதமாயிற்று.

அதற்குப் பிறகு புதுத் தெம்பை அடைந்த உதயசந்திரன் பயணத்தைத் துரிதப்படுத்தினான்.

பயணத்தின் அறுபது நாள் முடிவில் படைகளைச் சந்திப்பதாகச் சேனாதிபதி கூறியிருந்ததால் அதற்கேற்ப பயணத்தை அமைத்தான் உதயசந்திரன்.

பயணமானது காட்டுவழியில் தான் தொடர்ந்தது. அதேசமயம் ஆங்காங்கே பல்லவர் படைப்பிரிவுகள் புதிது புதிதாக அவனோடு வந்து சேர்ந்தபடி இருந்ததால் அவற்றை அணிவகுக்கச் செய்து நடத்தினான் பல்லவ உபதலைவன்.

சரியாக அறுபது நாள் முடிவில் உதயசந்திரனின் படைப்பிரிவில் இருபதாயிரம் வீரர்கள் சேர்ந்திருந்தார்கள்.

படையானது துங்கபத்திரையாற்றின் தென்கரையை அடைந்திருந்தது.

''இப்பகுதி துங்கபத்திரை ஆற்றின் மத்திய பகுதி'' என்றாள் சந்திரலேகா.

அங்கே ஒரு நாள் முழுக்க படைகள் தங்கின.

மறுநாள் அங்கு வந்து சேர்ந்தார் பல்லவ சேனாதிபதி.

★★★



32

ஆற்றங்கரையில்...

படைப்பிரிவை தன்னிடம் ஒப்படைத்துவிட்டு சேனாதிபதி விலகியதுமே பல்வேறு படைப்பிரிவுகள் தன் பிரிவோடு வந்து கலக்கத் தொடங்கியதும் எண்ணிக்கை கூடிக் கொண்டே வந்தது. இப்படி வீரர்களின் எண்ணிக்கை அடிக்கடி கூடிக் கொண்டே வந்து மொத்த எண்ணிக்கை ஆயிரங்களைத் தாண்டிக் கொண்டு சென்றதால் அதனை தான் மட்டுமே நேரடியாக நிர்வகிக்க முடியாது என்பதை உணர்ந்த உதயசந்திரன் உரிய ஏற்பாடுகளைச் செய்யத் தொடங்கினான். அதன்படி ஆயிரம் புரவி வீரர்களுககு ஒருவனைத் தலைவனாக நியமித்து அவனுக்கு ஆயிரம் கண்ணன் என்ற பட்டத்தை தற்காலிகமாகச் சூட்டினான். ஆயிரம் கண்ணர்கள் தங்கள் பொறுப்பில் இருந்த ஆயிரம் புரவி வீரர்களைக் கண்காணித்துக் கொண்டார்கள். அவர்கள் தங்கள் பொறுப்பில் இருந்த ஆயிரம் வீரர்களை நூறு நூறு வீரர்கள் அடங்கிய பிரிவாகப் பிரித்து ஒவ்வொரு பிரிவுக்கும் ஒருவனைத் தலைவனாக்கி அவனுக்கு நூற்றுவ கண்ணன் என்ற பட்டத்தைத் தற்காலிகமாக வழங்கியதால் அதிகரித்து வந்த படை வீரர்களை நன்கு கண்காணிக்கவும் நிர்வகிக்கவும் முடிந்தது.

அதோடு உதயசந்திரனின் உத்தரவுகளை உணரவும் உணர்த்தவும் ஆயிரம் கண்ணர்களும் நூற்றுவ கண்ணர்களும் வளைந்த கொம்புகளை கழுத்தில் மாட்டிக் கொண்டிருக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

துங்கபத்திரை ஆற்றின் தென்கரையை அடைந்தபோது புரவிப் படையின் எண்ணிக்கை இருபதாயிரத்தை எட்டியதால் இருபது ஆயிரம் கண்ணர்கள் நியமிக்கப்பட்டு தகுந்த முறையில் நிர்வகிக்கப்பட்டு ஆற்றங்கரையில் அணிவகுத்து நின்றது.

சேனாதிபதி வந்ததுமே அந்த அணிவகுப்பைப் பார்வையிட்டு பாராட்டினார்.

''நான் நினைத்ததை நீ செய்துவிட்டாய் உதயசந்திரா. நான் எண்ணியதைவிட உன் அறிவுக் கூர்மை அபாரமாக இருக்கிறது.

என் வேலையில் பாதியை நீ செய்துவிட்டாய். உன்னை எனக்குக் கொடுத்த மாமன்னருக்குத்தான் நான் நன்றி சொல்ல வேண்டும்'' என்று வாய்விட்டுப் பாராட்டிய சேனாதிபதி ''இனிமேல் ரகசிய பயணத்திற்கோ காட்டுவழி பயணத்திற்கோ அவசியமில்லை. ஆற்றைக் கடந்து வடமேற்கில் இருபது காத தூரம் சென்றால் வாதாபி வரும். அதற்கு வடமேற்கில் நான்கு காத தூரத்தில் இருக்கிறது சாளுக்கியரின் தற்போதைய தலைநகரான ரணரசிகபுரம். இங்கிருந்து தலைநகரம் வரை இருப்பது எல்லாமே சாளுக்கிய நகரங்கள்தான். நீ இன்றைக்கே ஆற்றைக் கடந்து வாதாபியை நோக்கிச் செல். என் தலைமையில் பத்தாயிரம் புரவி வீரர்கள் இருக்கிறார்கள். துங்கபத்திரை ஆற்றின் கிழக்கே ஒரு காத தூரத்தில் அப்படை இருக்கிறது. அதை அழைத்துக் கொண்டு நானும் வேறு மார்க்கத்தில் வாதாபிக்கு வருகிறேன். நாம் இருவரும் அங்கே சந்திப்போம்'' என்றார்.

''பல்லவ இளவரசரின் காலாட்படை எங்கே இருக்கிறது சேனாதிபதியாரே?'' என்று கேட்டான் உதயசந்திரன்.

''அப்படை ரணரசிகபுரத்தை அடைந்துவிட்டதாகத் தகவல் வந்திருக்கிறது. நாமும் போய்ச் சேர்ந்த பிறகுதான் போர் நடவடிக்கை துவங்கும்.''

''காலாட்படையின் எண்ணிக்கை எவ்வளவு?''

''நமது படையின் அளவுதான். முப்பதினாயிரம்'' என்று சொன்ன சேனாதிபதி, ''இனி உனக்கு வழிகாட்டி தேவையிருக்காது. இவளை நான் அழைத்துச் செல்லட்டுமா?'' என்று கேட்டு சந்திரலேகாவைப் பார்த்தார்.

அவள் ஏதோ வாயெடுத்தாள்.

உதயசந்திரனோ பேச முற்பட்டு, ''இவள் வழிகாட்டியாக இல்லையென்றாலும் என் ஆலோசகராக இருக்கட்டும் ஐயா. இவளை என்னோடு விட்டுவிடுங்கள்'' என்றான்.

அவனைப் பார்த்துக் கண்ணைச் சிமிட்டிய சேனாதிபதி ''அப்படியா விஷயம்? மிகவும் மகிழ்ச்சி. இதைத்தான் நான் எதிர்பார்த்தேன். விரும்பினேன். அதோடு இவளும் லேசுப் பட்டவளல்ல. வலையை நீ வீசினாயா இல்லை அவள் வீசினாளா?'' என்று கேட்டார்.

''சேனாதிபதி, இது அநாகரீகம்'' என்று கடுகடுத்தாள் சந்திரலேகா.

''அடி போடி பெண்ணே. நான் பார்க்காத அநாகரீகமா?'' என்று தனக்குள்ளேயே சொல்லிக் கொண்டு அவளை ஒரு பார்வை பார்த்தார்.

அவர்களுக்குள் மோதல் உருவாகாமல் தடுக்க நினைத்த உதயசந்திரன் இடையில் குறுக்கிட்டு, ''சேனாதிபதி, உங்களோடு இருந்த அரிச்சந்திரன் எங்கே?'' என்று கேட்டான்.

''அவனைப் பற்றி நீ போட்ட கணக்கு சரியில்லை உதயசந்திரா. அவன் மாறவில்லை. மூன்று நாட்களுக்கு முன்பு என்னைக் கொல்ல முயன்றான். அவன் மீது குறுவாளை எறிந்தேன். அந்த நரி தப்பியோடிவிட்டது'' என்றார் சேனாதிபதி.

''இன்றிரவே ஆற்றைக் கடந்துவிடுங்கள். கோடைக் காலமாதலால் ஆற்றில் வாய்க்கால் அளவுதான் நீர் ஓடுகிறது'' என்று சொல்லிவிட்டுச் சென்றார்.

உதயசந்திரன் தனியாகப் போய் அமர்ந்தான்.

அவனிடம் கணக்கற்ற கேள்விகளும் சந்தேகங்களும் தோன்றின.

''பல்லவர் படையின் பலம் அறுபதாயிரம். இதில் காலட்படை முப்பதாயிரம். புரவிப்படை முப்பதாயிரம். சாளுக்கியர் படையை வெற்றி கொள்ள இந்தப் படை போதுமா? சாளுக்கியரின் படை எண்ணிக்கை எவ்வளவு இருக்கும்? சாளுக்கியரின் போர்த் திட்டம் என்னவாக இருக்கும்? இதைப் பற்றியெல்லாம் எதுவும் சொல்லாமல் சேனாதிபதி சென்று விட்டது ஏன்? தற்போது தன்னோடு இருக்கும் இருபதாயிரம் புரவி வீரர்களுக்கு சாளுக்கியத் தலைநகர் செல்லும் வரை உணவுக்கு வழி என்ன?'' என்று பல கேள்விகளைக் கேட்டுக் கொண்ட அவன் ஐராவதனை அழைத்தான்.

''ஐராவதா, துங்கபத்திரை ஆற்றங்கரையைக் கடந்து வடமேற்காக வாதாபியை நோக்கிச் செல்லும்போது இடையில் வரும் நகரங்களின் நிலை எப்படி?'' என்று கேட்டான்.

''தலைநகருக்கு அருகில் இருக்கும் நகரங்களாதலால் செழிப்பானவைகளாக இருக்கும். பாதுகாப்பு விஷயத்தில் நாம் ஏற்கெனவே பார்த்த ஊர்களைப் போலத்தான் இருக்கும். அதுவும் நம்மிடம் இருபதாயிரம் புரவி வீரர்கள் இருப்பதால் இதை எதிர்கொள்ளும் படை எதுவும் அந்த நகரங்களில் இருக்காது'' என்றான் ஐராவதன்.

''வாதாபியில்?''

''வாதாபியில் ஒரு மலைக்கோட்டை. மேற்குமலைத் தொடரின் ஒரு பகுதியில் மலைச்சரிவில் அமைந்திருக்கிறது அது. மலைக்கோட்டைக்கு முன்னால் வாதாபி நகரம் இருக்கிறது. அந்த நகரத்தை கோட்டை நகரமாகவே அமைத்திருந்தார் மாமன்னர் புலிகேசி. நரசிம்மவர்மர் இந்த நகரத்தையும் கோட்டையையும் அழித்து எரித்து தகனம் செய்துவிட்டார். தானிருந்த இடம் சுடுகாடு போல் ஆகிவிட்டதாக புலிகேசி மகாராஜா வருந்தினாரா என்பது தெரியாது. அவரது புதல்வர் விக்கிரமாதித்தர் கருதினார். அவமானச் சின்னமான அந்த நகரில் வாழ அவர் விரும்ப வில்லை. மக்களையும் அங்கே குடியேற்ற முனையவில்லை. வாதாபிக்கு வடமேற்கே இருந்த ஒரு நகரைக் தேர்ந்தெடுத்து அதை சாளுக்கியரின் புதிய தலைநகராக மாற்றி அதற்கு ரணரசிகபுரம் என்ற பெயரையும் சூட்டினார்.''

''வாதாபி நகரம் சரி, வாதாபி மலைக்கோட்டை?''

''அந்த மலைக்கோட்டையில்தான் மாமன்னர் புலிகேசி வாழ்ந்தார். அவர் மட்டும் கோட்டையை விட்டு வெளியேறாமல் இருந்தால் வாதாபிக்கு இந்த நிலை வந்திருக்காது. காஞ்சியைப் பற்றி பலர் அவருக்கு ஆசைகாட்டி மலைக்கோட்டையை விட்டு வெளியேறச் செய்துவிட்டார்கள். காட்டை விட்டு வெளியேறிய புலியின் கதிதான் புலிகேசிக்கு வந்தது. அதன் விளைவுகள் சொல்லி மாளாதவை.''

''அதெல்லாம் தெரிந்த விஷயங்கள் ஐராவதா. நான் கேட்பது அந்த மலைக்கோட்டையின் தற்போதைய நிலை என்ன என்பதுதான்.''

''நான் கேள்விப்பட்டவரை அந்த மலைக்கோட்டையானது எதிரிகளை அடைத்து வைக்கும் சிறைக்கோட்டமாக மாற்றப்பட்டிருக்கிறது என்றுதான் தெரிகிறது.''

''ரணரசிகபுரத்தில் என்ன நிலைமை?''

''அதுபற்றி சரியாக எனக்குத் தெரியாது உபதலைவரே. அது தலைநகரான பிறகு நான் அங்கு செல்லவில்லை. வாதாபிக் கருகில் இருந்த ஒற்றர் படை முகாமில் வந்து சேர்ந்து பயிற்சி பெற்றேன். அங்கே இருந்து ஒற்றறிய புறப்பட்டேன். எனவே தலைநகரைப் பற்றி திட்டவட்டமாகச் சொல்ல முடியாது.''

''சாளுக்கிய மன்னர் விஜயாதித்தர் ரணரசிகபுரத்தில்தான் இருக்கிறாரா?''

''அதுவும் தெரியாது உபதலைவரே.''

இதற்குப் பிறகு ஐராவதனிடம் உதயசந்திரன் எதுவும் பேசவில்லை. அவனை அனுப்பினான்.

இந்த நிலையில் ஆயிரம் கண்ணன் ஒருவன் சந்திர லேகாவிடம் வந்து, ''உபதலைவரிடம் ஒரு செய்தி சொல்ல வேண்டும்'' என்றான்.

''அவர் பலத்த யோசனையில் இருக்கிறார். அவரிடம் இப்போது பேச முடியாது'' என்றாள் ஆலோசகராக மாறியிருந்த சந்திரலேகா.

''அப்படியானால் செய்தியையாவது அவரிடம் தெரிவித்து விடுங்கள்.''

''என்ன அப்படிப்பட்ட முக்கியமான செய்தி?''

''எங்கள் பிரிவில் இரண்டு பல்லவ வீரர்களைக் காணவில்லை.''

''இதுவா முக்கியமான செய்தி? ஆயிரங்கண்ணரே, காஞ்சியிலிருந்து புறப்பட்ட வீரர்களில் பலர் விபத்துக்குள்ளாகி இறந்திருக்கிறார்கள். நோய்க்கு ஆளாகி இறந்திருக்கிறார்கள். சிலர் திடீர் மரணம் அடைந்திருக்கிறார்கள். புரவிகளும் மாண்டிருக்கின்றன. நீண்ட பயணத்தில் இதெல்லாம் சகஜம். நீங்களோ இரண்டு பேரைப் பற்றி பெரிதாகச் சொல்ல வந்துவிட்டீர்கள்.''

''அம்மணி, தாங்கள் சொல்வது சரி. வழியில் இறந்தவர் களைப் பற்றிய விவரம் தெரியும். அதனால் இறந்தவர்கள் யார் யார் என்பதைச் சொல்ல முடியும். நான் சொல்வது இறந்துபோன இரண்டு வீரர்களைப் பற்றியல்ல. காணாமல் போன இரு வீரர்களைப் பற்றி. அவர்களைப் பற்றிய விவரம் தெரிய வில்லை.''

''அதற்கு என்ன செய்ய முடியும்? அவர்களைத் தேட முடியுமா?''

''அவசரப்படாதீர்கள் அம்மணி. நான் சொல்ல வந்த விஷயம் வேறு. நமது வீரர்கள் இருவர் காணாமல் போனது சாதாரண விஷயமாக இருக்கலாம். ஆனால் அவர்களுக்குப் பதில் புதிதாக இரண்டு பேர் சேர்ந்திருக்கிறார்கள். அவர்களைப் பார்த்தால் நம்மவர்களாகத் தோன்றவில்லை.''

''வேறு எப்படித் தோன்றுகிறது.''

''அராபியர்களைப் போலத் தோன்றுகிறது.''

''நமது படையில் பலதரப்பட்டவர்கள் கலந்திருப்பது இயற்கை. இதில் வியப்படையவோ சந்தேகப்படவோ எதுவுமில்லை.''

''தங்கள் அபிப்ராயம் அப்படி இருக்கலாம். நாங்கள் அப்படி நினைப்பதில்லை. எதற்கும் உங்களிடம் சொல்லி விட்டேன். சமயம் பார்த்து உபதலைவரிடம் சொல்லி விடுங்கள்.''

''நான் சொல்லிக் கொள்கிறேன். கவலை வேண்டாம்.''

ஆயிரம் கண்ணன் சொல்லிய செய்தியை ஒரு செய்தியாகவே சந்திரலேகா எடுத்துக் கொள்ளவில்லை. பெரிய நிகழ்ச்சிகள் காத்திருக்கும்போது இதெல்லாம் ஒரு பொருட்டல்ல என்று நினைத்துக் கொண்டாள்.

நேரம் ஓடிக் கொண்டிருந்தது. ஆனால் ஆற்றை கடப்பதற்கான கட்டளையை உதயசந்திரன் பிறப்பிக்கவில்லை.

அவனுக்குள் ஏதோ ஒருவிதமான அசதியும் அதிருப்தியும் உண்டாகியிருந்தது.

அதுபற்றி தெளிவு பெற சரியான துணை கிடைக்காததால் யோசனையிலேயே இருந்தான்.

''பல்லவர் படை இவ்வளவு தூரம் வந்ததற்குப் பிறகும் சாளுக்கிய படை ஏன் தாக்குவதற்கு முற்படவில்லை? தலைநகர் கோட்டைக்குள்ளேயே திரண்டிருக்கிறதா? அப்படி திரண்டிருந்தால் அது அறிவுள்ள செயலாகத் தெரியவில்லையே?'' என்று தனக்குள்ளேயே கேட்டுக் கொண்டிருந்தான்.

அப்போது சந்திரலேகாவும் ஐராவதனும் அவனிடம் வந்து ''படைவீரர்கள் தங்கள் கட்டளைக்காகக் காத்திருக்கிறார்கள்'' என்றார்கள்.

''என்ன கட்டளையிட வேண்டும் என்று காத்திருக் கிறார்கள்?'' என்று கேட்டான் உதயசந்திரன்.

''ஆற்றைக் கடப்பதற்குதான்.''

''ஆற்றை எதற்காக இப்போது கடக்க வேண்டும்?''

''சேனாதிபதி அப்படிச் சொன்னதாகத் தகவல்.''

''அவர் சொல்லுவார். அதைப்பற்றி நமக்கென்ன?''

உதயசந்திரனின் பதில் இருவருக்கும் வியப்பை அளித்தது.

''அப்படியானால் வேறு ஏதாவது யோசனை வைத்திருக் கிறீர்களா?'' என்று கேட்டான் ஐராவதன்.

''இருந்தால் சொல்கிறேன். நீ செல்'' என்றான் உதயசந்திரன்.

உதயசந்திரன் ஏதோ குழப்பத்தில் இருக்கிறான் என்பது ஐராவதனுக்குப் புரிந்ததால் வேறு எதுவும் பேசாமல் அங்கிருந்து சென்றான்.

சந்திரலேகா மட்டும் அங்கேயே இருந்தாள்.

அவளுக்கும் அவனது குழப்பம் புரிந்தது. எனவே கேட்டாள். ''உபதலைவரே! உங்கள் குழப்பம்தான் என்ன?''

உதயசந்திரன் நெட்டுயிர்த்தான்.

''என் குழப்பங்களைப் பகிர்ந்து கொள்ள அந்தரங்கமான நபர் ஒருவர் எனக்கில்லை. அதுதான் கவலையாக இருக்கிறது'' என்றான்.

''அந்த அந்தரங்க நபராக என்னைக் கருதக் கூடாதா? அதோடு என்னை உங்கள் ஆலோசகராக வைத்துக் கொண்டது நீங்கள் தானே?'' என்று கேட்டாள் சந்திரலேகா.

''உன்னால் எனக்கு எந்த வகையில் ஆலோசனை சொல்ல முடியும்? என்று கேட்டான் உதயசந்திரன்.

''ஆலோசகராக என்னை நியமித்தபோது இக்கேள்வி எழவில்லையா உங்களுக்கு?''

''இதோ பார் சந்திரலேகா. வார்த்தைகளால் விளையாடுகிற நேரம் இதுவல்ல என்பதை புரிந்து கொள். என் கேள்விக்கு மறுகேள்வி கேட்கும் நபர் எனக்குத் தேவையில்லை. என்னைப் புரிந்து கொள்ளும் நபர்தான் தேவை'' என்று கூறிய உதயசந்திரன், ''கொஞ்சம் அருகில் வா'' என்றான்.

அவள் அருகே வந்ததும் அவள் முகத்தை ஆராய்வது போல் பார்த்தான் உதயசந்திரன். அவளது ஈர உதடுகள் அவனை உன்மத்தம் கொள்ளச் செய்தன. குழப்பதால் வறண்டுபோன அவனது மனம் ஏதேதோ செய்தது. திடீரென அவளைத் தனக்காக இழுத்தான். அவளது ஈர உதடுகளின் மேல் தன் உதடுகளை வைத்து அழுத்தினான். அசைத்தான். அவனது கைகளும் அவளது உடலை இறுக்கியது. அவளை நொறுக்கிவிடுவது போல் இறுக்கிய அவன் உதடுகளின் பலத்தையெல்லாம் அவளது உதடுகளில் காட்டி அழுந்தச் செய்தான். 'ஹா' என்றாள் அவள், அவளது உதடுகளை அவன் கடித்துவிட்டதால்.

அதே நேரத்தில் அவளை விலக்கிய உதயசந்திரன், ''ஆயிரங்கண்ணர்களை வரச்சொல் சந்திரா'' என்றான்.

பரமானந்தப்பட்டிருந்த சந்திரலேகா உதடுகளைத் துடைத்துக் கொண்டு தன் கழுத்தில் இருந்த கொம்பை எடுத்து ஊதினாள்.

அதையடுத்து அடுத்த சில நிமிடங்களில் இருபது ஆயிரங்கண்ணர்களும் அங்கு வந்து சேர்ந்தார்கள்.

உதயசந்திரனின் முகத்தில் அதுவரை விரவிக் கிடந்த குழப்பம் தற்போது இல்லை.

வந்து நின்றவர்களைப் பார்த்து உதயசந்திரன் ''உங்களில் நூறு பேர் பந்தங்களை ஏந்திக் கொண்டு ஆற்றில் மெல்ல இறங்குங்கள். நீங்கள் செல்வது பரவலாக இருக்கட்டும். அதாவது தூரத்திலிருந்து பார்ப்பதற்கு நமது படைகள் முழுவதும் ஆற்றில் இறங்கிச் செல்வதைப் போலத் தோன்ற வேண்டும். மெதுவாகவே செல்லுங்கள். இங்கேயிருந்து அரவங்கள் எழுந்தால் நீங்கள் நூறு பேரும் பந்தங்களைப் போட்டுவிட்டு ஆற்றுப் பகுதியிலேயே மேற்காக ஓடிவிடுங்கள். மற்றதை பிறகு பார்க்கலாம். இங்கே பந்தங்கள் எதுவும் எரிய வேண்டாம்'' என்றான்.

உதயசந்திரனின் கட்டளைகளுக்கான காரணம் திட்டமாகப் புரியவில்லை என்றாலும், ஆயிரங்கண்ணர்கள் கேள்வி எதுவும் கேட்காமல் பணிந்தார்கள்.

அதையடுத்து படைப்பிரிவில் இருந்த பந்தங்கள் அணைக்கப்பட்டன.

நூறு வீரர்கள் பந்தங்களை ஏந்திக் கொண்டு மெதுவாக ஆற்றில் இறங்கி நடந்தார்கள்.

அதைக்கண்ட உதயசந்திரன், ''இது போதாது. இன்னும் இருநூறு வீரர்களும் இதேபோல பந்தமேந்தி ஆற்றில் இறங்கட்டும்'' என்று கட்டளையிட்டான்.

அதையடுத்து இருநூறு வீரர்களும் அவ்வாறே ஆற்றில் இறங்கினார்கள்.

தூரத்திலிருந்து பார்ப்பதற்கு ஆற்றில் பெரும்படை இறங்கி நகர்வது போலவே தெரிந்ததைக் கண்ட உதயசந்திரன் திருப்தியடைந்தான்.

அடுத்த சில நிமிடங்களில் அவன் எதிர்பார்த்தது நடந்தது.

துங்கபத்திரை ஆற்றின் தென்கரையில் பல்லவர் படை இருந்த இடத்திற்கு நேர் எதிரில் மேற்கு திசையில் பெரும் ஆரவாரம் எழுந்தது.

பல்லவர் படை இயங்குவதற்கான ஆணையை அறிவிக்கும் கொம்பை ஊதினான் உதயசந்திரன்.

★★★



33

முதல் மோதல்

ஆற்றை இரவிலேயே கடந்துவிடும்படி சேனாதிபதி கூறிவிட்டுச் சென்ற பிறகு அவர் கூறியபடி இரவிலேயே ஆற்றைக் கடக்க உதயசந்திரனுக்கு உடன்பாடு இல்லை. அவனுக்குள் சாளுக்கியர் படை அதுவரை தாக்குதலைச் செய்யாமல் இருந்தது சந்தேகமாகவே இருந்தது. ஒருவேளை சாளுக்கியர் படை தாக்குதல் செய்ய நினைத்தால் அதற்கு தற்போதுதான் சரியான சமயம் என்று தோன்றியது அவனுக்கு. நேரம் இரவாக இருந்ததால் பல்லவர் படை ஆற்றில் இறங்கி கடக்க முற்படும்போது அதைத் தாக்குவது தான் சாளுக்கியர் படைக்கு அனுகூலமாக இருக்கும் என்று நினைத்தான். ஆற்றில் இறங்கிவிட்ட பல்லவர் படையை பின்புறமாகத் தாக்கினால் அவர்களால் சரிவர போரிட முடியாது. தப்ப நினைத்தாலும் மறுகரைக்குத்தான் ஓட வேண்டும். அப்படி அக்கரையை அடைய முயன்றால் அது நிறைவேறாதபடி தாக்குதலை தொடுத்தால் பல்லவர் படை அழியும். அப்படியொரு சூழ்நிலையை உருவாக்க உதயசந்திரன் தயாராக இல்லை.

குழப்பமே நிலவியது அவனிடம். அந்த குமைச்சலைத் தாங்க முடியாத நிலையில்தான் சந்திரலேகாவை அருகில் அழைத்து முரட்டுத்தனமாக அணைத்து அதே வேகத்துடன் அவளது உதடுகளையும் தனது உதடுகளால் அழுத்தினான். அந்த உணர்வு அவனது குழப்பத்தை நீக்கியது. சாளுக்கியர் படை வரப்போவதாகவே எண்ணி திட்டத்தை தீட்டினான். அவன் எதிர்பார்த்த மாதிரி காட்டிலே மறைந்திருந்த சாளுக்கியரின் புரவிப்படை திடீரென ஆரவாரத்துடன் வெளிப்பட்டது. ஆற்றுப் பகுதியில் பரவலாகத் தெரிந்த பந்தங்களைக் கண்டதும் பல்லவர் படை ஆற்றில் இறங்கிவிட்டதாகக் கருதியது. அப்படையை பின்புறத்தில் தாக்க வெகுவேகத்துடன் பாய்ந்து வந்து ஆற்றில் இறங்கியது.

பல்லவர் படை இயங்குவதற்கான கொம்பை ஊதினான் உதயசந்திரன்.

அதையடுத்து பல்லவர் படை காலாட்படையாகச் செயல்பட்டது.

பல்லவ வீரர்கள் புரவிகளை விட்டு இறங்கி ஆற்றில் சாளுக்கிய படையின் மீது அம்புகளை சரமாரியாகத் தொடுத்தபடி முன்னேறினார்கள்.

சாளுக்கியர் படை எதிர்பார்த்ததற்கு நேர்மாறான சூழ்நிலை ஆற்றில் உண்டாயிற்று.

பல்லவர் படையின் பின்புறத்தில் தனது படை இருப்பதாக நினைத்த சாளுக்கியர் ஏமாந்தனர்.

பல்லவர் படை அவர்களுக்குப் பின்னால் இருந்தது.

ஏன் எப்படி என்று அவர்கள் புரிந்து கொள்வதற்குள் பல்லவர் படை முப்புறத்திலும் விரிந்து சென்று அம்பு மழையைப் பொழிந்ததால் நடுவே சிக்கிக் கொண்டார்கள். பல்லவரது தாக்குதல் முப்புறமும் நெருக்கியதால் சாளுக்கியப் படையால் மறுகரைக்குத் தப்பியோட இயலவில்லை. அதோடு மறுகரையை ஒட்டி ஆற்றில் நீர் ஓடியதால் அதன் வழியாக வேகமாகத் தப்ப முடியாமல் திண்டாடினார்கள். இரவு நேரமானதால் வெளிச்சம் சரிவர இல்லைதான். ஆனால் தனக்கு முன்னால் இருப்பது எதிரி மட்டுமே என்பதால் எந்த குழப்பமும் இல்லாமல் பல்லவ வீரர்கள் அம்பு மழையைப் பொழிந்தபடி இறுக்கியதாலும் அம்புகளால் தாக்கப்பட்ட சாளுக்கியர் புரவிகள் துள்ளி எழுந்து தங்கள் மீதிருந்த வீரர்களைக் கவிழ்த்துவிட்டு ஓட முயன்று முடியாமல் போனதாலும் அவை சாளுக்கிய வீரர்களையே மிதித்தன. நிலைமை இப்படியே தொடர்ந்தால் தனது தரப்பில் ஒருவரும் மிஞ்சமாட்டார்கள் என்பதை உணர்ந்த சாளுக்கியர் படையின் உபதளபதி சமாதான தாரையை ஊதினான். அதையடுத்து உதயசந்திரனும் போர் நிறுத்தச் சங்கை எழுப்பினான்.

அதையடுத்து காரியங்கள் வேகமாக நடக்கத் தொடங்கின.

போர்க்களம் சம்பந்தமான பட்டறிவு இல்லையென்றாலும் கேள்வி ஞானம் நிரம்ப இருந்ததாலும் எந்தச் சூழ்நிலையையும் சமாளிக்கக்கூடிய சாமர்த்தியம் இருந்ததாலும் சாளுக்கியர் தாக்குதலை சரியாக எதிர்பார்த்து போரையும் திறம்பட நடத்தி வெற்றி பெற்றான் உதயசந்திரன்.

போரின் வெற்றிக்குப் பிறகும் அவன் திறம்படவே செயல்பட்டதால் ஒரு நாழிகைப் பொழுதில் ஆற்றில் மாறுபட்ட காட்சி உருவாயிற்று.

சமாதான தாரைகளையடுத்து ஆயுதங்களை கைவிட்ட சாளுக்கிய வீரர்களை கூட்டி. பல்லவர் படையொன்று வளைத்துக் கொண்டது.

அதேபோல உயிர் தப்பிய புரவிகளையும் வளைத்து நிறுத்தினார்கள் பல்லவ வீரர்கள்.

அப்பகுதி முழுவதும் பந்தங்கள் ஏற்றப்பட்டு பிரகாசமாகத் திகழ்ந்தது.

இறந்து போன வீரர்களையும் புரவிகளையும் அப்புறப் படுத்தினான் உதயசந்திரன்.

சாளுக்கிய உபதளபதி அவனுக்கு முன்னால் தலைகுனிந்து நின்றான்.

''உன் பெயரென்ன?'' என்று கேட்டான் உதயசந்திரன்.

''வில்வலன்'' என்றான் சாளுக்கிய உபதளபதி வறண்ட குரலில்.

''உனது படை எண்ணிக்கை எவ்வளவு?''

''பத்தாயிரம்.''

''எங்கள் படையின் எண்ணிக்கை எவ்வளவு தெரியுமா?''

''இருபதாயிரம்.''

''இது தெரிந்து எந்த தைரியத்தில் எங்களைத் தாக்கத் துணிந்தாய்?''

''போரில் படைபலம் மட்டும் வெற்றியைத் தருவதில்லை. போர் முறை, போரிடும் இடம், நேரம் ஆகியவற்றைப் பொறுத்தது. ஆற்றுக்குள் இருக்கும் படைகளை இரவில் பின்புறமாகத் தாக்கும்போது படைபலம் முக்கியமல்ல.''

''நாங்கள் ஆற்றங்கரைக்கு வந்ததை எப்போது அறிந்தீர்கள்?''

''இன்று நண்பகலில்.''

''நாங்கள் இங்கே வரப்போவது உங்களுக்கு எப்போது தெரிந்தது?''

''இரண்டு நாட்களுக்கு முன்னால்.''

''இப்படியொரு தாக்குதலை எப்படி எதிர்பார்த்தீர்கள்?''

''பல்லவர் படை துங்கபத்திரை ஆற்றைக் கடக்காமல் வாதாபிக்குச் செல்ல முடியாது. எனவே உங்கள் படையை ஓரிடத்தில் தாக்க முடிவு செய்தோம். துங்கபத்திரை ஆறு உற்பத்தி ஆகும் மலைவழியாகப் படைகளை நடத்தி உங்களுக்குப் பின்னால் வந்து ஆற்றில் இறங்கியபின் தாக்க வேண்டும் என்று நினைத்தோம். அதுவரை சரியாகத்தான் இருந்தது. ஆனால் எங்கள் தாக்குதலை நீங்கள் அறிந்து கொள்வீர்கள் என்று எதிர்பார்க்கவில்லை. அதனால்தான் உங்களுக்குப் பின்னால் வரவேண்டிய நாங்கள் ஏமாந்து போனோம். நீங்கள் எங்களுக்குப் பின்னால் வந்துவிட்டீர்கள்.''

''இந்தப் போர்த் திட்டத்தை வகுத்தவர் யார்?''

''சாளுக்கியரின் பிரதான சேனாதிபதி வீரகேசரி.''

''அவர் இப்போது எங்கே இருக்கிறார்?''

''எங்களை அனுப்பி வைத்தபோது அவர் தலைநகர் ரணரசிகபுரத்தில் இருந்தார்.''

''சாளுக்கியப் படை எண்ணிக்கை எவ்வளவு?''

''தெரியாது.''

''உபதளபதியாய் இருக்கும் உனக்கு இது தெரியாதா?''

''அது ரகசியமாக வைத்து பாதுகாக்கப்படுகிறது. அது விஷயம் பிரதான சேனாதிபதிக்கும் மாமன்னருக்கும் மட்டும்தான் தெரியும்.''

''பல்லவர் படையை முறியடிப்போம் என்று வந்திருப்பீர்கள். இப்போது நிலைமை மாறிவிட்டது. இனி உங்கள் உத்தேசம் என்ன?''

உதயசந்திரன் இவ்வாறு கேட்டபோது ஆயிரம் கண்ணன் ஒருவன் வந்து படைச்சேதம் பற்றித் தெரிவித்தான்.

''சாளுக்கியர் தரப்பில் வீரமரணம் அடைந்தவர்கள் எட்டாயிரம். பல்லவர் தரப்பில் ஐந்நூறு.''

இதைக் கேட்ட உதயசந்திரன், ''வில்வலா! இந்தப் போர் சாளுக்கியர்களுக்கு வேண்டுமானால் அவசியமானதாக இருக்கலாம். ஆனால் பல்லவர்களுக்கு தேவையற்றது. எங்கள் தரப்பில் ஐந்நூறு வீரர்கள் வீரமரணம் அடைந்தது எங்களுக்கு பெரும் இழப்புதான்'' என்றான்.

ஆயிரம் கண்ணன் குறுக்கிட்டு, ''சாளுக்கியர் தரப்பில் ஐயாயிரம் புரவிகள் மாண்டுவிட்டன. பல்லவர் தரப்பில் பத்து

புரவிகள்தான். இதற்குக் காரணம் நாம் காலாட்படையாகச் செயல்பட்டதுதான்'' என்றான்.

பிறகு வில்வலனைப் பார்த்த உதயசந்திரன், ''உன் உத்தேசம் எதுவென்று கேட்டேன். அது எதுவாக இருந்தாலும் இப்போது நான் சொல்லும்படி நீ நடந்து கொண்டால் உன் உயிர் மற்றும் உன் வீரர்கள் இரண்டாயிரம் பேர்களின் உயிர் தப்பும்'' என்றான்.

''சொல்லுங்கள்'' என்றான் வில்வலன்.

''துங்கபத்திரை ஆற்றுக்கு வடக்கே உள்ள ஊர் எது?''

''வடகரையிலிருந்து இரட்டப்பாடி நாடு ஆரம்பிக்கிறது.''

''நல்லது. புரவியொன்றில் நீ அங்கு செல். இங்கே உள்ள வீரர்களுக்கும் புரவி வீரர்களுக்கும் உரிய உணவை ஏற்பாடு செய்து எடுத்து வா. பிறகு அங்கே உள்ள புரவி வியாபாரிகளையும் கையோடு கூட்டிவா.''

''அவர்கள் எதற்கு?''

''உங்களிடமிருந்து கைப்பற்றிய புரவிகளை காஞ்சிக்கு அனுப்பி வைப்பதற்கு.''

வில்வலன் மறுப்பு எதுவும் சொல்லாமல் புறப்பட்டான்.

பெற்றது பெரிதென்றாலும் போர் தேவையற்றதாக இருந்ததாலும் ஐந்நூறு வீரர்கள் வீரமரணமடைய நேரிட்டதாலும் வெற்றியை அங்கே யாரும் பெரிதாகக் கொண்டாட வில்லை.

வீரர்களது சடலங்களை ஆற்றுப்படுகையிலேயே தகனம் செய்து முடிக்கப்பட்டபோது பொழுது நன்றாக விடிந்திருந்தது.

ஆற்றின் வடகரைப் பகுதியில் ஓடிய நீரிலேயே வீரர்கள் குளித்து புத்துணர்வு பெற்றார்கள்.

உதயசந்திரனால் இரட்டப்பாடி நாட்டிற்கு அனுப்பப்பட்ட சாளுக்கிய உபதளபதியான வில்வலனுக்கு வேறுவழி எதுவும் இல்லாதிருந்தது. தான் மட்டும் தப்பலாம் என்றாலும் அப்படித் தப்பி உயிர் வாழ்வது உத்திரவாதம் இல்லாதது என்பது அவனுக்கு நன்றாகவே தெரிந்திருந்தது. உயிர் தப்பிய இரண்டாயிரம் வீரர்களை மீட்டு சேனாதிபதியிடம் ஒப்படைத்தால் தனக்கு நிச்சயமாக விருது எதுவும் கிடைக்கப் போவதில்லை என்றாலும் அது தன் கடமை என்பதையும் அது நடக்க வேண்டுமானால் உதயசந்திரன் கூறியதை நிறைவேற்றினால் தான் உண்டு என்பதையும் உணர்ந்த அவன் கரைக்குச் சென்றதும் அதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டான்.

ஆற்றுப் போரில் சாளுக்கியர் படை பெருந்தோல்வி அடைந்தது ஊர் மக்களுக்கு அதிர்ச்சியாக இருந்தாலும் அதையடுத்து பல்லவர் படை வரப் போகிறதென்ற செய்தியே பேரதிர்ச்சியாக இருந்தது. ஏற்கெனவே பல்லவ இளவரசரின் தலைமையில் சென்ற காலாட்படை உபத்திரவம் எதையும் கொடுக்கவில்லை என்றாலும் உணவு பொருட்களைக் கேட்டு பெற்றுச் சென்றிருந்தது. அதிலிருந்து மீள்வதற்குள் மீண்டும் ஒரு பல்லவர் படை வரவிருந்ததால் என்ன ஆகுமோ என்று அஞ்சிய மக்கள் வில்வலன் கேட்டபடி அனைத்தையும் கொடுத்து உதவினார்கள்.

வில்வலனுக்காக ஆற்றுப் படுகையில் காத்திருந்த பல்லவர் படை விரைவிலேயே உணவைப் பெற்றது. வில்வலன் அழைத்து வந்திருந்த புரவி வணிகர்களிடம் பேசினான் உதயசந்திரன்.

வியாபாரிகளைப் பொறுத்தவரை எந்த நாடு என்ற பேதம் அவர்களுக்கில்லாமல் இருந்தது. தங்களுக்குக் கிடைக்கும் வருமானம் மற்றும் லாபம் ஆகியவற்றின் அடிப்படையில் அவர்கள் நேர்மையாக நடந்து கொண்டார்கள். எனவே கோரிய பொற்காசுகளைப் பெற்ற அவர்கள் போரில் பிடிபட்ட புரவிகளை காஞ்சிக்கு கொண்டு போய் சேர்க்க முறி எழுதி ஒப்புக் கொண்டனர்.

அதற்குப் பிறகு வில்வலனிடம் பேசிய உதயசந்திரன், ''வில்வலா, உன்னையும் உன்னுடன் மிஞ்சிய வீரர்களை இதே களத்தில் உயிரோடுவிடுகிறேன். நீங்கள் வந்த வழியே திரும்பி எங்கு போக வேண்டுமோ அங்கே செல்லுங்கள்'' என்றான்.

அப்போது வீரர்களில் சிலர், ''ஐயா, நாங்கள் எந்த நாட்டிற்கும் சொந்தமானவர்கள் அல்ல. ஆகவே எங்களை உங்கள் படையில் சேர்த்துக் கொள்ளுங்கள்'' என்றார்கள்.

''இவர்களின் எண்ணிக்கை முன்னூறுக்கு மேல் இருக்கும் உபதலைவரே. நமது படையில் ஐநூறு பேர் மடிந்துவிட்டார்கள். ஆகவே இவர்களை நம் படையில் சேர்த்துக் கொள்ளலாம்'' என்றாள் ஆலோசகரான சந்திரலேகா.

''தலைநகருக்கு அருகில் வந்துவிட்ட நிலையில் இவர்களையெல்லாம் நம்பி நம் படையில் சேர்த்துக் கொள்வது விவேகமானதல்ல சந்திரலேகா. நம் படையில் இப்போது பல்லவ விசுவாசிகளே இருக்கிறார்கள். கலப்படமில்லாத இந்தப் படைதான் நமக்கு ஏற்றது. நமக்கு ஐநூறு வீரர்கள் இழப்பு நேரிட்டது நஷ்டம் தான் என்றாலும் இந்தப் போரை சரிவர

எதிர்கொள்ளாமல் வேறு மாதிரி ஆகியிருந்தால் நமது படையே ஒட்டு மொத்தமாக அழிந்திருக்கும். இதை யாரும் மறந்து விடாதீர்கள்'' என்றான் உதயசந்திரன்.

அவனது கருத்தை எல்லோரும் ஏற்றார்கள்.

அதையடுத்து சாளுக்கிய வீரர்கள் ஆற்றின் தென்கரைக்கு விடுவிக்கப்பட்டார்கள்.

அவர்கள் அனைவரும் அகன்றபின் புரவிகள் வணிகர்களிடம் ஒப்படைக்கப்பட்டன. ஐயாயிரத்திற்கு மேற்பட்ட புரவிகளை காஞ்சிக்கு கொண்டு செல்ல போதுமான நபர்களை வருவித்துக் கொண்டு பிறகு பயணப்படுவதாக வணிகர்கள் தெரிவித்தார்கள்.

அப்போது உதயசந்திரனை தனியே அழைத்த ஐராவதன், ''உபதலைவரே, உங்கள் செயல் இதுவரை கேள்விப்படாத நடைமுறையாக இருக்கிறது. இவர்களை நம்பி இவ்வளவு புரவிகளை ஒப்படைப்பதைவிட இவற்றை இவர்களிடமே விற்றுவிட்டால் என்ன? இதுதான் லாபகரமானது'' என்றான்.

''இவ்வளவு புரவிகளையும் விலை கொடுத்து வாங்குவதற்கு இங்கே உள்ள முப்பது வணிகர்களால் முடியாது. மேலும் பலரும் சேர்ந்தால்தான் முடியும். அவர்களைத் தேடிக் கண்டுபிடித்து விலை நிர்ணயம் செய்து விற்பதற்கு பல நாட்கள் ஆகலாம். நாம் வந்திருப்பது சாளுக்கியருடன் போர் புரிவதற்குத்தானே தவிர புரவி வியாபாரம் செய்வதற்காக அல்ல. இப்போதே நமது பயணம் தாமதமாகிக் கொண்டிருக்கிறது. புரவிகளால் மேலும் தாமதமாகக் கூடாது ஐராவதா'' என்றான் உதயசந்திரன்.

''அப்படியானால் வேறு ஒன்று செய்யலாம். புரவிகளை இவர்கள் காஞ்சி வரையில் கொண்டு செல்ல வேண்டாம். பாதுகாப்பான ஓரிடத்தில் இவற்றை வைத்து பாதுகாக்க மட்டும் வணிகர்களைப் பயன்படுத்திக் கொள்ளலாம். பல்லவர் படை காஞ்சிக்குத் திரும்பும்போது இவற்றைக் கொண்டு செல்லலாம்.''

''மீண்டும் மீண்டும் சொல்கிறேன். நமது முக்கிய நோக்கம் போரே தவிர புரவிகள் அல்ல. அதோடு போரின் முடிவும் அதற்குப் பிறகு மேற்கொள்ளக்கூடிய பயணமும் எப்படி இருக்கும் என்பதை இப்போதே அறுதியிட்டுச் சொல்ல முடியாது. புரவிகளை நடுவழியில் வைத்து பாதுகாப்பது என்பது சரியான உபாயமல்ல. அது அபாயகரமானது. வணிகர்கள் நம்பகரமானவர்கள்தான். அவர்களை நம்பி புரவிகளை ஒப்படைப்பதுதான் ஏற்றது. அதோடு காஞ்சிக்குப் புரவிகள் தேவை.''

முடிவுகளை எடுப்பதில் உதயசந்திரன் தெளிவாகவும் உறுதியாகவும் இருக்கிறான் என்பதை அறிந்து கொண்ட ஐராவதன் மேற்கொண்டு இது விஷயமாகப் பேசவில்லை.

பிறகு புரவிப்படையானது அணிவகுத்துப் புறப்பட்டது. நன்றாகப் பொழுது விடிந்து மூன்று நாழிகையும் கழிந்த நிலையில் ஆற்றின் வடகரையை அடைந்தது படை.

ஐராவதனைப் பார்த்து, ''ஐராவதா, சாளுக்கியர் படையில் போய்ச் சேர்ந்து சாளுக்கிய வீரனாகப் போரிட அனுமதி தரும்படி நீ ஆரம்பத்தில் கேட்டாய். அப்போது உன்னைச் செல்லும்படிச் சொன்னேன். நீ அப்போது செல்ல மறுத்தாய். உரிய இடம் வரும்போது கேட்கிறேன் என்று சொன்னாய். இப்போது நாம் சாளுக்கிய நாட்டிற்கு வந்துவிட்டோம். இனி நான் எடுக்கக்கூடிய ஒவ்வொரு நடவடிக்கையும் சாளுக்கியர்களுக்குப் பாதகமானதாகத் தான் இருக்கும். அவற்றை உன்னை வைத்துக் கொண்டு செய்வதற்கு எனக்கு விருப்பமில்லை. உனக்கு இனி ஆபத்தும் இல்லை. நீ இங்கேயே விடை பெற்றுக்கொள். உன் விருப்பப் படி சாளுக்கியர் படைகளோடு சேர்ந்துகொள்'' என்றான் உதயசந்திரன்.

''உபதலைவரே, நான் அவ்வாறு விரும்பியதும் உங்களிடம் தெரிவித்ததும் உண்மைதான். நேற்றிரவு நடந்த போரில் கூட நான் உங்கள் பக்கம் இருந்துதான் போரிட்டேனே தவிர சாளுக்கியர் பக்கம் போக விரும்பவில்லை. கடந்த இரண்டு மாதங்களாக உங்களோடு இருந்து பழகிவிட்ட பின் உங்களை விட்டுப்போக என் மனம் விரும்பவில்லை. வீரனாய் இருப்பவன் எங்கேயிருந்து போரிட்டால் என்ன? அவனுக்கு கடமை போர்தான். ஆகவே நான் உங்களுடனேயே இருந்துவிடுகிறேன்'' என்றான் ஐராவதன்.

''உன் தீர்மானம் பாராட்டிற்குரியதுதான். ஆனாலும் தாய்நாடு என்று ஒன்றிருக்கிறது. அங்கே பிறந்தவர் அதை மதிக்க வேண்டும். அதற்குரிய சேவையைச் செய்ய வேண்டும். இதை நீ மீற வேண்டாம்.''

''உபதலைவரே, நான் கேள்விப்பட்டவரை நீங்கள் சோழ நாட்டவர். அதுதான் உங்கள் தாய்நாடு. ஆனால் நீங்கள் பல்லவ நாட்டிற்கு சேவை செய்கிறீர்கள். அது சரி என்றால் நானும் ஏன் பல்லவர் படையில் பணி புரியக்கூடாது?''

''மிக்க மகிழ்ச்சி வீரனே. இனி நீ பல்லவ விசுவாசி என்ற நினைப்புடன் உன் கடமைகளைச் செய்'' என்றான் உதயசந்திரன்.

அதற்குப்பின் ஐராவதன் பல்லவ வீரனாகத் தன்னை அர்ப்பணித்துக் கொண்டான்.

உதயசந்திரன் இரண்டு ஆயிரம் கண்ணர்களை அழைத்தான்.

''நீங்கள் இருநூறு வீரர்களை அழைத்துக் கொண்டு முன்னே செல்லுங்கள். கொம்புகளை முழக்கி ஊரின் பிரதான பாதைகளில் செல்லுங்கள். பல்லவரின் புரவிப்படை உதயசந்திரனின் தலைமையில் வருவதாகவும் அவற்றுக்கு வேண்டிய உணவு முதலிய வசதிகளைச் செய்துதர வேண்டும் என்றும் ஒவ்வொரு இல்லத்திலும் உள்ள தங்கம் மற்றும் வெள்ளி முதலிய ஆபரணங்களைத் திரட்டி ஊரின் மத்தியில் கொண்டு வந்து குவிக்க வேண்டும் என்றும் மறுத்தால் மக்களைக் கொன்று குவிக்கவும் ஊரைக் கொளுத்தவும் பல்லவர் படை தயங்காது என்றும் அறிவிப்பு செய்யுங்கள்'' என்றான்.

இதுபோன்ற கட்டளைகளை சாளுக்கிய ஊர் மக்கள் எதிர்பார்க்கவே செய்தார்கள். எனவே அறிவிப்பு வந்ததும் அனைத்தும் முறையாக நடந்தன. பல்லவர் படை தங்களை அழிக்காமல் இருந்தால் போதும் என்ற நினைப்பில் ஊர் மக்கள் முழுவதுமாக ஒத்துழைத்தார்கள்.

ஒவ்வோர் ஊரிலும் படைகளுக்கு உணவும் தங்க இடமும் கிடைத்தது.

அதேபோல் செல்வக் குவியலும் கிடைத்தது.

அவற்றையெல்லாம் மூட்டைகளாகப் பாரவண்டிகளில் ஏற்றி படையோடு கொண்டு சென்றான் உதயசந்திரன்.

பணியும் மக்களை மதிக்கவும் அவர்களை நாகரீகமாக நடத்தவும் தன் படைகளுக்குத் திட்டவட்டமான கட்டளைகளை உதயசந்திரன் இட்டிருந்தான்.

படைகளும் அதைப் பின்பற்றியதால் எந்த ஓர் ஊரிலும் 'பல்லவர் படை மக்களை கொடுமைப்படுத்தினார்கள்' என்ற பேச்சு எழவில்லை.

இப்படி பத்து காத தூரத்தை பல்லவர் படை சிரமமின்றிக் கடந்தது.

அடுத்ததாக வந்த பனையூரில் சிக்கல் எழுந்தது.

பனையூரின் தலைவன் தன்னை உதயசந்திரன் வந்து சந்திக்க வேண்டும் என்று நிபந்தனை விதித்துவிட்டதாக ஆயிரம் கண்ணர்கள் தெரிவித்தார்கள்.

''அதனாலென்ன? சந்தித்தால் போகிறது!'' என்றான் உதயசந்திரன்.

''நாங்களும் உடன் வருகிறோம்'' என்று சந்திரலேகாவும் ஐராவதனும் சொன்னார்கள்.

''வேண்டாம். நான் மட்டும் போகிறேன். படைகளை நீங்கள் நன்கு கண்காணித்துக் கொண்டிருங்கள்'' என்று கூறிவிட்டுத் தனித்தே சென்றான் உதயசந்திரன்.

பனையூர் தலைவனைக் கண்டதும் அதிர்ச்சி அடைந்தான் உதயசந்திரன். அவனது தலை கிறுகிறுத்தது.

அங்கு இருந்த நபர் வேறுயாருமல்ல.

சாளுக்கிய ராஜகுமாரியான விஜயகுமாரிதான்.

☆☆☆



34

எட்டாம் பொருத்தம்

விஜயகுமாரியை ஏற்கெனவே மறந்துவிட்டிருந்தான் உதயசந்திரன். அவசியம் இல்லாதவளை அதேசமயம் அபாயகரமானவளை அதுவும் சாளுக்கிய நாட்டிலேயே சந்திப்போம் என்று அவன் சிறிதும் எதிர்பார்க்கவில்லை. எனவே அவளைக் கண்டதும் என்ன பிரச்சனை உருவாகுமோ என்று அதிர்ந்தாலும் அதை வெளிக்காட்டிக் கொள்ளாமல், ''அரசகுமாரி நீங்களா?'' என்று வியப்போடு கேட்பவனைப் போலக் கேட்டான்.

''என்னை நினைவிருக்கிறதா உனக்கு? சந்தோஷம்தான்'' என்றாள் விஜயகுமாரி.

''உங்களை எப்படி மறக்க முடியும் ராஜகுமாரி? மறக்கக்கூடிய வடிவமா இது?'' என்றான் உதயசந்திரன்.

''அதனால்தான் என்னைக் காண வருகிறேன் என்று சொல்லிவிட்டு ஓடிவிட்டாயா?'' என்று மடக்கினாள் விஜயகுமாரி.

''நான் எங்கும் ஓடவில்லை ராஜகுமாரி. உங்கள் நாட்டிற்குத்தான் வந்திருக்கிறேன்.''

''உன்னை நான் பாண்டிய நாட்டிற்குத்தான் போகச் சொன்னேன். இங்கே அல்ல.''

''ராஜகுமாரி, பாண்டிய நாட்டிற்கு நான் தான் போக வேண்டும் என்றில்லை. வெறும் தூது விஷயம். அதற்கு யார் வேண்டுமானாலும் போகலாம்.''

''எதையாவது பேசி சந்தர்ப்பத்திற்கு ஏற்றமாதிரி சமாளிக்கப் பார்க்காதே உதயசந்திரா. இப்போது நீ சொல்லும் வார்த்தைகளை அப்போதே நீ சொல்லியிருக்கலாம். ஆனால் சொல்லவில்லை. போகிறேன் என்று தான் சொன்னாய். நினைவிருக்கிறதா?''

''இருக்கிறது.''

''அப்படி வேலையை ஒப்புக் கொண்டுவிட்டு நீ அங்கே ஓடி வந்துவிட்டது நம்பிக்கைதுரோகம் இல்லையா?''

''நான் பாண்டிய நாட்டிற்குச் செல்லாமல் இருக்கலாம். ஆனால் நான் உங்கள் கட்சியில் தான் இருக்கிறேன். உங்களுக்கு உதவுவதற்காகத்தான் வந்திருக்கிறேன்.''

''உளறாதே உதயசந்திரா. எதையாவது பேசி என் கோபத்தை அதிகரிக்காதே.''

''நான் உளறவில்லை ராஜகுமாரி.''

''எனக்கு உதவ வந்ததாகக் கூறுவது உளறல். முழுப் பொய்.''

''எப்படிச் சொல்கிறீர்கள்?''

''எனக்கு உதவத்தான் சாளுக்கியர் படையை துங்கபத்திரை ஆற்றில் தோற்கடித்தாயா?''

''நிச்சயமாக அப்படித்தான்.''

உதயசந்திரனின் இந்தக் கோட்டைப் புளுகைக் கேட்டு சிரிப்பதா அல்லது கோபப்படுவதா என்று தெரியவில்லை விஜயகுமாரிக்கு.

''இதோ பார் உதயசந்திரா. இந்த ஏமாற்று வேலைகளை எல்லாம் என்னிடம் காட்டாதே. இந்தப் பனையூரில் என் சிறப்புப் படை இருக்கிறது. அவற்றை ஏவினால் உன் படையை வளைத்துக் கொண்டு நச்சு வாளிகளையும் வெடிகளையும் வீசி சில நிமிட நேரத்தில் அழிக்க என்னால் முடியும்'' என்று சொன்னாள் கோபத்துடன்.

''அரசகுமாரி, உங்களிடம் நான் எதிர்பார்ப்பது விவேகத்தையேயன்றி கோபத்தை அல்ல'' என்று நிதானமாகச் சொன்னான் உதயசந்திரன்.

''நான் என்ன விவேகம் கெட்டுவிட்டேன்?''

''என் படையை அழிப்பது விவேகமானதல்ல.''

''சாளுக்கிய எதிரிகளான உங்களை அழிப்பது விவேகமல்ல என்றால் வேறு எதுதான் விவேகமாகும்?''

''அரசகுமாரி, உங்களை பணியாட்களை அகற்ற முடியுமா?''

''எதற்காக? என்னிடம் தகாத முறையில் நடந்து கொள்வதற்கா?''

''இது அர்த்தமற்ற பேச்சு என்பது உங்களுக்கே தெரியும். பணியாட்களை அகற்றச் சொன்னது அவர்களுக்கு முன்னால் பகிரங்கமாகப் பேச முடியாது என்பதால்தான்.''

விஜயகுமாரி சற்று யோசித்துவிட்டு பணியாட்களை விலகச் சொல்லிவிட்டு, ''சொல்'' என்றாள் ஒருவித எதிர்பார்ப்புடன்.

''அரசகுமாரி, உங்கள் நோக்கம் எனக்குத் தெரியும்.''

''என் நோக்கமா? என்ன அது?'' என்று கேட்டாள் சந்தேகம் ஊடுருவும் குரலில்.

''உங்கள் நோக்கம் பற்றி மட்டுமல்ல. சேனாதிபதியின் நோக்கம் பற்றியும் எனக்குத் தெரியும்.''

''சேனாதிபதியின் நோக்கமா? எந்த சேனாதிபதி?'' - அவளது சந்தேகம் அதிகரித்ததோடு லேசான பதட்டமும் உண்டாயிற்று.

''எதற்காகப் பாசாங்கு செய்கிறீர்கள் அரசகுமாரி? சாளுக்கிய சேனாதிபதியைப் பற்றி எனக்கென்ன தெரியும்? நான் சொல்வது பல்லவ சேனாதிபதி பகதத்தரைப் பற்றித்தான்.''

''அவருக்கென்ன? அவர் நோக்கத்திற்கும் உன் நோக்கத்திற்கும் என்ன சம்பந்தம்?''

''இரண்டும் ஒன்றுதான்.''

இதைக்கேட்ட விஜயகுமாரிக்கு உள்ளுக்குள் பதட்டம் அதிகமாயிற்று. அதை மறைத்துக் கொண்டு, ''யாரோடு யாரைச் சம்பந்தப்படுத்துகிறாய்? ஜாக்கிரதை'' என்றாள்.

''மறுபடியும் பாசாங்கு காட்டுகிறீர்கள் அரசகுமாரி. அது என்னிடம் தேவையில்லை. நீங்கள் விரும்புவது பல்லவ அரியணை.''

''அது உன் கற்பனை.''

''அந்த அரியணையில் ராணியாக நீங்கள் அமர்வும் அதற்காக ராஜசிம்மனையும் அவனது இரு புதல்வர்களையும் தனித்தனியாகத் தீர்த்துக் கட்ட திட்டமிட்டிருக்கிறீர்கள். சாளுக்கிய நாட்டிற்குச் சென்றிருக்கும் பல்லவ இளவரசனைக் கொல்லவும் ஏற்பாடு செய்கிறீர்கள். பல்லவ சேனாதிபதியின் நோக்கமும் இதுதான். இதையெல்லாம் எனது கற்பனை என்று சொல்கிறீர்களா?''

உதயசந்திரனின் இந்தப் பேச்சைக் கேட்டு உண்மையிலேயே ஆடித்தான் போனாள் விஜயகுமாரி. ஆனாலும் அவனை நம்புவதற்கு அவள் தயாராக இல்லை.

''இது முழுக்க முழுக்க உன் கற்பனை தான். இப்படியொரு திட்டம் தீட்டுவதற்கு நானொன்றும் முட்டாள் அல்ல'' என்றாள்.

''ஏன் அப்படிச் சொல்கிறீர்கள் ராஜகுமாரி?''

''இது நடக்க முடியாத திட்டம். இதை முட்டாள் கூடத் தீட்டமாட்டான்.''

''அப்படிச் சொல்லாதீர்கள் ராஜகுமாரி. அவ்வாறு சொல்வது பல்லவ சேனாதிபதியை முட்டாள் என்று சொல்வதாக அமையும்.''

''அவர் முட்டாளாக இருக்கட்டுமே! எனக்கென்ன?''

''உங்களைப் பற்றியும் அந்த முடிவிற்கு வரவேண்டி யிருக்கும்.''

''உதயசந்திரா! நீ விளையாடுவது யாரிடம் தெரியுமா?''

''அரசகுமாரி என்று நீங்களே தான் சொல்லியிருக்கிறீர்களே! இதோ பாருங்கள் அரசகுமாரி, இதற்கு மேலும் நீங்கள் நான் கூறுவதை பொய் என்று சாதிப்பீர்களானால் உண்மை என்பதை நிரூபிக்க பல விஷயங்களைச் சொல்லும்படியாக இருக்கும். ஆனால் அவை நாகரீகமானவை அல்ல.''

ஸ்தம்பித்துப் போனாள் விஜயகுமாரி. உதயசந்திரன் கூறியதை வாய் மறுத்தாலும் உள்ளத்தால் மறுக்க முடிய வில்லை.

அதேசமயம் மிகவும் அந்தரங்கமான விஷயம் உதய சந்திரனுக்கு எப்படித் தெரிந்தது என்பது அவளுக்கு விளங்கவில்லை.

'தன்னை நம்ப வைக்க ஏதேதோ அநாகரீகமான விஷயங்கள் இருப்பதாகச் சொன்னானே உதயசந்திரன்? ஒருவேளை தனக்கும் சேனாதிபதிக்கும் உள்ள உறவு அவனுக்குத் தெரிந்திருக்குமோ? அது அவனுக்கு எப்படித் தெரியும்? ஒருவேளை சேனாதிபதியே சொல்லியிருப்பாரோ? சே.சே. அப்படி இருக்காது. இதைப் போய் அவர் எப்படிச் சொல்வார் இவனிடம்?' என்றெல்லாம் தனக்குள் கேட்டுக் கொண்டு குழம்பினாள்.

அவனிடம் மீண்டும் மறுப்பதா அல்லது ஒப்புக் கொள்வதா என்று யோசித்தாள்,

சாளுக்கியர் படையை துங்கபத்திரை ஆற்றங்கரையில் தோற்கடித்ததுகூட தனக்கு உதவுவதற்குத்தான் என்று சொன்னானே - அதுவும் ஒருவேளை உண்மையாக இருக்குமோ என்றெண்ணி ஆர்வமடைந்த அவள் -

''துங்கபத்திரை ஆற்றில் சாளுக்கியர் படையைத் தோற்கடித்தது எனக்கு உதவத்தான் என்றாயே அது எப்படி?'' என்று கேட்டாள்.

''நீங்கள் என்னையும் நான் சொல்வதையும் நம்புகிறீர்களா அரசகுமாரி?''

''எதற்கிந்த கேள்வி?''

''என்னை நம்பாதவர்களிடம் நான் நுட்பமான விஷயங்களை எப்படிப் பேச முடியும்?''

''நம்புகிறேன் சொல்.''

''அரசகுமாரி, உங்கள் நோக்கம் என்ன என்பதைச் சொல்லிவிட்டேன். அந்த நோக்கத்திற்குத் தேவை மூவரது உயிர். பல்லவ மன்னன் மற்றும் இரண்டு இளவரசர்கள் உயிர். இவற்றைத் தவிர எதைப் பற்றியும் யாரைப் பற்றியும் உங்களுக்குக் கவலையில்லை. முதல் முயற்சியாக சாளுக்கிய நாட்டில் இருக்கும் பல்லவ இளவரசன் மகேந்திரனை தீர்த்துக்கட்ட விரும்புகிறீர்கள். அதற்கு சேனாதிபதி உதவுவதாக உங்களுக்கு வாக்களித்திருக்கிறார். இல்லையா?''

''அப்படித்தான் வைத்துக்கொள்.''

''உத்தேசமாகச் சொல்லாதீர்கள் அரசகுமாரி. நான் சொல்வது உண்மையா இல்லையா?''

''உண்மைதான்.''

''இளவரசன் மகேந்திரனைக் கொல்லும் பொறுப்பை என்னிடம் ஒப்படைத்திருக்கிறார் சேனாதிபதி.''

''இது உண்மையா?''

''ஆம். அதை நிறைவேற்ற இளவரசனை அணுக வேண்டும். அவன் நம்பக்கூடியவனாகவும் இருக்க வேண்டும். துங்க பத்திரை போரில் நான் சாளுக்கியரைத் தோற்கடித்திருக்கிறேன். கைப்பற்றிய புரவிகளை காஞ்சிக்கு அனுப்பி இருக்கிறேன். இந்தச் செய்தி இளவரசனுக்குச் செல்லும். என்னை நம்புவானா மாட்டானா?''

''நம்புவான்.''

''அந்த நம்பிக்கையில் நான் அவன் அருகிலேயே இருக்க முடியும் அல்லவா?''

''ஆமாம்.''

''அப்படி இருந்து கொண்டு போரின் போது அவனை என்னால் வஞ்சகமாகக் கொல்லலாம் அல்லவா?''

''ஆம்.''

''இப்போது சொல்லுங்கள். துங்கபத்திரையில் நான் பெற்ற வெற்றி உங்களுக்கும் உங்கள் நோக்கத்திற்கும் சாதகமானதா இல்லையா?''

விஜயகுமாரி இதற்கு உடனடியாக பதில் சொல்லவில்லை. ஆனால் சாதகமானதுதான் என்று உள்ளுக்குள் நினைத்தாள்.

உதயசந்திரனின் பேச்சு மிகவும் சரியாகத்தான் இருந்தது.

ஆனால் காஞ்சியில் 'தன்னிடம் வருகிறேன் என்றும் அந்தரங்கப் பணியாளனாக இருக்கிறேன்' என்றும் சொல்லி விட்டுப் போனவன் தன்னைச் சந்திக்காததோடு சொல்லிக் கொள்ளாமல் ஓடிவிட்டது அவளுக்குள் சந்தேகத்தை அவளிடம் உண்டாக்கியது. எனவே அவனிடம் கேட்டாள்.

''இவ்வளவு விவரம் அறிந்த நீ என்னிடம் சொல்லிவிட்டுப் போயிருக்கலாம் இல்லையா?''

''உங்களைச் சந்தித்த அன்றே சேனாதிபதி என்னைக் கடத்திச் சென்றுவிட்டார். நான் என்ன செய்ய முடியும்?''

''கடத்திச் சென்றுவிட்டாரா?''

''ஆம் ராஜகுமாரி. நான் படையோடு புறப்படுவது யாருக்கும் தெரியக் கூடாதென்று தனது ஆட்களை அனுப்பி என் பின் மண்டையில் தாக்கி மயக்கமடையச் செய்து தூக்கிச் சென்றுவிட்டார். மயக்கம் தெளிந்த பின் நான் தக்கோலத்தில் இருந்தேன். அப்போதுதான் சேனாதிபதி தனது நோக்கத்தைக் கூறி அதை நிறைவேற்ற என்னை அந்தரங்கமாக நியமித்ததோடு நான் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்றெல்லாம் சொன்னார். ஆகவே தான் உங்களைச் சந்திக்க முடியவில்லை.''

''என் நோக்கத்தைப் பற்றி அவர் தான் சொன்னாரா உனக்கு?''

''இல்லை.''

''பிறகு எப்படித் தெரியும்?''

''அதை விளக்கமாகக் கேட்காதீர்கள். அரசகுமாரி. அது விரசமானது.''

''விளக்கமாகச் சொல்ல வேண்டாம். குறிப்பாகச் சொல்.''

''வேண்டாம் அரசகுமாரி. சொன்னால் கேளுங்கள்.''

உதயசந்திரனின் தயக்கத்திலிருந்து தனக்கும் சேனாதிபதிக்கும் இருந்த பாலியல் உறவைப் பற்றி அவன் தெரிந்து கொண்டிருக்கிறான் என்பதைப் புரிந்து கொண்டாள். அதோடு சேனாதிபதியுடன்தான் பேசியவற்றை அவன் ஒட்டுக் கேட்டிருக்க வேண்டும் என்பதையும் ஊகித்துக் கொண்டாள்.

உதயசந்திரன் பேச முற்பட்டு ''அரசகுமாரி, என் விஷயத்தில் தாங்கள் இட்ட கட்டளைகள் இரண்டு'' என்றான்.

''இரண்டா?''

''அந்தரங்கப் பணியாளனாக நியமனமாகி பாண்டிய நாட்டிற்குப் போக வேண்டும் என்றீர்கள். அதை நான் செய்யவில்லை. அது அவசியமில்லாமலும் போய்விட்டது.''

''ஆமாம்.''

''இன்னொன்றைச் சொன்னீர்கள். நான் சோர்வாக இருப்பதாகச் சொல்லி ஒதுங்கிக் கொண்டேன்.''

''ஆமாம்.''

''இப்போது சோர்வாக இல்லை. தாங்கள் சரியென்றால்...''

இதைக் கேட்டு சிரித்தாள் விஜயகுமாரி. மன இறுக்கங்களிலிருந்து விடுபட்டு இயற்கையாகச் சிரித்ததால் சிரிப்பு வெகு அழகாக இருந்தது. அதோடு முக்கியமான ஆடவரைக் கவர வேண்டிய நிலையில் எப்போதுமே தனது அங்கங்களை கவர்ச்சியாக வைத்துக் கொள்ள தனி கவனம் செலுத்தியபடியால் தற்போதும் அவளிடம் சிறப்பான கவர்ச்சி வெளிப்பட்டுக் கொண்டிருந்தது. தான் அழகாக இருக்க வேண்டும் என்ற நினைப்பு பெண்களுக்கு எப்போதும் உண்டு. அதற்காக பிரத்தியேக நேரம் எடுத்துக்கொண்டு ஒப்பனை செய்து கொள்கிறவர்கள் அதிகம். தன் அழகும் ஒப்பனையும் ஆடவர்களைக் கவர்ந்துவிட்டால் அவர்கள் அடையும் ஆனந்தம் அளவில்லாதது. அப்படியொரு அளவில்லாத ஆனந்தத்திற்காக மட்டுமின்றி ஆடவர்களை வளைத்துப் போட வேண்டிய ஆசை காரணமாகவும் நிர்பந்தம் காரணமாகவும் தன்னைக் கவர்ச்சியாக வைத்துக் கொள்வதை முக்கிய வேலையாக வைத்துக் கொண்டிருந்தாள் விஜயகுமாரி.

தூங்கும்போதுகூட ஒப்பனைகளைச் செய்து கொண்டு தூங்குவது அவளது வழக்கம்.

காஞ்சியில் புத்தர்சேரி மாளிகையில் உதயசந்திரனை எதிர்பார்த்துக் கொண்டு அவனை அசத்திவிடும் வகையில் அசாத்திய ஒப்பனைகளை செய்து கொண்டு காத்திருந்தாள். மாமிச மலையான சேனாதிபதியிடம் நசுங்கி கசங்கிய கசப்பான நினைவுகளை அகற்றிவிட்டு நல்ல வாலிபனான உதய சந்திரனோடு கழியப் போகும் மகிழ்ச்சியான இரவை கனவாக கண்டு கொண்டிருந்தாள். ஆனால் உதயசந்திரன் வரவில்லை. ஆனந்தக் கனவு கனவாகவே போய்விட்ட கவலையால் வாடிப்போனாள். இரண்டாவது முறையாக அவனைத் தவற விட்டத் தவறை எண்ணி நொந்து கொண்டாள். மறுநாளாவது வருவானா என்று அற்பமாய் எண்ணினாள். அவன் வரவில்லை. சில நாட்களில் சேனாதிபதி படைகளுடன் புறப்பட்டுவிட்டார் என்பது தெரிந்தது. உதயசந்திரனும் அப்படையோடு போயிருக்க வேண்டும் என்று கருதினாள்.

அவளுக்குக் காஞ்சியில் வேலை எதுவும் இல்லை என்று தோன்றியது. தன்னிடம் சேனாதிபதி சொன்னபடி சாளுக்கிய நாட்டில் நடைபெறப் போகும் போரில் பல்லவ இளவரசன் மகேந்திரன் கொல்லப்பட வேண்டியதை நினைத்துக் கொண்டாள். அக்காரியத்திற்கு சேனாதிபதியை மட்டும் நம்பிக் கொண்டிருந்தால் போதாது என்று கருதிய அவள் மெய்க்காவலர் ஐம்பது பேருடன் தேரில் சாளுக்கிய நாட்டிற்குப் புறப்பட்டாள்.

அவள் முறையான பாதைகள் மூலமாக சௌகரியமாகப் பயணப்பட்டாள். பல்லவர் படை பற்றிய தகவல் எதையும் அறிய முடியவில்லை. அந்த நிலையில் பனையூரை அடைந்தாள் அவள். அங்கே தன்னை யாரென அறிவித்துக்கொண்டு தலைவனின் மாளிகையில் தங்கினாள்.

அப்போது தான் துங்கபத்திரை ஆற்றில் சாளுக்கியர் படைப் பிரிவொன்றை முறியடித்துவிட்டு இரட்டப்பாடி நாட்டுப் பகுதியில் உதயசந்திரன் முன்னேறி வருகிறான் என்பதை அறிந்தாள். வழிபட்ட ஊர்களில் எல்லாம் அவன் நடந்து கொண்ட முறை பற்றியும் அறிந்து கொண்டாள். தன்னை ஏமாற்றிவிட்டுப் போன அவனை இந்த முறை தவறவிட்டுவிடக் கூடாது என்று தீர்மானித்துக் கொண்டாள். தனது தாபம் தீரும் வரை அவனைப் பிழிந்து கொண்டு பிறகு அவனையும் அவனது படைகளையும்

அழித்துவிடுவது என்று முடிவுகட்டி தன்னை வந்து சந்திக்கும்படி உதயசந்திரனுக்கு செய்தியனுப்பி வைத்தாள்.

அவன் நிச்சயம் வருவான் என்று எதிர்பார்த்தாள் அவள். அவனுக்காக ஏங்கி இருமுறை ஏமாந்த அவள் தற்போது அவனை மிரட்டி வழிக்குக் கொண்டு வர நினைத்தாள். மிரட்டுவதாக இருந்தாலும் தனது தோற்றம் மட்டும் கவர்ச்சியாகவும் கவரக்கூடிய காந்தமாகவும் இருக்க வேண்டும் என்று எண்ணி ஒப்பற்ற ஒப்பனைகளை செய்து கொண்டாள். பெண்களின் அழகு அவர்களது ஆடைகள் குறையும்போது தான் சிறப்பாக அமைகிறது என்று கணக்கிட்டுக் கொண்டு ஆடைகளைக் குறைத்து அங்கங்களைக் காட்டி அவனை அதிர வைக்க நினைத்தாள்.

ஆனால் உதயசந்திரன் பேசிய பேச்செல்லாம் அவள் எதிர்பாராத அதிர்ச்சிகளாக இருந்தன. பரவச நிலையை எதிர்பார்த்துக் கொண்டிருந்த அவளுக்கு பதட்ட நிலை உண்டாயிற்று. அதோடு உதயசந்திரன் தெரிவித்த செய்திகள் எல்லாமே உண்மைகளாகவே இருந்ததால் அவளிடம் பூத்திருந்த காமப்பூக்கள் வாடிவிட்டிருந்தன.

இந்த நிலையில் 'நான் தயார்' என்பது போல் அவன் பேசவே சிரிப்பு வந்துவிட்டது அவளுக்கு.

''ஏன் சிரிக்கிறீர்கள் ராஜகுமாரி?'' என்று கேட்டான் உதயசந்திரன்.

''உனக்கும் எனக்கும் எட்டாம் பொருத்தம் போலிருக்கிறது'' என்றாள் விஜயகுமாரி.

''ஏன் அப்படிச் சொல்கிறீர்கள்?''

''என் மனநிலை எனக்கு ஒத்துழைக்கவில்லை.''

''அதனால் என்ன? இன்றிரவு அதற்காக ஒதுக்கிக் கொண்டால் போகிறது? இப்போது நீங்கள் ஓய்வெடுங்கள்'' என்று சொன்ன உதயசந்திரன் ''நடப்பதெல்லாம் நன்றாகவே நடக்கின்றன ராஜகுமாரி. இந்த நேரத்தில் நீங்களும் ஒத்துழைக்க வேண்டும்'' என்றான்.

''சொல்.''

''நான் உங்கள் நோக்கத்தை ஈடேற்றும் வரை பல்லவர் உபதலைவனாகவும் சாளுக்கிய எதிரியாகவும் தான் நடந்து கொள்ள வேண்டும்.''

''அதற்கென்ன?''

''எனது படைகள் வழக்கம் போல இயங்குவது போல தோற்றம் இருக்க வேண்டும்.''

''அதாவது...''

''ஊர் மக்கள் எங்கள் படைகளுக்கு உணவளிக்க வேண்டும்.''

''இன்னொரு விஷயத்தை விட்டுவிட்டாயே? மக்கள் தங்கள் ஆபரணங்களையெல்லாம் ஊரின் மத்தியில் கொண்டு வந்து குவிக்க வேண்டும்.''

''அது இங்கே வேண்டாம் ராஜகுமாரி. அதற்கு பதிலாக கனமான பெட்டிகளையும் பூட்டுக்களையும் கொடுத்தனுப்புங்கள்.''

''எதற்கு?''

''நான் சாளுக்கிய நாட்டில் இதுவரை கைப்பற்றிய செல்வங்களை அப்பெட்டிகளில் வைத்து பூட்டி அனுப்பி வைக்கிறேன். அவை தங்களுக்கு என் பரிசாக இருக்கட்டும்.''

''எங்கள் நாட்டுச் செல்வங்களை எடுத்து எனக்கே பரிசாகத் தருகிறாயா?''

''அவற்றைத் தராமலேயே கூட நான் செல்லலாம் அல்லவா?''

''சரி. சரி. உன் விருப்பப்படியே ஆகட்டும்.''

''நான் புறப்படுகிறேன் ராஜகுமாரி. நள்ளிரவு வருகிறேன்.''

''வருவாயா? வழக்கம் போல ஏமாற்றுவாயா?''

''நான் உங்களை ஏமாற்றவில்லை. உண்மையைச் சொல்லி விட்டேன். அதோடு உங்களை ஏமாற்றக்கூடிய சூழ்நிலை இப்போது இல்லை. அப்படி முயன்றால் உங்கள் சிறப்பு படைகளால் ஆபத்து நேரலாம். ஆகவே நம்புங்கள். வெண்ணை திரளும் நேரம் இது. அவநம்பிக்கையால் தாழியை உடைத்து விடாதீர்கள்.''

''சரி.சரி. உன்னை அதிகம் பேசவிடக் கூடாது. நீ செல்'' என்றாள் ராஜகுமாரி.

அதையடுத்து எல்லாம் வழக்கம் போல நடந்தன.

வீரர்கள் பனையூரில் உணவுண்டார்கள்.

இரவு முகிழ்த்தது.

ஐராவதனையும் சந்திரலேகாவையும் அழைத்து உதய சந்திரன், ''இன்னும் சிறிது நேரத்தில் நான் தலைவனைச் சந்திக்கச் செல்கிறேன். அவனிடம் பேசுவதுபோல் பேசி போக்கு காட்டிவிட்டு வந்துவிடுவேன். அதேசமயம் நீங்கள் சகஜமாக

நடந்து கொள்வது போல் ஊரை விட்டு விலகிச் செல்லுங்கள். தலைவனின் ஆட்கள் வந்ததும் இந்த பெட்டிகளை அவர்களிடம் கொடுத்து எடுத்துச் செல்லும்படிச் சொல்லுங்கள்'' என்றான்.

''எல்லாம் சரியாக வருமா உபதலைவரே! சிறப்புப்படை திடீரென தாக்கினால் என்ன செய்வது?'' என்று கேட்டாள் சந்திரலேகா.

''அப்படியொரு படை இங்கே இருக்காது. அப்படிச் சொன்னது வீண் மிரட்டலாகத்தான் இருக்கும். அந்தக் கவலை உங்களுக்கு வேண்டாம்.''

உதயசந்திரன் இவ்வாறு சொல்லிக் கொண்டிருக்கும்போதே விஜயகுமாரியின் ஆட்கள் அங்கு வந்ததும் அவர்களிடம் பெட்டிகளை ஒப்படைத்தான் ஐராவதன்.

அவர்கள் நகர்ந்ததும் ''ஐராவதா? சாளுக்கிய மன்னர் சகோதரி விஜயகுமாரி எப்படிப்பட்டவள்? அவளைப் பற்றி உனக்கு ஏதாவது தெரியுமா?'' என்று கேட்டான் உதயசந்திரன்.

அதற்கு ஐராவதன் சொன்ன பதில் உதயசந்திரனை அதிர வைத்தது.

★★★



35 அதிசய சந்திரன்

''சாளுக்கிய மாமன்னருக்குச் சகோதரியா? அப்படி யாரும் கிடையாதே?'' என்று ஐராவதன் கூறியதும் அதிர்ச்சியடைந்த உதயசந்திரன், ''அப்படியானால் விஜயகுமாரி மன்னரின் சகோதரி இல்லையா?'' என்று கேட்டான்.

''யார் விஜயகுமாரியா? அவளா? அவள் பெரிய கைகாரியாயிற்றே! ரணரசிகபுரத்தை ரணகளமாக்கியவள் அவள்'' என்றான் ஐராவதன்.

''நீ என்ன சொல்கிறாய் ஐராவதா?''

''அவள் ரணரசிகபுரத்தின் முடிசூடா ராணி. காதல் வாணி. அவளை அடைய தலைநகர வாலிபர்கள் அலையோவென்று அலைந்தார்கள். விலை கேட்டு வலை விரித்தார்கள். போட்டா போட்டியில் அடித்துக் கொண்டு தலைநகரையே ரதகளறியாக்கினார்கள். சாளுக்கிய பிரதான சேனாதிபதி வீரகேசரி தான் அவளைத் துணிந்து அணுகி அடக்கினார். அவரது தற்போதைய ஆசை நாயகி விஜயகுமாரிதான்'' என்று சொன்ன ஐராவதன் ''எதற்காக அவளைப் பற்றிக் கேட்கிறீர்கள்?'' என்று கேட்டான்.

''அவள் தான் இப்போது பனையூரின் தலைவி. அவளிடம்தான் இப்போது போகிறேன்'' என்றான் உதயசந்திரன்.

''அவளிடமா செல்கிறீர்கள்? அவள் அபாயகரமானவள். எதற்கும் துணிந்தவள். புதைச் சேற்றுக்கு ஒப்பானவள். மிகவும் எச்சரிக்கையாக இருங்கள். வேண்டுமானால் உங்களுக்குப் பதிலாக நான் செல்கிறேன்'' என்றான் ஐராவதன்.

அப்போது குறுக்கிட்ட சந்திரலேகா, ''அதெல்லாம் வேண்டாம் ஐராவதா. அவரே போகட்டும். அவருக்கு இல்லாத சாமர்த்தியமா?'' என்று சொன்னாள் ஏக்கம் தொனிக்கும் குரலில்.

உதயசந்திரன் அவளது ஏக்கத்தை உணர்ந்தாலும் காட்டிக் கொள்ளாமல், ''நீங்கள் புறப்படுங்கள். எவ்வளவு விரைவாக

வெளியேற முடியுமோ வெளியேறுங்கள்'' என்று கூறிவிட்டு விஜயகுமாரியின் இருப்பிடத்திற்குச் சென்றான்.

அவன் அங்கு சென்றபோது காவலர்கள் பெட்டிகளை இறக்கிக் கொண்டிருந்தார்கள்.

அவற்றை விஜயகுமாரி இருந்த கூடத்திலேயே அடுக்கி வைக்கும்படிச் சொன்னான் உதயசந்திரன்.

முப்பது பெட்டிகள் அங்கே அடுக்கப்பட்டதை விஜயகுமாரியும் கண்டாள்.

''இப்போதாவது என்னை நம்புகிறீர்களா அரசகுமாரி? இவ்வளவு செல்வங்களையும் அதாவது நீங்கள் கூறியது போல சாளுக்கிய மக்களுக்குரிய செல்வங்களை சாளுக்கிய அரச குமாரியிடமே ஒப்படைத்துவிட்டேன்'' என்றான் உதயசந்திரன்.

விஜயகுமாரியின் கண்கள் விரிந்தன.

''என்னால் நம்ப முடியவில்லை உதயசந்திரா. இவ்வளவு செல்வங்களையா கொள்ளையடித்தாய்? அவ்வளவையும் எனக்குப் பரிசாக எடுத்து வந்துவிட்டாய். சொன்னபடி குறித்த நேரத்தில் வந்தும் விட்டாய். இனி எப்படி நம்பாமல் இருக்க முடியும்? நீ ஓர் அதிசயம். உன் பெயரை அதிசய சந்திரன் என்று மாற்றிக் கொள். அதுதான் சரியாக இருக்கும்'' என்றாள் விஜயகுமாரி பரவசத்துடன்.

அப்போது அவள் மகா கவர்ச்சியாக இருந்தாள். முனிவர்கள் கூட ஆடிப்போய் விடக்கூடிய கவர்ச்சிக்குன்றாகக் காட்சியளித்தாள். உதயசந்திரனுக்கோ வெறுப்பு தட்டியது.

சேனாதிபதியின் ஆசைநாயகியாக இருந்து கொண்டு சாளுக்கிய மன்னனின் சகோதரி என்று கூசாமல் பொய் சொல்லி சதி செய்ததோடு காமக் கடை விரித்த அவள் மீது முதல் முறையாக வெறுப்பும் அருவறுப்பும் உண்டாயிற்று உதயசந்திரனுக்கு.

ஆனால் அதை மறைத்துக் கொண்டு, ''சாதாரண ஓர் உபதலைவனுக்கு சாளுக்கிய ராஜகுமாரியான தாங்கள் தன்னையே அர்ப்பணிப்பதை விட அதிசயம் வேறு இருக்க முடியுமா அரசகுமாரி? நான் கனவிலும் நினைக்க முடியாத பாக்கியமல்லவா இது?'' என்றான்.

''பதவி என்ன பதவி? எந்த பதவியில் இருந்தாலும் பெண் பெண் தான். அவளது பலவீனம் அவளை விட்டுப் போகாது. இன்று எனக்கு இன்ப நாள். திருநாள். சொல்லியபடி நீ வந்தது

எனக்கு எத்தனை ஆனந்தமாக இருக்கிறது தெரியுமா? ஏன் இன்னும் அங்கேயே நிற்கிறாய்? இரவுப் பொழுது வீணாகிக் கொண்டிருப்பது உனக்குத் தெரியவில்லையா? வா என் மஞ்சத்திற்கு'' என்று அழைத்தாள் விஜயகுமாரி.

''அடிப்பாவி! இன்னும் எத்தனை பேரை இப்படி அழைக்கப் போகிறாய்? அதுதான் போகட்டும். உனக்கேன் அரசியல்? உன் தகுதிக்கு பனையூரில் ஓர் ஆசனம் கிடைப்பதே பெரிய விஷயம். உனக்குப் பல்லவ அரியணையா வேண்டும்? காமக் குள்ள நரிகள் அமரக் கூடிய அரியணையா அது? அப்படி ஒரு ஆசை உனக்கு வந்தது அரியணைக்கு இழுக்கு அல்லவா?'' என்று உள்ளுக்குள் சொல்லிக் கொண்ட உதயசந்திரன் மஞ்சத்தில் போய் அமர்ந்தான் அவன். அமர்ந்ததுமே அதற்காகத் துடித்தவளைப் போல் அவன் மடியில் சாய்ந்தாள் விஜயகுமாரி.

''அரசகுமாரி, பல்லவ இளவரசனைத் தீர்த்துக் கட்டியதும் சாளுக்கிய மாமன்னரைச் சந்திக்கலாம் என்று இருக்கிறேன். சந்தித்தால் தங்கள் செய்தியாக எதைச் சொல்வது?'' என்று ஓர் சொல்லம்பை விட்டான் உதயசந்திரன்.

அவள் அதிர்ந்து போய் மடியிலிருந்து எழுந்து, ''மன்னரை நீ ஏன் சந்திக்க வேண்டும்?'' என்று அவசரம் அவசரமாகக் கேட்டாள்.

''தங்கள் நோக்கத்தை நிறைவேற்றிவிட்டேன் என்பதைச் சொல்ல வேண்டாமா? அதை விட மகிழ்ச்சி தரக்கூடிய விஷயம் வேறு இருக்க முடியுமா?''

''அதெல்லாம் ஒன்றும் வேண்டாம். மன்னரிடம் நான் பேசிக் கொள்கிறேன்.''

''தங்களையாவது சந்திக்கலாம் அல்லவா?''

''அதற்கென்ன? சந்திக்கலாம்.''

''அரண்மனையிலேயே சந்திக்கலாமா? அங்கேதானே தாங்கள் இருப்பீர்கள்?''

உதயசந்திரனின் பேச்சு அவளுக்கு அடியோடு பிடிக்க வில்லை. ''வேலை முடியட்டும். நானே உன்னை வந்து சந்திக்கிறேன். உனக்கு எந்த நேரத்தில் எதைப் பேச வேண்டும் என்ற விவஸ்தையே கிடையாதா? உன்னைப் போன்ற மோசமான ஆண்பிள்ளையை நான் பார்த்ததே இல்லை'' என்று கூறி வெறியோடு அவனை இழுத்துக் கொண்டு மஞ்சத்தில் சாய்ந்து உருண்டாள் விஜயகுமாரி.

நேரம் வீணாகி விடுமோ என்ற கவலை - உதயசந்திரனை இழந்து விடுவோமோ என்ற தாபம் -

இவற்றால் துடிதுடித்த அவள் தனது ஆடைகளை வேகமாக அகற்ற முற்பட்டாள்.

உதயசந்திரன் தனது இடையில் செருகியிருந்த சிறிய சீலையை எடுத்து அவளது நாசியில் வைத்து அழுத்தினான்.

சீலையில் படிந்திருந்த மயக்கத்துளிகள் அவளை மயக்கத்தில் ஆழ்த்தியது.

அவளது உடலை மஞ்சத்தில் கிடத்திவிட்டு மாளிகையின் கீழே வந்து பனையூரின் தலைவனை அழைத்தான்.

''நீ தான் தலைவனா?''

''ஆமாம் ஐயா.''

''தலைவனைப் போலத் தெரியவில்லையே! அடிமையைப் போல அல்லவா தெரிகிறது? யார் அந்த விஜயகுமாரி? அவளுக்கு மாளிகையை விட்டுவிட்டு நீ என்ன செய்கிறாய் இங்கு?''

''அவளது ஆர்ப்பாட்டம் எல்லை மீறிக் கொண்டிருக்கிறது ஐயா. பெரிய இடத்துச் சம்பந்தம் என்று அடங்கிப் போகிறோம்.''

''எது பெரிய இடம்? இதற்கெல்லாமா அஞ்சுவது? போகட்டும். அவளுக்கு மயக்கத்துளிகளை அளித்திருக்கிறேன். அவளாக எப்போது எழுந்து கொள்கிறாளோ அப்போது எழுந்து கொள்ளட்டும். நீயாக எழுப்ப வேண்டாம். நாங்கள் புறப்படுகிறோம்.''

''அந்தப் பெட்டிகள்?''

''அவற்றை நீங்களும் அவளுமாகப் பிரித்துக் கொள்ளுங்கள்'' என்று கூறிவிட்டு புரவி மீது ஏறி தட்டிவிட்டான் உதயசந்திரன்.

புரவி பாய்ந்து சென்றது.

விரைவிலேயே தன் படைகளுடன் போய்ச் சேர்ந்து கொண்டான் உதயசந்திரன்.

அவனைக் கண்டதும், ''வாருங்கள் உபதலைவரே. விஜயகுமாரியிடமிருந்து மீண்டு வந்தது அதிசயம்தான்'' என்றான் ஐராவதன்.

''ஏன் அப்படிச் சொல்கிறாய் ஐராவதா?''

''அவள் அப்படிப்பட்டவள். யாரையும் அணுக விடாதவள். அணுகியவரை விலக விடாதவள்.''

''அப்படியெல்லாம் ஒன்றுமில்லை ஐராவதா. பெண்களின் பலவீனம் எது என்பதை நன்றாகத் தெரிந்துவிட்டால் அவர்களை வீழ்த்துவது மிகவும் எளியது.''

இங்கே குறுக்கிட்டாள் சந்திரலேகா.

''உண்மைதான் ஐராவதா. இந்த விஷயத்தில் உபதலைவருக்கு அனுபவம் அதிகம். எதிரிகளைக் காட்டிலும் பெண்களை அதிகமாக வீழ்த்திய அசகாய சூரர் அவர்'' என்றாள் முன்பு போலவே ஏக்க உணர்வுடன்.

ஐராவதன் குறுக்கிட்டு, ''உபதலைவரே, விஜயகுமாரியிடமிருந்து கொண்டு வந்த பெட்டிகளில் கற்களை நிரப்பி அனுப்பினீர்கள் அது ஏன்?'' என்று கேட்டேன்.

''அவள் அரசகுமாரி என்று நம்பியிருந்த நிலை. அவளால் இடையூறு நேரலாம் என்று நினைத்தேன். என்னை அவள் நம்ப வேண்டும். அபரிமிதமாக நம்ப வேண்டும். அதற்கு ஒரே வழி கொள்ளையிட்ட செல்வங்களையெல்லாம் அவளுக்குப் பரிசாக அளிப்பதுதான் என்று கருதினேன். அதை அவளிடமே சொல்லி பெட்டிகளை அனுப்பி வைக்கச் சொன்னேன். அவற்றில் கற்களை நிரப்பி பூட்டி அவளுக்கு அனுப்பினேன். அவளென்ன உடனடியாகத் திறந்தா பார்க்கப் போகிறாள்? அப்படி விரும்பினால் கூட திறக்க வாய்ப்பு தராத வண்ணம் பெட்டிகளை அவளது கூடத்திலேயே அடுக்கி அவளிடம் பேச்சு கொடுத்தேன். இது தான் விஷயம்.''

''அவளிடமிருந்து பெட்டிகள் வந்ததும் நான் சற்று பயந்து தான் போனேன். கவர்ந்த செல்வங்கள் எல்லாவற்றையும் அவளுக்குக் கொடுப்பது சரிதானா என்று நினைத்தேன். அதாவது பனையூர் தலைவனுக்கு கொடுப்பது சரிதானா என்று நினைத்தேன்.''

''பல்லவ நாட்டிற்காகப் பல வழிகளில் செல்வங்களைச் சேர்த்து வருகிறேன் ஐராவதா. கொள்ளைக்காரர்களிடமிருந்தும் சாணூரனிடமிருந்தும்கூட பறித்தது உனக்குத் தெரிந்ததுதானே? அவற்றையெல்லாம் போயும் போயும் பனையூர் தலைவனுக்கா வாரி வழங்குவேன்? விஜயகுமாரியின் குறுக்கீட்டால் பனையூரில் ஒரு நாணயத்தைக்கூட நாம் தொடாமல் வந்து விட்டோம். கவலையான விஷயம் அது.''

இதைக்கேட்ட ஐராவதன் சிரித்தான்.

வாதாபி நகரத்திற்கு இரண்டு காதம் தூரம் இருந்த நிலையில் முன்னோடி நகரமொன்றை ஆக்கிரமித்துக் கொண்டு தங்கியது பல்லவர் படை.

ஆயிரம் கண்ணர்கள் சிலரை அனுப்பி வாதாபியின் நிலவரத்தை அறிந்து வரச் சொன்னான் உதயசந்திரன்.

வழக்கம் போலவே அந்த நகரத்திலும் பல்லவர் படை சம்பிரதாய நடைமுறைகளை மேற்கொண்டது.

நகரத்தின் தலைவனைச் சிறை செய்து அடைத்துவிட்டு அவனது மாளிகையில் தங்கினான் உதயசந்திரன்.

சந்திரலேகாவை அழைத்தான்.

''என்ன சந்திரா. உன்னை ஆலோசகராக நியமித்ததிலிருந்து ஒரு ஆலோசனையும் சொல்லவில்லையே! என்ன ஆயிற்று?'' என்று கேட்டான்.

தனது உணர்ச்சிகளைப் புரிந்து கொண்டு அழைக்கிறானா அல்லது பொதுவாக அழைக்கிறானா என்பதை அவளால் புரிந்து கொள்ள முடியவில்லை. இருந்தாலும் தனிமையில் இருக்கும்போது அவனாக அழைத்ததற்காக மகிழ்ச்சியே அடைந்த அவள், ''நீங்கள் தான் எல்லோருக்கும் ஆலோசனை சொல்கிறீர்களே! நானென்ன சொல்வது?'' என்று கேட்டாள்.

''ஆலோசகர் பதவியில் இருக்கும் நீ இப்படிப் பேசுவது சரியா?''

''ஆமாம் பொல்லாத பதவி. தேவையில்லாத ஆலோசனைக்கு ஒரு பதவியைக் கொடுத்துவிட்டு கேள்வி வேறு கேட்கிறீர்களா?''

''பதவியை விடு சந்திரா. வழிகாட்டி என்ற பதவியில் இருந்தபோதும் ஆலோசனைகளை நீ சொல்லவில்லையா? பதவிகள் எதுவும் வகிக்காமல் கூட நீ வழிகளைச் சொல்லலாம். ஆலோசனைகளைச் சொல்லலாம். சாளுக்கிய நாட்டைப் பற்றி நீ நன்றாக அறிந்தவள் இல்லையா?''

''உபதலைவரே, வழிகளையும் ஆலோசனைகளையும் ஐராவதனைப் போன்றவர்களிடமே கேட்டுக் கொள்ளுங்கள். என்னிடம் வேண்டாம். என்னை ஒரு பெண்ணாக நினைத்தால் போதும்.''

''அந்த நினைப்பு உனக்கே கூட இல்லை என்றுதான் நினைக்கிறேன். இருந்திருந்தால் வழிகாட்டி பதவியை ஏற்றிருப்பாயா?''

''உண்மைதான் உபதலைவரே, அந்தப் பதவியை நான் ஏற்றது தவறு. அதை ஏற்ற பின் பெண் என்னும் நினைப்பு என்னை விட்டுப் போய்விட்டது. ஆனால்... ஆனால்...''

''ஆனால் என்ன சந்திரா?''

''வேண்டாம் விட்டுவிடுங்கள்.''

''எதற்காக விட வேண்டும்? வாயளவு வந்த வார்த்தை வெளியே வருவதுதான் சரி. சொல்.''

''வழிகாட்டி பதவியை ஏற்றபின் அகன்று போன பெண் எனும் நினைப்பு உங்களைச் சந்தித்த பிறகு தான் எனக்கு மீண்டும் வந்தது. நீங்களோ அதை அங்கீகரிக்கவுமில்லை. மதிக்கவும் இல்லை.''

''தவறு சந்திரா. உன் மாற்றத்தை உணர்ந்ததால்தான் உன்னை என்னோடு வைத்துக் கொண்டேன்.''

''என்ன சொல்கிறீர்கள்?''

''உண்மையைச் சொல்கிறேன். சேனாதிபதி உன்னை தன்னோடு அழைத்துச் சென்று விடுவதாகச் சொன்னபோது நான் அதை அனுமதிக்காமல் என்னோடு ஆலோசகராக வைத்துக் கொள்வதாகச் சொன்னேன். ஏன் தெரியுமா? உன்னை ஆலோசகராக வைத்துக் கொள்ள வேண்டும் என்பது என் நோக்கமல்ல. சேனாதிபதியிடமிருந்து உன்னைக் காக்க வேண்டும் என்பதுதான்.''

''அவரென்ன சிங்கமா? புலியா? அவரிடமிருந்து என்னைக் காப்பாற்றுவதற்கு?''

''அவரைப் பற்றி உனக்குத் தெரியாது சந்திரா. அவரோடு போயிருந்தால் நீ சேதாரமாகிப் போயிருப்பாய்.''

''சேதாரம் என்று எதைச் சொல்கிறீர்கள் உபதலைவரே?''

''இது உனக்கு உண்மையாகவே புரியவில்லையா?''

''அதாவது சேனாதிபதி என்னைப் பங்கப்படுத்திவிடுவார் என்கிறீர்களா?''

''அவர் அந்த விஷயத்தில் கை தேர்ந்தவர். இது குற்றச்சாட்டு அல்ல. உண்மை.''

''உபதலைவரே, பெண்ணான நான் புரவியேறி காடுமலை என்று பாராமல் வழிகாட்டி பயணம் செய்தபோது என்னை பங்கப்படுத்தியிருக்க முடியாதா? பலரும் என்னை அவ்வாறு பங்கப்படுத்த விரும்பினார்கள். முயன்றார்கள். முடியவில்லை. ஏன்?''

''நீயே சொல்.''

''அவர்கள் என்னை நீராக நினைத்தார்கள். நானோ நீருக்குள் பூத்த நெருப்பாக இருந்தேன். ஆகவே யாரும் என்னை நெருங்க முடியவில்லை.''

''இருக்கலாம். அப்போது நீ உருவத்தால் மட்டுமே பெண்ணாக இருந்தாய். மன அளவில் ஆணாக இருந்தாய். இப்போது நிலைமை வேறல்லவா?''

''பெண்களைப் பற்றி நீங்கள் சரியாக அறிந்து கொள்ளவில்லை உபதலைவரே. அவள் எந்த நிலையில் இருந்தாலும் சரி அவள் விரும்பாவிட்டால் யாரும் அவளை அடைய முடியாது. மாற்றவும் முடியாது.''

''அப்படி உங்களில் பலர் எண்ணிக் கொண்டிருக்கிறீர்களோ எண்ணவோ, சேனாதிபதியைப் போன்றவர்கள் கல்லையும் கரைக்கக் கூடியவர்கள்.''

''இப்படி நீங்கள் பேசுவதைவிட என்னைச் சேனாதிபதியுடன் அனுப்பியிருக்கலாம்.''

''என்ன நீ இப்படிப் பேசுகிறாய்?''

''அவருக்கு பெண்களின் உணர்வுகளைப் புரிந்து கொள்ள முடிகிறது. தீர்த்து வைக்க முடிகிறது. அவரிடம் அனுப்பப்பட்டு நான் என்னை இழந்திருந்தால் அது சேதாரமாக இருக்காது. உணர்வுகளைப் புரிந்து கொண்டு மதிக்காமல் இருக்கும் உங்களிடம் சிறைப்பட்டுக் கிடக்கிறேனே இதுதான் உண்மையான சேதாரம். உண்மையான வேதனை. மனதை ஆழமாகக் காயப்படுத்திவிட்டு யார் என்ன வைத்தியம் செய்தால் தான் என்ன? பயன்படாது உபதலைவரே.''

இப்படி அவள் சொல்லும் போதே அவளது கண்கள் கலங்கின.

அவளை இழுத்து மார்பிலே சாய்த்துக் கொண்ட உதயசந்திரன், ''நீ ஏன் இப்படியெல்லாம் பேசி உன்னை நோகடித்துக் கொள்கிறாய்? உன்னைப் புரிந்து கொள்ளவில்லை என்றா சொல்கிறாய்? இல்லை சந்திரா. சொல்லப்போனால் நீ

பௌர்ணமியை விடத் தூய்மையானவள். நேர்மையானவள். அவளது சூழ்நிலையும் சுற்றுப்புறமும் பாதுகாப்பானவை. அவற்றுக்குள் அவள் பங்கப்படாமல் இருப்பது வியப்பிற்குரிய விஷயமல்ல. சுற்றுப்புறம் முழுவதும் ஆபத்தானவைகளாக இருக்கும் நிலையில் நீ பங்கப்படாமல் இருப்பதுதான் அபூர்வமானது. இதை உணர்கிறேன். மதிக்கிறேன். அங்கீகரிக்கிறேன். ஆனால் இந்த அங்கீகாரத்தை உணர்ச்சிப் பிரவாகத்தின் மூலமாகத்தான் காட்டிக் கொள்ள வேண்டும் என்று நினைக்கிறாய் நீ. அதுதான் தவறு.''

''அது தவறு என்றால் அன்று திடீரென என்னைக் கட்டிப் பிடித்து முத்தமிட்டீர்களே அதற்கு என்ன பெயர்?''

''அது என் இயலாமையின் வெளிப்பாடு. நான் செய்த தவறு. அப்படி நான் செய்திருக்கக்கூடாது. இயலாத மற்றும் இக்கட்டான நேரங்களில் பொறுமையோடு சிந்திக்க வேண்டுமே தவிர அருகில் இருக்கும் பெண்ணை அணைக்க முற்படக் கூடாது. அதோடு இன்னொன்றையும் நீ தெரிந்து கொள் சந்திரா. பனையூரில் இருந்த விஜயகுமாரியை காஞ்சியிலேயே எனக்குத் தெரியும். அவள் எப்படிப்பட்டவள் என்பதைப் பற்றிப் பேச வேண்டாம். ஆனால், அவள் என்னிடம் நடந்து கொண்ட முறையைச் சொல்லி விளக்க முடியாது. அவளும் உணர்ச்சி கொப்பளிக்கும் மலையாகத்தான் இருந்தாள். ஆனாலும் அவளை ஒவ்வொரு முறையும் நான் ஏமாற்றிவிட்டுத்தான் வந்திருக்கிறேனே தவிர அவளது உணர்ச்சிகளை மதித்து ஏற்றுக் கொண்டுவிடவில்லை. பௌர்ணமி, நீ, விஜயகுமாரி மூவருமே பெண்கள்தான் என்றாலும் மூவரும் வேறுபட்டவர்கள். மூவரையும் நான் நன்றாகவே புரிந்து கொண்டிருக்கிறேன். அதனால்தான் ஒவ்வொருவரிடமும் ஒவ்வொரு மாதிரி நடந்து கொண்டு வருகிறேன். ஒன்றை நீ நன்றாக நினைவில் வைத்துக் கொள். உன்னை வெறும் கருவியாக எண்ணும் கர்வி அல்ல நான். உன்னை ஏமாற்றுவதும் என் நோக்கமல்ல. சேனாதிபதியைப் போல பெண்களிடம் என்னால் நடந்து கொள்ள முடியாது. வாய்ப்புகளையும் பெண்களையும் தவறவிடக் கூடாது என்பது அவரது கொள்கை. எனக்கு அப்படியல்ல. இரண்டையுமே முறையோடு பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று நினைப்பவன்'' என்று சொல்லி அவளை ஆறுதலாக அணைத்துக் கொண்டான் உதயசந்திரன்.

அவனது பேச்சும் அரவணைப்பும் அவளுக்குப் பேராறுதலாக இருந்ததால் உணர்ச்சிப் பூர்வமான நிலையிலிருந்து விடுபட்டு

அறிவுப்பூர்வமான நிலைக்கு மாறினாள். வாதாபியைப் பற்றி அவள் அறிந்த விவரங்களைக் கூறினாள்.

இதற்கிடையில் வாதாபிக்கு அனுப்பியிருந்த ஆயிரங் கண்ணர்கள் வந்து தெரிவித்த தகவல் மிகவும் எதிர்பாராததாக இருந்தது.

''என்ன சொல்கிறாய்?'' என்று கேட்டான் உதயசந்திரன்.

''உண்மைதான் உபதலைவரே, வாதாபியில் சாளுக்கியர் படை திரண்டிருக்கிறது'' என்றான் ஆயிரம் கண்ணன்.

''திடீரென்று எப்படி வந்தது சாளுக்கியர் படை? படை யெண்ணிக்கை எவ்வளவு இருக்கும்?'' என்று கேட்டான் உதயசந்திரன்.

''சாளுக்கிய ஒற்றன் ஒருவனைப் பிடித்து வந்திருக்கிறோம். எங்களை விட அவனைக் கேட்டால் சரியான விவரங்கள் கிடைக்கும்'' என்று கூறி ஒற்றனை முன்னே நிறுத்தினான் ஆயிரம் கண்ணன்.

அந்த ஒற்றன் வேறு யாருமல்ல.

அரிச்சந்திரன் தான்.

☆☆☆



36

நண்பர்கள்

அரிச்சந்திரனைக் கண்டதும் உதயசந்திரனுக்கு வியப்பு வரவில்லை. வெறுப்பே வந்தது.

எனவே ஐராவதனைப் பார்த்து ''ஐராவதா, இவனைத் துண்டு துண்டாக வெட்டி எங்கேயாவது புதைத்துவிடு'' என்றான் கடுமையான குரலில்.

''உபதலைவரே, அவசரப்படாதீர்கள். நான் சொல்வதைக் கேட்டுவிட்டு என்னை என்ன வேண்டுமானாலும் செய்யுங்கள்'' என்று குறுக்கிட்டு வேண்டினான் அரிச்சந்திரன்.

''சொல்.''

''சேனாதிபதி என்னை தன்னோடு கூட்டிச் சென்றாரே தவிர என்னை நம்பவே இல்லை. நிமிடத்திற்கு ஒருமுறை என்னைத் துரோகி என்று சொல்லிக் கொண்டே இருந்தார். உதய சந்திரனுக்கு அனுபவம் இல்லை. அதனால் தான் உன்னை உயிரோடு விட்டான். என்னைப் பொறுத்தவரை துரோகிகளுக்கு மன்னிப்போ மறுவாழ்வோ கிடையாது என்று மீண்டும் மீண்டும் சொல்லி என்னை வேதனைப்படுத்தினார். என்னை எதற்காக கூடவே அழைத்து வந்து நாக்கூசும்படி பேசி சித்திரவதை செய்கிறீர்கள்? என்னை அனுப்பி விடுங்களேன் என்று கேட்டேன். என் உத்தேசமும் அதுதான். துரோகியான உன்னை இந்த உலகத்தைவிட்டே அனுப்பி விடுகிறேன் என்று சொல்லி திடீரென குறுவாளை என் மீது எறிந்தார். நான் லாவகமாகத் தப்பி அவரிடமிருந்து விலகி ஓடினேன். எங்கே செல்வது என்று தெரியாமல் திணறி கடைசியில் வாதாபிக்கே ஓடினேன். அங்கிருந்து மேலும் முன்னேறிச் சென்றேன். என்னைச் சாளுக்கிய ஒற்றனைப் போல மாற்றிக் கொண்டு திரிந்தேன். அப்போது சாளுக்கியப்படையின் தாக்குதல் திட்டம் பற்றி அறிந்தேன். துங்கபத்திரா நதிக்கரையில் உங்கள் படையை பின்பக்கத்தில் தாக்குவதற்கு ஒரு பிரிவும், உங்களிடமிருந்து தனியாகப் பிரிந்த

சேனாதிபதியின் படையை வாதாபியில் தாக்க இன்னொரு பிரிவும் துங்கபத்திரை ஆற்றின் உற்பத்தி ஸ்தானத்தில் பிரிந்து செல்வதாக திட்டமிட்டதைக் கேட்டேன். வாதாபியை நோக்கி வந்த படைப்பிரிவுடன் நானும் வந்தேன். ஆனால் வாதாபிக்கு வந்த பிறகுதான் சேனாதிபதியின் படை வாதாபியைக் கடந்துவிட்டது தெரிந்தது. அதேசமயம் உங்கள் படை வாதாபியை நெருங்குவதும் சாளுக்கியருக்குத் தெரிந்தது. எனவே உங்கள் படையை அழிக்க வாதாபிச் சமவெளியில் சாளுக்கியர் படை தயாராகக் காத்திருக்கிறது. அங்கே அவர்கள் ஸர்ப்ப வியூகம் அமைக்கப் போவதாகக் கேள்வி'' என்றான் அரிச்சந்திரன்.

''சாளுக்கியர் படை எண்ணிக்கை எவ்வளவு?'' என்று கேட்டான் உதயசந்திரன்.

''முப்பதாயிரம் என்று சொல்லக் கேட்டேன்'' என்றான் அரிச்சந்திரன்.

''நம்மை விட பத்தாயிரம் பேர் அதிகம்'' என்று சொன்ன உதயசந்திரன், ''அப்படை காலாட்படையா? புரவிப் படையா?'' என்று கேட்டான்.

''காலாட்படைதான்.''

உதயசந்திரன் ஆயிரம் கண்ணனை நோக்கி, ''என்ன சொல்கிறாய்?'' என்றான்.

''சாளுக்கியப் படை பாம்பு வியூகத்தை வகுக்கிறார்கள். அதாவது வளைந்திருக்கும் பாம்பு வடிவத்தில் படை வியூகம் இருக்கும். பாம்பு வியூகத்திற்கு நாம் அமைக்க வேண்டிய மாற்று வியூகம் கருட வியூகம். பாம்பை வெல்ல கருடன் தான் சரி'' என்றான் ஆயிரங்கண்ணன்.

''அதுதான் சம்பிரதாயமான போர் முறை'' என்று ஒப்புக் கொண்ட உதயசந்திரன் ஆயிரம் கண்ணனை நோக்கி ''உன் பெயர் என்ன?'' என்று கேட்டான்.

''பரதன்'' என்றான் ஆயிரங்கண்ணன்.

பிறகு அரிச்சந்திரனைப் பார்த்து உதயசந்திரன் ''அரிச்சந்திரா, காஞ்சியில் பாண்டவ தூதப் பெருமாள் ஆலயத்தில் உன்னைக் கண்டபோது எனது உற்ற நண்பர்களில் ஒருவனாக நீ அமைவாய் என்று கருதினேன். நீயோ என்னை விரோதியைப் போல் எண்ணத் தொடங்கி என்னென்னவோ ஆகிவிட்டது. இப்போது பெரும் போரானது நம் முன்னே விரிந்து கிடக்கிறது. சேனாதிபதியும்

என்னுடன் இல்லை. இந்த நிலையில் என் அந்தரங்கத்தை அவ்வப்போது பகிர்ந்து கொள்ளவும் விவாதிக்கவும் நான்கு பேராவது இருக்க வேண்டும் என்று நினைக்கிறேன். அவர்கள் நான் சொல்வதைக் கேட்டு தலையாட்டும் பொம்மைகளாக இருக்கக்கூடாது. நான் சொல்வது தவறாக இருந்தால் சுட்டிக்காட்ட வேண்டும். செல்வது தவறாக இருந்தால் திருத்த தயங்கக்கூடாது. நால்வரும் உண்மை நண்பர்களாக இருக்க வேண்டும் என்பது என் ஆசை. நீ, பரதன், ஐராவதன், சந்திரலேகா ஆகிய நால்வரும் அந்த நண்பர்களாக இருந்தால் நன்றாக இருக்கும். உங்களுக்கெல்லாம் சம்மதமா?'' என்று கேட்டான்.

''உபதலைவரே, இன்று முதல் நான் உங்கள் நண்பன். உங்களுக்காக வாழ்வதுதான் என் வாழ்க்கை. என் உயிர் போவதானால் உங்களுக்காகத்தான் போகும்'' என்றான் அரிச்சந்திரன்.

''நான் மனதில் நினைத்துக் கொண்டிருந்தேன். நீங்கள் சொல்லிவிட்டீர்கள்'' என்றான் ஐராவதன்.

''நான் உங்கள் நண்பராவது என் பாக்கியம்'' என்றான் ஆயிரங்கண்ணனான பரதன்.

''நீ எதுவும் சொல்லவில்லையே சந்திரா?'' என்று சந்திரலேகாவைக் கேட்டான் உதயசந்திரன்.

''நான் மட்டும் உங்கள் விரோதியாகவா இருக்கப் போகிறேன்? நீங்கள் என்னைக் கைவிடாமல் இருந்தால் சரி'' என்றாள் சந்திரலேகா.

அதேசமயம் உதயசந்திரன் போரைப் பற்றி எதுவும் பேசாமல் நட்பைப் பற்றி நிதானமாகப் பேசிக் கொண்டிருந்ததைக் கண்ட அரிச்சந்திரன், ''உபதலைவரே, எதிரி இரண்டு காத தூரத்தில் இருக்கிறான். நாம் உடனடியாகப் படையை அணிவகுக்கச் சொல்லி புறப்பட வேண்டும்'' என்றான்.

''எதிரி நமக்காக வாதாபி பெருவெளியில் சர்ப்ப வியூகம் அமைத்துக் கொண்டு காத்திருப்பதாக நீ சொன்னாயல்லவா? அவன் காத்திருக்கட்டுமே! நாம் ஏன் அவசரப்பட வேண்டும்?'' என்று கேட்டான் உதயசந்திரன்.

''வேறு என்ன செய்யலாம் என்கிறீர்கள்?'' என்று கேட்டான் அரிச்சந்திரன்.

''நமது படை எண்ணிக்கையை விட எதிரியின் படை எண்ணிக்கை அதிகம். அவனிடம் போய் சிக்கிக் கொள்ள அவசரப்பட வேண்டுமா?'' என்று வினவினான் உதயசந்திரன்.

உதயசந்திரனின் போக்கு அரிச்சந்திரனுக்குப் பிடிபட வில்லை.

ஆயிரங்கண்ணனான பரதன் குறுக்கிட்டு ''எதிரி பாம்பு வியூகம் தான் என்று சொல்ல முடியாது. திடீரென மாற்றிக் கொள்ளவும் வாய்ப்பிருக்கிறது'' என்றான்.

''அதைப் பற்றி நாம் கவலைப்பட வேண்டாம். அவன் என்ன வியூகம் வேண்டுமானாலும் வகுத்துக் கொள்ளட்டும். நாம் இன்னும் இரண்டு நாளைக்கு இங்கேயே இருக்கலாம்'' என்றான் உதயசந்திரன்.

''இரண்டு நாளைக்கா? நாம் இங்கேயே இருந்தால் எதிரி நம்மை நாடி வந்துவிட்டால்?'' என்று கேட்டான் அரிச்சந்திரன்.

''நான் எதிர்பார்ப்பதும் அதுதான். நமக்கு படைபலம் குறைவு என்பதால் இந்த ஊர் தான் பாதுகாப்பு, இங்கே நம்மைத் தேடிக் கொண்டு எதிரி இங்கு வந்தால் நாம் பிரிந்தும் மறைந்தும் தாக்கலாம். ஆனால் எதிரி இங்கே வரமாட்டான் என்பது என் ஊகம்.''

உதயசந்திரனின் கணக்கு சரிதான் என்பது பரதனுக்கும் ஐராவதனுக்கும் புரிந்தது. சந்திரலேகாவும் ஓரளவிற்குப் புரிந்து கொண்டாள்.

''நம்மை நோக்கி வருவது விவேகமானதல்ல என்பது எதிரிக்குத் தெரியும். ஆகவே அவன் இங்கே வரமாட்டான். அவன் இங்கு வராமலும் நாம் அங்கே போகாமலும் இருந்தால் விடிவு எப்படி பிறக்கும்?'' என்று கேட்டாள் சந்திரலேகா.

''எதிரியை இங்கே வரச்செய்ய வேண்டியதுதான்.''

''அது எப்படி முடியும்?''

''இந்த ஊர் தலைவனைக் கட்டிப்போட்டு வைத்திருக்கிறோம் அல்லவா? அவனை அழைத்து வா பரதா.''

தலைவன் அழைத்துவரப்பட்டான்.

அவனை ஊடுருவிப் பார்த்த உதயசந்திரன், ''தலைவனே, சாளுக்கியர் படைகள் எங்களை அழிக்க வாதாபி பெருவெளியில் திரண்டிருக்கின்றன. தெரியுமா உனக்கு?'' என்று கேட்டான்.

''தெரியும்'' என்றான் தலைவன்.

''அந்தப் படை வாதாபியை விட்டு விலக வேண்டும்.''

''விலக வேண்டுமா? அது எப்படி முடியும்? அவை வந்திருப்பதே உங்கள் படையை அழிப்பதற்குத்தான்.''

''அதனால்தான் அந்தப் படை வாதாபியை விட்டு விலக வேண்டும் என்கிறேன்.''

''அது அந்தப் படையின் தலைவர்தான் முடிவு செய்ய வேண்டும்.''

''நான் சொல்வதும் அதுதான்.''

''அதை என்னிடம் ஏன் சொல்கிறீர்கள்! அவருக்கு உத்திரவிட என்னால் முடியாது.''

''அந்த வேலையைச் செய்யும்படி உனக்கு நான் சொல்லவில்லை.''

''பின்?''

''நான் சொன்னதையெல்லாம் நீ இந்த ஊர் மக்களுக்கு அறிவித்தால் போதும். அதோடு இன்னொன்று.''

''என்ன?''

''இரண்டு நாட்களுக்குப் பிறகு ஊர் மக்கள் பத்து பத்து பேராக என் படையால் அழிக்கப்படுவார்கள். இதையும் அறிவித்துவிடு.''

''எங்களை எதற்காக அழிக்க வேண்டும்? நாங்கள் என்ன பாவம் செய்தோம்?''

''சாளுக்கியர் படை எங்களை அழிக்கலாம். நாங்கள் உங்களை அழிக்கக் கூடாதா?''

''நாங்கள் படையல்ல. பொதுமக்கள்.''

''யாராக இருந்தால் என்ன? எங்களுக்கு எதிரிகள் தானே?''

''இது அதர்மம்.''

''போரே அதர்மம்தான். அந்த விவாதம் நமக்கு வேண்டாம். சொன்னதைச் செய். மக்கள் அலறுவது எனக்குக் கேட்க வேண்டும். போ'' என்று சொல்லி தலைவனை அனுப்பி வைத்த உதயசந்திரன் ஆயிரங்கண்ணர்களையும் நூற்றுவ கண்ணர் களையும் திரட்டி தன் போர்த் திட்டத்தை அறிவித்தான்.

திட்டம் அபாயகரமாக இருந்தது.

''நீங்கள் சொல்வதுபோல் எல்லாம் நடக்க வேண்டும். அப்படி நடந்தால் தான் வெற்றி வாய்ப்பு கிடைக்கும்'' என்றார்கள் சிலர்.

''அப்படியொன்றும் கட்டாயமல்ல. என் கணக்குப்படி நடக்கவில்லையென்றால் மாற்றி யோசிக்க வேண்டியதுதான். அதை நான் பார்த்துக் கொள்கிறேன். இரண்டு நாட்களுக்கு நீங்கள் நன்றாக ஓய்வெடுத்துக் கொண்டு போருக்குத் தயாராகுங்கள்'' என்று சொன்ன உதயசந்திரன் அரிச்சந்திரனையும் பரதனையும் பார்த்தது ''நான் சொன்னது போல் செய்யுங்கள். பரதா! அரிச்சந்திரன் தனியாகப் போகட்டும். நீ நான்கு வீரர்களையாவது அழைத்துக் கொண்டு போ'' என்று கூறினான்.

இதற்கிடையில் ஊரின் தலைவன் உதயசந்திரன் கூறியபடி அறிவிப்பைச் செய்தபோது மக்கள் அஞ்சவே செய்தார்கள். பல்லவர் படை இப்படியொரு அதர்மத்தைச் செய்யும் என்று அவர்கள் எதிர்பார்க்கவில்லை. மக்கள் ஆங்காங்கே கூடி பலவாறு பேச முற்பட்டார்கள்.

''பல்லவர் படை மீது குறை சொல்லிப் பயனில்லை. அவர்கள் நிலை அப்படி. அவர்களை அழிக்க நமது சாளுக்கியப் படை முயன்றால் தங்கள் ஆத்திரத்தை நம் மீது தான் காட்டுவார்கள்'' என்று சிலர் பல்லவர் படை மீது நியாயம் கற்பித்தார்கள்.

''நம் மீது ஆத்திரப்பட்டு என்ன பிரயோஜனம்? ஆத்திரத்தை சாளுக்கியர் படை மீது காட்டுவதுதானே?''

''சாளுக்கியர் படை எண்ணிக்கை அதிகமாம். ஆகவே தான் பல்லவர் படை அதை எதிர்கொள்ளாமல் நம் மீது ஆத்திரத்தை தீர்த்துக் கொள்ளப் பார்க்கிறது.''

''நம்மை அழிப்பதால் பல்லவப் படைகளுக்கு என்ன ஆதாயம்? சாளுக்கியர் படை இவர்களை சும்மா விட்டு விடுமா?''

- இப்படி அவரவர்களும் பேசிக் கொண்டிருக்க உதயசந்திரனிடம் சந்திரலேகாவும் கேட்டாள்.

''உபதலைவரே, இந்த ஊர் மக்களை அழிக்க நினைப்பது எந்த விதத்தில் நியாயம்? இதுபோன்ற ஒரு செயலை நான் எங்கும் கேட்டதில்லையே?'' என்றாள்.

உதயசந்திரன் வீரன் ஒருவனை அழைத்து ஏதோ கூறிவிட்டு ''என்ன கேட்டாய் சந்திரா? இதுபோன்ற ஒரு செயலை நீ எங்கும்

பார்த்ததில்லை என்றா சொன்னாய்? அதனாலென்ன? இங்கு பாரேன்?'' என்றாள்.

அவன் பேசியவிதம் அவளுக்குப் பிடிக்கவில்லை.

''உபதலைவரே, மகாபாரதத்தைப் படித்திருக்கிறீர்களா நீங்கள்? மதுராபுரி மீது எதிரிகள் தாக்கப் போவதாகச் செய்தி வந்ததும் கிருஷ்ணர் என்ன செய்தார் தெரியுமா? போரினால் மக்கள் எந்த கஷ்டத்தையும் அடையக் கூடாது என்று அவர்களை ஊரிலிருந்து அகற்றி வேறோர் ஊரில் குடியமர்த்தினார். அதுதான் துவாரகை. நீங்களோ இந்த ஊர் மக்களை போரைக் காரணம் காட்டி அழிக்க முயல்கிறீர்கள்'' என்றாள்.

''அது வேறு. இது வேறு சந்திரா. கிருஷ்ணர் பகைவரிடமிருந்து காப்பாற்றியது தனது மக்களை. அதாவது தனது ஊர் மக்களை. இங்கே நான் அழிக்க முயல்வது எதிரி நாட்டு மக்களை. இந்த வித்தியாசத்தைப் புரிந்து கொள்'' என்றான் உதயசந்திரன்.

''வித்தியாசம் என்பது மன்னர்களுக்குள்ளேதான். மக்களிடையே இல்லை. அவர்கள் எங்கே இருந்தாலும் ஒரே இனம்தான். அவர்களுக்குள் வித்தியாசமில்லை.''

''மன்னர்கள் ஏன் போரிடுகிறார்கள்? மக்களுக்காகத்தான். ஆகவே அவர்கள் துன்பத்தை அனுபவித்துத்தான் ஆக வேண்டும்.''

உதயசந்திரன் ஏதோ பதிலுக்கு பதில் பேசுகிறானே தவிர உண்மையைப் பேசவில்லை என்பதை உணர்ந்து கொண்ட சந்திரலேகா அவனை விட்டு ஐராவதனிடம் சென்று தன் கவலையை வெளியிட்டாள்.

ஐராவதன் அவள் சொன்னதையெல்லாம் கேட்டுவிட்டு ''இப்போது வெறும் அறிவிப்புதானே செய்யப்பட்டிருக்கிறது? யாரையும் கொன்றுவிடவில்லையே! அதோடு நீங்கள் துங்கபத்திரை ஆற்றுப் போரை மட்டும் மனதில் வைத்துக் கொண்டு பேசுகிறீர்கள் என்று நினைக்கிறேன். அது தவறு. இடத்திற்கு இடம் போர்களும் போர் உத்திகளும் மாறுபடும். துங்கபத்திரையில் நமது படைபலம் அதிகம். உபதலைவர் எதிர்பார்த்த மாதிரி சம்பவம் நடந்தது. அதோடு அது திடீர் தாக்குதல். தற்போதைய நிலை அதுவல்ல. துங்கபத்திரை ஆற்றுப் போரைப் போலவே இந்தப் போரும் நமக்குத் தேவையற்றது. ரணரசிகபுரமான சாளுக்கியர் தலைநகரில் நடைபெறக்கூடிய இறுதிப்போர் வரை தனது படையை காப்பாற்றிச் செல்ல வேண்டிய பெரும் பொறுப்பு நமது உபதலைவருக்கு இருக்கிறது.

துங்கபத்திரை போரில் ஐநூறு வீரர்களை இழந்ததையே பெரிய நஷ்டமாகக் கருதுகிறார் அவர். ஆகவே இந்தப்போரைச் சரியாகக் கையாளாமல் விட்டால் பெரும் சேதம் விளையும் என்று நினைக்கிறார். ஆகவே தான் பல்வேறு உபாயங்களைச் செய்ய வேண்டியதாக இருக்கிறது'' என்றான்.

''அப்பாவி மக்களை கொல்ல நினைப்பது தான் உபாயமா?'' சீறினாள் சந்திரலேகா.

''நீங்கள் அவசரப்படுகிறீர்கள். ஆத்திரப்படுகிறீர்கள். உபதலைவரின் செயல்பாடுகள் நமக்குப் புரியாமல் இருக்கலாம். அவரது நோக்கம் இந்த ஊர் மக்களைக் கொல்வது அல்ல என்பதைப் புரிந்து கொள்ளுங்கள். அவருக்கு ஏதோ ஒன்று பிடிபடாமல் இருக்கிறது. அதுதான் உண்மை.''

''அப்படியென்ன விஷயம் பிடிபடாமல் இருக்கிறது?''

''துங்கபத்திரை ஆற்றங்கரையில் எதிரிகளை முறியடிப்பதில் அவருக்கு முழு நம்பிக்கை இருந்தது. எனவேதான் யாரிடமும் ஆலோசனையும் கேட்கவில்லை. ஆனால் தற்போது அவருக்கு முழு நம்பிக்கை இன்னும் வரவில்லை என்பது என் ஊகம். எனவேதான் படைகளை ஊருக்குள்ளேயே வைத்திருக்கிறார். இன்னுமொன்றை நீங்கள் கருத்தில் கொள்ள வேண்டும்.''

''என்ன அது?'

''உபதலைவர் இப்போதுதான் முதன் முதலாகப் படை நடத்துகிறார். போர் அனுபவம் இல்லை. அப்படி அனுபவம் இல்லாத நிலையிலேயே துங்கபத்திரை போரில் வென்றார். இங்கேயும் வெல்வார். அதை யோசித்துத்தான் செய்ய வேண்டும்.''

''இரண்டு காத தூரத்தில் எதிரி இருக்கிறான். அவனைச் சந்திப்பதில் தாமதம் காட்டுவது பலவீனம் ஆகாதா?''

''அம்மணி, நாம் என்ன ஓட்டப்பந்தயத்திலா இருக்கிறோம் அவசரம் காட்டுவதற்கு? தாமதிப்பது கூட சில நேரங்களில் விவேகமான போர்நடவடிக்கைதான்.''

உதயசந்திரன் மீது ஐராவதனுக்கு இருந்த நம்பிக்கை சந்திரலேகாவை அசர வைத்தது. சாளுக்கிய நாட்டவனான அவன் உதயசந்திரனை மிகச்சரியாகப் புரிந்து கொண்டிருந்ததை உணர்ந்து சற்று வெட்கப்படவும் செய்தாள்.

அதேசமயம் துங்கபத்திரை ஆற்றுப் போருக்கு முன்னால் உதயசந்திரன் சோர்வாக இருந்ததையும் திடீரென தன்னை அழைத்து முரட்டுத்தனமாக அணைத்து முத்தமிட்டதையும் அதையடுத்து சோர்வு நீங்கப் பெற்று சுறுசுறுப்படைந்ததையும் நினைவூட்டிக் கொண்ட அவள் இப்போதும் அதேபோன்ற இறுக்கம் அவனிடம் உண்டாகியிருக்கலாமோ என்று நினைத்தாள்.

அப்படித்தான் இருக்கும் என்று மனம் சொல்லியது.

அன்று அவனது தனிமை கிடைக்கவில்லை. மறுநாள் இரவு கிடைத்தது.

''என்ன உபதலைவரே, உங்களுக்கு ஏதாவது குழப்பமா என்ன?'' என்று ஆசையை மறைத்துக் கொண்டு கேட்டாள் சந்திரலேகா.

அதற்கு உதயசந்திரன் கூறிய பதில் அவளை ஸ்தம்பிக்க வைத்தது.

''இது மகா கேவலம்'' என்று வாய்விட்டே சொன்னாள் அவள்.

☆☆☆



37

வில்வபுரப் போர்

''என்ன ஏதாவது குழப்பமா?'' என்று சந்திரலேகா கேட்டதும், ''குழப்பம் இருந்தது. உண்மைதான் சந்திரா. ஆனால் சற்று முன்னர்தான் விலகியது'' என்றான் உதயசந்திரன்.

''தெளிந்துவிட்டீர்களா இப்போது?''

''ஆம். இன்றோடு இரண்டு நாட்கள் முடிகின்றன. மக்களை பத்து பத்து பேராகக் கொல்லும் விஷயமாக ஆணையை பிறப்பித்துவிட்டேன்.''

''மக்களை நாளை முதல் கொல்லப் போகிறீர்களா? உங்களுக்கு உணவளித்தவர்களை உலகை விட்டு அனுப்பப் போகிறீர்களா?''

''இல்லை சந்திரா. அந்த ஆணையை நிறைவேற்ற வேண்டாம் என்று சொல்லிவிட்டேன்.''

''ஏன்?''

''போருக்கும் அவர்களுக்கும் சம்பந்தமில்லை சந்திரா. அவர்கள் அப்பாவிகள்.''

''இதைத்தானே நேற்று நானும் சொன்னேன்.''

''சொன்னாய். ஆனால் இப்போதுதான் அது புரிந்தது. ஆகவேதான் ஆணையை ரத்து செய்துவிட்டேன்.''

''பிறகு?''

''சாளுக்கியர் படைக்கும் நமக்கும் உள்ள நெருக்கடியை நாம்தான் தீர்த்துக் கொள்ள வேண்டும். மக்களை பயன்படுத்தக் கூடாது.''

''இதுகூட நான் சொன்னதுதான்.''

''எனது படையைச் சேதாரமில்லாமல் பாதுகாத்துக் கொண்டு செல்ல வேண்டிய பொறுப்பு எனக்கிருக்கிறது.''

''தெரிந்த விஷயம்தான்.''

''அப்படி அவர்களை பாதுகாக்க வேண்டுமென்றால் அதற்குப் போர் பயன்படாது.''

''அதனால்?''

''போர் வேண்டியதில்லை.''

''வேண்டியதில்லையா? வேண்டாம் என்றால் சாளுக்கியர்கள் விட்டுவிடுவார்களா?''

''கேட்கும் விதத்தில் கேட்டால் ஒப்புக் கொள்வார்கள்.''

''அது என்ன விதம்?''

''சாளுக்கியர் படையிடம் நான் சரணடைய தீர்மானித்து விட்டேன்.''

''சரணடையப் போகிறீர்களா?''

''ஆம். பல்லவர் படைகளை சாளுக்கியர் தலைநகர் வரை செல்ல அனுமதிக்கும்படி அவர்களைக் கேட்டுக் கொண்டு நான் சரணடைந்துவிடப் போகிறேன்.''

''அவர்கள் ஒப்புக் கொள்வார்களா?''

''நாம் இதுவரை கொள்ளையடித்த செல்வங்களைக் கொடுத்தால் ஒப்புக் கொள்ள மாட்டார்களா? அதோடு நீயும் இருக்கிறாய்.''

''என்ன உளறுகிறீர்கள்?''

''நீயும் என்னுடன் வந்து கெஞ்சிக் கேட்டுக் கொண்டால் என் கோரிக்கை வலுப்பெறும். பெண் என்றால் பேயும் இரங்கும் என்று நமது நாட்டில் சொல்வார்களே உனக்குத் தெரியாதா?''

''இது மகா கேவலம்.''

''இல்லை சந்திரா. இது கேவலம் இல்லை.''

''எதிரியிடம் சரணடைவது கேவலமில்லையா?''

''உயிர் முக்கியமானது சந்திரா. அது போனால் வராது. அதை தக்கவைத்துக் கொள்ள முயல்வது எப்படி கேவலமானதாகும்?''

''வீரர்களுக்கு உயிர் பெரிதல்ல. மானம்தான் பெரிது. இதுதான் எல்லா நாடுகளிலும் நிலவும் நிலை.''

''புலி பதுங்குவது பாய்வதற்குத்தான். இதுவும் எல்லா நாடுகளிலும் பேசப்படும் பேச்சுதான்.''

உதயசந்திரனின் பேச்சைக் கேட்கக் கேட்க கடுப்பாக இருந்தது சந்திரலேகாவுக்கு.

சரணடையும் காரியத்திற்கு இப்படியெல்லாம் அவன் சப்பைக்கட்டு கட்டுவான் என்று சிறிதும் எதிர்பார்க்கவில்லை.

இந்த நிலையில் உதயசந்திரன் அனுப்பியிருந்த அரிச்சந்திரன் வந்தான்.

''சொல் அரிச்சந்திரா''

''நீங்கள் நினைத்தது நடந்துவிட்டது.''

''சொல்.''

''நீங்கள் இங்கேயுள்ள மக்களை அழிக்கப் போவதாகச் சொன்ன விஷயம் சாளுக்கிய படைகளுக்கு எட்டிவிட்டது. நீங்கள் எதிர்பார்த்தது போலவே சாளுக்கிய உபதளபதி இதைக் கேட்டு அதிர்ச்சியடைந்தான். நம்மை அழிப்பதற்காக வாதாபியை விட்டு புறப்பட்டுவிட்டான். ஆனால் ஒரு மாற்றம்.''

''சொல்.''

''நீங்கள் எதிர்பாராத மாற்றம்.''

''எதுவானாலும் சொல்.''

''சாளுக்கிய படை மொத்தமும் நம்மை நோக்கி வரவில்லை. பத்தாயிரம் பேர் வாதாபியிலேயே இருக்கிறார்கள். இருபதாயிரம் வீரர்கள் மட்டும் நம்மை நோக்கி வருகிறார்கள்.''

''சாளுக்கிய உபதளபதி புத்திசாலிதான்.''

''இப்போது என்ன செய்யப் போகிறீர்கள்?''

''நாம் பின் வாங்க வேண்டியதுதான்.''

''பின் வாங்குவதா? எதற்காகப் பின்வாங்க வேண்டும்? ஊரில் இருந்தபடி போரிடுவது பாதுகாப்பானது என்று நீங்கள் தானே சொன்னீர்கள்?''

''சாளுக்கிய உபதளபதி பத்தாயிரம் வீரர்களை வாதாபியில் நிறுத்திக் கொள்வான் என்று நான் எதிர்பார்க்கவில்லை.''

''அதனால் என்ன?''

''நம்மை நோக்கி வரும் இருபதாயிரம் சாளுக்கிய வீரர்களை நாம் தாக்கும்போது வாதாபியில் இருக்கும் பத்தாயிரம் வீரர்களும் வந்துவிட்டால் நம் நிலைமை சிக்கலாகிவிடும்.''

''பின்னடைந்து போனால் என்ன அனுகூலம்?''

''இருபதாயிரம் வீரர்களை நம்மை நோக்கி மேன்மேலும் இழுக்கிறோம். அவர்களுக்கும் வாதாபியில் இருக்கும் பத்தாயிரம் வீரர்களுக்கும் உள்ள இடையே உள்ள இடைவெளி

அதிகமாகிறது. இருபதாயிரம் வீரர்களை நாம் அழித்த பிறகு பத்தாயிரம் வீரர் படை வந்தால் தான் நம்மால் சமாளிக்க முடியும்?''

இருவரது பேச்சுக்களையும் கேட்டு மிகவும் குழம்பிப் போன சந்திரலேகா, ''இங்கே என்ன நடக்கிறது? உபதலைவர் எதற்காக தானும் குழம்பி மற்றவர்களையும் குழப்புகிறார்?'' என்று கேட்டாள்.

''உபதலைவர் குழப்புகிறாரா? என்ன உளறுகிறீர்கள்?'' என்று கேட்டான் அரிச்சந்திரன்.

''நான் உளறவில்லை அரிச்சந்திரா. உபதலைவர் தான் உளறுகிறார்.''

''இப்படிச் சொல்கிறீர்கள் என்றால் உங்களுக்குப் பைத்தியம்தான் பிடித்திருக்க வேண்டும்.''

''அரிச்சந்திரா, என்ன உளறுகிறாய்?''

''நான் சொன்னது சரியாகிவிட்டது.''

''என்ன சரியாகிவிட்டது?''

''உபதலைவர் உளறுவதாகச் சொன்னீர்கள். இப்போது நான் உளறுவதாகச் சொல்கிறீர்கள். மொத்ததில் உளறுவது நீங்கள்தான். பைத்தியம் தான் உளறும்.''

''ஏன் இருவருமாக என்னைப் படுத்துகிறீர்கள்? இதோ பார் அரிச்சந்திரா, சற்று முன்புதான் சாளுக்கியர் படையிடம் சரணடையப் போவதாக உபதலைவர் சொன்னார். நீ வந்ததும் வேறு மாதிரி சொல்கிறார். பரதன் வந்து சேர்ந்ததும் இன்னும் வேறு மாதிரி பேசுவார் போலிருக்கிறது.''

அரிச்சந்திரன் இதைக் கேட்டுவிட்டுச் சிரித்தான்.

''எதற்காகச் சிரிக்கிறாய்?'' - கடுப்புடன் கேட்டாள் சந்திரலேகா.

''உபதலைவராவது! சாளுக்கிய படையிடம் சரணடைவதாவது! கனவில் கூட இப்படி நினைக்காதீர்கள் அம்மணி'' என்று கூறிவிட்டுச் சென்றான் அரிச்சந்திரன்.

எதையோ கூடாகக் கேட்கத் திரும்பினாள் சந்திரலேகா.

அங்கே உதயசந்திரனைக் காணவில்லை. அவள் அரிச்சந்திரனிடம் பேச ஆரம்பித்தபோதே அவன் எழுந்து சென்று விட்டிருந்தான்.

☆

இருபதாயிரம் வீரர்களைக் கொண்ட சாளுக்கியர் படை வாதாபியிலிருந்து உதயசந்திரனின் படையிருந்த விஸ்வபுரத்தை நோக்கி இரவிலேயே புறப்பட்டது. விடியற்காலையில் விஸ்வபுரத்தை அடைந்துவிடக் கூடியநிலை.

''நமது படை விஸ்வபுரத்தை நோக்கிச் செல்வதின் நோக்கம் என்ன உபதளபதியாரே?'' என்று சாளுக்கிய உபதளபதியைக் கேட்டான் அருகே இருந்த வீரன் ஒருவன்.

''நோக்கமா? நாளையோடு எனக்கு ஐம்பது வயது நிறைவடைகிறது. அதைக் கொண்டாடி கூத்தடிக்கத்தான் விஸ்வபுரத்திற்குச் செல்கிறோம்'' என்று சொல்லி அந்த வீரனை இகழ்ச்சியுடன் சொன்ன உபதளபதி, ''முட்டாளே! அங்கே பல்லவர் படை இருப்பது தெரியாதா உனக்கு? அதை அழிக்கத்தான் செல்கிறோம்'' என்றான்.

வீரனோ உபதளபதியின் இகழ்ச்சியைப் பொருட்படுத்த வில்லை.

''நாம் வாதாபிக்கு வந்த கையோடு செய்யாமல் ஐந்து நாட்கள் கழித்து செய்கிறோமே அது எதற்காக? விஸ்வபுரத்து மக்களை பல்லவர் படை அழிப்பதை தடுப்பதற்காகத்தான் செய்தியை அறிந்த பின் நாம் கிளம்பியிருக்கிறோமா?'' என்று கேட்டான்.

''அது ஒரு சப்பையான காரணம். உண்மையான காரணம் அதுவல்ல. ஊருக்குள் இருந்து போர் செய்வது பாதுகாப்பானது என்று கருதுகிறான் பல்லவர் படையை நிர்வகிக்கும் தலைவன். அது அர்த்தமற்றது என்பதை அவனுக்குப் புரிய வைக்கவே அவன் இருப்பிடத்தை நோக்கிச் செல்கிறேன்.''

''எப்படி புரியவைப்பீர்கள்?''

''அது போர் ரகசியம்.''

''நமது முப்பதாயிரம் வீரர்களில் பத்தாயிரம் பேரை வாதாபியிலேயே நிறுத்திவிட்டீர்களே அது ஏன்?''

''அதுவும் போர் ரகசியம்.''

''ரகசியம் எப்போதுதான் வெளிப்படும்?''

''காலையில் நமது படை விஸ்பபுரத்தை அடைந்தபின் நீயே நேரில் பார்த்து தெரிந்து கொள்.''

இதற்குப் பிறகு வீரன் எதுவும் பேசவில்லை.

சரியாக விடியும் நேரத்தில் விஸ்வபுரத்தை அடைந்தது சாளுக்கியர் படை.

ஊர் அமைதியாகவே காணப்பட்டது.

அந்த அமைதியின் காரணத்தை ஊகித்துக் கொண்ட உபதளபதி உள்ளுக்குள் சிரித்துக் கொண்டான்.

தனது படைகளிடம் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்று ஏற்கெனவே அவன் விளக்கமாக விவரித்திருந்தானாதலால் விஸ்வபுரத்தை அடைந்ததுமே கொம்பை எடுத்து ஊதினான்.

அதையடுத்து அவனது காலாட்படை கிளைகளாகப் பிரிந்து வெகுவேகமாக ஊருக்குள் பல இடங்களில் புகுந்தது.

அப்படி சாளுக்கியர் படை கணிசமாக உள்ளே புகுந்த நிலையில் ஊரில் இருந்த மக்கள் பறைகளை எடுத்து பலமாக ஒலி எழுப்பினார்கள். பலர் இல்லங்களின் கூரைகளில் ஏறிக் கொண்டு சாளுக்கியரின் பெரிதாக் கொடியை ஆட்டியும் பறைகளை முழக்கியும் ஆரவாரம் செய்தார்கள். மக்களின் இந்தச் செயல் மகிழ்ச்சியை அளித்தாலும் இவர்களுக்கு ஏன் இந்த வேலை என்று நினைத்தான் சாளுக்கிய உபதளபதி. மக்கள் எழுப்பிய பறையொலி காது கிழியும் படி இருந்தது. பறையொலியை நிறுத்தும்படி அவன் சைகைகளை செய்தான். ஆனால் மக்கள் பறையொலிப்பதை நிறுத்தவில்லை.

அதேநேரத்தில் அதுவரை கண்ணில் படாத பல்லவர் படை தெருக்களில் எதிர்பட்டது. சாளுக்கிய வீரர்கள் நுழைந்து வீதிகளிலெல்லாம் அவர்களை எதிர்கொண்ட பல்லவ வீரர்கள் உக்கிரமாகத் தாக்கினார்கள். அதோடு இல்லங்களிலிருந்தும் வீரர்கள் வெளிப்பட்டு சாளுக்கிய வீரர்களைத் தாக்கினார்கள். சிலர் மறைவிடங்களிலிருந்து அம்புகளையும் வேல்களையும் எய்தார்கள். சாளுக்கிய உபதளபதி இதைச் சிறிதும் எதிர்பார்க்க வில்லை. ஏதோ ஒரு கணக்கைப் போட்டுக் கொண்டு விஸ்வபுரத்தில் நுழைந்த அவனுக்கு தற்போதைய நிலை ஏமாற்றமே அளித்தது. படைகளை பின்வாங்கும்படி கட்டளையிட விரும்பிய அவன் அதற்கான கொம்புகளை ஊதினான். ஆனால் விஸ்வபுர மக்கள் காதுகள் கிழியும்படி தொடர்ந்து பறைகொட்டியதால் அவனது கொம்பொலி சாளுக்கிய வீரர்களுக்குத் தெளிவாகக் கேட்காததால் அவனது கட்டளைகளை அறியாமல் முன்னேறி வந்தார்கள்.

சாளுக்கியப் படையில் பாதிக்குமேல் ஊருக்குள் நுழைந்த நிலையில் ஊரின் வெளிப்புறத்தில் வெளிப்பட்டது உதய சந்திரனின் புரவிப்படை. அதற்கு அவனே தலைமை வகித்தான். அந்தப் படை ஊருக்குள் நுழையாமல் இருந்த சாளுக்கியப்

படையை இருபுறங்களிலும் மூர்க்கமாகத் தாக்கியது. புரவிப்படையின் வேகத்திற்கும் புரவி வீரர்களின் வாள் வீச்சிற்கும் ஈடு கொடுக்க முடியாத சாளுக்கிய வீரர்கள் வாளுக்கு இரையாகிப் பெருமளவில் வீழ்ந்தார்கள்.

ஏறக்குறைய குறைந்த நேரத்தில் அந்த வீரர்களை எளிதில் அழித்த புரவிப்படை ஊருக்குள்ளும் நுழைந்து அங்கே இருந்த சாளுக்கியர் படையை பின்புறத்திலும் தாக்கியது. இப்படி ஏக காலத்தில் சாளுக்கியர் படை முன்னும் பின்னும் தாக்கப்பட்டதால் சிக்கலில் சிக்கியது. பல்லவ வீரர்களுடன் போரிட்டு மடிய நேர்ந்ததே தவிர தப்பிச் செல்லவோ மறையவோ முடியவில்லை. உபதளபதியின் கட்டளைகளைப் பெறமுடியாமலும் பறையொலியால் குழம்பியும் சாளுக்கிய வீரர்கள் திணறித் தவித்தார்கள்.

ஆனால் உதயசந்திரன் சரியாகக் கணித்து தீர்க்காலோசனை யுடன் திட்டத்தை தீட்டி போர் முறையை வகுத்திருந்தானாதலால் அவனது வீரர்கள் குழப்பம் ஏதுமின்றி செயல்பட்டார்கள். சாளுக்கியர் படையை முற்றிலுமாக அழிக்க வேண்டிய அவசியம் அவர்களுக்கு இருந்ததால் உக்கிரமான தாக்குதலை தொடுத்தார்கள். ஒவ்வொரு பல்லவ வீரனுக்கும் இலக்கு நிர்ணயித்த மாதிரியான தோற்றத்தைத் தந்தது பல்லவரது போர்முறை. சாளுக்கிய வீரர்களை எண்ணிக் கொண்டே வாட்களை வீசி வீழ்த்தினார்கள் அவர்கள்.

உதயசந்திரனின் போர்த்தந்திரத்திற்கு சாளுக்கிய உபதளபதியால் ஈடுகொடுக்க முடியவில்லை. தனது கட்டுப்பாட்டில் வீரர்களை வைத்துக் கொண்டு போரிடும் நிலையை அவன் இழந்து விட்டிருந்தான். போர் இரண்டு நாழிகைக்கு நீடித்தது. சாளுக்கியர் தரப்பு பேரழிவைச் சந்தித்திருந்தது. சாளுக்கிய உபதளபதியும் படுகாயமடைந்து விட்டிருந்தான். சொற்ப வீரர்கள்தான் மிஞ்சியிருக்கிறார்கள் என்பதை உணர்ந்த உதயசந்திரன் இரண்டு வாணங்களை கொளுத்தி வானத்தில் வீசச் செய்தான். அதைக் கண்டதுமே பறையொலி நின்றது. பறையொலி நின்றதுமே தனது கணக்கு நிறைவேறிவிட்ட நிலையில் நான்கு முறை கொம்புகளை ஊதினான் உதயசந்திரன்.

அதையடுத்து அவனது புரவிப்படை ஆங்காங்கே விலகி ஊருக்கு மேற்கே வாதாபி மார்க்கத்தில் திரண்டது. மொத்தமாகத் திரள்வதற்கு ஒரு நாழிகை பிடித்தது. தான் உயிரோடு இருப்பதை உறுதி செய்யும் வகையில் அரிச்சந்திரன், ஐராவதன், பரதன், சந்திரலேகா ஆகியோர் கொம்புகளை ஊதியதும் அடுத்து

மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கையைத் தெரியப்படுத்தும் வகையில் வேட்டுக்களை முழங்கச் செய்தான் உதயசந்திரன். அதையடுத்து அவனது புரவிப்படை வராகக் கொடிகளைப் பிடித்துக் கொண்டு சாளுக்கியரை வாழ்த்தியபடி வாதாபி பெருவெளியை நோக்கி புயலைப் போல விரைந்து சென்றது.

☆

சாளுக்கிய உபதளபதி இருபதாயிரம் வீரர்களுடன் விஸ்வபுரத்தை நோக்கிச் சென்றபோதே தனது திட்டம் பற்றியும் வெற்றியைப் பற்றியும் அதிகமாகவே சொல்லிவிட்டுப் போயிருந்தான். பல்லவர் படையைப் பூண்டோடு அழித்து விட்டு வெற்றிப் படையாகத் திரும்புவேன் என்றும் தன்னையும் தனது படையையும் வரவேற்கக் காத்திருங்கள் என்றும் மதமதர்ப்புடன் சொல்லிவிட்டுப் போயிருந்தானாதலால் வாதாபிப் பெருவெளியை நோக்கி வராகக் கொடிகளோடும் சாளுக்கியரை வாழ்த்தும் பேரொலியோடும் உதயசந்திரனின் புரவிப்படை வேகமாக வருவதைக் கண்ட சாளுக்கியரின் பத்தாயிரம் பேர் கொண்ட படைப் பிரிவு பேரானந்தப்பட்டு ஆரவாரித்தது.

''நமது உபதளபதிக்கு நிகர் அவர்தான் அவர் சொன்னால் சொன்னதுதான். அவர் சொல்வதைத்தான் செய்வார். செய்வதைத்தான் சொல்வார். அவர் வீரர் மட்டுமல்ல. தீரர். சூரர்'' என்று பாராட்டினான் பத்தாயிரம் பேர் படையின் உபதலைவன்.

அருகில் இருந்த வீரன், ''ஐயா, நமது படை காலாட்படை தானே! ஆனால் எதிரே வருவது புரவிப்படையாக இருக்கிறதே'' என்று கேட்டான்.

பல நேரங்களில் சாதாரண வீரனுக்கு இருக்கும் நுண்ணறிவு சேனாதிபதிக்குக்கூட இருப்பதில்லை. அதோடு மமதை காரணமாக தங்களைப் பெரிதாகவும் வீரர்களைச் சாதாரணமாகவும் அற்பமாகவும் எண்ணும் தலைவர்கள் எங்கேயும் இருக்கிறார்கள்.

வாதாபியில் இருந்த சாளுக்கியர் படையின் உபதளபதியும் உபதலைவனும் அப்படிப்பட்ட பேர்வழிகளாகவே இருந்தார்கள். மமதை அவர்கள் கண்களை மறைத்துவிட்டிருந்தது.

எனவே வீரன் கேட்டச் சரியான கேள்வியைச் சரிவரப் புரிந்து கொள்ளாமல், ''மூடனே! உபதளபதியை அற்பமாக எடை போட்டுவிட்டாய். அவர் விஸ்வபுரத்தில் இருந்த பல்லவர் படையை அழித்துவிட்டு அவர்களது புரவிகளைக் கைப்பற்றி புரவிப்படையாக வந்து கொண்டிருக்கிறார். அந்த அதிசயக்

காட்சியைத்தான் நாம் காண்கிறோம்'' என்று சொன்ன உபதலைவன், ''பாராட்டுகள் வானை எட்டட்டும். பேரிகைகள் முழங்கட்டும்'' என்று முழக்கமிட்டான்.

அதேசமயத்தில் புயலைப்போல் வந்து கொண்டிருந்த உதயசந்திரனின் புரவிப்படை வராகக் கொடிகளை போட்டு விட்டு பல்லவ மாமன்னர் ராஜசிம்மரைப் போற்றியபடி தேள் கொடுக்கைப் போல விரிந்து சாளுக்கியர் படையை கவ்வுவது போல் முன்னேறியது.

வருவது உபதளபதியல்ல, விபரீதம் என்பதை சாளுக்கிய உபதலைவன் உணர்ந்து கொண்டு சுதாரித்துக் கொள்ள முயன்றான். ஆனால் உதயசந்திரன் அதற்கு வாய்ப்பளிக்க வில்லை. அவனது புரவிப்படை சாளுக்கியரின் காலாட்படை மீது இருபக்கங்களில் சூறாவளியாக இறங்கி தாக்கியது.

அலட்சியத்திலும் அனர்த்தத்திலும் இருந்த சாளுக்கிய வீரர்கள் அணிவகுத்து நிற்பதற்குள் பல்லவர் படை அவர்கள் மீது பாய்ந்தது. வாட்களை அவர்கள் உருவுவதற்கு முன் அவர்களது தலைகள் சீவப்பட்டன பல்லவர் படையால்.

விஸ்வபுரத்தில் நடந்ததற்கு நேர்மாறாக இங்கே பல்லவர் படை சம்பிரதாயமான போர் முறையைக் கையாண்டது. இதன் விளைவை சாளுக்கிய உபதலைவன் உணர்ந்தது மட்டுமின்றி அனுபவிக்கவும் செய்தான்.

இங்கேயும் சாளுக்கியர் படையை நிர்மூலமாக்குவதையே நோக்கமாகக் கொண்டிருந்ததால் இப்போர் முறை மூலம் அதைச் சாதித்தது பல்லவர் படை.

போர் நடந்த இடம் பெருவெளியாக இருந்தபடியால் பல்லவரோடு ஈடுகொடுக்க முடியாதச் சாளுக்கிய வீரர்கள் பலர் நானா திசைகளிலும் தப்பி ஓடினார்கள். மாண்டவர்களின் எண்ணிக்கையும் ஆயிரக்கணக்கில் இருந்தது.

போரில் வெற்றி பெற்றதை அறிவிக்கும் பேரிகையை முழக்கச் செய்தான் உதயசந்திரன்.

பல்லவர் படை ஆனந்தக் கூத்தாடியது.

ஆனால் அது நிலைக்காத விதத்தில் வாதாபிப் பெருவெளிக்கு மேற்கே பெரும்புகை மண்டலம் தெரிந்தது.

பெரியதொரு படை வெகுவேகமாக வருவதை உணர்ந்தான் உதயசந்திரன்.

★★★



38 சேனாதிபதியின் விவரணம்

வாழைத் தோப்பில் வீசிய புயலைப் போல வாதாபி பெருவெளியில் உதயசந்திரனின் படை செயல்பட்டதால் சிதறிச் சிதைந்த வாழைகளைப் போல சாளுக்கிய வீரர்கள் செத்து மடிந்தார்கள். சிலர் தப்பிப் பிழத்தார்கள். தோல்வியை ஏற்றுக் கொள்வதற்குக் கூட ஆளில்லாத நிலையில் போர்க்களமானது சாளுக்கியர்களுக்கு சூன்யப் பிரதேசமாயிற்று.

வழக்கம் போலவே போர் முடிந்துவிட்ட பிறகு செய்ய வேண்டிய சம்பிரதாய காரியங்களை பல்லவ வீரர்கள் செய்தார்கள். வீரமரணமடைந்தவர்களின் கணக்கெடுப்பு நடந்ததில் கிட்டத்தட்ட ஆயிரம் பல்லவ வீரர்கள் வீர மரணமடைந்திருந்தார்கள்.

தேவையற்ற நஷ்டத்தை அடுத்தடுத்து அடைந்து வருவதாக வருத்தப்பட்டான் உதயசந்திரன்.

''உங்கள் வருத்தம் நியாயமற்றது உபதலைவரே. எதிரி தரப்பில் ஏறக்குறைய நாற்பத்தைந்தாயிரம் வீரர்களை வீழ்த்திவிட்டு நமது தரப்பில் ஆயிரத்து ஐந்நூறு வீரர்கள் வீரமரணம் அடைந்ததற்காக நீங்கள் வருத்தப்படலாமா? ஒரு வீரன் கூட மரணமடையாமல் எதிரிகளை வீழ்த்த முடியுமா? அதோடு ஆயிரத்து ஐந்நூறு வீரர்கள் இழப்பு என்பது மிகமிகச் சிறிய இழப்புதான். இதற்காக நீங்கள் பெருமையும் பெருமிதமும் கொள்வதுதான் சரி'' என்றான் ஐராவதன்.

''ஐராவதன் சொல்வது மிகவும் சரியானது ஐயா. உங்கள் சமயோசித திட்டங்களால்தான் நமது இழப்பு மிகவும் குறைவாக இருக்கிறது. நியாயமாகப் பார்த்தால் முதலில் இருபதாயிரம் சாளுக்கியர்கள் இப்போது முப்பதாயிரம் சாளுக்கியர்கள் ஆக மொத்தம் ஐம்பதாயிரம் வீரர்களை எதிர்த்து போரிட்டதில் நமது தரப்பில் பத்தாயிரம் வீரர்களாவது மரணமடைந்திருக்க வேண்டும். ஆனால் வெறும் ஆயிரத்து ஐநூறு வீரர்களை மட்டுமே

இழந்திருக்கிறோம். இதை யாரும் நம்பமாட்டார்கள்'' என்றான் ஆயிரம் கண்ணன் பரதன்.

''நமது இறுதிப் போர் இன்னும் நடக்கவில்லை. அதில் நமது தரப்பு இழப்பு எப்படி இருந்தாலும் நான் கவலைப் படமாட்டேன். ஆனால் அதற்கு முன்பாகவே இப்படி இடைஇடையே போர்கள் நடந்து வீரர்களை இழப்பது தான் வருத்தமாக இருக்கிறது. இப்படி இன்னும் எத்தனை போர்கள் குறுக்கிடுமோ தெரியவில்லை. சாளுக்கியர் தலைநகரான ரணரசிகபுரத்தை அடைவதற்குள் கழுதை தேய்ந்து கட்டெறும்பான கதையாக நமது படையின் நிலை ஆகிவிடக் கூடாது'' என்றான் உதயசந்திரன்.

''இனி அதற்கெல்லாம் வாய்ப்பில்லை உபதலைவரே. நாம் சாளுக்கியர் தலைநகரை அணுகிவிட்டோம்'' என்றான் ஐராவதன்.

அப்போது சந்திரலேகா மேற்கே சுட்டிக்காட்டி. ''அதோ பாருங்கள்'' என்றாள்.

அங்கே புகைமண்டலமொன்று பெரிதாகத் தெரிந்தது. புகைமண்டலத்தின் ஊடே பெரும் படையொன்று மிக வேகமாக வந்து கொண்டிருந்தது.

அதைக் கண்ட உதயசந்திரன், ''பரதா! நாம் உதவிக்கு அழைத்த சேனாதிபதியாரின் படைதான் இப்போது வருகின்றன என்று நினைக்கிறேன்'' என்றான்.

''ஆம் உபதலைவரே. படையில் ரிஷபக் கொடிகள் தெரிகின்றன'' என்றான் பரதன்.

''இங்கே போர் முடிந்துவிட்ட விஷயம் சேனாதிபதி யாருக்குத் தெரியாது. ஆகவே அவரது படையை வரவேற்கும் பேரிகைகளை முழக்குங்கள்'' என்றான் உதயசந்திரன்.

பேரிகைகள் முழங்கின.

அதையடுத்து எதிரே வந்து கொண்டிருந்த சேனாதிபதியின் படையின் வேகம் குறைந்தது.

சேனாதிபதியும் விரைவிலேயே களத்திற்கு வந்து சேர்ந்தார்.

சுற்றிலும் ஒருமுறை பார்த்த அவருக்கு விவரம் புரிந்து விட்டது.

''போர் முடிந்துவிட்டதா? இல்லை, சாளுக்கியர்கள் ஓடிவிட்டார்களா?'' என்று கேட்டார் வியப்புடன்.

''போரிட முடியாத சிலர் தப்பியிருக்கலாம் ஐயா. ஆனால் சாளுக்கியர் படை முற்றிலுமாக அழிந்துவிட்டது'' என்றான் ஜராவதன்.

''அது எப்படி சாத்தியம்?'' என்று கேட்டச் சேனாதிபதி, ''என்னை எதற்காக உதவிக்கு வரச்சொன்னாய்?'' என்று வினவினார்.

''சாளுக்கிய படையை விஸ்வபுரத்திற்கு இழுப்பதற்கு முயற்சி செய்தேன். ஒருவேளை அவர்களது படை விஸ்வபுரத்திற்கு வரமறுத்து இந்தப் பெருவெளியிலேயே போர் செய்வதற்குத் தீர்மானித்துவிட்டால் அவர்களது முப்பதாயிரம் வீரர்களை இச்சமவெளியில் எதிர்கொள்வது கஷ்டம். ஆபத்தானதும்கூட என்று நினைத்து உங்களை உதவிக்கு அழைக்க பரதனை அனுப்பினேன். போரை முடிந்தவரை தாமதப்படுத்தினேன். யாருடைய நல்லவேளையோ தெரிய வில்லை. சாளுக்கிய உபதளபதி இருதாயிரம் வீரர்களோடு விஸ்வபுரத்திற்கு வந்தான். அவனது படையை நமது வீரர்கள் மடக்கி அழித்தார்கள். அதேவேகத்துடன் இங்கே பாய்ந்தார்கள். இங்கிருந்தவர்களையும் அழித்தார்கள்'' என்றான் உதயசந்திரன்.

''பரதன் சொன்னபோது உன் நிலை ஆபத்தானது என்பதை உணர்ந்தேன். ஆபத்தில்லாவிட்டால் நீ உதவி கோரமாட்டாய் என்பதும் எனக்குத் தெரியும். எனவே எனது முப்பதாயிரம் படையை அப்படியே திருப்பினேன்.''

''என்னது முப்பதாயிரம் பேரா? ஐந்தாயிரம் என்றுதானே பரதன் சொன்னான்?''

''அவனிடம் அப்படித்தான் சொன்னேன்'' என்று சொன்ன சேனாதிபதி, ''உதயசந்திரா, படை எண்ணிக்கையைப் பற்றி எப்போதுமே சொல்லக்கூடாது. அப்போதுதான் எதிரி குழம்புவான். காஞ்சியை விட்டு நாம் கூட்டாகப் புறப்பட்ட போது நம்மிடம் இருந்த வீரர்கள் வெறும் நூறு பேர்தான். நாம் இருவரும் ஒரு கட்டத்தில் பிரிந்தோம். அதற்குப் பிறகு உன்னோடு பல இடங்களில் பல பிரிவுகள் வந்து சேர்ந்து உன் படையின் எண்ணிக்கை இருபதாயிரம் ஆயிற்று. அதுபோல என் படையின் எண்ணிக்கை பத்தாயிரமாக இருக்கும் என்று நானே உன்னிடம் சொன்னேன். அது உண்மையல்ல. என்னோடு வந்து சேர்ந்த படையின் எண்ணிக்கை முப்பதாயிரம். அவற்றோடு துங்கபத்திரை ஆற்றை சற்றே கிழக்கில் கடந்து வேறு மார்க்கமாக நான் சாளுக்கியர்

தலைநகர் ரணரசிகபுரத்தை நோக்கி முன்னேறினேன். வாதாபி பெருவெளி பக்கமாக வராமல் வேறு வழியில் சென்றேன். வாதாபியில் சாளுக்கிய வீரர்கள் திரண்டு எதிர்ப்பார்கள் என்று நான் எதிர்பார்க்கவில்லை. பரதன் வந்து சொன்னபோதுதான் நான் ஏமாந்துவிட்டதாக நினைத்தேன். உன் படையைக் காக்க உடனடியாக விரைந்தேன்.''

''சேனாதிபதி, பல்லவ இளவரசருடன் முப்பதாயிரம் காலாட்படை சென்றிருப்பதாகச் சொன்னீர்களே அந்த எண்ணிக்கையாவது உண்மையா?''

''உண்மையல்ல. இளவரசரோடு சென்றிருப்பது ஒரு லட்சம் வீரர்கள்.''

''ஒரு லட்சம் வீரர்களா? அவ்வளவு வீரர்கள் எங்கே கிடைத்தார்கள்?''

''உதயசந்திரா, போருக்குச் செல்லும் படையைத் தவிர்த்து கையிருப்பு படை என்று பிரத்தியேகப் படையொன்று காஞ்சிக் கோட்டையைக் காக்க எப்போதும் தயாராக இருக்கும். சாளுக்கிய புலிகேசியின் காஞ்சி முற்றுகைக்குப் பிறகு இப்படியொரு கையிருப்பு படையை நரசிம்ம வர்மர் உருவாக்கினார். ஆனால் புலிகேசிக்குப் பிறகு தொடர்ந்து போர்களை வடக்கிலும் தெற்கிலுமாக நடைபெற்றதால் கையிருப்பு படை குறைந்து கொண்டே வந்தது. இரண்டாம் நரசிம்ம வர்மர் என்று அழைக்கப்பட்ட நமது மாமன்னர் ராஜசிம்மர்தான் இந்தக் கையிருப்பு படையை மீண்டும் உருவாக்கினார். காஞ்சியில் பஞ்சம் மட்டும் உருவாகாமல் இருந்தால் இந்தக் கையிருப்பு படை காஞ்சியிலேயே இருந்திருக்கும். பஞ்சம் வந்துவிட்டதாலும் சாளுக்கியர் மீது படையெடுக்க வேண்டிய நிர்பந்தம் வந்துவிட்டதாலும் வேறு வழியில்லாமல் கையிருப்பு படையை இளவரசர் தலைமையில் ரணரசிகபுரத்திற்கு அனுப்பிவிட்டார். அதுபோதாது என்று கருதி பல்வேறு வழிகளில் படையைத் திரட்டினார். அந்தப் படையைத்தான் நாம் இருவரும் நடத்திச் செல்கிறோம்.''

சேனாதிபதி படைநிலைமையைப் பற்றிச் சொன்ன பிறகு திருப்தியாக இருந்தது உதயசந்திரனுக்கு.

''எத்தனைச் சிரமப்பட்டு இந்தப் படையை மாமன்னர் திரட்டினார் என்பது உனக்குத் தெரிந்திருக்கலாம். அந்தப் படையை எதிர்பாராத தாக்குதல்களிடமிருந்து நீ காப்பாற்றி

வந்திருக்கிறாய். நீ பாராட்டிற்குரியவன்தான். ஆனால் எல்லா புகழும் மாமன்னருக்குத்தான். ஏன் தெரியுமா? உன்னை இனம் கண்டு உபதலைவனாக அனுப்பியவர் அவரல்லவா?''

''மிகவும் சரியான வார்த்தை ஐயா'' என்று சொன்ன பரதன், ''மாமன்னர் ராஜசிம்மர் வாழ்க வாழ்க'' என்று உரக்கச் சொன்னதும் அந்த வார்த்தையை பல்லவர் படை மொத்தமாக எதிரொலித்தபோது வானம் அதிர்ந்தது.

சேனாதிபதி உதயசந்திரனின் அருகில் இருந்த சந்திர லேகாவைப் பார்த்துவிட்டு, ''ஓ! இவள் உன்னோடு இருக்கிறாளா? அதுதானே பார்த்தேன்? இவளது ஆலோசனையில்தான் சகலமும் நடக்கிறதா? இவள் பெரும் கைகாரி ஆயிற்றே! இவளை எப்படிச் சமாளிக்கிறாய்?'' என்று விஷமமாகக் கேட்டார்.

சந்திரலேகா குறுக்கிட்டு, ''உங்களுக்கு வேறு வேலையே இல்லையா? கண்டபடி பேசாதீர்கள்'' என்றாள் கோபத்துடன்.

''அதெப்படி? நான் எதையும் காணவில்லையே! கண்டது போல் எப்படிப் பேசுவது?'' என்று கூறி கண்களைச் சிமிட்டினார் சேனாதிபதி.

சந்திரலேகா ஏதோ கூற முற்பட்டபோது சேனாதிபதியின் பார்வை அரிச்சந்திரனின் மீது விழுந்தது. அவரது கண்கள் சிவந்தன.

''இவனா? இந்தக்குள்ள நரி எப்படி மீண்டும் உன்னோடு வந்து சேர்ந்தான்?'' என்று கோபமாகக் கேட்டார்.

''சேனாதிபதியாரே, அரிச்சந்திரன் என் நண்பன். அவனை என்னிடம் விட்டுவிடுங்கள்'' என்றான் உதயசந்திரன்.

''உனக்கு வேறு நண்பனே கிடைக்கவில்லையா? இந்த துரோகிதானா கிடைத்தான்? எதற்கும் எச்சரிக்கையாக இரு. எப்போது வேண்டுமானாலும் உன்னைக் கொல்ல முயற்சிப்பான்'' என்று சொன்ன சேனாதிபதி தனது வீரர்களை அழைத்து பல்வேறு உத்தரவுகளை இட்டார்.

பிறகு ''என்னோடு வா உதயசந்திரா'' என்று அவனைத் தன்னோடு அழைத்துச் சென்றார். இருவரும் போய் மண்டபம் ஒன்றில் அமர்ந்து கொண்டார்கள்.

''உதயசந்திரா, நமது இளவரசரும் அவரது படையும் சாளுக்கிய தலைநகர் ரணரசிகபுரத்தை அடைந்து முற்றுகையைத் தொடங்கிவிட்டன. நாம் இப்போது சாளுக்கியப் பயணத்தின் முக்கியமான கட்டத்தில் இருக்கிறோம். நாம் தாமதமில்லாமல்

போய் இளவரசர் படையுடன் சேர்ந்து கொள்ள வேண்டும். இளவரசர் மாவீரர்தான் என்றாலும் போர்த் திட்டங்களைத் தீட்டிப் பழக்கமில்லாதவர். நீயாவது இங்கு வருவதற்குள் இரண்டு போர்களைப் பார்த்துவிட்டாய். அவர் போர் எதிலும் இதுவரை ஈடுபட்டதில்லை. அதோடு ரணரசிகபுரக் கோட்டைக்குள் இருக்கும் மர்மம் நமக்குத் தெரியாது. உள்ளே இருக்கும் படை எண்ணிக்கையைப் பற்றியோ சாளுக்கிய மன்னனின் போர்த்திட்டத்தைப் பற்றியோ சரியான தகவல் இல்லை. நாம் அங்கே போய்தான் அதையெல்லாம் அறிந்து மேலே நடவடிக்கை எடுக்க வேண்டும். இனி உன் படை என் படை என்ற வித்தியாசம் வேண்டாம். இரண்டையும் இணையச் செய்து அணிவகுக்கும்படிச் சொல்லிவிட்டேன். உணவு தயாரானதும் எல்லோரும் உண்டுவிட்டு இன்று மாலையிலேயே புறப்படலாம். இரண்டு நாள் பயணத்தில் ரணரசிகபுரத்தை அடையலாம்'' என்றார் சேனாதிபதி.

உதயசந்திரன் அதற்கு மறுப்பு எதுவும் தெரிவிக்கவில்லை.

சேனாதிபதியே பேசமுற்பட்டு, ''உதயசந்திரா, மாமன்னர் உனக்கு இரண்டு கட்டளைகளை இட்டிருப்பதாகச் சொன்னாய். முதல் கட்டளை இளவரசரை அருகில் இருந்து கண்போல காப்பது. அதற்கான நேரம் வந்துவிட்டது. உனக்கு உபதலைவன் பதவி இன்றோடு முடிகிறது. நீ வீரபல்லவர் படையின் தலைவனாக நியமிக்கப்படுகிறாய். ரணரசிகபுரத்தை அடைந்ததும் இளவரசருக்கு உன்னை அறிமுகப்படுத்தி வைக்கிறேன். அறிமுகமானதும் வீர பல்லவர் படைக்குத் தலைவனாகிவிடு'' என்றார்.

''வீர பல்லவர் படையா? அது என்ன சேனாதிபதி?'' என்று கேட்டான் உதயசந்திரன்.

''உதயசந்திரா, திபெத்திய நாட்டு குடியினங்களில் ஒன்றான ''பான்'' இனத்தவர் நெருங்காலமாகவே பாரதத்திலும் தென்னகத் திலும் குடியிருந்து வருகிறார்கள். அந்த இனத்தைச் சேர்ந்தவர்களில் பலர் பரம்பரை பரம்பரையாக பல்லவ இனத்திற்குச் சேவை செய்து வருகிறார்கள்.* நமது மாமன்னரின் தந்தையாரான பரமேஸ்வரவர்மரின் காலத்தில் அந்த இனத்தைச் சேர்ந்த இருநூறு

* 'The race of Pucan which had been in the uninterruped hereditary service of the pallavarace.' page 120 Kanchipuram in the early south Indian History' by T.V.Mahalingam.

பேர் பல்லவ மன்னர்களின் உயிர் காக்கும் படையாகப் பிரமாணம் எடுத்துக் கொண்டார்கள். அவர்களது விசுவாசத்தை மெச்சிய பரமேஸ்வர வர்மர் அப்படைக்கு வீரபல்லவர் படை என்ற பெயரைச் சூட்டினார். பெருவள நல்லூர் போரின்போது பரமேஸ்வர வர்மரின் உயிரைக் காத்தது இந்த வீரபல்லவர் படைதான். எனவேதான் அந்தப் படையை இளவரசரைக் காப்பதற்கு கூடவே அனுப்பி வைத்திருக்கிறார் நமது மாமன்னர்'' என்றார் சேனாதிபதி.

''உயிரைக் காக்கும் பிரமாணம் எடுத்துக் கொண்ட அந்தப் படை இருக்கும்போது இளவரசரைக் காக்க வேண்டிய பணி எனக்கு எதற்கு சேனாதிபதி?''

''இதையேதான் நான் மாமன்னரிடமும் கேட்டேன் உதயசந்திரா. அதற்கு அவர் என்ன சொன்னார் தெரியுமா? ஒவ்வொரு அரசருக்கும் இப்படியொரு பாதுகாப்புப்படை இருந்துதான் வருகிறது. பாண்டிய மன்னருக்கு 'ஆபத்துதவிகள்' என்ற அந்தரங்கப்படை இருக்கிறது. ஆனால் அந்தப் படையில் அந்தந்த மண்ணிற்குரியவர்கள்தான் வீரர்களாக இருக்கிறார்கள். நமது விஷயம்தான் வேறாக இருக்கிறது. வீரபல்லவர் படையில் இருப்பவர்கள் அனைவரும் 'பான்' இனத்தவர்களேதவிர பல்லவ இனத்தவர்கள் அல்ல. அவர்களது விசுவாசத்தை நான் சந்தேகிக்கவில்லை என்றாலும் நம்மவர்கள் சிலராவது அந்தப் பிரிவில் இருப்பதை நான் விரும்புகிறேன். அதுவும் வெகுதூரத்தில் இருக்கும் சாளுக்கிய நாட்டிற்குச் செல்லும் இளவரசன் மகேந்திரன் அனுபவமில்லாதவன். அவனுக்கு நம்மவன் ஒருவன் இருப்பது அவசியம். அதற்குப் பொருத்தமானவன் உதயசந்திரன்தான். எனவே தக்க சமயமாகப் பார்த்து உதயசந்திரனை வீரபல்லவர் படைக்கு தலைவனாக்கி விடுங்கள் என்றார். அவர் கூறிய தக்கசமயம் இப்போது வந்துவிட்டது. ஆகவேதான் சொன்னார்.''

''பான் இனத்து வீரர்கள் என்னைத் தலைவனாக ஏற்றுக் கொள்வார்களா?''

''அவர்கள் யார் உன்னை ஏற்பதற்கு? நீ தான் அவர்களை உன் வீரர்களாக ஏற்கச் சம்மதிக்க வேண்டும். அந்தக் கவலை யெல்லாம் உனக்கு வேண்டாம். மன்னரின் கட்டளை இது'' என்றார் சேனாதிபதி.

''சேனாதிபதி, என்னோடு என் நண்பர்கள் நால்வரையும் சேர்த்துக் கொள்ளலாமா?''

''யார் அந்த நால்வர்?''

''சாளுக்கிய ஒற்றனாக இருந்து நம் தரப்பிற்கு மாறிய ஐராவதன். வழிகாட்டியாக இருந்து உங்களால் அனுப்பப்பட்ட சந்திரலேகா. காஞ்சி ஆலயத்தின் அர்ச்சகர் மகன் அரிச்சந்திரன். நம் படையைச் சேர்ந்த வீரன் பரதன்.''

''பொருந்தாத கூட்டணியாக இருக்கிறதே உதயசந்திரா. இவர்களைப் பக்கத்தில் வைத்துக் கொண்டால் இவர்களைக் கண்காணிக்கவே சரியாக இருக்கும். இளவரசரை எப்படி பாதுகாப்பது?''

''இந்தக் கூட்டணி கட்டாயத்தில் சேர்க்கப்பட்ட கூட்டணியல்ல. தாமாக விரும்பிச் சேர்ந்த கூட்டணி. சந்தர்ப்ப வசத்தால் உண்டான கூட்டணி அல்ல. அன்பால் உண்டான கூட்டணி. இதை நீங்கள் சந்தேகிக்க வேண்டாம்.''

''உன் விருப்பப்படியே ஆகட்டும். எதற்கும் நீ ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்'' என்று கூறிவிட்டு புறப்பட்டார் சேனாதிபதி.

அவர் போனபின் அவனிடம் வந்தாள் சந்திரலேகா.

''உபதலைவரே என்னை மன்னிக்க வேண்டும்'' என்றாள்.

''எதற்கு?'' என்று சாதாரணமாகக் கேட்டான் உதயசந்திரன்.

''விஸ்வபுரத்தில் நீங்கள் பேசியதையெல்லாம் கேட்டு அவசரப்பட்டு உங்களைப் பற்றித் தாறுமாறாக நினைத்து விட்டேன். அதற்காகத்தான்.''

''என்னை எதிரிகள் புரிந்து கொள்ளக்கூடாது என்பதற்காக நான் அப்படியெல்லாம் பேச வேண்டியதாக இருந்தது. எதிரிகள் குழம்பினார்களோ இல்லையோ - நீ குழம்பிவிட்டாய்'' என்றான் உதயசந்திரன்.

அப்போது ஆயிரம் கண்ணர்களில் ஒருவன் வந்து, ''நமது படைகளும் சேனாதிபதியின் படைகளும் ஒன்று சேர்ந்து விட்டன'' என்றான்.

''மிக்க மகிழ்ச்சி வீரனே.''

''ஐயா, ஒரு சிறு செய்தி.''

''சொல்.''

''அது சிறு செய்திதான். இருந்தாலும் உங்களிடம் சொல்ல நினைத்தேன். உங்களைச் சந்திக்க முடியவில்லை. ஆகவே உங்கள்

ஆலோசகரிடம் சொன்னேன். அவர் உங்களிடம் சொன்னாரா என்று தெரியவில்லை.''

''எதற்கு இவ்வளவு பீடிகை? விஷயத்தைச் சொல்.''

''நமது படையில் இருவர் காணாமல் போனார்கள். எப்படி காணாமல் போனார்கள் என்பது தெரியவில்லை. ஆனால் அவர்களுக்கு பதிலாக இரண்டு அராபியர்கள் வந்து சேர்ந்து கொண்டார்கள். அவர்களது பெயர் அகமது என்றும் முகமது என்றும் சொன்னார்கள்.''

இதைக் கேட்டதும் சற்றே அதிர்ந்தான் உதயசந்திரன்.

''இது உண்மையா?'' என்று கேட்கவும் செய்தான்.

☆☆☆



39 விஜயாதித்தன்

''உண்மைதான் உபதலைவரே.''

''எப்போது சேர்ந்தார்கள்?''

''துங்கபத்திரை ஆற்றுப் போருக்கு முன்பாகவே சேர்ந்துவிட்டார்கள்.''

''அதுபற்றி இப்போது சொல்கிறாய்யா?''

''அப்போதே வழிகாட்டி அம்மணியிடம் சொன்னேன். உங்களிடம் தெரிவித்துவிடுவதாகச் சொன்னார்கள்.''

''இப்போது அவர்கள் இருக்கிறார்களா?''

''இருக்க வேண்டும். ஆனால் கண்டுபிடிப்பது சிரமம்.''

''ஏன்?''

''நமது படை சேனாதிபதியின் படையோடு சேர்ந்து விட்டது. வீரர்கள் கலந்துவிட்டார்கள். ஐம்பதாயிரம் படையில் அவர்களைத் தேடி கண்டுபிடிப்பது கஷ்டமானது.''

''சரி. நீ போ'' என்று சொன்ன உதயசந்திரன் ''ஒன்று மில்லாத விஷயத்திற்கு மன்னிப்பு கேட்ட நீ மன்னிக்க முடியாத விஷயத்தைச் செய்திருக்கிறாய் சந்திரா. ஆயிரம் கண்ணன் சொன்ன விஷயத்தை என்னிடம் ஏன் சொல்லவில்லை?'' என்று கேட்டான்.

திருதிருவென விழித்தாள் சந்திரலேகா. ''இது சாதாரண அற்ப விஷயம் என்று நினைத்துவிட்டேன்'' என்றாள்.

''தவறு சந்திரா. வெளி தேசங்களுக்குப் படை செல்கிற தென்றால் அப்படையில் உள்ள ஒவ்வொரு வீரனைப் பற்றிய விவரமும் முக்கியம். காஞ்சியை விட்டு நமது படை சாளுக்கிய நாட்டிற்குச் செல்கிறதென்றால் அதற்குப் பல வழிகளில் ஆபத்து வரும். நமக்கு வந்தது போல் எதிர்பாராதப் போர் வரும். விஷக் காய்ச்சல் வரும். விபத்துகள் நேரலாம். வீரர்களுக்குள் சச்சரவு

வரலாம். இவற்றையெல்லாம் தவிர்க்க முடியாது. ஆனால் இந்தச் சந்தர்ப்பங்களிலெல்லாம் மரணமடையும் வீரர்களைப் பற்றியும், காணாமல் போகும் வீரர்களையும் பற்றியும், மாற்றாக வந்து சேரும் வீரர்களைப் பற்றியும் விவரங்களைச் சேகரிக்காமல் இருக்கக் கூடாது என்பது படை விதி. நமது நாட்டிற்குத் திரும்பும்போது இந்த விவரங்களை மக்களுக்கு தெரிவிக்க வேண்டியது சேனாதிபதியின் கடமை. இந்த விவரங்களை எப்படிச் சேகரிப்பது? யார் சேகரிப்பது? எனது தலைமையின் கீழ் வந்த படைகளின் எண்ணிக்கை அதிகமாகத் தொடங்கியதும் நூறு வீரர்களைக் கண்காணிக்க நூற்றுவ கண்ணர்களையும் ஆயிரம் வீரர்களை கண்காணிக்க ஆயிரம் கண்ணர்களையும் நியமித்தேன். அவர்கள் தங்கள் கட்டுப்பாட்டில் இருக்கும் வீரர்களை கண்காணித்து எனக்கு விவரங்களைச் சொல்லி வந்தார்கள். இன்று வரை போரில் இறந்தவர்கள் விவரமும் வழியில் இறந்தவர்கள் விவரமும் அவர்களிடம் இருக்கிறது. நான் எப்போது கேட்டாலும் அவர்களால் சொல்ல முடியும். உன்னிடம் தெரிவிக்கப்பட்ட இருவரது விஷயம் தான் எனக்குத் தெரியாமல் போய்விட்டது.''

''உபதலைவரே, நான் உங்களிடம் தெரிவிக்காமல் விட்டது தவறுதான். அதேசமயம் இந்த விவரத்தை உங்களிடம தெரிவிக்காமல் விட்டதால் என்ன நேர்ந்து விட்டது? காணாமல் போன இரண்டு வீரர்களைத் தேடிக் கொண்டு நாம் போக முடியுமா? புதிதாகச் சேர்ந்த இரண்டு அராபிய வீரர்களால் நமது படைக்கு என்ன தீங்கு வந்துவிடும்?''

''அடிப்படையாக ஒன்றை நீ தெரிந்து கொள் சந்திரா. ஒரு விஷயம் அற்பமானதா அல்லது அரிதானதா என்று முடிவு செய்யும் பொறுப்பு படையின் தலைவனிடம் தான் இருக்க வேண்டுமே தவிர யாரிடம் வேண்டுமானாலும் இருக்கலாம் என்று நினைத்துக் கொள்ளாதே. காணாமல் போனவர்களை நாம் தேடிப் போக முடியாதுதான். ஆனால் அதற்கான காரணத்தை அறியலாம் அல்லவா? இரண்டு பல்லவ வீரர்கள் காணாமல் போனதற்குப் புதிதாக வந்த இரு அராபிய வீரர்கள் காரணமாக ஏன் இருக்கக் கூடாது?''

''இருக்கலாம் உபதலைவரே.''

''அதுமட்டுமல்ல. அந்த இருவரைப் பற்றி எனக்குத் தெரியும். அவர்கள் அராபிய சதிகாரர்கள். நமது இளவரசரைக் கொல்வதற்கு திட்டம் தீட்டியவர்கள்.''

''உண்மையாகவா?''

''ஆம். காஞ்சியிலிருந்தே அவர்கள் நம்மைப் பின் தொடர்கிறார்கள். நாங்கள் தங்கியிருந்த சத்திரம் ஒன்றிலிருந்து காப்பாற்ற நீ வீதியில் சச்சரவு செய்தாயே நினைவிருக்கிறதா? அதே சத்திரத்தில்தான் இந்த இரண்டுச் சதிகாரர்களும் ரகசியமாக வந்து தங்கியதை நான் கண்டேன். அவர்களைப் பிடித்து நம்மோடு வைத்துக் கொண்டு சதி திட்டத்தை அறியலாம் என்று நானும் ஐராவதனும் நினைத்தோம். அதற்குள் சத்திரம் தீப்பற்றிக் கொண்டதால் தப்பித்துக் கொள்ளத்தான் முடிந்தது. அச்சதிகாரர்களை மறந்தே போனேன் நான். பல நாட்களுக்குப் பிறகு நினைவு வந்தபோது சத்திரத்துத் தீயில் அவர்கள் மாண்டு போயிருப்பார்கள் என்று நினைத்தேன். மாளவில்லை என்பது இப்போது தான் தெரிகிறது. அவர்களைக் கண்டுபிடித்து சிறை செய்யவும் முடியாமல் போய்விட்டது. அவர்கள் நமது படையில் இருப்பார்களே தவிர நமக்காகப் போரிடப் போவதில்லை. போர் நடக்கும் சமயத்தில் இளவரசரை எப்படியாவது வீழ்த்த முயல்வார்கள். அற்ப விஷயம் என்று நினைத்தாயே - இப்போது புரிகிறதா அது அற்ப விஷயம் அல்ல என்று.''

அதிர்ந்து போனாள் சந்திரலேகா.

தான் செய்தது மன்னிக்க முடியாத தவறு என்பதை உணர்ந்த அவள் ''எனக்குத் தண்டனை அளியுங்கள் உபதலைவரே'' என்றாள்.

''நீயே முடிவு செய்து சொல் சந்திரா'' என்றான் உதயசந்திரன்.

இந்த நிலையில் அரிச்சந்திரன், ஐராவதன், பரதன் ஆகியோர் வந்தார்கள். சந்திரலேகா எதுவும் பேச முடியாமல் இருந்தாள்.

எல்லோரையும் பார்த்த உதயசந்திரன், ''நாம் இனி பல்லவ இளவரசரைப் பாதுகாக்கும் வீர பல்லவர் படையில் சேரப் போகிறோம். அந்தப் படையின் நான்கு மூலைகளிலும் நீங்கள் நால்வரும் தூண்களாக இருந்து பாதுகாக்க வேண்டும். நமது புரவிப் படையில் கலந்துவிட்ட அராபிய சதிகாரர்கள் இருவர் எந்த வேடத்திலும் வருவார்கள். இளவரசரைத் தாக்க முற்படுவார்கள். அதை நுட்பமாகக் கண்காணிப்பது உங்கள் கடமை'' என்றான்.

விரைவிலேயே உணவு ஏற்பாடு செய்யப்பட்டு வீரர்கள் உணவருந்தி ஆசுவாசப்படுத்திக் கொண்டதும் படைகள் புறப்பட கட்டளையிட்டார் சேனாதிபதி. படையின் முகப்பில்

சேனாதிபதியும் படையின் பின்புறம் உதயசந்திரனும் அவனது நால்வர் கூட்டணியும் சென்றது.

வாதாபி பெருவெளியைத் தாண்டியதுமே சிறிது தூரத்தில் இருந்தது வாதாபி. மங்கலத்தையும் மாங்கல்யத்தையும் மகிழ்ச்சியையும் இழந்த கைம்பெண்ணைப் போல சோபையற்றுக் கிடந்தது வாதாபி. கருகிய சுவர்களும் இடிந்த கட்டிடங்களுமாய் ஏதோ கலைந்த ஓவியம் போலக் காணப்பட்ட வாதாபியின் நிலையைக் கண்டபோது சற்று நெருடலாகவே இருந்தது. பல்லவ நரசிம்ம வர்மர் வாதாபி விஷயத்தில் அதிக கடுமையைக் காட்டிவிட்டாரோ என்று நினைத்த உதயசந்திரன் அதை மாற்றிக் கொண்டு 'எந்த அளவிற்கு அவர் மனம் பாதிக்கப்பட்டிருந்தால் இந்த அளவிற்கு நகரையே தகனம் செய்வார்?' என்று நினைத்தான். அவனுக்குத் தெரிந்து இதுபோன்ற நகரம் எரியூட்டப்பட்டது ராமாயணத்தில் இருக்கும் லங்கா தகனம். அதையடுத்து பாண்டியன் நெடுஞ்செழியன் காலத்தில் கற்புடைய தெய்வம் கண்ணகியின் சாபத்தால் மதுரை நகரம் எரிந்தது. மற்றபடி வேறு எந்த மன்னரும் எதிரியின் நாட்டைத் தகனம் செய்ததில்லை. ஆனால் நரசிம்மவர்மர் செய்திருக்கிறார். இது வெறும் பழிக்குப் பழி என்ற அளவில் செய்யப்பட்ட காரியமாகத் தோன்றவில்லை. அதற்கு மேல் ஒரு படி சென்று செய்த காரியம்தான் இது. 'சாளுக்கியர்களே, உங்கள் தலைநகரை தகனம் செய்து சாம்பலாக்கிவிட்டேன். இதோடு நீங்கள் அழிந்தீர்கள். பல்லவர் நாட்டிற்குத் தீங்கிழைத்தால் அதன் விளைவு எப்படி இருக்கும் என்பதற்கு இதுதான் அடையாளம். இனி உங்கள் கவனம் கூட பல்லவர் பக்கம் திரும்பக் கூடாது' என்று தான் நரசிம்மவர்மர் இந்தச் சேதத்தைச் செய்திருக்க வேண்டும் என்று நினைத்தான் உதயசந்திரன்.

நரசிம்ம வர்மர் அப்படி எண்ணியிருந்தாலும் இருக்கலாம். அந்த எண்ணத்தில் வாதாபியை எரித்திருக்கலாம். ஆனால் சாளுக்கியர்கள் அதனால் சாம்பலாகிப்போய்விடவில்லை. தலைநகரம் அழிந்தாலும் அதை விடத் தலையாய மானமும் வீரமும் அழியவில்லை. புலிகேசியின் மகன் விக்கிரமாதித்தன் முடிசூடியதும் முதல் வேலையாக காஞ்சியை நோக்கித்தான் படையடுத்தான். பழிவாங்குதலும் கௌரவத்தை நிலை நாட்டுதலும் அரச குலத்தவரிடம் தொடர்ந்து இருந்து வந்ததே தவிர எந்த ஒரு நிலையிலும் நின்றுவிடவில்லை. பல்லவர் ஆட்சி

காஞ்சியில் இருந்த வரை இவை தொடர்ந்து நடந்து கொண்டே இருந்தன.

அரைகுறையாகக் கைவிடப்பட்டச் சிற்ப கூடத்தைப் போல் வாதாபி நகரம் சிதிலமடைந்து கிடந்தாலும் அதற்கு மேற்கே இருந்த மலைக்கோட்டை மட்டும் கம்பீரமாகவே இருந்தது. மலைக்கு மேலே இருப்பதெல்லாம் உயர்ந்தவை தான் என்று சொல்வதுபோல காட்சியளித்த அந்த மலைக்கோட்டையைக் கண்டு பிரமித்தான் உதயசந்திரன்.

இரண்டு நாள் பயணத்திற்குப் பிறகு பல்லவரது புரவிப் படை சாளுக்கிய தலைநகரான ரணரசிகபுரத்தை அடைந்தது.

முதல் வேலையாக உதயசந்திரனை பல்லவ இளவரசனுக்கு அறிமுகம் செய்து வைத்தார் சேனாதிபதி பகதத்தர்.

இளவரசன் மகேந்திரனின் தோற்றப் பொலிவைக் கண்டு சற்றே அசந்து போய் நின்றான் உதயசந்திரன். பல்லவ மாமன்னர் ராஜசிம்மன் தேவேந்திரனைப் போல் இருந்தார் என்றால் அவரது மகன் மகேந்திரனோ கௌரவர்களைக் கலங்கடித்த மாவீரன் அபிமன்யுவைப் போல இருந்தான். ஏறக்குறைய உதய சந்திரனின் வயதுடையவனாக இருந்த மகேந்திரனிடம் ராஜ களை சொட்டியது. கவசகுண்டலங்கள் - தலைக்கிரீடம் - ராஜ உடைகள் என்று எல்லாம் சேர்ந்து அவனது பொலிவுக்கு அழகு சேர்த்தன. சோர்வறியாத அவனது முகத்தில் வீரம் விரிந்து கிடந்தது.

''வா. உதயசந்திரா. உன் வரவு நல்வரவாகட்டும். எனக்கு ஒரு துணையை அனுப்புவதாக என் அருமைத் தந்தையார் கூறியபோது அந்தத் துணையை ஐம்பது அறுபது வயதினராக எதிர்பார்த்தேன். இப்படியொரு வீர வாலிபராக எதிர்பார்க்க வில்லை'' என்றான் மகேந்திரன்.

''இளவரசே! நீங்கள் வியப்பதற்கு வேறு விஷயங்களும் இருக்கின்றன'' என்று சொன்ன சேனாதிபதி துங்கபத்திரை ஆற்றுப் போரைப் பற்றியும் விஸ்வபுரம், வாதாபிப் பெருவெளி போரைப் பற்றியும் விவரித்தார்.

''நம்பும்படியாக இல்லையே சேனாதிபதி. இது எப்படி சாத்தியம்?'' என்று வியந்த மகேந்திரன் உதயசந்திரனைப் பார்த்து ''அழகிய அசுரா, உன்னை என் நண்பனாக வைத்துக் கொள்ள விரும்புகிறேன். உனக்கும் சம்மதம் தானே?'' என்று கேட்டான்.

''அது என் பாக்கியம் இளவரசே'' என்றான் உதயசந்திரன்.

''இவனை தங்கள் வீரபல்லவர் படைக்கு தலைவனாக நியமித்திருக்கிறேன். அது மாமன்னரின் ஆணை'' என்றார் சேனாதிபதி.

''கரும்பைத் தின்பதற்குக் கூலியா?'' என்று கேட்ட மகேந்திரன் 'இந்த வீரபல்லவர் படை என்ற சிறை எப்போது விலகும் என்று கவலைப்பட்டுக் கொண்டிருக்கிறேன். இந்த நிலையில் இதற்குத் தலைவன் வேறா?' என்று உள்ளுக்குள் சொல்லிக் கொண்டு ''சரி, சேனாதிபதி, இருவரும் சிரம பரிகாரம் செய்து கொணடு பாசறைக்கு வாருங்கள்'' என்றான்.

★

சாளுக்கியர் தலைநகர் ரணரசிகபுரத்தின் அரண்மனையில் இருந்த மந்திராலோசனை மண்டபத்தில் சேனாதிபதியிலிருந்து அனைத்துத் தளபதிகளும் மன்னனின் வரவுக்காகப் பரபரப்புடன் காத்திருந்தார்கள். மன்னன் வந்தால் தங்களுக்கெல்லாம் வசவுகள் கிடைக்குமா அல்லது தண்டனை கிடைக்குமா என்று அனைவருமே ஒவ்வொரு விதமாக கற்பனை செய்து கொண்டிருந்தார்கள்.

அப்போது மங்கள வாத்தியங்கள் முழங்கின. சாளுக்கிய மன்னனை வாழ்த்தும் வாசகங்களைக் கட்டியக்காரர்கள் முழக்கினார்கள். ஆனால் அதையடுத்து மன்னன் வரவில்லை. பத்து வயது நிரம்பிய சிறுவன் ஒருவன் மண்டபத்துக்குள் வந்து மன்னனின் ஆசனத்திற்கு முன்னால் நின்றான்.

அவனது வரவும் வந்து நின்ற தோரணையும் அங்கிருந்த பிரமுகர்களுக்குப் பிடிக்கவில்லை.

''யார் நீ?'' என்று எல்லோரும் இடி முழங்குவதுபோல் கேட்டார்கள்,

''நான் யாராயிருந்தால் என்ன? ஆலோசனையை ஆரம்பிக்கலாம்'' என்றான் சிறுவன்.

''ஆலோசனையா? ஆரம்பிப்பதா? அதுவும் உன்னுடனா? அடே சிறுவனே! எங்களது வாட்கள் உன்னைக் கூறு போடுவதற்கு முன்னால் தப்பித்தோம் பிழைத்தோம் என்று ஓடிவிடு'' என்று முனகினார்கள் பிரமுகர்கள்.

அப்போது யாரோ கைகளைத் தட்டும் ஒலி கேட்டது.

எல்லோரும் திரும்பினார்கள்.

அங்கே சாளுக்கிய மன்னன் விஜயாதித்தன் கைகளைத் தட்டியபடி தோன்றினான்.

''மிக்க மகிழ்ச்சி தளபதிகளே. உங்களது வீர வாட்கள் இந்நாச் சிறுவனையாவது கூறுபோடக்கூடியனவாக இருந்தால் எனக்குச் சந்தோஷம்தான்'' என்று கூறியபடி ஆசனத்தில் வந்து அமர்ந்தான் மன்னன் விஜயாதித்தன்.

அதுவரை சூன்யமாக இருந்த ஆசனம் அவன் அமர்ந்ததுமே பொலிவையும் கம்பீரத்தையும் பெற்றது. அனுபவமும் வீரமும் வாய்ந்த தளபதிகள் நிறைந்த அந்த மண்டபத்தில் சர்வ அலட்சியமாக வந்து அமர்ந்தான் விஜயாதித்தன். வெற்றிக்குப் பெயர் போனவன் என்பதால் விஜயன் என்ற இயற்பெயரையும் விஜயாதித்தன் என்ற பட்டப் பெயரையும் கொண்ட சாளுக்கிய மன்னன் இயற்கையிலேயே கம்பீரத்திற்கு இலக்கணமாய் திகழ்ந்தவனாதலால் தற்போதும் கம்பீரமும் தீட்சண்யமும் நிறைந்தவனாகக் காணப்பட்டான். சுமார் ஐம்பது வயது மதிக்கத் தக்கவனாக இருந்தாலும் உடற்கட்டும் விரிந்த முகம் மலர்ந்த கண்களும் செவ்விய நிறமும் அவனை இளைஞனாகவே காட்டின. வராகக் கொடி பதித்த வைராசனத்தில் அவன் அமர்ந்திருந்த விதமானது காண்போரை ஈர்க்கும் விதமாக இருந்தது.

அவன் ஆசனத்தில் அமர்ந்ததும், ''மகாராஜா! சிறுவன் ஒருவனை அனுப்பி எங்களை இழிவு படுத்திவிட்டீர்கள். கவலைப்படுகிறோம்'' என்றார் ஒரு தளபதி.

''ஆமாம். என்னை வானளவிற்கு உயர்த்தி வைத்து விட்டீர்களே உங்களையெல்லாம் இழிவு படுத்திவிட்டது தவறுதான்'' என்று சர்வ அலட்சியமாக இகழ்ந்த விஜயாதித்தன் ''ஒரு சாதாரண பல்லவ உபதலைவன். அனுபவமில்லாதவன். அவனுக்கு நமது ஐம்பதாயிரம் வீரர்கள் காவு கொடுக்கப் பட்டிருக்கிறார்கள். இதுதான் சாளுக்கியர் வீரமா?'' என்று குருதி கொப்பளிக்க கர்ஜித்தார்.

''மகாராஜா, தாங்கள் கூறும் பல்லவ உபதலைவன் சாதாரணமானவன் அல்ல. பெரும் தந்திரசாலி'' என்றார் உபதளபதி.

''மிக்க மகிழ்ச்சி. உங்கள் பதில் சாளுக்கியர் தோல்விக்குச் சமாதானமாகிவிட்டது. போய் பாறையில் பதிவு செய்யுங்கள்'' என்று மீண்டும் இகழ்ந்து பேசிய விஜயாதித்தன், ''பல்லவ உபதலைவன் மிகவும் அசாதாரணமானவன். அசகாய சூரன் என்றே

இருக்கட்டும். அவனிடம் இருந்தது வெறும் இருபதாயிரம் பேர் கொண்ட படைதான். அதற்கு முன்னால் நமது ஐம்பதாயிரம் பேர் கொண்ட படை எப்படி வீழ்ந்தது?'' என்று கேட்டான்.

''உபதலைவனின் போர்த்தந்திரம் தான் காரணம்.''

''ஏன் அந்தப் போர்த்தந்திரம் நமது சாளுக்கியர்களிடம் இல்லையா? அது அந்த உபதலைவனுக்கு மட்டும் தான் சொந்தமா?''

''இல்லை மகாராஜா. சாளுக்கியர்களும் போர்த்தந்திரத்தைக் காட்டத்தான் செய்தார்கள். ஆனாலும் தோல்வியில் முடிந்து விட்டது.''

''போர்த்தந்திரத்தைக் காட்டியும் தோல்வி தான் கிட்டியது என்றால் சாளுக்கியர்கள் வெற்றி பெற வேறு என்ன வேண்டும்?'' என்று கேட்டான் விஜயாதித்தன்.

அங்கே இருந்த அனைவரது தலைகளும் தொங்கிப் போயின.

அடிபட்ட வேங்கை போல் அவதிப்பட்ட விஜயாதித்தன், ''பல்லவர் படை நமது நாட்டை நோக்கி வருகிறது என்று கேள்விப்பட்டதும் என்னிடம் உடனடியாக ஆலோசிக்க வந்தது இங்கே வீற்றிருக்கும் சேனாதிபதி வீரகேசரி அல்ல. என் பாட்டனார் காலத்தில் பேரமைச்சராக இருந்த மாமேதையான ஸ்ரீராமபுண்ணிய வல்லபர் தனது தள்ளாத வயதையும் பொருட்படுத்தாமல் என்னிடம் வந்து எனக்கு ஆலோசனை சொன்னார். பல்லவர் படை முழுவதுமாக இங்கு வந்து சேர்ந்தால் ஆபத்து என்றும் அதை அனுமதிக்கக் கூடாது என்றும் மரத்தின் கிளைகளை வெட்டுவது போல அப்படையை ஆங்காங்கே மறித்து அழிக்க வேண்டும் என்றார். கிளைகளற்ற மரம் பலவீனமாய் இருக்கும் என்றும் அதை அழிப்பது எளியது என்றும் சொன்னார். நானும் அவரது ஆலோசனையை செயல்படுத்த நமது படைகளை உடனடியாக பல பிரிவுகளாகப் பிரித்து அனுப்பும்படிச் சொன்னேன். நம் சேனாதிபதி வீரகேசரி அதை ஏற்கவில்லை. பல்லவர் படைகளை சாளுக்கிய எல்லைக்குள் இழுத்துவிட்டு பிறகு தாக்கலாம் என்றார். ஆனால் நடந்தது என்ன? சாளுக்கிய எல்லைக்குள்ளேயே நமது படைப் பிரிவுகளை எதிர்த்து அழித்திருக்கிறது பல்லவர் படை. இது மகா கேவலம். எதிரி என்ற மரத்தின் கிளைகளை வெட்டி எதிரியை பலமிழக்கச் செய்யும்படிச் சொன்னார் ஸ்ரீராமபுண்ணிய வல்லபர். சேனாதிபதியோ அந்த

நிலையை நமக்கு உண்டாக்கிவிட்டார். புரிகிறதா நிலைமை?'' என்று கேட்டு நிறுத்தினான்.

எல்லோரும் அமைதியாகவே இருந்ததால் விஜயாதித்தனே தொடர்ந்து, ''ஐம்பதாயிரம் படை அழிவுற்றது மிகவும் சாதாரண விஷயம்தான் என்று இங்கே யாராவது சொல்வார்களானால் அவருக்கு என் அரியணையை அளித்துவிட்டு தேசாந்திரம் போக நான் தயாராக இருக்கிறேன்'' என்றான்.

அதற்கு மேலும் அமைதியாக இருப்பது அர்த்தமற்றது என்பதை உணர்ந்த சேனாதிபதி வீரகேசரி எழுந்து, ''மகாராஜா, தாங்கள் குறிப்பிடுவது போல் சொல்வதற்கு இங்கே யாரும் தயாராக் இருக்கமாட்டார்கள். நமக்கு ஏற்பட்டது பெரும் நஷ்டம்தான். அதேசமயம் நான் கூறிய போர்த்திட்டம் விவேகமானது என்பதை ஸ்ரீராமபுண்ணிய வல்லபரும் ஒப்புக்கொள்வார். நம்மைத் தேடி வரும் எதிரியை நமது நாட்டுக்குள் இழுத்துவிட்டு தாக்குவது பல விதங்களிலும் சாதகமானது என்பதுதான் போர் நெறி. போர்த் தந்திரம். நமது நாட்டிற்குள் வந்துவிட்டால் எதிரி தனிமை படுத்தப்படுகிறான். மக்களின் ஆதரவும் அவனுக்கு கிடைக்காமல் போகும் என்பதால் தான் நான் அவ்வாறு திட்டமிட்டேன். தவறு நமது உபதளபதிகளிடம்தான். அவர்களுடைய அதீத நம்பிக்கையும் எதிரியைப் பற்றிய தவறான கணக்கும்தான் நம் தோல்விக்கு காரணம். அதோடு பல்லவ உபதலைவன் உதயசந்திரன் விஸ்வபுரத்தில் நடந்து கொண்ட முறை அதர்மமானது. அடாவடித்தனமானது. மக்களை தன் இஷ்டப்படி ஆட்டி வைத்தான். நமது படைகளை அடியோடு குழப்பினான்'' என்றார்.

''போர் நடந்தது மூன்று இடங்களில். நீங்கள் சொல்லும் அதர்மம் நடந்தது ஒரு இடத்தில்தான். மற்ற இடங்களில்?'' என்று கேட்ட விஜயாதித்தன் ''மக்களை மிரட்டினான் என்றும் கேடயமாகப் பயன்படுத்தினான் என்று சொல்வதெல்லாம் அதர்மம் என்றால் போரிடவே முடியாது. அதோடு விஸ்வபுரத்து மக்களை அழிக்கப் போவதாகத்தான் ஆரம்பத்தில் பல்லவ உபதலைவன் அறிவித்ததாகக் கேள்வி. ஆனால் அவ்வாறு மக்களை அழிக்கவில்லை. மிரட்டியிருக்கிறான். அவ்வளவு தான். ஆகவே அவனைக் குற்றம் சொல்வது சரியல்ல. நமது போர்த்தந்திரம் எங்கே போயிற்று? குறைந்த எண்ணிக்கை கொண்ட எதிரியை வெற்றி கொள்ள முடியவில்லை என்றால் வேறு எப்படி நீங்கள் வெற்றி கொள்ள முடியும்?'' என்று கேட்டான்.

''மகாராஜா! எதுவானாலும் சரி. நடந்துவிட்டதைப் பற்றிப் பேசுவதால் எந்தப் பயனும் இல்லை. அதுவும் எதிரி முற்றுகையிட்டிருக்கும் இந்த நேரத்தில் இந்தப் பேச்சு வேண்டாம். வெற்றிக்கான வாய்ப்புகள் எல்லாம் போய் விட்டதாகக் கருத வேண்டியதில்லை. அதோடு போர்த் திட்டங்களைத் தீட்டித்தர தாங்களும் இருக்கிறீர்கள்'' என்றார் சேனாதிபதி வஞ்சப்புகழ்ச்சியுடன்.

விஜயாதித்தன் அதை பொருட்படுத்தவில்லை.

''அன்று மாமன்னர் புலிகேசி காஞ்சியை முற்றுகை யிட்டார். இன்று காஞ்சிப் படை நமது ரணரசிகபுரத்தை முற்றுகையிட்டிருக்கிறது. சரித்திரம் திரும்புகிறது'' என்றான்.

அப்போது காவலாளி ஒருவன் உள்ளே வந்து, ''மகாராஜா! பல்லவர் படையிலிருந்து இந்தஓலை உள்ளே வீசப்பட்டது'' என்று சொல்லி ஓலையொன்றைக் கொடுத்தான்.

அதைப் படித்த விஜயாதித்தன், ''இதைப்படியுங்கள் சேனாதிபதி. அதர்மன் அனுப்பியிருக்கிறான்'' என்றான்.

☆☆☆



40 ஸ்ரீராம புண்ணிய வல்லபர்

''பல்லவர் படை தாக்குதலைத் தொடங்கவிருப்பதால் இரண்டு நாட்கள் அவகாசம் தரப்படுகிறது. அதற்குள் கோட்டைக்குள் இருக்கும் மக்களை அகற்றிவிடவும். அகற்றப்படாவிட்டால் எங்கள் தாக்குதலுக்கு மக்களும் இலக்காவதை தவிர்க்க இயலாது -

பல்லவர் சேனாதிபதி''

- என்றிருந்தது ஓலையில்.

''படித்தீரா அதர்மனின் ஓலையை'' என்று கேட்டான் சாளுக்கிய மன்னன் விஜயாதித்தன்.

உதயசந்திரனை அதர்மன் என்று தான் சொன்னதையே மன்னன் சுட்டிக்காட்டுகிறான் என்பதை உணர்ந்த சேனாதிபதி வீரகேசரி ''இந்தக் குத்தலும் குடைச்சலும் மன்னனுக்கு இப்போது தேவைதானா?'' என்று உள்ளுக்குள் கேட்டுக் கொண்டு, ''இரண்டு நாட்களில் மக்களை வெளியேற்றா விட்டால் அவர்களைத் தாக்குவோம் என்று சொல்லி யிருக்கிறார்கள். இதுவும் ஒருவகையில் அதர்மம்தான்'' என்றார் தானும் சளைத்தவனல்ல என்பதைக் காட்டுவதைப்போல.

''சேனாதிபதி! நாம் இங்கே கூடியிருப்பது தர்ம அதர்மங்களைப் பற்றி அலசி ஆராய்ச்சி செய்வதற்காக அல்ல. இப்படியொரு ஓலையை அனுப்பாமல் பல்லவர்கள் தாக்குதலை தொடுத்தாலும் சரி என்று தான் சொல்வேன். போர் என்று வந்துவிட்டால் மக்கள் நேரிடையாகவோ மறை முகமாகவோ தொல்லைக்கு ஆளாவதென்பது எல்லா காலத்திலும் இருந்து வருகிறது. மக்கள் இருக்கும் இடத்தில் தான் போர் நடக்கிறதே தவிர மக்கள் பூமியிலும் போர் வானத்திலும் நடப்பதில்லை. மக்கள் பாதிப்பு என்பது இயற்கையானது. அதோடு பெரும்பாலான போர்கள் போர் நெறிகளை மீறித்தான் நடக்கின்றன. நமது பாரத

Scanned by CamScanner

நாடு போற்றிக் கொண்டாடும் அசோக மகாராஜா நடத்தியது அசுரப் போர்தான். மகாபாரதம் என்று நாம் போற்றும் இதிகாசத்தில் வரும் அஸ்தினாபுரப் போரை எடுத்துக் கொள்ளுங்கள். போர் தொடங்குவதற்கு முன் பாண்டவர்களும் கௌரவர்களும் போர் நெறிகளை வகுத்துக் கொண்டார்கள். ஆனால் இருவருமே ஒரு கட்டத்திற்குப் பிறகு போர் நெறிகளை மீறி நடந்து கொண்டார்கள். அப்படியிருக்கும் போது நாம் நடத்தும் போரில் தர்மமாவது! அதர்மமாவது! துங்கபத்திரை ஆற்றில் பல்லவர் படைகளை இரவு நேரத்தில் பின்புறம் தாக்கத் திட்டமிட்டது நமது படை. இது தர்ம யுத்தமாகுமா?''

விஜயாதித்தனின் பேச்சு சேனாதிபதிக்குப் பிடிக்கவில்லை.

நடக்க வேண்டியதைப் பற்றிப் பேசாமல் நடந்தவற்றைப் பற்றி மன்னன் பேசியதும் தனது பேச்சிற்கு மகாபாரதப் போரைச் சுட்டிக் காட்டியதும் தேவையற்றதாகத் தோன்றியது.

அதோடு விஜயாதித்தனின் மனத்தை சேனாதிபதி நன்றாகவே அறிந்திருந்தார். விஜயாதித்தன் தர்ம சிந்தனைக்கு பேர் போனவன் அல்ல என்பதும் எப்போதுமே லாபக் கணக்கையே யோசிப்பவன் என்பதும் அவருக்கு நன்றாகத் தெரிந்திருந்தது. ஆகவே தர்ம-அதர்மம் பற்றி அவன் பேசியது அவருக்கு எரிச்சலையே மூட்டியதால், ''ஓலையைப் பற்றிப் பேசுவோம் மகாராஜா'' என்றார்.

''நானும் அதைப்பற்றித்தான் பேசிக் கொண்டிருக்கிறேன். வீண் பேச்சு பேசி நேரத்தைக் கடத்துபவனல்ல விஜயாதித்தன்'' என்றான் மன்னன்.

''சரி மகாராஜா.''

''ஓலைக்கு உங்கள் பதில் என்ன?''

''மகாராஜாவின் கட்டளை எதுவோ அதை அப்படியே நிறைவேற்றுகிறேன்.''

''நான் கட்டளையிடுவது இருக்கட்டும். சேனாதிபதி என்ற முறையில் உங்கள் யோசனை என்ன?''

''மக்களை கோட்டையை விட்டு அகற்றும்படி பல்லவர்கள் கோருவது மக்களின் மீதான அபிமானத்தால் அல்ல. மக்களை வெளியேற்றிவிட்டால் கோட்டைக்குள் நெரிசல் குறையும்

என்பதால்தான். உள்ளே நெரிசல் குறைவது அவர்களுக்குச் சாதகமானது.''

''மக்கள் கோட்டைக்குள்ளேயே இருந்தால் அவர்கள் சேதாரப்படுவார்கள் அல்லவா?''

''போர் என்றால் மக்கள் தொல்லைக்கு ஆளாவது இயற்கை.''

''நான் கூறியதை என்னிடமே சொல்கிறீர்கள் போலிருக்கிறது. இந்த மாதிரியான பேச்சுக்கள் என்னிடம் வேண்டாம். நான் கேட்க நினைத்தது வேறு.''

''என்ன நினைக்கிறீர்கள் என்று சொல்லுங்கள் மகாராஜா.''

''மக்கள் அழிவது ஒருபுறம் இருக்கட்டும். அவர்கள் உள்ளே இருப்பதால் நமக்குச் சாதகம் இருக்கிறதா?''

''எதிரிகள் கோட்டைக்குள் எளிதில் முன்னேற முடியாமல் போகும்.''

''முன்னேறுவது இருக்கட்டும். எதிரிகள் கோட்டைக்குள் நுழைந்து விடுவார்களா? அது அத்தனை எளிதான காரியமா? அதைத் தடுக்கவும் அவர்களைத் தோற்கடிக்கவும் நம்மால் முடியாதா?''

''முடியும். முடியும். அதற்காகத்தானே எல்லா ஏற்பாட்டையும் செய்திருக்கிறோம்?''

''என்ன ஏற்பாடுகள்?''

''மகாராஜா, இந்த ரணரசிகபுரத்தைத் தலைநகராகவும் கோட்டையாகவும் மாற்றுவதற்குத் தங்கள் தந்தையார் விரும்பியபோது இக்கோட்டையை மிகவும் பலம் பொருந்திய கோட்டையாக அமைக்க முடிவு செய்து அவ்வாறே செய்தார். தமிழர்கள் கோட்டையைச் சுற்றி காவல் காடுகளை பாதுகாப்பாக அமைப்பதை அறிந்திருந்த அவர் அந்த அமைப்பு எதிரிகள் மறைந்திருந்து தாக்குவதற்குத் தான் சாதகமானது என்று கருதி அப்படியொரு காவற்காடு ரணரசிகபுரத்திற்குத் தேவையில்லை என்று சொல்லி கோட்டையைச் சுற்றி வெட்டவெளி இருக்கும் படிச் செய்தார். இதனால் எதிரிக்கு மறைவு கிடைக்காது. நம்மை நெருங்கித் தாக்கவும் முடியாது. அடுத்ததாக கோட்டையைச் சுற்றி அமைக்கப்பட்டிருக்கும் அகழி இருநூறடி ஆழமும் நூறடி அகலமும் கொண்ட பிரம்மாண்டமானது. அந்த அகழியில்

தற்போது நாலாயிரம் முதலைகள் இருக்கின்றன. அவற்றுக்குத் தீனி போட்டு இரண்டு நாட்களாகிவிட்டபடியால் எதிரிகள் அகழியில் வீழ்ந்து மறுநிமிடமே முதலைகள் அவர்களைக் கடகடவென கடித்து விழுங்கிவிடும். கோட்டையின் உயரம் இதர கோட்டைகளின் உயரத்தை விடஒன்றரை மடங்கு அதிகமானது. அக்கோட்டைச் சுவர்களில் எதிரியை கவனிக்க ஏராளமான துளைகள் இருக்கின்றன. ஆனால் பற்றி ஏறுவதற்கு துளைகள் எதுவுமில்லை. கோட்டைச்சுவற்றின் தளத்தில் ஒரு பக்கத்திற்கு இரண்டாயிரம் வீரர்கள் வீதம் நான்கு பக்கங்களுக்குமாகச் சேர்ந்து நாலாயிரம் வீரர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்குத் தேவையான வில், அம்பு, வேல், ஈட்டி ஆகிய ஆயுதங்கள் தளத்திலேயே குவிக்கப்பட்டிருக்கின்றன. மேல்தளத்திற்குக் கீழே உள்ள இரண்டாவது தளத்தில் எண்ணெய் கொப்பரைகளும் விஷவாளிகளும் தீவாளிகளும் போதுமான அளவு வைக்கப்பட்டிருக்கின்றன. எதிரிகள் கோட்டையை நெருங்குவதைப் பொறுத்து அவை பயன்படுத்தப்படும். கோட்டையின் தளங்களில் நாற்பது இடங்களில் உயரமான கூண்டுகள் அமைக்கப்பட்டு அங்கு கண்காணிப்பு வீரர்கள் அறுபது நாழிகையும் இடைவிடாமல் கண்காணித்துக் கொண்டிருக்கிறார்கள். படைகளின் நடமாட்டத்தை அவர்களால் அவ்வப்போது கண்காணிக்க முடியும். அப்படிக் கண்காணித்து நமக்குத் தெரிவிக்க அவர்களிடம் விதம்விதமான கொடிகளும் கண்ணாடி விளக்குகளும் உள்ளன. பகற்பொழுதில் கொடி களையும் இரவுப் பொழுதில் விளக்குகளையும் அவர்கள் பயன்படுத்துவார்கள். கோட்டைக்கு உள்ளே மதில் சுவற்றை யொட்டி யானைகள் வரிசையாக நிறுத்தப்பட்டுள்ளன. உள்ளே நுழைய முற்படும் எதிரிகளை அவை மலை போல் தாக்கும். எதிரிகள் உள்ளே முன்னேறுவதை தடுக்கும். கோட்டையின் உள்ளேயிருக்கும் வீதிகளில் நமது படை இருக்கிறது. அவை எதிரிகளைத் தாக்கினால் எதிரிகள் முன்னேற முடியாது. அதேசமயம் மதில் தளத்தில் மேலும் வீரர்கள் சேர்ந்து கொண்டு அம்புகளை எய்து எண்ணெய் கொப்பரையை கவிழ்க்கவும் செய்தால் எதிரிகள் அழிவார்கள். இவற்றையெல்லாம் மீறி ஊருக்குள் நுழைய எதிரி முயன்றால் உள்ளே உள்ள மக்கள் பெருக்கத்தால் தடை தான் அதிகரிக்கும். எப்படிப் பார்த்தாலும் எதிரிகள் நம்மை வெல்லவோ கோட்டையைப் பிடிக்கவோ முடியாது'' என்று சொன்னார் சேனாதிபதி விவரமாக.

''ஓலைச் செய்திக்கு உமது பதில் என்ன?'' என்று கேட்டான் விஜயாதித்தன்.

''அவர்களை கோட்டையை விட்டு வெளியேற்ற வேண்டாம் என்பதுதான் என் கருத்து'' என்றார் சேனாதிபதி.

விஜயாதித்தனுக்கோ திருப்தி வரவில்லை.

''போர் அமைச்சர் மகாமேதை ஸ்ரீராம புண்ணிய வல்லபரைப் போய் ஆலோசனை கேட்போம்'' என்றான் மன்னன்.

சேனாதிபதிக்கோ அது பிடிக்கவில்லை.

''ஸ்ரீராம புண்ணிய வல்லபர் மிகவும் தள்ளாத நிலையில் இருக்கிறார். அவரைப் போய் எதற்காகத் தொந்தரவு செய்ய வேண்டும்?'' என்றார்.

''அவருக்கு உடல் தளர்ந்திருக்கலாம். அறிவு மங்கிவிட வில்லை. அவரால் இப்போதும் ஆலோசனை கூற முடியும்'' என்றான் விஜயாதித்தன்.

வெளிப்படையாகச் சேனாதிபதியால் மறுக்க முடிய வில்லைதான். ஆனால் உள்ளுக்குள் வெறுக்கவே செய்தார்.

சாளுக்கிய விக்கிரமாதித்தர் மன்னராக இருந்தபோது அவர் ஸ்ரீராம புண்ணிய வல்லபரின் அறிவால் ஈர்க்கப்பட்டார். எனவே அவரை தனது போர் அமைச்சராக வைத்துக் கொண்டார். விக்கிரமாதித்தருக்குப் பிறகு வல்லபர் போர் அமைச்சராக நீடிக்கவில்லை. போர் அமைச்சர் என்ற பதவியும் நிலைக்க வில்லை. அப்படிபட்ட நிலையில் விஜயாதித்தன் மட்டும் ஓய்வு பெற்றுவிட்ட ஸ்ரீ ராம புண்ணிய வல்லபரை நாடுவதும் ஆலோசனை பெறுவதுமாக இருந்தான். இது ஆரம்பத்திலிருந்தே சேனாதிபதிக்குப் பிடிக்கவில்லை. அதேசமயம் விஜயாதித்தன் மூர்க்கனாய் இருந்தபடியால் அவனுக்கு அவரால் தனது வெறுப்பை அறிவுறுத்திக் கூற முடியவில்லை.

மன்னனும் சேனாதிபதியும் ஸ்ரீராம புண்ணிய வல்லபரின் இல்லத்திற்குச் சென்றார்கள்.

கேட்பாரற்றுப் போன புராதன சிற்பத்தைப் போலவும் கரையான் அரித்திருந்த பழம் ஓலையைப் போலவும் வாடிய மாலையைப் போலவும் மரண அழைப்பிற்காகக் காத்திருப் பவரைப் போலவும் கிடந்த புண்ணிய வல்லபரை வணங்கினான் விஜயாதித்தன்.

''வா. மகனே. உட்கார். என்ன விஷயம்? மீண்டும் ஆலோசனையா?'' என்று கேட்டார் ஸ்ரீராம புண்ணிய வல்லபர்.

''ஆமாம். ஐயா'' என்றான் விஜயாதித்தன் பணிவுடன்.

''உனக்குச் சகலவிதமான ஆலோசனைகளையும் வழங்கச் சேனாதிபதி இருக்கும்போது என்னிடம் எதற்காக வந்தாய் விஜயாதித்தா?''

''ஐயா, சாணக்கியரை நான் கண்டதில்லை. ஆனால் அவரது புத்திக்கூர்மையையும் பேராற்றலையும் உங்களிடம் காண்கிறேன் எனது பாட்டனார் விக்கிரமாதித்தர் கூறக் கேட்டிருக்கிறேன் நான். அவரது கூற்றை நானும் ஏற்று தங்களை நாடி வந்திருக்கிறேன்.''

''விக்கிரமாதித்தர் எனது ஆலோசனையை நாடியதற்கு முக்கிய காரணம் என்னைப் போரமைச்சராக நியமித்திருந்தது தான். அந்தப் பதவி அவரோடு போய்விட்டது. இப்போது மகா சேனாதிபதி வீரகேசரி இருக்கிறார். அவரிடம் ஆலோசனை கேட்பதுதான் உனக்கு நல்லது. பதவியில் இல்லாத ஒரு கிழவனின் பேச்சைக் கேட்டு விஜயாதித்தன் நடந்து கொண்டான் என்று யாரும் உன்னை நாளைக்கு இகழக் கூடாது.''

''தங்களை இக்கணமே போரமைச்சராக நான் நியமிக்கிறேன். அப்போது யாரும் இகழ மாட்டார்கள் அல்லவா?''

''மகா சக்கரவர்த்தி விக்கிரமாதித்தரின் போரமைச்சராக இருந்தது எனக்குப் பெருங் கௌரவம். அது பங்கப்பட வேண்டாம். உனக்குத் தேவையான ஆலோசனை என்ன? கேள்.''

பல்லவர் படை முற்றுகையிட்டிருப்பதையும் ஓலைச் செய்தி அனுப்பியிருப்பதையும் சொன்னான் விஜயாதித்தன்.

அதையடுத்து வறண்ட சிரிப்பு ஒன்றை வெளியிட்டார் ஸ்ரீராமபுண்ணிய வல்லபர்.

''மகாராஜா புலிகேசி அன்று காஞ்சி முற்றுகையின் போது தவறு செய்தார். ஆனால் காஞ்சியின் பல்லவர் படை இன்று அந்தத் தவற்றைச் செய்ய முற்படவில்லை'' என்றார்.

''தாங்கள் சொல்வது விளங்கவில்லை'' என்றான் விஜயாதித்தன்.

''விளங்காமல் போக இதில் என்ன இருக்கிறது? மகாராஜா புலிகேசி பல லட்சம் படைகளோடும் யானைகளோடும் பெரும் சமுத்திரம் பொங்கிச் செல்வதுபோல காஞ்சிக்குச் சென்றார். சென்ற வேகத்திலேயே கோட்டையை அவர் தாக்கியிருக்க

வேண்டும். அப்படிச் செய்திருந்தால் கோட்டையைப் பிடித்திருப்பார். சேனாதிபதிகள் சொன்ன யோசனையும் அதுதான். ஆனால் மகாராஜா புலிகேசி அந்த யோசனையைப் புறக்கணித்தார். மாவீரரான அவர் வீரத்திற்கு ஒவ்வாததும் அறிவுக் கூர்மைக்கு விரோதமானதுமான முடிவை எடுத்தார். கோட்டையைத் தாக்காமல் முற்றுகையிட்டார். அப்படிச் செய்தால் கோட்டைக்குள் இருப்பவர்கள் உணவு கிடைக்காமல் பட்டினியால் சாவார்கள் என்று கணக்கிட்டார். அவரது கணக்கு பொய்த்தது. காஞ்சிக் கோட்டையில் யாரும் சாகவில்லை. உள்ளே இருந்தவர்கள் முற்றுகையை பலமாதங்களுக்குத் தாங்கினார்கள். கோட்டைக்குள் இருப்பவர்கள் பட்டினியால் சாவார்கள் என்று புலிகேசி மகாராஜா எதிர்பார்த்தது கடைசியில் அவரது படைகளுக்கே நேர்ந்தது. லட்சக் கணக்கான அவரது படைகளுக்கு உணவும் நீரும் கிடைக்கவில்லை. சாக ஆரம்பித்தார்கள். முற்றுகையைத் தொடரவும் முடியாமல் போரிடவும் வழியில்லாமல் மகாராஜா திகைத்துப் போனார். விளைவு? அவரது படையெடுப்பு தோல்வியில் முடிந்தது. பெரும் படைபலம் கொண்ட அவரால் பல்லவரை வெற்றி கொள்ள முடியவில்லை. சாளுக்கிய நாட்டை நோக்கிப் பின்வாங்கியது அவரது படை. புரிகிறதா நான் சொல்வது?''

''புரிகிறது ஐயா.''

''அப்படியொரு அர்த்தமற்ற முற்றுகையில் இப்போது வந்திருக்கும் பல்லவர் படை முயலவில்லை என்பது அவர்களது ஓலை மூலம் தெரிகிறது. பல்லவர்கள் இக்கோட்டையைத் தாக்கத் தயாராகிவிட்டார்கள்.''

''ஆம் ஐயா.''

''கோட்டையில் இருக்கும் மக்களை வெளியேற்ற இரண்டு நாட்களுக்கு அவகாசம் கொடுத்திருக்கிறார்கள். இதற்குச் சேனாதிபதி என்ன சொல்கிறார்?''

''மக்கள் உள்ளே இருந்தால் எதிரிகளின் முன்னேற்றம் தடைபடும் என்றும் அதனால் அவர்களை வெளியேற்ற வேண்டாம் என்கிறார் சேனாதிபதி.''

''மக்களை போர்க்காலங்களில் வெளியேற்றுவது என்பது காலம் காலமாக நடந்து வருகிற விஷயம். அந்த வெளியேற்றத்திற்கு எதிரியே அவகாசம் தருகிறான். அதைப்

புறக்கணித்துவிட்டு மக்களை பலி கொடுப்பது உன் அரசாட்சிக்குச் சிறப்பைத் தரும் என்பது உன் அபிப்பிராயமா?''

''யோசனையைச் சொன்னது நானல்ல. சேனாதிபதி.''

''மக்களை உள்ளே வைத்துக் கொண்டால் உள்ளே வரும் எதிரியின் முன்னேற்றம் தடைபடும் என்பது உண்மையானாலும் அது பெரிய சாதகமாகாது. அந்த நிலை நமது படைகளுக்குக் கூட தடையாக இருக்கும். ஆகவே மக்களை வெளியேற்றுங்கள். அவர்களோடு படைவீரர்களையும் சாதாரண மக்களைப் போல வெளியேற்றுங்கள். அவர்களிடம் வெடிமருந்துகளையும் ஆயுதங்களையும் மூட்டைகளாகக் கொடுத்தனுப்புங்கள். அப்படி வெளியேற்றப்படும் வீரர்கள் கோட்டைக்கு நான்கு புறங்களிலும் வெளியேறி பல்லவர் படையை பின்புறத்திலிருந்து தாக்கட்டும். கோட்டைச் சுவற்று தளத்தில் இருப்பவர்கள் முன்புறம் தாக்கட்டும். தேவைப்பட்டால் வீரர்கள் கோட்டைக் கதவுகளைத் திறந்து சென்றும் தாக்கட்டும். பன்முகத் தாக்குதலில் பல்லவர்கள் அழிந்து போவார்கள்'' என்றார் ஸ்ரீராமபுண்ணிய வல்லபர்.

''மிகவும் சிறப்பான திட்டம் ஐயா. இதற்காகத்தான் உங்களை நாடி.னேன்'' என்றான் விஜயாதித்தன். பரவசத்துடன்.

சேனாதிபதிக்கோ ஸ்ரீராம புண்ணிய வல்லபரின் திட்டம் இனிக்கவில்லை. எதிரியின் திட்டம் பற்றி எதையும் கணிக்காமலேயே ஸ்ரீராம புண்ணிய வல்லபர் இப்படியொரு திட்டத்தை தீட்டுவது வெற்றிக்கு உத்திரவாதமல்ல என்று நினைத்தார் அவர். அதோடு துங்கபத்திரை ஆற்றிலும், விஸ்வபுரத்திலும் வாதாபியிலும் சாளுக்கியர் படையை எளிதில் தோற்கடித்த உபதலைவன் உதயசந்திரனும் பல்லவச் சேனாதிபதி பகதத்தனும் லேசுப்பட்டவர்களல்ல என்று கருதினார். அவர்களோடு பல்லவ இளவரசன் மகேந்திரனும் இருப்பது எப்படிப் பார்த்தாலும் புத்திக் கூர்மையான கூட்டணிதான் என்பதில் அவருக்குச் சந்தேகம் இருக்கவில்லை.

இருப்பினும் ஸ்ரீராம புண்ணிய வல்லபரின் திட்டத்தை மன்னன் பரவசத்துடன் ஏற்றுக் கொண்டானாதலால் அவனிடம் அப்போதைக்கு மறுப்பேதும் சொல்லாத சேனாதிபதி தனது சகாக்கள் சிலரை அழைத்து ரகசிய கட்டளைகளைப் பிறப்பித்து விட்டு கோபத்துடன் தனது அந்தப்புரத்திற்குச் சென்றார்.

யாருக்கும் அடங்காத விஜயகுமாரியை அடக்கியதிலிருந்து அவருக்கு அந்தப்புரத்தில் இருந்த மதிப்பும் செல்வாக்கும்

அதிகமாகியிருந்தது. அந்தப்புரத்திற்குப் புது அழகிகள் பலர் சேர்க்கப்பட்டிருந்தார்கள். அவர்களில் ரோம நாட்டு அடிமைகள் சிலரும் வாங்கப்பட்டு அந்தப்புரத்தில் சேர்க்கப்பட்டிருந்ததால் அந்தப்புரத்தில் எந்தப் புறம் திரும்பினாலும் அழகிகளின் நடமாட்டமே காணப்பட்டது.

அங்கே கோபத்துடன் சேனாதிபதி நுழைந்ததைக் கண்ட அந்தப்புரத் தலைவி அவரது நிலைமைக்கு ஏற்றவர்கள் ரோமாபுரியின் பாலியல் சுக அடிமைகள் என்று முடிவு செய்து ரோம் நாட்டு அழகிகளையே அவரது அறைக்கு அனுப்பி வைத்தாள்.

ரோம் நாட்டு அடிமைகள் பாலியல் சுகங்களுக்காக அந்த நாட்டில் பக்குவப்படுத்தப் பட்டவர்களாதலால் தனது எஜமானரிடம் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பதை நன்றாகக் கற்று அனுபவப்பட்டிருந்தார்களாதலால் அந்த பட்டறிவை சேனாதிபதி வீரகேசரியிடம் காட்டினார்கள்.

வீரகேசரியும் லேசுப்பட்ட மனிதரல்ல. காமத்தில் அவர் கற்காதது என்று ஏதுமில்லாதிருந்தது. அதனால்தான் அரபு நாட்டுப் புரவிபோல் மதமதர்த்துத் திரிந்த விஜயகுமாரியை அடக்கி நாயைப் போல மாற்றினார். அது தெரிந்த ரோம நாட்டு அடிமை அழகிகள் அவரது காம உணர்வுகளை அழகாகவும் ஆழமாகவும் தூண்டிவிட்டு அதில் மூழ்கச் செய்தார்கள். தன்னை மகிழ்விக்கும் பெண்கள் எந்த நாட்டைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் அவர்களை இரட்டை மகிழ்ச்சியில் ஆழ்த்தும் வழக்கம் கொண்ட வீரகேசரி தனது பெயருக்கேற்ப சிங்கம் போலவே அவர்களிடம் நடந்து கொண்டார். காமத்தில் மிருகமாக நடந்து கொள்பவர் சிலர். மிருக காமத்தைக் காட்டிச் செயல்படுபவர் சிலர். வீரகேசரி இரண்டிலும் வல்லவராதலால் ரோம் அழகிகளையே திணறடித்தார்.

பொழுது விடிந்தது அவருக்குத் தெரியவில்லை.

ஆனால் கோட்டை மதில் மீது காவல் காத்துக் கொண்டிருந்தவர்களுக்குத் தெரிந்தது. அவர்களில் சிலர் கோட்டைத் தளபதியிடம் போய் தாம் கண்ட விபரீதக் காட்சியைப் பற்றிச் சொன்னார்கள்.

கோட்டைத்தளபதி உடனே பூரண கவசமணிந்து மதில் மீது ஏறி அகழியை நோக்கினார். அகழியில் இருந்த முதலைகள் செத்து மிதந்தன. அப்பகுதியில் கழுகுகளும் காக்கைகளும் பறக்கத்

தொடங்கின. சில கழுகுகள் அகழிக்குள் பிரவேசித்து இறந்து கிடந்த முதலைகளைக் கொத்தவும் ஆரம்பித்தன. கோட்டைத் தளபதி ஏதோ சிந்தித்துவிட்டுத் திடீரென ஒரு வீரனைத் தூக்கி அகழியில் எறிந்தார்.

அந்த வீரன் சில நிமிடங்களிலேயே பிணமாக மிதந்தான்.

சந்தேகம் நிவர்த்தியான நிலையில் கோட்டைத் தளபதி மன்னனிடம் சென்று முதலைகளைப் பற்றிச் சொன்னார்.

''இதெப்படி சாத்தியம்?'' என்று கேட்டான் மன்னன்.

''அகழி நீரில் நஞ்சு கலக்கப்பட்டிருக்கிறது'' என்றார் கோட்டைத் தளபதி.

விஜயாதித்தன் அதிர்ந்து போய் ஸ்ரீராம புண்ணிய வல்லபரின் இல்லத்திற்குச் சென்றான்.

அங்கே அவரைக் காணவில்லை.

☆☆☆



41

பவானி

''ஸ்ரீராம புண்ணிய வல்லபர் எங்கே?'' என்று காவலாளியிடம் கேட்டான் விஜயாதித்தன்.

''இல்லத்தில் தான் இருந்தார் மகாராஜா. இப்போது காணவில்லை'' என்றான் காவலாளி.

''காணவில்லை என்று சொல்வதற்குக் காவலாளி எதற்கு? இதுதான் நீ காவல் புரியும் லட்சணமா?'' என்று எரிந்து விழுந்த மன்னன் ''போய் எல்லோரும் தேடிப்பாருங்கள்'' என்றான்.

சேனாதிபதியை அழைத்து வரும்படிக் கட்டளையிட்டு விட்டு கோட்டைத் தளபதியுடன் அரண்மனைக்கு வந்தான்.

சேனாதிபதி வந்தார்.

அகழியைப் பற்றி அவரிடம் சொன்ன மன்னன் ''என்ன செய்யலாம்?'' என்று கேட்டான்.

''வாருங்கள் மன்னவா. உடனே ஸ்ரீராம வல்லபரிடம் செல்வோம். ஆலோசனை சொல்வார்'' என்றார் சேனாதிபதி.

சேனாதிபதி தன்னைக் கிண்டல் செய்கிறார் என்பது நன்கு தெரிந்தது மன்னனுக்கு.

''நான் உங்களைத்தானே கேட்கிறேன்? அவரிடம் ஏன் செல்ல வேண்டும்?'' என்று கேட்டான்.

''தங்கள் வழக்கம் அதுதானே மகாராஜா?''

''அதனால் என்ன? உங்களைக் கேட்கும்போது நீங்கள் பதில் சொல்லுங்கள்.''

''சொல்வதற்குச் சிரமம் ஒன்றுமில்லை. சொல்வேன். சொல்லிய பிறகு நீங்கள் அந்த ஓய்வு பெற்ற போரமைச்சரிடம் ஆலோசனை கேட்பீர்கள். அதன்படி நடப்பீர்கள்.''

ஸ்ரீராம புண்ணிய வல்லபரிடம் ஆலோசனை கேட்டதை பொறுத்துக் கொள்ள முடியாமல் பேச்சுக்குப் பேச்சு தன்னைக்

குறை சொல்லிக் கொண்டிருந்த சேனாதிபதியைக் கொன்று விடலாம் போல் இருந்தது விஜயாதித்தனுக்கு. ஆனால் அதற்கு இது சந்தர்ப்பம் இல்லை என்பதை உணர்ந்து தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டான். ஸ்ரீராம புண்ணிய வல்லபர் காணாமல் போன விஷயத்தை அவரிடம் தெரிவிக்கவும் அவன் விரும்பவில்லை. அவர் இல்லாத நிலையில் சேனாதிபதியிடம் தான் ஆலோசனை கேட்க வேண்டும் என்ற கட்டாயத்தையும் உணர்ந்தான்.

எனவே, ''சேனாதிபதி, ஸ்ரீராம புண்ணிய வல்லபரைப் பற்றிய பேச்சு இங்கே வேண்டாம். அவரிடம் ஆலோசனை கேட்க வேண்டிய நிலைமை இப்போது இல்லை. ஆகவே நான் கேட்டதற்கு உரிய பதிலைச் சொல்லுங்கள்'' என்றான்.

''தாங்கள் ஏற்கெனவே ஸ்ரீராம புண்ணிய வல்லபரிடம் யோசனை கேட்டீர்களே அதன் நிலை என்ன? கைவிட்டு விட்டீர்களா?''

''அப்படித்தான்.''

சேனாதிபதிக்கு தற்போதுதான் திருப்தியாக இருந்தது.

''மகாராஜா, எதிரிகள் எப்படியோ அகழியில் நஞ்சு கலந்துவிட்டதால் அதிலிருந்த முதலைகள் இறந்துவிட்டன. பெரிய நஷ்டம்தான். ஆனால் வருத்தப்படுவதால் பயனில்லை. இறந்து கிடக்கும் முதலைகளை அப்படியே விட்டுவிட்டால் நாளை முதல் துர்நாற்றம் உண்டாகி நமது வீரர்கள் கோட்டை மதில் மீது நிற்கவே முடியாமல் போய்விடும். எனவே அகழி நீரை வாய்க்கால் மூலம் அகற்றிவிட்டு முதலைகளின் சடலங்களை அகழியிலேயே தகனம் செய்துவிட வேண்டும். என்ன சொல்கிறீர் கோட்டைத் தளபதி?'' என்றார்.

''மிகவும் சரி'' என்றார் கோட்டைத்தளபதி.

கோட்டைத் தளபதியை உடனடியாகச் செயல்படச் சொன்ன மன்னன், ''நேற்று தான் நமது ஏற்பாடுகள் பற்றியும் பலத்தைப் பற்றியும் விவரித்தீர்கள். அதில் முதல் பலத்தை முறியடித்துவிட்டான் எதிரி'' என்றான்.

''முதலைகள் இறந்துவிட்டாலும் அகழி அப்படிதான் இருக்கிறது. அது தூர்க்கப்படவில்லை. தூர்க்கவும் முடியாது. இருபதடி அகலமுள்ள அகழியை கடக்கவும் முடியாது. மகாராஜா கவலைப்பட வேண்டாம்'' என்றார் சேனாதிபதி.

''அகழி நீரில் எப்படி நஞ்சைக் கலந்திருப்பார்கள்?'' என்று கேட்டான் மன்னன்.

''விசாரித்துச் சொல்கிறேன் மகாராஜா''

''நமது அடுத்த நடவடிக்கை?''

''முதலைகள் தகனம் முடியட்டும். பிறகு பார்க்கலாம்.''

இவ்வாறு கூறிவிட்டு விடைபெற்றுக் கொண்ட சேனாதிபதி நேராகத் தன் அரண்மனைக்குச் சென்றார்.

அங்கே அவரது சகாக்கள் காத்திருந்தார்கள்.

''என்ன? சொன்னபடி முடித்துவிட்டார்களா?'' என்று கேட்டார் சேனாதிபதி.

''ஆம் ஐயா.''

''எங்கே மறைத்து வைத்திருக்கிறீர்கள்?''

சொன்னார்கள் சகாக்கள்.

''ஸ்ரீராம புண்ணிய வல்லபர் வயோதிகரானாலும் புத்திக் கூர்மையுள்ளவர். உங்களை ஏமாற்றும் வல்லமை அவருக்கு உண்டு. உங்கள் மூலமாகவே கூட தனது இருப்பிடத்தை மன்னருக்கு உணர்த்த அவரால் முடியும். எனவே மிகவும் எச்சரிக்கையாக இருங்கள். அவரிடம் யாரும் அதிகம் பேசவேண்டாம். போர் ஒரு முடிவுக்கு வரும்வரை அவர் வெளியே வரக்கூடாது. அதேசமயம் அவர் இறக்கவும் கூடாது.''

''அவர் உண்ணாவிரதம் இருக்க முயன்றால்?''

''அர்த்தமற்ற காரியங்களை அவர் செய்ய மாட்டார்'' என்று சொல்லி சகாக்களை அனுப்பிவைத்த சேனாதிபதி உற்சாகமாக அந்தப்புரத்திற்குள் உள்ளே நுழைந்தார். நேற்றைய கோபம் அவரிடம் இல்லை. தான் திட்டமிட்டபடி ஸ்ரீராமபுண்ணிய வல்லபரைக் கடத்தி மறைவான இடத்தில் வைத்துவிட்டதாலும், அவரது ஆலோசனைகளைக் கைவிட்டு தனது ஆலோசனைகளை மன்னன் ஏற்றதாலும் பெரும் திருப்தியை அடைந்த அவர் பகலென்றும் பாராமல் பகலவனைப் போல அந்தப்புரத்தில் ஆர்ப்பாட்டமாக நுழைந்தார்.

''காலையில்தான் இங்கிருந்து சென்றீர்கள்'' என்றாள் அந்தப்புரத் தலைவி.

''மீண்டும் இங்கே வரக்கூடாது என்று என்னைத் தடுக்க யாரால் முடியும்?'' என்று மூர்க்கமாகக் கேட்டார் சேனாதிபதி.

''தங்களைத் தடுக்க யாரும் கிடையாது. நான் அதைப் பற்றிச் சொல்லவில்லை. தங்களால் முடியுமா என்றுதான்...''

''முட்டாள். நான் நான்கு யானைகளுக்குச் சமம். என் பலம் அசாத்தியமானது. அதோடு நான் மகிழ்ச்சியில் இருக்கிறேன். அது கொண்டாடப்பட வேண்டிய மகிழ்ச்சி. பவானியை என் அறைக்கு அனுப்பு'' என்று கூறிவிட்டு அறைக்குச் சென்றார் சேனாதிபதி.

சில நிமிடங்களில் அறைக்குள் நுழைந்த பவானி உடனடியாகத் தனது ஆடைகளை அகற்றிவிட்டு நின்றபோது, ''பவானி என்றால் பவானிதான். என் விருப்பம் தெரிந்து துளி கூடத் தாமதமின்றி துணிகளை நீக்கிவிட்டு நிற்கக் கூடியவள் நீ ஒருத்தி மட்டும்தான். ஆகவேதான் உன்னை அழைத்தேன்'' என்றார் சேனாதிபதி.

''தாங்கள் மகிழ்ச்சியோடு இருப்பதாகச் சொன்னாள் அந்தப்புரத் தலைவி'' என்று போதையூட்டும் குரலில் சொல்லி அவரை நோக்கி நகர்ந்தாள் பவானி.

''உண்மைதான். நீண்ட நாட்களாக செய்ய நினைத்த காரியத்தை நேற்று திருப்திகரமாகச் செய்து முடித்தேன். நான் எதிர்பார்த்த பலனும் கிடைத்துவிட்டது. மகிழ்ச்சியாகத்தானே இருக்கும்?'' என்று சொன்ன சேனாதிபதி ''இன்று என் மகிழ்ச்சியை வித்தியாசமாகக் கொண்டாடப் போகிறேன்'' என்றார்.

''வித்தியாசமாகவா?'' என்று கேட்டாள் அவள் வியப்புடன்.

''ஆமாம். இன்று உன்னை நான் கையால் தொடப் போவதில்லை.''

''ஐயோ! இதென்ன தண்டனை?''

''தண்டனையல்ல பவானி. இதுவும் ஒரு சொர்க்கம்தான்.''

''தொடாமல் எப்படிச் சொர்க்கம் வரும்?''

''அதையும் தான் பார்'' என்று சொன்ன சேனாதிபதி தான் சொன்னபடியே தனி சொர்க்கத்தை அவளுக்குக் காண்பிக்க ஆரம்பித்தார்.

அசந்து போனாள் பவானி.

''இது சொர்க்கம்தான். வித்தியாசமான சொர்க்கம்தான். இதை எப்படி நான் அறியாமல் போனேன்? நானும் தான் எத்தனை வித்தைகளைக் காட்டினேன்? இப்படியொரு வித்தையை நான் அறியாமல் போனது எப்படி?'' என்று தனக்குள் கேட்டுக் கொண்ட

அவள் ''வேண்டாம் வேண்டாம்'' என்று சொல்லிக் கொண்டே அவரை விட்டு நகர முற்பட்டு, ''இதெல்லாம் எங்கே கற்றீர்கள்? நான் கேள்விப்பட்டதுகூட இல்லையே?'' என்று கேட்டாள்.

''எல்லாவற்றையும் கற்க முடியாது பவானி. சிலவற்றை நாமாகக் கண்டுபிடிக்க வேண்டும். அப்படி முடியாவிட்டால் காமம் கசந்துவிடும்'' என்றார் சேனாதிபதி.

அவரது கண்டுபிடிப்பு அவளுக்குப் புதிய சொர்க்கத்தைக் காட்டி கிளுகிளுக்க வைத்தாலும் புதியதாய் இருந்ததால் வெட்கப்பட்டு நெளிந்தாள்.

வெட்கங்கெட்ட சேனாதிபதியோ எதைப் பற்றியும் கவலைப்படாமல் தனது கண்டுபிடிப்பை சரிபார்க்கும் விஞ்ஞானியைப் போலத் தீவிரமாகச் செயல்பட்டார்.

''ஐயோ! இப்படியெல்லாம் கூடவா? வேண்டாம். வேண்டாம். அதுவும் இங்கு... வேண்டாம். வெட்கமாக இருக்கிறது'' என்று நெளிந்தாள் பவானி.

''பெண்கள் வெட்கப்படுவதும் ஆண்கள் வெட்கம் கெடுவதும் இயற்கைதான்'' என்றார் சேனாதிபதி தனது கண்டுபிடிப்பை பரீட்சித்தபடி.

''இது... இது... அந்த மாதிரியான வெட்கமில்லை.''

''புதிய கண்டுபிடிப்பு எனக்கு. புதிய வெட்கம் உனக்கு. சரியாகத்தான் இருக்கிறது.''

அவளது வெட்கம் கொஞ்சம் கொஞ்சமாக நீங்கி பிறகு அறவே மறைந்தபோது அவளும் அவரைப் போலவே மாறினாள். ஆதலால் அங்கே வேகம் அதிகரித்தது. உணர்ச்சிகள் வெள்ளமாகப் பிரவாகித்தன. சொர்க்கானுபாவம் எல்லையற்று விரிந்தது.

சுமார் ஒரு நாழிகை வரை தனது கண்டுபிடிப்பை பரீட்சித்து பூரணதிருப்தியடைந்த சேனாதிபதி தனது வாயை துடைத்துக் கொண்டு மஞ்சத்தில் அமர்ந்தார்.

அவளுக்கு இன்னமும் தேவையாக இருந்தாலும் அப்போதைக்கு அவரைக் கட்டாயப்படுத்த விரும்பவில்லை. நாளைக்கு இந்த அறைக்குத் தாமாகவே வந்து இப்புதிய சொர்க்கத்தில் மீதி மிச்சங்களை அனுபவித்துவிட வேண்டியது தான் என்று தீர்மானித்துக் கொண்டு ஆடை அணிகளை அணிந்து கொண்டாள். அவிழ்ந்து கிடந்த கூந்தலை அள்ளி முடிந்து கொண்டு அவரது மார்பில் சாய்ந்தபடி அமர்ந்து கொண்டு,

''உங்களைப் போல ஒருவர் இனிமேல்தான் பிறக்க வேண்டும் இந்த விஷயத்தில்'' என்றாள்.

''அதைப் பற்றி நாம் ஏன் கவலைப்பட வேண்டும்? இப்போது நானிருக்கிறேன். நீ இருக்கிறாய். போதாதா?'' என்றார் சேனாதிபதி.

''உங்களுக்கு இதேபோன்ற மகிழ்ச்சிகள் வரவேண்டும். புதிது புதிதாகக் கண்டுபிடிக்கவும் வேண்டும்'' என்றாள் பவானி.

''இந்த வேண்டாத போர் முடியட்டும். அதற்குப் பிறகு பார், தினமும் ஒரு கண்டுபிடிப்புதான்.''

''அதுசரி, உங்கள் மகிழ்ச்சிக்கு என்ன காரணம்?''

சொன்னார் அவர்.

''உங்களை மன்னர் ஏன் மதிக்க மறுக்கிறார்? நீங்கள் தானே சேனாதிபதி?''

''உனக்குத் தெரிந்ததுகூட மன்னருக்குத் தெரியவில்லை. அதோடு அவருக்கு அந்தப் பாழாய்ப்போன கிழவரின் மீது அவ்வளவு ஈடுபாடு.''

''கிழவரைத்தான் அகற்றிவிட்டீர்களே! அதை விடுங்கள். இந்தப் போரில் நீங்கள் வெற்றி பெற்றுவிடுவீர்களா?''

''அதிலென்ன சந்தேகம்?''

''ஒருவேளை வெற்றி பெறாவிட்டால்?''

''இதென்ன கேள்வி? சாளுக்கியர் வெற்றி பெறுவது உறுதி. சகல ஏற்பாடுகளையும் செய்திருக்கிறேன்.''

''உங்கள் ஏற்பாட்டில் ஒன்றான அகழி பயனற்றுப் போகும்படி எதிரிகள் செய்துவிட்டார்கள் அல்லவா?''

''அதனால் என்ன?''

''உங்கள் பலத்தை எதிரிகள் ஒவ்வொன்றாக அழிக்கலாம் அல்லவா?''

''அப்படி முற்பட்டால் நாங்கள் வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கப் போவதில்லை?''

''பதில் தாக்குதல் செய்வீர்கள். அதையும் எதிரி முறியடித்துவிட்டால்?''

''நீ என்ன இப்படி அபசகுனமாகவே பேசுகிறாய்?''

''நெருப்பு என்று சொன்னால் வாய் வெந்துவிடுமா என்ன? நான் சொல்வதுபோலவும் யோசித்துப் பார்ப்பதால் நஷ்டம் எதுவும் இல்லையே?''

''அப்படியெல்லாம் எதற்கு யோசிக்க வேண்டும்?''

இதைக் கேட்டதும் உடல் அங்கங்கள் எல்லாம் குலுங்கும்படிச் சிரித்த பவானி, ''சற்றுமுன் அந்தரங்க விஷயத்தில் ஏதேதோ யோசித்து கண்டுபிடிக்கவும் செய்தீர்கள். அரசியல் விஷயத்தில் மட்டும் தயக்கமெதற்கு? மாற்றி யோசிப்பதால் என்ன ஆகிவிடப் போகிறது? ஒருவேளை இந்தப் போரில் நீங்கள் தோற்றுவிட்டால் உங்கள் நிலைமை என்ன? உங்கள் பதவியைப் பறிப்பார் மன்னர். ஸ்ரீராம புண்ணிய வல்லபரைக் கடத்தி மறைத்து வைத்ததைக் கண்டுபிடித்து குற்றம் சுமத்துவார். உங்கள் மீது ஆத்திரமும் வெறுப்பும் கொண்டுள்ள அவர் உங்களைக் குற்றவாளியாக்கி ஒரேயடியாகத் தீர்த்துக் கட்டுவார். இதைத்தவிர வேறு எதை எதிர்பார்க்க முடியும் நீங்கள்?'' என்று கேட்டு வலியச் சென்று அவரது உதடுகளைத் தன் உதடுகளால் அழுத்தி முத்திரையைப் பதித்தாள்.

இரட்டை அதிர்ச்சிகளால் திணறிப்போன அவர், ''போரில் நான் தோற்றால் நீ சொன்னபடிதான் நடக்கும். அதற்கென்ன இப்போது?'' என்று கேட்டார்.

''அப்படி குற்றவாளியாகக் குற்றம் சுமத்தப்பட்டு உயிரை இழக்கவா இத்தனை காலமாக இந்த நாட்டிற்கும் மன்னருக்கும் சேவை செய்தீர்கள்?''

''பவானி, இப்படியொரு முடிவை எதிர்பார்த்து யாரும் சேவையைத் தொடங்குவதில்லை. நாட்டிற்காகத்தான் சேவையில் இறங்குகிறோம்.''

''இருக்கலாம். போரில் தோற்ற பின்பு உங்களது தேசபக்தியை யார் மதிக்கப் போகிறார்கள்? அப்போதைய விருப்பு வெறுப்புகளைத் தானே பார்ப்பார்கள்? போரில் தோல்வி ஏற்பட்டால் நீங்கள் இத்தனை ஆண்டுகளாகக் காட்டிய தேசபக்தி பெரிதாகத் தெரியாது. ஸ்ரீராம புண்ணிய வல்லபரைக் கடத்தியதுதான் பெரிதாகத் தெரியும். உங்களைத் துரோகியாகத் தான் அடையாளம் காண்பார்கள்.''

''அது உண்மைதான் பவானி.''

''அதற்கு மாற்று எதையாவது நீங்கள் யோசித்து வைத்திருக்கிறீர்களா?''

''மாற்றா?''

''ஆம். போரில் தோல்வி கிட்டினால் உங்கள் உயிரை நீங்கள் காப்பாற்றிக் கொள்ள வேண்டும். எதிர்காலத்திற்கு வழி செய்து கொள்ள வேண்டும்.''

''என்ன செய்ய வேண்டும் என்று சொல்கிறாய்?''

சொன்னாள் பவானி.

அதிர்ந்தார் சேனாதிபதி.

''அதிர்ச்சியடையாதீர்கள். அமைதியாக யோசித்துப் பாருங்கள்.''

''நீ சொல்வது தோல்வியை எதிர்பார்த்து அதற்கு முன்பாகவே செய்ய வேண்டிய காரியம்.''

''ஆமாம்.''

''அப்படிச் செய்யலாம் என்று வைத்துக் கொள். அப்படிச் செய்தபின் போரில் வெற்றிகிட்டிவிட்டால் என்ன செய்வது?''

''எல்லாவற்றையும் அப்படியே கொண்டு வந்து இருந்த இடத்தில் வைத்துவிடுவதுதான். எதிரிகளிடமிருந்து காப்பாற்றத் தான் இப்படி செய்தேன் என்று மன்னரிடம் சொல்லிவிட்டால் உங்கள் மதிப்பு உயரும். நிலையும் உயரும்.''

''அதிரடியான ஆபத்தான திட்டம்தான். ஆனால் இப்போது அதை எப்படிச் செய்வது?''

''ஸ்ரீராம புண்ணிய வல்லபர் சொன்ன வழிதான்.''

''எதைச் சொல்கிறாய்?''

''நீங்கள் தானே சொன்னீர்கள்? மக்களை கோட்டையை விட்டு வெளியேற்றுங்கள். அவர் கூறியதுபோல் மக்களோடு படைவீரர்களையும் ஆயுத மூட்டைகளோடு வெளியேற்றுங்கள். அவர்களோடு உங்கள் சகாக்களையும் பொக்கிஷ செல்வங்களோடு வெளியேற்றுங்கள்.''

சேனாதிபதி யோசித்துவிட்டு, ''ஸ்ரீராம புண்ணிய வல்லவர் கூறிய யோசனை அது. அதை ஏற்காதது போல பேசிவிட்டேன் நான். இப்போது எப்படி ஏற்க முடியும்?'' என்று கேட்டார்.

''இது ஒரு பெரிய காரியமா? மறுயோசனை செய்ததாகச் சொல்லி அந்த திட்டத்தை ஏற்பதாகச் சொல்லுங்கள். அப்படிச் செய்தால் ஸ்ரீராம புண்ணிய வல்லபரை நீங்கள் கடத்தியிருக்கக் கூடும் என்ற சந்தேகம் மன்னருக்கு இருந்தால் அது விலகும். உங்களை நம்புவார். மதிப்பார்.''

சிறிது நேரம் மௌனமாய் இருந்த சேனாதிபதி, ''நீ இவ்வளவு நேரமாகப் பேசியதைப் பார்த்தால் பல்லவர் படை வென்றுவிடும் என்று நம்புவதுபோல இருக்கிறது'' என்றார்.

''ஆமாம்.''

''எப்படி?''

''அது தான் நடக்கும். பல்லவர் படையில் ஓர் உபதலைவன் இருக்கிறான். அவன் அதிபுத்திசாலி. எந்தச் சந்தர்ப்பத்தையும் அவனால் சமாளிக்க முடியும். போரில் மட்டுமல்ல எல்லா விஷயத்திலும்.''

''அது எப்படி உனக்குத் தெரியும்?''

''நேரில் கண்டவள் சொன்னாள்.''

''நேரில் கண்டவளா? யாரது?''

''என் சகோதரி?''

''சகோதரியா?''

''ஆம். உங்களுக்குத் தெரிந்தவள்தான்.''

''யாரது?''

''விஜயகுமாரி.''

பவானி கூறியதைக் கேட்டு அதிர்ந்தார் சேனாதிபதி வீரகேசரி.

☆☆☆



42 புகைமண்டலமும் பகை மண்டலமும்

''நீ சொல்வது உண்மையா?'' என்று கேட்டார் சேனாதிபதி.

''உங்கள் மீது ஆணை.''

''நீ அவள் சகோதரி என்பது எப்படி எனக்குத் தெரியாமல் போயிற்று? அவளும் உன்னைப் பற்றிச் சொல்லவில்லையே!''

''அவள் எதற்காக என்னைப் பற்றி உங்களிடம் சொல்லப் போகிறாள்? ஆட்டம் போடத்தானே அவளுக்கு நேரம் இருந்தது? ஆட்டம் போட்டு உங்களுக்கே அடிமையானவள் அவள். ஆட்டம் எதுவுமின்றி நேராக உங்கள் அந்தப்புரத்திற்கு வந்தவள் நான்.''

''உதயசந்திரனைப் பற்றி உன்னிடம் எப்போது சொன்னாள்? எங்கேயிருந்து சொன்னாள்?''

''அது நிச்சயமாகத் தெரியாது. அநேகமாக விஸ்வபுரத்துப் போருக்குப் பிறகு செய்தியனுப்பி இருப்பாள் போலிருக்கிறது. தனது பணியாளர்கள் மூலம் எனக்குச் செய்தியனுப்பினாள். தங்களிடம் தெரிவிக்கும்படிச் சொன்னாள். செய்தி வந்து நான்கு நாட்கள் ஆகிறது.''

''கோட்டையைப் பல்லவர் படை முற்றுகை யிட்டிருக்கிறதே? பணியாளன் எப்படி வந்தான்?''

''வைத்தியன் வேடத்தில் வந்தான். வைத்தியர்கள் கோட்டைக்கு வருவதையும் போவதையும் முற்றுகைப் படை தடுப்பதில்லை என்பது உங்களுக்குத் தெரியாதா?''

''பொக்கிஷம் விஷயத்தைக்கூட அவள்தான் உனக்குச் சொன்னாளா?''

''இல்லை. இது என் யோசனை.''

''வேறென்ன சொன்னாள் விஜயகுமாரி?''

''பல்லவரை நேர்வழிப் போரில் வெற்றி கொள்ள முடியாது என்றும் அவர்களை வெற்றி கொள்ள இது சமயமல்ல என்றும்

அவர்களோடு சமாதானம் செய்து கொள்வதே நல்லது என்றும் தங்களிடம் சொல்லச் சொன்னாள்.''

''உங்கள் இருவருக்கும் அரசியல் அறிவு அதிகமாகத்தான் இருக்கிறது'' என்று சொன்ன சேனாதிபதி, ''அவள் இப்போது எங்கிருக்கிறாள் தெரியுமா?'' என்று கேட்டார்.

''தெரியாது. ஆனால் உங்களைத் தேடி விரைவிலேயே வருவாள்.''

சேனாதிபதி அதோடு பேச்சை முடித்துக் கொண்டு பவானியை அனுப்பி வைத்தார்.

அவள் கூறியதையெல்லாம் சிறிது நேரத்திற்கு அசை போட்டார்.

தனக்குத் தோன்றாத யோசனைகள் எல்லாம் பவானிக்கும் விஜயகுமாரிக்கும் தோன்றியது வியப்பாக இருந்தாலும் அவை சரியானவைகளாய் இருந்ததை உணரவே செய்தார்.

புது சொர்க்கத்தில் ஈடுபட்டிருந்தவரை இன்பப் பெட்டகமாய் இருந்த அவரது தேகம் பவானி கூறிய புதிய யோசனைகளால் சற்றே சோர்வடைந்துவிட்டதால் சோர்வு நீங்க நீராடி புத்துணர்வு பெற்றார்.

தனது சகாக்களை அழைத்து பவானியின் யோசனையைப் பற்றி ஆலோசித்தார்.

சகாக்களுக்கும் பவானியின் யோசனை பிடித்திருந்தது.

எனவே அதுகுறித்து உரிய திட்டத்தைச் சொன்ன சேனாதிபதி, ''மக்களை கோட்டையிலிருந்து வெளியேற்றும் ஆணையை இன்றிரவு மன்னரிடமிருந்து பெற்றுவிடுகிறேன். நாளைக்கே மக்கள் வெளியேறத் தொடங்குவார்கள். அவர்களோடு படைவீரர்களும் நீங்களும் இடைஇடையே செல்லுங்கள். நம்மவரின் எண்ணிக்கை ஆயிரத்திற்குக் குறைவில்லாமல் இருக்க வேண்டும். ஏனென்றால் பொக்கிஷத்தில் இருக்கும் செல்வம் மிக அதிகம்'' என்றார்.

இதற்கிடையில் அகழியில் இருந்த நீரை அகற்றுவதில் ஈடுபட்டார் கோட்டைத்தளபதி. நீர் வடிந்தபின் அகழியை சிறிது நேரத்திற்கு வெய்யிலில் காயவிட்டார். கோட்டைக்கு எதிரே பல்லவர் படை திரண்டிருந்ததால் மதில் மீதிருந்து பகிரங்க நடவடிக்கையில் ஈடுபடவில்லை. பகல் முழுவதும் அகழியை காயவிட்டு இரவு முகிழ்த்ததும் ஆங்காங்கு எண்ணெயைக்

கொட்டி பந்தங்களையும் கொள்ளிகளையும் போட்டால் முதலைச் சடலங்கள் எரிந்து கருகிச் சாம்பலாகிவிடும் என்றுத் தீர்மானத்துடன் ஏற்பாடுகளைச் செய்திருந்தார்.

சேனாதிபதி தனது ஒற்றர்கள் மூலம் அகழியில் நஞ்சு கலக்கப்பட்டது பற்றி அறிந்து அதை தெரிவிக்க மன்னனிடம் சென்றார்.

மன்னன் அப்போது சில வீரர்களுடன் உரையாடிக் கொண்டிருந்தான்.

சேனாதிபதியைக் கண்டதும் அவர்களைப் போகச் சொல்லிவிட்டு அவரை அருகில் இருந்த ஆசனத்தில் அமரச் சொன்னான்.

''மகாராஜா, ரணரசிகப்புரத்திற்கு மேற்கேயுள்ள மலையருவி நீர் சரஸ்வதி நதியாக நமக்குத் தெற்கே ஓடுவது தங்களுக்குத் தெரியும். அந்த நதிநீரை குழாய்களின் மூலம் கொண்டு வந்து இரண்டு பிரிவாகப் பிரித்திருக்கிறோம். ஒரு பிரிவு மூலம் வரும் தண்ணீர் அகழிக்குச் செல்கிறது. மற்றொரு பிரிவு மூலம் வரும் நீர் கோட்டைக்குள் இருக்கும் நமக்கு குடிநீராக வருகிறது. இவ்விரண்டில் அகழிக்குச் செல்லும் தண்ணீர் கட்டுப்படுத்தப்படும் மதகினை எதிரிகள் கண்டு அந்த இடத்தில் நஞ்சைக் கலந்திருக்கிறார்கள். அதன் மூலம் அகழிக்கு வந்த நீர் நச்சுத் தன்மையடைந்துவிட்டதால் அதைப் பருகிய முதலைகள் இறந்துவிட்டன. இப்போது நச்சு நீர் முழுவதும் அகற்றப்படுகிறது. முதலைகள் இறந்துவிட்டது எதிரிகளுக்குத் தெரிந்திருக்கும். இனி அகழிக்கு வரும் நீரில் பல்லவர்கள் நஞ்சை கலக்கமாட்டார்கள். அதற்கான அவசியம் இல்லை'' என்றார் சேனாதிபதி.

''அகழியை விடுங்கள். நமக்கு வரும் குடிநீரில் நஞ்சைக் கலக்கலாம் அல்லவா?'' என்று கேட்டான் மன்னன்.

''கலப்பதாக இருந்தால் அகழி நீரில் கலந்த போதே குடிநீரிலும் கலந்திருக்கலாம். அப்படிச் செய்யவில்லை. கோட்டைக்குள் இருக்கும் மக்களை அகற்றும்படி அவர்கள் ஓலை அனுப்பியதிலிருந்தே மக்களுக்கு எந்தக் கெடுதலும் செய்யக்கூடாது என்பதுதான் அவர்களது நோக்கமாக இருக்க வேண்டும். தங்களுக்கு இடையூறாக இருப்பவைகளை மட்டும் அழிக்கிறார்கள். அது தான் முதலைகள் நாசம்'' என்றார் சேனாதிபதி.

''இதிலிருந்து என்ன தெரிகிறது? நம்மை அவர்கள் குருட்டாம் போக்கில் எதிர்க்க முயலவில்லை. நமது பலம் எது என்று தெரிந்து கொண்டு அதன் ஆணிவேரை அறுக்க முயல்கிறார்கள்'' என்றான் மன்னன்.

''உண்மைதான் மகாராஜா.''

''முதலைகளை அழிப்பதில் எதிரி வென்றுவிட்டான். இனி அடுத்த நடவடிக்கைக்குத் தயாராக இருப்பான். அதை உங்களால் ஊகிக்க முடிகிறதா?''

''அகழியைத் தூர்க்க நினைக்கலாம். ஆனால் அது முடியாத காரியம்.''

''ஏன்?''

''தூர்க்க வேண்டுமென்றால் ஏராளமான மரங்களை வெட்டிச் சாய்க்க வேண்டும். நமது அகழி ஆழமும் அகலமும் அதிகமாகக் கொண்டிருப்பதால் அதைத் தூர்ப்பது என்பது முடியாது. கால விரயமாகும். அதோடு வெட்டுவதற்கு மரங்களும் அருகில் இல்லை.''

''அப்படியானால் கோட்டையைத் தாக்குவார்கள் இல்லையா?''

''ஆம். அந்தத் தாக்குதலை தொடங்குவதற்கு முன் நாம் ஸ்ரீராமபுண்ணிய வல்லபரின் திட்டத்தை நிறைவேற்றுவதே உகந்தது.''

இதைக் கேட்டதும் ஆச்சரியப்பட்டான் மன்னன். ஆபத்தான காலங்களில் உபாயங்களின் தன்மையின் பேரில்தான் கவனம் செலுத்த வேண்டுமே தவிர உபாயத்தைச் சொல்வது யார் என்பதின் பேரில் அல்ல என்ற கருத்தைக் கொண்டவன் விஜயாதித்தன். ஆகவே தான் ஓய்வு பெற்று விட்டாலும் ஸ்ரீராம புண்ணிய வல்லபரின் ஆலோசனை சிறப்பாக இருக்கும் என்று கருதி அவரிடம் சென்று யோசனையைக் கேட்டு ஏற்றுக் கொள்ளவும் செய்தான். ஆனால் அந்த யோசனையை ஏற்காத சேனாதிபதி தன்னைக் குத்திக் காட்டிப் பேசியபோது கடுங்கோபம் எழுந்தது அவனிடம். சேனாதிபதியை வெட்டிப் போட்டால் என்ன என்று கூட நினைத்தான். ஆனால் அவசரப்படுவது அறிவீனம் என்பதை உணர்ந்த அவன் ''போர் முடியட்டும். ஏளனம் செய்த அவன் நாக்கை முதலில் அறுத்துவிட்டு பிறகு நாளொன்றுக்கு ஓர் உறுப்பென்று ஒவ்வொன்றாக அறுத்து சித்திரவதை செய்து ரசிக்கலாம்'' என்று எண்ணிக் கொண்டு அமைதி காத்தான்.

அன்றைய நாளிலேயே ஸ்ரீராம புண்ணிய வல்லபர் காணாமல் போனதும் அதற்கும் சேனாதிபதிக்கும் சம்பந்தம் இருக்குமோ என்று சந்தேகப்பட்டான். அவரிடம் அது குறித்து விசாரிக்கவும் முடியவில்லை.

இந்த நிலையில் சேனாதிபதி ஸ்ரீராம புண்ணிய வல்லபரின் யோசனையை ஏற்கலாம் என்று சொன்னபோது விஜயாதித்தனுக்கு வியப்பாக இருந்தது.

''எப்படி இந்த திடீர் முடிவுக்கு வந்தீர்கள்?'' என்று கேட்டான்.

''திடீர் முடிவல்ல மகாராஜா. எதிரி எடுத்த நடவடிக்கையால் தான் இந்த முடிவுக்கு வந்தேன். எதிரி நமது கோட்டை அகழியை அர்த்தமில்லாமல் செய்துவிட்டான். அடுத்து கோட்டையைத் தாக்க முயல்வான். நாமும் துணிந்து முன்னேறிச் சென்று தாக்க நேரிடலாம். அதற்கு உள்ளே இருக்கும் நமது படை விரைவாக இயங்க வேண்டியது அவசியமாகிறது. அதற்குத் தடையாக இருக்கும் மக்களை அகற்றிவிடுவதுதான் விவேகமானது. அதோடு ஸ்ரீராம புண்ணிய வல்லபர் கூறியபடி மக்களோடு கணிசமான படை வீரர்களையும் வெளியேற்றினால் அவர்களைக் கொண்டு பல்லவர் படையை பின்புறத்தில் தாக்கலாம்.''

''இப்போதாவது ஸ்ரீராம புண்ணிய வல்லபரின் அறிவுக் கூர்மையை உணர்ந்து கொண்டீர்களே அதுவரை சந்தோஷம் தான். ஆனால் நமது துரதிஷ்டம் ஸ்ரீராம புண்ணிய வல்லபரைக் காணவில்லை.''

''மகாராஜா! இதென்ன விபரீதம்? இது உண்மையா?'' - அதிர்ச்சியடைந்தவரைப் போல நடித்தார் சேனாதிபதி.

''உண்மைதான் சேனாதிபதி. அவராக எங்கேயும் போகமாட்டார். போகவும் முடியாது. அவரது நிலைதான் உங்களுக்குத் தெரியுமே!''

''பிறகு?''

''யாராவது அவரைக் கடத்தியிருப்பார்களோ என்று நினைக்கிறேன்.''

''அவரை யார் கடத்தப் போகிறார்கள்?''

''அவருக்கு வேண்டாதவர்கள்.''

''அப்படி யார் இருக்கிறார்கள்?''

''அவர் இருப்பதை விரும்பாதவர்கள் இருக்கலாம். அவரது பேச்சை விரும்பாதவர்கள் இருக்கலாம். அவர்கள் அவரைக் கடத்தியிருக்கலாம்.''

''எதற்கு கடத்த வேண்டும்?''

''அவர் பேசுவதை தடுப்பதற்காக இருக்கலாம்.''

''அவர் பேசுவதை யார் தடுக்க முடியும்?''

''சேனாதிபதி, அவர் ஆலோசனை கூறியதை நீங்கள் விரும்பவில்லை.''

''மகாராஜா! என்னைச் சந்தேகிக்கிறீர்களா?''

''அதற்காகச் சொல்லவில்லை சேனாதிபதி. அவர் பேச்சை விரும்பாதவர்கள் அவரைக் கடத்திச் சென்று மறைத்து வைத்திருக்கலாம். நீங்கள் அதுபோன்ற அற்ப விஷயங்களில் ஈடுபடமாட்டீர்கள் என்பது எனக்குத் தெரியும். அவரது ஆலோசனையை நேற்று ஏற்காத நீங்கள் இன்றைக்கு ஏற்றதிலிருந்தே உங்கள் பெருந்தன்மை தெரிகிறது. ஆனால் ஒன்று சேனாதிபதி.''

''சொல்லுங்கள் மகாராஜா.''

''ஸ்ரீராம புண்ணிய வல்லபரின் ஆலோசனை இல்லாமல் என்னால் போரை நடத்த முடியும். ஆனால் அவர் கடத்தப் பட்டிருந்தால் அதை என்னால் பொறுத்துக் கொள்ள முடியாது. அது என் கௌரவப் பிரச்சினை. அவரைக் கடத்தியது யாராக இருந்தாலும் சும்மா விடமாட்டேன். நரகம் என்பது வானுலகத்தில் இல்லை ரணரசிகபுரத்திலேயே இருக்கிறது என்பதை நிரூபிப்பேன்.''

''அப்படியெல்லாம் எதுவும் நடந்திருக்காது மகாராஜா. ஸ்ரீராம புண்ணிய வல்லபர் மகாமேருவைப் போன்றவர். அவரைக் கடத்தவும் மறைக்கவும் யாராலும் முடியாது. அவராகவே விரும்பித்தான் தலைமறைவாகியிருப்பார். கவலைப்படாதீர்கள். அவரைத் தேடும் முயற்சியில் நானும் ஈடுபடுகிறேன்'' என்று சொன்னார் சேனாதிபதி.

இதற்கிடையில் இரவு முகிழ்த்து விட்டதை அறிந்த கோட்டைத் தளபதி அகழியில் கிடந்த முதலைகளின் சடலங்களின் மீது ஆங்காங்கே எண்ணை கொப்பரைகளை கவிழ்க்கச் செய்து பந்தங்களையும் கொள்ளிகளையும் வீசத் செய்தார். அவை பல இடங்களில் பற்றிக் கொண்டாலும் ஈரத்தன்மை காரணமாகப்

புகையை கிளப்பிவிட்டதால் கோட்டைப் பகுதியை புகைமண்டலம் சூழ்ந்தது.

அதை எதிர்பார்த்திருந்த பல்லவர் படைகள் கோட்டையின் நாலா புறத்திலும் நெருங்கி தீயம்புகளைச் சரமாரியாக கோட்டை மதில் மீதும் கோட்டைக்குள்ளும் எய்தன. அவர்களின் இலக்கு தெளிவாக இருந்ததால் மதில் சுவர் கண்களுக்குத் தெரியவில்லை யென்றாலும் அதன் இருப்பை உணர்ந்து அம்புகளை எய்ய முடிந்தது. கோட்டை வாசல் கதவுகளின் மீதும் அம்புகளை எய்தார்கள்.

இந்தத் திடீர் தாக்குதலை சாளுக்கியர்கள் எதிர்பார்க்க வில்லை. அதேசமயம் பல்லவர் படை தாக்கத் தொடங்கியதுமே கோட்டைத் தளபதி மதில் மீதிருந்த வீரர்களை எதிரிகளை நோக்கி அம்பு மழை பொழியும் படி உத்தரவிட்டான். அதற்குள் பல்லவ வீரர்கள் விடுத்த தீயம்புகளும் விஷ அம்புகளும் மதில் மீதிருந்த பல வீரர்களையும் கோட்டைக்குள் இருந்த வீரர்கள் பலரையும் பதம் பார்த்ததால் அவர்கள் மரண ஓலமிட்டார்கள். சில அம்புகள் கோட்டைச் சுவரின் உட்புறம் நின்றிருந்த யானைகளின் மீதும் விழுந்ததால் அவை பிளிறிக் கொண்டு கோட்டைக்குள் இருந்த சாளுக்கிய வீரர்கள் பக்கம் திரும்பி பலரை துதிக்கையால் தூக்கி வீசியது.

பல்லவர் படையின் நோக்கம் திடீர் தாக்குதல், ஓரளவிற்குச் சேதம் என்பதாக மட்டுமே இருந்ததால் திடீர் தாக்குதலை நடத்திவிட்டு எதிரிகள் தாக்குவதற்குள் பின்வாங்கிக் கொண்டார்கள். ஆகவே புகை மண்டலத்திற்குள் சிக்கிக் கொண்டு சாளுக்கிய வீரர்கள் இலக்கு தெரியாமல் எய்த அம்புகள் கோட்டைக்கு வெளியே பயனன்றி வீழ்ந்தனவேயன்றி பல்லவ வீரர்களைத் தொடவில்லை. பல்லவர் தரப்பிலிருந்து ஓலம் எதுவும் எழாததால் பல்லவர்களின் தாக்குதலைப் புரிந்து கொண்ட கோட்டைத் தளபதி வீணாக அம்புகளை எய்வதை நிறுத்தும்படி உத்தரவிட்டார்.

அகழியில் பெரிய கொள்ளிகளைப் போடச் சொல்லி புகை எழுவதை தடுக்கவும் தீ கொழுந்துவிட்டு எரியவும் ஏற்பாடு செய்தார் கோட்டைத் தளபதி. அதனால் புகை மண்டலம் அழிந்து தீ மண்டலம் எழுந்தது. முதலைச் சடலங்கள் நன்றாக எரியவும் செய்தன. தீ மண்டலம் உருவான பின் பல்லவர் படை தாக்குதலில் ஈடுபடவில்லை.

பல்லவரின் இந்த திடீர்தாக்குதலால் சாளுக்கியர்தரப்பில் சில ஆயிரம் வீரர்கள் மாண்டுவிட்டதை அறிந்தபோது கோபாவேசம் கொண்ட விஜயாதித்தன் ''பல்லவர்களால் எல்லாவற்றையும் எதிர்பார்க்க முடிகிறது. நமக்கு நஷ்டத்தையும் உண்டாக்க முடிகிறது. நம்மால் எதுவும் இயலவில்லை. நஷ்டம் உண்டான பிறகு அறிந்து கொள்ளத்தான் முடிகிறது. இங்கிருப்பவர்கள் எல்லோருக்கும் ஒரே மாதிரிதான் மூளை இயங்குகிறதா? என்ன நிகழக்கூடும் என்று ஒருவரால்கூட ஊகிக்க முடியவில்லையா?'' என்று சீறினான்.

''கோபப்படாதீர்கள் மகாராஜா. நாம் பதட்டப்பட வேண்டிய அவசியமில்லை. உண்மையிலே பல்லவர்களிடம் தான் பதட்டம் உண்டாகியிருக்கிறது. ஏனென்றால் அவர்கள் கோட்டைக்கு வெளியே இருக்கிறார்கள். நம்மை முறியடிக்க வேண்டிய அவசியமும் அவசரமும் இருக்கிறது. ஆகவே தான் அகழியில் நஞ்சைக் கலந்து முதலைகளை அழித்தார்கள். செத்துப் போன முதலைகளை அப்படியே விட்டுவிட்டால் துர்நாற்றம் வீசுமாதலால் அகழியில் உள்ள நச்சு நீரை வெளியேற்றி சடலங்களை நாம் எரிப்போம் என்று எதிர்பார்த்தார்கள். அப்படி எரிக்கும்போது அகழியின் ஈரம் காரணமாகப் புகை மண்டலம் உருவாகும் என்றும் அப்படி உருவாகும்போது திடீர் தாக்குதல் நடத்தி முடிந்த அளவிற்குச் சேதத்தை உண்டாக்கலாம் என்றும் கணக்கிட்டுச் செயல் பட்டிருக்கிறார்கள். இது நடக்கக்கூடியதுதான். இது எதிர்பார்க்கக் கூடியதும்தான். ஆனால் நம்மால் தவிர்க்க முடியாதது. எதிரிகள் அகழியில் நஞ்சை கலப்பதை நம்மால் தடுக்கவோ தவிர்க்கவோ இயலாது. புகை மண்டலம் உருவாகும்போது தாக்குவார்கள் என்று எதிர்பார்க்க முடியும். ஆனால் புகை மண்டலத்தில் இருந்து கொண்டு குறி பார்த்து அம்பெய்ய முடியாது. அது வீணானது. அவர்களோ கோட்டையை குறி வைத்து திடீர் தாக்குதலை நடத்திவிட்டுப் பின்வாங்கிவிட்டார்கள். இதுதான் விஷயம்'' என்று பதட்டமின்றிச்சகஜமாகச் சொன்னார் சேனாதிபதி.

''இப்படி அவர்கள் அடிக்கடி தாக்கிக் கொண்டே இருப்பார்கள். நாம் அழிந்து கொண்டே இருக்க வேண்டியது தானா?'' என்று கேட்டான் மன்னன்.

''இனி அப்படி நடக்க வாய்ப்பில்லை. நாளை காலையிலிருந்து ஸ்ரீராம புண்ணிய வல்லபர் கூறியபடி மக்களையும் மக்களோடு படைவீரர்களையும் அனுப்பலாம். பல்லவர்

படைக்குப் பின்னால் சென்றதும் அவர்களைத் தாக்கச் சொல்லிவிட்டு நாமும் கோட்டையை விட்டு வெளியேறி தாக்குவோம். இடையில் பல்லவர் படை சிக்கி அழியும்.''

''சேனாதிபதி, பதினைந்து நாட்களுக்கு முன்பு ஸ்ரீராம புண்ணிய வல்லபர் ஒரு யோசனையைக் கூறினார். பல்லவர் படைகளை பல இடங்களில் மறித்துத் தாக்கி அவர்களது எண்ணிக்கையை குறைக்கச் சொன்னார். அதில் நாம் தோற்றுப் போனோம். வல்லபர் வேறு ஒரு யோசனையும் சொன்னார். நமது படைப்பிரிவு ஒன்றை ரணரசிகபுரத்திற்கு வடக்கே ஓரிடத்தில் வைத்திருக்கும்படிச் சொன்னார். பல்லவர் படை கோட்டையை முற்றுகையிடும்போது அந்தப் படைப்பிரிவு அவர்களைப் பின்புறம் தாக்க வசதியாக இருக்கும் என்றார். நீங்கள் அது தேவையில்லை என்று அன்றைக்குச் சொல்லிவிட்டு இன்றைக்கு மக்களோடு மக்களாக படை வீரர்களை அனுப்பி பின்புறத்தில் தாக்கலாம் என்கிறீர்கள். இதைக் காட்டிலும் வல்லபரின் யோசனை சிறந்தது அல்லவா?''

''இப்போதுகூட அவரது யோசனைப்படி தான் நடந்து கொள்ளலாம் என்று சொல்கிறேன் மகாராஜா?''

''எது சிறந்தது என்பது உங்களுக்குப் புரியவில்லையா? பழைய யோசனையா? புதிய யோசனையா? பல்லவர் படை மக்களை வெளியேற்ற அனுமதிக்காவிட்டால் நமது படை வீரர்களை வெளியே கொண்டு செல்ல முடியுமா?'' என்று கேட்ட விஜயாதித்தன் ''அது கிடக்கட்டும். மக்களோடு எத்தனை வீரர்களை அனுப்பப் போகிறீர்கள்?'' என்றான்.

''மக்களை நான்கு வாசல் வழியாகவும் வெளியேற்றலாம். அவர்களோடு ஒவ்வொரு வாயில் வழியாகவும் ஐயாயிரம் வீரர்கள் ஆக மொத்தம் இருபதாயிரம் வீரர்களை அனுப்பலாம்'' என்றார் சேனாதிபதி.

''லட்சணம்தான். வெளியே ஒவ்வொரு வாயிலுக்கு வெளியிலும் இருபத்தைந்தாயிரம் ''ல்லவ வீரர்கள் இருக்கிறார்கள். அதோடு குதிரைப் படை வேறு ஐம்பதாயிரம் இருக்கிறது. அது எப்படி நிறுத்தப்பட்டிருக்கிறது தெரியவில்லை. இந்த நிலையில் பக்கத்திற்கு ஐயாயிரம் வீரர்களை அனுப்பினால் அவர்களால் பல்லவர் படையைத் தாக்க முடியாது. பல்லவர் படைகளால் தாக்குண்டு மரணமடையத் தான் முடியும். எனவே குறைந்தது ஐம்பதாயிரம் வீரர்களை வெளியேற்றுங்கள். பல்லவர் படைக்கு பின்னால் கணிசமான தூரத்திற்கு சென்றபின் ஒன்றாக

இணைந்து அணிவகுத்திருக்கச் சொல்லுங்கள். தேவைப்படும்போது அவர்களைத் தாக்கும்படிச் சொல்லலாம். அதோடு படை வீரர்களுக்கு ஏற்ற மாதிரி மக்கள் தொகையை அதிகரித்து சொல்லி பல்லவர் படைக்கு இன்றிரவே ஓலைச் செய்தியை விவரமாக அனுப்பிவிடுங்கள். நாளை பொழுது விடியும்போது வெளியேற்றம் தொடங்க வேண்டும்'' என்றான்.

சேனாதிபதி எதையும் கூறவில்லை.

அரண்மனையை விட்டு வெளியேறி தனது இல்லத்திற்கு வந்தபோது அவனது சகாக்கள் சிலர் அவனது காதில் ஏதோ சொன்னார்கள்.

சேனாதிபதி ''அப்படியா?'' என்று புருவம் விரிய கேட்டுவிட்டு உள்ளே சென்றார்.

அங்கே ஓலையுடன் நின்றிருந்த அந்தணனைக் கண்டதும் ''வாரும் அந்தணரே. ஓலையைக் கொடும்'' என்றார்.

''ஓலை தங்களுக்கல்ல சேனாதிபதி. மன்னருக்கு'' என்றார் அந்தணர்.

''யாருக்காக இருந்தால் என்ன? விஷயம் போரைப் பற்றியது தானே?'' என்று கேட்டார் சேனாதிபதி.

''அது எனக்குத் தெரியாது ஐயா.''

''உமக்குத் தெரியாதது இன்னொன்றும் இருக்கிறது அந்தணரே. நீர் கொண்டு வந்திருப்பது ரகசிய ஓலை. ஸ்ரீராம புண்ணிய வல்லபரிடமிருந்து கொண்டு வருகிறீர். அவரையோ நாங்கள் மன்னரிடமிருந்து பிரித்து வைத்திருக்கிறோம். அவரது யோசனை எதுவும் மன்னருக்குப் போகக் கூடாது என்று செய்திருக்கிறோம். இந்த நிலையில் நீர் ஸ்ரீராம புண்ணிய வல்லபரிடமிருந்து மன்னருக்கு ஓலை கொண்டு வருகிறீர்கள்.''

''இது எனக்குத் தெரியாது ஐயா.''

''அதைத்தான் நானும் சொன்னேன். இந்த நிலையில் இந்த ஓலை மன்னருக்குப் போய் சேருவதை நான் அனுமதிக்க முடியுமா? முடியாது அந்தணரே, ஓலையைக் கொடும்.''

''மன்னருக்குரிய ஓலையைத் தாங்கள் பறிப்பது அதர்மம் ஐயா.''

''அந்தணராகிய நீர் அதர்மத்தைப் பற்றிப் பேசுவது பொருத்தமானதுதான். ஆனால் பேசும் இடம்தான் சரியில்லை.

இது போராளிகள் இருக்குமிடம். போர் நடக்கும் இடம். இங்கே தர்ம நியாயங்களைப் பற்றிப் பேசலாமா? மகாபாரதத்தை அறிந்தவர்கள் தாங்கள். போரில் பீஷ்மரையும், துரோணரையும், கர்ணனையும், துரியோதனனையும் வீழ்த்தியபோது யாரும் தர்ம நியாயங்களைப் பற்றிப் பேசவில்லை.''

சேனாதிபதி மகாபாரதத்தைப் பற்றிப் பேசியது வினோதமானதாக இருந்தது அந்தணருக்கு. ஓலையைக் கொடுக்க மறுத்தார். அவரிடமிருந்து ஓலையைப் பறித்துக் கொண்ட சேனாதிபதி தனது சகாக்களிடம், ''இந்த அந்தணரைக் கொன்று இங்கேயே எரித்து விடுங்கள்'' என்றார்.

''அந்தணரைக் கொல்வது பாவம். உனக்கு அது தீங்காக முடியும். வேண்டாம் சேனாதிபதி'' என்றார் அந்தணர்.

''துரோணர் யார்? ஷத்திரியனா? அந்தணர்தானே? அவரைக் கொல்லலாம், இவரைக் கொல்லக் கூடாதா? போரில் ஆயிரமாயிரம் பேர் கொல்லப்படும்போது ஒரு அந்தணர் சாவதால் என்ன குடிமுழுகிவிடும்?'' என்று தனக்குள்ளேயே சொல்லிக் கொண்ட சேனாதிபதி ஓலையைப் படித்தார்.

பற்களை நறநறவென்று கடிக்கவும் செய்தார்.

☆☆☆



43

கூராதி கூரர்

''விஜயாதித்தா! சேனாதிபதி என்னைக் கடத்தி உனக்கும் எனக்குமான தொடர்பை அறுத்துவிட முயற்சி செய்கிறான். என்னைப் பற்றிய கவலை வேண்டாம். சேனாதிபதியை நம்பாதே. அவன் ஏதோ சதியில் இறங்கியிருக்கிறான். கோட்டை யிலிருந்து மக்களை வெளியேற்றுவது தேவையில்லை. அப்படியே வெளியேற்றினாலும் மக்களை மட்டும் வெளியேற்று. அவர்க ளுடன் படை வீரர்கள் யாரையும் அனுப்பாதே. உனக்கு உதவியோ ஆலோசனையோ தேவைப்பட்டால் உதயணனை நாடு.''

- என்று ஓலையில் எழுதியிருந்தார் ஸ்ரீராம புண்ணிய வல்லபர்.

அதைப் படித்துவிட்டு பற்களை நறநறவென்று கடித்தார் சேனாதிபதி. ஓலையைத் தன் சகாவிடமும் காட்டி படிக்கச் சொன்னார். அவன் படித்து முடித்ததும், ''பார்த்தாயா? வயது தொண்ணூறைத் தாண்டி விட்டாலும் இந்தக் கிழவனுக்குத் தந்திர புத்தி மட்டும் போகவில்லை பார். போர்க்களங்களில் ஆயிரமாயிரம் வீரர்களை எதிர் கொண்டிருக்கிறேன். வாரண மாயிரம் எதிரே வந்தாலும் கவலைப்பட்டதில்லை. அப்படிப்பட்ட நான் ஓர் அந்தணனைக் கண்டு அஞ்சுகிறேன். அந்தணர்கள் மிகவும் ஆபத்தானவர்கள். ஆயிரம் ஷத்திரியர்களை ஓர் அந்தணனால் அழிக்க முடியும். மௌரிய நாட்டில் சாணக்கியன் அதை நிரூபித்தான். இங்கே இக்கிழவன் சாணக்கியனாக வாழ்ந்து கொண்டிருக்கிறான். இந்த ஓலை மட்டும் மன்னருக்குக் கிடைத்தி ருந்தால் என்ன ஆகியிருக்கும் என்பதை யோசித்துப்பார்'' என்றார்.

''மிகவும் விபரீதமாகப் போயிருக்கும்'' என்று ஒப்புக் கொண்ட சேனாதிபதியின் சகாவான சகாதேவன், ''உங்களை நம்ப வேண்டாம் என்று உறுதியாகச் சொல்கிறாரே அது எப்படி?'' என்று கேட்டான்.

''இங்கே தான் மன்னருக்கும் இக்கிழவருக்கும் உள்ள வித்தியாசத்தை நீ அறிய வேண்டும். மன்னரால் என்னைச் சந்தேகம்தான் பட முடிகிறது. ஆனால் கிழவனின் அறிவுக் கூர்மை அபாரம். ஆகவே அவன் என்னை நம்ப வேண்டாம் என்று உறுதியாகவே சொல்கிறான். சரியாகக் கணக்கிடுகிறான்.''

''மக்களையும் படைவீரர்களையும் கோட்டையை விட்டு வெளியேற்றும் படிச் சொன்னவர் அவர்தான். இப்போது ஏன் வேண்டாம் என்கிறார்?''

''சூழ்நிலைகள் மாறிவிட்டதுதான் காரணம். என் மீது சந்தேகம் உறுதியாகி விட்டதால் நான் ஏதாவது சதி செய்வேன் என்று நம்புகிறார். ஆகவே தான் இந்த மாற்றம்.''

''நமது திட்டம் அவருக்குத் தெரிந்திருக்குமோ?''

''அப்படி நான் நினைக்கவில்லை. திட்டத்தை இன்று தானே நானே முடிவு செய்தேன்.''

''இப்போது என்ன செய்வதாக உத்தேசம்?''

''சற்று பொறு'' என்று சொன்ன சேனாதிபதி உள்ளே சென்று ஓர் ஓலையை எடுத்து ஏதோ எழுதினார். பிறகு சகாதேவனிடம் கொடுத்துப் படிக்கச் சொன்னார்.

''விஜயாதித்தா! உன் நன்மையைக் கருதிதான் நான் உன் கண்களுக்குப் படாமல் மறைவாக இருக்கிறேன். இல்லா விட்டால் நீ என்னிடம் மீண்டும் மீண்டும் ஆலோசனை கேட்பாய். சேனாதிபதியை மதிக்க மாட்டாய். அது முறையல்ல. பதவியில் இல்லாதவனை மதிப்பது தவறல்ல. அவனிடம் ஆலோசனை கேட்பதும் தவறல்ல. ஆனால் பதவியில் இருப்பவனை புறக்கணிப்பது தவறு, அதுவும் சேனாதிபதி வீரகேசரியை நீ அவமதிப்பது இப்போது சரியல்ல. அவரும் சோடை போனவரல்ல. மாவீரர். பல போர்க்களம் கண்ட அனுபவசாலி. அவரை நம்பு. மதித்து நடத்து. ஆலோசனை கேள். அவரைச் சுதந்திரமாக விடு. அவர்களது காரியங்களுக்குத் தடை போடாதே. என் ஆலோசனையை நீ கேட்பது தான் அவருக்குப் பிடிக்கவில்லையே தவிர தேச பக்தியில் அவர் யாருக்கும் சளைத்தவரல்ல. அவரை இப்போரில் சரியாகப் பயன்படுத்து. அவர் சொற்படி நட.''

என்றிருந்தது ஓலையில்.

''விஷயம் சரியாகத்தான் இருக்கிறது. இது ஸ்ரீராம புண்ணிய வல்லபரிடமிருந்து வந்ததுதான் என்பதை மன்னர் எப்படி நம்புவார்?'' என்று கேட்டான் சகாதேவன்.

''வல்லபர் தான் எழுதும் ஓலைகளில் கையெழுத்து இடமாட்டார். இரண்டு கோடுகளை மட்டுமே போடுவார். அவர் அந்தணனன் மூலம் அனுப்பிய ஓலையில் கோடுகளைத்தான் போட்டிருக்கிறார். அப்படித்தான் நானும் போட்டிருக்கிறேன்.''

''இதை எப்படி மன்னரிடம் சேர்ப்பது?''

''நமது சகா ஒருவனிடம் கொடுத்து நாளை காலையில் மன்னரிடம் கொடுக்கச் சொல்'' என்று சொன்ன சேனாதிபதி மன்னரிடம் எப்படிப் பேச வேண்டும் என்பதைச் சொன்னார்.

''நான் இன்றிரவு மக்களை வெளியேற்றும் ஏற்பாடுகளையும் இதர ரகசிய ஏற்பாடுகளையும் செய்கிறேன். நாளைக்கும் நாளை மறுநாளும் படை வெளியேற்றத்தைக் கண்காணிக்கும் பணியில் இருப்பேன். மன்னர் கண்களிலேயே படமாட்டேன். நீ மட்டும் நடப்பதை கண்காணித்துக் கொள்'' என்றும் சொல்லிவிட்டு அகன்றார்.

மறுநாள் அவரது சகா ஒருவன் மன்னனிடம் ஓலையைக் கொடுத்தபோது அதை வாங்கிப் படித்த மன்னன் ''இது உனக்கு எப்படிக் கிடைத்தது?'' என்று கேட்டான்.

''ஸ்ரீராம புண்ணிய வல்லபரே என்னிடம் கொடுத்தார் மகாராஜா.''

''எங்கே கொடுத்தார்?''

''தலைநகரின் தெற்கே இருக்கும் பௌத்த விஹாரத்தில் கொடுத்தார் மகாராஜா.''

''வேறு ஏதாவது சொன்னாரா?''

''தன்னை யாரும் தேட வேண்டாம் என்றும் போர் முடிந்த பின் தானாக வந்து சந்திப்பதாகவும் சொன்னார் மகாராஜா.''

''அவரால் நடக்க முடியாதே! பௌத்த விஹாரத்திற்கு எப்படி வந்தார்?''

''அவரால் நடக்க முடிகிறது மகாராஜா. பௌத்த விஹாரத்தில் நானே அதைக் கண்டேன்.''

''அது சரி. நீ யார்? உன்னை எப்படி அவருக்குத் தெரியும்?''

''நான் அவரது வயலில் பணிபுரிகிறவர்களின் ஒருவன் மகாராஜா. இன்று காலையில் வழக்கம் போல பௌத்த விஹாரத்திற்கு வழிபாட்டிற்காக நான் சென்றபோது அவர் தான் என்னைக் கண்டு இந்த ஓலையைக் கொடுத்து உடனடியாகத் தங்களிடம் கொடுக்கும்படிச் சொன்னார்.''

மன்னன் சிறிது நேரம் யோசித்துவிட்டு காவலர்களை வரச் சொன்னான். ஓலை கொண்டு வந்தவனைக் காவலில் வைக்கும் படி கட்டளையிட்டான்.

இதற்கிடையில் சேனாதிபதியின் ஏற்பாடுகள் கச்சிதமாக இருந்தபடியால் பொழுது விடிந்த சிறிது நேரத்திலேயே மதில் சுவற்றின் மீது சாளுக்கிய வீரர்கள் ஆயுதபாணிகளாக நிற்க, வாயில் கதவுகள் நான்கு பக்கமும் திறக்கப்பட்டன. அகழியைக் கடப்பதற்கு மரப்பலகை உள்ளேயிருந்து தள்ளிவிடப்பட்டது. மக்கள் மூட்டை முடிச்சுக்களுடன் சாரிசாரியாக வெளியே வரத் தொடங்கினார்கள்.

சேனாதிபதி மதில் சுவற்றின் மீது உலவியபடி அந்த வெளியேற்றத்தைப் பார்வையிட்டார்.

வெளியே இருந்த பல்லவர் படை கோட்டையின் நான்கு புறங்களிலும் இரு பக்கங்களாக ஒதுங்கி நின்று மக்கள் கூட்டம் வெளியேறுவதற்கு வழிவிட்டது. வெளியேறிய மக்களும் சரி வழிவிட்ட பல்லவர் படையும் சரி அமைதியாகவே நடந்து கொண்டதால் சேனாதிபதி திருப்தியாக மூச்சுவிட்டுக் கொண்டார்.

பல்லவர் படை ரணரசிகபுரக் கோட்டையை முற்றுகை யிட்டது வரை அவர் சாளுக்கிய சேனாதிபதியாகத்தான் உண்மையாகச் செயல்பட்டார். கோட்டைப் பகுதிகளை பலப்படுத்தினார். அனைத்தையும் முன்னின்று நடத்தினார். மன்னன் தன்னைப் பொருட்படுத்தாமல் ஸ்ரீராம புண்ணிய வல்லபரின் ஆலோசனையைக் கேட்டபோது கூட உள்ளுக்குள் சற்று கோபப்பட்டாரேதவிர தனது பொறுப்பிற்குரியவராக நடந்து கொள்ளத் தயாரானார்.

ஆனால் பவானியின் பிரவேசம் அவரது மனத்தில் சலனத்தை உண்டாக்கியது. அவள் கிளப்பிய பேராசை என்ற தீ அவருக்குள் கொழுந்துவிட்டு எரியத் தொடங்கியது. மன்னன் தன்னை மதிக்காத விஷயமும் அந்தத் தீயுடன் சேர்ந்ததால் கொதிப்பு அதிகப்பட்டது. மன்னன் தன்னை மதிக்காததை பெரிய விஷயமாக எண்ண முற்பட்டார். பவானி கூறியது போல போரில் தோற்றுப் போனால் தனக்குச் சித்திரவதை நிச்சயம் என்பது உண்மைதான் என்றாலும் போரில் வெற்றி பெற்றால்கூட மன்னன் தன்னைத் தூக்கி வைத்துக் கொண்டாட மாட்டான் என்றும் ஏதாவது காரணம் சொல்லி தன்னை அவமானப்படுத்தி பலியிட்டுவிடுவான் என்றே தோன்றியது அவருக்கு. அதையடுத்து அவரது தேசப்பற்று உளுக்கத் தொடங்கியது. தன்னலமும் சுகவாச நினைப்பும் அவரது மூச்சுக்

Scanned by CamScanner

காற்றாக மாறின. போரின் முடிவு எப்படியானாலும் தனக்கென்று ஒரு எதிர்காலத்தை வகுத்துக் கொள்வது என்று தீர்மானித்தார். அதற்கு பவானி கூறியபடி பொக்கிஷத்தில் இருக்கும் செல்வங்களையெல்லாம் மூட்டைகளாகக் கட்டி ஆயிரத்திற்கும் மேற்பட்ட தனது சகாக்கள் மூலம் மக்கள் கூட்டத்தோடு கோட்டையை விட்டு வெளியேற்றி ரகசிய இடத்தில் அதைச் சேமிக்கவும் போருக்குப் பிறகு அதை வைத்துக் கொண்டு தனக்கென்று தனி ராஜ்யம் படைத்துக் கொண்டு ஆட்சி புரியவும் முடிவு செய்தார்.

தனது செயல்பாட்டிற்கு ஸ்ரீராம புண்ணிய வல்லபர் பெரும் தடையாக இருப்பார் என்று கருதி அவரைக் கடத்தி தனி இடத்தில் மறைத்து வைத்தார். பொக்கிஷ செல்வங்களை இடமாற்றம் செய்வதாகச் சொல்லி அவற்றைத் தன் சகாக்களிடம் ஒப்படைத்தார். மன்னனுக்கு இது தெரியாதவாறு பார்த்துக் கொள்ள பொக்கிஷ பணியாளர்களையெல்லாம் நீக்கி மறைவிடத்தில் அடைத்துவிட்டு பொக்கிஷப் பகுதியில் தனது சகாக்களை நிறுத்தி எதுவும் நடக்காதது போலவும் செய்தார்.

திட்டமிட்டபடி மக்களை வெளியேற்ற முடிவு செய்ததும் பல்லவர் படைக்கு அம்பு மூலம் ஓலைச் செய்தியை அனுப்பி வைத்தார். கோட்டைக்குள் இருக்கும் ஐந்து லட்சம் மக்களை வெளியேற்றுவதாகவும் அவர்களுக்கும் அவர்களது உடமைகளுக்கும் சேதாரம் விளைவிக்காத வகையில் பல்லவர் படை இரண்டு பக்கங்களில் ஒதுங்கி வழிவிட வேண்டும் என்றும் அதில் குறிப்பிட்டிருந்தார். இந்த நிகழ்ச்சியில் எதிரிகள் அத்து மீறி நடக்க முற்பட்டால் கொல்லப்படுவார்கள் என்றும் எச்சரித்திருந்தார்.

அவர் எதிர்பார்த்ததை விட மக்கள் வெளியேற்றம் அமைதியாகவே நடந்தது. மக்களோடு மக்களாக படை வீரர்களும் தனது சகாக்களும் மூட்டைகளைச் சுமந்து கொண்டு சென்றதைக் கண்டபோது அவருக்கு மகிழ்ச்சியாக இருந்தது. தனது மாளிகைக்குச் செல்லாமல் இரண்டு நாட்களாக கோட்டையின் தளத்திலேயே இருந்தபடி வெளியேற்றத்தைத் துரிதப்படுத்தினார். இரண்டு நாட்களில் உணவைக் கூட அவர் அங்கேயே உண்டார்.

ஒருவாறாக இரண்டாம் நாள் இரவு வெளியேற்றம் முடிந்து விட்டதாக கோட்டைத் தளபதி அறிவித்தபோது அதைப் பல்லவர் படை உணரும் வண்ணம் சங்கொலியை எழுப்பச் செய்தார். அதையடுத்து கோட்டைக் கதவுகள் சாத்தப்பட்டன.

அதோடு தளத்தை விட்டு இறங்கிய சேனாதிபதி நேராக மன்னனின் அரண்மனைக்குச் சென்று சந்தித்தார்.

''வெளியேற்றம் நல்லபடியாக எந்த ஒரு இடையூறுமின்றி நடந்து முடிந்துவிட்டது மகாராஜா. ஸ்ரீராம புண்ணிய வல்லபரின் யோசனைப்படி மக்களோடு படைவீரர்களையும் ஆயுத மூட்டைகளோடு அனுப்பிவிட்டேன் அவர்கள் பல்லவர் படைகளுக்குப் பின்னால் சென்று ரத்தினபுரியில் ஓரணியாகச் சேர்வார்கள். அதற்கு எப்படியும் நாளை ஒரு நாள் பிடிக்கும். அவர்கள் ஒன்று கூடியதும் நமக்குச் செய்தி வரும். அதையடுத்து நாம் நமது நடவடிக்கையை மேற்கொள்ளலாம். தாங்கள் கவலைப்படாமல் இருங்கள்'' என்றார்.

அவரது பேச்சு பிசிறில்லாமல் தெளிவாக இருந்தது.

''சேனாதிபதி உண்மையிலேயே யோக்கியன் தானா? நமக்காகத்தான் பாடுபடுகிறானா? ஸ்ரீராம புண்ணிய வல்லபர்தனது ஓலையில் கூறியிருப்பது நிஜம்தானா? இவரை முழுதாக நம்பலாமா?'' என்று சிந்தனைகள் ஓடின விஜயாதித்தனிடம்.

ஏற்கெனவே இரண்டு நாட்களாக அவர் கோட்டை தளத்திலேயே பொழுதைக் கழித்ததையும் இல்லத்திற்கு வராததையும் காவலர்கள் மன்னனிடம் தெரிவித்திருந்தார்கள்.

எல்லாவற்றையும் தொகுத்துப் பார்த்துக் கொண்டான் மன்னன்.

அவனது மன ஓட்டத்தை ஓரளவிற்குப் புரிந்து கொண்ட சேனாதிபதி அங்கே இருக்க விரும்பாமல், ''நீங்கள் கவலையின்றி உறங்குங்கள் மகாராஜா. நான் நாளைக்கு வந்து உங்களைச் சந்திக்கிறேன்'' என்று கூறிவிட்டு விடைபெற்றுக் கொண்டார்.

நேரம் நடுநிசியை தாண்டியிருந்தாலும் அவர் சலிப்படையாமல் அந்தப்புரத்திற்குச் சென்று சிறிது நேரம் வரை அங்கேயிருந்த அழகுக் கிளிகளைக் கொஞ்சி மகிழ்ந்தார். சிலவற்றைக் கிள்ளினார். சில கிளிகளுக்கு இறக்கையை ஒடித்தார். வேறு சில கிளிகளை நசுக்கினார். பிறகு அவர்களை யெல்லாம் உதறித் தள்ளிவிட்டுத் தன் அறைக்குப் போய் ''பவானியைக் கூப்பிடு'' என்றார்.

''நான் இங்கேதான் இருக்கிறேன் சூராதி சூரரே'' என்று குரல் கொடுத்தாள் மஞ்சத்தில் மாலையாய் கிடந்த பவானி.

வழக்கம் போலவே காற்றை ஆடையாக அணிந்திருந்தாள்.

பரம சந்தோஷத்துடன் அவளை அணுகிய சேனாதிபதி அவளை ஒரு புரட்டு புரட்டிவிட்டு, ''இதென்ன புதிய பட்டம் எனக்கு?'' என்று கேட்டார்.

அவள் அலை போல் புரண்டு விட்டு, ''உங்களை வீராதி வீரர் என்று எல்லோருமே அழைக்கிறார்கள். அது நாடறிந்த பட்டம். ஆனால் நீங்கள் சாதித்திருக்கும் காரியம் சாதாரணமானது அல்ல. சாதனை. அதை வீராதி வீரர்களால் செய்ய முடியாது. சூராதி சூரர்களால்தான் செய்ய முடியும். ஆகவே பொருத்தமான பட்டத்தைத்தான் உங்களுக்குச் சூட்டியிருக்கிறேன்'' என்றாள். சொல்லிவிட்டு மீண்டும் அலை போல் புரண்டாள்.

சிலை போலிருந்த சேனாதிபதி ''ஆகா! உனக்கென்ன? யோசனையை எளிதாகச் சொல்லிவிட்டாய். அதை நிறைவேற்றும் போது தானே தெரிந்தது அந்த கஷ்டம்? உன்னை நினைத்துக் கொண்டே இருந்தேன். வேலை முடிந்துவிட்டது'' என்றார்.

அலை எழுந்து சிலையாய் திரண்டதுபோல் கிடந்த நிலையிலிருந்து எழுந்த நிலைக்கு வந்த அவள் மலை போலிருந்த சேனாதிபதியின் உடலைக் கட்டிக் கொண்டு ''நானும் காரியம் வெற்றியடைய வேண்டுமே என்று என்னை மறந்து உங்களையே நினைத்துக் கொண்டிருந்தேன்'' என்றாள் போதையூட்டும் குரலில்.

போதையூட்டாமலேயே கிளர்ந்துவிடக் கூடியவரான அவர் அவளை அப்படியே தூக்கி மஞ்சத்தில் போட்டார். அவள் குப்புறப்படுத்துக் கொண்டு, ''இன்றைக்கு ஏதாவது கண்டுபிடித்திருக்கிறீர்களா?'' என்று கேட்டாள்.

''உனது நிலையே எனக்குப் புதிய கண்டுபிடிப்பைத் தந்துவிட்டது'' என்று சொன்ன அவர் அது என்ன என்பதை செயல் ரீதியாகக் காட்டத் தொடங்கினார்.

அவளுக்கு புது ஆனந்தம் பிறந்தது!

'இந்த விஷயத்திலும் இவர் சூராதி சூரர்தான். ஒவ்வொரு நாளும் புதுப் புது சூரராக இருக்கிறார். இவரைப் போல வேறு ஒருவர் இருக்க முடியுமா?' என்று காமக் கிறக்கத்தில் நினைத்துக் கொண்டாள் பவானி.

அவளது நினைப்புகளை அறியாமலும் அது பற்றிக் கவலைப்படாமலும் கருமமே கண்ணாக அவர் செயல்பட்டதால் இன்பமானது ஊற்றாக முளைத்து ஆறாக ஓடி கடலாக விரிந்தது.

அவளிடமும் சில புதிய சொர்க்கங்கள் எண்ணங்களில் பூத்திருந்தன.

அவற்றைச் செயல்படுத்தலாமா கூடாதா என்று எண்ணி எண்ணித் தடுமாறிய அவள் முடிவில் தயக்கத்தை கைவிட்டு செயல்படுத்தலானாள்.

அவளது செயல்பாட்டைக் கண்ட சேனாதிபதி வியந்தார்.

'என்னைவிட மோசமானவளாய் இருப்பாள் போலிருக்கிறதே?' என்று எண்ணிய அவர், ''இந்த விஷயத்திற்கெல்லாம் மோசமானவள் தான் பொருத்தமானவள்'' என்று சொல்லிக் கொண்டு கறுப்புப் பூனை கள்ளத்தனமாகப் பாலைக் குடித்துக் களிப்பது போல் அவளது கண்டுபிடிப்புகளை ஏற்று சுவைத்தார்.

காமம் இருவரிடமும் பெருகும் போது அதற்கு இணையான இன்பம் என்று வேறு எதையும் சொல்ல முடியாது. இதை மற்றவர்களைவிட காமாந்தகர்கள் நன்றாக அறிவார்களாதலால் அந்த இருவரும் இந்த வகையில் பேரானந்தத்தை அனுபவித்தார்கள்.

பொழுது விடிந்த பிறகும் அவர்களது காமம் விலகவில்லை.

ஏதோ இதுதான் கடைசி வாய்ப்பு என்று கருதி விட்டவர்களைப் போல கருத்திழந்து கட்டுண்டு கிடந்தார்கள்.

அறைக் கதவு தட்டப்பட்டபோது தான் அவர்களது கட்டுகள் தளர்ந்தன.

கதவைத் தட்டி நேரமாகிவிட்டதை உணர்த்திவிட்டுப் போனாள் அந்தப்புரத் தலைவி.

தறி கெட்ட காமத்தால் வெறிபிடித்து நடந்து கொண்டிருந்த இருவரும் ஆயாசத்துடன் அப்படியே கிடந்தார்கள்.

சூராதி சூரராகிய சேனாதிபதியே முதலில் சுதாரித்துக் கொண்டு எழுந்து ஆடைகளைப் புனைந்து கொண்டு ''உனக்கு உதயணன் என்று யாரையாவது தெரியுமா?'' என்று கேட்டார்.

''யார்? யார்? உதயணனா? எந்த உதயணன்?'' என்று பரபரப்புடன் கேட்டபடி எழுந்தாள் பவானி.

☆☆☆



44

உதயணன்

''ஏன்? எதற்காகப் பதட்டப்படுகிறாய்?'' என்று கேட்டார் சேனாதிபதி.

''ஒன்றுமில்லை. எனக்குத் தெரிந்த ஒரு மந்திரவாதியின் பெயர் உதயணன். அவன்தானா என்பதற்காகக் கேட்டேன்'' என்று தடுமாறினாள் பவானி.

''மந்திரவாதியா? யாரவன்?'' என்று கேட்ட சேனாதிபதி, ''முதலில் நீ ஆடையை அணிந்து கொள்'' என்றார்.

பதட்டத்தில் ஆடையணியவும் மறந்துவிட்டிருந்த பவானி ஆடைகளை எடுத்து அணிந்து கொண்டாள். அப்படி அணிந்த நேரத்திலேயே கொஞ்சம் சுதாரித்துக் கொண்டாள்.

''நான் போய் மந்திரவாதியை அனுப்பவா?'' என்று அரைக் கண்ணால் அவரைப் பார்த்தபடி கேட்டாள்.

''வேண்டாம். நீ போ'' என்று அவளை அனுப்பி வைத்த சேனாதிபதி நீராடினார். புத்தாடைகளை அணிந்து உணவுண்டார். தனது சகா சகாதேவனை அழைத்து, ''பவானியை சில நாட்களுக்குத் தொடர்ந்து கண்காணிக்க ஏற்பாடு செய்'' என்றார்.

''என்ன பிரச்சனை ஐயா?''

''உடலை மறைக்காத அவள் உள்ளத்தில் ஏதோ மறைக்கிறாள்'' என்று சொன்ன சேனாதிபதி ''நான் தளபதியாக இருப்பவன். பெரும் படைகளை நடத்தியவன். என்னால் ஒரு லட்சம் ஆடவர்களை நம்ப முடியும். ஆனால் ஒரு பெண்ணை நம்ப முடியவில்லை'' என்றார்.

அதோடு, ''உதயணன் என்ற பெயரில் யார் இருந்தாலும் கொண்டு வா. அல்லது கொன்றுவிடு'' என்றார்.

இதே நேரத்தில் அந்தப்புரத்திற்குத் திரும்பிய பவானி அவசரம் அவசரமாக நீராடினாள். உடைகளை அணிந்தாள். ஒப்பனைகளைச் செய்து கொண்டாள். உணவை உண்டாள். எங்கேயோ செல்லத் துடித்தாள். நகரத்து மக்கள் வெளியேற்றப்

பட்டுவிட்டதால் வீதிகள் வெறிச்சோடிக் கிடந்தன. மக்கள் நடமாட்டம் மறைந்து படைவீரர்களின் நடமாட்டம் வீதிகளில் தொடங்கியிருந்தது. எப்படிச் செல்வது என்று தெரியாமல் தவித்த அவள் அந்தப்புரத் தலைவியிடமே யோசனை கேட்டாள்.

''உனக்கென்ன பிரச்சனை? உன்னை யார் தடுக்க முடியும்? பல்லக்கில் ஏறிச் சுகமாகச் செல்லலாமே?'' என்று கேட்ட அந்தப்புரத்துத் தலைவி, ''நீ எங்கே செல்ல வேண்டும்? ஊரில் யார் இருக்கிறார்கள்? எல்லோரும் தான் வெளியேற்றப்பட்டு விட்டார்களே'' என்று கேட்டாள்.

''நான் வெளியே செல்ல வேண்டும். உன்னால் ஏற்பாடு செய்ய முடியுமா முடியாதா?'' என்று முரட்டுத்தனமாகக் கேட்டாள் பவனி.

தலைவி சிறிது நேரம் வரை யோசித்துவிட்டு, ''சிறிது நேரம் வரை பொறு பவானி. அந்தப்புரத்தவர்களுக்குத் தேவையானவற்றைக் கொண்டு வரும் வணிகர்களும் தோட்டக்காரர்களும் வருவார்கள். அவர்களிடம் சொல்லி வைக்கிறேன். அவர்கள் திரும்பிச் செல்லும்போது நீயும் கூடவே செல். நீ போக வேண்டிய இடத்திற்கு உன்னை பத்திரமாக கொண்டு செல்வார்கள்'' என்றாள்.

அதேபோலவே வணிகர்களுடன் வெளியே சென்றாள் பவானி.

கலகலப்பாக இருக்கும் தலைநகரம் மக்களின் வெளியேற்றத்தால் களையிழந்து காணப்பட்டது. காவல் வீரர்களும் படை வீரர்களும் ஆங்காங்கே குழுமியிருந்தார்கள்.

நகரின் தென்மேற்கே மருதமரத்தோப்பிற்குள் ஆசிரமம் ஒன்றிருந்தது.

அங்கே நீண்ட காலமாக முனிவர் ஒருவர் இருந்து வந்ததால் அவரை தரிசிக்கவும் ஆசி பெறவும் மக்கள் அதிக அளவில் வருவது வழக்கமாயிருந்ததால் ஆசிரமம் பகல் முழுவதும் கூட்டமாக இருக்கும்.

தற்போது ஆசிரமம் மக்கள் நடமாட்டம் இல்லாததால் பேரமைதியுடன் உண்மையான ஆசிரமமாக விளங்கியது.

இரண்டு வருடங்களுக்கு முன்னால் இதே ஆசிரமத்திற்கு இதே நேரத்தில் வந்திருந்தாள் பவானி. கூட்டத்தோடு கூட்டமாக அமர்ந்திருந்தாள். எல்லோரது கவனமும் எண்ணமும் முனிவரைப் பற்றியதாகவே இருக்கையில் பவானியின் கவனம் மட்டும்

சிதறியிருந்தது. அவளது கண்கள் யாரையோ தேடி அலைந்து கொண்டிருந்தன. சில நாட்களே அவளது கண்கள் அலைந்தது. வழக்கமாக இருந்தது. கண்களின் பயனே அதுதான் என்பது போல் அங்கேயிருந்த இளம் வாலிபன் ஒருவன் தான் அவளது கண் வலையில் சிக்கியிருந்தான். தற்போது அவளது கண்கள் அவனைத் தான் தேடிக் கொண்டிருந்தன.

அதோ...

அவன் வந்துவிட்டான்.

அவளும் பார்த்துவிட்டாள்.

எழுந்து கொண்டாள்.

அவனை நோக்கிச் சென்றாள்.

அவனோ அவளைப் பார்க்கவில்லை.

முனிவருக்கு வேண்டிய உதவிகளைச் செய்து கொண்டிருந்த பலரில் அவனும் ஒருவனாக இருந்து சுறுசுறுப்பாக காரியங்களைச் செய்து கொண்டிருந்தான்.

அவன் பார்வையில் பட்டுவிட அவளும் இப்படியும் அப்படியுமாய் சென்று பார்த்தாள்.

அவன் கடைசி வரை அவளைப் பார்க்கவே இல்லை.

அவள் சோர்ந்து விடாமல் அடுத்த நாளும் வந்தாள். அடுத்தடுத்து வந்தாள்.

ஒரு மாற்றமும் ஏற்படவில்லை.

ஒரு நாள் அவனாகவே அவளைப் பார்த்து ''உனக்கு என்ன வேண்டும் பெண்ணே? முனிவரைப் பார்க்க வேண்டுமா? உன்னைப் பார்த்தால் முனிவரைப் பார்க்க விரும்புவதாகத் தெரியவில்லையே. தினமும் வருகிறாய். யாரையோ தேடுகிறாய்? உனக்கு யார் வேண்டும்?'' என்று கேட்டான்.

''நீ தான் வேண்டும்'' என்று சொல்லி அவனை விழுங்கி விடுவது போல் பார்த்தாள்.

காவி உடையும் ஜடா முடியும் வழிக்கப் படாத முகமுமாய் இளந்துறவியாய் காட்சியளித்த அவனது முகம் பிரகாசமாய் இருந்தது. கண்களில் காந்தம் இருந்தது.

அவள் அவனைப் பார்த்து நீ தான் வேண்டும் என்று சொன்னதும் அவன் சலனமடையவில்லை.

''நான் எதற்கு உனக்கு?'' என்று கேட்டான்.

''இதென்ன அசட்டுக் கேள்வி? இது கூடவா தெரியவில்லை? நீ வாலிபன் தானே?'' என்றாள் பவானி.

''இல்லை பெண்ணே. நான் துறவி'' என்றான் அவன்.

''வாலிபத் துறவி என்று சொல்.''

''துறவுக்கு வாலிபம் வயோதிகம் என்ற வித்தியாசம் இல்லை.''

''நீ ஏன் இப்படி பிஞ்சிலேயே பழுத்துவிட்டாய்?''

''பிஞ்சில் பழுத்துவிட்ட பழமாக இருப்பது நீ தான் பெண்ணே. நான் பழுக்கவில்லை. பக்குவப்பட்டிருக்கிறேன்.''

''வாலிப வயதில் துறவியாவதும் தத்துவம் பேசுவதும் தான் பக்குவமா? வாலிப பருவம் நமக்குக் கிட்டியிருப்பது சன்னியாசியாக ஆவதற்கு அல்ல. சம்சாரம் செய்வதற்கு.''

''சம்சாரத்திற்கு நிறைய பேர் இருக்கிறார்கள். கொஞ்சம் பேர் சன்னியாசத்தில் இருக்கிறார்கள். நீ இடம் மாறி வந்து பேசுகிறாய். போய் வா'' என்று கூறிவிட்டுப் போனான் அந்த இளம் துறவி.

தனது ஒரே ஆசையை பல்வேறு விதங்களில் வெளிப்படுத்தினாள்.

அவனோ எப்போதும் ஒரேவிதமாகத்தான் இருந்தான்.

இருவருமே சொன்னதையே திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டார்கள்.

''பெண்ணைத்தான் ஆடவர்கள் சுற்றிச் சுற்றி வருவார்கள். அதற்கு மாறாக உன்னைச் சுற்றி நான் வருவதால் உனக்கு இளக்காரமாகப் போய்விட்டதா?'' என்று கேட்டாள் அவள்.

''இல்லை. நீதான் துறவை இளக்காரமாக நினைத்துக் கொண்டு வலிய வலிய வருகிறாய்.''

''அதென்ன வார்த்தைக்கு வார்த்தை துறவு துறவு என்று சொல்லி வெறுப்பேற்றுகிறாய்? உறவு உறவு என்று சொன்னால்தான் என்ன?''

''துறவிலும் உறவு இருக்கிறது பெண்ணே. அது ஆன்மாவைப் பற்றியது. அதனோடு உறவு கொள்ளவே நாங்கள் தவம் செய்கிறோம்.''

''தவமும் வேண்டாம். தத்துவமும் வேண்டாம். அதையெல்லாம் மூட்டைக்கட்டி போட்டுவிட்டு ஆசிரமத்தை விட்டு வெளியே வா. உலகம் என்றால் என்ன என்பதை அறிந்து கொள்ளலாம்.''

''நீ சொல்லும் உலகத்தைப் பற்றி எனக்குத் தெரியும். அது வேண்டாம் என்று தான் ஆசிரமத்தை உலகமாக்கிக் கொண்டேன்.''

''தத்துவப் பிசாசே! நீ சாகக் கூடாதா? உயிரோடு இருந்து கொண்டு என்னை ஏன் வாட்டி வதைக்கிறாய்?'' என்று ஆற்றாமையோடு சீறிய அவள் பலமுறை வந்து கண்ணீர் விட்டு அழவும் செய்தாள்.

''பவானி! மனதை தேற்றிக் கொள். முனிவருக்காக என் வாழ்க்கையை அர்ப்பணித்துக் கொண்டு துறவு வாழ்க்கை வாழ்கிறேன். இது ஆசை இல்லாத வாழ்க்கை. அல்லல் இல்லாத வாழ்க்கை. வேண்டுமானால் நீயும் என்னோடு துறவுக்கு வந்துவிடு'' என்றான் அவன்.

''நாசமாய் போனவனே! உன் புத்தி இப்படியா போகும்?'' என்று உள்ளுக்குள் சபித்துக் கொண்டே சென்றவள் மறுநாள் வந்து ''நானும் உன் வழியில் வருகிறேன்'' என்றாள்.

''மகிழ்ச்சி. வா'' என்று சொன்ன அவன் அவளை முனிவரிடம் அழைத்துச் சென்று முறைப்படி துறவியாக்கினான்.

ஆனால் அவளது கோலம்தான் மாறியதே தவிர குணம் மாறவில்லை. அதோடு அவளது ஆசை மோகமாகவும் வளர்ந்தது.

அவனோடு எப்போதும் இருந்தால் வழிக்குக் கொண்டு வந்துவிடலாம் என்று நினைத்துத்தான் துறவறம் மேற் கொள்வதாகச் சொல்லி ஆசிரமத்திற்கு வந்தாள்.

அவனோ வழிக்கும் வரவில்லை. வழுக்கியும் விழவில்லை.

அவளுக்கு பொறுமை பறிபோயிற்று.

ஒரு நாள் தலைவிரி கோலமாக முனிவரிடம் போய் நின்று முறையிட்டாள்.

''சுவாமி, உதயணன் என்னைச் சீரழித்துவிட்டார். அவரை நம்பி துறவுக்கு வந்த என் துறவறத்தையும் நாசம் செய்துவிட்டார். எனக்கு எல்லாமே போய்விட்டது. நீங்கள்தான் இனி வழி சொல்ல வேண்டும்'' என்று நாடகமாடினாள்.

முனிவருக்கு அவள் கூறுவது பொய் என்பது ஞானதிருஷ்டியிலேயே தெரிந்துவிட்டது.

எனவே 'குழந்தாய்! உனக்குத் துறவறம் ஏற்றது அல்ல. சம்சாரம்தான் ஏற்றது. அதிலாவது நீ பொய் சொல்லாமல் வாழ முயற்சி செய். அதுதான் உனக்கு நல்லது. போய் வா'' என்றார் கனிவுடன்.

இனியும் தனது கனவு பலிக்காது என்பதை திட்டமாக உணர்ந்த பவானி மொத்த வெறுப்பையும் திரட்டிக் கொண்டு

இளம்துறவியான உதயணனிடம் சென்றாள். அவனைக் கண்டபடி திட்டினாள். சபித்தாள். முன்னாலிருந்த கொள்ளிக் கட்டையை எடுத்து அவனைச் சரமாரியாகத் தாக்கிவிட்டு ஆசிரமத்தை விட்டு ஓடினாள்.

☆

ஆரவாரம் இல்லாமல் மயான அமைதியில் இருந்த ஆசிரமத்தைக் கண்டதும் பழைய நினைவுகளால் ஒரு கணம் வேதனையுற்ற பவானி உள்ளே நுழைய முற்பட்டபோது காவலாளி ஒருவன் தடுத்து, ''உள்ளே போகக்கூடாது. பெண்களுக்கு உள்ளே அனுமதியில்லை'' என்றான்.

அவனை ஓங்கி ஒரு குத்துவிட்டாள் பவானி. எதிர்பாராத தாக்குதலால் நிலைகுலைந்துபோய் கீழே விழுந்த காவலாளி மூக்கில் வழிந்த ரத்தத்தைத் துடைத்துக்கொண்டு அவளை வினோதமாகப் பார்த்தான்.

''இப்போது புரிகிறதா? நான் பெண்ணில்லை. பேய். பேய்க்கு யாருடைய அனுமதியும் தேவையில்லை. உதயணன் எங்கே இருக்கிறான்? அவனை நான் உடனே பார்க்க வேண்டும்'' என்றாள்.

காவலாளி, ''கலி முற்றிவிட்டது'' என்று முணுமுணுத்துக் கொண்டே கையைக் காட்டினான்.

பவானி யாரைப் பற்றியும் கவலைப்படவில்லை. எதைப் பற்றியும் கவலைப்படவில்லை.

இடைப்பட்டத் துறவியொருவர் அவளைத் தடுக்க முற்பட்டபோது, ''நான் யார் தெரியுமா? சேனாதிபதியின்...'' என்று அவள் ஆரம்பித்ததுமே, ''நீங்கள் யாராக வேண்டுமானாலும் இருந்து கொள்ளுங்கள். இந்த ஆசிரமத்திற்குள் மன்னருக்குக் கூட அனுமதி கிடையாது. அத்து மீற முற்படுபவர்களுக்கு எச்சரிக்கை விட வேண்டியது என் கடமை. அதைத்தான் செய்தேன். இங்கே பெண்கள் வரக்கூடாது'' என்றார்.

''பெண்கள் இல்லாமல் நீங்களெல்லாம் எப்படிப் பிறந்தீர்கள்? அவர்களை மறுக்க நீங்கள் யார்? உண்மையானத் துறவிகளாக நீங்கள் இருப்பது உண்மையானால் பெண்களைப் பற்றி எதற்காகக் கவலைப்பட வேண்டும்? ஞானிக்கு பெண்ணும் ஆணும் ஒன்றுதான். அடுத்த சில நாட்களுக்குள் தலைநகரமே தள்ளாடப் போகிறது. இந்த ஆசிரமம் என்னாகுமோ தெரியாது. நீங்கள் என்னடாவென்றால் என்னை அனுமதிப்பது பற்றி

அர்த்தமில்லாமல் பேசுகிறீர்கள்'' என்று அலட்சியமாகப் பேசிவிட்டு உதயணனின் இருப்பிடத்தை அடைந்தாள்.

அங்கே யாகசாலை ஒன்றில் யாககுண்டத்தின் முன்பாகக் கண்களை மூடி தியான நிலையில் அமர்ந்திருந்தான் உதயணன்.

கனைத்தாள் பவானி. அவன் கண்ணைத் திறக்கவில்லை.

அருகில் இருந்த தேங்காய் ஒன்றை எடுத்து யாககுண்டத்தில் போட்டாள்.

உதயணன் கண்ணைத் திறந்தான்.

''உனக்கு தியானமும் தவமும் ஒருகேடா? கண்ணைத் திறப்பதற்கென்ன?'' என்று முரட்டுத்தனமாகக் கேட்டுவிட்டு அவனது திறந்த மார்பையும் முகத்தையும் உற்று நோக்கினாள்.

அவனது உடம்பில் பல இடங்களில் கறுப்பு புள்ளிகளைப் போல காயங்கள் இருந்தன. நெற்றியிலும் பெரியதொரு காயம் இருந்தது. அவையெல்லாம் தன் உபாயம் தான் என்பதை உணர்ந்த அவள், ''பார்த்தாயா உடம்பை? எத்தனை காயங்கள் இருக்கின்றன பார். எல்லாம் என்னால் உண்டாக்கப்பட்டது தானே? இது உனக்குத் தேவையா? தவிர்த்திருக்கலாம் அல்லவா? எதற்காகப் பிடிவாதம் பிடித்து இப்படி அலங்கோலமானாய்? இப்போது நீயே கேட்டாலும் யாராவது உன்னை விரும்புவார்களா?'' என்று கேட்டாள்.

உதயணன் பேசவில்லை. அவனது முகத்தில் லேசாகப் புன்முறுவல் ஒன்று தோன்றி மறைந்தது.

''மகாபாவி நீ. ஏதுமறியாத பேதையாக இருந்த நான் வெட்கத்தை விட்டு உன் மீது ஆசைப்பட்டு அதற்காக உன்னிடம் மன்றாடினேன். பெண்ணொருத்தி செய்யக் கூடாத காரியங்களையெல்லாம் செய்தேன். நீயோ புறக்கணித்தாய். அப்படி என்ன துறவறம் வேண்டியிருக்கிறது உனக்கு? அர்ப்பணித்துக் கொள்ளத்துடிக்கும் பெண்ணை அற்பமாக எண்ணி புறக்கணித்துவிட்டு துறவியாக இருக்கிறாயே இப்படியொரு துறவறத்தை எந்த புராணம் போதிக்கிறது? மகா முனிவரான விஸ்வாமித்திரர் கூட மேனகையிடம் தன்னை ஒப்புவித்துக் கொண்டார். காமமா அதற்குக் காரணம்? இல்லை கருணையே காரணம். பெண்ணின் மீதான கருணையால்தான் அவள் மீது மையல் கொண்ட மாதிரி அவளுடன் இணைந்தார். அதனால் அவரது பெயர் கெட்டுப் போய்விட்டதா? அவரை விடவா நீ உயர்ந்தவன்?'' என்று பொரிந்து தள்ளினாள் பவானி.

உதயணனிடமோ சிறு புன்னகையைத் தவிர வேறு சலனமில்லை.

''ஐடமே! பேசுவதற்குக் கூட முடியவில்லையா உன்னால்? நீ என்னை இரக்கமில்லாமல் புறக்கணித்துவிட்டதால் உறக்கமில் லாமல் உருண்டேன் நான். என் ஆடைகள் தினமும் கண்ணீரில் நனைந்தன. சோகம் எல்லை மீறிப் போனதால் அதை அடக்கவும் முடியாமல் தாங்கவும் முடியாமல் மது அருந்தத் தொடங்கினேன். மதுதான் எனக்கு உற்ற துணையாக மாறியது. மலராக மலர வேண்டிய மாது மதுவினால் மொட்டாகவே கருகினாள். அந்த நிலையில் என்னைக் கண்ட சேனாதிபதியின் அந்தப்புரத் தலைவி என்னை அந்தப்புரத்தில் சேர்த்தாள். சேனாதிபதி என் அந்தரங்கத்தை அழித்தார். அந்தப்புர அழகிகளில் ஒருத்தியாக நான் சீரழிக்கப்பட்டேன். நீ மட்டும் இசைந்திருந்தால் நாம் சதிபதிகளாகி சீரும் சிறப்புமாக வாழ்ந்திருக்கலாம். நீ அசையவும் மறுத்ததால் நான் அந்தப்புரத்துச் சொந்தமாகி சேனாதிபதியின் ஆசைநாயகி யானேன். போகப் பொருளாய் பாழாகிப் போனேன். இல்லறத் தைவிடச் சிறந்த அறம் இல்லை என்று ஆன்றோர்கள் கூறிய யுள்ளதை அறியாமல் துறவறத்தில் ஈடுபட்டு என்னைத் தூர்ந்து போன கிணறாக்கிவிட்டாயே நீ உருப்படுவாயா?'' என்று வெடித்தாள் அவள்.

இவ்வளவுக்குப் பிறகும் அவன் மௌனமாகவும் அமைதி யாகவும் இருந்ததைக் கண்ட அவளுக்கு என்னவோ போலிருந்தது. தனது பேச்சிற்கு எப்பேர்பட்டவனும் உணர்ச்சி வசப்பட்டு ஓர் அறையாவது விட்டிருப்பான் என்று நினைத்த அவளுக்கு அவனது அமைதி வியப்பை அளித்தது. ''இவன் உண்மையானத் துறவிதானோ?'' என்று எண்ணத்தலைப் பட்டாள்.

அவளது ஆவேசம் மெல்ல மெல்ல அடங்கியது. கோபமும் குரோதமும் மறைந்து அவளுக்குள்ளே ஓர் அமைதி உண்டாவதை அவள் உணர்ந்தாள். அந்த அமைதி அவளுக்குள் ஓர் ஆனந்தப் பிரவாகமாக இருந்ததை உணர்ந்த அவளுக்கு அது ஆச்சரியமாக இருந்தது.

''இங்கே நான் உட்காரலாமா?'' என்று கேட்டாள் அமைதியாக.

அவன் தலையை ஆட்டினான்.

அவள் உட்கார்ந்தாள். ''ஆவேசமாகவும் ஆபாசமாகவும் பேசிவிட்டேன். மன்னிக்க வேண்டும்'' என்றாள் அசதியான குரலில்.

''எல்லாம் தான் அடங்கிவிட்டதே! எதற்கு மன்னிப்பு?'' என்று கேட்டான் உதயணன் அமைதியான குரலில்.

அவனது குரல் அவளைத் தாலாட்டுவது போல் இருந்தது.

''எல்லாம் விதிப்படி நடந்துவிட்டது. உங்களை நிந்தித்தது சரியல்ல'' என்றாள் அவள்.

''போனது போகட்டும். அவற்றில் உயிர்ப்பிக்க எதுவுமில்லை. இப்போது எதற்காக வந்தாய்?''

''நீங்கள் ஸ்ரீராம புண்ணிய வல்லபருக்கு வேண்டியவரா?''

''அவரும் என் குருநாதர்தான்.''

''நமது தலைநகரை பகைவர்கள் சூழ்ந்திருக்கிறார்கள்.''

''பகையும் போரும் எங்கும் உண்டு.''

''தலைநகர் ஆபத்தான நிலையில் இருக்கிறது.''

''அதைக் காக்க மன்னர் இருக்கிறார். படைகள் இருக்கின்றன.''

''ஆனால் ஸ்ரீராம புண்ணிய வல்லபர் இல்லை. மன்னர் தடுமாறுகிறார்.''

''மன்னர் தடுமாறமாட்டார். அவர் உறுதியானவர்.''

''இல்லை. அவருக்குப் பக்கபலமாக இருக்க வேண்டிய சேனாதிபதி சதி செய்கிறார். அவரைத் தூண்டிவிட்டதே நான்தான்'' என்று சொன்ன பவானி சேனாதிபதிக்கு தான் கூறிய யோசனைகளையும் அவற்றை அவர் செயல்படுத்தி விட்டதையும் எடுத்துரைத்தாள்.

''நான் மதியிழந்து சதிக்கு வித்திட்டு விட்டேன். வித்து விளைந்து விருட்ஷமாகிவிட்டமாதிரி தோன்றுகிறது. சாளுக்கியர் செல்வம் அனைத்தும் வெளியேறிவிட்டது. சேனாதிபதியும் விசுவாசமில்லாமல் நடிக்கிறார். இது தெரிந்து தானோ என்னவோ ஸ்ரீராமபுண்ணிய வல்லபர் உங்கள் உதவியை நாடும்படி மன்னருக்கு ஓலையனுப்பினார். அது மன்னரைப் போய்ச் சேரவில்லை. சேனாதிபதியால் அழிக்கப்பட்டுவிட்டது. ஆகவே மன்னர் உங்களை அறியாமல் இருப்பார். இந்த நிலையில் நீங்கள் தான் தானாக முன் வந்து மன்னருக்கு உதவ வேண்டும். நாட்டைக் காக்க வேண்டும்'' என்றாள். அவளது குரலில் வினயம் இருந்தது.

உதயணனோ ''என் செயலால் ஆவது ஒன்றுமில்லை'' என்றான்.

அவள் எழுந்தாள்.

''நான் வருகிறேன்'' என்று சொல்லி அவனை வணங்கி விட்டு எழுந்தாள்.

அன்று மாலை சேனாதிபதியும் மன்னனும் அரண்மனையில் பேசிக் கொண்டிருந்தார்கள்.

''வெளியேறிய நமது படையிலிருந்து தகவல் வரும் என்று சொன்னீர்களே! ஒன்றும் வரவில்லையே! தகவலை யார் கொண்டு வருவார்கள்?'' என்று கேட்டான் மன்னன்.

''நானும் எதிர்பார்த்துக் கொண்டுதான் இருக்கிறேன் மகாராஜா. நாம் இங்கிருக்க வேண்டாம். மேலே உப்பரிகைக்குப் போகலாம்'' என்றார் சேனாதிபதி.

''ஏன்? தகவல் சொல்பவர் இங்கே வரமாட்டாரோ?'' என்று கேட்டபடி அவரோடு அரண்மனையின் உப்பரிகைக்கு வந்தான் மன்னன்.

அங்கே வந்து அரை நாழிகை கழிந்ததும் 'கொர் கொர்' என்ற சத்தம் அருகே கேட்டது.

''தகவல் வந்துவிட்டது'' என்றார் சேனாதிபதி.

அதையடுத்து உப்பரிகையில் வந்து உட்கார்ந்தது ஒரு குரங்கு. உட்கார்ந்ததும் காலைத் தூக்கிக் காட்டியது. அதில் கட்டப் பட்டிருந்த ஓலையை அவிழ்த்துப் படித்த சேனாதிபதி ''எல்லாம் நல்லபடியாகவே நடக்கிறது மகாராஜா. நமது படை வீரர்கள் ரத்தின புரியில் இணைந்துவிட்டார்களாம். எப்போது தாக்க வேண்டும் என்று கேட்கிறார்கள்'' என்று சொல்லி ஓலைக் காட்டினார்.

ஓலையைப் படித்த மன்னன், ''இந்தக் குரங்கு எப்படி ஓலையைக் கொண்டு வந்தது?'' என்று கேட்டான்.

''குரங்கைப் பற்றி பிறகு பேசலாம் மகாராஜா. இப்போது அனுப்ப வேண்டிய பதிலைப் பற்றிப் பேசுவோம்'' என்று சொல்லி தனது திட்டத்தைச் சொன்னார் சேனாதிபதி.

திட்டம் திருப்தியாக இருந்தது.

''நமது பதிலை இப்போதே இந்தக் குரங்கின் மூலம் அனுப்பிவிடலாம். அப்போது தான் நமது வீரர்கள் தயாராகி நாளை தாக்குதலுக்கு ஆயத்தமாவார்கள்'' என்றார் சேனாதிபதி.

பதில் ஓலை தயாரிக்கப்பட்டு குரங்கின் மூலம் அனுப்பப் பட்டது.

ஆனால் மறுநாள் குரங்கின் மூலமே ஓர் ஓலை வந்தது.

அதைக் கண்டதும் மன்னனும் சேனாதிபதியும் திகைத்துப் போனார்கள்.

★★★



45 குரங்கு வழிச் செய்தியும் கலக்கமும்

''எல்லாமே நமது திட்டப்படிதான் நடக்கிறது மகாராஜா. இந்த முறை வெற்றி நமக்குத்தான். அவர்கள் கூறியபடி மக்கள் வெளியேற்றம் முடிந்துவிட்டபடியால் நம்மைத் தாக்குவதற்குத் தயாராக இருப்பார்கள். இருந்தாலும் அவர்களால் தாக்க முடியாது. ஏனென்றால் கோட்டையைச் சுற்றி வெட்ட வெளியாக இருப்பதால் கோட்டையை அவர்கள் நெருங்க முடியாது. நெருங்கினால் கோட்டைச் சுவர் மீது இருக்கும் வீரர்களும் துளைமாடங்களில் உள்ளவர்கள் அம்பு மழை பொழிவார்கள். அதில் எதிரி அழியத்தான் முடியுமே தவிர வெற்றி பெற முடியாது. கோட்டைக் கதவைத் தாக்குவதும் இயலாது. அதோடு முதலைகள் இல்லாவிட்டாலும் பிரம்மாண்டமான அகழி அப்படியே தான் இருக்கிறது. அது அவர்களுக்குச் சவக்குழியாக இருக்கும். எனவே நாளை நண்பகல் அவர்களுக்குப் பின்னால் இருக்கும் நமது ஐம்பதாயிரம் வீரர்களை வடக்குப் புறத்தில் தாக்கச் சொல்வோம். அவர்களது தாக்குதலால் எதிரிகள் கோட்டையை நோக்கித்தான் வரவேண்டும். அப்போது நாம் கோட்டைக் கதவுகளைத் திறந்து கொண்டு தாக்க முற்பட்டால் வடக்குப் புறத்தில் இருக்கும் எதிரி அழிவான். அதேசமயம் இதர மூன்று வாசல் கதவுகளையும் திறந்து கொண்டு நாம் திடீர் தாக்குதல் நடத்தினால் எதிரி திணறிப் போவான். இறுதியில் தோற்பான். எனவே நமது வீரர்களுக்கு இக்குரங்கின் மூலம் செய்தி அனுப்பிவிடலாம்'' என்றார் சேனாதிபதி.

அவர் திட்டத்தில் மறுப்பு சொல்ல எதுவும் இல்லாததால் ஒப்புக் கொண்டான் மன்னன். செய்தியும் குரங்கின் மூலம் அனுப்பப்பட்டது.

''இப்போது கேட்கலாமா?'' என்றான் மன்னன்.

''என்னது மகாராஜா?''

''இந்தக் குரங்கு விஷயம்தான்.''

''சாதாரணமாக இதுபோன்ற முற்றுகை காலங்களில் கோட்டைக்குள் போகவும் கோட்டைக்குள்ளேயிருந்து வரவும் வைத்தியர்கள் மட்டும் அனுமதிக்கப்படுவதுண்டு. சில நேரங்களில் அவர்கள் மூலமாகவே செய்திகளைப் பரிமாறிக் கொள்வது உண்டு. இது இரு தரப்பினருக்கும் சாதகமாக இருந்ததால் இந்த முறை நெடுங்காலமாகவே நடைமுறையில் இருந்து வருகிறது. ஆனால் இந்த நடைமுறை சில நேரங்களில் எதிரிகளால் அனுமதிக்கப்படாமல் போவதுண்டு. அதோடு இது நம்பகமானதுமல்ல. இவர்கள் மூலம் தவறான செய்திகள் கூட அனுப்பப்பட்டு விபரீதங்கள் நடப்பதுண்டு. எனவேதான் அந்த நடைமுறையை நாம் பின்பற்றவில்லை. பயிற்சி பெற்ற புறாக்கள் மூலம் செய்தியனுப்பலாம். ஆனால் எதிரிகள் அந்தப் புறாக்களை வீழ்த்திவிடுகிறார்கள். எனவேதான் செய்தி யனுப்பும் பணிக்கு முதன் முதலாகக் குரங்குகளைப் பயன்படுத்த உத்தேசித்து அவற்றுக்குப் பயிற்சிகளை அளிக்க வைத்தேன். குரங்குகளின் மீது எதிரிகள் சந்தேகிக்க மாட்டார்கள். அவைகளும் தாவித் தாவிச் சென்றுவிடுமாதலால் அவற்றை அனுப்புவது சுலபம். குரங்குகள் இல்லாத இடம் எங்கும் இல்லை. ஆகவே இங்கேயும் குரங்குகள் திரிவது சாதாரணமாகத் தான் இருக்கும்'' என்றார் சேனாதிபதி.

மன்னனுக்குச் சேனாதிபதியின் மீது நம்பிக்கை வரலாயிற்று. எனவே சந்தோஷத்துடன் அவருக்கு விடைகொடுத்து அனுப் பினான். மறுநாள் நண்பகலில் எதிரியைத் தாக்குவது பற்றி உரிய உத்தரவுகளை உபதளபதிகள் மூலம் நிறைவேற்றச் சொன்ன சேனாதிபதி தனது அரண்மனைக்குத் திரும்பி அந்தப்புரத் தலைவியிடம் பவானியை அனுப்பும்படிச் சொன்னார்.

''அவளுக்கு உடல்நலம் கொஞ்சம் சரியில்லை'' என்றாள் தலைவி.

''பரவாயில்லை. அனுப்பு'' என்றார் சேனாதிபதி.

சில நிமிடங்களில் அவரது அறைக்குள் வந்து நின்றாள் பவானி.

''என்ன ஆயிற்று பவானி? வழக்கத்தை மறந்துவிட்டாயா? ஆடையோடு நிற்கிறாயே என் அறையில்?'' என்று கேட்டார் சேனாதிபதி.

''உடல் நலம் சரியில்லை ஐயா.''

''பார்த்தால் தெரியவில்லையே! ஒருவேளை மனநலம் சரியில்லையோ?''

''மனமும் சரியில்லைதான்.''

''இரண்டுமே திடீரென எப்படி சரியில்லாமல் போயிற்று? நேற்று இரவு கூட நாம் கொண்டாடத்தானே செய்தோம்? நீ கூட உனது கண்டுபிடிப்புகளை எனக்கு அறிமுகப்படுத்தி திணறடித்தாயே! மறந்துவிட்டதா?''

''இல்லை.''

''பிறகென்ன?''

''சிறு குழப்பம். அவ்வளவுதான்.''

''சிறு குழப்பம்தானே? தீர்த்து விட்டால் போகிறது! என்னவென்று சொல்.''

''அது தானாகத் தீர்ந்துவிடும்.''

''ஒருவேளை உன் குழப்பம் உதயணனைப் பற்றியதா?''

அதிர்ந்தாள் பவானி.

''இல்லையே! அப்படியெல்லாம் இல்லை. யாரவன் உதயணன்? அவனைப் பற்றி நான் ஏன் குழம்ப வேண்டும்?''

''ஏதோ மந்திரவாதி என்றாயே?''

''அது அப்போது. எப்போதோ மந்திரவாதியாக இருந்தான். இப்போது இல்லை.''

''ஒருவேளை துறவியாக இருக்கிறானோ?''

''துறவியாகவா? எனக்கென்ன தெரியும்?''

''பிரேமானந்தர் ஆசிரமத்தில் உதயணன் என்ற ஒரு துறவி இருப்பதாகக் கேள்விப்பட்டேன்.''

''அவன் யாரோ! எனக்குத் தெரியாது.''

''தெரியாமலா இன்று காலையில் அவனைப் போய் சந்தித்தாய்?''

''பொய். பொய். நான் யாரையும் சந்திக்கவில்லை?''

''பிறகு எங்கே சென்றாய்?''

''கிருஷ்ணர் ஆலயத்திற்குச் சென்றேன்.''

''அங்கு போவதற்கு வணிகர்களோடு சேர்ந்து ஏன் போகவேண்டும்? பல்லக்கிலேயே ஏறி பகிரங்கமாகச் செல்லலாமே.''

''ஊர் வெறிச்சோடியிருந்ததால் தனியாகப் போக ஒருமாதிரியாக இருந்தது.''

''உனக்கென்ன தயக்கம்? உன்னை யார் தடுக்க முடியும்?''

''பயம்தான் காரணம்.''

''பயமா? உனக்கா? இதோ பார் பவானி! நீ எங்கே சென்றாய் யாரைச் சந்தித்தாய் என்பதை என் சகாக்கள் நேரில் பார்த்துச் சொல்லிவிட்டார்கள். அது விஷயமாக நீ பொய் சொல்ல வேண்டியதில்லை. எனக்குத் தேவையானது ஒன்றுதான். உதயணனிடம் என்ன பேசினாய்?''

''ஒன்றுமில்லை. பிரேமானந்தரிடம் ஆசி பெறுவது பற்றிப் பேசிக் கொண்டிருந்தேன்.''

''உனக்கு இப்போது தேவையானது பிரேமானந்தரின் ஆசியல்ல. என் ஆசி தான். அது தேவையென்றால் உண்மையைச் சொல்.''

''நான் பொய் சொல்லவில்லை.''

சேனாதிபதி எழுந்து வந்து அவளது கன்னத்தில் ஓங்கி அறைந்தார்.

பலமான அந்த அடியைத் தாங்க முடியாமல் கீழே விழுந்தாள் பவானி.

''எழுந்திரு'' என்று கர்ஜித்தார் சேனாதிபதி.

அவள் எழுந்து நின்றாள் நடுங்கியபடி.

''சொல்.''

''சொல்லிவிட்டேன் ஐயா''

''உண்மையைச் சொல்'' - என்று சொல்லி அவளது கழுத்தை நெறித்தார் சேனாதிபதி.

அவளது கண்கள் பிதுங்கத் தொடங்கின.

பிடியைத் தளர்த்திய சேனாதிபதி, ''பவானி, நான் வெறும் காமுகன் அல்ல என்பதை இப்போது புரிந்து கொண்டிருப்பாய். இப்போது நான் எமன். உண்மையைச் சொல்லி பிழைத்துப் போ. மறுத்தால் சித்திரவதை செய்து உண்மையை அறிவேன்'' என்றார்.

மரணவாயிலில் இருந்த பவானி உண்மையைச் சொன்னாள்.

அதைக் கேட்டதும் சேனாதிபதி எரிமலையானார்.

''நானே பெரிய சதிகாரன். எனக்கு ஒரு சதிகாரியா? பெண்ணை அருகில் வைத்திருப்பதும் பாம்பை கழுத்தில் போட்டுக் கொள்வதும் ஒன்று என்பதை உணர்ந்துவிட்டேன். இனி

நீ உயிரோடு இருக்கக் கூடாது. ஒழிந்து போ'' என்று சீறிய அவர் அவளது குரல் வளையைப் பலமாக அழுத்தி அப்படியே தூக்கினார்.

அடுத்த சில நிமிடங்களில் சடலமாகக் கீழே விழுந்தாள் பவானி.

சகாக்கள் வரவழைக்கப்பட்டு சடலம் அகற்றப்பட்டது.

சகாதேவன் வந்தான்.

''சகாதேவா! பிரேமானந்தர் ஆசிரமத்தில் இருக்கும் இளம் துறவியான உதயணன் உயிரோடு இருக்கக்கூடாது. இன்று இரவே அவன் வானுலகத்திற்குப் போய்விட வேண்டும்'' என்று சொன்னார் சேனாதிபதி.

அவருக்கு இரவு முழுவதும் தூக்கம் வரவில்லை.

பவானியின் செயலை எண்ணி எண்ணிக் குழம்பினார்.

''மிகப்பெரிய சதியைத் திட்டமிட்டுச் சொன்ன அவள் உதயணனிடம் ஏன் அதற்கு நேர்மாறாகச் சொன்னாள்? அந்த அவசியம் அவளுக்கு ஏன் வந்தது? என்னிடம் என்ன குறை கண்டாள்? போருக்குப் பிறகு பொக்கிஷ செல்வங்களைக் கொண்டு தனி ராஜ்யம் அமைத்து அவளைத் தானே ராணியாக்கத் தீர்மானித்திருந்தேன்? என்னைப் போய் காட்டிக் கொடுத்து விட்டாளே உதயணனிடம். ஏன்? அதனால் அவளுக்கென்ன ஆதாயம்?'' என்று தனக்குள் பல கேள்விகளைக் கேட்டுக் கொண்டு விடை காணாமல் தவித்தார்.

இதற்கிடையில் பிரேமானந்தர் ஆசிரமத்தில் உதயணன் இல்லை என்று சகாதேவன் வந்து சொன்னபோது எரிந்து விழுந்தார்.

''சகாதேவா, நமது சதி முழுவதும் உதயணனுக்குத் தெரிந்துவிட்டது. அவன் உயிரோடு இருந்தால் விஷயம் மன்னருக்குத் தெரிந்துவிடும். அவருக்குத் தெரிந்துவிட்டால் நான் மயானத்திற்குச் செல்ல வேண்டியதுதான். புரிகிறதா? நமது ஆட்களை நகரம் முழுவதும் தேடச் சொல். அவனைப் பிடித்துக் கொன்றுவிட்டுத்தான் நீ என்னிடம் வரவேண்டும்'' என்று உத்தரவிட்டார்.

பொழுது விடிந்தது.

சிறிது நேரத்திற்கெல்லாம் மன்னனிடமிருந்து பணியாட்கள் வந்தார்கள்.

''தங்களை மன்னர் உடனே வரச் சொன்னார்'' என்றார்கள்.

அரண்மனைக்குப் போனார் சேனாதிபதி.

''மன்னர் மேலே உப்பரிகையில் இருக்கிறார்.''

மேலே சென்றார் சேனாதிபதி.

மன்னனின் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்துக் கொண்டிருந்தது.

அவனுக்கு அருகில் குரங்கு ஒன்று உட்கார்ந்து கொண்டு தலையைச் சொறிந்து கொண்டிருந்தது.

ஏறக்குறைய சேனாதிபதியின் நிலையும் அப்படித்தான் இருந்தது.

''என்ன விஷயம் மன்னவா?'' என்று கேட்டார் சேனாதிபதி.

''குரங்கு செய்தி கொண்டு வந்திருக்கிறது.''

''யாரிடமிருந்து?''

''ஓலையைப் படித்துப் பாருங்கள் புரியும்.''

படித்தார் சேனாதிபதி.

அவரது முகம் சவமென வெளுத்தது.

''என்ன படித்தீர்களா?'' என்று கேட்டான் மன்னன்.

சேனாதிபதி மீண்டும் ஓலையைப் படித்தார்.

''விஜயாதித்தரே! மக்களுக்குத் தீங்கு ஏற்படக் கூடாது என்ற ஒரே காரணத்திற்காகத்தான் கோட்டையை விட்டு அவர்களை வெளியேற்றும்படி சொன்னேன். அது தர்மம். நீங்களோ அவர்களோடு படை வீரர்களையும் அனுப்பியிருக்கிறீர்கள். இது அதர்மம். கோட்டையிலிருந்து வெளியேற்றப்பட்டவர்கள் அனைவரையும் எங்கள் படை சோதித்தது. மூட்டைகளில் இருந்த ஆயுதங்கள் பறிமுதல் செய்யப்பட்டுவிட்டன. வீரர்களும் சிறை செய்யப்பட்டார்கள். இன்று அவர்களைக் கொண்டே கோட்டையின் அகழி தூர்க்கப்படும். அகழி முக்கியம் என்றால் உங்கள் வீரர்களை நீங்களே அழித்துக் கொள்ளலாம்.''

என்றிருந்தது ஓலையில்.

''இதை நான் எதிர்பார்க்கவில்லை'' என்றார் சேனாதிபதி.

''நாம் எதைத்தான் எதிர்பார்த்தோம்? எதிர்பார்த்ததும் செயல்பட்டதும் பல்லவர்கள்தானே?'' என்று மடக்கினான் மன்னன்.

''நமது திட்டம் சரியானதுதான். அதோடு இந்த திட்டம் ஸ்ரீராம புண்ணிய வல்லபர் கூறியது'' என்றார் சேனாதிபதி.

''அந்தத் திட்டத்தை வேண்டாம் என்று சொல்லி பிறகு ஒப்புக் கொண்டு செயல்படுத்தியது நீங்கள்தானே தவிர ஸ்ரீராம புண்ணிய வல்லபர் அல்ல.''

''தாங்களும் ஒப்புக் கொண்ட பிறகுதான் திட்டம் செயல்படுத்தப்பட்டது.''

''மிக்க மகிழ்ச்சி. வெளியேற்றத்திற்கு யார் காரணம் என்பதைக் குறித்து நாம் விவாதித்துக் கொண்டே இருப்போம். எதிரி கோட்டையைப் பிடித்துக் கொள்ளட்டும்.''

''அவனால் கோட்டையைப் பிடிக்க முடியாது.''

''சேனாதிபதி! பல்லவர்கள் ஒவ்வொன்றாகப் பிடித்துக் கொண்டு வருகிறார்கள். அதைத் தொடர்ந்து கோட்டையைப் பிடிப்பார்கள்'' என்று சொன்ன மன்னன் ''எதிரி முதலில் முதலைகளை அழித்து அகழியின் முக்கியத்துவத்தை நீக்கினான். இபபோது அகழியைத் தூர்த்து ஒட்டுமொத்தமாக அகழியையே அழிக்கப் போகிறான். முதலைகள் போனாலும் பிரம்மாண்டமான அகழிகள் இருக்கின்றன என்று நேற்று சொன்னீர்கள். அகழிகள் போனாலும் மதில் சுவர் இருக்கிறது என்று இன்று சொல்வீர்களா?'' என்று கேட்டான்.

''அவசரம் வேண்டாம் மகாராஜா. அவன் எப்படி அகழியைத் தூர்க்கிறான் என்று பார்ப்போம்.''

''அதைப் பார்த்துத்தான் தெரிந்து கொள்ள வேண்டுமா? ஊகிக்க முடியாதா? நமது வீரர்களிடமே பாறைகளையும் மரங்களையும் கொடுத்து அகழியில் போடச் சொல்வான். நமது வீரர்கள் மீது நாம் அம்புகளை எய்து தாக்க மாட்டோம். நமது வீரர்களின் எண்ணிக்கை ஐம்பதாயிரம். அவர்கள் அனைவருமாகச் சேர்ந்து செயல்பட்டால் அரை நாளில் அகழி தூர்ந்துவிடும். அது நடக்கக் கூடாது சேனாதிபதி. இப்போது நமக்கு அகழி மிகவும் முக்கியம். கோட்டையை எதிரி நெருங்க முடியாமல் காக்கும் வல்லமை அகழிக்கு மட்டுமே உண்டு. நமது வீரர்களைப் பற்றி கவலைப்பட வேண்டாம். போர் என்றால் வீரர்கள் இறப்பது தவிர்க்க முடியாது. எனவே நமது வீரர்கள் அகழியைத் தூர்க்க முற்பட்டால் அனைவரையும் கொல்ல உத்தரவிடுங்கள்.''

''மகாராஜா! இதென்ன இப்படிப் பேசுகிறீர்கள்? வீரர்கள் அதுவும் நமது வீரர்கள். அவர்களை நாமே அழிப்பதா? இதுபோன்ற எண்ணம் தங்களுக்கு எப்படி வந்தது? இதுபோன்று எங்காவது நடந்தது உண்டா? அகழி போனால் போகட்டும். அதை எப்போது வேண்டுமானாலும் மீண்டும் நிர்மாணித்துக் கொள்ளலாம். வீரர்களை இழந்துவிட்டால் உயிர்ப்பிக்க முடியாது?''

''அகழி என்ற ஒன்றை நிர்மாணித்தது எதற்காக? போர்க்காலங்களில் நமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்வதற்காகத்தான். நீங்களோ போர் நடக்கவிருக்கும் இச்சமயத்தில் அதை தூர்க்க விட்டுவிட்டு பின்னாளில் புதுப்பித்துக் கொள்ளலாம் என்கிறீர்கள். வாதாபியிலேயே கூட இல்லாத - ஏன் எந்தக் கோட்டைக்கும் இல்லாத பிரம்மாண்டமான அகழியை இந்த ரணரசிகபுரத்தில் நிர்மாணித்தது எதற்காக? முக்கியமான நேரத்தில் உபயோகப்படாமல் செய்து விடுவதற்காகவா?''

''நான் அப்படிச் சொல்லவில்லை மகாராஜா. அகழியின் முக்கியத்துவம் எனக்குத் தெரியாததல்ல. தங்கள் தந்தையார் வினயாதித்தரும் நானும் சேர்ந்துதான் இதற்கு வடிவமைப்பு கொடுத்தோம். அது அற்பமானதல்ல. ஆனால் அதற்கு விலையாக நமது வீரர்கள் ஐம்பதாயிரம் பேரை நாமாகவே கொடுக்க வேண்டுமா என்பதுதான் கேள்வி.''

''நீங்கள் சொல்வதுதான் என்ன?''

''அகழி போனால் போகட்டும். அகழியே இல்லாத கோட்டைகள் பல நமது நாட்டில் பாதுகாப்பாக உள்ளன. அதைப்போல நமது கோட்டையை நினைத்துக் கொள்ளுங்கள். நமது வீரர்கள் அகழியைத் தூர்த்துக் கொள்ளட்டும். அப்படிச் செய்த பின் அவர்களை நாமே உள்ளே இழுத்துக் கொள்ளலாம். அல்லது ஆயுதங்களைக் கொடுத்து பல்லவர் படையைத் தாக்கச் சொல்லி நாமும் தாக்கலாம்.''

சேனாதிபதியின் யோசனை மன்னருக்குப் பிடிக்கவில்லை தான். அதேசமயம் மாற்று யோசனை எதுவும் அவனிடம் இல்லாததால் சரியென்று சொன்னான்.

சேனாதிபதிக்கோ அகழி விஷயத்தை விட பொக்கிஷ விஷயமே கலக்கியது. ''மக்களோடு வெளியேறிய படை வீரர்களை பல்லவர்கள் கண்டுபிடித்துவிட்டது மட்டும் தான் ஓலையில் இருந்ததே தவிர தான் ஆயிரத்திற்கும் மேற்பட்ட தனது

சகாக்களின் மூலம் அனுப்பப்பட்ட பொக்கிஷ செல்வங்களைப் பற்றி சிறு குறிப்பும் இல்லாதது அவரை கதிகலங்க வைத்தது. படை வீரர்களையும் அவர்கள் கொண்டு வந்த ஆயுதங்களையும் கண்டுபிடித்தப் பல்லவர்கள் தனது சகாக்கள் கொண்டு போன பொக்கிஷ செல்வங்களையும் நிச்சயமாகக் கண்டுபிடித் திருப்பார்கள். அப்படியானால் பொக்கிஷ செல்வம் முழுவதும் பல்லவர்களுக்குப் போய் விட்டது. ஆகா! இந்தப் பிசாசு பாவனியின் பேச்சைக் கேட்டு பொக்கிஷத்தை பல்லவர்களுக்குத் தாரை வார்த்து கொடுத்து விட்டோமே! எப்படிப்பட்ட முட்டாள்தனம்! பேராசைப் பட்டதற்குப் பெரு நஷ்டம் அல்லவா விளைந்துவிட்டது? மன்னனுக்கு உண்மை தெரிந்தால் படுக்க வைத்து அங்குலம் அங்குலமாக அல்லவா வெட்டுவான்? இது நமக்குத் தேவையா? ஒரே குழப்பமாக இருக்கிறதே'' என்று பலவாறு யோசித்தபடி கோட்டை மதிலை நோக்கிச் சென்றார்.

கோட்டைக்கு வெளியே அவர் கண்ட காட்சி நம்ப முடியாததாக இருந்தது. ஓலையில் சொல்லியிருந்தபடி சாளுக்கிய வீரர்கள் திரள் திரளாகத் திரண்டு பாறைகளையும் மரங்களையும் கொண்டு வந்து அகழியில் போட்டுக் கொண்டிருந்தனர். சேனாதிபதிக்கு வயிறு பற்றி எரிந்தது. தனது விரல்களைக் கொண்டே தன் கண்களைக் குத்துவது போல் சாளுக்கிய வீரர்களைக் கொண்டே சாளுக்கியரது கோட்டை அகழியைத் தூர்க்க வைத்துக் கொண்டிருந்த பல்லவர்களைப் பாராட்டுவதா சபிப்பதா என்று அவருக்குப் புரியவில்லை. கோட்டை மதில் மீது சாளுக்கிய வீரர்கள் அம்பும் கையுமாகத் தயாராக இருந்தும் அம்புகளை எய்ய விடாமல் அவர்களது கைகளை கட்டிப் போட நேர்ந்ததற்கும் பல்லவர்களே காரணமாதலால், ''இவர்கள் மீது இடி விழக் கூடாதா?'' என்று பொறாமையுடன் முணுமுணுத்தார்கள். அகழியைத் தூர்த்துக் கொண்டிருந்த சாளுக்கிய வீரர்களோ கோட்டை மதிலை நிமிர்ந்து கூடப் பார்க்கவில்லை. தங்கள் மீது அம்புகள் வந்து விழுமா என்ற அச்சம் சிறிதும் இல்லாமல் கருமமே கண்ணாக இருந்தார்கள். பின்னால் இருந்த பல்லவர் படை பாறைகளையும் மரங்களையும் எடுத்துக் கொடுக்க அவற்றைச் சாளுக்கிய வீரர்கள் வாங்கி அகழியில் போட்டுக் கொண்டிருந்தார்கள். பார்ப்பதற்குச் சிரத்தையோடு செய்யப்படும் மராமத்துப் பணியைப் போல இருந்ததைக் கண்ட சேனாதிபதி ''இப்படியொரு திருப்பம் வருவதற்கு வாய்ப்புண்டு என்பதை

எப்படி நான் ஊகிக்காமல் போனேன்? ஸ்ரீராம புண்ணிய வல்லபர் என்னை விட வல்லவர் ஆயிற்றே? அவருக்கு இந்த ஊகம் எப்படி வராமல் போயிற்று?'' என்று விடை கிடைக்காத கேள்விகளைக் கேட்டுக் கொண்டு மனம் நொந்தார் சேனாதிபதி.

காலையில் தொடங்கிய பணி இரவு வரை இடைவிடாமல் நடந்தது. நள்ளிரவுக்குச் சற்று முன்பு அகழி முற்றிலுமாகத் தூர்க்கப்பட்டு மேலே மண்ணும் கொட்டப்பட்டது. சாளுக்கிய வீரர்கள் தூர்க்கப்பட்ட அந்த அகழி மீதும் திறந்தவெளியிலுமாக உட்கார்ந்தார்கள். அவர்களுக்கு பல்லவர் படை பின்னாலிருந்து உணவை அனுப்பி வைத்தது.

இதே நேரத்தில் அரண்மனையை அடைந்த சேனாதிபதி ''மகாராஜா! இதுதான் சரியான நேரம். கோட்டைக் கதவுகளை மெல்லத் திறந்து நமது வீரர்களை உள்ளே அழைத்துக் கொள்ளலாம். மதில் மீதிருந்து நூலேணிகளை இறக்கியும் அவர்களை மேலே ஏற்றிக் கொள்ளலாம்.'' என்றார்.

அப்போது, ''வேண்டாம் மகாராஜா'' என்ற குரல் எழுந்தது.

குரலையடுத்து உள்ளே பிரவேசித்தான் இளம் துறவியான உதயணன்.

☆ ☆ ☆



46

ஆலோசனை அவையில் துறவி

இளம் துறவியைப் பார்த்து ''நீ யார்?'' என்று கேட்டான் மன்னன் விஜயாதித்தன்.

''மகாராஜா! என் பெயர் உதயணன். பிரேமாநந்தரின் சீடன். ஸ்ரீராம புண்ணிய வல்லபருக்கும் சீடன்'' என்றான் உதயணன்.

''மகாராஜா, இவன் கூறுவது பொய். சீடன் என்று சொல்வது மகா பொய். இவன் பல்லவ ஒற்றன். அவர்களை வெற்றி பெற வைக்கவும் நம்மைத் தோற்கடிக்கவும் வந்திருக்கிறான் நம்பாதீர்கள் இவனை'' என்றார் சேனாதிபதி.

''இவன் என்ன சொல்கிறான் என்பதைப் பார்ப்போம்'' என்று சொன்ன மன்னன் உதயணனைப் பார்த்து ''நீ சொல்ல வந்த விஷயமென்ன?'' என்று கேட்டான்.

''பல விஷயங்கள் இருக்கிறது மகாராஜா. இப்போது முக்கியமான போர் நடவடிக்கையை எடுத்தாக வேண்டும். கோட்டைத் தூர்த்தவர்களும் கோட்டையைச் சுற்றி தற்போது உட்கார்ந்திருப்பவர்களும் சேனாதிபதி சொல்வதுபோல் சாளுக்கிய வீரர்கள் அல்ல. பல்லவ வீரர்கள்.''

''இது என்ன புதுக்கதை? யார் சொன்னது உனக்கு?'' என்றான் மன்னன்.

''இவனை நம்பாதீர்கள் என்று அதற்குத் தான் சொன்னேன் மகாராஜா. நமது வீரர்களை நம்மை விட்டே அழிக்கவிட்டு பல்லவருக்கு உதவ வந்திருக்கிறான். இவனை உடனடியாகச் சிறை செய்யுங்கள்'' என்று அவசரமாகச் சொன்னார் சேனாதிபதி.

''துறவியே! ஊர் பேர் தெரியாத நீ திடீரென்று வந்து இப்படிப் பேசுவது உனக்கே முட்டாள்தனமாகத் தெரிய வில்லையா? நடந்து கொண்டிருப்பது போர். இதில் கண்டவர்கள் சொல்வதை

யெல்லாம் ஏற்றுக்கொண்டு செயல்படுத்த முடியாது. அதோடு நாம் இங்கே மக்களோடு மக்களாக வெளியேற்றிய படை வீரர்களைத் தான் அகழியைத் தூர்ப்பதற்கு அனுப்புவதாகப் பல்லவர்கள் ஓலையனுப்பியிருக்கிறார்கள். அப்படி நடப்பதற்கும் நம்புவதற்கும் நியாயம் இருக்கிறது. நீயோ பல்லவ வீரர்கள் என்று சொல்கிறாய்.''

''மகாராஜா! பகைவர்கள் அனுப்பும் எல்லாச் செய்திகளுமே உண்மையானவைகளாக இருக்க வேண்டும் என்ற கட்டாய மில்லை. சில செய்திகள் பொய்யாகவும் இருக்கலாம். நமது அகழியைத் தூர்ப்பது என்பது எதிரிகளுக்கு மிகவும் சவாலான கௌரவமான செயல். அதை அவர்களேதான் செய்வார்களேதவிர சாளுக்கியர்களை வைத்துச் செய்ய மாட்டார்கள். சாளுக்கிய வீரர்களைக் கொண்டு தூர்ப்பதாகச் சொன்னது ஒரு தந்திரம். அப்படிச் சொன்னால்தான் நாம் தாக்க மாட்டோம் என்று கணக்கிட்டு அப்படியொரு பொய்யைச் சொல்லியிருக்கிறார்கள். சொல்லிவிட்டு பல்லவர்கள் மூலமாகவே அகழியைத் தூர்த்துவிட்டு அதன் மீதும் வெட்ட வெளியிலும் அமர்ந்து கிடக்கிறார்கள். அவர்களைச் சாளுக்கியர்கள் என்று நம்பி கோட்டைக் கதவைத் திறந்தும் ஏணிகளை இறக்கி ஏற்றிக் கொள்வீர்கள் என்றும் கணக்கிட்டிருக்கிறார்கள். நீங்களும் அவ்வாறு செய்தால் பகைவர் எளிதில் உள்ளே வந்து விடுவார்கள். அவர்களைத் தொடர்ந்து மற்ற வீரர்களும் கோட்டைக்குள் வந்து தாக்குவார்கள். முடிவு என்னாகுமோ சொல்ல முடியாது.''

சேனாதிபதியால் மேலும் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. மன்னன் இருப்பதையும் மறந்து உடைவாளை உருவி உதயணனை வெட்ட முயன்றார். ஆனால் உதயணனோ மின்னலைப் போல மறைந்து அவரது கையைப் பிடித்து உலுக்கியதும் வாள் கீழே விழுந்தது. கையை ஒரு திருகு திருகிய உதயணன் தனது இன்னொரு கையால் அவரது கழுத்தை அழுத்தினான். அவர் ஒரு கை செயல்படமுடியாமலும் வாயால் பேச முடியாமலும் தவறாக வடிக்கப்பட்டச் சிலையைப் போல நின்றார்.

இந்த திடீர் விபரீதத்தைக் கண்டு திகைத்த மன்னன் ''துறவி! இதென்ன அடாத செயல் அதுவும் என்முன்பாக? சேனாதிபதியை இப்படித் தாக்க யார் உனக்கு அனுமதி கொடுத்தது?'' என்று இரைந்தான்.

''மகாராஜா! நான் பேசாமல் நின்றிருந்தால் நிராயுதபாணியான என்னை இந்நேரம் இவர் சாகடித்திருப்பார். இவர் சேனாதிபதியல்ல. சதிகாரர்.''

''இதென்ன உளறல்?''

''உளறலல்ல மகாராஜா. உண்மை. என் குருநாதரான ஸ்ரீராம புண்ணிய வல்லபரைக் கடத்தியவர் இவர். அப்பேரறிஞர் அந்தணர் ஒருவர் மூலம் கொடுத்தனுப்பிய உங்களுக்குரிய ஓலையை எரித்து விட்டு அந்தணரையும் கொன்றுவிட்டு மாற்று ஓலையை அனுப்பியவர் இவர்.''

''ஸ்ரீராம புண்ணிய வல்லபர் எனக்கென்ன ஓலை அனுப்பினார்?''

''சேனாதிபதியை நம்ப வேண்டாம் என்றும் கோட்டையை விட்டு மக்களை வெளியேற்றும் காரியத்தைச் செய்ய வேண்டாம் என்றும் தேவைப்பட்டால் உதயணனாகிய என் உதவியைப் பெற்றுக் கொள்ளலாம் என்று எழுதியிருந்தார்.''

''சேனாதிபதி எழுதிய ஓலையில் என்ன எழுதியிருந்தது?''

''அந்த ஓலை தங்களிடம் இருக்கிறது மகாராஜா. சேனாதிபதி நல்லவர் என்றும் அனுபவசாலி என்றும் தேசபக்தி மிகுந்தவர் என்றும் ஆகவே அவரை முழுவதுமாக நம்பி அவர் கூறும்படி நடந்து கொள்ளும்படியும் ஸ்ரீராம புண்ணிய வல்லபர் சொல்வது போல் எழுதியிருந்தார்.''

அந்த ஓலை தன்னிடமே இருந்ததால் நம்பினான் மன்னன்.

''அது சரி. இதெல்லாம் உனக்கெப்படித் தெரியும்?'' என்று கேட்டான்.

''பவானி சொன்னாள்.''

''யாரவள்?''

சொன்னான் உதயணன்.

''அவள் எங்கே?''

''விண்ணுலகத்தில் இருக்கிறாள்.''

''விண்ணுலகத்திலா?''

''மண்ணுலகில் இருந்தவள்தான். அவளை விண்ணுலகத் திற்கு அனுப்பியவரும் இந்த மனிதரேதான்.''

மன்னனுக்கு அதற்கு மேல் பேச முடியவில்லை. உதயணன் கூறியதெல்லாம் உண்மைதான் என்பது அவனுக்குப் புரிந்தது.

இருந்தாலும் பல்லவர் படை குறித்து அவன் சொன்னதை நம்ப முடியவில்லை.

அதேசமயம், ''தாமதிக்காதீர்கள் மகாராஜா. பல்லவர் படையை ஓரளவிற்காவது அழிப்பதற்கு இதுவே சந்தர்ப்பம். விடிவதற்குள் இது நடந்தால் தான் நல்லது'' என்று அவசரப் படுத்தினான் உதயணன்.

''துறவியே! பகைவரை இரவில் தாக்குவது தர்மமா?'' என்று கேட்டான் மன்னன்.

''மகாராஜா! பகைவர்களான பல்லவர்கள்கூட நம்மை இரவில் தாக்கிப் பல வீரர்களைக் கொன்றிருக்கிறார்கள். போரே அதர்மம் தான். அதைத் தொடங்கிவிட்டு தர்ம விவாதம் செய்வது பொருத்தமானதல்ல. இந்த பாரத நாட்டில் நடந்த பெரும்போர்கள் பல அதர்மமாகத்தான் நடந்திருக்கின்றன'' என்றான் உதயணன்.

''முதலில் சேனாதிபதியின் நிலையை சரி செய்.''

''இப்போது வேண்டாம் மகாராஜா. போர் முடியும் வரை இப்படியே இருக்கட்டும். உயிருக்கு ஏதும் ஆபத்தில்லை. சிறையில் வைத்திருங்கள். போர் முடிந்ததும் சரி செய்து விடுகிறேன்.''

''முடியாது. காவலில் வேண்டுமானால் வைக்கலாம். ஆனால் இந்த நிலையில் வைக்க முடியாது. அப்படி வைத்து மக்கள் என்னை இகழ்வதற்கு நான் ஆளாக விரும்பவில்லை.''

வேறு வழியில்லாமல் சேனாதிபதிக்குப் போட்டிருந்த நரம்பு கட்டுக்களை அவிழ்த்தான் உதயணன்.

கிடந்திருந்த நிணம் ஒன்று கிளர்ந்தெழுந்து நின்றது போல் சிலிர்த்து கொண்டு நின்றார் சேனாதிபதி. சில நிமிடங்களுக்கு அவருக்கு எதுவும் புரியவில்லை. பிறகு தெளிவடைந்த பிறகு உதயணன் இருப்பதைப் பார்த்துவிட்டு, ''இவன் இன்னுமா இங்கேயே நிற்கிறான்? மகாராஜா! இவனை உயிரோடு விடாதீர்கள்'' என்றார்.

''முதலில் நீங்கள் ஓய்வெடுங்கள்'' என்று கூறிய மன்னன் அவரை அருகே இருந்த அறையொன்றுக்கு அனுப்பி காவலர்களின் செவிகளில் ஏதோ சொன்னான்.

உதயணனையும் வேறொரு அறையில் ஓய்வெடுக்கச் சொன்ன அவன் சேனாதிபதிக்கு அடுத்த நிலையில் இருந்த உபதளபதி சிங்கமுகனை அழைத்து உதயணன் கூறியதைக் கூறி உடனே செயல்படுத்தும்படிக் கட்டளையிட்டான்.

''சேனாதிபதியின் திட்டம் இதுவல்லவே மகாராஜா?'' என்று கேட்டான் சிங்கமுகன்.

''மன்னன் நான் ஆணையிடுகிறேன். நீங்கள் சேனாதிபதியின் திட்டம் பற்றிப் பேசுகிறீர்கள். அவரது திட்டத்தை மட்டும் தான் நிறைவேற்றுவீர்களா? திட்டம் மாற்றப்பட்டால் நிறைவேற்ற மாட்டீர்களா?'' என்று இரைந்தான் மன்னன்.

''தங்கள் கட்டளை எதுவானாலும் அதுவே மேலானது. உடனே நிறைவேற்றுகிறோம் மகாராஜா'' என்றான் சிங்கமுகன்.

''உடனே என்றால் உடனேதான். சாவகாசமாக அல்ல. விடிவதற்குள்ளாகக் காரியம் முடிந்துவிட வேண்டும். வீரர்கள் பலர் மாள வேண்டும்.''

''அப்படியே ஆகட்டும் மகாராஜா.''

அதையடுத்து மிகச் சிறப்பாகச் செயல்பட்டான் உபதளபதி.

போர்த்திட்டம் மாறிவிட்டதை உணர்த்த சங்கொலியை ஆங்காங்கே எழுப்பச் சொன்னான்.

கோட்டை மதில் மீது உள்ள வீரர்கள் அம்புகளையும் வேல்களையும் கோட்டைச் சுவற்றை சுற்றி அமர்ந்திருந்த வீரர்கள் மீது இடைவிடாமல் எய்வதற்கு உரிய அடையாளமாக ஆங்காங்கே கொம்புகளை மூன்று முறை ஒலிக்கச் செய்தான்.

மதிலின் உட்புறத்தில் தயாராக இருக்கக்கூடிய காய்ச்சிய எண்ணைக் கொப்பரைகளை முதல் தளத்திற்குக் கொண்டு வந்து மதில் சுவருக்கு வெளியே கொட்டுவதற்கு அடையாளமாக சிறிய பேரிகைகளை விட்டுவிட்டு ஒலிக்கச் செய்தான்.

சுவற்றில் இருந்த தளைமாடங்கள் வழியாகவும் அம்புகளை எய்ய உத்தரவிட்டான்.

அனைத்தும் பிரளய கால அலைகளைப் போல எழுந்ததும் கோட்டைக்கு வெளியே, ''ஐயோ அம்மா'' என்ற அலறல் சத்தம் கேட்டது.

பல்லவர் முக்காமிலிருந்து கொம்பொலிகள் எழுந்தன.

மதிலைச் சுற்றிக் குழுமியிருந்த பல்லவ வீரர்கள் செத்தோம் பிழைத்தோம் என்று பின்வாங்கி ஓடினார்கள்.

பாசறையில் இருந்த பல்லவ இளவரசன் சேனாதிபதியைப் பார்த்து, ''இதை நாம் எதிர்பார்க்கவில்லை அல்லவா?'' என்று கேட்டான்.

''ஆம் இளவரசே.''

''என்ன காரணம்?''

''கோட்டைக்குள் யாரோ ஓர் அறிவாளி புதிதாக வந்திருக்க வேண்டும்.''

''இது நமக்குப் பின்னடைவு தானே?''

''ஆமாம். நம் சேதத்தைப் போய் பார்க்க வேண்டும்'' என்று சொல்லி எழுந்தார் சேனாதிபதி பகதத்தர்.

☆

மறுநாள் காலையில் மன்னன் விஜயாதித்தன் மகிழ்ச்சியில் இருந்தான்.

இரவில் நடந்த தாக்குதலில் குறைந்தது ஐயாயிரம் வீரர்கள் பல்லவர் தரப்பில் இறந்திருப்பார்கள் என்று உபதளபதி சிங்கமுகன் கூறியது திருப்தியாக இருந்தது அவனுக்கு.

சரியான நேரத்தில் வந்து சரியான யோசனையைச் சொன்ன உதயணனைப் பாராட்டினான் மன்னன்.

சேனாதிபதி கூறியபடி நடந்து கொள்ளாமல் போனது எத்துணை நல்லதாகப் போயிற்று என்பதையும் உணர்ந்தான்.

அன்று பகலிலேயே ஆலோசனை அவையைக் கூட்டவும் செய்தான்.

மகிழ்ச்சியாக கூடிய உபதளபதிகள் ஆலோசனை அவையில் இளம் துறவி ஒருவர் அமர்ந்திருந்ததைக் கண்டு முகம் சுளித்தனர். போர் பற்றிய ஆலோசனை நடக்கும் இடத்தில் துறவிக்கென்ன வேலை என்று தங்களுக்குள் கேட்டுக் கொள்ளவும் செய்தார்கள்.

மன்னன் விஜயாதித்தன் பேச முற்பட்டு ''நாம் மகிழ்வதும் இங்கே கூடியிருப்பதும் ஐயாயிரம் பல்லவ வீரர்களை வீழ்த்திவிட்டதற்காக இல்லை. பல்லவரது கணிப்பை ஊகித்து அதை வீழ்த்தி விட்டதற்காகத்தான். இது நமக்குத் தெம்பைத் தந்திருக்கிறது. இதற்குக் காரணம் இந்த இளம் துறவி தான். இவன் பெயர் உதயணன்'' என்றான்.

''சேனாதிபதி எங்கே மகாராஜா? அவையில் காண வில்லையே?'' என்று கேட்டார் ஓர் உபதளபதி. துறவியை அவர் பொருட்படுத்தவில்லை.

''சேனாதிபதிக்கு பதிலாகத்தான் இந்த துறவி வந்திருக்கிறார்'' என்றான் மன்னன்.

''சேனாதிபதிக்கு பதிலாகத் துறவியா? இதென்ன விந்தை மகாராஜா? சேனாதிபதியின் பேரனைப் போல இருக்கும் இந்தப் பிள்ளையா சேனாதிபதிக்கு ஈடு?'' என்று இளக்காரமாகக் கேட்டார் ஓர் உபதளபதி.

''சேனாதிபதியின் வயதென்ன? அனுபவம் என்ன? இந்தத் துறவி இதுவரை எத்தனைப் போர்களைக் கண்டிருக்கிறார்?'' என்று கேட்டார் மற்றொரு உபதளபதி.

''இவருக்குத் துறவு வெறுத்துவிட்டதா? வெறுத்து விட்டதால் தான் இங்கு வந்துவிட்டாரா?'' என்றார் மற்றொருவர்.

உதயணன் எழுந்து, ''உபதளபதிகளே, மகா வீரர்களே! சேனாதிபதியைப் பற்றிய உங்களது உயர்வான அபிப்ராயங்களை நான் மதிக்கிறேன். அவரது வயதும் அனுபவமும் முக்கியமான அம்சங்கள்தான். ஆனால் அச்சேனாதிபதியின் ஊகம் பொய்த்துப் போனது ஏன்? உங்களாலும் ஊகிக்க முடியாமல் போனது ஏன்? சேனாதிபதியின் ஊகப்படி செயல்பட்டிருந்தால் நிலைமை தலைகீழாகி விட்டிருக்கும். பல்லவ வீரர்கள் கோட்டைக்குள் வந்திருப்பார்கள். அதே நேரத்தில் இதர பல்லவர் படையும் பின்தொடர்ந்து வந்து தாக்கினால் என்ன ஆகியிருக்கும்?'' என்று கேட்டான்.

''உன்னால் மட்டும் எப்படி ஊகிக்க முடிந்தது?'' என்று மூர்க்கமாகக் கேட்டார் ஓர் உபதளபதி.

''அது நடந்து முடிந்த கதை. அதைப்பற்றி இப்போது பேச வேண்டியதில்லை. நடக்க வேண்டியதைப் பற்றிப் பேசுவோம்'' என்றான் உதயணன்.

''அப்படியானால் இனி போர்த்திட்டத்தை வகுக்கப் போவது நீதானா?''

''மகாராஜா! இந்தத் துறவியின் தலைமையில்தான் இனிமேல் நாங்கள் இயங்க வேண்டுமா?''

''இது மகா கேவலம். ஆண்டாண்டுகளாக போர்களைச் சந்தித்து விழுப்புண்களைத் தாங்கிய நாங்கள் இந்தப் பிஞ்சுத் துறவிக்கு அடங்க வேண்டுமா?''

''சேனாதிபதியைத் தவிர வேறு யாரையும் அவரது பதவியில் இருப்பதற்கு அனுமதிக்க மாட்டோம்.''

''சேனாதிபதிக்கு என்னாயிற்று? அவரை வரச் சொல்லுங்கள். ஆலோசனையை நடத்தலாம்.''

- என்று பலரும் பலவிதமாகப் பேசினார்கள்.

எல்லோரையும் அடக்கிய மன்னன், ''இல்லாததை யெல்லாம் நீங்கள் கற்பனை செய்து கொள்ள வேண்டியதில்லை. இத்துறவியை நான் சேனாதிபதியாக நியமித்துவிட வில்லை. யாரும் அஞ்ச வேண்டியதில்லை. நேற்றிரவு அவர் கூறிய திட்டம் பலித்தது. ஆகவே தான் அவரை நானாகவே அழைத்தேன். துறவிகளைப் பற்றி யாரும் ஏளனமாக எண்ண வேண்டிய தில்லை. எல்லாவற்றையும் துறந்த அவர்கள் எல்லோரது நல்வாழ்வுக்காகத்தான் வாழ்கிறார்கள். யாகங்களை நடத்துகிறார்கள். தவம் செய்கிறார்கள். அவர் இடம் மாறி வந்துவிடவில்லை. துறவிகளுக்கு எல்லா இடமும் ஒன்றுதான். அதோடு இவர் ஸ்ரீராம புண்ணிய வல்லபரின் சீடர். அவர் அனுப்பித்தான் இவர் இங்கே வந்திருக்கிறார். அவரை நானும் ஏற்றிருக்கிறேன். அவரை ஏளனம் செய்வது என்னை ஏளனம் செய்வதாகும். அவரை இனி யாரும் ஏளனம் செய்ய வேண்டாம் என்று உங்களை எச்சரிக்கிறேன். அறிவு வேறு. அனுபவம் வேறு. அனுபவசாலிகள் தோற்பதும், அனுபவமற்ற அறிவாளிகள் வெல்வதும் அதிசயமான விஷயங்கள் அல்ல. ஸ்ரீராம புண்ணிய வல்லவரின் சீடர் என்ன திட்டத்தைச் சொல்கிறார் என்பதைக் கேட்போம். கேட்பதால் யாருக்கும் ஒன்றும் நஷ்டமாகி விடப் போவதில்லை'' என்று ஆணித் தரமாகச் சொன்னதும் அவையில் எழுந்த உரசல்கள் அடங்கின.

உதயணன் எழுந்து, ''சாளுக்கிய மகாராஜாவுக்கு எனது பணிவான வணக்கங்கள். மகாராஜா வாழ்க. மகாராஜாவுக்கு வெற்றி. இங்கே குழுமியுள்ள சாளுக்கியப் படையின் மாவீரர்களுக்குத் தெரியாத எதையும் நான் சொல்லிவிடப் போவதில்லை. வயதிலும் அனுபவத்திலும் மிகவும் பின்தங்கிய நான் இங்கே உபதேசம் எதுவும் செய்ய வரவில்லை. யாரையும் அவமதிக்கும் எண்ணம் எனக்குக் கிடையாது. எல்லோரையும் மதிக்கிறேன்'' என்றுச் சொல்லிவிட்டுத் தொடர்ந்தான்.

''நமது கோட்டை பல்லவர்களால் முற்றுகையிடப் பட்டிருக்கிறது. இந்த நிலைக்குக் காரணம் அவர்களை நம் கோட்டை வரை அனுமதித்ததுதான். அதைப் பற்றி இனிமேல் பேசிப் பயனில்லை. கோட்டையை முற்றுகையிட்டிருக்கும்

பல்லவர்களின் நோக்கம் நீண்ட காலத்திற்கு முற்றுகையிட்டுக் கொண்டிருப்பது அல்ல. அதனால் அவர்களுக்கு எந்தப் பயனும் இல்லை. கோட்டையைத் தாக்கி நம்மை அழிப்பது ஒன்றுதான் அவர்களது நோக்கம். அதேபோல் நம்முடைய நோக்கம் கோட்டைக்குள்ளேயே முடங்கிக் கிடப்பதல்ல. எனக்குத் தெரிந்து மாதக் கணக்கில் முற்றுகையைத் தாங்கி எதிரியை ஏமாற வைத்தவர் பல்லவ மன்னர் மகேந்திரவர்மர் ஒருவர் மட்டும்தான். அவரைப்போல செயல்பட வேண்டிய நிலைமை நமக்கு இல்லை. அந்த அவசியமும் இல்லை. முற்றுகையிட்டுள்ள எதிரியைத் தாக்கி அழிக்க வேண்டியதுதான் நமது நோக்கம். பல்லவர்கள் நமது கோட்டையின் பலங்களை நன்றாக உணர்ந்து அவற்றை ஒவ்வொன்றாக குறைத்துக் கொண்டு வருகிறார்கள். நேற்று இரவு மட்டும் நாம் விழித்துக் கொள்ளாமல் இருந்திருந்தால் இப்போது இங்கே நாம் பேசிக் கொண்டிருக்க முடியாது. கோட்டையை அவர்கள் பிடித்திருப்பார்கள். இனியும் நமது பலங்களை அழிப்பதற்கு பல்லவர்களுக்கு நாம் வாய்ப்பளிக்கக் கூடாது. அவர்களோடு மோதுவதுதான் சிறந்தது. கோட்டைக்குள் இருக்கும் நமது ஒரு லட்சப் படை இப்படி மோதுவதற்குப் போதுமானது. எதிரி எதிர்பாராத நேரங்களில் நாம் கோட்டைக் கதவுகளைத் திறந்து கொண்டு நமது படைகள் விரைவாக முன்னேறிச் சென்று பல்லவரின் முன்னணிப் படைகளைத் தாக்கிவிட்டு பின்வாங்கிக் கொள்ள வேண்டும். அவர்கள் நம்மைத் தொடர முடியாது. ஏனென்றால் கோட்டை வெட்டை வெளியால் சூழப்பட்டிருக்கிறது. அங்கு வந்தால் மதில் மீதிருக்கும் நமது வீரர்கள் அம்பு மழையைப் பொழிவார்கள். எனவே இரண்டு முறை நாம் கோட்டையை விட்டு வெளியேறி முன்னணிப் படைகளைத் தாக்கினால் பல்லவர் படைக்கு மேலும் சேதாரம் ஏற்படும். அப்படிச் செய்த பிறகு நமது படைகள் கோட்டைகளின் நான்கு புறத்திலும் பகிரங்கமாகவே வெளியேறி பல்லவர் படைகளைத் தாக்கலாம். ஏற்கெனவே சேதாரப்பட்டிருக்கும் பல்லவர் படை நமது தாக்குதலைத் தாங்க முடியாமல் திணறும். சிதறி ஓடும். அல்லது செத்து மடியும்'' என்று சொல்லி முடித்தான்.

''துறவியின் திட்டத்திற்கு மாற்று இருந்தால் யார் வேண்டுமானாலும் சொல்லலாம்'' என்றான் மன்னன்.

''மக்களோடு நாம் வெளியேற்றிய நமது ஐம்பதாயிரம் வீரர்களின் நிலைமை என்ன?'' என்று கேட்டார் உபதளபதி.

''அவர்களைப் பற்றிய கவலை இப்போது நமக்குத் தேவையில்லை. அவர்கள் இல்லை என்றே வைத்துக் கொள்ளலாம்'' என்றான் உதயணன்.

''நமது முதல் திடீர் தாக்குதலை எப்போது தொடங்குவது?''

''இன்று இரவு.''

''நான்கு பக்கங்களிலும் தானே?''

''ஆமாம்.''

உபதளபதிகள் ஒப்புக் கொண்டார்கள்.

மன்னனும் திருப்தியடைந்து தாக்குதலுக்கு ஆயத்தப் படுத்தினான்.

ஒவ்வொரு வாயில் மூலம் பத்தாயிரம் வீரர்களை அழைத்துச் சென்று தாக்கலாம் என்றான் உதயணன்.

ஏற்பாடுகள் தீவிரமாக நடந்து கொண்டிருந்தன.

இதே நேரத்தில் தனியறையில் இருந்த சேனாதிபதி, ''நான் அறைக்குள் இருந்து கொண்டே செயல்படக் கூடியவன். இது உனக்குத் தெரியாது விஜயாதித்தா'' என்று முணுமுணுத்தார்.

விரைவிலேயே செயல்படவும் செய்தார்.

விளைவு பயங்கரமானதாக இருந்தது.

☆☆☆



47 விஜயாதித்தனின் விசனம்

இரவில் எதிர்பாராத தாக்குதலை சாளுக்கியர்கள் மேற்கொள்ளவிருந்த நிலையில் அன்று பகல் கோட்டைக்கு வெளியே திடீரென போர்ப் பேரிகைகள் முழங்கின. கோட்டையின் நான்கு பக்கங்களிலிருந்தும் பல்லவர் படை வெகுவேகமாகக் கோட்டையை நோக்கிப் பாய்ந்து வந்தன. இதைச் சிறிதும் எதிர்பார்க்காத சாளுக்கிய வீரர்கள் அத்தாக்குதலை எதிர்கொண்டனர். மதில் மீதிருந்த வீரர்கள் பல்லவ வீரர்கள் மீது அம்பு மழையைப் பொழிந்தார்கள். தீவாளிகளையும் வேல்களையும் எறிந்தார்கள். மதில் சுவற்றில் பொருத்தப்பட்டிருந்த விற்பொறிகளும் இயக்கப்பட்டு அம்புகளைப் பொழிந்தன. மதில் சுவற்றில் இருந்த துளை மாடங்களிலிருந்தும் அம்புகள் புறப்பட்டன. அதோடு எண்ணெய் கொப்பரைகளும் கொட்டப்பட்டன. பல்லவ வீரர்களோ எதையும் பொருட்படுத்தாமல் தங்கள் கைகளில் இருந்த குறுவாட்களை மதில் மீது எறிந்து கொண்டே முன்னேறினார்கள். சிலர் மரத்தண்டைத் தூக்கிக் கொண்டு வாயிற்கதவுகளை இடித்தார்கள். ஆனால் சாளுக்கியரது அம்புகள் இடைவிடாமல் எய்யப்பட்டதால் அவற்றால் தாக்குண்டு பல்லவ வீரர்கள் பெருமளவில் மண்ணில் சாய்ந்தார்கள்.

இந்நிலையில் மதில் மீது வந்து சேர்ந்தான் உபதளபதியான சிங்கமுகன். அவனுக்கு தன் கண்முன்னே விரிந்த காட்சி நம்ப முடியாததாக இருந்தது. தனது வீரர்களின் அம்புமழையால் ஏராளமான பல்லவ வீரர்கள் வெட்டவெளியில் விழுந்து கிடந்ததைக் கண்ட அவருக்கு ஆச்சரியமாக இருந்தது. எந்த தைரியத்தில் பல்லவர் படை இந்தத் தாக்குதலைத் தொடங்கியது என்பது அவனுக்கு விளங்கவில்லை. பல வீரர் மாண்டுவிட்ட நிலையிலும் மேன்மேலும் வீரர்கள் கோட்டையை நோக்கி வந்து கொண்டிருந்ததையும் கோட்டைக் கதவுகளை இடித்துக்

கொண்டிருந்ததையும் கண்ட சிங்கமுகன் அவர்களை நோக்கி வாணங்களைக் கொளுத்தி வீசும்படி உத்திரவிட்டான். ''இந்தத் துறவி என்னை என்னவென்று நினைத்துவிட்டான்? ஏதோ இந்த இரவு பல்லவர் படைக்குத் சேதாரத்தை உண்டாக்கப் போகிறானாமே! அதை விட நான்கு மடங்கு சேதாரத்தை நான் உருவாக்கிக் காட்டுகிறேன். அதுவும் இப்பொழுதே! துறவி துறவி தான் தளபதி தளபதிதான் என்பதை அவனுக்கு உணர்த்துகிறேன்'' என்று கருவிக் கொண்டு மதில் மீது மேலும் பல வீரர்களை ஏற்றி கற்களைக் கூட பல்லவர் படை மீது எறியச் சொன்னான்.

கோட்டைக் கதவுகளைத் தாக்கியவர்கள் மீது சாளுக்கியர்கள் குறி வைத்து தாக்கியதால் அவர்கள் அனைவரும் மாண்டார்கள். மரத்தண்டுகள் வாயிலுக்கு முன்பாகவே விழுந்து கிடந்தன. சாரிசாரியாய் வந்து மதில் சுவர் மீது பல்லவ வீரர்கள் எறிந்த குறுவாட்கள் மேலே இருந்த பலரைத் தாக்கினாலும் அவர்களின் மரண எண்ணிக்கை குறைவாகவே இருந்தது. ஏறக்குறைய மாலை வரை நடந்தது தாக்குதல். அதற்குப் பிறகு பல்லவர் படை கோட்டையை தாக்குவது நின்றுவிட்டதால் சிங்கமுகன் வெட்டவெளியில் தெரிந்த ஒரு வீரனையும் விடாமல் வீழ்த்தச் செய்தான். கோட்டையின் நாற்புறமும் மண் தெரியாதவாறு வீரர்களின் சடலங்கள் மூடியிருந்தன. கண்ணுக்கு எட்டியவரை வாய்க்காலில் நீர் ஓடுவது போல சடலங்களிலிருந்து வெளிப்பட்ட குருதி ஓடிக் கொண்டிருந்தது.

பெரும் நாசத்தை விளைவித்து விட்டக் குதூகலத்தில் வெற்றித் தாரைகளை முழங்கச் செய்தான் சிங்கமுகன். இந்த நிலையிலும் மன்னனும் அங்கே வந்து சேர்ந்ததால் மீசையை முறுக்கிவிட்டுக் கொண்ட சிங்கமுகன் ''பார்த்தீர்களா மகாராஜா! கண்ணுக்கெட்டிய வரை பல்லவ எதிரிகள் மாண்டு கிடப்பதைப் பார்த்தீர்களா? இதைவிடவா பெரிய சேதத்தை அந்தத் துறவி உண்டாக்கிவிட முடியும்? பல்லவர் சேனையில் பாதி அழிந்துவிட்டது மகாராஜா. மீதி உள்ளவர்களை அழிப்பது பெரிய காரியமல்ல'' என்றான் பரவசத்துடன்.

மன்னனுக்கு என்ன சொல்வது என்று விளங்கவில்லை.

''பல்லவர்கள் எதற்கு இப்படியொரு முட்டாள் தனமான தாக்குதலில் ஈடுபட்டார்கள்?'' என்று தனக்குத்தானே கேட்டுக் கொண்டான்.

அதற்கு விடை சொல்வதுபோல் மதில் மீது வந்து அமர்ந்தது ஒரு குரங்கு.

''குரங்குச் செய்தி என்னவென்பதைப் பார்'' என்றான் மன்னன்.

சிங்கமுகன் குரங்கிடம் சென்று காலைத் தொட்டான். காலில் ஓலை எதுவுமில்லை. காலைத் தொட்டதால் கோபப்பட்ட குரங்கு சிங்கமுகனின் தோளைக் கடித்துவிட்டுத் தாவி ஓடியது.

'ஹா' என்று அலறிய சிங்கமுகன், ''மகாராஜா! குரங்கு என்னைக் கடித்துவிட்டது'' என்றான்.

''அது இருக்கட்டும். ஓலை எங்கே?'' என்று கேட்டான் மன்னன்.

''ஓலை எதுவும் இல்லை.''

''ஏன்?''

''குரங்கு ஓடிவிட்டது.''

''ஓலையோடு ஓடிவிட்டதா?''

''அது ஓலையைக் கொண்டு வரவில்லை.''

''குரங்கின் மூலம்தானே ஓலை வரும்?''

''அது சேனாதிபதியின் வழக்கம்.''

மேற்கொண்டு எதுவும் பேசாத மன்னன் அரண்மனைக்குச் சென்றான்.

அங்கே உதயணன் இல்லை.

''எங்கே?'' என்றான்.

''ஆசிரமத்திற்குப் போய் விட்டார்.''

''போய் கூப்பிடு.''

''சிறிது நேரத்தில் தானே வருவதாகவும் தொந்தரவு செய்ய வேண்டாம் என்றும் சொல்லிவிட்டுச் சென்றார்.''

''உடனே கூப்பிடு.''

அப்போது மன்னன் பார்வை சேனாதிபதி இருந்த அறைப் பக்கம் சென்றது.

அறையைத் திறக்கும்படி கட்டளையிட்டான்.

உள்ளே சேனாதிபதி படுத்திருந்தார்.

மன்னனைக் கண்டதும் எழுந்தார்.

''மகாராஜா, இப்போதும் சொல்கிறேன். உதயணனை நம்பாதீர்கள். தங்களை நம்ப வைத்து கழுத்தறுக்கிறான்'' என்றார்.

''நீங்கள் மட்டுமென்ன?'' என்று கேட்டான் மன்னன்.

''மகாராஜா, எனது செயல்களுக்காக என்னை எப்படி வேண்டுமானாலும் தண்டியுங்கள். எனக்குக் கவலையில்லை. ஆனால் உதயணனை மட்டும் நம்பாதீர்கள். அவன் ஆபத்தானவன். அதோடு தற்போது நடந்த போரில் மாண்டவர்கள் அனைவரும் நம்மவர்கள். பல்லவர் ஒருவர் கூட கிடையாது.''

இதைக் கேட்டு அதிர்ச்சியடைந்த மன்னன், ''என்ன உளறுகிறீர்கள்?'' என்று கேட்டான்.

''உளறவில்லை மகாராஜா. மக்களோடு மக்களாக நாம் வெளியேற்றிய ஐம்பதாயிரம் படை வீரர்கள்தான் வெளியே மாண்டு கிடக்கிறார்கள்.''

''அதெப்படிச் சொல்கிறீர்கள்?''

''பட்டப் பகலில் கோட்டை நன்றாக விழித்திருக்கும் நேரத்தில் கோட்டையைத் தாக்குவதற்கு யாராவது முன் வருவார்களா? அதோடு இதுவரை தந்திரமாகவே செயல்பட்ட பல்லவர்கள் முட்டாள்தனமாகத் தாக்குவார்களா? அன்றைக்கு சாளுக்கிய வீரர்கள் அகழியைத் தூர்க்கப் போவதாகச் சொல்ல பல்லவர்களை அனுப்பி ஏமாற்றினார்கள். இன்று பல்லவர்களை அனுப்புவதுபோல் சாளுக்கியர்களை அனுப்பியிருக்கிறார்கள். அதை அறியாமல் நம்மவர்களை நாமே வீழ்த்திவிட்டோம்.''

''இது எப்படி உங்களுக்குத் தெரிந்தது?''

''குரங்கின் மூலம்தான்.''

''என்ன குரங்கின் மூலமா? அதனிடம் ஓலை ஏதுவுமில்லை என்றல்லவா சொன்னான் சிங்கமுகன்?''

''குரங்கு ஓலையை என்னிடம் கொடுத்துவிட்ட பிறகு கோட்டை மதிலுக்குப்போய் அமர்ந்தது போலிருக்கிறது.''

''அதனால்தான் ஓலைக்காக அதன் காலைத் தொட்ட சிங்கமுகனைக் கடித்துவிட்டதா?''

''இருக்கலாம் மகாராஜா.''

''உங்களுக்கு ஓலையை குரங்கு எப்படிக் கொடுத்தது?''

''அறையில் இருக்கும் ஜன்னலின் மூலம்தான்.''

மன்னன் மிகவும் கொதித்துப் போயிருந்தான்.

''குரங்கு கொண்டு வந்த ஓலை எங்கே?''

கொடுத்தார் சேனாதிபதி.

''விஜயாதித்தா. உனது ஐம்பதாயிரம் வீரர்களை உன்னிடமே அனுப்புகிறேன். பெற்றுக் கொள்'' என்று எழுதியிருந்தார் பல்லவ சேனாதிபதி பகதத்தர்.

ஒரு கணம் யோசித்த மன்னன் சேனாதிபதியை அறையிலேயே வைத்துப் பூட்டிவிட்டு தனது அறைக்கு வந்தான்.

'துரோகம் செய்த சேனாதிபதியை அறைக்காவலில் வைத்துவிட்டு உதயணனை ஏற்றோம். அவனால் விஷயங்களை முன்கூட்டியே ஊகிக்க முடிகிறது என்று மகிழ்ந்து ஆலோசனை அவைக்கும் அழைத்தோம். இப்போது நமது வீரர்கள் ஐம்பதாயிரம் பேர் அழிந்ததை அவனால் ஊகிக்க முடிய வில்லையே! அதேசமயம் பூட்டப்பட்ட அறைக்குள் இருந்து கொண்டே விவரத்தை அறிகிறாரே சேனாதிபதி! இருவரில் யார் வல்லவர்?' என்று கேட்டுக் கொண்ட மன்னன், ''துறவியை விசாரித்துவிட்டு பிறகு முடிவிற்கு வருவோம்'' என்று முடிவு செய்தான்.

உதயணன் காவலர்களால் அழைத்துவரப்பட்டு நிற்க வைத்ததும் அவன் சற்றே அசதியடைந்தவனாய், ''மகாராஜா, நான் தான் சிறிது நேரத்தில் வந்துவிடுவதாகச் சொல்லியிருந்தேனே அதற்குள் ஏன் அழைத்து வரச் சொன்னீர்கள்?'' என்று கேட்டான்.

''மகாராஜா அழைத்தால் உடனே வரவேண்டியது குடிமகனின் கடமை'' என்றான் மன்னன்.

''நான் வரமுடியாது என்று சொல்ல முடியவில்லையே மகாராஜா.''

''அப்படி என்ன தலைபோகிற வேலை உனக்கு?''

''என் தலை போகிற விஷயமல்ல மகாராஜா. தங்கள் தலையைப் பற்றிய விஷயம்.''

''என் தலையைப் பற்றியா? என்ன உளறுகிறாய்?''

''மகாராஜாவின் தலைக்கு ஆபத்து நேரக்கூடாது என்று ருத்ர யாகம் நடத்திக் கொண்டிருந்தேன். தாங்கள் அழைத்ததால் பாதியில் நின்றுவிட்டது.''

''உதயணா, இது யாகம் செய்ய வேண்டிய நேரமில்லை.''

''இல்லை மகாராஜா, தலை தப்ப வேண்டுமென்றால் முன்கூட்டியே செய்ய வேண்டுமே தவிர தலை போன பின்பு நடத்த முடியாது.''

''நீ செய்யும் யாகத்தில்தான் என் தலை தப்புமா? அது உண்மையானால் படை எதற்கு? போர் எதற்கு?''

''நான் சொன்னதின் பொருள் அதுவல்ல மகாராஜா, நாடு என்றிருந்தால் போர் வரும். அதற்காகப் படை அவசியம் வேண்டும். இருப்பினும் தெய்வ அருளை கூடவே நாடுவது அவசியம்தான். மனித முயற்சியோடு மகேசன் அருளும் சேரும்போது விளைவு நல்லதாக இருக்கும்.''

''உன் யாகம் தடைபட்டுவிட்டதால் என் தலை போய்விடுமா?''

''இதற்கு பதில் சொல்ல என்னால் இயலாது மகாராஜா. என்னை எதற்காக அழைத்தீர்கள்?''

''பிற்பகலில் நடந்த போரைப் பற்றி உனக்கு ஏதாவது தெரியுமா?''

''தெரியாது.''

''வெளியுலகத்தை அறியாமலேயே யாகத்தில் மூழ்கி யிருந்தாய் போலிருக்கிறது.''

''யாகங்கள் அப்படித்தான் நடக்க வேண்டும்.''

''உதயணா! சாளுக்கிய வீரர்கள் ஐம்பதாயிரம் பேர் மாண்டுவிட்டார்கள். அதுவும் நம் வீரர்களாலேயே தாக்கப்பட்டு இறந்துவிட்டார்கள்.''

''நீங்கள் கோட்டையை விட்டு வெளியேற்றிய படை வீரர்களாக இருப்பார்கள்.''

''அதெப்படிச் சொல்கிறாய்?''

''கோட்டைக்குள் இருப்பவர்களில் ஐம்பதாயிரம் பேர் நமது வீரர்களாலேயே கொல்லப்படுவதற்கு வாய்ப்பில்லை.''

''இந்த அழிவை ஏன் உன்னால் ஊகிக்க முடியவில்லை.''

''அவசியம் இல்லாததால் ஊகிக்கவில்லை.''

''அவசியம் இல்லையா?''

''மகாராஜா, ஆலோசனை அவை நடந்தபோதே ஓர் உபதளபதி இந்த ஐம்பதாயிரம் வீரர்களைப் பற்றிக் கேட்டார். அவர்களைப் பற்றிக் கவலைப்பட வேண்டாம் என்றும் அவர்களைக் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டாம் என்றும் சொன்னேன். ஆகவே அவர்களைப் பற்றிய ஊகத்தில் இறங்கவில்லை.''

''ஐம்பதாயிரம் வீரர்கள் மாண்டு போனது உனக்குச் சாதாரணமானதாக இருக்கிறதா?''

''ஐம்பதாயிரம் வீரர்களை நீங்கள் வெளியேற்றியபோது தாங்கள் என்ன நினைத்தீர்கள்?''

''அனுப்பச் சொன்னது ஸ்ரீராம புண்ணிய வல்லபர்.''

''அவரேதான் பின்னால் அப்படி அனுப்ப வேண்டாம் என்று சொன்னார். ஓலை அனுப்பினார்.''

''சேனாதிபதிதான் அந்த ஓலை எனக்குக் கிடைக்காதபடிச் செய்துவிட்டாரே!''

''அதற்கு நான் என்ன செய்வது? அவர் ஆபத்தானவர் என்பதால்தான் அவரது கையையும் வாயையும் கட்டினேன். நீங்கள் தான் விடுவிக்கச் சொல்லிவிட்டீர்கள்.''

உதயணனின் பேச்சு திமிர் பிடித்த பேச்சு போல் தோன்றினாலும் சரியானதாகத்தான் தோன்றியது.

''உன் திட்டம்தான் என்ன?''

''நான் சொன்ன அதே திட்டம்தான்.''

''இரவில் திடீர் தாக்குதல் செய்யும்படிச் சொன்னாயே அதுவா?''

''ஆம். இப்போது மாண்டது வெளியே இருந்த நமது வீரர்கள்தான். அவர்களது உதவியை நாம் எதிர்பார்த்துக் கொண்டிருக்கவில்லை. காலையில் இருந்த நிலையில்தான் நாம் இருக்கிறோம்.''

''இன்றிரவு எப்படி முடியும்? வெளியில் தான் ஒரே சடலமாய் இருக்கிறதே.''

''அவை அப்புறப்படுத்தும்வரை இருதரப்பினரும் எதுவும் செய்ய முடியாது. இறந்தவர்கள் நமது வீரர்களாதலால் சடலங்களை அகற்றி தகனம் செய்யும் காரியத்தை நாம் தான் செய்ய வேண்டும். இதற்கு எதிரிகள் தடை செய்ய மாட்டார்கள். அந்த வேலை முதலில் முடியட்டும். நமது தாக்குதலை நாளை இரவு வைத்துக் கொள்ளலாம்.''

இப்படிச் சொல்லிவிட்டு, ''நான் புறப்படட்டுமா மகாராஜா?'' என்று கேட்டான் உதயணன்.

விஜயாதித்தனுக்கு ஒரு மாதிரியாகிவிட்டது. ஐம்பதாயிரம் வீரர்கள் ஏற்கெனவே துங்கபத்திரை போரின் போதும், விஸ்வபுரம், வாதாபி போர்களின் போதும் இறந்துவிட்ட நிலையில் தற்போது வேறு ஐம்பதாயிரம் வீரர்கள் மாண்டு போனது பெரும் நஷ்டமாக இருக்க, உதயணனோ இதையெல்லாம் ஒன்றுமில்லை என்பது போல பேசியது அவனுக்கு எரிச்சலைத் தந்தது. இருந்த இரண்டு

லட்சம் வீரர்களில் பாதி வீரர்கள் அழிந்துவிட்டது எப்படிப் பார்த்தாலும் பேரிழப்புதான் என்று சொல்லியது அவன் மனம்.

'உதயணனை அளவுக்கு அதிகமாக எடை போட்டு விட்டோமா?' என்று தோன்றியது அவனுக்கு. நாளைக்கு தோல்வி என்று ஒன்று வருமானால் உலகம் தன்னைத்தான் தூற்றுமே தவிர ஆசிரமத்தில் அனாதையாக இருக்கும் இந்த இளம் துறவியைத் தூற்றாது என்பதை உணர்ந்த அவன் 'எதற்கும் நாளை இரவு போரைப் பார்த்துவிட்டு முடிவெடுக்கலாம்' என்றுத் தீர்மானித்துக் கொண்டான்.

இதற்கிடையில் கோட்டைத் தளபதி தனது வீரர்களை அனுப்பி கோட்டைக்கு வெளியே வீர மரணமடைந்த சாளுக்கியர் உடல்களை கழுகு முதலிய பறவைகள் நெருங்குவதற்கு முன்பு குவியல் குவியல்களாக வைத்து தகனம் செய்தனர். இதற்குப் பல்லவ வீரர்கள் தடை செய்யாததோடு உதவியும் செய்தார்கள்.

அவ்வாறு இருதரப்பு வீரர்களும் போரை விட மகத்தான காரியத்தில் ஈடுபட்டிருந்தபோது சேனாதிபதியின் சகா ஒருவன் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும்போதே பல்லவ வீரன் ஒருவனை அணுகி, ''நாளை இரவு பல்லவர் மீது திடீர் தாக்குதல் நடைபெறப் போகிறது. சேனாதிபதி தெரிவிக்கச் சொன்னார்'' என்றான்.

விரைவிலேயே அந்தச் செய்தி பல்லவர் சேனாதிபதியை அடைந்தது.

''நாம் ஒன்று நினைத்தால் வேறொன்று நடக்கிறது'' என்று சொன்ன பல்லவ இளவரசன், ''இது உண்மையாக இருக்குமா?'' என்று கேட்டான்.

''பொய்யாக இருப்பதற்கு காரணம் இல்லை இளவரசே. நமது படை எண்ணிக்கையை எதிரி குறைக்க நினைப்பது சகஜம்தான். அதற்கு இரவில் திடீர் தாக்குதல் தான் சரியானது. நாம் கூட அப்படிச் செய்தோம். இதில் கவனிக்க வேண்டிய விஷயமே வேறு. இந்தச் செய்தியை சாளுக்கிய சேனாதிபதி எதற்காக நமக்கு அனுப்ப வேண்டும்? சேனாதிபதி இப்படிக் காட்டிக் கொடுப்பது விசித்திரமில்லையா?'' என்றார் சேனாதிபதி.

''சேனாதிபதிக்கும் மன்னன் விஜயாதித்தனுக்கும் கருத்து வேற்றுமை உண்டாகியிருக்கும்'' என்றான் இளவரசன்.

''வெறும் கருத்து வேறுபாடு இப்படிக் காட்டிக் கொடுக்கும் அளவிற்கு வராது இளவரசே. சேனாதிபதிக்கு எதாவது சேதார்த்தை

மன்னன் உண்டாக்கியிருக்க வேண்டும். அப்படி நடந்திருந்தால்தான் சேனாதிபதி இந்த அளவிற்குத் துணிய முடியும். அப்படித் துணிந்து நமக்குக் காட்டிக் கொடுக்கிறார் என்றால் நம்மிடமிருந்து அவர் எதையாவது எதிர்பார்ப்பார் என்று தோன்றுகிறது. அதோடு அவரது இடத்தில் வேறு யாரோ ஒருவன் வந்திருக்க வேண்டும். அகழியைத் தூர்த்துவிட்டு மதிலோரமாக நின்ற நமது படைகளைத் தாக்கியது முதல் நாளைய இரவு தாக்குதல் வரை அவனது யோசனைகளாகத்தான் இருக்க வேண்டும்.''

''உண்மைதான் சேனாதிபதி. நாளைய இரவு நேர திடீர் தாக்குதலை எப்படி எதிர்கொள்வது?''

சேனாதிபதி அருகில் இருந்த உதயசந்திரனைப் பார்த்து, ''நீதான் சொல்லேன்?'' என்றார்.

''இப்போது நிலவுகிற நிலைமையை வைத்துச் சொல்வதென்றால் ஒன்றைச் சொல்ல முடியும் சேனாதிபதி. இன்று அமாவாசை. இரவில் கும்மிருட்டு இருக்கும். நமது படைகளை இருட்டில் மெதுவாக நகர்த்தி நான்கு புறங்களிலும் கோட்டை வாயிலுக்கு இரு பக்கங்களிலும் தூர்ந்து போன அகழியின் மேல் நிறுத்தலாம். சாளுக்கியர் படைகள் கோட்டைக் கதவைத் திறந்து கொண்டு திடீர் தாக்குதலுக்கு முயலும்போது நாம் பக்கவாட்டில் தாக்கலாம்'' என்றான் உதயசந்திரன்.

''சரியான திட்டம்தான். ஆனால் அதற்கு கோட்டைக்குள் இருக்கும் அறிவாளி அனுமதிப்பானா என்பது தெரியவில்லை. இரவு வரட்டும்'' என்றார் சேனாதிபதி.

இரவும் வந்தது.

உதயசந்திரனை அழைத்து கோட்டைப் பகுதியைச் சுட்டிக்காட்டி ''பார்த்தாயா?'' என்று கேட்டார்.

''எதைப் பார்க்கச் சொல்கிறீர்கள்?''

''கோட்டைச் சுவற்றில் நான்கு இடங்களில் காவல் கூடங்கள் உயரமான நிலையில் இருப்பதைப் பார்.''

''தினமும்தான் பார்க்கிறேன்.''

''ஆனால் இன்றைக்கு ஒரு வித்தியாசம் இருக்கிறது.''

''வித்தியாசமா?'' என்று கேட்ட உதயசந்திரன், ''ஆமாம் சேனாதிபதி. இத்தனை நாட்களாக காவல் கூடங்கள் இரவில்

இருண்டு கிடந்தன. இன்று அவற்றில் விளக்குகள் காணப்படுகின்றன'' என்றார்.

''எதற்காக இந்த மாற்றம்?''

''காவல் கூட விளக்குகளின் ஒளி திறந்த வெளியில் விழும். நமது படை கோட்டையை நோக்கி நகர்ந்தால் அவர்களுக்குத் தெரிந்துவிடும்.''

''ஆமாம். ஆகவே உன் திட்டம் நிறைவேறாது. நான் சொல்வதைக் கேள்'' என்று சொல்லி தன் திட்டத்தைச் சொன்னார்.

திட்டத்திற்கான ஆயத்தங்களை உடனடியாகச் சிறு கொம்பொலிகளின் மூலம் அனைத்துப் படைவீரர்களுக்கும் தெரிவித்தான் உதயசந்திரன்.

அதை அங்கீகரிப்பது போல் காவல் கூட விளக்குகள் அணைந்தன.

கோட்டை இருளில் மூழ்கியது.

☆☆☆



48

மீண்டு சேனாதியதி

இதே நேரத்தில், ''வாருங்கள் மன்னவா'' என்று கூறி மன்னனையும் அழைத்துக் கொண்டு கோட்டை மதிலுக்கு வந்தான் உதயணன்.

அருகே நின்ற கோட்டைத் தளபதியிடம், ''உபதளபதி சிங்கமுகன் இல்லையா?'' என்று கேட்டான்.

''சிங்கமுகனை குரங்கு கடித்துவிட்டது. தோள்பட்டையை அசைக்க முடியாமல் படுத்திருக்கிறார்'' என்றார் கோட்டைத் தளபதி.

''இதை ஏன் சொல்லவில்லை என்னிடம்.''

''மகாராஜாவுக்குச் சொல்லிவிட்டோம். கண்ட துறவிகளுக் கெல்லாம் சொல்ல வேண்டிய அவசியம் எனக்கில்லை.''

''ஏன் எதற்கெடுத்தாலும் கோபித்துக் கொள்கிறீர்கள்? என்னிடம் சொல்லியிருந்தால் உரிய சிகிச்சையை செய்திருப்பேன். உபதளபதி இப்போது எழுந்து நடமாடியிருப்பார்.''

''மந்திரம் செய்வீர்களோ?''

''ஆயுர் வேத சிகிச்சையை செய்வேன். அதற்கு மிஞ்சிய வைத்தியம் கிடையாது. அதைவிடுங்கள். தற்போதைய தாக்குதலுக்கு ஆயத்தம் செய்தாகிவிட்டதா?''

''ஆம்.''

''எதிரிகள் யாரும் சுவற்றுப் பக்கம் வரவில்லை அல்லவா?''

''சந்தேகமிருந்தால் நீங்களே எட்டிப்பார்த்துக் கொள்ளலாம்.''

உதயணனுக்கு கோட்டைத் தளபதியிடம் பேசவே வெறுப்பாக இருந்தது.

எனவே மன்னரிடம், ''மகாராஜா, எதிரிகள் யாரும் வரவில்லை. எனவே காவற்கூட விளக்குகளை அணைத்து விடலாம்'' என்றான்.

மன்னன் அருகில் இருந்த உபதளபதி குண்டோதரனிடம் சைகை காட்டியதும் அவன் அசைந்து வீரர்களிடம் சைகை செய்தான். சில நிமிடங்களில் காவற் கூட விளக்குகள் அணைந்தன.

''மன்னவா! கோட்டை வாசல் கதவு திறக்கட்டும். முதலாவதாக யானைகளை அனுப்புங்கள். அவற்றுக்குப் பின்னால் பத்தாயிரம் வீரர்கள் சத்தமில்லாமல் செல்லட்டும். வெட்ட வெளி பகுதியைத் தாண்டியதும் வீரர்கள் விசிறி போல் விரிந்து பல்லவர் படையின் முன்னணி வீரர்களைத் தாக்கட்டும். அவர்களோடு சேர்ந்து யானைகளும் தாக்கட்டும். பதில் தாக்குதல் தொடங்குவதற்குள் படைகள் பின் வாங்கி கோட்டைக்குள் வந்துவிட வேண்டும். இது கோட்டையின் நாற்புறமும் நடக்க வேண்டும்'' என்றான் உதயணன்.

ஒரு துறவியின் பேச்சைக் கேட்டு நடப்பது விஜயாதித்தனுக்கு கசப்பாக இருந்தது.

இருப்பினும் வேறு வழியில்லாமல் கட்டளைகளை பிறப்பித்ததும் கோட்டை வாயில்கள் சத்தமில்லாமல் திறக்கப் பட்டன. முதலில் யானைகள் பத்து வெளியே சென்றன. அவற்றின் மீதிருந்த பாகர்கள் அவற்றைப் பக்குவமாக இயக்க அதற்குப் பின்னால் பாம்பு போல படை வீரர்கள் சென்றார்கள்.

அதேசமயம் -

பல்லவ படையில் இருந்த சேனாதிபதி திடீரென தரையில் படுத்து காதை தரையில் அழுத்தினார்.

பிறகு எழுந்து ''இளவரசே, தரையில் பலமான அதிர்வுகள் கேட்கின்றன. சாளுக்கிய வீரர்கள் யானைகளை முன்னே அனுப்பி பின்னால் வருகிறார்கள் போல் இருக்கிறது. நமது படையின் முன்பக்கம் ஏற்கெனவே விசிறி போல் விரிந்திருக்கிறது. எனவே முன்னால் வரும் யானைகளின் மீது அம்புகளை எய்தால் அவை அத்தாக்குதலுக்கு தாக்குப்பிடிக்க முடியாமல் திரும்பிச் செல்லும். சாளுக்கிய வீரர்களையே தாக்கும். அந்த நேரத்தில் நாமும் தாக்கினால் சாளுக்கிய வீரர்கள் அழிவார்கள்'' என்றார்.

அவரது யோசனை இதர உபதலைவர்களுக்கு கொம்பொலி மூலம் உணர்த்தப்பட்டது.

தன்னுடன் இருந்த வீரர்களைப் பார்த்து, ''வீரர்களே! யானைகளின் மீது அம்புகளை எய்து அவை திரும்பும்போது

பந்தங்களை ஏந்திப் பிடியுங்கள். அப்போதுதான் சாளுக்கிய வீரர்களைத் தாக்குவதற்குச் சரியாக இருக்கும்'' என்றார்.

பல்லவ சேனாதிபதியின் எதிர்பார்ப்பு, கணக்கீடு, திட்டமிடுதல், செயல்படுத்தல் ஆகிய எல்லாமே மிகவும் சரியாக இருந்ததால் சாளுக்கியர் எதிர்பாராத விளைவே உண்டாயிற்று.

யானைகளின் மீது அம்புகளை எய்ததும் அவைப் பெரிதாகப் பிளிறியது அப்பிராந்தியத்தையே கலக்குவதாக இருந்தது. தாக்குதலை எதிர்த்து முன்னேற முடியாமல் போன யானைகள் திரும்பி ஓடலாயின. அம்புகள் தாக்குதலால் அவஸ்தைக் குள்ளான அவை சாளுக்கியர்கள் மீதே மோத வேண்டியதாயிற்று. அப்படித் திரும்பி ஓடியும் காலில் பட்டவர்களை மிதித்தும் துதிக்கையில் தூக்கி விசிறியும் துவம்சம் செய்தன யானைகள். அதேசமயம் பல்லவ வீரர்கள் பலர் பந்தங்களைக் கொளுத்திப் பிடிக்க அந்த வெளிச்சத்தில் பல்லவ வீரர்கள் மேகங்களைப் போல் திரண்டு சாளுக்கிய வீரர்கள் மீது மோதித் தாக்கியதால் சாளுக்கியர்கள் எதிர்பார்த்தபடி சம்பவங்கள் நடக்கவில்லை. யானைகள் கண்டபடி ஓடி துவம்சம் செய்த நிலையில் பல்லவர்கள் பெரும் எண்ணிக்கையில் தாக்கியதால் சாளுக்கிய வீரர்கள் மளமளவென வெட்டுப்பட்டு மாண்டு விழலானார்கள்.

மதில் மேல் புறத்தில் நின்று கொண்டிருந்த உதயணன் யானைகளின் பிளிறல்களைக் கேட்டதும் போர்க்களப் பகுதியில் ஏதோ தவறு நடக்கிறது என்று சந்தேகித்தான். மதில் மீது பந்தங்களை ஏற்றச் சொல்லிவிட்டு அதேசமயம் சாளுக்கிய வீரர்களைப் பின்வாங்கும்படி கொம்புகளை ஊதச் சொன்னான். கொம்புகள் ஊதப்பட்டன. ஆனால் கொம்பொலியின் படி சாளுக்கிய வீரர்களால் பின்வாங்க முடியவில்லை. பல்லவர் தளபதி பேரிகைகளை ஒலிக்கச் செய்து பின்னாலிருந்த குதிரைப் படைகளை முன்னால் கொண்டு வரச் செய்தாராதலால் திடீர் தாக்குதலுக்கு வந்த சாளுக்கிய வீரர்கள் நாற்புறமும் வளைக்கப்பட்டு வதம் செய்யப்பட்டார்கள். பல்லவரது வெற்றித் தாரைகள் முழங்கப்பட்டன. அதைக்கேட்ட உதயணன் கோட்டை வாயிற் கதவுகளை மூடும்படி உத்தரவிட்டான். பல்லவ வீரர்கள் கோட்டையை நெருங்காத வண்ணம் மதில் மேலிருந்த வீரர்களைத் தயார் நிலையில் இருக்கச் சொன்னான். ஆனால் பல்லவ வீரர்கள் யாரும் கோட்டையை நெருங்க முடியவில்லை.

★

போர் முடிந்து ஒரு நாழிகை கழிந்த நிலையில் அரண்மனையில் ஆலோசனை கூடியபோது அங்கே இருந்த அனைவரையும் சகட்டு மேனிக்குத் திட்டினான் விஜயாதித்தன். ''உங்களுக்குப் பதிலாக நாய் நரிகளைப் பயன்படுத்தியிருந்தால் கூட தேவலாம் போலிருக்கிறது. இத்தனை சேதமும் மோசமும் நடந்திருக்காது. நமது வீரமும் விவேகமும் எங்கே போயிற்று என்பது தெரியவில்லை. தொடர்ந்து அடுக்கடுக்காகத் தோல்விகள். சேதாரங்கள்'' என்று பொரிந்து தள்ளினான்.

''தாங்கள் ஒரு துறவியை நம்பியதின் விளைவுதான் இது'' என்றார்கள் உபதளபதிகள்.

''துறவி வருவதற்கு முன்பு மட்டும் என்ன வாழ்ந்தது? துங்கபத்திரை ஆற்றில் எந்தத் துறவி வந்தார்? விஸ்வபுரத்திலும் வாதாபியிலும் துறவிகள் சொற்படிதான் போர் நடந்ததா? உங்கள் கையாலாகாத தனத்திற்குப் போய் துறவியைக் காரணம் சொல்லாதீர்கள்'' என்ற விஜயாதித்தன், ''எத்தனை வீரர்களை அனுப்பினீர்கள்?'' என்று கேட்டான்.

''தங்கள் கட்டளைப்படி ஒவ்வொரு வாயிலிலும் பத்தாயிரம் வீரர்களை அனுப்பினோம். யாரும் திரும்பி வரவில்லை'' என்றார்கள் உபதளபதிகள்.

''மிக்க மகிழ்ச்சி. எல்லோருமாகச் சேர்ந்து கொண்டு நாற்பதாயிரம் வீரர்களை எமலோகத்திற்கு அனுப்பி விட்டீர்கள். இது அவமானகரமானது. வெட்கக்கேடானது'' என்று புழுங்கினான் விஜயாதித்தன்.

''மகாராஜா, திட்டமிட்டது நாங்களல்ல. துறவி'' என்றார்கள் உபதளபதிகள்.

''துறவியும் வாளைத் தூக்கிக் கொண்டு போருக்கு வந்திருக்க வேண்டுமா?'' என்று உபதளபதிகளைப் பார்த்துக் கேட்ட விஜயாதித்தன் துறவியைப் பார்த்து, ''என்ன?'' என்பது போலப் பார்த்தான்.

''மகாராஜா! என் திட்டம் சரிதான். அது தோற்றது வியப்பாக இருக்கிறது. சந்தேகமாக இருக்கிறது'' என்றான் உதயணன்.

''சந்தேகமா? அது என்ன சந்தேகம்?''

''நாம் நடத்த முற்பட்டது திடீர் தாக்குதல். ரகசிய தாக்குதல். அது எதிரிக்கு முன்கூட்டியே தெரிந்திருக்கிறது.''

''உதயணா, தோற்றுவிட்ட பின் இப்படிச் சொல்வது நியாயமா? இந்தச் சந்தேகம் ஆரம்பத்திலேயே வரவில்லையா உனக்கு?''

''ஆரம்பத்தில் சந்தேகம் வந்திருந்தால் என்ன செய்திருப்பேன்? தாக்குதலை வேண்டாம் என்று தவிர்த்திருப்பேன். அப்படிச் சந்தேகம் எதுவும் வரவில்லை. உங்கள் தரப்பினரை முழுவதுமாக நம்பினேன். தோல்வி கிட்டிய பிறகு தான் சந்தேகம் வருகிறது.''

''நம்மவர்களே நம்மைக் காட்டிக் கொடுப்பார்களா? நீ பேசுவது எனக்கு விளங்கவில்லை.''

''நம்மவர்களிடம் தானே துரோகிகள் இருக்கிறார்கள்? தெரியாதா தங்களுக்கு?''

''சேனாதிபதியைச் சொல்கிறாய் போலிருக்கிறது.''

''ஆம்.''

''அவர் பூட்டப்பட்டச் சிறையில் இருக்கிறார்.''

''ஆனால் அவரிடம் குரங்கு செய்தி கொண்டு வந்திருக்கிறது.''

''அதனால்?''

''அவரால் செய்தி அனுப்பவும் முடியும்.''

''திடீர் தாக்குதல் குறித்து எதிரிகளுக்கு அவர் செய்தி அனுப்பியிருப்பார் என்கிறாயா?''

''சந்தேகப்படுகிறேன்.''

''குரங்கு மூலம் செய்தி அனுப்ப வாய்ப்பில்லை.''

''மனிதக் குரங்கு மூலம் அனுப்பியிருக்கலாம்.''

''மனிதக் குரங்கா?''

''மகாராஜா! நேற்று நமது ஐம்பதாயிரம் வீரர்கள் மாண்டு விட்ட பிறகு அவர்களை தகனம் செய்ய நமது வீரர்கள் பலர் போனார்கள். பல்லவ வீரர்களும் உதவினார்கள். நம்மவரோடு சேனாதிபதிக்கு வேண்டிய யாராவது போயிருக்கலாம். பல்லவர்களுக்கு செய்தி சொல்லியிருக்கலாம்.''

''இந்தச் சந்தேகம் முதலிலேயே உனக்கேன் வரவில்லை?''

''மகாராஜா! சேனாதிபதி பற்றியும் குரங்கைப் பற்றியும் தங்களுக்கும் தெரியும். தாங்கள் கூடச் சந்தேகப்பட்டிருக்கலாம். ஏன் சந்தேகிக்கவில்லை?''

''இது விதண்டாவாதம்.''

''இல்லை மகாராஜா. நான் உதவ வருகிறேன். அனைவரது எதிர்ப்புக்கிடையில் திட்டத்தைச் சொல்கிறேன். இடையில் விபரீதம் நடக்கிறது. மறுநாள் தாக்குதலைச் செய்யலாம் என்று திட்டத்தை மாற்றிச் சொல்கிறேன். தாக்குதலுக்கு முன் நேரிலேயே வந்து நிலைமைகளை கவனித்துவிட்டு உபதளபதி குண்டோதரனிடம் வினவவும் செய்கிறேன். அவர் கேலியாகப் பேசுவதை பொருட்படுத்தாமல் செய்ய வேண்டியவற்றைப் பற்றிச் சொல்கிறேன். ஆக ஒவ்வொரு படியிலும் ஏறி வருகிறேன் நான். ஒரு படியாவது நீங்கள் அல்லது உபதளபதிகள் ஏறக் கூடாதா?''

''நீ சொல்வது விளங்கவில்லை?''

''ஆரம்பத்திலேயே ஏன் சந்தேகிக்கவில்லை என்று என்னைக் கேட்டீர்களே! அச்சந்தேகம் உங்களுக்கோ இவர்களுக்கோ வரக்கூடாதா? எல்லாமும் எனக்குத்தான் வர வேண்டுமா?''

விஜயாதித்தனுக்கு என்ன பேசுவதென்று விளங்கவில்லை.

சிறிது நேரம் கழித்து அவனே தொடர்ந்து, ''உதயணா, ஸ்ரீராம புண்ணிய வல்லபர் சொன்னார் என்று அழைக்காமல் வந்து நின்றவன் நீ. இன்று வரை வாதங்களில் வென்று நிற்கிறாயே தவிர போரில் எந்த வெற்றியையும் சாதித்துத் தரவில்லை. நீ வந்ததற்குப் பிறகு நடந்தவற்றை யோசித்துப் பார். நேற்று ஐம்பதாயிரம் சாளுக்கியர் மரணம். இன்றைக்கு நாற்பதாயிரம் பேர் மரணம். கோட்டைக்குள் எஞ்சியிருப்பது அறுபதாயிரம் வீரர்கள்தான். எதிரியின் படை எண்ணிக்கையோ ஒரு லட்சத்திற்கு மேல். புரிகிறதா நம் நிலைமை?'' என்று கேட்டான்.

''அஞ்சுவதற்கு அவசியமில்லை மகாராஜா. இன்னும் நாம் தலைமுழுகி விடவில்லை. எதிரியின் படை எண்ணிக்கை அதிகம் என்றாலும் படை எண்ணிக்கை போரின் வெற்றியை நிர்ணயிப் பதில்லை. சாளுக்கியர்களுக்கு இப்போதும் வெற்றியைச் சம்பாதித்துத் தர என்னால் முடியும். ஆனால் தாங்கள் எனக்கு மூன்று நிபந்தனைகளை நிறைவேற்றித்தர வேண்டும்.''

''மூன்று நிபந்தனைகளா? சொல்.''

''நான் ஏற்கெனவே செய்ததுபோல் சேனாதிபதியின் கையையும் வாயையும் கட்டிவிட வேண்டும். யாரும் அணுக முடியாதவாறு அவரைப் பாதாளச் சிறையில் அடைக்க வேண்டும். இது முதல் நிபந்தனை.''

''சொல்.''

''இந்த உபதளபதிகள் அனைவரும் என் கட்டுப்பாட்டில் இயங்க வேண்டும். நான் சொல்வதைச் செய்வேன் என்று எல்லோரும் வாள் மீது ஆணையிட வேண்டும். இது இரண்டாவது நிபந்தனை.''

''சரி.''

''எனக்கு முழு சுதந்திரம் வேண்டும். மன்னர் உட்பட என் கட்டளைகளை ஏற்றுக் கொள்ள வேண்டும்.''

'அரியணையிலாவது நான் அமரலாமா?' என்று கேட்க நினைத்த விஜயாதித்தன் அடக்கிக் கொண்டான்.

அப்போது ஊர்க்காவலன் வந்து வணங்கி நின்றான்.

''என்ன விஷயம்?''

''மகாராஜா. நம் கோட்டைக்கு வரும் குடி நீர் இணைப்பை எதிரிகள் துண்டித்துவிட்டார்கள்'' என்றான் ஊர்க்காவலன்.''

''இதற்கென்ன சொல்கிறாய்?'' என்று உதயணனைப் பார்த்துக் கேட்டான் மன்னன்.

''பதட்டம் வேண்டியதில்லை மகாராஜா. கோட்டைக்குள் தற்போது மக்கள் இல்லை. வீரர்களும் அறுபதாயிரம் பேர்தான் இருக்கிறார்கள். இங்கே இருக்கும் குளங்களிலும் கிணறுகளிலும் நீர் நிரம்ப இருக்கிறது. இப்போதைக்கு இது போதும். நான் கூறியபடி கேட்டால் இரண்டு நாட்களில் எதிரியை வீழ்த்தி விடலாம். குடி நீரையும் பழையபடி பெறலாம்'' என்றான் உதயணன்.

அப்போது நகரக் காவலன் பிரவேசித்து, ''மகாராஜா! ஸ்ரீராம புண்ணிய வல்லபர் காலமாகிவிட்டார்'' என்றான்.

அனைவரும் திடுக்கிட்டார்கள்.

எளிய முறையில் ஸ்ரீராம புண்ணிய வல்லபரின் பூதவுடல் தகனம் செய்யப்பட்டது.

ஒருநாள் கழிந்தது.

உதயணன் கூறிய நிபந்தனைகள் எதுவும் மன்னனுக்கு அறவே பிடிக்கவில்லை. அனைத்தும் அவனுக்குக் கசந்தன.

'இருபது வயது கூட நிரம்பாத பாலகத் துறவியிடம் இதுவரை அடங்கியிருந்ததே அவமானத்திற்குரிய காரியம். அப்படிப்பட்டவனிடம் மன்னன் முதல் அனைவரையும் ஒப்படைத்து அவனது சொற்படி நடப்பது என்பது பெருமைக் குரிய விஷயமல்ல. வரலாற்றில் களங்கத்தை உண்டாக்கக் கூடிய

காரியம். அதோடு அவன் நிபந்தனைகளை விதித்தானே தவிர திட்டம் என்ன என்பது பற்றிச் சொல்லவில்லை. அவனை நம்பி படைகளையும் உபதளபதிகளையும் எப்படி ஒப்படைக்க முடியும்? அவன் உண்மையிலேயே ஸ்ரீராம புண்ணிய வல்லபரால் அனுப்பப்பட்டவன்தானா? வல்லபரும் காலமாகிவிட்ட நிலையில் அவரால் அனுப்பப்பட்டவன் என்பதற்கு என்ன ஆதாரம்? ஒருவேளை இவன் பல்லவ ஒற்றனோ? சேனாதிபதி வார்த்தைக்கு வார்த்தை இவனை நம்ப வேண்டாம் என்று திரும்பத் திரும்பச் சொல்கிறாரே அது உண்மைதானோ?'' என்றெல்லாம் யோசித்துக் குழம்பினான் விஜயாதித்தன்.

அப்போது கோட்டைத் தளபதி வந்து, ''மகாராஜா! பல்லவர் படை முழுவதும் நமது கோட்டையின் கிழக்குப் புறத்தில் திரண்டிருக்கின்றன'' என்றார்.

அதிர்ந்து போன மன்னன், ''இது உண்மையா?'' என்று கேட்டான்.

''ஆம்'' என்றார் கோட்டைத்தளபதி.

அப்போது அங்கே பிரவேசித்த உபதளபதி சிங்கமுகன் ''மகாராஜா, நமது உபதளபதிகள் அனைவரும் துறவிக்குக் கட்டுப்பட முடியாது என்று தீர்மானமாகச் சொல்லி விட்டார்கள்'' என்றான்.

குண்டோதரனும் வந்து, ''துறவியின் ஆணைப்படி படை வீரர்கள் இயங்கத் தயாராக இல்லை'' என்றான்.

மன்னன் ஒரு முடிவுக்கு வந்து சேனாதிபதியை அறையிலிருந்து விடுவித்தான்.

அவனோடு தனிமையில் சந்தித்தான்.

''கோட்டை அபாயமான நிலையில் இருக்கிறது சேனாதிபதி'' என்றான் வருத்தமுடன்.

''நான் ஆரம்பத்திலிருந்து அந்தப் போலித் துறவியை நம்ப வேண்டாம் என்று சொல்லி வந்தேன் மகாராஜா. தாங்களோ அவனைத் தான் நம்பினீர்கள். அவன் சொன்னதையெல்லாம் நம்பினீர்கள். என்னை நம்பவில்லை. அதன் விளைவுதான் இதெல்லாம். அவன் ஸ்ரீராம புண்ணிய வல்லபரின் சீடனல்ல. பல்லவ ஒற்றன். பல்லவர்கள் திட்டப்படி நமது படையை திட்டமிட்டு அழித்து வருகிறான். இப்போதாவது நான் சொல்வதை நம்புங்கள்'' என்றார் சேனாதிபதி. அவரிடம் மன்னனின் மீது கோபமெதுவும் இல்லை. தன்னைத் தனியறையில்

வைத்துப் பூட்டியதற்காக அவர் ஆத்திரப் படவில்லை. அமைதியாகவே பேசினார்.

''உண்மைதான் சேனாதிபதி. உதயணன் என்னைப் பேச்சால் கவர்ந்துவிட்டான். நான் ஏமாந்து போனேன். இரண்டே நாளில் நமது வீரர்கள் தொண்ணூறாயிரம் பேர் மாண்டிருக்கிறார்கள். இனி நாம் வெற்றி பெற வேண்டுமென்றால் மூன்று நிபந்தனைகளை அவனுக்கு நிறைவேற்றித் தர வேண்டுமாம்.''

''என்ன நிபந்தனைகள் மகாராஜா?''

சொன்னான் மன்னன்.

''இவற்றை ஏற்பதைவிட சாளுக்கிய அரியணையை அவனுக்குக் கொடுத்துவிட்டு நாம் தேசாந்திரம் போகலாம். அவன் நிச்சயமாகப் பல்லவ ஒற்றன் என்பது இப்போது உறுதியாகிறது மகாராஜா.''

''சேனாதிபதி, கோட்டைத் தளபதி சற்றுமுன்பு தான் ஒரு தகவலைச் சொன்னார். நமது கோட்டையை முற்றுகையிட்டிருந்த பல்லவப் படைகள் முழுவதும் கிழக்கு வாசற்புரத்தில் கூடியிருக்கிறதாம்.''

''அதுவும் நல்லதுதான் மகாராஜா. தந்திரமாக முறியடிக்க அவர்களே வழி வகுத்துத் தருகிறார்கள். நள்ளிரவில் நமது படைப்பிரிவு இரண்டு பத்தாயிரம் வீரர்களுடன் வடக்கு மற்றும் தெற்கு வாசல் வழியாக வெளியேறி தூரத்தில் போய் காத்திருக்கட்டும். காலையில் நமது மீதமுள்ள நாற்பதாயிரம் வீரர்கள் கிழக்கு வாசலைத் திறந்து கொண்டு அங்கே குழுமியிருக்கும் பல்லவ வீரர்களை தாக்கட்டும். அதேசமயம் தெற்கு மற்றும் வடக்கு பக்கங்களில் இருக்கும் நமது படைகள் பக்கவாட்டத்தில் நெறுக்கினால் பல்லவர் படையில் இடையில் சிக்கி அழியும்'' என்றார் சேனாதிபதி.

அவரது யோசனையை சிங்கமுகனும் குண்டோதரனும் ஏற்றார்கள்.

உரிய ஏற்பாடுகளை உடனே செய்யச் சொன்ன சேனாதிபதி தனது இல்லத்திற்கு வந்து சகாதேவனைச் சந்தித்தார். ''சகாதேவா, இன்று இரவுக்குள் அந்த போலித்துறவி உதயணனைத் தீர்த்துவிடு. ஆசிரமத்தில் இருக்கும் பிரேமாநந்தரையும் விட்டுவிடாதே. இரண்டு கொலைகளும் நடந்தால்தான் என் திட்டம் நிறைவேறும்'' என்று கூறி அனுப்பி வைத்தான்.

பிறகு ஓலை ஒன்றைத் தயாரித்தான்.

''பல்லவ இளவரசர் அவர்களுக்கு சாளுக்கிய சேனாதிபதி வீரகேசரி எழுதுவதாவது - சாளுக்கியர் படையின் திடீர் தாக்குதல் பற்றி நான் செய்தியனுப்பியது உங்களுக்கு தெரிந்திருக்கலாம். சாளுக்கியர் கோட்டையைப் பிடிக்க இன்றைக்கும் உங்களுக்கு அரிய வாய்ப்பு ஒன்றைத் தருகிறேன். கோட்டையின் மேற்கு வாயில் உங்களுக்காக நள்ளிரவில் திறக்கும். உங்கள் படை அந்த வாசலில் நுழைந்தால் தாக்குதல் இருக்காது. ஏனென்றால் இரண்டு படைப்பிரிவுகளை வடக்கு மற்றும் தெற்கு வாசல் வழியாக அனுப்பி வைக்கிறேன். நீங்கள் இரண்டாகப் பிரியுங்கள். ஒரு பிரிவு மேற்கு வாயிலில் நுழைந்து உள்ளே இருக்கும் நாற்பதாயிரம் படைகளை அழிக்கலாம். மற்றொரு பிரிவு வடக்கு மற்றும் தெற்கு வாசல் மூலம் வெளியேறும் இருபதாயிரம் படைகளை அழிக்கலாம். இதற்கு நான் எதிர்பார்க்கும் கைம்மாறு ஒன்றுதான். கோட்டைக்குள்ளே யிருந்து மக்களை வெளியேற்றியபோது என்னைச் சார்ந்த ஆயிரத்து எண்ணூறு வீரர்களையும் அனுப்பியுள்ளேன். இங்கே பொக்கிஷத்தில் இருக்கும் அனைத்து செல்வங்களையும் அவர்கள் மூலம் அனுப்பி விட்டேன். அவற்றை எனக்குத் திருப்பி அனுப்பிவிட வேண்டும். மேற்கு வாசலில் உங்கள் படை நுழையும்போது அவற்றையும் கொண்டு வந்தால் நல்லது. இந்த நிபந்தனையை ஏற்றால் இருவருக்கும் லாபம். சம்மதம் என்றால் வானத்தில் ஒரு வாணத்தை அனுப்பினால் போதும் அறிந்து கொள்வேன்'' என்று எழுதியிருந்தார் சேனாதிபதி.

இந்த முறை ஓலையை குரங்கின் மூலம் அனுப்பாமல் கழுகின் மூலம் அனுப்பினார்.

ஓலை போய் சேர்ந்ததும் பல்லவர் தரப்பிலிருந்து வாணம் ஒன்று வானுக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

சேனாதிபதி சிங்கமுகனின் தலைமையில் பத்தாயிரம் வீரர்களையும் குண்டோதரன் தலைமையில் பத்தாயிரம் வீரர்களையும் வடக்கு மற்றும் தெற்கு வாசல் மூலம் அனுப்பி வைத்தார்.

பிறகு இருபதாயிரம் படைகளை மேற்கு வாசலுக்கு உட்புறம் இரண்டு பக்கங்களில் நிறுத்தி வைத்தார்.

சில நிமிடங்களில் மேற்கு வாசல் வழியாக மெல்ல உள்ளே நுழைந்தது பல்லவர் படை. வீரர்கள் பெரிய பெரிய பெட்டிகளை முதலில் சுமந்து வந்து வீதியொன்றில் அடுக்கினார்கள். சுமார் பத்தாயிரம் வீரர்கள் உள்ளே நுழைந்ததும் மேற்கு வாயிலைச்

சாத்தும்படி உத்தரவிட்ட சேனாதிபதி பத்தாயிரம் பல்லவ வீரர்களைத் தாக்கிக் கொல்லும்படி சங்கை ஊதினார். மதிலுக்கு உட்புறம் இருபக்கங்களிலும் நின்றிருந்த இருபதினாயிரம் சாளுக்கியப் படைகள் மளமளவென்று விரைந்து பல்லவ வீரர்களைத் தாக்கினார்கள். இதை முற்றிலும் எதிர்பார்க்காத பல்லவ வீரர்கள் தட்டுத்தடுமாறி போரிட்டார்கள். ஆனால் அவர்களை விட இருமடங்கு வீரர்கள் சாளுக்கியர் தரப்பில் இருந்ததால் ஒரு பல்லவ வீரனைக் கூட விடாமல் அழித்தார்கள். சேனாதிபதி வெற்றித் தாரைகளை ஊதினான். அங்கே வந்த மன்னனிடம் இறந்து கிடந்த வீரர்களைக் காட்டி ''பார்த்தீர்களா மகாராஜா'' எனது தந்திரத்தின் மூலம் பத்தாயிரம் பல்லவ வீரர்களை வரவழைத்து பரலோகத்திற்கு அனுப்பியிருக்கிறேன்'' என்று பெருமிதத்துடன் கூறினார் சேனாதிபதி.

அப்போது ஒற்றன் ஒருவன் பிரவேசித்து ''மகாராஜா! கிழக்கே இருக்கும் பல்லவர் தரப்பிலிருந்து அம்பு மூலம் இந்தச் செய்தி வந்தது'' என்று சொல்லி ஓலையைக் கொடுத்தான்.

ஓலையை வாங்கிப் படித்தான் மன்னன்.

அவன் முகம் சிவந்தது.

☆ ☆ ☆



49

ராஜா - ராணி

ஓலையைப் படித்த மன்னன் கொதித்துப் போனான்.

அருகில் இருந்த சேனாதிபதியைப் பார்த்து, ''நமது படைகளை வடக்கு மற்றும் தெற்கு வாயில்கள் மூலம் அனுப்பி கோட்டையின் கிழக்கே இருக்கும் பல்லவர் படைகளை பக்கவாட்டில் தாக்கலாம் என்ற திட்டத்தைத்தானே என்னிடம் சொன்னீர்கள்?'' என்று கேட்டான்.

''ஆமாம் மகாராஜா'' என்றார் சேனாதிபதி.

''மேற்கு வாயிலை திறப்பதாகவும் அதன் மூலமாகப் பல்லவ வீரர்களை பிரவேசிக்கும்படியும் எந்த ஒரு திட்டத்தையும் என்னிடம் சொல்லவில்லையே?''

''ஆமாம். மகாராஜா. தங்களிடம் சொல்லாமல் நானாகச் செய்து தங்களிடம் பாராட்டு வாங்க வேண்டும் என்று நினைத்தேன். பாராட்டு கிடைக்கிறதோ இல்லையோ நான் நினைத்தபடி பத்தாயிரம் பல்லவ வீரர்களை இந்த வாயில் மூலம் வரவழைத்து வெட்டிச் சாய்த்துவிட்டேன்.''

''அது சரி, அங்கே நிறைய பெட்டிகள் வந்து சேர்ந்திருப்பது போல் தெரிகிறதே அவை என்ன?''

''தெரியவில்லை மகாராஜா.''

''தெரியவில்லையா? நீங்கள் போரிட்டப் பகுதியில் இவ்வளவு பெட்டிகள் குவிந்திருப்பது உங்களுக்கு எப்படித் தெரியாமல் போயிற்று? இந்தப் பெட்டிகளில் என்ன இருக்கிறது? ஒருவேளை நமது பொக்கிஷ செல்வங்கள் இருக்குமோ?''

வெலவெலத்துப் போனார் சேனாதிபதி.

மன்னன் காவலர்களை அழைத்து அந்தப் பெட்டிகளை உடைத்துப் பார்க்கும்படிக் கட்டளையிட்டான்.

ஆயிரத்துக்கும் மேற்பட்ட பெட்டிகள் உடைக்கப்பட்டன.

அவை அனைத்திலும் வெறும் கற்கள் தான் இருந்தன.

அருகே இருந்த சிங்கமுகன், ''மகாராஜா, இதென்ன முட்டாள்தனமாக இருக்கிறது? வெறும் கற்களை இத்தனைப் பெட்டிகளில் யார் அனுப்பினார்கள்? எதற்கு அனுப்பினார்கள்?'' என்று கேட்டான்.

''சேனாதிபதியைக் கேளுங்கள் பதிலை சொல்வார்'' என்றான் மன்னன்.

சேனாதிபதியின் முகம் வெளுத்துக் கிடந்தது.

''எனக்கெதுவும் தெரியாது மகாராஜா'' என்றார் ஏதோ சொல்ல வேண்டுமே என்று.

மன்னன் சிங்கமுகனைப் பார்த்து, ''சிங்கமுகா! உன் வாளை எடுத்து சேனாதிபதியின் வலது கையைத் துண்டித்துவிடு'' என்றான்.

இதைக்கேட்டு அதிர்ந்து போனச் சிங்கமுகன், ''மகாராஜா, இதென்ன கொடுமை? இவரது கையை நான் ஏன் வெட்ட வேண்டும்?'' என்று அலறினான்.

''குண்டோதரா! நீ வெட்டு'' என்றான் மன்னன்.

''ஐயோ! என்னால் முடியாது. சேனாதிபதியையாவது நான் வெட்டுவதாவது'' என்று ஒதுங்கினான் குண்டோதரன்.

சுற்றிலும் ஒருமுறை பார்த்த மன்னன் ''இங்கு யாராவது இந்தச் சேனாதிபதியின் கையை வெட்ட முன் வருகிறீர்களா?'' என்று கேட்டான்.

யாரும் முன்வரவில்லை.

சிங்கமுகன் மன்னனைப் பார்த்து, ''மகாராஜா! சேனாதிபதியின் கையை எதற்காக வெட்ட வேண்டும்? எங்களுக்குப் புரியவில்லை.'' என்றான்.

''என் அனுமதியில்லாமல் மேற்கு வாயிலைத் திறந்துள்ளார். இது குற்றமல்லவா?'' என்று கேட்டான் மன்னன்.

''மகாராஜா, சேனாதிபதி இவ்வாயிலைத் திறந்தது பகைவர்களைக் கொல்லத்தான். அப்படித் திறந்ததில் பல்லவர்கள் கொல்லப்பட்டிருக்கிறார்கள். இது நமக்கு ஆதாயம். இதற்காகச் சேனாதிபதியின் கையைத் துண்டிப்பது நியாயமல்ல'' என்றான் சிங்கமுகன்.

''இந்த ஓலையைப் பார். பல்லவ இளவரசன் அனுப்பியிருக்கிறான்'' என்று சொல்லி ஓலையைக் கொடுத்தான் மன்னன்.

''விஜயாதித்தா! உன் சேனாதிபதி எனக்கு ஒரு ஓலையை அனுப்பி வைத்தார். மேற்கு வாயிலைத் திறந்து வைப்பதாகவும் அதன் மூலம் பல்லவர் படை உள்ளே நுழைந்து கோட்டைக்குள் இருக்கும் நாற்பதாயிரம் வீரர்களை அழித்து வெற்றி வாகை சூடும்படிச் சொல்லியிருந்தார். அத்தகைய கோழைத்தனமான போரை நான் விரும்பவில்லை. ஆயினும் அவருக்கு ஒப்புக் கொண்டதுபோல் எங்கள் வசம் மிச்சம் மீதியிருந்த சாளுக்கிய வீரர்களை மேற்கு வாசலுக்கு அனுப்பி வைத்தேன். வழக்கம் போலவே கோட்டைக்குள் இருந்த சாளுக்கிய வீரர்கள் நாங்கள் அனுப்பி வைத்தச் சாளுக்கிய வீரர்களை வெறியோடு தாக்கி அழித்துவிட்டார்கள். இனி என்னிடம் சாளுக்கிய வீரர்கள் யாரும் இருப்பில் இல்லை. ஏற்கெனவே உங்களது இரவு நேர திடீர் தாக்குதலை காட்டிக் கொடுத்தவர் அவர்தான். அப்போதே எங்களிடம் எதையாவது எதிர்பார்த்து ஏதாவது செய்வார் என்று எதிர்பார்த்தோம். அதுதான் நடந்தது. மேற்கு வாயில் மூலம் எங்களை அனுமதித்து உங்களை அழிக்க வழிவகுத்த அவர் அப்படி மேற்கு வாயில் மூலம் வீரர்களை அனுப்பும்போது அவர்கள் வசம் உங்கள் பொக்கிஷ செல்வங்களைத் திருப்பி அனுப்பி வைக்கும்படி கேட்டுக் கொண்டிருந்தார். உன் பொக்கிஷ செல்வங்களை அனுப்பி வைத்தவரும் அவர்தான். கோட்டையிலிருந்து மக்களையும் போர் வீரர்களையும் அனுப்பியபோது தனக்கு வேண்டியவர்கள் மூலம் பொக்கிஷச் செல்வங்களை அவர் அனுப்பி வைத்தார். நிச்சயமாக எங்களுக்கு அனுப்பியிருக்க முடியாது. வேறு எதற்காக அனுப்பி வைத்தார் என்பது தெரியாது. எப்படியிருந்தாலும் அவற்றை நாங்கள் கைப்பற்றிவிட்டோம். அவற்றை எங்கள் புரவிப்படையுடன் நேற்று காஞ்சிக்கு அனுப்பிவிட்டோம். நாங்கள் இவ்வளவு தூரம் கஷ்டப்பட்டு எதற்காக வந்தோமோ அதை உன் சேனாதிபதியே எங்களுக்குக் கொடுத்துவிட்டார். அவருக்கு எங்கள் நன்றி. இனி மீதமிருப்பது பல்லவ - சாளுக்கியப் போரும் தலைநகரின் நாசமும்தான். அதற்கு எந்த குறுக்கு வழியோ தந்திரமோ தேவையில்லை என்பதால் தான் எங்களது மொத்தப் படைகளையும் கோட்டையின் கிழக்கு வாசல் முன்னால் கூட்டியிருக்கிறேன். நீ சுத்த வீரன். நேர்வழியை நீயும் விரும்புவாய் என்று நம்புகிறேன். இனி நாம் போர்க்களத்தில் சந்திக்கலாம்.''

- என்றிருந்தது ஓலையில்.

அதைப் படித்ததும், ''மகாராஜா, நான் இந்தச் சேனாதிபதியின் கையை வெட்டுகிறேன். காலை வெட்டுகிறேன். தலையை வெட்டுகிறேன். துண்டு துண்டாக ஆக்குகிறேன்'' என்று பெருங்கோபத்துடன் சொன்னான் சிங்கமுகன்.

''சிங்கமுகா, ஒரு நாட்டின் சேனாதிபதியே இப்படிச் செய்கிறார் என்றால் மன்னன் என்ன செய்ய முடியும்? சேனையை நடத்த வேண்டியவர் சேனையை எதிரியிடம் காவு கொடுக்க முயல்கிறார். நமது பொக்கிஷத்தை அவரே களவாடுகிறார். நம் மதிப்பிற்குரிய ஸ்ரீராம புண்ணிய வல்லபரைக் கடத்திச் சென்று மறைத்து வைத்தார். ஏதோ ஒரு மகா சதியினை திட்டமிட்டுக் கொண்டு செய்யத் தகாத மாபாதகங்களைச் செய்திருக்கிறார். இவரை விசாரித்து தண்டனை வழங்க வேண்டுமா? என் வாளாலேயே வெட்டித் துண்டாக்கலாம் அல்லவா?'' என்று கேட்டான் மன்னன்.

''விசாரணை தேவையில்லை. சித்திரவதை செய்து சேனாதிபதியைக் கொல்ல வேண்டும். எங்களிடம் விடுங்கள்'' என்றான் சிங்கமுகன்.

''சிங்கமுகா! நீ, குண்டோதரன், உபதளபதிகள், நான் எல்லோருமே சேனாதிபதியை நல்லவராகவே நினைத்தோம். ஆனால் ஒரே ஒருவன்தான் அவரைப் பற்றி மிகச் சரியாக கணித்திருந்தான். என்னிடம் சொல்லவும் செய்தான். அவன்தான் இளந்துறவி உதயணன். அவன் கேட்ட நிபந்தனைகளை உதாசீனம் செய்து சேனாதிபதியை விடுவித்து அவரது யோசனையைக் கேட்டேன். ஒருபுறம் நம்மை ஏமாற்றிய அவர் மறுபுறம் இன்று மாலை தனது ஆட்களை அனுப்பி உதயணனைக் கொன்றுவிட்டார்'' என்றான் மன்னன்.

எல்லோரும் அதைக் கேட்டு அதிர்ந்தார்கள்.

மன்னன் காவலர்களை அழைத்துச் சேனாதிபதியை பாதாளச் சிறையில் அடைக்கும்படிச் சொல்லிவிட்டு, ''சிங்கமுகா! நமது படைகளை போருக்கு ஆயத்தப்படுத்து. நாளை வெள்ளி முளைத்ததும் நமது படை கிழக்கு வாசல் மூலமாக வெளியேறி பகைவர் மீது பாயும். ஏற்கெனவே வடக்கு மற்றும் தெற்கு வாசல் மூலமாக வெளியேறிய நமது படைகள் பல்லவர் படையை பக்கவாட்டில் தாக்கும். பார்த்துவிடுவோம் பகைவர்களை'' என்றான்.

அங்கிருந்தோர் அனைவரும் இறந்து கிடந்த சாளுக்கிய வீரர்களின் உடல்களை அகற்றி கோட்டைக்கு வெளியே தகனம் செய்ய முற்பட்டார்கள்.

☆

ஒரு வார காலமாகவே அமைதியைத் துறந்து உறக்கத்தையும் துறந்து துருபிடித்துப்போன வாளைப்போல சோபையற்று போய் நிலா மாடத்தில் நின்றபடி பிறைச் சந்திரனைப் பார்த்துக் கொண்டிருந்த சாளுக்கிய மன்னன் விஜயாதித்தனை தென்றலைப் போல் அணுகிய ராணி, ''பிரபு! என்ன கவலை?'' என்று அன்போடு வினவினாள்.

அவன் எதுவும் பேசாததால், ''பகைவர்களைப் பற்றிய கவலையா?'' என்று அவளே கேட்டாள்.

''சாளுக்கியர்கள் பகைவர்களைக் கண்டு என்று கவலைப்பட்டார்கள் நான் கவலைப்பட? சாளுக்கிய சத்யாச்ரியர் புலிகேசியைக் கண்டு ஹர்ஷவர்த்தனரே அஞ்சியது தெரியாதா உனக்கு?'' என்று கேட்டான் விஜயாதித்தன்.

''பிறகு எதைப் பற்றிய கவலை?''

''கவலை என்பதை விட வருத்தம் என்று சொல்வதுதான் சரியானது. தேவி! நான் என்னை எண்ணி வருத்தப்படுகிறேன்.''

''எதற்காக?''

''மாவீரன் விக்கிரமாதித்த மகாராஜாவின் பேரனான நான் - அஞ்சா நெஞ்சன் வினயாதித்த மகாராஜாவின் புதல்வனான நான் வருத்தப்படுகிறேன். மன்னனாக நடந்து கொள்ளவில்லையே என்பதற்காக வருத்தப்படுகிறேன். மாவீரரான விக்கிரமாதித்தர் பேரறிஞரான ஸ்ரீராம புண்ணிய வல்லபரை போரமைச்சராக வைத்துக் கொண்டிருந்தார். திறமை வாய்ந்த தளபதிகளை படையில் வைத்திருந்தார்கள். அவருக்கு அவர்கள் பல்வேறு சிறந்த ஆலோசனைகளைச் சொல்வார்கள். எல்லாவற்றையும் கேட்பார். ஆனால் சுயமாக முடிவெடுப்பார். அப்படிச் செயல்பட்டு காஞ்சியைக் கைப்பற்றினார். நானோ ஸ்ரீராம புண்ணிய வல்லபரிடமிருந்து நேற்றைக்குப் பிறந்த இளம் துறவி வரை யோசனைகளைக் கேட்டு நடந்து இன்று என் யோசனைகளையே துறந்துவிட்டு நிற்கிறேன். அதன் பலன் கோட்டைக்கு வெளியே படைக் கோட்டையாக வலுவாக உருபெற்று நிற்கிறது.''

''ஆலோசனை சொல்வதற்குத்தானே அமைச்சர்களும் தளபதிகளும் இருக்கிறார்கள்? அவர்களிடம் யோசனைகளைக் கேட்பது சம்பிரதாயம் தானே?''

''அந்தச் சம்பிரதாயம் தான் இன்று என்னை அதள பாதாளத்தில் தள்ளியிருக்கிறது. மன்னனின் முதுகெலும்பாக இருக்க வேண்டிய சேனாதிபதி எலும்பை அரிக்கும் கிருமியாகி விட்டால் மன்னனின் நிலை என்ன? இந்தச் சேனாதிபதி செய்த துரோகத்தைக் கேட்டால் நீ அதிர்ந்து போய்விடுவாய். நமது பொக்கிஷ செல்வம் அனைத்தையும் பகைவர்களிடம் தந்துவிட்டான் சேனாதிபதி.''

''இந்த நாட்டின் விலை மதிக்க முடியாத பொக்கிஷம் தாங்கள் தான் பிரபு. சுவர் இருக்கும் வரை சித்திரம் எழுதலாம் அல்லவா?''

''இந்தச் சுவர் போரில் தூளாகிச் சுக்கு நூறாகிவிட்டால்?''

''போரில் தங்களுக்கு நம்பிக்கை போய்விட்டதா? கோழையா தாங்கள்?''

''கோழையைத்தான் நீ மணந்து கொண்டாயா தேவி?''

''நீங்கள் மாவீரர் என்பதால் தான் சுயம்வரத்தைக் கூட புறக்கணித்து விட்டுத் தங்களை மணந்தேன்.''

''பிறகு ஏன் என்னைப் பார்த்து போரில் நம்பிக்கை போய்விட்டதா என்று கேட்கிறாய்?''

''நீங்கள் பேசியதை வைத்துத்தான் அப்படிச் சொன்னேன் பிரபு. மற்றபடி உங்களை எனக்கு நன்றாகத் தெரியும்.''

''தேவி! நாளை நேர் வழி போருக்கு அறை கூவல் விடுத்திருக்கிறான் எதிரி. அவனை மன்னனாக இருந்து நேருக்கு நேர் சந்திக்க விரும்புகிறேன் நான்.''

''நான் கூட அதைத்தான் விரும்புகிறேன் பிரபு.''

''ஒரு விஷயத்தை நீ நன்றாகப் புரிந்துகொள்ள வேண்டும் தேவி...''

''சொல்லுங்கள்.''

''நான் மாவீரன் என்பது வேறு. போரின் முடிவு என்பது வேறு. நான் வீரனாகச் செயல்பட முடியும். ஆனால் வெற்றி பெற முடியுமா என்று சொல்ல முடியாது.''

''வீரர்கள் வெற்றி பெறாமல் வேறு யார் வெற்றி பெற முடியும்?''

''அபிமன்யு, கர்ணன், துரியோதனன், பீஷ்மர் போன்றவர் களெல்லாம் மகாவீரர்கள். ஆனால் குருஷேத்திரப் போரில் அவர்கள் மாண்டார்கள், தெரியுமா?''

''அவர்கள் வீழ்ந்ததற்குக் காரணம் அதர்மம். எதிரிகள் அதர்மத்தைக் கையாண்டதால் அந்த மகாவீரர்கள் வீழ்ந்தார்கள்.''

''நான் சொல்ல விரும்புவதும் அதுதான். போர் என்றால் அதில் அதர்மம் இருப்பது இயல்பு. அதன் மூலம் வீழ்த்த முடியும். அதுமட்டுமல்ல. பல்லவர்களும் வீரர்கள்தான். இங்கே வந்திருக்கும் பல்லவ இளவரசனின் தந்தை ராஜசிம்மன் எனது பாட்டனார் விக்கிரமாதித்தரை தோற்கடித்தான். விக்கிரமாதித்தர் சாமான்யமானவரா? பீஷ்மருக்கு இணையானவர். அவரை ராஜசிம்மன் தோற்கடித்தது அதர்மப் போரில் அல்ல. தர்மமான நேர்வழியிலான போரில்.''

''இதெல்லாம் தெரிந்ததுதானே பிரபு?''

''தேவி, நாளைய போரில் நான் தோற்கலாம். அல்லது வீரமரணம் அடையலாம்.''

''...''

''என்ன மௌனமாக இருக்கிறாய்? போருக்குப் போவதற்கு முன் மன்னன் என்ற முறையிலும் கணவன் என்ற முறையிலும் சில விஷயங்களை நான் சொல்லித்தான் ஆக வேண்டும். அது என் கடமை. அதை அறிந்து கொள்ள வேண்டியது உன் கடமை.''

''தாங்கள் வெற்றி பெற வேண்டும் என்பதே என் பிரார்த்தனை.''

''நான் மட்டுமென்ன தோற்க வேண்டும் என்றா போருக்குப் போகிறேன்? தேவி! சாளுக்கியர்களுக்குப் பகைவர் பல்லவர்கள் என்பதை நாடறியும். ஆனால் என் பகைவர்கள் என்று சிலர் இருக்கிறார்கள். அது உனக்கு மட்டுமே தெரியும். அவர்களாலும் எனக்கு ஆபத்து வரலாம்.* ஆகவே போரில் எனக்கு ஏதாவது நிகழ்ந்தால் நீ ரணரசிகபுரத்தில் இருக்கக்கூடாது. அரண்மனையில் உள்ள சுரங்கத்தின் வழியாக உன் குடும்பத்தினருடன் வெளியேறிவிட வேண்டும். அதற்கான ஏற்பாடுகளைச் செய்துவிட்டேன். நீ எங்கே போய்ச் சேருகிறாயோ அங்கே நமது

---

* Vijayathidyan (as per Chalukya's inscriptions) was one taken prisoner by enemies who lay in ambush for him.
Page 114 'Kanchipuram in Eartly South Indian History' by T.V.Mahalingam.

மகன் விக்கிரமாதித்தன் இருப்பான். அவனிடம் போய் சேர்ந்து கொள். மற்றதை அவன் தீர்மானிப்பான்.''

வீரப் பெண்மணியான மகாராணி கண்ணீரைப் பெருக்காமல் அவனது கால்களில் விழுந்து வணங்கிவிட்டு, ''அப்படியே ஆகட்டும் பிரபு'' என்றாள்.

''நீ என்னைப் புரிந்து கொண்டது பாதி வெற்றியை எனக்குத் தந்துவிட்டது தேவி. வா. கொஞ்ச நேரமாவது உன் மடியில் தலை வைத்து நான் படுக்க வேண்டும்'' என்றான்.

''வாருங்கள் பிரபு. கீழே போகலாம்.''

☆

மறுநாள் காலை பொழுது விடிந்ததுமே பூமியே அதிர்வது போல் ரணரசிகபுர கோட்டையிலிருந்து பேரிகைகள் பெரிதாக முழங்கின. வேட்டுக்களும் ஒலித்தன. கிழக்கு வாசல் கதவுகள் திறக்கப்பட்டு சாளுக்கியர் படைகள் வெகுவேகமாக வெளியேறின. அவற்றோடு பூரண கவசமணிந்த சாளுக்கிய மன்னன் விஜயாதித்தன் விடிவெள்ளி போல் தேரேறி வெளியே பிரவேசித்தான்.

''மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறது சேனாதிபதி. இப்படி வீரனாக விஜயாதித்தன் வருவதுதான் மன்னனுக்கு அழகு. நமக்கும் திருப்தி'' என்றான் பல்லவ இளவரசனான மகேந்திர வர்மன்.

''அதற்குக் காரணம் கோட்டைக்குள் அவனுக்குப் பின்னால் இருந்த நல்ல சக்தியும் தீய சக்தியும் போய்விட்டதுதான். ஆகவேதான் சுதந்திர புருஷனாகவும் வீரனாகவும் வருகிறான் விஜயாதித்தன்'' என்று சொன்ன சேனாதிபதி, ''இளவரசே! சாளுக்கிய மன்னனை நானே எதிர்கொள்கிறேன். நீங்கள் வடக்கு பக்கமாக வரும் படைகளை கவனித்துக் கொள்ளுங்கள். உங்களுக்குத் துணையாக உதயசந்திரன் இருப்பான். தெற்குப் பக்கமாக வரும் படைகளை உபதலைவன் எதிர்ப்பான். தாங்கள் முடிந்த மட்டும் வீர பல்லவப் படை வட்டத்திலேயே இருந்து போரிடுங்கள்'' என்று சொல்லிவிட்டு முன்னே சென்றார்.

அடுத்த சில நிமிடங்களில் உக்கிரமான போர் தொடங்கியது.

☆☆☆

50

ரணரசிகபுரப் போர்

வெகுவேகமாக வெளிப்பட்ட விஜயாதித்தன் படை மூன்று விதமான தாக்குதலில் ஈடுபட்டது. விஜயாதித்தனின் முன்னால் சென்ற படைகள் விஷம் தோய்ந்த ஈட்டிகளை வீசியபடி முன்னேறின. அவனது இடதுபுறம் இருந்த படைகள்கட்டாரிகளை வீசியும் கட்டாரிகளால் தாக்கியும் முன்னேறின. அவனது வலது புறம் இருந்த படைகள் அம்புகளை வானை நோக்கி எய்தன. அந்த அம்புகள் மழையைப் போல கீழ்நோக்கி வந்ததால் அதில் சிக்கிய பல்லவ வீரர்கள் அம்பால் தாக்குண்டு விழுந்தார்கள். கட்டாரிகள் பலத்தோடு வந்து விழுந்ததால் அவற்றால் காயமடைந்தவர்களும் சாய்ந்தார்கள். விஷம் தோய்ந்த ஈட்டிகளால் பலர் வீழ்த்தப் பட்டார்கள்.

இந்தத் தாக்குதலை பல்லவ சேனாதிபதி பகதத்தர் எதிர்பார்க்கவில்லை. எனவே இந்தத் தாக்குதலில் பல்லவப் படையின் முன்னணி வீரர்கள் சேதாரப்பட்டோ அல்லது மரண காயமுற்றோ விழுந்தார்கள். இதனால் உற்சாகமடைந்த சாளுக்கியர் படை மன்னனை வாழ்த்தும் குரலெழுப்பிக் கொண்டு முன்னேறி னார்கள். விஜயாதித்தனுக்குப் பின்னால் வந்தவர்கள் குறுவாட் களை எறிந்ததால் ஆங்காங்கே குறுவாட்களால் தாக்குண்டவர்கள் செத்து விழுந்தார்கள். இந்தத் தாக்குதல் முறையற்றதாக இருந் ததால் சேனாதிபதி வருத்த மடையாமல் சந்தோஷமே அடைந்தார்.

தன் கழுத்தில் இருந்த கொம்பினை ஊதியும் வாளைச் சுழற்றுவது போல் அசைக்கவும் செய்தார் சேனாதிபதி. அதையடுத்து அவரது படைகள் விசிறி போலவும் கருடனின் இறக்கை போலவும் விரியத் தொடங்கியது. அப்படி விரியத் தொடங்கியதால் சாளுக்கிய வீரர்கள் அந்த வலைக்குள் வேகமாகப் புகுந்து கொள்ள வேண்டியதாயிற்று. அப்போது சேனாதிபதி வேறொரு சமிக்ஞையைச் செய்ததும் பின்னால் இருந்த பல்லவ வீரர்கள் இறக்கைக்குள் சிக்கிய சாளுக்கிய வீரர்கள் மீது

வாணங்களையும் எரியம்புகளையும் கொளுத்தி வீசினார் களாதலால் வீரர்கள் பலர் மண்டை வெடித்தும் தீப்பிடித்துமாக அலறி விழுந்தார்கள்.

தேரில் இருந்த விஜயாதித்தன் தேரை வேகமாக இயக்கி முன்னேறிச் சென்று தனது வாளால் கண்ணில் பட்ட பல்லவ வீரர்களை வெட்டி வீழ்த்தினான். அவனைப் பல்லவர் சேனாதிபதியே எதிர்கொண்டார். சிறிது நேரம் வரை தேரில் இருந்த படியே அவரிடம் போரிட்டான் விஜயாதித்தன். அந்த நிலையில் தேரின் மீது வாணம் ஒன்று விழுந்ததால் தேரானது பிளந்தது. வாணம் விழுந்ததுமே தேரிலிருந்து குதித்த விஜயாதித்தன் சேனாதிபதியோடு வேகமாகப் போரிட்டான். தனது வீரர்கள் பெருவாரியாக தன் வீரர்களாலேயே மாண்டு போனதற்குச் சேனாதிபதி பகதத்தர் தான் காரணம் என்று கருதியதால் அவரை ஒழித்துவிடும் வெறியோடு அவருடன் போரிட்டான் விஜயாதித்தன். அவனது வெறியை சேனாதிபதி கவனிக்கத் தவறவில்லை. கோட்டைக்குள் இருந்து கொண்டு சொன்னவர் சொற்களையெல்லாம் கேட்டுக் கொண்டு தனது சுயசக்தியையே இழந்துவிட்டிருந்த விஜயாதித்தன் தற்போது சுதந்திரத்தோடும் சுயசக்தியோடும் போரிட்டதால்தான் சிறந்த வாள் வீரன் என்பதை நிரூபித்தான். அவனோடு தொடர்ந்து போரிட்டுக் கொண்டி ருந்தால் படைகளுக்கு உத்தரவிட முடியாது என்பதை உணர்ந்த சேனாதிபதி அவனை விட்டு விலகினார். அவர் அவ்வாறு விலகியது நன்மைக்கே என்று கருதினான் விஜயாதித்தன். அவர் ஒருவரோடு மட்டும் சரிக்குச் சமமாகப் போரிட்டுக் கொண்டி ருந்தால் கால விரயம் தான் ஆகும் என்று கருதிக் கொண்டிருந்த அவன் சேனாதிபதி விலகியதுமே தனது வாளை மின்னலைப் போல் வீசி மளமளவென்று பல்லவ வீரர்களைச் சாய்க்க முற்பட்டான்.

போர் துவங்குவதற்கு முன்பு, ''பல்லவ வீரர்களின் எண்ணிக்கையைக் குறைத்து நாசம் விளைவிப்பது தான் முதல் நோக்கம்'' என்று தனது வீரர்களுக்கு அறிவுறுத்தியிருந்தான் விஜயாதித்தன். அதனால் ஆரம்பத்திலேயே சாளுக்கிய வீரர்கள் பல்லவர் படை மீது எதிர்பாராத தாக்குதல் முறையைக் கையாண்டு சேதத்தை உண்டாக்கினார்கள். விஜயாதித்தனும் அதே ரீதியில் வீரர்களை அதிக அளவில் வெட்டி வீழ்த்தலானான். அதோடு பல்லவ வீரர்கள் இறக்கை போல் விரிந்து சாளுக்கிய வீரர்களை நெறுக்கி வாணங்களால் நாசம் செய்ததைக் கண்ட விஜயாதித்தன் சங்கை எடுத்து ஊதியதால் பின்னால் வந்த வீரர்கள் சற்று பின்தங்கி பல்லவ இறக்கையில் சிக்காமல் அவர்களும் இறக்கையைப் போல

விரிந்தார்கள். விஜயாதித்தன் சாமர்த்தியமாக இயங்குவதை உணர்ந்தார் சேனாதிபதி. தான் விரித்த வலையில் கொஞ்சம் வீரர்களே சிக்கியதையும் அறிந்தார். அதோடு சாளுக்கிய வீரர்கள் பெரும்பாலோர் வாட்போரில் ஈடுபடாமல் விஷ ஈட்டிகளையும், கூரான கட்டாரிகளை எரிவதிலும் வானத்தில் அம்புகளை விட்டு பல்லவ வீரர்கள் மீது விழ வைப்பதிலும் குறியாக இருந்தார்கள். பலர் கதாயுதங்களைப் பயன்படுத்தியதால் பல்லவ வீரர்களால் வாட்போர் செய்ய முடியவில்லை. கதாயுதங்களை தங்கள் மீது படாமல் காத்துக் கொள்ளவே முற்பட வேண்டியதாயிற்று. சாளுக்கிய வீரர்களோ பல்லவ வீரர்கள் தடுப்பாயுதமாகப் பயன்படுத்திய கேடயங்களையும் உடைத்துத் தாக்கியதால் பல்லவ வீரர்கள் பலர் கதாயுதத்தால் அடியுண்டு விழுந்தார்கள். குறுவாள் எரிந்த காரணத்தாலும் பலர் செத்துக் கொண்டிருந்தார்கள்.

இது நல்லதற்கல்ல என்பதை உணர்ந்த சேனாதிபதி நீண்ட வேலாயுதங்களைப் பயன்படுத்த கட்டளையிட்டார். பல்லவ வீரர்கள் நீண்ட வேலாயுதங்களால் கதாயுத வீரர்களை தூரத்திலிருந்தே தாக்கினார்கள். சக்தி வாய்ந்த வாணங்களைக் கொளுத்தி அடுத்தடுத்து வீசினார்களாதலால் சாளுக்கியர்கள் பலர் விழுந்து மாண்டதோடு அவர்களது முன்னேற்றம் தடைப்பட்டது. இந்நிலையில் கொம்பொலி எழுப்பினால் சேனாதிபதி அதையடுத்து இறக்கையைப் போல விரிந்திருந்த பல்லவ வீரர்கள் துண்டுத் துண்டாகப் பிரிந்து சாளுக்கிய படை அணிக்குள் வேல்களைப் போல் புகுந்து வாளைச் சுழற்றி வெட்டி வீழ்த்தலானார்கள்.

அதேசமயம் கோட்டையின் வலதுவாயில் வழியாக வெளிவந்த பத்தாயிரம் சாளுக்கிய வீரர்களை பல்லவ இளவரசனின் தலைமையிலான பல்லவர் படை லாவகமாக எதிர்கொண்டது. ஆரம்பத்திலேயே அப்படை இரண்டாகப் பிரிந்ததால் சாளுக்கியர் படையை இருபுறத்திலும் தாக்கிப் போரிட்டது. சாளுக்கிய வீரர்கள் வாட்போரில் மட்டுமே ஈடுபட்டதால் அவர்களைப் பல்லவ வீரர்கள் அதே முறையில் எதிர் கொண்டார்கள். முதல் போரில் ஈடுபட்ட பல்லவ இளவரசன் தனது வாள் வீச்சின் நுட்பங்களை வெளிப்படுத்தி எதிரிகளைச் சந்தித்தான். அவனோடு சேர்ந்து போரிட்ட உதயசந்திரன் இளவரசனுக்குக் கவசமாக இருந்தபடி போரிட்டான். இளவரசனைச் சுற்றி இருந்த வீர பல்லவர் படை அவனை எதிரிகள் பின்புறத்திலும் பக்கங்களிலும் நெருங்காதவாறு போரிட்டார்கள்.

உதயசந்திரனின் நண்பர்களான பரதனும், அரிச்சந்திரனும், ஐராவதனும் தத்தம் திறமைகளைக் காட்டி போரிட்டதால் சாளுக்கிய வீரர்கள் நாசமானார்கள்.

அவனது வாள்பட்டு மார்பு பிளந்துவிட்ட நிலையில் ஏதோ பேச முற்பட்டார் கோட்டைத்தளபதி.

''சொல்லுங்கள்'' என்றான் உதயசந்திரன்.

''நீ தான் உதயசந்திரனா?'' என்று கேட்டார் கோட்டைத் தளபதி.

''ஆமாம். விஷயத்தை விரைவாகச் சொல்லுங்கள். உங்களால் அதிக நேரம் ஜீவிக்க முடியாது'' என்றான் உதயசந்திரன்.

''நீ அடையப் போகும் வெற்றி எங்கள் சேனாதிபதி செய்த துரோகத்தால் கிடைக்கப் போகிறது. இதில் பெருமைப்பட்டுக் கொள்ள எதுவுமில்லை'' என்று சொன்ன கோட்டைத்தளபதி சேனாதிபதி செய்த அநியாயங்களையும் அதர்மங்களையும் சொல்லிவிட்டு, ''அந்த அயோக்கியனைத் தண்டிப்பதில் எங்கள் மன்னர் தவறு செய்துவிட்டார். அந்தத் துரோகி சிறையில் இருக்கிறான். அவனை கொல்ல வேண்டும் நீ. இல்லை யென்றால் பல்லவ வெற்றி குறையுடையதாக இருக்கும். கறை படிந்ததாக இருக்கும்'' என்று கூறியபடி உயிரை விட்டார்.

அவரது வீர மரணத்திற்கு சில நொடிகள் வரை மௌன அஞ்சலி செலுத்தினான் உதயசந்திரன். பிறகு தனது வெற்றியை அறிவிக்கும்படி சமிக்ஞை செய்தான்.

வெற்றி கொண்டதற்கு அடையாளமாக வெற்றிச் சங்கை ஊதினான் உதயசந்திரன். வெற்றி பெற்ற அந்தப் படை சேனாதிபதி இருந்த பிரதான போர்க்களத்தை நோக்கிச் சென்றது.

கோட்டையின் தெற்கு வாசல் வழியாக வெளிவந்த சாளுக்கியர் படை விஷ அம்புகளைத் தொடுத்தபடி முன்னேறி யதால் அப்படையை எதிர்க்கச் சென்ற பல்லவ வீரர்கள் ஆரம் பத்தில் சற்றுத் தடுமாறினார்கள். ஆனால் அப்படையின் உபதலைவன் உடனே சுதாரித்துக் கொண்டு சற்றே வளைந்து விஷ அம்புகளையும் தீவாளிகளையும் சாளுக்கியர் மீது வீசியதால் சாளுக்கியர் அணிவகுப்பு குலைந்ததோடு பலரும் செத்து மடியலாயினர். சாளுக்கிய வீரர்கள் இதனால் கோபமடைந்து தோளில் தொங்கிய பைகளில் இருந்த கற்களை எடுத்து பல்லவ வீரர்கள் மீது வீசினர். இந்த எதிர்பாராத தாக்குதலைக் கண்ட பல்லவ உபதலைவன் கேடயங்களால் அந்தக் கல் தாக்குதலை

முன்னணி வீரர்களைச் சமாளிக்கச் சொல்லிவிட்டு பின்னால் இருந்தவர்களை ஈட்டிகளை எறியும்படியும் முன்னேறித் தாக்கும் படியும் கட்டளை யிட்டான். கற்கள் இருந்த வரை கண்டபடி தாக்கிய சாளுக்கிய வீரர்கள் விரைவிலேயே பல்லவரது உக்கிரமான தாக்குதலால் சிதறுண்டார்கள். செத்தவர்கள் போக மிஞ்சியவர்கள் போர்க் களத்தை விட்டு ஓடினார்கள். வெற்றிச் சங்கை ஊதிய உபதலைவன் தன் படைகளை பிரதான போர்க்களத்தை நோக்கிச் செல்லும்படி பணித்தான்.

கோட்டையின் கிழக்குப் புறத்தில் இருந்த பிரதான போர்க்களத்தில் சாளுக்கியரின் விதவிதமான போர் முறைகளை வெகுசாமர்த்தியமாகச் சமாளித்துக் கொண்டிருந்த பல்லவ சேனாதிபதி பகதத்தர் இளவரசனின் படைப் பிரிவும் உபதலைவனின் படைப்பிரிவும் வந்து சேர்ந்து கொண்டதை அறிந்ததும் பேரிகைகளை முழக்கி போரை மும்முரமாக்கியதால் பிரதான போர்க்களம் உக்கிர நிலையை அடைந்தது. சாளுக்கிய உபதளபதிகளான சிங்கமுகனும் குண்டோதரனும் வாழ்வா சாவா என்று முடிவு செய்ய முற்பட்டதுபோல் படைகளை முடுக்கி விட்டார்கள். ஆனாலும் பல்லவரது படை எண்ணிக்கையில் பெருத்திருந்ததோடு மட்டுமின்றி சாளுக்கியர் படையை முற்றிலுமாக வளைத்துக் கொண்டதால் பாம்பு வளைத்திற்குள் சிக்கிக் கொண்ட எலிகளைப் போல சாளுக்கிய வீரர்கள் அரையுண்டார்கள். இதற்கிடையில் சாளுக்கிய மன்னனைக் காணவில்லை என்ற செய்தியொன்று பரவியதால் சாளுக்கிய வீரர்கள் குழம்பினார்கள். மன்னனில்லாத நிலையில் போரிட விரும்பாத அவர்களில் பலர் சரணடைந்தார்கள். சிலர் ஓட முற்பட்டார்கள். சாளுக்கியர் தோல்வியை ஒப்புக் கொண்டு சிங்கமுகன் போர் நிறுத்த சங்கை ஊதினான். பல்லவர் படை வெற்றித் தாரைகளை முழக்கின.

சரணடைந்தவர்களை போர்க்களத்தை விட்டு ஓடச் செய்த சேனாதிபதி தனது படைகளை கோட்டையை நோக்கிச் செல்லும்படி பணித்தார். கோட்டை மேலிருந்து தாக்குவதற்கு ஒருவருமில்லை. கோட்டைக் கதவுகளும் திறந்து கிடந்தன.

''எல்லோரும் நுழையுங்கள். கோட்டையின் கட்டு மானங்களைச் சிதையுங்கள். கதவுகளை அகற்றி உடையுங்கள். நகரில் உள்ள கட்டிடங்களை இடியுங்கள். சூறையாடுங்கள்'' என்று கட்டளையிட்டார் சேனாதிபதி.

அதையடுத்து பல்லவர் படை பிரளய காலத்து கடல் போல கோட்டைக்குள் நுழைந்து சூறையாடியது.*

எதற்காகப் பல்லவர் படை சாளுக்கிய நாட்டிற்கு வந்ததோ அது பரிபூரணமாக நிறைவேறியது.

பல்லவ மாமன்னர் ராஜசிம்மர் உதயசந்திரனிடம் இரண்டு பொறுப்புகளைத் தந்திருந்தார்.

இளவரசன் மகேந்திரனை வீரபல்லவப் படை பாதுகாத்தாலும் போரின் போது அவனைக் கண்ணும் கருத்துமாகப் பாதுகாக்க வேண்டும் என்ற முதல் கட்டளையை உதயசந்திரன் நிறைவேற்றியிருந்தான். ரணரசிகபுரத்திற்கு வரும் வரை தனது திறமைகளையெல்லாம் காட்டியிருந்த உதயசந்திரன் ரணரசிகபுரத்திற்கு வந்ததும் இளவரசனை பாதுகாப்பதைத் தவிர வேறு எதிலும் ஈடுபடவில்லை. முற்றுகை முதல் போர் வரையிலான எல்லா விஷயங்களையும் சேனாதிபதி பகதத்தர் பார்த்துக் கொண்டார்.

இரண்டாவது கட்டளையாக பல்லவ மன்னர் காஞ்சியில் நிலவும் பஞ்சத்தை தீர்க்கவும் தனது பெருங்கனவான கையிலாயநாதன் கோயிலைக் கட்டவும் பெரும் செல்வம் தேவைப்படுவதால் அதை சாளுக்கிய நாட்டிலிருந்து திரட்ட வேண்டும் என்றுச் சொல்லியிருந்தார். *

அதன்படி உதயசந்திரன் சாளுக்கிய நாட்டிற்குச் செல்லும் வழியில் முதலில் கொள்ளையர்கள் செல்வத்தையும் பிறகு கொள்ளையர்கள் மூலம் ஊர்த் தலைவனின் செல்வத்தையும் கவர்ந்து பத்திரமான ஓர் இடத்தில் புதைத்தான். பிறகு துங்கபத்திரையைக் கடந்து இரட்டப்பாடி நாட்டிற்கு வந்ததும் ஒவ்வொரு ஊரிலும் மக்கள் தங்கள் செல்வங்களை ஒப்படைக்கச் சொல்லி அவற்றையெல்லாம் வாதாபிக்கருகில் பத்திரமாகப் புதைத்து வைத்தான். கடைசியாக ரணரசிகபுரத்து பொக்கிஷத்தை சூறையாட திட்டமிட்டான். ஆனால் எதிர்பாராத விதமாக அந்த

---

* During the reign of Raja Simha, the war with chalukya was continued and the Chalukya's capital Ranarasika pura was sacked.

page 113 'Kanchipuram in Easly South Indian History' by T.V.Mahalingam.

* ராஜசிம்மன் விஜயாதித்தனுடைய கோநகரான ரணரசிகபுரத்தை வென்று அங்கிருந்து பெரும் செல்வத்தைக் கொணர்ந்து கைலாச நாதர் கோயிலைக் கட்டினான்.

பக்கம் 165 'தமிழ்நாட்டு வரலாறு' (பல்லவ - பாண்டிய காலம் முதற்பகுதி) தமிழ்நாடு அரசு வெளியீடு.

பொக்கிஷ செல்வங்களை கோட்டைக்குள்ளிருந்து சாளுக்கிய சேனாதிபதியே அனுப்பி வைத்தார். தற்போது படைகள் வேறு சூறையாடத் தொடங்கிவிட்டன. ஆக தேவையான செல்வம் திரண்டுவிட்டது. பல்லவர் படை காஞ்சி திரும்பும்போது அச்செல்வமும் காஞ்சி சென்றடையும். அந்த வகையில் மன்னரின் இரண்டாவது கட்டளையையும் நிறைவேற்றியிருந்த உதயசந்திரன் திருப்தியோடு தனது இதர கடமைகளை நிறைவேற்ற கோட்டைக்கு வெளியே தனது நண்பர்களுடன் சென்றான்.

கோட்டைக்கு வெளியே அவன் சென்றபோது மாலை நேரம் முகிழ்த்து விட்டிருந்தது. விடியற்காலையில் துவங்கிய போர் கதிரவனைப் போலவே உக்கிரமாகத் தொடங்கி மும்முர மடைந்து மாலை நேரமானதும் மங்கிப் போன கதிரவனைப் போலவே உக்கிரத்தை இழந்து முடிந்துவிட்டிருந்ததையும் அதற்கு அத்தாட்சியாக காலையில் வீரர்களாய் வலம் வந்த ஆயிரக்கணக்கானவர்கள் வீர மரணமெய்தி சடலமாகக் குவிந்து கிடந்ததையும், கண்ணுக்கெட்டிய தூரம் வரை சடலமயமாக இருந்ததையும் கண்ட உதயசந்திரனுக்கு என்னவோ போலிருந்தது. ''குருசேத்திரப் போர் துவங்குவதற்கு முன் அர்ச்சுனன் மனமொடிந்து நின்றான். நானோ போர் முடிந்த பிறகு மனமொடிந்து நிற்கிறேன்'' என்று மனத்திற்குள் வறட்சியாக நினைத்துக் கொண்டான் உதயசந்திரன். ''ஏதோ ஒரு காரணத்திற்காகப் போர் நடக்கிறது. ஆனால் அதில் தான் எத்தனை பேர் மாண்டு போகிறார்கள்? ஒவ்வொருவரும் ஒவ்வொரு கனவு கண்டு கொண்டிருந்திருப்பார்கள். ஆனால் அனைத்துமே கலைந்து போய் இன்று அனைவருமே சடலமாக ஒற்றுமையாகக் கிடக்கிறார்கள். போர் துவங்கும் வரை சாளுக்கியர்கள் என்றும் பல்லவர்கள் என்றும் வித்தியாசப்பட்டுக் கிடந்தார்கள். இப்போது இவர்களுக்குள் என்ன வித்தியாசம்? எதுவுமில்லை. சடலங்கள் என்ற பெயரில்தான் அனைவரும் அடக்கம். இவர்களைப் பறி கொடுத்த குடும்பங்களின் நிலை என்ன? எதற்காக இந்த நிலைமை? எதற்காக இந்தப் போர்? ஆசை! பேராசை! இதுதான் காரணம். காஞ்சியின் மீது புலிகேசிக்கு ஆசை வந்தது. பிறகு பேராசையாயிற்று. காஞ்சியின் மீது படையெடுத்தார். அதன் விளைவு தானே தொடர்ச்சியான போர்கள்? இந்தப் போரும் அப்படி விளைந்ததுதானே? புலிகேசியின் ஆசை இதுவரை எத்தனை லட்சம் வீரர்களை இன்று வரை பலி கொண்டிருக்கிறது?'' என்று தனக்குத்தானே கேட்டுக் கொண்டு 'இப்படியெல்லாம் நான் ஏன் நினைக்கிறேன்? போரில் நானும்தானே ஈடுபட்டேன்? நானும்தானே பலரைக் கொன்றேன்?

போரைப் பற்றி விமர்சனம் செய்ய எனக்கென்ன தகுதி இருக்கிறது?' என்று கேட்டுக் கொள்ளவும் செய்தான்.

பல்லவ வீரர்கள் பலர் போருக்குப் பிறகு செய்ய வேண்டிய கடமைகளை யாரும் சொல்லாமலேயே செய்வதற்குத் தயாரானார்கள். போர் முடிவடைந்து கொஞ்ச நேரமே ஆனாலும் போர்க்களத்தை மோப்பம் பிடித்துவிட்ட பறவையினங்கள் பல வானத்தில் கூட்டம் கூட்டமாகப் பறந்து கொண்டிருந்தன. மனிதர்களால் உண்டாக்கப்பட்ட கோரத்தை அளவிட வந்தது போல் இருந்தது அக்காட்சி. மேலே பறந்து கொண்டிருந்த அப்பறவைகளுக்கு கீழே வந்து சடலங்களைக் கொத்துவதற்கு தைரியம் வரவில்லை. 'இருட்டு வரட்டும். அப்போது பார்த்துக் கொள்ளலாம். அதுவரை நாம் கொத்த வேண்டிய உடல்களைத் தேர்ந்தெடுத்துக் கொள்வோம்' என்று தீர்மானித்துக் கொண்டது போல் பறவைகள் வட்டமிட்டன. ஆனால், பறவைகளைப் போல காத்திருக்க வேண்டிய அவசியமும் இல்லாமல் விருப்பமும் இல்லாமல் போன ஓரிரு குள்ள நரிகள் மட்டும் போர்க்களத்தில் பிரவேசித்து தேங்கிக் கிடந்த குருதியை கள்ளத்தனமாக நக்கிக் குடிக்க முற்பட்டன. ஒரு நரி கண்ட படி குடித்துவிட்டு தட்டுத் தடுமாறி பிணக்குவியல் ஒன்றின் மீது ஏறி வானத்தைப் பார்த்தபடி சிலையாக நின்றிருந்த விதம் பயங்கர அழகாக இருந்தது.

தாமதமாகும் ஒவ்வொரு நிமிடமும் நரிகளுக்கும் கழுகுகளுக்கும்தான் சாதகம் என்பதை உணர்ந்த வீரர்கள் தங்கள் பசியையும் சோர்வையும் மறந்து சடலங்களைத் திரட்டி மலை போல பல இடங்களில் குவித்து கட்டைகளை போட்டு தகனம் செய்யலானார்கள். அதனால் போர்க்களப் பகுதியில் கரும்புகை உண்டாகிவிடவே கீழே கிடந்த சடலங்களைக் காண முடியாத பறவைகளும் சடலங்களை அணுக முடியாத நரிகளும் தகனம் செய்து கொண்டிருந்த பல்லவ வீரர்களைச் சபிப்பது போல் சத்தமிட்டன. உதயசந்திரனும் அவனது நண்பர்களும் அந்தப் பணியில் ஈடுபட்டு சிறப்பாகச் செயல்பட்டார்கள்.

தகன காரியங்கள் முடிவடைந்த போது நன்றாக இருட்டிவிட்டிருந்தது. வானம் தெளிவாக இருந்ததால் பிறைச் சந்திரன் தெளிவாகத் தெரிந்ததைக் கண்ட உதயசந்திரன், போர்ப் புண்களை ஆற்ற வந்த தேவதையைப் போல அச்சந்திரனை எண்ணி சற்றே ஆறுதலடைந்தான். அந்தச் சந்திர தேவதைக்குத் துணையாக வந்தது போல வானத்தில் தென்பட்ட நட்சத்திரங்களை எண்ணிக் கொண்டான் உதயசந்திரன்.

இதற்கிடையில் பல்லவ வீரர்களின் மற்றொரு பிரிவு வேட்டையாடி கொண்டு வந்த விலங்குகளைச் சமைத்து உணவாக்கி வீரர்களுக்கு விநியோகம் செய்வதில் ஈடுபட்டது.

உதயசந்திரன் எதுவும் அருந்தவில்லை.

உடைத்து போடப்பட்ட கோட்டைக் கதவுகளின் துண்டுகளின் மீது தன் நண்பர்களோடு அமர்ந்து கொண்டு ''போர்ச் சேதம் பற்றி தெரிந்ததா?'' என்று ஐராவதனைக் கேட்டான்.

''எதிர்பார்த்ததை விட அதிகம்தான் உபதலைவரே. முப்பதாயிரம் வீரர்கள் வீரமரணம் அடைந்திருக்கலாம். அதற்குக் காரணம் சாளுக்கிய மகாராஜாவின் போர்முறை. வீரர்கள் பயன்படுத்திய பல்வேறு ஆயுதங்கள் ஆகியவைதான்'' என்றான் ஐராவதன்.

''போர் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது மன்னனைக் காணவில்லை என்று செய்தி வந்ததே அது உண்மையாக இருக்குமா?'' என்று கேட்டான் உதயசந்திரன்.

''உபதலைவரே, சாளுக்கிய மன்னர் ஓராண்டு காலமாகவே அமைதியற்றவராக இருந்தார். அவரது உறவினர்களுக்குள்ளேயே அவருக்கு விரோதிகள் இருந்ததாக நான் கேள்விப் பட்டிருக்கிறேன். அவர்கள் இந்தப் போரைப் பயன்படுத்தி அவரைக் கடத்திச் சென்றிருக்கலாமோ என்று தோன்றுகிறது'' என்றான் ஐராவதன்.

ஆயிரங்கண்ணனான பரதன் குறுக்கிட்டு, ''உபதலைவரே, நாம் இளவரசரின் வீரபல்லவப் படையுடன் சேர்ந்தபோது ஒரு நாள் மட்டும் நம்முடன் சேர்ந்திருந்த சந்திரலேகா அதற்குப் பின் காணவில்லை. உங்களிடம் தெரிவித்தபோது 'போகட்டும்' என்று மட்டுமே சொன்னீர்கள். என்ன ஆனார் அவர்?'' என்று கேட்டான்.

''உனக்குத் தெரிந்ததுதான் பரதா. நமது படையில் இருவர் காணாமல் போனதையும் அதற்கு பதிலாக வேறு இருவர் படையில் இருந்ததாகவும், அவர்கள் அராபியர்களைப் போல இருந்ததாகவும் ஆயிரம் கண்ணன் தெரிவித்த தகவலை சந்திரலேகா என்னிடம் சொல்லவில்லை. அது தண்டனைக் குரியது என்று கருதிய நான் உரிய தண்டனையை அவளையே அளித்துக் கொள்ளும்படி சொன்னேன். என்ன நினைத்தாளோ தெரியவில்லை. நம்மைவிட்டுப் பிரிந்து போய்விட்டாள்'' என்றான் உதயசந்திரன்.

அப்போது அங்கே இருபது புரவி வீரர்கள் வந்து நின்றார்கள். உதயசந்திரனின் நண்பர்கள் வாட்களை உருவினார்கள்.

☆☆☆



51 உதயசந்திரனின் கோரிக்கை

''வாளை உறையில் போடுங்கள். இங்கே நமக்கு எதிரிகள் வரவாய்ப்பில்லை'' என்று சொல்லி நண்பர்கள் மூவரையும் அடக்கினான் உதயசந்திரன்.

வந்து நின்ற வீரர்களுக்குப் பின்னாலிருந்து மூவர் வந்தார்கள்.

அவர்கள் -

சந்திரலேகா.

முகமது. அகமது.

''உபதலைவரே, இந்த இருவரையும் தப்புவதற்கு வழி செய்துவிட்டேன் என்று தான் எனக்கு தண்டனையை விதிக்க எண்ணி அந்தப் பொறுப்பை என்னிடமே விட்டுவிட்டீர்கள். அதற்கான அர்த்தம்அப்போதே எனக்குப் புரிந்துவிட்டது. தவறவிட்டுவிட்ட இரு அராபியர்களையும் நானே கண்டுபிடிக்க வேண்டும் என்பதைத்தான் எனக்குரிய தண்டனையாக விதித்து விட்டீர்கள் என்று புரிந்து கொண்ட நான் ரணரசிகபுரத்திற்கு வந்ததும் ஒரு நாள் உங்களோடு இருந்துவிட்டு மறுநாள் மறைந்தேன். நமது படையில் அராபியரைப் பற்றிச் சொன்ன ஆயிரங்கண்ணரையும் வீரர்கள் சிலரையும் அழைத்துக் கொண்டு படைக்குள்ளேயே அராபியர்களைத் தேடினேன். கண்டு பிடித்தேன். இளவரசரை நெருங்கி அவரை விஷ ஊசி மூலம் மாய்த்துவிட திட்டமிட்டிருந்தார்கள். இருவரையும் போர் முடியும் வரை நாங்கள் தனியாகவே வைத்திருந்தோம். போர் முடிந்தபின் உங்களிடம் அழைத்து வந்தோம்'' என்றாள் சந்திரலேகா.

''மிகவும் நன்றி சந்திரா. இவர்களால் எனக்கு ஆக வேண்டிய காரியம் ஒன்றிருக்கிறது. அதுவரை அவர்களை இங்கேயே ஏதாவது ஒரு ரகசிய இடத்தில் பாதுகாப்பாக வைத்திரு. நான் இளவரசரிடம் சில விஷயங்களைப் பேச வேண்டும். பேசிவிட்டு வந்து இவர்களை கவனித்துக் கொள்கிறேன்'' என்று கூறிவிட்டு கோட்டைக்குள் நண்பர்களுடன் சென்றான் உதயசந்திரன்.

பல்லவ வீரர்கள் தலைநகரைச் சூறையாடுவதற்குப் பூரண சுதந்திரத்தைப் பெற்றிருந்தார்களாதலால் அவர்களது வெறியும் வேகமும் பார்த்த இடத்திலெல்லாம் புலப்படக் கூடியதாக இருந்தது. அரண்மனைப் பகுதியைத் தவிர இதர இடங்களில் இருந்த மாடங்களையும், மாளிகைகளையும், கூடங்களையும் கோபுரங்களையும் இடித்துத் தள்ளியிருந்தார்கள். இல்லங்களிலும் வணிக வளாகங்களிலும், பெருந்தனக்காரர்களின் மாளிகைகளிலும், புத்த விஹாரங்களிலும், இருந்த செல்வங்களையெல்லாம் திரட்டினார்கள். அரண்மனை பொக்கிஷம் காலியாகிவிட்டிருந்தாலும் தானியக் களஞ்சியம் நிறைந்திருந்தது. அனைத்தையும் திரட்டி பார வண்டிகளில் ஏற்றிக் கொண்டிருந்தார்கள் பல்லவ வீரர்கள்.

பல்லவ இளவரசன் அரண்மனை பகுதிகளைச் சுற்றிப் பார்த்தான். சாளுக்கிய வேந்தர்களான விக்கிரமாதித்தர் முதல் விஜயாதித்தன் வரை வீற்றிருந்த நவரத்தின சிம்மாசனத்தைக் கண்டான். அதில் அமரும்படி சேனாதிபதி கூறியபோது, ''இல்லை சேனாதிபதி. நான் இப்போது இளவரசன் மட்டுமே. நான் அமர வேண்டியது பல்லவ அரியணை தான். இதில் அமர வேண்டியது நமது மாமன்னர் ராஜசிம்மர்தான். ஆகவே இந்த சிம்மாசனத்தை பத்திரமாகக் காஞ்சிக்கு கொண்டு செல்ல ஏற்பாடுகள் செய்யுங்கள்'' என்றான் இளவரசன் மகேந்திரன்.

அரண்மனைக்கு வெளியே இருந்த வெளியில் நிலா ஒளியில் ஆசனங்களைப் போட்டு அங்கே இளவரசனும், சேனாதிபதியும், உபதலைவர்களும் அமர்ந்தார்கள்.

''சேனாதிபதி! உங்களது அனுபவம், போர் அறிவு, சாமர்த்தியங்கள், திட்டங்கள் ஆகியவைதான் இந்த வெற்றிக்கு முக்கிய காரணம். அகழியின் பிரம்மாண்டமான அமைப்பைக் கண்டபோது முதலில் நான் பிரமித்துப் போனேன். கோட்டையை எப்படி நெருங்குவது என்று மலைத்தேன். நீங்கள் தான் அகழிக்கு நீர் வருகிற வழியைக் கண்டுபிடித்து அதில் நஞ்சைக் கலந்து முதலைகள் வீழ்த்தினீர்கள். பிறகு தூர்க்கவே முடியாது என்று எண்ணியிருந்த அகழியைத் தூர்த்தீர்கள். அதற்குப் பிறகு தான் எனக்கே நம்பிக்கை வந்தது. அதற்காக என் பாராட்டை ஏற்றுக் கொள்ளுங்கள்'' என்றான் மகேந்திரன்.

அப்போது உதயசந்திரனும் நண்பர்களும் வந்து சேரவே அவர்களைக் கண்ட இளவரசன், ''இப்போது தான் சேனாதி பதியைப் பாராட்டினேன். உங்களுக்கு நன்றியைத்

தெரிவிக்கிறேன். போருக்கு ஆயத்தம் செய்வதை விட போருக்குப் பிறகு செய்ய வேண்டிய காரியங்கள் கடினமானவை. அவற்றைச் சிறப்பாகச் செய்துவிட்டு வந்திருக்கிறீர்கள்'' என்றான்.

''இளவரசே! சேனாதிபதியைப் பாராட்டியது மிகவும் சரி. ஆனால் எங்களுக்கு எதற்காக நன்றி? கடமைகளைத் தானே செய்தோம்?'' என்றான் உதயசந்திரன்.

''அவன் சொல்வது சரி தான் இளவரசே. அதேசமயம் நீங்கள் என்னைப் பாராட்டுவது சரியல்ல. எல்லா பாராட்டும் மாமன்னர் ராஜசிம்மருக்கே சேர வேண்டும். போர்களைப் பொறுத்தவரை அவர் எனக்கு ஆச்சாரியர். அவர் கற்றுக் கொடுத்ததைத்தான் நான் செய்து காட்டியிருக்கிறேன். எதிரியைக் கண்டு மலைக்காதே என்பது அவரது அமர வாக்கு. எதிரி எப்பேர்பட்டவனாக இருந்தாலும் சரி அவனது படைபலம் எவ்வளவு இருந்தாலும் சரி எல்லாவற்றையும் அறிந்து கொள். ஆனால் மலைத்துவிடாதே என்பார் மாமன்னர். இக்கோட்டையின் அகழியைக் கண்டு மலைத்ததாகச் சொன்னீர்கள். ஆனால் நான் மலைக்கவில்லை. அதைப் பற்றிய விவரங்களை அறிந்து அதைத் தூர்ப்பதில் முனைந்தேன். இந்த உதயசந்திரனை வேண்டுமானால் வாய் நிறைய பாராட்டுங்கள். எனக்குக் கிடைத்த மாதிரியான குருநாதர் அவனுக்கு கிடைக்கவில்லை. போரில் பங்கு பெற்ற அனுபவம் இல்லை. படை வீரனாகவும் இருக்கவில்லை. ஆனால் இங்கே வருவதற்குள் சாளுக்கிய படையை மூன்று இடங்களில் சந்தித்து முறியடித்தான். இல்லாது போனால் நமக்கு இங்கே நெருக்கடி உண்டாகியிருக்கும்.'' என்றார் சேனாதிபதி.

''நீங்கள் சொல்வதையெல்லாம் பார்த்தால் போர்க் கலையில் நான் நிரம்ப கற்றுக்கொள்ள வேண்டும் போலிருக்கிறது. காஞ்சிக்குச் சென்றதும் மூடிக்கிடக்கும் கடிகைக் கல்லூரியை உடனடியாகத் திறந்து அங்கே எல்லா கலைகளையும் கற்க வேண்டும். உதயசந்திரா! நீயும் எனக்குத் துணையாக வருவாய் அல்லவா?''

''கட்டாயமாக வருவேன் இளவரசே.''

''மாமன்னரின் புதல்வன் என்பதிலோ இளவரசன் என்பதிலோ எந்தவிதமான கௌரவமும் இல்லை. மகாவீரனாகவும் சகல கலா வல்லவனாகவும் இருப்பதில்தான் கௌரவம் இருக்கிறது. அந்த கௌரவத்திற்காக என்னை நான் ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும்.''

''காஞ்சிக்கு எப்போது புறப்பட வேண்டும் இளவரசே?'' என்று கேட்டான் உதயசந்திரன்.

''இங்கே இனி நமக்கென்ன வேலை? நாளை முதல் இங்கே புலம்பல் ஒலி தான் கேட்கும். அதைக் கேட்டுக் கொண்டிருக்க வேண்டாம். நாளை பகலிலேயே புறப்பட வேண்டியதுதான்'' என்றான் இளவரசன்.

''ஒரு கோரிக்கை இளவரசே.''

''சொல்''

''தாங்கள் படையோடு காஞ்சிக்குத் திரும்புங்கள். எனக்கு நூறு புரவி வீரர்களை மட்டும் கொடுங்கள். பிறகு வருகிறேன்.''

''எதற்கு?''

''வாதாபி போரின்போது கைதான பல்லவ வீரர்கள் மலைக்கோட்டையில் சிறையில் இருக்கிறார்கள். அவர்களை விடுவிக்க வேண்டும்.''

''எனக்குத் தோன்றியிருக்க வேண்டிய யோசனை. உனக்குத் தோன்றியிருக்கிறது. அப்படியே செய். ஆனால் காலம் தாழ்த்தி விடாதே. நாம் இருவரும் கடிகையில் சேர வேண்டும். உனக்காக நான் காத்திருப்பேன்'' என்று சொன்ன இளவரசன் எல்லோரையும் பயணப்படுத்துவதற்கு முன்னால் ஓய்வெடுத்துக் கொள்ளும் படிச் சொன்னான்.

பல்லவர் படையில் இருந்த புரவிப் படையை பொக்கிஷ செல்வங்களோடு காஞ்சிக்கு சேனாதிபதி அனுப்பி வைத்தபோது ஆயிரம் புரவி வீரர்கள் தன் வசம் வைத்திருந்தார்.

அந்த ஆயிரம் வீரர்களிடமிருந்து ஆயிரம் கண்ணர்களையும் நூற்றுவ கண்ணர்களையும் அடையாளம் கண்டு அவர்களையே நூற்றுவப் படையாக அமைத்துக் கொண்டான். அவர்களை கோட்டைக்கு தெற்கே கொண்டு போய் நிறுத்திவிட்டு இளவரசனிடம் விடைபெற்றுப் போவதற்காக அரண்மனைக்கு வந்தான். இளவரசனோ கண்களை மூடிக் கொண்டு ஆசனத்திலேயே சாய்ந்து படுத்திருந்தான். அவனைச் சுற்றிலும் வீரபல்லவப் படை காவல் செய்து கொண்டிருந்தது. எனவே இளவரசனை எழுப்ப விரும்பாமல் வீரபல்லவப் படையைப் பார்த்து ''வீரர்களே! உங்களுக்கெல்லாம் தலைவனாக நான் இருந்தது கொஞ்ச நாட்கள்தான். அதில் நான் எதுவும் சாதித்துவிடவில்லை. உங்களோடு சரிவர பேசவும் எனக்கு வாய்ப்பில்லாமல் போய்விட்டது. இளவரசரை காஞ்சியிலிருந்து

ரணரசிகபுரம் வரை கண் போல காத்து இப்போது வரை உறக்கத்தையும் விட்டுவிட்டு காவல் செய்யும் உங்களுக்கு ஈடாக எதையும் சொல்ல முடியாது. யாரையும் சொல்ல முடியாது. அதற்காக உங்களைப் பாராட்டுகிறேன். நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். இளவரசர் காஞ்சியிலிருந்து வந்தது போலவே காஞ்சிக்குப் போய்ச் சேர வேண்டும். அவர் மீது தூசு படக்கூடாது. அதை நீங்கள் செய்வீர்கள். இருந்தாலும் அவருக்கு எதிரி எங்கே எந்த வடிவில் வருவான் என்பதைச் சொல்ல முடியாது. ஆகவே இளவரசரை உங்கள் கண்ணாகவே பாவித்து பாதுகாக்க வேண்டும்'' என்றான்.

''தலைவரே! நாங்கள் கைம்மாறு கருதாமல் கடமையைச் செய்பவர்கள். பல்லவ ராஜ குடும்பத்தினருக்காக எங்களை அர்ப்பணம் செய்து கொண்டு அதை உயிர் உள்ள வரை தவறாமல் செய்வதாகச் சபதம் செய்து கொண்டவர்கள். இது எங்களுக்குத் தவம். எங்களது புண்ணியம். எனவேதான் எங்கேயோ பிறந்த நாங்கள் பல்லவ ராஜ குடும்பத்தாருக்கு எங்கள் இனத்தையே கொடுத்துவிட்டோம். ஆகவே இளவரசரை பாதுகாக்கும் படி நீங்கள் சொல்வது எங்களை அவமானப்படுத்துவது போல் இருக்கிறது. பாதுகாப்பது ஒன்றே எங்கள் வேலை. வேறு வேலை எங்களுக்கு இல்லை'' என்றான் வீர பல்லவப் படை வீரன் ஒருவன்.

அவர்களில் ஒருவன் தன்னையே உற்று உற்று பார்த்துக் கொண்டிருந்ததை உணர்ந்த உதயசந்திரன், ''ஏன் நீங்கள் அப்படி பார்க்கிறீர்கள்? உங்களுக்கு என்ன வேண்டும்?'' என்று கேட்டான்.

வயதான வீரனான அவன் எழுந்து வந்து உதயசந்திரனின் அருகில் வந்து உற்று நோக்கினான். அவனைச் சுற்றி வந்தான். ''நீ அவனாக இருக்க முடியாது'' என்று முணுமுணுத்தான். பிறகு உதயசந்திரனை தனியே அழைத்துப் போய், ''உங்கள் அங்கியைச் சற்று கழற்றுங்கள். முதுகை மட்டும் காட்டினால் போதும்'' என்றான். எதுவும் புரியாத நிலையில் இருந்த உதயசந்திரன் அங்கியை நீக்கி முதுகைக் காட்டியதும் வயோதிக வீரன் வியப்படைந்தான். ''முக்கோண வடிவில் மூன்று மச்சங்கள். அதே அடையாளம். ஆனால் எப்படி?'' என்று முணுமுணுத்த அவன், ''நீ அவனில்லை'' என்றான்.

''வீரரே, நீங்கள் என்னைக் குழப்புகிறீர்கள். நான் அவனில்லை என்கிறீர்கள். நான் யார்? அவன் யார்?'' என்று கேட்டான் உதயசந்திரன்.

''நீ மெடோடஸ் என்று நினைத்தேன். ஆனால் நீ அவனில்லை. ஆனால் முக்கோண மச்சம் முதுகில் இருக்கிறது. குழந்தையாக இருக்கும்போது பார்த்தது...'' என்று சொன்ன வயோதிக வீரன் தனக்குத்தானே ஏதேதோ பேசினான்.

''வீரரே, மெடோடஸ் என்பது யார்?'' என்று கேட்டான்.

''எனக்குத் தெரியாது. அவர். அவருக்குத் தான் தெரியும்.''

''யார் அவர்?''

''கனிஷ்கர்.''

''எங்கே இருக்கிறார் அவர்?''

''தெரியாது. இல்லை. இறந்து விட்டார்'' என்று சொல்லி விட்டு மேற்கொண்டு எதுவும் பேசாமல் சென்றுவிட்டார்.

அவரது பேச்சும் போக்கும் உதயசந்திரனுக்குப் பிடிபட வில்லை. அதேசமயம் அந்த வயோதிக வீரன் எதையும் மேற்கொண்டு பேச விரும்பாமல் போய்விட்டதால் வேறு வழியில்லாமல் கோட்டையை விட்டு வெளியே சென்றான். நண்பர்களுடன் சந்திரலேகா இருந்த இடத்திற்குச் சென்றான். அங்கே முகமதுவும் அகமதுவும் கண்கள், கைகள், கால்கள், மற்றும் வாய் ஆகியவை கட்டப்பட்ட நிலையில் இருந்தார்கள். அதைக் கண்டதும் கால் கட்டைத் தவிர இதர கட்டுக்களை அவிழ்த்துவிடும்படிச் சொன்னான் உதயசந்திரன். அவனது கட்டளை உடனடியாக நிறைவேற்றப்பட்டன.

சந்திரலேகாவிடம் பிடிபட்டதிலிருந்து அவர்களது கால்கள் எப்போதுமே கட்டப்பட்ட நிலையிலேயே இருந்தன. கைகள், வாய், கண்கள் ஆகியவை தேவையான போது கட்டப்பட்டு வந்தன. சுமார் ஒரு நாழிகைக்கு மேல் நான்கு உறுப்புக்களும் கட்டப் பட்டிருந்ததால் பெரும் அவஸ்தைக்கு ஆளாகியிருந்த அந்த இரண்டு அராபியர்களும் கட்டுக்கள் அகற்றப்பட்ட பின் பெரும் ஆறுதலுக்கு ஆளாகி எதிரே நின்ற உதயசந்திரனைக் கோபத்துடன் பார்த்தார்கள்.

''உதயசந்திரா! இது அநியாயம், அக்கிரமம். அடாத செயல். எங்களை அடிமைகளைப் போல நடத்துவது கொடுமை. இது நல்லதற்கல்ல'' என்று கோபத்துடன் சொன்னார்கள்.

அருகில் இருந்த பரதன், ''இவரை உபதலைவர் என்று நீங்கள் அழைத்தால் உங்களுக்கு நல்லது. இல்லையென்றால் எதையுமே பேச முடியாதவாறு உங்கள் நாக்கு அறுபடும். எங்கள் தலைவரை

கௌரவக் குறைவாகப் பேசுபவர்களை நாங்கள் விட்டு வைப்பதில்லை'' என்றான்.

''அதை விடு பரதா. அவர்கள் எப்படி வேண்டுமானாலும் அழைக்கட்டும். எத்தனை நாட்களுக்கு அழைக்கப் போகிறார்கள்? கொஞ்ச காலத்திற்குத்தான்?'' என்று பரதனிடம் சொன்ன உதயசந்திரன் ''உங்கள் இருவரையும் கௌரவமாக நடத்த நீங்களென்ன தியாகிகளா? அல்லது நீங்கள் செய்வது தேச சேவையா? பல்லவ இளவரசரைக் கொல்ல முயன்ற பாதகர்கள் நீங்கள் என்பதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். சந்திரலேகாவின் பொறுப்பில் இருந்ததால் நீங்கள் இந்த அளவிற்காவது கருணை காட்டப்பட்டிருக்கிறீர்கள். மாறாக பரதனிடமோ, அரிச்சந்திரனிடமோ அல்லது ஐராவதனிடமோ சிக்கியிருந்தால் உங்கள் கண்களை இந்நேரம் தோண்டி யிருப்பார்கள். அது போகட்டும். எனது படையில் நீங்கள் எப்படிச் சேர்ந்தீர்கள்?'' என்று கேட்டான்.

''நாங்கள் தங்கியிருந்த சத்திரம் தீயிடப் பட்டபோது அங்கிருந்து தப்பினோம். பல்லவ இளவரசரைக் கொல்ல வேண்டுமென்றால் அவரது படையில் சேர்வது தான் நல்லது என்று தீர்மானித்தோம். உங்கள் படைகள் இரவில் ஓய்வெடுத்தபோது இரண்டு வீரர்களைக் கடத்திக் காட்டுக்குள் கொண்டு போய் கொன்றுவிட்டு அவர்களுக்குப் பதிலாக படையில் சேர்ந்து கொண்டோம்'' என்றான் முகமது.

''அது நடந்து முடிந்த கதை. அதைவிட்டுவிடுவோம். இப்போது நடக்கப் போகும் காரியத்தைப் பற்றிப் பேசுவோம்'' என்று சொன்ன உதயசந்திரன், ''கனிஷ்கர் இப்போது எங்கே இருக்கிறார்?'' என்று கேட்டான்.

''கனிஷ்கரா? யாரது? அவரைப் பற்றி எங்களிடம் எதற்காகக் கேட்கிறீர்கள்?'' என்று கேட்டான் முகமது.

உதயசந்திரன் தனது நண்பர்களைப் பார்த்து, ''இவர்கள் இருவரையும் இந்த மரத்திலேயே தலைகீழாகக் கட்டித் தொங்க விடுங்கள். கைகளையும் கண்களையும், வாயையும் கட்டி விடுங்கள். நாளை காலை வந்து விசாரிப்போம்'' என்று சொல்லிவிட்டு பதிலுக்குக் காத்திராமல் அங்கிருந்து சென்றான்.

☆

மறுநாள் காலை பெரும் ஆரவாரத்துடன் காஞ்சியை நோக்கிக் கிளம்பியது பல்லவர் படை. இளவரசன் மகேந்திரன் வீர பல்லவப்

படை சூழ புறப்பட்டான். சேனாதிபதி அவனுக்குப் பயணம் செய்வதற்கு தேர் ஒன்றை ஏற்பாடு செய்திருந்தார். அத்தேரில் ஏறி வெற்றிப் படையினூடே சென்ற மகேந்திரன் திரும்பிப் பார்த்தான். சில நாட்களுக்கு முன்பு வரை சிங்க கம்பீரத்துடன் காட்சியளித்துக் கொண்ட ரணரசிகபுரக் கோட்டை தற்போது சூறாவளியில் சிக்கிய மரக்கலத்தைப்போல சின்னாபின்னமாகி சோபையற்றுக் கிடந்தது. பருவ எழில் பூக்க நின்றிருந்த இளம் பெண் கற்பையெல்லாம் இழந்து விழுந்து கிடந்தது போல எழிலை யெல்லாம் எதிரிகளிடம் இழந்து விட்ட அக்கோட்டையானது ''எல்லோருமாகச் சேர்ந்து என்னை இப்படி ஆக்கிவிட்டீர்களே?'' என்று புலம்புவது போலத் தோன்றியது. படை வீரர்களில் பலர் இருதரப்பிலும் வீரமரண மடைந்து தகனம் செய்யப்பட்டு சாம்பலாகி விட்டிருந்தனர். போர்க்களத்திலிருந்து அவர்களது ஜீவன்கள் ஆயிரக்கணக்கில் கூடி, ''ஐயோ! ஐயோ! எங்கள் உடல்களைப் பிரித்து விட்டீர்களே! நாங்கள் எவ்வளவு காலத்திற்கு உடலின்றி அலைவது?'' என்று அரற்றுவது போலவும் இருந்தது இளவரசனுக்கு. அவனது சோக சிந்தனைகள் மேலும் வளராத வண்ணம் பல்லவ வீரர்கள் வெற்றி கோஷங்களை எழுப்பினார்கள்.

பல்லவர் படை முழுவதுமாக அகன்ற பிறகு முகமது, அகமது ஆகியோர் இருந்த இடத்திற்கு வந்த உதயசந்திரன் இருவரையும் இறக்கிவிடச் சொன்னான். இருவரும் தலைகீழாகக் கட்டி தொங்கவிடப் பட்டிருந்ததால் ரத்தம் தலைக்கேறி கனத்துப் போயிற்று. மயக்கம் அடைவதற்குள் உதயசந்திரன் வந்துவிட்டான். தலைகீழான நிலையிலிருந்து தலைமேலான நிலைக்கு வந்ததும் இருவரும் மயக்க மடைந்தார்கள். மயக்கம் தெளிவிக்கப்பட்டு இருவருக்கும் தேவையானவை தரப்பட்டன. ஓரளவிற்கு இருவரும் இயல்பு நிலைக்குத் திரும்பினர். உதயசந்திரனைப் பார்த்து, ''உப தலைவரே, இப்படி யெல்லாம் எங்களைச் சித்திரவதைகளைச் செய்வது உகந்தது அல்ல'' என்றார்கள்.

''சித்திரவதைகளைப் பற்றி அராபியர்களான நீங்கள் சொல்வது வினோதமாக இருக்கிறது. உங்கள் சித்திரவதைகளுக்கு முன் இதெல்லாம் ஒரு பொருட்டே அல்ல. நான் கேட்ட கேள்விக்கு மட்டும் நீங்கள் பதில் சொல்லாமல் போனால் அராபியர்கள் செய்யும் சித்திரவதைகளை நானும் செய்வேன். ஆகவே பிடிவாதம் செய்யாமல் நான் கேட்டதற்கு பதிலைச்

சொல்லுங்கள். கனிஷ்கர் எங்கே இருக்கிறார்?'' என்று கேட்டான் உதயசந்திரன்.

''தெரியாது என்று தான் சொல்லிவிட்டோமே.''

''பொய்யைச் சொன்னதால் தான் தலைகீழாகத் தொங்க விட்டேன். ஆகவே மீண்டும் பொய்யைச் சொல்ல வேண்டாம். உண்மையைச் சொல்லுங்கள். என் பிறப்பு ரகசியம் பற்றி அறிந்தவர் கனிஷ்கர். சுலைமான் ஏற்கெனவே என்னிடம் சொல்லியிருக்கிறார். உங்களுக்கும் அது தெரியும். அவர் இருக்கும் இடமும் உங்களுக்குத் தெரியும். அதைத்தான் கேட்கிறேன், சொல்லுங்கள்.''

''அவரது இருப்பிடம் சுலைமானுக்குத்தான் தெரியும். எங்களுக்குத் தெரியாது.''

உதயசந்திரன் பரதனைப் பார்த்தான். பரதன் ஐராவதனைப் பார்த்தான். ஐராவதன் அரிச்சந்திரனைப் பார்த்தான்.

''இவர்கள் இருவரும் உண்மையைச் சொல்ல மறுக்கிறார்கள். உண்மையைச் சொல்ல மறுக்கும் இவர்களுக்கு நாக்கு தேவையில்லை. அறுத்துவிடுங்கள்'' என்றான் உதயசந்திரன்.

''வேண்டாம். வேண்டாம். கனிஷ்கர் இருக்குமிடம் எங்களுக்குத் தெரியாது. உத்தேசமாகத் தான் தெரியும். வாதாபிச் சிறையில் அவர் இருக்கலாம்'' என்றான் முகமது.

மேற்கொண்டு அவர்களிடம் எதுவும் உதயசந்திரன் பேசவில்லை. அவர்களது கைகளைக் கட்டச் சொன்னான். பிறகு வாயையும் கண்களையும் கட்டினான். உணவு கொண்டு செல்லும் பாரவண்டியில் படுக்க வைத்து வண்டியோடு சேர்த்து கட்டினான்.

பிறகு நூறு பேர் கொண்ட அவனது படை வாதாபி கோட்டையை நோக்கிப் புறப்பட்டது.

திட்டப்படி வாதாபி மலைக்கோட்டையை அடைந்தான் உதயசந்திரன்.

ஆனால் எதிர்பாராத நபரிடம் அவன் சிக்க வேண்டிய தாயிற்று.

★★★



52

மலைக்கோட்டை

''ஐராவதா! வாதாபி மலைக்கோட்டையில் எவ்வளவு கைதிகள் இருப்பார்கள்?'' என்று கேட்டான் உதயசந்திரன்.

''எதிரி நாட்டைச் சேர்ந்த போர்க் கைதிகள் மட்டும்தான் வாதாபி மலைக்கோட்டையில் உள்ள சிறையில் இருக்கிறார்கள் உபதலைவரே. இதர குற்றவாளிகள் ரணரசிகபுரச் சிறையில் இருக்கிறார்கள். வாதாபிச் சிறையில் எவ்வளவு பேர் இருப்பார்கள் என்பதை அனுமானிக்க முடியவில்லை'' என்றான் ஐராவதன்.

''ஐராவதா! சிறை இருக்கும் இடம் மலைக்கோட்டை. அங்கே அதிகம் கைதிகள் இருந்தால் அவர்களுக்கு உணவு முதலிய அத்தியாவசியமான பொருட்களை கொண்டு செல்வது கடினமாக இருக்கும் அல்லவா?''

''ஆமாம்.''

''ஆகவே அச்சிறையில் அதிகம் பேர் இருக்கமாட்டார்கள் என்று நினைக்கிறேன்.''

''குறைந்த பட்சம் ஆயிரம் பேர் இருக்கலாம்.''

''அது கூட இருக்காது என்பது என் அனுமானம். அது போகட்டும். அந்தக் கைதிகளை நிர்வகிப்பது யார்?''

''வாதாபித் தளபதி என்ற ஒருவன் இருக்கிறான். அவன் தான் சிறையின் அதிகாரி. தனக்குத் தேவையான வீரர்கள் மற்றும் பணியாளர்களுடன் அவன் அங்கே இருக்கிறான்.''

''ஐராவதா! நாம் ரணரசிகபுரத்தை வென்றது - அதைத் சூறையாடியது - சாளுக்கிய மன்னன் காணாமல் போனது - ஆகிய விஷயங்களெல்லாம் அந்த வாதாபி தளபதிக்கு இந்நேரம் தெரிந்திருக்கும் அல்லவா?''

''ஆம்.''

''தெரிந்திருந்தால் அவன் என்ன செய்வான்?''

''தலைநகரத்தில் நிலைமைகள் மாறலாம். ஆனால் இந்த மலைக்கோட்டைச் சிறையின் நிலைமை மாறாது. சாளுக்கிய மன்னர் கைதிகளை விடுவித்துவிடும்படி கட்டளையனுப்பினால் விடுவிப்பார்கள். தற்போதைய நிலையில் அப்படியொரு கட்டளையை இட சாளுக்கிய மன்னர் இல்லை. ஆகவே சிறையில் உள்ள கைதிகள் அப்படியே தான் இருப்பார்கள்.''

''சாளுக்கியர்கள் தோற்றது கைதிகளுக்கும் தெரியக் கூடும் அல்லவா? தெரியும் பட்சத்தில் தங்களை விடுவிக்கக் கோரி அவர்கள் புரட்சி செய்யலாம் அல்லவா?''

''அப்படிச் செய்தால் அவர்களை அடக்கி வைக்க அங்கே தேவையான அமைதி படை இருக்கும்.''

''சாளுக்கியர்கள் தோற்று - தலைநகரம் சின்னாபின்னமாகி - மன்னனும் இல்லாமல் மக்களும் இல்லாமல் சூன்யமாகிக் கிடக்கிறது தலைநகரம். இப்படிப்பட்ட நிலையில் வாதாபி தளபதிக்கு கைதிகளைக் கட்டி மேய்க்க வேண்டிய அவசியமென்ன? யாருக்காக அவன் கைதிகளை பாதுகாக்க வேண்டும்?''

''நீங்கள் நினைப்பது போல் ரணரசிகபுரம் சூன்யமாகி விடப் போவதில்லை. இன்றோ அல்லது நாளையோ மக்கள் கோட்டைக்குள் வந்து விடுவார்கள். புனரமைப்பு வேலைகளில் ஈடுபடுவார்கள். காணாமல் போன மன்னரோ அல்லது அவரைக் கடத்தியவர்களோ வந்து ஆட்சி பீடத்தில் அமருவார்கள். சிதறி ஓடிய படைகளும் திரும்ப வரும். சேதாரங்கள் சீர் செய்யப்படும். ஒரு வாரத்தில் தலைநகரம் புத்துயிர் பெற்றுவிடும். ஆகவே அது வரையில் வாதாபித் தளபதி இயல்பாகவே நடந்து கொள்வான். மாற்றுச் சிந்தனையில் இறங்க மாட்டான்'' என்று சொன்ன ஐராவதன், ''வாதாபி மலைக்கோட்டையில் உள்ள கைதிகளை விடுவிக்க நாம் கஷ்டப்படுவதை விட நமது மொத்தப் படைகளையும் அங்கே திரட்டிச் சென்றால் போதுமல்லவா?'' என்று கேட்டான்.

''முதலில் அப்படித்தான் நானும் யோசித்தேன். பிறகு விட்டுவிட்டேன். காஞ்சிக்குத் திரும்பும் பிரதானப் படைக்குச் சில்லரை வேலைகளைக் கொடுத்து தாமதப்படுத்தக் கூடாது. ஒரு வேளை தாமதத்தைப் பொருட்படுத்தாமல் மொத்தப் படையும் அங்கே திரண்டால் வாதாபித் தளபதி அங்கிருக்கும் கைதிகளைக் கொன்றுவிடக் கூடும். கைதிகளை நாம் சேதாரமில்லாமல் சாமர்த்தியமாகச் சமாளித்து வெளியேற்ற வேண்டும்.

அதற்காகத்தான் இதை என் பொறுப்பில் வைத்துக் கொண்டேன். இதில் என் சுயநலமும் இருக்கிறது.''

''சுயநலமா?''

''ஆம் ஐராவதா. மலைக்கோட்டைச் சிறையில் இருக்கும் கனிஷ்கரை நான் அவசியமாகச் சந்திக்க வேண்டும். அதற்கு நமது வழிமுறை தான் ஏற்றது.''

''என்ன தந்திரத்தை மேற்கொள்ளப் போகிறீர்கள்?''

''முதலில் மலைக்கோட்டையை அடைவோம். பிறகு யோசிப்போம்.''

இதற்கு மேல் யாரும் பேசிக் கொள்ளவில்லை.

நான்கு நாட்களுக்குப் பிறகு வாதாபி மலைக்கோட்டையை அடைந்தார்கள்.

மலைக்கோட்டைக்கு முன்பே இருந்த காட்டுப் பகுதியில் தனது வீரர்களை நிறுத்திய உதயசந்திரன் மலைக்கோட்டையை நோக்கினான்.

வடக்கும் தெற்குமாக நீண்டிருந்த மலைப் பிரதேசத்தில் உயரமாக இருந்த இடத்தில் கட்டப்பட்டிருந்தது கோட்டை. அதற்கு கீழே இருந்து வளைந்து வளைந்து சென்றது மலைப் பாதை. மலைப்பாதையின் ஆரம்பத்தில் நான்கைந்து வீரர்கள் காவலுக்கு நின்றிருந்தார்கள். மலைக்கோட்டைக்கு போக வேண்டுமென்றால் மலைப்பாதையைத் தவிர வேறு வழியில் செல்ல முடியாது என்பதையும் அப்படி அந்தத் திறந்த வெளி மலைப்பாதை மூலம் யார் சென்றாலும் மேலே கோட்டையில் இருப்பவர்களுக்குத் தெரியாமல் மேலே செல்ல முடியாது என்பதையும் உணர்ந்து கொண்டான் உதயசந்திரன்.

ஐராவதனைப் பார்த்து, ''ஐராவதா! உன்னிடம் சாளுக்கிய ஒற்றன் என்பதற்கான முத்திரை மோதிரம் இருக்கிறதல்லவா?'' என்று கேட்டான்.

''இருக்கிறது உபதலைவரே.''

''அதைப் பயன்படுத்தி நீ மலைக்கோட்டைக்குச் செல்லலாம் அல்லவா?''

''செல்லலாம்.''

''அப்படியானால் அந்த மோதிரத்தைக் காட்டி மேலே செல். வாதாபி தளபதியைச் சந்தி. ரணரசிகபுரத்திற்கு மன்னர் திரும்பி விட்டதாகச் சொல். பல்லவர் படை மலைக்கோட்டையைத் தாக்க

வருவதாகவும் அதனால் சிறைக் கைதிகளை அங்கிருந்து கிளப்பி ரணரசிகபுரத்திற்குக் கொண்டு வந்துவிடும்படி மன்னர் ஆணையிட்டதாகச் சொல். சொல்லிவிட்டு நீ அங்கே இருக்க வேண்டாம். உடனடியாகத் திரும்பிவிடு.''

''அப்படியே ஆகட்டும்'' என்று சொல்லிவிட்டுப் புறப்பட்டான் ஐராவதன்.

மலைப்பாதை நுழைவில் மோதிரத்தைக் காட்டிவிட்டு அங்கிருந்த வீரர்கள் அனுமதியளித்ததால் மேலே ஏறிச் சென்றான்.

ஆனால் மேலே சென்று வெகுநேரமாகியும் திரும்ப வில்லை.

'இவ்வளவு நேரமாகப் பேசுவதற்கு விஷயம் இல்லையே? என்ன தான் செய்கிறான் ஐராவதன்?' என்று முணுமுணுத்தான் உதயசந்திரன்.

பரதன் பேச முற்பட்டு ''உபதலைவரே, ஐராவதன் என்ன இருந்தாலும் சாளுக்கியன். மலைக்கோட்டைக்குச் சென்றபின் மனம் மாறி இருக்கலாம். நம்மைக் காட்டிக் கொடுத்திருக்கலாம்'' என்றான்.

''அப்படிக் காட்டிக் கொடுத்திருந்தால் நம்மை அழிக்க மேலேயிருந்து சாளுக்கிய வீரர்கள் புறப்பட்டிருக்க வேண்டும்'' என்று சொன்ன உதயசந்திரன், ''ஐராவதன் நம் நண்பன் பரதா. அவனைச் சந்தேகிக்காதே. நம்மைக் காட்டிக் கொடுக்க எத்தனையோ சந்தர்ப்பங்கள் இருந்தன. ஆனால் அவன் அப்படிச் செய்யவில்லை. போரின்போது கூட அவன் சாளுக்கிய வீரர்களைத்தான் எதிர்த்தான். அவன் எண்ணியிருந்தால் போரின் போது நமது இளவரசரைக் கூட குறுவாள் எறிந்து வீழ்த்தியிருக்க முடியும். அவனோ அவ்வாறு முயலவில்லை. அப்படிப் பட்டவன் போயும் போயும் இந்தச் சிறைச்சாலையிலா நம்மைக் காட்டிக் கொடுக்கப் போகிறான்? அப்படிச் செய்வதால் என்ன லாபம் அவனுக்கு? நம்மை அழிக்கலாம். அவ்வளவுதான். நாம் இருந்தாலென்ன? போனாலென்ன? பல்லவரது படையெடுப்பின் நோக்கம் ஈடேறிவிட்டதல்லவா?'' என்றான்.

அப்போது அரிச்சந்திரன், ''உபதலைவரே! அங்கே பாருங்கள்'' என்று மலைப்பாதையைச் சுட்டிக் காட்டினான்.

மலைப்பாதையில் புரவி வீரன் ஒருவன் கீழே வந்து கொண்டிருப்பது தெரிந்தது.

''அவன் ஐராவதன் இல்லை'' என்றான் பரதன்.

உதயசந்திரன் அதைக் காதில் வாங்கிக் கொள்ளாமல் புரவி வீரனையே கவனித்தான்.

அவன் மலைப்பாதை நுழைவு வாசலில் இருந்த வீரர்களிடம் ஏதோ பேசிவிட்டு வெளியே வந்ததை கவனித்த உதயசந்திரன் தனது வீரர்களுக்கு சைகை காட்டினான்.

உடனே பத்து வீரர்கள் அந்தப் புரவி வீரன் காட்டுப் பகுதியைக் கடந்து சென்றபோது பாய்ந்து சென்று பிடித்து வந்து உதயசந்திரனிடம் நிறுத்தினார்கள்.

உதயசந்திரனையும் அவனுடன் இருந்த வீரர்களையும் பார்த்து சற்றே மிரண்டான். ''நீங்களெல்லாம் யார்?'' என்று கேட்டான்.

''நாங்கள் படை வீரர்கள். பல்லவர்கள். இந்த மலைக் கோட்டையில் இருக்கும் கைதிகளை விடுவிக்க வந்திருக்கிறோம்'' என்றான் உதயசந்திரன்.

புரவி வீரனுக்கு அதை நம்புவதற்கு சிரமம் ஏதும் இருக்கவில்லை. சாளுக்கியரை பல்லவர் படை வென்றுவிட்ட விஷயம் அவனுக்குத் தெரிந்திருந்ததால் மலைக்கோட்டையில் இருக்கும் கைதிகளை விடுவிக்கப் பல்லவர் படை முயலும் என்பது அவனுக்கு நியாயமாகவும் இயல்பானதாகவும் தோன்றியது.

''என்னை எதற்காகப் பிடித்தீர்கள்?'' என்று கேட்டான்.

''உன்னால் சில காரியங்கள் ஆக வேண்டும்'' என்றான் உதயசந்திரன்.

''நான் வெறும் செய்தி அறிவிப்பாளன். செய்திகளைப் பரிமாறுபவன். என்னால் எதுவும் செய்ய முடியாது.''

''உன் பெயர் என்ன?''

''சங்கீதன்.''

''மலைக்கோட்டைக்குச் சற்று முன்னர் எங்களைச் சேர்ந்தவர் ஒருவர் வந்தார். அவர் என்ன ஆனார்?''

''எனக்கு எதுவும் தெரியாது. அப்படி யாரையும் நான் பார்க்கவில்லை.''

''மலைக்கோட்டைச் சிறையில் எத்தனை கைதிகள் இருக்கிறார்கள்?''

''அது ரகசியம்.''

''சங்கீதா! சாளுக்கியத் தலைநகரையே வென்று சூறையாடி விட்டது பல்லவர் படை. இனி என்ன ரகசியம் வேண்டி

யிருக்கிறது? உண்மையைச் சொல்லி ஒத்துழைத்தால் உன் உயிர் பிழைக்கும்.''

''சிறையில் ஐந்நூறு கைதிகள் இருக்கிறார்கள்.''

''பாதுகாப்பு பணியில் எத்தனை வீரர்கள் இருக்கிறார்கள்?''

''இருநூறு பேர்.''

''சிறையை நிர்வகிப்பது யார்?''

''வாதாபித் தளபதி.''

''நல்லது சங்கீதா. நான் இப்போது மேலே போக வேண்டும். என்னை அனுமதிப்பதற்கு நீ ஓர் ஓலை எழுதித் தந்தால் போதும்.''

''என்னிடம் ஓலை இல்லை.''

''எங்களிடம் எல்லாம் இருக்கிறது.''

''என்னவென்று எழுத வேண்டும்?''

''வாதாபித் தளபதிக்கு வேண்டியவர். உடனே அனுமதிக்கவும் என்று எழுதினால் போதும்.''

''நீங்கள் போகப் போகிறீர்களா?''

''ஆமாம்.''

அப்போது பரதன் குறுக்கிட்டு, ''உபதலைவரே, நீங்கள் இப்போது மலைக்கோட்டைக்குச் செல்ல வேண்டாம். நானும் ஹரிச்சந்திரனும் போகிறோம்'' என்றான்.

''போய் என்ன செய்வீர்கள்?''

''நிலைமையை அறிந்து வருகிறோம்.''

உதயசந்திரன் சற்று யோசித்துவிட்டு ''சரி'' என்றான்.

சங்கீதன் ஓலையை எழுத ஒரு பிரச்சனையும் இன்றி பரதனும் அரிச்சந்திரனும் மலைக்கோட்டைக்குச் சென்றார்கள்.

ஆனால் அவர்களும் திரும்பவில்லை.

''சங்கீதா! நீ அனுப்பிய எனது வீரர்கள் இருவரும் இன்னும் திரும்பவில்லை. ஏற்கெனவே போனவனும் வரவில்லை. மொத்தம் மூன்று பேர். என்ன ஆயிற்று அவர்களுக்கு?''

''ஐயா! என்னைக் கேட்டால் எனக்கென்ன தெரியும்? நானும் உங்களுடன் இங்கேதானே இருக்கிறேன்?''

''அது தெரிகிறது. மேலே உள்ள நடைமுறையைப் பற்றிச் சொல்.''

''நுழைவாயிலில் உள்ளது போலே மேலே ஒரு நுழைவாயில் இருக்கிறது. அங்கேயும் வீரர்கள் இருக்கிறார்கள். அவர்கள் அனுமதித்துவிட்டால் வாதாபித் தளபதியைச் சந்திக்கலாம்.''

''ஓலையில் நீ ஏதாவது ரகசிய குறிப்பை எழுதியிருந்தாயா?''

''எழுதியிருந்தால் நுழைவாயிலில் உங்கள் வீரர்களை எங்கள் வீரர்கள் சிறை செய்திருக்க மாட்டார்களா?''

கீழ் நுழைவாயிலில் அனுமதித்திருக்கலாம். ஆனால் மேலே சிறை செய்திருக்கலாம் அல்லவா?''

''செய்திருக்கலாம். ஆனால் ஓலையில் நான் எதையும் எழுதவில்லை. என் உயிர் உங்கள் கையில் இருக்கிறது.''

அப்போது அகமது குறுக்கிட்டு, ''உபதலைவரே! எங்கள் மீது நம்பிக்கை இருந்தால் எங்கள் இருவரையும் அனுப்பி வையுங்கள். நாங்கள் இவனையே கூட அழைத்துப் போகிறோம். இவனை மிஞ்சி எதுவும் நடந்துவிடாது.'' என்றான்.

''போய் என்ன செய்வீர்கள்?''

''இவனை வைத்துக் கொண்டே உண்மை நிலையை அறிந்து கொண்டு வாதாபித் தளபதியை இங்கே கடத்தி வருகிறோம்.''

''சரி. கிளம்புங்கள்'' என்றான் உதயசந்திரன்.

அப்போது மாலை நேரமாகிவிட்டிருந்தது.

''உபதலைவரே, இதென்ன இந்த அராபியர்களைப் போய் அனுப்பி விட்டீர்களே? அவர்கள் எப்படி நமக்கு உதவுவார்கள்? மேலே போனதும் காட்டிக் கொடுத்துவிட்டு தப்பிவிட்டால் என்ன செய்வீர்கள்?'' என்று கேட்டாள் சந்திரலேகா.

''காட்டிக் கொடுத்தால் என்ன ஆகப் போகிறது? நம்மை அழிக்க மேலே உள்ள வீரர்கள் முயலுவார்கள். அதைப் பற்றிக் கவலையில்லை. அழிக்க வருபவர்களைச் சமாளிக்க என்னால் முடியும். அதோடு அகமதுவும் முகமதுவும் தப்பிச் சென்றாலும் பாதகமில்லை. அவர்களால் ஆகக் கூடியது எதுவும் இல்லை. என் கவலையெல்லாம் மேலே போனவர்களெல்லாம் என்ன ஆனார்கள் என்பதுதான்'' என்றான் உதயசந்திரன்.

''அப்படியானால் நான் ஒரு யோசனை சொல்லட்டுமா?'' என்று கேட்டாள் சந்திரலேகா.

''சொல்.''

''இன்னும் சிறிது நேரத்தில் இரவு வந்துவிடும். நாம் இங்கிருந்து மெதுவாக நகர்ந்து நுழைவாயிலில் இருக்கும்

வீரர்களை வெட்டிச் சாய்த்துவிட்டு மலைக்கோட்டைக்குப் போனாலென்ன? நம்மை அவர்களால் எதிர்பார்க்க முடியாதல்லவா?''

''அப்படிச் சொல்ல முடியாது சந்திரலேகா. நம்மவர்கள் அங்கே இருக்கிறார்கள். அவர்கள் மூலம் நம்மைப் பற்றி அறிந்திருக்கலாம். நம்மைத் தாக்குவதற்கு ஏற்பாடுகளைச் செய்திருக்கலாம். ஆகவே நாம் மேலே சென்றால் மேலோகத்திற்குத் தான் செல்ல வேண்டும். அதோடு நம்மவர்கள் நிலை தெரியாமல் நாம் மேலே செல்வது சரியல்ல.''

''அப்படியானால் நான் செல்கிறேன் உபதலைவரே. நீங்கள் நுழைவாயிலில் உள்ள வீரர்களை வீழ்த்திவிட்டு நம் வீரர்களை நிறுத்தி வையுங்கள். நான் மேலே போகிறேன்.''

''போய்?''

''இதுவரையில் மேலே போனவர்கள் ஆண்கள். நான் பெண். பெண் என்றால் பேயும் இரங்கும். வீரர்களும் மயங்குவார்கள். அங்கே உள்ளத் தளபதி எப்பேர்பட்டவனாக இருந்தாலும் உங்களைப் போல கற்பாறையாக இருக்க மாட்டான். அவனை என் வலையில் வீழ்த்துகிறேன். வீழ்த்தி விட்டு அதோ மலைக்கோட்டை முகப்பில் இருக்கிற பந்தத்தை ஆட்டுகிறேன். அப்போது நீங்கள் வீரர்களுடன் மேலே வாருங்கள்.''

''நீ சொல்வது சரிதான். ஆனால் ஏற்கெனவே நமது ஆண் நண்பர்களையும் அகமது முகமது ஆகியோரையும் அனுப்பி விட்டுத் திரும்பி வராத நிலையில் பெண்ணான உன்னைத் தனியே அனுப்ப வேண்டுமா என்று தான் யோசிக்கிறேன்.''

''அதற்குப் பதில் நான் செல்கிறேன். நான் பெண் என்பதால் அனுகூலம் என்பதால்தான் நான் போவதாகச் சொல்கிறேன். என்னை யாரும் எளிதாக ஏமாற்றி விட முடியாது. எனக்கு ஆபத்து வராது. நீங்கள் இங்கே இருந்தால்தான் இங்கிருக்கும் வீரர்களை இயக்க முடியும்.''

''சரி சந்திரா. எதற்கும் நான்கைந்து குறுவாட்களை இடைக் கச்சையில் மறைவாக வைத்திரு'' என்று சொன்ன உதயசந்திரன் பத்து வீரர்களை அழைத்துக் கொண்டு இருள் பகுதியிலேயே மறைந்து சென்று மலைக்கோட்டையின் அடிவார வாயிலில் இருந்த ஐந்து வீரர்களையும் எதிர்பாராத நிலையில் மடக்கி வீழ்த்தினான். அவர்களுக்கு பதிலாக தனது பத்து வீரர்களை அங்கே நிறுத்தினான். சந்திரலேகாவை மலைக்கோட்டைக்கு அனுப்பிவிட்டு பழையபடி காட்டுப் பகுதிக்கு வந்தான்.

நேரம் ஆகிக் கொண்டே இருந்தது.

''உபதலைவரே, சந்திரலேகாவிடமிருந்து அடையாளம் எதுவும் வரவில்லையே? நேரமும் ஆகிறதே!'' என்றார் ஒரு வீரன்.

''இவருக்கும் ஆபத்து வந்திருக்குமோ?'' என்று கேட்டான் மற்றொருவன்.

உதயசந்திரன் பதிலேதும் சொல்லவில்லை.

மேலும் சிறிது நேரம் கடந்தது.

வீரர்கள் சிலர், ''உபதலைவரே, அதோ பாருங்கள். மலைக்கோட்டையின் உச்சியில் பந்தம் ஆட்டப்படுகிறது'' என்றான்.

''வீரர்களே! இப்போதைக்கு எல்லோரும் மேலே போக வேண்டாம். நான் மட்டும் மேலே செல்கிறேன். நிலைமை சாதகமாக இருந்தால் நானும் பந்தத்தை அசைக்கிறேன். அப்போது நீங்கள் வந்தால் போதும். என்னிடமிருந்து சமிக்ஞை வரும் வரை யாரும் இந்த இடத்தை விட்டு நகர வேண்டாம்'' என்றுச் சொல்லிவிட்டு மலைக்கோட்டையை நோக்கிச் சென்றான்.

நுழைவாயிலில் இருந்த வீரர்களையும் எச்சரிக்கை செய்துவிட்டு மலைப்பாதையில் ஏறி மலைக்கோட்டையை அடைந்தான் உதயசந்திரன்.

மேலே கோட்டை வாசலில் பலமான பாதுகாப்பு இருந்தது.

அங்கு சென்றதுமே, ''பல்லவ உபதலைவன் உதயசந்திரன் வந்திருப்பதாக வாதாபி தளபதியிடம் சொல்லுங்கள்'' என்றான்.

''நீங்கள்தான் உதயசந்திரனா? உங்களுக்காகத்தான் தளபதி காத்திருக்கிறார். நீங்கள் வந்ததும் உடனே அழைத்து வரச் சொல்லியிருக்கிறார்'' என்று சொன்ன வீரர்கள் அவனை உள்ளே அழைத்துச் சென்றார்கள்.

தனக்காக வாதாபி தளபதி காத்திருப்பதாக வீரர்கள் சொன்னது உதயசந்திரனுக்கு விரோதமாக இருந்தது. 'பார்ப்போம் என்னதான் நடக்கிறதென்று எண்ணிக் கொண்டு' அவர்களுடன் சென்றான்.

உள்ளே பெரிய கூடம் ஒன்றிருந்தது.

அதில் நிறைய பந்தங்கள் ஏற்றப்பட்டிருந்தன.

அங்கே இருந்த தூண்களில் ஐராவதன், பரதன், அரிச்சந்திரன், சந்திரலேகா ஆகியோர் கட்டப்பட்டிருந்தனர். அவர்களது வாயும் கண்களும் கூடக் கட்டப்பட்டிருந்தன.

''இவர்களெல்லாம் யாரென்பது உங்களுக்கே தெரியும்'' என்று சொன்ன வீரர்கள் பக்கத்து அறைக்கு அவனை அழைத்துச் சென்றார்கள்.

அங்கேயும் ஒரு மனிதன் கட்டப்பட்டிருந்தான்.

''இவர்தான் வாதாபி தளபதி'' என்றார்கள் வீரர்கள்.

''இவர் ஏன் கட்டப்பட்டிருக்கிறார்?'' என்று கேட்டான் உதயசந்திரன்.

''அது உங்களுக்குத் தேவையில்லாத விஷயம்'' என்று சொன்ன வீரர்கள் அவனை அடுத்த அறைக்கு அழைத்துச் சென்றார்கள்.

அங்கே ஒரு மனிதன் உறங்கிக் கொண்டிருந்தான்.

அவனைச் சுட்டிக்காட்டிய வீரர்கள், ''இவர்தான் சாளுக்கிய பிரதான சேனாதிபதி வீரகேசரி'' என்றார்கள்.

உதயசந்திரனுக்கு அவரைக் கண்டதும் போர்க்களத்தில் கோட்டைத் தளபதி கூறிய வார்த்தைகள் நினைவுக்கு வந்தன. எனினும் உணர்ச்சி வசப்படவில்லை.

''நீங்கள் அடுத்த அறைக்குச் செல்லலாம். உங்களுக்காகக் காத்திருப்பவர் அங்கே இருக்கிறார்'' என்று கூறி அறைக்குள் அனுப்பி வைத்தார்கள் வீரர்கள்.

அறை காலியாக இருந்தது.

சுற்றும் முற்றும் பார்த்தான் உதயசந்திரன்.

அப்போது 'ஜல் ஜல்' என்ற ஓசையொன்று கேட்டது.

இரண்டொரு பாத்திரங்கள் சிதறி விழுந்ததற்கு அத்தாட்சியாக சப்தம் எழுந்தது.

அதையடுத்து அறையில் பிரவேசித்தாள் விஜயகுமாரி.

'இவளா?' என்று தனக்குத்தானே கேட்டுக் கொண்டான் உதயசந்திரன்.

அவ்விடம் வகையாகச் சிக்கிக் கொண்ட உணர்வு அவனுக்கு ஏற்பட்டது.

☆☆☆



53

மீண்டும் விஜயகுமாரி

மலைக்கோட்டைக்குள் நுழைந்தது முதல் உணர்ச்சி வசப்படக்கூடிய காட்சிகளையே அடுத்தடுத்து காண நேரிட்டாலும் உணர்ச்சிகளை நினைத்த மாத்திரத்தில் கட்டுப்படுத்திக் கொள்வதில் தேர்ந்தவனான உதயசந்திரன் எதிர்பாராத காட்சிகளின் உச்சகட்டமாக விஜயகுமாரியைக் கண்டதும் 'இவளா?' என்று எண்ணி வியந்தாலும் வியப்பைக் காட்டிக் கொள்ளாமல் அவளை ஒருமுறை நோக்கினான்.

எப்போதும் போலவே அளப்பரிய ஒப்பனைகளாலும் குறைவான ஆடை அலங்காரங்களாலும் காண்போரை மயக்கவல்ல கவர்ச்சிப் பாவையாகத் தோன்றும் விஜயகுமாரி தற்போதும் அதே கவர்ச்சியோடும் காந்தச் சக்தியோடும், காமப் பார்வையோடும் தான் இருந்தாள். மயிலைப்போல வந்து மஞ்சத்தில் அவள் அமர்ந்து கொண்டாள்.

''வணக்கம் ராஜகுமாரி'' என்றான் உதயசந்திரன் சாதாரணமாக.

''உதயசந்திரா! உன் நடிப்பையெல்லாம் நிறுத்திவிடு. ஏனென்றால் நீ இப்போது உன் வாழ்க்கையின் இறுதிக் கட்டத்தில் இருக்கிறாய்'' என்றாள் விஜயகுமாரி உணர்ச்சியற்ற குரலில்.

''நீங்கள் சொல்வது எனக்கு விளங்கவில்லை ராஜகுமாரி'' - அப்பாவியைப் போலக் கேட்டான் உதயசந்திரன்.

''விளங்கவில்லையா? எது விளங்கவில்லை?''

''நான் நடிப்பதாகச் சொன்னீர்கள்...''

''நடிப்பில்லாமல் என்ன? ஆரம்பத்திலிருந்தே நீ என்னிடம் காட்டியது நடிப்புதான்.''

''நான் காட்டியது நடிப்புதான் என்றால் என்னை ஏன் விட்டு வைத்தீர்கள் ராஜகுமாரி?''

''நீ என்னை ஏமாற்றுவது தெரியாமல் நான் இதுவரை ஏமாந்து வந்தேன். இனி ஏமாறத் தயாராக இல்லை. நீ உன் வாழ்க்கையின் கடைசி கட்டத்திற்கு வந்துவிட்டாய்.''

''மரணத்தைச் சொல்கிறீர்களா ராஜகுமாரி?''

''ஆமாம். இனி நீ தப்ப முடியாது.''

''ராஜகுமாரி! நான் போர் வீரன். மரணத்திற்காக அஞ்சியதில்லை.''

''எப்படியிருந்தால் என்ன? மரணம் மரணம்தானே?''

''இப்போதே தங்கள் கையால் நான் மரணமடையத் தயாராக இருக்கிறேன். என்னை உங்கள் இஷ்டத்திற்கு எதை வேண்டுமானாலும் செய்து கொள்ளுங்கள். ஆனால் எனது நண்பர்களை விட்டுவிடுங்கள்.''

''யாரது உன் நண்பர்கள்?''

''ஐராவதன், பரதன், அரிச்சந்திரன், சந்திரலேகா.''

''உன் நண்பர்களை ஏன் விடவேண்டும்?''

''உங்கள் விவகாரத்தில் அவர்கள் யாரும் சம்பந்தப்பட வில்லை. அவர்களைத் தண்டிக்க வேண்டாம் ராஜகுமாரி.''

''உதயசந்திரா! உன்னை நம்பி என் உதவியாளனாக வைத்துக் கொள்ள விரும்பினேன். ஒப்புக் கொண்டு ஓடிவிட்டாய். அது என் முதல் ஏமாற்றம். பல்லவ சேனாதிபதி பல்லவ இளவரசனைக் கொல்வதாக வாக்களித்தார். அதை நிறைவேற விடாமல் கெடுத்தாய். அது என் இரண்டாவது ஏமாற்றம். சுலைமான் உன்னைப் பல்லவ இளவரசனைக் கொல்லும்படி ஏவினார். நீயோ அதைச் செய்யவில்லை. அது என் மூன்றாவது ஏமாற்றம். அகமதுவும் முகமதுவும் பல்லவ இளவரசனைக் கொல்ல முயன்றார்கள். அதையும் நீ தடுத்துவிட்டாய். அது என் நான்காவது ஏமாற்றம். ஐந்தாவது ஏமாற்றமும் உண்டு. அதை நான் என் வாயால் சொல்ல வேண்டியதில்லை. இவ்வளவு ஏமாற்றங்களைச் செய்த உன்னையும் உன் நண்பர்களையும் எதற்காக நான் உயிரோடு விட வேண்டும்?'' என்று கேட்ட விஜயகுமாரி அருகில் இருந்த மதுவைக் குடித்தாள்.

''ஆறாவது ஏமாற்றம் பற்றிச் சொல்லவில்லையே ராஜகுமாரி?'' என்று கேட்டான் உதயசந்திரன்.

''எதைச் சொல்கிறாய்?''

''தங்கள் சகோதர - சாளுக்கிய மன்னர் விஜயாதித்தர் போரில் தோற்றுப்போய் காணாமல் போய்விட்டாரே இது உங்களுக்கு ஏமாற்றமில்லையா?''

''முட்டாள். இந்த முடிவு எனக்கு ஏமாற்றமல்ல. மகிழ்ச்சியானது.''

''சாளுக்கிய அரியணையில் தாங்கள அமரப் போகிறீர்களா ராஜகுமாரி?''

''அமரக் கூடாதா நான்?''

''அமரலாம். ஆனால் பல்லவ அரியணை? அதில் அமரப் போவதில்லையா?''

விஜயகுமாரி எழுந்து கொண்டாள்.

''உதயசந்திரா! நான் பல்லவ அரியணையிலும் அமர ஆசைப்பட்டேன். சாளுக்கிய அரியணையிலும் அமர ஆசைப் பட்டேன்.''

''அதெப்படி ராஜகுமாரி?''

''நான் சொல்வதை பொறுமையாகக் கேள். உனக்கு ஓர் உண்மையை நான் சொல்லப் போகிறேன்.''

''அப்படியானால் இதுவரைச் சொன்னதெல்லாம் பொய்களா?''

''இல்லை. பொய்களல்ல. உண்மைகள். நீ அறிந்த உண்மைகள். இப்போது நான் சொல்லப் போவது நீ அதிர்ந்து போகக்கூடிய உண்மை.''

''சொல்லுங்கள் ராஜகுமாரி.''

''நான் ராஜகுமாரி அல்ல. சாளுக்கிய மன்னனின் சகோதரியும் அல்ல.''

இந்த உண்மையை ஐராவதன் மூலம் பனையூரிலேயே உதயசந்திரன் அறிந்து கொண்டிருந்தாலும் ஒன்றும் தெரியாதவனைப் போல ''இதென்ன சொல்கிறீர்கள் ராஜகுமாரி? சாளுக்கிய ராஜகுமாரி இல்லை என்றால் சாளுக்கிய ராணியா? விஜயாதித்தர் தங்கள் கணவரா?'' என்று பதட்டப்படுவதுபோல் கேட்டான்.

''அதுவும் இல்லை. இன்னும் சொல்லப்போனால் அரச வம்சத்திற்கும் எனக்கும் எந்தத் தொடர்பும் இல்லை.''

''அப்படியானால் தாங்கள் யார்?''

''யாராயிருந்தால் உனக்கென்ன? பலவித கனவுகளோடு காஞ்சிக்கு வந்தேன். அங்கே பல்லவ சேனாதிபதியும் அராபிய சுலைமானும் ஆசையை மூட்டினார்கள். பல்லவ அரியணையைப் பெற்றுத் தருவதாக வாக்களித்தார்கள். அதற்காகக் காஞ்சியில் இருந்த நான் சாளுக்கிய அரசகுமாரியாக நடித்தேன்.''

''அப்படியா?''

''ஆம். ஆனால் அந்தக் கனவு சிதைந்துவிட்டது. வாதாபிக்கு வந்தேன். சாளுக்கிய சேனாதிபதியின் உதவி எனக்குக் கிடைத்துவிட்டது. சாளுக்கிய அரியணையும் காலியாகிவிட்டது. அதில் நான் அமர்வது உறுதி.''

இவளது கனவுகளுக்கு விவஸ்தையே இல்லையா என்று நினைத்தான் உதயசந்திரன். இரு நாட்டுச் சேனாதிபதிகளுக்கும் ஆசை நாயகியாக இருந்து கொண்டு அரியணையைப் பற்றிய அபரிமித கனவில் திளைத்த அவளைப் பெண்ணாகவே எண்ண முடியவில்லை அவனால்.

விஜயகுமாரி இப்படி சொல்லி முடித்தபோது அடுத்த அறையிலிருந்து மலை போல எழுந்து வந்தார் சாளுக்கிய சேனாதிபதி வீரகேசரி.

சாளுக்கிய சேனாதிபதி செய்த துரோகங்களைப் பற்றி கோட்டைத் தளபதி தன்னிடம் சொல்லியதையும் அவரைக் கொன்றால்தான் பல்லவர் வெற்றி நிறைவு பெற்றதாக இருக்கும் என்று கூறியதையும் நினைவுகூர்ந்த உதயசந்திரன் இவரை இங்கேயே இப்போதே வெட்டிப் போட்டாலென்ன என்று நினைத்து அந்த நினைப்பை மறுகணமே அடக்கிக் கொள்ளவும் செய்தான்.

இதற்கிடையில் அந்த அறையில் அவனிருப்பதைக் கண்டு வெகுண்ட அவர், ''விஜயகுமாரி, உன் அறை வரையில் வந்திருக்கும் இந்த அசடன் யார்? உன் அடிமையா? அல்லது உன்னைப் பலாத்காரம் செய்ய வந்த தூர்த்தனா?'' என்று கேட்டுவிட்டு அங்கிருந்த மதுவை எடுத்து தண்ணீரைப் போல் குடித்துவிட்டு ஆசனத்தில் அமர்ந்தார்.

விஜயகுமாரி பேசமுற்பட்டு, ''ஐயா, இவர் என் அடிமையுமல்ல. தூர்த்தனும் அல்ல. பல்லவ உபதலைவர் உதயசந்திரன்'' என்றாள்.

''யார்? அந்தத் தந்திரசாலிப் பல்லவனா? சாளுக்கியர் படையை துவம்சம் செய்த அரக்கனா?'' என்று கேட்டு அவனை

அசூயையுடன் பார்த்த அவர், ''இந்த அயோக்கியன் உன் அறைக்கு எப்படி வந்தான்?'' என்று கேட்டார்.

''என் அறைக்கு ஈ எறும்புகூட என் அனுமதியில்லாமல் வர முடியாது என்பது தங்களுக்குத் தெரியாதா? நான் தான் இவனை இங்கே வரவழைத்தேன்'' என்றாள் விஜயகுமாரி.

''எதிரியை எதற்கு உன் அறைக்கு வரவழைத்தாய்?'' என்றுச் சீறினார் வீரகேசரி.

''உறவாடவா எதிரியை வரவழைப்பேன்? உயிரை எடுக்கத் தான்.''

''இவன் செய்த குற்றம் என்ன?''

''ஏற்கெனவே இவன் சாளுக்கியர் படைகளுக்குச் செய்த சேதாரங்கள் போதாதா? புதியதாக வேறு செய்ய வேண்டுமா?'' என்று கேட்ட விஜயகுமாரி, ''பல்லவ உபதலைவரே! இந்த மலைக்கோட்டையை பிடிக்க வந்தார். இவரை நான் பிடித்துவிட்டேன்'' என்றாள்.

''பிடித்து வைத்துக் கொண்டு பேச்சு என்ன வேண்டி யிருக்கிறது? வெட்டி வீழ்த்த வேண்டியதுதானே?'' என்றார் சேனாதிபதி.

''தனியே வருபவரை வெட்டிச் சாய்ப்பதில் சேனாதிபதியார் தான் வல்லவர்'' என்றான் உதயசந்திரன்.

''என்ன உளறுகிறாய்?'' என்று சீறினார் சேனாதிபதி.

''உங்கள் சாமர்த்தியத்தைப் பற்றிச் சொன்னேன்.''

''என்ன சாமர்த்தியத்தைக் கண்டு விட்டாய்?''

''ஒன்றா இரண்டா சேனாதிபதி? எதைச் சொல்லச் சொல்கிறீர்கள்? அதைச் சொன்னால் வாதாபிக் கோட்டை அதிர்ந்தாலும் அதிரும்.''

''விஜயகுமாரி! இவன் என்ன சொல்கிறான் என்னை இதுவரை நேரில் கூட பார்த்ததில்லையே'' என்றார் சேனாதிபதி.

''எனக்கும் அதுதான் புரியவில்லை'' என்றாள் விஜய குமாரி.

''சாதனைகளும் சாகசங்களும் உலகத்தில் எந்த மூலையில் நடந்தாலும் மக்களுக்குத் தெரிந்துவிடும் சேனாதிபதி. குருசேத்திரப் போரை நாம் நேரிலா பார்த்திருக்கிறோம்? இல்லை. ஆனாலும் அப்போரில் நடந்த சாகசங்களைப் பற்றி நாம் பேசுகிறோம் அல்லவா? தங்கள் சாகசங்களும் அப்படித்தான். எதிரி கோட்டையை முற்றுகையிட்டிருக்கும் போது மன்னருக்கு

எதிராகச் சேனாதிபதி சூழ்ச்சி செய்வதென்பது சாதாரணமான விஷயமா?''

''நான் அப்படி எதுவும் செய்யவில்லை.''

''சேனாதிபதி, கோட்டையை விட்டு மக்களை வெளியேற்றியபோது அவர்களோடு போர் வீரர்களையும் அனுப்பியது போர்த்தந்திரமாக இருக்கலாம். ஆனால் பொக்கிஷ செல்வங்களைக் களவாடி அவற்றையும் அக்கூட்டத்தவரோடு வெளியேற்றியது போர்த் தந்திரமா? சூழ்ச்சியா?''

''இரண்டுமல்ல. சேனாதிபதியின் கடமை. பொக்கிஷங்களை பாதுகாப்பாக வைப்பதற்காகத் தான் அந்த நடவடிக்கை.''

''பாதுகாப்பதற்காக அல்ல என்பதை உங்கள் ஊழியர்களே சொல்லிவிட்டார்கள்.''

''அவர்கள் சொன்னது பொய்.''

''பொய் என்றால் சாளுக்கிய மன்னர் உங்களைச் சிறையில் வைக்க வேண்டிய அவசியமென்ன?''

''அப்படி எதுவும் நடக்கவில்லை.''

''சரி. அதை விடுங்கள். எங்களுக்கு நீங்கள் ஓர் ஓலை அனுப்பினீர்களே - அதுவும் பொய்யா? அதில் என்ன எழுதியிருந்தீர்கள் என்பதை நான் சொல்லட்டுமா?''

விஜயகுமாரி குறுக்கிட்டு, ''உதயசந்திரா, இந்த விஷயங்களைப் பற்றியெல்லாம் நீ பேச வேண்டியதில்லை. அவையெல்லாம் நாங்கள் திட்டமிட்டுச் செய்த அரசியல் நடவடிக்கைகள். சாளுக்கிய மன்னரை அகற்றிவிட்டு அரியணையைப் பிடிக்க நாங்கள் தீட்டிய திட்டங்கள் தான் அவை. ஆகவே சேனாதிபதியைப் பற்றி குற்றம் கூறுவதை நிறுத்து'' என்றாள்.

அவளது குறுக்கீடு சேனாதிபதிக்கு ஆறுதலாக இருந்தது.

''அதையெல்லாம் விடுங்கள். இளம் துறவியான உதயணனை ஆட்களை ஏவிக் கொன்றது கூட அரசியல்தானா?'' என்று கேட்டான் உதயசந்திரன்.

''ஆமாம். அவன் சேனாதிபதிக்குப் பெரும் தடையாக இருந்தான். ஆகவே அவனை அகற்ற வேண்டியதாயிற்று'' என்றாள் விஜயகுமாரி.

''இது உங்களுக்கு எப்படித் தெரியும்?''

''சேனாதிபதிதான் சொன்னார்.''

''மன்னனுக்கு ஓலை கொண்டு வந்த அந்தணனை மறித்து வெட்டிப் புதைத்தாரே அதைச் சொன்னாரா?''

''ஒவ்வொன்றையும் சொல்ல வேண்டிய அவசியமில்லை உதயசந்திரா.''

''முக்கிய விஷயங்களையெல்லாம் சொல்லலாம் அல்லவா?''

''முக்கிய விஷயங்கள் எதையும் அவர் மறைக்கவில்லை.''

''உங்கள் அருமைச் சகோதரி. பவானியை கண்ட துண்டமாக வெட்டிக் கொன்றதைச் சொன்னாரா? அல்லது இது முக்கிய விஷயமில்லை என்று மறுத்துவிட்டாரா?''

இதைக் கேட்டு அதிர்ச்சியடைந்த விஜயகுமாரி, ''உதய சந்திரா, என்ன சொல்கிறாய்? இது உண்மையா?'' என்று சீறினாள்.

சேனாதிபதியைப் பார்த்து, ''என்ன சொல்கிறான் இவன்? என் சகோதரியையா கொன்று வீட்டீர்கள்? அவள் என்ன பாவம் செய்தாள்?'' என்று கடுமையாகக் கேட்டாள் அவள்.

''இல்லை விஜயகுமாரி, அவளை நான் ஏன் கொல்லப் போகிறேன்? இவன் உளறுகிறான்'' சேனாதிபதி உள்ளே உண்டாகியிருந்த அதிர்ச்சியை காட்டிக் கொள்ளாமல் -

உதயசந்திரன் குறுக்கிட்டு, ''பவானியிடம் அனைத்தையும் அனுபவித்தவர் தான் சேனாதிபதி. இவரை மிகவும் மதித்த அந்தப் பெண் இவரது எதிர்காலம் சிறப்பதற்காக மன்னருக்குத் தெரியாமல் பொக்கிஷ செல்வங்களைக் கவர்ந்து கோட்டையை விட்டு வெளியேற்ற அவள் தான் யோசனை சொன்னாள். அவளது பழைய காதலன் தான் உதயணன். அவனை இவர் மிரட்டத் தொடங்கியதும் வெறுத்துப் போய் மனம் மாறிய பவானி இவரது சூழ்ச்சிகளையெல்லாம் சொல்லி மன்னரையும் நாட்டையும் காப்பாற்றும்படி உதயணனிடம் கேட்டுக் கொண்டு தனது பாவங்களுக்குப் பரிகாரம் தேடிக் கொண்டாள். பாவம். நாட்டைக் காட்டிக் கொடுக்க இருந்த சேனாதிபதியிடம் தன்னை முழுவதுமாய் அர்ப்பணித்திருந்த உங்கள் சகோதரி நாட்டுக்காக உதவ முற்பட்டபோது இவரால் கொல்லப்பட்டார். இது உண்மையா இல்லை என்று கேளுங்கள். மன்னனையே காலை வாரிவிட்ட இவரா உங்களுக்கு அரியணையைப் பெற்றுத்தரப் போகிறார்? மன்னனை ஏமாற்றியவருக்கு உங்களை ஏமாற்ற எவ்வளவு நேரம் பிடிக்கும்?'' என்று கேட்டான்.

சேனாதிபதி எழுந்து ஏதோ பேச முற்பட்டார். விஜய குமாரிக்கோ எந்த விளக்கமும் தேவையில்லாததாக இருந்தது.

''சேனாதிபதி! எல்லா விஷயங்களையும் என்னிடம் சொல்லிவிட்டதாகச் சொல்லி எனக்குச் சாளுக்கிய அரியணையை ஏற்பாடு செய்திருப்பதாகச் சொன்ன நீங்கள் என் சகோதரி பவானியைப் பற்றிய விஷயத்தை மட்டும் ஏன் மறைத்தீர்கள்? அவளைக் கொன்றுவிட்டதாலா? ஆகா! ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இரு மலர்களான எங்களை நீர் தானே சேதாரப்படுத்தினீர்கள்? நீர் தானே படுக்கையறை பாவைகளாக மாற்றினீர்கள். அடிமை களாக்கி எதிர்காலத்தைப் பாழாக்கினீர்கள். உங்களுக்காக இழந்த எங்களுக்கு நீங்கள் செய்ததெல்லாம் என்ன? அரியணை ஆசை காட்டி அலையவிட்டதுதான். அதையும் நீங்கள் நிறைவேற்றப் போவதில்லை என்பது இப்போது விளங்கிவிட்டது. சாளுக்கிய மன்னருக்குத் துரோகம் செய்வதற்காக நீங்கள் எத்தனை கொலைகளைச் செய்திருப்பீர்கள்? உங்களுக்குத் தடையாக வந்துவிட்டாள் என்றதும் அவளது அர்ப்பணிப்பை மறந்து கொன்றுவிட்ட நீங்கள் என்னைக் கொல்வதற்கு எவ்வளவு நேரம் ஆகும்? இன்னும் யார் யாரையெல்லாம் கொல்ல உத்தேசித்திருக்கிறீர்கள்?'' என்றுச் சரமாரியாகக் கேட்ட விஜயகுமாரி கைகளைத் தட்டியதும் நான்கு வீரர்கள் அறை வாயிலில் வந்து நின்றார்கள்.

''விஜயகுமாரி, உதயசந்திரன் அயோக்கியன். பொய்யன். ஏதேதோ சொல்லி உன்னை ஏமாற்றப் பார்க்கிறான். அவனை நம்பாதே'' என்றார் சேனாதிபதி பதட்டத்துடன்.

''அவனும் என்னை ஏமாற்றியவன்தான். ஆனால் தனது தாய்நாட்டிற்காக ஏமாற்றினான். அதோடு அவன் என் சகோதரியைக் கொல்லவில்லை. நீயோ எல்லா அயோக்கியத் தனங்களையும் உன் தாய் நாட்டிற்கு எதிராகச் செய்தாய். சுயநலத்திற்காகச் செய்தாய். உனக்கு உதவியவர்களையும் கொன்றாய்? முடிவாக பவானியையும் கொன்றுவிட்டாய். மகாபாவி நீ. இது அறியாமல் உன்னைப் பாதாளச் சிறையிலிருந்து தப்ப வைத்து சுரங்கம் மூலம் கொண்டு வந்தேன்? நீயா என்னைச் சாளுக்கிய அரியணையில் அமர்த்தப் போகிறாய்? அது நடக்கப் போவதில்லை. உன்னை உயிரோடு விட்டால் இன்னும் எத்தனை பேரைச் சுயநலத்திற்காக எமலோகத்திற்கு அனுப்புவாயோ தெரியாது. உயிரோடு இருப்பதற்கு உனக்கு அருகதையில்லை'' என்று பொரிந்து தள்ளிய விஜயகுமாரி வீரர்களை அழைத்து,

''இந்த மாமிச மலையைத் தலைகீழாகக் கட்டித் தொங்கவிடுங்கள். கீழே அடுப்பை மூட்டுங்கள். வாயைக் கட்டிவிடுங்கள்'' என்றாள்.

வீரர்கள் அவரை மூட்டையைப் போலத் தூக்கிச் சென்றனர்.

அதிர்ச்சி தாளாமல் மஞ்சத்தில் போய் அமர்ந்தாள் விஜயகுமாரி.

உதயசந்திரன் எதுவும் பேசாமல் நின்றான்.

எதேச்சையாக அவனை நிமிர்ந்து பார்த்த விஜயகுமாரி வீரர்களை வரவழைத்து, ''இவனையும் ஓர் அறையில் வைத்துப் பூட்டுங்கள்'' என்றாள்.

வீரர்களும் அவ்வாறே செய்தார்கள்.

சேனாதிபதி வீரகேசரி அதுவரை அடைந்திராத சித்திரவதையை அனுபவித்தார். தலைகீழாகத் தொங்கியதால் ரத்தமெல்லாம் தலையில் இறங்கியது. அந்த நிலையில் அடுப்பிலிருந்து எழுந்த புகை கண்களையும் மூக்கையும் தாக்கி நீரைப் பெருக்கின. தீச்சுவாலையானது அவரது தலையை சூடாக்கியது. தலை நரம்புகள் புடைத்து வெடிக்கும் நிலைக்கு வந்தது. வேதனையை சொல்ல முடியாதவாறு வாய் கட்டப்பட்டிருந்ததால் சித்திரவதையின் உச்சிக்குப் போன அவர் மனத்தால் இறைவனை நினைத்தார். அவரது நினைவலையில் அந்தணன் தோன்றினான். 'அந்தணனைக் கொல்லாதே. அது பாவம்' என்று சொன்னேனே கேட்டாயா? அந்தணனைக் கொன்ற பாவத்தைத்தான் நீ அனுபவிக்கிறாய். அனுபவி'' என்றுச் சொல்லிவிட்டுப் போனான். அவர் இருந்த இடம் திறந்த வெளியாக இருந்தாலும் இருட்டாக இருந்ததால் எதுவும் தெரியவில்லை. அடுப்பில் எழுந்த தீயின் வெளிச்சம் மட்டுமே இருந்தது. அந்த நிலையில் எமகாதகக் கழுகு ஒன்று பறந்து வந்து அவரது தொங்கிய உடலில் கால்களுக்கிடையே உட்கார்ந்தது. கொத்தவும் முற்பட்டது. சேனாதிபதி மரணமடைந்தார்.

இதே நேரத்தில் தனியறையில் அடைக்கப்பட்ட உதயசந்திரன் சேனாதிபதிக்கு கிடைத்த தண்டனையைப் பற்றி நினைத்துப் பார்த்தான். விஜயகுமாரியிடம் தான் பேசிய பேச்சின் விளைவுதான் அந்த தண்டனை என்பது அவனுக்குப் புரிந்தது. போர்க்களத்தில் இறக்கும் தருவாயில் இருந்த சாளுக்கிய கோட்டைத் தளபதி சேனாதிபதியின் அக்கிரமங்களையும் துரோகங்களையும் உதயசந்திரனிடம் கூறி அவரை எப்படியாவது வெட்டி வீழ்த்தும்படிச் சொல்லியிருந்தார். அந்த விவரங்களைத்

தான் சமயம் தெரிந்து விஜயகுமாரியிடம் தெரிவித்தான் உதயசந்திரன். அது சரியானபடி அவளது இதயத்தைத் தைத்தது. தங்கையை கொலை செய்த சேனாதிபதியை விட்டு வைக்க அவளால் முடியவில்லை. அவரைச் சித்திரவதை செய்து கொல்ல ஏற்பாடு செய்தாள்.

சேனாதிபதியைத் தண்டித்த விஜயகுமாரி தன்னை ஏன் அறையில் அடைத்தாள் என்பது உதயசந்திரனுக்கு விளங்க வில்லை. நேரம் போய்க் கொண்டிருந்தது. அவனது நண்பர்கள் தூண்களில் கட்டப்பட்டு துன்பத்தை அனுபவித்துக் கொண்டிருந்தார்கள். அவனது வீரர்களோ மலைக்கோட்டையின் அடிவாரத்தில் காட்டுப் பகுதியில் செய்வதறியாமல் தவித்துக் கொண்டிருந்தார்கள். தானாக ஏதாவது செய்தால்தான் உண்டு என்பதை உதயசந்திரன் உணர்ந்தான்.

தனது நெற்றியைத் தடவிக் கொண்டான்.

ஆபத்தான நேரங்களில் அப்படி நெற்றியைத் தடவுவது அவனது வழக்கம்.

☆☆☆



54

சொர்க்கத்தின் சொர்க்கம்

அப்போது உதயசந்திரன் இருந்த கதவு திறக்கப்பட்டது.

வீரர்கள் இருவர் உதயசந்திரனை வெளியே வரும்படிச் சொன்னார்கள்.

''எதற்கு?'' என்று கேட்டான் உதயசந்திரன்.

''அம்மணி அழைத்து வரச் சொன்னார்.''

''யார்? விஜயகுமாரியா?''

''ஆம்.''

''வரமுடியாது என்று சொல்.''

''வருவதில் உங்களுக்கென்ன கஷ்டம்?''

''கஷ்டம் எதுவுமில்லை. வருவதற்கு எனக்கு விருப்பமில்லை. நான் அவள் அடிமையுமல்ல.''

''நீங்கள் மறுப்பது உங்களுக்கு நல்லது அல்ல. அம்மணி பொல்லாதவர். சாளுக்கிய சேனாதிபதியைத் தலைகீழாகக் கட்டிச் சித்திரவதை செய்ததில் சேனாதிபதி இறந்துவிட்டார். சற்றுமுன் தான் அவரது உடல் மலைக்கோட்டைக்குப் பின்புறம் வீசப்பட்டது. இந்த மலைக்கோட்டையின் அதிபதியான வாதாபி தளபதியும் அவரிடம் சிறை பட்டிருக்கிறார். அவர் கதி என்னாகுமோ தெரியாது.''

''யாரைப் பற்றியும் கவலையில்லை. வரமுடியாது என்றால் வரமுடியாது'' என்று தீர்மானமாகச் சொன்னான் உதயசந்திரன்.

அறைக் கதவைப் பூட்டிக் கொண்டு சென்றார்கள் வீரர்கள்.

சில நிமிடங்கள் கழித்து அறைக்கதவு திறக்கப்பட்டு வீரர்கள் இருவர் பந்தங்களுடன் உள்ளே வந்தார்கள். பந்தங்களைச் சுவற்றில் இருந்த இரும்பு வளையங்களில் செருகினார்கள். அறை பிரகாசப்பட்டது. வீரர்கள் வெளியேறி வெளியே இருந்த ஓர் ஆசனத்தைக் கொண்டு வந்து போட்டார்கள். அந்த ஆசனத்தில்

வந்து அமர்ந்தாள் விஜயகுமாரி. வீரர்கள் வெளியேறினார்கள். கதவு சாத்தப்பட்டது.

விஜயகுமாரியின் தற்போதைய கோலம் வெகுவாக மாறியிருந்தது. அதுவரை அணிந்திருந்த ஆடைகளை அகற்றிவிட்டு பச்சை நிறத்தில் ஒரே ஒரு ஆடையை மட்டும் அணிந்து வந்திருந்தாள். நகைகள் எதையும் அணியவில்லை. கூந்தல் கட்டை மீறி அலைந்து கொண்டிருந்தது. சேனாதிபதியின் துரோகத்தால் வெகுண்டு உணர்ச்சிவசப்பட்டு தண்டனை விதித்தபோது எரிமலை போலிருந்த அவள் தற்போது பனிமலைபோல் குளிர்ந்திருந்தாள். வசீகரக் கண்களும், போதை விழிகளும், மோகனப் புன்னகையும், உதட்டின் வழுவழுப்பும் அவளது முகத்தில் குடிவந்து அவளை போகத்திற்குரிய பெண்ணாக மாற்றியிருந்தன.

ஆசனத்தில் கால் மீது கால் போட்டு அமர்ந்ததால் அவளது தொடைப் பகுதி பந்த ஒளியில் பளிச்சிட்டு, 'வா வா' என்று அழைத்தன.

அவனை ஏற இறங்கப் பார்த்துவிட்டு, ''வர முடியாது என்று சொல்லிவிட்டாயாமே?'' என்று கேட்டாள் விஜயகுமாரி.

''ஆமாம்'' என்றான் உதயசந்திரன்.

''ஏன்? நான் ராஜகுமாரி அல்ல என்பது தெரிந்து விட்டதாலா?'' என்று கேட்டு தனது உதடுகளைத் தடவிவிட்டுக் கொண்டாள் அவள்.

''நீ அரசகுமாரியாக இருந்து அழைத்திருந்தாலும் நான் வந்திருக்க மாட்டேன்'' என்றான் உதயசந்திரன் அவளது வசீகரத்தைப் பொருட்படுத்தாமல்.

''அதுதான் ஏன்?'' கேட்டாள் அவள் கன்னத்தைத்தடவி விட்டபடி.

''எனக்கு வரவிருப்பமில்லை என்றால் யார் அழைத்தாலும் வரமாட்டேன்'' என்றான் அவன்.

''இங்கே என் விருப்பம்தான் செல்லுபடியாகும்'' என்று சொன்ன விஜயகுமாரி, ''சாளுக்கிய சேனாதிபதி எப்படிப் பட்டவர் தெரியுமா? அவரைக் கண்டு மன்னர் விஜயாதித்தரே நடுங்குவார். அந்த பராக்கிரமசாலியை மேலோகத்திற்கு நான் அனுப்பிவிட்டேன்'' என்றாள்.

''குற்றவாளியைத் தண்டித்திருக்கிறாய். இதில் வியப்படைய எதுவும் இல்லை.''

''தண்டித்தது பெரிய விஷயமல்ல உதயசந்திரா. தண்டிக்கப் பட்டவர் எப்பேர்பட்டவர் என்பது தான் முக்கியம். எனக்குக் கோபம் வந்துவிட்டால் யாரை வேண்டுமானாலும் தண்டித்து எமனிடம் அனுப்பி வைப்பேன் என்பதற்காகத்தான் இதைச் சொன்னேன்.''

''மகிழ்ச்சி.''

''சாளுக்கிய சேனாதிபதி ரணரசிகபுரத்தில் பாதாளச் சிறையில் இருந்தார். அவரைச் சுரங்க வழிமூலம் வெளியேற்றி இங்கே கொண்டு வந்தேன். இங்கே யாரைக் கொண்டு வந்தேன் என்பது முக்கியமல்ல. நான் நினைத்தால் யாரையும் எந்தச் சந்தர்ப்பத்திலும் காப்பாற்ற முடியும் என்பதுதான் முக்கிய மானது.''

''சரி.''

''அச்சேனாதிபதிக்கு வலதுகரமாக விளங்கியவர்தான் இச்சிறைச்சாலை அதிபதியான வாதாபித் தளபதி. அவரைச் சேனாதிபதியைக் கொண்டே சிறை செய்தேன். இது உனக்கு எதை உணர்த்துகிறது?''

''யாரை வேண்டுமானாலும் உன் இஷ்டப்படி வளைப்பாய் என்பதை உணர்த்துகிறது.''

''அதுமட்டுமல்ல உதயசந்திரா. உன் ஆட்கள் மூலம் உன்னையே இங்கு வரவழைத்துவிட்டேன்.''

''இது எதை உணர்த்துகிறது?''

''நீ விரும்பாவிட்டாலும் உன்னை என் இருப்பிடத்திற்கு வரவழைக்க முடியும். புரிகிறதா?''

''எல்லாம் எனக்கும் புரிகிறது. உனக்குத்தான் ஒரு விஷயம் புரியவில்லை.''

''எனக்கா? எனக்கா புரியவில்லை? அது என்ன விஷயம்?'' என்று விழிகள் விரிய வியப்போடு கேட்டாள் விஜயகுமாரி. அப்போது அவளது கோலம் ஓர் அபிநயம் போல இருந்தது.

''இந்த மிரட்டலெல்லாம் எதற்கு? நான் புதியவனா? அறியாதவனா? நீதான் புதியவளா? உன்னை எனக்குத் தெரியாதா? என்னை உனக்குத் தெரியுதா? நம்மை நாம் அறிவோம்.''

இதைக் கேட்டதும் மீண்டும் வியந்தாள். ''பிறகு எதற்காக வரமுடியாது என்று மறுத்தாய்?'' என்று கேட்டான்.

''அங்கு ஏன் வரவேண்டும்? இந்த அறையில் சொர்க்கம் தெரியாதா?''

''உதயசந்திரா! என்ன சொல்கிறாய் நீ?''

''உனக்குப் புரியாத பெரும் புதிரை நான் சொல்லவில்லை விஜயகுமாரி. மிகவும் சாதாரணமான விஷயம்தான்.''

''இல்லை. நீ வஞ்சகன். பேச்சால் என்னை ஏமாற்றப் பார்க்கிறாய்?''

''எதற்காக ஏமாற்ற வேண்டும்?''

''உன் காரியங்களை நிறைவேற்றிக் கொள்ளத்தான்.''

''அதற்கு வேறு வழியே இல்லையா எனக்கு? அதுவும் இப்போது?''

''என்ன வழி?''

''உன்னைக் கழுத்தில் கையைப் போட்டு நெறுக்கி குறுவாளை மார்பில் அழுத்திக் கொண்டு என் காரியங்களை என்னால் சாதிக்க முடியாதா?''

''முடியும்.''

''அப்படிச் செய்வதற்கு நான் ஏன் தயங்கவேண்டும்?''

''வேண்டியதில்லைதான்.''

''அப்படித் தடையும் இல்லாமல் தயக்கமும் இல்லாமல் செய்யக்கூடிய காரியத்தைக் கைவிட்டுவிட்டு உன் விருப்பத்திற்குத் தயாராக இருக்கிறேனே இப்போது கூட என் மீது சந்தேகம்தானா?''

''இதுவரை ஏமாற்றி வந்த நீ இப்போது எப்படி மாறினாய்?''

''ஒன்றை நீ புரிந்து கொள் விஜயகுமாரி. நான் மாமன்னர் ராஜசிம்மரின் உபதலைவன். அவர் ஈடுபட்டிருந்த போரில் உதவுவதற்கும் அவரது புதல்வரான இளவரசர் மகேந்திரரை எதிரிகளிடமிருந்து காப்பாற்றவும் பிரத்தியேகமாக நியமிக்கப் பட்டவன் நான். ஆனால் அதற்குப் பல பேர் தடையாக இருந்தார்கள். அவர்களில் நீயும் ஒருத்தி. அந்த வகையில் உன்னையும் நான் ஏமாற்றினேன். எனது குறிக்கோள் குலைந்துவிடக்கூடாது என்பதற்காகத்தான் பல இடங்களில் பலவாறு நாடகமாடினேன். இப்போது எல்லாம் முடிந்துவிட்டது. போரில் பல்லவர்கள் வென்றுவிட்டார்கள். இளவரசரும் காப்பாற்றப்பட்டு காஞ்சிக்கு அனுப்பப்பட்டு விட்டார். எனது

குறிக்கோள் நிறைவேறிவிட்டது. இனி நான் எதற்கு ஏமாற்ற வேண்டும்?''

உதயசந்திரன் பேச்சு சீராக இருந்ததால் விஜயகுமாரி அசந்துதான் போனாள்.

''உனது குறிக்கோள் முடிந்துவிட்டதென்றால் இங்கே எதற்காக வந்தாய்?'' என்று கேட்டாள்.

''இங்கு என் தனிப்பட்ட விஷயம் ஒன்றிருக்கிறது. அதற்காக வந்தேன்?''

''அதற்குப் படைகளோடு வரவேண்டிய காரணம்?''

''படைகளைக் கொண்டு வந்தது முன்னெச்சரிக்கைக்காகத் தான்.''

''உன் நண்பர்களை ஒவ்வொருவராக அனுப்பியது ஏன்?''

''இங்கே நீ இருப்பாய் என்பது எனக்கு எப்படித் தெரியும்? வாதாபி தளபதி என்று ஒருவர் இருப்பார் என்று கேள்விப் பட்டேன். அவரைப் பற்றியும் மலைக்கோட்டையைப் பற்றியும் நோட்டம்விடத் தான் நண்பர்களை அனுப்பினேன். நீ இருந்து கொண்டு அவர்களைச் சிறைபிடித்துக் கொண்டு என்னை வரவழைத்துவிட்டாய்.''

''நான் இங்கே இருப்பது தெரிந்தால் என்ன செய்திருப்பாய்?''

''நானே வந்திருப்பேன்.''

''என்னை இங்கே சந்தித்துவிட்டதால் இப்படியெல்லாம் பேசுகிறாய் என்று நான் சொல்கிறேன்.''

''நீ எதை வேண்டுமானாலும் சொல். எப்படி வேண்டு மானாலும் நினைத்துக் கொள். சந்தேகப்படுபவளுக்கு ஆயிரம் வார்த்தை. உண்மையைச் சொல்பவனுக்கு ஒரே வார்த்தை.''

அவனிடம் வாதம் புரிய முடியாமல், ''நீ என்னைப் பலதடவை ஏமாற்றியிருக்கிறாய். ஆனால் இன்று தான் உன்னிடம் முதன் முறையாக நான் ஏமாந்திருக்கிறேன். அதாவது உன்னைப் புரிந்து கொள்ள முடியாமல் ஏமாந்திருக்கிறேன். ஆனால் சந்தோஷமாக இருக்கிறது'' என்று சொல்லி எழுந்து சென்று அவனைக் கட்டிப்பிடித்துக் கொண்டாள்.

''இரு இரு. எங்கே போய்விட்டேன் நான்?'' என்று சொல்லி அவளை விடுவித்த அவன், ''நாம் இங்கே சந்தோஷமாக இருக்கும்போது என் நண்பர்கள் மட்டும் துன்பப்படுவது சரியா விஜயகுமாரி? அவர்களது கட்டுக்களை அவிழ்த்துவிட்டு உணவு

கொடு. அப்போதுதான் நாம் நிம்மதியாக நமது சந்தோஷங்களைப் பகிர்ந்து கொள்ள முடியும்'' என்றான்.

''வாதாபி தளபதியை விடுவிக்க வேண்டாமா?'' என்று கேட்டபடி அவனை மீண்டும் கட்டிப் பிடித்தாள் விஜயகுமாரி.

''அவரைப் பற்றி நீ தான் முடிவு செய்ய வேண்டும். எனக்கென்ன?'' என்றான் உதயசந்திரன்.

விஜயகுமாரி அவனை விட்டுவிட்டு கதவைத் திறந்தாள். கைகளைத் தட்டினாள். வீரர்கள் வந்தார்கள்.

''நமது நான்கு விருந்தினர்களையும் விடுவித்து உணவைக் கொடுத்து நன்றாக உபசாரம் செய்யுங்கள். அதேசமயம் வாதாபி தளபதியை விடுவிக்க வேண்டாம்'' என்று கட்டளையிட்ட அவள், ''இங்கே இனி யாரும் வந்து தொல்லை தரவேண்டாம். காலையில் பார்ப்போம்'' என்று சொல்லிவிட்டு கதவைச் சாத்தி தாளிட்டாள்.

''மிகவும் நன்றி விஜயகுமாரி'' என்றான் உதயசந்திரன்.

''எதற்கு நன்றி?''

''எனது நண்பர்களை விடுவிக்க ஆணையிட்டதற்கு.''

''இனி அதைப் பற்றியெல்லாம் பேச வேண்டியதில்லை.''

''விஜயகுமாரி''

''என்ன?''

''நீ இதுவரையில் மரகதக் கட்டிலிலும் பட்டுப் பஞ்சணையிலும்தான் சொர்க்கத்தைக் கண்டிருப்பாய். இங்கே எதுவுமில்லை. வெறும் தரைதான் இருக்கிறது. இந்தக் கட்டாந் தரையில் உனக்கு புதிய சொர்க்கத்தை காட்டப் போகிறேன். நீ அசந்து போவாய்.''

''தரை மிருதுவாக இல்லையே.''

''கடினமாகத்தான் இருக்கிறது. ஆனால் அந்தக் கடினமே உனக்கு ஆனந்தத்தை அள்ளித் தரப் போகிறது.''

''எப்படி?''

''அதைத்தான் நீ பார்க்கப் போகிறாய். அதற்குப் பிறகு என்னை நீ விடமாட்டாய்.''

''உதயசந்திரா''

''சொல்.''

''உன் பேச்சே எனக்கு சொர்க்கமாக இருக்கிறது.''

''இல்லை விஜயகுமாரி. பேச்சு என்றைக்குமே பேச்சுதான். அது சுகமாகாது. சொர்க்கம் என்ற வார்த்தை உருவானதே பெண்ணால்தான். அதுவும் நீ சொர்க்கத்தின் சொர்க்கம்.''

''நீ இதுவரை காமத்தை அனுபவித்திருக்கிறாயா?''

''நிறைய.''

''என்ன? நிறையவா?''

''கனவில் அனுபவித்திருக்கிறேன் விஜயகுமாரி. காஞ்சியில் உன்னைக் கண்டபோது நான் சொக்கிப் போனேன். கனவுகளால் அனுபவித்ததை நிஜமாக்கிப் பார்க்கவும் துடித்தேன். அரசியல் விவகாரம் மட்டும் எனக்கு இல்லாதிருந்தால் முதல் சந்திப்பிலேயே உன்னை அடைந்து காஞ்சியிலேயே ஒரு சொர்க்க லோகத்தைக் கட்டியிருப்பேன். இப்போது மட்டுமென்ன? என் கடமை முடிந்துவிட்டது. இனி உன்னோடு காஞ்சிக்குச் சென்று கனவு கண்டபடி வாழ விரும்புகிறேன். உனக்குச் சம்மதமா?''

அவள் தாபம் தாங்காமல் அவன் மீது வந்து விழுந்தாள்.

''இரு இரு. இடையில் இது உறுத்துகிறது'' என்று சொல்லி இடையில் இருந்த குறுவாளை எடுத்து வீசியெறிந்தான்.

பெரும் திருப்தியடைந்த விஜயகுமாரி, ''வீராதி வீரா! ம் சீக்கிரம்'' என்றாள் தனது உதடுகளை அவனது மார்பில் புரட்டி.

''நீ ஒரு பாட்டு பாடேன்'' என்றான் உதயசந்திரன்.

''பாட்டா? அது எதற்கு? புதிய விஷயமாக இருக்கிறதே'' என்றாள் போதைக் குரலில்.

''நமது சொர்க்கமும் புதியது. அதற்கான பாதையும் புதியது. ஆகவே தான் கேட்கிறேன். பாடு.''

''எனக்குப் பாட வராது.''

''நான் பாடட்டுமா?''

''பாடுவாயா நீ?''

''ம்.''

''உன்னிடம் இல்லாத சாமர்த்தியமே இல்லை. பாடு.''

''அமுதும் தேனும் எதற்கு? நீ
அருகினில் இருக்கையிலே...''

என்று பாடினான் உதயசந்திரன்.*

* பாடலாசிரியருக்கு நன்றி.

''நீ கள்ளன், காதகன், காமுகன். மயக்கும்படி பேசுகிறாய். இப்போது பாடுகிறாய். உதயசந்திரா! உனக்கு இணை யாருமில்லை. சேனாதிபதிகளும் மன்னர்களும் கூட குப்பை...'' என்று போதையோடு உளறினாள் அவள்.

''விஜயகுமாரி, இதென்ன ஒற்றை ஆடையை அணிந்து வந்திருக்கிறாய்?''

''அதுவும் ஒரு புதுமைதான்.''

''அந்த ஆடை இப்போது அவசியமா விஜயகுமாரி?''

''வேண்டாமா?''

''வேண்டாம். கழற்றிவிடு.''

''பந்தங்கள் எரிகின்றன.''

''என் தேகமும் எரிகிறது. சீக்கிரம்.''

''என் உயிரே! உதயசந்திரா! இதோ என் ஆடை'' என்று சொல்லி ஆடையைக் கழற்றி அவன் மீது எறிந்தாள் விஜயகுமாரி.

அவள் அப்போது அரைமயக்கத்தில் இருந்தாள்.

அதுதான் சமயம் என்று நினைத்து உதயசந்திரன் அவளது கன்னத்தில் பளாரென்று ஓர் அறை விட்டான்.

காமக்கிறக்கத்தில் ஆழ்ந்து கிடந்த விஜயகுமாரி இந்த எதிர்பாராதத் தாக்குதலால் நிலைகுலைந்து கீழே விழுந்து மயக்கமானாள்.

அவளது ஆடையைக் கையில் எடுத்துக் கொண்டு அறைக் கதவைத் திறந்து கொண்டு வெளியே வந்தான் உதயசந்திரன். வெளியில் யாரையும் காணவில்லை. அறைக் கதவைப் பூட்டிவிட்டு சாவியை இடையிலே செருகிக் கொண்டான். அவளது ஆடையை இருட்டில் எறிந்துவிட்டு கூடத்திற்கு வந்தான்.

அங்கே அவனது நண்பர்கள் நால்வரும் திருப்தியாக உண்டு வீரர்களோடு பேசிக் கொண்டிருந்தார்கள்.

உதயசந்திரன் கூடத்திற்குள் நுழையாமல் அதைச் சுற்றிக் கொண்டு இடைவெளியில் நுழைந்து மலைக்கோட்டையின் முகப்பிற்கு வந்தான். அங்கே காவலர்கள் படுத்துக் கிடந்தார்கள். அவர்கள் அருகில் இருந்த பந்தத்தை எடுத்து கீழே காட்டுப் பகுதியை நோக்கி ஆட்டினான்.

பிறகு பந்தத்தைப் போட்டுவிட்டு கூடத்திற்கு வந்தான்.

அவனைப் பார்த்ததும் நண்பர்கள் மட்டுமின்றி விஜயகுமாரியின் வீரர்களும் ஆச்சரியப்பட்டார்கள்.

''நீங்கள் எப்படி இங்கே வந்தீர்கள்?'' என்று வீரர்கள் கேட்டார்கள்.

''இதென்ன கேள்வி? உங்கள் தலைவி தனது இருப்பிடத்திற்குச் சென்றுவிட்டு என்னையும் இங்கே அனுப்பினார். வந்தேன்'' என்று சொன்ன உதயசந்திரன், ''வாதாபி தளபதியின் வீரர்கள் எங்கே?'' என்று கேட்டான்.

''தலைவி அவர்களையும் சிறையில் அடைத்துவிட்டார்.''

''ஆமாம். அதுதான் நல்லது'' என்று சொன்ன உதயசந்திரன், ''நீங்கள் எத்தனை பேர் இருக்கிறீர்கள்?'' என்று கேட்டான்.

''ஐம்பது பேர்'' என்றான் வீரன் ஒருவன்.

அவர்களோடு பேச்சு கொடுத்துக் கொண்டே இருந்தான் உதயசந்திரன். அவனது நண்பர்கள் அவனது பேச்சிற்கு ஏதோ காரணம் இருக்கும் என்று பொறுமையாக இருந்தார்கள். அதை நிரூபிப்பது போல மலைக்கோட்டையின் கீழே காட்டுப் பகுதியில் இருந்த உதயசந்திரனின் வீரர்கள் மேலே திரண்டார்கள்.

அதுவரை பேசிக் கொண்டிருந்த வீரர்களைப் பார்த்து ''வீரர்களே! உயிரோடு இருக்க விரும்பினால் என் வீரர்களிடம் சரணடைந்துவிடுங்கள். இல்லையென்றால் ஈவிரக்கமின்றி அனைவரையும் கொல்வேன்'' என்றான். அவனது வீரர்கள் விஜயகுமாரியின் வீரர்களைச் சூழ்ந்து கொண்டார்கள். இதர வீரர்களும் வரவழைக்கப்பட்டதுடன் அவர்களிடமிருந்த வாட்கள் பறிக்கப்பட்டன. அனைவரும் அக்கூடத்திலேயே கைகால்கள் கட்டப்பட்ட நிலையில் உருட்டிவிடப்பட்டார்கள்.

உதயசந்திரன் பிறகு வாதாபி தளபதியை விடுவித்து நடந்த விவரங்களையெல்லாம் சொன்னான்.

''அந்தக் காதகி விஜயகுமாரி எங்கே? அவளை என் கையாலேயே வெட்டிப் போட வேண்டும்'' என்றான் வாதாபி தளபதி.

உதயசந்திரன் விஜயகுமாரி இருந்த அறையைக் காட்டினான்.

பூட்டை உடைத்துக் கொண்டு பூதம் போல் உள்ளே பிரவேசித்தான் வாதாபி தளபதி.

உள்ளே விஜயகுமாரி ரத்த வெள்ளத்தில் கிடந்தாள். அவளது நெஞ்சில் குறுவாள் பாய்ந்திருந்தது. பிறந்தபோது இருந்தது போலவே பிறந்த மேனியுடன் இறந்து கிடந்தாள்.

உதயசந்திரன் விட்ட அறையினால் மயக்கமடைந்த அவள் மயக்கம் தெளிந்ததும் தன் நிலை குறித்து அதிர்ச்சியடைந்தாள். அணிந்து கொள்வதற்கு ஆடையேதும் இல்லாததை உணர்ந்ததும் பேரதிர்ச்சி அடைந்தாள். அறை வெளியே பூட்டப்பட்டிருந்ததை அறிந்ததும் ஸ்தம்பித்துப் போனாள். கதவுகளைத் தட்டி வீரர்களை அழைக்கலாம் என்றாலும் தான் ஆடையின்றி இருப்பதை உணர்ந்த அவளுக்கு அவமானமாக இருந்தது. ராணி போலிருந்து இரு நாட்டு சேனாதிபதிகளுக்கு ஆசை நாயகியாய் இருந்து அதிகார வாழ்க்கை நடத்திய அவளுக்குத் தற்போதைய நிலை கேவலமாக இருந்தது. அதை அவளால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. இனிமேல் உயிரோடு இருப்பதில் அர்த்தமில்லை என்று தீர்மானித்துக் கொண்டாள். உதயசந்திரன் எரிந்து விட்டுப் போன குறுவாளை எடுத்து நெஞ்சிலே பாய்ச்சிக் கொண்டு கீழே விழுந்தாள். உடல் சிறிது நேரம் துள்ளியது. பிறகு உயிர் பிரிந்ததும் அடங்கியது.

அவளது மரணத்தைக் கண்டு சந்தோஷமே அடைந்த வாதாபி தளபதி, ''பிசாசு ஒழிந்தது'' என்று முணுமுணுத்தான்.

அதையடுத்து காரியங்கள் மும்முரமாக நடந்தன.

சிறையில் இருந்த போர்க் கைதிகள் அனைவரும் விடுவிக்கப்பட்டனர்.

பல்லவ நாட்டைச் சேர்ந்த நானூறு கைதிகள் காஞ்சிக்குச் செல்ல விரும்பினார்கள்.

பிற நாட்டைச் சேர்ந்தவர்கள் அவரவர்கள் நாட்டுக்குச் செல்ல விரும்பியதால் அவர்களது விருப்பப்படி அனுப்பி வைக்கப்பட்டார்கள்.

எல்லோருக்கும் வாதாபித் தளபதியே விடைகொடுத்து நன்றியும் தெரிவித்தான்.

உதயசந்திரன் யாரைத் தேடிக் கொண்டு வந்தானோ அந்த கனிஷ்கரை சிறையில் கண்டுபிடித்தான்.

உதயசந்திரனின் அடையாளங்களைக் கண்ட அவர் தெரிவித்த விஷயம் உதயசந்திரனைப் பேரதிர்ச்சிக்கு உள்ளாக்கியது.

★★★



55 பிறப்பு மர்மம்

சிறையில் இருந்த கைதிகள் வீரர்களாதலால் அவர்களை கண்ணியமாக நடத்த முற்பட்ட உதயசந்திரன் அவர்களை மலைக்கோட்டையிலேயே ஒரு நாள் வைத்திருந்து ஆசுவாசப் படுத்தினான். வீரர்களுக்குரிய உடைகளை கொடுத்து அணியச் செய்தான். உடலாலும் உள்ளத்தாலும் தெம்படைந்ததும் அவர்களை மலைக்கோட்டையிலிருந்து இறக்கினான். வாதாபி தளபதி வசம் இருந்த புரவிகளையும் சேர்த்து மொத்தம் இருநூறு புரவிகள் உதயசந்திரன் வசம் இருந்தன. ஆனால் அவனது வீரர்கள் மற்றும் கைதியாய் இருந்து விடுவிக்கப்பட்ட வீரர்கள் ஆகியோரின் தொகை ஐநூறுக்கு மேல் இருந்ததால் எல்லோரும் புரவி மீது சில நாட்களும் கால்நடையாக சில நாட்களுமாக மாறி மாறி பயணம் செய்ய பயண முறையை வகுத்துக் கொண்டான் உதயசந்திரன்.

மலைக்கோட்டையை விட்டுப் புறப்படுவதற்கு முன்பே வாதாபி தளபதியின் மூலம் கனிஷ்கரை அடையாளம் கண்டு கொண்ட உதயசந்திரன் அங்கே தன்னை அறிமுகப்படுத்திக் கொள்ளவில்லை. இரண்டு நாள் பயணம் முடிந்த நிலையில் சத்திரம் ஒன்றில் தங்க நேரிட்டபோதே தன்னை அறிமுகப்படுத்திக் கொள்ளத் தீர்மானித்த அவன் ஐராவதனை அனுப்பி கனிஷ்கரை தன் இருப்பிடத்திற்கு வரச் சொன்னான். உதயசந்திரனுக்கு பல்லவ உபதலைவன் என்ற அந்தஸ்து இருந்ததால் ஐராவதன் அழைத்ததும் உடனடியாக வந்தார் கனிஷ்கர்.

சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டதிலிருந்து உதய சந்திரனை அருகில் இருந்து காண அவருக்கு வாய்ப்பு கிட்டவில்லை. தற்போது தான் கிடைத்தது. அவனைக் கண்டதுமே ஒரு கணம் திகைத்தார். உற்றுப் பார்த்துவிட்டு ''நீ மெடோடஸ் தானே?'' என்று கேட்டார்.

உதயசந்திரன் எதுவும் தெரியாததுபோல், ''மெடோடஸா? யார் அது?'' என்று வினவினான்.

கனிஷ்கர் அவனை மேலும் உற்றுப் பார்த்துவிட்டு, ''உபதலைவர் என்னை மன்னிக்க வேண்டும். மெடோடஸை குழந்தையாய் இருந்தபோது பார்த்தது. அதே சாயல் உங்களுக்கு இருந்ததால் உங்களை மெடோடஸ் என்று நினைத்துவிட்டேன்'' என்று சொல்லிவிட்டு, ''நீங்கள் தவறாக எண்ணவில்லை என்றால் உங்கள் முதுகைக் கொஞ்சம் காட்ட முடியுமா?'' என்று கேட்டார்.

''பார்த்துக் கொள்ளுங்களேன்'' என்று சொல்லி முதுகைக் காட்டினான் உதயசந்திரன்.

ரணரசிகபுரத்தில் வீரபல்லவ படையைச் சேர்ந்த வயோதிகர் ஒருவர் அவனது முதுகைப் பார்த்து அங்கே இருந்த மச்ச அடையாளத்தைக் கவனித்துவிட்டுக் குழம்பியதும் 'மெடோடஸ்' என்ற வார்த்தையை முணுமுணுத்ததும் அவனுக்கு நினைவுக்கு வந்தன.

தற்போது கனிஷ்கர் அவனது முதுகைப் பார்க்க விரும்பிய போது, ''என்ன சொல்லப் போகிறாரோ?'' என்ற ஆர்வத்துக்கு ஆளானான் உதயசந்திரன்.

முதுகில் இருந்த மச்சத்தைப் பார்த்துவிட்டு அவர் தெரிவித்த செய்தியோ அவனைப் பேரதிர்ச்சிக்கு ஆளாக்கியது.

''கனிஷ்கரே! என்ன சொல்கிறீர்கள் நீங்கள்? சிறையில் இருந்ததால் உங்களுக்கு ஒருவேளை புத்தி பிசகிவிட்டதா? நான் நாகைப்பட்டிணத்தில் பிறந்தவன். என் பெயர் உதயசந்திரன். பெருஞ்சாத்தன் என் தந்தை'' என்று அவசரம் அவசரமாகச் சொன்னான் உதயசந்திரன்.

''எனக்கு புத்தி பிசகவில்லை வீரனே! தெளிவாகத்தான் இருக்கிறது. நான் உளறவில்லை. முதுகில் தான் முக்கோண மச்சம் இருக்கிறதே! அதை எப்படி மறுக்க முடியும்? நீ மெடோடஸ்தான். சந்தேகமே இல்லை. உன் தந்தையின் பெயர் வசாகா. நீ பான் இனத்தைச் சேர்ந்தவன்''* என்றார் கனிஷ்கர்.

உதயசந்திரன் அப்படியே இடிந்துபோய் அமர்ந்து விட்டான்.

தனது பிறப்பு ரகசியம் பற்றி காஞ்சியில் அராபியத் தலைவனான சுலைமான் பிரஸ்தாபித்தபோது இந்த அளவிற்கு அதிர்ச்சியான தகவலை உதயசந்திரன் எதிர்பார்க்கவில்லை.

கனிஷ்கர் தன்னை பாரத நாட்டிற்குச் சம்பந்தமில்லாத பான் இனத்தில் பிறந்தவனாகச் சொன்னதும் அவனுக்குத் தலை

* He is described as born of the race of Pacan. page 120 'Kanchipuram in Early South Inidian History' by T.V.Mahalingam

சுற்றியது. அந்த பான் இனத்தைச் சேர்ந்தவர்கள் பல்லவ ராஜ வம்சத்திற்கு தங்களை அர்ப்பணித்துக் கொண்டவர்கள் என்று ராஜசிம்மர் கூறியதையும், அந்த பான் இனத்தவர் வீர பல்லவ படை என்ற பெயரில் இளவரசன் மகேந்திரனைக் காத்து வந்ததையும், அந்த வீர பல்லவ படையைச் சேர்ந்த பான் இனத்து வயோதிக வீரன் தன் மச்சத்தைப் பார்த்துவிட்டு 'மெடோடஸ்' என்று குழம்பி முணுமுணுத்ததையும் எண்ணிப் பார்த்துக் கொண்டான் உதயசந்திரன்.

'நான் தமிழ் நாட்டவன் இல்லையா? சோழ நாட்டவன் இல்லையா? பாரத நாட்டின் மண்ணின் மைந்தன் இல்லையா? வெளிநாட்டவனா? இது என்ன கொடுமை?' என்று தனக்குத்தானே கேட்டுக் கொண்ட உதயசந்திரன் கனிஷ்கரைப் பார்த்து, ''ஐயா, நீங்கள் சொல்வது எனக்கு விளங்கவில்லை. சற்று விவரமாகச் சொல்லுங்கள்'' என்று கேட்டான்.

''குழந்தாய்'' என்று வாஞ்சையுடன் அழைத்த கனிஷ்கர் ''நான் குப்த நாட்டைச் சேர்ந்தவன். அந்நாட்டுப் படையில் பணியாற்றி வந்தேன். அப்படையில் பல நாட்டவர்களும் பணியாற்றி வந்தார்கள். பான் இனத்தவர்களும் அராபிய நாட்டவர்களும், தமிழ் நாட்டவர்களும், துளு நாட்டவர்களும் பலரும் இருந்தார்கள். அவர்களில் பான் இனத்தைச் சேர்ந்த வசாகாவும் அராபிய நாட்டைச் சேர்ந்த சுலைமானும் நண்பர்களாக இருந்தோம். குடும்பமும் நட்புடன் இருந்தது. போர் எதுவுமில்லாத காரணத்தால் விவசாயத்தில் ஈடுபட்டிருந்தோம். அப்போது எங்கள் மூவரது மனைவியரும் பேறு காலம் முடிவடையும் நிலையில் இருந்தார்கள். நாங்கள் எல்லோருமே போர் பாசறையில் தங்கிக் கொண்டு விவசாயத்தில் ஈடுபட்டு வந்தோம். அப்போது போருக்கு அழைப்பு திடீரென்று வந்தது எங்களுக்கு. மனைவிமார்களை கர்ப்பிணிகளாக விட்டுவிட்டு வர எங்களுக்கு மனமில்லை. அதேசமயம் ராணுவ நிபந்தனைகள் கடுமையாக இருந்ததால் விவசாயத்தை விட்டு போர்ப் பயிற்சிக் களத்திற்கு வந்து சேர்ந்தோம். எங்கள் மனைவி மார்களை மகத நாட்டு வைத்திய சாலையில் அனுமதித்துவிட்டு வந்தோம். ஆனால் போர் திடீரென ரத்தானது. ஊருக்குத் திரும்புவதற்கு இராணுவம் அனுமதிக்கவில்லை. அந்த நிலையில் வசாகாவின் மனைவிக்கு ஆண் குழந்தை பிறந்ததாகத் தகவல் வந்தது. ஆர்வம் காரணமாக வசாகா மனைவியைக் காணச் சென்றான். நானும் சென்றேன். அவனது குழந்தையைக் கண்டோம். அதன் முதுகில் அதிசயமான

முக்கோண மச்சம் இருந்தது. அக்குழந்தைக்கு மெடோடஸ் என்ற பெயரைச் சூட்டினான். எனது மனைவி துரதிஷ்டவசமாக கர்ப்ப நிலையில் இறந்து போனாள். சுலைமான் தனது மனைவியை வேறு மருத்துவ மனைக்கு மாற்றினான். இந்த நிலையில் இராணுவ நிபந்தனைகளை மீறியதாக எங்கள் மூவரையும் குப்த இராணுவம் இராணுவத்திலிருந்து நீக்கியது. வசாகா மனம் நொந்து போய் வாதாபிக்கு வந்தான். அவனது குழந்தையை நான் தான் மூன்று வருடங்களாக வளர்த்தேன். அச்சமயத்தில் பல்லவ வேந்தர் நரசிம்ம வர்மர் வாதாபி மீது படையெடுத்து வருவதாக இருந்தது. வேலையற்று இருந்த என் போன்ற பலர் பல்லவர் படையில் சேர விரும்பினோம். பான் இனத்தைச் சேர்ந்த பலரும் அப்படையில் சேர விரும்பினார்கள். வசாகாவும் விரும்பினான். அவனது குழந்தைக்கு மூன்று வயதான நிலையில் அதை மகதத்திலேயே குடும்பத்தாரிடம் விட்டுவிட்டு வாதாபிக்கு வந்தோம். பல்லவர் சேனாதிபதியிடம் எங்களை அர்ப்பணிப்பதாகச் சொல்லி வாளின் மீது ஆணையிட்டு படையில் சேர்ந்தோம். போரில் ஈடுபட்டபோது சாளுக்கியர்களால் நானும் வசாகாவும் சிறைபிடிக்கப்பட்டோம். சிறையில் வைக்கப்பட்டோம். பத்து ஆண்டுகள் வரை இருண்ட சிறையில் வெளியுலகமே தெரியாமல் கிடந்தோம். தனது குழந்தையைப் பற்றி எதுவும் அறிய முடியாத நிலையில் வேதனைப்பட்டு பாதாளச் சிறையிலேயே வசாகா மாண்டு போனான். பிறகு நாங்கள் சாதாரண சிறைக்கு மாற்றப்பட்டோம். ஏழு ஆண்டுகள் வரை எங்களுக்கு வசாகாவின் குழந்தையைப் பற்றி எதுவும் தெரியவில்லை. பின்னர் ஒரு நாள் மகதத்திலிருந்து வந்த பிட்சு ஒருவர் தான் செய்தியைச் சொன்னார். வசாகாவின் குழந்தைக்கு நாலு வயது இருக்கும்போது யாரோ தூக்கிச் சென்று விட்டதாகவும் வசாகாவின் மனைவி மனமுடைந்து தற்கொலை செய்து கொண்டதாகவும் தெரிவித்தார். அதற்குப் பிறகு அக்குழந்தையைப் பற்றி எந்தத் தகவலும் கிடைக்கவில்லை. நானும் சிறையே கதி என்று இருந்துவிட்டேன். சிறையிலிருந்து விடுதலை அடைவோம் என்று நினைக்கவும் இல்லை. ஆனால் எதிர்பாராத விதமாக ராஜசிம்மரின் பல்லவர் படை ரணரசிகபுரத்தைத் தாக்கப் போவதாக செய்தி வந்தது. பல்லவர் படை வெற்றி பெற்றால் எங்களுக்கு விமோசனம் கிடைக்கும் என்று நம்பி பல்லவர் வெற்றிக்காகப் பிரார்த்தனை செய்தோம். பல்லவர் படை வென்றது. நாங்களும் விடுதலை அடைந்தோம். எனது நண்பன் வசாகாவின் மகன் மெடோடஸான உன் மூலம் விடுதலையானோம் என்பது இப்போதுதான்

தெரிந்தது. என் மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை மகனே. நீ நீடூழி வாழ வேண்டும்'' என்று முடித்தார் கனிஷ்கர்.

தனது பிறப்பு பற்றி கனிஷ்கர் கூறியதை எந்த அளவிற்கு நம்புவது என்று உதயசந்திரனுக்குத் தெரியவில்லை. தன்னைப் பெற்றவர்கள் என்று அவர் கூறிய தாயும் தந்தையும் உயிரோடு இல்லாத நிலையில் அவர் கூறுவது மட்டுமே உண்மையானது என்று நம்புவதற்கு அவன் தயாராக இல்லை. தனது பிறப்பு குறித்து மேலும் பல முடிச்சுகள் அவிழ வேண்டும் என்று தோன்றியது.

கனிஷ்கரைப் பார்த்து, ''ஐயா, எனக்கு நினைவுக்குத் தெரிந்த நாளிலிருந்து நான் தமிழகத்தில் உள்ள கடற்கரை நகரமான நாகைப்பட்டிணத்தில்தான் இருந்து வருகிறேன். பெருஞ்சாத்தன் தான் எனது தந்தையாக இருக்கிறார். நீங்களோ நான் மகத நாட்டில் பிறந்தவன் என்று சொல்கிறீர்களே? எப்படி?'' என்று கேட்டான்.

''மகனே! நான் ஏற்கெனவே சொன்னேன். நீ நான்கு வயதாக இருக்கும்போது யாராலோ தூக்கிச் செல்லப்பட்டாய் என்று. குப்தர் படையில் தமிழகத்து வீரர்கள் இருந்தார்கள் என்றும் சொன்னேன். அவர்களில் ஒருவர் பெருஞ்சாத்தனாக இருக்கலாம். மகதத்திலிருந்து நாகைக்கு உன்னைத் தூக்கிச் சென்றிருக்கலாம் அல்லவா?'' என்றார் கனிஷ்கர்.

''ஐயா, பெருஞ்சாத்தனுக்கு வாள் வீசக்கூடத் தெரியாது. அவர் எப்படி குப்தர் படையில் இருக்க முடியும்?''

''பெருஞ்சாத்தன் என்ன தொழில் செய்கிறார்?''

''வாணிகம் செய்கிறார். பரம்பரை பரம்பரையாக அவரது முன்னோர்கள் தரை வாணிபம் செய்து வருகிறார்கள்.''

''தமிழ் வாணிபர்கள் மகதத்தில் நிறைய பேர் இருக்கிறார்கள். மகதத்திற்கும் தமிழகத்திற்கும் நெருங்கிய வாணிபத் தொடர்பு உண்டு. உன் தந்தையும் மகதத்தில் வணிக நிமித்தமாக வந்து தங்கியிருக்கலாம். நீ குழந்தையாக இருந்தபோது கடத்தியிருக்கலாம்.''

''அவர் எதற்காக என்னைக் கடத்த வேண்டும்?''

''பிள்ளை ஆசை காரணமாகவும் பாசம் காரணமாகவும் கடத்தியிருக்கலாம். நீ வேண்டுமானால் அவரைக் கேட்டுப்பார்.''

''ஐயா, பான் இனத்தவரின் சாயல் எனக்கு இருப்பதாகத் தெரியவில்லையே.''

''அப்படியே நூற்றுக்கு நூறு சதவிகித சாயல் இருக்க வேண்டியதில்லை. அதோடு குழந்தை பருவத்திலேயே நீ

தமிழகத்திற்குக் கடத்தப்பட்டு அங்கே வளர்க்கப்பட்டதால் சாயல் மாறியிருக்கலாம்.''

''ஐயா, இந்த பான் இனத்தவர் எந்த நாட்டைச் சேர்ந்தவர்கள்?''

''பாரத நாட்டிற்கும் சீன நாட்டிற்கும் இடையே கிழக்கு மேற்காக விரிந்து கிடக்கும் பீடபூமியான திபத் நாட்டின் ஒரு பகுதியில் தான் பான் இனத்தவர்கள் வாழ்ந்தார்கள். அவர்களில் பலர் பாரத நாட்டில் பல இடங்களில் குடியேறி பாரத அரசர்களின் படைகளில் சேர்ந்தார்கள். அவர்களில் ஒரு பிரிவுதான் பல்லவ ராஜ குடும்பத்திற்கு தங்களை அர்ப்பணித்துக் கொண்டு ராஜ வம்சத் தாரை காத்து வருகிறது.''

''நீங்கள் குப்த ராஜ்யத்தவர் என்று சொன்னீர்கள். அங்கே போகாமல் காஞ்சிக்கு எங்களோடு வருகிறீர்களே அது ஏன்?''

''மகனே! என் மனைவி கர்ப்பிணியாக இருந்தபோதே இறந்து விட்டாள் என்று சொன்னேன். அவளைத் தவிர மகதத்தில் எனக்கு யாரும் இல்லை. ஆகவே தான் நான் பணிபுரிந்த படைக்கு உரிய காஞ்சிக்கே வந்து உயிருள்ள வரை படையில் சேவை புரிய விரும்புகிறேன்.''

''மகிழ்ச்சி ஐயா. தங்கள் விருப்பம் போல் செய்யுங்கள். எனது பிறப்பு குறித்து தெரிவித்த விஷயங்களை வேறு யாரிடமும் சொல்ல வேண்டாம்.''

''அப்படியே ஆகட்டும் மகனே'' என்றார் கனிஷ்கர்.

அதற்குப் பிறகு அவரும் உதயசந்திரனும் சந்திக்கவோ பேசவோ இல்லை.

ஐராவதன் உதயசந்திரனிடம் கேட்டான்.

''உபதலைவரே, வாதாபி மலைக்கோட்டைக்கு நீங்கள் அனுப்பி வைத்த அகமது முகமது ஆகிய இருவரும் என்ன ஆனார்கள்?''

''அவர்கள் மலைக்கோட்டைக்கு வந்திருந்தால் விஜயகுமாரி உங்களைப் போலவே கைது செய்திருப்பாள். என்னிடம் பேசும்போது விஜயகுமாரி அவர்களைப் பற்றி எதுவும் சொல்ல வில்லை. அநேகமாக அவர்கள் மலைக்கோட்டைக்குப் போகாமல் வேறு ஏதாவது வழியில் தப்பிச் சென்றிருப்பார்கள். அதனால் நமக்கொன்றும் நஷ்டமில்லை. கனிஷ்கரைக் கண்டுபிடிக்கத்தான் அவர்களை நம்மோடு வைத்திருந்தேன். கடைசியில் அவர்கள் இல்லாமலேயே கண்டுபிடித்தாகி விட்டது. அவர்களைப் பற்றிய கவலை இல்லை'' என்றான் உதயசந்திரன்.

ஒன்றரை மாதம் கழித்து அவர்கள் துங்கபத்திரை ஆற்றைக் கடந்து தெற்கே வந்தார்கள். முன்பு போல் காடுகள் மலைகள் என்று மறைந்து செல்லாமல் இளவரசன் படைகளோடு சென்ற பகிரங்கமான பாதைகள் வழியாகவே பயணம் செய்தார்கள். ஆற்றங்கரையில் நிலா வெளிச்சம் பரவலாக வீசியபடியால் உதயசந்திரனும் படைகளும் அங்கேயே தங்கினார்கள். இதமான காற்று வீசி அனைவரையும் தாலாட்டியது.

வாதாபியில் புறப்பட்டதிலிருந்து சந்திரலேகாவிடம் ஒரு வார்த்தையும் பேசாதிருந்த உதயசந்திரன் அவள் மீது அனுதாபம் கொண்டான். ஆற்றங்கரையில் நீண்ட பாறையொன்றில் படுத்துத் தூங்கிக் கொண்டிருந்தாள் அவள். அங்கே சென்று அவளைத் தொட்டு எழுப்பினான் உதயசந்திரன். அவள் கண் விழித்து அவனைக் கண்டதும் எழுந்து கொண்டாள். அவளைப் பாறையிலேயே உட்காரும்படிச் சொல்லி தானும் உட்கார்ந்த பிறகு ''உன் சுகமான தூக்கத்தைக் கெடுத்துவிட்டேனா சந்திரா?'' என்று இதமான குரலில் கேட்டான்.

''உறங்குபவனை விழிக்க வைப்பது உபதலைவரின் கடமை அல்லவா? அதைத்தான் நீங்களும் செய்திருக்கிறீர்கள்'' என்று அவளும் பணிவாகவும் அழகாகவும் சொன்னாள்.

''வாதாபியை விட்டுப் புறப்பட்டதிலிருந்து என்னிடம் ஒரு வார்த்தை கூட பேசவில்லையே ஏன்?'' என்று கேட்டான் உதயசந்திரன்.

''பேசுவதை விட சில நேரங்களில் பேசாமல் இருப்பது கௌரவமாகவும் நிம்மதியாகவும் இருக்கிறது.''

''என் மீது உனக்கிருக்கும் கோபம் தீரவில்லை என்று நினைக்கிறேன்.''

''அப்படியெல்லாம் இல்லை உபதலைவரே. உணர்ச்சி வசப்பட்ட குணங்களெல்லாம் இருண்டோடிவிட்டது, நான் இப்போது நிதானமாக இருக்கிறேன். அளவோடு பேசுகிறேன்.''

''என் மீது உனக்கு நம்பிக்கை இருக்கிறதா?''

''எந்த விஷயத்தில் கேட்கிறீர்கள் உபதலைவரே?''

''இது கூடவா உனக்குப் புரியவில்லை?''

''நான் அந்த ஆசையை விட்டுவிட்டேன் உபதலைவரே. அது கானல் நீர் என்பதை உணர்ந்து விட்டேன்.''

''எதற்காக இந்த முடிவு?''

''உடலும் உடலும் சேரும் வாழ்வை உலகம் மறந்தா லென்ன? உடல் ஓடி ஆடி ஓயும் முன்னே உண்மை அறிந்தா லென்ன என்று மனம் கேட்கிறது.''

''மனம் நிலையானது அல்ல சந்திரா. ஆகவே தான் அதைக் குரங்கு என்று சொல்கிறார்கள்.''

''குரங்கு போன்ற மனத்தை அடக்கி வாழும் துறவிகள் இருப்பது உபதலைவருக்குத் தெரியாதா?''

''நீ துறவியாகவா ஆகிவிட்டாய்?''

''ஆகிவிடலாம் என்று தோன்றுகிறது.''

''ஏன்?''

''ஆகாவிட்டால் ஆசைகள் அதிகமாகத் தோன்றி நிறைவேற முடியாமல் தவிக்க வேண்டியதாகிவிடுகிறது.''

''உண்மைக் காரணத்தைச் சொல்லிவிட்டாய் சந்திரா. நான் ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். நீ என்னால் ஏற்கப் படுவாயே தவிர இழக்கப்பட மாட்டாய். காஞ்சிக்குப் போனதும் அதை உணர்ந்து கொள்வாய்.''

''அவளுக்கென்ன? அவள் பௌர்ணமி.''

''அவள் பௌர்ணமி என்றால் நீ சூரியன்'' என்று சொல்லி அவளைத் தன் மார்போடு அணைத்துக் கொண்டான் உதயசந்திரன்.

அவள் ஆறுதல் அடைந்தாள். கண்ணீர் துளிகள் சில சிலிர்த்து அவனது மார்பில் தஞ்சமடைந்தன.

வீரர்கள் மேலும் பயணம் செய்து வட பெண்ணையாற்றைக் கடந்து தமிழ் நாட்டுப் பகுதிக்கு வந்தார்கள்.

அப்போது அப்பகுதியில் பரவியிருந்த விஷக் காய்ச்சல் வீரர்கள் சிலரையும் பாதித்தது. இரண்டு வீரர்கள் இறக்கவும் செய்தார்கள்.

அக்காய்ச்சல் சந்திரலேகாவுக்கு வந்தபோது பதறிப் போனான் உதயசந்திரன். வீரர்களை அனுப்பி ஊர்ப் பகுதியில் இருந்த வைத்தியர்களை அழைத்து வந்து சிகிச்சை செய்தான்.

காய்ச்சலானது சில சமயம் குறைந்தது. சில சமயம் அதிகரித்தது.

''அதிக அலைச்சல் காரணமாக இப்பெண்ணிற்கு உடல் ஏற்கெனவே பாதிக்கப்பட்டிருக்கின்றது. நோய் எதிர்ப்பு சக்தியும் வெகுவாகக் குறைந்திருக்கிறது. விஷக் காய்ச்சலை முறியடிக்கும் வீரியம் எங்கள் மருந்திற்கு இல்லை. எனவே எல்லோரும் இந்த இடத்தை விட்டுக் கிளம்புங்கள். நான்கு காத தூரத்தில் பாரம்பரிய வைத்தியசாலை இருக்கிறது. அங்கே போனால் இவள் ஒருவேளை பிழைக்கலாம்'' என்றார்கள் வைத்தியர்கள்.

உடனே பார வண்டி ஒன்றை ஏற்பாடு செய்து அதில் சந்திரலேகாவை படுக்க வைத்து அந்த வண்டியிலேயே அமர்ந்து கொள்ள, அனைவரும் புறப்பட்டார்கள்.

குறிப்பிட்ட வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றபோது சந்திரலேகா ஏற்கெனவே இறந்துவிட்டதாகத் தெரிவித்தார்கள் வைத்தியர்கள்.

''ஐயோ'' என்று அலறினான் உதயசந்திரன்.

அவனைப் பலரும் தேற்றினார்கள்.

எதிர்பாராத சோகத்தால் மிகவும் கலங்கிப் போனான் உதயசந்திரன்.

நிறைவேறாத ஆசைகளுடன் அவள் இறந்து விட்டதை எண்ணி வேதனைப்பட்டான்.

காஞ்சிக்குச் சென்றதும் அவளுக்கு நல்வாழ்வு தருவதாக வாக்களித்திருந்த நிலையில் வாக்களித்ததே போதும் என்று சொல்லி விட்டு அவள் போய்விட்ட மாதரி இருந்தது அவனுக்கு.

அந்த ஊரிலேயே சந்திரலேகாவின் உடலை அடக்கம் செய்தான் உதயசந்திரன்.

சந்திரலேகா இறந்ததை விட அவளை எண்ணி உதயசந்திரன் வருந்தி வாடியது தான் பல்லவ வீரர்களுக்கு வருத்தமாக இருந்தது.

''எப்பேர்பட்ட வீரன் இவன்? எந்த ஆபத்தாக இருந்தாலும் விவேகத்துடன் சமாளித்து வெற்றி பெறக்கூடிய இவன் ஏன் இப்படி வருந்த வேண்டும். இப்படி இவன் வருந்துகிறான் என்றால் இந்தப் பெண் பாக்கியசாலியாகத்தான் இருக்க வேண்டும்'' என்று வீரர்கள் சொல்லிக் கொண்டார்கள்.

காஞ்சியை அடையும் வரை உதயசந்திரன் யாரிடமும் அதிகம் பேசவில்லை.

வாதாபியை விட்டுக் கிளம்பி ஆறு மாதங்கள் கழிந்த நிலையில் காஞ்சிக்குள் நுழைந்தான் உதயசந்திரன்.

ஆனால் அவனை யாரும் வரவேற்க வரவில்லை.

நகரம் வெறிச்சோடிக் கிடந்தது.

தெருவெல்லாம் ஏதோ ஒரு சோகம் கவ்விக் கொண்டிருந்தது போலிருந்தது.

அதற்கான காரணத்தை அறிந்ததும், ''ஐயோ'' என்று அலறினான் உதயசந்திரன்.

மயக்கமும் அடைந்தான்.

☆☆☆



56

எதிர்பாராத அதிர்ச்சிகள்

நினைவு தெளிந்த போது தன் மாளிகையில் இருப்பதை உணர்ந்தான் உதயசந்திரன்.

அப்போது அவனுக்கு தான் மயக்கமடைந்தது நினைவிற்கு வந்தது.

அதற்கான காரணமும் நினைவிற்கு வந்தது.

''ஐயோ! இப்படியா நடக்க வேண்டும்?'' என்றெண்ணிக் கொண்டு சில நிமிடங்கள் வரை செய்வதறியாமல் தவித்தான்.

பிறகு நீராடி முடித்து புத்தாடைகளை அணிந்து கொண்டான்.

பணியாளர்கள் உணவைக் கொண்டு வந்து வைத்தார்கள்.

உணவைத் தொடுவதற்குக் கூட அவன் பிரயத்தனப் படவில்லை.

பணியாட்களைப் பார்த்து, ''நான் கேள்விப்பட்ட தெல்லாம் உண்மை தானா? மாமன்னர் எப்படி இருக்கிறார்?'' என்று கேட்டான்.

அச்சமயத்தில் அரண்மனைப் பணியாளன் ஒருவன் பிரவேசித்து உதயசந்திரனை மன்னன் அழைப்பதாகச் சொன்னான்.

''மன்னர் முகத்தில் எப்படி பிரவேசிப்பது?'' என்று தனக்குத் தானே கேட்டுக் கொண்ட அவன் உணவை உண்ணாமல் புரவியில் ஏறி அரண்மனைக்குப் புறப்பட்டான்.

அரண்மனையில் தனிமையில் இருந்த மன்னன் உதயசந்திரனைக் கண்டதும், ''வா உதயசந்திரா. நான் இட்ட பணிகளைப் பூரணமாக நிறைவேற்றிவிட்டாய். உனக்கு என் நன்றி'' என்று சொன்னதும் உதயசந்திரனுக்கு கண்கள் கலங்கின.

''மன்னவா! எனக்கா நன்றி சொல்கிறீர்கள்? நான் தான் பொறுப்பை நிறைவேற்றவில்லையே! மிகப் பெரிய குற்றமிழைத்திருக்கும் எனக்கு தண்டனையல்லவா வழங்க

வேண்டும்?'' என்று கலங்கிய குரலிலேயே கேட்டான் உதயசந்திரன்.

''இல்லை உதயசந்திரா! நான் இட்ட கட்டளை தான் என்ன? சாளுக்கிய நாட்டிற்குச் சென்ற என் மகன் மகேந்திரனுக்குப் போரின் போது ஆபத்து வரக் கூடுமாதலால் அவனை அருகில் இருந்து அவனைக் கண் போல் காக்க வேண்டும் என்று சொன்னேன். நீ வீர பல்லவப் படையின் தலைவனாகி மகேந்திரனைக் காப்பாற்றினாய். வெற்றி பெற்ற பிறகு படைகளோடும் படைத் தலைவர்களோடும் காஞ்சிக்கு அனுப்பி வைத்தாய். இதில் தவறு சொல்ல எதுவும் இல்லை. இரண்டாவது கட்டளை பல்லவ ராஜாங்கத்திற்குத் தேவையான நிதியைப் பற்றியது. இதில் நான் எதிர்பார்த்தது ரணரசிகபுரத்து பொக்கிஷ செல்வங்களை மட்டும்தான். நீயோ கொள்ளைக்காரர்களிடமே சாமர்த்தியத்தைக் காட்டியிருக்கிறாய். ரணரசிகபுரத்திற்குப் போவதற்கு முன்பாகவே பல்வேறு இடங்களில் உன் சாமர்த்தியத்தைக் காட்டி செல்வங்களைத் திரட்டியிருக்கிறாய். மொத்தத்தில் நான் எதிர்பார்த்ததை விட நான்கு மடங்கு செல்வத்தை பல்லவ அரசுக்கு கொண்டு வந்து சேர்த்துவிட்டாய். உன் மீது எந்த குற்றமும் இல்லை'' என்றான் மன்னன் ராஜசிம்மன்.

''மன்னவா! எத்தனைச் செல்வங்களைக் கொண்டு வந்து சேர்த்திருந்தால் என்ன? அவையெல்லாம் தங்களுக்கு நேர்ந்த இழப்புக்கு ஈடாகுமா? நான் தவறுதான் செய்துவிட்டேன் பிரபு. போரில் வெற்றி பெற்றதும் என் பொறுப்பு முடிந்துவிட்டதாக நினைத்தது குற்றம். வாதாபியில் இருந்த கைதிகளை மீட்க நினைத்தது குற்றம். என் பிறப்பு ரகசியத்தைப் பெரிதாக எண்ணி பின்தங்கிவிட்டது சுயநலம். அதுவும் குற்றம்தான்.''

''இல்லை உதயசந்திரா, போரில் வெற்றி பெற்ற பின் சிறையில் இருக்கும் கைதிகளை விடுவிப்பது பற்றி இதுவரை யாரும் சிந்தித்ததில்லை. நீ மட்டுமே சிந்தித்து செயல்பட்டு கைதிகளை விடுவித்திருக்கிறாய். பல்லவ வீரர்களைத் தவிர பிற நாட்டு வீரர்களும் விடுதலையாகியிருக்கிறார்கள். இதன் மூலம் அந்த வீரர்களின் குடும்பத்தினர் உன்னை வாழ்த்தும் பாக்கியத்தைப் பெற்றிருக்கிறாய். வெற்றி பெற்ற படையுடன் நீ வராதது குற்றமல்ல. சென்றவர்கள் அனைவரும் அப்படியே திரும்பி வருவது என்பது சம்பிரதாயமல்ல. தளபதிகளில் பலர் வேறு வேறு இடங்களுக்குச் சென்றுவிட்டு தனித்தனியாகத் திரும்புவது உண்டு. அதேபோல உன் பிறவி ரகசியத்தை அறிய முயன்றது சுயநலமல்ல.

எனக்கும் உன் நிலையில் இருந்தால் ஆர்வம் வரத்தான் செய்யும். அதோடு வாதாபியில் இருந்து கைதிகளை விடுவிக்கும் முயற்சியில் இதுவும் ஒரு பகுதிதான்.''

''மன்னவா, என்னை இந்த அளவிற்குத் தாங்கி நிற்கும் தங்களை நான் தெய்வமாகவே பார்க்கிறேன். இளவரசர் எப்படி மாண்டார் என்பது எனக்கு விளங்கவில்லை பிரபு. வீர பல்லவப் படை அவருடன்தானே இருந்தது? பிறகு எப்படி அவருக்கு அந்த அவலம் நேர்ந்தது?''

''உதயசந்திரா, இளவரசனின் மரணத்தில் மர்மம் இருப்பது உண்மை. அது பற்றி உன்னிடம் பேச வேண்டும். இப்போது வேண்டாம். நீ போய் பௌர்ணமியைச் சந்தித்து பேசிவிட்டு வா.''

''பௌர்ணமி காத்திருப்பாள் பிரபு. தாங்கள் இளவரசரைப் பற்றிச் சொல்லுங்கள்.''

''மாண்டவர் மீண்டு வரப் போவதில்லை. அவர்களைப் பற்றி நிதானமாகப் பேசலாம். பௌர்ணமியை நீ பிரிந்து ஒன்பது மாதங்களாகிறது. உன்னை எண்ணி வாடிக் கொண்டிருக்கும் அவளுக்கு ஆறுதல் வார்த்தைகளைச் சொல். நாம் நாளை பார்க்கலாம்'' என்றான் மன்னன்.

மன்னனை வணங்கிவிட்டு விடைபெற்றுக் கொண்ட உதயசந்திரன் பௌர்ணமியைச் சந்திக்க நேரே பாண்டவ தூதப் பெருமாள் ஆலயத்திற்குச் சென்றான்.

ஆலயத்திற்குச் சென்று பெருமானை வணங்கினான்.

''எம்பெருமானே! என் நிலையை உயர்த்தி பல்லவருக்கு வெற்றியையும் ஈட்டித் தந்ததற்காக தங்கள் தாளினைப் பணிகிறேன். ஆனால் இந்த மகிழ்ச்சியைக் கொண்டாட முடியாதவாறு இளவரசரின் உயிரை எடுத்துக் கொண்டாயே! அது ஏன்?'' என்று பெருமானிடம் கேட்டுவிட்டு அங்கேயே சிறிது நேரம் மௌனமாய் இருந்து வெளியே வந்தான்.

ஆலயம் முன்போல் இல்லாமல் வீரர்களால் நன்றாக பாதுகாக்கப்பட்டிருந்தது.

ஆலய அர்ச்சகர் அவரது இல்லத்தில் இருந்தார்.

காஞ்சி வருவதற்கு முன்பே உதயசந்திரனின் சாகசங்களைப் பற்றிய செய்திகள் வந்திருந்ததால் அவனைக் கண்டதுமே வாயாறப் புகழ்ந்தார் அர்ச்சகர்.

''நான் சொன்னேன் அல்லவா? பாண்டவ தூதனின் மகிமை அப்படி. அவனை நம்பி வழிபடுபவர்களை அவன்

ஒரு நாளும் கைவிட்டதில்லை. இப்போது நம்புகிறாயா?'' என்று கேட்டார் அவர்.

இளவரசர் மாண்டு போனதை நினைத்துக் கொண்ட உதயசந்திரன் அது பற்றி அவரிடம் எதுவும் பேசாமல், ''உண்மைதான் சுவாமி. அவனது அருளும் தங்களது ஆசிர்வாதமும் தான் என்னையும் உயர்த்தியது. உங்கள் மகனையும் உயர்த்தியது'' என்றான்.

''அரிச்சந்திரனைப் பற்றிச் சொல்லாதே. பொய்யன். புரட்டன். அவனுக்குப் போய் அரிச்சந்திரன் என்ற பெயரை வைத்தேனே!'' என்று கோபப்பட்டார் அர்ச்சகர்.

''அவன் என்ன செய்துவிட்டான் என்று இப்படி கோபப்படுகிறீர்கள்?''

''நடந்ததையெல்லாம் எங்களிடம் சொல்லிவிட்டான் உதயசந்திரா. அதை எண்ணி நாங்கள் பெருமையாபட முடியும்?''

''நடந்ததையெல்லாம் தான் சொல்லிவிட்டானே! பிறகென்ன சுவாமி? தவறுகளை ஒப்புக் கொள்பவன் எப்படி கெட்டவனாக முடியும்? அதற்காக நீங்கள் அவனைப் பாராட்ட முடியாவிட்டால் பரவாயில்லை. மகிழ்ச்சி அடையுங்கள். இளவயதில் சில தடுமாற்றங்கள் வருவது இயல்புதான். அதுதான் அரிச்சந்திரனுக்கும் வந்தது. ஆனால் அதிலேயே அவன் மூழ்கிவிடாமல் மீண்டான். சாளுக்கிய போர்களில் வீரனாகப் போரிட்டான். ஆகவேதான் என் நெருங்கிய நண்பர்களின் ஒருவனானான்.''

ஒப்புக் கொள்வதுபோல் தலையை ஆட்டிய அர்ச்சகர், ''அவன் உயிரை நீ காப்பாற்றியதாகச் சொன்னான். அதற்காக இந்த குடும்பமே உனக்கு நன்றிக்கடன் பட்டிருக்கிறது'' என்றார்.

''திருந்துவதற்கு வாய்ப்பிருக்கும்போது ஒருவனைக் கொல்வதால் என்ன பயன் சுவாமி? அதுதான் உங்கள் மகன் விஷயத்தில் நடந்தது. என் கடமையைத்தான் நான் செய்தேன். நான் உங்கள் குடும்பத்தில் ஒருவன். பிச்சைக்காரனாக வந்த எனக்கு நீங்கள் மட்டும் சோறிட்டு ஆதரிக்காமல் விட்டிருந்தால் நான் இப்போது இப்படி உங்கள் முன் நிற்க முடியுமா? நான் தான் உங்களுக்குக் கடன்பட்டவன்'' என்று சொன்ன உதயசந்திரன், ''உங்களுக்கு ஏதாவது உதவி தேவையா?'' என்று கேட்டான்.

''குறையொன்றும் இல்லை உதயசந்திரா. படைத் தொழிலுக்குச் செல்லும் குடும்பத்தினரை அரசாங்கம் தத்தெடுத்து

பாதுகாக்கிறது. யார் இல்லை என்றாலும் பாண்டவ தூதன் எப்போதும் இருக்கிறான்'' என்றார் அர்ச்சகர்.

''பௌர்ணமி எங்கிருக்கிறாள் சுவாமி?''

''நீ போன பின் அவள் எங்கேயும் செல்லவில்லை. இங்கே தான் இருந்தாள். போரில் நீ வெற்றி பெற வேண்டும் என்றும் பத்திரமாகத் திரும்ப வேண்டும் என்றும் பெருமாளைச் சுற்றிச் சுற்றி வந்து கொண்டிருந்தாள். நீ இன்று வருவாய் என்பது அவளுக்குத் தெரியுமோ என்னவோ தாரா தேவி கோயிலுக்கு உன்னை வரவிட்டு போய்விட்டாள். சீக்கிரமாகப் போ'' என்றார் அர்ச்சகர்.

சோலைத் தெருவில் இருந்த தருமதேவியான தாராதேவி ஆலயத்திற்குச் சென்றான் உதயசந்திரன்.

அவள் அங்கு இல்லை.

பக்கத்தில் இருந்த சோலைக்குச் சென்றான்.

அங்கே புன்னை வனத்தில் கிளிகளோடு விளையாடிக் கொண்டிருந்தாள் பௌர்ணமி.

முன்பு பார்த்ததைவிட சற்று இளைத்திருந்தாள் அவள்.

உதயசந்திரன் அருகில் வந்ததைக்கூட அவள் கவனிக்காமல் பறக்கும் கிளிகளைப் பிடித்துக் கொண்டும், பிடித்த கிளிகளைப் பறக்க விட்டுக்கொண்டும், அவற்றோடு பேசிக் கொண்டு மிருந்தாள் அவள்.

தன்னை வரச்சொல்லிவிட்டு தான் வந்ததைக் கவனிக்காமல் அவள் கிளிகளோடு பேசிக் கொண்டிருந்த விதம் அவனுக்கு என்னவோ போலிருந்தது.

ஒன்பது மாத காலமாகப் பிரிந்திருந்தாலும் அவனைப் பொறுத்தவரையில் பிரிவு தெரியாத வகையில் ஏதேதோ சம்பவங்கள் நடந்து கொண்டிருந்தன. அவனும் செயல்பட்டுக் கொண்டிருந்தான். எனவே காலம் ஓடியது தெரியாமல் ஓடிவிட்டது.

ஆனால் பௌர்ணமிக்கு அப்படியில்லை. அவளுக்கு அவனை நினைப்பதைத் தவிர வேறு வேலையில்லை. எனவே ஒவ்வொரு நிமிடமும் ஒவ்வொரு யுகமாகக் கழிந்தது. ஒன்பது மாத காலம் என்பது ஒரு ஜென்ம காலம் போலிருந்தது அவளுக்கு. உதயசந்திரனை நினைக்கக்கூடாது என்று நினைத்தால் வேறு எதைப் பற்றியும் நினைக்கப் பிடிக்கவில்லை. வேறு எதைப் பற்றியும் நினைக்க முடியாதபோது உதயசந்திரனையே நினைத்துக் கொண்டாள்.

கொஞ்சம் கொஞ்சமாக அந்தச் சங்கடமான நிலையிலிருந்து விடுபட்டு கிளிகளோடு விளையாடத் தொடங்கினாள். அதைத்தான் தற்போதும் செய்து கொண்டிருந்தாள்.

அவளது மனநிலையை ஓரளவிற்கு ஊகித்துக்கொண்ட உதயசந்திரன், ''பௌர்ணமி'' என்று குரல் கொடுத்தான்.

அதைக்கேட்டு சட்டென்று அவனைத் திரும்பி உற்றுப் பார்த்தாள் பௌர்ணமி.

ஆனால் எதுவும் பேசாமல் தனது விளையாட்டைத் தொடர்ந்தாள்.

அவள் கோபத்தில் இருக்கிறாள் என்பது புரிந்தது உதயசந்திரனுக்கு.

'இப்படிக் கோபத்தில் இருப்பதை, 'ஊடல்' என்று பிரத்தியேக வார்த்தையில் அல்லவா அழைத்தார்கள் தமிழர்கள்? கூடலுக்கு இந்த ஊடல் அவசியம் என்றுமல்லவா சொன்னார்கள்? இந்தப் பொய்யான கோபம்தான் எத்தனை அழகாக இருக்கிறது? இக்கோபத்தின் தன்மையே தானாகத் தீராது என்பதுதானே? அதுவும் காதலர்களுக்கிடையில் இந்த ஊடல் வரும்போது இன்னும் சிறப்பாக அல்லவா இருக்கிறது? எத்தனையோ சிக்கல்களையெல்லாம் கடந்த ஒன்பது மாதங்களாகத் தீர்த்திருக்கிறேன்? அப்போதெல்லாம் வராத ஓர் இன்பம் இந்த ஊடலைப் பார்க்கும் போது வருகிறதே அதனால் தான் அக்காலத்தில் ஊடல் தனித்தன்மையோடும் சிறப்போடும் இருந்ததா? ஊடுதல் காமத்திற்கு இன்பம் என்றும் அதையடுத்து அணைத்துக் கொண்டு கூடுவது ஊடலுக்கான இன்பம் என்று திருவள்ளுவர் என்ற மாபெரும் புலவர் பாடியது இதனால் தானோ?* என்றெல்லாம் இன்பமாக எண்ணிக் கொண்ட உதயசந்திரன் ஓரடி எடுத்து வைத்து, ''பௌர்ணமி! என்ன கோபமா?'' என்று கேட்டான்.

அவளோ அவனைப் பொருட்படுத்தவேயில்லை.

''உன் கோபம் நியாயம்தான் பௌர்ணமி. அதற்காக பாராமுகமாக நீ இருக்கலாமா? நானும் உன் பிரிவால் வாடியது நானும்தான்'' என்றான் உதயசந்திரன்.

---

* 'ஊடுதல் காமத்திற்கு இன்பம் அதற்கின்பம்
கூடி முயங்கப் பெறின்'

-திருக்குறள் 1330

அவள் அங்கிருந்து கிளிகளை விரட்டிக் கொண்டு சென்றாள்.

''ஓடாதே பௌர்ணமி. நான் இங்கிருக்க - நீ எங்கே ஓடுகிறாய்? என்னைப் பார்த்துப் பேசு. கோபம் தீரும் வரை திட்டு. ஒரேயடியாக என்னை தண்டித்துவிடாதே'' என்று சொல்லி பாய்ந்து சென்று அவளைப் பிடித்தான்.

அவளோ அவனது கையைப் பிடித்து கடித்துவிட்டு கத்தியபடி ஓடிவிட்டாள்.

உதயசந்திரனுக்கு பௌர்ணமியின் போக்கு விசித்திரமாக இருந்தது. 'கடிக்கும் அளவிற்கா கோபம்?' என்று கேட்டுக் கொண்ட அவன், 'இது சாதாரண ஊடல் அல்ல. மாபெரும் ஊடல்' என்று எண்ணியவனாய் அவளைத் தேடிக் கொண்டு சென்றான்.

அவள் தட்டுப்படவே இல்லை.

சோலை முழுவதும் தேடினான். தாராதேவி ஆலயம் முழுவதும் தேடினான்.

எங்குமே அவள் இல்லாததால் பாண்டவ தூதப் பெருமாள் ஆலயத்திற்கே சென்றான் உதயசந்திரன்.

அங்கே ஒரே கூட்டமாக இருந்தது.

ஆலய மண்டபத்தின் மீது ஏறிக் கொண்டு கீழே குதித்து விடுவதாகச் சொல்லிக் கொண்டிருந்தாள் பௌர்ணமி.

கீழே இருந்தவர்கள் பதட்டத்துடன் ''வேண்டாம் வேண்டாம்'' என்று குரல் கொடுத்துக் கொண்டிருந்தார்கள்.

ஆலய அர்ச்சகரும், ''கீழே குதிக்காதே பௌர்ணமி. அங்கேயே இரு நாங்கள் வருகிறோம்'' என்று சொல்லிக் கொண்டிருந்தார்.

அவரிடம் சென்ற உதயசந்திரன், ''சுவாமி என்ன இது? பௌர்ணமி ஏன் இப்படி நடந்து கொள்கிறாள்? அவளுக்கு என்ன ஆயிற்று?'' என்று கேட்டான்.

அவரோ தயங்கித் தயங்கி, ''அவளுக்குச் சித்தப் பிரமை'' என்றார்.

''சித்தப் பிரமையா? இதை ஏன் என்னிடம் முதலிலேயே சொல்லவில்லை?'' என்று கேட்டுவிட்டு மண்டபத்தை நோக்கினான் உதயசந்திரன்.

இதற்கிடையில் மண்டபத்திற்கு மேலே பலர் ஏறத் தொடங்கியதால் மண்டபத்தை ஒட்டியிருந்த கருவறை

விமானத்தின் மீது ஏறத் தொடங்கினாள். கிளிகள் அவளைச் சுற்றிச் சுற்றி வந்து 'கிறீச், கிறீச்' என்று சத்தமிட்டன.

மண்டபத்தின் மேல் இருந்தவர்களை மௌனமாக இருக்கச் சொன்ன உதயசந்திரன் கருவறை விமானத்திற்குப் பின்புறமாகச் சென்றான். நீண்ட கயிறொன்றை எடுத்து விமானத்தின் மேலிருந்த கலசத்தின் மீது வீசினான். கயிறு கலசத்தில் போய் பொருந்தியதும் அதைப் பிடித்துக் கொண்டு விமானத்தின் மீது ஏறினான். அவன் பின்புறமாக மேலே வருவதற்கும் பௌர்ணமி முன்புறமாக மேலே வருவதற்கும் சரியாக இருந்தது. மேலே வந்த அவள் பயத்தால் நடுங்கினாள். மயங்கி விழவிருந்தாள். அவளை அப்படியே தோளில் போட்டுக் கொண்ட உதயசந்திரன் பழையபடியே கயிற்றைப் பிடித்துக் கொண்டு கீழே இறங்கத் தொடங்கினான். கோபுரத்தின் கலசம் கல்லால் உருவாக்கப் பட்டிருந்ததால் அவ்விருவரது கனத்தையும் தாங்கியது. பத்திரமாக கீழே அவளைக் கொண்டு வந்து சேர்த்த உதயசந்திரன் ''யாராவது வைத்தியரை அழைத்து வாருங்கள்'' என்றான்.

அர்ச்சகர் குறிக்கிட்டு, ''காஞ்சியின் கடிகை திறக்கப்பட்டு விட்டது. அங்கே எல்லாவிதமான சிகிச்சையும் செய்யப் படுகிறது. பௌர்ணமியை அங்கே கொண்டு செல்லலாம்'' என்றார்.

உடனே வண்டியொன்று ஏற்பாடு செய்யப்பட்டது.

உதயசந்திரனின் புகழ் கடிகையிலும் பரவி இருந்ததால் அவனைக் கண்டதும் அங்கே இருந்தவர்கள் சிறப்பாக வரவேற்று வைத்தியசாலைக்கு அழைத்துச் சென்றார்கள்.

''எத்தனை காலமாக இப்படி இருக்கிறது?'' என்று கேட்டார் ஆயுர்வேத வைத்தியர்.

''இரண்டு மாத காலம் இருக்கலாம்'' என்று சொன்ன அர்ச்சகர் பௌர்ணமி உதயசந்திரனின் மீது கொண்டிருந்த அன்பைப் பற்றியும் உதயசந்திரன் அவளைப் பிரிந்து சாளுக்கிய படையெடுப்புக்காகச் சென்றதையும் கூறினார்.

''இவளுக்கு குணம் ஆகிவிடுமா?'' என்று கேட்டான் உதயசந்திரன்.

''இங்கே வருபவர்கள் குணமாகாமல் திரும்புவதில்லை'' என்று சொன்ன வைத்தியர் இன்னும் சற்று நேரத்தில், ''யோக சித்தர் வந்துவிடுவார். கவலைப்படாதீர்கள்'' என்றார்.

சிறிது நேரம் கழித்து யோக சித்தர் வந்து பௌர்ணமியை பரிசோதித்துப் பார்த்தார்.

உதயசந்திரனைப் பார்த்து, ''உங்கள் மீது இவள் கொண்டிருந்த அளவு கடந்த அன்பு சதாசர்வ காலமும் உங்களையே நினைக்க வைத்துவிட்டது. அந்த அளவு கடந்த நினைப்பு சமநிலையை இழந்துவிட்டதால் உங்களையே மறந்துவிட்டாள். உங்களைத் தவிர எல்லோரையும் அவளுக்கு நினைவில் இருக்கிறது. உங்கள் நினைப்பு மட்டும் இல்லை'' என்றார் யோக சித்தர்.

''இது விபரீதமாக இருக்கிறதே! என்னைப் பற்றிய நினைவு இவளுக்கு வராதா?'' என்று கேட்டான் உதயசந்திரன்.

''அப்படியெல்லாம் ஒன்றுமில்லை. சமநிலையை இழப்பதற்குக் காரணமான நரம்புகளுக்கு வலுவைக் கொடுத்து சரியாக இயங்கச் செய்தால் எல்லாம் இயல்பாகிவிடும். அதற்குச் சிலகாலம் பிடிக்கும்.''

''சில காலம் என்றால்?''

''ஆறு மாத காலம் ஆகலாம். கவலைப்பட வேண்டிய தில்லை. இவளுக்குச் சிகிச்சையும் அளித்து பயிற்சியும் கொடுத்தால் குணமாகிவிடுவாள்.''

யோக சித்தர் நம்பிக்கையோடு சொன்னாலும் ஆறு மாத காலம் காத்திருக்க வேண்டியதை எண்ணிக் கலங்கினான்.

அங்கே இருந்த பலரும் அவனுக்கு ஆறுதல் சொன்னார்கள்.

''ஐயா, அவளுக்கு என்னை விட்டால் வேறு யாருமில்லை. எனக்கோ அவள் இல்லாமல் வாழ்வு கிடையாது. இதைத் தவிர வேறு எதையும் சொல்லத் தெரியவில்லை. இவளை உங்களிடம் முழுவதுமாக ஒப்படைக்கிறேன். பூரணமாக குணமாக்கிக் தருவது உங்கள் பொறுப்பு'' என்று கூறிவிட்டு கடிகை சர்வகலா சாலையை விட்டு வெளியேறினான் உதயசந்திரன்.

அவனது மனம் அலைபாய்ந்தது. புள்ளி மானாகத் திரிந்த மலர்ந்த மலர்களைப் போல பளிச்சென்று இருந்து படபட வெனப் பேசி பரவசப்பட வைக்கும் பௌர்ணமி சித்தப்பிரமை நோயாளியாக முடங்கிவிட்டதை அவனால் தாங்கவும் சகிக்கவும் முடியவில்லை.

இல்லத்திலும் தங்கியிருக்க முடியாமல் சேனாதிபதி பகதத்தரின் மாளிகைக்குச் சென்றான்.

அவரது மாளிகை வெறிச்சோடிக் கிடந்தது. காவல் வீரர்கள் யாரும் இல்லை. அதற்கான காரணம் தெரியாத நிலையில் உள்ளே சென்று சேனாதிபதியைச் சந்தித்தான். எப்போதுமே குதூகலமாக

இருந்து காமத்தைப் பற்றி கருத்துக்களைச் சொல்லி கலகலப்பூட்டக் கூடியவரான சேனாதிபதி வேரற்ற மரம் போல் சோபையற்று அமர்ந்திருந்தார்.

உதயசந்திரனைக் கண்டதும், ''வா, உட்கார்'' என்றார்.

''ஐயா, தங்களுக்கு என்னவாயிற்று? எப்போதுமே உங்களை இப்படிக் கண்டதில்லையே? மாளிகையும் அமைதியாக இருக்கிறது. காவலுக்கும் ஏவலுக்கும் ஒருவரைக்கூடக் காணோம். ஏன் இப்படி?'' என்று கேட்டான் உதயசந்திரன்.

''நான் சேனாதிபதியாக இருந்தால் நீ சொன்ன எல்லாம் இருக்கும். நான் தான் சேனாதிபதி இல்லையே!''

''நீங்கள் என்ன சொல்கிறீர்கள் ஐயா?''

''சேனாதிபதி பதவியிலிருந்து நான் விலகிவிட்டேன் உதயசந்திரா.''

''விலகி விட்டீர்களா? ஏன்?''

''விலகுவது தான் சரி என்றுபட்டது. விலகிவிட்டேன்.''

''அப்படி என்ன ஆகிவிட்டது ஐயா?''

''உதயசந்திரா! இளவரசர் மரணமடைந்ததற்கு நானும் ஒரு காரணம் என்று மகாராஜா நினைக்கிறார்.''

''என்ன சொல்கிறீர்கள் ஐயா? நீங்கள் எப்படி அதற்கு காரணமாக இருக்க முடியும்?''

''என்னைப் பற்றி நீ அவரிடம் சொன்னதுதான் காரணம்.''

''நானா? நான் எதுவும் சொல்லவில்லையே.''

''நானும் விஜயகுமாரியும் பேசிக் கொண்டதை நீ மகாராஜாவிடம் சொன்னாயா இல்லையா?''

''ஐயா, அப்போது தங்களைப் பற்றி, எனக்கு எதுவும் தெரியாது. ஆகவே தான் அதிர்ந்து போன நான் நீங்கியதை மன்னரிடம் தெரிவித்தேன். அவர்கூட அதை நம்பவில்லை. எல்லாம் நாடகம் என்றார்.''

''இப்போது உண்மை என்று நினைக்கிறார்.''

''உங்களிடம் சொன்னாரா?''

''நேரடியாகச் சொல்லவில்லை. ஆனால் அப்படி நினைக்கிறார் என்பது எனக்குத் தெரியும். அதனால்தான் பதவியை விட்டு விலகிவிட்டேன்.''

''அதை மன்னர் ஏற்றுக் கொண்டாரா?''

''இன்று வரை மறுக்கவில்லை.''

''நீங்கள் அவரைச் சந்தித்துப் பேசக்கூடாதா?''

''அதற்கு இது நேரமில்லை உதயசந்திரா.''

உதயசந்திரனுக்கு அவரிடம் மேற்கொண்டு என்ன பேசுவது என்று விளங்கவில்லை.

''ஏதோ கெட்ட நேரம் சேனாதிபதியாரே, உங்களுக்கு உரிய நியாயமும் கௌரவமும் கிடைக்கும்'' என்று சொல்லிவிட்டுப் புறப்பட்டான்.

அன்று இரவு அவனுக்குத் தூக்கம் வரவில்லை. காலையிலிருந்து அவன் சந்தித்தவர்கள் எல்லோருமே ஒவ்வோர் விஷயத்தில் தனக்கு எதிர்பாராத அதிர்ச்சிகளைத் தந்து கொண்டிருந்ததை எண்ணிய அவன் 'காலையில் விழித்த வேளை சரியில்லையோ?' என்று நினைத்தான்.

அன்று நள்ளிரவு அவன் இருப்பிடத்தைத் தேடி பேரமைச்சர் வந்தார்.

''தாங்களா அமைச்சர் பெருமானே? கூப்பிட்டால் நான் வந்திருக்க மாட்டேனா?'' என்றான் உதயசந்திரன்.

''அது கிடக்கட்டும். உண்மையைச் சொல்'' என்றார் பேரமைச்சர்.

''உண்மையா? எந்த உண்மை அமைச்சர் பெருமானே?''

''இளவரசர் மகேந்திரரின் மரணத்திற்கு நீ காரணமாக இருக்கலாம் என்று சந்தேகிக்கிறேன்.''

''என்னையா? என்னையா சந்தேகிக்கிறீர்கள்? எப்படி?''

சொன்னார் அமைச்சர்.

அதிர்ந்தான் உதயசந்திரன்.

☆☆☆



57

மன்னனின் விவரணம்

''நீ இந்த நாட்டைச் சேர்ந்தவனே அல்ல. திபெத்திய நாட்டில் இருக்கும் பான் இனத்தைச் சேர்ந்தவன். இளவரசரைக் காக்கும் வீரபல்லவப் படையில் இருப்பவர்கள் பான் இனத்தவர். நீ அப்படையின் தலைவனானாய். அந்த வீரபல்லவப் படையைத் தூண்டி அவர்களைக் கொண்டு இளவரசரை வீழ்த்தியிருக்கிறாய் என்று உன்மீது குற்றம் சாட்டுகிறேன்'' என்றார் பேரமைச்சர்.

இதைக்கேட்டு அதிர்ந்த உதயசந்திரன், ''அமைச்சர் பெருமானே! இதென்ன தாங்கள் சொல்வது? நான் நாகைப் பட்டிணத்துக்காரன். பெருஞ்சாத்தன் என் தந்தை. என்னைப் போய் பான் இனத்தைச் சேர்ந்தவன் என்கிறீர்களே! யார் சொன்னது?'' என்று கேட்டான்.

''கனிஷ்கர் சொன்னார். அவர் என் நண்பர். உன் பிறவி ரகசியத்தைச் சொன்னவரும் அவர்தான்.''

''அவர் கூறியதை நான் நம்பவில்லை. நம்புவதாக வைத்துக் கொண்டாலும் சரி, நான் எதற்காக வீரபல்லவப் படையைத் தூண்டி இளவரசரை வீழ்த்த வேண்டும்?''

''நீ தான் அதற்கு பதில் சொல்ல வேண்டும்.''

''அமைச்சர் பெருமானே! காஞ்சியை விட்டு புறப் பட்டதிலிருந்து எனது ஒவ்வொரு நடவடிக்கையும் பல்லவருக்குச் சாதகமாகத்தான் இருந்தன என்பதை யாரைக் கேட்டாலும் சொல்வார்கள். வழியில் குறுக்கிட்ட சாளுக்கியர் படையை எதிர்த்து அதையெல்லாம் நிர்மூலமாக்கி யிருக்கிறேன். ரணரசிகபுரப் போரின் இளவரசரைக் கண்போல் பாதுகாத்தேன். போரில் ஈடுபட்டு வெற்றிக்கும் உதவினேன். இவ்வளவையும் பல்லவர்களுக்காகச் செய்துவிட்டு இளவரசரை எதற்காகக் கொல்ல வேண்டும்?''

''உனது நடவடிக்கைகள் மூலம் நம்பிக்கைக்கு உரியவனாக உருவாக்கிக் கொண்டு கடைசியில் நம்பிக்கை துரோகம் செய்திருக்கலாம் அல்லவா?''

''நீங்களா இப்படிப் பேசுகிறீர்கள்?''

''அதற்கு காரணம் இருக்கிறது உதயசந்திரா. மகாராணிக்கு வைத்தியம் செய்வதாகப் பொய்யாகச் சொல்லிக் கொண்டு என்னையே ஏமாற்றியவன் நீ. ஆகவே தான் உன்னைச் சந்தேகிக்கிறேன்.''

''உங்களை ஏமாற்றிய என்னைப் போய் மாமன்னர் என்னை ஒரே இரவில் உபதலைவனாக நியமித்தாரே அது எதைக் காட்டுகிறது? நான் ஏமாற்றுக்காரன் என்பதையா? நம்பிக்கைக்கு உரியவன் என்பதையா?''

''மன்னர் உன்னை நம்பி ஏமாந்திருக்கலாம் அல்லவா?''

''இதற்கு ஏதோ சொல்ல நினைத்த உதயசந்திரன் அதைச் சொல்லாமல், ''என்னைக் கைது செய்யப் போகிறீர்களா? அதற்காகத்தான் வந்தீர்களா?'' என்று கேட்டான்.

''கைது செய்யும்படி உத்தரவு வரவில்லை. வந்ததும் கைது செய்வோம். விசாரணை நடக்கும்'' என்றார் பேரமைச்சர்.

''நடக்கட்டும் அமைச்சரே. விசாரணையை சந்திக்கிறேன்.''

அமைச்சர் எழுந்து சென்றார்.

அமைச்சரின் பேச்சு அவனுக்கு விளங்கவில்லை.

காலையில் மன்னனைச் சந்தித்த போது மன்னனே தன்னைக் குற்றமற்றவன் என்று கூறிவிட்ட பிறகு அமைச்சர் எதற்காக வந்து குற்றம் சாட்டுகிறார் என்பது அவனுக்குப் புரியவில்லை.

மறுநாள் காலை அரண்மனைக்குச் செல்வதற்கு முன் அந்தப்புரத்திற்குச் சென்று பட்டத்து ராணியான ரங்கப்பதாக தேவியைச் சந்தித்தான்.

ராணி முன்பு போலவே முகமலர்ச்சியுடன், ''வா உதயசந்திரா. உன் வெற்றிக்கு என் பாராட்டுக்கள். உன் சாமர்த்தியங்களைக் கேட்டு மகாராஜா கூட புகழ்ந்தார்'' என்றார்.

''மகாராணி தங்கள் பாராட்டுக்களை ஏற்கும் நிலையில் நான் இல்லை. நான் எதைச் சாதித்திருந்தாலும் தங்கள் அருமைப் புதல்வரை - பல்லவ இளவரசைப் பாதுகாக்கத் தவறிவிட்டேன். தங்கள் முன்னால் நிற்கும் அருகதை எனக்கில்லை'' என்றான் உதயசந்திரன்.

''மகேந்திரன் மரணம் ஈடுசெய்ய முடியாத இழப்புதான். அதற்கு யார் என்ன செய்ய முடியும்? அவன் விதி முடிந்து விட்டது. நீ என்ன செய்வாய் மகனே? உன் மீது இங்கு யாரும் குற்றம் கூறவில்லை'' என்றார் ராணி.

அப்போது இரண்டாவது ராணியான லோகமாதேவியும் வந்தார்.

பிரம்ம ராட்சதன் பீடித்து ஜீவனையே இழந்தவரைப் போல் ஒன்பது மாதங்களுக்கு முன்னால் இருந்த லோகமாதேவி பேய் பிசாசுகள் விலக்கப்பட்ட நிலையில் கலைவாணியைப் போல் களையுடன் காணப்பட்டாள்.

உதயசந்திரனை அவருக்கு அறிமுகம் செய்து வைத்தார் பட்டத்து ராணி.

''நீ நல்ல நிலையை அடைய வேண்டும் என்று பிரார்த்தித்துக் கொண்டவன் இந்த உதயசந்திரன்'' என்று சொன்னார் பட்டத்து ராணி.

''அப்படியா?'' என்று கேட்ட லோகமாதேவி, ''தீர்க்காயுசுடன் இரு மகனே. உனக்கு வெற்றி உண்டாகட்டும்'' என்று வாழ்த்தினார்.

ஓரளவிற்கு ஆறுதலடைந்த உதயசந்திரன் அவர்களிடமிருந்து விடைபெற்றுக் கொண்டு அரண்மனைக்குச் சென்றான்.

அங்கே மன்னன் இல்லை.

திருவேற்றளியில் இருந்த வாகீசர் மடத்திற்கு வரும்படி உதயசந்திரனை மன்னர் பணித்ததாகப் பணியாளன் சொன்னார்.

உடனே திருமேற்றளிக்குச் சென்றான் உதயசந்திரன்.

திருமேற்றளியில் இருந்த வாகீசர் மடத்தில் தனிமையில் அமர்ந்திருந்தான் மன்னன்.

உள்ளே உதயசந்திரனைத் தவிர வேறு யாரையும் அனுமதிக்க வேண்டாம் என்று கட்டளையிட்டிருந்தானாதலால் உதய சந்திரன் மட்டுமே உள்ளே சென்றான்.

''வா, உதயசந்திரா, உட்கார். என் பாட்டனாரும் வாகீசப் பெருமானும் அடிக்கடிச் சந்தித்துக் கொள்ளும் இடம் இது. இங்கே இருந்து கொண்டு தான் வாகீசர் பல தலங்களைப் பற்றி பதிகங்கள் பாடினார். காஞ்சியில் நான் அமைதியை தேடி வருகிற ஒரே இடம் இதுதான்'' என்றான் மன்னன்.

உதயசந்திரன் மன்னனை வணங்கி அமர்ந்ததும், ''இளவரசனின் மரணத்தில் மர்மம் இருப்பதாகச் சொன்னேனே அது பற்றி ஏதாவது யோசித்தாயா?'' என்று கேட்டார்.

''யோசிக்கவில்லை மன்னவா. சேனாதிபதியாரைச் சந்தித்தேன். இளவரசர் மரணம் குறித்து அவர் மீது தாங்கள் சந்தேகப்படுவதாக வருந்தினார். பதவியைத்துறந்து விட்டதாகவும் சொன்னார்'' என்றான் உதயசந்திரன்.

''அரிதான உயிர் இழப்பு நடந்துவிட்ட பிறகு யார் பதவியில் இருந்தாலென்ன இழந்தாலென்ன? சேனாதிபதியின் மீது எனக்குக் கோபம் தானேயன்றிச் சந்தேகம் இல்லை. வெற்றி பெற்ற படையாக இருந்தாலும் தலைநகரை நெருங்கும்போது ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். சேனாதிபதி இளவரசனோடு இருந்திருக்க வேண்டும். அனுபவம் வாய்ந்த அவர் இனிமேல் ஆபத்து எதுவும் இல்லை என்பதுபோல் அலட்சியமாக இருந்துவிட்டார். படையின் பின்னால் இருந்திருக்கிறார். அது சரியில்லை என்பதால் அவர் மீது நான் கோபப்பட்டேன்.''

''உண்மையில் என்னதான் நடந்தது மன்னவா?''

''பல்லவர் படைகள் சாளுக்கிய நாட்டிலிருந்து புறப்பட்டு நான்கு மாதங்களுக்குப் பிறகு காஞ்சிக்கு வடக்கே சமீபத்தில் இருக்கும் கூரம் என்னும் இடத்திற்கு வந்தபோது ஏதோ கலவரம் நடந்திருக்கிறது. இளவரசன் இருந்த படைப் பகுதியில் நடந்திருக்கிறது. சில நிமிடங்களே நீடித்த அந்த கலவரத்தில் இளவரசன் மாண்டு கிடந்தான்.''

''வீரபல்லவப் படை அவருடன் இல்லையா? அவரைப் பாதுகாக்கவில்லையா?''

''அவனோடுதான் இருந்தது. ஆனால் இளவரசன் மாண்டுவிட்ட பிறகு அந்தப் படை எங்கே சென்றது என்பது தெரியவில்லை.''

''இளவரசரைப் பாதுகாக்க வேண்டிய படை மறைய வேண்டிய அவசியம் என்ன மன்னவா?''

''வீரபல்லவப் படையே கூட இளவரசனைக் கொன்று விட்டு ஓடியிருக்கலாம்.''

''ஐயோ!''

''மாண்டு கிடந்த இளவரசனின் உடலில் நெஞ்சிலே குறுவாள் குத்தப்பட்டதற்கான நீண்ட காயம் இருந்தது. ஆனால் குத்தப்பட்ட

குறுவாளைக் காணவில்லை. வயிற்றில் ஒரு குறுவாள் குத்தப்பட்டது. அந்தக் குறுவாளும் காணவில்லை. குத்தியவர்களே எடுத்துப் போய்விட்டார்கள் போலிருக்கிறது. மூன்றாவதாக மார்பில் வாளால் வெட்டப்பட்டிருந்தது. வாள் கிடைத்தது. அந்த வாளுக்கு உரியவர்களாக அகமது முகமது என்ற இரண்டு அராபியர்கள் பிடிபட்டிருக்கிறார்கள். ஆனால் அவர்களோ இளவரசனை அணுகவே இல்லை என்று சாதிக்கிறார்கள்.''

''மன்னவா! அந்த இருவரும் சுலைமானின் ஆட்கள். இளவரசைக் கொல்ல என்னை அனுப்பிய சுலைமான் எனக்குத் தெரியாமல் அந்த இருவரையும் அனுப்பியிருக்க வேண்டும். அவர்கள் நமது வீரர்கள் இருவரைக் கொன்றுவிட்டு நம் படையில் சேர்ந்துவிட்டார்கள். அது எனக்கு ரணரசிகபுரத்தில் தான் தெரிந்தது. இளவரசரை போரின்போது எப்படியாவது கொல்ல வேண்டும் என்பது அவர்களது திட்டமாக இருந்தது. ஆனால் நானும் எனது நண்பர்களும் வீரபல்லவப் படையும் சேர்ந்து அவர்கள் இளவரசை நெருங்காமல் கண்காணித்தோம். என் படைப் பிரிவைச் சேர்ந்த சந்திரலேகா அவ்விருவரையும் வளைத்துப் பிடித்து போர் முடியும் வரை தனிமைப்படுத்தி வைத்திருந்தாள். போர் முடிந்த பின் என்னிடம் ஒப்படைத்தாள். வாதாபி மலைக்கோட்டைக்கு அவர்களை நான் அழைத்துச் சென்றேன். அவர்கள் தப்பிச் சென்று எங்களுக்கு முன்பாகவே காஞ்சியை அணுகியிருக்கிறார்கள். கூரத்தில் கலவரம் மூண்டபோது இளவரசரை அவர் தாக்கியிருக்கலாம் மன்னவா.''

''அதோடு கலவரம் நடந்தப் பகுதியில் சந்தேகத்திற்கு இடமளிக்கும் வகையில் காபாலிகன் ஒருவன் திரிந்திருக்கிறான். அவனைப் பிடிக்க பல்லவ வீரர்கள் சிலர் முயன்றபோது அவர்கள் மீது மண்ணைத் தூவிய அக்காபாலிகன் அவர்களில் இருவரை வாளால் வெட்டிப் போட்டுவிட்டுப் போயிருக்கிறான்.''

''காஞ்சியில் உள்ள காபாலிகர்களை எல்லாம் கைது செய்து விசாரிக்கலாம் அல்லவா மன்னவா?''

''ஆதாரம் இல்லாமல் காபாலிகர்களை எல்லாம் கைது செய்வது சரியல்ல உதயசந்திரா. அதோடு பல்லவ வீரர்கள் கண்ணில் பட்ட அக்காபாலிகன் வேடதாரியாகவும் இருக்கலாம் அல்லவா? காபாலிகனிடம் வாள் எப்படி வந்தது?''

''உண்மைதான் மன்னவா.''

''உதயசந்திரா, நான் சொன்னதையெல்லாம் கூட்டிக் கழித்து கோர்த்துப் பார். இளவரசனை பாதுகாப்பதாக சபதம் செய்திருந்த பான் இனத்தைச் சேர்ந்த வீரபல்லவப் படை நம்பிக்கை துரோகம் செய்திருக்க வேண்டும். பல்லவர் படை காஞ்சியை நெருங்கும் வரை உண்மை விசுவாசிகளைப் போல நடந்து கொண்ட அவர்கள் கூரத்திற்கு அருகே இளவரசனைத் தீர்த்துக் கட்ட முடிவு செய்து கலவரம் ஒன்றை உருவாக்கியிருக்க வேண்டும். கலவரத்தில் இளவரசனைக் கழுத்திலும் வயிற்றிலும் குத்தியிருக்க வேண்டும். அந்த முயற்சியில் அகமதுவும் முகமதுவும் முயன்று தோற்றிருக்க வேண்டும். அவர்களுக்கு பதிலாக காபாலிகன் உள்ளே புகுந்து இளவரசனை வெட்டி விட்டு ஓடியிருக்க வேண்டும். மொத்தத்தில் நம்பிக்கை துரோகிகளும் விரோதிகளும் திட்டம் தீட்டி இக்காரியத்தைச் சாதித்திருக் கிறார்கள்.''

''இளவரசருடன் நான் இருந்திருந்தால் இந்த அவலம் தடுக்கப்பட்டிருக்கலாம் மன்னவா? நான் அவ்வாறு இல்லாமல் போனது குற்றம் தானே?''

''சம்பந்தப்பட்டவர்களில் யார் குற்றவாளி என்பதைக் கண்டுபிடிப்பதுதான் இப்போது அவசியமானதே தவிர சம்பந்தப்படாதவர்களைக் குற்றவாளிகளாக ஆக்குவது அல்ல. குற்றவாளிகளைக் கண்டறிய தேர்ந்த ஒற்றர்களை அனுப்பி யிருக்கிறேன். அனேகமாக என் சந்தேகம்தான் உறுதியாகும். அது உறுதியாகும் வரை நாம் காத்துக் கொண்டிருக்கப் போவதில்லை.''

''வேறு என்ன செய்வதாக உத்தேசம்?''

''உதயசந்திரா, நான் ஏற்கெனவே சொன்னதுபோல் தேவைக்கு அதிகமான செல்வம் கிடைத்துவிட்டதால் பஞ்சம் விரைவிலேயே ஒழிக்கப்படும். ஏற்கெனவே அமைக்கப்பட்ட பஞ்சவார வாரியங்கள் ஏரிகளையும் குளங்களையும் ஆழப் படுத்தவும் கரைகளை உயர்த்தவும் காரியங்களை வேகமாகச் செய்து வருகிறது. அவைக்கள புலவரான தண்டி விரும்பியது போல் கடிகை கலாசாலை மீண்டும் திறக்கப்பட்டுவிட்டது. வடபாரதத்திலிருந்து வஜ்ஜிரபோதி என்னும் பௌத்தப் பெரியார் வந்து புத்தர் சேரியில் உள்ள ராஜ விகாரையில் தங்கியுள்ளார். நாட்டில் மழை பெய்வதற்காக விரதத்தைத் தொடங்கியிருக்கிறார். பருவ மழை தவறும்போது இத்தகைய முயற்சி அவசியம்தான். ஆலயங்களிலும் வருண ஜபங்கள் நடக்க இருக்கின்றன. இறைவன் அருளால் விரைவில் மழை பொழிந்துவிட்டால் பல்லவ நாடு பழைய நிலைக்குத் திரும்பிவிடும்.''

''கேட்பதற்கு மகிழ்ச்சியாக இருக்கிறது மன்னவா.''

''இது அரைகுறை மகிழ்ச்சிதான். பூரணமான மகிழ்ச்சி இல்லை.''

''என்ன சொல்கிறீர்கள் பிரபு.''

''இப்போதைக்கு நிலவழி மூலம் எதிரிகள் நம்மைத் தாக்கும் நிலையில் இல்லை. சாளுக்கியர்கள் மீண்டு எழுந்து மீண்டும் படையெடுத்து வர நீண்ட காலமாகும். தெற்கே பாண்டியர்கள் நண்பர்களாகவே நீடிக்கிறார்கள். சாளுக்கியர்களை நாம் வென்றுவிட்டதால் கங்க நாட்டவரும் நம்மிடம் அடங்கியிருப்பார்கள். நமக்குத் தொல்லை இனி கடலில்தான்.''

''கடலிலா மன்னவா? கடலில் சென்று போர் செய்ய வேண்டுமா?''

''போர் என்று இப்போதைக்குச் சொல்ல முடியாது. அது கடல் கோட்டை செயல்படுவதைப் பொறுத்தது.''

''கடல் கோட்டையா?''

''ஆம். அதைப்பற்றி பிறகு பேசுவோம். நீ நாகைப் பட்டிணக்காரனாயிற்றே! கடல் அனுபவம் உண்டா?''

''போர் மரக்கல அனுபவமில்லை மன்னவா. ஆனால் ஒரு பரதவனுக்குரிய நுட்பங்கள் தெரியும்.''

''நல்லது. இப்போதைக்கு நீ பல்லவபுரத்திற்குச் சென்று நான் சொல்லும் நபரைச் சந்தி. அதோடு பல்லவன் தங்கலிலும்* இன்னொரு நபரைச் சந்திக்க வேண்டும். இருவரோடும் மாமல்லபுரத்திற்குச் செல். விரைவிலேயே உன்னை அங்கே வந்து சந்திக்கிறேன்'' என்று சொல்லி முடித்தான் பல்லவ மன்னன்.

மன்னனின் பேச்சு புதிர் போல இருந்தாலும் பெரிய விஷயங்கள் அதில் அடங்கியிருப்பதாகக் கருதிய உதயசந்திரன் எதுவும் பேசாமல் விடைபெற்றுக் கொண்டு கடிகைக்குச் சென்று பௌர்ணமியைப் பார்த்தான்.

அவளிடம் மாற்றம் எதுவும் தெரியவில்லை.

யோகசித்தர் மட்டும் தைரியம் கூறினார்.

''நான் அரசாங்க அலுவல் காரணமாக மீண்டும் வெளியூர் செல்ல வேண்டியிருக்கும் போலிருக்கிறது ஐயா'' என்றான் உதயசந்திரன்.

---

* இன்றைய பல்லாவரம் அக்காலத்தில் பல்லவபுரம் என்றும், இன்றைய பழவந்தாங்கல் அக்காலத்தில் பல்லவன் தங்கல் என்றும் அழைக்கப் பட்டது.

''எந்த ஊருக்கு?''

''மாமல்லபுரத்திற்கு.''

''மாமல்லபுரத்திற்குத்தானே? முடியும் போதெல்லாம் இங்கு வந்து இவளைப் பார்த்துவிட்டுப் போ'' என்றார் யோகசித்தர்.

உதயசந்திரனுக்கு காக்கைமடுவிற்குச் செல்ல வேண்டும் போலிருந்தது.

புரவியில் காக்கை மடுவிற்குப் புறப்பட்டான்.

அவனது புகழ் காக்கை மடு வட்டாரத்திலும் பரவி யிருந்ததால் விஹாரத்தின் காரியஸ்தர் அவனை மரியாதையோடு வரவேற்றார்.

அகளங்க அடிகளைக் காண வேண்டும் என்று சொன்னான் உதயசந்திரன்.

காரியஸ்தர் அவனை உடனடியாக அகளங்க அடிகளிடம் அழைத்துப் போய் விட்டுவிட்டு அகன்றார்.

''அடிகளே! இந்த விஹாரத்தில் நான் தங்கியிருந்தபோது பல தவறுகளைச் செய்திருக்கிறேன். உங்கள் சொற்களை உதாசீனம் செய்துவிட்டு சொல்லாமல் கொள்ளாமல் ஓடிவிட்டேன். எல்லாவற்றுக்குமாக என்னைத் தாங்கள் மன்னிக்க வேண்டும்'' என்றான் உதயசந்திரன்.

''ரகசியமான விஷயங்களெல்லாம் பகிரங்கமாகிவிட்ட போதே எல்லா விஷயங்களும் நீர்த்துப் போய்விட்டன. பெரிய விஷயமாக எண்ணியிருந்த சாளுக்கியப் போரும் முடிந்து வெற்றியும் பெற்றாகிவிட்டது. இலட்சியங்கள் நிறைவேறி விட்ட பின் மற்ற விஷயங்களைப் பற்றிய விசாரம் எதற்கு? அதோடு சாளுக்கியப் போரில் உபதலைவனாக இருந்து செயற்கரிய செயல்களைச் செய்திருக்கும் நீ எதற்காகவும் மன்னிப்பு கோர வேண்டியதில்லை. மகத்தான நாட்டு பற்று கொண்ட மாவீரன் நீ. எந்த காரணத்திற்காக இப்போது இங்கே வந்தாய்?'' என்று கேட்டார் அகளங்கர்.

''அடிகளே! பௌர்ணமிக்குச் சித்தப்பிரமை பிடித்திருக்கிறது. கடிகையில் வைத்தியம் நடக்கிறது. தங்களுக்கு இது தெரியுமா?''

அகளங்கர் சிறிது நேரம் மௌனமாக இருந்துவிட்டு, ''துறவிகள் எல்லாவற்றையும் துறக்க வேண்டும் என்ற நியதியிலிருந்து மாறுபடும்போது சாதாரண மனிதர்களைப் போலத் துன்பப்பட வேண்டியிருக்கிறது'' என்றார்.

சிறிது நேரம் கழித்து, ''பாசம் என்பது ஒரு விலங்கு. அதை எடுத்துப் பூட்டிக் கொண்டால் கழற்றுவது கஷ்டம். துறவியாகிய நான் அந்த விலங்கை எடுத்து கைகளுக்குப் போட்டுக் கொண்டேன். இன்றைக்கு அந்த கைவிலங்கு என்னைக் காயப்படுத்தியிருக்கிறது மகனே. பௌர்ணமி ஏதுமறியாத குழந்தை. அவளுக்கு இந்த நிலைமை வந்திருப்பதற்கு நானும் ஒரு காரணம்'' என்றார்.

''தாங்கள் சொல்வது விளங்கவில்லை அடிகளே.''

''உதயசந்திரா, உன்னை பௌர்ணமி விரும்பியபோது நான் உறுதியாக நின்று தடுத்திருக்க வேண்டும். போர் வீரர்களைக் காதல் செய்வது மணல் கோட்டையைப் போன்றது என்பதை அறிவுறுத்தியிருக்க வேண்டும். அதுவும் போருக்குச் செல்கிறவனை விரும்புவது தனக்குத் தானே குழியைப் பறித்துக் கொள்வதைப் போன்றது என்பதை விளக்கி அவளது காதலை ஆரம்பத்திலேயே நான் முறித்திருந்தால் அவளுக்கு இன்றைக்கு இந்த நிலை வந்திருக்காது. சாதாரண மனிதனாக இருந்திருந்தால் அப்படிச் செய்திருப்பேனோ என்னவோ! துறவியாக இருந்துவிட்டதால் துறவிக்கே உரிய கருணையால் நெகிழ்ந்து நின்றுவிட்டேன். என் வளர்ப்பு மகளைப் பாழாக்கிவிட்டேன்.''

''ஐயா, பௌர்ணமியின் பெற்றோர் யார்?''

சொன்னார் அடிகள். அதிர்ந்தான் உதயசந்திரன்.

☆☆☆



53

காலகாலன்

''நான் வடநாட்டிலிருந்து தென்னாட்டிற்கு யாத்திரை வந்தபோது சில காலம் களப்பிர அரசன் கூற்றுவனின் பிரதேசமான செந்தலையில் தங்கியிருந்தேன். கூற்றுவன் என்னை மிகவும் ஆதரித்து உபசரித்தான். அவனுக்குப் பல்லவ மன்னனிடமிருந்து பலமுறை எச்சரிக்கை ஓலைகள் வந்தன. ஆனால் கூற்றுவனோ அதையெல்லாம் அலட்சியப்படுத்தி வந்தான். அப்போது நான் கூற்றுவனுக்கு அறிவுரை சொன்னேன்'' என்று ஆரம்பித்தார் அகளங்கர்.

''கூற்றுவா! பல்லவர் உன்னிடம் கேட்பது திறை. அதை ஒன்றுக்குப் பலமுறை கேட்டு ஓலையனுப்பிவிட்டார்கள். எனவே திறையைச் செலுத்துவதுதான் முறை.''

''எதற்காக அடிகளே பல்லவர்களுக்கு நான் திறை செலுத்த வேண்டும்?''

''பேரரசிற்கு சிற்றரசு திறை செலுத்துவது எங்கும் இருக்கும் நடைமுறைதான்.''

''அதுதான் ஏன் என்று கேட்கிறேன். நான் செந்தலையில் ஆட்சி புரிவதற்கு யாருடைய அனுமதி வேண்டும்?''

''அப்படியல்ல கூற்றுவா. பேரரசுகள் தங்களைப் பேரரசாகத் தக்கவைத்துக் கொள்ள வேண்டுமென்றால் தங்களைச் சுற்றியுள்ள சிற்றரசுகளை ஆதிக்கம் செலுத்த வேண்டும். அதற்கு அடையாளம்தான் இந்தத் திறை. சோழர்கள் பல்லவர்களுக்குத் திறை செலுத்தும்போது நீ ஏன் செலுத்தக் கூடாது?''

''சோழர்கள் வாழ விரும்புகிறார்கள். ஆகவே கப்பம் கட்டுகிறார்கள்.''

''நீ என்ன வாழ விரும்பாமல் சாகவா விரும்புகிறாய்?''

''அடிகளே, நான் திறை செலுத்தாவிட்டால் என்ன நடக்கும்?''

''பல்லவர்கள் உன் மீது போர் தொடுப்பார்கள். அதுவும் பல்லவ இளவரசன் இராஜசிம்மன் பராக்கிரமசாலி. அவன் போர் தொடுத்தால் உனக்கு ஆபத்துதான்.''

''ராஜசிம்மன் பராக்கிரமசாலியாக இருப்பதால் அவனுக்குத் திறை செலுத்தி நான் அடிமையாக வாழ வேண்டும் என்பதுதான் உங்கள் விருப்பமா?''

''திறை செலுத்துவதால் நீ அடிமையாகிவிட முடியாது. அமைதியாக இருக்கலாம்.''

''அந்த அமைதிக்குப் பெயர் கோழைத்தனம் அடிகளே. அது எனக்குத் தேவையில்லை. பல்லவருக்கு நான் திறை செலுத்த முடியாது.''

''கூற்றுவா. வீரம் வேறு. விவேகம் வேறு. ஆவேசப்பட்டு வீரத்தை காட்ட முற்படுவதைவிட நன்றாக ஆலோசித்து விவேகத்தைக் காட்டுவதே உனக்கு நல்லது. ஒரு காலத்தில் இக்காஞ்சியை உங்கள் மூதாதையர்களான களப்பிரர்கள் தான் ஆண்டார்கள். பல்லவனான சிம்மவிஷ்ணுதான் அப்போது களப்பிரர்களை வென்று பல்லவ அரசாட்சிக்கு மறுமலர்ச்சியைக் கொடுத்தான். சிம்ம விஷ்ணுவின் வழியில் வந்தவன்தான் ராஜசிம்மன். தன் கண்முன்னால் களப்பிரர்கள் துளிர்ப்பதை அவன் எப்படிச் சகிப்பான்? ஆகவே தான் உன் மீது தன் ஆதிக்கத்தைத் திணிப்பதற்காக மீண்டும் மீண்டும் உனக்கு ஓலையனுப்புகிறான். அவனது படை உன்னை நோக்கி வந்தால் நீ கூற்றுவனிடம் தான் போய்ச் சேரவேண்டும்.''

''அடிகளே! என் பெற்றோர்கள் எனக்கு கூற்றுவன் என்று ஏன் பெயரை வைத்தார்கள் என்று எனக்குத் தெரியாது. ஆனால் இப்போதுதான் எனக்கு அதற்கான காரணம் புரிகிறது. என்னிடம் திறை கேட்கும் ராஜசிம்மனுக்கு நான் தான் எமனாக இருக்கப் போகிறேன். அதனால்தான் எனக்கிந்த பெயர்.''

''உதயசந்திரா! நான் எவ்வளவு சொல்லியும் சுத்த வீரனான கூற்றுவன் என் அறிவுரையை ஏற்கவில்லை. அவனது மனைவி அழகான பெண் குழந்தை ஒன்றை பெற்றுவிட்டு இறந்து போனாள். அந்த குழந்தைக்காகவாவது பல்லவருக்குப் பணிந்து செல் என்றேன். அவனோ நீங்கள் இருக்கும்போது எனக்கென்ன அடிகளே? நான் போனாலென்ன என் குழந்தையை நீங்கள் வளர்க்க மாட்டீர்களா என்று கேட்டான். நான் துறவியாயிற்றே? நானெப்படி பந்த பாசங்களை ஏற்க முடியும் என்று கேட்டேன்.

அனாதையாகும் ஒரு பச்சிளங்குழந்தை மீது கருணை காட்ட முடியாதென்றால் நீங்கள் துறவியே அல்ல. உங்கள் பிறவியே வீண்'' என்றான்.

''விரைவிலேயே பல்லவர் படை செந்தலையைச் சூழ்ந்து கொண்டது. கடலில் கரைந்த பெருங்காயத்தைப் போல கூற்றுவனின் படை அழிந்து போயிற்று. கூற்றுவன் மட்டுமே மிஞ்சினான். அப்போதும் அடிபணியாத அவன் ராஜ சிம்மனுடன் போரிட்டான். ராஜசிம்மனுக்கு யமனாக இருப்பேன் என்று சூளுரைத்த கூற்றுவனுக்கு ராஜசிம்மன் தான் கூற்றுவனாக ஆனான். போரில் குற்றுயிரும் கொலையுயிருமாக தோற்றுப்போய் நின்றான் கூற்றுவன். கூற்றுவனுக்கே கூற்றுவனாக ராஜசிம்மன் அமைந்ததால் அவனுக்குக் காலகாலன் என்ற பட்டம் கிட்டியது.*

''போருக்குப் பின் கூற்றுவனின் போக்கே மாறிப் போயிற்று. அவன் துறவி போலானான். நான் சம்சாரி போலானேன். அவனது குழந்தையை எடுத்து வளர்த்து ஆளாக்கினேன். அவனோ சில ஆண்டுகள் கழித்து சிவனடியைச் சேர்ந்தான். அவனது வம்சமும் அழிந்தது. அவனது குழந்தைதான் பௌர்ணமி'' என்று சொல்லி முடித்தார் அகளங்கர்.

''பௌர்ணமி அரசகுமாரியா? இந்த உண்மை அவளுக்குத் தெரியுமா அடிகளே?'' என்று கேட்டான் உதயசந்திரன்.

''தெரியாது உதயசந்திரா. அனைத்தையும் இழந்து விட்டவள் அவள். இந்த உண்மை தெரிந்தால் அவளுக்கு கிடைக்கக் கூடியது துன்பம்தான். எனவேதான் அவளிடம் உண்மையைச் சொல்லவில்லை.''

''மிகவும் நன்றி அடிகளே. அவளை வளர்த்து ஆளாக்கி துறவியரில் மிகச் சிறந்த துறவியாகத் தாங்கள் திகழ்கிறீர்கள். உங்கள் வளர்ப்பு மகளைப் பற்றிய கவலை இனி வேண்டிய தில்லை. அவளுக்கு நல்வாழ்வை அளித்து சந்தோஷப்படுத்துவது என் பொறுப்பு. நான் விடைபெற்றுக் கொள்கிறேன் ஐயா'' என்று கூறிவிட்டுப் புறப்பட்டான் உதயசந்திரன்.

அவன் காஞ்சிக்கு வந்தபோது அவனது தாயும் தந்தையும் அங்கே வந்திருந்தார்கள்.

---

* காலகாலன் என்றால் எமனுக்கு எமன் என்று பொருள். இது சரித்திர சம்பவம். போரில் படுகாயமடைந்த களப்பிர அரசனான கூற்றுவன் அதற்குப் பிறகு அரசாட்சியையே வெறுத்து சிவனடியானாக மாறினான். அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஒருவனாக 'கூற்றுவ நாயனார்' என்று சிறப்பு பெற்றான்.
page 115 Kanchipuram in Early South Indian History by T.V.Mahalingam.

அவர்களைக் கண்டபிறகு தான் அவர்களைப் பார்க்க வேண்டும் என்ற ஆவல் தனக்கு வராமல் போய்விட்டது அவனுக்கு நினைவுக்கு வந்தது. அதற்குக் காரணம் ஒருவேளை கனிஷ்கர் தன் பிறப்பு ரகசியம் பற்றிக் கூறியது தானோ என்று ஒருகணம் நினைத்த அவன் 'அப்படி இருக்க முடியாது' என்று தனக்குத்தானே சமாதானம் கூறிக் கொண்டான். அதோடு அப்பிறவி ரகசியம் பற்றி அவர்களிடம் எதுவும் பிரஸ்தாபிக்கக் கூடாது என்று தீர்மானம் செய்து கொண்டவனாய் அவர்களை வரவேற்று உபசரித்தான்.

அவனுக்கும் சரி அவர்களுக்கும் சரி என்ன பேசுவதென்றே புரியவில்லை.

''நாளைக்கு நானே நாகைப்பட்டிணத்திற்கு வருவதாக இருந்தேன்'' என்று ஏதோ ஆரம்பித்தான் உதயசந்திரன்.

''நீ வந்துவிடக்கூடாது என்றுதான் நாங்களே வந்து விட்டோம்'' என்றார் தந்தை.

''என்ன சொல்கிறீர்கள் தந்தையே?''

''உன்னால் இனி நாகைப்பட்டிணத்திற்கு வரமுடியாது என்று தெரியும். ஆகவே நாங்களே காஞ்சிக்குக் குடிபெயர்ந்து விட்டோம்.''

''தங்கள் வணிகம் நின்று போய்விடுமே?''

''உன்னைத் தவிர எங்களுக்கு வாணிபமும் செல்வமும் பெரிதில்லை உதயசந்திரா. எங்களிடம் இருந்த செல்வங்களை யெல்லாம் மாமன்னரிடம் பஞ்ச நிவாரணத்திற்காக ஒப்படைத்து விட்டோம்.''

''எனக்கு என்ன சொல்வதென்று தெரியவில்லை தந்தையே.''

''எங்களுக்குத் தெரிகிறது மகனே. நீ எங்களுக்குப் பிள்ளை யில்லை.''

''ஐயோ! தாங்கள் சொல்வது...''

''உண்மைதான் உதயசந்திரா. நீ மாமன்னரின் மகனாகி விட்டாய். காஞ்சியின் செல்வனாகிவிட்டாய். அவரது ஆணைக்கே நீ கட்டுப்பட்டவன். உன்னை நாகைக்கு வரச் சொல்ல எங்களுக்கு உரிமையில்லை. ஆகவேதான் நாங்கள் உன் இருப்பிடத்திற்கு வந்துவிட்டோம். இப்படிச் செய்ததில் எங்களுக்கு மகிழ்ச்சி. உனக்கும் மகிழ்ச்சியாக இருக்கும் என்று நினைக்கிறேன்.''

''ஆம். தந்தையே. இதைவிட மகிழ்ச்சியான விஷயம் வேறு இருக்க முடியாது.''

''உதயசந்திரா! நாட்டிற்காக உன்னை நீ அர்ப்பணித்துக் கொண்டிருக்கிறாய். அது நாங்கள் செய்த தவம். உனக்கு நிறைய ஆபத்துகள் வரலாம். எதற்கும் அஞ்சாதே. வதந்திகளை நம்பாதே வாளை மட்டுமே நம்பு'' என்றார் தந்தை.

வதந்திகளை நம்பாதே என்று அவர் சொன்னது ஒருவேளை தன் பிறப்பு ரகசியத்தைப் பற்றியதாக இருக்குமோ என்று அவன் நினைத்தாலும் அது பற்றிப் பேச முடியவில்லை.

மறுநாள் மன்னனிடமிருந்து அழைப்பு வந்ததும் அவரைச் சந்தித்த உதயசந்திரன், ''மன்னவா! வாதாபிச் சிறையில் இருந்த குப்த நாட்டைச் சேர்ந்த கனிஷ்கர் என்பவர் நான் பான் இனத்தைச் சேர்ந்தவன் என்றும் என் பெயர் மெடோடஸ் என்றும் கூறினார். என் தாயும் தந்தையும் இறந்துவிட்டதாகவும் சொன்னார். இவற்றை எப்படி நான் நம்புவது?'' என்று கேட்டான்.

''உதயசந்திரா! உன் பிறப்பு குறித்த முடிச்சுகள் முழுவதுமாக அவிழ்க்கப்படவில்லை. எனவே இது குறித்து நீ குழம்ப வேண்டாம். கவலைப்படவும் வேண்டாம். முடிச்சுகள் அவிழும் நேரம் வரும்போது உண்மைகள் தானாக வெளிப்படும். நீ நாளைக்குப் பல்லவபுரத்திற்குப் புறப்படு'' என்றான் மன்னன்.

உதயசந்திரன் அந்த அளவில் திருப்தியடைந்து தன் மாளிகைக்கு வந்து தந்தையிடம், ''தந்தையே! நான் பல்லவபுரத்திற்குப் போய் அங்கிருந்து மாமல்லபுரத்திற்குப் போகிறேன். ஏன் எதற்கு என்ற விவரங்களை மாமன்னர் சொல்லவில்லை. இந்த நிலையில் என் விருப்பம் ஒன்றைச் சொல்கிறேன். அதை நிறைவேற்றுவீர்களா?'' என்று கேட்டான்.

''சொல் மகனே.''

''பௌர்ணமி என்ற பெண்ணை நான் மனமார விரும்பு கிறேன். அவளையே மணந்து கொள்ள வேண்டும் என்பது என் விருப்பம்.''

''அப்படியே ஆகட்டும்.''

''தந்தையே! காஞ்சியில் நுழைந்து சிக்கலில் சிக்கி ஒருவேளை உணவுக்கும் வழி இல்லாமல் அலைந்தபோது என்னை ஆதரித்து அன்பு காட்டிய பேதைப் பெண் தான் பௌர்ணமி.''

''அப்படிச் சொல்லாதே உதயசந்திரா. உன்னை விரும்பிய அவள் பேதையல்ல. பாக்கியசாலி.''

''இல்லை தந்தையே. அவள் பாக்கியசாலி அல்ல. என்னை விரும்பிய காரணத்தால் என் பிரிவைத் தாங்க முடியாமல் சித்தப் பிரமைக்கு ஆளாகிவிட்டாள். அவளால் என்னை அடையாளம்

தெரிந்து கொள்ள முடியவில்லை. என்னையே எப்போதும் நினைத்துக் கொண்டிருந்தவள் என்னை மறந்துவிட்டாள். சிகிச்சைக்காக அவளை கடிகையில் சேர்த்திருக்கிறேன். அவள் உத்தமி. என் உயிர். அவளை நீங்கள் இருவரும் தான் நான் இல்லாதபோது கவனித்துக் கொள்ள வேண்டும்.''

''காஞ்சியில் எங்களுக்கு எந்த வேலையும் இல்லையே என்று கவலைப்பட்டுக் கொண்டிருந்தோம். எங்களுக்கு மிகவும் பொறுப்பான வேலையைத் தந்திருக்கிறாய். அதைக் கடமையாகச் செய்வோம். நீ கவலையில்லாமல் செல்.''

தந்தையின் பேச்சைக் கேட்டு நெகிழ்ந்தான். ''இவர்களைப் போய் தனது பெற்றோர்கள் இல்லை என்றும் எங்கோ இருக்கும் குப்த ராஜ்யத்திற்கு குடிபெயர்ந்து வந்த வெளிநாட்டவரைப் பெற்றோர்கள் என்றும் சொல்கிறார்களே'' என்று வருந்திய உதயசந்திரன், ''இறைவா! இவர்கள் தான் என் உண்மையான பெற்றோர்களாக இருக்க வேண்டும்'' என்று வேண்டிக் கொண்டான்.

பிறகு அவர்களை கடிகைக்கு அழைத்துச் சென்று பௌர்ணமியைக் காட்டினான். யோக சித்தருக்கும் அறிமுகம் செய்து வைத்தான்.

மறுநாள் பல்லவபுரத்திற்குப் புறப்பட்டான்.

காஞ்சிக்குக் கிழக்கே இருந்த பல்லவபுரத்தில் பல்லவ ராஜ குடும்பத்தினரும் உறவினர்களும் வசித்ததால் அப்பகுதியில் பலத்த பாதுகாப்பு இருந்தது. ராஜகுடும்பத்தினரது மாளிகைகளுக்கு பல்லவபுரக் குன்றுகள் கிழக்கில் பாதுகாப்பு செய்திருந்தன. குன்றின் அடிவாரத்தில் திரிபுர சுந்தரி ஆலயம் இருந்தது.

உதயசந்திரனின் வரவு பற்றி அங்கே தகவல் சொல்லப் பட்டிருந்ததால் அவனை நல்ல முறையில் வரவேற்ற பல்லவபுரத்து காவல் தலைவன் அவனை முதலில் திரிபுர சுந்தரி ஆலயத்திற்கு அழைத்துச் சென்று உரிய மரியாதைகளைச் செய்து வைத்தான். உதயசந்திரன் சந்திக்க வேண்டிய மனிதரின் இருப்பிடம் குன்றுகளுக்கு கிழக்கே இருந்ததால் குன்றின் மீதிருந்த குறுகிய மலைப்பாதை வழியாக அழைத்துச் சென்றான்.

குன்றுக்கு கிழக்கே பெரியதொரு மாளிகை தனியாக இருந்தது. அங்கே உதயசந்திரன் போனதும் அங்கே இருந்த பத்திற்கும் மேற்பட்ட மனிதர்கள் அவர்களை வரவேற்றார்கள்.

அவர்கள் அனைவரும் மாமல்லபுரத்தில் மரக்கலங்களைச் செப்பனிடும் கலையைச் சேர்ந்தவர்கள் என்பதை அறிந்தான் உதயசந்திரன். அவர்களோடு பேசி முடிந்த பிறகு அங்கேயே விருந்தும் நடந்தது.

விருந்து முடியவும் இரவு நேரம் துவங்கவும் சரியாக இருந்தது.

''தாங்கள் இனி செல்ல வேண்டிய இடம் பல்லவன் தங்கல்'' என்றான் காவல் தலைவன்.

''பல்லவன் தங்கல் என்பது காரணப் பெயரா?'' என்று கேட்டான் உதயசந்திரன்.

''ஆம் ஐயா. மாமல்லபுரத்திற்கும் மயிலைக்கும் மத்தியில் இருப்பது பல்லவபுரம். மாமல்லபுரத்திற்கு வரும் பல்லவ மன்னர்கள் மயிலைக்குச் செல்ல நேரும்போது மயிலையிலிருந்து திரும்பும் போது பல்லவபுரத்திற்கு வந்துவிட்டுப் போவது வழக்கமாக இருந்தது. போகப்போக பல்லவபுரம் இரைச்சல் மிகுந்த பகுதியாகிவிட்டதால் இவ்வூருக்கு வடக்கே சற்று தள்ளியிருந்த இடம் அமைதியாக இருந்தது. பழமுதிர்சோலைகளும் தடாகங்களும் பறவையினங்களும் நிறைந்த அந்தப் பகுதி பல்லவ மன்னர்களை மிகவும் கவர்ந்தது. மாமன்னர் சிம்மவிஷ்ணு அங்கே ஒரு விஷ்ணு சிலையை பிரதிட்சை செய்து அதன் அருகில் சிறு மாளிகையையும் கட்டுவித்து அங்கு வந்து தங்குவதை வழக்கமாகக் கொண்டார். அந்த இடம் அவருக்கு மட்டுமின்றி அவர் வழிவந்த அனைத்து பல்லவ மன்னர்களும் அங்கு வந்து அமைதியாகத் தங்கிவிட்டுச் சென்றதால் அந்த இடத்திற்குப் பல்லவன் தங்கல் என்ற பெயர் உண்டாகிவிட்டது'' என்றான் காவல் தலைவன்.

''அந்த அமைதி மாளிகைக்கா நான் செல்ல வேண்டும்?''

''இல்லை. அங்கே இன்னொரு மாளிகையும் இருக்கிறது. விஷ்ணு கோயிலுக்குத் தெற்கே தடாகம் ஒன்றிருக்கிறது. கரையில் மாளிகை இருக்கிறது. அங்கு தான் தாங்கள் செல்ல வேண்டும்.''

சென்றான் உதயசந்திரன்.

''வாருங்கள் உபதலைவரே. வாருங்கள். கணிகிலுப்பையில் உங்களைத் தவறவிட்டேன். விதி இங்கே கொண்டு வந்து சேர்த்து விட்டது'' என்று சொல்லி அவனை வரவேற்றாள் ஒரு பெண்.

அவள் -

காக்கைமடுவிற்கு அருகிலிருந்த கணிகிலுப்பை கிராமத்தில் கணிகையர் வீதி மாளிகையில் இருந்த ரதிதேவி.

★★★



59

அத்து மீறல்

நாகைப்பட்டிணத்திலிருந்து காக்கை மடுவிற்கு வந்த போது தவறான வழியைக் காட்டியவளும், பிறகு காக்கை மடு விஹாரத்திலிருந்து தப்பி தந்தையைத் தேடி கணிகிலுப்பை கிராமத்திற்கு வந்து கணிகையர் வீதியில் இருந்த மாளிகைக்குத் தவறாகச் சென்றுவிட்டபோது அங்கே காமப் பேச்சுக்களை அள்ளி வீசி மயக்கியவளும், காமக்கலவியில் ஈடுபட முனைந்தபோது துறவியின் ஆவி உடலில் புகுந்து கொண்டதால் மென்மையை இழந்து ஆடவர் குரலில் பேய் போல கத்தியவளுமான ரதிதேவியை ஏறக்குறைய மறந்து விட்டிருந்த உதயசந்திரன் அவளை பல்லவன் தங்கலில் இருந்த மாளிகையில் சந்தித்தபோது வியப்பே அடைந்தான். அதோடு தன்னைக் கண்டதுமே அவள் 'விட்டதைப் பிடித்துவிட்ட' மாதிரி பேசியது அவனை மருள வைத்தது. மருட்சி காரணமாக அவன் சிலை போல நின்றுவிட்டதால் அசையும் சிற்பமாய் நின்றிருந்த ரதிதேவி, ''என்ன அப்படியே நின்றுவிட்டீர்கள்? எனக்குள் துறவியின் ஆவி பிரவேசிக்காது. பயப்படாமல் பேசுங்கள்'' என்றாள்.

தன் அடி மனத்தில் இருந்த கேள்விக்கு அவளாகவே பதில் சொல்லிவிட்டதால் ஓரளவிற்கு உதயசந்திரன் திருப்தி யடைந்தாலும் 'இவள் எப்படி வந்தாள்? இவளைச் சந்திக்கும்படி மன்னர் சொல்லவில்லையே! யாரோ ஒரு ஆடவனையல்லவா குறிப்பிட்டிருந்தார்? அந்த மனிதர் எங்கே போனார்? ஒருவேளை அவரைத் தன் வலையில் இவளே வீழ்த்திவிட்டு வந்து நிற்கிறாளோ?' என்றெல்லாம் சந்தேகங்கள் எழுந்து அவனைக் குழப்பின.

அவளோ அவனது மன ஓட்டங்களை அறிந்தும் அறியாமலுமாய் இருந்து, ''மாவீரருக்கு இன்னும் என்ன தயக்கம்? என் பேச்சில் நம்பிக்கை வரவில்லையா?'' என்று கேட்டு அவனை நெருங்கி வந்தாள்.

அழகான சுகந்தம் தன்னை நெருங்குவதைக் கண்ட உதயசந்திரன், ''உன்னை இங்கே நான் எதிர்பார்க்கவில்லை'' என்றான்.

அவளோ, ''அதனால் என்ன? எதிர்பாராத விதமாக அமிர்தம் கிடைத்தால் ஏற்க மாட்டீர்களா?'' என்று கேட்டாள் அலட்சியமாக.

''நான் அமிர்தம் பருகும் நிலையில் இல்லை'' என்றான் உதயசந்திரன்.

''கடுக்காய் என்று கருதி தான் கடியுங்களேன்'' என்றாள் அவள் அழகாக. விலக முயன்றால் விலக முடியாத வார்த்தை வலைகளை அவள் வீசுவதைக் கண்ட அவன் அருகே இருந்த ஆசனத்தைக் காட்டி, ''இதில் அமரலாமா?'' என்று கேட்டான்.

சுகமானது பேரிடியாய் வருவதைவிட படிப்படியாய் வருவதுதான் உகந்ததாக இருக்கும் என்று கருதிய அவள், ''தாராளமாக உட்காருங்கள். நீங்கள் அமர்ந்தால் இந்த ஆசனம் அழகு பெறும்'' என்றாள்.

''ஆடவர்கள் பேசும் வார்த்தைகளை இப்பல்லவன் தங்கலில் பெண்கள் பேசுகிறார்கள். இது இந்த இடத்தின் விசேஷம் போலிருக்கிறது'' என்றான் உதயசந்திரன் சற்றே சுதாரித்துக் கொண்டு.

''இங்கே பெண்கள் யாரும் இல்லை என்னைத் தவிர'' என்றாள் அவள்.

''ஒருத்தியில் இருந்துதானே ஓராயிரம் பேர் உருவாகிறார்கள்? உன் குண விசேஷம் இங்கே வரும் பிற பெண்களுக்கும் வருவதில் வியப்பென்ன இருக்கிறது? ரதிதேவி! ஓர் இடம் அழகு பெறுவதென்பது ஆண்களின் இருப்பால் அல்ல பெண்களின் வரவால்தான். இடம் என்பது இருட்டானால் அதில் தோன்றும் விளக்குதான் பெண். இடம் என்பது செடியானால் அதில் தோன்றும் மலர்தான் பெண். இடம் என்பது குழல் என்றால் அதில் தோன்றும் இசை தான் பெண். இப்படிச் சொல்லிக் கொண்டே போகலாம்.''

''வீரரே! விளக்கு தோன்ற இருள் தேவை. மலர் பூக்க செடி தேவை. இசை எழும்ப குழல் தேவை. பெண்கள் பிரகாசிக்க ஆண்கள் தேவை. ஆண்களைச் சார்ந்தே பெண்கள் அழகுப் படுகிறார்கள் இல்லையா?''

''உண்மைதான்.''

''இயல்புகள் உங்களுக்குப் புரிகிறது. இயற்கை விதி உங்களுக்குத் தெரிகிறது. ஆனால், செயலில்தான் எதுவும் இல்லை. உங்கள் முன்பு சொர்க்கம் வரும்போது அதில் நுழைவதுதான் உங்கள் இயல்பாக இருக்க வேண்டும். நீங்களோ அதை அசட்டை செய்கிறீர்கள். நரகத்தைப் பார்த்துவிட்ட மாதிரி ஒதுங்குகிறீர்கள்?''

''உன்னைப் போய் நரகம் என்று யார் சொல்ல முடியும்? துறவியாலேயே சொல்ல முடியவில்லையே! உனக்குள் ஆவியாக அல்லவா புகுந்து கொண்டான்?''

இதைக் கேட்டு கலகலவென்று சிரித்தாள் ரதிதேவி.

''துறவிக்கு ஆசை வரும்போது உங்களுக்கு ஏன் வரவில்லை?'' என்று கேட்டாள்.

''ஆச்சரியம் என்னவென்றால் சில நேரங்களில் இந்த ஆசையானது துறவிகளுக்கு வந்துவிடுகிறது. சாமானியர்களுக்கு வருவதில்லை'' என்றான் உதயசந்திரன்.

மீண்டும் கலகலவென்று சிரித்த அவள், ''அதற்கென்ன காரணம்?'' என்று கேட்டாள்.

''ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு காரணம் இருக்கும்.''

''மற்றவர்கள் எப்படியாவது போகட்டும். உங்களைப் பற்றிச் சொல்லுங்கள் வீரரே.''

''காரணம் என்று எதையும் என்னால் சொல்ல முடிய வில்லை ரதிதேவி. எனக்கு ஆசை வரவில்லை என்பதுதான் உண்மை.''

''ஆசை வராமல் போகாது. வரும்போது தேவையில்லாமல் அடக்க முயல்கிறீர்கள்.''

''அடக்கம் அமரருள் உய்க்கும். இது ஆன்றோர் வாக்கு.''

''அந்த அடக்கம் வேறு வீரரே. இது அதுவல்ல. இயற்கைக்கு முரணாக உங்கள் ஆசையை அடக்கப் பார்க்கிறீர்கள். இது ஆபத்தாகத்தான் முடியும். அடக்க முயல்வதைவிட அடங்கிப் போய்விட்டால் ஆசையானது இயற்கையாகவே விலகிவிடும். ஆசை என்பது அடையும் வரைதான்.''

இப்படி ரதிதேவி பேசிவிட்டு அவனை மேலும் நெருங்க முற்பட்டபோது, ''ஆரம்பித்துவிட்டாயா உன் வேலையை? அப்பால் விலகு. வந்திருப்பது பல்லவ உபதலைவர். மன்னரின் தூதர். அவரை அவமானப்படுத்தாதே'' என்றபடி அங்கே பிரவேசித்தார் ஒரு மனிதர்.

''இப்போதும் தப்பிவிட்டீர்கள்'' என்று முணுமுணுத்தபடி அகன்றாள் ரதிதேவி.

ரதிதேவியை விரட்டிய மனிதர் ஐம்பது வயது மதிக்கத்தக்கவராக இருந்தார். நல்ல அந்தஸ்தில் இருப்பதாகவும் தோன்றினார்.

''வாருங்கள் உபதலைவரே, உங்களை சந்தித்ததில் எங்களுக்கு மிக்க மகிழ்ச்சி. சாதாரண வைரத்தை பட்டை தீட்டிய வைரமாக ஆக்கியதுபோல் உங்களை ஆக்கியிருப்பவர் பல்லவ மாமன்னர். தற்போது அவர் உங்களை ஆழ்கடலில் ஆழ்த்தி பார்க்கத் தீர்மானித்துவிட்டார். அது நல்லதுதான். நீங்கள் நாளைக்கே மாமல்லபுரத்திற்கு வந்துவிடுங்கள்'' என்றார் அவர்.

''தாங்கள் யார்?'' என்று கேட்டான் உதயசந்திரன்.

''பல்லவர் கடற்படைத் தளபதி'' என்றார் அந்த மனிதர்.

''தளபதிக்கு என் வணக்கங்கள்'' என்றான் உதயசந்திரன்.

வணக்கத்தை தெரிவித்துவிட்டு ''இந்த ரதிதேவி யார்?'' என்று கேட்டான்.

''இப்போதைக்கு அவள் ரதிதேவி என்பதை மட்டும் தெரிந்து கொண்டால் போதும் உபதலைவரே'' என்றார் அவர்.

அவரிடமிருந்து விடைபெற்றுக் கொண்ட உதயசந்திரன் அன்றிரவு பல்லவபுரத்தில் தங்கிவிட்டு மறுநாள் மாமல்ல புரத்திற்குச் சென்றான்.

அங்கு சென்ற பிறகு உதயசந்திரன் புதியதொரு பரிமாணத்தை அடைந்தான்.

மாமன்னன் ராஜசிம்மன் அவனிடம் கூறியதைவிட பல்லவபுரத்தில் இருந்தவர்களிடமும் பல்லவன் தங்கலில் இருந்த கடற்படைத் தளபதியிடமும் விவரமாகக் கூறியிருந் தானாதலால் அவர்கள் உதயசந்திரன் மாமல்லபுரத்திற்கு வந்ததுமே காரியங்களைக் கிரமமாகவும் சிரத்தையோடும் செய்தார்கள்.

அவனுக்கு மாமல்லபுரத்து கடற்கரை முதல் துறைமுகம் வரையிலான விவரங்களைத் தெரிவித்ததோடு கிழக்குக் கரையில் இருந்த பல்லவத்துறைமுகங்களைப் பற்றியும் விரிவாக எடுத்துரைத்தார்கள்.

மாமல்லபுரத்திற்கு தெற்கே இருந்த வாசவ சமுத்திரம் என்று அழைக்கப்பட்ட, பாலாறு கடலோடு சங்கமிக்கும் கடல்வாய் பகுதியில் கப்பல் கட்டும் துறைகளும் கப்பல்களைச் செப்பனிடும் துறைகளும் இருந்தன.

உதயசந்திரன் அங்கு அழைத்துச் செல்லப்பட்டான். சாதாரண படகிலிருந்து போர் மரக்கலங்கள் வரை இருந்த சகலவிதமான

கப்பல்களும் அவனுக்கு அறிமுகம் செய்து வைக்கப்பட்டன. கப்பல்களின் அமைப்புகள், அவற்றின் வகைகள், அவற்றின் உயரம், கனம் ஆகிய பரிமாணங்கள், அவற்றை அமைக்கும் முறை, பழுதான மரக்கலங்களை பழுது பார்க்கும் முறை ஆகிய அனைத்து விவரங்களும் அவனுக்கு விளக்கப்பட்டன. மரக்கலங்களில் அமைக்கப்படும் பொறிகளை, பயன்படுத்தப்படும் பல்வேறு போர் ஆயுதங்கள் ஆகியவைப் பற்றியும் உதயசந்திரன் அறிந்து கொண்டான். ஒவ்வொரு விஷயத்திலும் தனக்கு வந்த சந்தேகங்களைக் கேட்டுத் தெளிவுபடுத்திக் கொண்டான்.

இதற்கு ஐந்து மாதங்கள் பிடித்தன. ஒவ்வொரு மாதமும் ஒரு நாள் காஞ்சிக்குச் சென்று அங்கேயிருந்த கடிகையில் சிகிச்சை பெற்று வந்த பௌர்ணமியையும் பார்த்துவிட்டு வந்தான்.

ஐந்து மாதங்கள் முடிவடைந்த நிலையில் காஞ்சியில் பௌத்த விஹாரத்தில் தங்கியிருந்த பௌத்தப் பெரியாரான வக்கிரபோதி நடத்திய பிரார்த்தனைகளால் காஞ்சியில் மட்டுமின்றி பல்லவ நாட்டில் பெருமழை பெய்தது.* விவசாயிகள் மகிழ்ச்சியோடு விவசாயப் பணிகளில் இறங்கினார்கள். பல்லவ ராஜ்யத்தில் இருந்த ஏரிகளெல்லாம் நிரம்பி வழிந்தன.

உதயசந்திரனுக்கு மாமல்லபுரத்தில் கடற்போர் குறித்த பயிற்சியும் அளிக்கப்பட்டது. மரக்கலங்களை கடலில் இயக்குவது, நங்கூரமிடுவது, திருப்புவது, சுழற்றுவது, பாய்மரங்களை ஏற்றுவது இறக்குவது ஆகியவற்றோடு நடுக்கடலில் எதிரி போர்க்கப்பல்களுடன் போரிடுவது முதலானவை குறித்து பயிற்சி அளிக்கப்பட்டபோது மிகவும் ஈடுபாட்டுடன் நடந்து கொண்டான் உதயசந்திரன். அதுவரை அவன் அறியாதிருந்த விஷயங்களையெல்லாம் அவன் அறிந்தபோது பெருவியப்படைந்தான்.

போர் மரக்கலத்திலேயே மயிலை, சோப்பட்டிணம் போன்ற துறைமுகங்களுக்குப் பயணம் செய்தான். அப்பயிற்சியில் மூன்று மாதகாலம் கழிந்தது.

தனது பரிமாணம் புதிய வடிவம் பெற்றிருப்பதை உணர்ந்து பெருமிதத்துடன் மாமல்லபுரத்தில் கல் ரதங்கள் அமைக்கப் பட்டிருந்த எழிலார்ந்த பகுதியில் இரவில் - மணலில் - பௌர்ணமி

* Page 110 'Kanchipuram in Early South Indian History' by T.V.Mahalingam

ஒளியில் - கை கால்களை நீட்டி - ஆசுவாசமாகப் படுத்திருந்தான் உதயசந்திரன்.

மாமல்லபுரத்திலேயே மிகவும் சிறப்புவாய்ந்த பகுதியாகவும் மக்கள் நடமாட்டமும் காவலர் நடமாட்டமும், கலைஞர்கள் நடமாட்டமும் மிகுந்திருக்கும் பகுதியாகவும் இருந்த அக்கல் ரதப் பகுதியில் அனைத்து நடமாட்டமும் ஓய்ந்த பிறகு நள்ளிரவு நேரத்தில் வந்தான் உதயசந்திரன்.

நிலவொளியில் கல் ரதங்கள் அனைத்தும் சோபையோடு விளங்கி ஏதோ தேவலோகத்திற்கு வந்துவிட்ட மாதிரியான பிரமையை உண்டாக்கியிருந்தது அவனுக்கு. பூவுலகத்தில் அப்படியொரு தேவலோகத்தைப் படைத்த மகேந்திர பல்லவரையும் நரசிம்மப் பல்லவரையும் வாழ்த்தியபடி கல் ரதங்களைச் சுற்றி வந்த அவன் அங்கிருந்த மணற்பகுதியிலேயே படுத்துக் கொண்டான். கடந்த எட்டு மாத காலமாக இடைவிடாத பயிற்சியில் ஈடுபட்டிருந்த அவனுக்கு நிலவொளியில் மணல்வெளியில் படுத்தது இதமாக இருந்தது. கடல் காற்று விர்விர்ரென்று வீசியது அவனைத் தாலாட்டுவதுபோல் இருந்தது. மல்லாந்த நிலையில் வானவெளியில் பொன்னாபரணம் போல் விளங்கிய நிலவைக் கண்ட அவன், ''நிலவே! நீ மாதம் ஒருமுறை தவறாமல் முழுமை பெற்று பௌர்ணமியாக காட்சியளிக்கிறாய். நானும் மாதம் தவறாமல் கடிகைக்குச் சென்று வருகிறேன். ஆனால் என் பௌர்ணமி மட்டும் பூரணமடையாமல் இருக்கிறாளே இது நியாயமா?'' என்று முணுமுணுத்தான். ''இப்போது மட்டும் பௌர்ணமி இங்கே இருந்தால் எத்தனை ஆனந்தமாக இருக்கும்?'' என்று நினைத்தபடி கண்களை மூடினான்.

அவனது நெற்றியில் மிருதுவான ஏதோ ஒன்று ஊர்ந்தது.

'பௌர்ணமி! வந்துவிட்டாயா பௌர்ணமி? நீ தானே என்னைத் தொடுகிறாய்?' என்று அவனது உதடுகள் முணுமுணுத்தன.

''நான்தான். கண்ணைத் திறவுங்கள்'' என்ற குரலொன்று எழுந்தது.

கண்களை விழித்தான் உதயசந்திரன்.

'வான் நிலவு பூமிக்கு வந்துவிட்டதா?' என்று நினைத்தான்.

''என்ன பார்க்கிறீர்கள்? உங்கள் பௌர்ணமி தான். எழுந்திருங்கள்'' என்றது குரல்.

உதயசந்திரன் எழுந்தான். அவனருகில் பௌர்ணமிதான் இருந்தாள். அவனால் நம்ப முடியவில்லை. தொட்டுப் பார்த்தான். அவள் சிரித்தாள்.

''நான் பேயல்ல. பௌர்ணமிதான்'' என்றாள் பௌர்ணமி.

''நீயா பௌர்ணமி? நலமாகிவிட்டாயா? எப்படி வந்தாய்?'' என்று கண்கள் விரிய கேட்டான் உதயசந்திரன்.

''நான் நலமாகி பத்து நாட்களாகிவிட்டன. கடிகையை விட்டு வெளியேறியும் விட்டேன். நீங்கள் இருப்பதை அறிந்ததும் உங்கள் தந்தையிடம் தொல்லை செய்தேன். அவர் தான் என்னை இங்கே அழைத்து வந்தார். உங்கள் இருப்பிடம் தெரிந்து இங்கு கொண்டு வந்து விட்டுபோய்விட்டார்.''

''எங்கே?''

''இப்போது அதுவா முக்கியம்? அவரெங்கே ஓடியா போய்விடுவார்?''

''ஆமாம் பௌர்ணமி. உண்மைதான். அவர் ஓடியா போய்விடுவார்?''

''நான் சொன்னதையே திருப்பிச் சொல்கிறீர்களே? பைத்தியம் பிடித்துவிட்டதா உங்களுக்கு?''

''ஆமாம்'' என்று சொன்ன உதயசந்திரன் அவளைக் கட்டிப்பிடித்து அவளது முகம் முழுவதும் தன் உதடுகளை அழுத்தி அழுத்தி முத்தமழை பொழியலானான்.

''ஐயோ. என்ன இப்படி? விடுங்கள்'' என்றாள் பௌர்ணமி.

''விட முடியாது. விடவே முடியாது. வாயை மூடு'' என்று சொல்லி அவளது உதடுகளை தனது முரட்டு இதழ்களால் சிறை செய்தான்.

அவளுக்கு ஆனந்தமாகத்தான் இருந்தது. இன்னும் இன்னும் என்று கேட்கும்படியாகவும் இருந்தது. ஆனால் பயமாகவும் இருந்ததால் தனது உதடுகளை விடுவித்துக் கொண்டு அவனிடமிருந்தும் விடுவித்துக் கொண்டு எழுந்து ஓடலானாள்.

அவனோ பாய்ந்து சென்று அவளைப் பிடித்தான்.

''ஏன் ஓடுகிறாய்?'' என்று கேட்டான்.

''பின் என்ன? நீங்கள் இப்படி நடந்து கொண்டால் எப்படி?''

''வேறெப்படி நடந்து கொள்ள வேண்டும்?''

''இதற்கெல்லாம் நேரம் காலம் என்று உண்டு.''

''காத்திருந்த காலம் போதாதா பௌர்ணமி?''

''எங்கே போய்விடப் போகிறேன்? என்றைக்கும் நான் உங்களுடையவள்தானே?''

''இனிமேல் என்னால் காத்திருக்க முடியாது. இனியும் நீ விலகிச் சென்றால் நான் என்னாவேன் என்று சொல்ல முடியாது. பலர் வலை வீசுகிறார்கள். அதில் விழுந்துவிடுவேன் நான்.''

''இப்போது நான் என்ன செய்ய வேண்டும் என்கிறீர்கள்?''

''நீ எதுவும் செய்யாமல் இருந்தால் போதும்.''

''நீங்கள் சொல்வது எனக்கு விளங்கவில்லை.''

''ஓடாமல் இரு முதலில்.''

''சரி.''

''தடைபோடாமல் இரு.''

''எதற்கு?''

''எதற்கும்தான்''

''அதற்கு திருமணம் ஆக வேண்டும்.''

''அதுவரை யெல்லாம் என்னால் காத்திருக்க முடியாது.''

''அவ்வளவு அவசரமா?''

''ஆமாம்'' என்று சொல்லி அவளைக் கீழே தள்ளினான்.

''கீழே மணல்'' என்றாள் அவள்.

''இயற்கையான மஞ்சம்'' என்றான் அவன்.

''மணல் குத்துகிறது'' என்றாள் அவள்.

''அதுவும் ஒரு சுகம்'' என்றான் அவன்.

''நீங்கள் மனிதனா? மிருகமா?'' என்றாள் அவள்.

''மனிதன் பாதி, மிருகம் பாதி'' என்றான் அவன்.

''புருஷா மிருகமா?''

''இல்லை பௌர்ணமி. எல்லா மனிதனும் மனிதன் பாதி மிருகம் பாதி என்று இருந்தால்தான் வாழ முடியும்.''

''சந்தர்ப்பத்திற்கேற்ற வாதம்.''

''இல்லை பௌர்ணமி. மனிதன் என்ற வார்த்தை அறிவைக் குறிக்கிறது. மிருகம் என்ற வார்த்தை செயலைக் குறிக்கிறது. இரண்டும் இருந்தால்தான் எதுவும் நடக்கும்.''

''உங்களுக்கு வெட்கமில்லை.''

''உன்னிடம் நான் எதற்காக வெட்கப்பட வேண்டும்?''

''ஐயோ! ஐயோ!''

''போதும் உன் பேச்சு'' என்று சொல்லி அத்து மீற முற்பட்டான் உதயசந்திரன்.

ஆனால் திடீரென அவனுக்குள் ஒரு தயக்கம் உண்டாக்வே அவளை விட்டு விலகினான்.

ஆரம்பத்தில் அவனது அத்து மீறலை விரும்பாமல் பயந்து பிற்கு அவனது பேச்சால் தைரியமடைந்து அத்து மீறலுக்கு மௌனச் சம்மதத்தை தெரிவித்த பௌர்ணமி ஆனந்த நிலைக்குத் தயாரானபோது அவன் திடீரென விலகி விடவே ஏமாற்ற மடைந்தாள்.

''ஏன்? என்ன ஆகிவிட்டது?'' என்று மெல்ல கேட்டாள் அவள் ஏக்கத்துடன்.

''பௌர்ணமி! உனக்கு நான் தகுதியானவன் அல்ல'' என்றான் உதயசந்திரன்.

''இது என்ன பைத்தியக்காரத்தனமான பேச்சு?''

''இதற்குமேல் என்னை எதுவும் கேட்காதே பௌர்ணமி.''

''விசித்திரமாக இருக்கிறது வீரரே உங்கள் பேச்சும், போக்கும். தகுதியில்லாமல் தான் இத்தனை காலமாக அன்பு செய்தீர்களா? தகுதியில்லாமல்தான் சற்று முன்பு அத்து மீற முயன்றீர்களா? அப்போதெல்லாம் இல்லாத தகுதி குறைவு திடீரென எப்படி வந்தது?''

''மறந்துவிட்டதால் எல்லை மீற முற்பட்டுவிட்டேன் பௌர்ணமி. ஞாபகம் வந்துவிட்டதால் விலகிவிட்டேன்.''

''எதை மறந்தீர்கள்? எது ஞாபகம் வந்துவிட்டது?''

''நான் வணிகர் மகன்.''

''அதனால் என்ன?''

''நீ அகளங்கரின் வளர்ப்பு மகள்.''

''தெரிந்த விஷயம்.''

''உனக்குத் தெரியாத விஷயம் ஒன்றிருக்கிறது.''

''என்ன?''

''நீ அரசகுமாரி. களப்பிர அரசர் கூற்றுவரின் மகள்.''

''அதனால் என்ன?''

''இது சமீபத்தில்தான் எனக்குத் தெரிந்தது.''

''அதைத்தான் மறந்துவிட்டதாகச் சொன்னீர்களா?''

''ஆமாம்.''

''அதைத்தான் ஞாபகத்திற்கு வந்துவிட்டதாகச் சொன்னீர்களா?''

''ஆமாம்.''

''இதைத்தான் தகுதி குறைவு என்று சொன்னீர்களா?''

''ஆமாம்.''

''உங்களுக்கு கொஞ்சமாவது புத்தி இருக்கிறதா? அன்புக்கு உண்டோ அடைக்கும் தாழ்? தகுதியைப் பார்த்து என்றைக்காவது அன்பு வருமா? விலகுமா? இது உங்களுக்கு எப்படி புரியாமல் போய்விட்டது? வீரரே! உங்களுக்கு ஒன்று சொல்லவா?''

''ம்.''

''நான் கூற்றுவ மன்னரின் மகள் என்பது எனக்குத் தெரியும்.''

''தெரியுமா? எப்படி?''

''அகளங்கர் சொல்லாமல் விட்டுவிட்டால் அகிலமே இருண்டுவிடுமா என்ன? உண்மைகள் தூங்கலாம் வீரரே. அழியாது. என் தந்தை காலமான பின் அகளங்கரிடம் நான் வளர்ந்தேன். எனக்கு உலகம் தெரிந்தபோது அமைச்சர் மூலம் உண்மையும் தெரிந்தது.''

''உண்மை தெரிந்துமா பேசாமல் இருந்தாய்?''

''என்ன செய்யச் சொல்கிறீர்கள்? உரிமை குரல் எழுப்பி போராட வேண்டும் என்கிறீர்களா? எந்த மன்னர் என் தந்தையை வென்றாரோ அவரையே நான் தந்தையாக ஏற்றேன். பகைவராகக் கருத வேண்டிய ராஜசிம்ம மகாராஜாவை தந்தையாக மானசீகமாக ஏற்றுக் கொண்ட நிமிஷத்திலேயே பரம அமைதியை அடைந்தேன் நான். அரசகுமாரி என்ற எண்ணம் அகன்று பெண் என்ற நினைவு மட்டுமே நிலைத்தது. போதுமா?''

''போதும்.''

''என்ன போதும்.''

''விளக்கம் போதும்.''

''பிறகு?''

''பேச்சும் போதும்.''

''பிறகு?''

''செயல்தான்.''

''உங்களைப் போன்ற வெட்கங்கெட்டவரை நான் பார்த்ததில்லை.''

''அதற்கு நான் என்ன செய்ய முடியும் பௌர்ணமி.''

''என்னைக் கேட்டால்?''

''சரி பௌர்ணமி.''

''என்ன சரி?''

''வாயை மூடு பௌர்ணமி.''

''எதற்கு?''

''எனக்கு ஏகப்பட்ட வேலை இருக்கிறது.''

''ச்சீ.''

அவள் வெட்கப்பட்டாள்.

அவன் அத்து மீறினான்.

மணல் ஆனந்தப்பட்டது.

மறுநாள் மாமல்லபுரத்திற்கு வந்தான் ராஜசிம்மன்.

உதயசந்திரனுக்கு அவனிட்ட கட்டளை உதயசந்திரனை புதிய உலகத்திற்கு அழைத்து சென்றது.

☆☆☆



60

கடல் கோட்டை

உதயசந்திரனும் பௌர்ணமியும் சதிபதிகளாகிவிட்ட தினத்திற்கு மறுநாள் மாமல்லபுரத்திற்கு வருகை தந்தான் பல்லவ மன்னன் ராஜசிம்மன். கடல் நகரத்தைச் சேர்ந்த பிரமுகர்களும் கடற்படை தளபதிகளுமாக அவனைச் சிறப்பாக வரவேற்று உபசரித்தனர். அவர்களிடமெல்லாம் கடற்படையைப் பற்றி பொதுவாகப் பேசிவிட்டு உதயசந்திரனுக்கு அளிக்கப்பட்ட பயிற்சிகளை பற்றியெல்லாம் கேட்டுத் தெரிந்து கொண்டான். அந்தப் பேச்சின்போது உதயசந்திரன் அழைக்கப்படவில்லை.

அன்று மாலை உதயசந்திரனை மட்டும் அழைத்துக் கொண்டு கடற்கரைக்குச் சென்றான் ராஜசிம்மன்.

''உதயசந்திரா! காஞ்சியில் நிலப்பகுதியில் கைலாசநாதன் ஆலயம் ஒன்றை அமைக்கப் போவதாகச் சொன்னேன் அல்லவா? அப்பணி தொடங்கிவிட்டது. அப்போது எனக்கு என்ன தோன்றியது தெரியுமா? நிலத்தில் சாளுக்கியரை வென்றதற்கு அடையாளமாக காஞ்சியில் கைலாயநாதன் கோயிலை அமைப்பதுபோல் நீரில் நாம் அடைய வேண்டிய வெற்றிக்காக இக்கடற்கரையிலும் கற்றளிகளை அமைத்தால் என்ன என்று தோன்றியது. இங்கே அமைக்கப் போகும் ஆலயங்களின் வடிவமைப்பை பார். நன்றாக இருக்கிறதா?'' என்று கேட்டு சீலையை எடுத்துக் காட்டினான் மன்னன்.

சீலையில் சமைத்திருந்த சிற்ப ஓவியத்தைக் கண்டு மலைத்துப்போன உதயசந்திரன், ''தங்களை நினைத்தால் பிரமிப்பாக இருக்கிறது பிரபு. அரசாட்சியிலும் முழு கவனம் செலுத்தும் தாங்கள் கலை விஷயத்திலும் சற்றும் குறையாத தீவிர கவனம் காட்டுகிறீர்கள். இது தங்களால் எப்படி முடிகிறது?'' என்று கேட்டான்.

''இந்த மாமல்லபுரத்தைப் பார்த்தாயா? இங்கேயுள்ள சிற்ப அதிசயங்களைக் கண்டாயா? இதையெல்லாம் சமைத்தது யார்?

மகேந்திரவர்மரும் நரசிம்மவர்மரும் தானே? அவர்கள் அரசாட்சி நடத்தவில்லையா? அவர்களை விடவா நான் சிறப்பாகச் செய்துவிடப் போகிறேன்? உதயசந்திரா! மன்னர்கள் வருவார்கள். போவார்கள். போர்களும் வரும். போகும். இவையெல்லாம் எல்லா மன்னர்களுக்கும் உரிய செயல்கள். சரித்திரங்கள். அவைகள் காலம் கடந்து நிலைக்கலாம். மாற்றப்படலாம். மறைக்கப்படலாம். மறக்கவும் படலாம். ஆனால் மன்னர்களால் அமைக்கப்படும் இக்கற்றளிகளும் சிற்ப வினோதங்களும் காலம் கடந்தும் நிற்குமல்லவா? அசோக சக்கரவர்த்தி ஆண்ட காலம் என்ன? பல நூற்றாண்டுகளுக்கு முன்னால். அவர் காஞ்சியில் கட்டிய ஸ்தூபி இன்றைக்கும் இருக்கிறது அல்லவா? அப்படித்தான் பல்லவர்களின் படைப்பும் நிலைத்து நிற்கும். இந்தச் சீலையில் இருப்பது போன்ற கோயில்கள் இக்கடற்கரையில் அமைந்திருப்பது போல் கற்பனை செய்து பார். எத்தனை கம்பீரமாகவும் அழகாகவும் இருக்கும். இந்தக் கடலின் அலைகள் கற்றளியில் உள்ள இறைவனைத் தொட்டுத் தொட்டுத் தொட்டுச் செல்வது போல் நினைத்துப் பார். எவ்வளவு பரவசமாக இருக்கும்?''

''வார்த்தைகளால் விவரிக்க முடியாது பிரபு.''

''உதயசந்திரா! இக்கடற்கரையில் நான் கூறியபடி கற்றளிகள் அமையும். அதற்குப் பெருமை சேர்க்கக் கூடிய காரியத்தை நீ செய்ய வேண்டும்.''

''நானா மன்னவா?''

''நீயே தான்'' என்று சொன்ன ராஜசிம்மன் ''உதயசந்திரா! கடலைப் பார். இது பாரத நாட்டின் தெற்கேயுள்ள கிழக்குக் கரையில் ஆரம்பித்து ஸ்ரீ விஜயம் வரை விரிந்து கிடக்கிறது. பூர்வக் கடல் என்று அழைக்கப்படும் இக்கடல் நமக்குச் சொந்தமானது. காலம் காலமாக பாரத நாட்டிற்குச் சொந்தமானது. ஆனால் சமீப காலமாக இதை அராபியரும் திபத்தியர்களும் சொந்தம் கொண்டாடுகிறார்கள். திபத்தியர்கள் இதற்கு 'திபத்தியர் கடல்' என்றே பெயர் சூட்டிவிட்டார்கள்.*''

''அராபியர் எங்கோ இருக்கிறார்கள். திபெத்தியரோ இமயமலைக்கு அப்பால் இருக்கிறார்கள். இவர்கள் எப்படி கூட்டணி சேர்ந்தார்கள் மன்னவா?''

* This Supremacy of Bengal was firmly established in Bengal for 200 years and the Bay of Bengal was known as 'sea of Tibet' - page 116 'Foreign notices in South India' by Neelakanta Sastry.

''ஆசை தான் எங்கோ இருந்தவர்களை ஒன்றாகச் சேர்த்தது. அராபியரும் திபத்தியரும் கொஞ்சம் கொஞ்சமாக பாரத நாட்டில் குடியேறினார்கள். இந்நாட்டின் வளங்களைக் கண்டார்கள். நண்பர்களானார்கள்.''

''அவர்கள் நமக்கு விரோதிகளாகிவிட்டார்களா மன்னவா?''

''நமக்கு மட்டுமல்ல. மேற்கத்திய நாடுகளான ரோமாபுரி, எகிப்து மற்றும் கிழக்கத்திய நாடுகளான ஸ்ரீ விஜயம், சாவகம், கடாரம், காழகம், சீனம் ஆகிய நாடுகளுக்கும் எதிரியாகி விட்டார்கள்.''

''எப்படி பிரபு?''

''உதயசந்திரா! மேலை நாடுகளுக்கும் கீழை நாடுகளுக்கும் ஆயிரம் வருடங்களுக்கும் மேலாக வாணிபம் நடந்து வருகிறது. தரை வாணிகத்தை விட கடல் வாணிபம் எளிதாகவும் லாபகரமாகவும் இருந்ததால் இவ்விரு திசை நாடுகளும் பண்டமாற்று செய்து வந்தன. பாரத நாட்டிலிருந்து அலக்ஜாந்திரியாவுக்கு ஒரு கப்பல் மிளகு போனால் சீனாவில் உள்ள கேன்டன் துறைமுகத்துக்கு நூறு கப்பல் மிளகு செல்லும்.* சீன தேசத்திலிருந்து பீங்கான் பொருட்கள் வரும். அரபு நாட்டிலிருந்து வாசனை திரவியங்கள் வரும். மயில்களும் குரங்குகளும் புரவிகளும் கூட வரும். வாணிபம் சிறப்பாக நடந்து வந்தது. இந்த பரிமாற்றங்களில் அரபு நாடும் ஒன்றுதான். ஆரம்பத்தில் பாரத நாட்டிலிருந்தும் கிழக்குக் கடல் நாடுகளிலிருந்தும் மரக்கலங்களில் வந்து கொண்டிருந்த வணிகப் பொருட்களை அராபியர்களே வாங்கிக் கொண்டு ஆப்ரிக்க நாடுகளுக்கும் ரோமாபுரிக்கும் அனுப்பி வந்தார்கள். சில நேரங்களில் கொள்ளையும் அடித்தார்கள். அப்போது அவர்களுக்கு உண்டான ஆசைதான் பேராசையாக மாறியது. அரபுக் கடல் என்றும் எரித்திரியக் கடலில் செய்து வந்த காரியத்தைக் கொஞ்சமாக கிழக்குக் கடலில். அதாவது நமக்குச் சொந்தமான பூர்வக் கடலிலும் செய்யத் தொடங்கினார்கள். தங்களை இடைத் தரகர்களாக அவர்களே நியமித்துக் கொண்டு கீழை நாடுகளிலிருந்தும் மேலை நாடுகளிலிருந்தும் வரும் பொருட்கள் தங்கள் மூலமாகத்தான் நடைபெற வேண்டும் என்று நிபந்தனை விதித்தார்கள். பாரத நாட்டில் வங்கத்திலிருந்தும், கலிங்கத்திலிருந்தும், பல்லவ நாட்டிலிருந்தும், பாண்டிய

* பக்கம் 43. 'பண்டைத் தமிழர் பண்பாடு' ஐயன்பெருமாள் கோனார்.

நாட்டிலிருந்தும் சென்ற வணிகக் கப்பல்களுக்கும் இந்த நிபந்தனை விதிக்கப்பட்டது. நிபந்தனையை மறுத்தால் வணிகக் கப்பல்கள் சூறையாடப்படும் என்று எச்சரிக்கப்பட்டதால் எல்லா நாடுகளும் நிபந்தனைக்கு உட்பட்டன. இதனால் அந்த நாடுகளுக்கு நஷ்டமும் அராபியர்களுக்கு கொழுத்த லாபமும் கிடைக்கலாயிற்று. இதனால் சீனம் ரோமாபுரி ஆகிய நாடுகள் வணிகப் போக்குவரத்தைக் குறைத்து கொள்ளத் தொடங்கவே அராபியர்கள் தரகு வேலையை விட்டுவிட்டு முழு நேர கொள்ளைக்காரர்கள் ஆனார்கள். பூர்வக்கடலில் வரும் கப்பல்களை இரக்கமின்றி சூறையாடலானார்கள். அராபியரோடு திபத்தியரும் சேர்ந்து கொண்டதால் அவர்களது கொடிதான் பூர்வக் கடலில் பறக்கிறது. அதனால் பூர்வக் கடலுக்கு திபத்திய கடல் என்று பெயர் வைக்கும் அளவிற்கு பெரும் சக்தியாக உருவெடுத்தார்கள். இந்தப் பூர்வக் கடல் அராபியரின் கடல் கோட்டையாகிவிட்டது. நிலக்கோட்டைகளுக்குச் சுவர்கள் உண்டு. கடல்கோட்டையைத் தகர்க்க வேண்டும். சீன மன்னர் நம்மிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார். இதுவரை சீனத் தூதுவர்கள் மூன்றுமுறை காஞ்சிக்கு வந்துவிட்டார்கள்.''

''மன்னவா! சீன தேசம் பாரத தேசத்தை விட பெரியதல்லவா?'' என்று கேட்டான் உதயசந்திரன்.

''யானை பெரிய விலங்குதான். ஆனால், அதன் காலை முதலை பிடித்துக் கொண்டால் என்ன ஆகும்? சீன தேசத்தை ஒட்டியிருக்கிறது திபெத். அங்கே உள்ளவர்களின் குள்ளநரித் தந்திரங்களும் சூழ்ச்சிகளும் சீன தேசத்து மன்னர்களை அவர்களது தலைநகரிலேயே மிரளும்படி செய்துவிட்டன.* எனவே அவர்கள் நிலப்பகுதியில் திபெத்தியர்களை சமாளிக்க வேண்டியிருந்தது. அவர்களிடம் போதுமான கடற்படை பலமும் இல்லை. அவர்களுக்கு உதவுவதற்கு பாரத நாட்டில் பல்லவர்களை விட உகந்தவர்கள் வேறில்லை என்று கருதினார்கள்.* ஆகவே நம்மிடம் உதவி கேட்டு தூது அனுப்பியிருக்கிறார் சீன மன்னர்.''

''அப்படியானால் அராபிய - திபெத்தியரின் கடலாதிக்கத்தை நமது கப்பற்படையைக் கொண்டு முறியடிக்க வேண்டுமா மன்னவா.''

''அதற்கு முன் நீ சில பூர்வாங்க வேலைகளைச் செய்து முடிக்க வேண்டும்.''

* page 17 'Foreign notices in South India' by Neelakanta Sastry.
* Page 17 'Foreign notices in South India' by Neelakanta Sastry.

''சொல்லுங்கள் பிரபு.''

''அடுத்த வாரம் வஜ்ஜிரபோதி சீன நாட்டிற்குப் புறப்படுகிறார். அவரோடு மரக்கலத்தில் செல். பல்லவர்தூதனாகச் செல். இலங்கை மன்னிடம் ஒரு ஓலையைக் கொடுத்துவிட்டு அடுத்த ஓலையை சீன மன்னரிடம் கொடு. அதற்குப் பிறகுதான் பிற நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.''

''வஜ்ஜிரபோதியுடன் நான் செல்லும் மரக்கலத்தை அராபியர்கள் தாக்கமாட்டார்களா?''

''பௌத்த சமண பெரியார்கள் செல்லும் மரக்கலங்களில் காவி நிற கொடிகள் பறக்கும். அந்த மரக்கலங்களில் கொள்ளையடிப்பதற்கான வஸ்துக்கள் எதுவும் கிடையாது. எனவே காவி கொடிகள் பறக்கும் மரக்கலங்களை கொள்ளைக் காரர்கள் நெருங்கவும் மாட்டார்கள்.''

கடற்கரையிலே முக்கிய விஷயங்களைப் பேசிய ராஜசிம்மன் உதயசந்திரனை அழைத்துக் கொண்டு நகரத்தில் இருந்த மன்னரது தங்குமிடமான இலவந்திகைப் பள்ளிக்கு வந்தான். அங்கே இருவருக்கும் பகல் உணவு பரிமாறப்பட்டது. சிறிது நேர ஓய்வுக்குப் பின் உதயசந்திரனை அழைத்த மன்னன், ''உதயசந்திரா! அராபியரையும் திபத்தியரையும் நம் நாட்டிற்காகவும் பிற நாடுகளுக்காகவும் முறியடிப்பது பெரிய காரணம்தான்..அதோடு அதற்கு இணையான முக்கிய காரணமும் இருக்கிறது'' என்றான்.

''சொல்லுங்கள் மன்னவா.''

''என் புதல்வன் மகேந்திரனின் மரணம் குறித்த புலன் விசாரணை முடிந்துவிட்டது. மர்மமும் துலங்கிவிட்டது. மகேந்திரனின் மரணத்திற்கு அராபியரும் திபத்தியரும் திட்டமிட்டு சதி செய்திருக்கிறார்கள் என்பது நிரூபணமாகி விட்டது. திபத்திய பான் இனத்தவர்கள் பல்லவ ராஜ குடும்பத்தை பாதுகாப்பதாக பொய்யான சபதம் செய்துவிட்டு என்னைப் பாதுகாப்பதுபோல் வீரபல்லவ படையாக மாறினார்கள். எனது நம்பிக்கையை பெற்றார்கள். அவர்களை நம்பி அவர்களோடு மகேந்திரனை சாளுக்கிய நாட்டிற்கு அனுப்பி வைத்தேன். சாளுக்கிய பயணத்தின்போதே மகேந்திரனை தீர்த்துக் கட்டுவதுதான் அவர்களது தீர்மானமாக இருந்தது. ரணரசிகபுரத்தைத் தாக்கும் சமயத்தில் அவனைத் தாக்கி வீழ்த்திவிட முடிவு செய்திருந்தார்கள். ஆனால் நீயும் உன் நண்பர்களுமாகச் சேர்ந்து மகேந்திரனை கண்காணித்து காவல் செய்து வந்ததால்

அவர்களால் எதுவும் செய்ய முடியவில்லை. ரணரசிக புரத்திலிருந்து திரும்பும்போது நீயும் உன் நண்பர்களும் விலகினீர்கள். உங்களுக்கு பதிலாக நம் சேனாதிபதி மகேந்திரனுக்கு காவலாக இருந்தார். அதனால் வீரபல்லவ படைகளால் எதுவும் முடியவில்லை. காஞ்சியை நெருங்கிய நிலையில் சேனாதிபதியும் படைகளின் பின்புறத்திற்குச் சென்றுவிட்டதால் அவர்களால் தங்கள் நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்ள முடிந்தது. தங்களுக்குள் கலவரம் மூண்டுவிட்டதுபோல் சச்சரவில் ஈடுபட்ட அவர்கள் எதிர்பாராத விதமாக தாக்கினர். மகேந்திரனின் கழுத்திலும் வயிற்றிலும் இருவர் குறுவாளால் குத்தினர். கபாலிகர் வேடத்தில் வந்த சுலைமானும் உடைவாளால் தோளில் வெட்டினான். அகமதுவும் முகமதுவும் கூட வெட்டமுற்பட்டிருக்கிறார்கள். ஆனால் அதற்குள் நமது படைகள் சுதாரித்துக் கொண்டதால் அவர்களால் வெட்ட முடியவில்லை. கைதானார்கள். மகேந்திரனோ இச்சதிகாரர்களின் தாக்குதலில் மரணமடைந்தான். வீரனாகச் சென்றவன் சடலமாக காஞ்சிக்குத் திரும்பினான். அவனைக் கொலை செய்த பாதகர்கள் தப்பிவிட்டார்கள். பல்லவ குலக்கொழுந்தை கருவறுத்த அக்கொடியவர்களைப் பழி வாங்குவதும் நமது நோக்கம் உதயசந்திரா. எப்படி எப்போது என்றெல்லாம் கேட்காதே. மாபெரும் கடற்படையிடம் ஒப்படைக்க வேண்டிய மிகப்பெரும் பொறுப்பை தனி மனிதனான உன்னிடம் ஒப்படைக்கிறேன். செய்வாயா?''

''இதென்ன கேள்வி மன்னவா? என் உயிர் வேறு எதற்கு இருக்கிறது?''

''மகிழ்ச்சி மகனே. உன்னை உதயசந்திரனாக அனுப்புகிறேனே தவிர மகேந்திரனாக நினைத்து அனுப்புகிறேன். உன் வெற்றிக்கு என் வாழ்த்துகள்'' என்று சொன்ன மன்னன், ''இப்போதே நாம் காஞ்சிக்குப் போகிறோம். இலங்கை மன்னருக்கும் சீன மன்னருக்குமான ஓலைகள் தயாராக இருக்கும். பௌத்தப் பெரியாரையும் உனக்கு அறிமுகம் செய்து வைக்கிறேன். நாளையே நீங்கள் ரதங்களின் மூலம் இங்கு வருகிறீர்கள். மரக்கலத்தில் புறப்படுகிறீர்கள்'' என்றான்.

''மாமன்னவா. ஒரு சிறிய வேண்டுகோள்''

''சொல்''

''இன்று காஞ்சி சென்றதும் தங்கள் முன்னிலையில் எனக்கும் பௌர்ணமிக்கும் திருமணம் நடக்க வேண்டும். ஏனென்றால்...''

''புரிந்துவிட்டது. கவலை வேண்டாம்.''

அன்றைக்கே காஞ்சிக்குச் சென்றான் உதயசந்திரன்.

அனைத்து காரியங்களும் நல்லவிதமாக நடந்து முடிந்தன.

''திருமணப் பரிசாக இந்த பஞ்சவர்ண கிளியைத் தருகிறேன். இது சீனத் தூதுவர் அவரது மன்னரின் பரிசாகத் தரப்பட்டது.* இது பேசும் கிளி. அதோடு சாகசமும் செய்யும்'' என்று கூறி அழகான கிளியொன்றைக் கொடுத்தான் ராஜசிம்மன்.

அது உதயசந்திரனின் தோளில் வந்து அமர்ந்து சிறகுகளை படபடத்து, ''ராஜசிம்மா!ராஜசிம்மா'' என்றது.

''இல்லை. இனி உனக்கு இவன் தான் எஜமானன். இவன் பெயரைத் தான் நீ சொல்ல வேண்டும். இவனை மணந்த பௌர்ணமியின் பெயரைச் சொல்ல வேண்டும்'' என்றான் மன்னன்.

கிளி 'கிறீச்'சென்று குரலிட்டது.

மன்னனிடம் விடைபெற்றான் உதயசந்திரன்.

''போய் வாருங்கள். எனக்கு சித்தப்பிரமை பிடிக்காது'' என்றாள் பௌர்ணமி.

''நாட்டு சேவையே உன் உயிர் மூச்சு. மறவாதே'' என்றார் அவன் தந்தை.

திருப்தியோடு புறப்பட்டான் உதயசந்திரன்.

காவி நிறக்கொடிகள் பறந்த மரக்கலத்தில் அவனும் பௌத்தத் துறவி வஜ்ஜிரபோதியும், பிட்சுக்கள் சிலரும் ஏறிக் கொள்ள, மரக்கலம் புறப்பட்டது.

இரண்டு நாள் பயணத்திற்குப் பிறகு இலங்கையை அடைந்தது.

சீன தேசத்திற்குச் சென்று சீன மன்னரைக் காணும்போது அவருக்கு நிறைய அன்பளிப்புகளைத் தர வேண்டும் என்று சொல்லிய வஜ்ஜிரபோதி அவற்றை இலங்கையில் தான் சேகரிக்க வேண்டும் என்பதால் ஒரு மாதம் தங்க வேண்டும் என்றார். இலங்கை துறைமுகத்தில் வணிக நிமித்தமாக பெர்ஷிய நாட்டைச் சேர்ந்த முப்பத்தைந்து கப்பல்கள் வணிக நிமித்தமாக வந்திருந்தன. இலங்கையில் இருந்த ஒரு மாத காலத்தில் அந்த மரக்கலங்களுக்குரிய வணிகர்களை நண்பர்களாக்கிக் கொண்டார் துறவி

* Page 117 'Foreign notices in South India' by Neelakanta Sastri.

வஜ்ஜிரபோதி.* அவர்கள் மரக்கலத்தில் இருந்த பல விலையுயர்ந்த கற்களை சீன மன்னருக்காகப் பெற்றார்.

இதற்கிடையில் உதயசந்திரன் புலஸ்திய நகருக்குச் சென்று இலங்கை மன்னனைச் சந்தித்து ஓலையைக் கொடுத்தான்.

''ஆகா! நாங்களே கோரவிருந்த விஷயத்தை பல்லவ சக்கரவர்த்தியே கோரியிருக்கிறார். இது மிகவும் நல்ல ஏற்பாடு. ஏற்றுக் கொள்கிறோம். இன்றைக்குச் சிங்களவர்கள் இலங்கையில் ஆட்சி புரிவதற்குக் காரணமே பல்லவர்கள்தான். பல்லவ நாடு எங்கள் நட்பு நாடு'' என்றான் மன்னன்.

பிறகு ஒரு மாதம் கழித்து புறப்பட்ட மரக்கலம் இன்றைக்கு சுமத்ரா என்று அழைக்கப்படும் ஸ்ரீ விஜயத்தை அடைந்தது. அங்கே சில நாட்கள் கழித்துவிட்டு அங்கிருந்து மூசி நதி வழியாகப் பங்களத் தீவை அடைந்து அங்கிருந்து நேர் வடக்கே பயணம் தொடர்ந்தது.

மாமல்லபுரத்தை விட்டுப் புறப்பட்டு நூறு நாட்களுக்கு மேலாகி விட்ட நிலையில் அதுவரையிலான காரியங்களெல்லாம் நல்லவிதமாக முடிந்திருந்ததால் பெரும் திருப்திக்கு ஆளான உதயசந்திரன் கடல்காற்றை இன்பமாக சுவாசித்தபடி மரக்கலத்தின் மேல் தளத்தில் நின்று கொண்டிருந்தான். மரக்கலத்தின் கீழ்த் தளத்தில் துறவி வஜ்ஜிரபோதியும் பிட்சுக்களுமாக அமர்ந்து ஏதேதோ மந்திர உச்சாடனங்களைச் செய்து கொண்டிருந்தார்கள். கடலைப் பற்றியும் கப்பல்களைப் பற்றியும் மாமல்லபுரத்தில் நிரம்ப விஷயங்களை அறிந்திருந்தாலும் அவற்றையெல்லாம் அவன் அனுபவத்தில் கண்டதில்லை. ''அந்த அனுபவங்களெல்லாம் எப்போது கிடைக்கும் கடலே?'' என்று முணுமுணுத்தான் உதயசந்திரன்.

அவனது கேள்விக்கு கடல் விடை கொடுத்துவிட்டது போல் அதுவரை வீசிக் கொண்டிருந்த கடற்காற்று குறையத் தொடங்கி கடைசியில் முற்றிலுமாக மறைந்தது. அதுவரை ஜில்லென்று இருந்த கடல் பகுதி இறுகி விட்டமாதிரி ஆகிவிட்டதால் பெரும் புழுக்கமாக இருந்தது. பரந்த கடல்வெளியில் போய் இப்படியொரு புழுக்கம் வரும் என்று அவன் கேள்விப்பட்டதில்லை. எதற்காக இந்த புழுக்கம் என்று தனக்குள்ளேயே கேட்டுக் கொண்டு விடை தெரியாமல் நின்றான்.

* Page 18 'Foreige Notices in South India' by Neelakanta Sastri.

அப்போது மாலை நேரமாதலால் வானத்தில் வரையப் பட்டிருந்த சித்திரங்கள் ஊதி கலைக்கப்பட்டது போல் திடீரென மறைந்தன. வான்வெளியானது நான்கு புறங்களிலுமே சாம்பல் நிறத்தில் சீராக பூசிவிட்டதுபோல் ஒரே மாதிரி தெரிந்தது. அதுவரை லேசாக ஆடிக் கொண்டிருந்த கடலின் நீர் பரப்பு கொஞ்சம் கொஞ்சமாக அதிகமாக ஆடத்துவங்கியது. புழுக்கமானது கொஞ்சம் விடுபட்ட மாதிரி தெரிந்தது. அதை ஆதரிப்பதுபோல் தொடுவானப் பகுதியில் அரக்கன் ஒருவன் கடலிலிருந்து எழுவது போல் கரிய மேகத் திரள் ஒன்று எழுந்தது. தொடு வானத்தில் தோன்றிய அந்த மேகத்திரள் வானத்தை விழுங்க வருவதுபோல் மேலேறி வரலாயிற்று. முதலில் அரக்கனின் தலை போல் எழுந்த அந்த மேகத்திரள் பரவலாகி வானத்தை மூடத் தொடங்கியது. அதைக் கண்டு உதயசந்திரனின் தோள் மீது அமர்ந்திருந்த பஞ்சவர்ணக்கிளி, ''சந்திரா! சந்திரா!'' என்று கூறிவிட்டு பறந்து போய் பாய் மரத்தண்டின் உச்சியில் போய் அமர்ந்தது.

அதுவரை அமைதியாக இருந்த மரக்கலத்திலும் ஆரவாரம் உண்டாயிற்று. மாலுமிகள் அடித்தளத்திலிருந்து வந்து மரக்கலத்தில் ஏற்றி வைக்கப்பட்டிருந்த மூன்று பெரும் பாய்களை இறக்கும் விதமாக கயிறுகளைப் பற்றி இழுக்க பாய்கள் உருளைகளின் சுழற்சியில் சுருண்டு இறங்கின. அவற்றை பாய் மரத் தண்டுடன் மாலுமிகள் இறுக்கக் கட்டினார்கள். ஒருவருக்கொருவர் ஏதேதோ கட்டளையிட்டுக் கொண்டிருந்தார்கள். ''என்ன ஆயிற்று?'' என்று அவர்களில் சிலரைக் கேட்டான் உதயசந்திரன்.

''புயல் வரப்போகிறது'' என்று சொன்ன மாலுமி ஒருவன், ''அங்கே நிற்காதீர்கள். கீழே வந்துவிடுங்கள்'' என்றான்.

உதயசந்திரன் அதை காதில் வாங்கிக் கொள்ளவில்லை.

புயல் என்ற வார்த்தையை மட்டுமே கேட்டுக் கொண்டான்.

''ஆகா! புயல் வரப்போகிறதா? இதுவரை இப்புயலின் கோரங்களை நாகைப்பட்டிணத்தில் பலமுறை பார்த்திருந்தாலும் நடுக்கடலில் அது தோன்றும் விதத்தைப் பார்த்ததில்லை. இப்போது பார்க்கப் போகிறோம். முதல் கடல் அனுபவம் இது'' என்று தனக்குள் சொல்லிக் கொண்ட உதயசந்திரன் மேகத் திரளான வான மண்டலம் முழுவதும் பரவிவிட்டதையும் சுற்றி எதையும் காண முடியாதவாறு இருள் சூழ்ந்து விட்டதையும் கண்டான்.

அப்போது வானமே உடைவது போன்ற பேரொலி எழுந்தது. அது பேரிடியாகத்தான் இருக்க வேண்டும் என்று அவன்

உணர்வதற்குள் அந்தப் பேரொலிக்கு வானிலேயே விளக்கம் எழுதிக் காட்டுவதுபோல் பளிச் பளிச் என்று மின்னல் கீற்றுக்கள் தோன்றின. சாதாரணமாய் ஓரிரு வினாடிகள் வரை மட்டுமே நீடிக்கும் மின்னல் தொடர்ந்து ஓவியங்களாக வளர்ந்து கொண்டே இருந்தது. அதைத் தொடர்ந்து பார்க்க முடியாமல் உதயசந்திரன் கண்களை மூடிக் கொண்டதும் நீர் வீழ்ச்சியைப் போல மழை கொட்டியது. எதிர்பாராத இந்த அபார நீர் வீழ்ச்சி மழையால் தடுமாறி கீழே விழுந்த அவன் எழுந்து நின்று பாய்மரத் தண்டைப் பிடித்துக் கொண்டான். மழையானது நீர் வீழ்ச்சி போலவே தொடர்ந்து கொட்டியதால் அவனால் எதையும் பார்க்க முடியவில்லை. அந்த மழையை தண்டிக்க வந்தது போல் ஊஊ என பெரும் காற்று எழுந்தது. கரை மீது இருந்து அனுபவிக்கும் புயல்காற்றை விட பல மடங்கு அதிகமாகவும் முரட்டுத் தனமாகவும் இருந்ததைக் கண்ட உதயசந்திரனுக்கு கடலின் உக்கிரம் எப்படிப்பட்டது என்பது தெளிவாகப் புரிந்தது. சில நிமிடங்கள் வரை அவனுக்கு எதுவுமே விளங்கவில்லை. எதையும் பார்க்க முடியவில்லை. மழையோடு புயல்காற்றும் இடியோடு மின்னலுமாய் சேர்ந்து கொண்டு அலைக்கழித்தது போதாதென்று கடல் நீரும் தனது சக்தியை காட்ட முற்பட்டது போல் பேரலைகளை எழுப்பி ஆர்ப்பரித்தது. காற்றின் வீரியத்தோடு அலைகளின் வீரியமும் சேர்ந்து கொண்டதால் மரக்கலமானது அரக்கர்களிடம் சிக்கிய அபலையைப் போலத் தத்தளித்ததோடு சுழன்று சுழன்று ஆடியது. கடலுக்கும் வானத்துக்குமாக தாக்கப் படுவதுபோல் எழும்பி எழுந்து விழுந்தது. நீர் வீழ்ச்சி மழை அடை மழையாக குறைந்ததும் மாலுமிகள் மேல்தளத்திற்கு வந்து பேய்களைப் போல செயல்பட்டார்கள். மழை நீர் மட்டுமின்றி மரக்கலத்தை விட உயரமான அலைகளுமாகச் சேர்ந்து கொட்டிய நீர் மரக்கலத்தில் விழுந்தாலும் அவை அதிலேயே தங்கிவிடாத அளவிற்கு மரக்கலத்தின் ஓரங்கள் சாய்வாக இருந்ததாலும் அவை கடலிலேயே போய் விழுந்தன. சில இடங்களில் தண்ணீர் தேங்க முற்பட்டபோது மாலுமிகள் அதைக் குவளைகளால் வாரி வாரி வெளியே கொட்டினர்.

மழையானது ஒரு நாழிகைக்குப் பிறகு முற்றிலுமாக நின்று விட்டாலும் புயல் காற்றானது தொடர்ந்ததால் அக்காற்று கடல் நீரைக் கலக்கித் தூக்கவே பேரலைகள் எழுந்த வண்ணம் இருந்தது. இரவு நேரத்தில் அந்த அலைகள் பளிச்சென்று மின்னுவதைக் கண்டான் உதயசந்திரன். அந்த அலைகளில் கடலுக்குள்ளேயிருந்து

கடல் ஆமைகளும் மீன்களுமாக தூக்கி எறியப்படுவதையும் கண்டான். கடலின் பயங்கரமான அழகை அவன் ரசித்துக் கொண்டிருந்தபோது நீர்ப் பகுதியிலிருந்து ஏதோ ஒன்று வெளிப்பட்டு மரக்கலத்தில் மோதியதால் மரக்கலத் தண்டு ஒன்று உடைந்தது. அதோடு சேர்த்து உதயசந்திரனும் கடலில் தூக்கி எறியப்பட்டான். அந்த வினாடியே அவனது நினைவு அவனை விட்டு விலகியது.

கடல் அவனைக் கொண்டு விட்டதா?

(முதல் பாகம் நிறைந்தது)

☆☆☆



கடல் கோட்டை

(இரண்டாம் பாகம்)



61

பூர்வக்கடல்

ஓர் ஆண்டு ஓடிவிட்டது.

இந்தக் காலகட்டத்தில் அராபியர்களின் ஆதிக்கம் வங்கக் கடல் என்னும் பூர்வக் கடலில் முழுதுமாக பரந்து விரிந்துவிட்டது.

கடல் வரலாற்றிலேயே பொதுவாகவே அராபியர்களின் ஆதிக்கம் நீண்டகாலமாக இருந்து வந்தது. அதற்குக் காரணம் அவர்களது இருப்பிடம் அமைந்திருந்ததுதான். பாரத நாட்டிலிருந்தும் கிழக்கு கடல்பிராந்தியங்களான ஸ்ரீவிஜயம், சாவகம், சீனம் ஆகிய நாடுகள் இன்றைக்கு இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்பிலிருந்தே மேற்கத்திய நாடுகளான எகிப்து மற்றும் ரோம் ஆகியவற்றுடன் வாணிகம் செய்ய விரும்பின. மேற்கத்திய நாடுகளும் அவ்வாறே விரும்பின. அந்த வாணிகம் கடல் மூலம் நடைபெறுவதுதான் எளிதானதாக இருந்தது. எனவே நிறைய மரக்கலங்கள் பல்வேறு வணிகப் பொருட்களைச் சுமந்து மேற்கத்திய நாடுகளுக்குச் சென்றன. அவ்வாறு சென்ற வணிக மரக்கலங்கள் அரபிக்கடல் என்னும் எரித்திரிய கடலுக்கு வந்தபின் செங்கடலுக்குச் சென்றுதான் மேற்கத்திய நாடுகளை அடைய வேண்டியிருந்தது. அப்படி சென்ற மரக்கலங்கள் கூட ஆப்பிரிக்க கரை வரைதான் செல்ல முடிந்ததே தவிர அதற்கு வடக்கே இருந்த ரோம் நாட்டிற்குச் செல்ல முடியாதவாறு கடல் வழியானது பாலைவனத்தால் பிரிந்து விட்டிருந்தது. ரோமுக்குச் செல்ல வேண்டுமென்றால் மரக்கலங்களில் ஆப்பிரிக்க கடல் பிரதேசங்களில் சரக்குகளை இறக்கி தரை வழி மூலம் அலக்சாந்திரியாவுக்கு கொண்டு சென்று அங்கிருந்து வேறு மரக்கலங்களில் ஏற்றி மத்திய தரைக்கடலில் பயணம் சென்று ரோமாபுரியை அடைய வேண்டியதாக இருந்தது. இத்தகைய பயணம் சிக்கலானதாக இருந்தது.

இந்தச் சிக்கலை தங்களுக்குச் சாதகமாக மாற்றிக் கொண்டவர்கள் அராபியர்கள்தான். செங்கடலின் தொடக்கத்தில்


80
90
100
110
120
20
10
0
DVĀRĀVATĪ
HAMSAVATI
AMARAVATI
ANGKOR
CAMPA
INDRAPURA
SIAM
(SYAMARATTHA)
LAVAPURI
KAMBHOJA
SAGARA
KĀÑCĪPURA
NĀGAPATTINAM
MĀPAPPĀḶAM
TALAITTAKKŌLAM
(TAKUAPA)
(JAIYA)
MĀYIRUḌINGAM
ILAṄGĀSŌKAM
ANURĀDHAPURA
MA-NAKKAVARAM
(NICOBAR IS)
(LAMURI)
ILĀMURIDESAM
KAḌĀRAM
(KEDAH)
TAMBRALINGA
PANNAI
(PANI)
(JAMBI)
MALAIYUR
ŚRĪVIJAYA
(Palembang)
(SIPORA Is)
(N. PAGI Is)
(S. PAGI Is)
BANGKA
SABAH
PUNAN
BORNEO
MADURA
BALI
LOMBOK
JAVA

அமைந்திருந்தது அராபிய நாடு. அராபிய துறைமுகங்கள் அறியாமல் எந்த ஒரு மரக்கலமும் செங்கடலில் பிரவேசிக்க முடியாமல் இயற்கையானது அராபியர்களுக்கு வசதியைச் செய்து தந்திருந்தது. சிக்கலான பயணத்தை மேற்கொள்ள விரும்பாத நாடுகள் தங்களது வணிகப் பொருட்களை அராபியர்களிடமே விற்றார்கள். அல்லது அராபியர்களைத் தரகர்களாக ஏற்று அவர்கள் மூலம் வணிகப் பொருட்களை எகிப்திற்கும் ரோமாபுரிக்கும் அனுப்ப முற்பட்டார்கள். இந்த நடைமுறையால் அராபியர்களே பயனடைந்தார்கள். அவர்களுக்கே கொழுத்த லாபம் கிடைத்தது.

அக்காலத்தில் தமிழ்நாட்டைச் சேர்ந்த வாணிகக் கப்பல்கள் மட்டுமே அராபியரின் தயவை நாடாமல் ஆப்பிரிக்க கடற்கரையை அடைந்து அங்கிருந்து தரைப் பயணத்தை மேற்கொண்டு பிறகு மத்தியதரைக்கடலில் வேறு மரக்கலங்கள் மூலம் ரோமாபுரிக்குச் சென்று வாணிபத்தை வெற்றிகரமாக நடத்தின. அவர்களது வழியைப் பின்பற்றியே ரோம நாட்டு மரக்கலங்களும் சேர நாட்டிற்கு வந்து மிளகு பொதிகளை ஏராளமாக ஏற்றிச் சென்றன. முத்துக்கள் சிதறிக் கிடந்தால் கூட பொருட்படுத்த மாட்டார்களாம். ஆனால் மிளகு சிதறிக் கிடந்தால் பொறுக்கி எடுத்துச் செல்வார்களாம். அந்த அளவிற்கு சேர நாட்டு மிளகிற்கு ரோம நாட்டில் முக்கியத்துவம் இருந்தது. சேர நாட்டு மிளகை 'யவனப் பிரியா' என்று பெயரிட்டு அழைத்தார்கள் யவனர்கள். தமிழர்களின் இந்த 'தயவை நாடாத' நிலை அராபியரை உறுத்தினாலும் இதர கிழக்கத்திய நாடுகள் அவர்களின் தயவையே நாடியதால் அராபியர் அரபுக்கடல் பகுதியில் கடல் வேந்தர்களாக நீண்ட காலமாகத் திகழ்ந்தார்கள்.

பாரத நாட்டின் கிழக்கு கடற்பகுதியான பூர்வக் கடலில் அராபியரின் தலையீடு இல்லாமல் இருந்ததால் அந்தப் பகுதியில் வாணிகம் சிறப்பாக நடந்தது. சங்க காலத்தில் தமிழர்களின் கடல் வாணிகம் மகோன்னதமான நிலையில் இருந்தது. புகாரிலிருந்தும், கொற்கையிலிருந்தும் ஏராளமான மரக்கலங்கள் முத்துக்களையும் மணிகளையும் ஏற்றிக் கொண்டு இலங்கைக்கும், ஸ்ரீவிஜயத்திற்கும், கடாரத்திற்கும், சாவகத்திற்கும், சீனத்திற்கும் சென்றன. தமிழர்களும் சென்றார்கள், தமிழர் பண்பாடும் கலைகளும்கூட சென்றன. இன்றைக்கு கிழக்குக் கடல் நாடுகள் பலவற்றில் தமிழர்கள் வாழ்கிறார்கள். அவர்கள் கொண்டு சென்ற கலைகளானது கோயில்களாகவும் சிற்பங்களாகவும் காட்சி தருகின்றது.

ஆனால் சங்க காலத்திற்குப் பின்னால் மூவேந்தர்களின் ஆட்சி முடிவுக்கு வந்தபோது தமிழர்களின் கடல் வாணிகம் வெகுவாகக் குறைந்து போயிற்று. பொதுவாகத் தமிழகத்தின் கடல் வாணிபம் நீர்த்துவிட்டிருந்தது. பல்லவர்கள் எழுச்சி பெற்று தென்னகக் கடற்கரை பகுதிகளை ஆதிக்கம் செலுத்திய காலத்திலும் கடல் வாணிகம் பெருவாரியாக நடைபெறாமல் சிறிய அளவிலேயே நடந்தது. அவர்களது காலத்தில் மாமல்ல புரம் சிறந்த துறைமுகமாகச் செயல்பட்டது. 'கலங்கள் இயங்கும் கடல்மல்லை' என்று திருமங்கையாழ்வார் சிறப்பித்துக் கூறும் அளவிற்கு அத்துறைமுகத்தில் மரக்கலங்கள் மிகுந்து காணப்பட்டாலும் என்ன காரணத்தாலோ கடல் வாணிகத்தில் சிறப்பாக ஈடுபடவில்லை. உள்நாட்டுப் போர்கள் அடிக்கடி நடந்து கொண்டிருந்ததும் இதற்குக் காரணமாக இருக்கலாம். ஆனால் இலங்கை முதல் இதர கிழக்கு கடல் நாடுகள் வாணிபத்தைப் பெருவாரியாக பூர்வக் கடல் பகுதியில் செய்து கொண்டிருந்தன.

தமிழகத்தின் இந்த மந்தப் போக்கு அராபியரிடம் பேராசையை உண்டாக்கியது. அரபுக் கடல் பகுதி போதாதென்று பூர்வக் கடலிலும் தங்கள் ஆதிக்கம் இருக்க வேண்டும் என்று நினைத்தனர். இதற்கு இடம் கொடுத்துவிடக் கூடாதென்று கருதிய பல்லவ மாமன்னர் ராஜசிம்மர் கடல் வாணிபத்திற்கு ஊக்கமளித்ததால் மயிலைத் துறைமுகத்தில் ஆரம்பித்து நாகைத் துறைமுகம் வரை கடல் மூலம் வாணிகம் விறுவிறுப்பாகத் தொடங்கியது. கிழக்கத்திய நாடுகளும் தமிழகத்துடன் வாணிகத்தில் பெருவாரியாக இறங்கின.

அராபியர்கள் பல்லவர்களின் இந்த எழுச்சியை அடியோடு விரும்பவில்லை. அந்த எழுச்சியை ஆரம்பத்திலேயே அழிக்கத் தீர்மானித்தனர். அவர்களுக்குச் சாதகமாக திபெத்தியர்களும் இணைந்தார்கள். இக்கதை நடந்த காலத்தில் திபெத்தியர்கள் பெரிய அளவிற்கு வலிமை பெற்றிருந்ததாகவும் அந்த வலிமை சீனத் தலைநகர் அதிரும்அளவிற்கு அமைந்திருந்தது என்று வரலாறு கூறுகிறது.* அப்படி வலிமை பெற்றிருந்த திபெத்துடன் இணைந்த அராபியர்கள் பூர்வக்கடலில் தங்கள் மூலமே கடல் வாணிபம் நடைபெற வேண்டும் என்று கிழக்கத்திய நாடுகளுக்கு எச்சரிக்கை விடுத்தனர். இதைப் பல்லவர்கள் சிறிதும் பொருட்

* page 117 'Kanchipuram in Early South Indian History' by T.V.Mahalingam.

படுத்தாத காரணத்தால் அராபியர்களுக்குப் பல்லவர்களே முதன்மையான எதிரிகளாயினர். தங்களது எச்சரிக்கை பயனில்லாமல் போனதால் எரிச்சலுற்ற அராபியர்கள் தங்களது போக்கை மாற்றிக் கொண்டு வங்கக் கடலில் வரும் வாணிகக் கப்பல்களை மறித்து சூறையாடத் தொடங்கினார்கள். தமிழகத்திலிருந்து சென்ற மரக்கலங்களும் தமிழகத்திற்கு வந்த மரக்கலங்களும் அராபிய கொள்ளையர்களால் அடிக்கடி சூறையாடப் பட்டதாலும் அராபியரின் மரக்கலங்களின் எண்ணிக்கை மிக அதிகமாக இருந்ததாலும் இலங்கை, ஸ்ரீவிஜயம், சாவகம், காழகம் போன்ற நாடுகள் அவர்களை எதிர்க்க முடியாமல் திணறின. சீன நாட்டவரும் அஞ்சினார்கள். முழுமையான அழிவை விட கால்பகுதி அழிவு பரவாயில்லை என்ற முடிவிற்கு அந்நாடுகள் வந்தன. முழுவதுமாக தங்களது வாணிகப் பொருட்களை அராபிய கொள்ளையரிடம் இழப்பதைவிட அவர்களது ஆதிக்கத்திற்குக் கட்டுப்பட்டால் அவர்கள் மூலமே வாணிபத்தைச் செய்வதுதான் உகந்தது என்று கருதி அராபியர்களை தங்களது கடல் வாணிபத்திற்கு இடைத்தரகர்களாக இருக்கச் சம்மதித்தார்கள். பல்லவர்கள் மட்டும் தங்களது வாணிகக் கப்பலுடன் போர்க் கப்பல்களை பாதுகாப்பாக அனுப்பி பிற நாடுகளுடன் கடல் வாணிகத்தை நேரடியாகவே செய்து வந்தார்கள். அராபியர்களைப் பொருட்படுத்தவே இல்லை.

இக்கதை நடந்த காலத்திற்கு நூறு ஆண்டுகளுக்கு முன்னால் அதாவது கி.பி.574-இல் அரபு நாட்டில் இருந்த மெக்காவில் அவதரித்தார் நபிகள் நாயகம். தொடக்கத்தில் வாணிபத்தில் ஈடுபட்டிருந்த அவர்தான் ஓர் இறைதூதர் என்பதை உணர்ந்ததும் அராபியர்களை நல்வழிப்படுத்த இஸ்லாமிய மதத்தைத் துவக்கினார். இறை உணர்வுதான் மக்களை மேம்படுத்தும் என்று நம்பினார். அராபிய நாட்டை தன் வசப்படுத்தவும் செய்தார். ஆனால் ஆரம்ப கட்டத்தில் யூத மதத்து கோட்பாடுகளில் ஊறிப் போயிருந்த பெரும்பாலான அராபியர்கள் அவரையோ அவரது போதனைகளோ ஏற்கவில்லை. ஆதரிக்கவில்லை. முரட்டுத் தனத்தையே குணமாகக் கொண்ட அவர்கள் 'காட்டு அரபிகள்' என்று அழைக்கப் பட்டார்கள்.* இக்காட்டு அராபியர்களே கடல் கொள்ளைகளில் ஈடுபட்டார்கள். ஒருபுறம் கொள்ளைகளில் ஈடுபட்ட அவர்கள் மறுபுறம் பல்வேறு நாடுகளின் கடல் வாணிகத்தில் இடைத்தரகர்களாகச் செயல்பட்டனர். எங்கெங்கே

* பக்கம் 3 'இஸ்லாமிய மதம்' – பா.ராகவன்

எது சாதகமாக இருந்ததோ அதை நடைமுறையாக்கிய அவர்கள் அவற்றாலெல்லாம் பெரும் செல்வத்தை ஈட்டி வந்தார்கள்.

இக்கதை நடந்த சில நூற்றாண்டுகளுக்குப் பிறகு பல்லவர் ஆதிக்கம் முடிவடைந்து சோழர்கள் எழுச்சி பெற்றனர். அச்சோழ வம்சத்தில் வந்த மாமன்னன் ராஜராஜ சோழன் தனது ஆட்சி காலத்தில் பல விஷயங்களிலும் புதுமைகளைக் கொண்டு வந்தான். அவற்றில் கடல் வாணிகமும் ஒன்று. கடல் வாணிபம் சீராக நடந்தால்தான் நாடு வளமாக இருக்க முடியும் என்று உணர்ந்த அவன் பல்வேறு வணிகக் குழுக்களை அமைத்தான். அக்குழுவில் வணிகர்கள், உள்நாட்டு பிரமுகர்கள், வணிக வீரர்கள், வணிகர்களைக் காக்கும் வீரர்கள், அயல்நாட்டு வணிகர்கள் என்று பல தரப்பினரும் இருந்தார்கள். கடல் வாணிபத்திற்கென்று விதிமுறைகளும் வழிமுறைகளும் வகுக்கப்பட்டன.* வணிகக் கப்பல்களுக்கு பாதுகாப்பும் தரப் பட்டதால் கடல் வாணிபம் சீரும் சிறப்புமாக நடைபெற்றது. அப்போது உயர்வு பெற்ற கடல் வாணிபம் இன்று வரை தொய்வின்றி இருந்து வருகிறது.

ஆனால் பல்லவர் காலத்தில் இத்தகைய பெரிய வணிகக் குழுக்களோ அவற்றுக்கு ஈடான அமைப்புகளோ இல்லை. சிறுசிறு குழுக்கள் இருந்தன. அவை எந்தவிதத்திலும் கடல் வணிகத்திற்குத் துணை செய்யவில்லை. ஆகவே இந்தக் குறைபாடுகளும் பூர்வக் கடலில் அராபியரின் ஆதிக்கத்திற்கு வழிவகுத்தன.

பல்லவ நாட்டைத் தவிர இதர கிழக்கு கடற்கரை நாடுகள் தங்களது ஆதிக்கத்தை ஏற்றுக் கொண்டதால் அராபியர்கள் தங்களது இடைத்தரகர் தொழிலை சிறப்பாகச் செய்வதற்கு பூர்வக் கடலில் சரியான தளத்தைத் தேடினர். தரை வழி பயணத்திற்கு சாலைகள் அமைக்கப்பட்டிருப்பது போல் கடல் பயணத்திற்கும் வழிகள் வரையறுக்கப்பட்டிருந்தன. அனைத்து வாணிக மரக்கலங்களுமே அந்தக் கடல் வழியிலேயே திசைகாட்டும் கருவியின் உதவியோடு பயணம் செய்தன. மேற்கத்திய நாடுகள், இலங்கை, பாரத நாடு ஆகியவற்றிலிருந்து வந்த மரக்கலங்கள் ஸ்ரீ விஜயம், சாவகம், கடாரம், சீனம் ஆகிய நாடுகளுக்குச் செல்வதென்றால் மாநக்காவரம் தீவுகள்* மற்றும் இலாமுரி தேசம்* ஆகிய இரு நிலப்

* பக்கம் 200 'கடல்வழி வாணிபம்' - நரசய்யா
* இவை தற்போது அந்தமான் நிக்கோபார் தீவுகள் என்று அழைக்கப்படுகிறது.
* இது தற்போதுள்ள சுமத்ரா தீவின் வடக்கு முனையாகும்.

பகுதிகளுக்கு இடையே தான் செல்லும்படி கடல்வழி அமைந்திருந்தது.

கோயில் வாசலுக்கு இருபுறங்களில் இருக்கும் துவார பாலர்களைப் போல மாநக்காவரம் ஒருபுறமும் இலாமுரி தேசம் மறுபுறமும் இருந்ததால் இவ்விரண்டிற்கும் இடைப்பட்ட கடல்வழியானது கடல் வாயில் என்று அழைக்கப்பட்டது. இவ்விரண்டில் எதை தங்கள் தளமாக அமைப்பது என்று யோசித்தனர் அராபியர். இலாமுரி தேசம் என்ற 'லாமுரி' ஸ்ரீவிஜய நாட்டை அடக்கிய சொர்ணத் தீவின் வடக்கு முனையாக இருந்தது. அங்கே தளம் அமைப்பது உகந்தது அல்ல என்று கருதிய அராபியர்கள் மாநக்காவரத் தீவுகளையே தேர்ந்தெடுத்தார்கள்.

அத்தீவுகள் எந்த நாட்டின் கட்டுப்பாட்டிலும் இல்லை. அதோடு அங்கே இருந்தவர்கள் காட்டுமிராண்டிகளாகவும் மனித இறைச்சியை உண்பவர்களாகவும் இருந்ததால் அத்தீவுகளின் பக்கமாக எந்த மரக்கலங்களும் செல்வதில்லை. அதையும் அராபியர்கள் தங்களுக்குச் சாதகமாக மாற்றிக் கொண்டார்கள். நூற்றுக்கணக்கான மரக்கலங்களில் சென்று இறங்கிய அவர்கள் அங்கிருந்த நிர்வாண காட்டுமிராண்டிகளை இரக்கமில்லாமல் கொன்றார்கள். பலரை மிரட்டி அடிமைகளாக்கினார்கள். காட்டுப் பெண்களைப் பாலியல் அடிமைகளாகப் பயன்படுத்திக் கொண்டு அத்தீவின் அடையாளத்தையே மாற்றினார்கள். காடுகள் அடர்ந்த அத்தீவுகள் இயற்கையான துறைமுகங்களாக இருந்ததையும் கண்டார்கள். பூர்வக் கடலில் பயணிக்கும் அனைத்து வணிகக் கப்பல்களும் அங்கே வந்து செல்ல வேண்டுமென்ற நிபந்தனை விதிக்கப்பட்டது. வணிகப் பொருட்களை இதர நாடுகளுக்கு விற்பதற்கு இடைத்தரகர்களாக இருந்து அதற்கான ஊதியத்தைப் பெற்றார்கள். சில நாடுகள் பொருட்களை அவர்களிடமே விற்றதால் அராபியர்கள் அவற்றை வாங்கித் தேவையான இதர நாடுகளுக்குத் தங்கள் மரக்கலங்கள் மூலமாக அனுப்பி வந்தார்கள். இப்படி தாங்கள் விரும்பியபடி அரபுக்கடல் வணிகம் மட்டுமின்றி பூர்வக் கடலின் வணிகமும் தங்கள் கட்டுப்பாட்டில் வந்துவிட்டதால் அராபியரும் திபெத்தியினரும் பெரும் திருப்தியடைந்தார்கள். பூர்வக் கடலுக்குத் 'திபத்திய கடல்' என்று பெயர் சூட்டி கூத்தடிக்கும் அளவிற்கு அவர்களது கடலாதிக்கம் எழுச்சி பெற்றது.

இந்த ஆதிக்கத்தைச் சகித்துக் கொள்ள முடியாமல் சீன நாடு தவித்தது. காழகம், கடாரம், ஸ்ரீவிஜயம், காம்போஜம், சாவகம்,

போர்ஜினியா என்னும் புஷ்பகத் தீவு இவை யாவும் அராபியருக்கு அடங்கியிருந்தன. பாரத நாட்டில் பல்வேறு அரசுகள் இருந்தாலும் தென்னாட்டில் இருந்த பல்லவ அரசு சீன நாட்டைப் பெரிதும் கவர்ந்தது.* பல்லவ அரசையே வலிமை வாய்ந்த அரசாக அங்கீகரித்து நட்பு பாராட்டியும் அராபியரின் கடலாதிக்கத்தை உடைக்கக் கோரியும் பல்லவ நாட்டிற்குத் தூதுவர்களை அனுப்பியது.

சீனாவிலிருந்து நரசிம்மவர்மர் காலத்தில் வந்த யுவான்சுவாங் வெறும் பயணியாக மட்டுமே வந்தார். ஆனால் ராஜசிம்மரின் ஆட்சி காலத்தில் சீன அரசின் தூதுவர்கள் வந்தார்கள். அவர்களது வழிபாட்டிற்கும் நட்பிற்கும் அடையாளமாக நாகைப்பட்டிணத்தில் பௌத்த விஹாரம் ஒன்றைக் கட்டித் தந்த ராஜசிம்மர் சீன நாட்டிலும் ஒரு கோயிலைக் கட்டித்தர சம்மதித்தார். அதோடு பூர்வக் கடலில் அராபியர்களின் ஆதிக்கத்தை உடைக்கவும் உறுதி பூண்டார்.

☆

பல்லவர்களிடமிருந்து எந்தவிதமான எதிர்ப்பும் தாக்குதலும் வராத நிலையிலும் இலங்கை முதல் சீன நாடு வரையிலான கிழக்கு கடல் நாடுகள் தங்கள் ஆதிக்கத்தை ஏற்றுக் கொண்ட நிலையிலும் பூர்வக் கடலானது அராபியரின் கடல் கோட்டையாகிவிட்ட நிலையிலும் பரம திருப்திக்கு ஆளான அராபியர் உபதலைவனான சுலைமான் தனது மரக்கல அறையில் சுகபோகத்தில் ஆழ்ந்து கிடந்தான். மாநக்காவரத்திற்கு அருகில் அவனது மரக்கலமும் இதர நான்கு மரக்கலங்களும் கடலில் மிதந்த விதமானது மரக்கலங்கள் கூட அராபியரைப் போலவே ஆனந்தத்தில் மிதப்பது போல் தோன்றியது. பூர்வக் கடலும் அரபுக் கடலும் தங்கள் வசம் வந்துவிட்டதால் உலகமே தங்களிடம் வசப்பட்டுவிட்டதாக எண்ணிக் கொண்ட சுலைமான் தற்போது தன் வசத்தில் இருந்த கறுப்பு அழகிகளை நாசப்படுத்திக் கொண்டிருந்தான். அந்த அழகிகள் அனைவருமே மாநக்காவரத்தைச் சேர்ந்தவர்கள். அங்கே வாழ்ந்த காலத்தில் ஆடைகளை அணியாமல் பிறந்த மேனியாகத் திரிந்தார்கள். அதுவே அவர்களுக்கு இயல்பாகவும் இசைவாகவும் இருந்தது. ஆனால் மரக்கலத்திற்குக் கொண்டு வந்தபோது அவர்களுக்கு ஆடைகளை வழங்கியிருந்தான் சுலைமான். அவர்களுக்கோ ஆடைகளே அருவருப்பாய் இருந்தன. 'எதற்கு

* பக்கம் 222 'சோழர் வரலாறு' – மா.ராசமாணிக்கனார்.

இந்தப் பீடைகள்?' என்று வெறுத்த அவர்கள் எப்போது அவற்றைக் கழற்றி எறிவோம் என்று துடித்துக் கொண்டிருந்தார்கள்.

சுலைமானைச் சுற்றித் தவழ்ந்த அவர்கள் அவனிடமே 'இதெல்லாம் எதற்கு?' என்று கேட்கவும் செய்தார்கள்.

''அப்படியா? அகற்றிவிட்டால் போகிறது?'' என்று சொன்ன சுலைமான் ஆடைகளை அகற்ற முற்பட்டான்.

அப்போது அவனது அறைக்கதவு தட்டப்பட்டது.

மகா வெறுப்படைந்த சுலைமான் அழகிகளை உதறித் தள்ளிவிட்டு கதவைத் திறந்தான்.

வெளியே நின்றிருந்த மாலுமி ஒருவன் ''ஐயா, நமது தளத்திற்கு வராமல் இரண்டு மரக்கலங்கள் சென்று கொண்டிருக்கின்றன'' என்றான் பதட்டத்துடன்.

☆☆☆



62

அல்-அமீன்

மாலுமி அவ்வாறு சொன்னதும் ''முட்டாள்! இதை என்னிடம் வந்து சொல்லி எதற்காக நேரத்தை வீணாக்குகிறாய்? நமது மரக்கலங்களைக் கொண்டு அந்த இரண்டு மரக் கலங்களைப் பிடிக்க வேண்டியதுதானே?'' என்று எரிந்து விழுந்த சுலைமான் ''அவை எந்த நாட்டுக் கப்பல்கள்?'' என்று கேட்டான்.

''தெரியவில்லை. மரக்கலத்தில் எந்தக் கொடியையும் காணோம்'' என்றான் மாலுமி.

''அதனால் என்ன? பிடியுங்கள்'' என்றான் சுலைமான்.

அதையடுத்து சுலைமான் இருந்த மரக்கலமும் மற்றும் நான்கு மரக்கலமுமாகச் சேர்ந்து மாநக்காவர தளத்திற்கு வராமல் சென்ற இரண்டு மரக்கலங்களை நோக்கிச் சீறிப் பாய்ந்தன. அதைக்கண்ட அந்த இரு மரக்கலங்களும் தப்புவதற்காக தங்கள் வேகத்தைக் கூட்டின. ஆனால் ஆதி காலத்திலிருந்தே அராபியர் மரக்கலங்கள் எடை குறைவாகவும் வேகம் அதிகமாயும் இருந்தபடியால் ஒரு நாழிகை நேரத்திற்குள் அவை அந்த இரண்டு மரக்கலங்களைச் சுற்றி வளைத்தன. இரும்பு கொக்கிகளைக் கொண்ட சங்கிலிகளை அவற்றின் மீது வீசி இழுத்தன. இதனால் அவ்விரண்டு மரக்கலங்களும் முன்னேற முடியாமல் வலையில் சிக்கிய மீன்களைப் போலத் தத்தளித்தன.

அதேசமயம் அராபியர்கள் பெரும் கூச்சலிட்டபடி தங்கள் மரக்கலங்களிலிருந்து அந்த இரண்டு மரக்கலங்களுக்குத் தாவினார்கள். அங்கே கண்ணில் பட்ட மாலுமிகளை வெட்டி வீழ்த்தினர். சாவு எண்ணிக்கை அதிகரிப்பதற்குள் அந்த இரண்டு மரக்கலத்தின் தலைவன் சுலைமானிடம் சரணடைந்ததால் அராபியர் தாக்குதலை நிறுத்தினார்கள்.

''இக்கப்பல்கள் எந்த நாட்டைச் சேர்ந்தது?'' என்று கேட்டான் சுலைமான்.

''இவை லட்சத் தீபத்து மரக்கலங்கள்'' என்றான் தலைவன்.

''உனக்கு பூர்வக்கடலில் நாங்கள் வைத்துள்ள சட்ட திட்டங்கள் எப்படி தெரியாமல் போயிற்று?'' என்று கேட்டான் சுலைமான்.

''ஐயா, நாங்கள் இப்போதுதான் முதல்முறையாக இக்கடலுக்கு வருகிறோம். எங்களுக்கு கடல்வழியும் தெரியாது. உங்கள் சட்டதிட்டங்களைப் பற்றியும் தெரியாது. ஆகவே தான் நாங்கள் மாநக்காவரத்திற்கு வராமல் சென்றோம்'' என்றான் மாலுமி.

அவன் கூறுவதையெல்லாம் சுலைமான் பொருட்படுத்த வில்லை.

''கப்பலில் என்ன சரக்கு இருக்கிறது?'' என்று கேட்டான்.

''ஒன்றுமில்லை ஐயா.''

''வெற்றுக் கப்பல்களையா லட்ச தீபத்திலிருந்து ஓட்டி வருகிறாய்?'' என்று சொல்லி மரக்கலத் தலைவனைத் தள்ளிவிட்டு கப்பலில் இறங்கிப் பார்த்தான் சுலைமான். அவனது கண்கள் பளபளத்தன.

''வாரே வா'' என்று சந்தோஷத்துடன் சொல்லிக் கொண்ட சுலைமான் கப்பலின் அடித்தளத்தில் மறைத்து வைக்கப் பட்டிருந்த சரக்கைக் கண்டு மரக்கலத் தலைவனிடம், ''இதெல்லாம் என்ன? சரக்கில்லையா?'' என்று கேட்டுவிட்டு, ''எங்கே கொண்டு செல்கிறாய் இந்தச் சரக்கை?'' என்று கேட்டான்.

''புஷ்பகத் தீவின் மகாராஜாவுக்கு ஐயா.''

''ஒரு சரக்கிற்கு எவ்வளவு கிடைக்கும்?''

''ஆயிரம் பொற்காசு தருவதாக தகவல் வந்திருக்கிறது.''

''மொத்தம் எத்தனை சரக்கு இருக்கிறது?''

''நூறு.''

''அப்படியானால் மொத்தம் ஒரு லட்சம் பொன் உனக்குக் கிடைக்கும். இல்லையா?''

''கணக்குப்படி சரிதான்.''

''நீ எங்கள் வரைமுறைகளை மீறி கப்பல்களை மாநக்காவரத்திற்கு கொண்டு வராமல் உன் இஷ்டப்படி இயக்கிச் சென்றதால் உன் கப்பலில் இருக்கும் சரக்குகள் பறிமுதல் செய்யப்படுகின்றன.''

''ஐயா, அநியாயம். அக்கிரமம். உங்களுக்குத் தேவையானால் ஒன்றிரண்டு சரக்குகளை எடுத்துக் கொள்ளுங்கள். அதிகபட்சமாக பத்தை வேண்டுமானாலும் எடுத்துக் கொள்ளுங்கள். என் வயிற்றில் அடிக்காதீர்கள்.''

''மடையனே! இந்த பேரங்களை எல்லாம் நீ கப்பல்களை முறைப்படி மாநக்காவரத்திற்கு கொண்டு வந்து பேசியிருக்க வேண்டும். நீயோ எங்களை ஏமாற்ற முயன்றாய். அதற்கு தண்டனையைத் தவிர வேறு நடைமுறை இல்லை. வாயை மூடிக் கொள். திறக்க முற்பட்டால் உதடுகளை தைத்து விடுவோம்'' என்று சொன்ன சுலைமான் அந்த இரண்டு மரக்கலங்களையும் தனது மாலுமிகள் மூலம் மாநக்கா வரத்திற்குக் கொண்டு சென்றான்.

சரக்குகளை பத்திரமாக இறக்கி உரிய பாதுகாப்புடன் கரைக்கு அனுப்பினான்.

தனது பணியாளர்களை அழைத்து ''இந்த மரக்கலத் தலைவனையும் அவனோடு மிஞ்சியிருக்கும் மாலுமிகளையும் தேன் கூட்டு காட்டிற்குக் கொண்டு போய் மரக்கம்பத்தில் கட்டுங்கள். தேனீக்கள் இவர்களை ஐந்து நாட்களுக்குக் கடிக்கட்டும். அதற்குப் பிறகும் இவர்கள் உயிரோடு இருந்தால் முதலைத் தீவில் கொண்டு போய் போடுங்கள். அங்கிருக்கும் முதலைகள் உண்ணட்டும்'' என்று கட்டளையிட்டுவிட்டு சரக்குகளை பார்வையிடச் சென்றான் சுலைமான்.

மரக்கலத்தலைவனும் அவனது சகாக்களும் கதறியதை யாரும் கண்டு கொள்ளவில்லை.

தனது சகாக்களுடன் புதிய சரக்குகளை பார்வையிட புறப்பட்டான் சுலைமான்.

கடற்கரையில் இருந்த விஸ்தாரமான கட்டிடத்தில் இருந்த சரக்குகளைக் கண்டதும் தனது தாடியை தடவிவிட்டுக் கொண்ட சுலைமான் ''சரக்கு வெள்ளை வெளீரென்று வழுவழுப்பாக இருக்கிறது. ரோமாபுரி சரக்காக இருக்கும் என்று நினைக்கிறேன்'' என்றான் சந்தோஷத்துடன்.

''என்னதான் இருந்தாலும் பாரத நாட்டுச் சரக்கு வழி வராது. அழகுக்கு அழகு. கொழுகொழு மொழுமொழு ஆகா! அதைப் பார்த்தவர்கள் வேறு எதைப் பார்ப்பார்கள்?'' என்றான் ஒருவன்.

''பாரத நாட்டை நாம் சூறையாடும் காலம் வரும். அப்போது ஒரு பெண்ணையும் விடப்போவதில்லை. இப்போது ரோமாபுரியின் வெண்புறாக்களைப் பார்ப்போம்.''

''இப்புறாக்களை என்ன செய்வதாக உத்தேசம்?''

''மரக்கலத்தலைவன் சொன்ன விலையைக் கேட்டாய் அல்லவா? ஒருத்தி ஆயிரம் பொன்னாம். நாம் ஆயிரத்து ஐந்நூறு கேட்போம்.''

''அப்படியானால் இந்த அழகிகளை புஷ்பகத் தீவுக்கு அனுப்பிவிடப் போகிறீர்களா?''

''ஆமாம். ஆனால் இப்போது அல்ல. நாம் கொஞ்சம் சுவைப்போம். பிறகு அனுப்புவோம். இவர்களுக்கு உணவு மற்றும் இதர சௌகரியங்களைச் செய்து கொடுங்கள். தெம்பு வரப் பெற்றதும் எல்லோரையும் சகல விதங்களிலும் சோதனை செய்துவிட்டு ஒவ்வொருவராக எனது அறைக்கு அனுப்புங்கள். தேவையானவற்றை நான் தேர்ந்தெடுத்துக் கொள்கிறேன்.''

அவ்வாறே இரண்டாம் நாள் சுலைமான் இருந்த அறைக்கு ஒவ்வொரு அழகியாக அனுப்பப்பட்டார்கள். உள்ளே நுழையும் போது ஆடையுடன் வந்த அழகிகள் சுலைமானுக்கு முன்னால் வந்ததும் அவற்றை நீக்கிவிட்டு நின்றார்கள். சுலைமான் தனது சின்னஞ் சிறு கண்களை விரித்து அவர்களது அங்க லாவண்யங்களை ஆராய்ந்தான். முடிவில் பத்து அழகிகளை தனக்கென்று தேர்ந்தெடுத்துக் கொண்டு மீதியிருந்த தொண்ணூறு பேரை தனது சகாக்களிடம் அனுப்பி ''இரண்டு நாட்கள் தான் அனுமதி. அதற்குள் யார் யார் எப்படியெல்லாம் பயன்படுத்திக் கொள்கிறீர்களோ அப்படியெல்லாம் பயன்படுத்திக் கொள்ளுங்கள். மூன்றாவது நாள் தொண்ணூறு அழகிகளும் புஷ்பகத் தீவுக்குப் பயணமாக வேண்டும்'' என்றான் சுலைமான்.

சகாக்கள் அந்த இரண்டு நாட்களில் சுறாக்களைப் போல் செயல்பட்டு அழகிகளை குழைத்தெடுத்தார்களென்றால் சுலைமானோ தனக்குக் கிடைத்த பத்து அழகிகளிடம் சூறாவளியைப் போல் செயல்பட்டான். பிரம்மாண்ட உருவம் கொண்ட அவன் செயல்பட்ட விதத்தைக் கண்டு அழகிகள் அயர்ந்தார்கள். ஆடிப்போனார்கள். ரோமில் இருந்தபோது பயிற்சியாளர்களால் பாலியல் பயிற்சியையும் பக்குவத்தையும் பெற்றவர்கள்தான் அவர்கள். பயிற்சி காலத்திலும் பயிற்சி முடிந்த பின்பும் ஆண் சுகத்தை அவர்கள் அனுபவித்தவர்கள்தான். ஆனால் அந்த அனுபவமெல்லாம் வெறும் தூசு தான் என்று உணர்கிற அளவிற்கு சுலைமானின் செயல்பாடு பயங்கரமாக இருந்தது. மாமிச மலையைப்போல் அவன் காணப்பட்டாலும் மன்மத லீலைகளில் அழகிகள் மலைக்கும் படி நடந்து கொண்டான்.

அழகிகளுக்குத் தங்கள் அங்கங்களுக்கு இப்படியெல்லாம்கூட வித்தியாசமான ஆனந்தங்கள் கிடைக்குமா என்று எண்ணி வியக்கிற மாதிரி அவர்களுக்கு புதுபுது காமரசங்களை ஊட்டினான் சுலைமான். அவனைப் பொறுத்த வரை எந்தக் கவலையும் இல்லை. அராபியர்கள் நினைத்ததைச் சாதித்துவிட்டதால் சாதிப்பதற்கு இனி ஒன்றும் இல்லை என்ற நிலையில் அழகிகளிடம் பூரணமாக இழைந்தான். அழகிகளுக்கு வேறுவிதமான புதிய வாழ்க்கைக்கு வாய்ப்பு இல்லாததால் சுலைமானைப் போன்ற ஒரு காமச்சுளைமான் வேறு கிடைக்க மாட்டான் என்பதால் அவனிடம் தங்களை பூராவாக ஒப்படைத்துக் கொண்டு அந்தப் பூரண சரணாகதியில் ஆனந்தத்தைக் கண்டார்கள். சுலைமான் அனைவரையும் இரண்டு நாட்களில் சக்கையாக்கினான்.

மூன்றாம் நாள் தொண்ணூறு அழகிகள் தனி மரக்கலம் மூலம் புஷ்பகத் தீவுக்கு அனுப்பி வைக்கப்பட்டார்கள். அராபியர்கள் பூர்வக் கடலை ஆக்கிரமித்து ஆதிக்கம் செய்யத் தொடங்கியபின் இடைத் தரகத் தொழிலை மட்டும் செய்யவில்லை. சுயமாகவும் வியாபாரம் செய்தார்கள். அதில் பல நாடுகளிலிருந்து பெண்களைக் கவர்ந்தோ அல்லது பொன்னுக்கு வாங்கியோ இதர நாடுகளுக்கு அனுப்பி நல்ல தொகையைப் பெற்று வந்தார்கள். சில சமயங்களில் கொள்ளைக் காரர்களாகவே மாறி சிதறிக் கிடந்த தீவுப் பகுதிகளில் கரையில் இறங்கி ஊரைத் தாக்கிச் சூறையாடினார்கள். எதிர்ப்பு அதிகமிருந்த இடங்களைத் தீயிட்டுக் கொளுத்தினார்கள். கைக்கு கிடைத்தவர்களைப் பிடித்து காலில் விலங்கிட்டு தங்கள் கடல்தளமான மாநக்காவரத்தில் அடிமைகளாக்கி ஊழியம் செய்ய வைத்தார்கள்.

இப்படிப் பல வழிகளிலும் உயர்வு பெற்றதால் சுலைமான் தன்னை பெரும் அதிர்ஷ்டக்காரனாகவே கருதி தனிச்சையாகவே பல காரியங்களைச் செய்து வந்தான். மாநக்காவரத்தின் பிரதான தீவான மோகினித் தீவில் இருக்கும் அராபியர் தலைவன் தாவூத்தின் கட்டளைகள் இல்லாமலே கூட பல காரியங்களைச் செய்து சுய லாபம் ஈட்டியும் வந்தான் சுலைமான்.

அழகிகளை ஏற்றி வந்த மரக்கலங்களைக் கைப்பற்றியச் சம்பவத்திற்குப் பிறகு பத்து நாட்கள் கழித்து சுலைமானின் மரக்கலமும் அதனுடன் இணைந்து நான்கு மரக்கலங்களும் மாநக்காவர கடல் பகுதியில் மிதந்து கொண்டிருந்தன. நிலத்தில் இருந்தாலும் சரி நீரில் இருந்தாலும் சரி தனது நிரந்தர சகவாசம்

சுகவாசம் தரும் சல்லாப மங்கையர்தான் என்று நடைமுறையை அமைத்துக் கொண்ட சுலைமான் தற்போதும் அந்த நடைமுறையைத்தான் மேற்கொண்டிருந்தான். ஆனால் கறுப்பழகிகள்தான் ஊடலில் இருந்தார்கள்.

ஆடைகளைப் பற்றிக் கூட கவலைப்படாத இக்கறுப் பழகிகளுக்கு ஊடல் ஒரு கேடா என்று கேட்டுக் கொண்ட சுலைமான் ''என்ன ஆயிற்று உங்களுக்கெல்லாம்?'' என்று கேட்டான்.

''உங்களுக்குத்தான் வெள்ளை அழகிகள் வந்து விட்டார்களே நாங்கள் எதற்கு?'' என்று கேட்டாள் ஒருத்தி.

''இதையெல்லாம் கேட்க உங்களுக்கு உரிமை இருக்கிறதா நாய்களே?'' என்று உள்ளூர கேட்டுக் கொண்ட சுலைமான் லேசாக சிரித்துவிட்டு தன் தாடியைத் தடவியபடி ''இதற்கா கோபம்? மேகங்கள் கூட வெள்ளையானதுதான்? ஆனால் அவை வரும். போகும். ஆனால் வானம் நிலையானது அல்லவா?'' என்று கூறினான்.

அறிவார்ந்த பேச்சுக்களுக்கு அதிகமாகப் பரிச்சயமில்லாத அக்கறுப்பழகிகளுக்கு அவன் கூறியது புரியவில்லை. ''என்ன சொல்கிறீர்கள்?'' என்று கேட்டார்கள்.

''இதில் புரியாமல் போவதற்கு என்ன இருக்கிறது? வெள்ளை அழகிகள் மேகங்களைப் போன்றவர்கள். தற்காலிக மானவர்கள். கறுப்பழகிகளான நீங்கள் வானத்தைப் போன்றவர்கள். நிரந்தரமானவர்கள்.''

''அப்படியா?'' என்று மகிழ்ச்சி பொங்கக் கேட்ட ஒருத்தி ஆடையைத் தூக்கி எறிந்துவிட்டு அவனைக் கட்டிக் கொண்டு அழுந்தினாள்.

அவன் அவளை அணைத்தபடி ''கறுப்புதான் எனக்குப் பிடித்த நிறம்'' என்றான்.

''அப்படியா?'' என்று மேலும் இருவர் அவன் மீது வந்து விழுந்தார்கள்.

''வெள்ளை நிறம் வெள்ளையாகவே இருக்காது. கறை படியும். கறுப்புக்கு ஏது கறை?'' என்றான் சுலைமான்.

அனைத்து கறுப்பழகிகளும் அவனது உறுப்பானார்கள்.

அதனால் அவனது உறவு இனித்தது.

கறுப்பழகிகளை யாரும் தட்டிக் கொடுத்து நெருங்குவ தில்லை. சாட்டையடிகளால் நெருங்கி வரச் செய்வார்கள்.

அந்த முறை தான் சுலைமான் முதலாக அனைத்து அராபியருக்கும் பிடித்திருந்தது.

இருந்தாலும் அவர்களிடம் சில சமயங்களில் வாயை கிளறி வேடிக்கை விளையாட்டுகளையும் அவன் செய்து வந்தான்.

அந்தப் போக்கு நல்ல விளைவுகளையே தர ஆரம்பித்ததால் சாட்டையை போட்டுவிட்டு சேட்டைகளை செய்து வந்தான்.

அந்த வகையில் தற்போதும் நடந்து கொண்டு கொழுத்துக் கிடந்த மான்களைப் போலிருந்த அழகிகளை வெறிகொண்டச் சிங்கம் பட்சிப்பது போல் தனது இச்சைகளுக்கு பலியாக்கிக் கொண்டிருந்தான்.

பகல் பொழுது இப்படியாகக் கழிந்து கொண்டிருந்ததை கவனித்த மாலுமிகள் அலுப்புற்றார்கள்.

''இவர்களுக்கு வேறு வேலையே இல்லையா?'' என்றார்கள் சிலர்.

''தலைவர்களுக்கு இதுதான் வேலை'' என்றார்கள் சிலர்.

''அதற்கென்று இரவு இருக்கும்போது பகலில் என்ன வேண்டிக் கிடக்கிறது?'' என்று கேட்டார்கள் சிலர்.

''தலைவர்களுக்கு வாய்ப்புகள் தான் முக்கியமே தவிர பகல் இரவு வித்தியாசங்கள் இல்லை'' என்றார்கள் சிலர்.

அப்போது மாலுமி ஒருவன் ''அதோ பாருங்கள். மரக்கலம் ஒன்று தெரிகிறது'' என்றான்.

''நம்மை நோக்கித்தான் வருகிறது'' என்றான் மற்றொரு மாலுமி.

''மரக்கலத்தில் பறக்கும் கொடியை கவனியுங்கள். அது நமது கொடி..''

''ஆமாம். பிறையும் நட்சத்திரமும் கொண்ட அராபியர் கொடி..''

''ஆனால் இக்கொடியை நாம் நம் மரக்கலங்களில் பறக்க விடுவதில்லையே! இந்த மரக்கலத்தில் எப்படிப் பறக்கிறது?''

''நீ போய் தலைவர் சுலைமானைக் கூப்பிடு.''

''அவர் இப்போது எந்த நிலையில் இருப்பாரோ?''

''எப்போதும் ஒரே நிலைதான். கதவைத் தட்டு. கூப்பிடு.''

சில நிமிடங்களில் தன் அறையை விட்டு வெளியேறி தளத்திற்கு வந்த சுலைமான் எதிரே வந்து கொண்டிருந்த மரக்கலத்தையும் அராபியர் கொடியையும் கண்டான்.

இரவுப் போர்வை மெல்ல மெல்ல வானத்தில் விரிந்து கொண்டிருந்தது.

''தலைவரே, இந்த மரக்கலம் அராபியர் மரக்கலமல்ல'' என்றான் மாலுமி.

''உளறாதே. நமது புனித அடையாளம் எதிரிகளிடம் எப்படி வரும்? முதலில் வணங்கு அதை'' என்றான்.

மாலுமிகள் அவ்வாறே செய்தார்கள்.

''அந்த மரக்கலத்திற்கு இப்பால் இரண்டு அப்பால் இரண்டு என்று சூழ்ந்து கொள்ளுங்கள். விசாரிப்போம்'' என்றான் சுலைமான்.

நான்கு மரக்கலங்கள் நகர்ந்து எதிரே வந்த மரக்கலத்தின் இருபுறத்திலும் சென்று வளைத்தன.

அப்போது திடீரென எதிர்பாராதது நடந்தது.

நான்கு மரக்கலங்களுக்குள் இருந்த மரக்கலத்திலிருந்து திடீரென இருபுறமும் ஈட்டிகளும் தீவாளிகளும் வீசப்பட்டன. பாய் மரங்கள் மீதும் தீவாளிகள் வீசப்பட்டதால் பாய்கள் பற்றி எரிந்தன. அதோடு அந்த மரக்கலம் நிலையாக நிற்கவில்லை. சுக்கான் சுழற்றப்பட்டுச் சுழன்றது. தீவாளிகளையும் பந்தங்களையும் வீசியது. எதிர்பாராத தாக்குதலால் நான்கு மரக்கலங்களும் தீப்பிடித்துக் கொண்டதைக் கண்ட சுலைமான் ஏதோ கூறமுற்பட்டபோது அவனது மரக்கலத்தில் ஏதோ ஒன்று வந்து விழுந்து வெடித்தது. அப்போதுதான் அது ஒரு வாணம் என்பதை உணர்ந்தான் சுலைமான். அந்த வாணம் வெடித்துச் சிதறி தீயை உண்டாக்கி விட்டதால் சுலைமானின் மரக்கலமும் பற்றிக் கொண்டது. அதோடு தீவாளிகளை வீசிய மரக்கலம் தனக்குத் தானே தீயை வைத்துக் கொண்டு சுழன்றதால் தீயானது எல்லா மரக்கலங்களுக்கும் பரவி அவை நன்றாக எரியலாயின. தனி மரக்கலம் நன்றாக எரிந்த நிலையில் அராபியர் கப்பல்களோடு மோதியதால் அவைகள் உடைந்துச் சிதறின. ஒரே நேரத்தில் நான்கு மரக்கலங்கள் தீப்பற்றிக் கொண்டு உடைந்து கடலில் முழ்குவதைக் கண்ட சுலைமான் திகைத்துப் போய் நின்றான்.

அவனது மரக்கலம் சற்றே தள்ளி இருந்ததால் லேசான சேதாரத்துடன் தப்பியது. தீக்காயம் பட்டு கறுப்பழகியொருத்தி கருகிப் போனாள். மற்ற அழகிகள் அலறினார்கள்.

''அலறலை நிறுத்துங்கள் பிசாசுகளே'' என்று கடுங்கோபத்துடன் கூறிய சுலைமான் சாட்டையை எடுத்து சுளீர் சுளீரென அவர்கள் மீது வீசியதும் அடங்கிப் போனார்கள்.

இதற்கிடையில் மூழ்கிய மரக்கலங்களிலிருந்து தப்பிய மாலுமிகள் பலர் சுலைமானின் மரக்கலத்திற்கு வந்தார்கள்.

திடீரென நடந்தச் சம்பவம் எல்லோருக்கும் புரியாதப் புதிராக இருந்தது. நம்ப முடியாததாக இருந்தது.

''நாங்கள் ஆரம்பத்திலேயே அந்த மரக்கலம் எதிரி மரக்கலம் என்று சொன்னோம். நீங்கள் தான் ஒப்புக் கொள்ளவில்லை'' என்றான் ஒரு மாலுமி.

''அதனால் நீங்கள் முட்டாளாகிவிட்டீர்களா? பக்கத்திற்கு இரண்டு மரக்கலங்களாகப் போகச் சொன்னேனே, போய் என்ன செய்தீர்கள்? வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்தீர்களா?'' என்று சீறினான் சுலைமான்.

''வேடிக்கை பார்ப்பதற்குக் கூட இடம் அளிக்காமல் எதிரி தீயம்பை வீசிவிட்டான். தூரத்தில் இருந்த உங்களுக்கு இது தெரியவில்லையா?'' என்றான் மாலுமி.

''சரி! சரி. நடந்தது போகட்டும். இது நம்மோடு இருக்கட்டும். நமது தலைவருக்குத் தெரிய வேண்டாம்'' என்றான் சுலைமான்.

ஆனால் -

மறுநாள் காலை தலைவனே சுலைமானை அழைத்தான்.

என்ன சொல்லலாம் என்று யோசித்தபடி சென்ற சுலைமானைப் பார்த்த தலைவன் தாவூத் ''இந்தா, இந்த ஓலையில் என்ன எழுதியிருக்கிறது பார்'' என்று சொல்லி ஓலையைக் கொடுத்தான்.

ஓலையை வாங்கிப் படித்தான் சுலைமான்.

''அல் அமீன்'' என்றிருந்தது ஓலையில்.

சுலைமானின் கண்கள் விரிந்தன.

☆☆☆



63

கருமோகினி

ஒற்றை மரக்கலத்தால் தாக்கப்பட்டு நான்கு மரக் கலங்களையும் எட்டு மாலுமிகளையும் இழந்த சுலைமானுக்கு இரவு முழுவதும் தூக்கம் வரவில்லை. தனக்கென்று பிரத்தியேகமாகக் கட்டப்பட்டிருந்த இன்ப மாளிகைக்குச் செல்லாமல் கடற்கரை மணலிலேயே படுத்துக் கிடந்தான். இன்ப மாளிகைக்கு அவன் வராததால் அவனைத் தேடி இன்பம் அளிக்க வந்த கறுப்பு திராட்சை என்று அவனாலேயே அழைக்கப்பட்ட கறுப்பழகி வந்து நின்று அமர்ந்து படுத்து உருண்டபோது அவளைக் கண்டபடி திட்டியதோடு விடாமல் கன்னத்திலும் அறைந்துவிட்டதால் கறுப்பு திராட்சை சிவந்த கன்னத்துடன் திரும்பிச் சென்றாள்.

கடந்த ஒரு வருடகாலமாக பூர்வக்கடலில் அராபியர் ஆதிக்கம் உண்டான பிறகு அவர்களது எந்த ஒரு மரக்கலமும் தாக்கப்பட்டதில்லை. அழிக்கப்பட்டதில்லை. யாருமே அவர்களது மரக்கலங்களோடு மோத முற்பட்டதுமில்லை. பல்லவர் வணிகக் கப்பல்கள் கடற்படையின் துணையோடு சென்று அவர்களது தயவை நாடவில்லை என்ற குறையைத் தவிர வேறு எந்த விதத்திலும் குறைவற்று இருந்த அராபியருக்கு திடீரென நான்கு மரக்கலங்கள் அழிக்கப்பட்டது ஜீரணிக்க முடியாமல் இருந்தது. சுலைமானால் அதை நம்பவே முடியவில்லை. சற்று ஏமாந்திருந்தால் தனது மரக்கலம் கூட கொளுத்தப்பட்டிருக்கும் என்பது தெரிந்ததால் வருத்த மடைந்தான் சுலைமான். எனவேதான் இந்த விஷயம் பிரதான தீவில் இருக்கும் அராபியர் தலைவன் தாவூத்திற்குத் தெரியக் கூடாது என்று நினைத்து தனது சகாக்களிடம் எச்சரித்து விட்டிருந்தான்.

ஆனால் உறங்கா இரவு முடிந்து பொழுது விடிந்தபோது தன்னை தாவூத் அழைப்பதாகச் செய்தி வந்ததும் சற்றே அஞ்சினான் சுலைமான். மறைக்கப்பட்ட விஷயம் அவனுக்குத்

தெரிந்துவிட்டதோ என்று நினைத்தான். தன்னிடம் பணிபுரிபவர்கள் தில்லு முல்லுகளைச் செய்தால் நிற்க வைத்து தோலை உரித்து கடற்கரை கம்பங்களில் கட்டிவிடுவதை வழக்கமாகக் கொண்டிருந்தான் அராபியர் தலைவனான தாவூத். சுலைமான் ஈவிரக்கமற்றவன். பஞ்சமாபாதகங்களைச் செய்தவன். அவன் அஞ்சக்கூடிய ஒருவன் இருந்தான் என்றால் அது தாவூத்தான். ஏற்கெனவே தலைவனுக்குத் தெரியாமல் பல தில்லுமுல்லுகளை சுலைமான் செய்திருந்தானாதலால் இன்றோடு தன் வாழ்வு முடிந்துவிட்டதாகக் கருதி படகில் ஏறி பிரதானத் தீவை அடைந்து தலைவன் இருந்த இடத்திற்குச் சென்றான்.

தாவூத்தின் இருப்பிடம் மாடமாளிகையில் இல்லை. சிறியதொரு பர்ணசாலையாக இருந்தது. அந்தக் குடிசைக்குள் தரையில் விரிப்பைப் போட்டு அதில் அமர்ந்திருந்தான் தாவூத். சுலைமானைப் போல மாமிச மலையாக இல்லாமல் ஒற்றை நாடிச் சரீரத்துடன் இருந்தான் அவன். தலையும் முகமும் நன்றாக மழிக்கப்பட்டிருந்தது. தலையில் குல்லா ஒன்றை அணிந் திருந்தான். சுலைமானைப் போல் அவனது கண்கள் சின்னஞ் சிறியதாக இல்லை. பெரியதாகவும் ஒளி வீசும் கண்களாகவும் இருந்தன. வயது நாற்பதிற்கு மேல் இருக்கும்.

சுலைமான் பயபக்தியோடு அவனை வணங்கியதும் ''உட்கார்'' என்றான் தாவூத்.

வாந்தியை எதிர்பார்த்துக் கொண்டிருப்பவனைப் போல் தவிப்போடு அமர்ந்த சுலைமானைப் பார்த்த தாவூத் ''நெற்றியில் என்ன காயம்?'' என்று கேட்டான்.

அதுவரை அவனே அறியாதிருந்த காயத்தை தாவூத் சுட்டிக்காட்டிக் கேட்டபோது எட்டிக்காய் கசப்புக்கு ஆளான சுலைமான் ''பந்தம் இடித்துவிட்டது தலைவரே'' என்று ஏதோ சொன்னான்.

''சுலைமான், அரபு நாட்டு காலிப்பாக இருந்தாரே அபூபக்கர், அவரைப் பற்றி உனக்கு என்ன தெரியும்?'' என்று கேட்டான் தாவூத்.

எதற்கு இந்தச் சம்பந்தமில்லாத கேள்வி என்று தனக்குத் தானே கேட்டுக் கொண்ட சுலைமான் ''காலிப் அபூபக்கர்தான் நபிகள் நாயகத்தின் புனிதக் குரானைத் தொகுத்து வழங்கியவர்'' என்றான்.

''அது உலகத்திற்கே தெரிந்த உண்மை. அராபியனான நீ அதைப் பற்றிச் சொல்ல வேண்டியதில்லை. நான் கேட்டது வேறு.

அவரிடம் ஒரு சிறப்பான குணம் இருந்தது. அது தெரியுமா உனக்கு?'' என்று கேட்டான் தாவூத்.

உண்மையிலேயே அது பற்றி எதுவும் தெரியாததாலும் குழப்பத்தில் இருந்ததாலும் ''தெரியாது தலைவரே'' என்றான் சுலைமான்.

''ஒருவன் வெற்றி பெற்றுவிட்டு 'நான் வெற்றி பெற்று விட்டேன் அரசே' என்று சொன்னால் தலையை மட்டும் ஆட்டுவார் காலிப். ஆனால் ஒருவன் குற்றம் புரிந்துவிட்டு 'நான் குற்றம் புரிந்துவிட்டேன் அரசே' என்று சொன்னால் 'அப்படியா! மகிழ்ச்சி' என்று முகம் மலரச் சொல்லுவார். இந்த வித்தியாசத்தின் பொருள் உனக்குப் புரிகிறதா?''

''அதாவது...''

''சுலைமான்! தனது வெற்றியை - பராக்கிரமத்தை - வாய்மையை உள்ளபடியே சொல்வதற்கு பிரயத்தனம் எதுவும் தேவையில்லை. இயல்பாகவே அவை வெளிப்படும். அதற்கு தனி தைரியம் தேவையில்லை.''

''உண்மைதான் தலைவரே.''

''பொய் - புரட்டு . குற்றம் - துரோகம் ஆகியவற்றைச் சொல்ல பிரயத்தனம் வேண்டும். தனி தைரியம் வேண்டும். இவற்றைச் சொன்னால் தண்டனை நிச்சயம் என்று தெரிந்தும் மறைக்காமலும் மறுக்காமலும் எவன் சொல்கிறானோ அவனைக் கண்டு மகிழ்வார் காலிப். அவர்களை அவர் தண்டிப்பதில்லை. திருந்தி விடு என்று அனுப்பிவிடுவார்.''

தாவூத் எங்கே ஆரம்பித்து எங்கே முடிக்கிறான் என்பது தெளிவாகத் தெரிந்தது சுலைமானுக்கு.

ஏதோ சொல்ல முற்பட்டான்.

தாவூத் அதைத் தடுத்துவிட்டு ''சுலைமான்! நீ பலவிதமான தில்லுமுல்லுகளைச் செய்திருக்கிறாய். என்னிடம் மறைத் திருக்கிறாய். அவை எனக்குத் தெரிந்தும் நான் உன்னை விசாரிக்கவும் இல்லை. தண்டிக்கவும் இல்லை. ஏன் தெரியுமா? அவற்றில் எல்லாம் உன் சுயநலம் மட்டும் இருந்தன. போகட்டும் என்று விட்டுவிட்டேன். ஆனால் நேற்று இரவு நடந்த சம்பவத்தை நீ மறைத்தாய். அதில் உன் சுயநலம் இல்லை. உன்னோடு போகிற விஷயமும் இல்லை. ஒப்புக் கொள்கிறாயா?'' என்று கேட்டான்.

சுலைமான் தலையை ஆட்டினான்.

''நேற்றைய சம்பவம் அராபியரை பாதிக்கும் விஷயம். அராபியரை அசைக்கும் விஷயம். இதை ஏன் எனக்குத் தெரிவிக்கவில்லை?''

''நான்கு மரக்கலங்கள் அழிந்துவிட்டன. அதனால்தான்...''

''நான்கு மரக்கலங்கள் அழிந்தது பெரிய விஷயமல்ல'' என்று சொன்ன தாவூத் ''பூர்வக்கடலில் நமது பூரண ஆதிக்கம் வந்து எவ்வளவு காலம் ஆகிறது?'' என்று கேட்டான்.

''ஒரு வருடம்.''

''நாம் வைத்தது தான் சட்டமாக இருந்தது.''

''ஆமாம்.''

''பல்லவர்கள் மட்டும் நம்மை மதிக்கவில்லை.''

''ஆமாம்.''

''இருந்தாலும் நமக்கு ஒரு மரக்கல இழப்பும் வந்ததில்லை.''

''ஆமாம்.''

''எதிரியான பல்லவர்கள் கூட நம்மைத் தாக்கியதில்லை.''

''ஆமாம்.''

''அப்படியானால் நேற்று தாக்கியவர் யார்?''

''தாக்கிய மரக்கலத்தில் அராபியர் சின்னம் கொண்ட கொடி பறந்தது.''

''சிறு பிள்ளைத்தனமாகப் பேசாதே சுலைமான். கொடியை வைத்து எப்படி எடை போடுவது? ஏமாற்றுவதற்குக் கூட கொடிகளை மாற்றிப் பறக்க விடுவதை நீ கேள்விப்பட்ட தில்லையா?''

''அம்மரக்கலம் தப்பி ஓடவில்லை. தன்னைத் தானே அழித்துக் கொண்டது.''

''ஏன்?''

''தான் யார் என்ற அடையாளத்தை யாரும் அறியாமல் இருப்பதற்காக.''

''அப்படியானால் யார் அந்த எதிரி?''

''தெரியவில்லை தலைவரே.''

''சுலைமான்! எதிரி தனது மரக்கலத்தை அழித்துக் கொண்டாலும் ஓர் அடையாளத்தை அவனாகவே உன் மரக்கலத்தில் வீசியிருக்கிறான்.''

''அடையாளமா?''

''ஆமாம். எதிரி வீசிய ஓலை இதுதான். வாங்கிப் படி''

வாங்கிப் படித்த சுலைமான் ''அல்-அமீன்'' என்று அதிலிருந்த வார்த்தையை முணுமுணுத்தான்.

''இதற்கு அர்த்தம் என்ன தெரியுமா?''

''நம்பிக்கைக்குப் பாத்திரமானவன் என்று அர்த்தம்.''*

''இந்த உன்னதமான வார்த்தை யாருக்குச் சொல்லப்பட்டது தெரியுமா?''

''நபிகள் நாயகத்திற்கு''

''அந்த மகா வாக்கியம் தான் எதிரியின் அடையாளம். இதை வைத்துக் கொண்டு யோசி. எதிரி யார் என்பதை எனக்கு வந்து நாளைக்குச் சொல். நீ போகலாம்'' என்றான் தாவூத்.

சுலைமான் தன் இருப்பிடத்திற்கு வந்தான்.

ஓலையைக் கையில் வைத்துக் கொண்டு நாள் முழுவதும் யோசித்தான் சுலைமான். குழப்பம்தான் அதிகரித்ததே தவிர விடை கிடைக்கவில்லை. முரட்டுத்தனத்திற்கும் வறட்டுத் தனத்திற்கும் பேர் போனவனான அவனுக்கு புத்தி வேலை செய்யவில்லை. இன்னும் இருக்கிறது இன்னும் இருக்கிறது என்ற வேட்கை உள்ளவனிடம்தான் புத்தியின் செயல்பாட்டில் சுறுசுறுப்பு இருக்கும். எல்லாம் முடிந்துவிட்டது என்று முடிவுகட்டிவிட்டவனுக்கு புத்தி செயல்பட மறுக்கிறது. சுலைமானின் நிலையும் அதுவாகத்தான் இருந்தது. பூர்வக்கடல் அராபியரின் ஆதிக்கத்திற்கு வந்துவிட்டபின் நடப்பதற்கு வேறு எதுவும் இல்லை என்ற முடிவுக்கு அவன் வந்துவிட்டதால் புத்தியை சோம்பேறியாக்கிவிட்டு எல்லா சுறுசுறுப்பையும் உடலுக்குக் கொடுத்து அந்த உடலை கட்டழகிகளிடமும் கறுப்பழகிகளிடமும் விட்டுவிட்டதால் காமத்தைத் தவிர எதுவும் நடக்கவில்லை. எனவே தான் தாவூத் கேட்ட கேள்விக்கு அவனால் பதில் கூறமுடியவில்லை.

மாலை நேரத்தில் அதே கடற்கரைப் பகுதியில் தென்னை மரங்களுக்கிடையே கயிற்று ஊஞ்சலைக் கட்டி அதில் படுத்துக்கிடந்த சுலைமானைக் கவலை வாட்டி எடுத்தது. அதுபோன்ற நேரங்களில் அழகியையும் ஊஞ்சலில் போட்டுக்

* பக்கம் 7, 'தென்மேற்கு ஆசிய வரலாறு' - கா.அப்துல்லா

கொண்டு உல்லாசம் அனுபவிப்பவனான அவனுக்கு தற்போதைய நிலை வெறுப்பாக இருந்தது. அப்போது அவனுக்கருகே வந்து நின்றாள் கறுப்பு திராட்சைக் கட்டழகி.

''என்ன?'' என்று கேட்டான் சுலைமான்.

''நானும் அதைத்தான் கேட்கிறேன்'' என்றாள் கறுப்பு திராட்சை.

''கவலை'' என்றான் சுலைமான்.

''எதைப்பற்றி?''

''சொன்னால் உனக்குப் புரியாது.''

''சொல்லித்தான் பாருங்களேன்.''

சொன்னான் சுலைமான்.

''உங்களுக்கு எதிரியை விட தலைவர் மீது தான் பயம் அதிகமாக இருக்கும் போலிருக்கிறது.''

''என்ன சொன்னாய்?''

''உண்மையைத்தானே சொன்னேன். ஒரு வருட காலமாக எதிரிகளைப் பற்றிக் கவலைப்படாத நீங்கள் இந்த ஒரு நாளில் கவலைப்படுகிறீர்கள். இதற்கு எதிரியா காரணம்? தலைவர்தான்.''

''அவர் கேட்ட கேள்விக்கு நான் பதில் சொல்ல வேண்டுமல்லவா?''

''தெரிந்தால்தானே சொல்ல முடியும்?''

''தெரிந்திருக்க வேண்டும் என்று தலைவர் எதிர்பார்ப்பார்.''

''அதெப்படி? எல்லோருக்கும் எல்லா விஷயங்களும் தெரிந்து விடுகிறதா என்ன? தெரியவில்லை என்று சொல்லுங்கள். அவரே அதற்கான பதிலைச் சொல்லட்டும்.''

கறுப்பு திராட்சையின் பேச்சைக் கேட்டு வியந்தான் சுலைமான். உண்மையிலேயே தலைவனிடமே அதிகமாக பயப்படுவதாகவும் அந்த பயம் அர்த்தமற்றது என்பதும் புரிந்த அவனுக்கு மனத்தெளிவு பிறந்தது.

கறுப்பழகியைப் பார்த்து ''உன் பெயரென்ன?'' என்று கேட்டான்.

''கறுப்பு திராட்சை'' என்றாள் அவள்.

''அது நான் வைத்த பெயர். உன் பெயர்?''

''எனக்கு எந்த பெயரும் இல்லை.''

''ஏன்?''

''இத்தீவில் யாருக்கும் பெயரில்லை. யாருக்கும் உறவில்லை.''

''உறவுக்கு நானிருக்கிறேன். நானே பெயரை வைக்கிறேன். உன் பெயர் கருமோகினி. என்ன?''

''உங்களுக்குச் சரி என்றால் எனக்கும் சரிதான்.''

''கரு மோகினி. நீ இனி மணலில் நிற்க வேண்டாம். ஊஞ்சலுக்கு வந்துவிடு.''

வந்தாள் கருமோகினி.

இருவரும் கருத்திழந்து களிப்புற்றார்கள்.

மறுநாள் தாவூத்தைக் காணப் புறப்பட்டபோது தலைவனின் மீதான அச்சம் அவ்வளவாக இல்லை.

''என்ன சுலைமான்? எதிரி யார் என்பதைக் கண்டுபிடித்து விட்டாயா?'' என்று கேட்டான் தாவூத்.

''நமக்குள்ளேயே ஒரு கருங்காலி உருவாகிவிட்டது என்று தோன்றுகிறது தலைவரே. அவன் தான் நமது கொடியை பறக்கவிட்டு ஏமாற்றியிருக்கிறான். அதேசமயம் ஓலை வார்த்தை மூலம் தன்னை அடையாளம் காட்டியிருக்கிறான்'' என்று தனக்குத் தோன்றிய திடீர் கருத்தைச் சொன்னான் சுலைமான்.

அதைக் கேட்டு மெல்லச் சிரித்த தாவூத் ''நமக்குள் ஒரு கருங்காலி தோன்ற வேண்டிய அவசியம் என்ன சுலைமான்?'' என்று கேட்டுவிட்டு ''நேற்று நடந்தச் சம்பவம் மீண்டும் நடக்கக் கூடாது. நடந்தால் நமது ஆதிக்கம் அசைக்கப்படுகிறது என்று அர்த்தம். மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டியது உன் பொறுப்பு'' என்று சொல்லி அவனை அனுப்பினான் தாவூத்.

சுலைமானுக்கு அந்த நிலை திருப்தியாக இருந்தது.

கருமோகினி கொடுத்த தைரியமே தன் பேச்சிற்குக் காரணம் என்று கருதிய அவன் அவளை இழுத்துக் கொண்டு காட்டில் இருந்த நீர் வீழ்ச்சிப் பகுதிக்குப் போனான். நீர்வீழ்ச்சியில் அவளோடு சேர்ந்து ஜலக்கிரீடை செய்தான். அங்கிருந்த பாறைகளையே மஞ்சங்களாக்கி மாற்றி மாற்றி அவற்றைப் பயன்படுத்தினான்.

''போதும் போதும்'' என்றாள் அவள்.

''நீ தான் எனக்கு இனிமேல் மந்திரி.'' என்றான் சுலைமான்.

''தலைவரிடம் என்ன பதில் சொன்னீர்கள்?'' என்று கேட்டாள் அவள்.

சொன்னதைச் சொன்ன அவன் ''எப்படி என் கற்பனை?'' என்றான்.

''இங்கு கற்பனை இல்லை. உள்ளே இருந்தது தான் வெளியே வந்திருக்கிறது.''

''நீ சொல்வது விளங்கவில்லை.''

''உங்கள் ஆசையைத்தான் தலைவரிடம் மாற்றிச் சொல்லியிருக்கிறீர்கள்.''

''இல்லை. இல்லை. அப்படியெல்லாம் இல்லை கருமோகினி. நீ உளறுகிறாய்.''

''கற்பனையை உண்மையாக மாற்றிவிடுங்களேன்.''

யோசனையில் ஆழ்ந்தான் சுலைமான்.

☆

இச்சம்பவத்திற்குப் பிறகு ஒரு மாதம் வரை எந்தவிதமான அசம்பாவிதமும் நடக்கவில்லை.

நாற்பது நாட்கள் கழித்து சுலைமானை அழைத்தான் தாவூத்.

''சுலைமான்! நமது செல்வங்களின் ஒரு பகுதியை திபெத்திய மன்னருக்கு கடைசியாக எப்போது அனுப்பினோம்?'' என்று கேட்டான்.

''நான்கு மாதங்களுக்கு முன் அனுப்பினோம்.''

''எப்படி அனுப்பினோம்?''

''வழக்கம் போலத்தான்.''

''அதுதான் எப்படி?''

''இங்கிருந்து கடல் மூலம் சியாம் நாட்டிற்கு அனுப்பி அங்கிருந்து தரை மூலமும் ஆறு மூலமும் மலைக்கணவாய்கள் மூலம் திபெத்திற்கு அனுப்பி வைப்போம்.''

''மரக்கலங்களில் அனுப்பும்போது நமது போர்க்கலங்களும் செல்லும் அல்லவா?''

''ஆமாம். பொக்கிஷ மரக்கலம் இரண்டு செல்கிறதென்றால் அதற்குப் பாதுகாப்பாக இருபது போர்க்கலங்கள் செல்லும்.''

''நான்கு மாதங்களுக்கு முன்பு அனுப்பிய செல்வங்களும் அப்படித்தானே அனுப்பப்பட்டன?''

''ஆமாம்.''

''நான்கு மாதங்களில் அவை திபெத்திற்குப் போய்ச் சேர்ந்துவிடுமல்லவா?''

''இரண்டு மாதங்கள் கூடுதலாகப் பிடிக்கும்.''

''சியாம் நாட்டிற்குப்* போக அவ்வளவு காலம் தேவையா? ஒரு மாதம் போதாதா?''

''போதும்.''

''நான்கு மாதங்கள் ஆகியும் அவை சியாம் போய்ச் சேரவில்லை. தகவல் கிடைத்திருக்கிறது.

''என்ன காரணம்?''

''தெரியவில்லை.''

''போய்ச் சேரவில்லை என்பது எப்படிச் சொல்கிறீர்கள்?''

''போய்ச் சேர்ந்திருந்தால் நமது மரக்கலங்கள் திரும்பி வந்திருக்க வேண்டும். இதுவரை வரவில்லை. என்ன ஆயின என்பதும் தெரியவில்லை. நீயும் அதைப்பற்றிக் கவலைப்பட வில்லை. இது கவலைப்படக் கூடிய விஷயம் இல்லை என்று நினைக்கிறாயா?''

''இல்லை தலைவரே! நான் எப்படி கவலைப்படாமல் இருக்க முடியும்? நான் உங்கள் உபதலைவன் அல்லவா?''

''சுலைமான்! ஒருவேளை இதுவும் நீ சொன்ன மாதிரி கருங்காலியின் வேலையாக இருக்குமா?''

''அப்படி இருக்காது என்று நீங்கள் முன்பு, சொன்னீர்களே?''

''இப்போதைய சந்தர்ப்பம் வேறு. இரண்டு மரக்கலங்கள் நிறைய பொக்கிஷங்கள் செல்லும்போது அவற்றைக் கவர வேண்டும் என்ற ஆசை கருங்காலிகளுக்கு வருவது இயற்கை தானே சுலைமான்?''

சுலைமானுக்கு மண்டையில் அடித்த மாதிரி இருந்தது. தான் தற்செயலாகச் சொன்ன ஒரு பதில் தற்போதைய சந்தர்ப்பத்தில் மிகச் சரியாகப் பொருந்திவிட்டதைக் கண்டு அசந்து போனான்.

* சியாம் நாடு என்பது தற்கால தாய்லாந்தைக் குறிக்கும்.

தாவூத்திற்கு என்ன பதில் கூறுவது என்பது அவனுக்கு விளங்கவில்லை.

''என்ன பதிலையே காணோம்?'' என்றான் தாவூத்.

''தலைவரே! தாங்கள் நினைப்பதுபோல நமது மரக்கலங்களுக்கு எதுவும் நடந்திருக்காது. நமக்குச் சரியான தகவல் வரவில்லை என்று நினைக்கிறேன்.''

''சரியான தகவல் வந்துவிட்டது. உனக்குத்தான் தெரியவில்லை.''

''தகவல் வந்துவிட்டதா?''

''ஆம். நீ எனக்குச் சொல்ல வேண்டிய தகவலை நான் உனக்குச் சொல்கிறேன். தகவல் நேரடியாகவே வந்திருக்கிறது'' என்று சொன்ன தாவூத் தன் கைகளைத் தட்டி ''வா. இக்பால்'' என்றான்.

அதையடுத்து இக்பால் வந்தான்.

அவன் கூறிய கதை சுலைமானை ஸ்தம்பிக்க வைத்தது.

★★★



64

திக்குமுக்காடும் திட்டம்

அராபியர் கடற்படையில் தன்னைப் போன்ற மற்றொரு உபதலைவனான இக்பால் வந்து நின்றான். அவனது உடம்பில் தீக்காயங்கள் நிரம்ப இருந்தன.

''சொல் இக்பால். நடந்தது என்ன?'' என்றான் தாவூத்.

''தலைவரே! திபெத்திற்கு அனுப்ப வேண்டிய பொக்கிஷ மரக்கலங்கள் இரண்டிற்குப் பாதுகாப்பாக என் தலைமையில் தான் இருபது போர்க்கலங்கள் சென்றன. மாநக்காவர தளத்தின் வடகோடித் தீவிலிருந்து தான் நாங்கள் புறப்பட்டோம். மலை நாட்டு கடற்கரையை நோக்கி பத்து நாட்கள் பயணம் செய்த நிலையில் எங்களைப் பெரும் புகை மண்டலம் சூழ்ந்து கொண்டது. எங்கள் மரக்கலங்களின் மீது சரமாரியாகத் தீப்பந்தங்களும் வாணங்களும் வீசப்பட்டன. அப்போது தான் எங்களைச் சுற்றி பல மரக்கலங்கள் நெருங்கி புகை மண்டலத்தை உருவாக்கிவிட்டு தீப்பந்தங்களையும் வாணங்களையும் வீசுவதை உணர்ந்தோம். நாங்களும் பதில் தாக்குதலைத் தொடுத்தோம். அதற்குள் எங்கள் மரக்கலங்கள் பல தீப்பற்றி எரிந்தன. நாங்கள் அதைப் பற்றிக் கவலைப்படாமல் எதிரி மரக்கலங்கள் மீது தீவாளிகளை வீசினோம். ஆனால் எதிரி மரக்கலங்களின் எண்ணிக்கை அதிகமாக இருந்ததாலும், ஆரம்பத்திலேயே நமது மரக்கலங்கள் சிலவற்றை தீக்கரையாக்கி விட்டதாலும் அவர்களது உக்கிரமான தாக்குதலை எங்களால் சமாளிக்க முடியவில்லை. எதிரிகள் எங்கள் கப்பல்கள் மீது சங்கிலிகளை வீசி இழுத்தார்கள். கப்பல்களில் குதித்து கண்மூடித்தனமாக மாலுமிகளை வெட்டினார்கள். உக்கிரமான போர் நடந்தது. ஆனால் நான் ஏற்கெனவே கூறியது போல எதிரி மரக்கலங்களின் எண்ணிக்கை அதிகமாக இருந்ததால் நாங்கள் தோற்றோம். நமது போர் மரக்கலங்களில் எட்டு கலங்கள் தீக்கிரையாயின. எதிரிகள் மீது மரக்கலங்களையும் பொக்கிஷ மரக்கலங்களையும்

கைப்பற்றினார்கள். நமது மாலுமிகளும் வீரர்களும் ஒருவர் விடாமல் எதிரிகளால் கொல்லப்பட்டார்கள். நான் கடலில் குதித்ததால் தப்பினேன். எதிரிகள் மறைந்து விட்டார்கள். நடுக்கடலில் தத்தளித்த நான் இரண்டு நாட்களுக்கு உயிரோடு போராடினேன். கடலில் வந்த மலைய நாட்டு கப்பல் ஒன்றில் ஏறி மலைய நாட்டின்* லவபுரியை அடைந்தேன். என் உடலில் உண்டான காயங்கள் என்னைப் படுக்கையில் படுக்க வைத்து விட்டது. மரக்கல நிலைமை குறித்தும் என் நிலை குறித்தும் அடுத்தடுத்து ஓலைகளை வணிக மரக்கலங்கள் மூலம் இந்த தளத்திற்கு அனுப்பி வைத்தேன். அவை எதுவும் தங்களுக்கு வந்து சேர்ந்ததா என்பது தெரியவில்லை. நான் சிகிச்சை பெற்று நடமாடுவதற்கு நான்கு மாதங்கள் ஆகிவிட்டன. நடமாட முடிந்த பிறகுதான் வணிகர் கப்பல் மூலம் நேற்று இங்கு வந்து சேர்ந்தேன்'' என்று சொல்லி முடித்தான் இக்பால்.

''முக்கியமான ஒரு விஷயத்தை விட்டுவிட்டாயே இக்பால்? அதைச் சொல் சுலைமானுக்கு'' என்றான் தாவூத்.

''ஆமாம் தலைவரே. எங்களைத் தாக்கிய மரக்கலங்களிலெல்லாம் அராபியர் கொடிகள் பறந்து கொண்டிருந்தன. அவற்றில் இருந்தவர்களும் அராபியர்கள்தான்'' என்றான் இக்பால்.

''அதெப்படி அத்தனை உறுதியாகச் சொல்கிறாய்?'' என்று கேட்டான் சுலைமான்.

''அவர்கள் அனைவருமே அராபிய உடையில் இருந்தார்கள். அவர்கள் கத்திய போதும் அராபிய மொழியில் தான் கத்தினார்கள்.''

''அதை வைத்துக் கொண்டு எதிரிகள் அராபியர்கள் என்று எப்படி முடிவுக்கு வந்தாய்?''

''முடிவுக்கு வந்ததாக நான் சொல்லவில்லை. முடிவுக்கு வர அவர்களென்ன பேச்சு வார்த்தையா நடத்தினார்கள்? அப்போதைய சூழ்நிலையில் கண்டதையும் கேட்டதையும் சொன்னேன். யாராக இருந்தாலும் இப்படித்தான் சொல்ல முடியும்'' என்றான் இக்பால் சூடான குரலில்.

தாவூத் தலையிட்டு ''நீ போ இக்பால். உடம்பைக் கவனி'' என்று சொல்லி இக்பாலை அனுப்பி விட்டு ''இப்போது சொல் சுலைமான். நமது பொக்கிஷ கப்பல்களை மடக்கிப் பிடித்தது

* மலைநாடு என்பது தற்போதுள்ள மலேசிய தீபகற்பமாகும்.

நமக்குள் இருக்கும் கருங்காலிகள்தான் என்பது என் அபிப்ராயம்'' என்றான்.

''அதெப்படிச் சொல்கிறீர்கள் தலைவரே? இக்பால் கூறிய விஷயங்களைக் கொண்டா?''

''இல்லை. ஒரு மாதத்திற்கு முன்னால் தனி ஒரு மரக்கலம் நமது நான்கு மரக்கலங்களை அழித்துவிட்டு 'அல்-அமீன்' என்று ஓலையில் எழுதி அனுப்பியது. அச்செய்கை நம்மிடையே இருக்கும் கருங்காலிகளின் செய்கை என்று நீ சொன்னாய். நினைவிருக்கிறதா?''

''ஆமாம்.''

''ஆனால் அந்தச் செய்கையை அவ்வாறு நான் கருத வில்லை. ஏனென்றால் அச்செய்கையின் விளைவு எதுவு மில்லை.''

''நான்கு கப்பல்கள் சேதமாகவில்லையா?''

''அதனால் கருங்காலிகளுக்கென்ன ஆதாயம்? ஆனால் திபெத் மன்னருக்கு அனுப்பிய பொக்கிஷங்களை தற்போது கவர்ந்திருக்கிறார்கள். இது பெரிய ஆதாயமில்லையா? இதை நம்மிடையே இருக்கும் கருங்காலிகள் செய்திருக்கலாம் அல்லவா? பொக்கிஷ மரக்கலங்கள் சென்றது மற்றவர்களைவிட நம்மவர்களுக்குத் தான் நன்றாகத் தெரியும். ஆகவே அதைக் கைப்பற்றும் ஆசை அவர்களுக்கு வரலாம் அல்லவா?''

''தலைவரே, நம்மிடையே கருங்காலிகள் இருக்கலாம் என்று பேச்சுக்குத்தான் அன்று நான் சொன்னேன். நீங்களோ உறுதியாகச் சொல்கிறீர்கள்.''

''நான் சொன்னதில் உண்மை இருக்கும் என்று உனக்குத் தோன்றவில்லையா?''

''நம்மிடையே ஓரிரு கருங்காலிகள் இருக்கலாம். ஆனால் பொக்கிஷ மரக்கலத்தையும் பாதுகாப்பாகச் சென்ற இருபது போர்க்கலங்களையும் தாக்கும் அளவிற்கு அவர்களிடம் மரக்கலங்கள் ஏது? இக்பால் கூறியபடி பார்த்தால் நம்மைத் தாக்கிய மரக்கலங்களின் எண்ணிக்கை இருபதுக்கு மேல் இருந்ததாகத் தோன்றுகிறது. அவ்வளவு மரக்கலங்கள் கருங்காலிகளிடம் ஏது?''

''அவர்களிடம் இல்லாமல் போகலாம். ஆனால் வேறு யாருடனாவது கூட்டு சேர்ந்திருக்கலாம் அல்லவா?''

''யாருடனாவது என்றால்?''

''நமது ஆதிக்கத்தை விரும்பாதவர்களிடம் என்று வைத்துக் கொள்.''

''ஏறக்குறைய எல்லா நாடுகளும் நமது ஆதிக்கத்தை ஏற்றுக் கொண்டு தானே இருக்கின்றன?''

''ஏற்றுக் கொண்டிருப்பது உண்மை. விருப்பத்துடன் தான் ஏற்றுக் கொண்டிருக்கின்றன என்று சொல்ல முடியாதல்லவா?''

''முடியாதுதான்.''

''இலங்கையுடன் நமது கருங்காலிகள் சேர்ந்து கொண்டால் அந்த நாட்டு மரக்கலங்களின் துணையோடு நமது பொக்கிஷக் கப்பல்களைத் தாக்கலாமே?''

''நீங்கள் அதீதமாக நினைப்பதாகவே எனக்குத் தோன்றுகிறது தலைவரே. கடல் கொள்ளைக்காரர்கள் பலர் வேற்று நாட்டவர் அடையாளங்களைப் போட்டுக் கொண்டு மரக்கலங்களைத் தாக்குவதுண்டு. தென் சீனக் கடலில் உள்ள சுளுக்கள் என்ற கடல் கொள்ளையர்கள் தான் நமது பொக்கிஷக் கப்பல்களைத் தாக்கியிருக்க வேண்டும்.''

''சுளுக்கள் தென் சீன கடல் பகுதியை விட்டுவிட்டு கடல் வாயிலைத் தாண்டி நமது எல்லைக்குள் வருவதற்கு முகாந்திரம் இல்லை. அப்படியே வைத்துக் கொண்டாலும் அராபியர்களின் அடையாளங்களை போட்டுக் கொண்டது எதற்காக? வேறு நாட்டின் அடையாளத்தைப் போட்டுக் கொள்ள வேண்டியது தானே?''

''அராபியர் மீது பழி விழும் அல்லவா? அதற்காக இருக்கலாம்.''

''நம் மீது பழி விழுந்தால் என்ன? நம்மை யார் என்ன செய்துவிட முடியும்? அதோடு நமது மரக்கலங்களைத் தாக்குபவர்கள் நமது அடையாளங்களைப் போட்டுக் கொண்டா தாக்குவார்கள்?''

''பொக்கிஷம் இருப்பது நமது மரக்கலங்களில்தான் என்பது அவர்களுக்குத் தெரியாமல் இருக்கலாம்.''

''இதெல்லாம் அபத்தமான பேச்சு சுலைமான். பொக்கிஷங்கள் கப்பல்களில் செல்லும்போது அதைப் பற்றிய விவரங்களை நன்றாக அறிந்து கொண்டவர்கள்தான் தாக்கு வார்கள். அப்படிப் பார்க்கும்போது பொக்கிஷம் திபெத் நாட்டிற்குச் செல்லும் விஷயம் மாநக்காவரத்தில் இருக்கும் நம்மவர்களுக்குத் தான் விவரமாகத் தெரியும்.''

சுலைமானுக்கு என்ன பதில் சொல்வது என்று தெரிய வில்லை.

தாவூத் தொடர்ந்து பேச முற்பட்டு ''சுலைமான்! இப்போது நாம் இழந்திருப்பது அற்பமானதல்ல. இது பெரிய இழப்பு. இது திபெத்திய மன்னருக்குத் தெரிந்தாலும் தெரியாவிட்டாலும் நாம் மீண்டும் அனுப்பி வைக்க வேண்டும். நமது பொக்கிஷ கப்பல்கள் கவரப்பட்ட விஷயம் திபெத்திய மன்னருக்கு ஒருவேளை தெரிய வந்தால் அவருக்கு அராபியர் மீதான மதிப்பும் நம்பிக்கையும் குறையும். இது நமக்கு நல்லதல்ல'' என்றான்.

''உண்மைதான் தலைவரே''

''திபெத்தியர் நிலத்திலும் அராபியர் கடலிலும் வலுவாக இருப்பதால்தான் எல்லா நாடுகளும் நமக்குப் பணிந்திருக்கின்றன. நமது தரப்பு தளர்ந்துவிட்டால் அந்த நாடுகளின் மீதான நமது கட்டுகளும் தளர்ந்துவிடும்.''

தலையை ஆட்டினான் சுலைமான்.

''அந்த நிலை உருவாகக்கூடாது. உடனடியாக திபெத்திய மன்னருக்கு அவருக்குரிய பங்குத் தொகையை விரைவாக அனுப்பி வைக்க வேண்டும். இன்னும் வரவில்லை என்று நமக்கு ஓலை வந்துவிடக் கூடாது. எனவே இந்த முறை இரண்டு கப்பல்கள் நிறைய செல்வங்களை திபெத் நாட்டிற்குக் கொண்டு செல்லும் பொறுப்பை உன்னிடம் ஒப்படைக்கலாம் என்று நினைக்கிறேன். போய் நாளைக்கு வா. மீண்டும் பேசலாம்'' என்று கூறி பதிலுக்குக் காத்திருக்காமல் சுலைமானை அனுப்பி வைத்தான் அராபியர் தலைவனான தாவூத்.

தனது இன்ப மாளிகைக்கு வந்து சேர்ந்த சுலைமானுக்கு எதுவுமே ஓடவில்லை. தன்னை பொறுப்பாளியாக்கி பொக்கிஷங்களை திபெத்திற்குக் கொண்டு செல்ல தாவூத் முயற்சிக்கும் விஷயமே அவனது மனத்தை ஆக்கிரமித்துக் கொண்டு குடைந்தது.

அந்த காரியத்தைச் செய்ய அவன் தயாராக இல்லை. ஏனென்றால் அது மிகவும் ஆபத்தான காரியம். கூரிய அறிவும் பெரும் சாமர்த்தியமும் அபாரத் துணிச்சலும் இருந்தாலன்றி அப்பணியை வெற்றிகரமாகச் செய்து முடிக்க இயலாது. கடல் பயணம் மட்டுமின்றித் தரைப்பயணமும் அவசியம். பொக்கிஷங்களைப் பல்வேறு பயணமுறைகளுக்கு ஏற்ப மாற்றியும் மறைத்தும் கொண்டு செல்ல வேண்டும். ஆறுகள், காடுகள், மலைகள், பள்ளத்தாக்குகள் என இயற்கையின் நானாவித பயங்கரங்களிலும் பயணம் செய்து திபெத்தை அடைய வேண்டும். ஒருமுறை பயணம் செய்து வந்தால் அது ஒன்றே வாழ்நாள்

பயணமாக அமைந்துவிடும். முழுக்க முழுக்க இதில் சேதாரங்களும் சோதனைகளும் தான் இருக்குமே தவிர கடுகளவு ஆதாயமோ லாபமோ இருக்காது. அதோடு சமீபத்தில் திபெத்துக்குச் சென்ற கப்பல்கள் தாக்குதலுக்கு ஆளாகி தீக்கிரையாகியதால் மீண்டும் அந்நாட்டிற்கான பயணம் மேற்கொள்வது ஆபத்தையும் சோகத்தையும் மாலை போட்டு வரவேற்று ஏற்றுக் கொள்ளும் முட்டாள்தனம் என்பதால் சுலைமானுக்கு அப்பயணத்தில் எள்ளளவும் விருப்பமில்லை.

மாநக்காவரத்திற்கு வந்ததிலிருந்து இதுபோன்ற பணிகள் பல வந்தாலும் அப்போதெல்லாம் அங்கிருந்த இதர உபதலைவர்களைப் பரிந்துரை செய்து அனுப்பி வைப்பதையே வழக்கமாகக் கொண்டிருந்தான் சுலைமான். ஆபத்துகள் நிறைந்த பயணங்களுக்கும் வீர தீரமெல்லாம் தேவைப்படும் காரியங்களுக்கும் தன்னைத் தவிர்த்துக் கொண்டு வெவ்வேறு நிறமும் குணமும் கொண்ட அழகிகளோடு சுகவாழ்வு வாழ்ந்து பழக்கப் பட்டிருந்தான். அந்த சொர்க்கத்திற்கு உலை வைக்கக்கூடிய இப்பயணம் அவனுக்குக் கசந்தது. இப்பயணத்தை என்ன காரணம் சொல்லி தவிர்க்கலாம் என்று எண்ணிக் குழம்பிக் கொண்டிருந்தான்.

உயர்ரக மஞ்சத்தில் சாய்ந்து கிடந்தாலும் உள்ளத்தில் சஞ்சலம் குடி கொண்டிருந்ததால் சுகமாக உணரவும் முடியவில்லை. தூக்கமும் வரவில்லை. அப்போது அங்கே வந்தாள் கருமோகினி. அவனது நிலையைக் கண்ட அவள் ''உபதலைவருக்கு மீண்டும் மீண்டும் யோசனை தானா? தீரவே தீராதா?'' என்று கேட்டபடி அவனைத் தொட்டாள்.

அவள் தொட்டது சாதாரணமாய் இருந்தாலும் இடி விழுந்தது போல உணர்ந்த அவன் நினைவலைகளிலிருந்து விடுபட்டுத் தெளிவடைந்து ''நீயா?'' என்று கேட்டான்.

அருகில் வைக்கப்பட்டிருந்த உணவு அப்படியே இருந்ததைக் கண்ட அவள் ''உணவைக் கூடத் தொடாமல் அப்படியென்ன சிந்தனை? உணவை உண்டுவிட்டுத் தான் யோசிக்கக் கூடாதா?'' என்று கேட்டு காட்டு பன்றியின் கால் பகுதி மாமிசத்துண்டை எடுத்துக் கடித்தாள். சாதாரண நேரமாக இருந்தால் அவளது அச்செய்கை அவனுக்கு கோபத்தை மூட்டியிருக்கும். தற்போது அவன் அதை கண்டு கொள்ளாமல் ''தலைவர் எனக்குப் புதிய பணியைத் தரப்போகிறார்'' என்றான்.

மாமிசத்தைக் கடித்துச் சுவைத்த கருமோகினி ''என்ன பணி அது?'' என்று கேட்டாள்.

சொன்னான் சுலைமான்.

''இதில் யோசிப்பதற்கோ கவலைப்படுவதற்கோ என்ன இருக்கிறது? செய்ய வேண்டியதுதானே?'' என்று கேட்ட அவள் மாமிசத்தைப் போட்டுவிட்டு மதுவை எடுத்து குடிக்க முற்பட்டாள்.

''உனக்குத் தெரியாது மோகினி. இந்தப் பயணம் மிகவும் ஆபத்தானது'' என்றான் சுலைமான்.

''ஆபத்து எதில்தான் இல்லை?'' என்று கேட்டாள் கருமோகினி மதுக்கலயத்தை கீழே வைத்துவிட்டு.

''ஆபத்து இருந்தால் கூட பரவாயில்லை. ஆபத்திற்கு அப்பால் ஏதாவது ஆதாயம் இருக்க வேண்டும். அப்படி எதுவும் இப்பணியில் இல்லை. இது வெறும் வேலைக்காரப் பணி'' என்றான் சுலைமான்.

கருமோகினி தனது மார்பு கச்சையை அவிழ்த்து எறிந்துவிட்டு ''எதுவாக இருந்தாலும் உங்கள் பணிகளில் இதுவும் ஒன்றுதானே?'' என்று கேட்டாள்.

''நீ என்ன தாவூத்தைப் போலக் கேட்கிறாய்?'' என்றான் சுலைமான் கோபத்துடன்.

அவள் அவனது முகத்திற்கு நேராக வந்து நின்று ''உண்மையைத்தானே சொன்னேன்? எதற்கு கோபம்?'' என்றாள்.

அப்போது அவள் எதிர்பார்த்தது நடந்தது. தனது கண்களை மறைத்த இரண்டு மாமிசக் கலசங்களால் கிளர்ச்சியுற்ற சுலைமான் சிறிது நேரம் வரை கவலைகளையும் பேச்சுக்களையும் தூக்கி எறிந்துவிட்டு அவளைத் தூக்கி உருட்டி விளையாடினான். இருவருக்குமே அப்போதைக்கு அந்த வடிகால் தேவையாய் இருந்ததால் இஷ்டம் போல் நடந்து கொண்டார்கள். நேரம் பகலாக இருந்தாலும் காமத்தீ விவஸ்தையற்று விரிந்து கிடந்ததால் நேரத்தைப் பற்றிய கவலையின்றி அத்தீயில் தங்களைப் பொசுக்கிக் கொண்டார்கள்.

இரண்டு நாழிகைகளுக்குப் பிறகு விடுபட்ட கருமோகினி மஞ்சத்திலேயே படுத்துக் கொண்டு ''தலைவர் உங்களைப் பணித்து விட்டால் மறுக்க முடியுமா உங்களால்?'' என்று கேட்டாள்.

''முடியாதுதான். ஆனால் என்ன காரணத்தைச் சொல்லி மறுப்பது என்று தான் யோசிக்கிறேன்'' என்றான் சுலைமான்.

''எதற்காக மறுக்க வேண்டும்?'' என்று கேட்டுவிட்டு கவிழ்ந்து படுத்தாள் கருமோகினி.

''ஆதாயமில்லாத பணி எனக்குத் தேவையில்லை மோகினி.''

அவள் அதே நிலையில் இருந்தபடியே ''ஆதாயமில்லை என்று எப்படிச் சொல்கிறீர்கள்?'' என்று கேட்டாள்.

அவனது நிலையை ஒரு முறை பார்த்துவிட்டு மென்று விழுங்கிய அவன் ''என்ன ஆதாயம் இருக்கிறது? பொக்கிஷங்களை திபெத்திற்குக் கொண்டு போக ஒரு வருட காலமாகும். திபெத் மன்னர் பொக்கிஷங்களைப் பெற்றுக் கொண்டு என்னைப் பாராட்டுவார். அந்த நாலு வார்த்தை பாராட்டைத் தவிர வேறு எதுவும் கிடைக்கப் போவதில்லை'' என்றான்.

''நான் நேற்று சொன்னது ஞாபகமிருக்கிறதா?'' என்று கேட்டு எழுந்து கொண்ட அவள் ஆடைகளை அணிந்து கொண்டாள்.

''என்ன சொன்னாய்?''

''தலைவரின் சந்தேகத்தை உண்மையாக்கி விடுங்கள் என்றேனே மறந்துவிட்டீர்களா?''

''அதாவது...''

''நீங்கள் கருங்காலியாக உண்மையாகவே மாறி விடுங்களேன்.''

''நீ என்ன சொல்கிறாய்?''

''நீங்கள் கருங்காலியாகிவிட்டால் பொக்கிஷங்கள் உங்களுக்குச் சொந்தமாகிவிடும் அல்லவா?''

''ஐயோ''

''எதற்கு பதட்டப்படுகிறீர்கள்? ஆபத்துகளை விலைக்கு வாங்கி பொக்கிஷங்களை திபெத்துக்கு கொண்டு செல்லாமல் நீங்களே எடுத்துக் கொள்ளுங்களேன். இது ஆபத்திற்கு ஏற்ற ஊதியம் அல்லவா?''

இதைக் கேட்டு கண்கள் விரிந்தன சுலைமானுக்கு.

''இதை ஏன் நான் சிந்திக்கவில்லை?'' என்று தனக்குத்தானே கேட்டுக் கொண்டு ஆச்சரியப்பட்டுக் கொண்டான்.

அதை கருமோகினியும் உணர்ந்தாள்.

''என்ன, என் யோசனை சரியாக இருக்கிறதா?'' என்று கேட்டாள்.

''பயங்கரமாக இருக்கிறது.''

''முடியக்கூடியதுதான்.''

''எப்படிச் சொல்கிறாய் கருமோகினி? உன் யோசனை நிறைவேற வேண்டுமென்றால் நமக்கு நிறைய பேர் வேண்டும். இங்கே இருப்பவர்களில் பலரை நம் பக்கம் இழுக்க வேண்டும். ரகசியமாக இது நடக்க வேண்டும். கொஞ்சம் கசிந்தாலும் தாவூத் தோலை உரித்து கடற்கரை கம்பத்தில் கட்டி விடுவான். ஏற்கெனவே அவனுக்கு என் மீது வெறுப்பு இருக்கிறது.''

''இந்த திட்டத்தை நீங்கள் இந்தத் தீவில் தீட்டக் கூடாது. அப்படித் தீட்டினால் தலைவருக்குத் தெரியாமல் போகாது. ஆகவே நல்ல பிள்ளையைப் போல பணியை ஏற்றுக் கொள்ளுங்கள். நடுக்கடலில் இத்திட்டத்தை வெளிப் படுத்துங்கள். அப்போதுதான் மாலுமிகள் வழிக்கு வருவார்கள்'' என்றாள் கருமோகினி.

''ஆமாம். அப்படித்தான் செய்ய வேண்டும்'' என்று ஒப்புக் கொண்ட சுலைமான் தித்திக்கும் திட்டத்தைச் சொன்ன கருமோகினியை மறுபடியும் தூக்கி மீண்டும் மீண்டும் சாறு பிழிந்தான்.

மறுநாள் தாவூத் அவனை அழைத்து தான் கூறியதை உறுதி செய்தான்.

''பொக்கிஷங்களை திரட்டி தயார் செய்வதற்கு இரண்டு மாதங்கள் ஆகும். நீ கூட இருந்து அந்த காரியங்களை கவனி. பொக்கிஷம் திரட்டப்பட்டதும் மரக்கலங்களை ஆயத்தப் படுத்தலாம்'' என்றான்.

சுலைமான் எதுவும் பேசாமல் எல்லாவற்றுக்கும் தலையாட்டினான்.

ஒரு மாத காலம் ஓடியது.

மாநக்காவரத்தையடுத்த கடல் பகுதியில் கடல் வழிக்கருகில் அராபியர் மரக்கலங்கள் ஆறு கண்காணிப்பு பகுதியில் ஈடுபட்டுக் கொண்டிருந்தன.

அப்போது தூரத்தில் இரண்டு மரக்கலங்கள் வந்து கொண்டிருந்ததை அராபிய மாலுமிகள் கவனித்தார்கள்.

அவை மாநக்காவரத்திற்கு வராமல் விலகிச் செல்வதைக் கண்டு உபதலைவன் இக்பாலிடம் சொன்னார்கள்.

ஆறு மரக்கலங்களில் ஒன்றில் இருந்து இக்பால் கப்பலின் மேல் தளத்திற்கு வந்து மரக்கலங்களைப் பார்த்தான்.

பார்த்துவிட்டு மாலுமிகளிடம், ''அந்த மரக்கலங்களை நன்றாக கவனித்தீர்களா?'' என்று கேட்டான்.

★★★



65

விதியின் விளையாட்டு

இக்பால் கூறியதைக் கேட்ட மாலுமி இரண்டு மரக் கலங்களையும் உற்றுப் பார்த்துவிட்டு, ''அவற்றில் காவி நிறக் கொடிகள் பறக்கின்றன உபதலைவரே. அவற்றில் பௌத்தர்கள் பயணம் செய்கிறார்கள். அவர்களுக்கு விதி விலக்கு இருப்பதால் மாநக்காவரத்திற்கு வரவில்லை'' என்றான்.

''மாலுமி! சமீப காலமாக நமக்கு பின்னடைவு ஏற்பட்டிருக்கிறது. ஆகவே எந்த மரக்கலத்தையும் நம்புவதற் கில்லை. போய் சோதித்துப் பார்த்துவிடுவோம். கப்பல்களில் பாய்களை விரியுங்கள். காவி நிறக் கொடிகள் பறக்கும் மரக்கலங்களை நிற்கும்படி சமிக்ஞை செய்யுங்கள். அக்கலங்களுக்கு அருகே செல்லுங்கள்'' என்றான் இக்பால்.

அதையடுத்து அந்தத் தகவலை இதர மரக்கலங்களுக்குச் சொன்னான் மாலுமி. அதோடு முன்னே சென்று கொண்டிருந்த இரண்டு மரக்கலங்களை நிற்பதற்கு கொம்புகளை ஊதி கொடிகளை உயரே உயர்த்தினான். அந்த அடையாளங்களைக் கண்டவுடன் இரு மரக்கலங்களும் வேகத்தை குறைத்தன.

இக்பாலின் ஆறு மரக்கலங்களும் மூன்று மூன்று மரக்கலங்களாக இரு மருங்கிலும் சென்று காவி நிறக் கொடி மரக்கலங்களை நெருங்கின.

மாலுமி அந்த மரக்கலங்களைப் பார்த்து, ''கப்பலில் இருப்பது யார்?'' என்று கேட்டான்.

அதையடுத்து காவி நிறக் கொடியேந்திய மரக்கலங்களில் பௌத்த பிட்சுக்கள் நிறைய பேர் தலையைக் காட்டினார்கள்.

''எங்கே செல்கிறீர்கள்?'' என்று கேட்டான் மாலுமி.

''கடாரத்திற்குச் செல்கிறோம்'' என்றார் பிட்சு ஒருவர்.

''கப்பலில் என்ன இருக்கிறது?'' என்று கேட்டான் மாலுமி.

''காவி உடைகள், பூஜை பொருட்கள், தண்ணீர் இருக்கின்றன'' என்றான் பிட்சு.

இருவரது உரையாடலையும் கேட்ட இக்பால் ''மாலுமி, இக்கப்பல்கள் போகட்டும்'' என்றான்.

அப்போது அந்த இரண்டு மரக்கலங்களும் நகர்ந்து திடீரென நீளவாட்டத்தில் திரும்பின. அப்படித் திரும்பிய இரண்டு மரக்கலங்களும் தங்களது மூக்குப் பகுதியை இக்பாலின் மரக்கலத்தின் மீது இடித்ததும் அந்தப் பகுதி படாரென்று வெடித்து வாணவெடிகளை அள்ளி வீசியது. இதேபோல இன்னொரு மரக்கலமும் மோதியதால் வாணவெடிகள் மொத்தமாக இக்பாலின் மரக்கலத்தில் விழுந்து தீப்பிடிக்கச் செய்தன. அதே வேகத்தில் காவி நிறக் கொடி கொண்ட படகுகள் பின்னால் நகர்ந்து மரக்கலத்தின் பின் பகுதி முகப்பை இக்பாலின் மரக்கலங்கள் மீது இடித்ததால் முகப்பு உடைந்து வெடி மருந்துகள் வெடித்துச் சிதறின.

ஆக இரண்டு காவிக் கொடி கப்பல்களும் தனது இரு முகப்புகளையும் நான்கு அராபியர் மரக்கலங்களோடு இடிக்கச் செய்து வெடிமருந்துகளை சிதறச் செய்ததால் நான்கு மரக் கலங்களும் பற்றியெரிந்தன. அவற்றில் பாய்கள் விரிக்கப் பட்டிருந்ததால் தீயானது பாய்களுக்கும் தொற்றிக் கொண்டது. அதேசமயம் காவிக் கொடி கப்பல்கள் வெகுவாக விலகிச் சென்று அராபிய மரக்கலங்களுக்கு இருபுறமும் வந்து தீவாளிகளைச் சரமாரியாக வீசின. வாணங்கள், கற்கள், ஆயுதங்கள் என்று பலவித பொருட்களும் அடுத்தடுத்து வீசப்பட்டன. அந்த இருமரக் கலங்களில் இருந்த புத்த பிட்சுக்களின் எண்ணிக்கை அதிகமாக இருந்ததால் அவர்களது தாக்குதலும் அபரிமிதமாக இருந்தது. தனது மரக்கலங்கள் தீக்கிரையாகிக் கொண்டிருந்ததைக் கண்ட இக்பால் தீயை அணைக்கும்படி மாலுமிகளுக்கு உத்தரவிடவில்லை. மாறாக எல்லா மரக்கலங்களுமாகச் சேர்ந்து காவி நிற கொடிகளைக் கொண்ட இரு மரக்கலங்களையும் மோதி அழிக்கும்படி கட்டளையிட்டான்.

ஆனால் இந்த இரண்டு மரக்கலங்களோ இக்பால் மரக்கலங்களுக்கு சிக்காமல் தப்பி ஓடலாயின. அராபியர் மரக்கலங்கள் துரத்தின. ஆனால் அவற்றில் பற்றிய தீ அணைக்கப் படாததால் அது பெரிதாகி கொழுந்துவிட்டு எரிந்தது. பாய்களும் பாய்மரத் தண்டுகளும், இணைப்புக் கயிறுகளும் பக்கப் பலகைகளும் பெரிதாக தீ வாயில் பட்டதால் சூடு தாங்காமல்

வெடித்தன. பிறகு பிளந்தன. பிறகு கடலில் மூழ்கத் தொடங்கின. ஆறு மரக்கலங்களில் நான்கு மரக்கலங்கள் மூழ்கி விட இரண்டு மரக்கலங்களே மிஞ்சியதால் காவிக் கொடி மரக்கலங்களைத் துரத்துவதை கைவிடச் சொன்னான் இக்பால்.

அப்போது இக்பாலிடம் அந்த மாலுமி ஒருவன் ''உபதலைவரே, நமது மரக்கலத்தில் அம்பு மூலம் இந்த ஓலை வந்து விழுந்தது'' என்று கூறி ஓலையைக் கொடுத்தான்.

அதில் 'உதயசந்திரன்' என்ற பெயர் மட்டும் இருந்தது.

☆

வாழ்க்கை என்பது ஆச்சரியமானது. அப்படிச் சொல்வதற்குக் காரணம் அடுத்த நிமிடம் என்ன நடக்கப் போகிறதென்று முன்கூட்டியே நமக்குத் தெரியாததுதான். இப்படி ஒவ்வொரு நிமிடத்தையும் நகர்த்த இயலாத நாம் எல்லாவற்றையும் நாம்தான் நடத்துவதாக இறுமாப்பு கொள்கிறோம். அல்லது நம்பிக்கை கொள்கிறோம். இறுமாப்பு கொள்கிறவன் அழிந்து போகிறான். நம்பிக்கை வைப்பவன் வாழ்ந்து காட்டுகிறான்.

கடலில் மரக்கலத்தில் பயணம் செய்யும்போது புயல் காற்று குறுக்கிட்டுவிட்டால் பயணம் செய்பவர்கள் அடுத்து நடக்கப் போவது நம் வசத்தில்தான் இருக்கப் போகிறது என்று இறுமாப்பு அடையவும் முடியாது. நம்பிக்கை வைக்கவும் முடியாது. எல்லாம் வல்ல இறைவனை வேண்டிக் கொள்வதைத் தவிர அவர்களால் வேறு எதுவும் செய்ய முடியாது. மரக்கலத்தை நடத்திய மாலுமிகள் திறமையானவர்கள்தான் என்றாலும் புயல் காற்றுக்கு முன்னால் அத்திறமைகள் எடுபடுவதில்லை. எனவே தங்களால் மரக்கலத்தைக் கட்டுப்படுத்த முடியாது என்று உணர்ந்த நிலையில் அவர்களும் சரி, அதிலே இருந்த வஜ்ஜிரபோதி உள்ளிட்ட பிட்சுக்களும் சரி அந்த நிலையில் இறைவனைத்தான் வேண்டிக் கொண்டார்கள்.

ஆனால் ஆபத்தைப் பற்றி அறியாமலும் ஆபத்துக்களைப் பற்றிக் கவலைப்படாதவனுமான உதயசந்திரன் கோரமான புயலை ரசிக்க முற்பட்டிருந்தானாதலால் நடக்கப் போவது என்ன என்பதைப் பற்றி யோசிக்கவில்லை. புயலானது கடல் நீரைப் புரட்டித் தள்ளியபோது அடிமட்டத்திலிருந்து புரட்டப்பட்ட சுறா ஒன்றின் நீண்ட வால் பகுதி மேலே எழுந்து தட்டியதால் மரக்கலத்தண்டுப் பகுதி ஒன்று உடைந்து கடலில் விழுந்ததோடு அதைப் பிடித்திருந்த உதயசந்திரனும் சேர்ந்தே விழுந்தான். என்ன

நடந்தது என்பதை உணர்வதற்குள் அவனது நினைவு தப்பியதால் கடலுக்குள் மூழ்கலானான்.

கரணம் தப்பினால் மரணம் என்று சொல்வதுண்டு. அதேசமயம் கரணம் தப்பினாலும் சிலர் உயிர் பிழைப்பதும் உண்டு. விதியும் ஆயுளும் வலுவாக இருந்தால் பேராபத்திலிருந்தும்கூட மீண்டுவிட முடியும்தான். அந்த வகையில் தான் உதயசந்திரனும் உயிர் பிழைத்தான் என்று சொல்ல வேண்டும். என்ன நடந்தது எப்படி நடந்தது என்பதை நம்மால் விவரிக்க இயலாது. இரண்டு நாட்கள் கழிந்த நிலையில் கடற்கரையில் அரை நினைவோடு கிடந்தான் உதயசந்திரன். கண்களைத் திறக்க விரும்பினான். திறக்க முடியவில்லை. உடம்பை அசைக்க முயன்றான். அதுவும் முடியவில்லை. உடம்பின் பல பகுதிகளில் வலி ஏற்பட்டிருந்தது. அவனது உடம்பின் மீது நண்டுகள் சில ஊர்ந்தன. சில நண்டுகள் கடித்தன. அதை அவனால் உணர முடிந்ததே தவிர எதுவும் செய்ய முடியவில்லை. மிகவும் பிரயத்தனப்பட்டு எழுந்து கொள்ள முயற்சித்தபோது பேரலை ஒன்று அவனை வந்து மூடிவிட்டுச் சென்றதால் மயக்கமானான்.

அதேசமயம் அக்கடற்கரையில் நான்கு யானைகள் வந்து கொண்டிருந்தன. ஒவ்வொன்றின் மீதும் நான்கு பெண்கள் அமர்ந்திருந்தார்கள். அவர்களோடு யானைப்பாகனும் இருந்தான். அப்பெண்கள் வாயாரச் சிரித்தபடியும் பேசிய படியும் இருந்தார்கள். கடற்கரையில் உதயசந்திரன் கிடந்ததை யானைப்பாகன் ஒருவன் சுட்டிக் காட்டியதும் அங்கே செல்லும்படிச் சொன்னார்கள் அப்பெண்கள். அவனருகே சென்றதும் யானைகள் தத்தம் கால்களை மடித்துக் கொண்டு அமர்ந்தன. பெண்கள் கீழே இறங்கி உதயசந்திரனைப் பார்த்தார்கள். ஒவ்வொருவரும் வேறு வேறுவிதமாக அவனது அங்கங்களைப் பற்றி புகழ்ந்தும் இகழ்ந்தும் வாயாடினார்கள். பிறகு யானைப்பாகனை நோக்கி, ''சரி, இவனை யானை மீது ஏற்றி நமது இருப்பிடத்திற்குக் கொண்டு செல்லலாம். இவனைக் கண்டால் நம் தலைவி பெருமகிழ்ச்சி அடைவாள்'' என்றார்கள்.

யானைப்பாகர்கள் உதயசந்திரனைத் தூக்கி யானை மீது கிடத்தினார்கள். பெண்களும் ஏறிக் கொள்ள, யானைகள் புறப்பட்டன.

உதயசந்திரன் மீண்டும் கண் விழித்தபோது தனக்கு உணர்வுகள் முழுமையாக வந்திருப்பதை அறிந்தான். தனது உடலில் பல இடங்களில் ஏதோ தடவப்பட்டிருந்ததை உணர்ந்தான். தான் ஓர்

அறையில் இருப்பதையும் மரக்கட்டிலில் படுத்திருந்ததையும் உணர்ந்தான். படுத்த நிலையிலிருந்து எழுந்து கட்டிலில் அமர்ந்தபோது ''இப்போது வலி எப்படி இருக்கிறது?'' என்ற குரல் ஒன்று கேட்டது.

கட்டிலுக்குக் கீழ்ப்புறமாக நாற்காலி ஒன்றில் அமர்ந்திருந்த மனிதர்தான் அக்கேள்வியைக் கேட்டார் என்பதை அறிந்த உதயசந்திரன் ''ஐயா! நீங்கள் யார் மருத்துவரா?'' என்று கேட்டான்.

''என் கேள்விக்கு இது பதிலல்ல'' என்றார் அந்த மனிதர்.

''வலி அவ்வளவாக இல்லை ஐயா. நீங்கள் தான் குணப்படுத்தியவரா?'' என்று கேட்டான் உதயசந்திரன்.

''ஆமாம். இரண்டு நாட்களாக உனக்குப் பக்கத்திலேயே தான் இருக்கிறேன். உணவு கூட இங்கேயே வந்துவிடுகிறது. இல்லத்திற்கே செல்ல வில்லை'' என்றார் அவர்.

''ஏன் அப்படி?'' என்றான் உதயசந்திரன்.

''உத்தரவு அப்படி'' என்றார் வைத்தியர்.

''யார் உத்தரவு?''

''அதற்கு உரிமையுடையவர்''

''அது யார்?''

''சொல்வதற்கு எனக்கு உரிமையில்லை.''

சற்று யோசித்துவிட்டு, ''ஐயா, எனக்கு என்ன சிகிச்சை அளித்தீர்கள்?'' என்று கேட்டான்.

''சிகிச்சைக்குப் பெயர் சீன மருத்துவம். சிறப்பானது. புராதனமானது.''

''எங்கள் நாட்டு ஆயுர்வேதச் சிகிச்சையைவிடவா?''

''இங்கே ஆயுர்வேத சிகிச்சைகள் இல்லை. இருப்பது சீன மருத்துவம் மட்டும்தான். உனது உடல் நிலைக்கு இதுதான் ஏற்றது. நேற்று முழுவதும் உனக்கு நினைவு திரும்பவில்லை. அதனால் தான் நான் இங்கேயே இருக்கும்படி ஆகிவிட்டது.''

''ஏன் அப்படி?''

''சிகிச்சை அப்படிப்பட்டது. இதைத் தொடங்கிவிட்டால் நினைவு தப்பிவிடும். சிகிச்சை ஒத்துக் கொண்டால் நினைவு திரும்பிவிடும். ஒத்துக் கொள்ளாவிட்டால் நினைவு திரும்பாது. எப்போது திரும்பும் என்று சொல்ல முடியாது. நினைவு திரும்பாமலேயே மரணம் சம்பவிப்பதும் உண்டு.''

''என் உடல்நிலையை விட சிகிச்சை முறை ஆபத்தானதாக இருக்கும் போலிருக்கிறது.''

''உண்மைதான். உயிரைக் காப்பாற்ற வேண்டிய கட்டாயத்தில் உயிரைப் போக்கக்கூடிய சிகிச்சையை மேற்கொண்டதற்குக் காரணம் உன் உடல் நிலைதான். நீ எங்கேயோ கடலில் விழுந்து கடல் உயிரினங்கள் பலவற்றால் தாக்கப்பட்டு உடல் முழுதும் நச்சுத் தன்மை பரவியிருந்தது. அதை போக்குவதற்கு விஷச் சிகிச்சையே மேற்கொள்ள வேண்டிய தாயிற்று. நஞ்சு நஞ்சை முறிக்கும் என்பது வழக்கு. ஆனால் சில சமயங்களில் தன்மை மாறி மரணத்திற்கு வழி வகுத்துவிடும். நல்லவேளையாக நான் பயந்தபடி அப்படி நடக்கவில்லை. என் சிகிச்சையை உன் உடல் ஏற்றுக் கொண்டது. உனக்கு நினைவும் திரும்பிவிட்டது. இனி பயமில்லை.''

''எப்படியானாலும் தங்கள் சிகிச்சைக்கு மிகவும் நன்றி ஐயா. நடுக்கடலில் புயல் வந்து தாக்கியது. நான் கடலில் விழுந்துவிட்டேன். அவ்வளவுதான் எனக்குத் தெரியும்.''

''உன்னை எந்த சக்தி கடலில் தள்ளியதோ அதே சக்திதான் உன்னை கரையிலும் சேர்த்திருக்கிறது. இந்நாட்டுக் கடல் பிராந்தியத்தில் வினோதமான கடல்வாழ் உயிரினங்கள் இருக்கின்றன. கடலில் விழுந்த நீ அவற்றின் வயிற்றில் போகாமல் கடற்கரையில் ஒதுங்கியது ஆச்சரியமான விஷயம்தான். உனக்கு உயிர் கெட்டி.''

''வைத்தியரே, நான் இருக்கும் இடம் எது?''

''நீ ஒதுங்கியது காம்போச நாட்டுக் கடற்கரையில். இப்போது இருப்பதும் அந்நாட்டின் முக்கிய நகரத்தில்தான்.''

''காம்போஜமா?''* என்று வியப்புடன் கேட்டான் உதயசந்திரன்.

''ஆம். ஆனால் நீ இந்தக் கடற்கரையில் ஒதுங்கியதை விட புயலிலேயே உயிர்துறந்திருக்கலாம்'' என்றார் வைத்தியர்.

காஞ்சியிலிருந்து கண்காணாத இடத்தில் இருக்கும் காம்போஜத்து கடற்கரையில் ஒதுங்கிய் விஷயமே ஜீரணிக்க முடியாத விந்தையாக இருக்க, அப்படி ஒதுங்கியதைவிட கடலிலேயே மாண்டிருக்கலாம் என்று வைத்தியர் கூறியது புதிரான

* தற்போது கம்போடியா என்று அழைக்கப்படும் நாடு தான் அக்காலத்தில் காம்போஜம் என்று அழைக்கப்பட்டது.

விந்தையாக இருக்கவே, ''நீங்கள் என்ன சொல்கிறீர்கள் என்பது எனக்கு விளங்கவில்லை'' என்றான் உதயசந்திரன்.

''விதி உன் வாழ்வில் விளையாடுகிறது வாலிபனே! இல்லையென்றால் நீ ஏன் மரக்கலத்தில் வரவேண்டும்? பல வருடங்களாக இக்கடற்பகுதியில் வராத புயல் இப்போது ஏன் வரவேண்டும்? புயலில் சிக்கிச் சிதறிப் போகாமல் நீ ஏன் இக்கடற்கரையில் ஒதுங்க வேண்டும்? ஒதுங்கிய நீ எதற்காக ராட்சஷ அழகியின் பணிப்பெண்களின் பார்வையில் பட வேண்டும்? எல்லாம் விதியின் விளையாட்டு வாலிபனே. விதியின் விளையாட்டு. அதை மாற்ற யாரால் முடியும்?'' என்றார் வைத்தியர்.

புதிருக்கு விடை கேட்டால் பதிலுக்கு மேன்மேலும் புதிர்களையே வைத்தியர் சொன்னதால் பைத்தியம் பிடித்துவிடும் போலிருந்தது உதயசந்திரனுக்கு.

நாகையிலிருந்து தான் புறப்பட்டது முதல் தனது கேள்விகளுக்கு இடக்குமடக்கான பதில்களே கிடைத்து வந்ததை நினைவு கூர்ந்த அவனுக்கு கடல் கடந்த நாட்டில் கூட அந்தப் போக்கு தொடர்ந்ததால் இதுவும் விதியின் விளையாட்டு தானோ என்று விளையாட்டாக எண்ணிக் கொண்ட உதயசந்திரன் ''வைத்தியரே! எங்கேயோ இருந்த நான் எங்கேயோ வந்து சேர்ந்து எதுவும் புரியாமல் இருக்கிறேன். இந்த நிலையில் நீங்கள் புதிர் போட்டுப் பேசுகிறீர்கள். விடையைக் கேட்டால் மேலும் குழப்புகிறீர்கள். இது நியாயமா?'' என்று கேட்டான்.

''வாலிபனே! இந்த நாட்டு மக்கள் மூடநம்பிக்கையில் மூழ்கிக் கிடப்பவர்கள்'' என்றார் வைத்தியர்.

''இது என் கேள்விக்கான பதில் இல்லை.''

''பொறு. நான் சொல்வதை முதலில் கேள். இங்கே உள்ளவர்களுக்கு புராதனமான பழக்க வழக்கங்களும் நம்பிக்கையும் நிலை கெடாமல் அப்படியே இருப்பதால் நியாயமில்லாத சில காரியங்களையும் அவர்கள் செய்ய வேண்டியிருக்கிறது. நாம் அதற்கு என்ன செய்ய முடியும்?''

''அதைப் பற்றி நமக்கென்ன வைத்தியரே? நான் கேட்ட கேள்விக்கு நேரான பதிலை அளிக்க உங்களால் முடியாதா?''

''நீ எதிர்பார்க்கும் பதிலை அளிக்க எனக்கு உரிமை இல்லை.''

''பதில் கூறுவதற்குக் கூடவா உரிமையில்லை.''

''சொன்னால் என் உயிர் போய்விடும். அந்த உயிரும் சாதாரணமாகப் போகாது. என்னை எருமை மாட்டின் பச்சைத் தோலால் இறுக்கிக் கட்டி விடுவார்கள். தோல் காயக்காய இறுகும். உள்ளேயிருக்கும் என் உடலின் ரத்த நாளங்கள் இறுகும். எலும்புகள் உடையும். சித்திரவதைப்பட்டுச் சாவேன்.''

''இதென்ன நாடா? நரகமா?''

''நாடல்ல. தண்டனையின் தன்மை மிகவும் கடுமை யானவை. தண்டனை கடுமையாக இருந்தால்தான் குற்றம் செய்ய நினைப்பவர்கள் பயப்படுவார்கள். குற்றங்கள் குறையும்.''

இந்த விஷயத்தில் வைத்தியர் கூறுவது உண்மைதான் என்றாலும் அது பற்றி விவாதிக்க உதயசந்திரன் விரும்ப வில்லை. அதுவும் உருப்படியான பதில்களைச் சொல்ல அச்சப்படும் மனிதருடன் பேசுவது பயனற்றது என்பதை உணர்ந்த அவன், ''எனக்கு பதில் சொல்லி நீங்கள் உயிரை விட வேண்டாம் வைத்தியரே. நடப்பது நடக்கட்டும். நான் இங்கிருந்து வெளியே செல்ல முடியுமா?'' என்று கேட்டாள்.

''நீயும் போக முடியாது. நானும் போக முடியாது. உன் காயங்கள் முழுவதுமாக குணமாக வேண்டும். அதுவரை நாம் இருவரும் இந்த மாளிகையில்தான் இருக்க வேண்டும். இங்கே எல்லா வசதிகளும் இருக்கின்றன.''

'குயிலைப் பிடித்து கூண்டில் வைப்பதும் மயிலைப் பிடித்து காலை ஒடிப்பதும் சுகத்திற்கான அடையாளங்களல்ல வைத்தியரே' என்று தனக்குள் சொல்லிக் கொண்ட உதயசந்திரன் பேச்சை அத்துடன் நிறுத்திக் கொண்டான்.

அவனைப் பணியாளர்கள் பூ போல பாதுகாத்து பராமரித்தார்கள். வைத்தியர் மிகவும் கவனமாகச் சிகிச்சைகளைச் செய்தார். உதயசந்திரன் யாரிடமும் பேசவில்லை. தான் மிக வேகமாகத் தேறி வருவதை உணர்ந்து சந்தோஷப்பட்டான்.

ஒரிருமுறை மாளிகையின் மேல் மாடத்திற்கு வைத்தியர் அவனை அழைத்துச் சென்றார். மாளிகைக்கு வெளியே அவன் கண்ட காட்சி அவனை திகைக்கச் செய்தது. அங்கே ஆண்களும் பெண்களும் கால்களில் விலங்கிட்ட நிலையில் பல்வேறு பணிகளைச் செய்து கொண்டிருந்தார்கள். ஆண் பணியாளர்களை ஆடவர்களும் பெண் பணியாளர்களைப் பெண்மணிகளும் வேலை வாங்கிக் கொண்டிருந்தார்கள். அவர்களின் கையில் நீண்ட பிரம்புகள் இருந்தன. பணியாளர்கள் தங்கள் பணியில் சற்று தளர்ந்தாலும் அவர்கள் முதுகில் பிரம்படி இரக்கமின்றி விழுந்தது.

அடிப்பவர்கள் அவர்களையெல்லாம் மனிதர்களாகவே கருதாமல் கண்டபடி அடித்தும் துன்புறுத்தியும் வேலை வாங்கினார்கள்.

வைத்தியரைப் பார்த்து ஏதோ கேட்க நினைத்த உதயசந்திரன் ''இவரிடம் உருப்படியான பதில் வரப் போவதில்லை. எதற்குக் கேட்க வேண்டும்?'' என்று நினைத்து பேசாமலிருந்தான்.

அதைக் கவனித்த வைத்தியர் ''இது தண்டனைக் கூடம். இதுபோன்ற தண்டனைக் கூடங்கள் பல்வேறு இடங்களில் இருக்கின்றன. பல்வேறு குற்றங்களைப் புரிந்தவர்கள் குற்றம் நிரூபணமான பிறகு இங்கே அடிமைகளாக அனுப்பப் படுவார்கள். அடிமைகள் என்றால் இங்கே விலங்குகள் என்று பொருள். இங்கே வந்தபின் விலங்குகளைப் போலத்தான் நடத்தப்படுவார்கள். எல்லாவித கடுமையான பணிகளும் அவர்களுக்குக் கற்றுத்தரப்படும். பிறகு அவர்களே அந்தப் பணியை ஆயுள் முழுக்கச் செய்ய வேண்டும். இதுதான் ஆயுள் தண்டனை. இங்கே வந்தவர்கள் ஆயுள் முடிந்து சடலமாகத்தான் வெளியேற முடியுமே தவிர மன்னிக்கப்பட்டோ தண்டனை குறைக்கப்பட்டோ வெளியே அனுப்பப்படுவதில்லை. இங்கே வந்துவிட்ட குற்றவாளியை மன்னர் கூட காப்பாற்ற முடியாது'' என்றார்.

உதயசந்திரன் கேட்டுக் கொண்டானே தவிர எதையும் கேட்கவில்லை.

ஒரு வார காலத்தில் அவன் பூரண குணமானான்.

அதையடுத்து அவனை அழகுபடுத்தும் சிகிச்சைகளும் அளிக்கப்பட்டன.

பல்லவ சேனாதிபதி தன்னை அடிக்கடி மன்மதன் என்று கூறி வந்ததை எண்ணிப் பார்த்த உதயசந்திரன் 'தற்போது என்னைப் பார்த்தால் என்ன சொல்லுவார்?' என்று நினைக்கிற அளவிற்குத் தோற்றப் பொலிவைப் பெற்றான்.

வைத்தியர் ஓலையில் எதையோ எழுதி பணியாளனிடம் கொடுத்தார்.

அதற்கு அடுத்த நாள் இரவு உதயசந்திரனைக் காண்பதற்கு தண்டனைக் கூட காவலர் வரப் போவதாகச் சொன்னார் வைத்தியர்.

காவலரும் வந்தார்.

அவர் கூறிய செய்தியைக் கேட்ட உதயசந்திரன் ''விதி என்னிடம் இத்தனை மோசமாகவா விளையாட வேண்டும்?'' என்று நொந்து கொள்ளவும் செய்தான்.

★★★



66

ஊர்வசி

தண்டனைக் கூடத்தின் காவலனாக வந்தது ஒரு பெண் என்பதை அறிந்ததும் வியப்பாக இருந்தது உதயசந்திரனுக்கு. ஈவிரக்கமில்லாத தண்டனைகளை நிறைவேற்றும் பொறுப்பாளியாக பெண்ணொருத்தி எப்படி இருக்க முடியும் என்று தோன்றியது அவனுக்கு. அதற்கேற்றாற்போல் தண்டனைக் கூடத்தின் பொறுப்பாளியான அந்த பெண் பேரழகியாக இருந்தாள். வயது முப்பது இருக்கலாம் என்று தோன்றினாலும் வயதை மீறிய அழகு அவளது அங்கங்களிலெல்லாம் கொப்பளித்தது. வைத்தியர் குறிப்பிட்ட ராட்சஷ அழகி இவளாகத் தான் இருப்பாளோ என்று நினைத்த உதயசந்திரன் சற்றே பேச்சை இழந்தான்.

அவள் சர்வசாதாரணமாக வந்து ஆசனத்தில் கம்பீரமாக அமர்ந்தாள். வெட்கம் சிறிதுமின்றி உதயசந்திரனை உச்சி முதல் பாதம் வரை கவனித்தாள். அவனுக்கு அழகு கூட்டப் பட்டிருந்தது மட்டுமின்றி நேர்த்தியான ஆடைகளும் ஆபரணங்களும் அணிவிக்கப்பட்டிருந்ததால் ராஜகுமாரனைப் போலக் காட்சியளித்தான். தலையை திருப்தியோடு அசைத்துக் கொண்ட அவள் அருகில் இருந்த வைத்தியரைப் பார்த்து, ''உங்கள் கவனிப்பு மிகவும் பாராட்டும்படி இருக்கிறது. மிக்க சந்தோஷம்'' என்று சொல்லி தன் கழுத்தில் இருந்த முத்துமாலை ஒன்றை எடுத்து அவரிடம் வீசினாள்.

அதைப் பரவசத்தோடு எடுத்து கண்ணில் ஒற்றிக்கொண்ட வைத்தியர் அவளை வணங்கிவிட்டு அகன்றார்.

அவள் உதயசந்திரனைப் பார்த்து, ''உனக்கு மிகவும் நன்றி'' என்றாள்.

அவளது பேச்சு புரியாததால், ''எதற்கு நன்றி?'' என்று கேட்டான்.

அவள் அவனை ஊடுருவிப் பார்த்துவிட்டு, ''நீ அழகாக இருப்பதற்கு'' என்றாள்.

''அதற்கு நீங்கள் நன்றி சொல்ல வேண்டியது பிரம்ம தேவனுக்கும் உங்கள் நாட்டு வைத்தியர்களுக்கும்தான்'' என்றான் உதயசந்திரன்.

''நன்றாகவே பேசுகிறாய்'' என்று பாராட்டிய அவள் ''அப்படியானால் நீ இங்கு வந்ததற்காக உனக்கு நன்றி கூறலாமா?'' என்று கேட்டாள்.

''அந்த நன்றியைப் புயலுக்கும் அந்தக் கடலுக்கும் சொல்லுங்கள். அவை தான் என்னை இங்கே கொண்டு வந்து சேர்த்திருக்கின்றன'' என்றான் உதயசந்திரன்.

''மறுப்பு சொல்வதில் மன்னனா நீ?'' என்று கண்கள் விரியக் கேட்டாள் அவள்.

''நான் மறுக்கவில்லை. உண்மையைச் சொல்கிறேன்'' என்று சொன்ன உதயசந்திரன், ''நீங்கள் இந்த தண்டனைக் கூடத்தின் பொறுப்பாளியா?'' என்று கேட்டான்.

''ஆமாம். அதற்கென்ன?''

''நம்ப முடியவில்லை.''

''ஏன்?''

''இவ்வளவு அழகான நீங்கள் இரக்கமற்ற தண்டனைகளை வழங்க முடியும் என்று என்னால் நம்ப முடியவில்லை.''

''அகம் வேறு புறம் வேறு வாலிபனே. அகத்தில் நானூறு தோன்றும். புறத்தில் நானூறு தோன்றும். இரண்டிற்கும் சம்பந்தமிருக்காது. அழகும் மென்மையும் உடம்புக்குத்தான். மனத்திற்கு இல்லை.''

''உங்களுக்கு ஏன் இந்தக் கடினமான பொறுப்பு? வேறு பொறுப்புகள் இல்லாமலா போய்விட்டது?''

''இந்தப் பொறுப்பை நானாக விரும்பி ஏற்றுக் கொண்டேன். ஒரு சவாலாக ஏற்றுக் கொண்டேன்.''

''எதற்காக?''

''ஆடவர்கள் உன்னைப் போலவே முட்டாள்தனமாக நினைத்தார்கள். பெண் பெண் தான் என்றார்கள். அழகான பெண்ணிடம் அன்புதான் மலரும் என்று சொன்னார்கள். மன்னர் கூட என்னைச் சந்தேகத்துடன் பார்த்தார். நான் எல்லோரது ஊகங்களையும் பொய்யாக்கினேன். எல்லோரும் என்னைப் பார்த்து இன்று

வியக்கிறார்கள். என் நடவடிக்கையைப் பார்த்து மன்னர் புதிய பொறுப்பொன்றையும் கொடுத்தார். அதன் விளைவு தான் நீ.''

''நானா?''

''வாலிபனே! உன்னால் இந்த நாட்டிற்கு மகத்தான நன்மை விளையப்போகிறது. கடற்கரையில் உன்னைக் கண்டெடுத்த பெண்கள் என்னிடம் கொண்டு வந்தபோது உன் அழகைக் கண்டதும் இந்த நாட்டிற்கு நன்மை வந்துவிட்டது என்று நினைத்தேன். மன்னருக்கும் செய்தி அனுப்பினேன். அவருக்கு அளவிலா ஆனந்தம். நாட்டிற்கு நன்மை வரப் போகின்ற தென்றால் மகிழாத மன்னர் தான் யார்?''

''எனக்கும் இந்த நாட்டிற்கும் நாட்டு மக்களின் நன்மைக்கும் என்ன சம்பந்தம்?''

''உனக்கும் புயலுக்கும் என்ன சம்பந்தமோ அந்தச் சம்பந்தம்தான்.''

''எனக்குப் புரியவில்லை.''

''உனக்கும் புயலுக்கும் சம்பந்தம் ஒன்றுமில்லை. நீ ஒரு வழியில் வந்தாய். அது ஒரு வழியில் வந்தது. இரண்டும் மோதியபோது சம்பந்தம் ஏற்பட்டுவிட்டது அல்லவா?''

''எனக்கு பதில் கூறுகிறவர்கள் எல்லாம் சுற்றி வளைத்துப் பீடிகை போட்டுக் குழப்புகிறார்கள்.''

''நானும் குழம்பித்தான் இருக்கிறேன்'' என்று சொன்ன அவள் ஆசனத்தை விட்டு எழுந்து அவனுக்கருகில் வந்து ''வாலிபனே! உன் பெயர் என்ன?'' என்று கேட்டாள்.

''உதயசந்திரன்.''

''அழகான பெயர். என் பெயர் என்ன தெரியுமா? ஊர்வசி.'' என்று சொன்ன அவள் அவனை விட்டு விலகி சாளரத்தருகே நின்று கொண்டு, ''எந்த நாட்டு நன்மைக்காக நீ கிடைத்தாய் என்று நான் மகிழ்ந்தேனோ - அந்த மகிழ்ச்சி திசைமாறிக் கொண்டிருக்கிறது'' என்றாள்.

மீண்டும் மீண்டும் அவள் சுற்றி வளைத்துக் கொண்டே பேசியதால் சற்றே சோர்வடைந்த அவன், ''ஏன்? என்ன ஆயிற்று? உங்கள் நாட்டு நன்மைக்கு நான் பயன்படாமல் போய் விட்டேனா?'' என்று கேட்டான்.

''இல்லை. இல்லை. உன்னை நான் வேறு மாதிரி பயன்படுத்திக் கொள்வேனா என்ற குழப்பம்.''

''என்ன குழப்பம்?''

''உதயசந்திரா! இந்த நாட்டில் அதிசயமான விஷயம் ஒன்றிருக்கிறது. அது தெரியுமா?''

''தெரியாது.''

''இங்கே இருக்கும் பெண்கள் எல்லோருமே அழகாக இருப்பார்கள். ஆண்கள் அப்படி இல்லை.''

''ஆண்கள் அழகாக இருக்கமாட்டார்களா?''

''ஆமாம்.''

''ஏன்?''

''என்ன சாபமோ? தெரியாது. ஆகவே தான் ஆண்கள் பெண்களை விலை கொடுத்து வாங்கி ஒன்றுக்கு ஐந்தாக மணம் செய்து கொள்கிறார்கள். மன்னரின் அந்தப்புரத்தில் இந்நாட்டுப் பெண்களே ஐநூறு பேர் இருக்கிறார்கள்.''

''நீங்கள் திருமணம் செய்து கொண்டீர்களா?''

''செய்து கொண்டேன் உதயசந்திரா. ஐந்து பேரை மணந்து கொண்டேன்.''

''ஐந்து பேர்களையா?''

''ஏன் வியக்கிறாய்? உங்கள் நாட்டு இதிகாசங்கள் இங்கே பரவிவிட்டன. மகாபாரதத்தில் திரௌபதி ஐந்து பேரை மணந்துகொள்ளவில்லையா?''

''அதற்குக் காரணம்...?''

''அதை விடு. நான் திரௌபதி இல்லை. ஏனென்றால் நான் மணந்த ஐந்து பேரையும் கணவன் என்ற பொறுப்பிலிருந்து விடுவித்துவிட்டேன்.''

''ஏன்?''

''சகிக்கவில்லை.''

''பிறகு எப்படி மணந்தீர்கள்?''

''திருமணமானால் சரியாகும் என்று சொன்னார்கள். எனக்கோ வெறுப்புதான் அதிகமாகிவிட்டது.''

''இந்த வெறுப்புக்குப் பரிகாரம் ஏது?''

''இல்லை என்றுதான் நினைத்தேன். உன்னைப் பார்த்த பிறகுதான் இருப்பதாகத் தோன்றுகிறது.''

அவள் என்ன நினைக்கிறாள் என்பது புரிந்தது உதயசந்திரனுக்கு.

''நான் சொல்வது உனக்குப் புரிகிறதா உதயசந்திரா?'' என்று கேட்டாள் அவள்.

''புரிகிறது.''

''உன்னை என் பணிப்பெண்கள் கடற்கரையிலிருந்து கொண்டு வந்தபோது என் மனத்தில் சலனம் எதுவும் இல்லை. நாட்டுக்கு நல்ல காலம் வந்துவிட்டது என்றுதான் நினைத்தேன். ஆனால் இன்று உன்னைக் கண்ட பிறகுதான் குழப்பம் வந்துவிட்டது. உன்னை மணந்து கொண்டால் என்ன என்று தோன்றுகிறது.''

''நாட்டு மக்களின் நலம்?''

''அது மிக முக்கியமானதுதான். அதற்காக நீண்ட காலமாகக் காத்திருந்தோம். தவம் இருந்தோம். அந்தத் தவம் தான் உன்னை கடற்கரையில் வீசியிருக்கிறது. நீ கிடைத்தது பற்றி அவசரப்பட்டு மன்னருக்கும் சொல்லிவிட்டேன். இந்நேரம் அவர் உரிய ஏற்பாடுகளை செய்யத் தொடங்கியிருப்பார். என்ன செய்வ தென்று தெரியவில்லை.''

''அவர் வந்தால் என்ன? அவரிடம் சொல்ல வேண்டியது தானே?''

''சொல்ல முடியாது.''

''ஏன்?''

''அது அப்படித்தான். சொல்வது அர்த்தமற்றது.''

''மக்களின் நலத்திற்கும் நீங்கள் என்னை மணந்து கொள்வதற்கும் சம்பந்தம் என்ன? அது வேறு இது வேறு அல்லவா?''

''வேறு வேறுதான். ஆனால் இரண்டும் நடக்க முடியாது. ஏதாவது ஒன்றுதான் முடியும்.''

ஊர்வசி தொடர்ந்து சுற்றி வளைத்துப் பேசிக் கொண்டு போனதைக் கண்ட உதயசந்திரன், ''ஊர்வசி!'' என்றான்.

''என்ன?''

''நான் திருமணமானவன்.''

''நானும்தான்.''

''ஆனால் உன்னை நான் மணக்க முடியாது.''

''அது பிரச்சனை இல்லை. வசியம் செய்வதற்கு நிறைய பேர் இருக்கிறார்கள். இங்கே உள்ள பல பெண்களை ஆடவர்கள் வசியம் செய்து அனுபவிக்கிறார்கள்.''

''அது போல் நீயும்...''

''நீ மறுத்தால் வேறு வழி?''

''அது கேவலம் அல்லவா?''

''நான் யோசிப்பது அதைப்பற்றியல்ல. மன்னரைப் பற்றித்தான். நான் உங்களை மணப்பதாகச் சொன்னால் போதும். என் தலையை வாங்கிவிட்டுத்தான் மறுவேலை பார்ப்பார்'' என்று கூறிவிட்டு ஏதோ ஒருவித தவிப்புக்கு ஆளானவளைப் போல் இங்கு மங்குமாய் நடந்தாள்.

''நான் ஒரு யோசனை சொல்லட்டுமா?'' என்று கேட்டான் உதயசந்திரன்.

''ஒன்றும் வேண்டாம். நீ இங்கேயே இரு. நாளைக்கு நான் வருகிறேன்'' என்று சொன்ன ஊர்வசி பணியாளர்களை அழைத்தாள்.

அவர்கள் வந்ததும், ''வைத்தியரை வரச்சொல்லுங்கள். இவரைக் கவனமாக பாதுகாக்கச் சொல்லுங்கள். இவர் மீது தூசு பட்டால் உங்கள் அனைவரையும் செக்கில் போட்டு ஆட்டுவேன்'' என்று கூறிவிட்டுச் சென்றாள்.

☆

''வேண்டாம் அம்மா. இது விபரீதமான ஆசை விட்டுவிடுங்கள்'' என்றனர் தோழியர்.

''ஆசை விபரீதமானதல்ல. இயற்கை'' என்றாள் ஊர்வசி.

''இந்த ஆசை இயற்கையானதல்ல அம்மா. அந்த வாலிபர் இப்போது நாட்டிற்குச் சொந்தம். நீங்கள் உரிமை கொண்டாட முடியாது. ஆகவே ஆசையை விட்டுவிடுங்கள்.''

''விடாவிட்டால் என்ன ஆகும்?''

''விபரீதம் உண்டாகும். மன்னர் உங்களைத் தண்டிப்பார். ஏராளமானவர்களைத் தண்டித்திருக்கும் உங்களுக்கு நாங்கள் சொல்ல வேண்டியதில்லை. உங்களைச் சித்திரவதை செய்வார்.''

''இவரை விட்டால் வேறு யாரும் கிடைக்கமாட்டாரா?''

''இவர் கிடைப்பதற்கே ஒரு வருடம் ஆகியது. மீண்டும் ஒருவர் கிடைக்க வேண்டுமானால் கடலில் மறுபடியும் புயல் வர

வேண்டும். மரக்கலம் வரவேண்டும் அதில் அழகான வாலிபர் இருக்க வேண்டும். அவர் உயிரோடு கரையில் ஒதுங்க வேண்டும். துஷ்ட மிருகங்கள் அவரை அணுகுவதற்கு முன்பு நாம் காண வேண்டும். இதெல்லாம் நடக்குமா? நமது நாட்டுக் கடல் பகுதியில் புயல் வருவது அபூர்வம். இது தெரியாதா உங்களுக்கு?''

''தெரியும். தெரியும். அதோடு இந்த வாலிபர் கிடைத்தது பற்றி மன்னருக்குத் தகவல் சொல்லிவிட்டீர்கள். அவரும் விழா ஏற்பாடுகளைச் செய்திருப்பார். இந்த நிலையில் அந்த வாலிபரை மன்னரின் கண்ணிலிருந்து எப்படி மறைக்க முடியும்?''

''அவன் தப்பி ஓடிவிட்டதாகச் சொல்லிவிட்டால்?''

''அது உங்களுக்குத்தான் நீங்காக முடியும். ஏனென்றால் அவன் உங்கள் பொறுப்பில்தான் விடப்பட்டான்.''

''உருப்படியான யோசனை சொல்லாமல் ஆளாளுக்கு பயமுறுத்திக் கொண்டிருக்கிறீர்கள். நீங்களெல்லாம் என் தோழிகளே அல்ல.''

''கோபப்படாதீர்கள் அம்மா. எங்களுக்கு நீங்கள் முக்கியம். உங்கள் உயிர் முக்கியம். அதுபோய் விடக் கூடாதே என்றுதான் நாங்கள் கவலைப்படுகிறோம். மற்றபடி நீங்கள் எதைச் சொன்னாலும் நாங்கள் செய்யத் தயாராக இருக்கிறோம்.''

''நீங்களெல்லாம் பரிபூரணமாக ஒத்துழைத்தால் என்னால் சாதிக்க முடியும்.''

''நாங்கள் எதற்கும் தயார். என்ன செய்ய வேண்டும் என்று சொல்லுங்கள்.''

''நாளைக்கு மன்னர் வந்துவிட்டுப் போகட்டும். பிறகு என் திட்டத்தைச் சொல்கிறேன்.''

☆

மறுநாள் விமரிசையாக அக்கடற்கரை நகரமான மரகதப் பட்டினத்திற்கு வரவேற்கப்பட்டான் காம்போஜ நாட்டு மன்னனான சூர்யவர்மன். வந்ததுமே நேராக உதயசந்திரனின் இருப்பிடத்திற்கு வந்தான். உதயசந்திரனின் எழிலான தோற்றத்தைக் கண்டு பெருவியப்படைந்தான்.

''எப்படி நமது அதிர்ஷ்டம் மன்னவா?'' என்று கேட்டாள் ஊர்வசி.''

''சாதாரண அதிர்ஷ்டமல்ல. பேரதிஷ்டம். நமது நாட்டின் விடிவிற்காகவே பிரம்மதேவன் இப்படியொரு சிருஷ்டியை

வடிவமைத்து காலதேவனிடம் ஒப்படைத்திருக்கிறான். நமது நாட்டை நீடித்திருக்கும் துன்பம் விலகிவிடும். மக்கள் இனி பீதியின்றி வாழ்வார்கள். உனக்கு என் நன்றி ஊர்வசி. உனக்கு இனி என் அரண்மனையிலேயே பணி கிடைக்கும்'' என்று பரவசத்தோடு சொன்னான் மன்னன்.

பாரத நாட்டு மன்னர்களைப் போலவே இருந்தான். காம்போஜ நாட்டு மன்னனான சூரியவர்மன். பெயர் கூட பாரத நாட்டு மன்னர்களின் பெயரைப் போலவே இருந்தது. சங்க காலத்திலிருந்தே பாரதநாடு கிழக்கு கடல் நாடுகளுடன் தொடர்பு கொண்டிருந்தது. குறிப்பாக தமிழ்நாடு அதிகமான தொடர்புகளைக் கொண்டிருந்தது. அத்தொடர்பு வணிக ரீதியாக மட்டுமின்றி கலாச்சார ரீதியாகவும் இருந்ததால் தமிழகக் கலாச்சாரமும் பாரத நாட்டுக் கலாச்சாரமும் வெகுவாக அந்த நாடுகளில் பரவின. சிவன் கோயில்களும் திருமால் கோயில்களும், புத்த விஹாரங்களும் அந்த நாடுகளில் தோன்றின. பாரத நாட்டு இதிகாசங்களான இராமாயணமும் மகாபாரதமும் அக்கலாச்சாரத்துடன் பரவி சிற்ப வடிவங்களையும் பெற்றன. அதற்கான அடையாளங்களை சாவகம் என்று அழைக்கப்பட்ட ஜாவா, சிங்கபுரம் என்று அழைக்கப்பட்ட சிங்கப்பூர், மலைய நாடு என்று அழைக்கப்பட்ட மலேசியா, காழகம் என்று அழைக்கப்பட்ட பர்மா, சியாம் என்று அழைக்கப்பட்ட தாய்லாந்து, ஸ்ரீ விஜயம் என்று அழைக்கப்பட்ட சுமத்திரா ஆகிய நாடுகளில் இன்றும் காணலாம்.*

மன்னனுக்குப் பின்னால் மருண்ட விழிகளுடன் மானைப் போல நின்றிருந்தாள் ஒரு பெண். தெய்வ விக்ரகம் போலிருந்த அவள் மன்னனின் காதில் ஏதோ சொல்ல மன்னன் சற்றே கோபப்பட்டு, ''நீ பேசாமல் இரு. உனக்கு ஒன்றும் தெரியாது'' என்று சொல்லிவிட்டு ஊர்வசியிடம் ''இந்திரபுரத்தில் விழா ஏற்பாடுகள் நடக்கின்றன. பௌர்ணமியன்று விழா நடக்கிறது. இவனைப் பத்திரமாக அங்கே கொண்டு செல்ல வீரர்களை அனுப்புகிறேன். அவர்களோடு நீயும் வந்து சேர்'' என்றான்.

மீண்டும் ஊர்வசியைப் பார்த்து ''இதோ பார் ஊர்வசி. இந்த ஊருக்கு மரகதப் பட்டிணம் என்ற பெயர் ஏன் வந்ததோ தெரியாது. ஆனால் இப்பட்டிணத்திற்கு மரகதமாக இவ் வாலிபன் வந்து சேர்ந்திருக்கிறான். இவனைக் கடத்துவதற்குப் பலர் முயலலாம். குறிப்பாக பெண்கள் கூட்டம் இதற்கு முயற்சி செய்யும்.

* 'தமிழக - சாவக கலைத் தொடர்புகள்' - அ.ராகவன்.

அப்படியொரு வதந்தி இந்திரபுரத்திற்கு வந்துவிட்டது. ஆகவே நீ மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். இதில் ஏதாவது கோளாறு நடந்தால் நான் நரகத்தின் மன்னனாக மாறுவேன். நினைவிருக்கட்டும்'' என்று பயங்கரமாக எச்சரித்துவிட்டுச் சென்றான்.

எல்லாவற்றையும் கவனித்துக் கொண்டிருந்த உதய சந்திரனுக்கு பிரமிப்பாக இருந்தது. தான் அழகாக இருப்பதைப் பற்றி ஒவ்வொரு வரும் பேசிக் கொள்வது அவனுக்குச் சிரிப்பாக இருந்தது. 'என்ன நடக்கப்போகிறது? நடக்கப் போகும் சம்பவத்திற்கும் தனக்கும் என்ன சம்பந்தம்?' என்று தனக்குள் கேட்டுக் கொண்டான். ஆனால் விடை சொல்வதற்கு யாரும் வரவில்லை.

மன்னனை வழியனுப்பிவிட்டு ஊர்வசி மட்டும் திரும்பி வந்தாள்.

உதயசந்திரனை விழுங்கிவிடுவதுபோல் பார்த்த அவள், ''உன்னை அப்படியே கடித்துத் தின்று விடட்டுமா?'' என்று கேட்டாள்.

''செய்யேன். எனக்கு எந்த ஆட்சேபணையும் இல்லை'' என்றான் உதயசந்திரன்.

''உனக்கு என்னைப் பார்த்தால் கேலியாக இருக்கிறதா?''

''இல்லை. அனுதாபமாக இருக்கிறது.''

''அதுதாபப்படுவதும் ஒருவகை கேலிதான்'' என்று சொன்ன அவள் அவனை நெருங்கி அவனது காதில் ஏதோ சொன்னாள்.

உதயசந்திரன் சிரித்தான்.

''சிரிக்காதே உதயசந்திரா - என் நிலையைப் புரிந்து கொள்.''

''நீ விரும்பியது மட்டும் நிறைவேறிவிட்டால் போதுமா?'' என்று கேட்டான் உதயசந்திரன்.

''போதாதுதான்.''

''பின்?''

அவளால் பதில் சொல்ல முடியவில்லை. சிறிது நேரம் மௌனமாக இருந்துவிட்டு, ''உன்னை விட மாட்டேன். திட்டம் தீட்டிவிட்டேன். காத்திரு'' என்றாள்.

அப்போது வைத்தியர் வந்தார்.

அவரைப் பார்த்த ஊர்வசி, ''வைத்தியரே, முத்துமாலையைக் கொடுத்தேனே நினைவிருக்கிறதா?'' என்று கேட்டாள்.

''ஆகா.''

''அதைப்போல இன்னும் எத்தனை முத்துமாலை வேண்டுமானாலும் தருகிறேன்.''

''தாராளம்.''

''இவரை தூசு விழாமல் பார்த்துக் கொள்வது உம் பொறுப்பு.''

''அதைத்தான் செய்து வருகிறேன்.''

''இன்னும் சிறப்பாகச் செய்யுங்கள்.''

''அப்படியே ஆகட்டும்.''

ஊர்வசி அகன்றாள்.

''என்ன வாலிபனே! நீ வந்த வேளை எனக்கு நல்ல காலம் தான்'' என்றார்.

''நாட்டுக்கே நல்ல காலம் என்னும்போது உங்களுக்கும் தான்'' என்றான் உதயசந்திரன்.

அப்போது அருகிலிருந்து கண்டாமணி ஒன்று பெரிதாக ஒலித்தது.

இரவு நேரத்தில் அப்படி திடீரென எழுந்த ஒலி எல்லோரையும் அதிரச் செய்தது.

''இது என்ன ஒலி வைத்தியரே?'' என்று கேட்டான் உதயசந்திரன்.

''மன்னரின் குலகுரு வருகிறார். அதற்கான அறிவிப்பு இது'' என்றார் வைத்தியர்.

''அவர் எதற்கு வருகிறார்?''

சொன்னார் வைத்தியர்.

அதிர்ந்தான் உதயசந்திரன்.

☆☆☆



67

வைத்தியாரின் விவரணம்

திடீரென இரவு நேரத்தில் ஊரே அதிர்வது போல் பெரிய மணியோசை எழுந்ததுமே இது என்ன ஓசை என்று உதயசந்திரன் கேட்டதும்; இது மன்னரது குலகுரு இங்கே வந்திருப்பதை அறிவிக்கும் ஓசை என்று வைத்தியர் சொன்னதும் அவர் இங்கே எதற்காக வருகிறார் என்று கேட்டான் உதயசந்திரன்.

''உன்னைக் காண்பதற்காகத்தான்'' என்றார் வைத்தியர்.

''என்னை எதற்காகப் பார்க்க வேண்டும்?''

''அது சம்பிரதாயம்.''

''என்ன சம்பிரதாயம்?''

''விழாவில் பங்கு பெறும் முக்கிய விருந்தாளியை அவர் பார்வையிட்டு ஒப்புதல் கொடுத்தால்தான் விழா நடக்கும்.''

''என்ன விழா அது?''

''ஒரு வருடத்திற்கு மேலாக ஆவலோடு காத்திருந்த விழா.''

''அது என்ன விழா வைத்தியரே?''

''மக்களின் சுபிட்சத்திற்காக நடைபெறும் விழா.''

''விழாவில் மக்களின் சுபிட்சத்திற்காக யாகங்கள் நடக்குமா?''

''யாகங்கள் ஏற்கெனவே நடந்து கொண்டிருக்கின்றன. பௌர்ணமி அன்று விழா முடிவடைகிறது. அன்று தான் முக்கிய நிகழ்ச்சி நடக்கும்.''

''என்ன முக்கிய நிகழ்ச்சி?''

''வளைவான ஒரு மரக்கட்டை இருக்கும். அதன் மீது படுக்க வைத்து தலையை வெட்டுவார்கள். ரத்தம் கொப்பளித்துச் சிதறும். உடம்பு ஒரு புறமும் தலை ஒரு புறமும் துடிக்கும். பிறகு அடங்கும். அதோடு பலி முடிவடைகிறது.''

''பலியா?''

''ஆம். நரபலி.''

''யாரை பலியிடுவார்கள்?''

''இன்னுமா தெரியவில்லை? உன்னைத்தான்.''

இதைக் கேட்டதும் வீரனான உதயசந்திரனின் குலை நடுங்கியது. போரில் பலரை வெட்டிச் சாய்த்த அவனுக்கு இந்த நரபலி அச்சத்தையே தந்தது.

''என்னை ஏன் பலியிட வேண்டும்?'' என்று கலங்கிய நிலையில் கேட்டான் உதயசந்திரன்.

''நீ அழகாக இருப்பதால்'' என்றார் வைத்தியர்.

''அழகாய் இருப்பது குற்றமா?''

''இல்லை. அதிர்ஷ்டம். இந்த நாட்டின் அதிர்ஷ்டம்.''

''நான் அழகாய் இருப்பது இந்த நாட்டின் அதிர்ஷ்டமா?''

''வாலிபனே, உனக்கு ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். இந்நாட்டு வாலிபர்கள் இல்லை, ஆடவர்கள் அழகற்றவர்கள்.''

''அதற்காக அழகானவன் வந்தால் பலியிட்டு விடுவீர்களா?''

''நாட்டு நலனுக்காக நடக்கிறது''

''உங்கள் நாட்டு நலனுக்காக நான் ஏன் பலியாக வேண்டும்?''

''உன்னைத் தேடிப்பிடித்து வந்து பலியிடவில்லை. நீயாக இந்த நாட்டுக் கடற்கரையில் ஒதுங்கினாய். அதுவும் தேவையான நேரத்தில் கிடைத்தாய். அழகாகவும் இருந்தாய். ஆகவே பலியிடுகிறார்கள்?''

''என்னைப் பலியிடுவதைத்தான் நாட்டின் நலன் என்று சொன்னீர்களா?''

''ஆமாம்.''

''வைத்தியரே! இதென்ன பைத்தியக்காரத்தனமாக இருக்கிறது? என்னைப் பலியிட்டால் நாடு எப்படி நலன் பெறும்?''

''வாலிபனே! இந்த நாட்டு மக்கள் மூடநம்பிக்கைகளில் மூழ்கியிருப்பவர்கள். இதை ஏற்கெனவே உனக்குச் சொன்னேன்.''

''ஆமாம். அதற்கென்ன?''

''இந்த நாட்டைச் சேராத அயல்நாட்டு அழகன் ஒருவன் அவனாக இங்கே வருவான். அவனைப் பலியிட்டால் நாட்டிற்கு உண்டான அபாயம் நீங்கி சுபிட்சம் வரும் என்று சொன்னார்கள்.''

''யார் சொன்னது?''

''இந்த நாட்டின் தலைசிறந்த மந்திரவாதிகள்.''

''மந்திரவாதிகளின் பேச்சைக் கேட்டு ஒருவனைப் பலியிடுவது அறிவீனமல்லவா?''

''மந்திரவாதியின் சொல் இங்கே மன்னன் முதல் அனைவ ராலும் மகேசனின் சொல்லாக நம்பப்படுகிறது. அதை மாற்ற யாராலும் முடியாது.''

''இந்த நாட்டிற்கு என்ன அபாயம் வந்திருக்கிறது?''

''அது பயங்கரமானது அப்பனே.''

''இருக்கட்டும். சொல்லுங்கள்.''

''காம்போஜத்தில் அதுவும் குறிப்பாக தலைநகரான இந்திரபுரத்தில் ராட்சத விலங்கொன்று அடிக்கடி தோன்றுகிறது. எங்கேயிருந்து வருகிறது எங்கே சென்று மறைகிறது என்பது தெரியவில்லை. இங்கேயுள்ள மந்திரவாதிகள் அதைக் கண்டார்கள். அந்த ராட்சஷ மிருகம் கம்சோகனஸ் என்றும் உலகிலேயே தரையில் வாழும் ராட்சஸ மிருகங்களில் மிகப் பெரியது* என்பதை அறிந்தார்கள். அது இந்த நாட்டை விட்டு நீங்க வேண்டுமானால் மேலே சொன்ன பலிதான் உரிய பரிகாரம் என்று மந்திரவாதிகளும் சொன்னார்கள். குலகுருவும் ஒப்புக் கொண்டார். நீயும் கிடைத்தாய். பௌர்ணமியன்று பலியிடப்படுவாய்.''

''வைத்தியரே, நீங்கள் சொன்ன அந்த ராட்சஷ மிருகத்தை மந்திரவாதிகள் மட்டும் பார்த்தார்களா?''

''இல்லை இல்லை. மக்களும் மன்னனும்கூட பார்த்தார்கள். நான் கூடப் பார்த்திருக்கிறேன்.''

''அது எப்படி இருந்தது?''

''பயங்கரம் வாலிபனே! அதன் வால் மட்டுமே இருநூறு அடி நீளம் இருக்கும். உடம்பு நூறடி. கழுத்து ஐம்பதடி. முகம் முப்பது அடி. நான்கு நீண்ட கால்கள். அது காலடி எடுத்து வைத்தால் பூமி அதிரும்.''

''அது பேசியதுண்டா வைத்தியரே?''

''கேலி பேசாதே வாலிபனே. மிருகங்கள் எப்படி பேசும்?''

''அழகான வாலிபனை பலி கேட்டது யார்?''

---

* Page 332 - 'The Origin of Species' by Charles Darwin.

''மிருகமா கேட்கும்? அவற்றைப் பற்றிச் சகலமும் அறிந்த மந்திரவாதிகள் பல நாட்களாக மாந்தரீக சோதனைகளைச் செய்து பரிகாரத்தைக் கண்டுபிடித்தார்கள்.''

''அந்த மிருகத்தை அழிக்க முடியவில்லையா?''

''அழிப்பதா? அது மனித சக்தியால் முடியாத காரியம்.''

''யாராவது முயன்றார்களா?''

''முயன்றவர்கள் செத்துத்தான் போயிருக்கிறார்கள்.''

''அந்த மிருகம் நாட்டு மக்களைத் தாக்கியிருக்கிறதா?''

''அதன் காலடியில் சிக்கி பலர் மாண்டிருக்கிறார்கள். சிலரை அது வாயில் கவ்வியிருந்ததைக் கண்டிருக்கிறோம்.''

''ஏன் வைத்தியரே, என்னைப் பலி கொடுத்தால் அந்த மிருகம் இந்த நாட்டை விட்டு ஓடிவிடுமா?''

''ஆமாம்.''

''எப்படி?''

''மந்திரவாதிகள் சொன்னது அது.''

''வாய் பேசாத ராட்சஷ மிருகத்திற்கு நான் ஒருவன் எறும்பு மாதிரி. அது போதுமா?''

''இதை நீ மந்திரவாதிகளிடம் தான் கேட்க வேண்டும்.''

''வைத்தியரே, இந்த நாட்டிற்கு ஆபத்தை விளைவிக்கும் மிருகத்திற்கு இந்த நாட்டவர்கள் உயிர் தியாகம் செய்வது நியாயமா? வேறு நாட்டை சேர்ந்தவனை பலியிடுவது நியாயமா? இதற்கு உங்களால் பதில் சொல்ல முடியாதா? இதற்கும் மந்திரவாதிகள்தான் பதில் சொல்ல வேண்டுமா?''

''வாலிபனே! மூட நம்பிக்கை என்பது எல்லா மூலைகளிலும் முடமாகத்தான் இருக்கும். முதல் கோணல் முற்றிலும் கோணல் என்ற விஷயத்தின் கேள்விகளுக்கு இடமில்லை. மூடநம்பிக்கை என்பது ரத்தத்தில் ஊறிவிடுகிற விஷயம். அதை லேசில் அகற்ற முடியாது.''

''நல்லது வைத்தியரே, இப்போதாவது விவரங்களைச் சொன்னீர்களே அதற்கு என் நன்றி. மன்னரின் குலகுரு எப்போது வருவார்?''

''நாளை காலை அவரது இருப்பிடத்திற்கு நீ அழைத்துச் செல்லப்படுவாய்.''

''பௌர்ணமிக்கு இன்னும் எத்தனை நாட்கள் இருக்கின்றன?''

''ஐந்து நாட்கள்.''

அதற்குப் பின் உதயசந்திரன் அவரோடு எதையும் பேசவில்லை. ஆனால் அவனோடு கூடவே இருந்து அடிக்கடி நாடியை சோதித்தார். என்னென்ன உணவு வழங்க வேண்டும் என்பதைச் சொல்லி வரவழைத்தார். அவனை உண்ண வைத்தார்.

உதயசந்திரன் எதற்கும் மறுப்பு தெரிவிக்கவில்லை.

அவனது சிந்தனை மட்டும் சீராக ஓடிக் கொண்டிருந்தது.

''பல்லவ மாமன்னர் ராஜசிம்மர் தன்னிடம் ஒப்படைத்த பணி புயலால் தடைப்பட்டது. அந்த கண்டத்திலிருந்து அதிசயமாக தப்பி கரை ஒதுங்கினால் புயலை விட மோசமான கண்டம் உருவாகியிருக்கிறது. மன்னன் முதல் மக்கள் வரை மூடநம்பிக்கையில் ஊறியிருக்கும் போது அவர்களிடம் வாதிட்டு வெற்றி பெற முடியாது. இந்த நரபலியிலிருந்து எப்படித் தப்புவது? நரபலி ஒருபுறம் என்றால் மறுபுறம் ஊர்வசி ஒரு தனி வழியை உண்டாக்க நினைக்கிறாளே அது என்னவாக இருக்கும்? என்னை அவள் விரும்புவது ஒரு புறம் இருந்தாலும் நாடே என்னைப் பலியிடத் தயாராக இருக்கும்போது இவளால் எப்படி அதைத் தடுக்க முடியும்? அவளிடம் அப்படி என்ன திட்டம் இருக்க முடியும்?'' என்றெல்லாம் ஓடியது அவனது சிந்தனை.

மறுநாள் காலை அங்கு பணியாளர்களுடன் வந்தாள் ஊர்வசி.

''வைத்தியரே, இவரை குலகுருவின் கோயிலுக்கு கொண்டு செல்ல வேண்டும். இவரை யாரும் பார்க்கக் கூடாது. அதுவும் பெண்களின் கண்களில் படக்கூடாது. எனவே இந்த அங்கியை இவருக்கு அணிவியுங்கள். கண்கள் மட்டும் தெரிந்தால் போதும்'' என்றாள்.

உதயசந்திரனே அந்த அங்கியை எடுத்து அணிந்து கொண்டதும் எல்லோரும் மாளிகையை விட்டு வெளியே வந்தார்கள். அங்கே இருந்த கூண்டு வண்டியில் உதயசந்திரனும் வைத்தியரும் ஏறிக் கொண்டார்கள். அந்த வண்டியை யானை ஒன்று இழுத்துச் சென்றது. ஊர்வசி யானை ஒன்றின் மீது ஏறிக் கொண்டாள். வீரர்கள் நூறு பேர் முன்னும் பின்னுமாகச் சென்றார்கள்.

குலகுருவின் கோயில் மரகதப் பட்டிணத்தின் மேற்கு கோடியில் இருந்தது.

அங்கு செல்லும் வழியில் ஒரு வினோதத்தைக் கண்டான் உதயசந்திரன்.

பலர் தேர்களில் பயணம் செய்தார்கள். தேர் உயரமாக இருந்தாலும் அதற்குச் சக்கரங்கள் இல்லை. சக்கரங்கள் இல்லாத தேரை யானைகள் இழுத்துச் சென்றன. வண்டிகள் பலவும் யானைகளால் இழுத்துச் செல்லப்பட்டன. செல்வந்தர்களைப் போலத் தோன்றிய பலர் யானைகள் மீது தொட்டில்களைக் கட்டி பயணம் செய்து கொண்டிருந்தனர். பல இடங்களில் மாடுகளைப் போல யானைகள் கட்டிப்போடப்பட்டிருந்தன. அவற்றை யெல்லாம் கண்ட உதயசந்திரன் வைத்தியரிடம் ''இதென்ன ஐயா எல்லா இடங்களிலும் யானைகள் மயமாக இருக்கின்றன? யானைகள் அவ்வளவு மலிவாகவா ஆகிவிட்டன?'' என்று கேட்டான்.

''மலிவாகிவிடவில்லை வாலிபனே. காம்போஜ மன்னரிடம் ஒரு லட்சம் யானைகள் உள்ளன. இன்றைக்கு இது ஓர் உலக அதிசயம்.* லட்சம் யானைகளும் அவரது படையைச் சேர்ந்தது. அவ்வளவு யானைகளையும் கட்டி அவரால் தீனி போட முடியாதல்லவா? ஆகவே குதிரைகளுக்கு பதிலாகவும் எருதுகளுக்கு பதிலாகவும் யானைகளைப் பயன்படுத்த கட்டளையிட்டார். செல்வந்தர்களும் சீமாட்டிகளும் யானைகளில் கம்பீரமாகப் பயணம் செய்தார்கள். மன்னருக்குப் பராமரிப்பு செலவு குறைந்தது'' என்றார் வைத்தியர்.

வைத்தியர் இவ்வாறு சொன்னபோது பாரத நாட்டில் தமிழகத்தில் வேங்கடமலையில் புல்லி என்ற மன்னன் அரசாண்ட காலத்தில் இருந்து வந்த ஒரு வழக்கத்தைப் பற்றி நினைவு கூர்ந்தான் உதயசந்திரன். வேங்கடத்தில் அக்காலத்தில் கள்ளைக் குடிக்க விரும்பும் இளைஞர்கள் கள்ளுக்கான தொகையை கொடுக்க முடியாமல் கள்ளுக்கடைகளில் யானைக் குட்டிகளைக் கொடுத்து கள்ளை வாங்கி குடிப்பார்களாம்.* ஆனாலும் வேங்கடத்தில் ஒரு லட்சம் யானைகள் இருப்பது சாத்தியமில்லை என்று எண்ணிக் கொண்ட உதயசந்திரன் காம்போஜ நாட்டை எண்ணி வியக்கவே செய்தான்.

விரைவிலேயே அவர்கள் குலகுருவின் இருப்பிடத்தை அடைந்தார்கள். அவரது கோயில் மிகவும் உயரமான இடத்தில் இருந்தது. அதை அடைவதற்கு நூறு படிக்கட்டிற்கு மேல் இருந்தன. ஊர்வசியும் உதயசந்திரனும் வைத்தியரும் யானை

* பக்கம் 443 'பண்டைய நாகரீகங்களின் வரலாறு' – டாக்டர் கி.ர.அனுமந்தன்.

* அகநானூறு. பாடல் எண் 83. பாடியவர் கல்லாடனார்.

மீதேறி படிகளைக் கடந்து கோயிலுக்கு வந்தார்கள். குலகுரு முதலில் ஊர்வசியையும் வைத்தியரையும் சந்தித்துப் பேசினார்.

''அவன் உடலில் ஊனம் எதுவும் இல்லை என்பதை உறுதி செய்துவிட்டீர்களா? சிறிய ஊனம் இருந்தாலும் பயன்பட மாட்டான்'' என்றார் குலகுரு.

''எந்த ஊனமும் இல்லை ஐயா. நன்றாகச் சோதித்து விட்டேன்'' என்றார் வைத்தியர்.

''சரி. நீங்கள் இருவரும் செல்லுங்கள். அவனை அனுப்புங்கள்.''

அதையடுத்து இருவரும் அகன்றுவிட உள்ளே நுழைந்தான் உதயசந்திரன்.

தனக்கும் அவனுக்கும் பத்தடி தூரம் இருந்தபோது ''நில்'' என்றார் குலகுரு.

நின்றான் உதயசந்திரன்.

''குலகுருவை வணங்க வேண்டும் என்று தோன்ற வில்லையா உனக்கு?'' என்று விறைப்பாகக் கேட்டார் குலகுரு.

ஒற்றை நாடி சரீரமும் மொட்டைத் தலையும் முட்டைக் கண்களுமாய் காணப்பட்ட குலகுரு ஆசனத்தில் அமர்ந்தபடி கேட்டார்.

''வணங்குவதற்குத் தகுதியில்லாதவர்களை நான் வணங்குவதில்லை'' என்று திட்டவட்டமாகச் சொன்னான் உதயசந்திரன்.

அவனை ஏற இறங்கப் பார்த்த குலகுரு ''நீ எந்த நாட்டவன்?'' என்று கேட்டார்.

''பாரத நாடு என் நாடு''

''அங்கே இருப்பவர்கள் இப்படித்தான் நடந்து கொள்கிறார்களா?''

''நான் என் நிலையை மட்டும் பேசுகிறேன்.''

''என்ன தகுதியின்மையை நீ கண்டுவிட்டாய்?''

''உங்கள் நாட்டு நன்மைக்காக வேற்று நாட்டு மனிதனை பலி கொடுக்கச் சொன்னவர்கள் – அவர்களை ஆதரிப்பவர்கள் – இவர்களெல்லாம் அநீதி இழைக்கிறவர்கள். அவர்களை வணங்க என்னால் முடியாது.''

''கோடிக்கணக்கான மக்கள் காக்கப்படுவதற்கு ஓர் உயிரை பலியிடுவது தவறில்லை. இது எங்கும் நடக்கும் விஷயம்தான்.''

''அந்த ஓர் உயிர்காம்போஜ நாட்டு மக்களில் ஒன்றாக இருக்கக் கூடாதா?''

''இங்கே ஆளில்லாமல் உன்னைப் பலியிடவில்லை. சன்னதம் என்ன சொல்கிறதோ அப்படித்தான் செய்ய முடியும்.''

''யார் சொன்ன சன்னதம்? மந்திரவாதிகள் சொன்னதா?''

''ஆம்.''

''அவர்கள் என்ன சொன்னாலும் செய்துவிடுவீர்களா?''

''அவர்களுக்குச் சன்னதம் வரும்போது அவர்கள் பேசுவதில்லை. உள்ள எழுகிற தெய்வ சக்தி பேசுகிறது.''

''இல்லை குருநாதரே. தெய்வ சக்தி அநியாயத்தைப் பேசாது.''

''தெய்வ சக்தி பற்றி பேச உனக்குத் தகுதியில்லை. ஆகவே அதைப் பற்றி நீ பேசி நான் தெரிந்து கொள்ள எதுவுமில்லை.''

''மறுப்பு தெரிவிப்பவனை பலியிட்டால் பரிகாரம் கிடைக்குமா?''

''ஆடு மாடுகள் நூற்றுக்கணக்கில் பலியாகின்றன. அவை விருப்பம் தெரிவித்தா பலியிடப்படுகின்றன?''

''அவற்றுக்குப் பேசும் சக்தி கிடையாது.''

''உன் நாக்கையும் அறுத்து பேச முடியாதபடி செய்துவிட முடியும். ஆனால் ஊனம் உள்ளவனை பலியிட முடியாது'' என்று உறுதியாகச் சொன்ன குலகுரு ''ஒருவகையிலும் நீயும் ஆடுமாடுகளைப் போலத்தான். வாயிருந்தும் பேசும் உரிமை உனக்குக் கிடையாது. அதோடு நானிங்கு வந்தது உன்னிடம் பேசவோ உன் கேள்விகளுக்கு பதில் சொல்லவோ இல்லை. அது என் வேலையும் இல்லை. முடிவுக்குக் கட்டுப்பட்டு அதற்கு உன்னைத் தயார் படுத்திக்கொள்'' என்று சொல்லிவிட்டு கண்களை மூடி ஏதோ யோகாப்பியாசம் செய்யத் தொடங்கினார்.

உதயசந்திரன் மௌனமாகவே இருந்தான்.

தான் என்ன வாதிட்டாலும் தன் தரப்பு நியாயத்தைக் கேட்க யாரும் கிடையாது என்பது திட்டமாகத் தெரிந்துவிட்டது உதயசந்திரனுக்கு. மன்னனோ விசாரிக்கக் கூட முற்படவில்லை.

எனவே அவர்கள் யாரிடமும் கேட்டுப் பயனில்லை என்பதை உணர்ந்தான். தானாக யோசித்து ஏதாவது செய்தால்தான் உண்டு என்று கருதினான். பல்லவ மாமன்னருக்காக நிறைவேற்ற வேண்டிய பொறுப்புகள் நிறையவே இருந்ததால் அவற்றை நிறைவேற்றாமல் சர்வ சாதாரணமாக இந்த மூட நம்பிக்கைக் காரர்களிடம் தன்னை பலி கொடுத்துவிட அவன் தயாராக இல்லை.

இதற்கிடையில் கண் விழித்த குலகுரு உதயசந்திரன் நின்றிருப்பதைப் பார்த்துவிட்டு, ''நீ போகவில்லையா? ஏன் நிற்கிறாய்?'' என்று கேட்டதும், ''வருகிறேன் குருநாதரே'' என்று கூறிவிட்டு வெளியேறினான்.

முழு அங்கி மீண்டும் அணிவிக்கப்பட்டது. அனைவரும் அவனிருந்த மாளிகைக்குச் சென்றார்கள்.

''வைத்தியரே, நாம் நாளைக்கு விழா நடக்கும் நமது தலைநகர் இந்திரபுரத்திற்குப் போகிறோம். அதற்கான ஆயத்தங்களைச் செய்யுங்கள்'' என்று கூறிவிட்டு தன் இருப்பிடத்திற்குச் சென்றாள் ஊர்வசி.

தோழிகளை அழைத்து தன் திட்டத்தைச் சொன்னாள்.

தோழிகள் அசந்து போனார்கள்.

☆ ☆ ☆



68

எல்லாம் அவன் செயல்

''என்ன அதிர்ந்துவிட்டீர்கள்? இதை விட்டால் வேறு வழியில்லை. அதோடு நான் ஒரு முடிவெடுத்துவிட்டால் அதிலிருந்து பின்வாங்க மாட்டேன்'' என்றாள் ஊர்வசி.

''அது தெரியும் அம்மா. ஆனால் நீங்கள் விரும்பும் ஆடவர் மக்களுக்காக ஒதுக்கப்பட்டவர். மக்கள் நலனுக்காக பலியிடப்படப் போகிறவர். அவரைப் போயா நீங்கள் விரும்ப வேண்டும்?'' என்றார்கள் தோழிகள்.

''நாம் யார் மீது ஆசைப்படுகிறோமோ அவனுக்காகத்தான் போராட முடியுமே தவிர இன்னொருவனுக்காகக் காத்திருக்க முடியாது. அப்படிக் காத்திருப்பது காதலும் ஆகாது'' என்றாள் ஊர்வசி.

அப்படிச் சொல்லிவிட்டு ''நாளைக்கு இந்திரபுரத்திற்குப் புறப்படும்போது நீங்களெல்லோரும் என்னுடன் வாருங்கள். உதயசந்திரனை விழாகளத்திற்கு கொண்டு செல்லும் வரை உடல் முழுக்க மூடியிருக்கக் கூடிய அங்கியைத்தான் அணிவிக்கப் போகிறோம். அவனை விருந்தினர் மாளிகை வரை கொண்டு செல்வது வரை நமது பொறுப்பு. அதாவது அந்த கட்டம் வரும் வரை வாலிபன் நம் பொறுப்பில் தான் இருப்பான். கடைசி கட்டத்தில் ஆளை மாற்றி விட்டு பொறுப்பை வைத்தியரிடம் விட்டுவிட்டு வாலிபரோடு நாம் ஓடிவிடுவோம். உண்மை தெரிவதற்குள் நாம் நீண்ட தூரம் போய்விடலாம். கடலில் எனது மரக்கலம் இருக்கிறது. அதில் ஏறிவிட்டால் கடாரத்திற்குப் போய்விடலாம். யாராலும் நம்மைப் பிடிக்க முடியாது'' என்றாள்.

நடக்கும் வரை ஊர்வசி சொல்வது நிச்சயமில்லை என்பது தோழிகளுக்கு தெரிந்திருந்தாலும் ஊர்வசியும் லேசுப்பட்டவள் அல்ல என்பது தெரிந்திருந்ததாலும் எதையும் நிச்சயமாகச் சொல்லக்கூடிய நிலையில் இல்லாமல் பதட்டத்தில் இருந்தார்கள்.

ஊர்வசி உதயசந்திரனிடம் வந்தாள். வைத்தியரை வெளியே இருக்கும்படிக் கூறிவிட்டு உதயசந்திரனிடம் ''என்ன வாலிபனே, பலியாவதற்குத் தயாராகிவிட்டாயா?'' என்று கேட்டாள் சீண்டுவது போல.

''தயார்படுத்தியது நீ. தயாராகாமல் எப்படி இருக்க முடியும்?'' என்று கேட்டான் உதயசந்திரன்.

''உன் உயிரைப் பற்றி நீ கவலைப்படவில்லையா?''

''காப்பாற்றுவதற்கு ஆளில்லாதபோது கவலைப்படுவது அர்த்தமற்றது.''

''உன் அழகு! எங்களையெல்லாம் உன்மத்தம் கொள்ள வைக்கிற அழகு. அதன் மீது கூட கவலை இல்லையா?''

''உயிர் போகும்போது அழகு மட்டும் மிஞ்சவா போகிறது?''

''கவலைப்பட்டுத்தான் பாரேன்?''

''இதோ பார் ஊர்வசி உனக்கேன் இந்தக் குரூர ஆசை? குழந்தையைக் கிள்ளி விட்டு தொட்டிலை ஆட்டுகிற கதையாக இருக்கிறது உன் பேச்சு. உன்னோடு பேசவே எனக்குப் பிடிக்கவில்லை.''

''இப்படி ஒரேயடியாக வெறுத்துவிட்டால் எப்படி?''

''வெறுப்பைத் தவிர வேறு என்ன இருக்கிறது? இங்கே உள்ள எவருக்குமே நீதியும் நியாயமும் புரியாதபோது வெறுப்பைத் தவிர வேறு என்ன வரும்?''

''வாலிபனே! மற்றவர் கோரிக்கையை நீ ஏற்கமாட்டாய். உன் கோரிக்கையை மட்டும் மற்றவர்கள் ஏற்க வேண்டும். இது என்ன நியாயம்?''

''என்ன சொல்கிறாய் நீ?''

''உன் மீது ஆசைப்பட்ட என்னை நீ மறுக்கிறாய். இது நியாயம். உன் உயிர் மீது உனக்கிருக்கும் ஆசையை இங்கிருப்பவர்கள் மறுத்தால் அது அநியாயமா?''

''நீ மொட்டைத்தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப் போடுகிறாய். இரண்டு பிரச்சனைகளும் முற்றிலுமாக மாறுபட்டவை. ஒன்றோடு ஒன்று சம்பந்தப்படுத்த முடியாது.''

''வாலிபனே! உன் பேச்சு இங்கே வெற்றி பெறாது. ஆனால் என் பிடிவாதம் வெற்றி பெறும்.''

''புரியவில்லை.''

''என்னை விட என் காதல் முரட்டுத்தனமானது. நான் விட்டாலும் அது விடாது. என் காதல் வெற்றி பெற நான் என்ன வேண்டுமானாலும் செய்வேன். செய்ய முடிவெடுத்து விட்டேன். நீ பலியாக மாட்டாய். பலிபீடத்தில் உனக்கு பதில் இன்னொருவன் இருப்பான். நாம் மரக்கலத்தில் இருப்போம்'' என்று சொன்ன அவள் நெருங்கி வந்து அவனைக் கட்டிப்பிடித்து முரட்டு முத்தம் ஒன்றைக் கொடுத்துவிட்டுப் போனாள்.

வெளியே சென்றவள் வைத்தியரை அழைத்து அவரிடம் மூன்று முத்து மாலைகளைக் கொடுத்து ''இவற்றின் விலை தெரியுமா உங்களுக்கு?'' என்று கேட்டாள்.

''அது தெரியாது அம்மணி. ஆனால் இவற்றைக் கொண்டு வாழ்நாள் முழுதும் எங்களால் குடும்பம் நடத்த முடியும்'' என்று நெகிழ்ந்தார் வைத்தியர்.

''நீங்கள் பார்க்கும் வைத்தியத்தால் அது முடியுமா?''

''நிச்சயமாக அது முடியாது.''

''அப்படியானால் அந்தத் தொழிலை விட்டு விடுங்களேன்.''

''எதற்கு?''

''உங்கள் குடும்ப பராமரிப்பிற்குத் தேவையான செல்வத்தை நான் கொடுத்துவிட்டேனே பிறகெதற்கு அத்தொழில்? அதை விட்டுவிட்டு எனக்கு உதவியாளராக இருங்களேன்.''

''இப்போதே நீங்கள் சொல்வதைத்தானே செய்கிறேன்.''

''அது போதாது.''

''போதாதா?''

''ஆமாம். உங்களிடம் முக்கியமான ஒரு உதவியை எதிர்பார்க்கிறேன்.''

''சொல்லுங்கள்.''

''உதயசந்திரனை அங்கியில் மறைத்து நாம் கொண்டு போகப் போகிறோம் அல்லவா?''

''ஆம்.''

''தலைநகரை அடைந்தபின் ஆள் மாறாட்டம் செய்ய வேண்டும்.''

''ஆள் மாறாட்டமா?''

''ஆம். உதயசந்திரனுக்குப் பதிலாக என் பணியாளன் ஒருவனுக்கு அங்கியைப் போட்டு உங்களிடம் ஒப்படைத்து விட்டு

நான் உதயசந்திரனுடன் ஓடிவிடுவேன். நீ என் பணியாளனை வெட்டும் மரக்கட்டைக்கு அழைத்துச் செல்ல வேண்டும்.''

''அம்மணி. பலியிடும் இடத்தில் உண்மை தெரிந்துவிடும் அல்லவா?''

''ஆமாம்.''

''அப்போது என் நிலை என்னாகும் தெரியுமா?''

''ஆள் மாறாட்டத்திற்கும் உங்களுக்கும் சம்பந்தமில்லை என்று சொல்லுங்கள். ஊர்வசி தான் காரணம் என்று சொல்லுங்கள். எல்லோரது கோபமும் என் மீது திரும்பிவிடும். உங்களை விட்டுவிடுவார்கள்.''

''எனக்கு அப்படித் தோன்றவில்லை அம்மணி. உங்களைத் தேடிப்பிடிப்பதற்கு ஆணையிடும் மன்னர் என் அசிரத்தைக்காக என்னையும் சிரச்சேதம் செய்வார்.''

''வைத்தியரே. உங்கள் உயிர் போகாது. போனாலும் உங்கள் குடும்பம் நிலைக்கும். அதற்குத்தான் இந்த முத்துமணிகள்.''

''வேண்டாம் அம்மணி. இது ஆபத்தானது.''

''ஆபத்தில்லாத இடம் எது? திடீரென இந்த மாளிகை இப்போதே இடிந்துவிழுந்தால் உங்களால் என்ன செய்ய முடியும்? இதோ பாருங்கள் வைத்தியரே, உங்களிடம் உதவி கேட்கலாம் என்று தான் முதலில் நினைத்தேன். அது சரியில்லை. உங்களுக்கு நான் கட்டளையிடுகிறேன். முடியுமா முடியாதா? முடியாதென்றால் உங்கள் குடும்பத்தினரை தண்டனைக் கூடத்திற்குக் கொண்டு வந்து கண்டபடி சித்திரவதை செய்வேன். என்ன சொல்கிறீர்கள்?''

''நீங்கள் சொன்னபடியே செய்கிறேன் அம்மணி.''

''கொடுங்கள் அந்த முத்து மாலைகளை. உங்கள் இல்லத்தில் சேர்த்துவிடுகிறேன்.''

கொடுத்தார் அவர்.

ஊர்வசி சென்றபின் உதயசந்திரனின் அறைக்கு வந்தார் வைத்தியர். அவரது முகத்தில் கவலை ரேகைகள் படர்ந்திருந்ததைக் கண்ட உதயசந்திரனுக்கு என்ன நடந்திருக்கும் என்பது தெரிந்திருந்தது. இருப்பினும் அவரிடம் வினவினான்.

''மனிதனாகப் பிறப்பது வீண் வாலிபனே. அதிலும் வைத்தியனாக இருப்பது அதையும்விட வீணானது. அதிலும்

முரட்டுப் பெண்மணியிடம் பணிபுரிவது எல்லாவற்றையும் விட வீணானது.'' என்றார் வைத்தியர்.

''கவலைகள் அதிகமாகும்போது வேதாந்தம் பிறப்பது உண்மைதான். அதேசமயம் விதியை மாற்ற யாரால் முடியும்? முடியாது என்று நீங்களே கூறியிருக்கிறீர்கள்'' என்று சொன்ன உதயசந்திரன் ''தனது திட்டத்தை என்னிடம் கூறினாள் ஊர்வசி. உங்களிடமும் கூறியிருப்பாள். அதற்கு உங்கள் உதவியைக் கோரியிருப்பாள். உதவிக்கான ஊதியத்தையும் தந்திருப்பாள். இல்லையா?'' என்று கேட்டான்.

''ஆமாம்'' என்று ஒப்புக் கொண்டார் வைத்தியர்.

''ஆனால் நீங்களும் சரி ஊர்வசியும் சரி ஒரு விஷயத்தை மறந்துவிட்டீர்கள்.''

''எதைச் சொல்கிறாய்?''

''உங்கள் இருவரது திட்டம் வெற்றி பெற வேண்டும் என்றால் நான் சம்மதிக்க வேண்டும். நான் முரண்டு பிடித்தால் நிறைவேறாது.''

''எதற்காக நீ முரண்டு பிடிக்க வேண்டும்? இந்த திட்டத்தால் உன் உயிர் காப்பாற்றப்படுகிறது அல்லவா?''

''வைத்தியரே, என் உயிரைக் காப்பாற்றிக் கொள்வதற்கு உங்கள் திட்டம் தேவையில்லை. என் சுண்டு விரலை நான் வெட்டிக் கொண்டால் போதும். முடமானவனை பலியிட முடியாது என்று குலகுரு சொன்னாரல்லவா?''

''உன் உத்தேசம் தான் என்ன? பலிக்கு ஆளாகத்தான் போகிறாயா?''

''நீங்கள் ஒத்துழைத்தால் நான் பலியிலிருந்து தப்பலாம்.''

''ஐயோ! நீ வேறு திட்டம் வைத்திருக்கிறாயா?''

''ஆம். ஆனால் உங்கள் திட்டத்தைப் போல அது கோழையான திட்டமல்ல. சுயநலமான திட்டமல்ல.''

''அப்படி என்ன திட்டம் அது?''

''மருத்துவரே, இந்த திட்டத்திற்கு நீங்கள் மட்டும்தான் உதவ முடியும்.''

''சொல் உன் திட்டத்தை.''

''மருத்துவரே, நான் சாக விரும்பவில்லை. என் நாட்டிற்காக நான் செய்ய வேண்டிய சாதனைகள் நிறைய இருக்கும்போது

உங்கள் நாட்டிற்காக முட்டாள்தனமாகச் சாக நான் தயாராக இல்லை.''

''பீடிகைகளை விட்டு விஷயத்தைச் சொல்.''

''முதல் நாளன்று நான் கேட்ட கேள்வி ஒன்றுக்கு நீங்கள் பதிலே சொல்லாமல் பீடிகைகளாகவே போட்டுக் கொண்டிருந்தீர்களே மறந்து விட்டீர்களா?''

''அதற்காக என்னைப் பழி வாங்குகிறாய் போலிருக்கிறது.''

''இல்லை மருத்துவரே, நான் உயிரோடு சில நாட்களாவது என் நாட்டிற்காக வாழ வேண்டிய அவசியத்தைத்தான் சொன்னேன்.''

''நல்லது. இப்போதாவது திட்டத்தைச் சொல்.''

சொன்னான் உதயசந்திரன்.

அதைக் கேட்டு அதிர்ந்துபோன வைத்தியர், ''முட்டாளே! உனக்கெப்படி இப்படியொரு பைத்தியக்காரத்தனமான யோசனை தோன்றியது? அதெல்லாம் வேண்டாம். விடு. பேசாமல் உன் சுண்டு விரலை நானே வெட்டிவிட்டு குற்றவாளியாகிறேன். நீ உயிர் தப்பி உன் நாட்டிற்குப் போ'' என்று கோபத்துடன் சொன்னார்.

''கோபப்படாதீர்கள் மருத்துவரே. என் சுண்டு விரலை வெட்டிக் கொள்ள எனக்குத் தெரியாதா? கோழைத்தனமான திட்டங்கள் எனக்குப் பிடிக்காது என்று சொன்னேனே மறந்துவிட்டீர்களா?''

''அதற்காக இப்படியொரு விபரீத செயலிலா இறங்குவது? முடியாது.''

''அப்படிச் சொல்லாதீர்கள் மருத்துவரே. நானிருக்கும் நிலையில் நான் கேட்கும் இந்த உதவியை உங்களைத் தவிர வேறு யாரால் செய்ய முடியும் என்று யோசித்துப் பாருங்கள். ஆண்டவனாகப் பார்த்து தான் உங்களை என் அருகிலேயே வைத்திருக்கிறான்.''

''வாலிபனே! உன் யோசனை மிகவும் ஆபத்தானது.''

''இல்லவே இல்லை. அதில் ஆபத்து இல்லை. இப்போதைய நிலைமைக்கு மிகவும் சரியானது.''

''இது விளையாட்டு இல்லை வாலிபனே. போனால் போனது தான்.''

''எனக்குத் தேவை என் உயிர். அதைக் காப்பாற்றிக் கொள்ளத்தான் இந்த யோசனை.''

''இதைச் செய்தால் என் உயிர் போய்விடும்.''

''போகாது மருத்துவரே. உங்களைக் காப்பாற்றுவது என் பொறுப்பு.''

''எப்படிக் காப்பாற்றுவாய்?''

''வாக்கு தவறும் பழக்கம் எனக்கில்லை. என் உயிரைக் கொடுத்தாவது உங்கள் உயிரைக் காப்பாற்றுகிறேன்.''

வைத்தியருக்கு என்ன பதில் கூறுவதென்று விளங்க வில்லை.

உதயசந்திரனே தொடர்ந்து, ''ஐயா, உங்களுக்கு அன்பளிப்பாகத் தர ஊர்வசியைப் போல முத்து மாலைகளோ மரகத மாலைகளோ இல்லை. அன்பை மட்டுமே அளிக்க முடிந்த நிலையில்தான் இருக்கிறேன். இந்த அன்பளிப்புக்கு உருவம் இல்லை. விலையும் இல்லை. இப்போதைக்கு இதை ஏற்றுக் கொள்ள வேண்டும்'' என்றான்.

வைத்தியர் அவன் கைகளைப் பற்றிக் கொண்டார். ''உன்னைப்போன்ற மன உறுதி படைத்தவனை நான் பார்த்ததில்லை. அதற்காகவே உனக்கு உதவுகிறேன். அதேசமயம் உனக்கு உதவுகிறேனா அல்லது உன் வாழ்க்கையைப் பாழாக்குகிறேனா என்பது தெரியவில்லை. எல்லாம் அவன் செயல்'' என்று சொல்லி விட்டு உதயசந்திரனின் யோசனையை எப்போது எப்படி நிறைவேற்றுவது என்பது பற்றி ஆலோசித்தார்.

மறுநாள் அனைவரும் தலைநகர் இந்திரபுரத்திற்குப் புறப்பட்டார்கள். மரகதப்பட்டிணத்திலிருந்து நேர் வடக்கே இரண்டு நாள் பயணத்தில் இருந்தது இந்திரபுரம். எனவே எல்லோருமே புரவிகள் பூட்டிய தேர்களிலும் வண்டிகளிலும் சென்றார்கள். உதயசந்திரனும் வைத்தியரும் இருந்த தேர் திரைச் சீலைகளால் மூடப்பட்டிருந்தது. உதயசந்திரனுக்கு அவனை அடையாளம் காண முடியாத அளவிற்கு அங்கியொன்று அணிவிக்கப்பட்டிருந்தது. ஊர்வசியின் பணியாளன் ஒருவனுக்கும் அதேபோல உடை அணிவிக்கப்பட்டு அவனும் ஊர்வசியின் தோழிகளும் வண்டிகளில் பயணம் செய்தார்கள். ஊர்வசி புரவியிலும் தேரிலுமாக மாறிமாறி பயணம் செய்தாள். பாதுகாப்பிற்கு ஐந்நூறு புரவி வீரர்கள் சென்றார்கள்.

முதல் நாள் பயணத்தில் சாகரம் என்னும் மலைப் பகுதியைக் கடந்தார்கள். இரண்டாம் நாள் இரவு இந்திரபுரத்தை அடைந்தார்கள். இரவு நேரமானாலும் விழா நடைபெற விருந்ததையொட்டி விளக்குகளால் அலங்காரம் செய்யப் பட்டிருந்ததால் நகரம் பிரகாசமாய் இருந்தது. மக்கள் கூட்டமும் விழாவைக் காண்பதற்காக காம்போஜத்தின் பல பகுதியிலிருந்தும் வந்து கொண்டிருந்தார்கள். நகரில் பல்வேறு இடங்களில் உதயசந்திரன் மரகதப்பட்டிணகடற்கரையில் கிடைத்தது பற்றியும் மக்களின் துயரம் நீங்க பௌர்ணமி நாளன்று பலியிடப் போவது பற்றியும் வைக்கப்பட்டிருந்த அறிவிப்புப் பலகைகளை மக்கள் ஆர்வதோடு பார்த்துவிட்டுப் போய்க் கொண்டிருந்தார்கள். தங்களுக்கு அச்சமற்ற சுபிட்ஷம் கிடைக்கப் போகிறதென்ற மகிழ்ச்சிதான் மக்களிடம் இருந்ததேயன்றி உதயசந்திரன் பலியிடப் போவது பற்றிய அனுதாபம் இல்லை.

இந்திரபுரத்தின் மையப்பகுதியில் இருந்த விருந்தினர் மாளிகையில் எல்லோரும் தங்கவைக்கப்பட்டு சகல வசதிகளும் செய்துதரப்பட்டன. மறுநாள் மன்னன் வந்து விருந்தினர்களைக் கண்டு திருப்திக்கு அடையாளமாகத் தலையை ஆட்டினான். ''விழா அரங்கத்திற்கு வரும் வரை வாலிபனை எங்கேயும் அழைத்துச் செல்ல வேண்டாம். இந்த உலகத்தை விட்டுச் செல்லப் போகிற அவன் இந்த உலகத்தைப் பார்க்காமலேயே இருக்கட்டும். அதுதான் சரி'' என்று சொல்லிவிட்டுச் சென்றான்.

ஊர்வசி மருந்துவரிடம் வந்தாள்.

''இதோ பாருங்கள் மருத்துவரே, நான் சொல்வதை கவனமாகக் கேட்டுக் கொள்ளுங்கள். விழா தொடங்கும் தினத்திற்கு முன்பாக ஆள் மாறாட்டம் செய்ய முடியாது. யாராவது வந்து போய்க் கொண்டிருப்பார்கள். எனவே விழா தொடங்கும் தினத்தன்று அதிகாலை எனது பணியாளனை முழு அங்கி அணிவித்து உமது அறைக்கு அனுப்புகிறேன். நீங்கள் அவனை அங்கே இருத்திக் கொண்டு உதயசந்திரனை என் அறைக்கு அனுப்பி வையுங்கள். மற்றதை நாங்கள் கவனித்துக் கொள்கிறோம். கண்டாமணி ஓசை எழுந்ததும் நீங்கள் பணியாளனைத் தேரில் வைத்து அரங்கிற்கு அழைத்துச் செல்லுங்கள்'' என்றாள்.

''அம்மணி, ஒரு விண்ணப்பம்.''

''சொல்லுங்கள்.''

''உதயசந்திரன், உங்களை வெறுப்பதாகச் சொன்னார். ஆகவே அவரை உங்கள் அறைக்கு அனுப்பும் போது ரசாபாசம் ஏதாவது நடக்க வாய்ப்புண்டு. எனவே அவருக்கு மயக்கம் கொடுத்து என் அறையிலேயே வைத்திருக்கிறேன். கண்டாமணி ஒலித்து பணியாளனை நான் அழைத்துச் சென்றதும் இந்த விருந்தினர் மாளிகையில் கண்காணிப்பு அகன்றுவிடும். அப்போது வந்து நீங்கள் அவரைத் தூக்கிச் செல்லுங்கள்.''

''அதுவும் சரிதான்'' என்றாள் ஊர்வசி.

விருந்தினர் மாளிகைக்கு முன்பு மக்கள் அவ்வப்போது திரண்டு உதயசந்திரனைக் காண வேண்டும் என்று ஆரவாரம் செய்தார்கள். அதுவும் பெண்கள் அதிகமாக வந்து ஆர்வத்துடன் கூச்சலிட்டார்கள்.

ஊர்வசி அவர்களுக்கு முன்னால் வந்து ''பிரார்த்தனைப் பொருளை இப்போது யாரும் பார்க்கக்கூடாது. பார்த்தால் அது பங்கப்பட்டுவிடும் என்று குலகுரு கூறியிருக்கிறார். பொருள் பங்கப்பட்டுவிட்டால் பலியிட முடியாது. நமது துயரமும் நீங்காது. எல்லோரும் விழா அரங்கிற்கு வாருங்கள். பலியிடுவதற்கு முன் பிரார்த்தனை பொருள் எல்லோருக்கும் காட்டப்படும். கண்டு மகிழுங்கள்'' என்றாள்.

மக்கள் அவளுக்குக் கட்டுப்படவில்லை என்றாலும் அவள் கூறிய வார்த்தைகளில் இருந்த விபரீதத்திற்குக் கட்டுப்பட்டு கலைந்து சென்றார்கள்.

விழாநாள் வந்தது.

அதிகாலையில் நடைபெற வேண்டியது நடந்தது.

ஆனால் -

விழா அரங்கிலோ யாரும் எதிர்பாராதது நடந்தது.

எல்லோருமே அதிர்ந்தார்கள்.

☆☆☆



69

பலி அரங்கம்

மக்களின் விடிவுக்காக பொழுது விடிவதற்கு முன்னாள் இரவு. இந்திரபுரத்தில் வந்து கூடிய மந்திரவாதிகள் மகிழ்ச்சி காரணமாக விலை கொடுத்து வாங்கியச் சுந்தரப் பெண்களுடன் சலக்கிரீடை செய்து சல்லாபித்து சந்தோஷப்பட்டார்கள். தலைமை மந்திரவாதியின் தகிக்கும் காமத்தில் வெந்து கொண்டிருந்த வடிவழகியொருத்தி அவனிடம் கேட்டாள். ''நாளைக்கு உண்மையிலேயே மக்களுக்கு விடிவு வந்து விடுமா?''

வடிவழகியைத் தன் வாட்டத்திற்கு ஏற்ற மாதிரி பயன்படுத்திச் சுகச் சாற்றைப் பிழிந்து பருகிக் கொண்டிருந்த தலைமை மந்திரவாதி பேய் போலிருந்த தனது முகத்தை மேலும் அஷ்டகோணலாக்கிக் கொண்டு ''அதிலென்ன சந்தேகம்?'' என்று கேட்டான்.

''எனக்கென்னவோ சந்தேகமாக இருக்கிறது'' என்றாள் காமக் கட்டழகி.

''நாடு முழுவதும் நம்பியிருக்கிறது. உனக்கு மட்டும் நம்பிக்கை இல்லையா? வேடிக்கைதான்'' என்றான் காமாந்தக மந்திரவாதி. அப்படிச் சொல்லிவிட்டு அவள் பேச முடியாத வகையில் அவளது உதடுகளை தன் முரட்டு உதடுகளால் சிறை செய்தான்.

கஷ்டப்பட்டு தன் உதடுகளை விடுவித்துக் கொண்ட அந்த வடிவழகி ''முதலில் உங்கள் தாடி மீசைகளை அகற்றுங்கள். இரும்புக் கம்பிகளைப் போல இருக்கின்றன'' என்றாள்.

''எங்களுக்கு அகோரம்தான் அழகு. அதுதான் அடையாளம். எங்கள் தோற்றம் எல்லோரையும் அச்சப்படுத்தும்'' என்று சொல்லி அடாவடியாக நடந்து கொண்டான் மந்திரவாதி.

''எனக்கென்னவோ எல்லோருமாகச் சேர்ந்து கொண்டு மக்களை ஏமாற்றுவதாகத்தான் தோன்றுகிறது'' என்று சொல்லி அருகில் இருந்த மதுவை எடுத்துக் குடித்தாள் அக்கட்டழகி.

அவன் ஆத்திரத்தில் எங்கேயோ கடித்துவிட 'ஹா' என்று அலறிய அவள் ''இங்கேயா கடிப்பது?'' என்று கேட்டாள் கடுப்புடன்.

''உன் வார்த்தைக்கு இக்கடி போதாது. குரங்கைப் போலக் கடித்திருக்க வேண்டும்'' என்றான் மந்திரவாதி.

''உங்கள் செயல் எல்லாமே குரங்கின் செயலாகத்தான் இருக்கிறது. கடி மட்டும் தானா?'' என்று தனக்குள் கேட்டுக் கொண்ட அவள் ''இங்கே வரும் ராட்சஷ மிருகம் உலகில் வேறெங்கேயும் இல்லையா?'' என்று கேட்டாள்.

''இருக்கலாம்.''

''மந்திரவாதிகள்?''

''அவர்களும்தான் இருப்பார்கள்.''

''நீங்கள் சொல்வதுபோல் ஓர் அழகிய வாலிபனை பலி கொடுத்து ராட்சஷ மிருகம் மீண்டும் வராமல் மறைந்துவிடும் என்பது உண்மையானால் உலகத்தில் எங்கு வேண்டுமானாலும் இப்படிச் செய்து அவற்றை அழித்துவிடலாமே?''

''உலகத்தைப் பற்றிய பேச்சு எதற்கு? நமக்கு நம் கதை முக்கியம்.''

''அந்த ராட்சஷ விலங்கு நம்மை எதுவும் செய்வதில்லை. அதை எதற்காக விரட்ட வேண்டும்?''

''நம்மில் பலரை அது அழித்திருக்கிறது. அப்படியே விட்டால் அது வலுப்பெற்றுவிடும். ஒன்றுக்குப் பத்தாகப் பெருகிவிடும். எல்லாமாகச் சேர்ந்து நாட்டை முற்றிலுமாக அழித்துவிடும்.''

''இதெல்லாம் உங்கள் கற்பனை. மக்களுக்கு உண்மையிலேயே தீங்கை விளைவிக்கக்கூடிய அம்சங்கள் இருக்கின்றன. மூன்று ஆண்டுகளுக்கு முன்னால் கோரமான புயல் வீசி இந்நாட்டைப் புரட்டிப் போட்டது. அந்தப் புயலைத் தடுக்க முடியுமா உங்களால்? இங்கே அடிக்கடி வீசும் தரைப்புயலால்* எவ்வளவு சேதம் விளைகின்றன? அதைத் தடுக்க முடியுமா உங்களால்? அவற்றையெல்லாம் இயற்கை சக்திகள் என்று சொல்லிவிடுவீர்கள். அவற்றை விடுங்கள். இந்நாட்டின் சுளுக்கள் அடிக்கடி கடல் மூலமாக வந்து கொள்ளை யடிக்கிறார்களே? ஊர்களை எரித்து நாசமாக்குகிறார்களே அவர்களை அழிக்க உங்களாலும் முடியவில்லை. மன்னராலும் முடியவில்லை.

* டொர்னாடோ

இவர்களை அழிக்க யாரையாவது பலி கொடுக்கக் கூடாதா?'' என்று கேட்ட அவள் அவனை விட்டு விலகி ஆசனத்தில் போய் சாய்வாக அமர்ந்து கொண்டு பெருமூச்செறிந்தாள்.

மந்திரவாதியின் கோரமுகம் மேலும் கோரமாகியது.

''காமத்தை அள்ளி வீசி சுகத்தைக் கடலாக விரிக்கும் ஒரு சாதாரணப் பெண் தன்னிடம் கேட்கக் கூடாத கேள்விகளை யெல்லாம் கேட்டுவிட்டாள். தெரிந்து கேட்டாளோ தெரியாமல் கேட்டாளோ! சகிக்க முடியாதபடி கேட்டுவிட்டாள். இதே கேள்விகளை மக்களிடம் கேட்டுவிட்டால் விளைவு மோசமாகி விடும். இந்த பெண்களுக்கு தசைகள் வளரலாமே தவிர அறிவு வளரக்கூடாது. அது ஆண்களுக்கு நல்லதல்ல. குறிப்பாக என் போன்றவர்களுக்கு உகந்ததல்ல. காமத்தை பெருக்குவதை விட்டு இவள் எதற்காக கேள்விகளைப் பெருக்க வேண்டும்?'' என்று தனக்குள் கேட்டுக் கொண்ட தலைமை மந்திரவாதி சோர்வாக இருந்த அந்த அழகியை ஆசனத்தோடு சேர்த்துக் கட்டினான். வாயையும் துணியால் அடைத்தான். பணியாளர்களை அழைத்து ''இவள் எங்கேயும் போகக் கூடாது. செத்தாலும் பரவாயில்லை. இங்கேயிருந்து நகராமல் பார்த்துக் கொள்ளுங்கள். நானாக இங்கு வரும் வரை நீங்கள் தான் காவலிருக்க வேண்டும்'' என்று கூறிவிட்டு அகன்றான்.

மற்ற மந்திரவாதிகளுக்கு இந்தப் பிரச்சனை இல்லை யாதலால் அவர்கள் இருந்த அறைகளிலெல்லாம் காம வெள்ளம் தடையின்றிப் பாய்ந்தது.

மறுநாள் விடிவதற்கு சற்று முன்பாகவே பலி அரங்கத்தை நோக்கி மக்கள் சாரை சாரையாகச் சென்றார்கள். அதே நேரத்தில் ஊர்வசியின் தோழிகள் இருவர் பணியாளனை முழு அங்கியை அணிவித்து வைத்தியர் அறைக்குக் கொண்டு வந்தார்கள். அவர்களுக்காகக் காத்திருந்த வைத்தியர், ''சீக்கிரம், சீக்கிரம்'' என்றார். பணியாளனை அறையில் நுழையவிட்டு தோழிப் பெண்களிடம் சற்று காத்திருக்கும்படிச் சொன்னார்.

சிறிது நேரம் கழித்து கதவைத் திறந்து வெளியே வந்த அவர் தோழிகளை உள்ளே அழைத்தார்.

''இதோ பாருங்கள். உதயசந்திரனுக்கு மயக்கத் துளிகளைக் கொடுத்துவிட்டேன். மயக்கமாகிவிட்டான். கைகால்களையும் கட்டியிருக்கிறேன். நான் உங்கள் பணியாளனை அரங்கிற்கு அழைத்துச் செல்கிறேன். நீங்கள் இருவரும் கதவை மூடிவிட்டு சிறிது நேரம் காத்திருங்கள். சாதகமான சூழல் வந்தவுடன் இவனை

அதோ அந்த துணிமணிகளைக் கொண்டு செல்லும் வண்டியில் போட்டு மாளிகையின் பின்புறமாகச் செல்லுங்கள். அங்கே கூண்டு வண்டி தயாராக இருக்கும். அதில் இவனை ஏற்றிக் கொள்ளுங்கள். தண்டனைக் கூடத் தலைவி எப்படிச் சொல்கிறாரோ அப்படி நடந்து கொள்ளுங்கள்'' என்று கூறிவிட்டு பணியாளனை அழைத்துச் சென்றார்.

விருந்தினர் மாளிகையின் முன்பு காவல் வீரர்கள் வளைவாக பாதுகாப்பு கோட்டைப் போட்டுக்கொண்டு நின்றார்கள். அங்கே புதிய கூண்டு வண்டி தயாராக இருந்தது. அதில் பணியாளனை ஏற்றினார் வைத்தியர். வண்டியின் கதவு வெளியே பூட்டப் பட்டது. கதிரவனின் வெள்ளிக் கிரணங்கள் கீழ்வானத்தில் புலப்பட்டதும் கண்டாமணி ஒலித்தது.

''ம், புறப்படுங்கள்'' என்றான் காவல் படைத்தலைவன்.

வெள்ளைப் புரவிகள் பூட்டப்பட்ட கூண்டு வண்டி புறப்பட்டது.

உள்ளே அங்கிக்குள் இருந்த உதயசந்திரன் ''மிகவும் நன்றி வைத்தியரே. சொன்னபடியே செய்துவிட்டீர்கள்'' என்றான்.

''வாயை மூடு. உன்னோடு பேசவே பிடிக்கவில்லை எனக்கு'' என்றார் வைத்தியர் கடுப்புடன்.

அரங்கம் நிரம்பி வழிந்தது. மக்கள் உதயசந்திரனின் வரவை எதிர்பார்த்து ஆவலோடு காத்திருந்தார்கள். ஐந்தாயிரம் பேர் அமரக் கூடியதாய் இருந்த அரங்கத்தில் மன்னர், அவரது குடும்பத்தார், குலகுரு, மந்திரவாதிகள் ஆகியோர் அமர உயரமான இடத்தில் பச்சை நிற இருக்கைகள் அமைக்கப் பட்டிருந்தன. அந்த இருக்கைப் பகுதியிலேயே பலியிடப்பட வேண்டிய உதயசந்திரன் நிற்பதற்கும் மக்கள் அவனைக் காண்பதற்கும் வசதி செய்யப் பட்டிருந்தது.

அரங்கத்தில் ராட்சத முரசுகள் நூறு வைக்கப்பட்டிருந்தன. தாரைகள் நூறு, தப்பட்டைகள் நூறு, சங்குகள் நூறு, வேட்டுக்கள் நூறு என்று சுற்றிலுமாக வைக்கப்பட்டிருந்தன. நட்ட நடுவில் பலியிடும் மரம் நடப்பட்டு பூக்களால் அலங்கரிக்கப் பட்டிருந்தது.

மந்திரவாதிகள் முதலாவதாக இருக்கைகளில் வந்து அமர்ந்து மக்களை நோக்கி கைகளை ஆட்டினார்கள். பிறகு மன்னரின் குடும்பத்தார் வந்தனர். கடைசியாக மன்னனும் குலகுருவும் வந்தார்கள். அதையடுத்து மந்திரவாதி ஏதோ குரலெழுப்பவே முரசுகளும், தாரைகளும், தப்பட்டைகளும், வேட்டுகளும் ஒரே நேரத்தில் ஒலித்தன. அனைவரது செவிகளும் கிழிவது போல்.

மக்களோ ஆரவாரம் செய்து மகிழ்ந்தார்கள். அதையடுத்து அங்கியால் மூடப்பட்டிருந்த உதயசந்திரனை அழைத்து வந்தார் வைத்தியர். அப்போது சங்குகள் மட்டும் அபஸ்வரமாக ஒலித்தன. மன்னர் இருக்கையின் பக்கத்திலே இருந்த இடத்தில் கொண்டு வந்து நிறுத்தப்பட்டபோது மக்கள் அவனது முகத்தைப் பார்க்க வேண்டும் என்று கூச்சலிட்டார்கள்.

மன்னன் எழுந்து கைகளை ஆட்டி மக்களை அமைதியாக அமரச் செய்துவிட்டு ''எனது அருமை குடிமக்களே! நம்மை யெல்லாம் ஒரு வருட காலமாக வினோதமான ராட்சஷ விலங்கு ஒன்று மிரட்டிக் கொண்டிருக்கிறது. அதன் வரவால் உங்களில் பலர் அநியாயமாக மாண்டிருக்கிறீர்கள். அந்த வினோதப் பிராணியை அடக்கவோ அழிக்கவோ நம்மால் இயலாது என்ற நிலையில் தான் அதன் உபத்திரவத்திலிருந்து தப்ப நமது நாட்டின் தலைசிறந்த மந்திரவாதிகள் இரவும் பகலுமாய் விரதமிருந்து மாந்திரீக பரீட்சைகளைச் செய்து சன்னதம் கேட்டார்கள். வேறு நாட்டைச் சேர்ந்த வாலிபன் ஒருவன் ஒரு நாள் காம்போஜக் கடற்கரையில் ஒதுங்குவான். அவனைக் கொண்டு பலி பிரார்த்தனை செய்ய வேண்டும் என்று சன்னதம் கிடைத்தது. எனது மரியாதைக்குரிய குலகுருவிடம் இது குறித்து ஆலோசனை கேட்டேன். அவரும் இரண்டு நாட்களுக்கு மௌனவிரதம் இருந்துவிட்டு தன் அனுமதியைத் தந்தார். அழகிய வாலிபனுக்காக ஏறக்குறைய ஓராண்டு காலம் நாம் காத்திருந்தோம். சன்னதம் பலித்தது. நமது கடற்பகுதியில் இரண்டு ஆண்டுகளாக வராத புயல் வந்தது. இளைஞனைக் கொண்டு வந்து சேர்த்தது. எல்லோருமாக ஆலோசித்த பின்பு இன்றைய பௌர்ணமி நாளில் இளைஞனை இந்த வளை மரத்தில் வைத்து பலியிடத் தீர்மானித்தோம். நமது துயரங்கள் நீங்க ஆண்டவனால் அனுப்பப்பட்ட இந்த இளைஞன் புராண காலத்து மன்மதனைப் போலவே இருக்கிறான். இன்றைய நாள் வரை அவனைப் பாதுகாக்கவே பெரும் சிரமத்தைப்பட்டோம். அந்த மன்மதனின் அங்கியை நீக்குகிறேன். அனைவரும் அவனைக் கண்ணாறக் காணுங்கள். கண்டாமணி ஒலித்ததும் பலியிடும் வைபவம் நடைபெறும்'' என்று கூறிவிட்டு ''வைத்தியரே! அங்கியை அகற்றுங்கள்'' என்றான்.

வைத்தியர் அங்கியை அகற்றினார்.

மன்மத சொரூபனான உதயசந்திரனைக் காணப் பேராவலுடன் இருந்த மன்னன் தலையில் இடி விழுந்த மாதிரி அதிர்ந்தான். அங்கே மன்மத சொரூபன் இல்லை. கோர சொரூபனே இருந்தான்.

''வைத்தியரே! உதயசந்திரனை விட்டுவிட்டு இந்தக் கோர வடிவத்தைக் கொண்டு வந்திருக்கிறீர்களே - எங்கே அந்த வாலிபன்?'' என்று கர்ஜித்தான் மன்னன்.

''மன்னர் பிரானே! தாங்கள் காண்பது உதயசந்திரனைத் தான்'' என்றார் வைத்தியர் நடுங்கும் குரலில்.

''வைத்தியரே, நீங்கள் யாரிடம் பேசுகிறீர்கள் என்பதை மறந்துவிட வேண்டாம். மன்னனிடம் பேசுகிறீர்கள். நினைவிருக்கட்டும். இந்த கோர சொரூபனா உதயசந்திரன்? யாரை ஏமாற்றுகிறீர்கள்? அவன் சுந்தர சொரூபன். தேவ புருஷன்'' என்று சீறினான் மன்னன்.

''மன்னர் பிரானே, என்னை நம்புங்கள். தெய்வ சாட்சியாகச் சொல்கிறேன். இவன்தான் உதயசந்திரன்.''

''தேவ புருஷனாக இருந்த அவன் எப்படி இந்த அருவறுக்கத்தக்க கோர சொரூபியானான்?''

''நான் தான் அப்படி மாற்றினேன்.''

அதைக் கேட்டதும் வாளை உருவி வைத்தியனின் மீது வீசிவிட்டான் மன்னன்.

ஆனால் இதை நன்றாகவே எதிர்பார்த்திருந்த உதயசந்திரன் மன்னன் எறிந்த வாளை இமைக்கும் நேரத்தில் பிடித்து கீழே விட்டான். வாள் முனை அவனது கையைச் சற்றே பதம் பார்த்துவிட்டதால் ரத்தம் சொட்டியது. அதைப் பொருட் படுத்தாமல் மன்னனை நோக்கிய உதயசந்திரன், ''மன்னவா, வைத்தியரின் மீது எந்தவிதமான குற்றமும் இல்லை. என்னை அகோர வடிவமாக நான்தான் மாற்றும்படிக் கேட்டுக் கொண்டேன்'' என்றான்.

மன்னனின் கோபம் அதிகமாயிற்றே தவிர குறையவில்லை.

''உனக்கு யார் அனுமதி கொடுத்தது?'' என்று கேட்டான் கோபம் சற்றும் குறையாமல்.

''என் உடல். அதை மாற்றிக் கொள்ள யார் அனுமதியும் தேவையில்லை மன்னவா.''

''மூடனே! நீ ஒரு பிரார்த்தனைப் பொருள். இந்த நாட்டிற்காக உன்னைப் பலியிடுவதற்காக தேர்வு செய்திருந்தோம். அதற் காகவே கடற்கரையில் குற்றுயிராய் கிடந்த உன்னைக் கொண்டு வந்து சிறப்பான சிகிச்சைகளை அளித்தோம். இது உனக்கும் தெரியும். நீ அழகானவனாக இருப்பதால்தான் பலிக்குத் தேர்வு

செய்யப்பட்டாய். அப்படி இருக்க உன் அழகினைச் சிதைத்துக் கொள்ள உனக்கு உரிமையில்லை.''

''நீங்கள் பேசுவது வினோதமாக இருக்கிறது மன்னவா. கடற்கரையில் ஒதுங்குபவர்களுக்குச் சிகிச்சை செய்வது என்பது எங்குமே கருணை காரணமாக நடைபெறுகிற மனிதாபிமான செயல். தாங்களோ பலியிடுவதற்காகச் சிகிச்சை செய்ததாகச் சொல்கிறீர்கள்.''

''முட்டாளே! பலியிட முனைந்தது என் சொந்த சுகங்களுக்காக அல்ல. லட்சக்கணக்கான மக்களின் சுகங்களுக்காக. தெரியுமா?''

''நான் உங்கள் நாட்டு மக்களில் ஒருவனில்லையே! உங்கள் நாட்டு மக்கள் மீது உங்களுக்கு அக்கறை இருப்பதுபோல் எனக்கு என் நாட்டின் மீது அக்கறையும் ஆசையும் இருக்காதா? என் மீது என் நாட்டவருக்கு ஆசையும் பாசமும் இருக்காதா? நான் எதற்காக உங்கள் நாட்டுக்காக பலியாக வேண்டும்? பலியாகத் தான் வேண்டுமென்றால் அதற்கு என் அனுமதி நிச்சயமாக வேண்டும். நான் விலங்கல்ல பேசாமல் இருப்பதற்கு. மன்னர் பெருமானே! குற்றம் செய்தவர்களைக் கூட விசாரித்து குற்றத்தை உறுதி செய்து தண்டனை அளிப்பதற்கு அனுப்புகிறவர்கள் தாங்கள். குற்றமே செய்யாத என்னை விசாரிக்கவும் இல்லை. விருப்பத்தைக் கேட்கவும் இல்லை. நேராக பலி பீடத்திற்குக் கொண்டு வருகிறீர்கள். இது என்ன நியாயம்? என் நியாயத்தை தங்கள் மரியாதைக்குரிய குலகுருவிடமும் கேட்டேன். அவரும் நியாயம் சொல்லவில்லை. புயலில் சிக்கி அதிர்ஷ்டவசமாக உங்கள் நாட்டுக் கடற்கரையில் ஒதுங்கியவன் நான். அது என் பிழையல்ல. என்னைப் பற்றியும் என் உயிரைப் பற்றியும் யாருமே பொருட்படுத்தாமல் போனதால்தான் எந்த அழகு உங்களுக்கு முக்கியமாக இருந்ததோ அதை நான் சிதைத்துக் கொண்டேன்.''

''நீ செய்திருப்பது பெரும் குற்றம். லட்சக்கணக்கான மக்களின் நல்வாழ்விற்காக ஒருவனை பலியிடுவது தவறு என்று எந்த நாடும் சொன்னதில்லை. நீயோ உன் உயிரைப் பெரிதாக எண்ணி உன் இஷ்டப்படி செயல்பட்டு இன்று எல்லோரையும் ஏமாற்றி விட்டாய். உனக்குக் கிடைக்கப் போவது என்ன தெரியுமா?''

''மன்னவா! என்னை இங்கே தாங்கள் கொண்டு வந்தது உயிரை வாங்கத் தானே? அதைவிட பெரிய தண்டனை இருக்கிறதா?''

''இருக்கிறது. அதற்குச் சித்திரவதை என்று பெயர்.''

''இதை நான் எதிர்பார்த்திருக்க மாட்டேன் என்று நினைக்கிறீர்களா மன்னவா. நிச்சயமாக எதிர்பார்த்தேன். ஆனாலும் இங்கே

வந்திருக்கிறேனே இது எதைக் காட்டுகிறது? சித்திரவதைக்கு அஞ்சுபவனாக இருந்தால் தப்பியிருக்க மாட்டேனா நான்?''

''அப்படியொரு நினைப்பு இருந்ததா உனக்கு? அற்பனே! இது எமனின் கோட்டை. இதில் அனுமதியில்லாமல் நுழையலாம். ஆனால் என் அனுமதியின்றி யாரும் தப்ப முடியாது.''

''மன்னிக்க வேண்டும் மன்னவா. தண்டனைக் கூடத்தின் தலைவி ஊர்வசி என் மீது வெறித்தனமான காதல் கொண்டாள். கடைசி நேரத்தில் அதாவது இந்திரபுரத்தின் விருந்தினர் மாளிகையில் ஆள் மாறாட்டம் செய்து என்னைக் கடத்திக் கொண்டு வேறு நாட்டிற்குப் போக திட்டம் தீட்டினாள். நான் சம்மதித்திருந்தால் இன்று விடியற்காலையிலேயே அவளோடு ஓடி மறைந்திருக்க முடியும். எனக்கு பதில் இங்கே அவளது பணியாளன் தான் இருந்திருப்பான். ஆனால் நான் அவளை ஏமாற்றிவிட்டு இங்கே வந்திருக்கிறேன்.''

''நீ சொல்வது உண்மை என்று எப்படி நம்புவது?''

''எல்லா உண்மைகளும் இந்த வைத்தியருக்கும் தெரியும். கோழைத்தனமாகத் தப்ப விரும்பவில்லை என்று இவரிடம் சொல்லிவிட்டு ஊர்வசியை ஏமாற்றிவிட்டு இங்கே வந்திருக்கிறேன்.''

''வைத்தியரே! இவன் கூறுவதெல்லாம் உண்மையா?''

''ஆமாம் மன்னர் பிரானே.''

''ஆக எல்லோருமாகச் சேர்ந்து என்னையும் மக்களையும் ஏமாற்றியிருக்கிறீர்கள்.''

''இல்லை மன்னவா. ஒன்றை மட்டும் யோசித்துப் பாருங்கள். எல்லோரையும் ஏமாற்ற நினைத்தால் இங்கே நான் வருவேனா? எல்லோரும் வியந்து எனது இந்த அழகை இப்படிக் கெடுத்துக் கொள்வேனா? இதுவரை யாராவது இப்படித் தன் அழகை இந்தப் பருவத்தில் கெடுத்துக் கொள்வார்களா? அழகை கெடுத்துக் கொண்டது பலியிலிருந்து விடுபடத்தான். அதேசமயம் இங்கே நான் வந்தது இந்த நாட்டு மக்களுக்கு வந்துள்ளதுயரத்தை ராட்சஷ விலங்கினால் உருவாகியுள்ள பிரச்சனையை என்னால் போக்க முடியும் என்பதை பகிரங்கமாக அறிவிப்பதற்காகத்தான்.''

மன்னன் சூர்யவர்மன் உடனடியாக எதுவும் பேசவில்லை.

இந்நிலையில் தலைமை மந்திரவாதி எழுந்தார்.

★★★



70

நகராகூரன்

மந்திரவாதி எழுந்து உதயசந்திரனைப் பார்த்து ''உனக்கு இந்த நாட்டு மக்களின் பிரச்சனை என்னவென்பது தெரியுமா?'' என்று கேட்டார் மீசையை தடவிவிட்டபடி.

''தெரியும்'' என்றான் உதயசந்திரன்.

''என்ன தெரியும்?'' கேட்டார் மந்திரவாதி.

''உங்களுக்கு எந்த அளவிற்குத் தெரியுமோ அந்த அளவிற்குத் தெரியும்'' என்றான் உதயசந்திரன்.

''அது உண்மை என்பதை நான் எப்படி நம்ப முடியும்?''

''உங்கள் அவநம்பிகையைப் பற்றி எனக்குக் கவலை யில்லை. உங்கள் நம்பிக்கையை பெற வேண்டிய அவசியமும் எனக்கில்லை.''

''இது தனி மனிதனின் பிரச்சனை இல்லை. மக்களின் பிரச்சனை. அவர்களுக்கு உண்டாகியிருந்த நம்பிக்கையை நீ அழித்துவிட்டாய். அவர்களுக்கு நீ பதில் சொல்லக் கடமைப் பட்டவன்.''

''நான் பிரச்சனையையே தீர்ப்பதாக வாக்களித்திருக்கிறேன்.''

''எப்படித் தீர்ப்பாய்?''

''அது உங்களுக்குத் தெரிய வேண்டிய அவசியமில்லை. மன்னரோடு ஆலோசித்துத்தான் சொல்ல முடியும்.''

''நீ எதையோ சொல்லி குழப்பப் பார்க்கிறாய்.''

''அந்த அவசியம் எனக்கில்லை. குழப்ப நினைப்பவன் இந்த அரங்கிற்கு ஏன் வரவேண்டும்? உண்மையிலேயே மக்களின் குழப்பத்தையும் துன்பத்தையும் தீர்ப்பதற்காகத்தான் இங்கே வந்திருக்கிறேன். அதைத் தீர்க்காமல் இந்த நாட்டை விட்டுப் போகமாட்டேன்'' என்று மந்திரவாதியிடம் சொன்ன உதயசந்திரன் மக்களைப் பார்த்து ''காம்போஜ நாட்டு மக்களே! என்னை

நம்புங்கள். விதிவசமாக உங்கள் நாட்டு கடற்கரையில் நான் ஒதுங்கியது இந்த நாட்டு மக்களுக்கு ஏதோ நல்லது செய்வதற்காகத்தான் என்று நினைக்கிறேன். இல்லையென்றால் என்னோடு வந்தவர்களெல்லாம் சீன நாட்டிற்குச் சென்றுவிட நான் மட்டும் ஏன் கடலில் தூக்கி எறியப்பட வேண்டும்? எறியப்பட்டவன் மூழ்கிச் சாகாமல் ஏன் உயிர் பிழைக்க வேண்டும்? என் உயிரைக் காத்த ஆண்டவன் நிச்சயமாக என் உயிரை இங்கே பலியிடுவதற்கு அனுப்பியிருக்க மாட்டான். நான் உயிரோடு இருந்து சாதிக்க வேண்டும் என்பதுதான் ஆண்டவனின் கட்டளையாக இருக்க வேண்டும். ராட்சஷ விலங்கு பற்றி என்ன செய்யலாம் என்று எனக்குள் திட்டம் இருக்கிறது. அதை உங்கள் மன்னர் பிரானோடு ஆலோசித்து அவரது உதவியோடு தான் செய்ய வேண்டும். நீங்கள் அனுமதித்தால் செய்கிறேன். என் மீது நம்பிக்கையில்லை யென்றால் – நான் செத்துத்தான் போக வேண்டும் என்று விருப்பப்பட்டால் – இந்த அகோர உடலை நானே வெட்டிச்சாய்த்துக் கொள்கிறேன்'' என்றான்.

அச்சமயத்தில் தலைமை மந்திரவாதி ''மன்னர் பெருமானே! இவன் மக்களை ஏமாற்றியதோடு மட்டுமில்லாமல் குழப்பவும் முற்படுகிறான். நாங்கள் இந்த நாட்டின் பாரம்பரிய மந்திரவாதிகள். எங்களுக்கு இந்த நாட்டின் மீது இல்லாத அக்கறை இவனுக்கு வருவதற்கு வாய்ப்பே இல்லை. இவன் அகோர உருவத்தில் இருந்தாலும் பலியிடுவதே உகந்தது. அதில் பாதி பலனாவது கிட்டும். பலியை நிறுத்திவிட்டால் நாட்டிற்கு புதிய கேடுகள் வரும். இயற்கை சக்திகளால் உற்பாதங்கள் நிகழும்'' என்றார்.

அப்போது குலகுரு மன்னனிடம், ''மன்னா! எந்த ஒரு அழகான வாலிபனும் உயிர் ஆசையின் காரணமாகத் தன்னை அகோர வடிவினனாக மாற்றிக் கொள்ள மாட்டான். அவனுக்கு எதிர்காலமே போய்விட்டது. அவனை பலியிடுவதால் உனக்கு அவப்பெயர் தான் உண்டாகும். அதோடு அவன் ராட்சஷ விலங்குப் பிரச்சனையைத் தீர்த்து வைப்பதாகவும் சொல்கிறான். அதற்கு வாய்ப்பு கொடுத்தால்தான் என்ன? மக்களைக் காப்பாற்றுவதில் எந்த வாய்ப்பையும் நாம் வீணாக்கக் கூடாது'' என்றார் மெல்லிய குரலில்.

அதையடுத்து மன்னன் உதயசந்திரனையும் வைத்தியரையும் சிறையில் அடைக்கும்படி உத்தரவிட்டான். மக்களைப் பார்த்து, ''எனது அருமை குடிமக்களே! நீங்களெல்லாம் சற்றே ஏமாற

நேரிட்டதற்காக நான் வருந்துகிறேன். ஆனாலும் நான் ஏமாறவில்லை என்பதை மறந்து விடாதீர்கள். இந்த வாலிபனின் உயிரை போக்குவதல்ல நம் நோக்கம். உங்கள் துயரைத் தீர்ப்பதுதான். அதில் நான் உறுதியாக இருக்கிறேன். உங்கள் துயர்களைத் துடைப்பேன். எனவே அமைதியாகக் கலைந்து செல்லுங்கள்'' என்று கேட்டுக் கொண்டான்.

மக்களும் கலைந்து சென்றார்கள்.

முரசுகளும் தாரைகளும் அவர்களது ஏமாற்றத்தை அங்கீகரிப்பதுபோல் சப்பையாக ஒலி எழுப்பின. ஒரே ஒரு சங்கு அழுவதுபோல் ஒலித்தது.

☆

அரங்கத்திற்கு வந்திருந்தவர்கள் அனைவருமே ஏமாந்திருந்தாலும் மிகவும் அதிகமாக ஏமாந்தவனாக இருந்தான் தலைமை மந்திரவாதியான சீராளன். விழா தொடங்குவதற்கு முதல் நாள் வரை தன்னைப் பெரிதாக மதித்துச் சொன்னதைக் கேட்டுச் செய்து வந்து கொண்டிருந்தவனான மன்னன் அரங்கத்தில் தன் பேச்சைக் கேட்டு உதயசந்திரனை பலியிடாமல் உதாசீனமாக இருந்துவிட்டது அவனுக்கு இரண்டாவது ஏமாற்றமாகவும் அவமானமாகவும் இருந்தது. தன்னைப் புறந்தள்ளும் அளவிற்கு உதயசந்திரனின் பேச்சில் அப்படி என்ன மாயம் இருந்துவிட்டது என்று தான் அவனது மனம் எண்ணியதேயன்றி உதயசந்திரனின் மகத்தானதியாகத்தைப் பற்றி எண்ண முற்படவில்லை.

இந்த திடீர் திருப்பத்தால் தனக்குத்தான் அதிக இழப்பு என்பது அவனுக்குப் புரிந்தது. ''மன்னன் தன் மீது வைத்திருந்த மரியாதை போய்விட்டது. மன்னனிடம் தனக்கிருந்த செல்வாக்கு போய் விட்டது. மன்னனிடமிருந்து தனக்கு வந்து கொண்டிருக்கும் தங்கமும் இனி நின்றுவிடும். மொத்தத்தில் தன் எதிர்காலமே இருண்டுவிட்டது என்பதை உணர்ந்த சீராளன் தனது தலையில் கல்லைப் போட்ட உதயசந்திரனை என்ன செய்யலாம் என்று யோசிக்கலானான்.

உதயசந்திரன் பலியிலிருந்து தப்புவதற்கு முயலலாம் என்று மன்னன் முதல் மந்திரவாதி முதல் எதிர்பார்த்தார்களேதவிர அவன் தன் முகத்தைப் பாழாக்கிக் கொள்வான் என்று கனவிலும் எதிர்பார்க்கவில்லை. அவனது மன்மத வடிவைக் காணத்துடித்த மக்களுக்கு அதிலும் குறிப்பாக பெண்களுக்கு அவனது கோர வடிவைக் கண்டதும் இதயத் துடிப்பு நின்றுவிடும் போலிருந்தது.

அழகானப் பெண்களை விலை கொடுத்து வாங்கி சுகம் காணும் அழகற்ற ஆண்கள் வாழும் இந்த நாட்டில் வந்து சேர்ந்த வடிவழகனான உதயசந்திரன் தனது அழகால் ஆயிரக்கணக்கான பெண்களை விலை கொடுக்காமலேயே கவர முடியும். அவன் அப்படி எண்ணியிருந்தால் சாதித்திருக்கவும் முடியும். பெண்களே கூட முயன்றிருந்தால்கூட அவனை விடுவித்து அள்ளிக் கொண்டு போயிருக்க முடியும். ஊர்வசி அப்படித்தான் முயன்று தோற்றாள். நிலைமை இப்படி இருக்கும்போது உதயசந்திரன் தன் அழகை கெடுத்துக் கொண்டது பெண்களைப் பொறுத்தவரை நம்ப முடியாத விந்தையாக இருந்தது. அவர்களெல்லாம் அவனைப் பற்றியே பேசிக் கொண்டார்கள். பலர் அனுதாபப்படவும் செய்தார்கள்.

மந்திரவாதி சீராளனுக்கு பொறாமையாகவும் கோபமாகவும் இருந்ததே தவிர அனுதாபம் வருவதாக இல்லை. தனது இந்திரபுரத்து சுந்தரி லோகமான மாளிகைக்குச் சென்ற போது அங்கே கட்டிப் போடப்பட்டிருந்த அழகியைக் கண்டான். அவள் மீது தான் அனுதாபம் வந்தது அவனுக்கு. உண்மையைச் சொல்லியிருந்த அவளைப் போய் கோபத்தில் தண்டித்து விட்டதைத் தவறென்று உணர்ந்த அவன் பணியாளர்களை அழைத்து அவளது கட்டுக்களை அவிழ்த்துவிட்டு உணவளித்து நீராட்டி நல்லாடைகளை அணிவித்து இரவில் அழைத்து வரும்படி கட்டளையிட்டான்.

இரவில் அவள் வந்தபோது அசந்து போனான் மந்திரவாதி. அந்த அளவிற்குச் சோர்வுகள் நீங்கப் பெற்று புதியதொரு சொர்க்கலோகம் போல் வந்து நின்று சிரித்தாள் அந்த அழகி.

''உன்னைத் தவறாக இம்சை செய்துவிட்டேன். வருந்துகிறேன்'' என்றான் மந்திரவாதி.

''நீங்களும் வருந்த வேண்டாம். நானும் வருந்தவில்லை. இந்த இடத்தில் உங்களுக்கு எது தேவையோ அதைத் தந்துவிட்டுப் போகாமல் பேச்சில் இறங்கியது என் தவறுதான்'' என்றாள் அந்த அழகி.

''அந்த வாலிபன் எல்லோரையும் ஏமாற்றிவிட்டான்'' என்றான் மந்திரவாதி.

''பணியாளர்கள் சொன்னார்கள். ஆனால் எனக்கு அதில் ஆச்சரியம் எதுவுமில்லை.''

''ஆச்சரியமில்லையா? ஒருவேளை அவனது செயலை நீ எதிர்பார்த்தாயா?''

''ஆமாம்.''

''எப்படி?''

''சாதாரணமான ஊகம் தான் சீராளரே.''

''என்ன ஊகம்?''

''அந்த இளைஞன் சாவதற்குத் தயாராக இருக்க மாட்டான்.''

''ஆமாம்.''

''அதேசமயம் பலத்த பாதுகாப்பிலிருந்து அவனால் தப்பிச் செல்ல முடியாது.''

''சொல் மேலே.''

''பலியும் நடக்கக் கூடாது. உயிரும் போகக் கூடாது என்றால் ஒன்றைத் தான் உபாயமாகச் செய்ய முடியும். அதைத்தான் அந்த வாலிபன் செய்திருக்கிறான்.''

''பெண்ணே! நீ அழகி தானே? நான் சொக்கிப் போவது உன் அழகில்தானே?''

''ஆமாம்.''

''உன்னால் அவனைப் போல் செய்து கொள்ள முடியுமா?''

''செத்தாலும் சாவேனே தவிர அழகை இழக்கமாட்டேன்.''

''அவன் மட்டும் எப்படி இழந்தான்?''

''அவன் சாமானியவனாக இருக்க முடியாது. லட்சிய வாதியாகத் தான் இருக்க முடியும். தன் அழகை விட லட்சியம் பெரிதாக இருக்க வேண்டும். அப்படிப்பட்டவனுக்குத்தான் இந்தத் துணிவு வரும்.''

அழகி சொல்வது உண்மைதான் என்பது மந்திரவாதிக்குத் தெளிவாகப் புரிந்தது. அதேசமயம் உதயசந்திரனின் எழுச்சி தன்னுடைய வீழ்ச்சி என்பதும் புரிந்ததால் அரங்கத்தில் தப்பிய அவனை அந்தரங்கமாக வைத்தாவது கொன்றால்தான் தன் பிழைப்பு நடக்கும் என்று கருதினான். அதற்கான யோசனை அப்போது தோன்றவில்லை. அப்போதைக்கு மருந்தாக அழகி தான் தோன்றினாள்.

எனவே அவளை அழைத்து தோலுரிப்பது போல் ஆடைகளை உரித்து தனது ஏமாற்றத்தையும் கோபத்தையும் அவளது அங்கங்களில் உக்கிரமாகக் காட்டினான். அடியுண்ட மான் கடியுமுண்ட கதையாக அவஸ்தைக்கு ஆளான அந்த அழகி அவனது உக்கிரத்திற்கும் வக்கிரத்திற்கும் காரணத்தை அறிந்திருந்த காரணத்தால் கேய்பிறையாக அவனிடம் தோய்ந்தாள். அந்த

நாசக்கார மந்திரவாதியின் காட்டுத்தனமான காம தர்பார் அவளது உயிரையே பறித்தது.

இதே நேரத்தில் மன்னன் சூர்யவர்மன் மாடங்கள் நிறைந்த தன் மாளிகையைச் சேர்ந்த கூடத்தின் மேலிருந்த கோபுரத்தின் மச்சுப்படி யொன்றில் அமர்ந்து கொண்டு யோசனையில் ஆழ்ந்து கிடந்தான். அவனுக்கு முன்னால் தீவட்டியைப் பிடித்துக் கொண்டிருந்த பணியாளனுக்கு கை வலித்தது. வலிக்கிறது என்று சொன்னால் கை போய்விடும் என்பதால் வலியை விதியாக எண்ணி விறைப்பாகவே நின்றான்.

அப்போது ''அப்பா'' என்ற தேன் குரல் ஒன்று ஒலித்தது.

சிந்தனையை அறுக்கத் தேன் குரல் போதுமானதாய் இருந்ததால் பொழுதுபோவது தெரியாமல் அமர்ந்துச் சிந்தனைகளைச் சுமந்து கொண்டிருந்த சூர்யவர்மன் சூடுபட்டவனைப் போல சிந்தனையிலிருந்து விடுபட்டு தனது ஆசை மகளைப் பார்த்து ''நீயா குழந்தாய்? நீ ஏனம்மா இவ்வளவு தூரத்திற்கு வந்தாய்? கால்கள் வலிக்கவில்லையா?'' என்று கேட்டான்.

''நீங்களும் தானே அப்பா இவ்வளவு தூரம் ஏறி வந்தீர்கள்? உங்கள் கால்கள் வலிக்கவில்லையா?'' என்று தென்றலைப் போல வார்த்தைகளை வீசி அவனது கால்களைப் பூக்களைப் போல கைகளால் தொட்டாள்.

அதைப் பார்த்து மிகவும் நெகிழ்ந்து போன மன்னன் ''இது உரமேறிய கால்கள். இவை இரும்புத் தன்மையை அடைந்து எவ்வளவோ காலமாகிவிட்டது. உனது கால்கள் பிஞ்சுக் கால்கள் குழந்தாய். பூக்கள் மீது நடந்தால் கூட பாதங்களில் தழும்புகள் வந்துவிடும்'' என்றான் பாசத்துடன்.

''என் தாய் இருந்தால்கூட இப்படிப் பேச முடியாது அப்பா. நீங்கள் பேசுகிறீர்கள். நீங்கள் தாயுமானவர்'' என்றாள் மகள்.

அவர்களது உரையாடல்களைக் கேட்டு வலியை மறந்து வியப்பில் ஆழ்ந்தான் பணியாளன்.

''இங்கேயே உட்கார்ந்திருக்கப் போகிறீர்களா அப்பா?'' என்று கேட்டாள் மகள்.

''உனக்கு நினைவிருக்கிறதா பூவிழி? முன்பொரு சமயம் நாம் இருவரும் இங்கே அமர்ந்து கொண்டு தான் ஊரையும் கடலையும் பார்த்துக் கொண்டிருந்தோம். அப்போது அந்த ராட்சஷ விலங்கு தோன்றியது. அதன் தலை இந்த கோபுரத்தில் உரசிச் சென்றது. நீ மயக்கமடைந்தாய்'' என்றான் மன்னன்.

''ஆமாம் அப்பா. நான் மறக்க முடியாதது இரண்டுதான். ஒன்று நீங்கள். இரண்டாவது அந்த ராட்சஷ பல்லி'' என்றாள் பூவிழி.

''நீ அதற்கு ஒரு பெயரையும் சூட்டினாய். நினைவிருக்கிறதா அம்மா?''

''நானிட்ட பெயரை நான் மறப்பேனா? நகராசூரன் என்று பெயரையிட்டேன். இந்த நகரத்தில் இன்றைக்கு அதுதானே சூரன்?''

''சரியான பெயர் மகளே.''

''இப்போது உங்களுக்கு எதைப் பற்றியச் சிந்தனை?''

''அந்த வாலிபனைப் பற்றித்தான் குழந்தாய்.''

''அப்பா, மரகதப்பட்டிணத்தில் முதன் முதலாக அவரை நாம் பார்த்தபோது அவரை விட்டு விடுங்கள் என்றேன். நீங்களோ பேசாமலிரு என்று அடக்கிவிட்டீர்கள். அன்றைக்கு விடுவித்திருந்தால் அவருக்கு இந்த கதி நேர்ந்திருக்காது அல்லவா?''

''குழந்தாய்! நான் என் சுயநலத்திற்காகவா அவனை பலியிட முனைந்தேன்? நமது மக்களை அச்சுறுத்தும் நகரர்சூரனை அழிக்கத்தானே செயல்பட்டேன்?''

''அப்பா! அவர் அரங்கத்திற்கு வந்து நகராசூரன் பிரச்சனையைத் தீர்ப்பதாகச் சொன்னார் அல்லவா?''

''ஆமாம்.''

''மரகதப்பட்டிணத்திலேயே இது விஷயமாக நீங்கள் பேசியிருந்தால் அவர் உபாயம் சொல்லியிருப்பார் அல்லவா? தன் உடம்பைப் பாழாக்காமல் இருந்திருப்பார் அல்லவா?''

''உண்மைதான் மகளே.''

''அவரை விசாரியுங்கள் அப்பா. எங்கேயிருந்து வருகிறார் எதற்காக வருகிறார் என்பதையெல்லாம் கேட்டறியுங்கள் அப்பா. இதில் உங்களுக்கென்ன கஷ்டம்? குற்றவாளிகளை விசாரிக்கும் நீங்கள் தன்னை விசாரிக்கவில்லை என்று சொன்னாரே அவர் அதை மறந்துவிட்டீர்களா? காம்போஜ மன்னருக்கு கருணை இல்லையா?''

''விசாரிக்கிறேன் மகளே. உடனே விசாரிக்கிறேன்.''

சிறையில் அடைக்கப்பட்டிருந்த உதயசந்திரன் அருகே வருத்தமாக அமர்ந்திருந்த வைத்தியரைப் பார்த்து ''என்ன

வைத்தியரே, ஒரேயடியாக வருத்தத்தில் ஆழ்ந்து விட்டீர்களே - அப்படியென்ன வருத்தம்? உணவு கூட நன்றாகத் தானே கிடைத்தது?'' என்று கேட்டான்.

அவனை வெறுப்புடன் பார்த்த வைத்தியர் ''சோறு கிடைத்துவிட்டால் போதுமா?'' என்று கேட்டார்.

''நமக்குச் சோறு போட வேண்டிய அவசியம் இல்லாதவர்கள் சோறு போட்டிருக்கிறார்களே இதைக் கண்டு நீங்கள் மகிழ்ச்சியடைய வேண்டுமல்லவா?''

''வாலிபனே! ரொம்பவும் கர்வப்பட்டுவிடாதே. உன்னை பலியிடவில்லையே தவிர விடுதலை செய்துவிடவில்லை. உன்னையும் என்னையும் சிறையில்தான் அடைத்திருக்கிறார்கள்.''

''அதனாலென்ன?''

''நம்மை விடுவிக்கும் எண்ணம் மன்னருக்கு இல்லை.''

''விசாரிக்க வேண்டுமல்லவா? அதற்காகச் சிறையில் வைத்திருக்கிறார்கள்.''

''நம்மை விசாரிக்க வேண்டிய கட்டாயம் மன்னருக்கு இல்லை. விசாரிக்காமலேயே கொன்றுவிட முடியும்.''

''அப்படியானால் அதை அரங்கிலேயே செய்திருக்கலாமே?''

''அங்கே செய்தால் ரசாபாசங்கள் உண்டாகலாம். மன்னனுக்கு அவப்பெயர் உண்டாகலாம். அழகை இழந்து விட்டவனை எதற்காகக் கொல்ல வேண்டும் என்று மக்கள் கேட்கலாம். அல்லது நினைக்கலாம். ஆகவே பகிரங்கமாகக் கொல்லாமல் ரகசியமாகக் கொல்லலாம் என்பது என் அபிப்ராயம்.''

''வைத்தியரே! பிறந்தவர்கள் என்றாவது சாகத்தானே வேண்டும்?''

''உதயசந்திரா! நேரம் கெட்ட நேரத்தில் விளையாடாதே.''

''நான் விளையாடவில்லை வைத்தியரே. உண்மையைத்தான் சொல்கிறேன்.''

''நீ வேண்டுமானால் சாவதற்குத் தயாராக இரு. எனக்கு விருப்பமில்லை.''

''வைத்தியரே! என் கைகளைக் கவனித்தீர்களா? வாள் அறுத்த காயமும் ஒழுகிய ரத்தமும் அப்படியே இருக்கிறது. இது எதனால் ஏற்பட்டது என்பது உங்களுக்குத் தெரியும். உங்கள் மீது வீசப்பட்ட

வாளை நான் தாங்கிப் பிடித்ததால் ஏற்பட்ட காயம் இது. உங்கள் உயிரைக் காப்பாற்றுவதாகச் சொன்னேன். காப்பாற்றவும் செய்தேன். என்னைப் போய் சாவதற்குத் தயாராக இருக்கும்படிச் சொல்கிறீர்கள்? சாவதற்காகவா நான் உங்களிடம் சொல்லி என் அழகை இழக்கச் செய்தேன்?''

''மன்னித்துவிடு உதயசந்திரா. உன்னைப் போன்ற நெஞ்சுறுதி எனக்கில்லை. ஆகவேதான் ஏதேதோ பேசி விட்டேன். வைத்தியனாக இருந்து கொண்டு உன் காயத்தைக் கூட கவனிக்கவில்லை. எங்கே உன் கையைக் காட்டு'' என்று கூறி உதயசந்திரனின் காயம் பட்ட கையை பந்த ஒளியில் சோதித்தார்.

''கத்தி கையின் சதையை அறுத்திருக்கிறது. நல்ல வேளையாக நரம்புகளைத் தொடவில்லை. பச்சிலை கட்டுப் போட்டால்தான் நல்லது. அதற்கு நான் எங்கே போவேன்?'' என்று சொன்ன வைத்தியர் தங்கள் அறைக்கு வெளியே காவலுக்கு இருந்த வீரனைப் பார்த்து ''வீரனே! இவருக்கு கையில் காயம் பட்டிருக்கிறது. வைத்தியம் செய்ய மூலிகை வேண்டும்'' என்றார்.

''என்னால் எதுவும் செய்ய இயலாது ஐயா. உணவைத் தவிர எதையும் தரக் கூடாது என்பது எங்களுக்குக் கட்டளை'' என்றான் காவல் வீரன்.

''வைத்தியரே, கவலைப்படாதீர்கள். நமக்கு விடிவு கிடைக்காமல் போகாது'' என்றான் உதயசந்திரன்.

அது சரி என்று ஆமோதிப்பது போல் இரண்டு வீரர்கள் அங்கே வந்தார்கள்.

காவல் வீரனிடம், ''இந்த இருவரையும் உடனே அழைத்து வரும்படி மன்னர் பிரானின் உத்தரவு'' என்று கூறி அடையாளமாக முத்திரை மோதிரத்தைக் காட்டினார்கள்.

காவல் வீரன் இருவரையும் விடுவித்து வந்தவர்கள் கொண்டு வந்த பல்லக்கில் ஏற்றினான். பல்லக்கு புறப்பட்டது.

''நான் சொன்னது சரியாகிவிட்டது பார்த்தீர்களா?'' என்று கேட்டான் உதயசந்திரன்.

வைத்தியரும் மகிழ்ச்சியோடு தலையை ஆட்டினார்.

ஆனால் வந்தவர்கள் இருவரும் மன்னரின் ஆட்களல்ல மந்திரவாதியின் ஆட்கள் என்பதை அவர்கள் அறியவில்லை.

★★★



71

கடத்தலும் கலக்கமும்

பல்லக்கில் சுகமாக அமர்ந்திருந்த வைத்தியர், ''உதய சந்திரா! மன்னன் நம்மை அழைத்திருக்கும் விதத்தைப் பார்த்தால் இன்றே விடுதலை செய்துவிடுவார் என்று தோன்றுகிறது'' என்றார் உற்சாகத்துடன்.

அதற்குப் பதிலேதும் சொல்லாத உதயசந்திரன், ''வைத்தியரே, உங்கள் தலைப்பாகைத் துணியைக் கிழித்து சற்று கட்டுப்போட முடியுமா?'' என்று கேட்டான்.

''எனக்குத் தோன்ற வேண்டியது உனக்குத் தோன்றுகிறது'' என்று சொன்ன வைத்தியர் தலைப்பாகைத் துணியைக் கிழித்து பக்குவமாக ஒரு கட்டைப் போட்டார். ''நம்மை விடுவித்ததும் நாம் இந்த நாட்டிலேயே இருக்க வேண்டாம். வணிக மரக்கலத்தில் ஏறி சாவகத்திற்குச் சென்றுவிடலாம். அங்கே பிழைப்பிற்கு நிறைய வழிகள் இருக்கின்றன'' என்று மேலும் சொன்னார்.

உதயசந்திரன் பதிலேதும் சொல்லவில்லை.

வைத்தியரோ அதைப் பொருட்படுத்தாமல், ''நாம் இந்த நாட்டில் இருந்தால் யாராவது தொல்லை கொடுத்துக் கொண்டே இருப்பார்கள். அதனால்தான் சொல்கிறேன்'' என்றார்.

உதயசந்திரன் திடீரென்று சற்றே உரத்த குரலில், ''வைத்தியரே! உங்களுக்குக் கொஞ்சமாவது மூளையிருக்கிறதா? கை வலி உயிர் போகிறது. நீங்களோ வளவளவென்று பேசிக் கொண்டிருக்கிறீர்கள். நீங்கள் வைத்தியர்தானா?'' என்று கேட்டான்.

அவனது திடீர் கோபத்திற்குக் காரணம் தெரியாததால், ''எதற்கு கோபப்படுகிறாய்? நீ சொன்னபடி கட்டுப் போட்டிருக்கிறேனே?'' என்றார் குரலை உயர்த்தி.

''வெறும் துணியைப் போட்டு கட்டிவிட்டால் காயம் ஆறி விடுமா? சிகிச்சை செய்ய வேண்டும் ஐயா. கை அழுகி விட்டால்

நீங்கள் தருவீர்களா? அழகைத் தான் கெடுத்து விட்டீர்கள். கையையாவது காப்பாற்றக்கூடாதா?'' என்றான் உதயசந்திரன்.

வைத்தியருக்கும் கோபம் வந்துவிட்டது. ''என்னைக் கோபித்து பயனில்லை. வெறும் கைகளை வைத்துக் கொண்டு வைத்தியம் செய்ய முடியாது'' என்றார் கோபத்துடன்.

''பல்லக்கில் போய்க் கொண்டிருந்தால் மட்டும் குணமாகிவிடுமா?''

இப்படி இருவரும் சண்டை போட்டுக் கொள்வது போல் பேசியதால் பல்லக்கிற்கு முன்னால் சென்ற இரு வீரர்களும் அருகில் வந்து, ''இங்கே என்ன சண்டை?'' என்று வினவினார்கள்.

''என் கைக்காயத்தை தாங்க முடியவில்லை. உயிர் போய்விடும் போலிருக்கிறது. சிகிச்சை செய்யச் சொன்னால் இந்த வைத்தியர் விழிக்கிறார். என்னால் பயணம் செய்ய முடியாது. பல்லக்கை நிறுத்துங்கள்'' என்றான் உதயசந்திரன்.

''பல்லக்கை நிறுத்த முடியாது. மன்னரை உடனடியாகச் சந்திக்க வேண்டும். சந்தித்தபின் சிகிச்சைக்கு நானே ஏற்பாடு செய்கிறேன்'' என்றான் காவல் வீரன்.

வைத்தியரும் ''கொஞ்சம் பொறுத்துக் கொள் உதயசந்திரா. அரண்மனைக்குப் போனதும் நான் சிகிச்சை செய்கிறேன்'' என்றார் மெல்லிய குரலில்.

காவல் வீரர்களும் ''ஆமாம்'' என்று சொல்லிவிட்டு பல்லக்கிற்கு முன்னால் சென்றார்கள்.

உதயசந்திரனோ அடங்குவதாக இல்லை. ''வைத்தியரே, நீங்கள் வேண்டுமானால் பல்லக்கில் சுகமாகப் பயணம் செய்யுங்கள். எனக்குச் சம்மதமில்லை'' என்று கூறிவிட்டு பல்லக்கை விட்டு கீழே குதித்தான்.

அவன் திடீரென குதித்ததால் பல்லக்கு குலுங்கியதோடு குடை சாய்ந்தது. அதைத் தோளில் சுமந்த தூக்கிகளுக்கும் தோள்கள் நிலைகுலைந்து போகவே தடாலென பல்லக்கை கீழே வைத்தார்கள்.

கீழே குதித்த நிமிடத்திலேயே எழுந்து கொண்ட உதய சந்திரன் மேலே என்ன நடக்கும் என்பதை ஊகித்தவனாய் முன்னால் பாய்ந்து சென்று காவல் வீரனை புரவியிலிருந்து தட்டிவிட்டான். புரவி அலறி ஓடியது. மற்றொரு காவல் வீரன் அதிர்ந்து போய் வாளை உருவி உதயசந்திரனின் மீது வீசினான். வாளின் தாக்குதலிலிருந்து தப்பிய உதயசந்திரன் கீழே விழுந்து

வாளை எடுத்து கீழே விழுந்த வீரனின் மார்பில் பாய்ச்சி எடுத்துவிட்டு பல்லக்குத் தூக்கிகளை வாளால் தாக்கினான். வாட்போருக்கு பரிச்சயம் இல்லாத பல்லக்குத் தூக்கிகள் காவல் வீரன் ஒருவன் வீழ்ந்து கிடப்பதைக் கண்டதும் உதயசந்திரனோடு மல்லுக்கு நிற்க முயலாமல் ஓடினார்கள். தனியாக நின்ற காவல் வீரனும் புரவியை விட்டு இறங்காமல் தப்பி ஓடினான்.

பல்லக்கிலிருந்து இறங்கி நின்று கொண்டிருந்த வைத்தியருக்கு எதுவும் புரியவில்லை. எதற்காக உதயசந்திரன் இப்படி நடந்து கொண்டான் என்பது தெரியாமல் விழித்தார். சுற்றிலும் ஒரே இருட்டாக இருந்தது.

இதற்கிடையில் தனக்குக் கிடைத்த வாளை இடையில் செருகிக் கொண்ட உதயசந்திரன் வைத்தியரிடம் சென்று, ''என்ன வைத்தியரே, பல்லக்குப் பயணம் தடைபட்டுவிட்டதே என்று வருத்தமா?'' என்று கேட்டான்.

''உதயசந்திரா, எனக்கு எதுவும் விளங்கவில்லை. நமக்கு விடிவு மன்னர் மூலம் தான் கிடைக்கும். அவரே அழைக்கும் போது நாம் போவதுதானே முறை? எதற்காகத் தடுத்தாய்? வேறு முறையில் தப்பலாம் என்று யோசிக்கிறாயா? அதெல்லாம் வேண்டாம் வாலிபனே. அது ஆபத்து. மன்னரை அற்பமாக எடை போடாதே'' என்று பதட்டத்துடன் சொன்னார் வைத்தியர்.

''வைத்தியரே, இன்று காலையில் தான் நாம் அரங்கத்திற்கு வந்தோம். பலியிடவும் மன்னர் தயாராக இருந்தார். அவரது திட்டம் குலைந்தது. பலி நின்றது. அரை நாள் தான் கழிந்திருக்கிறது. அதற்குள் அவர் நம்மை அழைக்கும் அளவிற்கு என்ன விவரத்தை நம்மைப் பற்றி அறிந்திருக்க முடியும்? நம்மைப் பற்றி அவரிடம் உண்மையைச் சொல்ல யார் இருக்கிறார்கள்?'' என்று கேட்டான் உதயசந்திரன்.

''நீ சொல்வது சரிதான்'' என்றார் வைத்தியர்.

''அப்படியே நம்மைப் பற்றி ஏதாவது விவரம் தெரிந்திருந்தாலும் இரவு நேரத்திலா அழைப்பார்? நாளை பொழுது விடிந்த பின் அழைத்திருந்தால் நம்பலாம்.''

''ஆமாம்.''

''அதோடு நம்மை அழைக்க பல்லக்கை அனுப்புவது நம்புகிற மாதிரியா இருக்கிது?''

''உண்மைதான்.''

''மன்னர் நம்மை அழைக்கவில்லை.''

''பிறகு?''

''நமக்கு வேண்டாதவர்கள்தான் நம்மை அழைக்க முடியும். அல்லது கடத்த விரும்பியிருக்கலாம்.''

''நமக்கு வேண்டாதவர்கள் யார்?''

''எனக்கு வேண்டாதவர் ஒருவர் தான்.''

''மந்திரவாதியைச் சொல்கிறாயா?''

''அவர் தானே என்னைப் பலியிடத் துணிந்தார்? அந்த அரங்கத்தில் என்னை விரும்பாத ஒரே மனிதர் அவர்தானே?''

''அவர் நம்மைக் கடத்த முயன்றார் என்கிறாயா?''

''ஆமாம்.''

''எதற்காகக் கடத்த வேண்டும்?''

''என்னை ஒழிப்பதற்காகத்தான்.''

உதயசந்திரன் கூறியது உண்மையாக இருக்கும் என்று தான் தோன்றியது வைத்தியருக்கு. சரியான நேரத்தில் சந்தேகப்பட்டு செயல்பட்டு விபரீதத்தில் சிக்காமல் தப்பிக்க வழி செய்த உதயசந்திரனைப் பாராட்டிய வைத்தியர் ''இனி என்ன செய்வது உதயசந்திரா?'' என்று கேட்டார்.

''சிறைக்கே திரும்பிவிடுவது தான் நல்லது என்று தோன்றுகிறது. அதேசமயம் நாம் சொல்வதை அவர்கள் நம்பாமல் பிரச்சனையை உருவாக்கி விட்டால் நிலைமை சிக்கலாகிவிடும் என்றும் தோன்றுகிறது'' என்று சொன்ன உதயசந்திரன் சுற்றிலும் நோக்கிவிட்டு ''வைத்தியரே. நாம் நகர் பகுதியைக் கடந்துவிட்ட மாதிரி தெரிகிறது. சுற்றிலும் மரங்கள்தான் காணப்படுகிறதே தவிர கட்டிடம் எதுவும் தெரியவில்லை. விளக்கு வெளிச்சத்தைக் கூடக் காணோம். உங்களுக்கு இது எந்தப் பகுதி என்று தெரிகிறதா?'' என்று கேட்டான்.

''தலைநகரின் கிழக்குப் பகுதி என்று நினைக்கிறேன். இப் பகுதி முழுவதும் காட்டுப் பகுதிதான். இந்தப் பகுதிக்குள் மந்திர வாதியின் ரகசிய இடம் இருக்க வேண்டும். ஆகவே தான் நம்மை இந்தப் பகுதிக்கு அழைத்து வந்திருக்கிறார்கள்'' என்றார் வைத்தியர்.

''இங்கிருந்து அரண்மனை வெகுதூரமா?''

''நடந்து செல்லக்கூடிய தூரம்தான்.''

''வைத்தியரே! வழியில் தர்ம சத்திரம் இருந்தால் அங்கே தங்கிவிட்டு காலையில் போய் மன்னரைச் சந்திக்கலாம் என்று நினைக்கிறேன். இப்போது அரண்மனைக்குச் செல்வது சரியல்ல. என்ன சொல்கிறீர்கள்?''

''அதுதான் சரி.''

வைத்தியரை வழிகாட்டச் சொல்லி நடந்தான் உதயசந்திரன்.

ஆனால் அப்போது இருபுறங்களிலும் ஆரவாரங்கள் கேட்டன. பந்தங்களும் புலப்பட்டன.

''வைத்தியரே, நாம் மீண்டும் ஆபத்தில் சிக்கிக் கொண்டோம் என்று நினைக்கிறேன்'' என்றான் உதயசந்திரன்.

அது உண்மைதான் என்பதை அறிவிப்பதுபோல் பந்தமேந்திய வீரர்கள் இருவரையும் சூழ்ந்து கொண்டார்கள்.

தலைமை மந்திரவாதி சீராளனும் புரவி மீது ஆக்ரோணித்த படி அங்கு வந்து சேர்ந்தான்.

''நான் நினைத்தது சரியாகிவிட்டது. நீ தப்பிவிடுவாய் என்று எண்ணி என் வீரர்களை நம்பாமல் நானே நேரில் புறப்பட்டேன். உன்னைப் பிடித்துவிட்டேன்'' என்றான் மந்திரவாதி.

எந்த மந்திரவாதியின் பிடியிலிருந்து தப்பிவிட்டதாக உதயசந்திரன் நினைத்தானோ அதே மந்திரவாதியிடம் வகையாகச் சிக்கிக் கொண்டதை உணர்ந்ததும் மௌனமாகவே இருந்தான்.

மந்திரவாதி எந்த இடத்திற்கு கொண்டு சென்றானோ அந்த இடத்திற்கு அமைதியாகவே சென்றான்.

அங்கு சென்ற பின் இருவருக்கும் உணவு அளிக்கப்பட்டது.

இருவரும் தனித்தனி அறைகளில் அடைக்கப்பட்டார்கள்.

மறுநாள் கவனிப்புகள் அனைத்தும் முறையாக நடந்தது. உதயசந்திரன் மட்டும் மந்திரவாதியின் இருப்பிடத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டான். அங்கே தலைமை மந்திரவாதி களுடன் இதர மந்திரவாதிகள் பலர் இருந்தார்கள். அந்த இடம் ஏதோ சுடுகாடு போல அசுத்தமானதாக இருந்தது. சாம்பல் குவியல்களும் எலும்புத் துண்டுகளும் மண்டை ஓடுகளும் பல இடங்களில் காணப்பட்டன. ஒரு மூலையில் பிணம் ஒன்று எரிந்து கொண்டிருந்தது.

''இது எந்த இடம்?'' என்று பதட்டமில்லாமல் கேட்டான் உதயசந்திரன்.

''சுடுகாடு'' என்றான் மந்திரவாதி.

''இதுதான் உங்கள் இருப்பிடமா?'' என்று கேட்டான் உதயசந்திரன்.

''மனிதர்கள் யாரும் உயிரோடு வர விரும்பாத இந்த இடம்தான் எங்களுக்கு உறைவிடம். பிணங்களும் எலும்புத் துண்டுகளும்தான் எங்கள் செல்வங்கள். பேய்களும் ஆவிகளும் எங்கள் நண்பர்கள்'' என்று சொன்ன தலைமை மந்திரவாதி சீராளன், ''உன்னை இங்கே கொண்டு வந்தது நீ எங்களை கேள்வி கேட்பதற்காக அல்ல. நாங்கள் உன்னிடம் கேள்விகளைக் கேட்பதற்காகத்தான்'' என்றான்.

பிறகு அவனாகவே பேச முற்பட்டு ''உன் அழகை நீ இழந்தது தைரியமான காரியம்தான். தைரியமிருப்பவனைத் தவிர வேறு யாராலும் இப்படித் துணிய முடியாது. ஆனால் உனது தைரியம் எங்களுக்குப் பாதகமாக முடிந்துவிட்டது. என்னை மிகவும் பாதித்துவிட்டது. இப்போது சொல். எதற்காக நீ உன் அழகை அழித்துக் கொண்டாய்?'' என்று கேட்டான்.

''இதற்கான பதிலை அரங்கத்திலேயே நான் சொல்லி விட்டேன். நான் பலியாவதற்குத் தயாராக இல்லை. ஆகவே தான் அதைத் தடுப்பதற்காக அக்காரியத்தை நான் செய்தேன்'' என்றான் உதயசந்திரன்.

''உன் கூற்றை நான் நம்பத் தயாராக இல்லை'' என்றான் தலைமை மந்திரவாதி.

''நீங்கள் நம்ப வேண்டும் என்ற கவலை எனக்கு இல்லை. ஏனென்றால் நான் சொன்னது உண்மை. யாரைப் பற்றியும் கவலைப்படாமல்தான் இக்காரியத்தைச் செய்தேன்.''

''வாலிபனே! நீ உயிர் தப்ப பல வாய்ப்புகள் இருந்ததாக நீயே சொன்னாய். உன்னால் உயிர் தப்பியிருக்கவும் முடியும். அப்படி இருக்கும்போது உயிர் தப்புவதற்காக அழகை இழந்ததாகச் சொல்வது நம்பக் கூடியது அல்ல.''

''ஐயா, நான் ஏற்கெனவே சொன்னேன். கோழைத்தனமாக உயிர் தப்ப விரும்பாததால்தான் அழகைக் கெடுத்துக் கொண்டு அரங்கத்திற்கு வந்தேன். பலியிலிருந்து தப்பினேன்.''

''நீ சொல்வது விசித்திரமாக இருக்கிறது வாலிபனே! உன் செயல் உலகில் எங்கேயும் கேள்விப்பட்டிராத செயல். உயிரைக் காத்துக் கொள்ள நேரும்போது உயிரைத் தவிர வேறு எதையுமே எண்ணாதவர்கள்தான் உலகில் தொண்ணூற்று ஒன்பது சதவிகித்தவர் இருக்கிறார்கள். தன் உயிர் பிழைக்குமென்றால்

குருவைக் கூட கொல்லக் கூடியவர்கள் குவிந்து கிடக்கும் உலகில் வீரத்தைக் காட்டிக் கொள்வதற்காக அழகை இழந்து உயிர் பிழைத்தவன் நீ தான். ஆனாலும் உன் செயலில் ஏதோ மர்மம் இருக்கிறது என்றுதான் தான் நான் நினைக்கிறேன். இந்த மந்திரவாதிகளும் நினைக்கிறார்கள்.''

''உங்கள் ஊகங்களுக்கெல்லாம் என்னால் பதில் சொல்ல முடியாது மந்திரவாதி. நான் இந்த நாட்டிற்குப் புதியவன். எதிர்பாராத விதத்தில் கடற்கரையில் ஒதுங்கியவன். இந்த பலி விஷயங்கள் எதுவும் இல்லை என்றால் நான் இந்த நாட்டின் மன்னரின் உதவியைப் பெற்று என் பயணத்தைத் தொடந்திருப்பேன். ஆனால் என் துரதிர்ஷ்டம் என் பாதையை மாற்றிவிட்டது. எல்லோருமாகச் சேர்ந்து என்னை இந்த நாட்டு நலனுக்காகப் பலியிட ஏற்பாடு செய்தீர்கள். அதிலிருந்து கோழையாக அல்லாமல் வீரனாகத் தப்ப முயன்றேன். அவ்வளவுதான். எனக்கு வேறு எண்ணம் கிடையாது.''

''ராட்சஷ மிருகத்தின் பிரச்சனையை தீர்ப்பதற்காகச் சொன்னாயே அது?''

''அது உண்மைதான். அந்த மிருகத்தை மந்திர தந்திரங்களாலோ பலிகளாலோ அல்லாமல் விவேகமான முறையில் அடக்கலாம் என்று தோன்றியது. அதைத்தான் மன்னரிடம் சொன்னேன். அதை மன்னர் ஏற்காமலும் போகலாம். அந்த மாதிரி நடந்தால் நான் என் பயணத்திற்கான வழியைப் பற்றித் தான் யோசிப்பேன்.''

''ராட்சஷ மிருகத்தை எப்படி அழிப்பாய்?''

''யோசிக்க வேண்டும். அவகாசம் வேண்டும்.''

''வாலிபனே! இந்த நாட்டில் பெரும் மந்திரவாதிகள் இருக்கிறோம். எங்களால் முடியாததை நீ ஒருவனாக இருந்து செய்யப் போகிறாயா?''

''அப்படிச் சொல்லவில்லை. மன்னரையும் ஆலோசித்து கூட்டு முயற்சியில்தான் முயற்சி செய்ய வேண்டும்.''

''இப்போது என்ன செய்வதாக உத்தேசம்?''

''அதே உத்தேசம்தான்.''

''இப்போது நீ இருப்பது என் பொறுப்பில். மறந்து விட்டாயா?''

''எதற்காக என்னைக் கடத்தி வந்தீர்கள்?''

''அதைப் பற்றி இப்போது சொல்ல முடியாது. விரைவிலேயே சொல்கிறேன். அப்போது நீ எனக்கு இணங்குவதைத் தவிர வேறு வழி இருக்காது'' என்று சொன்ன தலைமை மந்திரவாதி ''இந்த முகத்தை வைத்துக் கொண்டு எங்கே போய் என்ன செய்யப் போகிறாய்? நன்றாக யோசி. நிலைமைக்கு ஏற்றதை யோசி. எது உருப்படியானதோ அதை யோசி. இதற்குள் நான் எல்லா மந்திரவாதிகளையும் கலந்தாலோசிக்கிறேன்'' என்று கூறிவிட்டு வீரர்களை அழைத்து ''இவனை பழைய இடத்திலேயே அடைத்துவிடுங்கள். அவனும் வைத்தியனும் பார்க்கவோ பேசவோ கூடாது. மற்றபடி இவர்கள் வசதிக்கு ஒரு குறைவும் இருக்கக் கூடாது'' என்று கட்டளையிட்டுவிட்டுச் சென்றான்.

அப்போது சுடுகாட்டிலிருந்து இரண்டு நரிகள் ஊளை யிட்டன. பிணந்தின்னி கழுகு ஒன்று பறந்து வந்து எரிந்து கொண்டிருந்த பிணத்திற்கு அருகே அமர்ந்தது. இடாகினிப் பேய் ஒன்றும் சுடுகாட்டில் பிரவேசித்தது.

இதற்கிடையில் உதயசந்திரனின் கண்களைக் கட்டி வீரர்கள் அழைத்துச் சென்று தனி இல்லம் ஒன்றில் அடைத்தனர். இல்லத்தைச் சுற்றி ஐம்பதிற்கும் மேற்பட்ட வீரர்கள் காவல் புரிந்தனர். அவனுக்குத் தேவையானவற்றை பணியாளர்கள் கொண்டு வந்து கொடுத்தார்கள். என்ன நடக்கும் என்பது பற்றி நிச்சயமாக எதையும் சொல்ல முடியாது என்ற நிலையிலும் உதயசந்திரன் பதட்டம் எதுவும் அடையாமல் அமைதியாகவே இருந்தான். நிறைய யோசித்தான்.

''தன்னை அரங்கத்தில் எப்படியாவது பலியிட்டுவிட வேண்டும் என்று முயன்ற மந்திரவாதி அந்த முயற்சியில் தோற்றுவிட்டதால் கடத்தியிருக்கிறான். தற்போது தன்னை அழிப்பது மந்திரவாதிக்கு எளிதான விஷயம் என்றாலும் அதை அவன் விரும்பவில்லை என்பதையும் தன்னை வைத்து எதையோ செய்ய நினைக்கிறான் என்பதையும் ஊகித்தான் உதயசந்திரன். அதேசமயம் மன்னரை மீறி இந்த மந்திரவாதி எப்படி தன்னை மறைத்து வைத்திருக்க முடியும் என்பது விளங்கவில்லை அவனுக்கு.

அன்றைய பொழுதும் கொஞ்சம் கொஞ்சமாகக் கழிந்து இரவு நேரம் முகிழ்த்தது.

இதேநேரத்தில் வேறொரு இடத்தில் அடைக்கப்பட்டிருந்த வைத்தியரோ கவனிப்பாரற்று இருந்தார். உணவு முதலானவை

கிடைத்தன. மற்றபடி பேசுவதற்கு யாரும் அவருக்கில்லை. தனது நிலை மோசமானதுதான் என்றாலும் உதயசந்திரன் இருக்கும் வரை எதுவும் ஆகிவிடாது என்ற நம்பிக்கை அவரிடம் இருந்ததால் கொடுத்ததை உண்டுவிட்டு படுத்துக்கிடந்தார்.

இரவு உணவை வீரன் ஒருவன் வந்து கொடுத்துவிட்டுப் போனதும் உறங்க முற்பட்டார் வைத்தியர்.

அப்போது ஆந்தையொன்று அருகேயிருந்து அலறியது.

அதையடுத்து மயான அமைதி நிலவியது.

அந்த அமைதியும் சிறிது நேரமே நீடித்தது.

அவரது அறைக்கருகே ஏதோ அரவம் எழுந்தது.

யாரோ அவரது அறையை நோக்கி வருவதற்கு அடையாளமாக சரக் சரக்கென்று காலடி ஓசை கேட்டது.

சிறிது நேரத்தில் உடம்பு முழுவதையும் போர்த்தியபடி ஓர் உருவம் அவரது அறைக்கு முன்னே வந்தது.

கதவைத் தட்டியது.

பூட்டப்பட்டக் கதவைத் தட்டிய உருவம் யாராக இருக்கும் என்று யோசித்த வைத்தியர் சற்றே அச்சப்பட்டார்.

''கதவு வெளியே பூட்டியிருக்கிறது'' என்றார் பதட்டத்துடன்.

''தெரியும். ஜன்னல் கதவைத் திற'' என்றது உருவம்.

ஜன்னலைத் திறந்தார் வைத்தியர்.

உருவம் ஜன்னலில் தோன்றியது.

''யார் நீ? எதற்காக இங்கே வந்தாய்?'' என்று வினவினார் வைத்தியர்.

''உன்னைக் கொல்ல'' என்றது உருவம்.

வெலவெலத்துப் போனார் வைத்தியர்.

☆ ☆ ☆



72

வந்தாள் ஊர்வசி

''யார் நீ? என்னை எதற்காகக் கொல்ல வேண்டும்?'' என்று அலறாத குறையாகக் கேட்டார் வைத்தியர்.

''என்ன வைத்தியரே, என் குரல் கூட மறந்துவிட்டதா? துரோகிகளுக்கு நினைவிருக்காது தான்'' என்றது குரல்.

''ஊர்வசி! நீயா?''

''நானே தான். உன்னைக் கொல்ல வந்திருப்பது சரிதானே? என்ன?''

''இதோ பார் ஊர்வசி. நாம் ஒன்று நினைத்தோம். வேறொன்று நடந்துவிட்டது?''

''அதெப்படி வைத்தியரே நாம் ஒன்று நினைத்தால் வேறொன்று நடக்கும்? நான் சரியாகத்தான் நினைத்தேன். செயல்பட்டேன். நீங்கள்தான் வேறு மாதிரி நினைத்து துரோகம் செய்துவிட்டீர்கள். விலைமதிப்பற்ற முத்து மாலைகளைப் பெற்றுக் கொண்டு விலை மதிப்பற்ற காரியத்தைச் செய்து விட்டீர்கள். உங்களை இழுத்துக் கொண்டு போய் ஒவ்வொரு நாள் ஒவ்வொரு அங்கமாக வெட்டி தீயில் போட்டு பொசுக்க வேண்டும். இதோ வருகிறேன்.''

''ஐயோ வேண்டாம். நான் சொல்வதைக் கேள்'' என்று அலறினார் வைத்தியர்.

ஊர்வசி அவரது அலறலை காதில் போட்டுக் கொள்ளவில்லை. அறைக்கு முன்னே வந்து ஏதோ ஒரு இரும்புக் கம்பியை எடுத்து பூட்டில் வைத்துபலமாக ஆட்டினாள். பூட்டு திறந்து கொண்டது. பூட்டை அகற்றி, கதவைத் திறந்து கொண்டு உள்ளே நுழைந்தாள்.

''காவலர் யாரும் இல்லையா?'' என்று கேட்டார் வைத்தியர்.

''காவலனா? காலனே இருந்தால் கூடக் கவலை இல்லை. அதோடு நானே காலனாகத்தான் வந்திருக்கிறேன் வைத்தியரே.''

''ஊர்வசி, அவசரப்படாதே. நான் உனக்குத் துரோகம் செய்யவில்லை.''

''மகாபாவியே! எனக்குத் துரோகம் செய்திருந்தால்கூட உன்னை மன்னித்திருப்பேன். உன்னால் ஒத்துழைக்க முடியாது என்று சொல்லியிருந்தால்கூட பிழைத்துப் போ என்று விட்டிருப் பேன். வேறு மார்க்கத்தை தேடியிருப்பேன். நம்ப வைத்து கழுத்த றுத்துவிட்ட நீ மாபாதகத்தைச் செய்துவிட்டாய். இப்படிச் செய்ய உனக்கு எப்படி மனம் வந்தது? நீயும் ஒரு மனிதனா?'' என்று கடிந்து பேசிய ஊர்வசி அவரது கழுத்தைப் பிடித்து நெறிக் கலானாள்.

அவளது பூந்தளிர் போன்ற கரங்களுக்கு இத்தனை வலுவி ருக்கும் என்று வைத்தியர் எதிர்பார்க்கவில்லை. மூச்சுத் திணறிய அவர், ''ஐயோ! விடு. விடு...'' என்று அறையும் குறையுமாக முனகினார்.

அவள் கைகளை எடுத்துவிட்டு, ''ஏன்? சாவுக்கு பயப்படுகிறீர்களா?'' என்று கேட்டாள் முரட்டுக் குரலில்.

''இல்லை ஊர்வசி. உண்மையைப் பேச விடு. பிறகு கொல்.''

''என்ன உண்மையைச் சொல்லப் போகிறாய்? நீ எதைத் தான் சொன்னால் என்ன? போனது போனது தானே?''

''இதோ பார் ஊர்வசி. நானாக அப்படிச் செய்யவில்லை. உதயசந்திரன் தான் அப்படி விரும்பினான்.''

''உமக்கு மூளை இல்லை? அறிவு இல்லை? முடியாது என்று சொல்வதற்கென்ன? கொன்று விடுவேன் என்று மிரட்டினானா?''

''இல்லை இல்லை. அவன் நல்லவன். என்னை அவன் மிரட்டவில்லை.''

''பிறகென்ன? முடியாது என்று சொல்லிவிட்டு ஓடிவிட வேண்டியதுதானே?''

''நான் முடியாது என்றுதான் மறுத்தேன் ஊர்வசி. அதில் எனக்குத் துளி கூடச் சம்மதமில்லை. உன் திட்டப்படித் தப்பி விடும்படித்தான் வற்புறுத்தினேன். அந்த முரடன் கேட்க வில்லை. கோழையைப் போல தப்ப முடியாது என்று அடம்பிடித்தான்.''

''பேசாமல் துண்டு விரலை வெட்டியிருக்கலாமே? ஊனம் வந்திருக்குமே! பலி நின்றிருக்குமே!'

''இந்த யோசனை அவனுக்கே தோன்றியது. ஆனால் அதைக் கூட கோழைத்தனம் என்று சொன்னான். வீரனைப் போலத் தான் செயல்படுவேன் என்றும் சாவதாக இருந்தாலும் வீரனாகத்தான்

சாவேன் என்றும் அரங்கத்திற்கு வந்தே தீருவேன் என்றான். தனது நாட்டிற்காகச் சேவை செய்ய வேண்டியிருக்கிறது என்றும் அதற்கு அழகு தேவையில்லை. உயிர் தேவை என்றும் வாதாடினான். அதை என்னால் மறுக்க முடியவில்லை.''

''ஒரு வைத்தியரான உமக்குக் கருணை வரவில்லை என்றால் வேறு யாருக்கு வரும்? வைத்தியர் என்று சொல்லிக் கொள்வதற்கு நீங்கள் வெட்கப்பட வேண்டும்'' என்று திட்டிய அவள் ''ஏன், வைத்தியரே, உங்களுக்கு நான் எஜமானியா? உதயசந்திரன் எஜமானரா?'' என்று கேட்டாள்.

''நீதான்.''

''நான் எஜமானியாக மட்டுமில்லாமல் உங்களுக்காக இரக்கப்பட்டு உங்களுக்கு வெகுமதிகளை வழங்கி குடும்பத்தை வாழ வைக்கவும் வழி செய்தேன். இவற்றையெல்லாம் விட உதயசந்திரனின் கோரிக்கை உங்களுக்குப் பெரிதாகப் போய் விட்டதா? முதலிலேயே என்னால் முடியாது என்று என்னிடம் சொல்லியிருக்கலாம் அல்லவா? எனக்கு வேறு வழிகள் இல்லையா? வேறு ஆட்கள்தான் இல்லையா? எதற்காக இப்படியொரு முட்டாள்தனத்தைச் செய்தீர்கள்? என்னைப் பற்றி நீங்கள் தெரியாதவரல்ல. எல்லா விஷயங்களையும் அறிந்தவர். ஐந்து பேர்களை மணந்து கொண்டு ஐந்து பேர்களையும் விலக்கி விட்டவள் நான். ஆடவர்களைக் கண்டாலே வெறுக்க முற்பட்டேன். இந்த நிலையில்தான் சுந்தர புருஷனாகக் கடற்கரையில் கிடந்தான் உதயசந்திரன். நான் தடுமாறினேன். தத்தளித்தேன். மன்னனையும் மக்கள் நலனையும் புறக்கணிக்கத் துணிந்தேன். அந்தச் சுந்தரனை - இதயசந்திரனை - இதயத்திற்குள் அனுமதித்தேன். அவனே எனக்குப் புருஷன் என்று தீர்மானித்து திட்டம் தீட்டி உம்மிடம் உதவி கேட்டேன். என் நிலை - என் மனம் - என் ஆசை - என் வேதனை - என் துடிப்பு இதெல்லாம் உங்கள் மனதை அசைக்கவில்லையா? என் துடிப்பை வெறும் நடிப்பு என்று நினைத்து விட்டீர்களா? எந்த நாட்டையோ சேர்ந்தவனின் மீது உண்டான பரிவு உங்கள் நாட்டுப் பெண்ணின் மீது ஏன் வரவில்லை? கொடுத்த முத்துமாலைகள் போதவில்லையா? சொன்ன வாக்குறுதிகளின் மீது நம்பிக்கை வரவில்லையா? அந்த உதயசந்திரன் உங்களுக்கு எதைக் கொடுத்தான்! எப்படி உங்களைக் கவர்ந்தான்?'' என்று உணர்ச்சிப் பெருக்கால் ஆவேசம் வந்தவளைப்போலப் பேசினாள் ஊர்வசி.

வைத்தியருக்கு அவனை நினைக்கும்போது கஷ்டமாகத் தான் இருந்தது. அவளுக்கு உதவாமல் போனது தவறா அல்லது

உதயசந்திரனுக்கு உதவியது தவறா என்று அவருக்குப் புரிய வில்லை. இதற்கிடையில் அவள் விசும்புவதுபோல் அவருக்குத் தோன்றவே ''அழுகிறாயா ஊர்வசி?'' என்று மெல்லக் கேட்டார்.

''நாங்கள் அழுவோம் என்று கூட உங்களுக்குத் தெரியுமா? இரக்கமற்ற பாவியே! உங்கள் பிள்ளைகள் இருவர், பெண் குழந்தை ஒன்று, மனைவி ஆகியோரைப் பிடித்துக் கொண்டு வர ஆட்களை அனுப்பிவிட்டேன். நாளை பிடிபடுவார்கள். அவர்கள் அனைவரையும் ஓலைக்குடிசையில் கட்டிப் போட்டுக் கொளுத்தப் போகிறேன்'' என்றாள் அவள்.

அவள் அப்படிச் செய்யக் கூடியவள்தான். சூழ்நிலையும் அப்படிச் செய்யக் கூடியதாகத் தான் இருந்தது. அதை நன்றாக உணர்ந்திருந்த அவர் ''அப்படிச் செய்து விடாதே ஊர்வசி. நான் வாழ்வதே என் குடும்பத்திற்காகத்தான்'' என்று வேண்டினார்.

''நான் எதற்காக வாழ்கிறேன் வைத்தியரே? உங்களைப் போன்றவர்களிடம் ஏமாந்து போவதற்காகவா?''

''அப்படியெல்லாம் இல்லை.''

''நான் உதயசந்திரனைக் கடத்திச்செல்ல முயன்றது மன்னருக்குத் தெரிந்துவிட்டது. என்னை தண்டிக்க அவர் இன்னேரம் ஆணை பிறப்பித்திருப்பார். தெரியுமல்லவா?''

''தெரியும்.''

''இப்படிச் சாவதற்காகவா நான் வாழ்ந்தேன்?''

''இல்லை.''

''இப்படித்தான் என் சாவு வரப்போகிறதென்றால் அதற்குக் காரணமான உங்களை குடும்பத்தோடு அழிப்பதுதானே நியாயம்?''

''ஊர்வசி...''

''வைத்தியரே! என் உயிரைப் பற்றிய கவலை எனக்கில்லை. பல பேரை தண்டனையின் மூலம் சாகடித்துள்ள எனக்கு மரண பயம் இல்லை. அது இருக்கட்டும். நீங்கள் உண்மை வைத்தியரா? போலி வைத்தியரா?''

''இதென்ன கேள்வி ஊர்வசி? சுந்தரமுகம் கொண்டவனை கோர சொரூபனாக ஆக்கியிருக்கிறேனே. போலி வைத்தியனால் இது முடியுமா?''

''நீங்கள் உண்மையான வைத்தியர்தான்.''

''ஆமாம்.''

''வைத்திய முறைகள் அனைத்தும் உங்களுக்குத் தெரியும்.''

''சந்தேகமே வேண்டாம்.''

''அழகை குலைக்கத் தெரிந்த உமக்கு அதை மீட்கவும் தெரிந்திருக்க வேண்டும்.''

''ஊர்வசி, நான் உதயசந்திரனின் முகத்தைக் கெடுக்கப் பயன் படுத்தியது அபூர்வமான மூலிகைச்சாறு. அதற்கு மாற்று இல்லை.''

''அதெப்படி வைத்தியரே? அழிவுக்கு அபூர்வ மூலிகை இருக்குமானால் ஆக்கத்திற்கும் ஓர் அபூர்வ மூலிகை இருக்கு மல்லவா?''

''நீ பேசுவது வெறும் பேச்சு. மருத்துவத்தில் அப்படி யெல்லாம் இல்லை.''

''உங்களுக்குத் தெரியாது என்று சொல்லுங்கள். இல்லை என்று சொல்லாதீர்கள். இன்னும் சொல்லப் போனால் அந்த அபூர்வ மூலிகை உங்களுக்கு மட்டுமே தெரியும் என்பது என் அபிப்ராயம். உங்கள் குழந்தைகள் மீது ஆணையாகச் சொல்லுங்கள். தெரியுமா தெரியாதா?''

''இதோ பார் ஊர்வசி. மூலிகையைப் பற்றித் தெரியும்தான். ஆனால் அதைப் பயன்படுத்தினால் அழகு மீண்டும் திரும்பும் என்று நிச்சயமாகச் சொல்ல முடியாது. இதை நான் உதயசந்திரனிடமும் சொன்னேன். அதைக்கேட்ட பிறகு கூட அவன் தன் பிடிவாதத்தை விடவில்லை.''

''வைத்தியரே, உதயசந்திரன் எத்தனை அபூர்வமான மனிதன் என்பது இப்போதாவது உங்களுக்குப் புரிகிறதா? இப்படிப்பட்ட அபூர்வ மனிதனுக்கு உயிரைக் கொடுத்தாவது உதவ வேண்டும் என்பது உங்களுக்கு உரைக்கவில்லையா? ஏன் தயங்கிச் சாகிறீர்கள்?''

''தயங்கவில்லை ஊர்வசி. உண்மையைச் சொன்னேன்.''

''அதெல்லாம் எனக்குத் தெரியாது. உதயசந்திரனுக்கு அவனது மன்மத அழகு திரும்ப வேண்டும். அதைச் செய்ய வேண்டியது உங்கள் பொறுப்பு. அதை நிறைவேற்றும் வரை உங்கள் குடும்பத்தினர் என் வசம் இருப்பார்கள். நீங்கள் சரிவர நிறைவேற்றாவிட்டால் அவர்கள் கதி அதோகதியாகிவிடும்.''

வைத்தியருக்கு என்ன சொல்வதென்று விரும்பாததால் மௌனமாய் இருந்தார்.

''என்ன பேச்சையே காணோம்? இதோ பாருங்கள் வைத்தியரே, இந்த உலகத்தில் உங்கள் மீது அனுதாபப்பட ஒருவரும் இருக்க மாட்டார்கள். இறைவனின் சிருஷ்டியை

மாற்றியமைத்த நீங்கள் இறைவனுக்கே எதிரியாகிவிட்டீர்கள். நீங்கள் இப்போது செய்யக்கூடியச் சிறந்த பரிகாரம் மாற்று சிகிச்சைதான்'' என்றாள் ஊர்வசி.

''உதயசந்திரன் எங்கிருக்கிறான் என்பதே தெரியவில்லை. அவனை நான் அணுக முடியுமா என்பதும் தெரியவில்லை. மாற்று சிகிச்சை எப்படிச் செய்ய முடியும்?''

''நான் மலையை உருட்டுகிறேன். நீங்கள் எலியைப் பற்றிப் பேசுகிறீர்கள். அதையெல்லாம் நான் பார்த்துக் கொள்கிறேன். நீங்கள் உங்கள் வேலையை ஒழுங்காகச் செய்யுங்கள்'' என்று கூறிவிட்டு வெளியேறினாள் ஊர்வசி.

வைத்தியருக்கோ நடந்தது எல்லாம் கனவு போல் இருந்தது.

மறுநாள் ஊர்வசி தலைமை மந்திரவாதி சீராளனை நேரில் சந்தித்தாள்.

ஊர்வசி தண்டனைக் கூடத் தலைவி என்ற முறையிலும் தண்டனையை நிறைவேற்றுவதில் ஆடவர்களை விட கடுமையானவள் என்பதும் காம்போஜ நாட்டில் பலருக்கும் தெரிந்திருந்தது. மன்னருக்கும் அவள் நெருங்கியவள் என்ற விஷயம் மந்திரவாதிக்குத் தெரிந்திருந்தது. நான்கைந்து முறை அவளை அவன் கண்டிருந்தான். ஓரிரு முறை அவளது அழகில் மயங்கியிருந்தான். அவள் ஐந்து முறை மணம் செய்து கொண்டு கணவன்மார்களை விரட்டிய விஷயம் தான் அவளை நெருங்க விடாமல் அவனை தூரத்தில் வைத்திருந்தது.

அவள் தற்போது நெருங்கி வந்தபோது மயக்கம் ஒருபக்கம் இருந்தாலும் கோபமே பெரிதாக இருந்தது.

''என் திட்டத்தில் மண்ணைப் போட முயன்ற நீ என்னை வந்து சந்திப்பது வினோதமாக இருக்கிறது. சந்தேகமாகவும் இருக்கிறது'' என்றான் மந்திரவாதி.

''சீராளரே! நான் உங்களுக்கு எதிராகச் செயல்படவில்லை. அதோடு என் திட்டம் தோற்றுப் போய்விட்டது. இப்போது அதைப் பற்றிப் பேசுவதால் பயனில்லை'' என்றாள் ஊர்வசி. தெளிவான குரலில்.

''வேறு எதைப் பற்றிப் பேச வேண்டும்?'' கேட்டான் மந்திரவாதி.

''உதயசந்திரனை பலியாகாமல் கடத்தமுற்பட்டவள் நான். பலி நிகழ்ச்சி ரத்தாகிவிட்ட பிறகு உதயசந்திரனை கடத்தியிருப்பது நீங்கள். இதைப் பற்றிப் பேசலாம்.''

''இதைப் பற்றிப் பேச என்ன இருக்கிறது?''

''நாம் இருவரும் சமம். அதாவது இருவருமே மன்னருக்கு எதிரிகளாக ஆகியிருக்கிறோம்.''

''அதனால் என்ன?''

''நாமிருவரும் இணைந்தால் நமது பலம் கூடும். அதோடு...''

''அதோடு என்ன?''

''உதயசந்திரனை நீங்கள் எதற்காக கடத்தி வந்திருக்கிறீர்கள் என்பது எனக்குத் தெரியும்.''

''என்ன தெரியும்?''

''உங்களால் உதயசந்திரனை பணிய வைக்க முடியாது என்பதும் எனக்குத் தெரியும்.''

''ஊர்வசி! பணியாதவரைப் பணிய வைக்க எங்களிடம் நூதன வழிகள் இருக்கின்றன.''

''பணியக் கூடாது என்பதற்காக அழகையே தியாகம் செய்தவன் உதயசந்திரன். அவனிடம் உங்கள் நூதன வழிகள் எதுவும் பயன்படாது. ஆனால் என்னால் முடியும்.''

''எப்படி முடியும்?''

''பெண்ணொருத்தி மஹாமுனிவரின் தவத்தைக் கலைத்து தன் வலையில் வீழ்த்தியதாக பாரத நாட்டில் கதைகள் இருக்கின்றன.''

''உதயசந்திரன் உன் வலையில் சிக்கவில்லையே! தப்பிவிட்டான் அல்லவா?''

''அவனது செயலுக்குக் காரணம் என் மீது வெறுப்பு கொண்டல்ல. கோழைத்தனத்தின் மீதுள்ள வெறுப்பால்தான்.''

''இப்போது தான் அவனது அழகு குலைந்து போய் விட்டதே! இப்போது அவனை நீ விரும்ப முடியுமா?''

''விரும்ப முடியாது. விரும்புவது போல் நடிக்கலாம். கோர சொரூபன் தன்னை அழகியொருத்தி விரும்புகிறாள் என்று தெரிந்தால் சொக்கிப் போவான். அதோடு அவனை ஏற்கெனவே விரும்பியவள் நான். அவனது அழகு போன பிறகும் விரும்புவதாகச் சொன்னால் என்னை நம்புவான். அந்த நம்பிக்கையை வைத்து அவனை வழிக்கு கொண்டு வர முடியும்.''

''உன்னை எப்படி நம்புவது?''

எப்படி நம்புவது என்பதைச் சொன்னாள் ஊர்வசி.

அசந்து போனான் மந்திரவாதி.

★

இதற்குப் பிறகு அவள் சகல மரியாதையோடு மந்திரவாதியின் வட்டாரத்தில் நடத்தப்பட்டாள். அவனது அனுமதியோடு உதயசந்திரனைச் சந்திக்கச் சென்றாள்.

தனது இருப்பிடத்தில் கட்டிலும் மஞ்சமும் இருந்தாலும் தரையில் படுத்துக் கிடந்தான் உதயசந்திரன்.

அவனது முகத்தைக் கண்டதும் ஊர்வசியின் முகம் அதிர்ச்சியால் உறைந்தது. அதுவரை அவனது அழகு போய்விட்டதாக கேள்விபட்டிருந்தாளே தவிர தற்போது தான் முதன் முதலாக நேரில் பார்த்தாள். மன்மதக் களை தவழ்ந்த முகம் தீயில் வெந்து போனது போல் கறுகிக் கிடந்தது. மூலிகையின் பாதிப்பு சருமத்தோடு நில்லாமல் கண்களையும் பாதித்திருந்ததால் மலர்ந்திருக்கும் கண்கள் சற்றே சுருங்கி குறுகியிருந்தன. சருமத்தில் சுருக்கங்களும் விழுந்திருந்ததால் முகம் பேய் போல காட்சியளித்தது. இப்படியும் ஒரு மனிதன் இருப்பானா என்று நினைத்தாள் ஊர்வசி. கண்ணை அசைத்தால் கட்டழகிகள் பலரைக் கவரக்கூடிய தன் அழகை இப்படி பார்க்கும்போதே பயந்து ஓடக்கூடிய அளவிற்கு சிதைத்துக் கொள்வதென்றால் அது தேவலோகத்தில் கூட நடக்காத விஷயம் என்று கருதியதால் ஊர்வசிக்கு அவன் மீதான மதிப்பு அதிகரித்தது.

''வாலிபரே'' என்று குரல் கொடுத்தாள்.

குரலைக் கேட்டு அவன் எழுந்து திரும்பியபோது அவளது குலை நடுங்கியது.

என்ன கோரம்!

''ஊர்வசி! நீயா? இங்கே எதற்கு வந்தாய்?'' என்று கேட்டான் உதயசந்திரன்.

''உங்களைப் பார்க்கத்தான் வந்தேன்.''

''என்னையா? பேயே பார்க்க அஞ்சும் என்னை எதற்காகப் பார்க்க வந்தாய்?''

''வாலிபரே! நீங்கள் தான் எத்தனை அழகாக இருந்தீர்கள்? நாங்களும் எவ்வளவு அழகு படுத்தினோம். எப்படி அதையெல்லாம் இழக்கத் துணிந்தீர்கள்?''

''அழகு நிலையானதல்ல ஊர்வசி.''

''நிலையானது எது?''

''மாற்றம் ஒன்றுதான் நிலையானது.''

''உதயசந்திரரே, பலியிலிருந்து கோழைத்தனமாகத் தப்ப நீங்கள் விரும்பாதது மரியாதைக்குரிய விஷயம்தான். அதே சமயம்

தப்புவதற்கு வேறு வழியேதும் தோன்றவில்லையா? இந்த கோரமான வழிதானா தோன்ற வேண்டும்?''

''கடலில் மாய்ந்திருக்க வேண்டிய நான் பிழைத்தது அதிசயம். என்னைப் பிழைக்கச் செய்த சக்திக்கு நான் ஏதாவது தியாகம் செய்து பரிகாரம் செய்வதுதான் சரியானது. அதைத்தான் நான் செய்தேன்.''

''நீங்கள் பேசுவது அபத்தம். இதற்கு நீங்கள் கடலிலேயே மாண்டிருக்கலாம்.''

''இறப்பது நம் கையில் இல்லை. ஆகவேதான் பலியில் இருந்தும் தப்பியிருக்கிறேன்.''

''இப்போது மந்திரவாதியின் கையில் அல்லவா சிக்கியிருக்கிறீர்கள்? உங்கள் லட்சியம் எப்படி நிறைவேறும்?''

''யோசிக்கலாம் ஊர்வசி. முடியாது என்று எதுவுமே இல்லை.''

''உங்கள் அழகை மீட்க வேண்டும் என்ற எண்ணம் கூட உங்களுக்கில்லையா?''

''ஊர்வசி! திரும்பத் திரும்ப அழகைப் பற்றியே பேசிக் கொண்டிருக்கிறாயே - எங்கள் தமிழ் மண்ணில் ஐநூறு வருடங் களுக்கு முன்னால் ஓர் அழகான இளம்பெண் இருந்தாள். அவளுக்குத் திருமணம் நிச்சயமாயிற்று. அவளோ தொல்லை மிகுந்த குடும்ப வாழ்க்கையை வெறுத்தாள். திருமணம் வேண் டாம் என்று பிடிவாதம் பிடித்திருக்கலாம். ஊரை விட்டே ஓடிப்போயிருக்கலாம். அல்லது தற்கொலை செய்து கொண்டிருக் கலாம். ஆனால், அந்த ரூபவதி என்ன செய்தாள் தெரியுமா? தனது இஷ்ட தெய்வமான விநாயகப் பெருமானை வேண்டிக் கொண்டாள். யௌவனம் வேண்டாம் என்று கேட்டு கிழவி வடிவ த்தைப் பெற்றாள். அது முதல் அவள் அனைத்தும் கற்று புலவரானாள். அவளை ஔவையார் என்று எங்கள் நாடு இன்றும் போற்றிப் பாராட்டுகிறது. ஓர் பெண்ணே தன் அழகை தியாகம் செய்திருக்கும்போது ஆடவனான என் செயல் மிகவும் சாதாரணமானது.''

''அந்தக் கதையெல்லாம் வேண்டாம். நீங்கள் இந்த மந்திரவாதியிடமிருந்து விடுபட வேண்டும். இழந்த அழகை மீண்டும் பெற வேண்டும். அதற்கு உண்டான முயற்சியில் நான் இறங்கிவிட்டேன்.''

''என்ன அது?''

சொன்னாள் ஊர்வசி.

''இதென்ன விபரீதம்?'' என்றான் உதயசந்திரன்.

★★★



73

மன்னன் மனம்

''மந்திரவாதியை நான் திருமணம் செய்து கொள்ளப் போகிறேன். அவன் நம்பிக்கையைப் பெற வேறு வழியில்லை'' என்றாள் ஊர்வசி.

''ஊர்வசி! இதென்ன விபரீதமான முடிவு. வேண்டாம். மாற்றியோசி!'' என்றான் உதயசந்திரன்.

''நீங்கள் எடுத்த விபரீதத்தை விட இது ஒன்றும் பெரியதல்ல'' என்று கூறிவிட்டு பதிலுக்குக் காத்திராமல் அகன்றாள் ஊர்வசி.

நேராக மந்திரவாதியிடம் போனாள்.

''வா. ஊர்வசி. நீ உதயசந்திரனைச் சந்தித்தது பற்றி வீரர்கள் சொன்னார்கள்.''

''அவர்கள் என்ன சொல்வது? நானே உங்களிடம் சொல்லிவிட்டுத்தானே போனேன்.''

''ஆமாம் ஆமாம்.''

''நீங்கள் என்னைக் கண்காணிப்பது பற்றி எனக்குக் கவலையில்லை.''

''அதெல்லாம் இல்லை. உன்னை நான் நம்புகிறேன்.''

''நீங்கள் மூன்று விஷயங்களை உடனடியாகச் செய்ய வேண்டும்.''

''சொல்.''

''உதயசந்திரனுக்கு முகத்தில் ஒரு கவசத்தை மாட்டுங்கள். பார்ப்பதற்கே பயமாக இருக்கிறது.''

''உண்மைதான் ஊர்வசி. அவன் முகத்தை தொடர்ந்து பார்த்தால் வாந்தி வந்துவிடும். மகாகோரம்.''

''அந்த வைத்தியரை எதற்கு வீணாக அடைத்து வைத்திருக்கிறீர்கள். அவரை அனுப்பிவிடுங்கள். அவர் அருகில் இருந்தால் உதயசந்திரனுக்கு மாற்று சிகிச்சையை அளித்து அழகை

மீண்டும் கொண்டு வர முயலலாம். உதயசந்திரனுக்கு அழகு மீண்டுவிட்டால் நமக்கு இசையமாட்டான்.''

''உண்மைதான் ஊர்வசி.''

''உங்களைச் சேர்ந்த எல்லா மந்திரவாதிகளையும் அழைத்து நமது திருமணத்தைப் பற்றி தெரிவியுங்கள்.''

''அது எதற்கு?''

''நமது திருமணத்திற்கு யாரும் எதிர்ப்பு தெரிவிக்கக் கூடாது. அவர்கள் உங்கள் நண்பர்கள். அவர்களது பூரண ஆதரவோடு தான் நம் திருமணம் நடக்க வேண்டும்.''

''அவர்கள் யாரும் எதிர்க்க மாட்டார்கள்.''

''எதிர்த்தால் நான் சமரசம் செய்வேன்.''

அயர்ந்து போனான் மந்திரவாதி. ஊர்வசியின் பேச்சு மிகச்சரியாக இருந்தது. இம்மியளவும் சந்தேகம் எழவில்லை.

அவள் சொன்னதையெல்லாம் உடனடியாக நிறை வேற்றினான்.

தன்னைச் சேர்ந்த அனைத்து மந்திரவாதிகளுக்குத் தகவல் அனுப்பிவிட்டு, தன் சந்தோஷத்தைக் கொண்டாடும் வகையில் ஆறு அழகிகளை வரவழைத்து ஆர்ப்பாட்டத்துடன் காமக் களியாட்டம் நடத்தினான்.

இதே சமயத்தில் அரண்மனையில் பெரும் சங்கடத்திலும் கோபத்திலும் ஆழ்ந்து கிடந்தான் காம்போஜ நாட்டு மன்னன் சூர்யவர்மன். தன் உயிரினும் மேலான மகள் பூவிழி தன்னுடன் பேச மறுத்து தனியிடத்திற்குப் போய்விட்டது அவனை வாட்டியெடுத்தது. தன்னைச்சந்திக்கவும் பிடிக்கவில்லை உணவை உண்ணவும் விரும்பவில்லை என்று அவள் கூறி விட்டது அவனை வேதனையில் ஆழ்த்தியதால் செய்வதறியாமல் குழம்பினான்.

அறையிலிருந்து வளர்ப்புத்தாய் எப்போது வருவாள் என்ன சொல்வாள் என்று பரிதவிப்புடன் காத்திருந்தான்.

உதயசந்திரன் சிறையில் இல்லை கடத்தப்பட்டுவிட்டான் என்ற செய்தியைக் கேட்டதுமே தந்தையைத் துறந்துவிட்டுத் தனி அறைக்குப் போயிருந்தாள் பூவிழி. அங்கு போனதிலிருந்து அவனிடம் பேசவில்லை.

ஆற்றாமையால் பெருங்கோபமடைந்த மன்னன் சிறைக் காவலர்களை அழைத்து கண்டபடி இரைந்தான்.

''முத்திரை மோதிரத்தைக் காட்டியதால் நம்பிவிட்டோம்'' என்றார்கள் காவலர்கள்.

''உங்களுக்கென்று சுயபுத்தி கிடையாதா? முத்திரை மோதிரம் பயன்படுத்துகிற நேரம் காலம் பற்றியெல்லாம் யோசித்துப் பார்க்க மாட்டீர்களா? சிறையில் இருப்பவர்களை நடுநிசியிலா சந்திப்பதற்கு நான் அழைப்பேன்? மன்னனின் வழக்கங்கள் உங்களுக்குத் தெரியாதா? கைதிகளை அழைப்பதற்கு எனது ஆணை ஒன்று மட்டுமே போதும். முத்திரை மோதிரம் தேவை யில்லை. இதெல்லாம் உறைக்க வில்லையா உங்களுக்கு? நீங்களெல்லாம் மனிதர்களா? மாடுகளா?'' என்று நிதானமின்றி எரிந்து விழுந்த மன்னன் ''அவனை அழைத்துச் சென்றது யாராக இருக்கும் என்றாவது யோசித்தீர்களா?'' என்று கேட்டான்.

''மன்னர் பிரானை மீறி யார் அழைத்துச் செல்ல முடியும்?''

''நான் கேட்ட கேள்வியை என்னிடமே கேட்கிறீர்களா? போய் யோசியுங்கள். கண்டுபிடியுங்கள்'' என்று சொல்லி காவலர்களை விரட்டிய கோமான் யோசித்தான்.

அரங்கத்தில் உதயசந்திரனை பலியிடும்படி மந்திரவாதி அதிகமாக வலியுறுத்தியிருந்தாலும் அதை தவறாகக் கருத மன்னன் முற்படவில்லை. பலியிடுவது பற்றி யோசனை சொன்னவர்களே மந்திரவாதிகள் தான் என்பதால் அது குறித்து வலியுறுத்திப் பேசியது சரிதான் என்று மன்னன் நினைத்ததால் உதயசந்திரனை அவர்கள் கடத்தியிருப்பார்கள் என்று நினைக்க முற்படவில்லை. உதயசந்திரனுக்கு வேண்டப்பட்டவர்கள் யாராவது இருந்து அவர் கள்தான் அவனைக் கடத்தியிருக்க வேண்டும் என்று கருதினான்.

இதற்கிடையில் வளர்ப்புத்தாய் வந்தாள்.

''என்ன சொன்னாள் பூவிழி?'' என்று கேட்டான் மன்னன்.

''அவளது வாய் பேசவில்லை பிரபு. கண்கள் தான் பேசுகின்றன. பஞ்சடைத்துப் போன அவை ஏற்கெனவே சொன்னதைத்தான் தெரிவிக்கின்றன.''

''உணவாவது உண்டாளா?''

''இல்லை பிரபு.''

''நீயெல்லாம் என்ன தாய்? குழந்தைக்கு சோறூட்ட முடியாத நீ எப்படி வளர்ப்புத் தாயாக இருக்கிறாய்? நீ பெற்ற குழந்தையாக இருந்தால் இப்படி வேடிக்கைப் பார்த்துக் கொண்டு நிற்பாயா?''

''பிரபு''

''நான் பேசியது தவறுதான் தாயே. மன்னித்துவிடு. பூவிழியைத் தவிர வேறு உலகம் எனக்குக் கிடையாது. உனக்குத் தெரியுமல்லவா?''

''கவலைப்படாதீர்கள் பிரபு. நோன்புகள் வீணாவதில்லை.''

''உதயசந்திரன் மட்டும் கிடைத்துவிட்டால் காம்போஜத்தில் இருக்கும் ஆலயங்கள் அனைத்திலும் விசேஷ பூஜைகளைச் செய்வேன்.''

அப்போது காவலர்கள் வந்தார்கள்.

''மன்னர் பிரானே! தங்களைச் சந்திக்க ஊர்வசி என்னும் பெண்ணொருத்தி வந்திருக்கிறாள்'' என்றார்கள்.

''அவளது கைகால்களை உடைத்து காட்டுப் பக்கமாக வீசுங்கள்'' என்று சீறினான் மன்னன்.

''பிரபு! உதயசந்திரனைப் பற்றி செய்தி சொல்ல வேண்டுமாம்.''

''உதயசந்திரனைப் பற்றியா? கூப்பிடு அவளை.''

ஊர்வசி வந்து நின்றாள்.

அவளைக் கண்டதும் மன்னனின் கண்கள் சிவந்தன.

''ஓ! நீதானா? செய்த துரோகம் போதாதென்று உதய சந்திரனை கடத்திவிட்டாயா? உயிரோடு வைத்திருக்கிறாயா இல்லை வேலை தீர்த்து விட்டாயா? இதைச் சொல்லத்தான் வந்தாயா? உனக்கு விசாரணையே தேவையில்லை. சிரச்சேதம்தான்'' என்று சொல்லி வாளை உருவினான் மன்னன்.

''மகாராஜா! என்னைச் சிரச்சேதம் செய்வதற்கு முன் நான் சொல்வதை தயை கூர்ந்து கேளுங்கள்'' என்றாள் ஊர்வசி பணிவுடன்.

''உதயசந்திரனை கடத்திவிட்டு ஆள் மாறாட்டம் செய்ய முயற்சித்தது நீதானே?''

''ஆமாம் மகாராஜா.''

''அச்செயலுக்கு என்ன பெயர்?''

''எதுவானாலும் தண்டனைக்குரிய செயல்தான் மகாராஜா. அவர் அழகில் மயங்கிப் போய் தடுமாறிவிட்டேன். அதற்குப் பரிகாரம் செய்யத்தான் இப்போது வந்திருக்கிறேன்.''

''இப்போதும் நீதான் அவனைக் கடத்தியிருக்கிறாயா?''

''இல்லை மகாராஜா. என்னை மயக்கிய அழகு அவரை விட்டுப் போய்விட்ட பிறகு அவரை நான் ஏன் கடத்தப் போகிறேன்? தற்போது அவரைக் கடத்தி வைத்திருப்பது தலைமை மந்திரவாதிதான்.''

''ஊர்வசி! என்னிடம் பொய்களைப் பேசி பொறுமையைச் சோதிக்காதே. மந்திரவாதி என் மதிப்பிற்குரியவர். எனக்காகவும் என் நாட்டு மக்களுக்காகவும் பரிகாரம் சொன்னவர். அவர் மீது அவதூறு சொல்வதற்கு உனக்குத் துணிவு வேண்டும்.''

''அவர் மீது அவதூறு சொல்லி எனக்கென்ன ஆதாயம் மகாராஜா? அவர் மீது தாங்கள் வைத்திருக்கும் மரியாதை உண்மையாக இருக்கலாம். ஆனால் அவர் அப்படி உங்கள் மீது வைக்கவில்லை.''

''இதை நான் எப்படி நம்புவது?''

''உதயசந்திரனை அவர் கடத்தியிருக்கிறார். அவரிடம் உதயசந்திரன் சிறையிருக்கிறார்.''

மன்னர் உடனே கைகளைத் தட்டி காவலர்களை அழைத்து ''சேனாதிபதியை உடனே அழைத்து வா'' என்றான்.

''சேனாதிபதி எதற்கு மகாராஜா?''

''மந்திரவாதியையும் அவரது சகாக்களையும் பூண்டோடு அழித்துவிட்டு உதயசந்திரனை மீட்க சேனாதிபதியின் தலைமையில் படையை அனுப்புகிறேன்.''

''வேண்டாம் மகாராஜா. அது உதயசந்திரனின் உயிருக்கு ஆபத்தாக முடிந்துவிடும். அவரை மீட்கும் பொறுப்பை என்னிடம் விடுங்கள். ஒரு வாரத்திற்குள் அவரை உங்களிடம் பத்திரமாகக் கொண்டு வந்த சேர்த்து என் பரிகாரத்தை நிறைவேற்றுகிறேன். பிறகு நீங்கள் மந்திரவாதிகளை அழிக்கலாம்.''

''அதற்கு ஒரு வார காலம் எதற்கு?''

''மந்திரவாதியை நேரம் பார்த்து ஏமாற்றிவிட்டு உதய சந்திரனை மீட்க வேண்டும். இப்போது தான் அவன் என்னை நம்பத் தொடங்கியிருக்கிறான். அவன் நம்பிக்கையை உடனடியாக உடைக்க முடியாது. ஒரு வார காலம் ஆகும் மகாராஜா.''

''ஊர்வசி! மீண்டும் சொல்கிறேன். என்னை ஏமாற்றும் திட்டம் இருந்தால் அதை விட்டுவிடு. நான் மிகவும் பொல்லாதவன்.''

''என் மீது உங்களுக்கு நம்பிக்கை இல்லை என்றால் இப்போதே என்னைச் சிரச்சேதம் செய்து விடுங்கள். உங்கள் வழியில் உதயசந்திரனை மீட்டுக் கொள்ளுங்கள்.''

மன்னன் சிறிது நேரம் யோசித்துவிட்டு ''உன்னை நம்புகிறேன் பெண்ணே. முதலில் இந்தச் செய்தியை என் ஆருயிர் மகளிடம்

சொல். இரண்டு நாட்களாக அவள் உண்ணவுமில்லை. உறங்கவுமில்லை'' என்றான்.

பிறகு அவளை அழைத்துக் கொண்டு பூவிழியின் இருப்பிடத்திற்குச் சென்றான். வளர்ப்புத் தாயிடம் விவரத்தைச் சொன்னான். அவள் ஓடோடிச் சென்று பூவிழியிடம் சொன்னதும் அவளும் ஓடி வந்து நின்றாள்.

குழந்தையாய் இருக்கும்போதே அவளது விழிகள் பூவைப் போல் இருந்ததாலும் அவளது தாய் தமிழகத்தைச் சேர்ந்தவள் என்பதாலும் தமிழ்ப் பெயரான பூவிழி என்ற பெயரையே அவளுக்கு வைத்திருந்தான் சூர்யவர்மன். இரண்டு நாட்களாக ஊனும் உறக்கமும் இன்றி வாடியதால் பூவிழியின் பூவிழிகள் பொலிவிழந்து உலர்ந்து போன ஊதா மலர்களைப் போல சுருங்கியிருந்தன. நிலவின் குளிர்ச்சியையும் மலர்ச்சியையும் கொண்டிருக்கும் அவளது முகமும் வெளிறிய மேகம் போல் வறண்டு போயிருந்தது.

ஊர்வசி தனது செய்தியைச் சொன்னாள்.

''இது உண்மையா அப்பா?'' என்று கேட்டாள் பூவிழி.

''சத்தியமாகச் சொல்கிறேன் இளவரசி. உதயசந்திரன் பத்திரமாக இருக்கிறார். அவரை மன்னரிடம் அழைத்து வருவது என் பொறுப்பு. என்னை நம்புங்கள்'' என்றாள் ஊர்வசி.

அவளை அனுப்பி வைத்தான் மன்னன்.

அவனது கண்களும் பூவிழியின் கண்களும் கலங்கின.

''உங்களுக்கு வேதனையைக் கொடுத்துவிட்டேனா அப்பா?'' என்று மெல்லிய குரலில் கேட்டாள் பூவிழி.

அவளது கண்களைத் துடைத்த மன்னன் ''என் வேதனை எனக்குப் பெரியதல்ல மகளே. நீ வேதனையில் வீழ்ந்ததுதானே எனக்கு வேதனை? அதுதானே எனக்கு வந்த சோதனை? நீ உண்ணாமலும் உறங்காமலும் என்னோடு பேசாமலும் இருந்தால் நான் எங்கே அம்மா போவேன்? எனக்கு இந்த நாடா பெரியது? நீ அல்லவா?'' என்றான்.

அவள் அவனது மார்பில் சாய்ந்து ''அப்பா! அப்பா'' என்று பரவசப்பட்டாள்.

மன்னனிடமிருந்து மந்திரவாதியிடம் சென்ற ஊர்வசி ''வாருங்கள் உதயசந்திரனைப் போய் பார்ப்போம்'' என்றாள்.

''நான் எதற்கு?''

''வாருங்களேன், அதிலென்ன கஷ்டம்?'' என்று கூறி அவனை அழைத்துக் கொண்டு உதயசந்திரனிடம் சென்றாள்.

உதயசந்திரனுக்கு மெல்லிய முகக்கவசம் போடப் பட்டிருந்தது.

''என்ன வாலிபரே, கவசம் எப்படி இருக்கிறது?'' என்று கேட்டாள்.

அவன் கவசத்தைத் தூக்கி ''எனக்கு எதற்கு கவசம்? இந்த முகத்திற்கு திருஷ்டியா வந்துவிடப் போகிறது?'' என்று கேட்டான்.

''முதலில் கவசத்தை மூடுங்கள். உங்கள் முகத்தைப் பார்க்கவே பலருக்கு அச்சமாக இருக்கிறது. ஆகவே தான் இந்தக் கவசம். அதோடு உங்களுக்கொரு மகிழ்ச்சியான செய்தி.''

''என்ன அது?''

''உங்கள் முகத்திற்கு வைத்தியம் செய்யப் போகிறோம். இழந்த அழகை மீட்கப் போகிறோம்.''

''அப்படியா? அது முடியுமா ஊர்வசி?''

''முடியாதது என்று உலகில் எதுவும் இல்லை. உங்களுக்கு வைத்தியம் செய்யும்படி உத்தரவிட்டதே இவர்தான். நீங்கள் நன்றி செலுத்த வேண்டும் என்று நினைத்தால் இவருக்குத்தான் செலுத்த வேண்டும்.''

''உண்மைதான் ஊர்வசி.''

அவனிடமிருந்து புறப்பட்டு மந்திரவாதியுடன் இருப்பிடத்திற்கு வந்த ஊர்வசி ''என்ன போடு போட்டேன் பார்த்தீர்களா?'' என்று கேட்டாள்.

''நன்றாகத்தான் வலையை வீசுகிறாய். ஆனால் என்னிடம் பேசும்போது முக அழகைப் பற்றியே அவன் கவலைப்பட வில்லை ஊர்வசி.''

''நீங்கள் முரடர். நான் அப்படியா? பெண்களிடம் தான் ஆண்கள் மனம் திறப்பார்கள்.''

''உண்மைதான்.''

''நீங்கள் பெரிய மனது பண்ண வேண்டும்.''

''என்ன அது?''

''நான் உங்களை மணக்கப் போகிறவள். ஆனால் உதய சந்திரனை காதலிப்பது போல் நடிக்கப் போகிறவள். இது உங்களுக்குச் சங்கடமாகவும் வேதனையாகவும் இருக்கும்.''

''உன்னை நான் நன்றாகப் புரிந்து கொண்டேன் ஊர்வசி. அவனை நம் வழியில் இழுக்கத் தானே இந்த நடிப்பு? தாராளமாக நடி. எனக்கு எந்த ஆட்சேபணையும் இல்லை.''

ஊர்வசி மந்திரவாதியின் கரடுமுரடான கன்னத்தில் ஒரு முத்தத்தைக் கொடுத்தாள்.

அவன் சொக்கிப் போனான்.

''உங்கள் சகாக்களுக்கெல்லாம் தகவல் சொல்லி விட்டீர்களா?''

''நீ தான் கட்டளையிட்டுவிட்டாயே. எப்படி மீற முடியும்?''

''சரி. இப்போது சொல்லுங்கள். உதயசந்திரனை வைத்துக் கொண்டு என்ன செய்வதாக திட்டம்?''

''ஊர்வசி! நீ என் மனைவியாகப் போகிறவள். உன்னிடம் உண்மையைச் சொல்வதில் எனக்கு தயக்கமில்லை. இந்த உதயசந்திரனை பலியிட்டால் ராட்சஷ மிருகத்தின் தொல்லைகள் நீங்கும் சுபிட்சம் உண்டாகும் என்றெல்லாம் நான் சொன்னது வெறும் பொய். ஏமாற்று வேலை. மன்னன் எங்களை நம்பி மதித்ததால் அவனிடம் இப்படியெல்லாம் சொல்லி பணம் பறித்து வந்தோம். மன்னனின் பொக்கிஷமும் நிரம்பி வழிவதால் அவன் எங்களுக்கு வாரி வழங்கி வந்தான். நாங்களும் சுகமாக வாழ்ந்து வந்தோம். பலியானது நின்று போனது ஒரு விதத்தில் எங்களுக்கு நல்லதுதான். பலி நின்றதைச் சொல்லி மன்னனையும் மக்களையும் மிரட்டி வேறு புதிய பரிகாரங்களைச் சொல்லி பணம் பறிக்கலாம். அவனை பலியிட வேண்டும் என்று அரங்கத்தில் நான் வற்புறுத்தி பேசியதெல்லாம் வெறும் நடிப்பு. மன்னனை நம்ப வைக்கவே அப்படி பிடிவாதம் பிடித்தேன்.''

''சீராளரே! இதெல்லாம் எனக்கு ஓரளவுக்குத் தெரிந்தது தான். மூடநம்பிக்கைகளின் உறைவிடம் தான் உங்களைப் போன்றவர்களுக்குச் சொர்க்கம் என்பது எனக்குத் தெரியும். அதை விடுங்கள். அரங்கத்தில் உதயசந்திரன் பலியாகியிருந்தால் என்ன செய்திருப்பீர்கள்? அதாவது முகம் கோரமடையாமல் அவர் சிக்கி பலியும் ஆகியிருந்தால் என்ன செய்திருப்பீர்கள்?''

''அதீதமாக நம்புகிறவர்களை எப்படி வேண்டுமானாலும் ஏமாற்றலாம். அதுதான் எங்களுக்குச் சாதகமானது. பலி நடந்திருந்தால் அதில் ஒரு குறையைக் கண்டுபிடித்து வேறு பரிகாரத்தைச் சொல்லியிருப்போம். எங்களைப் பொறுத்தவரை வேறுவேறு பரிகாரங்களைச் சொல்லிக் கொண்டு தொடர்ந்து பணம் பறிப்பது தான் குறிக்கோள்.''

''அது இருக்கட்டும். உதயசந்திரனை வைத்துக் கொண்டு என்ன செய்யப் போகிறீர்கள்?''

''அவன் மீது ராட்சஷ மிருகத்தின் ஆவி புகுந்து கொண்டு சேட்டைகளைச் செய்யத் தீர்மானித்திருக்கிறது என்றும் அந்த சேட்டைகள் எப்போது எப்படி நடக்கும் என்பது உறுதியாகச் சொல்ல முடியாது என்றும் அவற்றைக் கண்டுபிடித்து அழிக்க அந்த அகோர வாலிபனுக்கு ப்ரீதி செய்ய வேண்டும் என்றும் கோயில் கட்ட வேண்டும் என்றும் அதற்கு மன்னனும் மக்களும் நிதி அளிக்க வேண்டும் என்றும் கதை விட வேண்டும். வாலிபனுக்குள் புகுந்திருக்கும் ஆவியைக் கட்டுப்படுத்தும் முயற்சியாக அவனை எங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருப்ப தாகவும் ஒவ்வொரு வார முடிவிலும் மக்கள் அவனை வந்து பணிந்து சந்நதம் கேட்கலாம் என்றும் அறிவித்துவிட்டு உதயசந்திரனை அதற்கு ஏற்ற மாதிரி நடிக்கச் செய்தால் நமக்குச் செல்வம் குவியும். பிழைப்பு நடக்கும்.''

''நல்லத் திட்டம் சீராளரே, இதற்கு உதயசந்திரனை நான் பக்குவப்படுத்த வேண்டும்.''

''ஆமாம். முக்கியமான பொறுப்பு உன்னுடையது. அவனது ஒத்துழைப்பு மிகவும் அவசியம்.''

''அவன் இந்த கோரமுகத்தைக் கொண்டு எங்கேயும் செல்ல முடியாது. குறிப்பாக அவனது சொந்த நாட்டிற்குப் போக முடியாது. இங்கேயே தான் பிழைப்பை நடத்த வேண்டும். பிழைப்பிற்கு நாம் உதவ முற்பட்டால் அவன் நம்மோடு சேர்ந்துவிடுவான். அந்த வகையில் பிழைப்பு மற்றும் காதல் ஆக இரண்டு விஷயங்களிலும் ஆர்வம் காட்டினால் வழிக்கு வந்துவிடுவான்.''

தலையை ஆட்டினான் மந்திரவாதி.

அன்று நள்ளிரவுக்குச் சற்று முன்னால் மந்திரவாதியிடம் வந்தான் ஒரு பணியாள்.

''ஐயா, நாம் மோசம் போய்விட்டோம்'' என்றான்.

''என்ன விஷயம்?'' என்று கேட்டான் மந்திரவாதி.

''ஊர்வசி அந்த வாலிபனை அழைத்துக் கொண்டு போகிறாள்'' என்றான் பணியாள்.

மந்திரவாதி சிறிது நேரம் யோசித்துவிட்டு, ''சரி, வா என்னோடு'' என்று சொல்லிப் புறப்பட்டான்.

★★★



74

அரண்மனை பிரவேசம்

ஊர்வசியும் உதயசந்திரனும் யாரைப் பற்றியும் கவலைப் படாமல் நடந்து காட்டுப் பகுதிக்கு வந்தார்கள். நேரம் பகலாக இருந்தாலும் செழிப்பான மரங்கள் அடர்ந்து வளர்ந்திருந்ததால் வெப்பம் குறைந்து குளிர்ச்சியே அதிகமாய் இருந்தது. அதோடு அக்காட்டிற்கு அப்பால் உயர்ந்த மலைத்தொடர்கள் இருந்தன. அங்கிருந்து குளிர் காற்றும் வீசியது. சூழ்நிலை இப்படி மகிழ்ச்சியூட்டும் விதத்தில் இருந்தாலும் அவர்கள் இருவரும் அதை அனுபவிக்கும் நிலையில் இல்லை. இருவரும் நீரோடை ஒன்றின் கரையில் போய் அமர்ந்தார்கள். அவர்களைப் பின் தொடர்ந்து வந்த மந்திரவாதியும் பணியாளனும் மறைந்து நின்றார்கள்.

''நான் உங்களை எதற்காக இங்கே அழைத்து வந்தேன் தெரியுமா?'' என்று கேட்டாள் ஊர்வசி.

''நீதான் சொல்ல வேண்டும்.''

''நாம் மனம் விட்டுப் பேசத்தான் இங்கே வந்தோம். அங்கே காவல் வீரர்கள் எப்போதும் மொய்த்துக் கொண்டிருப்பார்கள்.''

''என்ன பேசப் போகிறாய்?''

''வாலிபரே! நமது மந்திரவாதி விரைவிலேயே உங்களது அழகை மீட்டுத்தருவதாகச் சொல்லியிருக்கிறார்.''

''யார் மூலம் சிகிச்சை செய்வார்? என் முகத்தைக் கெடுத்தாரே அவர் மூலமாகவா?''

''இந்த நாட்டில் அவர் ஒருவர் தான் மருத்துவரா? நமது மந்திரவாதிக்குத் தெரிந்த மருத்துவர்கள் பலர் இருக்கிறார்கள். மந்திரவாதிக்கே கூட மருத்துவம் தெரியும். இருந்தாலும் பிரபல வைத்தியர்களையெல்லாம் வரவழைக்கப் போகிறார். உங்களுக்கு விடிவு காலம் நிச்சயம். அதோடு...''

''அதோடு என்ன?''

''உங்களுக்கு அழகு மீண்டு வந்ததும் என்னை உங்களுக்கு மணம் செய்து வைப்பதாகச் சொல்லியிருக்கிறார். சந்தோஷம் தானே?''

''அதற்குப் பிறகு?''

''நீங்கள் தான் சொல்ல வேண்டும்.''

''நான் என்ன சொல்வது ஊர்வசி? என் பழைய வடிவத்தைக் கொடுப்பவருக்கு என் நன்றியைக் காட்டுவேன். வேறென்ன செய்ய முடியும்?''

''வாலிபரே, மந்திரவாதி உங்களிடம் நன்றியை எதிர் பார்க்கவில்லை. உங்கள் நிலையை மேலும் உயர்த்தவே விரும்புகிறார்.''

''எப்படி?''

''இப்போதைக்கு விவரமாக எதையும் கேட்காதீர்கள். இந்த நாட்டின் தெய்வமாகக் கூட நீங்கள் ஆகலாம். அதுவரை அவர் சொற்படி நடவுங்கள். அதுபோதும்.''

''ஊர்வசி! நீ தான் எப்படி மாறிவிட்டாய்?''

''எதைச் சொல்கிறீர்கள்?''

''என் மீதான அன்புக்காக மன்னனைக் கூட எதிர்த்துக் கொள்ளத் துணிந்த நீ மன்னனால் உனக்கு ஆபத்து உண்டாகக் கூடிய நிலையிலும் எனக்கு உதவுகிறாயே.''

''எல்லாவற்றுக்கும் அன்புதான் காரணம்.''

''இந்த கோரமான முகத்தைக் கண்ட பிறகுமா அன்பு வருகிறது?''

''வாலிபரே, ஆண்டவன் இருக்கிறானே அவன் பக்தர்களின் வடிவழகைப் பற்றிக் கவலைப்படுவதில்லை. மனத்தின் அழகைத்தான் பார்க்கிறான். உண்மையான அன்புதான் முக்கியமே தவிர அவனுக்கு மனிதர்களின் வெளித் தோற்றங்கள் முக்கிய மில்லை. அப்படித்தான் என் அன்பும். உங்களது அழகிய முகத்தைக் கண்டவள் நான். அந்த அழகு எனக்குள் பதிந்திருக்கிறது. அது போதும். மற்றபடி உங்கள் மனம் அழகாகவே இருக்கிறது.''

ஊர்வசி இப்படி பேசிய நிலையில் ஒட்டுக் கேட்டுக் கொண் டிருந்த மந்திரவாதியும் பணியாளனும் விலகிச் சென்றார்கள்.

''வாலிபரே! அவர்கள் போய்விட்டார்கள். நாம் இனிமேல் உண்மையைப் பேசுவோம்'' என்றாள் ஊர்வசி.

''அவர்கள் நம்மை எப்படித் தொடர்ந்தார்கள்?''

''ரகசியமாகச் செல்வது போல நாம் போக்கு காட்டினோமே தவிர பணியாளன் கவனித்துக் கொண்டு தானே இருந்தான்? அவன் போய் மந்திரவாதியிடம் சொல்ல மாட்டானா? விஷயம் தெரிந்ததும் நம்மைப் பின் தொடராமல் இருப்பானா? என்னை விட அவனுக்கு நீங்கள் தான் முக்கியம்.''

''எப்படி?''

அவனை வைத்துக் கொண்டு மந்திரவாதி செய்ய நினைத்த திட்டங்களைப் பற்றிச் சொன்னாள் ஊர்வசி.

''அகோர முகமும் ஏதோ ஒரு விதத்தில் உபயோகமாகத்தான் இருக்கிறது.''

''உங்களை அப்படியெல்லாம் பயன்படுத்த நான் அனுமதிப் பேன் என்று நினைக்கிறீர்களா? மந்திரவாதியை விடுங்கள். உங்களுக்கொரு மகிழ்ச்சியான செய்தியைச் சொல்லட்டுமா?''

''சொல்லேன்.''

''மன்னர் மகள் பூவிழி இருக்கிறாளே அவள் இரண்டு நாட்களாக உண்ணவில்லை. உறங்கவில்லை. மாலை போல் இருந்தவள் நாரைப்போல் ஆகிவிட்டாள்.''

''இது மகிழ்ச்சியான செய்தி அல்லவே ஊர்வசி?''

''பொறுங்கள். அவள் விரதம் இருந்தது ஏன் தெரியுமா? உங்களைக் கடத்திவிட்டதால்தான்.''

''நான் எக்கேடு கெட்டால் என்ன ஊர்வசி? இளவரசி எதற்காக உண்ணாமலும் உறங்காமலும் இருக்க வேண்டும்?''

''இதற்கு அவளிடம் தான் கேட்க வேண்டும்'' என்று கூறிச் சிரித்த ஊர்வசி ''அவளுக்கு உங்கள் மீது ஏதோ இனம் தெரியாத உணர்வு உண்டாகியிருக்கிறது'' என்றாள்.

''அனுதாபமாக இருக்கலாம்.''

''அவள் மிகவும் இளையவள். அனுதாபப்படும் அளவிற்குப் பெரியவளல்ல.''

''ஊர்வசி! அவள் என்னைப் பார்த்தாளா இல்லையா என்று தெரியாது. என்னோடு பேசியதும் இல்லை. என்னை யாரென்றும் தெரிந்திருக்க வாய்ப்பில்லை. அவள் எதற்காக என் பொருட்டு விரதமிருக்க வேண்டும்?''

''மரகதப் பட்டிணத்தில் மன்னரோடு வந்தபோது உங்களை அவள் பார்த்திருக்கிறாள்.''

''சில நொடிப் பொழுது பார்த்திருக்கலாம்.''

''அது போதும்.''

''போதுமா? எதற்கு?''

''உங்களை எண்ணி மயங்குவதற்கு'' என்று சொன்ன ஊர்வசி ''ஒருவர் மீது மையல் உண்டாவதற்கு ஒரு நொடிப் பார்வை மட்டுமே போதும். பேச்சுக்களோ பரிச்சயங்களோ, விவரங்களோ விளக்கங்களோ தேவையில்லை வாலிபரே'' என்றாள்.

''ஊர்வசி! நீ சொல்வது உண்மையாகக்கூட இருக்கலாம். ஆனால் இப்போது என் நிலை அடியோடு மாறிவிட்டது இல்லையா? பேய் கூட காணத் தயங்கும் கோர முகத்தோடு இருக்கிறேன் நான். இது தெரியாதா இளவரசிக்கு?''

''தெரியும். அவளும் அரங்கத்திற்கு வந்திருந்தாளாமே. தெரியாமலா இருக்கும்?''

''தெரிந்துமா என் மீது மையல் கொள்ள முடியும்? அப்படி எதிர்பார்ப்பதே நகைப்பிற்குரியதல்லவா?''

''அவள் மனத்தைப் பற்றி நமக்கென்ன தெரியும்? அவளுக்குள் புலன்களைக் கடந்த தெய்வீக அன்பு உண்டாகியிருக்கிறதோ என்னவோ?''

''அதீதமாக எண்ணுகிறாய் ஊர்வசி. நீ என்னோடு பேசுவதும் பழகுவதுமே விந்தையான விஷயமாக இருக்கிறது. இதில் இளவரசியைப் பற்றி நீ சொல்வது வெறும் பிரமை'' என்று சொன்ன உதயசந்திரன், ''எனது முகத்தை பழைய முகமாக மாற்றிக் காட்டுவதற்கு முயல்கிறாயே அதற்கென்ன காரணம்?'' என்று கேட்டான்.

'காதல்தான் காரணம்' என்று நினைத்துக் கொண்ட ஊர்வசி அதைக் கூறாமல் ''உங்களது இந்த நிலைக்கு நானும் ஒரு காரணம் தான் வாலிபரே. உங்களோடு ஓடிவிடும் திட்டத்தை நான் தீட்டியதால் தானே அதைக் கோழைத் திட்டம் என்று புறக்கணித்துவிட்டு இந்த விபரீதத்திற்கு ஆளானீர்கள். ஆகவே உங்களுக்குச் சிகிச்சை அளிப்பதும் பழைய முகத்தைக் கொண்டு வருவதும் என் கடமைகள். கடன்கள். வைத்தியரிடம் ஏற்கெனவே பேசிவிட்டேன். சிகிச்சை அளிப்பதற்காக அவர் காத்துக் கொண்டிருக்கிறார்'' என்று சொன்னாள்.

அவளது மனம் எதற்காகவோ கவலைப்பட்டுக் கொண்டது.

மேலும் சில விஷயங்களைப் பேசிவிட்டு அவனோடு இருப்பிடத்திற்குத் திரும்பினாள்.

உதயசந்திரனை அவனது இல்லத்தில் விட்டுவிட்டு மந்திரவாதியிடம் சென்றாள்.

அவளைக் கண்டதும் ''வா ஊர்வசி. எங்கே சென்றிருந்தாய்?'' என்று கேட்டான் மந்திரவாதி.

''ஏன் உங்களுக்குத் தெரியாதா? எங்களைப் பின் தொடர்ந்துதானே வந்தீர்கள்?''

''அது தெரிந்துவிட்டதா உனக்கு?''

''என் மீதும் உதயசந்திரன் மீதும் உங்கள் கண்காணிப்பு இருக்கும் என்பதை ஊகிக்க சாதாரண அறிவு போதாதா? அதோடு நான் ஒன்றும் ரகசியமாகச் செல்லவில்லையே! பணியாளனுக்குத் தெரிந்துதானே போனேன்?''

''ஆம் ஊர்வசி. அவன் சொல்லித்தான் நான் உன்னைப் பின்தொடர்ந்தேன்.''

''எங்களைக் கண்காணிப்பது பற்றி நான் கவலைப்பட வில்லை சீராளரே. அது உங்கள் கடமை. ஆனால் சந்தேகப்படுவதா இருந்தால் இப்போதே சொல்லிவிடுங்கள். நான் விலகிக் கொள்கிறேன். உதயசந்திரனோடு நான் தனிமையில் பேச வேண்டிய அவசியம் இருக்கிறது. உங்கள் பணியாளர்களைப் பக்கத்தில் வைத்துக் கொண்டு பேச முடியாது. அதோடு கோர முகத்தைக் கொண்டிருக்கும் அவனது மனநிலையை யோசித்துப் பாருங்கள். அவனைத் தணிவிக்க மாறுபட்ட சூழ்நிலைகள், சூழல்கள் தேவை என்பது மந்திரவாதியான உங்களுக்குத் தெரியாதா? அதனால்தான் அவனை அவன் விரும்பும் சூழல்களுக்கு அழைத்துப் போகிறேன். பேசுகிறேன். இது ஏன் உங்களுக்குப் புரியவில்லை. உங்களுக்கு மனைவியாகப் போகிற என்னிடம் உங்களுக்கு நம்பிக்கை இல்லையென்றால் நாம் எப்படி இணைந்து வாழ முடியும்? பெரிய காரியங்களைச் சாதிக்க முடியும்? மன்னருக்கு உங்கள் மீது சந்தேகம் வந்திருப்பதாகக் கேள்விப்பட்டேன். இந்த நிலையில் நீங்கள் என்னைச் சந்தேகித்தால் என்ன ஆகும் என்பதை யோசியுங்கள்.''

''பணியாளனின் பேச்சால் தடுமாறிவிட்டேன் ஊர்வசி. இனிமேல் உன் மீது சந்தேகப்படமாட்டேன்.''

''அது போகட்டும். நமது திருமணம் எந்த நிலையில் இருக்கிறது? நண்பர்கள் என்ன சொல்கிறார்கள். எல்லோரையும் வரவழைத்து விட்டீர்களா? இன்னும் ஒரு வாரம் தான் அவகாசம். அதற்கு மேல் நான் யாருக்காகவும் காத்திருக்க மாட்டேன்.

திருமணம்தான்'' என்று கூறிவிட்டு பதிலுக்குக் காத்திராமல் அகன்றாள் ஊர்வசி.

அதற்குப் பிறகு பலமுறை உதயசந்திரனை அழைத்துக் கொண்டு பல இடங்களுக்குச் சென்றாள் ஊர்வசி. ரகசியமாகச் செல்லாமல் பகிரங்கமாகவே சென்றாள். மந்திரவாதியின் ஆட்கள் அவர்களைப் பின்தொடரவோ கண்காணிக்கவோ இல்லை. உதயசந்திரனோடு பலமுறை வெளியே சென்ற அவள் திரும்பி வந்தபோது பணியாளனிடம் தெரிவித்து அவனிடம் உதய சந்திரனை ஒப்படைத்து வந்தாள். ஆதலால் மந்திரவாதிக்கு அவள் மீதான சந்தேகம் முற்றிலுமாக நீங்கியது.

மூன்று நாட்கள் கழிந்த நிலையில் தலைமை மந்திரவாதி சீராளனின் நண்பர்களான மந்திரவாதிகள் பலர் இந்திரபுரத்தின் செல்வச் செழிப்பு மிகுந்த பகுதியில் திரண்டார்கள். அவர்களுக்கு முன்னால் நடனமாடி எல்லோருக்கும் அறிமுகமானதோடு அனைவரையும் அந்த நடனத்தால் மகிழ்வித்தாள் ஊர்வசி. வந்திருந்த ஆயிரக்கணக்கான மந்திரவாதிகளுக்கு ஊர்வசியைப் பிடித்துப் போயிற்று. சீராளனின் அதிர்ஷ்டத்தை வெகுவாகப் புகழ்ந்தார்கள். திருமணத்தைப் பெருவிழாவாக நடத்த விரும்பினார்கள். அப்படி விமரிசையாக நடத்த இந்திரபுரம் ஏதுவாக இருக்காது என்று சொன்ன ஊர்வசி தலைநகரத்திற்கு தெற்கே இருந்த சாகரம் என்ற மலை நாட்டில் வைத்துக் கொள்ளலாம் என்றாள். எல்லோரும் ஏற்றார்கள். திருமணத் திற்கான நாளும் குறிக்கப்பட்டது. மந்திரவாதி நண்பர்கள் அனைவரையும் மலை நாட்டிற்கு வந்து சேரும்படி கேட்டுக் கொண்டான் தலைமை மந்திரவாதி.

இப்படி எல்லோரையும் எல்லா விதத்திலும் நம்ப வைத்த ஊர்வசி இதுதான் சரியான தருணம் என்று கருதியவளாய் உதயசந்திரனை அழைத்துக் கொண்டு தேரிலேயே புறப்பட்டாள். பணியாளர்களிடம் சொல்லிவிட்டுப் புறப்பட்டாள். அவளை யாரும் பின் தொடரவில்லை. அவள் திருப்தியோடு பயணப்பட்டு இந்திரபுரத்து அரண்மனையை அடைந்தாள். மன்னனிடம் உதயசந்திரனை ஒப்படைத்துவிட்டு ''என் கடமை முடிந்துவிட்டது மகாராஜா. நான் புறப்படுகிறேன்'' என்றாள்.

''எங்கே செல்லப் போகிறாய்? மந்திரவாதியிடமா?'' என்று கேட்டான் மன்னன்.

''இல்லை மகாராஜா. இவரை அகோரமாக்கிய வைத்தியரிடம் செல்கிறேன். அவரிடம் ஏற்கெனவே பேசிவிட்டேன். அவரை

அழைத்து வந்து இவருக்கு மாற்று சிகிச்சை அளிக்க வேண்டும். அதற்கு தாங்கள் அனுமதிக்க வேண்டும்'' என்றாள் ஊர்வசி.

அதுவரை மாற்று சிகிச்சையைப் பற்றி யோசிக்காதிருந்த மன்னனுக்கு அவள் கூறியது சரியானதாகத் தோன்றவே ''நீ இங்கேயே இரு. வைத்தியரின் இருப்பிடத்தைச் சொல். அவரை அழைத்து வர ஆள் அனுப்புகிறேன்'' என்றான்.

இருப்பிடத்தைப் பற்றிச் சொன்னாள் ஊர்வசி.

உடனடியாக ஆட்களை அனுப்பி வைத்த மன்னன் ''மந்திரவாதியின் நிலை என்ன?'' என்று வினவினான்.

மன்னன் சேனாதிபதியை அழைத்தான். அவரை படைவீரர்களுடன் சாகரத்திற்குச் சென்று அங்கே திரளும் மந்திரவாதிகளையும் தலைமை மந்திரவாதி சீராளனையும் சிறை செய்யும்படிச் சொன்னான்.

''மகாராஜா! நான் இங்கே இருந்தால் சாகரத்திற்கு யாரும் செல்ல மாட்டார்கள். இன்னேரம் சீராளனுக்கு என் மீதும் இவர் மீதும் சந்தேகம் வந்திருக்கும்'' என்றாள் ஊர்வசி.

''அப்படியானால் இந்திரபுரத்திலேயே சீராளனைக் கைது செய்யலாம். மற்ற மந்திரவாதிகள் இங்கே இருந்தாலும் சரி வேறு எங்கே இருந்தாலும் சரி விரட்டிச் சென்றாவது சிறை செய்யலாம். காம்போஜ நாட்டில் அவர்களின் ஆட்டம் இனியும் நீடிக்கக் கூடாது'' என்றான் மன்னன்.

அப்போது உதயசந்திரன் குறுக்கிட்டு ''மன்னவா! மந்திரவாதிகளை சிறை செய்வதில் அவசரம் காட்ட வேண்டாம். யோசித்து முடிவு செய்யுங்கள். அவர்களை தாங்கள் மட்டுமல்ல. மக்களும் நம்புகிறார்கள்'' என்றான்.

''ஆமாம் மன்னர் பெருமானே'' என்று ஆமோதித்தார் சேனாதிபதி.

''சீராளனை மட்டும் இப்போதைக்கு கைது செய்யலாம் சேனாதிபதி. மற்றவர்களைப் பற்றி பிறகு பார்க்கலாம். ஊர்வசி! நீ அந்தப்புரத்துக்குப் போ. பூவிழியிடம் தகவலைச் சொல்'' என்று கூறி சேனாதிபதியையும் ஊர்வசியையும் அனுப்பிய பின் உதயசந்திரன் மட்டுமே இருந்தான்.

மன்னனுக்கு ஒரு கணம் குழப்பமாக இருந்தது.

''உதயசந்திரன்! இவன் யாரோ! எவனோ! யார் செய்த புண்ணியத்திலோ நமது நாட்டு கடற்கரையில் ஒதுங்கினான். அவன் ஒதுங்கிய நேரமும் நாம் பலியிட காத்திருந்த நேரமும்

ஒத்துப் போனதால் பலிக்கு ஏற்பாடு செய்தோம். இவன் இடையில் ஏதேதோ செய்ததால் பலி நிறுத்தப்பட்டது. மற்றபடி இவனிடம் பேசுவதற்கு எனக்கென்ன இருக்கிறது? அருமை மகள் ஏதோ இரக்கப்பட்டாளே என்று அவனை விடுவித்தோம். அவளிடம் அவனைக் காட்டிவிட்டு அனுப்பிவிட்டால் போகிறது! வேறென்ன வேலை இவனுடன்?' என்று எண்ணித் தயங்கினான்.

'இல்லை இல்லை. ராட்சஷ மிருகம் சம்பந்தப்பட்ட பிரச்சனையை இவன் தீர்த்து வைப்பதாகச் சொல்லியிருக்கிறான். மக்களின் முன்னிலையில் கூறியிருக்கிறான். அதைக் கவனிக்க வேண்டும். அதோடு அவனைப் பற்றித் தீர விசாரிக்கும்படி கட்டளையிட்டிருக்கிறாள் அன்பு மகள். அதைச் சரியாகச் செய்ய வேண்டும். இல்லையென்றால் மீண்டும் வேதனைக்குள்ளாக வேண்டி வரும்' என்று அவனுக்கு அவனது மனம் பதில் சொல்லியது.

'அதெல்லாம் சரி. இந்த ஊர் பேரில்லாத அனாதை வாலிபனின் பேரில் பூவிழிக்கு ஏன் இவ்வளவு அக்கறை? இதுவரை யார் விஷயத்திலும் தலையிடாத அவள் இவன் மீது அளவுக்கு அதிகமாகத் தலையிடுகிறாள்? இவன் கடத்தப் பட்டதை அறிந்ததும் என்னிடம் பேசுவதையே விட்டு உண்ணாமலும் உறங்காமலும் வேதனைப்பட்டாளே! இதென்ன ஆச்சரியம்? ஒருவேளை அவன் மீது அவளுக்கு ஆசை வந்திருக்குமோ? அதெப்படி சாத்தியம்? அப்படி இருக்காது. ஏதோ ஒரு அனுதாபம்தான். அதோடு கோரசொரூபனாகிவிட்ட அவனை எப்படி விரும்ப முடியும்? நாம்தான் ஏதேதோ நினைக்கிறோம். எதற்கும் இவனை விசாரிப்போம்'' என்று முடிவு கட்டினான்.

அதேசமயம் அவனை அரண்மனைக்குள் அழைத்துச் சென்று ஆலோசனை அறையிலோ அல்லது அந்தரங்க அறையிலோ வைத்து விசாரிக்க விரும்பவில்லை. அருகே இருந்த தூதுவர் மாளிகையில் இருக்கச் சொல்லிவிட்டு வேண்டுமென்றே இரண்டு நாழிகை நேரம் தாமதம் செய்துவிட்டு சந்திக்கச் சென்றான் மன்னன்.

உதயசந்திரன் தன்னைப் பற்றி விவரமாகக் கூறியபின் மன்னன் சூர்யவர்மனின் போக்கே மாறிப் போயிற்று.

'அந்த உதயசந்திரனா நீங்கள். மாமன்னர் ராஜசிம்மப் பல்லவரின் உபதலைவரா நீங்கள்? உங்களுக்கா இந்த நிலை? பெரும் பிழை செய்ய விருந்தேனே நான்? தெய்வம் தான் காப்பாற்றியது. அரண்மனைக்கு முதலில் வாருங்கள். உங்கள் வரவு எங்கள் பாக்கியம்'' என்று சொல்லி உதயசந்திரனின் கைகளைப் பிடித்துக் கொண்டான் காம்போஜ நாட்டு மன்னன் சூர்யவர்மன்.

☆☆☆



75 உதயசந்திரனின் விவரணம்

காஞ்சியை ஆண்ட பல்லவ மன்னர்களில் ராஜசிம்மனின் புகழ் கடல் கடந்து பரவியிருந்தது மட்டுமின்றி, அவனது ஆதிக்கமும் கடல் கடந்த நாடுகள் பலவற்றில் பரவியிருந்தது என்று சரித்திர ஆசிரியர்கள் பலர் குறிப்பிட்டிருக்கிறார்கள். தென்கிழக்கு ஆசியாவில் பல நாடுகளில் பல்லவரின் ஆதிக்கம் இருந்தது என்று வரலாற்று அறிஞர்கள் குறிப்பிட்டிருப்பது ராஜசிம்மனின் காலத்தைத்தான்.* ராஜசிம்மனின் ஆட்சி லட்சத் தீவுகளில்கூட அமைந்திருந்தது என்று வயலூர் கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன. வெற்றி வேட்கையில் திளைத்து தனது வெற்றிகளையும் ஆதிக்கத்தையும் கடல் கடந்து நிலைநாட்டிய நோடு மட்டுமின்றி சிற்பக் கலையிலும் கட்டிடக் கலையிலும் வல்லவனாக இருந்ததால் ராஜசிம்மனே பல்லவ வேந்தர்களில் வல்லவனாகவும் வான்புகழ் கொண்டவனாகவும் விளங்கினான்.

அதனால் தான் ராஜசிம்மனைப் பற்றிக் கேள்விப்பட்டதுமே பரவசப்பட்டுப் போனான் காம்போஜ நாட்டு மன்னனான சூர்யவர்மன். அக்கால கட்டத்தில் காம்போஜம், சம்பா, சாவகம் ஆகிய நாட்டு மன்னர்கள் ராஜசிம்மனோடு நட்பு பாராட்டி அவனது ஆட்சிக்கு ஆதரவளித்து வந்தார்கள். அந்த நட்பு அரசியல் ரீதியாகவும் வியாபார ரீதியாகவும் விரிந்திருந்தது. அதோடு பூர்வக் கடலில் அராபியர் மற்றும் திபெத்தியரின் ஆதிக்கமும் அதிகாரமும் வலுத்தபோது அவர்களது நிபந்தனைகளுக்குக் கட்டுப்படாமல் ராஜசிம்மன் துணிச்சலாக கடல் வணிகத்தைச் செய்ததால் அவன் மீது தென்கிழக்கு ஆசிய நாடுகள் பலவற்றுக்கு மரியாதை ஏற்பட்டது. அதிலும் காம்போஜ நாட்டு மன்னன் சூர்யவர்மன் ராஜசிம்மனை மிகவும் மதித்து கடிதப் போக்குவரத்துகளையும் வைத்திருந்தான். பல்லவ நாட்டிலிருந்து காம்போஜத்திற்கு வரும்

* page 119 'Kanchipuram in Early South Indian History' by T.V.Mahalingam

மரக்கலங்களானாலும் சரி காம்போஜத்திலிருந்து பல்லவ நாட்டிற்குச் செல்லும் மரக்கலங்களானாலும் சரி அவற்றில் பல்லவ - காம்போஜ மன்னர்களின் நட்பு ஓலைகள் நிச்சயமாக வந்து போய் கொண்டிருக்கும். அதன் காரணமாக பல்லவ நாட்டு நிலைமையைப் பற்றிய செய்திகள் காம்போஜத்திற்கு கிடைத்த வண்ணம் இருந்தன. உதயசந்திரனைப் பற்றிய தகவல்களும் அவன் சாளுக்கிய வெற்றிக்குப் பிறகு சீன தேசத்திற்கு தூதுவனாகப் புறப்பட்ட விஷயமும் இந்த ரீதியில் தான் சூர்யவர்மனுக்குத் தெரிந்திருந்தன.

உதயசந்திரன் இந்த விவரங்களை நேரில் விவரித்தபோது பெருவியப்பையடைந்த சூர்யவர்மன் தனக்கு முன்னால் மாவீரன் ஒருவன் இருப்பதை உணர்ந்து பரவசப்பட்டான். பலியிட வேண்டிய நிலையில் தப்புவதற்கான வாய்ப்பு கிடைத்தபோது அதையெல்லாம் கோழைத்தனமானவை என்று புறக்கணித்துவிட்டு வீரனுக்கே உரிய வழியை விரும்பி அரங்கத்திற்கு வந்து உயிருக்கு அஞ்சாமல் உதயசந்திரன் பேசியதை தற்போது நினைவு கூர்ந்தான் மன்னன். இந்த வீரம் உதயசந்திரனுடையது என்பதை அறிந்ததும் 'வேறு யாருக்கு வரும் இந்த தைரியம்?' என்று சொல்லிக் கொண்டு அவனை அரண்மனைக்கு அழைத்துச் சென்று சிறப்பாக உபசரித்தான். உதயசந்திரன் பல்லவ மாமன்னனின் உபதலைவன் என்பதை அரண்மனை வட்டாரத்தில் மட்டுமின்றி மக்களுக்கும் தெரிவித்தான் சூர்யவர்மன். இதனால் உதயசந்திரனின் வீரமும் பராக்கிரமமும் காம்போஜ மக்களிடையே பரவி அவர்களது மனங்களில் அவனைப் பற்றிய மரியாதை உண்டாயிற்று. உதயசந்திரனின் பெயர் எல்லா இடங்களிலும் உச்சரிக்கப் பட்டது.

அதேசமயம் அவனது முகம் கோரமாகிவிட்டதை எண்ணி பெருங்கவலையடைந்த சூர்யவர்மன் வைத்தியரை அழைத்து உரிய சிகிச்சைகளையும் தொடங்கச் செய்தான். சிகிச்சையின் தன்மை குறித்து அடிக்கடி விசாரித்தும் வந்தான்.

உதயசந்திரனின் விவரங்கள் தெரிய வந்தபோது மன்னனிடம் கேட்டாள் பூவிழி, ''அவரைப் பற்றித் தீர விசாரியுங்கள் என்று சொன்னேனே இப்போது பார்த்தீர்களா அப்பா. விசாரிக்காமல் விட்டது விபரீதத்தில் அவரை விட்டுவிட்டது பார்த்தீர்களா?''

''உண்மைதான் மகளே. தெய்வம் போல வந்தாய் நீ. விசாரிக்கச்சொன்னாய். என்தவற்றைச் சுட்டிக்காட்டினாய். அவர் கடத்தப்பட்டபோது விரதம் இருந்து வாடினாய். என்

அசிரத்தையை கண்டித்தாய். அதனால்தான் உதயசந்திரனை அடையாளம் கண்டேன் நான். இது நடவாமல் போயிருந்தால் என் மதிப்பிற்குரிய பல்லவ மாமன்னருக்கு நான் பதில் சொல்ல வேண்டிய நிலை வந்திருக்கும். உபதலைவருக்கு ஏதாவது அபவாதம் உண்டாகியிருந்தால் கடற்படையோடு இங்கே வரவும் தயங்கமாட்டார்.''

''இப்போது மட்டும் உபதலைவருக்கு அபவாதம் நடக்கவில்லையா அப்பா?''

''முகத்தைப் பற்றித் தானே சொல்கிறாய்? கவலைப்படாதே அம்மா. இன்றைய கால கட்டத்தில் சீன மருத்துவம் சிறப்பானதாகக் கருதப்படுகிறது. தேவைப்பட்டால் சீனத்திலிருந்தும் மருத்துவர்களை வரவழைப்பேன். இழந்த அழகை மீண்டும் பெறாமல் உபதலைவர் இங்கிருந்து போக முடியாது.''

''மிகவும் மகிழ்ச்சி அப்பா. என் பிரார்த்தனையும் அதுதான்.''

☆

உதயசந்திரன் மக்களிடையே செல்வாக்கு பெற்றிருந்த நிலையில் அந்த மக்களிடம் ராட்சஷ மிருகத்தின் பிரச்சனையைத் தீர்ப்பதாகக் கூறியிருந்தது நினைவிலேயே இருந்தது. அது குறித்து மன்னனிடம் பேசுவதில் இனியும் தாமதம் செய்யக் கூடாது என்று கருதியவனாய் மன்னனைச் சந்தித்தான்.

''முதலில் உங்கள் முகம் சரியாகட்டும் உபதலைவரே. பிறகு பார்த்துக் கொள்ளலாம் இந்தப் பிரச்சனையை'' என்றான் மன்னன்.

''தவறு மன்னவா. என் முகத்திற்கும் இந்தப் பிரச்சனைக்கும் சம்பந்தமில்லை. அதோடு முகத்தைக் கெடுக்க வைத்தியருக்கு அரை நாள் போதுமானதாக இருந்தது. ஆனால், கெடுத்த முகத்தைச் சீர் செய்ய எவ்வளவு காலமாகும் என்பதை அவரால் சொல்ல முடியவில்லை. சீர் செய்ய முடியும் என்று கூட அவரால் உறுதி செய்ய முடியவில்லை. ஆகவே அதைப் பற்றிக் கவலைப்படாமல் பிரச்சனையைப் பற்றி கவலைப்படுவதுதான் நல்லது'' என்றான் உதயசந்திரன்.

பிறகு அவனாகவே கேட்டான்.

''மன்னவா, அந்த ராட்சஷ விலங்கு அடிக்கடி இந்த நாட்டிற்கு வருகிறதா?''

''முதல் முதலாக ஓராண்டிற்கு முன்பு இந்த இந்திரபுரத்தில் காணப்பட்டது. அதற்குப் பிறகு நான்கு முறை தோன்றியிருக்கிறது.''

''நிலத்திலிருந்து தோன்றியதா? கடலிலிருந்து தோன்றியதா?''

''அதன் முதல் பிரவேசம் பற்றி எங்களுக்கு எதுவும் தெரியாது. ஆனால் அது கடலிலிருந்து தான் தோன்றியிருக்க வேண்டும் என்று நினைத்து அது முதல் கடல் பகுதியில் தொடர்ந்து கண்காணிக்கிறோம். ஆனால் அது கடலிலிருந்து தோன்றவில்லை. நிலப்பகுதியில் எங்கே மறைந்திருந்து தான் அவ்வப்போது தோன்றுகிறது.''

''இந்திரபுரத்தில்தான் தோன்றுகிறதா?''

''இது வரையில் அப்படித்தான்.''

''அது தோன்றும்போது பெருத்த ஆரவாரம் செய்கிறதா?''

''ஆமாம். இந்திரபுரமே நடுங்குவதுபோல் சத்தமிடும்.''

''அதைக் கண்டதும் மக்கள் என்ன செய்கிறார்கள்?''

''அச்சப்பட்டு ஓடுகிறார்கள். சிலர் மறைவிடங்களிலிருந்து தாக்குகிறார்கள். அப்போது அதன் கைகளில் சிக்குவோர்களைப் பிடித்து தூர வீசி கொல்கிறது. கால்களிலும் பலர் சிக்குண்டு சாகிறார்கள்.''

''வேறு ஏதாவது செய்கிறதா?''

''வேறு ஏதாவது என்றால்?''

''கட்டிடங்களைச் சேதப்படுத்துகிறதா? நீர் நிலைகளை நாசப்படுத்துகிறதா?''

''இது வரையில் இல்லை.''

''மன்னவா! மக்கள் அதைக் கண்டு அஞ்சியது சரி. ஆனால் எதற்காகத் தாக்க வேண்டும்? அதுவாக எந்தக் கெடுதலும் செய்யாதபோது நாம் ஏன் அனாவசியமாகத் தாக்க வேண்டும்? மிகப் பெரிய அந்த விலங்கு நடந்து செல்லும்போது ஒரு சிலர் அதன் காலடியில் சிக்குவது தற்செயலானது. மற்றபடி அதுவாக நம்மைத் தாக்கவில்லை. இந்த முறை அது வரும்போது அஞ்ச வேண்டாம் என்று மக்களுக்கு அறிவிப்பு செய்யுங்கள். யாரும் அதைத் தாக்க வேண்டாம் என்று கட்டளையிடுங்கள். அது என்ன செய்கிறது என்று பார்ப்போம்.''

உதயசந்திரன் கூறியபடி அறிவிப்புகளை செய்துவிட்டு வந்தான் மன்னன்.

''மன்னவா! பாரத நாட்டின் தென்பகுதி பல்லாயிர வருடங்களுக்கு முன்னால் இன்றைக்கு இருப்பது போல் கடலாக இல்லை. நிலமாக இருந்தது. லெமூரியா கண்டம் என்றும்

பின்னால் குமரிக் கண்டம் என்றும் அப்பகுதி அழைக்கப் பட்டது. இப்போது இங்கே இருக்கும் கம்போஜம், சாவகம், ஸ்ரீவிஜயம், இலங்கை, புஷ்பகத் தீவு முதலிய பலத் தீவுகள் குமரிக் கண்டத்தோடு இணைந்து ஒரே நிலப்பரப்பாக இருந்தது. அக்கண்டத்தில் வினோதமான விலங்குகளும் பறவைகளும் மீன் இனங்களும் வாழ்ந்தன. உலகத்தில் வேறெங்கேயும் காணப் படாத மிருகங்களும் பறவைகளும் அக்கண்டத்தில் இருந்தன. அவை உயரத்திலும் நீளத்திலும் பருமனிலும் வியப்பூட்டும் விதத்தில் பெரியதாகவும் வினோதமானதாகவும் இருந்தன. அந்த ராட்சஷ மிருகங்களுக்கு அக்கண்டம் ஏற்றதாக இருந்ததால் இன விருத்தி செய்து பெருமளவில் வாழ்ந்து வந்தன. அக்குமரிக் கண்டம் கடல் கோள்களால் கடலுக்குள் மூழ்கியும் இணைந் திருந்த நிலப்பரப்பு துண்டுபட்டு விலகியும் சென்றபோது இந்த வினோத விலங் குகளும் பெருமளவில் அழிந்தன. எஞ்சிய விலங்குகள் துண்டு பட்டத் தீவுகளில் இருந்தன. வாழ முடிந்தவைகள் வாழ்ந்தன. வாழ முடியாதவைகள் மாய்ந்தன. வலியது வாழும். என்பது அறிஞர்கள் கூற்று.* அந்த அடிப்படையில் தான் வரலாற்றுக்கு முந்திய காலத்தில் வாழ்ந்த வினோத விலங்குகள் அப்போது கணக்கற்று இருந்தன. அவற்றின் வாழ்விடம் கடற் கோள்களினால் அழிந்தும் துண்டாடப்பட்டும் சேதமாகியபோது வலிமை கொண்ட சில வினோத விலங்குகள் துண்டாகிய நிலப்பரப்பில் தொடர்ந்து வாழ முற்பட்டன. ஆனாலும் அவற்றின் பரிமாணத்திற்கும் பழக்கத்திற்கும் ஏற்ற மாதிரி இருப்பிடங்கள் அமையாததால் வாழ முடியாமல் மடியலாயின. அந்தப் போராட்டங்களிலும் மிஞ்சிய ஒன்றிரண்டின் வாரிசுகள் மட்டுமே இங்கொன்றும் அங் கொன்றுமாய் உலகில் எங்கெங்கேயோ வாழுகின்றன. காம் போஜத்தில் இருப்பதும் அவற்றில் ஒன்றாகத்தான் இருக்க வேண்டும். அந்த விலங்கு சிறியதாய் இருந்தவரை சிரமமின்றி வாழ்ந்திருக்கிறது. பெரிதாகவும் பிரம்மாண்டமானதாகவும் ஆகி விட்ட பிறகு அதற்கேற்ற மாதிரி வாழ இயலவில்லை. என்ன செய்வதென்றும் தெரியவில்லை. அதற்குத் துணையும் இல்லை. சுற்றமும் இல்லை. தவிப்பில் இருக்கிறது பாவம். அந்த தவிப்பில் தான் அது இங்கே தலைகாட்டுகிறது. அதை உணராத மக்கள் பயந்து போய் தாக்குகிறார்கள். உணர்ந்து கொண்ட மந்திரவாதிகள் அந்த விலங்கை மூலதனமாக்கி எல்லோரையும் ஏமாற்றுகிறார்கள்.''

* Survival of the fittest என்பது டார்வின் கொள்கை.
p 984 - 'The book of knowledge Vol III.

உதயசந்திரனின் விளக்கம் மன்னனின் ஆழ்மனதைக் கிளறிவிட்டது.

''உண்மைதான் உபதலைவரே'' என்று முணுமுணுத்த அவன் மந்திரவாதிகள் கடந்த ஒரு வருட காலமாகத் தன்னைக் குழப்பியும் மிரட்டியும் வைத்து பணம் பறித்து வந்ததை எண்ணிப் பார்த்து குமைந்து போனான். தவிப்பில் இருக்கும் ராட்சஷ மிருகத்தை வைத்து மக்களை அவர்கள் மிரட்டி வந்த விஷயமும் இப்போது தெளிவாகப் புரிந்ததால் அவர்களது மீது பெரும் ஆத்திரம் மூண்டது.

''இந்த மந்திரவாதிகள் அனைவரையும் பூண்டோடு அழித்துவிட்டுத்தான் மறுவேலை பார்க்க வேண்டும்'' என்றான்.

''மன்னவா! தலைமை மந்திரவாதி எப்போது உங்கள் வீரர்கள் வசம் கிடைக்காமல் தப்பி விட்டானோ அப்போதே மந்திரவாதிகள் தலைமறைவாகியிருப்பார்கள். தங்களை நிலை நிறுத்திக் கொள்ள வேறு வழிகளில் ஈடுபடுவார்கள். அவர்களை அழிக்கும் காரியத்தை மக்களிடம் விட்டுவிட்டால் சிறப்பாக நிறைவேறும். முதலில் மக்களுக்கு இந்த ராட்சஷ விலங்கைப் பற்றிய விவரம் தெரிய வேண்டும். அதோடு மந்திரவாதிகளின் போலித்தனங் களையும் அம்பலப்படுத்த வேண்டும். இதைத் தாங்கள் தாமதமின்றித் தொடங்குங்கள். மக்கள் அந்த ராட்சஷ விலங்கை நேசிக்கவும் மந்திரவாதிகளைப் புரிந்து கொண்டு அவர்களைத் தேடிப்பிடித்து தண்டிக்கவும் முற்படுவார்கள்.''

''எனது கண்களை மெல்ல மெல்லத் திறக்கிறீர்கள் உபதலைவரே. சூர்யன் என்ற பெயரை வைத்துக் கொண்டு இதுவரை நானே இருட்டாக வாழ்ந்திருக்கிறேன். எந்த மக்களுக்கு ஒளி வீசி வழிகாட்ட வேண்டுமோ அந்த மக்களுக்கு வழியை மறித்துவிட்டு இருட்டையே தந்திருக்கிறேன். நம்பிக்கையை வளர்க்க வேண்டிய நான் மூடநம்பிக்கையை மக்களிடம் வளர்த்து குருடர்களாக்கிவிட்டேன்.''

''மன்னவா! மூடநம்பிக்கை என்று எங்குமே இல்லை. இருப்பது நம்பிக்கையும் அவநம்பிக்கையும்தான். சுயநலக் காரர்கள் புகுந்து கொண்டு இரண்டையும் சேதாரமாக்கி விட்ட தால்தான் மூடநம்பிக்கை என்ற புதிய வடிவம் பிறந்திருக்கிறது. நீங்கள் கவலைப்பட வேண்டாம். ராட்சஷ விலங்கை நம்மை விட அதிகமாக நேசிக்கும்படி மக்களுக்கு அறிவுறுத்துங்கள். இந்திர புரம் மட்டுமின்றி நாட்டின் பல பகுதிகளிலும் அந்த ராட்சஷ

விலங்கைப் போன்ற மண் உருவங்களை பிரம்மாண்டமான அளவில் அமையுங்கள். பிறகு பார்க்கலாம்.''

இவ்வாறு கூறிவிட்டு மன்னனிடமிருந்து விடைபெற்றுக் கொண்டு அரண்மனை கோபுரத்திற்கு வந்தான். கோபுரத்தின் உட்பகுதியில் இருந்த படிகளில் ஏறி அதன் உச்சி மாடத்திற்கு வந்தான். அங்கிருந்து பார்க்கையில் இந்திரபுரத்தின் முழு விஸ்தீரணமும் தெரிந்தது. ஊரில் பலபகுதிகளிலும் பொன் மாளிகைகள் இருப்பது தெரிந்தது. அவையல்லாமல் உயர்ந்த மாளிகைகள் பலவும் இருந்தன. வீதிகளில் தேர்கள் ஓடிய வண்ணம் இருந்தன. திரும்பிய இடமெல்லாம் யானைகள் தென்பட்டன. அவற்றின் மீது தொட்டில் கட்டி குடைகளையும் நட்டு செல்வந்தர்கள் பலர் தனியாகவும் அழகுப் பெண்களும் சுதந்திரமாகப் படுத்த வண்ணமும் சாய்ந்த வண்ணமுமாகப் பயணம் செய்து கொண்டிருந்தார்கள்.

இந்திரபுரத்தின் கிழக்கில் உதயசந்திரனை ஒதுக்கிய தென்சீனக் கடல் இருந்தது. நகரத்தின் மேற்கில் அடர்ந்த காடுகளும் அவற்றுக்குப் பின்னால் உயர்ந்த மலைகளும் தெரிந்தன. எல்லாவற்றையும் தனது கண்களால் படமெடுத்துக் கொண்டது போல் பதியவைத்துக் கொண்டு கீழே இறங்க முற்பட்டபோது அங்கே வந்தாள் மன்னன் மகளான பூவிழி.

அவளைக் கண்டதும். ''நீங்களா? வாருங்கள் இளவரசி. சொல்லியிருந்தால் நான் வந்திருக்க மாட்டேனா? நீங்கள் ஏன் சிரமப்பட்டு இங்கே வரவேண்டும்?'' என்று கேட்டான் உதயசந்திரன்.

அவள் ஒரு புன்னகையை பூக்கச் செய்துவிட்டு ''உயர்ந்த இடத்தில் இருப்பவர்களைத் தேடிக் கொண்டு செல்வது என்னைப் போன்றவர்களுக்கு இயற்கை. இதில் சிரமம் பார்க்க முடியுமா?'' என்று கேட்டாள் யாழ் இசைப்பது போல்.

''உயரத்தில் இருப்பது நானல்ல இளவரசி. நீங்கள்தான். நீங்கள் மன்னர் மகள். நான் சாதாரண உபதலைவன். அதோடு முகத்தை இழந்துவிட்ட துரதிர்ஷ்டசாலி'' என்றான் உதயசந்திரன் தனது முகக்கவசத்தைத் தடவியபடி.

அவள் மற்றுமொரு புன்னகைப் பூவை உதிர்த்துவிட்டு ''உயர்வு என்பது சுந்தரத்தில் இல்லை. குணத்தில்தான் இருக்கிறது'' என்றாள்.

''அப்படிப் பார்த்தால் கூட நீங்கள் தான் குணத்திலும் உயர்ந்தவராக இருக்கிறீர்கள்.''

''எப்படி?''

''ஓர் அனாதை கடத்தப்பட்டதற்காக அரசகுமாரியான நீங்கள் உணவும் உறக்கமும் இன்றி வாடி நின்றது உயர் குணத்திற்கு உதாரணமல்லவா?''

''அந்தச் செய்கையில் சுயநலம் இருக்கலாம். உங்கள் செயலிலோ பெரிய தியாகம் இருக்கிறது. முகத்தை இழக்காமலும் தப்பவும் வாய்ப்பிருக்கும்போது அவற்றைத் தவிர்த்துவிட்டு முகத்தில் அகோரத்தை உண்டாக்கிக் கொண்டது அரிதான தியாகம். உயர் குணத்தின் பிரதிபலிப்பு.''

''மன்னரும் மன்னரின் அருமை மகளும் சிலாகிக்கும் அளவிற்கு நான் எதையும் செய்துவிடவில்லை. எனது செயலிலும் சுயநலம் இருக்கிறது. நாட்டு மக்களுக்காக பலியாக வேண்டும் என்றதும் சரி என்று சம்மதித்து பலியாகி விட்டிருக்க வேண்டும் நான். நானோ அவ்வாறு செய்யாமல் உயிரைக் காத்துக் கொண்டேன். இதுவா உயர்குணம்?''

''உபதலைவரே! நிலை எதுவானாலும் சிந்திப்பதுதான் சிறந்தது. சிந்திப்பதும் சீர்தூக்கிப் பார்ப்பதும் எது சரியோ அதைச் செயல்படுத்துவதும் தான் விவேகம். அதைத்தான் நீங்கள் செய்திருக்கிறீர்கள். இதில் சுயநலமில்லை. அதோடு இந்த நாட்டிற்கு பலியாவதற்காக நீங்கள் பிறக்கவில்லை.''

''எப்படிச் சொல்கிறீர்கள்?''

''உங்களைப் பற்றிய எல்லா விவரங்களையும் தந்தையார் என்னிடம் சொன்னார். வீழ்ந்துவிடக் கூடிய நிலைகளில் எல்லாம் நான் விழமாட்டேன். வீறு கொண்டு எழுந்து நிற்பேன் என்று தீர்மானித்தது போல் எழுந்திருக்கிறீர்கள். பராக் கிரமங்களைக் காட்டியிருக்கிறீர்கள். வெற்றி பெற்றிருக்கிறீர்கள். புயலால் கூட உங்களை வீழ்த்த முடியவில்லை என்றால் உங்களையா எங்களால் பலியிட முடியும்? அதனால்தான் ஆரம்பத்திலேயே உங்களை பலியிட வேண்டாம் என்று மன்னனிடம் சொன்னேன். அவர் ஏற்றுக் கொள்ளவில்லை. நான் மட்டும் நீங்கள் பலியிடப்பட மாட்டீர்கள் என்று திடமாக நம்பினேன். அது தான் நடந்தது. நீங்கள் சாதிக்க வேண்டியது நிறைய இருப்பதாக நம்பினேன். ஆனால்... ஆனால்...''

''ஆனால் என்ன இளவரசி?''

''பலியிலிருந்து விடுபட்ட உங்களை யாரோ கடத்தி விட்டதாக அறிந்ததும் என் நம்பிக்கையெல்லாம் வீணாகி

விட்டதாகத் தோன்றியது. வேதனையால் துடித்தேன். உங்களை மீண்டும் காணும் வரை உண்ணுவதுமில்லை. உறங்குவதுமில்லை என்று உறுதி பூண்டேன். என் நம்பிக்கையை அந்தச் சூரியக் கடவுள்தான் எனக்கு உயிர்ப்பித்துக் கொடுத்தார்.

''அத்தனை பாக்கியசாலியா இளவரசி நான்?''

''அதிலென்ன சந்தேகம்?''

''இளவரசி! என் முகத்தைக் கண்டால் உங்கள் அபிப்ராயம் மாறிவிடும். நம்பிக்கையும் போய்விடும்.''

''அப்படியா? எங்கே உங்கள் முகக்கவசத்தை கழற்றுங்கள் பார்க்கலாம்.''

''வேண்டாம் இளவரசி. மயக்கமடைந்துவிடுவீர்கள்.''

''அதையும் தான் பார்க்கலாமே!''

அச்சமயத்தில் திசைகளே அதிரும்படி பேரோசை ஒன்று கேட்டது.

குரல் வந்த திசையை நோக்கினான் உதயசந்திரன்.

இந்திரபுரத்தின் மேற்கில் காட்டுப்பகுதியிலிருந்து மிகவும் பிரம்மாண்டமாக மேலெழுந்தது ராட்சஷ விலங்கு.

''நகராசூரன்'' என்றாள் பூவிழி.

அப்படியே உதயசந்திரனின் மார்பில் சாய்ந்தாள். மயக்கமடைந்தாள்.

☆☆☆



76

காமத்தைக் கடந்த கவலை

நகராசூரன் என்ற ராட்சஷ விலங்கின் பெயரை உச்சரித்து விட்டு தன் மார்பில் சாய்ந்து மயக்கமடைந்த பூவிழியை மெல்ல அகற்றி கோபுரத்தின் மாடத்திலேயே படுக்க வைத்த உதயசந்திரன் நகராசூரனையும் நகரத்தையும் கவனித்தான். அந்த விலங்கின் குரல் கேட்டதுமே நகர மக்கள் அதிர்ந்து போய் இல்லங்களை விட்டு வெளியேறி வந்து வானத்தை நோக்கியதைக் கண்டான். அதேசமயம் காட்டுப் பகுதியிலிருந்து வெளிப்பட்ட ராட்சஷ விலங்கானது உண்மையிலேயே வைத்தியர் விவரித்த மாதிரி ராட்சஷ வடிவமாகத்தான் இருந்தது. நகரில் இருந்த கட்டிடங்களை விட அது உயரமாக இருந்ததால் அது நடந்து வந்தபோது ஊருக்கு மேலே நடப்பது போல் இருந்தது. முகம் மட்டுமே முப்பதடி இருந்தது. தலையை ஆட்டி வாயைத் திறந்தபோது உள்ளே நீண்ட பற்கள்துறுத்திக் கொண்டிருந்தன. கழுத்து மெல்லியதாக இருந்தது. ஐம்பதடி நீளம் கொண்ட அந்த கழுத்தை நான்கு புறங்களில் திருப்பிப் பார்த்தபடியும் இருநூறு அடி நீளம் கொண்ட வாலை தூக்கியும் சுழற்றியுமாய் அது நடந்த விதம் பயங்கரமாக இருந்தது. கால்களின் உயரம் இருபதடிக்கு மேலாக இருந்ததால் அது கட்டிடங்களைத் தாண்டியபடி முன்னேறி வந்தது. நூறடி நீளம் இருந்த உடல் பகுதி அதிகமாக பருக்காமல் இருந்ததால் அது அந்த விலங்கிற்குச் சுமையாக இல்லை. அனாயசமாக அது நடந்து வந்த காட்சியானது நகரை விழுங்குவதற்காக தேவ லோகத்திலிருந்து அனுப்பப்பட்ட வினோத சிருஷ்டியொன்று இந்திரபுரத்திற்கு வந்த மாதிரி இருந்தது.

மன்னனிடம் தான் கூறியது போன்று வரலாற்று காலத்திற்கு முற்பட்ட காலத்தில் குமரிக்கண்டம் பகுதியில் வாழ்ந்திருந்த வினோத விலங்கினங்களில் ஒன்று தான் நகராசூரன் என்பதை உணர்ந்தான் உதயசந்திரன். அது தானிருந்த கோபுரத்தைக் கடந்து சென்றபோது அதன் தலை கோபுரத்தின் அடுத்த கீழ் மாடம் வரை

இருந்ததைக் கண்டான் அவன். மன்னனின் மூலம் அந்த மிருகத்தை யாரும் தாக்க வேண்டாம் என்று மக்களுக்கு கட்டளையிடப் பட்டிருந்ததால் தற்போது யாரும் அதை தாக்க முற்படவில்லை. அது நடக்கும் பாதைகளை விட்டு விலகி நின்றார்கள். அசுர விலங்கிற்கு முன்னால் பொம்மைகளைப் போல மக்கள் காட்சியளித்ததைக் கண்டு மெய்ச்சிலிர்த்தான் உதயசந்திரன். நகராசூரன் சிறிது தூரம் வரை மெல்ல நடந்தது. பலி அரங்கத்திற்குள் வந்து கால்களை நீட்டிப் படுத்தது. மெல்லிய குரலில் ஏதோ முனகியது. பிறகு சிலிர்த்துக் கொண்டு எழுந்து உரக்கச்சத்தமிட்டது. கடற்கரையை நோக்கிச் சென்றது. அங்கேயே சிறிது நேரம் நின்று கடலைப் பார்த்தது. ஒரு நாழிகை நேரம் வரை அங்கே நின்றுவிட்டு கழுத்தை மட்டும் திருப்பி நகரத்தைப் பார்த்தது. தன்னை யாரும் தாக்காமல் இருந்தது அதற்கு வியப்பாக இருக்க வேண்டும். சில நிமிடங்களுக்கு கடற்கரை மணலில் நடனமாடுவதுபோல் குதித்தது. பிறகு வந்த வழியே அமைதியாகத் திரும்பியது. காட்டு வழியாகச் சென்று மலைத் தொடருக்கு அப்பால் சென்று மறைந்தது. கோபுரத்தின் மேல் மாடத்தில் இருந்தபடி அவ்வளவையும் கவனித்த உதயசந்திரன் பூவிழியைத் தூக்கி தோளில் போட்டுக் கொண்டு கீழே இறங்கினான். இருவரையும் கண்ட மன்னனுக்கு அப்போது தான் உயிர் வந்தது.

வளர்ப்புத் தாயை அழைத்து பூவிழியை அவளது மாளிகைக்குக் கொண்டு போய் மயக்கம் தெளிவிக்கும்படிச் சொன்ன மன்னன், ''இந்த முறை மக்கள் அந்த விலங்கைத் தாக்கவில்லை. கவனித்தீர்களா?'' என்று கேட்டான்.

''அந்த விலங்கு மக்களில் யாரையும் தொடாததையும் கவனித்தேன்'' என்றான் உதயசந்திரன்.

''ஆம் உபதலைவரே. அதன் தோற்றம் தான் பயங்கரம். ஆனால் சாது. அதன் வழியில் குறுக்கிடாத வரை அது பிறர் வழியில் குறுக்கிடுவதில்லை'' என்றான் மன்னன்.

''அதை நாம் புரிந்து கொண்டு விட்டோம் என்பது அதற்குப் புரிந்துவிட்டது. அதனால் மகிழ்ச்சியடைந்திருக்க வேண்டும். அரங்கத்தில் போய் படுத்ததும் கடற்கரையில் போய் துள்ளியதும் மகிழ்ச்சியின் வெளிப்பாடுதான். நாம் அன்பு செலுத்துகிறோம் என்று தெரிந்துவிட்டால் அது நம்மிடம் பழகவும் ஆரம்பிக்கும். குழந்தையைப் போல நடந்து கொள்ளும். அதற்கு தனது தனிமை வேதனையாக இருக்கிறது. ஆகவே நான் சொன்னபடி அந்த விலங்கைப் போன்ற வடிவங்களைத் தயாரித்து பல இடங்களில்

வையுங்கள். அது அவற்றைக் கண்டு அமைதியடைய வாய்ப்பிருக்கிறது. மக்களுக்கு அதைப் பற்றிய செய்திகள் தொடர்ந்து செல்ல வேண்டும். நானே கூட அந்தப் பணியைச் செய்வேன். முகக் கவசத்துடன் சென்றால் மக்களுக்கு என்னவோ போல் இருக்கும். அதோடு வைத்தியர் என் மீது சூரிய ஒளியே படக்கூடாது என்றும் தினமும் அரை நாள் வைத்திய சிகிச்சைக்கு உடன்பட வேண்டும் என்றார்.''

''அப்படியே செல்லுங்கள். உங்களுக்குச் சிகிச்சை முக்கியம். அது வெற்றி பெறாமல் வேறு எது வெற்றி பெற்றாலும் பயனில்லை. நீங்கள் சொன்னதையெல்லாம் நாங்கள் நிறைவேற்றுகிறோம். நீங்கள் அந்தக் கவலையை விட்டு விட்டு சிகிச்சையை கவனியுங்கள்'' என்றான் மன்னன்.

☆

மறுநாள் இரவு.

இந்திரபுரத்தின் காட்டுப் பகுதியை அடுத்த மலைக்குகை ஒன்றில் கல்லாசனத்தில் கடுங்கோபத்துடன் அமர்ந்திருந்தான் தலைமை மந்திரவாதி. அவனது கோபத்தைத் தணிவிப்பதற்காகத் தருவிக்கப்பட்ட அழகிகள் பலவாறு முயன்று அவனது கோபத்தை அகற்றி காமத்தை வெளிக் கொணர முயன்றார்கள். சாதாரணமாக அழகிகளின் சுவாசம் பட்டாலே சொர்க்கத்திற்கான அழைப்பு வந்துவிட்டது என்று எந்த வேலையானாலும் சரி அந்த வேலையை அந்தரத்தில் விட்டுவிட்டு சுந்தரிகளைத் தேடி ஓடி வருவதுடன் அவர்களை ஒரு கலக்கு கலக்குவதை வாடிக்கையாகக் கொண்ட சீராளன் தற்போது பேரழகுப் பெண்கள் பிறந்த மேனிகளோடு உராய்ந்தும்கூட உடைந்து போன பாறையைப் போல அசைவின்றியும் ஆசையின்றியும் கிடந்ததைக் கண்டு அழகிகள் அசந்தார்கள். தங்களது அழகினால் அதுவரை தோல்வியே கண்டறியாத அந்த அழகிகளுக்கு கோபம் பொத்துக் கொண்டு வந்தது. கோபத்தைத் தீர்க்க வந்த காமக் கட்டழகிகள் மந்திரவாதியைக் கண்டு கோபத்திற்கு ஆளானார்கள். இவனிடம் உராய்ந்ததற்கு பதில் உண்மையான சிலை மீது உராய்ந்திருந்தால் அது உயிர் பெற்று வந்து உருண்டு புரண்டு விளையாடியிருக்கும் என்று எண்ணியவர்களாய் கீழே கிடந்த ஆடைகளை எடுத்து அணிந்து கொண்டு குகையை விட்டு வெளியே வந்தார்கள்.

வெளியே நின்றிருந்த சக மந்திரவாதிகள் அவர்களைப் பார்த்து ''என்ன? அசத்தினீர்களா தலைவரை? ஆடிப் போயிருப்பாரே? இப்போது நாங்கள் போகலாம் அல்லவா?'' என்று கேட்டார்கள்.

கடுப்பேறிக் கிடந்த காரிகைகள் ''நீங்களும் உங்கள் தலைவரும்! வாழ்நாளில் இது வரை தோல்வியறியாத எங்களை அவமானப்படுத்திவிட்டார் தலைவர். விருப்பமில்லை என்றால் வேண்டாம் என்று சொல்லியிருக்கலாம். வாயில்லாமலா போய்விட்டது? எங்களைத் தொடுவதற்குக் கூட அசைய வில்லை. அப்படியென்ன வருத்தம் உங்கள் தலைவருக்கு? எங்களை அவமானப்படுத்திய அவரைப் பழி வாங்காமல் விடமாட்டோம்'' என்று வார்த்தை பொறிகளை வீசிவிட்டுச் சென்றார்கள்.

சக மந்திரவாதிகள் தலையைச் சொறிந்து கொண்டார்கள்.

அழகிகளால் கூட அசைக்க முடியாத அளவுக்கு அப்படி என்ன வந்துவிட்டது அவருக்கு? ஒருவேளை செத்துப் போயிருப்பாரோ? என்றெல்லாம் எண்ணிய அவர்கள் ''இவரைத் துயிலெழுப்ப அவர்தான் சரி. அவரைப் போய் உடனடியாக அழைத்து வாருங்கள்'' என்று நால்வரை அனுப்பிவிட்டு இதர மந்திரவாதிகள் குகைக்குள் சென்றார்கள். மலையானது குடையப் படாமல் இயற்கையாகவே குழி விழுந்திருந்ததால் மலைக்குகை ஆழமாக இருந்தது. அந்த மலையை அடுத்து மலைப்பாம்புகளும் வன விலங்குகளும் ஏராளமாக இருந்தன. ராஜாளிப் பறவைகளை விட பெரிய கழுகுகள் அப்பகுதியில் வசித்து வந்தன. அதோடு மலையில் பேய்கள் நடமாட்டம் மிகுதியாக இருப்பதாகவும் அங்கே சென்றவர்கள் உயிரோடு திரும்பியதில்லை என்றும் பலமான வதந்திகள் உலவி வந்ததால் ஊர் மக்கள் அந்தப் பக்கமாகச் செல்வதை தவிர்த்து வந்தார்கள். மக்கள் புறக்கணிக்கும் இடங்களும் அஞ்சும் இடங்களும் சீராளனைப் போன்ற மந்திரவாதிகளுக்கு ஏற்ற இடமாக இருந்தது. ரகசிய கூட்டங்களுக்கும், செயல்பாடுகளுக்கும், உல்லாசங்களுக்கும் அந்த மலைக்குகை அவர்களுக்குப் பயன்பட்டு வந்தது.

தற்போது மந்திரவாதிகள் உள்ளே நுழைந்தபோது அக்கம் பக்கத்திலிருந்து வனவிலங்குகளின் உறுமல் சத்தம் கேட்டுக் கொண்டிருந்தது. மலைக்குகையின் வாசலில் மான் ஒன்றை விழுங்கிவிட்ட மலைப்பாம்பு ஒன்று நகர முடியாமல் படுத்துக் கிடந்தது. சற்று முன் வரை வராத பாம்பு தற்போது வந்திருந்ததைக் கண்ட மந்திரவாதிகள் வாட்களை உருவி அந்த மலைப்பாம்பைக் கண்ட துண்டமாக வெட்டி அகற்றிவிட்டு உள்ளே சென்றார்கள்.

அழகிகளின் சுவாசம் முதல் சகவாசம் வரை சகலமும் இருந்தபோது சிலை நிலையை அடைந்திருந்த தலைமை

மந்திரவாதியான சீராளன் தற்போது சகஜ நிலையில் அமர்ந்திருந்ததைக் கண்ட சக மந்திரவாதிகள் வியப்படைந்தார்கள்.

''என்ன தலைவரே! ஊரிலேயே தலைசிறந்தவர்களும் தொழில் தெரிந்தவர்களுமான வழுவழுப்பான அழகிகளை அனுப்பியிருந்தோம். வழுக்கி விழ வேண்டியவரான நீங்கள் அழகிகளை விழி பிதுங்க வைத்துவிட்டீர்களாமே! அவமானப் பட்டுப் போய் உங்களைப் பழிவாங்காமல் விடமாட்டோம் என்று சொல்லிவிட்டுப் போயிருக்கிறார்கள்'' என்றார்கள்.

''என் அவமானத்தைப் பற்றி கவலைப்பட இங்கே யாருமே இல்லையா?'' என்று கேட்டான் தலைமை மந்திரவாதி.

''அழகிகளைப் பற்றி எங்களுக்கென்ன? எங்கள் கவலை யெல்லாம் உங்களைப் பற்றியதுதான். அதனால் கவலையைப் போக்க அழகிகளை அனுப்பி வைத்தோம்'' என்றார்கள் சகமந்திரவாதிகள்.

''பெண்களால் சுகம் மட்டுமே தர முடியும். கவலையைப் போக்க முடியாது. அதோடு பெரும்பாலான கவலைகளுக்குக் காரணமே பெண்கள்தான்'' என்றான் சீராளன்.

''ஆகா! ஆகா!'' என்று ஆர்ப்பரித்தார்கள் சக மந்திரவாதிகள்.

''போதும். உங்கள் பாராட்டு எனக்குத் தேவையில்லை. அதனால் பயன் எதுவும் இல்லை. நமது நிலையைப் பற்றி எல்லோரும் யோசித்துப் பார்த்து முடிவெடுக்க வேண்டிய நேரம் இது. இந்த நாட்டின் அசைக்க முடியாத சக்திகளாக இருந்த நாம் இன்றைக்கு அற்ப ஜனங்கள் ஆட்டிப் பார்க்கும் அளவிற்கு தாழ்ந்து விட்டோம். சிறை செய்யும்படி ஒருவரைச் சுட்டிக்காட்டினால் மறுபேச்சின்றி மறுவினாடியிலேயே சரி என்று செய்யும் மன்னன் சூர்யவர்மன் இன்றைக்கு என்னையே சிறை செய்யும்படி உத்தரவிட்டிருக்கிறான். என்னை யாராலும் சிறை செய்ய முடியாதென்பது ஒரு பக்கம் இருந்தாலும் இந்த தைரியம் மன்னனுக்கு எப்படி வந்தது என்பதை நீங்கள் யோசிக்க வேண்டும். காரணம் அந்த வேற்று நாட்டு மனிதன் உதயசந்திரனும் நம்நாட்டுத் துரோகி ஊர்வசியும்தான். மக்களும் மன்னனும் நம்மை மதிக்கும் வரை தான் நாம் பிழைக்க முடியும். நம் மீது நம்பிக்கையும் அச்சமும் இருக்கும் வரை தான் அவர்களை நாம் ஆள முடியும். இன்றைக்கு எல்லாம் போய்விட்டது. மன்னன் என்னைச் சீந்தவில்லை. சிறைபிடிக்கச் சொல்கிறான். மக்களோ நம்மைக் கொல்வதற்காக நம்மைத் தேடி அலைகிறார்கள். இந்த நிலை

நீடித்தால் நாம் காம்போஜத்தை கைவிட்டு விட்டு வேறு நாட்டை நோக்கி ஓட வேண்டியது தான்.''

சீராளன் இவ்வாறு சொல்லி முடித்தபோது நரியொன்று ஊளையிட்டது. காட்டு ஆந்தைகள் பல சத்தமிட்டன. லேசான சங்கொலி ஒன்று எழுந்தது. அதையடுத்து குகைக்குள் வந்தார்கள் மேலும் பல சக மந்திரவாதிகள். அவர்களுக்குப் பின்னால் வந்தார் மன்னரின் குலகுரு. அவரது பணியாட்கள் ஆசனம் ஒன்றைக் கொண்டு வந்தார்கள். எங்கேயானாலும் தனது ஆசனத்திலேயே அமர்வதுதான் குலகுருவின் வழக்கமாதலால் அவ்வழக்கப்படி பணியாட்கள் கொண்டு அந்த பொன்னாசனத்தில் அமர்ந்தார். பணியாட்கள் சிறிய பந்தம் ஒன்றை ஏற்றி வைத்துவிட்டு அவருக்கு ஆலவட்டம் வீசினார்கள்.

குலகுரு தனது மொட்டைத் தலையைத் தடவிவிட்டுக் கொண்டு ''மன்னனே கூட நான் இருக்கும் இடம் தேடி வந்து தான் பேசுவான். அவனுக்கு நான் குலகுரு என்பதால் அல்ல. அப்படியொரு வழக்கத்தை உண்டாக்கி என்னை நான் உயர்த்திக் கொண்டிருக்கிறேன். அப்படிப்பட்ட என்னை உன் இருப்பிடத்திற்கு எப்படி அழைக்கலாம்?'' என்று கேட்டார் கூர்மையான குரலில்.

''மன்னிக்க வேண்டும் ஐயா. எங்கள் இருப்பிடம் தெரிந்தால் மன்னன் சிறை செய்துவிடுவான் என்பது இப்போதைய நிலை. இந்த நிலையில் தங்கள் இருப்பிடம் தேடி நான் எப்படி வரமுடியும்?'' என்றான் சீராளன்.

''என்னை உன் இருப்பிடத்திற்கு வரச்சொன்னதற்குத் தண்டனை இரண்டாயிரம் பொற்காசுகள். எண்ணிக் கொடுத்து விடு'' என்று கறாராகப் பேசிய குலகுரு, ''உனது இந்த இழிநிலைக்கு நீதானே காரணம்?'' என்று வினவினார்.

''ஊர்வசி என்னை ஏமாற்றிவிட்டாள்.''

''இல்லை. அவளிடம் நீ ஏமாந்துவிட்டாய். பெண்களை நம்புவதும் மணற்குதிரையை நம்புவதும் ஒன்று என்பது உனக்கே புரியவில்லை என்றால் வேறு யாருக்குப் புரியப் போகிறது? மன்னனின் பணியாள் அவள். பணியாளாக இருந்து கொண்டு மன்னனையே ஏமாற்றத் துணிந்த அவளுக்கு நீ எம்மாத்திரம்? அப்படிப்பட்டவளை நீ எப்படி நம்பினாய்? எங்கே போயிற்று உன் சாமர்த்தியம்?''

''மன்னனுக்கு எதிராக அணிதிரளுவோம் என்றாள். நம்பிவிட்டேன்.''

''பாரத நாட்டில் ஒன்றைச் சொல்வார்கள். இரண்டு பேர் இருந்தார்களாம். ஒருத்தி நான் உமியைக் கொண்டு வருகிறேன். நீ அவலைக் கொண்டு வா, ஊதி ஊதி சாப்பிடலாம் என்றாளாம். உமி கொண்டு வருபவளிடம் ஒன்றுமில்லை. அவல் கொண்டு வருபவளிடம்தான் உணவு இருக்கிறது. இருவரில் யாருக்கு லாபம்? உமியைக் கொண்டு வருபவளுக்கா?''

''இல்லை.''

''அது போலத்தான் ஊர்வசி. அவளிடம் எதுவும் இல்லை. உன்னிடமோ நிறைய செல்வம் இருக்கிறது. அவள் உன்னோடு கூட்டணி வைத்துக் கொண்டால் லாபம் அவளுக்கா? உனக்கா? இதை எப்படி யோசிக்காமல் போனாய்?''

''அவள் என்னைத் திருமணம் செய்து கொள்வதாகச் சொன்னாள்.''

''அதனால் உனக்கென்ன லாபம்? ஏற்கெனவே ஐவரை மணந்து நடு வீதியில் உறவறுத்தவள் ஊர்வசி. தெரியாதா உனக்கு? அப்படிப்பட்டவள் உனக்கு மனைவியாக வருவதில் உனக்கென்ன கௌரவம்?''

''உதயசந்திரனை என் வழிக்கு வரச் செய்ய உதவுவதாக உறுதி சொன்னாள்.''

''உன் வழியா? அது என்ன வழி?''

சொல்லத் தயங்கினான் மந்திரவாதி.

''சொல்ல வேண்டாம். எந்த வழியாக இருந்தால் என்ன? அதற்கு ஊர்வசியை விட்டால் வேறு ஆள் இல்லை என்று நினைத்துக் கொண்டது முட்டாள்தனம். பிரச்சனை எதுவானாலும் என்னிடம் சொல்லி ஆலோசனையைக் கேட்கும் நீ இந்த விஷயத்தில் மட்டும் ஏன் கேட்கவில்லை? இப்போது மட்டும் ஏன் கேட்கிறாய்?''

''நிலைமை மோசமாகிவிட்டது ஐயா. எங்களைக் கொல்வதற்கு மக்களையே ஏவிவிட்டிருக்கிறான் மன்னன். அவர்களும் எங்களைத் தீவிரமாகத் தேடி வருகிறார்கள். ஒரு சிலரைக் கொன்றுமிருக்கிறார்கள். நேற்றைய சம்பவத்திற்குப் பிறகு மக்களுக்கு எங்கள் மீதான துவேஷம் அதிகமாகியிருக்கும். காம்போஜத்தை விட்டு வெளியேற வேண்டிய நிலை வருமோ என்று தோன்றுகிறது.''

''சீராளா! உங்கள் விஷயமாக நான் மன்னனிடம் பேச முடியாது. உங்களுக்குத்தான் அறிவுரை கூற முடியும். உங்களில்

சிலரை மன்னனின் ஆட்களிடம் சிக்க வை. அவர்கள் மூலம் நீங்களெல்லாம் காம்போஜத்தை விட்டு ஓடிவிட்டதாகச் சொல்லச் சொல். அதேசமயம் நீங்கள் எல்லோரும் மந்திரவாதி வேடத்தைக் களைந்துவிட்டு வணிகர்களாக நடமாடுங்கள். உங்கள் செயல்களை வணிகர்களாக இருந்து கொண்டு சாமர்த்தியமாகச் செய்யுங்கள். இந்த நாட்டு மக்களுக்கு வணிகர்கள் ரொம்பவும் பிரியமானவர்கள்.''

''இந்த நகராசூரன் விஷயம் நாம் நினைத்த மாதிரி இல்லை. வேறுவிதமாகப் போய்க் கொண்டிருக்கிறது. மக்களுக்கு அந்த ராட்சஷ விலங்கின் மீதான பயமும் போய்விடும் போலிருக்கிறது.''

சீராளனின் இந்தப் பிரச்சனைக்கும் பரிகாரத்தைச் சொல்லிவிட்டு புறப்பட்டார் குலகுரு.

சிறிது தூரம் வரை நடந்த அவர் தேர் நின்றிருந்த இடத்தை அடைந்ததும் அந்த மூடு தேரில் ஏறி நகரத்தில் இருந்து தனது மாளிகைக்குச் சென்றார்.

சத்தான உணவுகளையும் பழரசங்களையும் உண்டார். கண்களை மூடினார்.

பணியாட்கள் அவரது கைகால்களைப் பிடித்துவிட்டார்கள்.

ஆலவட்டம் வீசினார்கள்.

சில நிமிடங்கள் கழித்து ஆலவட்டம் அகன்றது. பணியாட்களும் அகன்றார்கள்.

எதையுமே நுட்பமாக உணரும் குலகுரு கண்களைத் திறந்தார்.

''நீ தானா? வா'' என்றாள்.

அவரால் அழைக்கப்பட்ட அப்பெண் அவரை அணைத்தாள்.

''நீங்கள் மட்டும் யாரென்று தெரிந்தால் எல்லாமே தலைகீழாகி விடும்'' என்றாள்.

☆☆☆



77

குலகுரு

வாவென்று உள்ளே அழைத்த அந்தப் பெண்ணைப் பார்த்து ''பத்மினி! இதென்ன நீ இத்தனை அலங்காரங்களுடன் வந்திருக்கிறாய் அதுவும் இந்த நேரத்தில்? இதெல்லாம் எனக்குப் பிடிக்காது என்பது உனக்குத் தெரியாதா?'' என்று கேட்டார் குலகுரு,

அவள் தன் காதாபரணங்களைக் கழற்றி எறிந்துவிட்டு ''போதுமா?'' என்று கேட்டாள்.

''கழுத்தில் இருக்கும் ஆபரணங்கள்?''

''கழற்றிவிட்டேன்.''

''தோளிலும் கையிலும் இடையிலும் காலிலும் விரல்களிலும்...''

''எல்லாவற்றையும் எடுத்துவிட்டேன்''

''கூந்தல் அள்ளி முடிக்கப்பட்டு நகைகளால் கட்டுண்டு கிடக்கிறது.''

''நீக்கிவிட்டேன். கூந்தலையும் கலைத்துவிட்டேன் போதுமா?''

''எனக்கு இருட்டு பிடிக்காது.''

''அறை முழுவதும் பந்தங்களை ஏற்றுகிறேன்.''

ஏற்றினாள் அவள்.

அறை பிரகாசப்பட்டுப் போயிற்று.

''எனக்கு எல்லாவற்றையும் பார்க்க வேண்டும். எனக்குத் தெரியாது என்று எதுவும் இருக்கக்கூடாது.''

''அப்படியானால் இப்போது என்னை மறைத்திருப்பது வெறும் ஆடைதான்.''

''நான் எல்லாவற்றையும் பார்க்க வேண்டும் என்று ஏற்கெனவே சொல்லிவிட்டேன்.''

எதைச் செய்ய வேண்டுமோ அதைச் செய்த அவள் ''குருநாதரே! பல மாதங்களாக நானிங்கு வருகிறேன். இரவு

நேரத்தில் தான் வருகிறேன். ஒவ்வொரு முறையும் எல்லாவற்றையும் பார்க்க வேண்டும் என்கிறீர்கள். அறை முழுதும் பந்தங்கள் எரிந்து பிரகாசமாக இருக்கச் செய்கிறீர்கள். என்னை இப்படி எதுவும் இல்லாமல் நிற்கச் சொல்கிறீர்கள். திரும்பச் சொல்கிறீர்கள். அபிநயம் பிடிக்கச் சொல்கிறீர்கள். உட்காரச் சொல்கிறீர்கள். படுக்கச் சொல்கிறீர்கள். உருளச் சொல்கிறீர்கள். ஓடச் சொல்கிறீர்கள். சில நேரங்களில் குனியச் சொல்கிறீர்கள். பார்த்துக் கொண்டே இருக்கிறீர்களே தவிர தொடுவதே இல்லை. இது ஏன்? இதற்கென்ன அர்த்தம்?'' என்று கேட்டாள்.

''உனக்குச் சலித்துவிட்டதா பத்மினி?'' கேட்டார் குலகுரு.

''தொடுவதே இல்லை. சலிப்பு எங்கிருந்து வரும்? அதேசமயம் தொடாமலேயே இருப்பதால் வேறு மாதிரி சலிப்பு வருகிறது.''

''வேறு மாதிரி என்றால்?''

''குருநாதரே! செடிகளில் பூக்கும் மலர்கள் வண்டுகள் வந்து தங்களைத் தீண்ட வேண்டும் என்று எதிர்பார்க்கின்றன. பரந்து கிடக்கும் கடல் நிலங்களில் பாயும் நதிகள் தன்னிடம் வந்து கலக்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறது. அல்லி மொட்டுக்கள் கூட மலர்வதற்காகச் சந்திரனை எதிர்பார்த்து காத்திருக்கின்றன. பெண்களும் அப்படித்தான்.''

''பத்மினி! இதுவரை நான் கணக்கற்ற பெண்களைப் பார்த்திருக்கிறேன்.''

''அது தான் தெரிகிறதே! சிற்பங்களைக் காண்பவர்கள் கூட அவற்றைத் தொட விரும்புவார்கள். தொடவும் செய்வார்கள்.''

''சொல்வதை முதலில் கேள். நான் பார்த்து ரசித்த பெண்கள் பல்லாயிரமானாலும் ஒரு பெண் கூட என்னைத் தொடும்படி கேட்டது இல்லை.''

''அவர்களுக்குப் பொற்காசுகளை அள்ளி வீசுகிறீர்கள். அவர்களுக்கு அதுபோதும். உங்களுக்கு வெறும் காட்சிப் பொருளாக இருந்துவிட்டு பொற்காசுகளை அள்ளுகிறார்கள். அதேசமயம் இதர இடங்களுக்குச் சென்று இதர விஷயங்களில் ஈடுபட்டு அதற்கும் பொற்காசுகளைப் பெறுகிறார்கள். இரட்டை லாபம்.''

''உனக்கும் தானே தருகிறேன்? மற்றவர்களை விட உனக்கு அதிகமாக அல்லவா தருகிறேன்? நீ மட்டும் எதற்காகத் தொட விரும்புகிறாய்?''

''பல்லாயிரம் பேர் தொட விரும்பாத உங்களைத் தொட விரும்புவதற்குக் காரணம் உங்களை யாரும் தொடாததுதான்.''

''பத்மினி! உன்னை இப்போதே தொடுகிறேன். ஆனால் அதோடு உன் உறவு மற்றும் தொடர்பு நின்றுவிட வேண்டும். சம்மதமா?''

''உங்களைத் தொட்டுவிட்டால் அது வரலாறு ஆகிவிடும். அதற்கு பிறகு எனக்கு எதுவும் வேண்டாம்.''

''உன் இஷ்டம்'' என்று கூறி அருகே அழைத்த குலகுரு அவளை முன்புறமும் பின்புறமுமாக அனைத்து அங்கங்களையும் ஊடுருவி பார்த்துவிட்டு கையை வைத்தார். அவர் கையை வைத்த இடம் அவளை கிறுகிறுக்க வைத்தது. ஆரம்பத்திலேயே கையை அங்கே வைப்பதைக் கண்டதும் 'இவர் தெரிந்து தான் அப்படித் தொடுகிறாரா அல்லது ஒன்றும் தெரியாமல் தொடுகிறாரா' என்பது அவளுக்கு விளங்கவில்லை.

ஆனால் அந்தத் தொடுதலுக்குப் பிறகு அவர் செயல்பட்ட விதமானது அவளை அதிர வைத்தது. 'இவர் சொன்னதெல்லாம் பொய். பெண்கள் பலரை இதற்கு முன் பலமுறை தொட்டிருக்க வேண்டும். இல்லையென்றால் இந்தப் பக்குவமும் சீரான இயக்கமும் எப்படி வரும்? இந்திந்த அங்கங்களுக்கு இது இதுதான் சரி என்று விவரமாகத் தெரிந்து கொண்டு செயல்படுபவனைப் போல அல்லவா நடந்து கொள்கிறார்?' என்று தனக்குள் சொல்லிக் கொண்ட பத்மினி 'எது எப்படி ஆனாலும் கிடைத்த சந்தர்ப்பத்தை விட்டுவிடக் கூடாது' என்று முடிவு கட்டியவளாய் தனது தேகத்தில் இருந்த அங்கங்களை யெல்லாம் மலர்களாக்கி நன்றாக மலரச் செய்தாள். மலர முடியாத மொட்டுக்களை கெட்டிப்படுத்தினாள். அவனது பிடிகளுக்கு ஏற்ப நெளிந்தாள் இழைந்தாள். சில சமயங்களில் அவரது வேகம் குறைவாக இருந்ததால் அந்த வேகத்தை தன்னிடம் பிரவகிக்கச் செய்து அவரைத் திணறடித்தாள். ஆற்றில் குளித்துப் பழகியவரைக் கடலுக்குக் கொண்டு வந்த மாதிரி அவரையும் காம மகா சமுத்திரத்திற்குக் கொண்டு வந்த பத்மினி அவரை அக்கடலில் ஆழத்திற்கு அமுக்கிச் சென்று பல அதிசயங்களை உணர வைத்தாள். அவருக்கோ பிரமிப்பாக இருந்தது. இதில் இவ்வளவு இருக்கிறதா என்று அதிசயித்தார். பெண்களைப் பொறுத்தவரை பார்ப்பதும் ரசிப்பதும் முட்டாள்தனமானது என்பதையும் பார்த்ததையும் ரசித்ததையும் அனுபவிப்பதுதான் புத்திசாலித்தனமானது என்பதையும் உணர்ந்து கொண்ட அவர்

இத்தனை நாட்களாக இதை உணராமல் காலத்தைக் கடத்திவிட்டோமே என்று நொந்து கொண்டார். காலம் கடந்து உணர்ந்தாலும் ஒரு கட்டத்திலாவது உணர்ந்து விட்டோமே என்பதைப் புரிந்து கொண்ட குலகுரு கொஞ்சத்தில் அவளை விட்டுவிட விரும்பவில்லை. அவளிடம் இன்னும் என்ன என்ன கிடைக்கும் என்று எதிர்பார்த்தவராய் அவளோடு இழைந்தார். அவரது மனப்போக்கு பத்மினிக்கும் புரிந்தது. இப்போதாவது இந்த மனிதருக்குப் புரிந்ததே என்று திருப்தியடைந்த அவள் அவரைத் திருப்தியடையும் விதத்தில் தனது காமரசங்களையெல்லாம் தடையின்றிக் காட்டி அவரைப் பாகாக உருக்கினாள். அவர் சத்துள்ள உணவுகளை சாப்பிட்டிருந்ததால் காமத்தில் தளர்வடையாமல் இருந்தார். அவளோ அவரை அசைத்துவிட்ட மகிழ்ச்சியில் சோர்வின்றி ஒத்துழைத்தாள். நேரம் போனதே தெரியாமல் குலகுரு சோரம் போய்க் கொண்டிருந்தார். பத்மினியோ பரவசத்தில் தன்னை இழந்து கொண்டிருந்தாள்.

விடிவதற்கு அரை நாழிகைக்கு முன்பு தங்களது காமக் கடையை மூடிய அவர்கள் சிறிது நேரம் வரை ஆயாசத்துடன் படுத்துக் கிடந்தார்கள். தங்களது கோலத்தையும் ஆயாசத்தையும் பார்த்துக் கொண்டு கள்ளச் சிரிப்பு சிரித்துக் கொண்டார்கள்.

''என்ன, இதோடு என் தொடர்பு முடிந்துவிட்டதா?'' என்று கேட்டாள் பத்மினி.

அவர் மஞ்சத்திலேயே உருண்டு அவளைக் கட்டிப்பிடித்துக் கொண்டு ''தொடர்பாவது! முடிவதாவது! இதற்கு முடிவே இல்லை. நீ தினமும் வா பத்மினி. உன்னை என்னால் விட முடியாது. நீ இல்லாமல் என்னால் உயிர் வாழ முடியாது. எனக்கு வேறு யாரும் வேண்டியதில்லை. நீ மட்டும் போதும். நீ வெளியே போக வேண்டியதில்லை. இங்கேயே தங்கிவிடு.'' என்றார்.

''நீங்கள் குலகுரு. துறவி என்றே எல்லோரும் எண்ணுகிறார்கள். இங்கே நானெப்படி இருக்க முடியும்?'' என்று கேட்டாள் அவள்.

''நீ எங்கே இருக்கிறாய் சொல். நான் அங்கேயே வருகிறேன்.''

''இது அதைவிட மோசம்'' என்று சொன்ன பத்மினி ''எதற்கு வேஷமெல்லாம்? நீங்கள் யார் என்பது எனக்குத் தெரியும்? அது எல்லோருக்கும் தெரிந்தால் நிலைமை தலைகீழாகிவிடும்'' என்றாள்.

அதைக் கேட்டுப் பதட்டப்பட்ட அவர், ''என்ன சொல்கிறாய்?'' என்று கேட்டார்.

அவள் அவர் பிடியிலிருந்து விடுபட்டு ஆடைகளை அணிந்தாள். ஆபரணங்களை அணிந்தாள். ''நான் வருகிறேன்'' என்று சொல்லிவிட்டு கிளம்பினாள்.

குலகுரு அவசரம் அவசரமாகத் தன் காவியுடையைச் சுற்றிக் கொண்டு வெளியே வந்து பணியாட்களை அழைத்து ஏதோ உத்தரவிட்டார். அவர்கள் பத்மினியைத் தேடிச் சென்றார்கள்.

இரண்டு நாட்கள் கழித்து மன்னனை தன்னை வந்து சந்திக்கும்படி பணியாட்களை அனுப்பினார் குலகுரு.

அவன் மூன்றாவது நாளன்று அவரைப் போய்ச் சந்தித்தான்.

அவரோ அடுத்த நாள் வரும்படி பணியாட்கள் மூலம் தெரிவித்தார்.

அவன் அதற்கடுத்த நாள் அவரது இருப்பிடத்திற்கு வந்தான்.

''பலி நிகழ்ச்சிக்குப் பிறகு நீ ரொம்பவும் மாறிவிட்டாய் சூர்யவர்மா'' என்றார் குலகுரு.

''எப்படிச் சொல்கிறீர்கள்?''

''நான் அழைத்தால் உடனே வருபவன் நீ. இப்போது உன்னிஷ்டப்படி வருகிறாய். என்னைச் சந்திப்பதில் அலட்சியம் காட்டுகிறாய்.''

''அப்படியெல்லாம் இல்லை குருநாதரே. வேலைகள் அதிகமாகிவிட்டன.''

''என்ன வேலைகள் அவை?''

''நிர்வாக வேலைகள்தான்.''

''சூர்யவர்மா! இத்தனை காலமாக இல்லாத வேலைகள் இப்போது திடீரென வந்தது எப்படி? அதைப் பற்றி கேட்க எனக்கு உரிமையில்லை. அதை விடு. நான் இங்கே உன்னை அழைத்தது எதற்காக தெரியுமா?''

''சொல்லுங்கள் குருநாதரே.''

''குலகுரு என்ற பதவியிலிருந்து நான் விலக முடிவு செய்துவிட்டேன்.''

''எதற்காக?''

''உனக்குப் புதியகுரு கிடைத்துவிட்டதால்.''

''எனக்கு நீங்கள் மட்டும் தான் குரு. வேறு யாருமில்லை.''

''அதாவது உனக்கு நான் குரு. ஆனால் நீ ஆலோசனைகளை மட்டும் வேறொருவரிடம் கேட்பாய். அப்படித்தானே?''

''நீங்கள் சொல்வது எனக்கு விளங்கவில்லை குருநாதரே''

''சூர்யவர்மா! இப்போது நீ நடிக்கவும் கற்றுக் கொண்டாய். நகராசூரன் விஷயமாக நீ ஆலோசிக்க வேண்டியது என்னிடமும் சீராளனிடமும். நீயோ நேற்றைக்கு வந்த வேற்று நாட்டு வாலிபனிடம் ஆலோசனை கேட்கிறாய். உண்டா? இல்லையா?''

''நகராசூரன் பிரச்சனையை தீர்த்து வைப்பதாக அரங்கத்தில் அவர் சொல்லவில்லையா? அதைப் பற்றி அவரிடம் பேசினேன்.''

''அவன் எப்போது அவர் ஆனான்?''

''குருநாதரே! நான் மதித்துப் போற்றும் பல்லவ நாட்டு மாமன்னர் ராஜசிம்மரின் உபதலைவர்தான் உதயசந்திரன். அவரை மரியாதையோடு அழைப்பது என் கடமையாகிறது.''

''அதைப் பற்றிய கவலை எனக்கு அனாவசியம். சூர்யவர்மா! உனக்கு உதயசந்திரன் ஆலோசனை கூறியிருக்கலாம். ஆனால் அது விஷயமாக என்னிடமும் சீராளனிடமும் ஏன் தெரிவிக்கவில்லை? தெரிவிக்கவும் இல்லை. ஆலோசிக்கவும் இல்லை. நடைமுறைபடுத்தி விட்டாய். அதன் பலன்? மக்கள் விபரீதத்தை உணராமல் விளையாட்டுத்தனமாக இருக்கிறார்கள்.''

''விபரீதம் என்று எதைச் சொல்கிறீர்கள்?''

''ராட்சஷ விலங்கைப் பற்றித்தான். அது இந்த நாட்டில் வசிப்பது நமக்கு நல்லதல்ல. அது அழிக்கப்பட வேண்டிய அபாயம். நீயோ உதயசந்திரனின் பேச்சைக் கேட்டுக் கொண்டு அதனோடு விளையாட முற்படுகிறீர்கள். இது விபரீதமானது. மன்னா! உன்னை எச்சரிக்கிறேன். அந்த விலங்கு குரூரமானது. அதற்கு இடம் கொடுக்க ஆரம்பித்தால் அது வினையாகத்தான் முடியும்.''

''நான் அப்படி நினைக்கவில்லை குருநாதரே. உபதலைவர் தெரிவித்த விவரங்கள் மிகச் சரியானவை. அவரது உபாயங்களும் பயனுள்ளவையாக இருக்கின்றன. அதனால்தான் இந்த முறை உயிர்ச் சேதம் எதுவும் நடக்கவில்லை.''

''இல்லை. இது தற்செயலாக நடந்த ஒன்று. எப்போதும் தொடராது.''

''தொடரும் என்று நான் நம்புகிறேன்.''

''அதனால்தான் என்னையும் சீராளனையும் புறக்கணித்தாயோ?''

''உங்களைப் புறக்கணிக்கவில்லை. என் செயலை அங்கீகரிப்பீர்கள் என்று நினைத்தேன். ஆனால் மந்திரவாதிகளின் விஷயம் வேறு.''

''என்ன ஆயிற்று அவர்களுக்கு?''

''என்னையும் மக்களையும் ஏமாற்றிவிட்டார்கள்.''

''காலங்காலமாய் நமது நாட்டிலிருந்த மந்திரவாதிகள் ஏமாற்றுவாதிகள் ஆகிவிட்டார்கள். கடலலைகள் தூக்கியெறிந்த கசடன் உனக்கு வாழ்வளித்துவிட்டானா? என்ன சொல்கிறாய் மன்னா?''

''எல்லாவற்றையும் சீர்தூக்கிப் பார்த்துவிட்டுத்தான் பேசுகிறேன் குருநாதரே. மக்களை அச்சத்திலேயே வைத்திருப்பது அறியாமை. அது தான் நேற்று வரை நடந்து கொண்டிருந்தது. அந்த அறியாமையை போக்க வழி சொன்னவர் உபதலைவர். அவர் வழி நேர் வழி. சீரிய வழி. ஆகவே மந்திரவாதிகள் பக்கம் தாங்களும் சேர வேண்டாம். ஒதுங்கியிருங்கள். மற்றபடி நீங்கள் தான் என் குலகுரு. அந்தப் பதவியிலிருந்து நீங்குவதை நான் விரும்பவில்லை.''

ஏதோ தூண்டில் போடுவது போல் பேசிப் பார்க்கலாம் என்று தான் அவர் முயன்றார். ஆனால் சூர்யவர்மனோ தெளிவாக இருந்தான். தன் தலையாவது தப்பியதே என்ற எண்ணத்திற்கு வந்த அவர் மேற்கொண்டு பேச விரும்பாமல் ''நல்லது மன்னா! நீ நீடூழி வாழ்வாயாக'' என்று சொல்லிவிட்டு அவனை அனுப்பி வைத்தார்.

அதற்கு அடுத்த நாள் இந்திரபுரத்தில் மீண்டும் பிரவேசித்தது நகராசூரன் என்ற ராட்சஷ விலங்கு.

மக்கள் அதைப் பார்த்து கைகளை ஆட்டினார்கள். அது முன்பு போலவே அரங்கத்தில் வந்து படுத்தது. பிறகு கடற்கரைக்குச் சென்று துள்ளி ஆடியது. பயங்கரமாகக் கத்தி விட்டு சென்றது.

மன்னனும் மக்களும் சந்தோஷப்பட்டார்கள்.

இதேசமயம் தனது மாளிகையில் இருந்த பாதாள அறைக்குச் சென்றார் குலகுரு.

அங்கே பட்டு மஞ்சத்தில் படுத்த நிலையில் இருந்தாள் பத்மினி.

அவளது கைகள் மேற்புறத்தில் கட்டப்பட்டிருந்தன.

கால்கள் விரிக்கப்பட்டு இரு தூண்களில் கயிற்றால் கட்டப்பட்டிருந்தன.

அறை முழுவதும் பந்தங்களால் பிரகாசமாக இருந்தது.

பத்மினி அரை மயக்கத்தில் இருந்தாள்.

அவளை நெருங்கிய குலகுரு அவள் மீதிருந்த துணியை அகற்றினார்.

பத்மினி லேசாகக் கண்ணைத் திறந்தாள்.

''பத்மினி! இப்போதாவது சொல். நான் யார்? நான் யார்?'' என்று கேட்டார் குலகுரு.

''எனக்குத் தெரியாது.''

''இதோ பார் பத்மினி. நான் அரக்கனை விட மோசமானவன். இரக்கம் என்பது என் அகராதியிலேயே கிடையாது. அதை எதிர்பார்த்து காலம் கடத்தாதே. என்னைப் பற்றி உனக்கென்ன தெரியும்?''

''எதுவும் தெரியாது.''

''இதோ பார் பெண்ணே. உன்னைத் தொட மாட்டேன் என்று சொன்ன நான் நூறு முறைக்கு மேல் தொட்டுவிட்டேன். புரிகிறதா உனக்கு? நீ பாதியாகச் சேதப்பட்டுவிட்டாய். பிடிவாதம் பிடிக்காமல் உண்மையைச் சொல்லிவிடு. இல்லையென்றால் உன்னை இங்கே இருக்கும் பணியாளர்கள் சேதப்படுத்துவார்கள். பிறகு அவர்களுக்குப் பதிலாக மிருகங்களை அனுப்புவேன். நீ கண்டிராத நரகத்தைக் காண்பாய்.''

பத்மினியின் முகத்தில் கிலி படர்ந்தது.

''ஐயா, நான் என்ன குற்றம் செய்தேன் என்று இப்படி தண்டிக்கிறீர்கள்?'' என்று மெல்ல கேட்டாள் அவள்.

''என்னைப் பற்றிய உண்மை ஈ எறும்புக்குக்கூடத் தெரியாது. உனக்கு மட்டும் எப்படித் தெரிந்தது? யார் சொன்னார்கள்?'' என்று மிரட்டினாள் அவள்.

''யாரும் சொல்லவில்லை. எனக்கே தெரியும்.''

''அப்படியானால் சொல்.''

சொன்னாள் அவள்.

''இது வேறு யார் யாருக்கெல்லாம் தெரியும்?''

''நான் யாருக்கும் சொல்லவில்லை.''

''ஏன் சொல்லவில்லை?''

''அவசியமில்லை. சொல்லவில்லை.''

''இது உண்மைதானா?''

''சத்தியம். சத்தியம்.''

அறையை விட்டு வெளியேறிய குலகுரு பணியாளர்களிடம் ஏதோ கூறிவிட்டு மீண்டும் வந்தார்.

பத்மினியைக் கட்டியிருந்த கட்டுக்களை அவிழ்த்தார்.

கைவிரல்களால் ஏதேதோ செய்தார்.

''இப்போது வேண்டாம் ஐயா. என்னால் முடியவில்லை'' என்று கெஞ்சினாள் அவள்.

''முரண்டு பிடித்தால் முரட்டுக் குரங்கை அனுப்புவேன்'' என்றார் குலகுரு.

'நீ மட்டும் என்ன?' என்று தனக்குள் சொல்லிக் கொண்ட பத்மினி மௌனமானாள். குலகுரு முரட்டுக் குரங்கானார்.

குலகுரு சொல்லியபடி தலைமை மந்திரவாதி சீராளனும் மற்ற மந்திரவாதிகளும் வணிகர்களாக மாறி மக்களோடு கலந்தார்கள்.

உதயசந்திரன் கூறியபடி இந்திரபுரத்தில் நகராசூரனைப் போன்ற உருவ பொம்மைகள் பல இடங்களில் வைக்கப்பட்டன.

எப்போதாவது வரும் நகராசூரன் அடிக்கடி இந்திரபுரத்திற்கு வரத் தொடங்கியது. தன்னைப் போன்ற சிலைகள் தத்ரூபமாக பல இடங்களில் இருந்ததைக் கண்டு வியந்த அந்த விலங்கு ஆசையோடு அவற்றைத் தடவிப் பார்த்தது. சில சிலைகளை நக்கிக் கொடுத்தது. மக்கள் தன் மீது தாக்குதல் காட்டாமல் அன்பு காட்டுகிறார்கள் என்பதை உணர்ந்த விலங்கு தயக்கத்தையும் அச்சத்தையும் விட்டு சகஜமாக உலவத் தொடங்கியது. அரங்கத்தில் பிரவேசித்து ஆசுவாசமாகப் படுக்கும் நேரம் அதிகமாயிற்று. மக்களில் பலர் நெருங்கவும் முற்பட்டார்கள். சிலர் வாலைத் தொட்டார்கள். சிலர் காலைத் தொட்டார்கள். அவர்களையெல்லாம் தனது நீண்ட கழுத்தை வளைத்து அது ஆர்வத்துடன் பார்த்ததே தவிர எதிர்ப்பு காட்டவில்லை. இது நாளுக்கு நாள் வளர்ந்தது. பலி கொடுக்கும் அரங்கம் பாச அரங்கமாயிற்று. நகராசூரனுடன் மிக நெருக்கமாக மக்கள் பழக முற்பட்டதால் அந்த மிருகமும் ஆவலோடு பழகியது. அது படுத்திருந்தபோது அதன் உடல் பகுதியில் மக்கள் ஏறி அமர்வது வாடிக்கையாகியது. நகராசூரனின் இருப்பு மலை பக்கத்தை விட இந்திரபுரத்தில் அதிகரித்தது.

''இப்போது நிம்மதியாக இருக்கிறதா மன்னவா?'' என்று கேட்டான் உதயசந்திரன்.

ஆம் என்று சொல்ல நினைத்தான் மன்னன்.

இல்லை என்பதுபோல் தூரத்திலிருந்து கொம்பொலிகள் கேட்கலாயின.

''என்ன ஒலி இது?'' என்று கேட்டான் உதயசந்திரன்.

''இது சுளுக்களின் வரவை தெரிவிக்கிறது'' என்று பதட்டத்துடன் சொன்னான் மன்னன்.

★★★



78

காம்போஜமும் சுளுக்களும்

மன்னனின் பதட்டத்தைக் கண்ட உதயசந்திரன் ''மன்னவா! யார் அந்த சுளுக்கள்?'' என்று கேட்டான்.

''உபதலைவரே! அவர்கள் கொள்ளைக்காரர்கள். சுளு என்னும் இனத்தைச் சேர்ந்தவர்கள். தென் சீனக் கடற்பகுதியானது கடல் கொள்ளைக்காரர்களின் சொர்க்கம். இங்கே மற்ற இனத்தவரை விட சுளு இனத்தவரின் நடமாட்டமே அதிகம். பற்பல குழுக்களாகப் பிரிந்து இக்கடற்பகுதியில் பல்வேறு நாடுகளில் புகுந்துச் சூறையாடுகிறார்கள். அவர்களை அடக்கவும் வெற்றி கொள்ளவும் யாராலும் முடியவில்லை'' என்றான் மன்னன்.

''ஏன் வெற்றி கொள்ள முடியவில்லை?'' என்று கேட்டான் உதயசந்திரன்.

''சுளுக்களின் நடைமுறை வினோதமானது. அவர்கள் பிரவேசிக்கும் இடங்களில் உடனடியாகத் தாக்குதலில் ஈடுபடுவதில்லை. ஊர் மக்களிடம் தங்கள் செல்வங்களை யெல்லாம் கொண்டு வந்து ஒப்படைக்கும்படி அறிவிக்கிறார்கள். மக்கள் ஒப்படைத்துவிட்டால் செல்வங்களை எடுத்துக் கொண்டு போய் விடுவார்கள். இல்லையென்றால் ஊரைக் கொளுத்தி நாசப்படுத்தி மக்களைக் கொல்வார்கள். பருவ மங்கையர்களையும் வாலிபர்களையும் கவர்ந்து சென்றுவிடுவார்கள். எனவே மக்கள் அவர்களது வழிமுறையை ஏற்று சேதாரங்களைத் தவிர்ப்பதற்காக அவர்கள் அறிவிப்பு வந்தவுடன் செல்வங்களை ஒப்படைத்துவிடுவார்கள். மக்களே இப்படி முன்வருவதால் எங்களால் கொள்ளையர்களை எதுவும் செய்ய முடிவதில்லை. எங்கள் குறுக்கீட்டை மக்கள் விரும்புவதில்லை'' என்றான் மன்னன்.

''வினோதமாக இருக்கிறது மன்னவா. மக்கள் கொள்ளையர்களை ஏற்பதும் உங்களை நிராகரிப்பதும் விந்தையாக

இருக்கிறது. இது தங்களுக்கு கௌரவத்தை தரக்கூடியதா?'' என்று கேட்டான் உதயசந்திரன்.

''ஓரிரு முறை கொள்ளையர்களைத் தாக்கினோம். அது விபரீதமாக முடிந்துவிட்டது. கொள்ளையர்கள் ஒருபுறமும் மக்கள் மறுபுறமுமாக எங்களை எதிர்க்கலானார்கள். அத்துடன் இந்த முயற்சி கைவிடப்பட்டது.''

''மந்திரவாதிகளைப் பிடிப்பதற்கு படைகளை அனுப்ப முயற்சித்த தாங்கள் கொள்ளையர்களைப் பிடிக்க படைகளை அனுப்பவில்லையா?''

''மக்களின் எதிர்ப்பை மீறி என்னால் சில விஷயங்களைச் செய்ய முடியாது உபதலைவரே'' என்று சொன்ன மன்னன் ''இந்த நாட்டு மக்கள் மூடநம்பிக்கைகளை முழுதும் கடைப்பிடித்து வாழ்வதாக நீங்கள் கருதினீர்கள். காம்போஜத்தில் மட்டுமல்ல. சாவகத்திலும் மக்கள் அப்படித்தான் இருக்கிறார்கள். மலைய நாடு, சியாம், புஷ்பகத் தீவு, பொற்கிரீசே எனப்படும் ஸ்ரீ விஜயம் ஆகிய எல்லா நாடுகளிலும் இதே கதைதான். மூடநம்பிக்கைகள் வேரூன்றி இருக்கும் இடங்களில் மக்களை எளிதில் மாற்றிவிட முடியாது. இந்த நிலைமைக்குக் காரணம் யார் தெரியுமா? உங்கள் நாடுதான்.''

''எங்கள் நாடா?''

''பாரத நாடு தான். ஐந்நூறு அறுநூறு வருடங்களுக்கு முன்னால் காம்போஜமும் சரி இதைச் சுற்றியுள்ள நாடுகளும் சரி வெறும் தீவுகளாகத்தான் இருந்தன. இவற்றுக்குப் பெயர்கள் இல்லை. ஆள்வதற்கு மன்னனோ நிர்வகிப்பதற்கு அரசாங்கமோ படைகளோ கிடையாது. நாதியற்றுக் கிடந்தன. அப்போது இந்தத் தீவிற்கு கௌண்டியா என்ற அந்தணர் வந்தார். அவர் தான் இந்த நாட்டை உருவாக்கினார். அதேபோல் சாவகத்திற்கு அங்கேயிருந்து ஓர் அரசகுமாரர் வந்து அங்கே அரசாங்கம் ஒன்றை உருவாக்கினார். அங்கேயிருந்து வந்த வணிகர்கள் பற்பல குடியிருப்புகளை அமைத்துக் கொண்டு தங்களில் சிலரை மன்னர்களாக உயர்த்திக் கொண்டு இந்தத் தீவுகளை எல்லாம் ஆளத்துவங்கினார்கள்.* அப்படி பாரத நாட்டிலிருந்து வந்த பிராமணர்கள் இங்கெல்லாம் யாகங்களைச் செய்து மக்களை ஈர்த்தார்கள். கோயில்களைக் கட்டியும் மக்களை ஈர்த்தார்கள். நாட்டின் சுபிட்சத்திற்கும் உயர்வுக்கும் அரசாங்க நிர்வாகங்களை விடவும் படைபலத்தை விடவும் யாகங்களும் ஆலய வழிபாடுகளும் சிறந்தவை என்ற

* page 185-186 'The Oxford History of India' by, Vincent Smith.

கருத்தை அவர்கள் விதையாக விதைத்தார்கள். மக்களும் அதையே அதிக அளவில் நம்பினார்கள். அவர்கள் சொன்னதை ஏற்று செயல்பட முனைந்தார்கள். அவர்கள் விதைத்த வித்து தான் இன்று விருட்சமாக வளர்ந்திருக்கிறது. மூடநம்பிக்கை விருட்சங்கள் நாடு முழுதும் காடாக வளர்ந்திருக்கின்றன.''

''இல்லை மன்னவா. அவர்களது எண்ணமும் செயல்பாடும் சரியானவைதான். அவர்கள் விதைத்த வித்து உண்மையாகவே நாட்டின் சுபிட்சத்திற்காகத்தானே தவிர சுயநலத்திற்காக அல்ல. அவர்கள் ஊன்றியது நம்பிக்கைகள். இங்குள்ள சுயநலவாதிகள் அவற்றை மூடநம்பிக்கைகளாக்கி மக்களைச் சிந்திக்க விடாமல் செய்துவிட்டார்கள். நகராசூரன் விஷயத்தில் அவர்களது மூடநம்பிக்கைகள் மறைந்தன அல்லவா? மக்கள் மாற்றி யோசிக்க ஆரம்பித்துவிட்டார்கள் அல்லவா?''

''உண்மைதான் உபதலைவரே. உங்கள் வரவின் பலன் அதுதான். இந்த காம்போஜம் மட்டுமின்றி சுற்று வட்டார நாடுகளில் இருக்கும் அரசாங்கங்கள் எல்லாம் பாரத நாட்டு அரசுகளைப் போன்றே இருக்கும். மன்னர்களின் பெயரும் அப்படியே. மக்களின் வாழ்க்கையும் கலாச்சாரமும் பாரத நாட்டு வாழ்வியலின் சாயலோடுதான் இருக்கும். சீனப் பேரரசர் பாநூன் தனது கப்பல் படையில் இருந்த ஒரு மரக்கலத்திற்கு காம்போஜம் என்று பெயர் சூட்டியிருந்தார். இந்நாட்டில் கட்டப்பட்ட கப்பல் அது. அக்கப்பல் போரில் பெரும் வெற்றியைப் பெற்றதால் அக்கப்பலின் பெயரையே இந்த நாட்டிற்கும் சூட்டினார். அது முதற்கொண்டு இத்தீவுக்குக் காம்போஜம் என்ற பெயர் வழங்கலாயிற்று.''*

சூர்யவர்மன் தனது நாட்டைப் பற்றிக் கூறியதைப் பொறுமையாக கேட்டுக் கொண்ட உதயசந்திரன் ''நீங்கள் கூறிய கொள்ளைக்காரர்கள் தங்கள் வரவை அறிவித்திருப்பதாகச் சொன்னீர்களே அப்படியானால் அவர்கள் எப்போது ஊருக்குள் வருவார்கள்?'' என்று கேட்டான்.

''அறிவிப்பு வந்ததும் இரண்டு மூன்று நாட்களில் வந்துவிடுவார்கள். கரையை நெருங்கியதும் பறையைக் கொட்டுவார்கள்.

மக்கள் அதை உணர்ந்து கொண்டு அரை நாளைக்குள் தங்கள் செல்வங்களைக் கொண்டு வந்து ஊர் எல்லைக்குள் வைத்து விட்டு

* page 187 'The Oxford History of Inida' by, Vincent Smith.

சங்கை முழங்குவார்கள். கொள்ளையர்கள் வந்து அதைத் தூக்கிச் சென்றுவிடுவார்கள்.''

''கொள்ளையர்கள் எத்தனை பேர் வருவார்கள்?''

''ஆயிரத்திற்குக் குறைவில்லாமல் இருக்கும்.''

''அப்படியென்றால் அவர்கள் வரும் மரக்கலங்களின் எண்ணிக்கையும் அதிகமாக இருக்குமே?''

''ஐம்பது கப்பல்கள் இருக்கும்.''

''மன்னவா! நான் ஒரு யோசனையைச் சொல்லலாமா?''

''சொல்லுங்கள்.''

''சொன்னால் நிறைவேற்றுவீர்களா?''

''நிச்சயமாக.''

''அதற்கு தடை வருமா?''

''தடையா? தன்னை ஏன் ஆலோசிக்கவில்லை என்று குலகுரு கோபித்துக் கொள்வார்.''

''நான் யோசனை சொன்னால் குலகுருவிடம் ஆலோசனை கேட்பீர்களா?''

''வேண்டாம் என்றால் விட்டுவிடுகிறேன்.''

''மன்னவா! ஆலோசனைக்கு அளவு இருக்க வேண்டும். நிறைய பேர்களிடம் ஆலோசித்துக் கொண்டிருந்தால் முடிவுக்கு வரமுடியாது. ஆகவே என் யோசனையை உடனடியாக மக்களுக்குத் தெரிவித்தால் போதும்.''

''சரி.''

''இந்திரபுரத்திற்கு கொள்ளையர்கள் இதற்கு முன்பு வந்திருக்கிறார்களா?''

''இரண்டு ஆண்டுகளுக்கு முன் வந்திருக்கிறார்கள்.''

''இப்போது இந்திரபுரத்தின் செல்வச் செழிப்பு அதிகரித்துள்ளது அல்லவா?''

''ஆமாம்.''

''நல்லது மன்னவா. கொள்ளையர்கள் கரையை நெருங்கி பறையை முழக்கட்டும். மக்கள் யாரும் செல்வத்தை சேகரிக்க வேண்டாம். ஊர் எல்லையில் வைத்துவிட்டு சங்கையும் முழங்க வேண்டாம்.''

''உபதலைவரே! இது மிகவும் ஆபத்து.''

''கவலைப்படாதீர்கள் மன்னவா. நானிருக்கிறேன்.''

மன்னன் அதிருப்தியுடன் திரும்பினான்.

உதயசந்திரன் வீணாகக் கவலைப்படாமல் வைத்தியரிடம் சென்றான்.

அங்கே அவர் யாருடனோ கடுமையாக பேசிக் கொண்டிருப் பதைக் கேட்டதும் சற்று ஒதுங்கியிருந்து பேச்சைக் கேட்கலானான்.

வைத்தியர் பேசிய பேச்சைக் கேட்டதும் ''வைத்தியரே, இப்போது நீங்கள் செய்யும் சிகிச்சை என் நிபந்தனைக்கு உட்பட்டது. உங்களை மந்திரவாதியிடமிருந்து காப்பாற்றியதே நான்தான். மறந்து விட்டீர்களா?'' என்று கேட்டாள் ஊர்வசி.

''உதயசந்திரன் உன் உடமையல்ல. இந்நாட்டிற்குச் சொந்தம். அதை நீ மறந்துவிடாதே'' என்றார் வைத்தியர்.

''அவரெப்படி இந்நாட்டிற்குச் சொந்தமாக முடியும்? ஏதோ மன்னருக்கு ஓரிரு யோசனைகளைச் சொல்லிவிட்டதால் அவர் இந்த நாட்டிற்குச் சொந்தமாகிவிட முடியுமா? வைத்தியரே! அவர் யாருக்குச் சொந்தம் என்ற பேச்சு இங்கே வேண்டாம். என் நிபந்தனையைப் பற்றி மட்டும் பேசுங்கள். அவரது முகம் பழைய நிலையை அடைந்ததும் என்னிடம் ஒப்படைக்க முடியுமா முடியாதா?''

''மன்னரைத் தவிர வேறு யாரிடம் ஒப்படைக்கவும் அதிகாரம் இல்லை எனக்கு.''

''நீங்கள் உயிரோடு இருப்பதால் தானே அதிகாரத்தைப் பற்றியெல்லாம் பேசுகிறீர்கள்? உயிரைப் போக்கிவிட்டால் பேசமாட்டீர்கள் அல்லவா?''

''என்னைக் கொன்றுவிட்டால் சிகிச்சை நின்றுவிடும்.''

''அதைப்பற்றி எனக்குக் கவலையில்லை. எனக்குக் கிடைக் காத உதயசந்திரனின் முகம் எப்படிப் போனால் எனக்கென்ன?''

இதற்குமேல் மறைந்திருக்கக் கூடாது என்று கருதிய உதயசந்திரன் ஏதும் அறியாததுபோல் அங்கு சென்றான். ''ஊர்வசி! நீயா? என்ன விஷயம்?'' என்று கேட்டுவிட்டு ''என் உயிரைக் காத்த வள் நீ. உனக்கு எப்படி நன்றி சொல்லப் போகிறேனோ - தெரிய வில்லை. உனக்கென்ன வேண்டும் ஊர்வசி?'' என்று கேட்டான்.

''உங்களுக்கிருக்கும் நன்றி உணர்ச்சி வைத்தியருக்கில்லை வாலிபரே. இவரது உயிரையும் நான்தான் காப்பாற்றினேன். இவர்

என்னடா வென்றால் உங்களை இந்த நாட்டிற்குச் சொந்தமானவர் என்கிறார்'' என்றாள் ஊர்வசி.

''அதெப்படி இந்த நாட்டிற்குச் சொந்தமாக முடியும்? எனக்கு என் நாடில்லையா? அதோடு நான் யாருக்குச் சொந்தம் என்பதை நான் தான் தீர்மானிக்க முடியும்? இவர் யார் அதைத் தீர்மானிக்க? இவருக்குச் சமீப காலமாக மூளை மழுங்கி வருகிறது. ஏதேதோ உளறுகிறார். அதைப் பற்றி நீ கவலைப்படாதே. இது விஷயமாக நாம் இருவரும் பேசுவோம். இவர் எதற்கு?''

''நன்றாக அதுவும் வைத்தியருக்கு உறைக்கிற மாதிரிச் சொன்னீர்கள். நான் வருகிறேன்'' என்று கூறிவிட்டுச் சென்றாள் ஊர்வசி.

அவள் போனதும் ''உதயசந்திரா, என் மூளை மழுங்கி விட்டதா? நான் உளறுகிறேனா?'' என்று சீறினார்.

''நீங்கள் பேசியதையெல்லாம் கேட்டேன் வைத்தியரே. மேலும் மறைவிலேயே இருந்திருந்தால் ஊர்வசி உங்கள் உயிரை வாங்கியிருப்பாள். ஆகவே தான் வந்தேன்.''

''அது சரி. அதற்காக என் மூளை முழுங்கிவிட்டதாக ஏன் சொல்ல வேண்டும்?''

''உங்கள் மூளை மட்டும் சரியாக இருந்திருந்தால் அவளிடம் சண்டை போடுவீர்களா? சரி என்று சொல்லிவிட்டுப் போவது தானே?''

''அப்படிச் சொல்ல எப்படி முடியும்? நான் மன்னருக்கு கட்டுப்பட்டவன்.''

''வைத்தியரே! நீங்கள் எதற்காகவும் கவலைப்பட வேண்டியதில்லை. என் முகம் சரியானால் தானே ஊர்வசியிடம் ஒப்படைப்பது பற்றி யோசிக்க வேண்டும்? அதுதான் நடக்கப் போவதில்லையே!''

''எது நடக்கப் போவதில்லை?''

''வைத்தியரே, நான் அரண்மனை வைத்தியர்கள் பலரிடம் பேசிப் பார்த்துவிட்டேன். என் முகத்தை எதுவும் செய்ய முடியாதாம். நீங்கள் வீம்புக்காக ஏதோ சிகிச்சை என்ற பெயரில் வீண் வேலையைச் செய்து கொண்டிருக்கிறீர்களாம்.''

''என்னையா அப்படிச் சொல்கிறார்கள். நான் யார் என்பதை அவர்களுக்குக் காட்டுகிறேன். முகத்தில் கரியைப் பூசுகிறேன்.''

''அவர்களது முகத்தையும் கெடுக்கப் போகிறீர்களா?''

''முதலில் இந்த மரப்பலகையில் படு. முகத்தைச் சுரண்ட வேண்டும்'' என்று சொல்லி அவனைப் படுக்க வைத்து கவசத்தை நீக்கினார்.

முகம் முன்பை விட அதிக கோரமாகியிருந்தது. சில இடங்களில் தோல் பிளந்திருந்தது.

வைத்தியர் தனக்குத் தானே சிரித்துக் கொண்டார்.

மறுநாள் அரண்மனையில் அவனது இருப்பிடத்தைத் தேடி வந்தாள் மன்னன் மகள்.

உதயசந்திரனுக்கு அவளது வரவும் அவளது ஆணவமில்லாத உற்சாகமும் பிடித்திருந்தது.

இருந்தாலும் மாசுமருவற்ற முகம் கொண்ட அவள் மாசுமருவே வடிவமாய்ப் பெற்ற தன்னை நோக்கி வந்ததும் பேசுவதும் வேதனையாக இருந்தது.

வேதனையை மறைத்துக் கொண்டு, ''மன்னர் மகளுக்கு இது அழகா? என்னைக் கூப்பிட்டால் இருப்பிடத்திற்கு நானே வந்திருக்க மாட்டேனா இளவரசி?'' என்று கேட்டான்.

''புறப்படுங்கள் போகலாம்'' என்றாள் அவள்.

எதுவும் சொல்லாமல் புறப்பட்ட அவனை ''இப்படி வேண்டாம். அப்படிச் செல்லலாம் வாருங்கள். அது நான் நடப்பதற்கென்று பிரத்தியேகமாக போடப்பட்ட பாதை'' என்றாள் பூவிழி.

''அப்படியானால் அதில் நான் எப்படி நடக்க முடியும் இளவரசி?''

''நான் வேறு நீங்கள் வேறா என்ன? போகலாம் வாருங்கள்.''

பூவிழியின் இந்தப் பதில் அவனை வியக்க வைத்தது.

மிகவும் பெரிய அந்தஸ்தில் இருப்பவர்கள் ஆணவத்தின் சுவடே இல்லாமல் நடந்து கொள்ளும்போது அழகாய் இருக்கும். தெய்வீகமாயும் இருக்கும்.

அப்படித்தான் இருந்தது பூவிழியின் ஆடை அலங்கார நடையுடை பாவனைகள்.

அவள் காட்டிய வழியில் நடந்தான் உதயசந்திரன்.

அவள் 'ஹா' என்றாள்.

''என்ன இளவரசி?''

''காலில் முள் குத்திவிட்டது.''

உதயசந்திரன் முழந்தாளிட்டு அமர்ந்து அவளது காலை மெதுவாகத் தூக்கித் தாங்கிக் கொண்டு முள்ளை அகற்றினான்.

தங்கத் தட்டில் மாணிக்கம் பூத்தது போல் அவளது பொன்னிற பாதத்தில் முள் கிளப்பி விட்டிருந்த ரத்தத் துளியைத் தனது கையால் துடைத்த உதயசந்திரன் சிறிது நேரம் வரை அவளது பாதத்தையே ஆறுதலாகப் பிடித்திருந்தான். பிறகு கீழே விட்டுவிட்டு ''பாதத்தை ஊன்ற முடிகிறதா பாருங்கள்'' என்றான்.

அவளது கண்கள் லேசாகக் கலங்கியது.

''ஒரு சிறிய முள்ளுக்கு இவ்வளவு பக்குவத்தையும் அக்கறையும் காட்டுகிறீர்கள். ஆனால் உங்கள் முகமோ முள் நிலம் போல ஆகிக் கிடக்கிறது. இதை எப்படித் தாங்கிக் கொள்ள முடிகிறது உங்களால்?'' என்று கேட்டுவிட்டு நடக்க முற்பட்டாள்.

''தங்களுக்கென்று பிரத்தியேகமாக அமைக்கப்பட்ட பாதையில் முள் இருப்பது விசித்திரம். முள்ளையே கண்டிராத பாதத்தில் முள் தைத்தால் அது பெரிய விஷயம்தான். நீங்கள் முள்ளில்லாத மலர். நான் முள் செடி. இரண்டையும் ஒப்பிடாதீர்கள்'' என்று சொன்ன உதயசந்திரன் ''எங்கே போக வேண்டும்?'' என்று கேட்டான்.

''கோபுரத்திற்குத்தான்.''

''அங்கே என்ன இருக்கிறது?''

''அதுதானே உயரமாக இருக்கிறது?''

''அதனால்''

''உயர்வை நோக்கிப் போக விரும்புவது விவேகமானது தானே?''

''நீங்கள் ஏற்கெனவே உயரத்தில்தான் இருக்கிறீர்கள் இளவரசி'' என்று சொன்ன உதயசந்திரன் ''கோபுரத்தில் நீங்கள் மயக்கமடைந்தது நினைவிருக்கிறதா?'' என்று கேட்டான்.

''மயக்கத்திற்கான காரணத்தை நீங்கள் தான் போக்கி விட்டீர்களே! நகராசூரனைக் கண்டு அஞ்சி நடுங்கிய மக்களை அதனோடு கொஞ்சி விளையாட வைத்துவிட்டீர்களே! இனி நான் மயக்கமடைய மாட்டேன் அல்லவா?''

''நகராசூரன் மாறியதில் உங்களுக்கு மகிழ்ச்சியா?''

''இல்லையா பின்? நான் மட்டுமா? அப்பாவுக்கு அளவில்லாத சந்தோஷம். அன்பு மக்களுக்கோ ஆரவார

சந்தோஷம். நீங்கள் மட்டும் ஏதும் அறியாத மாதிரி அமைதியாக இருக்கிறீர்கள்.''

இருவரும் கோபுரத்தின் உச்சி மாடத்தை அடைந்தார்கள்.

கோபுரத்தையே சாய்ப்பது போல் கடல்காற்று வீசியது.

''என்னைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?'' என்று கேட்டாள் பூவிழி.

''உன்னைத் துதிக்கலாம் என்று நினைக்கிறேன்.''

''நீங்கள் சொன்னதில் பாதி சரி. பாதி தவறு.''

''என்ன அது?''

''உன்னை என்றீர்களே அது சரி. துதிக்க வேண்டும் என்றீர்களே அது தவறு. நான் துதிக்கப்படுவதற்கு உரியவள் அல்ல. மன்னன் மகள் என்பது கூட தற்காலிகமானதுதான். எனது நிரந்தர அடையாளம் பெண் என்பதுதான். அதிலும் பேதையாகவே இருக்க விரும்பும் சாதாரணமானவள் நான். உங்களை நான் துதிப்பது உண்மை. அதுதான் சரி.''

நிமிடத்திற்கு நிமிடம் அவள் எல்லா விதத்திலும் உயர்ந்து கொண்டே போவதை அறிந்து செய்வதறியாமல் தவித்தான் உதயசந்திரன்.

அப்போது மணியோசை எழவே ''அப்பா அழைக்கிறார். போகலாம் வாருங்கள்'' என்று சொன்ன அவள் ''நாளைக்கு இதே நேரத்தில் இங்கே வருகிறீர்களா? உங்களிடம் முக்கியமான விஷயமொன்றைப் பேச வேண்டும்'' என்றாள்.

மறுநாள் இருவருமே அங்கே வந்தார்கள்.

சிறிது நேரத்திலேயே பறையொலிகள் பலமாகக் கேட்டன.

''கொள்ளைக்காரர்கள் வந்துவிட்டார்கள்'' என்றாள் பூவிழி.

☆☆☆



79

பாறையொலி

மணியோசை கேட்டதும் அரண்மனைக்குச் சென்றதும் ''எங்கே அம்மா போய் விட்டாய்? உணவருந்தும் நேரமல்லவா இது? நீ இல்லாமல் நானும், நானில்லாமல் நீயும் உணவருந்த மாட்டோம் என்பது உனக்குத் தெரியாதா?'' என்று கேட்டான் சூர்யவர்மன்.

''அப்பா! ஒரு வேண்டுகோள்''

''சொல் அம்மா''

''எனக்கு என்னென்ன உணவையெல்லாம் தருகிறீர்களோ அதையெல்லாம் உபதலைவருக்கும் தரவேண்டும்.''

''தருகிறேன். அவர் சாப்பிடுவாரா என்பதுதான் தெரியவில்லை?''

''இதென்னப்பா அபசகுனமாகப் பேசுகிறீர்கள்? அவர் சாப்பிடமாட்டார் என்று எப்படி நீங்கள் சொல்லலாம்? அவர் சாப்பிடமாட்டார் என்றால் எனக்கு வேண்டாம். அவர் என்ன சாப்பிடுவாரோ அதையே எனக்குக் கொடுங்கள். இன்று நடந்து போனபோது காலில் முள் குத்திவிட்டது அப்பா. அவர் அப்படியே என் பாதத்தைத் தன் மீது தாங்கிக் கொண்டு எடுப்பது தெரியாமல் முள்ளை எடுத்துவிட்டு குருதிச் சிமிழைத் துடைத்துவிட்டு பாதத்தை ஆறுதலாகப் பிடித்துக் கொண்டிருந்தார் அப்பா. நான் வணங்கும் தெய்வமே என்னைத் தாங்குவதாகத் தோன்றியது அப்பா. உனக்கென்று அமைக்கப் பட்ட பிரத்தியேகமான பாதையில் முள் இருப்பது விசித்திரம் என்றார் அப்பா. எத்தனை அழகான வார்த்தை பார்த்தீர்களா? அன்றைக்கு நகராசூரனைக் கண்டதும் மயங்கிவிட்ட என்னை தோளில் தாங்கிக் கொண்டு வந்து இங்கே விட்டுவிட்டுப் போனது உங்களுக்குத் தெரியும். இப்படி என்னை எல்லா கஷ்டங்களிலும் தாங்கும் அவருக்கு என் உணவை அனுப்பி வைப்பதில் அபசகுனமாகப் பேசுகிறீர்களே அப்பா? நியாயமா?''

கலகலவென்று சிரித்தான் சூர்யவர்மன்.

''என்ன அப்பா சிரிக்கிறீர்கள்?''

''குழந்தையே! குழந்தையே'' என்று சொல்லி அவளைக் கட்டிக் கொண்டான் மன்னன்.

மறுநாள் மன்னனின் முகத்தில் கவலை குடி கொண்டிருந்ததைக் கண்ட பூவிழி ''என்னப்பா கவலை?'' என்று கேட்டாள்.

''அநேகமாக இன்று கொள்ளையர்களின் பறைகள் முழங்கும் மகளே.''

''முழங்கட்டுமே!''

''மக்களை செல்வங்கள் எதையும் குவித்து எல்லைப் பகுதியில் வைக்க வேண்டாம் என்று உதயசந்திரன் சொல்லி விட்டார்.''

''சரி''

''மக்களும் ஒப்புக் கொண்டார்கள்.''

''பிறகென்ன?''

''அச்சமாக இருக்கிறதம்மா.''

''அப்பா! உங்கள் பேச்சுக்களை விட உபதலைவரின் சொற்களை மக்கள் ஏற்கிறார்களே இது நல்ல விஷயமாக உங்களுக்குத் தோன்றவில்லையா? நகராசூரன் விஷயத்தில் அவர் சொன்னது நடக்கவில்லையா? இந்த விஷயத்தில் மட்டும் எதற்காக அச்சம்?''

''நல்ல விஷயங்கள் தொடர்ந்து நடக்காது மகளே.''

''நடக்கும். நான் நம்புகிறேன். மக்கள் நம்புகிறார்கள். நீங்களும் நம்புங்கள்.''

☆

இதே நேரத்தில் குருகுருவும் தலைமை மந்திரவாதி சீராளனும் ரகசிய இடமான மலைக்குகையில் சந்தித்துக் கொண்டார்கள்.

''ராட்சஷ விலங்கோடு மக்கள் கொஞ்சி குலாவுகிறார்கள். போகிற போக்கைப் பார்த்தால் அதன் மீது சவாரியும் செய்யத் துவங்கிவிடுவார்கள் போலிருக்கிறது'' என்றான் தலைமை மந்திரவாதி.

குலகுரு லேசாகச் சிரித்துவிட்டு, ''மக்கள் ஆட்டு மந்தைகளைப் போன்றவர்கள். கூட்டம் கூடுகிற இடத்திற்குப்

போய் வேடிக்கை பார்ப்பார்கள். ஒரு கூத்தாடி இருந்த ஊரில் இன்னொருவன் வந்து ஆடினால் அவனை ரசிக்கச் செல்வார்கள். அவர்களைப் பற்றிய கவலையை விடு'' என்றார்.

''நீங்கள் சொல்வது சரியில்லை ஐயா. ஆட்டு மந்தைகளாக மக்கள் இருந்தது உண்மை. அவர்களை நாம் ஆட்டுவித்ததும் உண்மை.ஆனால் இப்போது அவர் வேறு கூடாரத்தை நோக்கிச் சென்றிருப்பது ஆடுகளாக இல்லை. அறியாமையில் இருந்த அவர்கள் அறியாமையிலிருந்து விடுபட்டு வருகிறார்கள். இது சாதாரண விஷயமல்ல'' என்றான் சீராளன்.

''எல்லாவற்றுக்கும் காரணம் அந்த உதயசந்திரன். அவனைச் சாமர்த்தியமாக கடத்திய நீ பேச்சு வார்த்தை நடத்திக் கொண்டிராமல் வெட்டிப் போட்டிருந்தால் இந்த நிலைமை உண்டாகி இருக்காது அல்லவா? சரி. சரி. போனது போகட்டும். நான் சொன்னதை நாளைக்கே செய். மக்கள் என்னாகிறார்கள் பார்'' என்று கூறிவிட்டு தன் மாளிகைக்குச் சென்றார் குலகுரு.

குலகுருவுக்கு இருப்பு கொள்ளவில்லை. தனக்கிருந்த மதிப்பும் செல்வாக்கும் பெயரளவுக்குத்தான் என்பது புரிந்து விட்டதால் மன்னனை அவர் அடியோடு வெறுத்தார். அவனது மன மாற்றத்திற்குக் காரணமான உதயசந்திரனின் மீது கொலை வெறியே மண்டிக் கிடந்தது. இருவரையும் தீர்த்துக் கட்டினாலொழிய தன்னால் செல்வாக்கோடும் செல்வச் செழிப்போடும் வாழ முடியாது என்று கருதினார்.

பத்மினியின் நினைவு அவருக்கு வந்தது. தன்னைப் பற்றிய உண்மையை அவள் எப்படி அறிந்து கொண்டாள் என்பது புரியாதப் புதிராக இருந்தாலும் அறிந்து கொண்டிருக்கிறாள் என்ற உண்மை அவருக்குக் கசப்பாக இருந்ததால் அவளை மிரட்டி உருட்டி அவளைக் கண்டபடி அனுபவித்து முடிவில் பணியாளர்களிடம் அவளைக் கொண்டு போய் கொலை செய்து புதைத்து விடும்படி கட்டளையிட்டார்.

அவள் போய் விட்டாலும் இருந்த வரை தந்த இன்பங்கள் அவரைத் துளைத்தெடுத்தன. தனது அறையைச் சுத்தம் செய்ய வந்த பெண்ணை அறையின் கதவைச் சாத்தும்படிச் சொன்னார். அவள் சாத்தினாள். அறையில் பந்தங்களை ஏற்றும்படிச் சொன்னார். அவள் ஏற்றினாள். இப்படி ஒவ்வொன்றாக பத்மினி விஷயத்தில் கையாண்ட மாதிரியே கையாண்டார். பணிப் பெண்ணுக்கோ எதுவும் புரியவில்லை. ஆடைகளின்றி கூச்சத்துடன் முன்னால் வந்து நின்றாள் அவள். பிறகென்ன? வெறிபிடித்த வேங்கை

புள்ளிமானை பட்சிப்பது போல் அவளை நாசப்படுத்தினார் குலகுரு. அவள் அதையெல்லாம் அதுவரை அனுபவித்ததில் லையாதலால் எல்லாமே புதியவைகளாகவும் பரமானந்தமாகவும் இருந்தன. அவர் எதைக் கொடுத்தாலும் எப்படிக் கொடுத்தாலும் வாரி வாரி பெற்றுக் கொண்ட அவள் இது காலத்திற்கும் அப்படியே நீடிக்கக் கூடாதா என்று கிறங்கினாள். அவரோ போதும் என்ற நிலைக்கு வந்ததும் அவளைத் தூக்கி எறிந்தார். அவளுக்குப் பல இடங்களிலும் காயம்தான்.

என்றாலும் ''நான் அப்புறமாகச் செல்கிறேன் ஐயா. நீங்கள் எத்தனை முறை வேண்டுமானாலும்...'' என்று தாபத்தில் பரிதாபமாக கெஞ்சினாள்.

''உடனடியாக வெளியே போய்விடு. தாமதித்தால் உன் பிணம் தான் போகும்'' என்றார் குலகுரு.

பணிப்பெண் பயந்து போய் சுருட்டிக் கொண்டு ஓடினாள்.

அன்று மாலை அரண்மனை கோபுரத்திற்கு வந்தாள் பூவிழி.

உதயசந்திரன் சற்று தாமதமாக வந்தான்.

''வரும் வழியில் மக்கள் மறித்துக் கொண்டார்கள். அவர்களுக்கு தக்க பதில் சொல்லிவிட்டு வர கொஞ்சம் தாமதமாகி விட்டது. மன்னிக்க வேண்டும்'' என்றான் உதயசந்திரன்.

''மக்கள் நாயகனாயிற்றே நீங்கள்? தொந்தரவுகள் இருக்கத்தான் செய்யும்.''

''மக்கள் நாயகன் மன்னர்தான் இளவரசி. நானல்ல.''

''உங்கள் பேச்சைத்தானே மக்கள் கேட்கிறார்கள்? மன்னரின் பேச்சை அல்லவே?''

''அப்படியல்ல இளவரசி. மன்னருக்கு மாற்றாக நான் இருக்க முடியாது. இக்கட்டான நிலையில் யோசனை சொல்பவர்க ளெல்லாம் மக்கள் நாயகர்களாகிவிட முடியாது.''

''மக்கள் என்ன கேட்கிறார்கள் உங்களிடம்?''

''கொள்ளைக்காரர்களைப் பற்றிக் கேட்கிறார்கள். ''பயப்படாதீர்கள். நானிருக்கிறேன் என்றேன். நம்புகிறார்கள். அதேசமயம் அஞ்சுகிறார்கள்.''

''மன்னரும் அந்த நிலையில்தான் இருக்கிறார். நான் அப்படியில்லை. பூரண நம்பிக்கையில் இருக்கிறேன்.''

''மிகவும் நன்றி இளவரசி. நான் நிறைய யோசனைகளைச் சொல்லலாம். அதை நம்பினால் பயன் கிடைக்கும்.''

''காலம் காலமாகத் தவறான நம்பிக்கையில் வாழ்ந்தவர்கள் மக்கள். சரியான நம்பிக்கையைப் பெற சிரமப்படுகிறார்கள்.

அவ்வளவுதான்'' என்று சொன்ன பூவிழி ''இன்றைக்கு உங்களை ஏன் வரச் சொன்னேன் தெரியுமா?'' என்று கேட்டாள்.

''ஏதோ முக்கியமான விஷயத்தைப் பற்றி பேசப் போவதாகச் சொன்னீர்கள்.''

''சொன்னாய் என்று சொன்னால் போதும்.''

''சரி இளவரசி.''

''பூவிழி என்று சொல்லுங்கள்.''

''சரி பூவிழி.''

''உபதலைவரே, மரகதப்பட்டிணத்தில் தந்தையுடன் வந்த நான் உங்களைப் பார்த்தேன். சூர்ய புதல்வரைப் போல் இருந்தீர்கள். உங்களை பலியிட வேண்டாம் என்று தந்தையிடம் சொன்னேன். அவர் கேட்கவில்லை. தவித்தேன். அரங்கத்தில் பலி யிடும் கட்டம் வந்தது. தவித்தேன். நல்லபடியாக பலி தடுக்கப் பட்டது. ஆனால் மந்திரவாதியால் நீங்கள் கடத்தப்பட்டீர்கள். தவித்தேன். உங்களை உயிரோடு காண்பேனா என்று துடித்தேன். ஊர்வசி வந்தாள். ஆறுதல் சொன்னாள். உங்களைக் காப்பாற்று வதாகச் சொன்னாள். காப்பாற்றியும் கொண்டு வந்தாள். இல்லையா?''

''ஆமாம்.''

''மரகதப்பட்டிணத்தில் அவளுக்கு உங்கள் மீது திடீரென காதல் பிறந்தது. ஐந்து ஆடவர்களை மணந்து ஐந்து பேரையும் துறந்திருந்த அவளுக்கு உங்கள் மீது ஆசை வந்தது. உங்களோடு வாழ விரும்பினாள். மன்னனை மறந்தாள். மக்கள் நலனை மறந்தாள். தன்னையே கூட மறந்தாள். காதல் அவள் கண்களை மறைத்துவிட்டது. எல்லோரையும் எதிர்த்துக் கொள்ளவும் எது வந்தாலும் சந்திக்கவும் தயாரானாள். அவளது பெண்மை வீறு கொண்டு எழுந்தது. உங்களை அடைய துணிகரமான திட்டத்தைத் தீட்டினாள். இந்திரபுரத்திற்கு வந்த பிறகு உங்களைக் கடத்திக்கொண்டு வெளிநாட்டிற்குப் போக முயன்றாள். அவளை நீங்கள் ஏமாற்றிவிட்டீர்கள். இல்லையா?''

''அவளை ஏமாற்றுவது என் நோக்கமல்ல பூவிழி.''

''அது எனக்குத் தெரியும். நன்றாகத் தெரியும். அவளை ஏமாற்ற நிறைய வழிகள் உண்டு. அதற்காக முகத்தைக் கெடுத்துக் கொள்ளும் அபூர்வமான காரியத்தை நீங்கள் செய்ய வேண்டிய தில்லை. உங்களைக் குற்றம் கூறுவதற்கு அப்படி நான் சொல்லவில்லை. நீங்கள் உங்கள் வழியில் சென்றீர்கள். அவள் ஏமாற்றமடைந்தாள்.''

''ஆமாம்.''

''நன்றாக யோசியுங்கள் உபதலைவரே. உங்களுக்காக எதையும் செய்தவள் ஊர்வசி. உங்கள் மீதான காதலால் அவள் எல்லா ஆபத்துகளையும் எதிர் கொண்டிருக்கிறாள். கடைசியாக மந்திரவாதியிடமிருந்து தந்திரமாக உங்கள் உயிரைக் காப்பாற்றி மன்னரிடம் ஒப்படைத்துவிட்டாள். அதனால்தான் நீங்கள் எங்கள் நாட்டு மக்களுக்குக் கிடைத்தீர்கள். பிரச்சனைக்கு விடிவும் கிடைத்தது. நாம் எல்லோரும் அவளுக்கு நன்றிக்கடன் பட்டவர்கள். மன்னர் அவளுக்குத் தகுந்த பதவியைத் தரப் போகிறார். நான் பொன்னைத் தரத் தயாராக இருக்கிறேன். நீங்கள்?''

''என்ன தர வேண்டும் நான்?''

''உபதலைவரே! நாம் அவளுக்குத் தருவது இருக்கட்டும். அவள் நம்மிடம் எதை எதிர்பார்க்கிறாள் என்று யோசியுங்கள். அவள் பதவியையோ பொன்னையோ எதிர்பார்க்கவில்லை. உங்களைத் தான் எதிர்பார்க்கிறாள். உங்களுடன் வாழவே விரும்புகிறாள். அவளுக்கு நீங்கள் வாழ்வு கொடுக்க வேண்டும். இதுதான் என் வேண்டுகோள்.''

உதயசந்திரன் எதிர்பார்த்தது வேறு. இளவரசி பூவிழி தன்னை விரும்புவாள் என்றுதான் எதிர்பார்த்தான். இளவரசி தன் மீது மையல் கொண்டிருப்பதாக ஊர்வசியே அவனிடம் சொல்லியிருந்தாள். அப்படியிருக்கும் பூவிழி ஊர்வசிக்காக வேண்டிக் கொண்டது வியப்பாக இருந்தது உதயசந்திரனுக்கு. பூவிழிக்கும் சரி, ஊர்வசிக்கும் சரி, சூர்யவர்மனுக்கும் சரி உதயசந்திரன் பல்லவ உபதலைவன் என்ற வகையில் அவனது வீர தீர பராக்கிரமங்கள்தான் தெரிந்திருந்தன. அவன் திருமணமானவன் என்ற செய்தி யாருக்கும் தெரிந்திருக்க வில்லை. அவனும் அதைப் பற்றிச் சொல்ல விரும்பவில்லை.

தற்போது அதைச் சொல்ல விரும்பிய அவன் ''பூவிழி! நான் திருமணமானவன். என் மனைவியின் பெயர் பௌர்ணமி'' என்றான்.

''ஊர்வசியும் திருமணம் ஆனவள்தான். அதோடு ஐந்து பேரை மணந்தவள்'' என்றாள் பூவிழி. அப்படிச் சொல்லிவிட்டு ''ஊர்வசியை தகுதி குறைவானவள் என்று நினைக்கிறீர்களா?'' என்று கேட்டாள்.

''அப்படியெல்லாம் இல்லை. இது விஷயமாக முடிவு எடுப்பதற்கு முன் என் முகம் சீராக வேண்டும் என்று நினைக்கிறேன். அதுவரை எந்த முடிவும் எடுப்பது உகந்ததல்ல பூவிழி.''

''அதுவும் சரிதான். அதேசமயம் நான் சொன்னதை நீங்கள் மறக்காமல் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும்'' என்றாள் பூவிழி.

அப்போது கடற்பகுதியிலிருந்து பறையொலிகள் எழுந்தன.

''கொள்ளையர்கள் வந்துவிட்டார்கள்'' என்றாள் பூவிழி.

உதயசந்திரன் கடல்புறத்தையே பார்த்துக் கொண்டிருந்தான். அவன் கண்களுக்கு கப்பல்கள் ஒன்றிரண்டு தெரிந்தன. அவற்றின் முழு பரிமாணமும் தெரியாதவாறு காட்டு மரங்கள் அடர்ந்த நிலப்பகுதி கடலுக்குள் துருத்திக் கொண்டிருந்தது. பறையொலி அரை நாழிகை வரை நீடித்தது.

''கொள்ளையர்கள் நகருக்கு எப்போது வருவார்கள்?'' என்று கேட்டான் உதயசந்திரன்.

''அநேகமாக பொழுது விடிந்ததும் வருவார்கள்.''

''சரி பூவிழி நீ அரண்மனைக்கு புறப்படு. நான் சிறிது நேரம் கழித்து வருகிறேன்.''

உதயசந்திரன் இவ்வாறு கூறியதும் பதிலேதும் பேசாமல் கோபுரத்தை விட்டுக் கீழே இறங்கினாள்.

நகரத்தில் மக்கள் ஆங்காங்கே திரண்டு கொள்ளையர்களின் பறையொலி பற்றிப் பேசிக் கொண்டிருந்தார்கள். பெரும் பாலானவர்களுக்கு உதயசந்திரனின் மீது நம்பிக்கை இருந்தது. ஆனால் எந்த திட்டத்தையும் அறிவிக்காத நிலையில் தனி ஒரு மனிதனாக என்ன செய்யப் போகிறான் என்பது விளங்காததால் சற்றே குழம்பினார்கள். கடற்கரையில் மாலை நேரத்தில் கூடி இரவு வரை சந்தோஷமாக கழிப்பதை வழக்கமாகக் கொண்ட அவர்கள் யாரும் அன்று காலையிலிருந்தே கடற்கரை பக்கமே செல்லாததால் கடற்கரை வெறிச்சோடிக் கிடந்தது. நகர்புறத்தில் கூட குறைவான தீபங்களே ஏற்றப்பட்டிருந்தன. கோபுரத்தில் இருந்தபடி எல்லாவற்றையும் கவனித்துக் கொண்டிருந்த உதயசந்திரன் கீழே இறங்கி தனியாக கடற்கரைக்குச் சென்றான். கடற்பகுதியில் நிறைய மரக்கலங்கள் நங்கூரமிட்டிருந்ததை அவனால் காணமுடிந்தது. இரவு முழுவதும் கடற்கரையிலேயே படுத்துக் கிடந்த அவன் பொழுது விடிவதற்கு சற்று முன் தனது இருப்பிடத்திற்கு வந்து நீராடினான். பணியாட்கள் அவனுக்குத் தேவையானவற்றைக் கொடுத்தார்கள்.

எல்லோருமே முள்ளின் மீது நிற்பது போல் நின்று என்னாகுமோ என்று தவித்துக் கொண்டிருந்தார்கள். பொழுது

விடிந்தது. கதிரவன் கீழ் வானத்தில் எழுந்தான். அரை நாழிகை ஒரு நாழிகை என்று பொழுது போய்க் கொண்டிருந்ததே தவிர எந்தச் சம்பவமும் நடைபெறவில்லை. கொள்ளையர்கள் யாரும் நகரத்தில் பிரவேசிக்கவில்லை. நண்பகல் நேரம் வந்தது. கடல் பகுதியில் கொள்ளையர்கள் கப்பல்கள் எதுவும் இல்லை என்று செய்தி வந்தது. மக்கள் தெருக்களில் ஆனந்தக் கூத்தாடினார்கள்.

அரண்மனையில் இருந்த மன்னன் உதயசந்திரனைப் பார்த்து, ''மக்களின் இந்த ஆனந்தம் நீடிக்காது'' என்றான்.

''தெரியும்.''

''கொள்ளையர்கள் பயந்து ஓடிவிடவில்லை.''

''தெரியும்.''

''அவர்கள் அகன்றுவிட்டதற்கு வேறு காரணம் இருக்கிறது.''

''இருக்கலாம்.''

''மீண்டும் அவர்கள் வருவார்கள். அறிவிப்பு இல்லாமல் தாக்குவார்கள்.''

''ஆமாம்.''

''அதற்கு என்ன செய்வதாக உத்தேசம்?''

''இரண்டு நாட்கள் போகட்டும். சொல்கிறேன்'' என்றான் உதயசந்திரன்.

ஆனால் மறுநாள் வேறு விபரீதம் நடந்தது.

நகராசூரன் அன்று நகரத்திற்கு வந்து பலி அரங்கத்தில் ஆசவாசமாகப் படுத்தது.

மக்கள் வழக்கம்போல் அதைத் தொட்டும் அதன் மீது ஏறியும் விளையாடினார்கள். அதுவும் வழக்கம் போல அவர்களுக்கு ஆதரவாக அசைந்து கொடுத்தது.

திடீரென படார்படாரென வெடிச்சத்தம் கேட்டது.

ராட்சஷ விலங்கு சிலிர்த்து எழுந்தது. பற்கள் தெரிய வாயைத் திறந்து பயங்கரமாகச் சத்தமிட்டது.

அதன் மீது ஏறியிருந்தவர்கள் தாறுமாறாக விழுந்தார்கள். பலருக்கு எலும்பு முறிந்தது. பலருக்கு பற்கள் உடைந்தன. சிலருக்கு மண்டை பிளந்தது. சிலர் அதிர்ச்சியில் இறந்தார்கள்.

அந்த விலங்கு கத்திக் கொண்டு தனது நீண்ட கழுத்தைத் திருப்பிப் பார்த்தது.

வால் பகுதி எரிந்து கொண்டிருந்தது.

யாரோ வெடிகளை வாலில் கட்டி கொளுத்தியிருக்க வேண்டும்.

அதை அறிய முடியாத அந்த விலங்கு வாலில் மூண்ட தீயை அணைக்க முடியாமலும் எரிச்சலைத் தாங்க முடியாமலும் தொடர்ந்து கத்தி கடலையும் நகரத்தையும் அதிர வைத்தது. பெருங்கோபத்திற்கு ஆளாகிய அந்த விலங்கு அரங்கில் இருந்த பலரை மிதித்து அழித்தது. பலரை பற்களால் கவ்வி தூர எறிந்தது. மேற்கொண்டு நிற்க மாட்டாமல் அங்கிருந்து புறப்பட்டு மலைப் பக்கத்திற்குச் சென்றது.

மன்னன் சிறிது நேரம் கழித்து அரங்கத்திற்கு வந்தான்.

அங்கே நூற்றுக்கணக்கானவர்கள் மாண்டு கிடந்ததால் அந்த இடம் போர்க்களம் போலக் காணப்பட்டது.

சடலங்களை அப்புறப்படுத்தும்படி ஆணையிட்ட மன்னன் அரண்மனைக்கு வந்தான்.

அங்கே மக்களுக்கு ஆறுதல் கூறியபடி நின்றிருந்தான் உதயசந்திரன்.

அவனைக்கண்ட மன்னன் எதுவும் பேசாமல் உள்ளே சென்றான்.

மக்களைச் சமாதானப்படுத்தி அனுப்பி வைத்துவிட்டு உள்ளே சென்ற உதயசந்திரன் மன்னனைக் கண்டான்.

மன்னன் பதட்டத்தில் இருந்தது தெரிந்தது.

உதயசந்திரனைக் கண்டதும், ''சேதம் ஆயிரத்திற்கு மேல் இருக்கும். இது அதிகபட்சமான சேதம். இதுவரை இவ்வளவு சேதம் நடந்தது இல்லை'' என்றான் மன்னன்.

''அமைதியை விரும்பாதவர்களின் வேலை தான் இது மன்னவா'' என்றான் உதயசந்திரன்.

''அமைதியை விரும்பாதவர்கள் யார்?''

''மந்திரவாதிகள்.''

''அவர்கள்தான் போய்விட்டார்களே?''

''போகவில்லை என்பதைத்தான் இந்தச்சம்பவம் காட்டுகிறது.''

''இல்லை உபதலைவரே. உங்கள் கணக்கு தவறு. மிருகம் மிருகம்தான். பழகுவது போல் பழகி அது தன் வேலையைக் காட்டிவிட்டது'' என்றான் மன்னன்.

அவனது குரலில் அவதி இருந்தது. அதிருப்தி இருந்தது. ஆத்திரம் இருந்தது.

★★★



80

சுந்திப்பு

மன்னனின் நிலை சங்கடமானதுதான் என்பது உதய சந்திரனுக்குப் புரிந்தது. அப்போதைய நிலையில் அவனிடம் பேசினால் பயனிருக்காது என்று எண்ணி அங்கிருந்து புறப்பட்டான்.

அதைக் கண்ட மன்னன், ''உபதலைவரே!'' என்று அழைத்தான்.

உதயசந்திரன் திரும்பி, ''சொல்லுங்கள் மன்னவா'' என்றான்.

''நீங்கள் சொல்வது தான் உண்மையாக இருக்க வேண்டும். நகராசூரனை நீங்கள் அன்பால் கட்டுப்பட வைத்த முயற்சியை கண்டு அதை விரும்பாதவர்கள் அதற்குச் சேதத்தை உண்டாக்கி கோபத்தைத் தூண்டியிருக்கிறார்கள். அவர்கள்தான் அதன் வாலில் வெடிகளைக் கட்டி தீயிட்டிருக்க வேண்டும். தீயிட்டவர்களை அறிய முடியாத அது வலி தாங்க முடியாமல் அங்கிருந்தவர்களைத் தாக்கியிருக்கிறது. மொத்தத்தில் இங்கே அமைதியை விரும்பாதவர்களின் முயற்சி வெற்றி பெற்று விட்டது. இதன் மூலம் மூடநம்பிக்கையை மீண்டும் துளிர்விடச் செய்வது அவர்களின் நோக்கமாக இருக்கலாம். நீங்கள் கூறியது போல் இந்த நாட்டை விட்டு மந்திரவாதிகள் அகலவில்லை. இந்த நாட்டிலேயே வேறு வேடங்களில் திரிகிறார்கள். அவர்களைக் கண்டுபிடிப்பது கடினம்'' என்றான் மன்னன்.

அவனது பேச்சு உதயசந்திரனுக்கு ஓரளவிற்கு ஆறுதலாக இருந்தது.

''மன்னவா! ஒரு விதத்தில் பார்த்தால் நகராசூரன் விஷயத்தில் எனது முயற்சி தோற்றுவிட்டது. அநேகமாக அந்த விலங்கை இனி நம்மால் கட்டுப்படுத்த முடியாது. மனிதர்களாக இருந்தால் பகுத்தறிவால் புரிந்துகொள்ள முடியும். நகராசூரனால் முடியாது. அது சகட்டு மேனிக்கு நம் எல்லோர் மீதும் கோபமாகத்தான்

இருக்கும். அதன் போக்கை உன்னிப்பாக கவனித்து நடவடிக்கை எடுக்க வேண்டும். அதோடு மக்களின் நம்பிக்கையை சிதறாமல் பாதுகாக்க வேண்டும். நான் சில காரியங்களைச் செய்ய வேண்டியிருக்கிறது மன்னவா. இப்போது எனக்கு விடை கொடுங்கள்'' என்று கூறிவிட்டுப் புறப்பட்டான்.

அவனது இருப்பிடத்திற்குப் போனதும் அங்கே வந்திருந்த வைத்தியர் அவனைக் கடிந்து கொண்டார்.

''இதோ பார் உதயசந்திரா, உனக்கு முக்கியமான விஷயங்கள் ஆயிரம் இருக்கலாம். ஆனால் எனக்கு ஒரே ஒரு விஷயம்தான் முக்கியமானது. அதாவது உனக்கு சிகிச்சை யளிப்பது. உன் அழகை மீட்டுத் தருவதற்கு நான் வாக்களித்திருக்கிறேன். அதற்கு ஒத்துழைக்க வேண்டியது உன் கடமை. நீ இஷ்டத்திற்கு வருவதும் போவதுமாக இருந்தால் சிகிச்சை சிக்கலாகிவிடும்'' என்றார்.

''முகம் கிடக்கிறது வைத்தியரே? எந்த மக்களைக் காப்பாற்ற முகத்தைச் சிதைத்துக் கொண்டேனோ அந்த முயற்சிகளில் தோற்றுவிட்டேன். எதிரிகள் என் முகத்தில் கரியை பூசி விட்டார்கள்'' என்றான் உதயசந்திரன்.

''அது நடவாத காரியம்'' என்றார் வைத்தியர்.

''எதைச் சொல்கிறீர்கள்?''

''உன் முகம் இப்போதிருக்கிற நிலையில் யாராலும் கரியைப் பூச முடியாது. முகத்தில் ஒட்டாது.''

''இடுக்கண் வரும் போது சிரிக்கும்படி எங்கள் நாட்டுப் புலவர் சொல்லியிருக்கிறார் வைத்தியரே. அது உங்களால் முடிகிறது. மிக்க மகிழ்ச்சி.''

''என்னாயிற்று உனக்கு? முகத்தைக் கெடுத்துக் கொண்டபோது கூட நீ இப்படி கவலைப்பட்டதில்லையே! நகராசூரன் விஷயத்தைச் சொல்கிறாயா?''

''வைத்தியரே, தலைசிறந்த வைத்தியரான உங்களால் அந்த மிருகத்திற்கு வைத்தியம் பார்க்க முடியுமா?''

''விளையாடாதே உதயசந்திரா. நான் மிருக வைத்தியன் அல்ல.''

''என்ன சொல்கிறீர்கள் ஐயா? மனிதனுக்கும் மிருகத்திற்கும் அறிவைத் தவிர வேறு என்ன வித்தியாசம் இருக்கிறது?''

''அப்படியானால் ஒன்று செய். நகராசூரனைப் பிடித்து வந்து நகர முடியாமல் கட்டி வை. நான் வைத்தியம் பார்க்கிறேன்.''

•

''ஏன் வைத்தியரே! மிருகங்களுக்கு காயம் பட்டால் வைத்தியமே செய்ய முடியாதா?''

''அப்படியில்லை உதயசந்திரா. நமக்குக் கட்டுப்படும் மிருகங்களுக்குச் செய்ய முடியும்? நகராசூரனைப் போன்ற ராட்சஷ மிருகங்களுக்கு முடியாது. சாதாரணமாகக் காட்டில் திரியும் துஷ்ட மிருகங்கள் காயங்களுக்கு ஆளாகின்றன. அவை வைத்தியசாலைகளைத் தேடிக் கொண்டா வருகின்றன? இயற்கையிலேயே மிருகங்களுக்கு காயங்களைத் தாங்கும் சக்தி இருக்கின்றன. அவற்றின் காயங்கள் மருந்தின்றி தாமாகவே சரியாகிவிடும்.''

நகராசூரனுக்கும் அப்படி காயமானது தாமாக ஆறிவிடும் என்று நினைத்தான் உதயசந்திரன். வைத்தியர் அவனுக்குச் சிகிச்சையை தொடங்கினார்.

''வைத்தியரே! என்ன செய்கிறீர்கள்? ரொம்பவும் எரிகிறதே முகம். தாங்க முடியவில்லையே'' என்றான் உதயசந்திரன்.

''அப்படியா? ரொம்ப சந்தோஷம். நன்றாக எரியட்டும். ஐயோ அம்மா என்னை விட்டுவிடுங்கள் என்று நீ கத்தினால் நன்றாக இருக்கும்'' என்றார் வைத்தியர்.

''இதென்ன குரூர சந்தோஷம்?''

''குரூர சந்தோஷம் இல்லை. உண்மையான சந்தோஷம். இதுநாள் வரை நான் சிகிச்சை அளிக்கும் போதெல்லாம் உனக்கு வலி இல்லை. எரிச்சல் இல்லை. எனக்குக் கவலையாக இருந்தது. முகத்தில் சொரணையே வராமல் இருக்கிறதே என்று கவலைப்பட்டேன். இப்போது வந்திருக்கிறது. இது எவ்வளவுக் கெவ்வளவு அதிகமாக இருக்கிறதோ அவ்வளவுக்கவ்வளவு நல்லது.''

உதயசந்திரன் மேற்கொண்டு பேசவில்லை.

சிகிச்சை முடிந்து சிறிது நேர ஓய்வுக்குப் பின் மாளிகையின் நிலா மாடத்திற்கு வந்து சிந்தனையில் ஆழ்ந்தான்.

இரண்டு நாட்களாக அவனுக்குப் புதிய புதிர்கள் தோன்றின. ஆனால் அவற்றுக்கு விடை கிடைக்கவில்லை. யாரிடம் கேட்பது என்றும் தெரியவில்லை. பலவாறு யோசித்தான். அவனுக்கு குலகுருவின் நினைவு வந்தது. அரங்கத்தில் மந்திரவாதி தன்னை பலியிடத்துணிந்தபோது தனக்காகப் பரிந்து பேசியது குலகுருதான் என்பதை நினைவூட்டிக் கொண்ட அவன் அவரிடம் போய்

கேட்டால் என்ன என்று யோசித்தான். அதுதான் சரி என்று அவரது இருப்பிடத்திற்குச் சென்றான்.

பணியாள் அவனை வெளியே இருக்கும்படியும் குல குருவின் அனுமதியைப் பெற்று வருவதாகவும் சொல்லிவிட்டுச் சென்றான்.

அதேசமயத்தில் உள்ளே குலகுரு மந்திரவாதிகளுடன் சந்தோஷமாக அரட்டை அடித்துக் கொண்டிருந்தார். மதுப்பிரவாகமும் மாதுப்பிரவாகமும் அவர்களை களிப்பில் ஆழ்த்தியிருந்தது. தங்களது முயற்சியில் வெற்றி பெற்றுவிட்ட ஆனந்தத்தில் கட்டுக்கடங்காத கொண்டாட்டத்தில் அனைவருமே நீந்திக் கொண்டிருந்தார்கள்.

பணியாளன் கதவைத் தட்டியது அவர்களது காதில் விழவில்லை.

உள்ளே என்ன நடக்கிறது என்பதை பணியாளனால் ஊகிக்க முடிந்தது.

உதயசந்திரனிடம் வந்த அவன் ''நீங்கள் அப்புறமாக வாருங்களேன்'' என்றான்.

''ஏன்? குலகுரு ஏதாவது அலுவலில் இருக்கிறாரா?''

''ஆமாம்.''

''காத்திருக்கிறேன்.''

''வேண்டாம். அலுவல் எப்போது முடியும் என்று சொல்ல முடியாது. நீங்கள் நாளைக்கு வாருங்கள்.''

''எனக்கு வேறு அலுவல் எதுவும் இல்லை. காத்திருக்கிறேன்.''

''உங்களுக்கு ஏன் புரியவில்லை? அவர் இப்போது சந்திக்க மாட்டார்.''

''ஏன்? என் மீது அவருக்குக் கோபமா? உதயசந்திரன் வந்திருப்பதாகச் சொல்லுங்கள். அவர் நாளைக்கு வரச் சொன்னால் நாளைக்கு வருகிறேன்.''

''கதவைத் திறந்தால் தானே சொல்ல முடியும்? உள்ளே தான் கொண்டாட்டமாக இருக்கிறதே?'' என்று சொன்ன பணியாளன் நாக்கைக் கடித்துக் கொண்டான்.

''சரி. நான் நாளைக்கு வருகிறேன்'' என்று சொல்லிவிட்டு வெளியே வந்தான் உதயசந்திரன்.

பணியாளனின் வார்த்தைகள் அவனை சிந்திக்க வைத்தன.

'குலகுருவின் மாளிகையில் எதற்கு கொண்டாட்டம்? யாரோடு கொண்டாட்டம்?' என்று கேட்டுக் கொண்ட அவன் அதைத் தெரிந்து கொள்ளாமல் போகக் கூடாது என்று தீர்மானித்தவனாய் இருட்டான பகுதியாகப் பார்த்து மறைந்து கொண்டான். நேரம் நள்ளிரவை நெருங்கிக் கொண்டிருந்தது. சுமார் ஒரு நாழிகை நேரம் கடந்ததும் மாளிகையிலிருந்து மந்திரவாதிகள் வெளியே வந்தார்கள். அனைவரும் வணிகர் களாக இருந்ததால் இவர்களுக்கென்ன இங்கே வேலை என்று நினைத்தான் உதயசந்திரன்.

அவர்கள் எல்லோரும் வெளியேறி சிறிது நேரம் கழித்து மீண்டும் மாளிகைக்குப் போனான் உதயசந்திரன்.

பணியாளனிடம் ''இப்போதாவது குலகுருவை பார்க்கலாமா?'' என்று கேட்டான்.

''நீங்கள் இன்னும் போகாமல் இங்கேயே தான் இருக்கிறீர்களா?''

''அவசியமாய் பார்க்க வேண்டும். ஆகவே தான் வெளியே காத்திருந்தேன். உள்ளேயிருந்து நிறையப் பேர் வெளியே சென்றதைப் பார்த்தேன். ஆகவேதான் வந்தேன்.''

''நள்ளிரவு நேரமாகிவிட்டதே.''

''உதயசந்திரன் வந்திருப்பதாகச் சொல். அவர் வரச் சொன்னால் வருகிறேன்.''

பணியாளன் சங்கடத்துடன் உள்ளே சென்றான்.

பத்மினியிடமிருந்து சுகத்தை அனுபவித்த பிறகு குலகுரு ருசி கண்ட பூனையாகிவிட்டதால் தினமும் ஒரு பெண்ணை வரவழைத்துக் கொண்டிருந்தார்.

தற்போதும் அப்படி வரவழைக்கப்பட்ட பெண்ணைத் தான் தழுவிக் கொண்டிருந்தார். அறைக்கதவை பணியாளன் தட்டியபோது ''யாரது? யாராக இருந்தாலும் காலையில் பார்த்துக் கொள்ளலாம்'' என்று இரைந்தார் குலகுரு.

''உதயசந்திரன் வந்திருக்கிறார். ரொம்ப நேரமாகக் காத்திருக்கிறார். உங்களை அவசரமாகச் சந்திக்க வேண்டுமாம்'' என்றான் பணியாளன்.

''யார்? உதயசந்திரனா?'' என்று கேட்ட குலகுரு தழுவிக் கொண்டிருந்த பெண்ணைத் தள்ளிவிட்டு அறைக் கதவைத் திறந்தார். ''போய் வரச் சொல்'' என்றார்.

உதயசந்திரன் உள்ளே வந்தபோது கூடத்தில் குலகுரு இல்லை.

ஆசனத்தில் அமர்ந்தான் உதயசந்திரன்.

சிறிது நேரம் கழித்து கூடத்திற்கு வந்த குலகுரு ''தியானத்தில் இருக்கும்போது யாரையும் நான் சந்திப்பதில்லை. நள்ளிரவு நேரம் மிகவும் அமைதியான நேரம். இந்த நேரத்தில் தான் என்னைப் போன்ற குருமார்கள் ஆன்மீக ஆராய்ச்சியில் ஈடுபடுவார்கள். பணியாளன் உன் பெயரைச் சொன்னதால் தியானத்தை விட்டுவிட்டு வந்தேன்'' என்றார் குலகுரு.

''மன்னிக்க வேண்டும் குருநாதரே. மனக்கலக்கம் அதிகமாக இருந்ததால் வேறு வழி தெரியாமல் தங்களிடம் வந்தேன்'' என்றான் உதயசந்திரன்.

''என்னிடம் என்ன இருக்கிறது என்று என்னைத் தேடி வந்தாய்?''

''எது இல்லையென்றாலும் கருணை நிச்சயமாக இருக்கும். அதனால்தான் அரங்கத்தில் பலியிலிருந்து என்னைக் காப்பாற்றினீர்கள்.''

''வாலிபனே! எனக்கு பாரபட்சமும் கிடையாது. எதிரிகளும் கிடையாது. எல்லோருமே எனக்குக் குழந்தைகள். குருமார்கள் ஜீவிப்பது ஜீவன்களை உய்விப்பதற்காகத்தான். அதோடு உன்னைப்போன்ற சுயநலமில்லாத வீரமும் தியாகமும் நிறைந்த வாலிபர்களை நான் எப்போதும் என் இதயத்தில் வைத்திருப்பேன்.''

''குருநாதரே! இந்த நாட்டு மக்களுக்காக பலியிட நான் தேர்ந்தெடுக்கப்பட்டபோது அது நியாயமில்லை என்று உங்களிடம் ஆணவத்தோடு வாதம் செய்தேன். உங்களால் அங்கீகரிக்கப்பட்ட பலியை நிராகரிக்கும் விதத்தில் எனக்கென்று ஒரு வழியைத் தேர்ந்தெடுத்தேன். ராட்சஷ விலங்கை அடக்குவதாக கர்வத்தோடு அறிவித்தேன். இன்றைக்கு எனக்கு கர்வ பங்கம் ஏற்பட்டுவிட்டது. ஒரே கலக்கமாக இருக்கிறது.''

''எதற்காக கலக்கம்?''

''நான் பலியாகி இருந்தால் பரிகாரம் செய்யப்பட்டிருக்கும். ராட்சஷ விலங்கின் பிரச்சனை தீர்க்கப்பட்டிருக்கும். மக்கள்

சுபிட்சமடைந்திருப்பார்கள். நான் வேறு மாதிரி செயல் பட்டதால் எல்லாம் தலைகீழாகிவிட்டது. அந்த ராட்சஷ விலங்கு இன்று ஆயிரத்துக்கும் மேற்பட்ட மனிதர்களை கொன்று விட்டது. மன்னரும் மக்களும் அதிர்ச்சியடைந்திருக்கிறார்கள். மன்னர் என்னிடம் பேசவே வெறுப்படைகிறார். அந்த மிருகம் மீண்டும் என்ன செய்யுமோ தெரியவில்லை. நீங்கள் தான் வழி சொல்ல வேண்டும்.''

''அனுதாபத்திற்குரியவனே! காலம் காலமாய் பாரம் பரியமாய் நடந்து வரும் சம்பிரதாயங்களை திடீரென அகற்றுவது பாவமாகும். அறிவீனமாகும். எல்லோரையும் சமமாக பாவிக்கும் நான் உன்னைப் பலியிடப் போவதாகச் சொன்ன போது சம்மதித்தேன். அதற்குக் காரணம் நான் மேலே சொன்ன பாரம்பரியம்தான். மனித சக்திக்கு அப்பாற்பட்ட விஷயங்கள் தலைகாட்டுகிறபோது உன்னைப் போன்ற தனி மனிதனால் என்ன செய்ய முடியும்? ஆகவே தான் பரிகாரங்களை உருவாக்குகிறோம்.''

''உண்மைதான் ஐயா. இப்போது ஏதாவது வழி இருக்கிறதா?''

''மீண்டும் புதிய பரிகாரம் மூலம்தான் வழி காண வேண்டும்.''

''என்னை வேண்டுமானால் பலியிட்டுவிடுங்கள் குருநாதரே. மதியிழந்து என் முகத்தை இழந்த எனக்குப் பழைய முகம் கிடைக்காது என்று வைத்தியர் சொல்லிவிட்டார். பாருங்கள் இந்த முகத்தை'' என்று சொல்லி கவசத்தை நீக்கிக் காட்டினான் உதயசந்திரன்.

பல்வேறு பயங்கரங்களைக் கண்டவரும் பஞ்சமா பாதகங்களைச் செய்ய அஞ்சாதவருமான குலகுரு உதய சந்திரனின் கோர முகத்தைக் காண முடியாமல் அதிர்ந்துபோய் 'கவசத்தைப் போட்டுக் கொள் முதலில்' என்று அவசரம் அவசரமாகச் சொன்னார்.

கவசத்தை அணிந்து கொண்டான் உதயசந்திரன்.

'என்ன கோரமான முகம் இது? எரிந்து கொண்டிருக்கும் சிதையிலிருந்து எழுந்து வந்த பிணத்தின் முகத்தைப் போல அல்லவா இருக்கிறது? பேய்கள் முகங்கள் கூட பரவாயில்லை என்று தோன்றுகிறதே! இந்த முகத்தை எப்படி இவன் தாங்கிக் கொண்டிருக்கிறான்?' என்று வெறுப்பும் அனுதாபமும் கொண்டு எண்ணிய குலகுரு ''மூட வாலிபனே! உனக்கு வேறு வழியே தோன்றவில்லையா? நீ எப்படி வாழப் போகிறாயோ

தெரியவில்லை. இப்போது நீ போ. பரிகாரத்தை நான் யோசித்துச் சொல்கிறேன்'' என்றார்.

''மக்கள் என் மீது திரும்பிவிடுவார்களோ என்று பயமாக இருக்கிறது ஐயா. என்னைக் காப்பாற்றுங்கள்'' என்றான் உதயசந்திரன்.

''அதெல்லாம் ஒன்றும் நடக்காது. நான் பார்த்துக் கொள்கிறேன். எதற்கும் நீ வெளியே தலைகாட்டாமல் அரண்மனையிலேயே எங்காவது ஒளிந்து கொள்.''

''நல்லது ஐயா.''

வெளியே வந்த உதயசந்திரன் பணியாளனிடம் நன்றி தெரிவித்துவிட்டு ''உன் பெயரென்ன அப்பனே?'' என்று கேட்டான்.

''குண்டன்'' என்றான் பணியாளன்.

தன் இருப்பிடத்திற்கு வந்தான் உதயசந்திரன்.

தனது காவலாளிகளில் ஒருவனை அழைத்து ''நீ ஒரு காரியம் செய்ய வேண்டும்'' என்றான்.

''சொல்லுங்கள் ஐயா.''

''மிகவும் அபாயகரமானது. நுட்பமானது. ரகசியமானது.''

''சொல்லுங்கள் ஐயா.''

''குலகுருவின் மாளிகைக்குச் செல். அங்கே குண்டன் என்னும் பணியாளன் இருக்கிறான். நன்றாக விசாரித்துத் தெரிந்து கொள். எப்படியாவது இங்கே அழைத்து வந்து யாருக்கும் தெரியாமல் அடைத்து வை. இன்றோ அல்லது நாளையோ இது நடக்க வேண்டும். முடியுமா?''

''முடியும் ஐயா.''

''இது யாருக்கும் தெரியக்கூடாது.''

மறுநாள் பொழுது விடியவிருந்த நேரத்தில் நகரத்தில் பிரவேசித்தது நகராசூரன். இடைவிடாமல் கத்தி நகரைக் கலக்கியது.

கண்ணில் பட்டவரை மிதித்தும் கடித்தும் கொன்றது.

அரங்கத்திற்குச் சென்று அரங்கத்தை துவம்சம் செய்தது.

ஒரு சில கட்டிடங்களை மிதித்து இடித்தது.

வானத்தைப் பார்த்து கத்தியது.

மறுநாளும் அதே கதை.

மூன்றாவது நாள் அது வந்தபோது ஆத்திரமடைந்த மக்கள் அதன் மீது கற்களையும் கட்டைகளையும் பந்தங்களையும் எறிந்தார்கள். ஆனால் அது சளைக்கவுமில்லை. அசரவுமில்லை. மக்களை துவம்சம் செய்தது. வீதியில் இருந்த கட்டிடங்களை நொறுக்கியது.

உதயசந்திரன் மன்னனைச் சந்தித்தான்.

''மன்னவா! நகராசூரன் இனி அன்புக்குக் கட்டுப்படாது. அடங்காது. அதன் வால் அறுந்து தொங்குகிறது. அதனால் சீற்றத்தைத்தான் தொடர்ந்து காட்டும். அதை அழிப்பதைத் தவிர வேறு வழியில்லை'' என்றான்.

மன்னனுக்கும் அது சரி என்றே தோன்றியது.

''என்ன செய்யலாம்?'' என்று கேட்டான் மன்னன்.

சொன்னான் உதயசந்திரன்.

மன்னனுக்கு அந்தத் திட்டம் விசித்திரமாக இருந்தது.

☆☆☆



81

நகராசூரன் வதம்

"மன்னவா! அந்த அசுர விலங்கு காட்டை அடுத்த மலைக்குப் பின்னால் இருக்கும் அகன்ற பள்ளத்தாக்கில் தான் குடியிருக்கிறது. பள்ளத்தாக்கிற்கு அப்பால் தொடர்ந்து காடுகள் இருப்பதால் அப்பக்கத்தில் செல்ல முடியாமல் நமது நகர்புறமாக வந்து போய்க் கொண்டிருந்தது. இப்போதைய நிலையில் அது எப்போது வேண்டுமானாலும் வரக்கூடும். அதை நமது வீரர்களாலோ மக்களாலோ அழிக்க முடியாது. எனவே யானைகளுக்குப் பேர்போன இந்த நாட்டில் உள்ள யானைகளையே பயன்படுத்துவோம். இந்திரபுரத்திலும் அதன் சுற்றுப்புரங்களிலும் உள்ள பத்தாயிரம் யானைகளை கொண்டு வாருங்கள். நம்மைத் தேடி நகராசூரன் வருவதற்குள் அதைத் தேடி நமது யானைகள் செல்லட்டும். பிரம்மாண்ட விலங்கிற்கு மாற்று யானைப் படைதான்" என்றான் உதயசந்திரன்.

மன்னனுக்கு இந்த யோசனை விசித்திரமாகத்தான் இருந்தது. அதைக் கட்டுப்படுத்தும் சக்தி மக்களிடம் இல்லை. அதை மயக்கமடையச் செய்யவோ வலைவிரித்துப் பிடிக்கவோ வழியில்லை. எனவே மன்னன் சேனாதிபதியையும் உபதளபதி களையும் அழைத்து உதயசந்திரனின் திட்டத்தை உடனடியாக அமல்படுத்தும்படிச் சொன்னான். அதையடுத்து வேலைகள் வேகமாக நடந்தன.

சாரிசாரியாக சிறுசிறு குன்றுகளைப் போன்ற யானைகள் மலையை நோக்கிச் செல்வதைக் கண்ட மக்கள் வாயைப் பிளந்தபடி பார்த்தார்கள். அதோடு காம்போஜத்தில் இருந்த யானைகள் ஆப்பிரிக்க காட்டு யானைகளைப் போல பெரிதாக இருந்ததால் அவை மலைகளின் மீது கூட்டம் கூட்டமாக கம்பீரமாக ஏறிச் சென்றவிதமானது கருமேகக் கூட்டங்கள் யானைகளாக மாறி மலையைத் தழுவிச் செல்வதுபோல் இருந்தது.

மலையேறிய யானைகளை இயக்கிய மாவுத்தர்கள் அவற்றை முடுக்கிவிட்டதால் எல்லா யானைகளுமே உரத்த குரலில் பிளிறிக் கொண்டு சென்றன. இப்படி மலையை அதிர வைக்கும் பிளிறல்களுடன் யானைகள் மலையின் உச்சிக்கு வந்து நின்றதை பள்ளத்தாக்கில் படுத்திருந்த அசுர விலங்கு கண்டது. யானைகள் அப்படி கணக்கற்ற விதத்தில் வருவது தன்னை எதிர்க்கத் தான் என்பதைப் புரிந்துகொண்ட அது, எழுந்து நின்று வானத்தை நோக்கியும் பிறகு யானைகளை நோக்கியும் கத்தியபோது அது பார்ப்பதற்கு அச்சம் தருவதாக இருந்தது. பள்ளத்தாக்கை விட்டு அது எழுந்து மலையை நோக்கி ஏறி வந்தபோது மாவுத்தர்கள் கலங்கினார்கள். யானைகளுக்கு காதுகளுக்கிடையே அங்குசத்தால் அவர்கள் குத்தவே அவை துதிக்கைகளைத் தூக்கிக் கொண்டும் பிளிறிக் கொண்டும் நகராசூரனை நோக்கி முன்னேறின. நகராசூரன் எத்தனை பிரம்மாண்டமானதாக இருந்தாலும் பத்தாயிரம் யானைகளுக்கு முன்னால் பிரம்மாண்டத்தை இழந்தது என்று தான் சொல்ல வேண்டும். அதன் வால் பகுதி அறுபட்டு தொங்கிக் கொண்டிருந்ததால் வாலால் தாக்க முடியாமல் கழுத்தை வளைத்து யானைகளின் மீதிருந்த மாவுத்தர்கள் ஓரிருவரை வாயால் கவ்விக் கடித்தது. அதைக் கண்டதும் மாவுத்தர்கள் கீழே குதித்தார்கள். யானைகள் வீறு கொண்டு நகராசூரனைச் சூழ்ந்து கொண்டு தாக்கின. அசுர விலங்கின் கால்களும் உடம்பும் யானைகளுக்கிடையே சிக்கிக் கொண்டதால் நகர்த்த முடியவில்லை. கழுத்தை வளைத்து யானைகளை கடிக்க முற்பட்டது. யானைகளோ நகராசூரனை மேலும் நெறுக்கின. அதன் உடலை தும்பிக்கையால் அடித்தன. தந்தங்களில் கண்டபடி கிழிக்க முற்படவே பெரும் அவஸ்தைக்கு ஆளாயிற்று அசுர விலங்கு. இதற்கிடையில் யானைகள் தாறுமாறாக மிதித்ததால் அதன் கால்கள் உடைய பெருமரம் ஒன்று சாய்வது போல் சாய்ந்தது. யானைகளும் அதுதான் சந்தர்ப்பம் என்று உணர்ந்ததுபோல் நகராசூரனின் உடலையும் கழுத்தையும் தலையையும் நசுக்கி கூழ் கூழாக ஆக்கின. தனது பிரம்மாண்ட உருவத்தால் எல்லோரையும் வியக்கச் செய்து கொண்டிருந்த அசுர மிருகம் தாறுமாறாகச் சிதைந்து துண்டுகளாகி அடையாளத்தை இழந்து விட்டிருந்தது.

அன்பால் கவரப்பட்டு மக்களிடம் குழந்தை போல் பழகி வந்த வினோத மிருகம் பாழும் மந்திரவாதிகளின் கேவலமான செயலால் வாலில் காயமடைந்து காயத்தைத் தாங்க முடியாமல்

குழந்தைத்தனத்தை விட்டுவிட்டு அசுரத்தனத்தை மேற்கொண்டு மக்களைத் தாக்கிவிட்டு முடிவில் யானைகளிடம் சிக்கி உயிரை விட்டிருந்தது.

நான்கு நாட்களாக நூற்றுக்கணக்கான அப்பாவி மக்களைக் கொன்று மக்களின் கோபத்திற்கு ஆளாகியிருந்தாலும் அதன் மரணம் காம்போஜ நாட்டு மக்களிடம் அனுதாபத்தையே உண்டாக்கியது. இந்திரபுரம் திடீரென்று சூன்யமாகிவிட்டது போல் எண்ணி வருந்தினார்கள். தெருக்களிலும் கடற்கரையிலும் கூடிய மக்கள் இச்சம்பவத்தைப் பற்றியே பேசிப் பேசி மாய்ந்து போனார்கள். அவர்களது மனங்களில் அந்த மிருகம் நீங்காத இடத்தைப் பிடித்தது. அந்த மிருகத்தின் எலும்புகளைத் திரட்டி குவிக்கப் பட்டிருந்ததை மக்கள் திரளாக வந்து பார்த்தார்கள். மிருகம் உயிர்விட்ட இடத்தில் அவற்றைப் புதைத்து தூண் ஒன்றை நிறுவும்படி கட்டளையிட்டான் மன்னன்.

ராட்சஷ விலங்கின் பிரச்சனை நிரந்தரமாக தீர்க்கப்பட்டதில் மக்கள் கவலைக்கிடையில் மகிழ்ந்தார்கள்.

''மிகவும் நன்றி உபதலைவரே'' என்று உதயசந்திரனிடம் சொன்னான் மன்னன்.

''நன்றியை ஏற்றுக் கொள்வதற்கு இந்த விஷயத்தில் திருப்தியும் மகிழ்ச்சியும் இல்லை மன்னவா. நகராசூரனைக் கொல்வது தான் பிரச்சனைக்கு வழி என்றால் முதலிலேயே அந்த திட்டத்தை நான் சொல்லியிருப்பேன். ஆனால் அபூர்வமான ஒரு உயிரினத்தைக் கொல்வதைவிட பழக்கிக் கொள்ளலாம் என்பதால் தான் வேறு வழியைச் சொன்னேன். ஆனால் அந்த மிருகத்தை மிகவும் குரூரமான வழியில் கொன்றதோடு மட்டுமின்றி நூற்றுக்கணக்கான மக்களையும் இழந்து விட்டோம்'' என்றான் உதயசந்திரன்.

''இதில் கவலைப்பட எதுவுமில்லை உபதலைவரே. உங்கள் அணுகுமுறை சரிதான். எல்லா விலங்குகளும் பழக்கத்தால் கட்டுப்பட்டு விடுவதில்லை. உதாரணமாக யானையை எடுத்துக் கொள்ளுங்கள். மாவுத்தன் அதை பழக்குகிறான். அதனோடு நட்பு கொள்கிறான். ஆனால் மதம் பிடித்துவிட்டால் அது பாகனையே மிதித்துக் கொன்றுவிடுகிறது. அறிந்தறிந்து யானை பாகனையே கொல்லும் என்று உங்கள் நாட்டில் கூறுவார்கள். அதனால் தானோ என்னவோ சீன நாட்டில் யானைகளே கிடையாது. அதை

வளர்ப்பது கிடையாது. அபசகுனமாகக் கருதுகிறார்கள்.* நகராசூரனும் அப்படித்தான். அதற்குத் தீங்கு விளைந்து விட்டவுடன் யானையைப் போலவே பழகிய மக்களையே கொல்ல முற்பட்டுவிட்டது. அந்த மிருகத்தின் வாலுக்குச் சேதம் உண்டாகாமல் இருந்திருந்தால் அது தொடர்ந்து பாச மிருகமாகவே இருந்திருக்கலாம். ஆனால் அமைதியை விரும்பாதவர்களும் பொறாமைக்காரர்களும் வேறிறாரு சந்தர்ப்பத்தில் இதேபோல நடந்து கொள்ளலாம். அப்போது நகராசூரன் மக்களைக் கொல்லலாம். அந்த விபரீதம் நீங்கள் இருக்கும்போதே நடந்து பிரச்சனை தீர்க்கப்பட்டு விட்டது. இதில் கவலைப்பட எதுவுமில்லை'' என்றான் மன்னன்.

உதயசந்திரன் சிறிது நேரம் மௌனமாக இருந்துவிட்டு பிறகு கேட்டான்.

''உங்களிடம் கடற்படை இல்லையா?''

''இருந்தது. ஐந்நூறு மரக்கலங்கள் இருந்தன. கொள்ளைக் காரர்கள் பலவற்றை அழித்துவிட்டார்கள். பல கப்பல்கள் சேதமாகிவிட்டன. மீதமுள்ள கப்பல்கள் பழுதாகிவிட்டதால் பழுது பார்ப்பதற்காக சீன நாட்டிற்கு சென்றுவிட்டன. புதிய மரக்கலங்களும் சாவகத்தில் கட்டப்பட்டு வருகின்றன.''

''படகுகள் இருக்கின்றனவா?''

''இருக்கின்றன''

''ஐநூறு படகுகளை தயார் படுத்துங்கள் மன்னவா?''

''எதற்கு?''

''சுளுக்களை மறந்துவிட்டீர்களா?''

''கொள்ளைக்காரர்கள் தானே?''

''ஆமாம்.''

''அவர்களை வெறும் படகுகளைக் கொண்டு எதிர்க்கப் போகிறீர்களா?''

''அதைப் பற்றி பிறகு பேசுவோம் மன்னவா. இப்போது படகுகளை தயார் செய்யுங்கள்'' என்று சொன்ன உதயசந்திரன் ''சுளுக்களின் தாக்குதல் ஒரு வார காலத்தில் நடக்கலாம்'' என்றான்.

தன் இருப்பிடத்திற்குச் சென்ற உதயசந்திரன் தனது பணியாளனை அழைத்துக் கொண்டு ரகசிய அறைக்குச் சென்றான்.

* Page 127 'Foreign notices is South India' by K.A.Nilakanta Sastri

அந்த அறையில் கட்டிலில் படுத்துக் கிடந்தான் குலகுருவின் பணியாளனான குண்டன்.

உதயசந்திரனைக் கண்டதும் ''ஐயா, இது அநீதி. அக்கிரமம். நான் என்ன குற்றம் செய்தேன் என்று இங்கே அடைத்து வைத்திருக்கிறீர்கள்?'' என்று படபடப்புடன் கேட்டான் குண்டன்.

உதயசந்திரன் தன் பணியாளனை அனுப்பிவிட்டு ''உட்கார் குண்டோதரா. வசதியெல்லாம் எப்படி இருக்கிறது? நல்ல உணவு கிடைக்கிறதா?'' என்று கேட்டான்.

''என் பெயர் குண்டோதரன் இல்லை. குண்டன்.''

''இரண்டும் ஒன்றுதான். இதுதானா உனக்கு இப்போது பிரச்சனை?''

''இல்லை. இங்கே சிறையிருப்பதுதான் பிரச்சனை.''

''உன்னைச் சிறை வைக்கவில்லை குண்டோதரா. கைதிகளுக்கு இவ்வளவு வசதிகளை யார் செய்து கொடுப்பார்கள்? உன்னிடம் சில விஷயங்களைக் கேட்பதற்குத்தான் அழைத்து வரச் சொன்னேன். இடையில் ராட்சஷ மிருகப் பிரச்சனை வந்துவிட்டதால் அங்கே போய்விட்டேன். இங்கே தாமதமாகிவிட்டது.''

''என்னை குலகுரு தேடுவார்.''

''தேடிக் கொண்டு இங்கே வரட்டும். பார்த்துக் கொள்ளலாம். அன்றைக்கு நான் அவரது மாளிகைக்கு வந்தபோது அவர்களோடு சில விருந்தாளிகள் இருந்தார்களே அவர்கள் யார்?''

''தெரியாது.''

''குண்டோதரா. ராட்சஷ விலங்கை நீ கண்டிருக்கிறாயா?''

''கண்டிருக்கிறேன்.''

''அது எவ்வளவு பிரம்மாண்டமானது?''

''ஆமாம். அதற்கென்ன?''

''அதையே நான் யானைகளை வைத்துக் கொன்று விட்டேன்.''

''அதனால் என்ன?''

''நீ வெறும் தூசி. உன்னையும் யானையிடம் கொடுத்து மிதிக்கச் சொல்வேன்.''

''எதற்கு?''

''சாவதற்கு.''

''நான் ஏன் சாக வேண்டும்?''

''நீ உண்மையைச் சொல்ல மறுக்கிறாய். இதோ பார் குண்டோதரா. இனி உனக்கும் குலகுருவுக்கும் ஒரு சம்பந்தமும் இல்லை. உனக்கு அரண்மனையில் வேலை வாங்கித் தருகிறேன். பயப்படாமல் சொல். அன்றைக்கு வந்த விருந்தாளிகள் யார்?''

''தலைமை மந்திரவாதியும் அவரது சகாக்களும்.''

''மறுபடியும் பொய் சொல்லாதே. மந்திரவாதிகள்தான் காம்போஜத்தை விட்டு ஓடிவிட்டார்களே?''

''ஓடவில்லை. இங்கே தான் இருக்கிறார்கள்.''

''எப்படிச் சொல்கிறாய்.''

''வணிகர்கள் வேடத்தில் இருக்கிறார்கள்.''

''நீ சொன்னால் அது உண்மையாகத்தான் இருக்கும். அது சரி அவர்களுக்கும் குலகுருவுக்கும் என்ன சம்பந்தம்?''

''எனக்குத் தெரியாது.''

''குண்டோதரா! என் முகத்தை நீ பார்த்திருக்கிறாயா?''

''இல்லை.''

''பார்க்கிறாயா?''

''வேண்டாம்.''

''ஏன்?''

''மகா கோரம்.''

''உன் முகமும் அப்படி ஆக வேண்டுமா?''

''என் முகமா?''

''நீ பொய்யைச் சொன்னால் உன்னை வைத்தியரிடம் அழைத்துப் போவேன். முகத்தை கோரமாக்குவேன்.''

''நான் உண்மையைத்தான் சொல்கிறேன் ஐயா. குலகுருவுக்கும் மந்திரவாதிகளுக்கும் என்ன சம்பந்தம் என்பது எனக்குத் தெரியாது. ஆனால் இருவரும் வேண்டியவர்கள். அடிக்கடி சந்தித்துக் கொள்வார்கள். என்ன பேசுவார்கள் என்பது எனக்குத் தெரியாது'' என்று சொன்ன குண்டோதரன் ''முக்கியமான விஷயம் ஒன்றிருக்கிறது. அதை விட்டுவிட்டு நீங்கள் ஏதோ கேட்டுக் கொண்டிருக்கிறீர்கள்'' என்றான்.

''என்ன அது?'' என்று கேட்டான் உதயசந்திரன்.

''விஷயத்தைக் கேட்டால் அதிர்ந்து போவீர்கள்.''

''பீடிகை போடாமல் சொல்.''

''உரிய சன்மானம் இல்லாமல் சொல்ல முடியாது.''

''என்ன சன்மானம் வேண்டும்?''

''ஆயிரம் பொற்காசுகள் வேண்டும்.''

''குண்டோதரா! உன்னை மன்னரிடம் ஒப்படைத்து உன்னிடமிருந்து விஷயத்தை கறப்பது எளிதான விஷயம். இருந்தாலும் உன் தைரியத்திற்காக நீ கேட்ட சன்மானத்தைக் கொடுக்கிறேன். விஷயத்தைச் சொல்.''

''முதலில் பொற்காசுகளைக் கொண்டு வாருங்கள்.''

''முட்டாளே! நீ இப்போது இருக்கும் நிலையை உணராமல் உளறுகிறாய்? உன்னிடமிருந்து எனக்கு எந்த விஷயமும் தேவையில்லை. எதிர்பார்க்கவுமில்லை. உன்னை நம்பி நானில்லை'' என்று கூறிவிட்டுப் புறப்பட்டான் உதயசந்திரன்.

குண்டோதரன் தனது நிலையை உணர்ந்தவனாய், ''ஐயா, நில்லுங்கள். என் அதிகப்பிரசங்கித் தனத்தை மன்னியுங்கள். என்னோடு ஓர் இடத்திற்கு வரவேண்டும். வந்தால் அதைக் காட்டுகிறேன்'' என்றான்.

உதயசந்திரன் உடனே ஒரு மூடு ரதத்தை ஏற்பாடு செய்து குண்டோதரனுடன் பயணம் செய்தான். இந்திரபுரத்தின் தெற்கு கோடியில் போய் நின்றது ரதம். அங்கே இறங்கிய குண்டோதரன் தடாகம் ஒன்றையடுத்திருந்த கட்டிடம் ஒன்றுக்கு அழைத்துச் சென்றான். ஆள் அரவமற்ற அந்த கட்டிடத்தில் மூதாட்டி ஒருத்தி இருந்தாள். அவளிடம் ஏதோ கூறிவிட்டு உதயசந்திரனை உள்ளே ஓர் அறைக்கு அழைத்துச் சென்றான். அறையைத் திறந்தான். உள்ளே பத்மினி கலைந்த கோலம் போலக் கிடந்தாள். குண்டோதரன் உள்ளே சென்று ''அம்மணி! அம்மணி! எழுந்திருங்கள்'' என்றான்.

அவள் எழவில்லை.

முகத்தில் நீரை அடித்தான் எழவில்லை.

''இரு'' என்று கூறிவிட்டு உதயசந்திரன் குனிந்து அவளைச் சோதித்தான்.

அவளிடம் சுவாசம் இல்லை. இதயத் துடிப்பு இல்லை. உடலும் சில்லிட்டுப் போயிருந்தது.

''இவள் இறந்து விட்டாளா ஐயா?'' என்று கேட்டான் குண்டோதரன்.

''ஆமாம். இவளது கழுத்து நெறிக்கப்பட்டிருக்கிறது. மூச்சுத் திணறி இறந்திருக்கிறாள்'' என்றான் உதயசந்திரன்.

''ஐயோ! ஐயோ!'' என்று தலையில் அடித்துக் கொண்ட குண்டோதரன் ''இவள் உயிரோடு இருக்க வேண்டும் என்றல்லவா இங்கே கொண்டு வந்தேன்? இப்படி ஆகிவிட்டதே?'' என்று கலங்கினான்.

''யார் இந்தப் பெண்?''

''குலகுருவிடம் நீண்ட நாட்களாகப் பழகி வரும் பெண்களில் இவளும் ஒருத்தி. பெயர் பத்மினி. குலகுரு பல பெண்களை வரவழைப்பார். ஒவ்வொரு பெண்ணையும் பிறந்த மேனியாக்கி பலகோணங்களில் ரசிப்பார். ஆனால் சில நாட்களுக்கு முன்பு வந்த இந்தப் பெண் என்ன செய்தாளோ தெரியாது. அன்றைக்கு அவர் இவளைத் தொட்டு சல்லாபமாக இருந்தார். தினமும் அது தொடர்ந்தது. பிறகு என்ன ஆயிற்றோ தெரியவில்லை. இந்தப் பெண்ணை தனது பாதாள அறையில் அடைத்து வைத்து சித்திரவதை செய்தார். புதுமணப் பெண் போல வந்தவள் பித்து பிடித்தவளைப் போலானாள். அமிர்த கலசம் போல் இருந்தவள் உடைந்த பாண்டம் போலானாள். நீங்கள் அவரது மாளிகைக்கு வருவதற்கு இரண்டு நாட்களுக்கு முன் குற்றுயிரும் கொலையுயிருமாய் இருந்த இவளை குலகுரு என்னிடம் ஒப்படைத்து எங்கேயாவது கொண்டு போய் கொன்று புதைத்துவிடும்படிக் கட்டளையிட்டார். நான் தான் மனமில்லாமல் இங்கு கொண்டு வந்து சிகிச்சைக்கு ஏற்பாடு செய்து மூதாட்டியைக் காவலுக்கு வைத்தேன். இதற்கிடையில் நீங்கள் என்னை ஆள் வைத்து கடத்திவிட்டீர்கள். கவனிப்பாரற்றுப் போனதால் அவள் இறந்துவிட்டாள்.''

''இறந்துவிட்டது உண்மை. ஆனால் அவளாக இறக்க வில்லை. அவளை யாரோ கொலை செய்திருக்கிறார்கள்'' என்று சொன்ன உதயசந்திரன் ''இவளை ஏன் இங்கு கொண்டு வந்தாய்? வைத்திய சாலையில் சேர்த்திருக்கலாமே! மன்னரிடம் சொல்லியிருக்கலாமே!'' என்று கேட்டான்.

''என் நிலையை கொஞ்சம் யோசித்துப் பாருங்கள் ஐயா. குலகுரு எனக்கிட்ட கட்டளை இவளைக் கொல்ல வேண்டும் என்று. இந்த நிலையில் இவளைக் காப்பாற்ற நினைத்த நான் எனக்குத் தெரிந்த ரகசிய இடத்தில் தான் கொண்டு போக முடியும். வேறு வழிகளைச் சிந்திக்க முடியுமா? நீங்கள் சொல்வதுபோல் செய்தால் மீண்டும் குலகுருவிடம் செல்ல முடியுமா?''

''உண்மைதான்'' என்று ஒப்புக் கொண்ட உதயசந்திரன் ''இவள் யாரென்று தெரியுமா?'' என்று கேட்டான்.

''பெயர் மட்டும்தான் தெரியும் ஐயா. வேறு விவரம் தெரியாது. குலகுருவுக்குப் பெண்களை அனுப்பும் தரகனுக்கு வேண்டுமானால் தெரியலாம்.''

''அவன் எங்கே இருக்கிறான்?''

சொன்னான் குண்டோதரன்.

''குண்டோதரா, இப்போதைக்கு இவளது உடலை நகரத்து வைத்தியசாலையில் கெடாமல் பாதுகாத்து வைக்கச் சொல்லலாம். பிறகு தரகனை வரவழைத்து இவள் யாரென்று கண்டுபிடிக்கலாம்'' என்று சொன்ன உதயசந்திரன் பத்மினியின் சடலத்தை தேரில் ஏற்றி வைத்தியசாலைக்குச் சென்றான்.

உதயசந்திரனுக்கு மன்னன் சகல உரிமைகளையும் வழங்கியிருந்தானாதலால் எல்லா வேலைகளும் நடந்தன. தரகனும் வரவழைக்கப்பட்டான் வீரர்களால். பத்மினி அனாதை என்றும் இந்திரபுரத்து சந்தையில் வசிப்பவள் என்பதையும் சொன்னான் தரகன். தரகன் சிறைக்கு அனுப்பப்பட்டான். பத்மினியின் சடலம் அடக்கம் செய்யப்பட்டது. குண்டோதரன் அரண்மனை பணிக்கு அனுப்பப்பட்டான்.

எல்லா வேலைகளையும் முடித்துவிட்டு தனது இருப்பிடத்திற்கு வந்து நீராடிவிட்டு புத்துயிர் பெற்றான் உதயசந்திரன்.

அவனுக்குள் பல கேள்விகள் உண்டாகியிருந்தன.

குலகுரு உண்மையிலேயே குருநாதன் இல்லை என்பது திட்டவட்டமாகப் புரிந்தது அவனுக்கு.

'அவன் வேறு யாரோவாகத்தான் இருக்க வேண்டும்.

ஒருவேளை அவன் யார் என்பது பத்மினிக்குத் தெரிந்திருக்க வேண்டும்.

அதனால் அவள் கொலை செய்யப்பட்டிருக்க வேண்டும்.'

- என்று நினைத்துப் பார்த்த உதயசந்திரன் அன்றிரவு பத்மினி இறந்து கிடந்த அறைக்குப் போனான்.

அங்கே அவனுக்குக் கிடைத்த செய்தி மிகவும் எதிர்பாராததாக இருந்தது.

☆☆☆



72

தூலங்கிய மர்மம்

குலகுருவைச் சந்திக்கச் சென்றபோது உதயசந்திரன் சாதாரணமாகத்தான் சென்றானே தவிர சந்தேகத்தோடு செல்லவில்லை. அவரது மாளிகையில் விருந்தினர்கள் கொண்டாட்டம் போடுவதாக குண்டோதரன் கூறியபோது அதுவரை வராத சந்தேகம் அவர் மீது வந்தது. அவரைச் சந்தித்துப் பேசினால் ஏதாவது விவரம் கிடைக்கும் என்று எதிர்பார்த்து அவரைச்சந்தித்து அவரது அருளை வேண்டுவது போல் பணிவாகப் பேசினான். அவரோ எதையும் தன் பேச்சில் கசிய விடாமல் எச்சரிக்கையுடன் பேசினார். கடைசியில் அவன் எதிர்பார்த்த விஷயங்களும் எதிர்பாராத விஷயங்களும் பணியாளன் குண்டோதரன் மூலம் தான் கிடைத்தன. மந்திரவாதிகளுடன் குலகுருவுக்குத் தொடர்பு இருந்தது அவன் ஓரளவிற்கு எதிர்பார்த்ததுதான். ஆனால் அவருக்கும் பத்மினி என்ற பெண்ணிற்கும் இருந்த தொடர்பு அவள் கொலை செய்யப்பட்டிருந்தது ஆகிய விஷயங்கள் மட்டும் அவனுக்குப் புரியாத சந்தேகங்களாக இருந்தன. எனவே பத்மினி சடலமாக இருந்த இடத்தைப்போய் பார்த்துவிட்டு வர விரும்பினான். அவளைக் கொன்றுவிடும்படி குண்டோதரனிடம் குலகுரு கூறியதின் காரணம் அவனுக்குத் தெரியவில்லை. அதேசமயம் குண்டோதரன் கொல்லாமல் விட்ட அந்த பெண்ணை அவரோ அல்லது அவரது ஆளோ தான் பிறகு கொலை செய்திருக்க வேண்டும் என்றும் அதில் ஏதோ மர்மம் இருக்க வேண்டும் என்றும் நினைத்து மூடு தேரில் ஏறி அந்த இடத்திற்குச் சென்றான். தேரை மறைவாக நிறுத்தி வைக்கும்படி பாகனிடம் கூறிவிட்டுச் சடலம் இருந்த அறைக்கு வந்தான். அதோடு அவனுக்கு இன்னொரு சந்தேகமும் வந்தது. பத்மினியைப் பார்க்கப் போகும்போது அறை பூட்டியிருந்தது. குண்டோதரன் தான் பூட்டைத் திறந்தான். பத்மினி இறந்து கிடந்தாள். பூட்டிய அறைக்குள் இருந்த அவளை கதவைத் திறக்காமல் எப்படி கொலை செய்ய முடியும்? ஒருவேளை

குண்டோதரனே கொலை செய்துவிட்டு நாடகமாடுகிறானோ? இவ்வாறெல்லாம் எண்ணியபடி அறைக்குள் சென்று ஆராய்ச்சியில் ஈடுபட்டான். அறையில் ரத்தக் கறை எதுவும் காணப் படவில்லை. எதேச்சையாக சுவற்றைக் கவனித்தபோது அதில் ஏதோ எழுதப்பட்டிருந்ததைக் கண்டான். குச்சியால் அச்சுவற்றில் ஏதோ கீறப்பட்டிருந்தது. அதை நெருங்கிப் போய் படித்த அவனுக்கு பேரதிர்ச்சி உண்டாகியது. அதை இறந்து போன பத்மினி தான் எழுதியிருக்க வேண்டும் என்பதில் அவனுக்குச் சந்தேகமில்லை. ஏனென்றால் சுவற்றில் இருந்த வாசகம் குலகுரு யார் என்பதைப் பறைச்சாற்றியது. தனது நிலையை உணர்ந்து கொண்டு பத்மினிதான் அவ்வாறு எழுதியிருக்க வேண்டும் என்று நினைத்தான் உதயசந்திரன். ஆனால் குலகுருவின் உண்மையான சொரூபம் இதுவாக இருக்கும் என்று அவன் சிறிதும் எதிர்பார்க் கவில்லை. இப்படிப்பட்டவனைப் போய் மன்னன் தன் குலகுருவாக எப்படி ஏற்றான் என்பதும் அவனுக்கு விந்தையாக இருந்தது.

ஒரு மர்மம் ஒருவாறு விளங்கிவிட்டதால் அந்தச் சுவர் வாசகங்களை குப்பைகளால் மறைத்தான் உதயசந்திரன். அடுத்ததாக பூட்டிய அறைக்குள் கொலையாளி எப்படி வரமுடியும் என்று யோசித்து அறையின் தரையை தீவிரமாக ஆராய்ந்தான். இந்த விஷயத்தில் அவன் எதிர்பார்த்த மாதிரியே அறையில் சுரங்கப் பாதை இருப்பது தெரிய வந்தது. சூட்டோடு சூட்டாக சுரங்கப் பாதையின் மர்மத்தை அறிய விரும்பிய அவன் தேரோட்டியை அழைத்து ''நீ எங்காவது தேருடன் சென்று விட்டு இரண்டு நாழிகைகள் கழித்து இங்கே வா'' என்று கூறிவிட்டு சுரங்கப்பாதையின் மூடியைத் திறந்து கீழே இறங்கி மூடியை மூடிவிட்டு மேலும் கீழே சென்று சுரங்கப்பாதையை அடைந்தான். சுரங்கப் பாதையின் சுவற்றைப் பிடித்தபடி நடந்தான். சுரங்க பாதையில் மூச்சு முட்டியதோடு மட்டுமின்றி துர்நாற்றமும் வீசியது. எல்லாவற்றையும் சகித்துக் கொண்டான். முகக்கவசம் அணிந்திருந்ததால் வெளவால்களின் தாக்குதல்களிலிருந்து தப்ப முடிந்தது. ஒரு நாழிகை பயணத்திற்குப் பிறகு சுரங்கப் பாதையில் மேல் நோக்கிச் செல்வதற்கான படிகள் இருந்ததால் மேலே ஏறினான் உதயசந்திரன். மேல் படிக்கு வந்ததும் தடவிப் பார்த்து விசையைத் திருப்பினான். சுரங்கத்தின் வாய் மெதுவாகத் திறந்தது. தலையை மட்டும் நுழைத்து சுற்றும் முற்றும் பார்த்தான். புல் வெளியும் புதர்களும் தென்பட்டன. மேலே ஏறினான். அவனைக்

கண்டதும் நாய் ஒன்று குரைத்தபடி அவன் மீது பாய்ந்தது. அதை அப்படியே பிடித்து சுரங்கத்திற்குள் போட்டு மூடியை மூடினான். அங்கேயே நிற்காமல் அருகே இருந்த மரங்களுக்குப் பின்னால் போய் மறைந்து கொண்டான். நாயின் குரைப்பு சப்தம் அதிக நேரம் நீடிக்காத வண்ணம் அதைச் சுரங்கத்தில் தள்ளி விட்டதால் யாரும் சுரங்கப் பகுதிக்கு வரவில்லை. தான் வந்திருக்கும் இடம் குலகுருவின் இருப்பிடம்தான் என்பது தெரிந்தது அவனுக்கு. அவரோ அல்லது அவரது ஆளோ சுரங்கப்பாதை மூலமாக வந்து பத்மினியை வேலை தீர்த்திருக்க வேண்டும் என்பதும் இந்தச் சுரங்கப்பாதை இருப்பதும் அது பாழடைந்த மாளிகை அறையில் முடிவதும் குண்டோதரனுக்குத் தெரிந்திருக்கவில்லை என்பதும் அவனுக்குப் புரிந்தது.

குலகுருவைப் பற்றி மேலும் துப்பறிய அவன் விரும்பவில்லை. அந்த இடத்தை விட்டு வெளியேறவே விரும்பினான். மீண்டும் சுரங்கப் பாதையின் மூலமாகச் செல்ல விரும்பாத அவன் மரங்களின் மறைவிலேயே நகர்ந்து மாளிகையின் பின்புறச் சோலையின் வழியாக வெளியே வந்தான். அந்த ஊரில் அவன் நன்றாகப் பிரபலமடைந்திருந்த படியால் அவனை வீதியில் கண்டதும் தேரோட்டிகள் பணிந்து அவனை ஏற்றிக் கொண்டனர். அதில் ஏறிய உதயசந்திரன் பாழடைந்த மாளிகைக்குச் சென்று அங்கே தனது மூடு தேரில் ஏறிக் கொண்டு அரண்மனைக்குச் சென்றான்.

அங்கே மன்னன் இல்லை.

மன்னன் மகள் இருந்தாள்.

''வாருங்கள். கும்பிடப்போன தெய்வம் குறுக்கே வந்துவிட்டது'' என்றாள்.

''உன்னைச் சந்தித்து சில நாட்கள் ஆகிவிட்டதால் நலம் விசாரிக்க வேண்டியவனாய் இருக்கிறேன். நலமா?'' என்று கேட்டான் உதயசந்திரன்.

''தெய்வமே விசாரிக்கும்போது நலத்திற்கென்ன குறைவு? அதோடு உங்கள் நினைவு தான் எனக்கு ஊக்க மருந்து. எப்போதும் உங்களையே நினைத்துக் கொண்டிருப்பதால் எனக்கு உடல்நலக் குறைவு வருவதில்லை. எப்போதுமே உற்சாகம்தான். தூக்கத்தில்கூட உங்கள் நினைப்பு பரிபூரணமாக இருப்பதால் தூக்கமும் கூட ஆனந்தமாக இருக்கிறது'' என்றாள் பூவிழி.

''நீ பேசுவது தாலாட்டுவது போல் இருக்கிறது. உன் பேச்சில் எப்படிப்பட்ட கவலைகளும் காணாமல் போய்விடும்'' என்றான் உதயசந்திரன்.

''கவலையில் இருந்தீர்களா என்ன? எங்களின் கவலையைப் போக்கும் உங்களுக்குக் கவலையா? அது என்ன?''

''நகராசூரனால் மக்கள் பலர் அழிந்துவிட்டது கவலையைத் தருகிறது.''

''அதற்கு நீங்கள் என்ன செய்ய முடியும்? போர் என்று வரும்போது அப்பாவி வீரர்கள் மரணமடைவதில்லையா? அதற்காக யாராவது கவலைப்பட முடியுமா? அதோடு நகராசூரன் பிரச்சனை தான் நிரந்தரமாகத் தீர்க்கப்பட்டுவிட்டதே! பிறகு ஏன் கவலைப்படுகிறீர்கள்?''

''நகராசூரன் விஷயத்தில் நான் சரியாகத் திட்டமிட வில்லையோ என்று தோன்றுகிறது.''

''சரியாகத்தான் திட்டமிட்டிருக்கிறீர்கள். நகராசூரனை ஆரம்பத்திலேயே நீங்கள் கொல்ல திட்டமிட்டிருந்தால் அது ஒருவேளை தவறான திட்டமாக இருக்கலாம். நீங்கள் அதனிடம் கருணை காட்டினீர்கள். மக்களின் தாக்குதலிலிருந்து காப்பாற்றினீர்கள். மந்திரவாதிகள் சீண்டிவிட்டதால் அது வெறிக்கு ஆளாகிவிட்டது. அதற்கு நீங்கள் என்ன செய்ய முடியும்? மக்கள் தான் என்ன செய்ய முடியும்? ஆகவே இந்த விஷயத்தில் உங்கள் மீது ஒரு குறையும் இல்லை.''

''நகராசூரன் பிரச்சனை தீர்ந்துவிட்டாலும் கொள்ளை யர்கள் பிரச்சனை தீரவில்லை. அவர்கள் வராமல் போனது அலைகள் திரும்பியது போலத்தான். அலைகள் மீண்டும் கரைக்கு வரும்.''

''வரட்டுமே. நீங்கள் தான் மலையாக இருக்கிறீர்களே. அலைகள் என்ன செய்யும்?''

''இந்த விஷயத்திலாவது சரியாகத் திட்டமிட வேண்டும் இளவரசி. மன்னரும் எனக்குப் பூரணமான ஒத்துழைப்பு கொடுக்க வேண்டும்.''

''அவர் கொடுக்கவில்லையா?''

அப்படியெல்லாம் இல்லை இளவரசி...''

உதயசந்திரன் ஏதோ இழுப்பதுபோல் பேசவே ''உப தலைவரே! நீங்கள் உங்கள் இருப்பிடத்திற்குச் செல்லுங்கள்.

இன்று மாலை உங்களைச்சந்திக்க நான்கு பேர் வருவார்கள். நீங்கள் இடும் கட்டளைகளை நிறைவேற்றுவார்கள். உங்கள் தேவைகளையும் உடனுக்குடன் கவனிப்பார்கள். இது என் ஏற்பாடு என்று கருத வேண்டாம். மன்னர் ஏற்பாடு என்றே கருதலாம்'' என்றாள் பூவிழி.

அன்று மாலை இளவரசி அனுப்பியதாகச் சொல்லி ஆஜானுபாகர்களாக நான்கு பேர் வந்தார்கள்.

''தலைவரே! என் பெயர் கஜமுகன். காம்போஜத்தில் இருக்கும் யானைகள் அனைத்தையும் பராமரிப்பவன். அது விஷயமாக மன்னருக்கு யோசனை சொல்பவன்'' என்றான் ஒருவன்.

''தலைவரே! என் பெயர் சிங்கமுகன். தரைப்படைக்கான வீரர்களைச் சேகரிப்பவன். பயிற்சியளிப்பவன். படையில் சேர்ப்பவன்.'' என்றான் மற்றொருவன்.

''தலைவரே! என் பெயர் கடல்முகன். கடற்படைக்கு வேண்டிய மரக்கலங்களைத் தயாரித்து பராமரிப்பவன். பழுது பார்ப்பவன். மாலுமிகளுக்கு பணி நியமனம் செய்பவன்'' என்றான் மூன்றாமவன்.

''தலைவரே! என் பெயர் நரிமுகன். ஒற்றர் படைத்தலைவன். நகரக் காவல் பொறுப்பாளி. ஒற்றர்களையும் காவல் வீரர்களையும் நிர்வகிப்பவன்'' என்றான் நான்காமவன்.

அவர்களையெல்லாம் சந்தோஷத்துடன் பார்த்த உதய சந்திரன், ''இதெல்லாம் உங்கள் உண்மைப் பெயர்களா?'' என்று கேட்டான்.

''இல்லை தலைவரே, மன்னர் பிரான் சூட்டிய பெயர்கள்.''

''என்னைத் தலைவன் என்று அழைக்கிறீர்களே அது?''

''இளவரசியாரின் கட்டளை அப்படி.''

''காம்போஜத்தின் நான்கு தூண்களைப் போல விளங்கும் உங்களை நான் எப்படி பயன்படுத்த முடியும்?''

''தங்களுக்கு முன்னால் நாங்கள் தூண்களாக நிற்க மாட்டோம். தூசுகளாக இருக்க வேண்டும் என்பது இளவரசியார் கட்டளை.''

''மன்னரின் கட்டளை வேறாக இருக்கலாம் அல்லவா?''

''மகளின் கட்டளை மகேசனின் கட்டளை என்பார் மன்னர் பிரான். இளவரசியார் யோசனை சொன்னால் குலதெய்வத்தின்

ஆணை என்பார் அரசர். எங்களுக்கு இருவரது கட்டளையும் ஒன்றுதான்.''

''இப்படிப்பட்ட மகத்தானவர்கள் இருக்கும் இந்த காம்போஜ நாடு சுளுக்கள் என்னும் கடல் கொள்ளைக்காரர்களை வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருப்பது நியாயமா?''

''அவர்கள் விஷயத்தில் உங்கள் சொற்படி நடக்க மாமன்னர் எங்களுக்கு கட்டளையிட்டுவிட்டார். இளவரசியாரும் அவ்வாறே கூறிவிட்டார். தங்கள் கட்டளைக்குக் காத்திருக் கிறோம்.''

''மிக்க மகிழ்ச்சி வீரர்களே. எனக்கு உடனடியாக சில காரியங்கள் நடைபெற வேண்டியிருக்கிறது. அவை அவசரம் மட்டுமல்ல. ரகசியமும் கூட. அவை என்ன என்பதைச் சொல்லிவிடுகிறேன். யார் யார் என்னென்ன செய்வீர்களோ அதைச் செய்யுங்கள். இதற்கு நீங்கள் நால்வர் மட்டும் போதாது. சக வீரர்கள் பலரும் தேவை.''

''அதற்கு நாங்கள் தயார்படுத்திக் கொள்கிறோம்.''

அதையடுத்து உதயசந்திரன் விவரங்களைச் சொல்லிவிட்டு ''இவற்றைத் தயார்படுத்தி வையுங்கள். நான் சொல்லும்போது பயன்படுத்தலாம்'' என்று கூறிவிட்டு ஒற்றர் படைத் தலைவனைத் தவிர இதர வீரர்களை அனுப்பி வைத்தான்.

ஒற்றர் படைத்தலைவனிடம் ஒரு பணியைப் பற்றிச் சொல்லிவிட்டு ''இது விஷயமாக மன்னருக்குக்கூட எதுவும் தெரிய வேண்டாம்'' என்று எச்சரித்தான்.

அதையடுத்து அவன் கூறிய வேலைகள் அனைத்தும் தொடங்கி வேகமாக நடைபெற்றன. மன்னனுக்கும் சரி மக்களுக்கும் சரி ஏதோ நடக்கிறது என்று மட்டும் தோன்றியதே தவிர என்ன நடக்கிறது எதற்காக நடக்கிறது என்பது தெரியவில்லை. மன்னனுக்கு இந்த நிலை சங்கடமாக இருந்தது.

''இந்த நாட்டிற்கு நான் மன்னனா பல்லவ நாட்டு உபதலைவர் மன்னனா என்று தெரியவில்லை'' என்று வருத்தப்பட்டுச் சொன்னான்.

''ஏன் அப்பா இப்படி ஒரு வருத்தம் உங்களுக்கு?'' என்று கேட்டாள் பூவிழி.

''மன்னனுக்குக் கூடத் தெரியாமல் காரியங்கள் ஏதேதோ நடக்கின்றன. அவற்றை நீ அனுப்பி வைத்த நால்வரும் செய்கிறார்கள்.

ஒருவரும் என்னிடம் மூச்சு விடுவதில்லை. உபதலைவர் காலால் இட்ட வேலைகளை தலையால் செய்கிறார்கள். இதை வேறு எப்படி எண்ணுவது?'' என்றான் மன்னன்.

''உங்களுக்கு உபதலைவர் மீது நம்பிக்கை இல்லையா அப்பா?''

''எனக்கு இருக்கிறது. அவருக்குத் தான் என் மீது நம்பிக்கை இல்லை.''

''எப்படிச் சொல்கிறீர்கள்?''

''என்னிடம் சொல்லிவிட்டு அவர் வேலைகளைச் செய்யலாம். அல்லது வேலைகளை செய்துவிட்டு என்னிடம் சொல்லலாம். ஆனால் அவர் அப்படி நடந்து கொள்ள வில்லை.''

''ஏன் அப்பா, அவரென்ன தனக்காகவா செய்கிறார்? நமக்காகத்தானே? நம் நாட்டிற்காகத்தானே?''

''அதை யார் மறுத்தது?''

''இன்னொன்றையும் எண்ணிப் பாருங்கள். தனது மன்மத முகத்தை கோரமாக பேய் முகமாக மாற்றிக் கொண்டவர் அவர். இன்னொருவராக இருந்தால் தன் முகத்தை எண்ணியே புலம்பிக் கொண்டிருப்பார்கள். தன் முகம் சரியாக வேண்டும் அதற்காக முயல்வதையே சதா சர்வ காலமும் முயன்று கொண்டிருப்பார்கள். இவரைக் கவனித்தீர்களா? என்றைக்காவது தன் முகத்தைப் பற்றிக் கவலைப்பட்டிருக்கிறாரா? சிகிச்சையைக் கூட நாம் கட்டாயப்படுத்தி பணித்ததால் தான் செய்து கொள்கிறாரே தவிர அதில் அவர் அக்கறை காட்டுகிறாரா? வைத்தியர் கூட அவர் சிகிச்சைக்குச் சரிவர ஒத்துழைக்கவில்லை என்று நம்மிடமே புகார் செய்திருக்கிறார். இப்படி ஒரு மனிதரை உங்கள் வாழ்நாளில் கேள்விப்பட்டிருக்கிறீர்களா? தன்னைப் பற்றிக் கவலைப்படாமல் இந்த நாட்டைப் பற்றி கவலைப்பட்டு அதைப் போக்குவதற்காக முழு மூச்சாக ஈடுபட்டிருக்கும் அவர் மீது நீங்கள் குறை சொல்கிறீர்கள் என்றால் குறை உங்களிடம் தானே அப்பா? லட்சியவாதி வெற்றி பெற்றால் அது நமது நாட்டிற்கு கிடைத்த வெற்றி மாதிரிதான். அப்படிக் கிடைத்தால் அவரை என்ன இந்த நாட்டு அரியணையிலா அமர்த்திவிடப் போகிறீர்கள்? நீங்கள் அவர் மீது இப்படியொரு வருத்தத்துடன் இருக்கிறீர்கள் என்பது அவருக்குத் தெரிந்தால் வேதனைப்பட மாட்டாரா அவர்?''

''உண்மைதான் மகளே. உனக்கிருக்கும் அறிவு எனக்கு இல்லையே என்று தோன்றுகிறது எனக்கு. இனி நான் அவர் மீது எதற்காகவும் குறை காண மாட்டேன் போதுமா?''

''போதாது.''

''போதாதா?''

''என்னிடம் கூட இப்படிப் பேசக் கூடாது.''

''கட்டளை.''

சிரித்தாள் பூவிழி.

இதே சமயத்தில் யாரைப் பற்றியும் நினைக்க முடியாத நிலையில் இருந்தான் உதயசந்திரன். இரண்டு நாட்களுக்கு சிகிச்சை தொடர வேண்டும் என்றும் எங்கும் போகக் கூடாது என்றும் சொல்லி அவனைக் கட்டிலில் கிடத்தி விட்டிருந்தார்கள். முகத்திற்கு மாற்றி மாற்றி மூலிகைப் பூச்சு போட்டுக் கொண்டே இருந்தார். சில நேரங்களில் உள்ளுக்கும் மருந்து கொடுத்தார். கடுக்காயே அசந்து போகும் அளவிற்கு மகா கசப்பான அந்த மருந்தை ஓரிரு முறை வேண்டாம் என்று கூறினான் உதயசந்திரன்.

''வாலிபனே! உனக்குப் பழைய முகம் வேண்டாமா?'' என்று கேட்டார் வைத்தியர்.

''வேண்டாம்.''

''உனக்குத் திருமணம் ஆகிவிட்டதா?''

''ஆகிவிட்டது.''

''மனைவி இருக்கிறாளா?''

''இருக்கிறாள். பெயர் பௌர்ணமி.''

''நல்ல பெயர். அந்தப் பௌர்ணமிக்கு உன் பழைய முகம் வேண்டுமல்லவா?''

''வேண்டாம். அவள் நேசிப்பது என் முகத்தை அல்ல.''

''அவளை விடு. உங்கள் மாமன்னர் இருக்கிறார் அல்லவா? அவர் உன்னை இந்த கோலத்தில் பார்த்தால் என்னை உயிரோடு விடுவாரா? காம்போஜ மன்னர் சூர்யவர்மர் பரவாயில்லை என்று இருப்பாரா? அந்த துஷ்டப் பெண் ஊர்வசி என்னை லேசில் விட்டுவிடுவாளா? உடல் முழுவதும் ஊசியால் குத்தி கிழிக்காமல் விடுவாளா?''

''எல்லோருக்கும் நான் ஓலை எழுதித் தந்து விடுகிறேன் வைத்தியரே. உங்களுக்கு எதுவும் நேராது.''

''என்னை விடு. என் உயிர் பெரிதல்ல. நான் சவாலிட்டிருக்கிறேனே மறந்து விட்டாயா? அதில் நான் வெற்றி பெற வேண்டாமா?''

''உங்கள் வெற்றிக்காக நான் அவஸ்தை பட வேண்டுமா?''

''இரண்டு நாட்களுக்குப் பொறுமையாக இரு உதயசந்திரா. என் மருத்துவத்திற்கு வெற்றி கிடைத்துவிடும்'' என்றார் வைத்தியர்.

ஆனால் அவர் எதிர்பார்த்த மாதிரி இரண்டு நாட்கள் கழித்து வெற்றி கிடைக்கவில்லை.

அவர் எதிர்பார்த்த உணர்ச்சிகள் உதயசந்திரனின் முகத்தில் ஏற்படவில்லை. முகமானது பாறையைப் போல இறுகிப் போய் கிடந்தது. பயந்து போனார் வைத்தியர்.

''என்னை மன்னித்துவிடு உதயசந்திரா. என் வைத்தியம் தோற்றுவிட்டது'' என்றார்.

''என் தலையெழுத்து அப்படி இருந்தால் யார் என்ன செய்ய முடியும்? அதோடு இதற்குக் காரணம் நான்தானே தவிர நீங்களல்ல. நான் நாள்தோறும் வணங்கும் பாண்டவ தூதப் பெருமாள் படைத்த முகத்தை ஆணவத்தால் கெடுத்துக் கொண்ட எனக்கு இந்தத் தண்டனை தேவைதான். நீங்கள் உடனடியாக ஊர்வசியை இங்கே கூப்பிடுங்கள்'' என்றான் உதயசந்திரன்.

''அவளையா? வேண்டாம் உபதலைவரே. உண்மை தெரிந்தால் அவள் எது வேண்டுமானாலும் செய்வாள்.''

''எதுவும் செய்யாமல் நான் பார்த்துக் கொள்கிறேன். கூப்பிடுங்கள்.''

வைத்தியர் வேறு வழியின்றி 'சரி' என்றார்.

ஊர்வசியும் வந்தாள்.

☆☆☆



73

கோரமுகன்

''என்ன வைத்தியரே என்ன விஷயம்? உபதலைவரை என்னிடம் ஒப்படைக்கப் போகிறீர்களா?'' என்று கேட்டாள் ஊர்வசி.

வைத்தியர் சிறிது நேரம் விழித்து விட்டு, ''உன்னிடம் ஒப்படைக்க எனக்கு மறுப்பேதும் இல்லை. ஆனால் நீ ஏற்பாயா என்பது தெரியாது'' என்றார் சோகமான குரலில்.

''கரும்பைத் தின்பதற்கு கசக்குமா என்ன? வைத்தியரே! நீங்கள் உங்கள் வாக்கை காப்பாற்றிவிட்டீர்கள். உங்களுக்கு மிகவும் நன்றி. உங்கள் குடும்பத்தினருக்கு விடுதலை அளித்து விட்டேன். போய் சந்தோஷமாக இருங்கள். இரண்டொரு நாட்களில் பொன் முடிப்பு உங்களை வந்து சேரும்'' என்றாள் ஊர்வசி பரவசத்துடன்.

''ஊர்வசி. நீ நினைப்பது போல நிலைமை இல்லை.''

''என்ன சொல்கிறீர்கள்? விளங்கவில்லையே?''

''நான் என் மருத்துவத்தில் தோற்றுவிட்டேன்.''

''தோற்றுவிட்டீர்களா? என்ன உளறுகிறீர்கள்?''

''ஊர்வசி! உதயசந்திரனுக்கு கடைசிக் கட்ட சிகிச்சையாக கடந்த இரண்டு நாட்களாக தீவிர சிகிச்சை அளித்தேன். என் சிகிச்சைக்கான எதிரொலி அவனது முகத்தில் கிடைக்கவில்லை. உடலில் இருந்த நஞ்சையெல்லாம் எடுத்துவிட்டு ரத்தத்தைச் சுத்தப்படுத்திவிட்டேன். சருமத்தை அரித்திருந்த மூலிகைகளின் தன்மையை முற்றிலுமாக நீக்கிவிட்டு புதிய சருமம் வளர்வதற்கான மாற்று மூலிகைப் பூச்சையும் பூசிவிட்டேன். உள்ளும் புறமும் ஏக காலத்தில் ஒத்துப் போக வேண்டும் என்று உள்ளுக்கும் மருந்து கொடுத்தேன். இந்த சிகிச்சையின் முடிவில் அவனது முகத்தில் உணர்ச்சிகள் பெருக்கெடுக்க வேண்டும். அப்படி நடந்தால்தான் சருமம் மாறி பழைய வடிவத்தைத் தரும். ஆனால் அவனது முகத்தில் உணர்ச்சியில்லை. கடினப்பட்ட பாறையைப் போல

இறுகியிருக்கிறது. இது எனது மருத்துவம் தோற்றுவிட்டதையே உணர்த்துகிறது. இனி உதயசந்திரனுக்குப் பழைய முகம் கிடைப்பதற்கு வாய்ப்பில்லை. என்னை மன்னித்துவிடு.''

''இல்லை. நீங்கள் உளறுகிறீர்கள். உண்மையை மறைக்கிறீர்கள். என்னிடம் ஒப்படைக்கக் கூடாது என்பதற்காகப் பொய் சொல்கிறீர்கள்'' என்று சீறிய ஊர்வசி உதயசந்திரனின் முக கவசத்தை நீக்கினாள். ''ஐயோ'' என்று அலறினாள். அவனது முகம் இருந்த நிலையை அவளால் ஜீரணிக்க முடியவில்லை.

வைத்தியரின் கழுத்தைப் பிடித்தாள். ''அடப்பாவி வைத்தியனே! உன்னைத்தானே மலையாக நம்பியிருந்தேன்? இப்படி மோசம் செய்துவிட்டாயே! உன்னால் முடியாது என்றால் முதலிலேயே சொல்லியிருக்கக் கூடாது? ஏன் இப்படி கழுத்தறுத்துவிட்டாய்? உன்னை இப்போதே கழுத்தை நெறித்துக் கொன்றுவிடுகிறேன்'' என்று சொல்லி கழுத்தை நெறித்தாள்.

முகக் கவசத்தை அணிந்து கொண்ட உதயசந்திரன் ''அவரை விடு ஊர்வசி. அவர் மீது எந்தத் தவறுமில்லை. இந்த நாட்டிலேயே அவரை விடச் சிறந்த மருத்துவர் இல்லை. அவர் எனக்கு அளித்த சிகிச்சையும் சிறப்பானதுதான். என் விதி மோசமானதாக இருக்கும்போது அவர் என்ன செய்ய முடியும்? அவரைக் கொன்றால் மட்டும் எனக்குப் பழைய முகம் வந்துவிடுமா என்ன? உன்னை இங்கே அழைத்தது அவரல்ல. நான்தான். எதற்குத் தெரியுமா?'' என்று கேட்டான்.

வைத்தியரின் கழுத்தை விடுவித்த ஊர்வசி ''எதற்காக அழைத்தீர்கள்?'' என்று கேட்டாள்.

''ஊர்வசி! நீ என் மீது செலுத்திய அன்பிற்காக உன் உயிரைப் பணயமாக வைத்தாய். ஒருமுறையல்ல. பலமுறை. இதற்கு நான் கடன்பட்டவன். மன்னர் உனக்கு நீ கேட்கும் பதவியைத் தர தயாராக இருக்கிறார். அதேபோல உனக்குத் தேவையான பொன்னைத் தர இளவரசி தயாராக இருக்கிறாள். இதை எனக்குச் சொன்ன இளவரசி என்ன சொன்னாள் தெரியுமா?''

''என்ன சொன்னாள்?''

''அவள் என் மீது மையல் கொண்டிருப்பதாக நீ சொன்னாய். ஆனால் அது உண்மையல்ல. அவளுக்கு என் மீது மையல் இல்லை. எனது முகம் பழைய முகமாக ஆனதும் நான் உன்னை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று சொன்னாள். அதுதான் நன்றிக்கடன் என்று வலியுறுத்தினாள். முகம் முதலில் மாறட்டும் என்று அவளிடம் சொன்னேன். வைத்தியரிடமும் சொன்னேன்.

இப்போது இவரது வைத்தியம் தோற்றுவிட்டது. என் நிலையில் மாற்றம் எதுவும் இல்லை. என்னை ஏற்பதும் ஏற்காததும் உன் கைகளில்தான் இருக்கிறது.''

திட மனம் கொண்டவளும் குற்றவாளிகளைத் தண்டிப்பதில் உறுதியானவளும், எந்தச் சவாலாக இருந்தாலும் அதைச் சந்திக்க தயங்காதவளும், உயிருக்கு அஞ்சாதவளும், யாரையும் எதிர்த்துக் கொள்ளத் துணிந்தவளுமான ஊர்வசி பேதைப் பெண்ணைப் போல அழுதாள். ஆரம்பத்திலிருந்து உதயசந்திரன் விஷயத்தில் அவளது மனம் அடிக்கடி மாறியது.

சில நேரங்களில் அவனை விட்டுக் கொடுக்கத் தயாராக இருந்த அவளது மனம் சில நேரங்களில் மறுத்தது. அவனது முக மாற்றத்திற்குத் தான் தான் காரணம் என்று சில நேரங்களில் நினைத்தாள். வேறு சில நேரங்களில் அவன் தான் தனக்குக் கடன்பட்டவன் என்று நினைத்தாள். இப்படி குழப்பங்கள் இருந்தாலும் உதயசந்திரனுக்கு பழைய முகம் திரும்பிவிடும் என்ற நம்பிக்கை மட்டும் அவளிடம் நிலையாக இருந்தது. அந்த நல்ல நாளை எண்ணி ஆவலாக இருந்தாள்.

தற்போது அந்த நம்பிக்கையும் ஆர்வமும் அர்த்தமில்லாமல் போய்விடவே அதிர்ந்து போனாள் அவள். அவனது பழைய முகமும் பாழாய்ப் போன முகமும் மாறி மாறி மனக்கண்ணிலே தோன்றி மருட்டின. வெறி கொண்டவளைப் போல திடீரென வெளியேறிய அவள் கண் மண் தெரியாமல் வீதியில் ஓடினாள். வீதியில் ரதங்களும், புரவிகளும், யானைகளும் வழக்கம் போலச் சென்று கொண்டிருந்தன. வெறிபிடித்தவளாய் ஓடிய ஊர்வசி யானையொன்றின் மீது மோதி விழுந்தாள். யார் என்ன என்றெல்லாம் அறியாத அந்த யானை அவளைத் துதிக்கையில் தூக்கி வீசியது. வீசப்பட்டவள் அருகிலிருந்த கட்டிடச் சுவற்றில் வேகமாக வந்து விழவே எலும்புகள் நொறுங்க கீழே விழுந்தாள். விழுந்த இடத்திலேயே உயிரற்ற சடலமானாள். எல்லாமே சில நிமிடங்களில் நடந்துவிட்டன. சம்பவம் நடந்த இடத்தில் மக்கள் கூட்டம் கூடியது.

ஊர்வசி இப்படி எதிர்பாராத விதமாய் மரணமடைந்ததை நேரில் கண்ட வைத்தியர் உறைந்து போனார். உள்ளே இருந்த உதயசந்திரனும் வந்தான்.

வைத்தியர் தலையில் அடித்துக் கொண்டு புலம்பினார்.

அவரை அமைதியாக இருக்கும்படிச் சொன்ன உதயசந்திரன் மக்களை கலைந்து செல்லும்படி கேட்டுக் கொண்டான்.

பிறகு நடக்க வேண்டியவைகளெல்லாம் நடந்தன.

ஊர்வசியின் மரணம் அனுதாபத்திற்குரியதாக இருந்தாலும் அதற்கு அவளே தான் காரணம் என்பதை உணர்ந்த மன்னன் அவளது குடும்பத்திற்குத் தேவையானவற்றைச் செய்யும்படி கட்டளையிட்டுவிட்டு வைத்தியரிடம் உதயசந்திரனைப் பற்றி விசாரித்தான்.

''என் சிகிச்சை முடிந்துவிட்டது மகாராஜா. நான் எதிர்பார்த்த விளைவு ஏற்படவில்லை. வேறு எந்த வைத்தியர் வந்தாலும் எதையும் புதியதாகச் சாதித்துவிட முடியாது. இதுதான் என் பணிவான கருத்து'' என்றார் வைத்தியர்.

உதயசந்திரனிடம் கேட்கலாம் என்றால் அவனைக் காணவில்லை.

எங்கே என்பது தெரியவில்லை.

''அவரைத் தேட வேண்டாம் மகாராஜா. மன நிம்மதி அவருக்குத் தேவை. அதற்காக அமைதியான இடத்தை நாடிச் சென்றிருப்பார். கவலைப்படாமல் இருங்கள்'' என்றார் வைத்தியர்.

உண்மையிலேயே தனிமையை நாடி கடற்கரைக்குச் சென்றிருந்தான் உதயசந்திரன். அவனுக்குத் தன் முகத்தைப் பற்றிய கவலை இல்லை. மற்றவர்கள் தன் கதியை எண்ணி வருந்துவார்களே என்ற கவலைதான் இருந்தது. அதை தவிர்ப்பதற்காகவே தனிமையைத் தேடிச் சென்றான்.

மாலை நேரமாக இருந்தாலும் கடற்கரையில் மக்கள் நடமாட்டம் இல்லை. இரண்டு நாட்களுக்கு முன்னால் கடற் கரைக்கு மக்கள் யாரும் செல்ல வேண்டாம் என்று மன்னனிடம் தான் தெரிவித்திருந்தது அதற்குக் காரணமாக இருக்கும் என்று கருதிக் கொண்டான்.

கடல் அதிக ஆரவாரமின்றி அமைதியாகவே இருந்தது. அலைகளும் அளவோடு எழுந்து மெதுவாகவே கரைகளைத் தொட்டுவிட்டுப் போய்க் கொண்டிருந்தன. கடல் காற்று மட்டும் நான் யாருக்கும் கட்டுப்பட மாட்டேன் என்று உணர்த்துவது போல விர்விரென்று வீசியபடி இருந்தது.

அக்கடற்கரையில் மணலில் படுத்துக் கொண்டான் உதயசந்திரன். எந்தக் கடற்கரையில் கடலானது அவனை சுயநினை வில்லாமல் கொண்டு வந்து சேர்த்ததோ அதே கடற்கரையில்

சுயநினைவோடு படுத்திருந்தான் அவன். கடல் நீர் அவனது கால் களைத் தொட்டுவிட்டுச் சென்றன. காற்றோ அவனது முகத் திரையை ஊடுருவித் தழுவியது.

அவனுக்கு கடற்கரை என்பது மிகவும் பரிச்சயமான ஒன்று. கடற்கரையின் மீது அவனுக்குத் தனி பாசமே இருந்தது. நாகைப்பட்டிணத்தில் வாழ்ந்தபோது அவன் அதிகமாக காலம் கழித்தது கடற்கரையில்தான். வாள் பயிற்சி முதல் இதர போர்க்கலைகளைக் கற்றதும் பிறகு கற்ற கலைகளை செயல்படுத்தி வீரனாக வளர்ந்ததும் கடற்கரையில்தான். அது அவனுக்கு வீரத்தின் விளை நிலம். அலைகளால் கலகலத்தபடி இருந்த நாகைக் கடற்கரையை தனது போர்க் கலைகளால் கலகலக்க வைத்தவன் அவன்.

நாகைக்குப் பிறகு பல்லவ மன்னர் ராஜசிம்மரின் தொடர்பினால் மாமல்லபுரக் கடற்கரை அவனது மனதில் இரண்டாவது இடத்தைப் பிடித்தது. தற்போது மூன்றாவது இடமாக இடம் பெற்ற காம்போஜ நாட்டின் கடற்கரையில் கிடந்த அவன் தனக்கும் கடற்கரைகளுக்கும் இருந்த பிணைப்பை எண்ணி பரவசப்பட்டான்.

அதேசமயம் இன்ப அலைகளை அள்ளித் தந்த தமிழகக் கடற்கரைகளைப் போல் அல்லாமல் காம்போஜ கடற்கரை துன்ப அலைகளை வீசி விட்டதை எண்ணி வருந்தினான். தன்னை புயலும் கடலுமாகச் சேர்ந்து கருணை காட்டியிருந்தாலும் கரையில் ஒதுங்கிய பின்பு கதை மாறிவிட்டதை எண்ணி சற்றே கலங்கினான். கரைக்கு வந்து சேர்ந்த பிறகு கனவிலும் நினைக்க முடியாத காரியங்கள் நடந்துவிட்டன. முகத்தைக் கெடுத்துக் கொண்டதை அவன் பெரிதாகக் கருதவில்லை என்றாலும் தற்போது வைத்தியரால் குணப்படுத்த முடியாத நிலையில் பௌர்ணமியை நினைத்து கவலைப்பட்டான். அவள் எப்படி இந்த முகத்தை ஏற்பாள் என்று கலங்கினான்.

'முதலில் தன்னால் காஞ்சிக்குத் திரும்ப முடியுமா? காஞ்சிக்குப் போவதற்கு முன் மாமன்னர் ஒப்படைத்துள்ள பெரும் பணியை முடிக்க வேண்டுமல்லவா? எங்கோ இருக்கும் காம்போஜ நாட்டிற்கு வந்து சேர்ந்து சொரூபத்தையும் இழந்து அனாதையைப் போல தனிமனிதனாக கிடக்கும் தன்னால் என்ன செய்ய முடியும்? மாமன்னரின் கனவு கனவாகவே போய் விடுமா? எதையும் சாதிக்காத வீணனாக தான் அழிந்து விடுவோமா? இல்லை

இல்லை. அப்படி ஒருக்காலும் நடக்க விடக் கூடாது. முதலில் நம்மை நம்பியிருக்கும் இந்த நாட்டில் கடல் கொள்ளைக்காரர்களுக்குச் சமாதி கட்ட வேண்டும். பிறகு நமது பணியை உடனடியாகத் தொடங்க வேண்டும், என்றெல்லாம் நினைத்த உதயசந்திரன் அப்படியே உறங்கிப் போனான்.

நள்ளிரவில் மன்னரால் அனுப்பப்பட்ட காவலர்கள் அவனை எழுப்பாமல் தூர இருந்து பாதுகாத்தார்கள். பொழுது விடிந்ததும் அகன்றார்கள். கண் விழித்த உதயசந்திரன் இரவு முழுவதும் கடற்கரையில் கழித்துவிட்டதை நினைத்து சிரித்துக் கொண்டான். பிறகு எழுந்து நடந்தான். தன் இருப்பிடத்தை அடைந்தான்.

அன்று காலை அவனை யாரும் வந்து சந்திக்கவில்லை. நண்பகல் நேரத்தில் கஜமுகன், சிங்கமுகன், கடல் முகன் மற்றும் நரிமுகன் ஆகியோர் வந்தனர்.

''வாருங்கள். இன்றிலிருந்து நானும் உங்களில் ஒருவனாகி விட்டேன்'' என்றான் உதயசந்திரன்.

''தலைவர் சொல்வது விளங்கவில்லை'' என்றான் கஜமுகன்.

''பெயர் ஒற்றுமையைச் சொல்கிறேன் கஜமுகா. உங்களைப் போலவே எனக்கும் ஒரு பெயர் நிலைத்துவிட்டது. இனி என் பெயர் கோரமுகன். இந்தப் பெயரை மன்னர் வைக்கவில்லை. நானே சூட்டிக் கொண்டேன்.''

''ஏன் தலைவரே அப்படி?''

''சிகிச்சை பலன் தரவில்லை. கோரமுகம் அப்படியே தான் இருக்குமாம். வைத்தியர் சொல்லிவிட்டார். ஆகவே உங்களைப் போலவே பொருத்தமாக கோரமுகன் என்ற பெயரை வைத்துக் கொண்டேன். சரியா?''

''எங்களுக்கு தங்கள் முகம் அடையாளமல்ல தலைவரே. அது எப்படி இருந்தாலும் நீங்கள் எங்களுக்குத் தலைவர்தான்.''

''உங்களைப் போன்ற தளபதிகளைப் பெற நான் என்ன பாக்கியம் செய்தேனோ தெரியவில்லை'' என்று சொன்ன உதயசந்திரன் ''எல்லா ஏற்பாடுகளையும் செய்து விட்டீர்களா?'' என்று கேட்டான்.

''செய்துவிட்டோம் தலைவரே.''

''கஜமுகா, யானைகளின் கால்களுக்குப் பூண் போட வேண்டும். எதற்குத் தெரியுமல்லவா?''

''தெரியும் தலைவரே. அப்படியே செய்து விடுகிறேன்.''

''கடல் முகா, படகுகள் தயார் நிலையில் இருக்கிறதா?''

''இருக்கிறது தலைவரே. எல்லா படகுகளையும் கடலில் விடவில்லை. மீன் பிடிக்கும் படகுகளைப் போல இருபது படகுகளை மட்டும் கடலில் விட்டிருக்கிறேன். யாருக்கும் சந்தேகம் வராது. மீதிப் படகுகளை கடற்கரைக் காட்டில் மறைத்து வைத்திருக்கிறேன். அந்தப் பக்கம் காக்கைகள் கூட வர முடியாது.''

''சிங்கமுகா, நான் கூறிய உபகரணங்களை தயார் செய்துவிட்டாய் அல்லவா?''

''ஆம் தலைவரே. நீங்கள் சொல்லும்போது அவை வரவேண்டிய இடத்திற்கு வந்துவிடும்.''

''நீங்கள் நால்வரும் என் இருப்பிடத்திற்கு அருகிலேயே இருங்கள். அப்போதுதான் நான் எழுப்பும் சங்கேத ஒலிகளைக் கேட்டு நீங்கள் செயல்பட முடியும். கஜமுகா! உனக்குச் சமிக்ஞை சங்கொலி. சிங்கமுகனுக்கு கொம்பொலி. கடல் முகனுக்கு முரசொலி'' என்று சொல்லி மூவரையும் அனுப்பிவிட்டு ஒற்றர் படைத்தலைவனான நரிமுகனை அழைத்து விசாரித்தான்.

நரிமுகன் விவரத்தைச் சொன்னதும் ''நான் எதிர்பார்த்த மாதிரிதான் இருக்கிறது. அனைத்தும் அப்படித்தான் நடக்கும் என்று நினைக்கிறேன். உன் பணி மிகவும் முக்கியமானது. அதேசமயம் ஆபத்தானது. சமயம் பார்த்து நான் சொன்னதைச் செய்துவிடு. இதற்கு வேறு யாருடைய ஆணையும் தேவையில்லை. கண்காணிப்பு மிக மிக முக்கியம்'' என்றான் உதயசந்திரன்.

மாலை நேரம் வந்தபோது வைத்தியர் வந்தார்.

''வாருங்கள் வைத்தியரே. நலம் விசாரிக்க வந்தீர்களா?'' என்று கேட்டான் உதயசந்திரன்.

அதைக் கேட்பதற்குச் சங்கடமாக இருந்தது அவருக்கு. அதை உணர்ந்த அவன் ''நான் கேட்டது சரியில்லை. உங்கள் நலத்தை தான் நான் விசாரிக்க வேண்டும். நலமாக இருக்கிறீர்களா?'' என்று கேட்டான்.

இதுவும் அவருக்குச் சங்கடமாகத்தான் இருந்தது.

''மன்னர் நலமாக இருக்கிறாரா?''

''நலமாக இருப்பதுபோல் பலரும் நடிக்கிறார்கள். அது ஏன் என்பது உனக்குத் தெரியும். மன்னர் உன்னைக் காண விரும்பினார். நான் தான் தடுத்துவிட்டேன். நீ அமைதியைத் தேடிச் சென்றிருப்பதாகச் சொல்லிவிட்டேன்.''

''அமைதியைத் தேடிப் போய் அடைய முடியாது வைத்தியரே. அது நம்மிடமே இருக்கிறது. நாம் தான் அதைப் புரிந்து கொள்ளாமல் எங்கேயோ தேடுகிறோம்.''

''உன்னைப் போல நினைக்கவும் பேசவும் செயல்படவும் என்னால் முடியாது உதயசந்திரா. உன்னைப் போல் ஒருவன் இருந்தால் அது நீயாகத்தான் இருக்க முடியும்.''

''இளவரசி எப்படி இருக்கிறாள் வைத்தியரே!''

''நேற்று காலை கிருஷ்ணபகவானின் கோயிலுக்குப் போனவள் இன்னும் திரும்பவில்லை.''

''பாவம். என்னால் எல்லோருக்கும் கஷ்டம். ஏன் வைத்தியரே, நான் செத்துவிட்டால் என்ன?''

வைத்தியருக்கு வெறுப்பாக இருந்தது. குரங்கு அழகு காட்டுவது போல் காட்டிவிட்டு சென்றுவிட்டார்.

உதயசந்திரன் எழுந்து கடற்கரைக்குச் சென்றான்.

மணலிலேயே அமர்ந்து ஏதேதோ கோடுகளைக் கிழித்து அழித்தான்.

இருள் சூழ ஆரம்பித்தது.

அப்போது ஏதோ வினோதமானதொரு சத்தம் எழுந்தது.

அமாவாசைக்கு இரண்டு நாட்களே இருந்ததால் கடற்கரை இருண்டு கிடந்ததால் அவனால் எதையும் காணமுடியவில்லை.

அதேசமயம் குரலை எழுப்பிய உருவம் அவனை நெருங்கியது.

தன்னைக் காட்டிலும் பெரிதாக இருந்த அந்த உருவம் அவனைச் சுற்றிச் சுற்றி வந்தது.

''யார் நீ?'' என்றான் உதயசந்திரன்.

அது பதில் சொல்லாமல் கடலைப் பார்த்து பெருங்குரலில் கத்தியது.

☆☆☆



84

கடற்கரையில்...

உருவம் பெரிதாக இரைந்துவிட்டு உதயசந்திரனின் அருகிலேயே அமர்ந்துவிட்டது.

அதேசமயம் பின்னால் இரண்டு தீபங்கள் தெரிந்தன. அவை அவனை நோக்கி வரவும் செய்தன.

தீபங்கள் அருகில் வந்தபோது தான் அவற்றை இரு காவலர்கள் ஏந்தி வந்ததையும் அவர்களுக்கு நடுவே பூவிழி இருந்ததையும் கண்டான் உதயசந்திரன்.

காவலர்கள் பந்தங்களை மணலில் நட்டுவிட்டு வந்த வழியே சென்றார்கள்.

பூவிழி மணலில் அமர்ந்து ''என்ன கனவில் ஆழ்ந்திருக்கிறீர்கள் உபதலைவரே?'' என்று கேட்டாள்.

''கனவு காணும் நிலையில் நான் இல்லை என்பது உனக்குத் தெரியாதா பூவிழி?'' என்று கேட்டான் உதயசந்திரன்.

''முகம் பாழாகி விட்டதால் அப்படிப் பேசுகிறீர்களா? முகத்திற்கும் பண்பிற்கும் சம்பந்தமில்லை. முகத்திற்கும் அறிவுக்கும் சம்பந்தமில்லை. முகத்திற்கும் வீரத்திற்கும் சம்பந்தமில்லை. முகத்திற்கும் பராக்கிரமத்திற்கும் சம்பந்த மில்லை. பாரத நாட்டில் சக்கிரவர்த்தியாக விளங்கிய அசோக மகாராஜாவின் முகம் அழகற்றது என்று சொல்லக் கேட்டிருக்கிறேன். அவரது பாட்டனாரான சந்திர குப்தரின் ராஜகுருவாக இருந்த சாணக்கியரின் முகமும் அப்படித்தான். அவர்கள் எதில் குறைந்துவிட்டார்கள்? இதோ உங்கள் அருகில் அமைதியாக அமர்ந்திருக்கிறதே - அதன் முகமும் அழகற்றதுதான். அழகற்றவர்களைப் பார்த்து குரங்கு என்று சொல்வதில்லையா? இதுவும் ஒரு குரங்குதான். ஆனால் இதன் அறிவு, பாசம், பராக்கிரமம் ஆகியவை இணையற்றவை'' என்றாள் பூவிழி.

''இந்தக் குரங்கு இங்கே எப்படி வந்தது?''

''நான்தான் அனுப்பினேன்.''

''நீயா? எதற்கு?''

''உங்கள் பாதுகாப்பிற்கு. நீங்கள் இங்கே தனியாக வருகிறீர்கள் என்றும் தனிமையை விரும்புகிறீர்கள் என்றும் கேள்விப்பட்டேன். இங்கே ராட்சத கழுகுகள் அதிகம். இரவில் வந்து தாக்குவது அவற்றின் வழக்கம். ஒரே சமயத்தில் ஐந்தாறு கழுகுகள் வந்தால் அவற்றை வெற்றி கொள்வது இயலாது. வீரர்களை அனுப்பி வைத்தால் உங்கள் அமைதி கெடும். ஆகவே தான் இதை அனுப்பி வைத்தேன். இது கழுகுகளையும் சமாளிக்கும். கொலைகாரர்களையும் சமாளிக்கும்.''

''இது எப்படி உன்னிடம் வந்தது?''

''இங்கே நகராசூரன் இருந்ததைப் போல வினோதமான இந்தக் குரங்கும் இருந்தது. காட்டு வாசிகள் என்னிடம் கொண்டு வந்தார்கள். காட்டு வாசிகளிடம் முரண்டு பிடித்த இது என்னிடம் பணிந்து நின்றது. பழகியது. நானும் அதைப் பழக்கினேன். அதன் பாசத்தையும் பராக்கிரமத்தையும் கூரிய அறிவையும் கண்டேன். நான் சொல்வதைக் கேட்கும். செய்யும். இது என்னோடு இருப்பதைவிட உங்களிடம் இருப்பதே சரி என்று அனுப்பி வைத்தேன். எத்தனை அடக்கமாக அமர்ந்திருக்கிறது பாருங்கள்.''

''உனக்கு வேண்டாமா துணை?''

''அதற்கு நீங்கள் இருக்கிறீர்களே?''

''நான் எப்படி உங்களுக்குத் துணையாக இருக்க முடியும்?''

''முடியும் என்றால் முடியும்தான். சில நேரங்களில் கடவுளை நினைத்துக் கொண்டால் பாதுகாப்பு கிடைத்துவிட்ட மாதிரி இருக்கும். அப்படித்தான் இதுவும்.''

''பூவிழி! நீ கனவு காண்பது போலத் தெரிகிறது. கனவு காணாதே பூவிழி. ஊர்வசி அப்படித்தான் கனவு கண்டாள். நிறைவேறாமல் மறைந்து போய்விட்டாள்.''

''அவள் அவசரப்பட்டுவிட்டாள். அவசரத்தில் கனவுகள் கரைந்துவிட்டன.''

''அவள் அவசரப்படவில்லை பூவிழி. இனி காத்திருப்பதில் அர்த்தமில்லை என்பதை உணர்ந்து கொண்டு தன்னை முடித்துக் கொண்டாள்.''

''அந்த முடிவுக்கு ஏன் அவள் போக வேண்டும்? அவளுக்கும் உங்களுக்கும் என்ன சம்பந்தம்? நீங்கள் இருவரும் ஒருவரையொருவர் சந்தித்துக் கொள்வீர்கள் என்று நீங்கள்

எதிர்பார்த்தீர்களா? எப்படியோ சந்திப்பு நேர்ந்தது. அழகற்ற ஆடவர்கள் நிறைந்த நாட்டில் அழகான உங்களைக் கண்டு தன்னைப் பறிகொடுத்தாள். உங்கள் அழகுதான் அவளுக்குப் பிரதானமாக இருந்தது. அதற்காகத்தான் சாகசங்களில் ஈடுபட்டாள். உங்களைக் காத்தாள். நான் கூட அவள் உங்கள் உயிரைக் காத்தவள் என்பதால் அவளை ஏற்றுக் கொள்ளுங்கள் என்று கேட்டுக் கொண்டேன். ஆனால் சிகிச்சை பலனளிக்க வில்லை என்று தெரிந்ததும் அவள் அவசரப்பட்டிருக்கக் கூடாது. கோரமுகம் கொண்டவரோடு வாழ முடியாது. அதற்காகச் சாக வேண்டுமா என்ன? வேறு வழியே கிடையாதா? காம்போஜத்தை விட்டு காழகத்திற்கோ சாவகத்திற்கோ செல்லலாமே! அங்கில்லையா அழகான ஆண்கள்? உபதலைவரே! அறிவை ஆண்டவன் அளித்தது அதைப் பயன்படுத்திக் கொள்ளத்தான். அதுவும் நெருக்கடியான நேரத்தில் அறிவும் நிதானமும்தான் கை கொடுக்கும். ஆண்டவன் அளித்த அறிவை ஊர்வசி உதாசீனப்படுத்திவிட்டாள். நிதானத்தை இழந்துவிட்டாள். நாம் என்ன செய்ய முடியும்? நான் கனவு காணவில்லை. உண்மையைச் சொல்கிறேன். உங்கள் நினைப்பு எனக்குப் பாதுகாப்பு வலைபோல விரிந்து வளர்வதை உணர்ந்திருக் கிறேன். கிருஷ்ணன் கூட அதையே சொன்னான்.''

''கிருஷ்ண பகவானைச் சொல்கிறாயா?''

''ஆமாம். இரண்டு நாட்களாக அவனது திருவடிகளில் தான் சரணடைந்திருந்தேன். 'கவலைப்படாதே! உன்னைக் காக்க உதயசந்திரன் இருக்கிறான். அவன் நினைவே உன்னைக் காக்கும்' என்று சொன்னார் பகவான். அது எப்படி பொய்யாக முடியும்?''

''பூவிழி! பூவைவிட மென்மையானவளே! நீ உவமானத்திற்கு அப்பாற்பட்டவள். வெகுமானத்தால் உன்னை அளவிட முடியாது. நீ அமரலோகத்தில் பிறந்திருக்க வேண்டிய தேவதை. தவறிப்போய் இங்கே வந்து பிறந்துவிட்டதால் தானோ என்னவோ உன் பேச்சும் போக்கும் அபூர்வமானதாகவும் அபாரமானதாகவும் இருக்கின்றன. உன்னைப் படைத்த பிரம்மதேவரே உன்னைக் கண்டும் பிரமிப்பார். ஆனால்...''

''ஆனால் என்ன உபதலைவரே...?''

''என்னிடம் என்ன இருக்கிறதென்று இவ்வளவு ஈடுபாடு காட்டுகிறாய்?''

''ஒன்றுமில்லை என்றுதான் வைத்துக் கொள்ளுங்களேன்.''

''ஒன்றுமில்லாதவன் என்றால் பயனற்றவன் என்றுதானே அர்த்தம்?''

''இல்லை. இந்த ஆண்டவன் இருக்கிறானே அவன் யார்? ஒன்றுமில்லாதவன். சர்வ சக்தி கொண்டவன் என்றாலும் தனக்கென்று எதுவும் இல்லாதவன். தனக்கென்று ஒன்றையும் வைத்துக் கொள்ளாமல் மற்றவர்களுக்கே கொடுப்பவன்.''

''போதும் பூவிழி.''

''ஏன்?''

''மேற்கொண்டு நீ பேசினால் இறைவன் இறங்கி விடுவான்.''

இதைக் கேட்டுச் சிரித்த அவள், ''எதற்காக இந்தக் கடற்கரையில் தனிமையாக அமர்ந்து கொண்டிருக்கிறீர்கள்?'' என்று கேட்டாள்.

''தனிமை சில நேரங்களில் சிறந்த துணையாக இருக்கிறது.''

''கவலை எதுவும் இல்லையே!''

''என்னைப் பற்றி மற்றவர்கள் கவலைப்படுகிறார்களே என்ற கவலைதான்.''

''உபதலைவரே! நல்லவர்களுக்குத் துன்பம் வரும்போது மனசாட்சி உடையவர்கள் கவலைப்படுவது இயல்புதானே!''

''இருக்கலாம். என் பொருட்டு மற்றவர்கள் கவலைப் படுவதை நான் எப்படி ஏற்க முடியும்?''

''கண்ணில் தெரியும் கவலைகளைப் பற்றி நீங்கள் சொல்கிறீர்கள். கண்ணுக்குத் தெரியாத கவலையை நீங்கள் என்ன செய்ய முடியும்? உங்கள் பல்லவ மாமன்னர் உங்களைக் காணாமல் கவலைப்படுவார் அல்லவா? அதற்கு நீங்கள் என்ன செய்ய முடியும்?''

அவள் அப்படிச் சொன்னபோது, 'கிறீச் கிறீச்' என்ற குரல்கள் பல எழுந்தன.

அச்சத்தத்தைக் கேட்ட பூவிழி, ''நான் சொன்ன ராட்சஷ கழுகுகள் வந்துவிட்டன'' என்று கூறிவிட்டு 'லெமூர்' என்றாள்.

உதயசந்திரனின் அருகே இருந்த லெமூர் என்ற அந்த குரங்கு சிலிர்த்து எழுந்தது. தனது உயர்ந்த கைகளைத் தூக்கியபடி ஆர்ப்பரித்தது. ராட்சஷக் கழுகுகளைத் துரத்திக் கொண்டு ஓடியது.

''அநேகமாக அது அக்கழுகுகளை அடித்துப் போட்டு விட்டுத்தான் திரும்பும்'' என்றாள் பூவிழி.

அப்போது திமுதிமுவென பலர் ஓடி வந்தார்கள். உதயசந்திரனையும் பூவிழியையும் சூழ்ந்து கொண்டார்கள். எல்லோரிடமும் வாள் இருந்தது.

உதயசந்திரன் அமர்ந்தபடியே இருந்தான். பதட்டப்பட வில்லை.

''என்ன விஷயம்?'' என்று சாதாரணமாகவே கேட்டான்.

சூழ்ந்திருந்தவர்களில் ஒருவன் பேச முற்பட்டு ''எங்களுக்குத் தேவையானதைத் தந்துவிட்டால் நாங்கள் போய்விடுவோம்'' என்றான்.

''உங்களுக்கு எது தேவை?''

''இளவரசி தேவை.''

''இளவரசி தேவையா? எதற்கு?''

''அதைச் சொல்வதற்கில்லை.''

''நீங்கள் யார் என்பதையாவது சொல்ல முடியுமா?''

''முடியாது.''

''அதெல்லாம் எனக்கெதற்கு? நான் யார் என்பதாவது உங்களுக்குத் தெரியுமா?''

''அதைத் தெரிந்து கொள்ள வேண்டிய அவசியம் இல்லை.''

''அப்படியானால் பேசாமல் போய் விடுங்கள்'' என்றான் உதயசந்திரன்.

அவன் பேசியது பூவிழிக்கு வியப்பாக இருந்தது.

சூழ்ந்திருந்தவர்களும் வியந்தார்கள். ஆனாலும் அசராமல் ''வெறுங்கையோடு திரும்புவதற்கு நாங்கள் வரவில்லை'' என்றார்கள்.

''உங்களுக்கு இந்நகரத்தில் ராட்சஷ விலங்கொன்று இருந்ததே தெரியுமா?''

''கேள்விப்பட்டிருக்கிறோம். அதற்கென்ன?''

''அந்த அசுர மிருகத்தை இங்கே இருந்த யாராலும் அழிக்க முடியவில்லை. வெளிநாட்டிலிருந்து வந்த உதயசந்திரன் என்பவன் அழித்தான். பத்தாயிரம் யானைகளைக் கொண்டு அழித்தான். அவனைத் தெரியுமா?''

''அவனுக்கென்ன?''

''அவன் பயங்கரமானவன். இப்போது நாட்டை ஆள்பவனே அவன்தான்.''

''அவனைப் பற்றி எங்களுக்குக் கவலையில்லை.''

''கவலைப்பட்டுத்தான் ஆகவேண்டும். அவன் ஒரு வெறிகொண்ட மனித மிருகம். எந்தக் கேவலத்தையும் செய்யத்

தயங்க மாட்டான். தனக்கு அடங்காத மந்திரவாதிகளின் தோலை உரித்து உப்பைத் தடவி யானைகளின் கால்களில் கட்டி ரசிப்பவன்.''

''இதையெல்லாம் எதற்காகச் சொல்கிறாய் எங்களிடம்?''

''சேதாரப்படுபவர்களிடம் தானே சொல்ல வேண்டும்? ஆகவே தான் உங்களை எச்சரிக்கிறேன். இளவரசி வேண்டும் என்று நீங்கள் கேட்டதே பெருங்குற்றம். இளவரசியை கடத்த நினைப்பது அதைவிட பயங்கரமான குற்றம். உங்களை என்ன செய்வானோ தெரியாது. அவனது படகுகள் கடலில் சஞ்சரிக்கின்றன. நீங்கள் நாட்டிற்கு ஓடினாலும் தப்ப முடியாது.''

''இளவரசிக்கும் அவனுக்கும் என்ன சம்பந்தம்?''

''முட்டாள். இது கூடவா தெரியவில்லை! இளவரசியைப் மணக்கப் போகிறவன் அவன். போதுமா? வீணாக உயிரை விடாதீர்கள். உங்களைப் பிடித்து ஒவ்வொரு உறுப்பாக வெட்டி முதலைகளுக்கு இரையாகப் போடுவான். அசட்டு தைரியம் காட்டி அவனோடு மோதாதீர்கள். உங்களுக்கு உண்மையிலேயே இளவரசி தேவை என்றால் உங்களை யார் அனுப்பினார்களோ அவரை அனுப்பி மன்னரிடம் பேசச் சொல்லுங்கள். தாமதம் செய்ய வேண்டாம். இங்கே இளவரசி தனியாக வரவில்லை. லெமூர் என்னும் விநோத ராட்சஷ குரங்கோடுதான் வந்திருக்கிறாள். இப்போது தான் அது ராட்சஷ கழுகுகளை விரட்டியடித்திருக்கிறது. இளவரசி அழைத்தால் அது உடனடியாக வந்துவிடும். அது மாமிசம் தின்னும் குரங்கு. உங்களைக் கடித்துக் குதறிவிட்டு சாவகாசமாக உண்ணும்.''

உதயசந்திரனின் பேச்சைக் கேட்டு அரண்டு போன அவர்கள் ஒன்றாகக் கூடி ஏதோ பேசினார்கள். அச்சமயத்தில் லெமூர் கத்தும் சத்தம் கேட்டது. அது குரங்காகத்தான் இருக்க வேண்டும் என்று கருதிய அவர்கள் அந்த இடத்தை விட்டு ஓடினார்கள். சிறிது நேரத்தில் லெமூரும் வந்து சேர்ந்தது.

அதுவரை மௌனமாக இருந்த பூவிழி பிரமித்துப் போய் ''வியப்பாக இருக்கிறது'' என்றாள்.

''எது?'' என்று கேட்டான் உதயசந்திரன்.

''இவ்வளவு பேரை வெறும் மிரட்டலால் ஓடச் செய்ததுதான்.''

''என்னிடம் வாள் இல்லை. வாய் மட்டுமே இருந்ததால் அதைப் பயன்படுத்தினேன். வாளைப் பயன்படுத்துவது மட்டும்

வீரமில்லை இளவரசி. வாள் இல்லாதபோது வாயைப் பயன்படுத்துவதும் வீரம்தான். வந்தவர்களிடம் பேச்சு கொடுத்ததில் அவர்கள் காம்போஜத்திற்குப் புதியவர்கள் என்பது புரிந்தது. ஆகவே தான் மிரட்டல் ஆயுதத்தைப் பயன் படுத்தினேன். லெமூரையும் பயன்படுத்திக் கொண்டேன்.''

''நான் சொன்னது உண்மை என்பதை இப்போதாவது புரிந்து கொண்டீர்களா?''

''எதைச் சொல்கிறாய்?''

''என்னைப் பாதுகாக்க நீங்கள் இருக்கிறீர்கள் என்று சொன்னேன். நிரூபித்துவிட்டீர்கள்.''

''இது கௌரவமான முறையல்ல பூவிழி.''

''சமயோசிதமான முறை. நான் காப்பாற்றப்பட்டதுதான் முக்கியமே தவிர அது வாளாலா வாயாலா என்பதல்ல. நீங்கள் தானே சொன்னீர்கள்?''

''அதை விடு பூவிழி. இவர்கள் உன்னைக் கேட்டு வருகிறார்களே யாராக இருக்கும்? இந்த நாட்டிற்கும் புதியவர்களாக இருக்கிறார்கள்.''

''உறுதியாகத் தெரியவில்லை உபதலைவரே. ஸ்ரீ விஜயத்தின் இளவரசர் என்னை மணக்க விரும்புவதாக ஒரு பேச்சு இருக்கிறது. ஆனால் அவர் இப்படியெல்லாம் கீழ்த்தரமாக முயல்வார் என்று நான் சொல்லமாட்டேன்.''

''பூவிழி! உன் லெமூரை உடனடியாக ஏவி விடு. வந்தவர்கள் ரொம்ப தூரத்திற்குப் போயிருக்க முடியாது. யாரையாவது ஒருவனை இது பிடித்து வந்தால் போதும். விசாரித்துவிடலாம்'' என்றான் உதயசந்திரன்.

பூவிழி உடனே லெமூரை அழைத்து காதில் ஏதோ சொன்னாள். அது பாய்ந்து கொண்டு ஓடியது.

உதயசந்திரனின் ஊகம் தவறவில்லை. லெமூர் ஒரு மனிதனை இடையில் போட்டு இறுக்கியபடி வந்து சேர்ந்தது.

''உன்னோடு வந்தவர்கள் எங்கே?'' என்று கேட்டான் உயசந்திரன்.

''குரங்கின் அட்டகாசம் தாங்காமல் ஓடிவிட்டார்கள்.''

''அவர்கள் யார்? நீ யார்?''

சொன்னான் அவன்.

அவன் சொன்னதைக் கேட்டு உதயசந்திரனும் பூவிழியும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள்.

ஸ்ரீ விஜய இளவரசனுக்கு பூவிழியின் மீது தீராத காதல் இருந்தது. அதை தனது தந்தையிடம் வெளிப்படுத்தினான். தந்தையோ அவனுக்குச் சாவக நாட்டு இளவரசியை ஏற்கெனவே தேர்ந்தெடுத்து விட்டதாகச் சொல்லி அவனது ஆசையை நிராகரித்தார். ஆனால் ஸ்ரீவிஜய இளவரசன் சங்கிராமனால் தனது காதலை நிராகரிக்க முடியவில்லை. பூவிழியை நேரில் சந்தித்துப் பேச விரும்பி மரக்கலத்தில் தனது சகாக்களோடு மாறுவேடத்தில் இந்திரபுரத்திற்கு வந்தான். அவள் கிருஷ்ணர் கோயிலில் பிரார்த்தனையில் ஈடுபட்டிருந்ததைக் கண்டான். அவளை நெருங்கவோ பேசவோ முடியவில்லை. பிறகு அவள் கடற்கரையை நோக்கிச் சென்றதைக் கண்டான். தன் சகாக்களை அனுப்பி அவளைக் கடத்தி வந்து விடும்படிக் கட்டளை யிட்டான்.

பிடிபட்ட வீரனின் மூலம் இந்த விவரத்தைக் கேட்டதும் பூவிழிக்கு வெறுப்பாக இருந்தது. ஸ்ரீவிஜய இளவரசனின் செயல் அவளுக்கு ஏற்புடையதாக இல்லை. மன்னனாக இருந்து கொண்டு கூத்திரிய முறைப்படி வீரத்தைக் காட்டாமல் தன்னைக் கடத்தி வரச் சொல்லி கோழைத்தனமாக முற்பட்டது அவன் மீது இருந்த மரியாதையைக் கூட கைவிடச் செய்தது.

உதயசந்திரனுக்கும் ஸ்ரீ விஜய இளவரசனின் நடவடிக்கை பிடிக்கவில்லைதான்.

''ஸ்ரீவிஜய இளவரசரின் காதல் இயற்கையானது. ஆர்வமும் இயல்பானது. இங்கே வந்தது கூடத் தவறில்லை. இங்கே வந்தவர் மன்னரைச் சந்தித்து முறையாகக் கேட்டிருக்கலாம். இப்படித் தரம் தாழ்ந்து ஏன் நடந்து கொண்டார் என்பது விளங்கவில்லை. காதல் கண்ணை மறைத்துவிட்டதோ?'' என்று கேட்டான் உதயசந்திரன்.

''வீரர்களின் காதல் மகத்தானதாக இருக்கும் உபதலைவரே. கண்களை மறைக்காது. அப்படி கண்களை மறைத்தால் அவர் வீரத்தை நம்பவில்லை என்று பொருள்'' என்றாள் பூவிழி.

''அநேகமாக அவர் மன்னரைச் சந்திப்பார் என்று தோன்றுகிறது.''

''யாரை வேண்டுமானாலும் சந்திக்கட்டுமே! நினைவில் கூட நிலைக்க முடியாத அவர் யாரைச் சந்தித்தால் என்ன?'' என்றாள் பூவிழி.

''எதற்கும் அவகாசம் இருக்கிறது இளவரசி. அவசரம் வேண்டாம். நீ லெமூரை அழைத்துக் கொண்டு அரண்மனைக்குச் செல்லுங்கள். நான் பிறகு வருகிறேன்'' என்றான் உதயசந்திரன்.

''உங்களைத் தனியாக விட முடியாது. இருந்தால் லெமூருடன் இருங்கள். நான் என் வீரர்களுடன் போகிறேன்'' என்றாள் அவள்.

''உனது வீரர்கள் எங்கே என்றே தெரியவில்லையே! சரி வா. மூவருமே போகலாம்'' என்று கூறி எழுந்தான் உதயசந்திரன்.

''நான் உங்கள் கைகளைப் பற்றிக் கொள்ளலாமா?'' என்று கேட்டாள் அவள்.

அவன் வலது கையை நீட்டினான். அதைப் பூவிழி பற்றிக் கொண்டாள். இடது கையை லெமூர் தானாகப் பற்றிக் கொண்டது.

☆

மறுநாள் காலை உதயசந்திரனின் இருப்பிடத்திற்கு வந்தார் வைத்தியர்.

''நான் விடைபெற்றுக் கொள்கிறேன் உபதலைவரே'' என்றார்.

''இதென்ன எனக்குத் திடீரென மரியாதை?'' என்று கேட்டான் உதயசந்திரன்.

''இத்தனை நாட்களாக மரியாதை காட்டாமல் இருந்தது தான் தவறு'' என்றார் வைத்தியர்.

''விடைபெற்றுக் கொண்டு எங்கே போகப் போகிறீர்கள்?''

''மரகதப் பட்டிணத்திற்கு.''

''எதற்காக அங்கே போக வேண்டும்?''

''என் குடும்பத்தாருடன் போய்ச் சேர்ந்து கொள்ள வேண்டும்.''

''நான் யார் வைத்தியரே? உன் குடும்பத்தினன் இல்லையா?''

''உபதலைவரே! வேண்டாம். என் குடும்பத்தில் நீங்கள் சேர வேண்டாம். உங்கள் வாழ்வைக் கெடுத்தவன் நான். என் குடும்பத்தில் நீங்கள் எப்படிச் சேர முடியும்?''

''முடியும் வைத்தியரே.''

''எப்படி?''

சொன்னான் உதயசந்திரன்.

வைத்தியர் மயக்கம் போட்டு விழுந்தார்.

☆☆☆



85

பூவிழி

இதே நேரத்தில் அரண்மனை பூங்காவில் பூவிழியை வரச் சொன்ன மன்னன் சூர்யவர்மன் அவள் வந்த பிறகு பேச்சில் இறங்காமல் பேசுவதற்குத் திணறினான். அதைக்கண்ட பூவிழி ''என்ன அப்பா? எதற்காக என்னை அழைத்தீர்கள்? ஏன் இப்படி எதையோ பறிகொடுத்த மாதிரி இருக்கிறீர்கள்?'' என்று வினவினாள். பேசும் மயில் போலிருந்த மான்விழியைக் கொண்ட அப்பூவிழி கேட்டதும் சங்கடத்துடன் அவளைப் பார்த்த மன்னன் ''என்ன பேச வேண்டும் என்பது தெரிகிறது மகளே. எப்படி பேசுவதென்று தான் தெரியவில்லை'' என்றான்.

''என்னிடம் பேசுவதற்கு எதற்கு அப்பா இந்தத் தயக்கம்?'' கேட்டாள் அவள் குழலிசை குரலில்.

''உன்னிடம் தான் அதிக தயக்கம் காட்ட வேண்டியிருக்கிறது. உன்னிடம் தான் அதிகம் அஞ்ச வேண்டியிருக்கிறது'' என்றான் மன்னன்.

''ஏன் அப்படி?''

''என் பேச்சு உன்னைச் சங்கடப்படுத்திவிடக் கூடாது மகளே. அதை என்னால் தாங்க முடியாது.''

''நீங்கள் ஏன் அப்படிப் பேசப் போகிறீர்கள்? அப்படியே பேச வேண்டியிருந்தால் பேசித்தானே ஆக வேண்டும்? தயங்கிக் கொண்டிருந்தால் சரியாகிவிடுமா?''

அவளது வார்த்தைகளால் ஓரளவிற்கு ஆறுதலடைந்த மன்னன் ''உதயசந்திரனைப் பற்றி உன் அபிப்ராயம் என்ன பூவிழி?'' என்று கேட்டார்.

பூவிழி இதைக் கேட்டதும் பூ மலர்வது போலச் சிரித்தாள்.

''இதென்னப்பா கேள்வி? அவரைப் பற்றி என்னைக் கேட்கிறீர்களே உங்களுக்குத் தெரியாதா? அவரைப் பற்றிக் கேட்டால் மக்களே சொல்வார்களே! நான் என்ன சொல்வது?'' என்று கேட்டாள்.

''உனக்கென்று ஒரு அபிப்ராயம் இருப்பது தவறு இல்லையே மகளே'' என்றான் மன்னன்.

''அப்படிச் சொன்னால் நான் வேறு நீங்கள் வேறு என்றாகிவிடும் அப்பா.''

''மகளே! நீ சொல்வது சரிதான். உபதலைவரைப் பற்றி நமக்குள் வேறு வேறு அபிப்ராயம் இருக்க முடியாது. அவரை உன் மணாளராக்க நான் விரும்பினேன். தெரியுமா உனக்கு?''

''எப்போது அப்பா இந்த விருப்பம் வந்தது உங்களுக்கு? அவரை பலியிட அரங்கத்திற்கு அழைத்து வந்தார்களே அப்போதா?''

''அப்போது எப்படியம்மா அந்த எண்ணம் வரும்? அப்போது இல்லை.''

''வேறு எப்போது?''

''அவரைப் பற்றிய முழு விவரம் தெரிய வந்தது. பின் அவரது மதிநுட்பம் தெரிய வந்தது. நகராசூரனை அவர் அன்பால் ஆட்கொண்டார். பிறகு நகராசூரனை வதம் செய்தார். அப்போதுதான் அந்த எண்ணம் தோன்றியது எனக்கு.''

''நீங்கள் சொல்வது சரியல்ல அப்பா. நகராசூரனை வதம் செய்தபோது அவர் மீது உங்களுக்கு மகத்தான அபிப்ராயம் வந்திருக்கலாம். ஆனால் எனக்கு மணாளராக்கும் விருப்பம் வந்திருக்காது.''

''ஏன் அப்படிச் சொல்கிறாய்?''

''அப்போது அவரது முகம் கோரமாக அல்லவா இருந்தது? அந்த நிலையிலா நீங்கள் அப்படி நினைத்தீர்கள்?''

''வைத்தியர் எனக்கு நம்பிக்கையை ஊட்டினார் மகளே. பழைய முகத்தை திரும்ப கொண்டு வந்துவிடுவேன்'' என்றார்.''

''இப்போது தான் முடியாது என்று சொல்லிவிட்டாரே அப்பா?''

''ஆகவேதான் என் அபிப்ராயத்தை மாற்றிக் கொண்டு விட்டேன் மகளே. கோர முகத்தவனை வாழ்நாள் முழுதும் உன்னால் எப்படி கணவனாக ஏற்க முடியும்?''

''அதனால்?''

''உன்னை ஸ்ரீவிஜய இளவரசருக்கு மணம் செய்து கொடுத்தால் என்ன என்று தோன்றியது.''

''எப்போது தோன்றியது? நேற்று இரவிலா?''

''ஆம் மகளே.''

''நேற்றிரவு என்ன நடந்ததென்று உங்களுக்குத் தெரியுமா?''

''தெரியும் பூவிழி. இளவரசர் சங்கிராமன் எல்லாவற்றையும் சொன்னார்.''

''கடற்கரையில் ஆட்களை வைத்து என்னைக் கடத்த முற்பட்டதைச் சொன்னாரா?''

''எதையும் மறைக்கவில்லை மகளே. ஆர்வக் கோளாறினால் செய்துவிட்ட பிழை அது என்று சொல்லி என்னிடம் மன்னிப்பு கேட்டார்.''

''அதில் நீங்கள் திருப்தியடைந்துவிட்டீர்களா?''

''உண்மைக்கும் சில நாள் உறக்கமுண்டு. ஒளி தரும் நிலவுக்கும் மயக்கமுண்டு மகளே.''

''நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?''

''தவறுதல் மனித இயல்பு மகளே. அதை மன்னித்து மறக்க வேண்டுமே தவிர எண்ணி எண்ணி புழுங்குதல் கூடாது.

''நான் கடற்கரையில் கடத்தப்பட்டிருந்தாலும் இப்படித்தான் சொல்வீர்களா அப்பா?''

''அதெப்படி பூவிழி? அப்படி நடந்திருந்தால் தத்துவம் பேசமாட்டேன். உன்னை மீட்பதிலும் அவனை தண்டிப்பதிலும் ஈடுபடுவேன். இப்போது நாம் பேச வேண்டியது நடக்காத விஷயத்தைப் பற்றியல்ல. நடக்க வேண்டிய விஷயத்தைப் பற்றித்தான்.''

''மன்னர் அவர்களே! உபதலைவரைப் பற்றி அபிப்ராயத்தைக் கேட்டீர்களே! நான் இப்போது கேட்கிறேன். ஸ்ரீ விஜயத்தின் இளவரசரைப் பற்றி உங்கள் அபிப்ராயம் என்ன?''

''நீ மறக்க வேண்டியதை நினைவில் வைத்துக் கொண்டிருக்கிறாய். நான் மறந்துவிட்டேன். ஸ்ரீவிஜய இளவரசர் உன்னை ஆழமாகக் காதலிக்கிறார். அளவற்ற ஆசைதான் அவரது நிதானத்தைச் சற்றே அசைத்து விட்டது. மற்றபடி அவர் உனக்குப் பொருத்தமானவர்.''

''என்னை அவர் விரும்பியதை நீங்கள் மதிக்கிறீர்கள். அங்கீகரிக்கிறீர்கள்.''

''ஆமாம்.''

''நான் உபதலைவரை விரும்பினால் அதை அங்கீகரிப்பீர்கள் அல்லவா?''

''மகளே! இதென்ன நீ பேசுவது? அவரது முகம் சீரழிந்துவிட்டது. சீரடைய முடியாமல் போய்விட்டது.''

''எனக்கு முகம் முக்கியமில்லை அப்பா. மனம் தான் முக்கியம்.''

''புரியாமல் பேசுகிறாயே அம்மா. மகா லட்சுமியின் மறு அவதாரம் போல பிறப்பெடுத்துள்ள அழகு மகா தெய்வம் நீ. நீ எங்கே? உபதலைவர் எங்கே? அவரோடு எப்படி வாழ முடியும்? அவர் எப்படி இங்கே உலவ முடியும்? மக்கள் அவரை எப்படி ஏற்பார்கள்? கோரமுகம் கொண்ட அவருக்குப் பிறக்கும் குழந்தை எப்படி இருக்கும்? யோசித்துப் பார் மகளே. இது ஒத்து வராது. அதோடு இன்னொரு முக்கிய விஷயம் இருக்கிறது.''

''என்ன அப்பா அது?''

''நீ ஸ்ரீவிஜய இளவரசரை மணந்து கொள்வது அரசியல் ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்தது.''

''அதாவது என்னை அரசியல் சதுரங்கத்தில் பலியாக்கப் பார்க்கிறீர்கள்.''

''இல்லை மகளே இல்லை. இன்றையச் சூழலில் ஸ்ரீவிஜயம் வல்லமையோடு இருக்கிறது. இதோ இந்த வரைபடத்தைப் பார். நமது கடல் வழியை அடைத்துக் கொண்டு இரண்டு திமிங்கலங்களைப் போல இரு பெரும் தீவுகள் இருக்கின்றன. அத்தீவில் இருக்கும் மாயிருடிங்கம், இலங்கோ சோகம், கடாரம், தாம்பரலிங்கம், இலாமுரி தேசம், பண்ணை, மலையூர், வடபாகி தென்பாகி தீவுகள் ஆகிய அனைத்தும் ஸ்ரீவிஜயத்தின் ஆதிக்கத்தில் இருக்கிறது. மூன்றாவது திமிங்கலமான சாவகமும் நட்பு நாடாகவே ஸ்ரீவிஜயத்துடன் இருக்கிறது. உனது ஒரு மறுப்பு இந்த மூன்று திமிங்கலங்களை நமக்கு எதிராகத் திருப்பிவிடும். நகராத அந்த திமிங்கலங்களால் நமக்கு வரக்கூடிய ஆபத்துகள் மிகவும் அதிகம்.''

''சூர்யவர்மரே! தங்கள் வீரம் மறைந்து போய்விட்டதா?''

''இல்லை மகளே. போர் என்று வந்தால் வீரம் தான் முன்னே செல்லுமே தவிர கோழைத்தனம் முன்னால் வந்து நிற்காது. பல நாடுகள் சம்பந்தப்பட்ட விஷயத்தில் விவேகம் தான் முக்கியமே தவிர வீராவேசம் அல்ல. போர் என்பது எல்லா முயற்சிகளும் தோல்வியடையும்போது அல்லது நிராகரிக்கப்படும்போது நடக்க வேண்டிய விஷயம். அது கடைசி நடவடிக்கையே தவிர ஆரம்ப நடவடிக்கை அல்ல. பாரத நாட்டு இதிகாசங்களைக் கற்றவள் நீ. குருசேத்திர போர் என்பது எடுத்த எடுப்பிலேயே மேற்கொள்ளப்

பட்டதல்ல. பலமுறை சமாதான தூது சென்று அவை அனைத்தும் நிராகரிக்கப்பட்ட பிறகு தான் போர் நடந்தது.''

''நான் ஸ்ரீவிஜய இளவரசரை நிராகரித்துவிட்டால் போர் வரும் என்கிறீர்களா?''

''நான் சொல்லவில்லை.— ஸ்ரீவிஜய இளவரசரே சொல்லிவிட்டார்.''

''நீங்கள் ஒப்புக் கொண்டு விட்டீர்களா?''

''இளவரசர் தன் வீரத்தையும் சாமர்த்தியத்தையும் நிரூபிப்பதாகச் சொல்லியிருக்கிறார். அதை நிரூபித்துவிட்டு பிறகு பேசுங்கள் என்று சொல்லியிருக்கிறேன்.''

''அவர் எந்த விஷயத்தில் தன் வீரத்தை நிரூபிப்பதாகச் சொல்லியிருக்கிறார் அப்பா?''

''கடல் கொள்ளைக்காரர்களான சுளுக்களை முறியடிப்பதாக வாக்களித்திருக்கிறார்.''

''ஐம்பது பேர்களைக் கொண்டு என்னை அபகரிக்க முடியாத அவரா கொள்ளைக்காரர்களை முறியடிக்கப் போகிறார்?''

''அது வேறு இது வேறு மகளே.''

''கடல் கொள்ளைக்காரர்களை முறியடிப்பதாக உபதலைவர் தான் சொல்லியிருக்கிறாரே அப்பா?''

''அதனால் என்ன அவரைப் பின் வாங்கச் சொல்லிவிட்டால் போகிறது?''

''இது என்ன விபரீதம் அப்பா? அவர் அதற்கான முயற்சிகளில் ஈடுபட்டுவிட்டார்.''

''அவை என்ன என்பது உனக்குத் தெரியுமா?''

''தெரியாது. ஆனால் இது விஷயமாக நாம் ஏற்கெனவே பேசியிருக்கிறோம்.''

''பூவிழி! சுளுக்கள் பிரச்சனை நமது நாட்டுப் பிரச்சனை. இதை பல்லவ நாட்டு உபதலைவர் தீர்ப்பது கௌரவமானதா? உன்னை மணக்கவிருக்கும் ஸ்ரீவிஜய இளவரசர் தீர்ப்பது கௌரவமானதா?''

சூர்யவர்மனின் பேச்சைக் கேட்க வியப்பாக இருந்தது பூவிழிக்கு.

''நீங்கள் இப்படி மாறி விட்டீர்களே அப்பா? இப்படியும் கூட மாற முடியுமா? நம்பவே முடியவில்லை தந்தையே. கௌரவம் பற்றி இப்போது பேசுவது உங்களுக்கு நியாய மானதாகவா

படுகிறது? நகராசூரன் பிரச்சனை வந்தபோது அதைத் தீர்க்க ஸ்ரீவிஜய இளவரசரை அழைத்திருந்தால் கௌரவமாக இருந்திருக்குமே! கடற்கரையில் ஒதுங்கிய வேற்று நாட்டு உபதலைவரைப் போய் எதற்காக அழைத்தீர்கள்? அது அகௌரவம் இல்லையா?''

''அவரை நான் அழைக்கவில்லை பூவிழி. அது அவராக ஒப்புக் கொண்ட பணி.''

''கொள்ளையரை அழிக்கும் பணி கூட அவராக ஏற்றுக் கொண்டது தானே?''

''ஆனால் இப்போது ஸ்ரீவிஜய இளவரசர் வந்துவிட்டார். பணியை ஏற்றுக் கொண்டுவிட்டார்.''

''இளவரசர் என்பதுதான் உங்களுக்கு முக்கியமாகி விட்டதா?''

''நீயே யோசித்துப் பார். இளவரசருக்கும் உபதலைவருக்கும் தூரம் அதிகம். இளவரசர் உபதலைவராக நடந்து கொள்ளலாம். உபதலைவர் இளவரசராக முடியாது.''

''ஒருவேளை சீன மன்னர் முன் வந்து கொள்ளையரை அடக்குவதாகச் சொன்னால் என்ன செய்வீர்கள்? இளவரசரை விட மன்னரின் அந்தஸ்து பெரியது என்று நினைப்பீர்களா? ஸ்ரீவிஜய இளவரசரை விட்டு விடுவீர்களா?''

''இது வேண்டாத கற்பனை மகளே. இந்தக் கற்பனைக்கு முடிவே இருக்காது. இருப்பது பற்றித்தான் பேச வேண்டும்.''

''தாங்கள் முடிவுக்கு வந்துவிட்டீர்களா?''

''ஆம் மகளே.''

''அப்படியானால் உபதலைவரின் நிலை?''

''நீ தான் உதவி செய்ய வேண்டும் குழந்தாய்.''

''நானா?''

''என்னை விட உன்னோடு தான் அவன் நெருங்கிப் பழகுகிறான்.''

''அதனால்?''

''நீ சொன்னால் கேட்பான்.''

''என்ன சொல்ல வேண்டும்?''

''காம்போஜத்தை விட்டு வெளியேறச் சொல்ல வேண்டும்.''

அதிர்ந்து போனாள் பூவிழி. அவளது பூவிழிகள் கலங்கின.

''என்னை விட எதுவும் பெரிதில்லை என்று சொன்னீர்களே அப்பா மறந்து விட்டீர்களா?''

''அதில் எந்த மாற்றமும் இல்லை மகளே. நான் முனைந்திருக்கும் செயல் உனக்கும் நல்லது. மக்களுக்கும் நல்லது. மனதை மாற்றிக் கொள் அம்மா'' என்று சொல்லிவிட்டு அகன்றான் மன்னன்.

பூவிழியோ திகைத்தாள். புயல் காற்றில் தனித்து விடப்பட்ட மரக்கலத்தைப் போல் தவித்தாள். வெள்ளத்தில் சிக்கிய வீடு போலத் திணறினாள். வழி தவறி வந்துவிட்ட மானைப் போல மருண்டாள்.

தவறு நடக்கிறது என்பது அவளுக்குப் புரிந்தது. அவளால் என்ன செய்வது என்றும் தெரியவில்லை. தந்தை மோசம் போகிறார் என்று தோன்றியது. எனவே வேறு வழி தெரியாமல் உதயசந்திரனிடம் சென்றாள்.

அவனைக் கண்டதும் பேச முடியாமல் கலங்கினாள்.

''என்ன ஆயிற்று பூவிழி? நீ இப்படிக் கலங்கி நான் பார்த்ததில்லையே? யாராவது உனக்குத் தீங்கிழைத்தார்களா?'' என்று பரிவோடு விசாரித்தான் உதயசந்திரன்.

அவள் அழுதபடி அனைத்தையும் சொன்னாள்.

அவன் அவளது கண்களைத் துடைத்துவிட்டு ''நீ எதற்கும் கலங்காதே பூவிழி. நானிருக்கிறேன். தைரியமாக இரு'' என்றான்.

''உங்களைத்தான் இந்த நாட்டை விட்டுப் போகச் சொல்கிறாரே?'' என்று கேட்டாள் பூவிழி.

''போகத்தான் போகிறேன். ஆனால் இப்போதல்ல. என் பொறுப்பை முடித்துவிட்டுத்தான் போவேன்.''

''பொறுப்புகளைக் கூட அவர் ஸ்ரீவிஜய இளவரசரிடம் ஒப்படைத்துவிட்டாரே?''

''அதையெல்லாம் பார்த்துக் கொள்கிறேன். எல்லா வற்றையும் என்னிடம் விட்டுவிடு.''

''ஸ்ரீவிஜய இளவரசரை மணக்க என்னால் முடியாது.''

''அது பற்றி இப்போது பிரச்சனை இல்லை. எனக்கு இப்போது தேவை ஒன்றே ஒன்றுதான்.''

''சொல்லுங்கள்.''

''நீ கவலைப்படாமல் இருக்க வேண்டும்.''

அவள் அவனது மார்பை குழந்தையைப் போல் தட்டிவிட்டு பெரும் திருப்தியுடன் சென்றாள்.

'ஒன்றுமறியாத இந்தப் பேதைப் பெண்ணின் மனதை அறியாமல் மன்னர் ஏன் இப்படியெல்லாம் நடந்து கொள்கிறார்?' என்று தனக்குத் தானே கேட்டுக் கொண்டான் உதயசந்திரன்.

அப்போது கஜமுகன், சிங்கமுகன், கடல்முகன், நரிமுகன் ஆகியோர் வந்து ''தலைவரே! மன்னர் எங்களை அழைத்து ஸ்ரீவிஜய இளவரசரிடம் சென்று அவர் இடும் பணிகளைச் செய்யும் படி கட்டளையிட்டிருக்கிறார்'' என்றார்கள்.

மன்னன் எவ்வளவு வேகமாகச் செயல்படுகிறான் என்று நினைத்துக் கொண்ட உதயசந்திரன், ''நீங்கள் மன்னரின் கட்டளைக்குக் கட்டுப்பட்டவர்கள். அவருக்குப் புறம்பாகச் செயல்படுங்கள் என்று சொன்னால் எப்படிச் சொல்ல முடியும்?'' என்று கேட்டான்.

''நாம் எல்லா ஏற்பாடுகளையும் செய்து விட்டோம். அவை கச்சிதமாக இருக்கின்றன. இப்போது ஸ்ரீவிஜய இளவரசர் சொல்வதுபடி நடந்தால் இவையெல்லாம் வீணாகிவிடும்'' என்றான் கஜமுகன்.

''நான் என்ன செய்வது கஜமுகா? நாம் செய்திருக்கும் ஏற்பாடுகள் இந்த நாட்டைக் காப்பாற்றுவதற்காகத்தான் என்பது உங்களுக்கெல்லாம் தெரியும். மன்னருக்கும் தெரியும். அவரே இப்போது வேண்டாம் என்கிறார். என்னைக் காம்போஜத்தை விட்டு வெளியேறும்படிச் சொல்லிவிட்டார்.''

''தலைவரே! இது உண்மையா? உங்களையா வெளியேறும் படிச் சொன்னார்?''

''இப்போதுதான் மன்னர் மகள் வந்து விவரங்களைச் சொல்லிவிட்டுக் கலங்கினார். பாவம் இளவரசி. அவருக்கு மன்னரின் போக்கு எதுவும் பிடிக்கவில்லை.''

''எங்களுக்கும் பிடிக்கவில்லை.''

''அப்படிச் சொல்லாதீர்கள். இளவரசிக்கு மன்னரை எதிர்க்கவும் மீறவும் உரிமை இருக்கிறது. உங்களுக்கெல்லாம் அந்த உரிமை இல்லை.''

''இப்போது உரிமைப் பிரச்சனை முக்கியமில்லை தலைவரே. நாட்டு நன்மை தான் முக்கியம். அதற்கு உங்கள் ஏற்பாடுகள்தான் சரி.''

''அப்படியானால் ஒன்று செய்யுங்கள். நமது திட்டம் அப்படியே இருக்கட்டும். நீங்கள் ஸ்ரீவிஜய இளவரசருக்குப் பணிவது போல் நடியுங்கள் போதும்.''

''இது நல்லது தலைவரே.''

''மன்னர் என்னை வெளியேறும்படிச் சொல்லிவிட்டதால் நானிங்கே பகிரங்கமாக இருக்க முடியாது. நான் மரகதப் பட்டிணத்திற்குப் போய்விட்டதாக வதந்தி நிலவட்டும். நான் இங்கேயே மறைவிடத்தில் இருக்கிறேன். நமக்குள் செய்தி பரிமாறிக்கொள்ள ஒரு நம்பிக்கையான நபர் தேவை.''

''அவனை நான் ஏற்பாடு செய்கிறேன்'' என்றான் நரிமுகன்.

பிறகு நால்வருமாகச் சென்று ஸ்ரீவிஜய இளவரசனை சந்தித்தார்கள்.

கொள்ளையர்கள் விஷயமாக அவன் தீட்டிய திட்டம் வினோதமாக இருந்தது அவர்களுக்கு.

☆☆☆



86 இளவரசனின் திட்டம்

சுமத்ரா என்னும் ஸ்ரீவிஜயத்தின் இளவரசனான சங்கிராமனின் தோற்றம் மதிக்கத்தக்கதாக இருந்தது. கண்களில் மட்டும் சஞ்சலம் குடி கொண்டிருந்தது.

தனக்கு முன்னால் வந்து நின்ற கஜமுகன், சிங்கமுகன், கடல்முகன், நரிமுகன் ஆகியோரை அமர வைத்த இளவரசன் அவர்களைப் பார்த்து ''கடல் கொள்ளையர்களை முறியடித்த அனுபவம் எனக்கு உண்டு'' என்றான்.

அவர்கள் எதுவும் சொல்லாததால் ''என்ன மௌனமாக இருக்கிறீர்கள்?'' என்று கேட்டான் இளவரசன்.

''நீங்கள் இளவரசர். உங்களுக்குப் பல அனுபவங்கள் இருக்கலாம். இதில் வியப்படைய எதுவுமில்லை'' என்றான் கஜமுகன்.

அவன் பாராட்டுகிறானா கிண்டல் செய்கிறானா என்பது புரியாத நிலையில் இருந்த இளவரசன் பாராட்டாகத் தான் இருக்கும் என்று தனக்குத் தானே சமாதானம் செய்து கொண்டு ''கொள்ளையர்களை முறியடிப்பதில் ஒரே விதமான செயல்பாடு இருக்கக் கூடாது. இடத்திற்கிடம் வேறுபட வேண்டும்'' என்றான்.

''தற்போதைய கொள்ளையர்களை எப்படி எதிர்கொள்ளப் போகிறீர்கள்?'' என்று கேட்டான் கடல்முகன்.

''இன்னும் வரவே இல்லையே! அதற்குள் எதற்கு திட்டம்?'' என்று கேட்ட இளவரசன் ''இந்த விஷயத்தில் பதட்டம் தான் நமக்கு முதல் எதிரி. அதை நாம் விட்டுவிட வேண்டும்'' என்றான்.

ஏதோ குழந்தைகளுக்கு பாடம் நடத்துவது போல் அவன் பேசியது அவர்களுக்கு அலுப்பைக் கொடுத்தது.

''சில நாட்களுக்கு முன்னால் இங்கே வரவிருந்த கொள்ளையர்கள் வராமலிருந்ததற்கு என்ன காரணம்?'' என்று கேட்டான் இளவரசன்.

''அதை அவர்களிடம்தான் கேட்க வேண்டும்'' என்றான் கடல்முகன்.

''வெறும் தூண்டிலைப் போட்டால் எந்த மீன் வரும்?'' என்று கேட்ட இளவரசன் ''வழக்கப்படி மக்கள் நடந்து கொண்டிருந்தால் அன்று கொள்ளையர்கள் வந்திருப்பார்கள்'' என்றான்.

''கொள்ளையர்களை வரவேற்பது எங்கள் நோக்கமல்ல'' என்றான் சிங்கமுகன்.

''வரவேற்பது வேறு. வலை வீசுவது வேறு. அவர்களை நான் வரவேற்கச் சொல்லவில்லை. அவர்களுக்கு வலை வீசச் சொல்கிறேன். அப்படிச் செய்யாமல் விட்டதால் நமக்குத்தான் நஷ்டம்.''

''என்ன நஷ்டம்?''

''கடலில் வந்த கொள்ளையர் கடற்கரைக்கு வராமல் போனதால் மீண்டும் எப்போது வருவார்கள் என்று நாம் பதட்டப்பட வேண்டியிருக்கிறது அல்லவா?''

''பதட்டப்படக் கூடாது என்று நீங்கள் தானே சொல்கிறீர்கள்?''

''நான் பதட்டப்படவில்லை. மக்களைச் சொல்கிறேன். அவர்கள் பதட்டத்தில் இருப்பார்கள் அல்லவா?''

''மக்கள் யாரும் பதட்டத்தில் இல்லை.''

''பாதி வரை வந்தவன் திரும்பிவிட்டான் என்றால் முன்பை விட அதிக பலத்தோடும் வேகத்தோடும் வருவான்.''

''இளவரசே! சில நாட்களுக்கு முன்பு கொள்ளையர்கள் கடலுக்கு வந்ததும் தங்களது வரவை அறிவித்தார்கள். நாங்களோ வழக்கப்படி செல்வங்களைத் திரட்டி அவர்களுக்காக குவிக்கவில்லை. இந்த விஷயம் அவர்களுக்குத் தெரிந்திருக்க வழியில்லை. ஆனாலும் திரும்பிவிட்டார்கள்.''

''ஏன்?''

''சற்று பொறுங்கள். கொள்ளையர்களைப் பொறுத்தவரை வெறும் கைகளோடு திரும்புவது என்பது வழக்கம் கிடையாது. கரைக்கு வருவார்கள். செல்வங்களைக் குவித்து வைத்திருந்தால் எடுத்துக் கொண்டு போய் விடுவார்கள். இல்லையென்றால் ஊரைச் சூறையாடிவிட்டு தெருக்களைக் கொளுத்திவிட்டு இளம் வாலிபர்களையும் பெண்களையும் தூக்கிச் செல்வார்கள். இந்த

இரண்டுமே நடக்கவில்லை. கொள்ளையர்கள் திரும்பிவிட்டார்கள்.''

''அதுதான் ஏன்?''

''இதைத்தான் ஆரம்பத்திலேயே சொன்னோம். காரணத்தை அவர்களிடம்தான் கேட்க வேண்டும் என்று.''

சிறிது நேரம் வரை யோசனையில் ஆழ்ந்த இளவரசன் ''கொள்ளையர்கள் எப்போது வருவார்கள்?'' என்று கேட்டான்.

'இதையும் அவர்களிடம் தான் கேட்க வேண்டும்' என்று சொல்ல நினைத்த கஜமுகன் அவ்வாறு சொல்லாமல் ''அவர்கள் கடலில் வந்தால் கொம்பொலி எழும். கடற்கரைக்கு வந்தால் பறைகள் முழங்கும்.'' என்றான்.

''அதுதான் இல்லை. இந்த முறை அவர்களது அறிவிப்பு எதுவும் இருக்காது. திடீரென வருவார்கள். இந்திரபுரத்தைத் தாக்குவார்கள்'' என்றான் இளவரசன் பெருமிதத்துடன்.

''தாக்கலாம்'' என்று ஒப்புக் கொண்டான் கஜமுகன்.

''அநேகமாக அந்தத் தாக்குதல் அமாவாசையன்று நடக்கலாம்'' என்றான் இளவரசன்.

''நடக்கலாம்.''

''இந்த முறை மிகச்சரியாக வலையை விரித்தால் அவர்களை அழித்துவிடலாம். என் திட்டத்தைச் சொல்கிறேன் கேளுங்கள். மக்களிடமிருந்து செல்வங்களைத் திரட்டி படகுகளில் வைத்து கடலில் செல்லுங்கள். அமாவாசைக்கு இரண்டு நாட்களே உள்ளன. நீங்கள் நாளைக்குக் கடலுக்குச் செல்வதற்கும் அவர்கள் வருவதற்கும் சரியாக இருக்கும். அவர்களிடம் செல்வங்களை ஒப்படையுங்கள். கொள்ளையர் தலைவனை மட்டும் தனியே அழைத்து வாருங்கள். தனியாக வரும் அவனிடம் இளவரசி பூவிழியை ஒப்படைப்பதாக ஆசை காட்டுங்கள். இளவரசியை பிணையாக வைத்துக் கொண்டால் இந்திர புரத்தில் இருக்கும் எல்லா செல்வங்களையும் அழகிகளையும் பெறலாம் என்று சொல்லுங்கள். ஆசையில் இருப்பவர்களின் அடுத்தபடி பேராசைதான். உங்கள் பேச்சால் பேராசையில் கொள்ளையர் தலைவன் வீழ்வான். அவனை ரகசியமாக அழைத்து வாருங்கள். அவனைப் பிடித்து வைத்துக் கொண்டு எல்லா கொள்ளையர்களையும் வரவழைத்து அழிப்போம். இழந்த செல்வங்களையும் மீட்போம்.''

இளவரசனின் திட்டம் வினோதமாக இருந்தது நால்வருக்கும். உதயசந்திரனின் திட்டத்திற்கும் இளவரசனின் திட்டத்திற்கும் பெரும் வித்தியாசம் இருந்ததும் தெரிந்தது அவர்களுக்கு.

சரி என்று ஒப்புக் கொண்டு வெளியேறினார்கள்.

இதே நேரத்தில் குலகுருவைச் சந்திக்க வந்தான் மன்னன்.

''வா சூர்யவர்மா. குலகுருவின் நினைவு உனக்கு இருக்கிறதா?'' என்று கேட்டார் குலகுரு.

''உங்கள் நினைவு இல்லாமல் நானெப்படி இருக்க முடியும் குருநாதரே? உங்களை மறக்கவுமில்லை. உங்கள் மீதான மரியாதையையும் விடவில்லை.''

''மகிழ்ச்சி. என்ன விஷயமாக என்னைக் காண வந்தாய்?''

விஷயத்தைச் சொன்னான் மன்னன். மன்னனது திடீர் திருப்பத்தை அவர் எதிர்பார்க்கவில்லை. உதயசந்திரன் புறக்கணிக்கப்பட்டு நாட்டை விட்டு வெளியேற்றப்படுவது அவருக்கு பரம ஆனந்தமாக இருந்தது. அவன் போய்விட்டால் தன்னால் பழைய விஸ்வரூபத்தை எடுக்க முடியும் என்றும் பழைய படியே மன்னனை ஆட்டுவித்து ஆட்டம் போடலாம் என்றும் நினைத்தார்.

அதோடு ஸ்ரீவிஜய இளவரசனால் கடல் கொள்ளையர்களை வெற்றி கொள்ள முடியும் என்று அவருக்குத் தோன்றவில்லை. 'அவன் தோற்பான். கொள்ளையர்களால் இந்திரபுரத்திற்கு நாசம் உண்டாகும். உதயசந்திரனும் போய்விடுவான். பிறகு? தனது ராஜ்ஜியம்தான்' என்று கணக்குப் போட்டுக் கொண்ட அவர் ''ஸ்ரீவிஜய இளவரசனால் கொள்ளையர்களை வீழ்த்திவிட முடியும் என்று உனக்கு நம்பிக்கை இருக்கிறதா?'' என்று அக்கறையுள்ளவர் போல் கேட்டார்.

''அவனிடம் துடிப்பு இருக்கிறது. பூவிழியை மணக்க வேண்டும் என்ற உறுதி இருக்கிறது. அதனால் அவன் சாதிப்பான்.''

''உதயசந்திரனை எதற்காகப் புறக்கணித்தாய்?''

''ஸ்ரீ விஜயம் நமது அண்டை நாடு. காஞ்சியோ தொலைதூர நாடு. நாம் அண்டை நாட்டைத்தான் அணுக முடியும். அல்லது ஆள முடியும். அவசரத்திற்கு காஞ்சியை அணுக முடியாது. ஆள முடியாது. அவசரத்திற்கு காஞ்சியை அணுக முடியாது. ஆத்திரம் வந்தால் படையெடுக்க முடியாது. ஆகவே தான் தொலைதூர நாட்டு உதயசந்திரனை புறக்கணித்தேன். சரிதானே குருநாதரே?''

''மிகவும் சரி.''

''அதோடு.''

''அதோடு என்ன?''

''வைத்தியர்கள் கைவிரித்து விட்டார்கள். உதய சந்திரனுக்குப் பழைய முகம் திரும்பாதாம். சிகிச்சைகள் தோற்றுவிட்டதாம்.''

''இது உண்மையா சூர்யவர்மா?''

''ஆமாம் குருநாதரே. கோர சொரூபனை வைத்துக் கொண்டு என்ன செய்யச் சொல்கிறீர்கள்?''

குலகுருவுக்கு வானத்தில் பறப்பது போல இருந்தது. கடலில் அலைகள் இல்லாமல் போகலாம். தனக்கு மறுவாழ்வு கிடைப்பது நடவாத காரியம் என்று நினைத்துக் கொண்டிருந்த அவருக்கு எல்லாமே தலைகீழாகி அதிஷ்டமானது தன்னைத் தேடி ஓடோடி வந்து கொண்டிருப்பதாகவே கருதினார். சூர்யவர்மனை வாழ்த்தி அனுப்பிவிட்டு ஆனந்தக் களிப்போடு மாளிகையின் பாதாள அறைக்குச் சென்றார்.

அங்கே பந்தங்களின் பிரகாசத்தில் பட்டு மஞ்சத்தில் காம பாணமாய் கிடந்தாள் கட்டழகி ஒருத்தி. மீன்களைப் பிடிக்க தூண்டிலில் இறைச்சியைச் செருகி ஈர்ப்பது போல கண்களை ஈர்க்க காமத் தூண்டிலில் தனது அங்கங்களை இறைச்சியாக ஈடுபடுத்தியிருந்தாள். ஆதலால் குலகுரு அவற்றைக் கண்டதும் காற்றில் அடித்துச் செல்லும் குப்பைகளைப் போல பெரு வேகத்துடன் அவளை நோக்கிச் சென்றார்.

அவருக்குத் தூண்டில் தேவையில்லை. அவர் எல்லா வற்றையும் தாண்டியவர். மீன்கள் அவரைத் தேடி வரும். அவரது கட்டளைக்குப் பணியும். இருந்தாலும் இன்றென்னவோ இறைச்சியைக் கண்டு துள்ளி ஓடிய மீனைப் போல விரைந்தார் அவர். அவருக்குத் தலை எது கால் எது என்று தெரியவில்லை. அத்தனை ஆனந்தம் அவருக்கு அவளைத் தொடுவதற்கு முன்பே சூர்யவர்மனின் பேச்சுக்களால் உண்டாகிவிட்டிருந்தது. எனவே அவரது செயலைக் கண்டதுமே அதிர்ந்து போனாள் அழகி. 'இதென்ன இவர் இப்படி? இங்கே போய்...'' என்று அவளே வெட்கமும் அதிர்ச்சியும் அடையும் அளவிற்கு அவள் விவஸ்தை இல்லாமல் நடந்து கொண்டார். அவளது பேச்சுக்கள் எதுவும் காதில் விழவில்லை. 'இதெல்லாம் வேண்டாம்.' என்று விலக முற்பட்ட அவளை புலி மானை வீழ்த்துவது போல மடக்கி அடக்கினார். புலியாகவே மாறினார். அவளே பெண்ணாக பரம அவஸ்தையை அடைந்தாள். புலியிடம் மான் சிக்கினாலும்

ஒன்றுதான். பெண் சிக்கினாலும் ஒன்றுதான். குலகுரு என்னும் காமப் புலிக்கு அந்த அழகி இரையானாள்.

மறுநாள் நம்பகமான ஒற்றனின் மூலம் உதயசந்திரனின் ரகசிய இடத்திற்கு கஜமுகன் முதலான நால்வரும் வந்து ஸ்ரீவிஜய இளவரசனின் திட்டத்தைச் சொன்னார்கள்.

''திட்டம் நன்றாகத்தான் இருக்கிறது. ஆனால் இளவரசர் நினைப்பது போல் கொள்ளைக்காரர்கள் நடந்து கொண்டால் தான் திட்டம் வெற்றி பெறும். படகுகளில் நீங்கள் கொண்டு சென்ற செல்வங்களைப் பெற்றுக் கொண்டு கொள்ளைக்காரர்கள் மற்றதை பிறகு பார்த்துக் கொள்ளலாம் என்று போய்விட்டால் யாரைப் பிடித்து வைத்துக் கொண்டு மிரட்டுவது? அப்படியே கொள்ளையர் தலைவனைப் பிடித்து வைத்துக் கொண்டு பிற கொள்ளையர்களை வரச் சொன்னால் அவர்கள் வருவார்கள் என்று சொல்வதற்கில்லை. அவர்களுக்குள்ளேயே போட்டி, பொறாமை உண்டு. தலைவனைப் பற்றிக் கவலைப்படாமல் மற்றவர்கள் போய் விடுவார்கள். சரி சரி. நடக்கப் போகாத திட்டத்தைப் பற்றிப் பேச வேண்டிய அவசியமில்லை'' என்று சொன்ன உதயசந்திரன் ''நாம் கூட அமாவாசையன்று தான் கொள்ளையர்களை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம். அறிவிப்பு இல்லாமல் வருவார்கள் என்பதும் நாம் எதிர் பார்ப்பதுதான். நமது திட்டம் நிறைவேற வேண்டுமென்றால் ஸ்ரீவிஜய இளவரசர் வெளியே இருக்கக் கூடாது. அவரை போக்குக் காட்டி இங்கே அழைத்து வந்துவிடுங்கள். எல்லாம் முடியும் வரை அவரை இங்கே சிறை வைப்போம். கொள்ளையர் விஷயமாக இளவரசர் ரகசிய ஏற்பாடுகளில் ஈடு பட்டிருப்பதாகவும் அமாவாசை நாள் வரை அவரைப் பார்க்க முடியாது என்றும் மன்னரிடம் சொல்லி விட்டால் மன்னர் அவரைத் தேட மாட்டார். இன்றைக்கு இரவு எப்படியாவது இளவரசரை அழைத்து வந்துவிடுங்கள்'' என்றான்.

கஜமுகனைப் பார்த்த அவன் நிறைவேற்ற வேண்டிய காரியம் பற்றியும் நேரத்தைப் பற்றியும் சொன்னான்.

சிங்கமுகனைப் பார்த்து, ''சிங்கமுகா! அமாவாசையன்று இரவு தொடங்கியதும் உன் பணியை முடித்துவிடு'' என்றான்.

கடல்முகனைப் பார்த்து, ''இதே நேரத்தில் படகுகள் தயாராகட்டும்'' என்றான்.

நரிமுகன், ''நானும் என் வேலையை அதே நேரத்தில் முடித்துவிடுகிறேன்'' என்றான்.

உதயசந்திரன் அதோடு பேச்சை நிறுத்திக் கொண்டான்.

அன்று இரவு ஸ்ரீவிஜய இளவரசன் தந்திரமாக அங்கு வரவழைக்கப்பட்டான்.

தான் கடத்தப்பட்டிருப்பது தெரிந்ததும் ஆவேசத்திற்கு ஆளான இளவரசன், ''உதயசந்திரா! என்னிடம் நீ விளையாடி விட்டாய். இது எவ்வளவு ஆபத்தானது என்பது உனக்கு இப்போது தெரியாது'' என்றான் கடுமையான குரலில்.

''மன்னித்துவிடுங்கள் இளவரசே. உங்களை அவமானப் படுத்தும் நோக்கமோ உங்களைத் தோற்கடிக்கச் செய்யும் நோக்கமோ எனக்குக் கிடையாது. கொள்ளைக்காரர்களை அழித்தாக வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறேன். அதற்கான திட்டத்தை தீட்டிவிட்டேன். உங்கள் குறுக்கீடு அந்த திட்டத்தையெல்லாம் அழித்துவிடும். மன்னருக்கு இதை யெல்லாம் விளக்க அவர் எனக்கு சந்தர்ப்பம் அளிக்காததால் எனக்கு வேறு வழியில்லாமல் போய்விட்டது. பொறுத்துக் கொள்ளுங்கள். உங்களுக்கு இங்கே ஒரு சிறையும் இருக்காது.'' என்று சொன்ன உதயசந்திரன் மேற்கொண்டு எதையும் பேசாமல் இளவரசனை பாதுகாப்பாக வைத்தான்.

அனைவரும் எதிர்பார்த்த அமாவாசை நாளும் வந்தது.

அன்றைய தினம் இரவு தொடங்கிய போது காம்போஜ நாட்டின் இந்திரபுர கடற்கரையை கடல் கொள்ளையர்களின் மரக்கலங்கள் நெருங்கிக் கொண்டிருந்தன.

கொள்ளையர்கள் இருந்த நூறு மரக்கலங்களிலும் விளக்குகள் எதுவும் ஏற்றப்படாததால் அவை அனைத்துமே கடல் பிசாசுகளைப் போலக் காணப்பட்டன. அமாவாசை இரவில் இந்திரபுரத்தை விழுங்க வந்த கடல் பிசாசுகள் போலிருந்த அம்மரக்கலங்கள் ஒன்றில் நான்கு கொள்ளையர்கள் பேய்களைப் போலவே அமர்ந்திருந்தார்கள்.

''இந்த முறை நாம் கொள்ளைக்காரர்கள் என்ற நிலைக்கு மேலே ஒரு படி போய் அரக்கர்களாக மாறிச் செயல்பட வேண்டும் என்பது தலைவரது உத்தரவு'' என்றான் ஒருவன்.

சூர்யவர்மனுக்கும் இந்த மக்களுக்கும் சரியான பாடம் கற்பிக்க வேண்டும். சூறையாடி கவரும் செல்வங்களை விட கொன்று குவிக்கும் மக்களின் தொகை அதிகமாக இருக்க வேண்டும் என்றும் செத்தவர்களின் சடலங்களை கடற்கரையில்

குவியலாகக் குவிக்க வேண்டும் என்பதும் தலைவரின் கட்டளை'' என்றான் மற்றொரு கொள்ளையன்.

''அது மட்டுமல்ல. கட்டிடங்களை பலவற்றை இடித்தும் வீடுகளை கொளுத்தியும் இந்த நகரத்திற்கு பெரும் சேதாரத்தையும் உண்டாக்கச் சொல்லியிருக்கிறார் தலைவர். நாம் ஆயிரம் பேர் இருக்கிறோம். ஆளுக்கு இவ்வளவு என்று இலக்கு நிர்ணயித்துக் கொண்டு செயல்பட்டால் தான் சரியாக இருக்கும்'' என்றான் மூன்றாவது கொள்ளையன்.

''நம்மீது இருந்த பயம் மக்களிடமிருந்து போய்விட்டதில் தலைவர் கோபமாக இருக்கிறார். ஆகவே நமது இலக்கு மக்களிடம் நம்மீதான பயம் மீண்டும் உண்டாக வேண்டும். அந்த வகையில் நமது தாக்குதல் அசுரத்தனமாக இருக்க வேண்டும். எல்லோரும் உணவு உண்டு முடிக்கட்டும். நள்ளிரவில் நங்கூரமிட்டு கப்பல்களை நிறுத்தி விட்டு நாமெல்லாம் நீந்திக் கரையை அடைவோம். ஊர் அமைதியாக இருக்கும். நாம் பேய்களைப் போலப் புகுந்தும் சூறையாடுவோம்'' என்றான் நான்காவது கொள்ளையன்.

இப்படி கொள்ளையர்கள் தங்கள் நோக்கத்தையும் செயல்பாட்டையும் உறுதி செய்து கொண்டு கடற்கரையை நெருங்கி கப்பல்களுக்கு நங்கூரமிட்டார்கள். இந்திரபுரம் அமைதியாக உறங்கிக் கொண்டிருந்ததைக் கண்டார்கள். ஊரின் மத்தியில் இருந்த உயர்ந்த கோபுரத்தில் சிவப்பு விளக்கு ஒன்று எரிந்து கொண்டிருந்தது. அரண்மனைப் பகுதி என்று உணர்த்திக் கொண்டிருந்த அந்த விளக்கைக் கண்ட அக்கொள்ளையர்கள் மரக்கலங்களை விட்டு இறங்கி கரையை நோக்கி நீந்தலானார்கள். ஆயிரம் கொள்ளையர்களும் கடற்கரையை அடைந்து ஊரை நோக்கி வெகுவேகமாக ஓடினார்கள்.

''ஐயோ'' என்ற குரலோடு கீழே விழுந்தான் ஒரு கொள்ளையன்.

அதையடுத்து ''ஐயோ ஐயோ'' என்று பலர் கத்தியபடி விழுந்தார்கள்.

அடுத்து உண்டானது பிரளயம்.

★★★



87 உண்மை வெளிப்பட்டது

உதயசந்திரனின் திட்டப்படி கடற்கரையில் கடல் நீர் முன்னேறிவிட்டுத் திரும்பும் பகுதிக்குச் சற்று தள்ளி கடற்கரை பகுதி முழுவதிலும் சிங்கமுகனின் மூலம் உலோக முட்களை நட்டு வைக்கப்பட்டிருந்ததால் அவற்றை அறியாத கொள்ளைக்காரர்கள் வேகமாக முன்னேறியதால் அந்த உலோக முட்களால் கால்கள் கிழிக்கப்பட்டு தடுமாறி ஐயோ என்று அலறி விழலானார்கள். உலோக முட்கள் புத்தம் புதியதாகவும் கூரான முனைகளைக் கொண்டதாகவும் கணிசமானதாகவும் இருந்ததால் கொள்ளையர்களின் காலணிகளை கிழித்து பாதங்களை பதம் பார்க்கக் கூடியதாக இருந்தன.* கொள்ளையர்களின் எண்ணிக்கையை விட உலோக முட்களின் எண்ணிக்கை அதிகமாக இருந்ததாலும் நெருக்கமாக நடப்பட்டிருந்ததாலும் பெரும்பாலான கொள்ளையர்கள் பாதங்கள் கிழிக்கப்பட்டு விழுந்தார்கள். விழுந்த பேர்து பலருக்கு முகங்களிலும் முட்கள் குத்திக் கிழித்ததால் அவர்கள் அலறினார்கள்.

அடி விழுந்தவன் தலையில் இடி விழுந்த கதையாக உலோக முட்களால் தடுமாறி விழுந்த கொள்ளையர்கள் தத்தளித்தபோது கடற்கரையின் இரு பக்கங்களிலிருந்தும் யானைகளை கடற்கொள்ளையர்களை நோக்கி இயக்கச் செய்தான் கஜமுகன். உதயசந்திரன் கூறியப்படி யானைகளின் கால்களுக்கு உலோகப் பூண்கள் போடப்பட்டிருந்ததால் அவை எந்தவிதமான பாதிப்புமின்றி கடற்கரையில் பிரவேசித்து கொள்ளையர்களை மிதித்தும் தூக்கி வீசியும் அதாஹதம் செய்தன. தாம் நினைத்ததற்கு

---

* இத்தகைய உலோக முட்கள் 'கால்டிராம்' என்று அழைக்கப்பட்டன. கடற்கரைக்கு நடை மார்க்கமாகவும் புரவி மார்க்கமாகவும் வந்தவர்களை இந்த முட்கள் கால்களைக் கிழித்தன.

p 121 '500 Things you should know about History' by Andrew Langley

மாறாக விபரீதம் நடப்பதாகக் கருதிய கொள்ளையர்கள் மேற்கொண்டு முன்னேற முடியவில்லை. அவர்களது சாவு எண்ணிக்கையும் அதிகரித்தது.

''மோசம் போய்விட்டோம். கப்பல்களுக்கு திரும்புங்கள்'' என்று பெருங்குரல் கொடுத்தான் ஒரு கொள்ளையன்.

ஆனால் கடல்புரத்தில் இதைவிட மோசமான நிலையே உண்டாகியிருந்தது. கடல்முகன் தலைமையில் இயங்கிய ஆயிரம் படகுகள் கொள்ளையர்களின் மரக்கலங்களை ஏக காலத்தில் சூழந்து கொண்டு வெடிப்பொருட்களை வீசி எரியம்புகளை எய்ததால் அந்த மரக்கலங்கள் தீப்பற்றி எரிந்தன. படகில் இருந்தவர்களை தாக்கவோ மரக்கலங்களைப் பற்றிய தீயை அணைக்கவோ அவற்றில் யாரும் இல்லாததால் கடல்முகன் அந்த வாய்ப்பைச் சரியாகப் பயன்படுத்திக் கொண்டு வெடிப்பொருட்களையும் வாணங்களையும் மரக்கலங்களின் மீது தொடர்ந்து வீசியதால் கடலே பற்றி எரிவது போல் கொள்ளையரின் நூறு மரக்கலங்களும் தீ நாக்குகளுடன் பற்றி எரிந்தன. மரக்கலங்கள் எதையும் பிடிக்க வேண்டாம் என்றும் அனைத்தையும் கொளுத்தி தீக்கிரையாக்க வேண்டும் என்றும் உதயசந்திரன் கடல்முகனிடம் திட்டமாகச் சொல்லியிருந்ததை மிகச் சரியாகக் கடல்முகன் நிறைவேற்றினான்.

கடற்கரையில் முன்னேற முடியாமலும் கடலுக்கு போக முடியாமலும் நிர்க்கதியில் திணறிய எஞ்சிய கொள்ளையர்களை கஜமுகனின் வீரர்கள் வளைத்துப் பிடித்தார்கள். அதேசமயம் ஊர் புறத்தில் பந்தங்கள் நிரம்பத் தோன்றின. மன்னனும் வீரர்களுமாக அங்கே பிரவேசித்தார்கள். மன்னனை வரவேற்ற கஜமுகன் ''வெற்றி மகாராஜா. வெற்றி. கடல் கொள்ளையர்களை அழித்துவிட்டார் ஸ்ரீ விஜய இளவரசர்'' என்று உதயசந்திரன் சொல்லியிருந்த வார்த்தைகளைச் சொன்னான்.

''இளவரசர் எங்கே?'' என்று கேட்டான் மன்னன்.

''தங்களைச் சந்திப்பதற்காகத்தான் அரண்மனைக்குச் சென்றிருக்கிறார்'' என்றான் கஜமுகன்.

''கொள்ளையர்கள் எப்படி முறியடிக்கப்பட்டார்கள்?'' என்று கேட்டான் மன்னன்.

நிறைவேற்றப்பட்ட திட்டத்தைச் சொன்ன கஜமுகன் ''எல்லாமே இளவரசனின் கச்சிதமான திட்டங்கள். இம்மியளவும் பிசகவில்லை'' என்றான்.

மன்னன் அரண்மனைக்குத் திரும்பினான்.

சிறிது நேரத்தில் உதயசந்திரன் இருந்த ரகசிய இடத்திற்கு கஜமுகனும் மற்ற மூவரும் வந்து சேர்ந்தார்கள். அவர்களைக் கட்டித் தழுவி வரவேற்ற உதயசந்திரன் ''சிறப்பான செயல்பாடு. இம்மியளவும் பிசகாத தாக்குதல். என் பாராட்டுக்கள்'' என்றான்.

''தலைவரே! இந்த வெற்றி உங்களுடையது. அதேசமயம் இந்த வெற்றியை ஸ்ரீவிஜய இளவரசரின் வெற்றி என்று எங்களைச் சொல்லச் சொன்னீர்களே அது ஏன்?'' என்று கேட்டான் கஜமுகன்.

''இளவரசர் பாவம். இளவரசியை அடைய சாகசம் செய்வதாக மன்னரிடம் சொல்லியிருக்கிறார். அவர் திட்டமிட்ட வழியில் முயன்றிருந்தால் தோல்விதான் கிடைத்திருக்கும். ஏமாற்றமடைந்திருப்பார். அவரது எண்ணம் ஈடேறாது. எனவேதான் அவர் வெற்றி பெற்றதாகச் சொல்லச் சொன்னேன். இப்போது எந்தப் பிரச்சனையும் இல்லை அல்லவா?''

''இது எங்களுக்குப் பிடிக்கவில்லை தலைவரே.''

''வெற்றியை யார் ஈட்டினால் என்ன? நன்மை இந்த நாட்டிற்குத்தானே? அந்த திருப்தியை அடையுங்கள்.''

''இனி எங்கள் நிலை?''

''மன்னரிடம் செல்லுங்கள்.''

''தங்கள் நிலை?''

''என் கடமை முடிந்துவிட்டது. பொழுது விடிந்ததும் மரகதப்பட்டிணத்திற்குச் சென்று அங்கிருந்து என் நாட்டிற்குச் செல்கிறேன்.''

மன்னன் சூர்யவர்மன் அரண்மனைக்குச் சென்றபோது அங்கே இருந்த ஸ்ரீவிஜயத்தின் இளவரசனான சங்கிராமன் கடுங்கோபத்தில் இருந்தான். சூர்யவர்மனைக் கண்டதும் ''வாருங்கள் சூர்யவர்மரே! உங்கள் நாடகம் சிறப்பாக இருக்கிறது. உங்களைப் போன்ற கபட நாடகதாரியை நான் கண்டதே இல்லை'' என்று பொரிந்தான் வார்த்தைகளால்.

கொள்ளையர்களை வெற்றி கொண்டவன் பேசுகிற பேச்சாக இல்லாததால் குழம்பிப்போன சூர்யவர்மன் ஒருவேளை இளவரசன் நாடகமாடுகிறானோ என்று நினைத்து ''இங்கே நீங்கள் தான் நாடகமாடுவது போல் தெரிகிறது. கொள்ளையர்களை வெற்றி கொண்ட நீங்கள் இப்படிப் பேசுவது அப்படித்தான் எண்ணத் தோன்றுகிறது'' என்றான்.

இதைக் கேட்டதும் சங்கிராமனின் கோபம் அதிகமாகவே செய்தது.

''சூர்யவர்மரே! நான் நாடோடியுமல்ல. நாடகதாரியும் அல்ல. வீரன். வீரப் பரம்பரையில் வந்தவன். என் ஒரே தவறு உங்கள் மகள் மீது காதல் கொண்டது. அக்காதலில் வெற்றி பெற உங்கள் நாட்டுப் பிரச்சனையைத் தீர்த்து வைப்பதாகச் சூளுரைத்தேன். அதற்கு வேறு காரணங்கள் இருப்பதும் உங்களுக்குத் தெரியும். என் சவாலுக்கு ஒப்புதலும் தெரிவித்தீர்கள். உண்மையாகத்தான் சொல்கிறீர்கள் என்று நினைத்தேன் நான். ஆனால் கவர்ச்சியாகப் பேசி விட்டு கபட நாடகமாடியிருக்கிறீர்கள் என்பது இப்போது தான் புரிகிறது'' என்று சீறினான்.

''வெற்றி வீரரே! நீங்கள் பேசுவது எனக்கு விளங்க வில்லை.''

''நான் வெற்றிகளை சம்பாதிக்கக் கூடிய வீரன் தான். ஆனால் கொள்ளையர் விஷயத்தில் நான் வெற்றி பெற வில்லை. இதை முதலில் நீங்கள் தெரிந்து கொள்ளுங்கள்.''

''இதென்ன புதிதாக இருக்கிறது? வெற்றியைத்தான் நான் கண்கூடாகக் கண்டேனே?''

''வெற்றி வெற்றி தான். அதை யார் இல்லை என்று சொன்னது? அந்த வெற்றியை ஈட்டித் தந்தது நானல்ல. நான் இந்தத் தாக்குதலில் ஈடுபடவே இல்லை. மூன்று நாட்களாக உதய சந்திரனிடம் சிறையிருந்தேன். என்னை அவமானப்படுத்து வதற்குச் சகலத்தையும் செய்துவிட்டு இப்போது ஒன்றும் தெரியாதது போல் நடிக்கிறீர்கள். உங்கள் நடிப்பு பாராட்டுக் குரியதுதான்.''

''இளவரசே! நான் எந்த நாடகமும் ஆடவில்லை. நடந்தது என்ன என்பதை விவரமாகச் சொல்லுங்கள்.''

''நான் ஏன் சொல்ல வேண்டும்? நடந்தவைகளுக்கு நீங்கள் காரணமில்லை என்றால் காரணமானவனை கூப்பிட்டுக் கேளுங்கள்.''

''உதயசந்திரனையா? அவனை நாட்டை விட்டு வெளியேறும்படிச் சொல்லிவிட்டேனே?'' என்று முணு முணுத்தான் சூர்யவர்மன்.

அதைக் கண்ட சங்கிராமன், ''உதயசந்திரன் எங்கேயும் போய்விடவில்லை. உங்கள் தலைநகரத்திலேயே இருக்கிறான். என்னைச் சிறை செய்தவன் அவன். கஜமுகன், சிங்கமுகன், கடல்முகன், நரிமுகன் ஆகியோர் இதற்கு உடந்தை'' என்றான்.

சூர்யவர்மன் காவலர்களை அழைத்து, ''உதயசந்திரன் எங்கே இருந்தாலும் பிடித்து வாருங்கள். அவனோடு கஜமுகன் முதலான நான்கு தலைவர்களையும் அழைத்து வாருங்கள்'' என்று கட்டளையிட்டுவிட்டு இளவரசனைப் பார்த்து ''இளவரசே! நீங்கள் போய் ஓய்வெடுங்கள். விடிந்ததும் அவர்களை விசாரித்து நியாயம் வழங்குகிறேன்'' என்றான்.

''காலை வரை காத்திருக்க நானென்ன காவலாளியா? குற்றவாளியா? முடியாது சூர்யவர்மரே. எனக்கு எப்போதோ பொழுது விடிந்துவிட்டது. ஓர் உபதலைவனுக்காகவும் உங்கள் நாட்டு படை வீரர்களுக்காகவும் நான் காத்திருக்க முடியாது'' என்றான் இளவரசன் பிடிவாதமான குரலில்.

''அதனால் என்ன? நீங்கள் இங்கேயே அமருங்கள். உணவை அருந்துங்கள்... இதோ வந்துவிடுவார்கள்'' என்று மன்றாடினான் மன்னன்.

சங்கிராமனும் வேறு வழியில்லாமல் ஆசனத்தில் அமர்ந்தான். ஆனால் தண்ணீரைக் கூட குடிக்கவில்லை.

இதற்கிடையில் ஒரு நாழிகை கழித்து உதயசந்திரனும் நால்வரும் வரவழைக்கப்பட்டார்கள். அவர்களோடு வைத்தியரும் வந்திருந்தார்.

உதயசந்திரனைக் கண்டதும் கோபமுற்ற சூர்யவர்மன், ''உதயசந்திரா! உன்னை நாட்டை விட்டு வெளியேறும்படிச் சொன்னேனே, ஏன் வெளியேறவில்லை?'' என்றான் கடுமையான குரலில்.

''என் பொறுப்புகளை நிறைவேற்றாமல் வெளியேற நான் விரும்பவில்லை மன்னவா'' என்றான் அவனும் உறுதியான குரலில்.

''என்ன பொறுப்புகள் அவை?''

''கடல் கொள்ளையர்களை அழிப்பது.''

''அந்தப் பொறுப்பிலிருந்து தான் உன்னை நான் விலக்கிவிட்டேனே?''

''மன்னவா! நான் உங்களுக்கு உதவ வந்தவனே தவிர உங்கள் கைப்பொம்மையல்ல. நீங்கள் உட்கார் என்றால் உட்காருவதற்கும் நில் என்றால் நிற்பதற்கும்.''

''என்ன சொல்கிறாய் நீ?''

''கடல் கொள்ளையரை அழிக்கும் பொறுப்பை எனக்குத் தந்தது நீங்கள். அதை ஏற்றவன் நான். அதற்கான அனைத்து ஏற்பாடு களையும் கஜமுகன் ஆகியோரை வைத்துச் செய்து விட்டேன். நான் இந்தப் பொறுப்பை ஏற்றிருப்பது மக்களுக்கும் தெரியும். இந்த நிலையில் எல்லாவற்றையும் கைவிட்டுவிட்டு நாட்டை விட்டு ஓடிப்போ என்று சொல்வது எந்த தர்மத்தைச் சேர்ந்தது?''

''இது தர்ம-அதர்ம விஷயத்தைப் பற்றிய பிரச்சனை அல்ல. என் அதிகாரம் சம்பந்தப்பட்ட பிரச்சனை. இங்கே என் அதிகாரம் தான் செல்லும். நான் வேண்டாம் என்று ஒதுக்கிவிட்டபின் முடியாது என்று எதிர்த்து நிற்க நீ யார்?''

''நான் யார் என்பதையும் என் தீர்மானம் என்ன என்பதையும் பலி அரங்கத்திலேயே தெளிவுபடுத்திவிட்டேன். நீங்கள் அப்போது மறுப்பு தெரிவித்து நாட்டை விட்டு வெளியேறும் படிச் சொல்லியிருக்கலாம். நீங்களோ என்னை நம்பி - மதித்து - பிரச்சனைகளை ஒப்படைத்தீர்கள். நானும் ஏற்றுக் கொண்டு பொறுப்புகளை நிறைவேற்றியும் வருகிறேன். இப்போது திடீரென்று ஒதுங்கச் சொல்வது நியாயமா?''

''நியாயம் தான் உதயசந்திரா. இது நீயும் நானும் சம்பந்தப்பட்ட பிரச்சனையல்ல. நாட்டுப் பிரச்சனை. அரசியல் பிரச்சனை. அண்டை நாட்டு இளவரசர் இங்கே வந்து பிரச்சனையைத் தீர்க்க முன் வரும்போது யாரை ஏற்பது என்பதை முடிவு செய்ய மன்னன் என்ற முறையில் எனக்குப் பூரண உரிமை உண்டு. இதை நியாயமல்ல என்பது விதண்டாவாதம்.''

''மன்னவா! நாட்டுப்பிரச்சனை என்று சொல்கிறீர்களே அதை உங்களையும் அறியாமல் வீட்டுப் பிரச்சனையாக மாற்றிக் கொண்டுவிட்டீர்கள். ஸ்ரீவிஜய இளவரசர் தங்கள் செல்வ மகளை விரும்பியது தவறல்ல. அவரது வீரமும் சோடை போனதல்ல. அவர் சாகசம் செய்ய விரும்பினால் அதற்கு எத்தனையோ பிரச்சனைகள் இருக்கின்றன. ஏற்கெனவே பொறுப்பேற்றுக் கொள்ளப்பட்ட விஷயத்தைப் போய் அவரிடம் ஏன் ஒப்படைக்க வேண்டும்? அதுவும் கொள்ளையர் பிரச்சனை நிரந்தரமாகத் தீர்க்கப்பட வேண்டிய ஒன்று. அதற்கு நான் சரியாக திட்டமிட்டிருந்தேன். இச்சமயத்தில் இவரை வைத்து மாற்று திட்டத்தை தீட்ட வைத்துவிட்டீர்கள்.''

இங்கே இளவரசர் குறுக்கிட்டு, ''என் திட்டம் என்ன என்பது தெரியுமா உனக்கு?'' என்று கேட்டான்.

''தெரியும் இளவரசே'' என்றான் உதயசந்திரன்.

''அதில் என்ன குறை கண்டாய்?''

''உங்களது திட்டம் மிகவும் பழமையான திட்டம்.. அது கொள்ளைக்காரர்களுக்கு ஒத்துவராது.''

''ஏன்?''

''கொள்ளைக்காரர்களின் பேராசையை மையமாக வைத்து கொள்ளையர் தலைவனை ஏமாற்றி அழைத்து வந்து அவனைப் பணயமாக வைத்து மற்ற கொள்ளையர்களை இழுத்து அழிப்பது தான் உங்கள் திட்டம்.''

''அதில் என்ன குறை?''

''யாரைப் பணயம் வைத்தால் அஞ்சுவார்கள் என்பது முக்கியமானது. இந்த நாட்டு இளவரசியை கடத்தி பணயப் பொருளாக்கி மிரட்டினால் சம்பந்தப்பட்டவர்கள் அடி பணிவார்கள். கொள்ளைக்காரர்கள் அப்படியல்ல. தலைவனை நீங்கள் பிடித்து வைத்துக் கொண்டு மிரட்டினால் மற்றவர்கள் பணிய மாட்டார்கள். அவர்களுக்கு முக்கியம் செல்வமேயன்றி தலைவனோ மற்றவர்களோ அல்ல. அதோடு சுளு கொள்ளைக் கூட்டத் தலைவனை உங்களால் பிடிக்க முடியாது.''

''ஏன்?''

''அவன் கடலில் இல்லை. இந்திரபுரத்தில் இருக்கிறான். அவன் ஆணைப்படித்தான் கொள்ளையர்கள் நடந்து கொள்கிறார்கள்.''

இதைக் கேட்டதும் சூர்யவர்மன் அதிர்ச்சியடைந்து ''உதயசந்திரா? என்ன சொல்கிறாய் நீ? கொள்ளையர் தலைவன் இங்கே இருக்கிறானா? எங்கே இருக்கிறான்? எந்த இடத்தில் இருக்கிறான்?'' என்று கேட்டான்.

''அவனை உங்களுக்குத் தெரியும் மன்னவா. அவனோடு பேசி பழகியிருக்கிறீர்கள்.''

''யாரவன்?''

உதயசந்திரன் நரிமுகனைப் பார்த்து சைகை செய்யவே அதையடுத்து நரிமுகன் குலகுருவை இழுத்து வந்தான்,

சங்கிலியால் பிணைக்கப்பட்ட நிலையில் கிலியோடு காணப்பட்ட குலகுருவைக் கண்ட மன்னன் ''உதயசந்திரா?

குலகுருவா கொள்ளையர் கூட்டத்தின் தலைவன்?'' என்று பரபரப்புடன் கேட்டான்.

''எல்லோருக்கும் வியப்பைத் தரும் விஷயம் தான் மன்னவா. பலர் மீது சந்தேகப்பட்ட நான் கூட இவர் மீது சந்தேகப்படவில்லை. உண்மையிலேயே இவர்தான் கைதேர்ந்த நடிகர்'' என்று சொல்லி அவரது மாளிகைக்குப் போனது - குண்டோதரன் மூலமாக பத்மினியின் சடலத்தைக் கண்டது. பத்மினி குலகுரு தான் கொள்ளையர் தலைவன் என்று அறைச் சுவற்றில் எழுதி வைத்தது. அதற்குப் பின் நரிமுகனை விட்டு குலகுருவை கண்காணிக்கச் செய்து அவர் தான் கொள்ளையர் தலைவன் என்பதை உறுதி செய்தது. அவர் மூலமாக அமாவாசையன்று கொள்ளையர்கள் கடற்கரைக்கு வரவிருந்தது ஆகிய எல்லா விவரங்களையும் சொன்ன உதயசந்திரன் ''உங்களை எப்படியோ ஏமாற்றி இரண்டாண்டுகளுக்கு முன் உங்கள் குலகுருவாக அமர்ந்து கொண்ட அவன் மந்திரவாதிகளுடன் தொடர்பு வைத்துக் கொண்டு இருவருமாகத் தங்களையும் அருமை மக்களையும் ஏமாற்றி பணம் பறித்துக் கொண்டிருந்தார்கள். நான் வந்து மூடநம்பிக்கைகளை மக்களிடமிருந்து அகற்ற நினைத்தது இவர்களுக்கு கட்டோடு பிடிக்காததால் என்னைக் கடத்தி வேறுவிதமாக மக்களை ஏமாற்ற திட்டம் போட்டார்கள். அது ஊர்வசியின் குறுக்கீட்டால் நடக்க முடியாமல் போனது. நான் இங்கே கொள்ளயர்களை அழிக்கத் திட்டமிடுகிறேன் என்று தெரிந்ததும் குறைந்த மரக்கலங்களோடு சில நாட்களுக்கு முன் வந்த கொள்ளையர்களை இவர் திருப்பி அனுப்பிவிட்டு அமாவாசை தினமான இன்று திடீர் தாக்குதல் நடத்தி தலைநகரை கொள்ளையடிக்கவும், கொளுத்தவும், இளவரசியைக் கடத்தவும், மக்களை பெருமளவு கொல்லவும் திட்டமிட்டார். நரிமுகனின் மூலம் அனைத்தையும் அறிந்த நான் கஜமுகன், சிங்கமுகன், கடல்முகன் ஆகியோர் மூலம் திட்டம் தீட்டினேன், கொள்ளையர்களை அழிக்க. அச்சமயத்தில்தான் இளவரசர் குறுக்கிட்டார். அவரது திட்டம் வெற்றி பெறாது என்பதை உணர்ந்தேன். அவரிடமோ உங்களிடமோ விவாதிக்க முடியாத நிலை. எனவேதான் அவரை நான் இருந்த ரகசிய இடத்திலேயே சற்று முன் வரை வீட்டுச் சிறையில் வசதியாகவே வைத்திருந்தேன். கடல் கொள்ளையர்கள் பிடிபட்டார்கள். அவர்களது நூறு மரக்கலங்களும் அழிக்கப்பட்டன. மந்திரவாதி சீராளனும் அவனது சகாக்களும் நரிமுகனின் முயற்சியால் அவரவர்களின்

உறைவிடங்களிலேயே சிறைபட்டு விட்டார்கள். எல்லாம் முடிந்துவிட்டது. இனி எனக்கு வேலையில்லை என்பதை உணர்ந்ததும் கடல் கொள்ளையரை வென்றது இளவரசர் தான் என்று கஜமுகன் மூலம் உங்களுக்கு அறிவிக்கச் செய்தேன். அதற்குக் காரணம் இளவரசரின் அபிலாஷைகள் நிறைவேற வேண்டும் என்பதுதான். கடல் கொள்ளையர் தலைவனும் பிடிபட்டான். கொள்ளையர்களும் பிடிபட்டார்கள். அவர்களது நூறு மரக்கலங்களும் கொளுத்தப்பட்டுவிட்டன. அதனால் அவர்களால் இப்போதைக்கு தலையெடுக்க முடியாது. நகராசூரன் பிரச்சனையும் தீர்ந்தது. நான் ஒப்புக் கொண்ட பொறுப்புகளை முடித்துவிட்டேன். விடிந்ததும் மரகதப் பட்டிணத்திற்குச் சென்று இந்த நாட்டை விட்டு வெளியேறி விடுவது என்று கருதியிருந்தேன். நீங்கள் கட்டளையிட்டதால் இங்கு வந்தேன். வந்ததும் நல்லதாய் போயிற்று. விவரங்களைச் சொல்ல வாய்ப்பு கிடைத்தது'' என்று சொல்லிவிட்டு நிறுத்தினான்.

'தனக்கு ஒப்படைக்கப்பட்ட காரியத்தை எத்தனைச் சிறப்பாக நிறைவேற்றியிருக்கிறான். இவனைப் போய் நாட்டை விட்டு வெளியேறச் சொன்னோமே! எவ்வளவு கேவலமான மனிதன் நான்? எதையும் எதிர்பார்க்காமல் இந்த நாட்டின் பிரச்சனைகளைத் தீர்த்த இவனை அவமதித்து விட்டு பல வித எதிர்பார்ப்புகளுடன் வந்து தன் மகளை கடத்தவும் செய்த ஸ்ரீவிஜய இளவரசனுக்கு மரியாதை கொடுத்து அவமானப்பட்டு நிற்கிறோமே இது எத்தனை பெரிய மூடத்தனம்? இந்த இளவரசன் போட்ட திட்டம் மட்டும் நடந்திருந்தால் இந்திரபுரம் சேதாரப்பட்டல்லவா போயிருக்கும்? அது நடக்காதது எவ்வளவு நல்லதாகப் போயிற்று? இவனை நம்பி அவசரப்பட்டு அருமை மகளை வேறு நோகடித்துவிட்டோமே! என் புத்தி ஏன் இப்படி போக வேண்டும்? இவர்களை யெல்லாம் எப்படிச் சமாதானப்படுத்தப் போகிறேன்? அரசியலில் பேராசையும் கூடாது. அச்சமும் கூடாது. நான் இரண்டையும் கொண்டதால் என்னை நானே சேற்றில் வீழ்த்திக் கொண்டு திண்டாடுகிறேன்' என்றெல்லாம் புலம்பியது மன்னனின் மனம்.

உதயசந்திரனின் விவரங்களைக் கேட்டு ஸ்ரீவிஜய இளவரசனும் அதிர்ந்து தான் போனான். ஆனால் உதயசந்திரனை விட அந்தஸ்தில் உயர்ந்திருந்த காரணத்தால் அவனைப் பாராட்ட முன்வரவில்லை. வறட்டு கௌரவத்தை தலையில் சுமந்து கொண்டு ''சூர்யவர்மரே! இந்த நாட்டுப் பிரச்சனை முடிந்துவிட்டதில் உங்கள் எல்லோருக்கும் சந்தோஷமாக

இருக்கலாம். ஆனால் இளவரசனான என்னை ஒருச் சாதாரண உபதலைவன் மூன்று நாட்கள் சிறை வைத்தது பெருங்குற்றம். அது என் தன்மானப் பிரச்சனை. அதற்காக நீங்கள் அவனைத் தண்டித்தே ஆக வேண்டும்'' என்றான்.

அப்போது அங்கே மயிலைப்போல வந்தாள் பூவிழி.

அவளைக் கண்டதும் ஆசை ஒருபுறமும் அவமானம் ஒருபுற முமாக அழுத்தியதால் பெருங்கோபத்திற்கு ஆளான இளவரசன் திடீரென தன் குறுவாளை எடுத்து பூவிழியின் மீது வீசினான்.

ஆனால் எப்போதுமே விழிப்புடன் இருப்பவனான உதயசந்திரன் மின்னலைப் போல இடையே பாய்ந்து விட்டதால் பூவிழியின் மீது பதிய வேண்டிய குறுவாள் அவனது முக கவசத்தின் மீது விழுந்தது.

அதையடுத்து ஆச்சரியம் ஒன்றும் நடந்தது.

☆ ☆ ☆



88

அன்று கண்ட முகம்

ஸ்ரீவிஜய இளவரசன் வீசிய குறுவாள் குறுக்கே பாய்ந்த உதயசந்திரனின் முகக் கவசத்தில் பட்டு அதை உடைத்துவிடவே கவசம் விலகிய நிலையில் அவனைக் கண்ட எல்லோருமே இன்ப அதிர்ச்சியை அடைந்தார்கள். ஏனென்றால் அவனது கோரமுகம் மறைந்து போயிருந்தது. முதன் முதலில் பார்த்த மன்மத முகம் காட்சியளித்தது.

ஏற்கெனவே பல்வேறு உணர்ச்சிகளுக்கு ஆளாகியிருந்த உதயசந்திரன் தற்போது திக்குமுக்காடிப் போனான். முகம் கோரமாய் இருந்தபோதும் தாராளமனத்துடன் பழகியிருந்த பூவிழி தற்போது மெய் சிலிர்த்தாள். கஜமுகன் முதலான நால்வர் மகிழ்ச்சியடைந்தார்கள். காவலர்களும் கண்ணால் கண்டவர்களும் களிப்புற்றார்கள். ஸ்ரீவிஜய இளவரசன் ஒருவனுக்கு மட்டுமே கசப்பாகவும் வெறுப்பாகவும் இருந்தது.

தனது மகளை ஒழிக்கத் தீர்மானித்து குறுவாளை வீசிய இளவரசனைத் தண்டிக்க முற்பட்ட சூர்யவர்மன் காவல் வீரர்களைப் பார்த்து, ''இவனைக் கைது செய்யுங்கள்'' என்று கட்டளையிட்டான்.

உதயசந்திரன் குறுக்கிட்டு ''வேண்டாம் மன்னவா. இளவரசரின் உணர்வுகள் நியாயமானவை. அவரது நிலைமை இக்கட்டானது. அதோடு அவரது குறுவாள் வீச்சு பயனற்றுப் போய்விட்டது. எனவே தண்டிக்கும் அவசியம் எழ வேண்டாம்'' என்றான்.

''நீங்கள் மட்டும் குறுக்கிடாவிட்டால் பூவிழியின் கதி என்னாகியிருக்கும் உபதலைவரே?'' என்று கேட்டான் சூர்யவர்மன்.

''நடக்காததைப் பற்றிப் பேச வேண்டாம் மன்னவா. நடந்ததைப் பார்ப்போம். நடக்க வேண்டியதைப் பார்ப்போம்'' என்றான் உதயசந்திரன்.

''உங்கள் முகம் எப்படி மாறிற்று? மாற்றவே முடியாது என்றல்லவா சொன்னார் வைத்தியர்?'' என்று கேட்டு அருகே இருந்த வைத்தியரைப் பார்த்தான் சூர்யவர்மன்.

''நான் சொன்னது உண்மைதான் மகாராஜா. என் சிகிச்சை தோற்றுப் போனதும் உண்மை. நான் கைவிட்ட பின் இரண்டு நாட்களாக உபதலைவர் கடற்கரையில் காலத்தைக் கழித்திருக்கிறார். உப்புக் காற்று அவரது முகத்தில் ஊசி போல குத்திக் குத்தி வலுவற்றுப் போய்விட்ட தாதுக்களைக் கிளப்பிவிட்டிருக்கிறது. அதில் உண்டான மாற்றம்தான் இது. இந்த முக மாற்றம் ஏற்பட்டு ஐந்து நாட்களாகின்றன. உபதலைவர்தான் யாரிடமும் சொல்ல வேண்டாம் என்று சொல்லி கவசத்தை தொடர்ந்து போட்டுக் கொண்டார்'' என்றார் வைத்தியர்.

ஸ்ரீவிஜய இளவரசனைத் தூக்கி வைத்துக் கொண்டு உதயசந்திரனைப் புறக்கணித்து நாட்டை விட்டு வெளியேறும் படி சொன்ன போதே உதயசந்திரனுக்குப் பழைய முகம் திரும்பிவிட்டது என்பதை உணர்ந்தான் சூர்யவர்மன். உண்மை தெரிந்திருந்தால் உதயசந்திரனைப் புறக்கணிக்கும் நிலைமை வந்திருக்காது என்பதும் புரிந்தது. தற்போது உதயசந்திரன் பழைய முக அழகினை பெற்றுவிட்ட நிலையில் ஸ்ரீவிஜய இளவரசனை பொருட்படுத்த அவன் விரும்பவில்லை. பூவிழிக்கு மணாளனாக்கும் எண்ணமும் தளர்ந்து போயிற்று. அதோடு இளவரசன் வீரசாகசம் எதையும் செய்யவில்லை என்பதும் ஆத்திரத்தில் தன் மகளையே கொல்லத் துணிந்தவன் என்பது நிதர்சனமாகத் தெரிந்துவிட்டதால் உதயசந்திரனிடம் பேசிய அரசியல் நிர்பந்தங்களையும் பூவிழியிடம் விவரித்த சந்தர்ப்ப வாதங்களையும் மறந்துவிட்டு பழைய நிலைக்குத் திரும்பிய சூர்யவர்மன் ஸ்ரீவிஜய இளவரசனிடம் தனது தீர்மானத்தைச் சொல்ல முயன்றான். ஆனால் இளவரசன் அங்கே இல்லை. அனைவரும் பேச்சு சுவாரசியத்தில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போதே அவன் அங்கிருந்து நழுவியிருந்தான். அதை உதய சந்திரனும் பூவிழியும் மட்டுமே கவனித்தார்கள். ஆனால் கண்டுகொள்ளவில்லை.

தற்போது அவன் காணப்படாததால் அவனைத் தேடுவதற்கு காவலர்களை பணிக்க சூர்யவர்மன் முயன்றபோது உதயசந்திரன் தடுத்தான். ''அவரைத் தேடி என்ன செய்யப் போகிறீர்கள் மன்னவா? அவருக்குத் தன் நிலை புரிந்திருக்கும். இங்கே இருப்பதால் பயனில்லை என்பதை உணர்ந்து கொண்டு

விலகிவிட்டார். இந்த நாட்டிற்கு அவர் எப்படி வந்தாரோ அப்படியே சென்றுவிட்டதாகக் கருதுங்கள்'' என்று சொன்னான்.

சூர்யவர்மனுக்கும் அது சரிதான் என்று தோன்றியது. பிறகு அவன் உதயசந்திரனிடம் தனது செயல்களுக்காக மன்னிப்பு கேட்டுக் கொண்டான்.

உதயசந்திரனோ அந்த விஷயங்களைப் பற்றி பேச விரும்பவில்லை.

''மன்னவா! நடந்தவைகளில் நல்லவற்றை மட்டும் நினைப்பதுதான் எல்லோருக்கும் நல்லது. நினைக்கத் தெரிந்த மனத்திற்கு மறக்கத் தெரியும். இப்போது நாம் நடக்க வேண்டியவைகளைப் பார்ப்போம். நான் தங்களிடம் இப்போது கேட்கப் போவது கைம்மாறு அல்ல. கையறு நிலையில் இருந்து கொண்டு கேட்கப் போகும் உதவி. மன்னவா! நானும் பௌத்த விஹாரத் தலைமை துறவி வஜ்ஜிரபோதி அடிகளும் செல்ல திட்டமிட்டது சீன தேசத்திற்கு. பல்லவ மன்னரின் தூதுவனாகச் செல்லும்படி பணிக்கப்பட்டவன் புயல் எதிர்பாராத விதமாக வஜ்ஜிரபோதியையும் என்னையும் பிரித்துவிட்டது. அவர் சீன நாட்டிற்குப் போய்ச் சேர்ந்தாரா இல்லையா என்பது தெரியவில்லை. எனவே நான் அவசியம் சென்று சீன மன்னரைச் சந்திக்க வேண்டும். அதற்கான அவசியத்தை தாங்கள் தான் செய்து தர வேண்டும்.''

''உபதலைவரே! உங்களைச் சீன நாட்டிற்கு அனுப்பி வைப்பது மட்டுமல்ல வேறு என்னென்ன உதவிகள் செய்ய வேண்டும் என்பது எனக்குத் தெரியும். அதேசமயம் நீங்கள் எனக்குச் செய்ய வேண்டிய மகத்தான விஷயம் ஒன்றிருக்கிறது. அது என்ன என்பது உங்களுக்குத் தெரியும். அதற்கான பதிலை இப்போதே சொல்ல வேண்டும் என்ற அவசியம் இல்லை. யோசித்துச் சொன்னால் போதும். இப்போது நீங்கள் போய் ஓய்வெடுங்கள்'' என்றான் மன்னன்.

உதயசந்திரனுக்கு விட்டால் போதும் என்றிருந்தது. நேராகத் தன் இருப்பிடத்திற்குச் சென்று மஞ்சத்தில் படுத்தான். உறக்கம் அவனை ஆட்கொண்டது.

ஆனால் இளவரசி பூவிழிக்கோ உறக்கம் வருவதாக இல்லை. தாதியப் பெண்கள் மெல்லிசையை இசைத்தும் அவளுக்குத் தூக்கம் வரவில்லை. ஏன் என்பது அவளுக்குத் தெரிந்த மாதிரி இருந்தாலும் நம்புகிற மாதிரி இல்லை. உதயசந்திரனின் மன்மத

முகம் அவளது மனத்திரையில் தோன்றித் தோன்றி அலைக்கழித்தது. இத்தனை நாட்களாக இல்லாமல் இன்றைக்கு அப்படித் தோன்றுவது ஏன் என்பது அவளுக்கு விளங்குவது போலவும் இருந்தது. விளங்காத மாதிரியும் இருந்தது. குழப்பமாக இருந்தாலும் அந்தக் குழப்பம் இன்பகரமானதாக இருந்தது.

மறுநாள் பொழுது விடிந்தது. அவளுக்கோ இருப்பு கொள்ளவில்லை. நேராக உதயசந்திரனின் இருப்பிடத்திற்குச் சென்றாள். அவளைத் தடுக்கும் அதிகாரம் யாருக்கும் இல்லையாதலால் தங்கு தடையின்றிச் சென்ற நதியைப் போலச் சென்றாள். கதிரவன் முளைத்து ஒரு நாழிகை நேரம் கடந்திருந்தாலும் உதயசந்திரன் விழிக்கவில்லை. உறங்கிக் கொண்டிருந்தான்.

'பாவம்! சோர்வு போலிருக்கிறது. ஆகவே தான் விடிந்தது கூடத் தெரியாமல் உறங்குகிறார்' என்று நினைத்துக் கொண்ட அவள் அவனது முகத்தையே பார்த்தபடி நின்றாள். சாதாரணமாக உறக்கமானது முகத்திற்கு சவக் களையைத் தந்துவிடும். உதயசந்திரனுக்கோ அப்படியில்லாமல் உறக்கத்தில் வீரக்களையும் அழகுக் களையும் அமைந்திருந்ததைக் கண்டு வியந்தாள் பூவிழி.

''எத்தனை கோரமாய் இருந்த முகம் இது? கோரம் கோரம் தான் விடிவு கிடையாது என்று வைத்தியர் முடிவு சொன்ன போது எவ்வளவு வேதனை அடைந்திருப்பார்? ஆண்டவனாகப் பார்த்துத்தான் அவரது வேதனையைத் தீர்த்திருக்கிறான். இவர் சாதிக்க வேண்டியது இன்னும் எவ்வளவு இருக்கிறதோ? யாருக்குத் தெரியும் ஆண்டவனை விட? அவற்றைச் சாதிக்கத்தான் அழகை மீட்டுத் தந்திருக்கிறார். எத்தனை சுந்தரமான முகம்? பெண்ணாகப் பிறக்க வேண்டியவர் ஆணாகப் பிறந்துவிட்டாரா? ஊர்வசி மயங்கியதும் மாண்டு போனதும் இவரது அழகாலும் அவலட்சணத்தாலும் தானே? இவரைத் தந்தை எப்படி நோகடித்துவிட்டார். நாட்டை விட்டு வெளியேறக் கூடச் சொல்லிவிட்டாரே! பாவம்! அவலட்சணம் ஒருபக்கம். அவமானம் மறுபக்கம். எதையுமே காட்டிக் கொள்ளாமல் எத்தனை அமைதியாக இருந்தார்? போன ஜென்மத்தில் துறவியாக இருந்திருப்பாரோ? இல்லையென்றால் உணர்வுகளையெல்லாம் முழுவதுமாகக் கட்டுப்படுத்த முடியுமா? நான் போய் இவரிடம் கலங்கி நின்றபோது 'கவலைப்படாதே! எல்லாவற்றையும் நான் பார்த்துக் கொள்கிறேன்' என்றாரே அந்த வார்த்தையில் தான்

எவ்வளவு ஆறுதல்? ஆண்டவனே வந்து ஆறுதல் சொன்ன மாதிரியல்லவா இருந்தது? சொன்ன மாதிரியே செய்து காட்டியும் விட்டாரே? அவமானத்தையும் அகோரத்தையும் தாங்கிக் கொண்டு தன் பொறுப்பை நிறைவேற்றி சாதித்த இவர் எங்கே? காதல் என்ற பெயரில் தகாத முறையில் ஈடுபட்டு தோற்றுவிட்டு சாகசம் செய்கிறேன் என்று சவாலிட்டுவிட்டு சிறைபட்டுக் கிடந்த சங்கிராமன் எங்கே? அனைத்தும் விலகிவிட்டது என்று தெரிந்ததும் என்னை அழிக்க முயன்றவன் அல்லவா அவன்? இவர் மட்டும் இல்லாதிருந்தால் நான் இப்போது இங்கே நிற்க முடியுமா? குறுவாளை எப்போது கவனித்தார் என்று கூடத் தெரியவில்லையே! மின்னலைப் போலல்லவா பாய்ந்து தடுத்தார்! முகமூடி மட்டும் இல்லாதிருந்தால் இந்த அழகிய முகம் மீண்டுமல்லவா சிதைந்திருக்கும்? இவர் அதைப் பற்றியெல்லாம் கவலைப்படாமல் என்னைக் காத்தாரே! இவருக்கு நான் என்ன கைம்மாறு செய்யப் போகிறேன்?'' என்றெல்லாம் எண்ணியபடி அவள் மலைத்து நிற்க -

திடீரென கண்விழித்த உதயசந்திரன் எழுந்து கொண்டு ''நீயா பூவிழி? இன்று தான் நான் திருமகளின் முகத்திற்கு முன்னால் விழித்தேன்'' என்றான்.

''அதெப்படி உறங்கி எழுந்ததுமே இவ்வளவு அழகாகப் பேச முடிகிறது?'' என்று கேட்டாள் அவள்.

''உண்மை உறங்குவதில்லை பூவிழி. அது எப்போதும் விழித்திருக்கிறது. நான் எந்த நிலையில் இருந்தாலும் அது நிலை மாறாமல் இருக்கிறது. உள்ளே இருப்பது தான் வெளியே வரும்'' என்ற உதயசந்திரன், ''என்ன இது? நானிருக்கும் இடத்தைத் தேடி வந்திருக்கிறாய்?'' என்று கேட்டான்.

''உயிரைக் காத்த தெய்வத்தைக் காண அதன் இருப்பிடத்தைத் தேடி தானே பக்தன் வருவான்?'' என்றாள் அவள்.

''நம் எல்லோருக்கும் ஒரு தெய்வம்தான் இருக்கிறது. அது எங்கும் இருக்கிறது. எல்லாமுமாக இருக்கிறது.''

''சரி சரி. போதும் தெய்வ மகனே. நான் கோபுரத்திற்குப் போகிறேன். நீங்களும் வரவேண்டும் என்று பணிவோடு வேண்டிக் கொள்கிறேன்'' என்று சொல்லிவிட்டு ஒளிபோல் விலகி மறைந்தாள் பூவிழி.

இரண்டு நாழிகை கழித்து அவள் கோபுரத்திற்குச் சென்றான் உதயசந்திரன்.

அவனை வரவேற்ற பூவிழி ''இன்றுதான் நாம் உண்மையாக உயரத்திற்கு வந்திருப்பதாகத் தோன்றுகிறது'' என்றாள்.

''நேற்றுமுன் வரை பிரச்சனைகள் நமக்கு மேலே இருந்தன. இப்போது அவை கீழே போய் விட்டதால் நமக்கு உயரத்தில் இருப்பதாகத் தோன்றுகிறது'' என்றான் உதயசந்திரன்.

''பிரச்சனைகள் தாமாகக் கீழே போய்விடவில்லை. உயரத்தில் இருந்த அவற்றை மாவீரர் ஒருவர் வெட்டிச் சாய்த்தார்'' என்று சொல்லிவிட்டு கடைக்கண்ணால் அவனைப் பார்த்த பூவிழி ''என்னைக் காத்தீர்கள். எங்கள் நாட்டைக் காத்தீர்கள். மக்களைக் காப்பாற்றினீர்கள். அதற்கு எல்லோரது சார்பிலும் என் நன்றியை மனமாற தெரிவித்துக் கொள்கிறேன்'' என்றாள்.

''காப்பாற்றினேன் காப்பாற்றினேன் என்கிறாயே பூவிழி அதற்கு யார் காரணம்? கடற்கரையில் சடலம் போல் ஒதுங்கி நண்டுகள் என்னை கடித்துக் கொண்டிருந்தபோது என்னைக் காப்பாற்றி நடமாடவிட்டது உன் நாடு தானே? அந்த நாட்டிற்கு என் கடமையைச் செய்திருக்கிறேன் நான். அதையும் தனி மனிதனாகச் செய்துவிடவில்லை. உங்கள் நாட்டு மக்களைக் கொண்டும் வீரர்களைக் கொண்டும் தானே செய்தேன்? அவர்கள் சேவை சாதாரணமானதா?''

''வாய்ப்புகள் பலருக்கும் கிடைக்கின்றன. எத்தனை பேர் கடமையைச் செய்கிறார்கள்? எத்தனை பேர் உதவுகிறார்கள்? எத்தனை பேருக்கு நன்றி உணர்ச்சி இருக்கிறது? ஸ்ரீவிஜய இளவரசருக்குக் கூட வாய்ப்பு கிடைத்தது. அவர் என்னைக் கொல்ல அல்லவா முயன்றார்?''

''பூவிழி! நடந்ததெல்லாம் நல்லவைகளே என்று விட்டுவிட்டு நடக்க வேண்டியதைப் பற்றி பேச வேண்டியது தான் இப்போது முக்கியம்.''

''நடப்பவைகளும் நல்லதாகத் தான் இருக்கும். ஏன் கவலைப்படுகிறீர்கள்?''

''நான் சீன நாட்டிற்குச் செல்ல மன்னரின் உதவி மிகவும் அவசியம். ஆனால் அவர் நேற்று பேசியதைப் பார்த்தால் தனது உதவிக்கு ஏதாவது நிபந்தனை விதிப்பார் என்று தோன்றுகிறது.''

''அந்த நிபந்தனை உங்களுக்குத் தெரியும் என்றல்லவா சொன்னார்?''

''ஓரளவிற்கு அது ஊகிக்கக்கூடியதுதான் பூவிழி. ஆனாலும்...''

''ஆனாலும் என்ன?''

''சொல்ல முடியவில்லை.''

''கவலைப்படாதீர்கள். நாளை பார்ப்போம்'' என்றாள் பூவிழி.

மறுநாள் மன்னன் தனது உதவிகளைப் பற்றிப் பேசினான்.

''உபதலைவரே! சீன நாட்டுப் பயணம் உங்களது இலட்சியத்தின் ஒரு பகுதியே தவிர அதுவே லட்சியமல்ல. நீங்கள் சாதிக்க வேண்டியது நிறைய இருக்கிறது. பூர்வக் கடலில் இருக்கும் அராபியர்களின் ஆதிக்கத்தை அகற்ற வேண்டிய பெரும்பணி உங்களுக்கு இருக்கிறது. அதை எப்படிச் செய்யப் போகிறீர்கள்? வெறுங்கையுடனா? நீங்கள் சாதிக்க உங்களுக்கு மரக்கலங்கள் அவசியம் தேவை. நான் ஏற்கெனவே கூறியது போல காம்போஜ நாட்டு மரக்கலங்கள் பழுது பார்ப்பதற்காகச் சீன நாட்டிற்கு அனுப்பப்பட்டிருக்கின்றன. அவை இப்போது பழுது நீக்கப்பட்டுத் தயாராக இருக்கும். சீன மன்னரைச் சந்தித்து விட்டுத் திரும்பும்போது அந்த மரக்கலங்களை உங்களது கடற்படையாக அமைத்துக் கொள்ளுங்கள். அதை வைத்துக் கொண்டு அராபியரை சந்தியுங்கள்'' என்றான் மன்னன்.

''நான் எதிர்பார்த்த உதவியை எதிர்பாராத விதத்தில் எனக்கு அளிக்கிறீர்கள். இது மிகப் பெரும் உதவி. இதற்கு நன்றி என்ற வார்த்தை போதுமானதன்று'' என்றான் உதயசந்திரன்.

''அப்படியானால் நான் கோரும் உதவியைச் செய்யுங்கள். சரியாக இருக்கும்.''

''சொல்லுங்கள்.''

''எனது செல்வ மகளை மணந்து கொள்ளுங்கள்.''

''மன்னவா! பூவிழி சாதாரணமானவள் அல்ல? அவள் திருமகள். அவளை மணக்க நான் பல பிறவிகளில் புண்ணியம் செய்திருக்க வேண்டும். ஆனால் இப்போது திருமணம் செய்து கொள்வது அசந்தர்ப்பமானது. நான் எதிர்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் மிகவும் ஆபத்தானவை. உத்திரவாதமில்லாதவை. என் உயிர் போனாலும் போய்விடலாம்...''

பூவிழி குறுக்கிட்டு ''அபசகுனமான வார்த்தைகள் வேண்டாம் உபதலைவரே. உங்கள் உயிருக்கு எதுவும் நேராது. ஏனென்றால் நீங்கள் சாதிக்கப் பிறந்தவர். என்றாலும் உங்கள் எண்ணத்தை மதிக்கிறோம். நீங்கள் சாதிக்க வேண்டியதை சாதித்து வெற்றி

வீரராக வந்து என் கரத்தைப் பற்றினால் போதும். நான் நம்புகிறேன். மன்னரும் நம்புவார்'' என்றாள்.

மகளை மீறி மன்னன் எதுவும் பேசவில்லை.

நான்கு நாட்கள் கழித்து மரக்கலத்தில் புறப்பட்டான் உதயசந்திரன்.

இரண்டு வார பயணத்திற்குப் பிறகு சீன தேசத்தின் தென்திசையின் பிரதான துறைமுகமான கேன்டன் துறைமுகத்தை அடைந்தான் உதயசந்திரன். கடல் வர்த்தகத்தின் மேற்கு முனையாக ரோம் இருந்ததென்றால் சீன நாட்டின் கேன்டன் துறைமுகம் கிழக்கு முனையாக இருந்தது. இவற்றுக்கு இடையே தான் எகிப்து, அரேபியா, பாரத நாடு, இலங்கை, ஸ்ரீவிஜயம், சாவகம், காம்போஜம் ஆகிய நாடுகள் அடங்கியிருந்தன. வர்த்தக பரிவர்த்தனை செய்து வந்தன.

கான்டன் துறைமுகத்தில் ஏராளமான அரேபிய வர்த்தகக் கப்பல்கள் இருந்ததைக் கண்டான் உதயசந்திரன். கடல் வர்த்தகம் முழுவதற்கும் அராபியர்கள் தரகர்களாக இருந்ததால் பல்வேறு நாடுகளின் சரக்குகளை கொண்டு செல்வதற்கு அவர்களது மரக்கலங்களே பயன்பட்டதால் கேன்டன் துறைமுகத்தில் அவற்றின் எண்ணிக்கை அதிகமாக இருந்ததை அவனால் புரிந்து கொள்ள முடிந்தது. 'இருக்கட்டும். இருக்கட்டும் இவர்களது ஆதிக்கத்திற்கு ஒரு முடிவு கட்டுகிறேன்' என்று சொல்லிக் கொண்டான் உதயசந்திரன்.

அவனுடன் கடல்முகனும் சூர்யவர்மனின் பிரதிநிதியும் ஓலைகளுடன் வந்திருந்ததால் உதயசந்திரனுக்கு எந்தவித இடையூறும் உண்டாகவில்லை. அக்கால கட்டத்தில் சீன நாட்டின் தலைநகரம் பிரதான துறைமுகமான கான்டன் அருகிலேயே மஞ்சள் ஆற்றங்கரையில் அமைந்திருந்தது. அங்கிருந்த மஞ்சள் அரண்மனை என்ற பிரசித்தமான அரண்மனையில் சீன மன்னர் காயூனைச் சந்தித்தான் உதயசந்திரன்.

நீண்ட முகமும் சிறிய கண்களும், தொங்கிய மீசையும், நீண்ட தாடியும் கொண்டு மந்திரவாதியைப் போல் காணப்பட்ட சீன மன்னர் காயூன் சூர்யவர்மனின் பிரதிநிதியால் உதயசந்திரன் அறிமுகப்படுத்தப்பட்டபோது மகிழ்ச்சியடைந்தார்.

அவன் வணக்கம் தெரிவித்துவிட்டு பேசமுற்பட்ட போது ''எனக்கு எல்லா விவரங்களையும் துறவி வஜ்ஜிரபோதி

சொன்னார். உதயசந்திரனுக்கு ஆயுள் கெட்டி என்றும் நிச்சயமாக இங்கே வருவான் என்று சொன்னார். அவர் நம்பிக்கை வீண் போகவில்லை'' என்றார் மன்னர் சீனமொழியில். அதை மொழிபெயர்ப்பாளர் மொழிபெயர்த்தார்.

''சீன நாட்டு மன்னர் பெருமானே! நான் பல்லவப் பேரரசர் ராஜசிம்மரின் தூதுவனாக வந்திருக்கிறேன். அவர் தங்களுக்கு அனுப்பிய பரிசுப் பொருட்களை புயல் கொண்டு போய் விட்டது. எனினும் சூர்யவர்மர் அனுப்பிய பரிசுப் பொருட்களை அவர் சார்பில் தங்களுக்கு சமர்ப்பிக்கிறேன்'' என்றான் உதயசந்திரன்.

அவனது பேச்சும் சீன மொழியில் மொழிபெயர்க்கப்பட்டது.

பணியாளர்கள் பரிசுப் பொருட்களைக் கொண்டு வந்து வைத்தார்கள்.

சூர்யவர்மனின் ஓலையை ஏற்கெனவே படித்திருந்த சீன மன்னர் ''சீன தேசத்திற்கும் அச்சுறுத்தலாக இருந்த சுளு கொள்ளையர்களை நீங்கள் அழித்ததை விட இவை ஒன்றும் எனக்குப் பெரிய பரிசுகள் அல்ல. ஆகவே இவற்றை நான் உங்களுக்கு அளிக்கும் பரிசாக ஏற்றுக் கொள்ளுங்கள்'' என்றார்.

''சீன மன்னர் பெருமானே! தங்கள் நாட்டவர்களின் வழிபாட்டிற்காக தமிழகத்தில் உள்ள நாகைப் பட்டிணத்தில் பௌத்த விஹாரம் ஒன்றைக் கட்டிக் கொண்டிருக்கிறார் மாமன்னர் ராஜசிம்மர். அதைத் தாங்கள் வந்து காண வேண்டும் என்பது அவரது விருப்பம்'' என்றான் உதயசந்திரன்.

''மகிழ்ச்சியான விஷயம்தான். ஆனால் இப்போது அங்கே என்னால் வர இயலாது. ஆனாலும் பட்டயம் ஒன்றைத் தருகிறேன். அதை அந்த விஹாரத்தில் பதிக்கச் சொல்லுங்கள். அது பல்லவ ருக்கும் சீனர்களுக்கும் உள்ள பிணைப்பைப் பற்றி காலம் கடந்தும் பேசும்.''*

---

* சீன அரசர் 'Koei-Hoa-Se' என்ற வார்த்தையைக் கொண்ட பட்டயத்தைக் கொடுத்து நாகைப்பட்டிணத்தில் ராஜசிம்மன் அமைத்த விஹாரத்தில் பதிக்கும்படி கேட்டுக் கொண்டார். இந்தச் சீன வார்த்தைக்கு 'வெகுமதி' என்று பொருள். விஹாரத்தை பல்லவ மன்னன் சீன மன்னனுக்கு வெகுமதியாகத் தந்ததை குறிப்பிடும் வகையில் இந்த வார்த்தையை சீன மன்னர் தேர்ந்தெடுத்திருக்கலாம்.

page 117 'Foreign notices of South Inida' by – N.A.Neelakanta Sastri.

''அராபியர் விவகாரம் முடிந்ததும் சிற்பிகளை இங்கே அனுப்பி சீன தேசத்திலும் பௌத்தர் கோயிலைக் கட்டித் தருவதாகச் சொல்லியிருக்கிறார்.''

''மிகவும் நல்லது. தற்போது பௌத்தத் துறவி வஜ்ஜிர போதியை அனுப்பியிருக்கிறார். அவரும் சீன தேசமெல்லாம் சென்று புத்தரின் போதனைகளை உபதேசித்து வருகிறார். மக்கள் அவற்றால் ஈர்க்கப்பட்டு ஒருமுகப்படும்போது பௌத்த விஹாரம் அமைந்தால் உகந்ததாக இருக்கும்.''

''கிழக்குக் கடல் நாடுகளின் நம்பிக்கையை வெற்றி பெறச் செய்வேன் என்று தங்களிடம் சொல்லச் சொன்னார் மாமன்னர்.''

''தூதுவரே! பாரத நாட்டில் அதுவும் வட பாரதத்தில் பல்லவ மன்னரை விட வலிமை வாய்ந்த மன்னர்கள் பலர் இருக்கிறார்கள். ஆனால் அராபியர் விஷயத்தில் அவர்களை விட்டுவிட்டு பல்லவ ராஜசிம்மரின் உதவியை சீன நாடு கோரியது ஏன் தெரியுமா?'' என்று கேட்டார் சீனமன்னர்.

அவரது கேள்வி உதயசந்திரனுக்கும் வியப்பாகத்தான் இருந்தது.

☆☆☆



89

நம்பிக்கை நட்சத்திரங்கள்

இந்த வியப்பு உதயசந்திரனுக்கு மட்டுமில்லை. இன்றைய வரலாற்று ஆசிரியர்களுக்கும் இருக்கிறது. சென்ற அத்தியாயத்தில் தெரிவிக்கப்பட்ட விவரங்களைத் தெரிவிக்கும் வரலாற்று ஆசிரியர்கள் இக்கேள்வியை எழுப்பியிருக்கிறார்களே தவிர பதிலைச் சொல்லவில்லை.* உதயசந்திரனுக்கும் அதற்கு உரிய பதில் கிடைக்காததால் ''மன்னர் தான் இதற்கு விடை சொல்ல வேண்டும்'' என்றான்.

''நம்பகத்தன்மை. அது தான் காரணம் தூதுவரே! நம்பகத்தன்மை என்பது நம்பிக்கைகளின் சிகரம். அது எங்கே இருக்கிறதோ அங்கே வெற்றி இருக்கும். பல்லவ ராஜசிம்மரிடம் அதை நான் காண்கிறேன். அவர் தேர்ந்தெடுத்த வீரனான உங்களிடமும் காண்கிறேன்'' என்றார் சீனமன்னர்.

அவரது பதில் உதயசந்திரனை அசர வைத்தது. அதோடு ராஜசிம்மரின் மீதான மரியாதையையும் அதிகப்படுத்தியது. 'எப்படிப்பட்ட மன்னர்கள் இவர்கள்?' என்றெண்ணிய அவன் இவர்களுக்கிடையே தான் இருப்பதை குறித்து பெருமிதம் கொண்டான்.

பேச்சு முடிவடைந்த பின் உதயசந்திரனை ஒரு மாத காலம் கௌரவ விருந்தினராக இருக்கும்படி கேட்டுக் கொண்டதை அவனால் தட்டமுடியவில்லை. அதே சமயம் அந்த ஒரு மாத காலம் அவனுக்குப் பயனுள்ளதாகவே அமைந்தது. உதயசந்திரன் காம்போஜ நாட்டு மரக்கலங்களை கடற்படையாக்கிக் கொண்டு திரும்பப் போகிறான் என்பதை அறிந்து சீன மன்னர் மரக்கலங்களுக்குத் தேவையான போர் ஆயுதங்கள் முதலியவற்றை தேர்ந்தெடுத்துக் கொடுத்தார். மாலுமிகளையும் ஏற்பாடு செய்தார். அக்காலத்திலேயே விரைவாகப் போர் செய்யும் வர்மக் கலை சீன

* page 118 'Kanchipuram in Early South Indian History' by- T.V.Mahalingam

தேசத்தில் பிரசித்தமாக இருந்தது. அந்த விரைவு போர்க்கலையின் நுணுக்கங்களை அவன் அறிந்து கொள்ள வாய்ப்பளித்த அவர் 'விரைவுப் போர்க்கலை' வீரர்கள் பலரையும் கொடுத்தார். ஐந்நூறு போர்க்கப்பல்களுடன்தான் புறப்படப் போவதை எண்ணியபோது மலைப்பாக இருந்தது உதயசந்திரனுக்கு. கடல்முகனின் துணையுடன் ஐந்நூறு மரக்கலங்களுக்கும் உபதளபதிகளை நியமனம் செய்தான்.

புறப்படுவதற்கு முதல் நாள் விருந்து வைத்தார் சீன மன்னர். விருந்தின் முடிவில் சீன வீரன் ஒருவனை அறிமுகப்படுத்திய அவர் ''தூதுவரே! இவன் பெயர் லீ-சங்-சங். சிறந்த கடல் வீரன். தென் சீனக் கடல் பகுதி மற்றும் அதைச் சார்ந்த பகுதிகளை நன்கறிந்தவன். கடல் போர்களில் ஈடுபட்டவன். இவனை உன்னுடன் வைத்துக் கொள்ளுங்கள். உபயோகமாக இருப்பான்'' என்றான்.

அந்த வீரனை ஏற்றுக் கொண்டு நன்றி தெரிவித்த உதயசந்திரன் ''சீன மன்னர் அவர்களே! எங்கள் கடற்படைக்கு ஒரு பெயர் சூட்டுங்கள்'' என்று கேட்டுக் கொண்டான்.

''உங்கள் மன்னரது நம்பகத்தன்மையைப் பற்றிச் சொன்னேன். ஆகவே அவரது இப்படைகளுக்கு 'நம்பிக்கை நட்சத்திரங்கள்' என்றே பெயர் சூட்டுகிறேன்'' என்றார் சீன மன்னர்.

மறுநாள் சீனப் பேரிகைகள் முழங்க ஐந்நூறு மரக்கலங்களும் புறப்பட்டன.

கடல்முகனையும் சீன நாட்டு வீரன் லீ-சங்-சங்கையும் வைத்துக் கொண்டு தனது திட்டத்தைப் பற்றி சொல்ல முற்பட்ட உதயசந்திரன் ''முதலில் நாம் காம்போஜ நாட்டுத் தலைநகர் இந்திரபுரத்திற்குச் செல்வோம். சூர்யவர்மரைச் சந்தித்து நன்றி தெரிவித்துவிட்டு பூர்வக் கடலுக்குச் சென்று நம் தளத்தை அமைக்க வேண்டும். பிறகு அராபியரை கவனிக்க வேண்டும்'' என்றான்.

கடல்முகனும் லீ-சங்-சங்கும் ஒப்புக் கொண்டார்கள்.

ஆனால் இரண்டு வாரங்கள் கழித்து இந்திரபுரத்தை மரக்கலங்கள் நெருங்கியபோது எதையோ சுட்டிக்காட்டிய கடல்முகன் ''தலைவரே! அதைப் பாருங்கள்'' என்றான்.

''எதை?''

''அந்த கோபுரத்தில் பறக்கும் கொடியைப் பாருங்கள்.''

''அதற்கென்ன?''

''அது காம்போஜ நாட்டின் கொடியல்ல. ஸ்ரீ விஜயத்தின் கொடி.''

''அப்படியானால் காம்போஜம் ஸ்ரீவிஜயத்தின் கைகளுக்கு வந்துவிட்டதா?''

''ஆம் தலைவரே.''

''அதெப்படி சாத்தியம்?''

''சிரமம் எதுவும் இல்லை தலைவரே. இந்திரபுரத்திற்கு வந்த ஸ்ரீவிஜய இளவரசர் எந்த நிலைமையில் அங்கிருந்து போனார் என்பது உங்களுக்குத் தெரியும். பெருத்த ஏமாற்றத்துடனும் அவமானத்துடனும் சென்ற அவர் உடனடியாகச் செயல்பட்டிருக்கிறார். காம்போஜ நாட்டை வெற்றி கொள்ள கடற்படையுடன் வந்திருப்பார். காம்போஜத்திலோ கடற்படை இல்லை. அதை வெற்றி கொள்ள அவருக்குச் சிரமம் இருக்காது அல்லவா?''

''இதை நான் சிறிதும் எதிர்பார்க்கவில்லை கடல்முகா. எனது லட்சிய பயணத்தில் மீண்டும் ஒரு தடை வந்துவிட்டது. காம்போஜ மன்னரையும் அவரது மகளையும் நாம் காப்பாற்றியாக வேண்டும். அவர்கள் இப்போது இங்கே இருக்கிறார்களா என்பதை முதலில் அறிய வேண்டும்.

உதயசந்திரன் இவ்வாறு கூறியபோது அவனது தோளை யாரோ தொடவே திரும்பினான் அவன்.

பின்னால் லெமூர் குரங்கு நின்றிருந்தது.

அதைக் கண்டு வியந்த உதயசந்திரன் ''இது எப்படி இங்கு வந்தது?'' என்று கேட்டான்.

''நாம் சீன தேசத்திற்குப் புறப்பட்டபோது இளவரசி தான் இதை மரக்கலத்திற்கு அனுப்பினார். உங்களிடம் சொல்ல வேண்டாம் என்றார்'' என்றான் கடல்முகன்.

''இது இருப்பது நல்லதுதான். நீ இதனுடன் சென்று இந்திரபுரத்தின் நிலையை இன்றிரவு அறிந்து வா'' என்று சொன்ன உதயசந்திரன் ''நமது மரக்கலங்களை இந்திரபுரத்தில் இருப் பவர்கள் பார்த்திருப்பார்கள் இல்லையா?'' என்று கேட்டான்.

''ஆம்.''

''இங்கே இருக்கும் ஸ்ரீவிஜயத்தின் பிரதிநிதிக்கு இச்செய்தி போயிருக்கும் அல்லவா?''

''போயிருக்கும்.''

''நல்லது கடல்முகா. நீ படகை இறக்கி லெமூருடன் கரைக்குச் சென்று நிலவரத்தை அறிந்து வா.''

கடல்முகனும் சரி லெமூரும் சரி இந்திரபுரத்தைச் சேர்ந்தவர் களாதலால் அங்கே செல்வதற்கோ துப்பறிவதற்கோ சிரமமாக இல்லை.

நள்ளிரவுக்குப் பின் திரும்பிய கடல்முகன் ''தலைவரே, மன்னரும் இளவரசியும் இந்திரபுரத்தில் இல்லை. ஸ்ரீவிஜயத்திற்கு கொண்டு போகப்பட்டிருக்கிறார்கள்'' என்றான்.

''இங்கே போரை நடத்தியது யார்?''

''ஸ்ரீவிஜயத்தின் இளவரசர்தான். எதிர்ப்பே இல்லாத இந்த நாட்டைக் கைப்பற்றிய அவர் மன்னரையும் இளவரசியையும் சிறை செய்து கொண்டு இந்திரபுரத்திற்குத் தன் பிரதிதிநிதியை நியமித்துவிட்டுச் சென்றிருக்கிறார். அது மட்டுமல்ல.''

''வேறென்ன?''

''நாம் சீன தேசத்திற்குச் சென்றிருந்ததையும் அங்கிருந்து கடற்படையுடன் திரும்புவோம் என்பதையும் அறிந்திருக்கிறார்.''

''அதனால்?''

''இந்திரபுரத்தைக் காக்க பலமான ஏற்பாடுகளைச் செய்திருக்கிறார்.''

''பலமான ஏற்பாடு என்றால்?''

''இந்திரபுரியின் துறைமுகத்தில் ஸ்ரீவிஜயத்தின் போர்க்கப்பல்கள் நூறை நிறுத்தியிருக்கிறார்.''

''கடல்முகா! நூறு பெரிதா? ஐநூறு பெரிதா?''

''ஐநூறு தான்.''

''நம்மால் இந்திரபுரத்தை மீட்க முடியாதா?''

''முடியும்.''

''அப்படியானால் நமது ஐந்நூறு மரக்கலங்களிலிருந்தும் கொம்புகளை முழக்கச் சொல்லுங்கள். தூங்கிக் கொண்டிருக்கும் எதிரி எழுந்து கொள்ளட்டும்.''

''எதிரி தூங்கிக் கொண்டிருக்கவில்லை. விழிப்போடு தான் இருக்கிறான்.''

''விழிப்போடு இருப்பவன் ஏன் செயல்படவில்லை? நம்மைப் பார்த்த பிறகும் ஏன் பேசாமல் இருக்கிறான்?''

கடல்முகனுக்குப் புரிந்தது.

''நமது பலம் தெரிந்து தயங்குகிறான் எதிரி'' என்று சொல்லவும் செய்தான்.

''தயங்குவது நியாயம்தானே கடல்முகா? நூறு மரக்கலங்களை வைத்துக் கொண்டு ஐநூறு மரக்கலங்களை வெற்றி கொள்ள முடியாதல்லவா?''

''ஆமாம்.''

''எதிரியைத் தாக்க நமக்கு இதுதானே நல்ல சந்தர்ப்பம்?''

''ஆமாம்.''

''முதலில் கொம்புகளை முழங்கி அவனது காதைக் கிழியச் செய்யுங்கள். நமது பலத்தை உணரச் செய்யுங்கள்.''

அதையடுத்து விளக்குகள் மூலம் கட்டளைகள் பறந்ததும் அனைத்துக் கப்பல்களிலிருந்தும் கொம்புகள் ஊதப்பட்டன. கடலானது கொதிப்படைந்து கத்துவது போல் எழுந்த அந்த ஓசை கடலையே கலக்கியது. இந்திரபுரத்து மக்கள் பிரளயம் வந்துவிட்டதோ என்று பிரமித்துப் போய் கூட்டம் கூட்டமாக கடற்கரைக்கு வந்து உதயசந்திரனின் மரக்கலங்களைக் கண்டார்கள். எல்லா மரக்கலங்களிலும் விளக்குகள் ஏற்றப் பட்டிருந்ததால் மரக்கலங்களின் பரிமாணம் நன்றாகத் தெரிந்தது. வந்திருப்பது மரக்கலங்களா அல்லது நகரமா என்று மக்கள் வியந்தார்கள்.

ஸ்ரீவிஜயத்தின் பிரதிநிதியும் அதைக் காணவே செய்தான். முதலில் காதுகளைப் பிளக்கும் கொம்பொலிகளை நிறுத்துவதற்கு விளக்குகளை ஆட்டினான்.

''இந்த அடையாளம் எதற்கு கடல்முகா? கொம்பொலியை நிறுத்தவா?'' என்று கேட்டான் உதயசந்திரன்.

''ஆமாம் தலைவரே.''

''கொம்பொலி தொடரட்டும். எதிரி தரப்பிலிருந்து படகில் எவனாவது வரும் வரை ஒலிக்கட்டும்.''

தனது அடையாளம் பயனில்லாமல் போனதை உணர்ந்த ஸ்ரீவிஜயத்தின் பிரதிநிதி தானே ஒரு படகில் இறங்கி உதயசந்திரனின் மரக்கலங்களை நோக்கி வந்தான்.

அதைக்கண்ட உதயசந்திரன் கொம்பொலிகளை நிறுத்தச் செய்ததும் அந்தப் பிராந்தியமே புயலிலிருந்து விடுபட்டது போல் இருந்தது.

ஸ்ரீவிஜயப் பிரதிநிதி மேலே வருவதற்கு நூலேணி வீசப் பட்டது. அதில் ஏறி மேலே வந்த பிரதிநிதி உதயசந்திரனைக் கண்டான். அவனது தோரணையிலிருந்தே யாரென ஊகித்துக்

கொண்டு, ''நீங்கள் தான் உதயசந்திரன் என்பவரா?'' என்று கேட்டான்.

''ஆம்'' என்றான் உதயசந்திரன்.

''நான் வல்லாளன். ஸ்ரீவிஜய சாம்ராஜ்யத்தின் காம்போஜ பிரதிநிதி'' என்றான் பிரதிநிதி.

''உன் வரவுக்கு மகிழ்ச்சி. உன் துணிவுக்கு என் பாராட்டுகள்'' என்றான் உதயசந்திரன்.

''ஸ்ரீவிஜயத்தின் ஒரே சொத்து துணிவுதான்'' என்றான் பிரதிநிதி.

ஸ்ரீவிஜய இளவரசன் கடற்கரையில் பூவிழியைக் கடத்த முற்பட்டது முதல் குறுவாள் வீசியது வரை ஞாபகப்படுத்திக் கொண்ட உதயசந்திரன் உள்ளுக்குள் சிரித்துக் கொண்டு ''அது தெரியும்'' என்று சொல்லிவிட்டு ''உன் வரவு எதைக் குறிக்கிறது?'' என்று கேட்டான்.

''சரணாகதியைக் குறிக்கவில்லை'' என்று சொன்ன வல்லாளன் ''அடையாளங்களைக் காட்டிய பிறகும் கொம்பொலி களை நிறுத்தாதது தான் உங்கள் நாகரீகமா?'' என்று கேட்டான்.

''வல்லாளா! எங்களுக்குத் தேவையில்லாத அடையாளங் களை நாங்கள் பொருட்படுத்துவதில்லை. அதோடு நாகரீகத்தைப் பற்றி என்னிடம் பேசுவதை விட உங்கள் இளவரசரிடம் பேசுவதுதான் சரியானது.''

வீண் பேச்சைத் தவிர்த்த வல்லாளன், ''உங்கள் தீர்மானம் என்ன?'' என்று கேட்டான்.

''ரகசியம் ஒன்றுமில்லை. காம்போஜத்தை உங்கள் பிடியிலிருந்து மீட்பதுதான்.''

''நான் போருக்குத் தயார்.''

''போர் நடந்தால் உன் தரப்பில் ஒருவர் கூட மிஞ்ச முடியாது வல்லாளா.''

''போரிடுபவன் உயிரைப் பற்றி எண்ணுவதில்லை உதயசந்திரரே.''

''தோல்வி நிச்சயம் என்று தெரிந்து போரில் ஈடுபடுபவன் வீரனல்ல வீம்பன்.''

''உங்களிடம் நாங்களெல்லாம் சரணடைந்துவிடுவதுதான் வீரமா?''

''சரணடைவது என்பது சந்தர்ப்பத்தைப் பொறுத்தது. இப்போதைய சந்தர்ப்பத்தில் அதுதான் விவேகம். விவேகமில்லை

என்பது உன் அபிப்ராயம் என்றால் திரும்பிச் செல். தேவையில்லாத போருக்குத் தயாராகு.''

வல்லாளன் சிறிது யோசித்துவிட்டு, ''நாங்கள் எல்லோரும் மரக்கலங்களுடன் இந்திரபுரத்தை விட்டு விலகிவிடுகிறோம். இது சம்மதமா உங்களுக்கு?'' என்று கேட்டான்.

''இல்லை'' என்றான் உதயசந்திரன்.

''பின்?''

''நீங்களெல்லாம் விலகுவதில் எனக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை. ஆனால் மரக்கலங்கள் எனக்கு வேண்டும்.''

''இது நியாயமல்ல.''

''காம்போஜத்தை நீங்கள் கவர்ந்தது நியாயம் என்றால் இதுவும் நியாயம் தான்.''

''சரி! உபதலைவரே. உங்கள் விருப்பம் அதுதான் என்றால் அதற்குச் சம்மதிக்கிறேன். என்னை அனுப்புங்கள். நான் செய்ய வேண்டியதைப் போய் செய்கிறேன்.''

''வல்லாளா!''

''என்ன?''

''நான் மிகவும் சந்தேகப்படுபவன். யாரையும் நம்புவ தில்லை. இதோ இருக்கிறாரே இவர் யார் தெரியுமா? கடல்முகன். இந்த நாட்டின் கடற்படை தளபதி. என் கூடவே இருக்கிறார். ஆனால் இவரை நான் நம்புவது கிடையாது.''

''நீங்கள் என்னதான் செய்யச் சொல்கிறீர்கள்?''

''நீ செய்ய வேண்டிய செயல்களை யெல்லாம் இங்கிருந்து கொண்டே செய்.''

''அது முடியாது.''

''ஏன்?''

''நேரில் சென்று விளக்கினால்தான் சரியாக இருக்கும்.''

''வல்லாளா! நீ துறைமுகத்திற்குப் போய் உனது மாலுமிகளையெல்லாம் விலக்கிக் கொண்டு உன் கப்பல்களை யெல்லாம் கொளுத்திவிட்டால் எனக்கு நஷ்டமல்லவா?''

அசந்து போனான் வல்லாளன்.

''பல்லவ உபதலைவரே! உங்களைப் பற்றி இந்திரபுரத்தில் சொன்னதையெல்லாம் இப்போது தான் நம்புகிறேன். உண்மையில் நான் அப்படித்தான் நினைத்தேன்.''

''இப்போதாவது என் சந்தேகத்தை நம்புகிறாயா?''

''நம்பாமல் என்ன செய்ய?'' என்று சொன்ன வல்லாளன் ''ஆகா! நூறு மரக்கலங்களை இளவரசர் என்னோடு அனுப்பினாரே தவிர உதயசந்திரன் இப்படிப்பட்டவன் என்று சொல்லவில்லையே! காம்போஜமும் போய் கௌரவமும் போய் கப்பல்களும் போகப் போகிறதே! இளவரசர் முகத்தில் எப்படி விழிப்பது? சூர்யவர்மரையும் அவரது மகளையும் சிறை செய்ததோடு விட்டிருக்கக் கூடாதா? காம்போஜத்தின் மீது எதற்கு ஆசைப்பட்டார்? இப்போது நூறு கப்பல்கள் எதிரியிடம் போய்ச் சேரப் போகிறதே! இது எவ்வளவு பெரிய நஷ்டம்? இவனோடு போர் செய்தால் என் உயிர் போகும். வீரர்கள் உயிர் போகும். அதோடு மரக்கலங்கள் பல அழிந்து போகும். அப்படி நடந்தால் மட்டும் என்ன கௌரவம் மிஞ்சப் போகிறது?'' என்று பலவாறு யோசித்துவிட்டு வேறு வழியில்லாமல் உதயசந்திரனுக்குப் பணிந்தான்.

அதையடுத்து துறைமுகத்திலிருந்த கப்பல்கள் ஒவ்வொன்றாக கடலுக்கு வந்தன. மாலுமிகள் இல்லாமல் அவ்வாறு வந்த மரக்கலங்களை சர்வ ஜாக்கிரதையுடன் தனது பொறுப்பில் ஏற்றுக் கொண்ட உதயசந்திரன் வல்லாளனைப் பார்த்து ''உன் விவேகத்திற்கு நன்றி வல்லாளா? உன்னையும் உன் மாலுமிகளையும் விடுவிக்கிறேன். ஸ்ரீவிஜயத்திற்குத் திரும்புங்கள். மன்னரிடமும் இளவரசரிடமும் சொல்லுங்கள். சூர்யவர்மருக்கோ அவரது மகளுக்கோ சிறு காயமும் உண்டாகக் கூடாது. அப்படி ஏதேனும் நடந்தால் ஸ்ரீவிஜயம் நிர்மூலமாக்கப் படும் என்று சொல்லுங்கள். எனது கடற்படை அடுத்து ஸ்ரீவிஜயத்தை நோக்கி வருவதாகவும் தெரிவியுங்கள்'' என்று சொல்லி அனைவரையும் ஒரு மரக்கலத்தில் அனுப்பி வைத்தான்.

அனைத்தும் நடந்து முடிந்தபோது பொழுது விடிந்திருந்தது.

உதயசந்திரன் கடல்முகனோடும் லெமூருடனும் கடற்கரைக்குச் சென்று மக்களைச் சந்தித்து எல்லா விவரங்களையும் சொன்னான். விரைவிலேயே காம்போஜ மன்னரையும் இளவரசியையும் விடுவித்து அனுப்புவதாக உறுதியளித்தான். அவன் அதுவரை உறுதியளித்த விஷயங்களில் வெற்றி பெற்றிருந்தானாதலால் அவனது வார்த்தைகளை ஏற்று ஆறுதலடைந்தார்கள். ஸ்ரீவிஜய பிரதிநிதியிடமிருந்து பெற்ற மரக்கலங்களில் நாற்பத்து ஒன்பது மரக்கலங்களை இந்திரபுரத்தில் இருந்த மாலுமிகளுடன் துறைமுகத்தில் பாதுகாப்பிற்காக

நிறுத்தினான். மீதமிருந்த ஐம்பது மரக்கலங்களில் மாலுமிகளை நியமித்து தனது கடற்படையுடன் இணைத்ததால் கடற்படையின் மரக்கலங்களின் எண்ணிகை 550 ஆயிற்று. அவற்றில் இருந்த மாலுமிகளுக்குத் தேவையான தண்ணீரையும் உணவு பொருட்களையும் இந்திரபுரத்திலேயே சேகரித்துக் கொண்டான். கஜமுகன், சிங்கமுகன், நரிமுகன் ஆகியோரிடம் பொறுப்பை ஒப்படைத்துவிட்டு ஒரு வார ஓய்விற்குப் பிறகு மரக்கலத்தில் புறப்பட்டான்.

''கடல்முகா! நமது பயணம் தாமதமாகிக் கொண்டே வருகிறது. ஆகவே சூர்யவர்மரையும் இளவரசியையும் மீட்க வேண்டும். அதற்கு ஸ்ரீவிஜயத்தை நாம் வீழ்த்த வேண்டும். இங்கிருந்து நேர் தெற்கே பயணம் செய்து மேற்கே திரும்பினால் ஸ்ரீவிஜயத்தை அடையலாம்'' என்று தன் திட்டத்தை ஆரம்பித்தபோது கடல்முகன் குறுக்கிட்டான்.

''தலைவரே! ஸ்ரீவிஜயம் முறியடிக்கப்பட வேண்டியது தான். அது எளிதான காரியமல்ல. இப்பகுதியில் உள்ள எல்லா பகுதிகளுமே ஸ்ரீவிஜயத்தைச் சேர்ந்தவை. சாவகம் ஸ்ரீவிஜயத்துடன் நட்பு கொண்டது. புஷ்பகத்தீவு (போர்னியோ) யாருடைய சார்பில் இருக்கிறது என்பது தெரியாது. இவை யெல்லாம் ஸ்ரீவிஜயத்திற்கு அருகில் அதைப் பாதுகாப்பது போல இருக்கின்றன. இந்தப் பாதுகாப்பு வளையத்திற்குள் புகுந்து ஸ்ரீவிஜயத்தை தாக்குவது பெரும் ஆபத்தான காரியம். அதோடு காம்போஜத்தைக் கைப்பற்றிய ஸ்ரீவிஜயம் அதைப் பாதுக்காக்கவே நூறு மரக்கலங்களை அனுப்பியதென்றால் ஸ்ரீவிஜயத்தில் குறைந்தது ஐநூறு மரக்கலங்களாவது இருக்கும். ஸ்ரீவிஜயம் அமைந்திருக்கும் பகுதி குறுகிய கடல் பகுதி. அதற்குள் நுழைவது என்பது வலைக்குள் வலுவில் போய் சிக்குவது போல'' என்று சொல்லி வரைபடத்தைக் காட்டினான்.

''அப்படியானால் ஸ்ரீவிஜயத்தை விட்டு விடுவோம்'' என்றான் உதயசந்திரன்.

அந்த பதிலைக் கேட்டு உதயசந்திரனை சந்தேகத்துடன் பார்த்தான் கடல்முகன்.

☆☆☆



90 இலங்காசோகம்

கடல்முகன் தன்னை ஒரு மாதிரியாகப் பார்ப்பதைக் கவனித்த உதயசந்திரன் சீன வீரனைப் பார்த்து, ''நீ என்ன சொல்கிறாய் சீனா?'' என்று கேட்டான்.

''கடல்முகன் சொன்னது சரியானதுதான்'' என்று ஒப்புக் கொண்டான் சீனன்.

வரைபடத்தை ஒருமுறை பார்த்த உதயசந்திரன், ''ஸ்ரீவிஜயத்திற்கு நாம் போக வேண்டாம். ஸ்ரீவிஜயத்தை நம்மை நோக்கி இழுப்போம்'' என்றான்.

''எப்படி?'' என்று கேட்டான் கடல்முகன்.

''இருவரும் இந்த வரைபடத்தைக் கவனியுங்கள். ஸ்ரீவிஜயமும் மலைய நாடும் இரண்டு திமிங்கலங்களைப் போல இருக்கின்றன. மலைய நாடு ஸ்ரீவிஜயத்தின் ஆதிக்கத்தில் இருக்கிறது. மேற்கே இருக்கும் திமிங்கலத்தில்தான் ஸ்ரீவிஜயம் இருக்கிறது. அங்கே போக வேண்டும் என்றால் நாம் இருக்கும் இடத்திலிருந்து நேர் தெற்கே சென்று புஷ்பகம், சாவகம் ஆகிய தீவுகளைக் கடந்து குறுகிய வளைகுடாவில் புகுந்து ஸ்ரீவிஜயத்தை தாக்க வேண்டும். அதைத்தான் நீங்கள் வேண்டாம் என்று சொல்லிவிட்டீர்கள். எனவே அந்தத் திமிங்கலத்தை விட்டு விட்டு மற்றொரு திமிங்கலத்தை கவனியுங்கள். அது நமக்கு தென்மேற்கில் அருகிலேயே இருக்கிறது. அந்தத் திமிங்கலத்தில் கிழக்குப் பகுதியில் மாயிருடிங்கம், இலங்கா சோகம், தாம்பரலிங்கம் ஆகிய கடற்கரை பட்டிணங்கள் இருக்கின்றன. மேற்கில் கடாரம் இருக்கிறது. இங்கெல்லாம் நீங்கள் சொல்வது போல் நிறைய போர்க்கலங்கள் இருக்காது. ஸ்ரீவிஜயத்தின் நட்பு நாடுகளும் பக்கத்தில் இல்லை. ஆகவே நாம் இந்த திமிங்கலத்தைப் பிடித்துக் கொண்டால் ஸ்ரீவிஜயம் நம்மை நோக்கி வரும். அது சாதகமானது அல்லவா?'' என்று கேட்டான் உதயசந்திரன்.

இருவரும் ஒப்புக் கொண்டனர்.

''கடல்முகா! நாம் தென்மேற்கில் திரும்பி நமது கடற்படையை மூன்றாகப் பிரிப்போம். உன் தலைமையிலான படை திமிங்கலத்தின் வடக்கு கோடியில் இருக்கும் மாயிருடிங் கத்திற்குச் செல்லட்டும். சீனனின் தலைமையிலான படை திமிங்கலத்தின் தென்கோடியில் இருக்கும் தாம்பரலிங்கத்திற்குச் செல்லட்டும். நான் நடுப்பகுதியான இலங்காசோகத்திற்குச் செல்கிறேன். ஏக காலத்தில் மூன்று கடற்கரை பட்டிணங்களையும் நாம் தாக்குவோம். பிடிப்போம். உங்கள் இருவரது தலைமையிலும் இருநூறு மரக்கலங்கள் செல்லட்டும். நான் நூற்றம்பது மரக்கலங்களோடு செல்கிறேன். சரிதானா?''

''சரிதான் தலைவரே.''

''அப்படியானால் அதற்கு ஏற்ற மாதிரி மரக்கலங்களைப் பிரித்துக் கொள்ளுங்கள். அநேகமாக ஒரு வார காலத்தில் அந்தத் திமிங்கலத்தை நாம் நெருங்கிவிடுவோம்'' என்றான் உதயசந்திரன்.

அதையடுத்து சீனனும் கடல்முகனும் அவனது கட்டளைகளை நிறைவேற்ற எத்தனித்தபோது, ''அனைவரும் முதலில் ஓய்வெடுங்கள். நாளைக்குப் பார்த்துக் கொள்ளலாம்'' என்று கூறிவிட்டு மரக்கலத் தலைவனின் அறைக்குச் சென்றான் உதயசந்திரன். வரைபடங்களை வைத்துக் கொண்டு நீண்ட நேரமாக யோசித்தான். அவனுக்குள் அதிருப்தி தான் உண்டாயிற்று.

அறையை விட்டு வெளியே வந்து தளத்திற்குச் சென்று பாய் மரத்தில் சாய்ந்து கொண்டு சுற்றுப்புறத்தை நோக்கினான். பல மாதங்களுக்கு முன்னால் இதேபோலத்தான் கப்பலின் தளத்தில் நின்று கொண்டு புயலை ரசித்துக் கொண்டிருந்தான். அப்போது அவன் அனுபவங்கள் ஏதும் இல்லாதவனாய் ஒரு ரசிகனைப் போல் இருந்தான். தற்போதோ ஐநூறுக்கும் மேற்பட்ட மரக்கலங் களைக் கொண்ட கடற்படைக்குத் தலைவனாக நின்றிருந்தான். ஆனால் முன்பிருந்த உற்சாகமோ சுதந்திரமோ தற்போது இல்லை. ஏதோ ஒரு விலங்கைப் போட்டுக் கொண்டு நிற்பதாகவே தோன் றியது அவனுக்கு. பெரும் பொறுப்புதான் அப்படி விலங்காகப் பூட்டப் பட்டிருக்கிறதோ என்றும் நினைத்துக் கொண்டான்.

அப்போது அவன் பக்கத்தில் வந்து நின்றது லெமூர்.

அதைக் கண்டதும், ''வா நண்பனே! உன் எஜமானி இப்போது ஸ்ரீவிஜயத்தில் எப்படி இருக்கிறாளோ என்ன நிலைமையில் இருக்கிறாளோ என்பது தெரியவில்லை. அவளை விரைவில் மீட்டாக வேண்டும். முடியுமா?'' என்று கேட்டான்.

அது அவனது கைகளைப் பிடித்து அழுத்தியது.

மறுநாள் கடல்முகனையும் சீனனையும் அழைத்தான் உதயசந்திரன்.

சீனனைப் பார்த்து, ''சீனா! நாம் ஸ்ரீவிஜயத்தின் மூன்று கடல் பட்டிணங்களை ஏக காலத்தில் தாக்க வேண்டும் என்று தீர்மானித்தோம். மூன்று கடற்பட்டிணத்தில் மையமாக இருப்பது இலங்காசோகம். அதற்கு மேற்கே அருகில் இருப்பது கடாரம். இந்த இலங்காசோகத்திலிருந்து நீ செல்லப்போகும் கடல் பட்டிணங்கள் எவ்வளவு தூரத்தில் இருக்கின்றன?'' என்று கேட்டான்.

''தலைவரே! இலங்காசோகத்திலிருந்து வடக்கே உள்ள மாயிருடிங்கமானாலும் சரி தெற்கே உள்ள தாம்பரலிங்க மானாலும் சரி ஆறு நாள் பயணத்தில் அடையக் கூடியவை'' என்றான் சீனன்.

''இந்த மூன்று கடல்பட்டிணங்களிலிருந்து கடாரத்திற்குச் செல்வதற்கு தரைவழிப் பாதைகள் இருக்கின்றனவா?''

''இருக்கிறது ஐயா. மூன்று கடல்பட்டிணங்களிலிருந்தும் பாதைகள் இருக்கின்றன. அதோடு நீங்கள் செல்லப் போகும் இலங்கா சோகத்தில் காயல் நதி ஓடுகிறது. அது கடாரம் வரை ஓடுவதால் நதி மூலமாகவும் கடாரத்திற்குச் செல்லலாம். கடல்முகன் செல்லப்போகும் மாயிருடிங்கம் பகுதியில் கடல் ஆழமாக இருக்கும்.''

''கடாரம் எப்படி?''

''ஸ்ரீவிஜயத்திற்கு அடுத்தபடி கோட்டை நகரமாக இருப்பது கடாரம்தான். பலத்த காவலுடன் இருக்கும் என்று கேள்விப் பட்டிருக்கிறேன்.''

உதயசந்திரன் மாமல்லபுரத்தில் பயிற்சியில் இருந்த காலத்தில் பல்வேறு மரக்கல வகைகளைப் பற்றிக் கேட்டிருந்தாலும் தற்போது தனது கடற்படையில் இருந்த கப்பல்கள் புதியனவாக இருந்ததால் அவற்றைப் பற்றித் தெரிந்து கொள்ள விரும்பி ''சீனா, நம்மிடம் இருக்கும் மரக்கலங்கள் எந்த வகையைச் சேர்ந்தவை?'' என்று கேட்டான்.

''காம்போஜத்திலிருந்து பழுது பார்க்கப்படுவதற்காக வந்த மரக்கலங்கள் இவை. ஆனால் பழுது பார்க்கப்பட்டபோது சீன தேசத்திற்குரிய 'ஜங்க்' மரக்கலங்களைப் போல மாற்றி யமைக்கப்பட்டுள்ளன. 'ஜங்க்' மரக்கலங்களின் சிறப்பு என்னவென்றால் இவற்றின் நீளம் அதிகம். கனம் அதிகம்.

அதேசமயம் வேகமும் அதிகம்'' என்று சொன்ன சீனன் இதர சிறப்பு அம்சங்களையும் சொன்னான். ஸ்ரீவிஜயத்திடமிருந்து கைப்பற்றப்பட்ட மரக்கலங்கள் வேறு மாதிரியானவை என்பதையும் விவரித்தான்.

உதயசந்திரன் அந்த விவரங்களைக் காதில் வாங்கிக் கொண்டானே தவிர அவனது சிந்தனை வேறெங்கோ ஓடிக் கொண்டிருந்தது.

அதை கடல்முகனும் சீனனும் கவனிக்கவே செய்தார்கள்.

''தலைவருக்கு குழப்பம் ஏற்பட்டிருக்கிறது. இப்படியொரு நிலையில் இவரை நான் கண்டதில்லை'' என்றான் கடல்முகன்.

உதயசந்திரன் கடல்முகனையும் சீனனையும் பார்த்தான்.

''கடல்முகா.''

''சொல்லுங்கள் தலைவரே.''

''எனது திட்டம் திருப்திகரமாக இல்லை.''

''ஏன் அப்படிச் சொல்கிறீர்கள்?''

''எனக்கென்னவோ அப்படித்தான் தோன்றுகிறது.''

''அதிருப்தியளிக்கும் அம்சம் இதில் என்ன தலைவரே?''

''அது தெரியவில்லை'' என்று சொன்ன உதயசந்திரன், ''நான் சற்று யோசிக்க வேண்டும்'' என்று கூறிவிட்டு மரக்கலத்தில் தனது அறைக்குச் சென்றான்.

கடல்முகனும் சீனனும் ஏதோ பேசிக் கொண்டார்கள். ''அதுதான் சரி'' என்று முடிவிற்கு வந்து அதற்கான ஏற்பாடுகளைச் செய்தார்கள்.

அதையடுத்து உதயசந்திரன் இருந்த அறைக்குள் நுழைந்தாள் ஓர் அழகி.

அவளை உதயசந்திரன் கவனிக்கவில்லை.

அவள் அருகில் சென்று ''என்னைப் பாருங்கள்'' என்றாள்.

பார்த்தான் உதயசந்திரன்.

அழகும் கவர்ச்சியும் கைகோர்த்து வந்ததுபோல் நின்றிருந்த இளம் பெண்ணைக் கண்ட உதயசந்திரன் ''என்ன வேண்டும்?'' என்று கேட்டான்.

அவளுக்கோ வியப்பு.

இதென்ன இவன் இப்படிக் கேட்கிறான் என்று நினைத்த அவள் ''இது நான் கேட்க வேண்டிய கேள்வியல்லவா?'' என்று கேட்டாள்.

''என்ன உளறுகிறாய்? அறைக்குள் வந்தவள் நீ. உள்ளே வந்து விட்டு அர்த்தமில்லாமல் பேசுகிறாய். உன்னை உள்ளே யார் அனுமதித்தது?'' என்று சீறினான் உதயசந்திரன்.

அவள் எரிமலைகளைக் கண்டவளோ என்னவோ!

எரி நட்சத்திரத்தைக் கண்டு அசரவில்லை.

''எதற்காகக் கோபப்படுகிறீர்கள்? உங்கள் கோபத்தையும் குழப்பத்தையும் போக்குவதற்காகத்தானே வந்திருக்கிறேன் நான்?'' என்றாள் குரலில் அவனை வசியம் செய்வதுபோல்.

சற்று நிதானத்திற்கு வந்த உதயசந்திரன் ''நீ யார்? நீ எப்படி மரக்கலத்திற்கு வந்தாய்?'' என்று கேட்டான்.

''நான் ஊர்வசிக்கு உறவுக்காரி. மரக்கலங்களில் செல்பவள். என்னைப் போல மங்கையர் எல்லா மரக்கலங்களிலும் இருக்கிறார்கள். மாலுமிகளுக்கு உணவும் நீரும் மட்டும் போதுமா?'' என்றாள் அவள்.

உதயசந்திரனுக்கு விஷயம் விளங்கிவிட்டது.

அவளைப் பார்த்து, ''உட்கார்'' என்றான்.

அவள் அங்கிருந்த ஆசனத்தில் அமர்ந்ததும், ''உன் பெயர் என்ன?'' என்று கேட்டான்.

''விஜயதசமி'' என்றாள் அவள்.

''நல்ல பெயர். நீ இருக்கும் இடத்தில் ஜெயம் இருக்க வேண்டும் என்று உன் பெற்றோர்கள் இந்த பெயரை வைத்திருக்க வேண்டும்'' என்றான் உதயசந்திரன்.

அவளுக்கு அவனது பேச்சும் நிதானமும் வினோதமாக இருந்தது.

சாதாரணமாக அவளைப் பார்த்துவிட்டால் மாலுமிகள் மானைக் கண்ட புலியைப் போல ஆகிவிடுவார்கள். தாக்கவும் தொடங்கிவிடுவார்கள். பேச்சு வைத்துக் கொள்வதில்லை. அப்படியே ஏதாவது பேசினாலும் அசட்டுப் பேச்சாகவே இருக்கும். ஆனால் உதயசந்திரனோ புலியாகவில்லை. புயலாகச் செயல்படவும் இல்லை.

தென்றலைப் போலப் பேசினான்.

''இதோ பார் விஜயதசமி. பெண்களிடம் பிரதானமாக இருப்பது அழகுதான் என்றாலும் அவளிடம் அறிவும் இருக்கிறது என்பதை பெரும்பாலான ஆடவர்கள் உணர்வதில்லை. உணர முற்படுவதில்லை. உணர்ந்தாலும் பொருட்படுத்துவதில்லை. நீ என்ன சொல்கிறாய்?'' என்று கேட்டான்.

எரிமலையை எதிர்பார்த்து வந்தவளுக்குப் பனி மலையைக் கண்டது போலிருந்தது.

அவன் கேட்ட கேள்விக்கு ''ஆமாம்'' என்றாள் ஏதோ சொல்ல வேண்டும் என்பதற்காக.

''ஆண்களிடம் என்னவெல்லாம் இருக்கிறதோ அவையெல்லாம் பெண்களிடம் இருக்கின்றன. இதில் துரதிர்ஷ்டம் என்னவென்றால் இந்த உண்மை ஆண்களுக்குத் தெரிந்திருக்கிறது. பெரும்பாலான பெண்கள்தான் அறியாமல் இருக்கிறார்கள்.''

அவளது கண்கள் விரிந்தன வியப்பால். அறையில் இருந்த சீலை ஒன்றை எடுத்து மேலே போர்த்திக் கொண்டாள். ஏதோ கவசம் ஒன்றை பாதுகாப்பாக அணிந்து கொண்டதுபோல் இருந்தது அவளுக்கு.

உதயசந்திரன் தொடர்ந்து ''ஆண்களை விட பெண்களாகிய நீங்கள்தான் உங்களை வெறும் போகப் பொருளாக அதிகம் நினைத்துக் கொள்கிறீர்கள். அந்த நினைப்பிலேயே மயங்கிப் போகிறீர்கள்'' என்றான்.

''ஆமாம்'' என்றாள் அவள் அவன் கூறியதை உணர்ந்தவளாய்.

''உங்களைப் பார்த்து ஆண்கள் மயங்கினால் உங்களுக்குப் பெருமையாக இருக்கிறது. உங்களுக்காக ஏங்கினால் மகிழ்ச்சியாக இருக்கிறது. அதன் காரணமாக சில சமயங்களில் அவர்களுக்காக மோக வலையை வீசி மீன்களைப் பிடிப்பது போல பிடிக்கிறீர்கள். அதை வெற்றியாகவும் கருதுகிறீர்கள். இந்த வெற்றி தான் உங்களுக்கு பிரதான வாழ்க்கை என்று எண்ணிக் கொண்டு உங்கள் அழகிலும் கவர்ச்சியிலும் கவனம் செலுத்துகிறீர்கள். உங்களுக்குள் இருக்கும் அறிவு, திறமை, வீரம் ஆகியவற்றைப் பற்றியெல்லாம் கவலைப்படுவதில்லை.''

''ஆமாம்'' என்றாள் விஜயதசமி. அறைக்குள் வந்தபோது அவளுக்குள் நெருப்பாக உண்டாகியிருந்த காமம் அணைந்து சாம்பலாகிக் கொண்டு வந்தது.

உதயசந்திரன் தொடர்ந்து ''அழகும் கவர்ச்சியும் நிலையில்லை. நீங்களோ அவற்றில் கவனம் செலுத்துகிறீர்கள். ஆடவர்களோ அழகும் கவர்ச்சியும் இருக்கும் வரை பயன்படுத்திக் கொண்டு பிறகு தூக்கி எறிந்துவிடுகிறார்கள். இதனால் உங்களுக்கு ஏதாவது நன்மை உண்டா?'' என்று கேட்டான்.

அவள் முதல் முதலாகத் தன்னை உணர்ந்தவளாய் ''என்னிடம் இப்படிப் பேசிய ஒரே மனிதர் நீங்கள்தான்'' என்றாள்.

''நான் இதுவரை சொன்னது தான் உன் வியப்புக்குக் காரணம். நீ உன் உடம்பை நம்பித்தான் உள்ளே வந்தாயே தவிர அறிவை நம்பி வரவில்லை. உனக்குள் இருக்கும் இதர திறமைகளை நம்பியும் வரவில்லை. இப்போதாவது உணர்ந்து கொள். அழகால் நீ யாரை வெற்றி கொண்டாலும் நீர் மேல் எழுதிய எழுத்துக்களாக மறைந்துவிடும். அறிவாலும் வீரத்தாலும் சாதித்திருந்தால் அது வரலாறாக நிலைத்து நிற்கும். இப்போது நீ செல் விஜயா. பிறகு நாம் சந்திப்போம்'' என்றான் உதயசந்திரன்.

சக்கையாகி வெளியே வரவேண்டிய அவள் சத்தோடு வெளியே வந்தாள். மற்றுமொரு காம அத்தியாயம் படித்திருக்க வேண்டிய அவள் புதிய புத்தகம் ஒன்றை படித்தவளைப் போல வெளியேறினாள். 'இவ்வளவு தெளிவும் நிதானமும் கொண்ட இவரிடம் குழப்பமும் கவலையும் இருப்பதாகச் சொல்லி அனுப்பினார்களே என்னை? அவர்கள் எத்தனை மடையர்கள்?' என்று தனக்குத் தானே கேட்டுக் கொண்டு அங்கிருந்து அகன்றாள்.

அவள் சென்றதும் அரை நாழிகை கழித்து கடல்முகனும் சீனனும் உள்ளே நுழைந்தபோது ''வாருங்கள் நண்பர்களே'' என்று வரவேற்றான் உதயசந்திரன். அதைக் கண்டதும் 'விஜயதசமி யமகாதகி. அவளால் இயலாதது எதுவுமில்லை. ஊர்வசியை விட இவள் ஒரு படி மேல். கொஞ்ச நேரத்தில் தலைவரின் கவலையை போக்கிவிட்டாள்' என்று எண்ணிக் கொண்டார்கள் அவர்கள்.

உதயசந்திரனும் ''நீ அனுப்பிய இனிப்பு மருந்து நன்றாக வேலை செய்தது கடல்முகா. என் குழப்பம் தீர்ந்தது'' என்று சொன்னதும் பரம திருப்தியை அடைந்தார்கள்.

அதோடு உதயசந்திரன் தனது திட்டத்தில் மாற்றம் ஒன்றையும் சொன்னான்.

''இந்த மாற்றம் எதற்கு தலைவரே?'' என்று கேட்டான்.

''நீங்களே விரைவில் தெரிந்து கொள்வீர்கள்'' என்று மட்டும் சொன்னான் உதயசந்திரன்.

இரண்டு வாரங்கள் கழித்து உதயசந்திரனின் 150 மரக்கலங்களும் மலைய நாட்டின் (இன்றைய மலேசிய தீபகற்பம்) நடுப்பகுதியான இலங்காசோகத்தை அணுகியது.

துறைமுகத்தை நெருங்கியபோது இரவாகிவிட்டபடியால் அந்தக் கடல்பட்டிணத்தின் விஸ்தீரணத்தை உதயசந்திரனால் அறிய முடியவில்லை. ஆனால் துறைமுகத்தைக் காணவும் ஆராயவும் முடிந்தது. துறைமுக வாயில் குறுகலாக இருந்தன. அதை

அடைத்துக்கொண்டு இரண்டு மரக்கலங்கள் விளக்குகளுடன் காணப்பட்டன. துறைமுகமானது சீனன் கூறியபடி காயல் நதியின் முகத்துவாரத்தில் அமைந்திருந்தது. நதி நீர் கடலுக்குள் பாய்வதைக் காட்டிலும் கடல் நீர் நதிக்குள் வேகமாகப் பாய்ந்ததால் இரண்டு மரக்கலங்களும் தொட்டிலைப் போல ஆடிக் கொண்டிருந்தன. அந்த இரண்டு மரக் கலங்களுக்குப் பின்னால் வேறு மரக்கலங்களும் நிறுத்தப் பட்டிருக்கலாம் என்று உதயசந்திரனுக்குத் தோன்றினாலும் தனது மரக்கல எண்ணிக்கை அளவிற்கு இருக்காது என்று கருதினான்.

தனக்கருகில் இருந்த உபதலைவனை அழைத்து ''இலங்காசோகத் துறைமுகம் நான் நினைத்தமாதிரி பலவீனமான நிலையில்தான் இருக்கிறது. நதிநீரின் வேகத்தை விட கடல் நீரின் வேகம் அதிகமாக இருப்பதால் நாம் துறைமுகத்திற்குள் நுழைய முயன்றால் உள்ளே இழுக்கப்படுவோம். எனவே அது வேண்டாம். துறைமுக வாயில் குறுகியதாக இருப்பதால் அதன் இருபுறத்திலும் இரண்டிரண்டு மரக்கலங்களைக் கொண்டு செல்வோம். துறைமுகத்து வாயிலில் இருக்கும் மரக்கலங்களின் மீது வாணங்களை வீசுவோம். அப்போது அங்கே இருக்கும் மரக்கலங்கள் நம்மைத் தாக்குவதற்கு துறைமுகத்தை விட்டு வெளியேதான் வர வேண்டும். அந்த இரண்டு மரக்கலங்களோடு அவற்றின் பின்னால் இருக்கும் மரக்கலங்களும் கடலுக்கு வரும். மொத்தம் எத்தனை கப்பல்கள் என்பதும் தெரியும். நமது மரக்கலங்களில் மேலும் சிலவற்றை முன்னேறி வரச் சொல்லிச் சூழ்ந்து கொண்டால் எதிரியை அழிப்பது மிகவும் சுலபம்'' என்றான்.

அப்போது உபதலைவன் எதையோ சுட்டிக்காட்டி ''தலைவரே! அதோ பாருங்கள். துறைமுக வாயிலுக்கு இருபுறங்களிலும் நான்கு தூண்கள் மேல் நோக்கி எழுகின்றன. அவற்றில் பொறிகளும் வீரர்களும் இருப்பார்கள். நாம் துறைமுகத்திற்கு இருபுறத்திலும் ஒதுங்க முற்படும்போது அந்தத் தூண்கள் நம்மைத் தாக்கி அழிக்கும்'' என்றான்.

அது உண்மைதான் என்பது போல் தலையை ஆட்டிய உதயசந்திரன், ''சரி வீரனே! நமது மரக்கலங்கள் பத்தை ஒன்றுக்குப் பின்னால் ஒன்றாக ஒருகோடு போல் நிறுத்துவோம். துறைமுகத்தை நோக்கி செலுத்துவோம். வாயிலில் அடைத்தபடி நிற்கும் எதிரியின் மரக்கலத்தோடு மோதுவோம். கடலலையும் நமக்கு ஒத்துழைக்கும். அந்த வேகத்துடன் மோதி அந்த இரண்டு

மரக்கலங்களையும் பிளப்போம். அவை மூழ்கும் நேரத்தில் அவற்றின் இடைவெளியில் நமது மரக்கலங்கள் ஊடுருவி வாணங்களை வீசட்டும். ஆற்றில் இந்தத் தாக்குதல் நடக்கும்போது இதர மரக்கலங்களில் அகலவாட்டில் முன்னேறி தூண்களின் மீது தீவாளிகளையும் தீயுருண்டைகளையும் வீசினால் தூண்களும் நாசமாகும்'' என்றான்.

ஆனால் அவனது திட்டங்களுக்கெல்லாம் வேலை இருக்கவில்லை.

துறைமுகத்தில் சமாதானத்தைக் கோரும் விதத்தில் ஐந்து விளக்குகள் உயரே எழுந்தன. அவற்றின் பின்னணியில் கொடி ஒன்றும் ஆடியது. அதையடுத்து படகொன்று மிதந்து வந்தது. அதிலிருந்து வந்த தூதுவன் இலங்காகோசத்தின் தலைவன் சரணடையும் ஓலையை பணிவோடு உதயசந்திரனிடம் சமர்ப்பித்தான்.

தனது மரக்கலங்கள் துறைமுகத்தை விட்டு காயல் நதியில் பின் வாங்குவதாகவும் உதயசந்திரன் வந்து இலங்காசோகத்து தலைவன் அளிக்கும் விருந்தில் கலந்து கொள்ள வேண்டும் என்று வேண்டிக் கொண்டான்.

அனைத்தும் முறையாக நடந்தன.

தனது மரக்கலத்திலேயே துறைமுகத்திற்குச் சென்ற உதயசந்திரன் தலைவனைச் சந்தித்தான்.

''வாருங்கள் உதயசந்திரரே. என்னை இங்கே எதிர்பார்க்கவில்லை அல்லவா?'' என்று கேட்டான் தலைவன்.

அவன் -

ஸ்ரீவிஜயத்தின் இளவரசன் சங்கிராமன்.

அவன் சொன்னதையடுத்து இருவர் சங்கிலிகளால் பிணைக்கப்பட்டு அங்கே கொண்டுவரப்பட்டார்கள்.

அவர்கள் -

காம்போஜ மன்னன் சூர்யவர்மன். இளவரசி பூவிழி.

உதயசந்திரன் தனது நெற்றியை வருடிக் கொண்டான்.

ஆபத்தான நேரங்களில் அது அவனது வழக்கமாக இருந்தது.

★★★



91 சுங்கிராமனின் நிலை

உதயசந்திரன் இலங்காசோகத்திற்கு வருவதற்கு முன்னால் சில மாற்றங்களை எதிர்பார்த்தான்.

ஆனால் அங்கே ஸ்ரீவிஜய இளவரசன் இருப்பான் என்றோ அவனுடன் காம்போஜ மன்னனும் மன்னன் மகளும் இருப்பார்கள் என்றோ சிறிதும் எதிர்பார்க்கவில்லை.

எனவே தன் கண் முன் விரிந்த காட்சியைக் கண்டு சற்று அதிர்ச்சியடையவே செய்தான். மிகவும் சிக்கலான நிலைமை உண்டாகியிருப்பதாக உணர்ந்ததால் அவனது விரல்கள் அவனது நெற்றியை வருடின.

உதயசந்திரன் நெற்றியை வருடுவதற்கான காரணம் சங்கிராமனுக்குத் தெரியாத நிலையிலும் அதைக் கூர்ந்து கவனிக்காத நிலையிலும் சற்றே திருப்தியடைந்தவனாய் ''என்ன உதயசந்திரா? இப்போதாவது நான் யார் என்பதைப் புரிந்து கொண்டாயா?'' என்று கேட்டான் பெருமிதத்துடன்.

உதயசந்திரன் தன் அதிர்ச்சியை அடக்கிக் கொண்டு ''இளவரசே! இது நியாயமல்ல. இது உங்களுக்குத் தகாது'' என்றான்.

''எது அநியாயம்? எது தகாதது?'' என்று மிடுக்காகவே கேட்டான் இளவரசன்.

''நீங்கள் என்னிடம் சரணடைந்ததாகத் தூதுவனிடம் ஓலை அனுப்பினீர்கள். ஓலை என் கையில் இருக்கிறது. என்னை விருந்துக்கு அழைக்கவும் செய்தீர்கள். இப்போதோ வேறு மாதிரி நடந்து கொள்கிறீர்கள். இது நியாயமா?'' என்று கேட்டான்.

''உதயசந்திரா! உனக்கு ஓலை அனுப்பியதும் விருந்துக்கு அழைத்ததும் இந்தத் துறைமுகத்தின் தலைவன். நானல்ல'' என்றான் கபடமான குரலில்.

''அப்படியானால் நீங்கள்?''

''நான் யார் என்பது மறந்து போய்விட்டதா? நான் இத்துறைமுகத்தின் தலைவனல்ல. ஸ்ரீவிஜயத்தின் இளவரசன்.''

''இங்கே எப்போது வந்தீர்கள்?''

''நீ வருவதற்கு முன்பாக.''

''நான் காம்போஜத்தை மீட்ட செய்தி உங்களுக்கு வந்துவிட்டதா?''

''செய்தி அவசியமில்லை. ஊகம் போதும். சீன தேசத்திலிருந்து நீ 500 மரக்கலங்களோடு வருகிறாய் என்று கேள்விப்பட்டேன். காம்போஜத்தின் நிலை புரிந்துவிட்டது.''

''நான் இங்கு வருவேன் என்பது எப்படித் தெரிந்தது?''

''உதயசந்திரா! அறிவு உனக்கு மட்டுமே இருப்பதாக எண்ணாதே. அது மற்றவர்களுக்கும் உண்டு. எனக்கும் இருக்கிறது. ஸ்ரீவிஜயத்தை அணுகுவதென்பது முதலைகளுக் கிடையே நுழைவது போன்றது. அதற்குக் காப்பாக சாவகமும், புஷ்பகமும் இருக்கிறது. ஆகவே அறிவாளி எவனும் அந்த வழியில் ஸ்ரீவிஜயத்தை அணுக மாட்டான். மாறாக அதற்கு வடக்கே உள்ள அதன் ஆதிக்கத்தில் உள்ள இந்த மலைய நாட்டைக் கைப்பற்றி ஸ்ரீவிஜயத்தை இழுக்கவே பார்ப்பான். இந்த மலைய நாட்டுத் துறைமுகங்களில் பலமான பாதுகாப்பு இருக்காது என்று நினைத்து இங்கே தான் வருவான். இதைத்தான் நீ செய்தாய். அதைத்தான் நானும் ஊகித்தேன். ஊகம் சரியாகிவிட்டது.''

இப்படிச் சொன்னபோது இளவரசனின் முகத்தில் பூரிப்பு தெரிந்தது.

''இளவரசே! நீங்கள் ஊகித்ததும் திட்டமிட்டதும் உங்கள் திறமையைக் காட்டுகிறது. ஆனால் துறைமுகத் தலைவனை வைத்து ஓலை அனுப்பியது திறமையைக் காட்டவில்லை. வஞ்சகத்தைத்தான் காட்டுகிறது'' என்றான் உதயசந்திரன்.

''வஞ்சகம் எதுவும் இல்லை. இதுவும் ஒரு திறமைதான்'' என்று சொன்ன இளவரசன், ''ஐநூறு மரக்கலங்களோடு வரும் எதிரியை வீழ்த்துவதற்கு எந்த உபாயத்தைக் கையாண்டாலும் அது திறமையைத் தான் குறிக்கும். நீ சொல்வது போல வஞ்சகம் என்றே வைத்துக் கொண்டாலும் பரவாயில்லை. வஞ்சகமும் போர்க்காலங்களில் தேவைதான்'' என்றான்.

''அதாவது வஞ்சகமாக என்னை இங்கே அழைத்து அழித்துவிடுவதுதான் உங்கள் திட்டமா?''

''உன்னை இப்போது அழிப்பது மிகவும் எளிய காரியம். ஆனால் உன்னைத் தோற்கடிப்பதையே என் கௌரவமாகக் கருதுகிறேன்.''

''நானிங்கே இருப்பதே அதற்கு அத்தாட்சிதானே?''

''இல்லை.''

''இல்லையா?''

''நான் உன்னை வரவழைத்ததற்கு காரணம் என்னை நீ முழுமையாக அறிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகத்தான்.''

''என்னை விடுதலை செய்து அனுப்பப் போகிறீர்களா?''

''ஆமாம். ஆனால் இப்போதல்ல. இப்போது விட்டால் துறைமுகத்தில் இருக்கும் ஆறு மரக்கலங்களை அழித்துவிட்டு இதை நீ கைப்பற்றிவிடுவாய். ஆகவே எனக்கு வரவேண்டிய சமிக்ஞை வந்ததும் உன்னை விடுவித்து விடுவேன்.''

''அதென்ன சமிக்ஞை இளவரசே?''

''அதை உன்னிடம் மறைக்க வேண்டிய அவசியமில்லை என்று நினைக்கிறேன்'' என்று சொன்ன இளவரசன் ''உதயசந்திரா! நான் முட்டாளில்லை'' என்றான்.

''உங்களை யாரும் அப்படிச் சொல்லவில்லை இளவரசே!''

''உதயசந்திரா! உன் திட்டம் என்ன என்பது எனக்கு தெரியும். ஐநூறு மரக்கலங்களோடு வந்த நீ அதை மூன்றாகப் பிரித்து மலைய நாட்டின் மூன்றுத் துறைமுகங்களான மாயிருடிங்கம், இலங்காசோகம், தாம்பரலிங்கம் ஆகியவற்றைத் தாக்க திட்டமிட்டாய். இங்கேயுள்ள இலங்காசோகத் துறைமுகத்திற்கு அப்பால் கடல் பகுதியில் உனது மரக்கலங்கள் இருக்கின்றன. அவை விளக்குகள் ஏதுமின்றி இருளில் மூழ்கிக் கிடப்பதால் எண்ணிக்கையை கணக்கிட முடியவில்லையே தவிர ஊகிக்க முடிகிறது. எப்படி பார்த்தாலும் நூறு மரக்கலங்களுக்கு மேல்தான் இருக்குமே தவிர குறைவாக இருக்க முடியாது. இவற்றோடு மோதுவதற்கு இங்கிருக்கும் ஆறு மரக்கலங்கள் போதாது. அதை அறிந்துதான் ஸ்ரீவிஜயத்தில் மற்றும் பண்ணை துறைமுகத்தில் இருக்கும் ஐந்நூறு மரக்கலங்களை இலங்கா சோகத்திற்கு வரச் சொல்லிவிட்டேன். எந்நேரமும் அவை இங்கே வரலாம். உனது மரக்கலங்களுக்குப் பின்னால் வந்ததும் எனக்கு சமிக்ஞை வரும். வந்ததும் உன்னை விடுவிக்கிறேன். நீ உன் மரக்கலத்திற்குப் போ. எனது 500 மரக்கலங்களை உன் 100 மரக்கலங்களால் தோற்கடிக்க முடியும் என்றால் செய். அப்படி நிகழ்ந்தால் அது உலக

அதிசயம்தான். அது முடியாது. எனது 500 மரக்கலங்கள் உனது மரக்கலங்களை அழிக்கும். பிறகு மாயிருடிங்கத்திற்கும் தாம்பரலிங்கத்திற்கும் செல்லும். அங்கேயுள்ள உன் உபதலைவர்களின் மரக் கலங்களையும் அழிக்கும்.''

இளவரசனின் திட்டத்தைக் கேட்டு அசந்தான் உதயசந்திரன். அந்த அளவிற்கு திட்டம் சிறப்பானதாகவும் கச்சிதமானதாகவும் இருந்தது. காம்போஜத்தில் கண்ட இளவரசனுக்கும் தற்போது காணும் இளவரசனுக்கும் நிரம்ப வித்தியாசம் இருந்ததை உணர்ந்தான். ஸ்ரீவிஜய இளவரசன் காம்போஜத்தில் அசந்தர்ப்ப வசமாக தடுமாறிவிட்டானே தவிர உண்மையில் அவன் திறமையானவன்தான் என்பதை அறிந்தான்.

''பழுதில்லாத திட்டம் இளவரசே'' என்று பாராட்டிவிட்டு ''பருகுவதற்கு சற்று தண்ணீர் தர முடியுமா?'' என்று கேட்டான்.

''தண்ணீரென்ன? ஓலையில் குறிப்பிட்டது போல் விருந்தையே தர தயாராக இருக்கிறேன். ஏனென்றால் நாம் இருவருமாகச் சேர்ந்து மறுபடியும் விருந்துண்ணும் வாய்ப்பு வராமல் போகலாம்'' என்றான் இளவரசன்.

''அடுத்த வாய்ப்பு பற்றி எதற்குப் பேச வேண்டும் இளவரசே? இந்த வாய்ப்பே எனக்கு மகத்தானதுதான்'' என்றான் உதயசந்திரன்.

அதையடுத்து துறைமுகத்தலைவன் மாளிகையிலேயே விருந்து நடந்தது.

விருந்தின் போது கண்ணியமாக நடந்து கொண்டான் இளவரசன். உதயசந்திரனை தனக்குச் சமமாகவே நடத்தினான்.

உணவை அருந்திய படியே, ''இளவரசே! உங்கள் திட்டம் சிறப்பானதுதான். அது ஒரு வேளை தோற்றுவிட்டால்?'' என்று கேட்டான் உதயசந்திரன்.

இளவரசன் அவனை நன்றாகப் பார்த்துவிட்டு ''உதய சந்திரா, அறிவாளியான நீ இந்த கேள்வியைக் கேட்பது விந்தையாக இருக்கிறது. என் திட்டத்தில் என்ன குறை கண்டாய்?'' என்று கேட்டான்.

''குறை ஒன்றுமில்லை இளவரசே. நானாக இருந்தாலும் இப்படித்தான் ஊகித்திருப்பேன். திட்டம் தீட்டியிருப்பேன்'' என்று சொன்ன உதயசந்திரன் ''இளவரசே! ஸ்ரீவிஜயத்தில் இருக்கும் அத்தனை மரக்கலங்களையும் இங்கே கொண்டு வருவது மிகப் பெரிய விஷயம். ஆனால் எனக்கொரு சந்தேகம்?'' என்றான்.

''என்ன சந்தேகம்?''

''உங்கள் எதிரி யார்?''

இதைக் கேட்டதும் சற்றே திகைத்தவனைப் போல் ஆன இளவரசன் சுதாரித்துக் கொண்டு ''சூர்யவர்மன்தான்'' என்றான்.

''காம்போஜத்தைத் தான் வெற்றி கொண்டு விட்டீர்களே? சூர்யவர்மரையும் இளவரசியையும் கூடச் சிறை செய்து விட்டீர்களே! பிறகு ஏது எதிரி?''

''காம்போஜத்தை நீ மீட்டுவிட்டாய்.''

''அதனால் என்ன? உங்களிடம் உள்ள 500 மரக்கலங்களைக் கொண்டு போனால் அதை மீண்டும் பிடிக்கலாம் அல்லவா?''

''ஆமாம்'' என்றான் இளவரசன் சற்றே குழப்பத்துடன்.

''பிறகு எதற்காக 500 மரக்கலங்களை இங்கே கொண்டு வருகிறீர்கள்?'' என்னை அழிப்பதற்காகவா?''

''ஆமாம்.''

''அதற்கு ஐநூறு மரக்கலங்கள் எதற்கு? அதோடு நான் இங்கே தனிமையில் தானே சிக்கியிருக்கிறேன்? என்னை அழிக்க ஒரு நிமிடம் போதுமே. கடற்படை எதற்கு?''

இளவரசனுக்கு குழப்பம் அதிகரித்தது.

அதை கவனித்த உதயசந்திரன் ''இளவரசே! நன்றாக யோசித்துப் பாருங்கள். நீங்கள் பட்ட அவமானத்திற்காக காம்போஜத்தின் மீது படையெடுத்து வெற்றி பெற்றீர்கள். மன்னரையும் இளவரசியையும் சிறையெடுத்தீர்கள். மன்னரும், இளவரசியும், மக்களும் எனக்கு செய்த உதவிகளுக்காக நான் காம்போஜத்தை மீட்டேன். அதுவும் காம்போஜ நாட்டு மரக்கலங்களைக் கொண்டு மீட்டேன். ஆக எல்லாமே முடிந்துவிட்டது. இந்த நிலையில் நான் எப்படி எதிரியானேன்? என்னை அழிப்பதற்கு எதற்காக இந்தத் தேவையில்லாத முயற்சி?'' என்று கேட்டான்.

உதயசந்திரன் கூறியது இளவரசனுக்குத் தெளிவாகப் புரிந்தது.

இருப்பினும் கேட்டான்.

''எல்லாம் சரி உதயசந்திரா. நீ ஸ்ரீவிஜயத்தின் மீது படையெடுக்க முற்பட்டது உண்மைதானே? அதை அணுக முடியாது என்பதால் இந்த மலைய நாட்டை அணுகியது உண்மைதானே?''

''உண்மைதான். எதற்காக? நீங்கள் எங்கள் எதிரி என்பதால் அல்ல. காம்போஜ மன்னரையும் இளவரசியையும் மீட்கத்தான் முயற்சி செய்தேன். அவர்களை நீங்கள் விடுவித்துவிட்டால் நான்

என் வழியில் போகப் போகிறேன். அவ்வளவுதானே? இதில் போர் எதற்கு இளவரசே? ஒரு விஷயத்தை நன்றாக யோசித்துப் பாருங்கள். நான் யார்? பல்லவ நாட்டின் உபதலைவன். உங்களுக்கும் எனக்கும் எந்த சம்பந்தமும் இல்லை. உங்கள் விவகாரத்தில் குறுக்கிடுவதற்காக நான் வரவில்லை. புயல் காற்றில் மாண்டு போயிருக்க வேண்டிய நான் தெய்வாதீனமாக காம்போஜத்து கரையில் ஒதுங்கினேன். பிரச்சனைகளில் சிக்கினேன். பிறகு காம்போஜ மன்னர் மூலமாகச் சீன தேசத்திற்குப் பல்லவர் தூதுவனாய் சென்று மன்னரைச் சந்தித்தேன். காம்போஜ மன்னர் எனக்களித்த கடற்படைக்குச் சீன மன்னர் 'நம்பிக்கை நட்சத்திரங்கள்' என்று பெயர் சூட்டினார். அந்த கடற்படையோடு என் இலட்சியத்தை நிறைவேற்றத் தான் புறப்பட்டேன். ஆனால் காம்போஜம் ஸ்ரீவிஜயத்தின் வசம் வந்துவிட்டது என்றும் மன்னரும் இளவரசியும் கைதாகி விட்டார்கள் என்றும் தெரிந்த பின் காம்போஜத்து கப்பல்களை வைத்திருக்கும் நான் கண்டு கொள்ளாமல் இருக்க முடியுமா? போர் எதுவுமின்றி அதை மீட்டேன். அங்கே இருந்த ஸ்ரீவிஜயத்தின் 100 மரக்கலங்களில் ஐம்பது மரக்கலங்களை என் படைகளோடு சேர்த்துக் கொண்டேன். அவை எனக்குத் தேவையில்லை. எனது லட்சியம் நிறைவேற 500 மரக்கலங்கள் போதும். உங்கள் கப்பல்களை உங்களிடமே ஒப்படைத்து விடுகிறேன். காம்போஜ மன்னரையும் இளவரசியையும் ஒப்படைத்துவிடுங்கள். போதும்.''

இப்படிச் சொல்லி சற்று நிறுத்திய உதயசந்திரன் ''இளவரசே! பல்லவ மாமன்னரின் உபதலைவனான நான் கடலுக்கு வந்தது இங்குள்ள நாடுகளிலெல்லாம் போரிடுவதற்காக அல்ல. எந்த நாட்டையும் பிடிப்பதற்காகவும் அல்ல. உங்கள் எல்லோரையும் ஆட்டிப்படைக்கும் அராபிய - திபெத்தியர்களின் கடலாதிக்கத்தை உடைப்பதற்காகத்தான். அராபியர்களுக்கு சீனம் பணிந்தது. நீங்கள் பணிந்தீர்கள். சாவகமும் புஷ்பகத்தீவும் பணிந்தன. கடல் வணிகத்தில் அராபியரை இடைத்தரகர்களாக ஏற்றன. இதனால் உங்களுக்கு நஷ்டமே தவிர லாபமில்லை. அராபியருக்குப் பணியாதது எங்களது பல்லவர்கள்தான். அவர்களை இடைத்தரகர்களாக ஏற்காமல் உங்கள் அண்டை நாடுகளுடன் நேரடியாக கடல் வாணிகம் செய்கிறார்கள். ஓராண்டிற்கும் மேலாக இதுதான் நிலை. பாரத நாடு முதல் உங்கள் நாடு மற்றும் அண்டை நாடுகளுக்கும் பொதுவான பூர்வக்கடலை திபெத்தியர்கள் உரிமை கொண்டாடிக் கொண்டு இதற்கு திபெத்திய கடல் என்று பெயர் சூட்டினார்கள். அது அடாதது என்று பொங்கி எழுந்தவர் பல்லவ

மாமன்னர். சீன மன்னருக்கும் இது பிடிக்காததால் பல்லவரின் ஆதரவைக் கோரியிருக்கிறார். என் கடற்படையின் மீது நம்பிக்கை வைத்து நம்பிக்கை நட்சத்திரங்கள் என்று பெயர் சூட்டினார். அந்த நம்பிக்கையை காக்க வேண்டியது எங்கள் கடமை. அராபியரின் கடல் ஆதிக்கத்தை உடைக்கச் சொல்லி பல்லவ மாமன்னரும் எனக்கு ஆணையிட்டுவிட்டார். கிழக்குக் கடல் நாடுகள் அனைத்திற்கும் சவாலாக உள்ள அராபியர்களின் ஆதிக்கத்தை அழிப்பதால் பயன் உங்கள் எல்லோருக்கும் தான். இந்தப் பெரும் பணியில் ஈடுபட்டிருக்கும் எனக்கு உங்கள் அனைவரது நட்பும் ஆதரவும் நம்பிக்கையும்தான் தேவையே தவிர பகைமையும் போருமல்ல. நமக்கிடையே அவை குறுக்கிடுவதால் இரு தரப்புக்கும் நன்மை இல்லை. உங்களது கோபத்திற்கு நானோ, சூர்யவர்மரோ, இளவரசியோ காரணமல்ல. இளவரசியை நீங்கள் மணக்க முடியாமல் போன ஏமாற்றம்தான்'' என்றான்.

உதயசந்திரன் சொற்கள் ஒவ்வொன்றும் இளவரசனின் மனதில் ஆழப்பதிந்தன. உபதலைவன் கூறியதில் நிரம்ப உண்மைகள் இருந்ததும் புரிந்தன.

உதயசந்திரன் தொடர்ந்து பேச முற்பட்டு ''நான் இவற்றையெல்லாம் கூறுவதற்குக் காரணம் உங்களிடம் சிக்கியிருக்கிறேன் என்பதாலோ எனது தோல்வியைத் தவிர்க்க உங்களை ஏமாற்றலாம் என்பதாலோ அல்ல. உண்மையைச் சொல்வதானால் உங்களது 500 மரக்கலங்கள் வந்தாலும் கூட என்னால் வெற்றி பெற முடியும்'' என்றான்.

''எப்படி? மந்திரத்தாலா?''

''இல்லை இளவரசே. மாற்று திட்டத்தால்.''

''மாற்று திட்டமா? என்ன அது?''

''இளவரசே! நீங்கள் கூறியது போல் எனது கடற்படையை மூன்றாகப் பிரித்து ஒரு பிரிவை மாயிருடிங்கத்திற்கும் இரண்டாவது பிரிவை இலங்காசோகத்திற்கும் மூன்றாவது பிரிவை தாம்பரலிங்கத்திற்கும் அனுப்பி ஏக காலத்தில் தாக்கிப் பிடித்துக் கொண்டு ஸ்ரீவிஜயத்தை இங்கே இழுக்கலாம் என்று தான் திட்டமிட்டேன். ஆனால் மறுபரிசீலனை செய்தபோது அதில் ஏதோ குறையிருப்பது போலத் தோன்றியது. நான் யோசிப்பது போல நீங்களும் யோசிக்கலாம் அல்லவா? நான் ஸ்ரீவிஜயத்தை நேரடியாக அணுக முடியாமல் மலைய நாட்டிற்கு வந்து தாக்கலாம் என்று நினைத்து ஸ்ரீவிஜயத்தின் அனைத்து கப்பல்களையும்

இங்கே கொண்டு வர நினைக்கலாம் அல்லவா? மறு பரிசீலனையில் இப்படித்தான் தோன்றியது எனக்கு? ஆகவே எனது இரண்டு படைப்பிரிவுகளை மாயிருடிங்கத்திற்கும் தாம்பரலிங்கத்திற்கும் போகாமல் போவது போல போக்கு காட்டிவிட்டு இங்கேயே வரும்படி கட்டளையிட்டேன். இப்போது பாருங்கள். துறைமுகத்திற்கு வெளியே கடலில் எனது மரக்கலங்கள் 150 இருக்கின்றன. அவற்றை விழுங்குவது போல் உங்களது 500 மரக்கலங்கள் வருவதாக வைத்துக் கொள்வோம். அவற்றுக்குப் பின்னால் எனது மீதமுள்ள நானூறு மரக்கலங்கள் வரும். அதாவது என் படை பலம் அதிகமாக இருப்பதோடு உங்கள் மரக்கலங்களின் இரு பக்கங்களிலும் இருக்கும். நீங்கள் எங்கள் மரக்கலங்களோடு போராடத்தான் முடியுமே தவிர எங்களை அழித்துவிட்டு மீள முடியாது. எங்கள் மரக் கலங்களுக்குச் சீன மன்னர் நவீன ஆயுதங்களையும் சீன வெடி குண்டுகளையும் தந்திருக்கிறார். அந்த வெடிகுண்டுகளைக் கொளுத்திப் போட்டால் அது மரக்கலங்களில் விழுந்து தீயை உண்டாக்குவதோடு கப்பலையே பிளக்கும். அத்தகைய குண்டுகள் 2000 என்னிடம் தற்போது இருக்கின்றன. கம்போஜ கப்பல்களாக இருந்த அவை சீன நாட்டு 'ஜங்க்' கப்பல்களைப் போல மாற்றி வடிவமைக்கப்பட்டுள்ளன. அவற்றின் நீளமும் கனமும் அதிகம். வேகமும் அதிகம். மரக்கலங்களின் அடிபாகத்தில் இரும்புச் சலாகைகள் உள்பக்கத்தில் அடங்கியுள்ளன. தேவைப்படும் போது விசையை அழுத்தினால் அவை வெளிப்பட்டு எதிரி மரக்கலங்களின் அடிப்பாகத்தைப் பிளக்கும். சில மரக்கலங்களில் சுழலும் சக்கரங்கள் இருப்பதால் அவற்றோடு மோதும் எதிரிக் கப்பல்களின் எந்த பாகமும் உடைந்து சிதறும். இதையெல்லாம் நான் விவரமாகச் சொல்வதற்குக் காரணம் நான் உங்களிடமோ உங்கள் கடற்படையிடமோ பயந்துவிடவில்லை என்பதையும் உங்கள் கப்பல்களை என்னால் வெற்றி கொள்ள முடியும் என்பதைச் சொல்வதற்காகத்தான். இப்போதைய போர் தேவையற்றது. அதைத் தவிர்ப்பது உங்கள் கையில் இருக்கிறது'' என்று சொல்லி கைகளைக் கழுவினான் உதயசந்திரன்.

இளவரசன் உடனடியாக அதற்குப் பதில் சொல்லவில்லை. தனது தந்தையின் ஆலோசனையைக் கேட்கலாம் என்ற எண்ணத்துடன் அவர் இருந்த இருப்பிடத்திற்குச் சென்றான்.

தந்தையோ அவனிடம் ஆலோசிக்கும் நிலையில் இல்லை.

☆☆☆



92

கலைந்த ஓவியம்

ஸ்ரீவிஜயத்தின் மன்னன் இருபது வயதிலிருந்தே பெண் பித்தனாக இருந்ததால் வயது அறுபதை அடைந்த நிலையிலும் பித்து தொடர்ந்தது. தனது சத்து அந்த பித்து தான் என்று பிடிவாதமாகக் கருதியதால் தன் சொத்தையெல்லாம் அந்த பித்துக்குளித்தனத்திற்கும் தனது உடல் ஆரோக்கியத்திற்கும் அதிகமாகச் செலவிட்டு வந்தான். அரியணையில் அமர்ந்து அரசப் பொறுப்புகளை கவனிக்க வேண்டிய அவன் அரச காரியங்களை விரசம் சொட்டச் சொட்ட செய்து வந்தானாதலால் அரச காரியங்களை அமைச்சர்கள் கவனித்து வந்தார்கள். இளவரசன் சங்கிராமன் பருவம் அடைந்ததும் பொறுப்பை ஏற்றுக் கொண்டான். உருப்படியாக எதையும் செய்ய லாயக்கற்றவனாக இருந்தாலும் மன்னன் என்ற பதவியை மறந்து போய் கூட துறந்துவிடக் கூடாது என்ற துர்வைராக்கியத்துடன் இருந்து பதவியை விட்டு விலக மறுத்தான். அவனைக் கொன்று கைலாசப் பதவிக்கு அனுப்பிவிட்டு கௌரவமான அரியணையில் அமர இளவரசனுக்கு உறவினர்கள் யோசனைகளைச் சொன்னாலும் அச்செயல் மானக்கேடானது என்று ஒதுக்கிவிட்டு இளவரசன் என்ற பதவியில் இருந்து கொண்டே மன்னனாகவும் நடந்து வந்தான் சங்கிராமன்.

இது மன்னனுக்கு வசதியாக இருந்தது. பதவியும் போகவில்லை. பொறுப்பையும் கவனிக்க வேண்டியதில்லை என்ற நிலை அவனுக்குத் திருப்தியாக இருக்கவே அந்தப் புரத்தில் மன்னாதி மன்னனாக விளங்கினான். பதவியும் பணமும் அவனுடன் இருந்ததால் பாவையர்கள் எண்ணிக்கை அவனுக்குக் கூடிக் கொண்டே வந்தது. அவனும் கூடுவிட்டு கூடு பாய்கிறவனைப் போல ஒவ்வொருத்தியாய் ஒதுக்கிக் கொண்டு காம விகாரங்களை செதுக்கிக் கொண்டு வந்தான். இருக்கும் இடமானாலும் சரி, செல்லும் இடமானாலும் சரி அவனுக்குப்

பாவையர்களே முதல் தேவையாக இருந்ததால் பலரும் அவனுக்கு பாவை விளக்குகளை விற்று வந்தார்கள்.

மங்கையர்களுக்கிடையில் மன்னனாக விளங்கி மாங்கு மாங்கென்று குதித்து கொண்டாடிய அவன் மங்கையர்களைப் பற்றிய ஆராய்ச்சியையும் செய்து வந்தான். மங்கையர் என்றும் பொய்கையில் நீடித்து நீந்த வேண்டுமென்றால் மன உறுதி மட்டும் போதாது என்பதை உணர்ந்து உடலை உய்வித்து உறுதியாக்கும் தாதுக்களை மருந்து வடிவத்தில் உண்டு மதமதர்ப்பான உடலைப் பெற்றிருந்ததால் விதவிதமான சுகங்களையும் வக்கிரங்களையும் வனிதையரிடம் இயற்றி வந்தான்.

இலங்காசோகத்திற்கு வந்த நிலையில்கூட தன்னை அக்காலத்து இலங்கை வேந்தன் இராவணனாக எண்ணிக் கொண்டு ஆர்ப்பரித்தான். மங்கையர் சுகத்தில் ஆராய்ச்சிகளை நடத்திய அவனுக்கு இராவணனைப் போன்றே ஆசை வந்தது. மணமாகாத மங்கையரை விட மணமான மங்கையரிடமே சுகம் அதிகமென்றும், வித்தியாசமானது என்றும் ஆராய்ச்சி செய்து கண்டறிந்ததாகக் கருதிக் கொண்ட அவன் சீதையைக் கவர்ந்த இராவணனும் இப்படித்தான் ஆராய்ச்சி செய்திருக்க வேண்டும் என்று அர்த்தமில்லாமல் நினைத்துக்கொண்டு மணமானவர் களைத் துய்ப்பதையே மகத்தானதாகத் தீர்மானித்து செயல்படுத்தி வந்தான். தனது மனைவியரை அபகரிப்பது மன்னன் என்பதை அறிந்த மணாளர்கள் மன்னனை வாயாறத் தூற்றித்தான் தேற்றி கொள்ள முடிந்ததே தவிர வாளெடுத்து வெட்டவோ விலக்கவோ முடியவில்லை. கரையற்ற காமம் அடாதது. அதிலும் பிறன்மனை விழைவது மகாபாவம். பரிகாரமற்ற பாவம். ஆனால் காமாந்தகர்களுக்கு காமத்தைத் தவிர வேறு எதுவும் பெரிதாகத் தெரிவதில்லை. அறிவுரைகளோ அறவுரைகளோ அவர்களது செவிகளில் விழுவதில்லை. காமம் தவறு என்று சொல்லும் உரைகளை விட காமமே கருமமாய் இரு என்ற உரைகளே அவனது மனத்தில் பதிந்ததால் பழி பாவங்களைப் பற்றி பேசாமல் பிறன்மனைப் பெண்களையே கொண்டு வரச் சொல்லி கொண்டாடி வந்தான்.

அத்தகைய பெண்களிலும் சோரம் போனவர்கள் பலர் இருந்தார்கள். தங்கள் பதியை விட மன்னன் தரும் பொன் பெரிதாக இருந்ததால் பொன்னுக்கு பேரம் பேசி மன்னனிடம் சோரம் போனார்கள். இலங்காசோக துறைமுகத்தில் ஓரமாய் இருந்த ஒரு உயரமான மாளிகையில் இவ்வாறு சோரம் போன பெண்களோடு

சொர்க்கம் அனுபவித்துக் கொண்டிருந்தான் ஸ்ரீவிஜயத்தின் மன்னன். தர்ம நெறி தவறிய அப்பெண்கள் அவனைத் தழுவித் தழுவி சூடேற்றினார்கள். அவர்களை யெல்லாம் அள்ளியும் அணைத்தும் விளையாடிக் கொண்டிருந்த மன்னன் ''உங்களையெல்லாம் நான் ஏன் தேர்ந்தெடுத்தேன் தெரியுமா?'' என்று கேட்டான்.

'காரணம் என்ன இருக்கிறது? எல்லாம் உன் விவஸ்தையற்ற காமத்திற்குத்தான்' என்று முணுமுணுத்துக் கொண்ட அக்காமக் கசடுகள் ''எதற்கு மகாராஜா?'' என்று கேட்டார்கள்.

''அனுபவசாலிகளுக்குத்தான் பக்குவம் தெரியும். நிதானமும் வேகமும் தெரியும். வித்தியாசங்கள் தெரியும். கால அவகாசங்கள் தெரியும். மற்ற பெண்களுக்கு இது தெரிவதில்லை. இதையெல்லாம் அவர்களுக்கு கற்றுக் கொடுக்க வேண்டியிருக்கிறது. என்ன? நான் சொல்வது சரிதானா?'' என்று கேட்டான் மன்னன்.

'உன் அயோக்கியத்தனத்திற்கு விளக்கங்கள் வேறா?' என்று அலுத்துக் கொண்ட மாற்றான் தோட்டத்து குப்பைகள் ''அப்படியா மகாராஜா?'' என்றனர்.

தனது தொங்கு மீசையை மேலே ஏற்றிக் கொண்ட மன்னன் ''இந்த மாதிரி நேரத்தில் இந்த மீசை பெரும் தொந்தரவாக இருக்கிறது. ஆனால் உன் போன்ற பெண்களோ இந்த மீசையைத்தான் விரும்புகிறார்கள். இதுவும் என் ஆராய்ச்சியில் கண்ட உண்மை'' என்றான்.

'பாராட்டிப் போற்ற வேண்டிய ஆராய்ச்சிதான்' என்று இகழ்ந்து கொண்ட அந்த இற்றுப் போன தேரைப் போன்ற அப்பெண்கள் ''உண்மைதான் மகாராஜா'' என்றார்கள்.

''உங்களைப் பற்றி இன்னும் ஏராளமான ஆராய்ச்சிகளைச் செய்திருக்கிறேன். அவற்றையெல்லாம் சொன்னால் நீங்கள் அசந்து போய்விடுவீர்கள். எல்லாவற்றையும் ஓலைகளில் பொறிக்கச் சொல்கிறேன். படித்துத் தெரிந்து கொள்ளுங்கள்'' என்றான் மன்னன்.

'அந்தக் குப்பைகள் எல்லாம் எங்களுக்கு எதற்கு? நாங்களென்ன படித்து பண்டிதர்களாகவா இங்கு வந்தோம்? நீ தரும் பொன்னையும் பொருளையும் தவிர எங்களுக்கு வேறு எதுவும் தேவையில்லை' என்று சொல்லிக் கொண்ட அந்தச் சொரணையற்ற பெண்கள் ''மிகவும் சந்தோஷம் மகாராஜா.

சீக்கிரமாகப் பொறிக்கச் செய்யுங்கள். படிக்க ஆவலாக இருக்கிறோம்'' என்றார்கள்.

''இப்போதைக்குப் பேச்சு போதும். செயலை கவனிக்கலாம். ஒவ்வொருவராக வாருங்கள். ஒருவர் தந்ததை இன்னொருவர் தரக் கூடாது. இது தான் முக்கியம்'' என்றான் மன்னன்.

அப்போது கதவு தட்டப்பட்டது.

பெண்கள் அனைவரும் ஆடைகளை சரி செய்து கொண்டு ஒதுங்கிக் கொண்டார்கள்.

ஒருத்தி மட்டும் கதவைத் திறந்தாள்.

வெளியே நின்றிருந்த இளவரசன் உள்ளே பார்த்தான்.

அவனது முகத்தில் அருவெறுப்பு உண்டாயிற்று.

உள்ளே நுழையாமல் திரும்பி நடந்தான்.

அவனுக்குப் பின்னால் ஓடோடி வந்த ஒருத்தி ''இளவரசே! மன்னர் தங்களை அழைக்கிறார்'' என்றாள்.

''எதற்கு? ஆராய்ச்சி செய்வதற்கா? அதெல்லாம் உங்களோடு இருக்கட்டும்'' என்றான் இளவரசன் வெறுப்புடன்.

''இளவரசே! மன்னர் தெளிவாக இருக்கிறார். ஆகவே தான் அழைக்கிறார்'' என்றாள் அவள்.

''நான் வரவேண்டும் என்றால் உங்களில் ஒருத்தி கூட உள்ளே இருக்கக் கூடாது.''

''அப்படியே இளவரசே.''

சிறிது நேரம் கழித்து இளவரசன் சென்றபோது பெண்கள் அனைவரும் அகன்றிருந்தார்கள். அறை சுத்தம் செய்யப் பட்டிருந்ததோடு அவனுக்கொரு ஆசனமும் போடப் பட்டிருந்தது.

''உட்கார் சங்கிராமா'' என்றான் மன்னன்.

இளவரசன் உட்கார்ந்து கொண்டு ''உங்கள் யோசனை அர்த்தமில்லாமல் போய்விட்டது'' என்றான்.

''யோசனை சரியாகத்தானே இருந்தது? எப்படி அர்த்தமில்லாமல் போனது?''

''உங்களை மன்னர் என்று அழைப்பதா? தந்தை என்று அழைப்பதா என்பது எனக்குத் தெரியவில்லை.''

''எது உண்மையோ அதைச் சொல்லி அழை.''

''எது உண்மை?''

''தந்தை என்பதுதான் உண்மையானது. நிலையானது.''

''அது எனக்குப் பொய்யாகவே தோன்றுகிறது.''

''சங்கிராமா! உன்னைப் பெற்றது நான்தான். இது சத்தியம்.''

''பெற்றதோடு சரி. அதற்குப் பிறகு தந்தையாக நடந்து கொள்ளவில்லையே.''

''அதனால் உறவு பொய்யாகிவிடாது.''

''பொய்யாகிவிட்டால் நிம்மதியாக இருக்கும்.''

''தந்தை என்று அழைக்க விருப்பமில்லாவிட்டால் மன்னன் என்று தான் அழையேன்.''

''நீங்கள் மன்னனாகவும் நடந்து கொள்ளவில்லையே?''

''மன்னனாக நடந்து கொள்ளவில்லை என்றால் என்னிடம் ஏன் யோசனை கேட்டாய்?''

''கேட்டது தவறு என்பது தற்போது தான் தெரிகிறது.''

''பிறகு எதற்கு இப்போது இங்கே வந்தாய்? அது தவறு என்றால் இதுவும் தவறு தானே?''

''தந்தையே! தேவையில்லாத நேரங்களில் வாதமிடுவது பயனற்றது. நீங்கள் யோசனை சொன்னீர்களே அது எதற்கு?''

''இதென்ன கேள்வி மகனே?''

''ஸ்ரீவிஜயம் மற்றும் மலையூர், பண்ணை ஆகிய இடங்களில் இருந்த 500 போர்க் கப்பல்களையும் மலைய நாட்டிற்கு கொண்டு போகச் சொன்னீர்கள். நானும் யோசிக்காமல் அத்தனை மரக்கலங்களையும் இலங்கா சோகத்திற்கு வரச் சொல்லிவிட்டேன். அநேகமாக அவை நாளை காலை இங்கே வந்துவிடும். ஆனால் அதெல்லாம் தேவைதானா என்று தோன்றுகிறது எனக்கு?''

''இதென்ன அர்த்தமற்ற கேள்வி? அந்த உதயசந்திரனை முறியடிக்க வேண்டாமா நாம்?''

''உதயசந்திரனுக்கும் நமக்கும் என்ன சம்பந்தம்? அவனை நாம் ஏன் முறியடிக்க வேண்டும்?''

''அவன் செய்ததையெல்லாம் மறந்துவிட்டாயா? காம்போஜத்தில் அவன் உன்னை அவமானப்படுத்தியவன். பூவிழி உனக்கு கிடைக்காமல் செய்தவன்.''

''இல்லை தந்தையே. அதற்கும் உதயசந்திரனுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை. உண்மையிலேயே நான் அங்கே நடந்து கொண்டதுதான் தவறு. பேசிக் கொண்டிருக்கும்போது பூவிழியின் மீது குறுவாளை வீசியவன் நான். அதை உதயசந்திரன் தாங்கியிராவிட்டால் என் ஆயுள் அன்றே முடிந்திருக்கும். ஆகவே உதயசந்திரன் நம் எதிரியல்ல. காதலுக்காக காம்போஜத்தின் மீது படையடுத்தேன். வெற்றி கொண்டேன். அதோடு விவகாரங்கள் முடிந்துவிட்டன. உதயசந்திரனை முறியடிக்கும் பிரச்சனை எழவில்லை.''

''தவறு சங்கிராமா. நாம் வெற்றி கொண்ட காம்போஜத்தை அவன் இந்நேரம் மீட்டிருப்பான். அந்த வகையில் அவன் நம் எதிரிதான்.''

''காம்போஜத்தை மீட்க உதயசந்திரன் கடமைப்பட்டவன். அவனது கடற்படையே காம்போஜத்திற்குச் சொந்தமானவை. உதயசந்திரன் காம்போஜ நாட்டை மீட்காமல் விட்டாலும் நட்பு நாடான சீன நாடு சும்மாயிருக்காது. அது மீட்கும். எப்படிப் பார்த்தாலும் உதயசந்திரன் நம் எதிரியல்ல. அவனை முறியடிக்க 500 மரக்கலங்கள் தேவையல்ல.''

''அவனை முறியடிப்பது என்றால் அவனது கடற்படையை முறியடிப்பது என்று தானே அர்த்தம்? அவனிடமும் நிறைய மரக்கலங்கள் இருக்குமல்லவா?''

''550 மரக்கலங்கள் இருக்கின்றன.''

''அதெப்படி இவ்வளவு சரியாகச் சொல்கிறாய்?''

''உதயசந்திரனே சொன்னான்.''

''எப்போது?''

''சற்று முன்பு.''

''எங்கே சொன்னான்?''

''விருந்தினர் மாளிகையில்.''

''இப்போது அங்கேயா இருக்கிறான்?''

''ஆமாம்.''

''ஆமாம்.''

''அருமையான சந்தர்ப்பம் தந்திரமா அவனை அங்கேயே வேலை தீர்த்துவிடு.''

''இதுதான் உங்கள் யோசனையா?''

''இதைவிட வேறென்ன வேலை உனக்கு? போய் உடனடியாக நிறைவேற்று.''

''உங்களுக்கு ஸ்ரீவிஜயத்தின் மீது துளி கூட அக்கறை யில்லை தந்தையே'' என்று வெறுப்போடு கூறிவிட்டு விருந்தினர் மாளிகைக்கு வந்தான் சங்கிராமன். அவனது முகம் வாடிக் கிடந்ததைக் கண்ட உதயசந்திரன் 'இளவரசனுக்குச் சரியான ஆலோசனை கிடைக்கவில்லை போலிருக்கிறது' என்று எண்ணிக் கொண்டு ''மன்னர் என்ன சொன்னார் இளவரசே?'' என்று கேட்டான்.

''அவர் மன்னராகவும் இல்லை. என் தந்தையாகவும் இல்லை. அவரிடம் என்ன ஆலோசனையைக் கேட்பது?'' என்று அலுத்துக் கொண்டான் இளவரசன்.

''மன்னரை விடுங்கள். உங்கள் அளவில் தெளிவு பிறக்க வில்லையா? நீங்கள் இன்னமும் கோபம் கொண்டிருந்தால் அது பூவிழி சம்பந்தமாகத்தான் இருக்கும். நீங்கள் விரும்பிய பூவிழி உங்களுக்குக் கிடைக்காதது உங்களுக்குள் கோபக் கனலாக இருக்கலாம். இந்த விஷயத்தில் ஒன்றை தெளிவுபடுத்தி விடுகிறேன். எனக்கும் பூவிழிக்கும் காதல் எதுவும் இல்லை. இது முழுக்க முழுக்க அவளது மனச்சம்பந்தப்பட்ட விஷயம்....'' என்று உதயசந்திரன் சொல்லிக் கொண்டிருக்கும்போது குறுக்கிட்ட இளவரசன், ''காம்போஜத்தை வென்று பூவிழியை சிறை செய்தபோதே என் மீதிருந்த அனுதாபமும் அவளிட மிருந்து அகன்றுவிட்டது. இந்த ஜென்மத்தில் அவளது காதல் எனக்குக் கிடைக்காது. அதற்காக அவளை ராட்சஷ விவாகம் செய்து கொள்ளவும் நான் தயாராக இல்லை. நாளை காலை சந்திப்போம் உதயசந்திரா'' என்று கூறிவிட்டு வெளியேறினான்.

மறுநாள் அனைவரையும் கூட்டி அவன் பேசியவிதம் உதயசந்திரனைத் தவிர மற்றவர்களுக்கு ஆச்சரியமாக இருந்தது. அக்கூட்டத்தில் காம்போஜ மன்னனும் பூவிழியும் அழைக்கப் பட்டிருந்தார்கள். சங்கிலிகள் அகற்றப்பட்டு சுதந்திரமாக அமர்த்தப்பட்டிருந்தார்கள்.

இளவரசன் எழுந்து எந்தவிதமான பீடிகையும் பதட்டமும் இல்லாமல் தெளிவாகப் பேசினான்.

''எதிரியாகக் கருதப்பட்ட உதயசந்திரன் நேற்றிரவு பேசிய பேச்சு என் மனக் கண்களைத் திறந்துவிட்டன என்பதை ஒப்புக் கொள்கிறேன். அவர் கூறியது போல் இப்போது போருக்கான அவசியமோ பதட்டத்திற்கான அவசியமோ எதுவும் இல்லை. வீம்புக்குப் போரிட நான் விரும்பவில்லை. முதல் கோணல் முற்றும் கோணல் என்பது போல் அமைந்துவிட்டது என் செயல்பாடுகள். அதில் எனக்கு வருத்தம்தான். காம்போஜ இளவரசியின் மீது நான் கொண்ட காதல் மட்டும் உண்மை. அதைத் தொடர்ந்து நான் ஈடுபட்ட எல்லா செயல்களுமே வீம்புக்காக நடந்தவைகளே. காம்போஜ நாட்டை கைப்பற்றியதும் அதன் மன்னரையும் இளவரசியையும் சிறைபிடித்தது கூட வீம்புச் செயல்கள்தான். நல்ல வேளையாக மிகப்பெரிய வீம்புச் சண்டை நடக்கவிருந்தது. அதை உதயசந்திரன் சுட்டிக்காட்டிய பிறகுதான் நானும் உணர்ந்தேன். அராபியரை அழிக்க முற்படும் மாபெரும் செயலுக்கு முன் சில்லரைத்தனமான செயல்பாடுகள் தேவையில்லைதான். அராபியரை அழிப்பதில் நாம் அனைவரும் ஒன்றுபட வேண்டிய தருணம் இது. இந்த நிலையில் நாம் விரோதிகளாகப்பிரிவது சரியல்ல. இப்போதிலிருந்து நாம் நண்பர்கள். பல்லவ நாட்டு உபதலைவர் எனது பிரதான நண்பர். எல்லோருக்கும் சம்மதம் தானா?''

எல்லோருக்கும் அவனது முடிவு சம்மதமாய் இருந்தது.

''இளவரசே! நீங்கள் எடுத்த இந்த முடிவு இப் பிராந்தியத்திலேயே இப்போதைக்கு அமைதியை உண்டாக்கி யிருக்கிறது. இதற்காக எல்லோரும் நன்றி தெரிவித்துக் கொள்கிறோம்'' என்றான் உதயசந்திரன்.

''காம்போஜ மன்னரும் இளவரசியும் சுதந்திரமாக தங்கள் நாட்டிற்குத் திரும்பலாம். நான் இங்கிருக்க விரும்பவில்லை. இன்றைக்கே ஸ்ரீவிஜயத்திற்குத் திரும்புகிறேன்'' என்றான் இளவரசன்.

''இளவரசே! நான் கைப்பற்றிய ஸ்ரீவிஜய மரக்கலங்களில் தற்போது என்னோடிருக்கும் 50 மரக்கலங்களையும் ஸ்ரீவிஜயத்திற்கே அனுப்பி வைக்கிறேன்'' என்றான் உதயசந்திரன்.

''வேண்டாம். அவை உங்கள் வசமே இருக்கட்டும். அராபியருக்கெதிரான செயல்பாட்டிற்கு அவை தேவையாக இருக்கலாம்'' என்று சொல்லி விடைபெற்றுக் கொண்டான் ஸ்ரீவிஜய இளவரசனான சங்கிராமன்.

உதயசந்திரன் பிறகு சூர்யவர்மனோடு பேசியபோது தங்களையும் தங்கள் நாட்டையும் மீட்டதற்காக நன்றி தெரிவித்துக் கொண்டான் காம்போஜ மன்னன்.

''நீங்கள் நன்றி தெரிவித்துக் கொள்ள வேண்டியது ஸ்ரீவிஜய இளவரசருக்குத்தான் மன்னவா. அவர் மட்டும் வீம்பை விட மறுத்திருந்தால் நிலைமை மோசமாக இருக்கும்'' என்றான் உதயசந்திரன்.

''நீங்கள் போரிட்டு எங்களை மீட்பீர்கள் என்றுதான் எதிர்பார்த்தேன். ஆனால் ஒரு துரும்புகூட விலகாமல் மீட்கப் படுவோம் என்று எதிர்பார்க்கவில்லை'' என்றாள் பூவிழி.

''போர் தேவையாய் இருக்கும் என்று நான் கூட ஆரம்பத்தில் நினைத்தேன். ஆனால் இங்கு வந்ததும் அதை மாற்றிக் கொண்டேன். போர் தேவையில்லை என்று கருதினேன். போரை விட போருக்குப் பின்னால் இருக்கும் அராபியர் அபாயம் பற்றிச் சொன்னேன். ஸ்ரீவிஜய இளவரசர் விவேகத்துடன் செயல் பட்டார்.''

''அதுதான் இந்த விஷயத்தில் முக்கியமானது'' என்றான் உதயசந்திரன்.

''ஐநூறு மரக்கலங்களை வைத்துக் கொண்டு போருக்கு ஆயத்தமாகிவிட்டு எப்படி போரைக் கைவிட முடிந்தது உங்களால்?'' என்று கேட்டாள் பூவிழி.

''வேகம் இருக்கும் இடத்தில் விவேகமும் இருக்கும் பூவிழி. தேவையான போரினால் விளையக்கூடிய இழப்புகளை விட தேவையற்ற போரினால் உண்டாகும் இழப்பு அதிகமாய் இருக்கும் என்று எங்கள் மாமன்னர் சொல்லுவார். அதைத்தான் தற்போது நினைத்துக் கொண்டேன் நான். அதை இளவரசரும் புரிந்து கொண்டதுதான் சிறப்பானது'' என்றான் உதயசந்திரன்.

தனது மரக்கலங்கள் அனைத்தும் வந்து சேர்ந்தபின் இலங்காசோகத்தை விட்டு புறப்படத் தீர்மானித்திருந்தான் உதயசந்திரன். அவனை வழியனுப்பிவிட்டு காம்போஜம் செல்வதாகச் சொல்லியிருந்தான் சூர்யவர்மன்.

ஆகவே பூவிழியும் உதயசந்திரனும் தனிமையில் சந்தித்துக் கொள்ள வாய்ப்பு கிடைத்தது.

''என்னைக் காப்பாற்ற நீங்கள் இருக்கிறீர்கள் என்று சொன்னேனே அது ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் நிரூபணமாகி வருகிறது பார்த்தீர்களா?'' என்று கேட்டாள் பூவிழி.

''உனக்கு நல்வாழ்வு காத்திருக்கும்போது அபாயங்கள் தாமாகவே விலகுகின்றன'' என்றான் உதயசந்திரன்.

''எனக்கு நல்வாழ்வு கிடைக்குமா உபதலைவரே?''

''பூவிழி! நான் ஒன்றைக் கேட்கலாமா?''

''உங்களைத் தவிர வேறு யார் கேட்க முடியும்?''

''பூவிழி! ஸ்ரீவிஜய இளவரசர் நல்லவராகத்தானே இருக்கிறார்! அவரை நீ மணந்து கொண்டால் என்ன?''

''கலைந்த ஓவியம் கலைந்ததுதான் உபதலைவரே. அதைப் புதுப்பிக்க முடியாது. புதிய ஓவியம் தான் வரைய வேண்டும். அந்தப் புதிய ஓவியம் யார் தெரியுமா?''

''யார்?''

''உங்களுக்கே தெரியும்'' என்றாள் பூவிழி.

அவளது பூவிழிகள் இதைச் சொல்லும்போது நன்றாக மலர்ந்தன.

☆☆☆



93

கனவுக்கோட்டை

மாநக்காவரம்.

அராபியரின் கடற்படைத்தளம்.

தலைவன் இருந்த பிரதானத் தீவு.

தாவூத்தின் முன்னால் குனிந்த தலையுடன் நின்றிருந்தான் உபதளபதி இக்பால்.

''என் உபதளபதிகள் அனைவரும் வித்தியாசம் ஏதுமின்றி இருப்பது எனக்குப் பெருமையாக இருக்கிறது'' என்றான் தாவூத் சலனமில்லாத குரலில்.

ஆனால் அவன் புகழ்வது போல் இகழ்கிறான் என்பது இக்பாலுக்குப் புரிந்ததால் மௌனமாக இருந்தான்.

அதைக் கண்ட தாவூத் ''இக்பால்! நீ வீரன் தானே?'' என்று கேட்டான்.

''தலைவரே! இதுவரை நான் இழந்ததுதான் அதிகம். நானெப்படி வீரனாக முடியும்?'' என்றான் இக்பால்.

''அதைத்தான் உங்களுக்குள் வித்தியாசம் இல்லை என்று சொன்னேன். நீயும் நான்கு கப்பல்களை இழந்துவிட்டு வந்திருக்கிறாய். சுலைமானும் நான்கு கப்பல்களை இழந்திருக்கிறான். இது தொடர்கதையாக தொடர்ந்தால் என்ன ஆகும் தெரியுமா? இங்கே நமது கப்பல்கள் எதுவும் இருக்காது. நான்கு நான்காகவே அழியும்.''

''எதிரியின் நோக்கம் இதுவாகத்தான் இருக்கும் என்று தோன்றுகிறது தலைவரே'' என்றான் இக்பால்.

''நோக்கம் சரி. எதிரி யார்? இதுவரை நீங்கள் அவனை யார் என்று கண்டுபிடிக்க முடியவில்லை. எதிரியை துரத்திச் சென்ற நீ பாதியில் கைவிட்டது ஏன்?''

''எதிரியின் கப்பல் அதிவேகம் கொண்டிருந்தது. அந்த வேகம் நம் கப்பல்களுக்கு இல்லை. அதோடு துரத்திச் சென்ற எங்கள்

இரண்டு கப்பல்களும் சேதமாகியிருந்தன. வெகுதூரம் செல்ல இயலவில்லை.''

''அராபியர் மரக்கலங்கள் வேகத்திற்குப் பெயர் போனவை. அந்த வேகத்திற்கு என்ன ஆயிற்று இப்போது?''

''தலைவரே! நமது மரக்கலங்கள் ஓராண்டிற்கு மேலாக இத்தளத்தில் இருக்கின்றன. அவற்றின் அடிப்பாகத்தில் பாசி படிந்திருக்கிறது. அதனால் வேகம் குறைந்திருக்கிறது.''

''அதுதான் காரணம் என்றால் ஒட்டியிருக்கும் பாசிகளை சுரண்டி எடுப்பது யார் வேலை? என் வேலையா?''

''மாலுமிகள் செய்ய வேண்டிய பணி.''

''அதைச் செய்யாமல் உண்டு உறங்குகிறார்களா? மாலுமிகளை அழைத்து ஒவ்வொரு மரக்கலமாகச் சுத்தம் செய்யச் சொல். ஒரே நேரத்தில் எல்லா கப்பல்களையும் கரைக்கு இழுக்க வேண்டாம்.''

''தலைவரே! எனது நான்கு மரக்கலங்களை அழித்த எதிரியின் கப்பலிலிருந்து நமக்கு வந்து விழுந்த ஓலையில் 'அல் அமீன்' என்ற வாசகம் இல்லை. உதயசந்திரன் என்ற பெயர் இருந்தது.''

''ஆம். பார்த்தேன். அதற்கென்ன?''

''அது எதிரியின் பெயராக இருக்கலாம்.''

''யாரந்த உதயசந்திரன்?''

''பெயரை அனுப்பியதிலிருந்து அவனைப் பற்றி நமக்குத் தெரிந்திருக்கும் என்று நம்பி நம்மைப் பயமுறுத்துகிறான்.''

''நமக்குத் தெரியவில்லையே! ஒருவேளை பல்லவ நாட்டைச் சேர்ந்தவனாக இருக்குமோ?''

''எனக்கும் அப்படித்தான் தோன்றுகிறது தலைவரே.''

''பல்லவ நாட்டைப் பற்றி நன்கு தெரிந்தவன் சுலைமான்தான். அவனை வரச்சொல்.''

சுலைமான் வந்தான்.

''இந்த ஓலையைப் படி சுலைமான்.''

''அல் அமீன்'' என்றான் சுலைமான்.

''படித்துவிட்டுச் சொல் சுலைமான். படிக்காமலேயே உளறும் பழக்கம் எப்போது வந்தது உனக்கு?''

சுலைமான் ஓலையைப் படித்தான்.

உதயசந்திரன் என்ற பெயரைப் பார்த்ததும் அவனுக்குத் தூக்கி வாரிப் போட்டது.

'ஆகா! இவனா? இவன் கடலுக்கும் வந்துவிட்டானா? அவ்வளவுதான். நம்மைப் பார்த்தால் தொலைத்துவிடுவானே! என்ன செய்வது? மாநக்காவரத்தை விட்டு ஓடிவிட வேண்டியது தான். இப்போதைக்கு இவனை தெரிந்த மாதிரி காட்டிக் கொள்ளக் கூடாது' என்று தனக்குள் முடிவுகட்டிக் கொண்ட சுலைமான் ''உதயசந்திரன்'' என்று எழுதியிருக்கிறது தலைவரே'' என்றான்.

''யாரவன்?''

''எனக்கெப்படித் தெரியும் தலைவரே?''

''பெயரைப் பார்த்தால் பல்லவ நாட்டவனைப் போலத் தோன்றுகிறது.''

''எனக்கும் அப்படித்தான் தோன்றுகிறது.''

''நீ பல்லவ நாட்டில் இருந்தவன். இவன் உனக்குத் தெரிந்திருக்கலாம் என்று நினைத்தேன்.''

''தெரிந்தால் சொல்ல மாட்டேனா? தெரியாது தலைவரே.''

''நன்றாக நினைவூட்டிப் பார்.''

''மறுப்பதற்கு என்ன இருக்கிறது? இந்தப் பெயருள்ள யாரையும் நான் பல்லவ நாட்டில் சந்திக்கவும் இல்லை. கேள்விப்பட்டதும் இல்லை.''

''சரி நீ போகலாம்.''

சுலைமான் போனதும் தாவூத் இக்பாலைப் பார்த்து ''உதயசந்திரன் பல்லவ நாட்டவனாகத் தான் தோன்றுகிறது. நமது மரக்கலங்களை அழிக்கும் நோக்கம் பல்லவர்களைத் தவிர வேறு யாருக்கும் கிடையாது. வேறு எந்த நாடுகளுக்கும் அந்த தைரியம் கிடையாது. ஆகவே அவனது இருப்பிடத்தைக் கண்டுபிடிக்க வேண்டும். அவன் அழிக்கப்பட வேண்டும். இங்கே வரும் வணிக மரக்கலங்களிடம் சொல்லி வை. உதயசந்திரனைப் பற்றிய எந்த தகவல் தெரிந்தாலும் நமக்கு அனுப்ப வேண்டும் என்று சொல். நமது ஒற்றர்களையும் வணிக மரக்கலங்களில் அனுப்பு. அவர்கள் கரையிறங்கும் நாடுகளில் உதயசந்திரனைப் பற்றி விசாரிக்கச் சொல். மாநக்காவரம் பகுதியில் கண்காணிப்பு பணியைச் செய்யும் நமது மரக்கலங்களின் எண்ணிக்கை நான்கு, ஆறு என்று சொற்பமாக இருக்கக் கூடாது. குறைந்தது ஐம்பது மரக்கலங்கள் இருக்க வேண்டும்'' என்று உத்தரவிட்டான்.

இதேசமயத்தில் தனது மாளிகைக்கு வந்த சுலைமான் அமைதியில்லாமல் தவித்தான். உதயசந்திரனின் கண்ணில்

பட்டால் தன் கதி அதோகதி தான் என்பது அவனுக்குச் சந்தேகமில்லாமல் புரிந்தது.

கட்டிலில் படுத்துக் கொண்டு முள்ளின் மீது கிடப்பது போல் துக்கப்பட்டுக் கொண்டிருந்த அவனை அணுகிய கருமோகினி அவனது முகம் இருண்டு கிடந்ததைக் கண்டதும் ''உங்களுக்குக் கவலைப்படுவதைவிட வேறு வேலை இல்லையா?'' என்று கேட்டாள்.

''வா. கருமோகினி. இப்போதெல்லாம் எனக்கு புதுபுதுக் கவலைகள் அடிக்கடி வருகின்றன'' என்றான் சுலைமான் வருத்தத்தோடு.

அவனை எங்கேயோ கிள்ளிய அவள் ''புதுபுதுக் சுகங்களை அனுபவிப்பதை விட்டு புதுபுதுக் கவலைகளை சுமப்பது எதற்கு?'' என்று கேட்டாள் அவள்.

அவள் கிள்ளிய இடத்தை தடவிவிட்டுக் கொண்ட சுலைமான் ''என் விருப்பம் அதுதான் கருமோகினி. ஆனால் விருப்பப்படி எதுவும் நடப்பதில்லையே?'' என்றான்.

''விருப்பம் என்பது கடலில் இருக்கும் மீன்களைப் போன்றது. அதைத் தேடி நாம் தான் போக வேண்டுமே தவிர அவை நம் வாயைத் தேடி வராது'' என்று சொல்லி தனது வாயை அவனது வாயில் வைத்து அழுத்தி எடுத்த கருமோகினி ''கவலை என்பது நம்மைச் சுற்றியிருக்கும் கடல் மணலைப் போன்றது. அதை மிதித்து கடக்க வேண்டுமே தவிர எடுத்து மேலே போட்டுக் கொள்ளக் கூடாது'' என்று சொல்லி தனது கச்சைகளை அவிழ்த்தாள்.

''உங்கள் கவலைதான் என்ன?'' என்று கேட்டாள்.

சுலைமானின் கண்கள் சுதந்திரமடைந்த அவளது அங்கங்களின் மீது பதிந்தன.

''அவை உங்களுக்குத்தான். நான் கேட்டதற்கு பதிலைச் சொல்லுங்கள்'' என்றாள் அவள் சற்றே குலுங்கியபடி.

சுலைமானுக்குள் காமத்தீ மூள்வதற்குத் துடித்தது. ஆனால் கவலைத் தீ உள்ளே பெரிதாக எரிந்து கொண்டிருந்ததால் காதல் கிழத்தியை உடனடியாக சேதப்படுத்த முடியாமல் ''எனது பழைய எதிரி கடலுக்கு வந்துவிட்டான்'' என்றான்.

''உங்கள் புதிய எதிரி யார்? தாவூத்தா?'' என்று கேட்டாள் அவள்.

''புது எதிரி எனக்கும் யாரும் இல்லை. ஆகவே தான் பழைய எதிரி என்று சொன்னேன்.''

''யாரது?''

''உதயசந்திரன்.''

''அது யார்?''

''பல்லவ நாட்டவன். அவன் இங்கே வந்துவிட்டான்.''

''மாநக்காவரத்துக்கா?''

''இல்லை. கடலுக்கு வந்துவிட்டான்.''

''அதற்காக எதற்கு கவலைப்பட வேண்டும்?''

''அவன் கண்ணில் நான் பட்டால் தொலைந்துவிடுவேன்.''

''ஏன் அப்படி?''

''அது பெரிய கதை. அது வேண்டாம்.''

''அவன் கண்ணில் பட்டால் தானே பிரச்சனை? படாமல் இருந்துவிட்டால்?''

''அது எப்படி முடியும்?''

''தலைவர் உங்களுக்குக் கொடுத்த பணியை மறந்துவிட்டீர்களா?''

''எது? திபெத் மன்னருக்கு அன்பளிப்பு எடுத்துச் செல்லும்படிச் சொன்னாரே அதையா சொல்கிறாய்?''

''ஆமாம். நான் ஏற்கெனவே சொன்ன திட்டத்தை நினைவில் வைத்துக் கொண்டு செல்வக் குவியல்களோடு நீங்கள் திபெத்திற்குப் புறப்பட்டு விடுங்களேன்.''

கருமோகினி சொன்னது சரியான உபாயமாக இருந்தது சுலைமானுக்கு.

அவளை ஏறெடுத்துப் பார்த்தான்.

அவனுக்குள் மூண்டிருந்த கவலைத் தீ அணைந்து போய் காமத்தீ மூண்டது.

''ஆடவர்கள் விரும்பும் புயல் ஒன்று இருக்கிறது. அது எது தெரியுமா?'' என்று கேட்டான் சுலைமான்.

அவனது கவலைகள் வேறு திசைக்கு ஓடிவிட்டன என்பதை உணர்ந்து கொண்ட அவள் தனது கைகளை முன்பக்கத்தில் கொண்டு வந்து அழுத்தி ''எது?'' என்றாள் போதைக் கண்களுடன்.

''இதுதான்'' என்றான் அதைச் சுட்டிக்காட்டியபடி. அவள் ஒரு தினுசாக அசைந்தாள்.

''நீங்கள் உருவாக்கும் இந்தக் கவர்ச்சிப் புயல் ஆடவர்களுக்கு எப்போதுமே பிடிக்கும். இப்புயலைக் கண்டு உன்மத்தம் கொள்வார்களே தவிர அஞ்சுவது இல்லை'' என்றான் சுலைமான் தனது தாடியைத் தடவிவிட்டபடி.

''இது போதுமா? இன்னும் வேண்டுமா?'' என்றபடி ஆடைகளை நெகிழ்த்தினாள் கருமோகினி.

''கடலில் புயல் வந்தால் போதும் போதும் என்பேன். உன் உடலில் புயல் வந்தால் போதாது போதாது என்பேன் கருமோகினி.''

''இன்னும் வேண்டுமா?''

''நிறைய நிறைய வேண்டும்.''

அவள் கொடுத்தாள். நிறையவே கொடுத்தாள். அவனோ பேராசைக்காரனாக இருந்து கேட்டபடியே இருந்தான். பிச்சைக்காரனைப் போல் அலையவும் தயங்கவில்லை. கடல் வாழ்க்கைநிலையில்லாதது. காம வாழ்க்கையும் நிலையில்லாதது. இருந்தாலும் எதை விட்டுக் கொடுப்பது என்று வரும்போது கடலைச் சொல்லலாமே தவிர காமத்தைச் சொல்ல முடியாது. கடலை விட அதிக அலைகளையும் ஆரவாரங்களையும், சுழல்களையும், சூறாவளிகளையும் கொண்டது காமம். கடல் கொண்ட நாடுகளை விட காமம் கொண்ட மனிதர்கள் அதிகம். இங்கே கொடுப்பவனும் வாங்குபவனும் காமச் சூறாவளிகளானதால் அந்த மாளிகை கிறுகிறுத்துப் போனது.

மறுநாளிலிருந்து சுலைமானும் சுறுசுறுப்பாகத் தன் பணிகளில் ஈடுபட்டான்.

இக்பாலும் தாவூத் கூறியபடி மாநக்காவரத்திற்கு வந்து வணிகக் கப்பல்களில் அராபிய ஒற்றர்களை ஏற்றியதோடு மட்டுமின்றி கப்பல் தலைவர்களிடம் உதயசந்திரனின் இருப்பிடத்தைப் பற்றி கவனம் செலுத்தும்படிச் சொன்னான். கண்காணிப்பு பணியிலும் 50 மரக்கலங்களை ஈடுபடுத்தினான்.

சுலைமான் திபெத்திய மன்னருக்குச் செல்வங்களைத் தேர்ந்தெடுப்பது, அவற்றைப் பெட்டிகளில் பாதுகாப்பாக வைத்து பூட்டுவது, கொண்டுபோகும் செல்வங்களின் பட்டியலை தயாரிப்பது, செல்வங்களைக் கொண்டு செல்லும் மரக்கலங்களை

சரிபார்ப்பது, பாதுகாப்பாகச் செல்லும் மரக்கலங்களில் இருந்த போர்க்கருவிகளை சோதிப்பது என்று முழு மூச்சாக இரவு பகல் பாராமல் ஈடுபட்டதைக் கண்ட தாவூத் மகிழ்ச்சியடைந்தான். அவனது பொறுப்புணர்ச்சியையும் சுறுசுறுப்பையும் கண்டு வியந்த தாவூத் ''வாழ்க்கையிலேயே இப்போதுதான் நீ உண்மையான அராபியனாக நடந்து கொள்கிறாய் சுலைமான். அராபியர் என்றால் சுறுசுறுப்பு என்று அர்த்தம் என்று நமது காலிப் அபூபக்கர் சொல்வார். அதை இப்போது தான் நிரூபிக்கிறாய். நபிகள் நாயகம் உச்சரித்த 'அல்-அமீன்' என்ற வார்த்தை உனக்கு இப்போது பொருந்தும். நீ இப்போது நம்பிக்கைக்கு உரியவன்'' என்றான்.

''உங்கள் நம்பிக்கைக்கும் பாராட்டிற்கும் என் நன்றி தலைவரே. இவை என் பணி ஈடேற உதவியாக இருக்கும்'' என்று சொன்ன சுலைமான் ''தலைவரே, அனேகமாக எனக்கு இது இறுதி யாத்திரையாகவே இருக்கும். பல நாடுகளை நம் வழிக்குக் கொண்டு வந்த சாதனையை விட திபெத் மன்னருக்கு இச்செல்வங்களைக் கொண்டு போய் சேர்ப்பதுதான் பெரிய சாதனை என்பது தங்களுக்கு தெரியாததல்ல. இந்த முறை என் முயற்சி வெற்றி பெறும். அதற்காக என் வாழ்க்கையை இப்பணிக்கு அர்ப்பணித்துக் கொள்கிறேன் தலைவரே. வாழ்வா சாவா என்ற இந்தப் பணிக்கு தங்களிடம் ஊதியம் கோரலாமா நான்?'' என்றான்.

''நீ கொண்டு செல்லும் செல்வங்களையே எடுத்துக் கொள் சுலைமான்.''

சுலைமான் அதிர்ந்தான். தனது திட்டம் அவனுக்குத் தெரிந்துவிட்டதோ என்று சந்தேகப்பட்டான். ஆனாலும் சுதாரித்துக் கொண்டு ''தலைவரே, எனக்குச் சில்லறை ஆசைகள் உண்டு. பேராசை இல்லை'' என்றான்.

''உனக்கான ஊதியம் உன் கப்பலுக்கு வரும். கவலைப்படாதே.''

சுலைமான் தனது பயண விவரங்கள், செல்வங்களின் பட்டியல்கள், மரக்கலங்களின் எண்ணிக்கை, பயணம் செய்யும் மாலுமிகள், பணியாளர் ஆகியோரது பெயர்கள் ஆகியவற்றை தாவூத்திடம் சமர்ப்பித்தான்.

அதை வாங்கிப் புரட்டிய தாவூத் ''இருபது அழகிகள் என்று போட்டிருக்கிறாயே போதுமா? இன்னும் இருபது பேரை அழைத்துக் கொள்'' என்றான்.

இரண்டு நாட்கள் கழித்து செல்வங்களைத் தாங்கிய கப்பல்கள் இரண்டும் பாதுகாப்பு மரக்கலங்கள் முப்பதும் மாநக்காவரத்தின் வடமுனைத் தீவான மலர்த் தீவிலிருந்து புறப்பட்டன.

மாநக்காவரத்தின் வடகோடித் தீவான மலர்த் தீவிலிருந்து சுலைமான் மரக்கலங்களோடு மட்டும் புறப்படவில்லை. மனக் கோட்டைகளோடும் புறப்பட்டான். அந்த மனக்கோட்டையை எழுப்பித் தந்தவள் கருமோகினி. எந்தப் பயணமானது எமன் கோட்டையை நோக்கிச் செல்வதற்கு ஒப்பானது என்று கருதப்பட்டு வந்ததோ அந்தப் பயணம் தனது கனவை நனவாக்கி தனிக்காட்டு ராஜாவாக மாற்றப் போகிறது என்று எண்ணிப் பார்த்து களிப்புற்ற சுலைமான் அதற்குக் காரணமான கருமோகினியை அழைத்து கறுப்பான கன்னங்களை ஆசையோடு கடித்தான்.

''கடிப்பது இருக்கட்டும். நடக்க வேண்டிய காரியங்களை கவனியுங்கள். நாம் இதுவரை கனவு தான் கண்டிருக்கிறோம். திட்டம் தீட்டவில்லை'' என்று அவனுக்கு நினைவூட்டினாள் கருமோகினி.

''திட்டத் தலைவியே நீ தானே கருமோகினி? நீ தான் மீதி திட்டத்தையும் தீட்டித் தரவேண்டும்?'' என்று சொல்லி தனது உதடுகளை வேறு இடத்திற்குக் கொண்டு போனான்.

அவள் அவனது உதடுகளை நீக்கிவிட்டு, ''எல்லாவற்றையும் நானே கவனிப்பதாக இருந்தால் நீங்கள் எதற்கு?'' என்று வினவினாள்.

''கருமோகினி! நீ வேறு நான் வேறு என்று ஏன் எண்ணுகிறாய்? இந்தச் செல்வங்களை வைத்து படைக்கப் போகும் சாம்ராஜ்யத்திற்கு நீ தானே ராணி? திட்டத்தை நீ தீட்டினால் என்ன நான் தீட்டினால் என்ன?'' என்று கேட்டுவிட்டு அவளைக் கட்டிப்பிடித்து இறுக்கினான்.

''உங்கள் கடல் பயண வழி எப்படி?'' என்று கேட்டாள் கருமோகினி.

''இங்கிருந்து வடகிழக்கே சென்றால் இரண்டு வார காலத்தில் சியாம் நாட்டின் கடற்கரை பட்டிணமான லவபுரியை அடைவதோடு கடல்பயணம் முடிந்துவிடும்'' என்று சொல்லி வரைபடத்தைக் காட்டி, ''லவபுரிக்குச் சென்றுவிட்டால் அங்கிருந்து தரைவழிப் பயணம் தொடங்கும். மிகவும் ஆபத்தான உத்திரவாதமில்லாத பயணம் அது. சியாம் நாட்டைச் சேர்ந்த வணிகர்கள் மற்றும் தரகர்கள் உதவியோடு இச் செல்வங்களை நாம்

கொண்டு போக வேண்டும். போதுமான பாதுகாப்பு வீரர்கள் நம்மோடு வருவார்கள். லவபுரியில் நம்மை இறக்கிவிட்ட பின் மரக்கலங்கள் மாநக்காவரத்திற்குத் திரும்பி விடும். தேவைப் பட்டால் லவபுரியில் வணிகப் பொருட்களை ஏற்றிக் கொண்டும் செல்லும்'' என்றான்.

''நீங்கள் திபெத்திற்குச் செல்வதென்றால் தானே இந்தப் பயணம்?''

''ஆமாம்.''

''நாம் தான் அங்கே போகப்போவதில்லையே.''

''அதனால்?''

''வரைபடத்தைப் பாருங்கள். லவபுரிக்கு நாம் செல்ல வேண்டாம். நேர் வடக்கில் இருக்கும் துவாரநதி துறைமுகத்தை அடைவோம். அது பாரத நாட்டிற்கும் சியாம் நாட்டிற்கும் இடைப்பட்ட பகுதி. அங்கே நமக்கேற்ற பகுதியில் நம் இருப்பிடத்தை அமைத்துக் கொண்டு கனவுகளை நனவாக்குவோம்.''

கருமோகினியின் கருத்து சரியாகவே இருந்தது.

''திட்டம் சரிதான் கருமோகினி. அதற்குமுன் மாலுமிகளை நமது திட்டத்திற்குச் சம்மதிக்கச் செய்ய வேண்டுமே! அவர்கள் ஒப்புக் கொள்ளாவிட்டால்?''

''பேசிப் பாருங்களேன்.''

பேசிப் பார்த்தான் சுலைமான்.

ஆனால் எந்த மாலுமியும் ஒப்புக் கொள்ளவில்லை.

☆☆☆



94

கருங்காலிகள்

''என் திட்டத்திற்கு நீங்களெல்லாம் ஒப்புக் கொள்ளாததற்கு என்ன காரணம்?'' என்று மாலுமிகளை நோக்கிக் கேட்டான் சுலைமான்.

''இது திட்டமல்ல சதி. துரோகம். ஆகவே தான் இதற்கு ஒப்புக் கொள்ள மறுக்கிறோம்'' என்றான் வாலிப மாலுமியாக இருந்த ஜமாலுதீன்.

''இதைத் துரோகம் என்று எப்படிச் சொல்கிறாய்?'' கேட்டான் சுலைமான்.

''தலைவர் தாவூத் பணித்த காரியத்திற்கு நேர்மாறானதாக இருக்கிறது உங்கள் திட்டம். திபெத் மன்னருக்குப் போய்ச் சேரவேண்டிய செல்வங்களை அபகரிக்கப் பார்க்கிறீர்கள். இது துரோகமல்லவா?''

''ஜமாலுதீன்! இந்த திட்டத்தால் ஆதாயப்படப் போவது நானல்ல. நாம்.''

''அதாவது செல்வக் குவியலை எல்லோருமாகப் பங்கு போட்டுக் கொள்ளலாம் என்கிறீர்களா?''

''ஆமாம். இதில் ஒவ்வொருவருக்கும் கிடைக்கும் பங்கு மிகவும் பெரியது. வாழ்நாளில் கிடைக்க முடியாதது.''

''அத்தகைய பங்கு எங்களுக்கு வேண்டியதில்லை.''

''ஜமாலுதீன்! இங்கே நான் தளபதி. மரக்கலங்களின் தலைவன். தலைவனின் கட்டளையை மீற இங்கே யாருக்கும் உரிமையில்லை. இது தெரியுமா உனக்கு?''

''நல்லவிதமான - நியாயமான கட்டளைகளுக்குத்தான் மாலுமிகள் பணிவார்கள். துரோகத்திற்கு அடிபணிய மாட்டார்கள்.''

இச்சமயத்தில் குறுக்கிட்ட கருமோகினி, ''தலைவரே! அவர்கள் சொல்வதில் நியாயம் இருப்பதை கவனியுங்கள்.

அவர்கள் விசுவாசம் மிகுந்தவர்கள். அதை நீங்கள் மதிப்பதுதான் உங்களுக்கு நல்லது'' என்று கூறி, ''நீங்களெல்லாம் செல்லுங்கள். இது பற்றிய பேச்சு இத்துடன் நிற்கட்டும்'' என்றதும் மாலுமிகள் கலைந்து சென்றார்கள்.

''இதென்ன கருமோகினி நீயே விஷயத்தைக் கெடுத்து விட்டாய்?'' என்று கேட்டான் சுலைமான்.

''உங்களுக்கு அறிவே இல்லை'' என்று கூறிவிட்டு அகன்றாள் கருமோகினி.

அன்றிரவு மாலுமி ஜமாலுதீன் இருந்த மரக்கலத்திற்குச் சென்றாள். அவள் சுலைமானின் ஆசைநாயகி என்பது மாலுமிகளுக்குத் தெரியுமென்றாலும் அவளது செழிப்பான கட்டழகு அவர்களை மலைக்க வைக்கும். தற்போதும் அவளைக் கண்டதும் மாலுமிகள் மதிமயங்கவே செய்தார்கள். அவர்களோடு யாருடனும் பேசாமல் மரக்கல தளத்திலேயே சாய்ந்து நின்று கடலை நோக்கினாள். நூலேணி மூலம் இறங்கியும் ஏறியும் வந்திருந்தாளாதலால் இடுப்பு வரை அவளது ஆடைகள் நனைந்திருந்தன. இடுப்புக்கு மேலே நனையவில்லை என்றாலும் உள்ளதை வெளிப்படுத்துவதில் எந்த வித்தியாசமும் இல்லாமல் இருந்தது. இப்படியொரு அபாயகரமான கவர்ச்சியில் அர்த்த ராத்திரியில் அந்த மரக்கலத்திற்கு ஏன் வந்தாள் என்பது மாலுமிகளுக்கு விளங்கவில்லை. அவளை நெருங்கிச் சென்று கேட்பதற்கு விருப்பமாக இருந்தாலும் நெருங்கிச் சென்றால் நொறுங்கிவிட்டால் என்னாவது என்ற அச்சமும் இருந்ததால் தயங்கியபடி இருந்தார்கள். அவளோ அவர்களது தயக்கத்தை அறிந்தாலும் கவலைப்படாமல் தளத்திலேயே படுத்தாள். அவளது அந்த செய்கை அவர்களை உன்மத்தம் கொள்ள வைத்தது. ஒரு சிலருக்கு அசட்டு தைரியமும் உண்டானதால் அவளை நெருங்கி ''உங்களுக்கு ஏதாவது தேவையா?'' என்று கேட்டார்கள்.

அவள் எதுவுமில்லை என்று தலையை ஆட்டிவிட்டதால் மேற்கொண்டு பேச வாய்ப்பில்லாமல் போய்விட்டதால் செய்வதறியாமல் நின்றார்கள்.

அவள், ''உட்காருங்கள்'' என்றாள் அவர்களிடம். ஆனால் படுத்துக் கொண்டேதான் இருந்தாள்.

நான்கு மாலுமிகளும் பரம சந்தோஷத்துடன் அமர்ந்து கொண்டதும் ஒருக்களித்து படுத்துக் கொண்ட அவள், ''என்ன வேண்டும்?'' என்று கேட்டாள்.

நால்வரது மனமும் 'நீ தான் வேண்டும்' என்று நினைத்தன. பேசமுடியவில்லை.

''இந்த கப்பலுக்கு ஏன் வந்தீர்கள் அம்மணி!'' என்று கேட்டான் ஒரு மாலுமி.

அவளே, ''வரக் கூடாதென்றால் போய்விடுகிறேன்'' என்றாள்.

''ஐயோ! உங்களுக்கில்லாத உரிமையா? நீங்கள் வேறு, தளபதி வேறு என்ற வித்தியாசம் எங்களுக்கில்லை'' என்றான் மாலுமி.

''வித்தியாசமில்லாமல் போனால் போகட்டும். தளபதியிடம் உங்களுக்கெல்லாம் மரியாதை இருக்கிறதா?'' என்று கேட்டு மீண்டும் மல்லாந்து படுத்தாள்.

இவள் ஏன் எங்களை அவஸ்தை படுத்துகிறாள் என்று உள்ளுக்குள் கேட்டுக் கொண்ட அவர்கள், ''அவரை நாங்கள் மதிப்பவர்கள்தான் அம்மணி'' என்றார்கள்.

''பொய்'' என்றாள் கருமோகினி.

''பொய்யில்லை அம்மணி. நாங்கள் சொல்வது உண்மை.''

''அவரை மதிப்பது உண்மையென்றால் காலையில் அவரை எதிர்த்து நின்றீர்களே அது ஏன்?''

''அவரது திட்டத்தை ஏற்பது எங்கள் கைகளில் இல்லை.''

''வேறு யார் கையில் இருக்கிறது?''

''எங்கள் தலைவரிடம்தான்.''

''தலைவரிடமா? யார் அவர்?''

''ஜமாலுதீன்.''

''அவரா? அப்படியென்றால் இங்கே இரண்டு தலைவர்களா?''

''இல்லை அம்மணி. சுலைமான் இந்தக் கப்பலுக்கும் பயணத்திற்கும் தளபதி. ஜமாலுதீன் மாலுமிகளான எங்களுக் கெல்லாம் தலைவர்.''

''எல்லா மாலுமிகளுக்குமா?''

''ஆமாம். இந்தப் பயணத்தில் கலந்து கொண்டிருக்கும் மாலுமிகளுக்கு அவர்தான் தலைவர்.''

''விசித்திரமாக இருக்கிறது. இரண்டு தலைவர்கள் இருந்தால் யார் யாரை கட்டுப்படுத்த முடியும்?''

''அம்மணி, இந்தப் பயணம் தற்காலிகமானது. இது சியாம் நாட்டு கடற்கரையோடு முடிந்துவிடும். அங்கிருந்து தளபதி பாதுகாவல் வீரர்களுடன் சென்றுவிடுவார். அதோடு அவருக்கும் எங்களுக்குமான உறவு அறுந்துவிடும். நாங்கள் ஜமாலுதீன் தலைமையில் மாநக்காவரத்திற்குத் திரும்புவோம். அவர் கட்டுப்பாட்டிலேயே இருப்போம். மீண்டும் ஒரு பயணமோ போரோ வரும்போது புதிய தளபதி வருவார். ஆனால் எங்கள் தலைவர் ஜமாலுதீன் தலைவராக நீடிப்பார். எங்களைப் பொறுத்தவரை அவர்தான் நிரந்தரத் தலைவர்.''

இந்த பதிலைக் கேட்டதும் யோசித்தாள் கருமோகினி. ''கருங்காலிகளாக மாறும் திட்டத்தை கடல் பயணம் தொடங்கிய பின் தீட்டிக் கொள்ளலாம் என்று சுலைமானுக்கு நான் யோசனை கூறியது சரியில்லை போலிருக்கிறதே! மாநக்காவரத்திலேயே திட்டம் தீட்டி மாலுமிகளை ஆசைகாட்டி சம்மதிக்க வைத்து கடல் பயணம் தொடங்குவதற்கு முன்பாகவே கருங்காலிகளாக மாற்றியிருக்க வேண்டுமோ? இப்போது முடியாது போலிருக்கிறதே! ஜமாலுதீனை எல்லா மாலுமிகளும் ஆதரித்து அவனைத் தங்கள் நிரந்தரத் தலைவனாகக் கருதும் பட்சத்திலும் துரோகம் செய்ய முடியாது என்று சொல்லும் பட்சத்திலும் அவர்களை எப்படிக் கருங்காலிகளாக மாற்றுவது? கருங்காலித் திட்டம் வெற்றி பெறவில்லை என்றால் கனவுகள் எப்படி பலிக்கும்?' என்றெல்லாம் எண்ணிக் கொண்ட அவள், ''நீங்கள் சொல்வ தெல்லாம் சரிதான். ஆனால் கடலில் இருக்கும் வரை சுலைமான் மட்டும் தான் தலைவர். அவர் இடும் ஆணை தான் பெரியது. அதை ஏற்க மறுத்தால் மரணதண்டனை அளிக்கும் உரிமை அவருக்கு உண்டு. இது தெரியாதா உங்களுக்கு?'' என்று மாலுமிகளிடம் கேட்டாள்.

''அது தெரியும் அம்மணி. ஆனால் ஜமாலுதீன் சொல்லாமல் எங்களால் எதுவும் செய்ய முடியாது.''

''ஜமாலுதீன் இருக்கட்டும். தளபதி சுலைமான் கூறிய திட்டம் உங்களுக்குப் பிடித்திருக்கிறதா இல்லையா?''

''அம்மணி, இந்த விஷயம் தலைவர் தாவூத்திற்குத் தெரிந்தால் எங்களைச் சித்திரவதை செய்வார்.''

''நீங்கள் என்ன பேசுகிறீர்கள்? தளபதி திட்டப்படி நாம் பாதை மாறி பயணம் செய்து பயண முடிவில் பங்கு போட்டுக் கொண்டு நம் வழியில் போகப் போகிறோமே தவிர தாவூத்திடமா நாம் போய்

நிற்கப் போகிறோம்? இல்லையே! அவர் எப்படி சித்திரவதை செய்ய முடியும்?''

''எங்களுக்கு பயமாய் இருக்கிறது.''

''பயத்தை விடுங்கள். ஜமாலுதீன் சொன்னால் ஒப்புக் கொள்வீர்கள் அல்லவா?''

''அவர் சொன்னால் சரி.''

''அவர் எங்கே இருக்கிறார்?''

''தலைவரின் அறையில்தான்.''

அதைக் கேட்டதும் எழுந்து கொண்ட கருமோகினி தலைவனின் அறையை நோக்கிச் சென்றாள்.

ஈர உடையில் அவள் அசைந்து அசைந்து சென்றதைக் கண்ட மாலுமிகளின் வாயில் எச்சில் ஊறியது.

அவர்களில் ஒரு மாலுமி, ''நமது மரக்கலத்தில்தான் நமக்கென்று இரண்டு அழகிகள் இருக்கிறார்களே! இவளை எண்ணி எதற்காக ஏங்க வேண்டும்?'' என்று கேட்டான்.

''அவர்களா அழகிகள்? அழுகிய முட்டைகள். கருமோகினிக்கு ஈடு கருமோகினிதான்'' என்றான் ஒரு மாலுமி.

''கருமோகினியோடு ஒரு நாள் போதும். பிறகு நான் உருக்குலைந்தாலும் கவலையில்லை'' என்றான் இன்னொருவன்.

''கருமோகினி தளபதிக்குச் சொந்தம் மாலுமி. மறந்து விடாதே.''

''கடல் யாருக்குச் சொந்தம்? உனக்கா? எனக்கா? அது போலத்தான் கருமோகினியும்.''

காம கிறக்கத்தில் மாலுமிகள் கண்டபடி பேசிக் கொண்டிருந்த அதே நேரத்தில் ஜமாலுதீன் இருந்த அறைக் கதவைத் தட்டினாள் கருமோகினி.

இரவில் தூங்கும் வழக்கமில்லாத ஜமாலுதீன் கதவைத் திறந்தான்.

கருமோகினியை அவன் எதிர்பார்க்கவில்லை.

''நீங்களா?'' என்றான் வியப்புடன்.

''உள்ளே வரலாமா? கூடாதா?'' என்றாள் கருமோகினி.

''இந்த நேரத்தில்...''

''வரலாமா? வேண்டாமா?''

''சரி. வாருங்கள்.''

உள்ளே நுழைந்த கருமோகினி, ''உன் நேர்மைக்கும் தைரியத்திற்கும் என் வாழ்த்துகள். இதைச் சொல்லத்தான் வந்தேன். தளபதி சுலைமான் வியந்து போனார் உங்கள் எதிர்ப்பைப் பார்த்து'' என்றாள் மயக்கும் குரலில்.

''வாழ்த்தும் அளவிற்கு இதில் எதுவுமில்லை. நான் நானாக நடந்து கொண்டேன். அவ்வளவுதான்'' என்றான் ஜமாலுதீன்.

''நூலேணியில் ஏறி வந்ததால் ஆடைகள் நனைந்துவிட்டன. இங்கே மாற்று ஆடைகள் ஏதாவது இருக்கிறதா?'' என்று கேட்டு ஈர ஆடைகளை களைய ஆரம்பித்தாள் கருமோகினி.

அறைக்குள் பந்தம் எரிந்து கொண்டிருந்ததால் எதிர்பாராமல் அவள் ஆடைகளை களைய முற்பட்டதைக் கண்டு திடுக்கிட்ட ஜமாலுதீன் அவசரம் அவசரமாக அங்கே இருந்த அழகிகள் கழற்றிப் போட்டிருந்த ஆடைகளை எடுத்து அவளிடம் நீட்டினான்.

அவனது அவசரத்தைக் கண்டு உள்ளுக்குள் சிரித்துக் கொண்ட கருமோகினி மிகவும் பக்குவமாக ஆடைகளை மாற்றுவது போல் நடித்தாள். மேலாடையைக் கழற்றியபோது மாற்றாடையை போட்டு மறைக்க வேண்டுமென்றே தாமதம் செய்ததால் அவளது மார்பகங்கள் இரண்டும் ஜமாலுதீனுக்குப் பூராவாகப் புலப்பட்டு விடவே அவனது உணர்ச்சிகள் சூடேறின.

'இதென்ன இவள் இப்படி?' என்று எண்ணித் தடுமாறிய அவன் திரும்பிக் கொண்டான்.

அவளோ, ''ஐயோ! வீரரே! பெண்களுக்கு முதுகைக் காட்டுவது வீரமா?'' என்று சீண்டினாள்.

அவன் சங்கடத்துடன் திரும்பி, ''அதெல்லாம் ஒன்றுமில்லை'' என்றான் அர்த்தமில்லாமல்.

''முதலில் உட்காருங்கள் வீரரே'' என்று சொல்லிவிட்டு அவனை ஆசனத்தில் உட்கார வைத்து விட்டு மரக்கட்டிலில் உட்கார்ந்த கருமோகினி, ''நீ சங்கடப்பட்டு நெளிவதும் அழகாகத்தான் இருக்கிறது'' என்றாள் தூண்டிலைப் போடுவது போல்.

''அப்படியெல்லாம் இல்லை'' என்று உண்மையாகவே மீனைப் போல் நெளிந்தான் ஜமாலுதீன்.

''நான் உன்னை ஒன்று கேட்கலாமா ஜமாலுதீன்?'' தூண்டிலை தண்ணீரில் இறக்குவது போல் கேட்டாள் கருமோகினி.

''கேளுங்களேன்'' என்றான் ஜமாலுதீன் ஒருவித தவிப்புடன்.

''தளபதியின் திட்டத்தை நீங்கள் நிராகரித்ததற்கு உங்கள் நேர்மை மட்டும்தான் காரணமா?''

''அதில் என்ன சந்தேகம் உங்களுக்கு?''

''சந்தேகமாகத்தான் இருக்கிறது.''

''என்ன சந்தேகம்?''

''அந்த திட்டம் உங்களிடமே இருந்திருக்கிறது. தளபதி முந்திக் கொண்டதால் அதை மறுத்து நேர்மையானவனைப் போல் நீ நடிக்கிறாய்.''

''இது அபாண்டம். பயங்கரமான குற்றச்சாட்டு. அப்படியொரு எண்ணம் எனக்கில்லை.''

''ஜமாலுதீன்! வாழ்க்கை உனக்குக் கசந்துவிட்டதா? அல்லது வாழ்க்கையே கசப்பானதுதான் என்று எண்ணுகிறாயா?''

''நான் ஏன் அப்படி எண்ண வேண்டும்?''

''உன்னைப் பார்த்தால் அப்படித்தான் தோன்றுகிறது.''

''ஏன் அப்படிச் சொல்கிறீர்கள்?''

''வாழ்க்கை என்பது நடைப்பாதையைப் போன்றது. வாய்ப்புகள் என்பது வண்டிகளைப் போன்றது. வாழ்க்கை கசப்பானது என்று நினைப்பவன் நடந்தே சென்று அல்லல்படுவான். வாழ்க்கை இன்பமானது என்று நினைப்பவன் அந்த வண்டியில் ஏறி சுகமாகப் பயணம் செய்வான். உனக்கும் தளபதிக்கும் உள்ள வித்தியாசம் இதுதான். அவர் வாய்ப்பை பயன்படுத்த விரும்புகிறார். நீயோ புறக்கணிக்கிறாய். இதில் எது விவேகம்?''

''நீங்கள் சொல்வது எனக்கு வியப்பாக இருக்கிறது. வாய்ப்பை பயன்படுத்திக் கொள்வதாகச் சொல்லிக் கொண்டு துரோகம் செய்வது இழிவானது அல்லவா?''

''ஜமாலுதீன்! இங்கே இந்தக் கட்டிலில் வந்து உட்கார்ந்து கொள்ளேன். என்னால் உரக்கப் பேச முடியவில்லை'' என்று தூண்டிலை ஆட்டினாள் கருமோகினி.

அவனும் அவளுக்குப் பக்கத்தில் வந்து அமர்ந்து கொண்டான். அவனது கைகளை எடுத்து தன் மடியில் வைத்துக் கொண்ட அவள், ''ஜமாலுதீன்! துரோகம், வஞ்சகம், பொறாமை, பேராசை - இதெல்லாம் வாழ்க்கையில் அர்த்தமில்லாத வார்த்தைகள்.

வாழ்க்கை இன்பமயமானது. துன்பத் தடைகளை நாமே போட்டுவிட்டு வாழ்க்கை துன்பமாகிவிட்டது என்று முட்டாள்தனமாக கத்துகிறோம்'' என்று சொல்லி அவனது மடியில் சாய்ந்தாள்.

அவனது நிலை சொல்லும் தரத்தில் இல்லை. அவனது மடி சூடாகிப் போயிற்று, அவளது சாய்ந்துவிட்ட மேனியைத் தாங்கவும் முடியாமல் தள்ளிவிடவும் முடியாமல் தத்தளித்தான். உணர்ச்சிகள் கொந்தளித்ததால் உடனே பேச முடியவில்லை.

''பதில் சொல் ஜமாலுதீன். நான் சொல்வது சரியா? தவறா?'' என்று கேட்டு தலையை அவனது மடியில் உருட்டினாள்.

''என்னை நம்பி அனுப்பியிருக்கிறார் தலைவர். அதை நான் எப்படி கெடுக்க முடியும்?'' என்றான் அவன் பலவீனமான நிலையில்.

''தலைவர் என்று யாரைச் சொல்கிறாய் தாவூத்தையா?'' என்று கேட்டவள் அவனது மடியில் ஏதோ விஷமம் செய்ததால் அவன் நெளிந்தான்.

''ஆமாம்'' என்றான் தன்னிலையைக் கொஞ்சம் கொஞ்சமாக இழந்தவனாய்.

''ஜமாலுதீன்! நன்றாக யோசித்துப் பார். தலைவர் தலைவர் என்று தாவூத்தை தலைமீது வைத்துக் கொண்டாடுகிறீர்களே அந்த தாவூத் என்ன தர்மத்தின் தலைவனா? மாநக்காவரத்திற்கு அவன் எதற்கு வந்தான்? தர்ம காரியத்தைச் செய்வதற்கா? இல்லை ஜமாலுதீன். அவன் வந்ததும் செய்வதும் தர்மத்திற்கும் நியாயத்திற்கும் புறம்பான காரியங்கள். இந்தப் பூர்வக் கடலில் வாணிபம் செய்து கொண்டிருந்த பல்வேறு நாட்டு மரக் கலங்களுக்கு தடை விதிக்கவும் தரகம் செய்யவும் தாவூத் யார்? இக்கடலுக்கு இவனா அதிபதி? எங்கோ இருக்கும் அராபிய நாட்டில் வசிக்கும் ஒருவனுக்குப் பூர்வக் கடலில் எங்கிருந்து வந்தது இந்த உரிமை? இல்லாத உரிமையை எடுத்துக் கொண்டு செல்வங்களைக் குவித்து கொழித்துக் கொண்டிருக்கிறான். அவன் சேர்க்கும் செல்வமே தர்மத்திற்குப் புறம்பானது. அதில் ஒரு பகுதியை அவனது பங்காளிக்கு அனுப்பியிருக்கிறான் அவன். இதை திபெத்திய மன்னன் பெறுவதைவிட காலம் காலமாக தாவூத்திற்கும் அரபு நாட்டிற்கும் உழைத்த நீங்கள் பெறுவது யாருக்குச் செய்யும் துரோகம்?'' என்று கேட்ட அவள் அவனது மடியில் இருந்த தனது தலையை எடுத்துக் கொண்டு கையை வைத்தாள்.

துடித்தான் ஜமாலுதீன். பேச்சு வரவில்லை. மூச்சும் நின்றுவிடும் போலிருந்தது.

''நீ மேலும் மேலும் நேர்மையோடு தாவூத்திற்குப் பணி செய்வதால் உனக்கு என்ன கிடைக்கப் போகிறது? உனக்குத் தலைவன் பதவி கிடைக்குமா? எப்போது கிடைக்கும்? கிடைத்தாலும் பொறுப்புகள் கூடுமே தவிர செல்வம் கூடுமா? அராபியர் நிலை நிலையானது அல்ல. தாவூத்தின் நிலையும் தற்போது அதுதான். தற்காலிகமானதுதான். அலை அவனை அடித்துச் செல்லும்போது நீயும் மூழ்கித்தான் போவாய். இதுதான் உன் வாழ்வா? இதற்குத்தான் நீ வாழ்கிறாயா?''

''உண்மைதான் கருமோகினி'' என்றான் ஜமாலுதீன். தன்னை முழுவதுமாக இழந்து உணர்ச்சிகளில் ஆழ்ந்து விட்டிருந்தான். அதோடு அவளது விரல்கள் இருந்த இடம் அவனை வெறிக்கு ஆளாக்கிக் கொண்டிருந்தது.

சடாரென்று எழுந்து கொண்ட அவள் ''இந்தத் திட்டத்தை தளபதிக்கு பதில் நீ தலைமை தாங்கி நடத்தினாலும் எனக்குச் சம்மதம்தான். மாலுமிகள் எல்லோரும் உன் பக்கத்தில் இருக்கிறார்கள்'' என்றாள்.

அவனோ ''நீ ஏன் எழுந்துவிட்டாய்?'' என்று கேட்டான்.

''ஜமாலுதீன்! நான் சுலைமானுக்குச் சொந்தமானவள்'' என்றாள்.

''இல்லை. நீ எனக்குச் சொந்தமானவள். உன்னை விட மாட்டேன்'' என்று சொல்லி வெறியோடு அவளை இறுக அணைத்தான் ஜமாலுதீன்.

அவனிடமிருந்து விடுவித்துக் கொண்ட அவள் ''அவசரப் படாதீர்கள். நீங்கள் இந்தத் திட்டத்திற்குத் தலைமை தாங்கத் தயாராக இருந்தால் அதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்'' என்றாள்.

''என்ன ஏற்பாடுகள்?''

''தளபதியை சரிகட்ட வேண்டும். அவரது திட்டத்திற்கு நீ ஒப்புக் கொண்டதாக நாடகமாட வேண்டும். பயண திசையை மாற்ற வேண்டும். நேரம் பார்த்து தளபதியை விஷம் வைத்துக் கொல்ல வேண்டும்.''

''மிகச் சரியான திட்டம். ஆனால் ஒன்று.''

''என்ன?''

''நாளை நீ எனக்கு விருந்து படைக்க வேண்டும்.''

''என்ன விருந்து?''

''கருமோகினி. இங்கிருந்து போய்விடு. இல்லையென்றால் நான் உன்னை அடைந்து கொன்றும் போடுவேன்.''

''வேண்டாம். வேண்டாம். நாம் சாக வேண்டாம். சுகமாக வாழலாம். சொர்க்கங்களைக் காணலாம்.''

''நாளை நள்ளிரவு நீ இங்கே இருக்க வேண்டும்.''

''கவலை வேண்டாம்.''

கருமோகினி போனாள்.

ஆனால் -

மறுநாள் அவனிடம் வரவில்லை.

ஜமாலுதீனே அவள் இருந்த மரக்கலத்திற்குச் சென்றான்.

கருமோகினியும் சுலைமானும் இருந்த அறைக் கதவைத் தட்டினான்.

☆☆☆



95

முயாரக்

கதவைத் திறந்தான் சுலைமான்.

வெளியே ஜமாலுதீன் நின்றிருந்ததைக் கண்டதும் ''என்ன?'' என்றான்.

''உள்ளே யாராவது இருக்கிறார்களா?'' என்று கேட்டான் ஜமாலுதீன்.

''என் அறையில் யார் இருந்தால் உனக்கென்ன? உன்னைப் பார்ப்பதற்காகத்தான் உன் மரக்கலத்திற்குப் போயிருக்கிறாள். போ'' என்றான் சுலைமான்.

''அங்கே வரவில்லை. அங்கிருந்து தான் வருகிறேன்.''

''நீ புறப்பட்டு வந்த பின் அங்கே சென்றிருப்பாள். உனக்குச் சந்தேகமிருந்தால் உள்ளே வந்து பார்த்துக் கொள்.''

ஜமாலுதீனுக்குச் சந்தேகம் தீராததால் அறைக்குள் நுழைந்தான்.

அங்கே மறைந்திருந்த கருமோகினி ஜமாலுதீனை தலையில் கட்டையால் ஓங்கி அடித்தாள். மண்டை உடைந்து கீழே விழுந்தான் அவன்.

அதேசமயம் கடலில் கிழக்கு திசையில் பலத்த ஓசை கேட்டது. கருமோகினியும் சுலைமானும் குரல் வந்த திசையை நோக்கியபோது அங்கே எரிமலை வெடித்தது போல தீச்சுவாலைகள் பெரிதாகக் காணப்பட்டன.

கடலுக்குள் இருந்த எரிமலைதான் தீச்சுவாலை கிளப்புகிறதோ என்று நினைத்தான் சுலைமான். ஆனால் அது தவறு என்பதை உணர்த்தும் விதத்தில் தீச்சுவாலையானது சுலைமான் இருந்த மரக்கலத்தை நோக்கி நகர்ந்து வந்து கொண்டிருந்தது. தனது மரக்கலங்களை நோக்கி வருவது எரிமலையல்ல மரக்கலம் தான் என்றும் தனக்குத் தானே கொளுத்திக் கொண்டு வருகிறது என்றும் புரிந்து கொண்ட சுலைமான் ஒருகணம் அதிர்ச்சியடைந்தாலும்

மறுகணம் சுதாரித்துக் கொண்டு கொம்பொன்றை எடுத்து ஊதியதும் எல்லா மரக்கலங்களிலும் இருந்த மாலுமிகள் தளத்திற்கு வந்தார்கள். தீச்சுவாலையைக் கண்டார்கள்.

''மரக்கலங்களில் இருக்கும் பாய்களை இறக்கி வையுங்கள். சீக்கிரம்'' என்று உரக்கக் கத்தினான் சுலைமான்.

மாலுமிகள் அவன் எதற்காக அவ்வாறு கூறுகிறான் என்பதற்கான காரணத்தை உணர்ந்து கொண்டு பாய்மரங்களை வேகமாக இறக்க முற்பட்டார்கள்.

அதே சமயம் தீச்சுவாலையாக வந்து கொண்டிருந்த மரக்கலம் மிக வேகமாக வந்து சுலைமானின் மரக்கலங்களின் மீது கண்மூடித்தனமாக மோதியது. ஏற்கெனவே அந்த மரக்கலம் எரிந்து கொண்டிருந்ததால் மோதியதுமே வெடித்துச் சிதறியது. சிதறிய மரக்கல பாகங்கள் தீப்பற்றியிருந்த நிலையில் நான்கைந்து மரக்கலங்களின் மீது துண்டு துண்டுகளாக விழுந்ததால் சுலைமானின் அந்த மரக்கலங்களும் தீப்பற்றிக் கொண்டன. அதைக் கண்டதும் மாலுமிகள் தீயை அணைக்கும் முயற்சியில் ஈடுபட்டார்கள்.

இந்நிலையில் மேலும் இரண்டு மரக்கலங்கள் பற்ற வைத்துக் கொண்டு சுலைமானின் கப்பல் படையின் இரு பக்கங்களிலும் வந்து மோதி வெடித்ததால் தீத்துண்டுகள் பரவலாக விழுந்து மரக்கலங்கள் பலவற்றில் தீப்பிடிக்கச் செய்தன.

அதோடு பதினைந்து மரக்கலங்கள் அந்த தீச்சுவாலை மரக்கலங்களையடுத்து முன்னேறி வந்தன. அந்த மரக் கலங்களிலிருந்து தீயம்புகளும் விஷ அம்புகளும் விர்விர்ரென்று பறந்து வந்தன.

இதே சமயத்தில் சுலைமானும் சும்மாயிருக்கவில்லை. எதிரியின் மூன்று மரக்கலங்கள் தீச்சுவாலையோடு வந்து மோதிய போதே அவற்றின் நோக்கம் தனது மரக்கலங்களுக்குத் தீயைப் பரவச் செய்து அழிப்பதுதான் என்பதை உணர்ந்து கொண்டு தீயை அணைக்குமாறு உத்தரவிட்டான். ஆனால் கடற்காற்று அவனது மரக்கலங்கள் செல்லும் திசையை நோக்கியே வீசியதால் பற்றிக் கொண்ட தீ பெரிதாயிற்றே தவிர குறையவில்லை.

அந்த மரக்கலங்களை அவற்றில் இருக்கும் மாலுமிகள் கவனித்துக் கொள்ளட்டும் என்று விட்டுவிட்ட சுலைமான் தன்னைத் தாக்க வந்த மரக்கலங்களின் மீது அம்புகளையும்

தீவாளிகளையும் எய்யத் தொடங்கினான். எதிரியின் மரக்கலங்கள் மூன்று இவற்றைச் சட்டை செய்யாமல் வேகமாக முன்னேறின. அவற்றில் பாய் மரத் துண்டுடன் இணைக்கப்பட்டிருந்த மரப்பலகை அவிழ்த்துவிடப் பட்டதால் அப்பலகை சுலைமான் மரக்கலங்களின் மீது பாலம் போல் விழுந்தது. வீரர்கள் அதன் மூலம் சுலைமான் மரக்கலங்களுக்கு வந்து அவற்றிலிருந்து மாலுமிகளை வெட்டிப் போட்டார்கள். அராபியர்களும் பதிலுக்குச் சண்டையிட்டாலும் எதிரி மரக்கலங்களில் இருந்து வந்தவர்கள் மின்னல் வேகப் போர்க்கலையைப் பயின்ற சீனர்களாதலால் அராபிய மாலுமிகளை இமைக்கும் நேரத்தில் வெட்டி வீழ்த்திவிட்டு மரக்கலங்களைப் பற்ற வைத்து விட்டு தங்கள் மரக்கலங்களுக்கு மீண்டார்கள். மரப்பாலத்தை இழுத்துக் கொண்டு நகர்ந்தார்கள். அவர்கள் பற்ற வைத்த மரக்கலங்கள் மூன்றும் எரியத் தொடங்கின.

எதிரியின் வேகத்தாக்குதலைக் கண்டு சுலைமான் திகைத்தான். அவனது இரண்டு மரக்கலங்கள் துரிதமாக முன்னேறி எதிரி மரக்கலங்களின் மீது கொக்கிகளைப் போட்டு இழுத்தபோது அந்த மரக்கலங்களின் அடிப்பாகத்திலிருந்து இரும்புச் சலாகைகள் வெளிப்பட்டன. கொக்கிகளை வீசி இழுத்த அராபியர் மரக்கலங்களின் அடிப்பாகத்தில் வேகமாகப் பாய்ந்ததால் அடிப்பாகம் பிளந்து மரக்கலங்கள் மூழ்கத் தொடங்கின. எதிரி கப்பல்கள் கொக்கிகளை அகற்றிவிட்டு இரும்புச் சலாகைகளை உள்ளே இழுத்து கொண்டு நகர்ந்தன.

இந்தப் போர் முறையை எதிரிகள் சுலைமானின் கடற்படையின் மீது நான்கு புறங்களிலும் பின்பற்றினார்கள். இதனால் பல மரக்கலங்கள் தீக்கிரையாகின. சில மரக்கலங்கள் அடிப்பாகம் பிளக்கப்பட்டதால் மூழ்கின. போர் தொடங்கி ஒரு நாழிகை கழிந்த நிலையில் அராபியர் தரப்பில் பொக்கிஷ மரக்கலங்கள் இரண்டும் பாதுகாப்பு மரக்கலங்கள் எட்டும் தான் மிஞ்சியிருந்தன.

எதிரியின் தரப்பிலோ தீக்கிரையான மூன்று மரக் கலங்களைத் தவிர மற்றுமொரு மரக்கலமும் சேதமாகிவிடவே பதினான்கு மரக்கலங்கள் மிஞ்சின. அந்த நிலையில் மேலும் போரை மும்முரப்படுத்தினான் எதிரி.

அதைக்கண்ட கருமோகினி சுலைமானைப் பார்த்து, ''நமது திட்டமெல்லாம் குலைந்துவிட்டன. யார் அந்த எதிரி?'' என்று

கேட்டுவிட்டு, ''அதோ பாருங்கள். எதிரி மரக்கலங்களில் அராபியர் கொடி பறக்கிறது'' என்றாள்.

''ஏற்கெனவே நமது நான்கு மரக்கலங்களை அழித்த எதிரி மரக்கலங்களில் அராபியர் கொடிகள் தான் இருந்தன. அடுத்த முறை இக்பாலின் மரக்கலங்களை அழித்தபோதும் அராபியர் கொடிகள் தான் எதிரி கப்பல்களில் இருந்தன. வேறொரு முறை காவி நிறக் கொடிகள் இருந்தன. ஆகவே கொடிகளை வைத்து எதிரியை அடையாளம் காண முடியாது'' என்று கடுகடுத்தான் சுலைமான் வெறுப்புடன்.

அவன் காட்டிய வெறுப்பு பிடிக்காமல், ''அப்படியானால் யார் நம்மைத் தாக்குவது?'' என்று கோபத்துடன் கேட்டாள்.

''எதிரி யாராக இருந்தால் என்ன இப்போது? அவனை முறியடிக்க வேண்டியது தான் முக்கியம்'' என்று சீறினான் சுலைமான்.

''எதிரியை முறியடிப்பதா? நம்மிடம் எட்டு போர்க் கப்பல்கள்தான் இருக்கின்றன.''

''அது தெரியும் எனக்கு. உன் பேச்சைக் கேட்டுக் கொண்டு பொக்கிஷத்தைக் கொண்டு வந்தது எத்தனை முட்டாள்தனமாகப் போய்விட்டது? உன்னை இங்கேயே வெட்டிப் போட்டால் தான் என்ன?''

சுலைமானின் கோபத்தை அதிகரிப்பது தன் உயிருக்கு ஆபத்தாக முடிந்துவிடும் என்பதை உணர்ந்து கொண்டாள் கருமோகினி. தற்போதைய இக்கட்டான நிலைமைக்கு தான் காரணமல்ல, சுலைமானின் திறமையின்மைதான் காரணம் என்றாலும் அதைச் சுட்டிக்காட்ட இது நேரமில்லை என்பதும் அவளுக்குப் புரிந்ததோடு அவளுக்குள் புதியதொரு திட்டமும் தோன்றியது.

எனவே கோபத்தை அடக்கிக் கொண்டு சுலைமானை ஆறுதல் படுத்த முனைந்த கருமோகினி ''கோபப்படாதீர்கள் தளபதி. இப்போது நாம் பலவீனப்பட்டிருக்கிறோம். எதிரியிடம் இருக்கும் மரக்கலங்களின் எண்ணிக்கை அதிகம். அவனை நம்மால் முறியடிக்க முடியாது. அதோடு பொக்கிஷம் வேறு இருக்கிறது'' என்றாள்.

''அதனால் எதிரியிடம் சரணடைந்துவிடலாம் என்கிறாயா?''

''வேறு வழியில்லை தளபதி. போரைத் தொடர்ந்தால் நாம் உயிரோடு இருப்போம் என்று சொல்ல முடியாது. நாமும் போய் பொக்கிஷமும் போய்விடும்.''

''சரணடைந்தாலும் பொக்கிஷம் எதிரியிடம் போய் விடுமே?''

''ஆனால் உயிரோடு இருப்போம் அல்லவா? உயிரோடு இருக்கும் வரை பொக்கிஷத்தை நம்மால் மீட்க முடியும்?''

''எப்படி?''

''ஜமாலுதீனைக் கொல்ல முடிந்ததே எப்படி? அப்படி ஏதாவது திட்டம் தீட்ட முடியும். உயிரைக் காத்துக் கொள்ளாமல் எதையும் செய்ய முடியாது. நானிருக்கும் வரை உங்களுக்குக் கவலை வேண்டாம்.''

''உன்னால்தான் எனக்கு இந்த நிலை. உன் யோசனையைக் கேட்காமல் இருந்திருந்தால் இந்த பயணத்தை மேற் கொண்டிருக்க மாட்டேன். பொறுப்பைத் தட்டிக் கழித்துவிட்டு மாநக்காவரத்திலேயே சுகமாக இருந்திருப்பேன்.''

''ஏன் இப்படிப் பேசுகிறீர்கள்? நமக்கு ஆதாயமான திட்டம்தானே இது? ஜமாலுதீனும் மாலுமிகளும் திட்டத்தை எதிர்த்தபோது நான் அதை எப்படிச் சமாளித்தேன் என்பது உங்களுக்குத் தெரியாதா? எதிரி ஒருவன் இப்படி வருவான் என்பது யாருக்குத் தெரியும்? போர் என்று வந்தால் என்னால் என்ன செய்ய முடியும்? எனக்கென்ன தெரியும் சொல்லுங்கள்.''

சுலைமானுக்கு அவள் சொல்வது சரியென்று தான் தோன்றியது. எனவே போர் நிறுத்த தாரைகளை ஒலிக்கச் செய்தான்.

அதையடுத்து வேலைகள் சுறுசுறுப்பாக நடந்தன.

சுலைமான் உட்பட அனைவரும் கைது செய்யப்பட்டு விலங்கிடப்பட்டு இரண்டு மரக்கலங்களில் அடைக்கப் பட்டார்கள். மற்ற நான்கு மரக்கலங்களும் பொக்கிஷ கப்பல்களும் சிறைபடுத்தப்பட்டன.

அனைத்துக் கப்பல்களும் தென் கிழக்காக பயணப்பட்டன.

தனது நிலை குறித்து சுலைமானுக்கு கவலையாக இருந்தாலும் அவமானமாக இல்லை. ஏனென்றால் கடல் போரின் போது சிறை பிடிக்கப்படுபவர்கள் எப்படி நடத்தப்படுவார்கள் என்பது அவனுக்குத் தெரிந்திருந்தது. மாநக்காவரத்தில் இருந்தபோது அவனே பலரைச் சிறைப்பிடித்து விலங்கிட்டு தீவுக்குக் கொண்டு போய் பட்டினி போட்டு சாகடித்திருக்கிறான். பலரை சித்திரவதை செய்து கொன்றிருக்கிறான். எனவே சரணடைந்ததும் தன்னை விலங்கு போல கருதி கைகளில் விலங்கிட்டு மாலுமிகளோடு மாலுமிகளாக மூட்டையைப் போல

போட்டபோது அவன் வெட்கப்படவில்லை. திட்டம் குலைந்துவிட்டதே என்று வேதனைப்பட்டான்.

ஆனால் கருமோகினி கவலையும் பட்டாள். அவமானமாகவும் உணர்ந்தாள். மாநக்காவரத்தில் கறுப்பழகியாக ஆடையின்றிச் சுதந்திரமாகத் திரிந்து கொண்டிருந்த அவளை அராபியர்கள் தீவை ஆக்கிரமித்துக் கொண்டபோது சுலைமானின் கண்ணில் பட்டுச் சின்னாபின்னமானாள். ஆனால் அந்தக் கொடுமை அவளுக்கு மட்டுமின்றி தீவில் இருந்த எல்லா பெண்களுக்குமே நடந்தது. குரங்குகள் கையில் பட்ட பழச்செடிகளைப் போல பாழாய்ப் போனார்கள். அதேசமயம் பொதுச் சொத்து போல பலருக்கும் தன்னை ஆட்படுத்தாமல் தனக்கு மட்டும் என்று சுலைமான் தேர்ந்தெடுத்துக் கொண்டபோது அவளுக்கு ஆறுதலாக இருந்தது. அந்த வாய்ப்பைச் சரியாகப் பயன்படுத்திக் கொண்டு அவனது நம்பிக்கைக்குப் பாத்திரமானாள். பாத்திரம் எஜமானனை எப்படி பயன்படுத்திக் கொள்வது என்று யோசித்தது.

அந்த நிலையில்தான் சுலைமானை கருங்காலியாக மாறச் சொன்னாள் அவள். திபெத்திய மன்னருக்கு செல்வக் குவியல்களை எடுத்துச் செல்லும் பொறுப்பை தாஹூத் சுலைமானுக்கு கொடுத்தபோது அவனை உசுப்பிவிட்டாள் கருமோகினி. அவனோடு பயணப்பட்டு திட்டம் தீட்டி செல்வங்களைக் கவர்ந்து எங்கேயோ ஓரிடத்தில் ராணியாக வாழக் கனவு கண்டாள். நடுக்கடலில் எதிரி ஒருவன் தோன்றி அவளது கனவில் மண்ணைப் போட்டதும் பெருங்கவலையாக இருந்தது அவளுக்கு. சுலைமான் காமப் போரில் தான் கைதேர்ந்தவனே யன்றி கடல் போரில் அல்ல என்பதை அறிந்தபோது மண் குதிரையை நம்பி மோசம் போய்விட்டோமே என்று தோன்றியது. அது மட்டுமல்ல. ஜமாலுதீனுக்குப் பதிலாக சுலைமானைக் கொன்றிருந்தால் கடல்போரின் முடிவு வேறாக அமைந்திருக்குமோ என்றும் தோன்றியது.

ராணியைப் போல் வாழ நினைத்த அவளுக்கு அடிமையைப் போல விலங்கிட்டு மூட்டையைப் போல கிடத்தியிருந்த நிலை அவமானகரமானதாக இருந்தது. கறுப்பு திராட்சை என்றும் கவர்ச்சிப்புயல் என்றும் வர்ணிக்கப்பட்டவள் அழுக்கு மூட்டையைப் போல ஒடுக்கப்பட்டது அவளை வேதனைப்பட வைத்தது. அழகும் கவர்ச்சியும் பிரதான நிலையிலிருந்து விலகி ஓரம் கட்டப்பட்டுவிட்டதை அவளால் தாங்க முடியவில்லை. அதே சமயம் எதையும் செய்ய முடியவில்லை.

'எதிரிகள் சிறைப்பட்டவர்களை எங்கேயோ ஓரிடத்திற்குக் கொண்டு போன பிறகுதான் நிதானத்திற்கு வருவார்கள். மூட்டைகளாய் இருக்கும் கைதிகளை தனித்தனியாகப் பிரித்து அடையாளம் காண்பார்கள். அப்போது தான் என் அழகும் கவர்ச்சியும் புலப்படும். எதிரி காமுகனாக இருந்தால் தன்னை ஒரு கை பார்க்காமல் விடமாட்டான். அப்படி நடந்தால் நல்லதுதான். அவனை வலையில் வீழ்த்தி வருங்கால வளத்திற்கு வழி தேடிக் கொள்ள வேண்டியதுதான். அவனைக் கொண்டே பொக்கிஷத்தில் எதையாவது பெறலாம். மொத்தத்தில் கரைக்குப் போனதும் சுலைமானை கைகழுவிவிட்டுவிட வேண்டியது தான். திறமையற்ற அவனால் ஒரு பயனுமில்லை. அரிதான ஒரு வாய்ப்பை தவறவிட்டுவிட்ட அவன் எதற்கும் லாயக்கில்லை' என்று தாறுமாறாக எண்ணிக் கொண்டாள் கருமோகினி.

பத்து நாட்களுக்குப் பிறகு மரக்கலங்கள் கடற்கரை யொன்றில் நங்கூரமிட்டன. கைதிகள் கரைக்கு கொண்டு போகப்பட்டார்கள். கப்பலில் இருந்த அவதி கரையில் இல்லையென்றாலும் சுதந்திரம் என்பது கைதிகளுக்குச் சுத்தமாக இல்லை. தேவைகள் பூர்த்தியானதும் எல்லோருக்கும் கை விலங்கு போடப்பட்டன. வெட்டவெளியில் முள் வேலிக்குள் அடைக்கப்பட்டார்கள்.

இதற்கிடையில் வெற்றி கொண்ட மரக்கலத் தலைவனின் பெயர் முபாரக் என்பது முதலில் கைதிகளுக்குத் தெரிய வந்தது. முபாரக் என்பவன் ஈவு இரக்கமற்றவன் என்பதும் யாரையும் மதிக்காதவன் என்பதும் பிறகு தெரிந்தது. அதோடு கைதிகளை விடுவிப்பதோ மன்னிப்பதோ அவனது வழக்கமல்ல என்பதும் கையையோ காலையோ வெட்டிவிட்டு அடிமைகளாக விற்றுவிடுவது தான் வழக்கம் என்பதும் தெரிந்தன. அவனது கொடுமைகளைப் பற்றிய விவரங்கள் தான் வந்து கொண்டிருந்தனவேயன்றி நல்ல அம்சங்கள் எதுவும் வரவில்லை. கருமோகினி முபாரக்கின் குரூர தன்மைகளைப் பற்றிக் கவலைப்படவில்லை. தனது காமம் அவனது குரூரத்தை வென்றுவிடும் என்று இறுமாந்திருந்தாள். ஆனால் கடைசியாக வந்த தகவலில் முபாரக் பெண்களை அடியோடு வெறுப்பவன் என்ற செய்தி வந்தபோது இடி விழுந்த மாதிரி இருந்தது அவளுக்கு.

மூன்று நாட்கள் கழித்து பொக்கிஷ மரக்கலங்களுக்கு தலைவன் யார் என்று விசாரிக்கப்பட்டது. சுலைமான் தான் தான்

தலைவன் என்று அடையாளம் காட்டிக் கொண்டதும் முபாரக் அழைப்பதாகக் கூறி பணியாட்கள் அழைத்துச் சென்றார்கள்.

முபாரக் தனது உயரமான இடத்தில் கம்பீரமாக அமர்ந்திருந்தான். நீண்ட தாடியும் வீங்கிய மீசையும் அவனது முகத்தில் பாதியை அடைத்துக் கொண்டிருந்தன. சுலைமான் உள்ளே வந்ததும் அவனது கைவிலங்கு அகற்றப்பட்டது. முபாரக்கை நோக்கி இஸ்லாமிய முறையில் தலையைத் தாழ்த்தி வணக்கம் தெரிவித்தான்.

''நீங்கள் யார்?'' என்று கேட்டான்.

''உங்கள் இனத்தைச் சேர்ந்தவனை உன்னாலேயே அறிந்து கொள்ள முடியவில்லையா?'' என்று கேட்டான் முபாரக் கரகரத்த குரலில்.

''அராபியர் என்று தெரிகிறது.''

''வேறென்ன தெரிய வேண்டும்.''

''நானும் அராபியன் தான்.''

''அதுதான் தெரிகிறதே!''

''அராபியரை அராபியரே தாக்குவதும் சிறைபிடிப்பதும் நியாயம் தானா?''

இதைக் கேட்டதும் ''அரே! அல்லா'' என்று சொல்லி மேலே பார்த்த முபாரக் ''சுலைமான்! நமது முகமது மெக்காவிலே அவதரித்தார். ஹீரா குகைகளில் தவம் செய்தார். தன்னை உணர்ந்ததும் இறைதூதர் என்பதை அறிவித்தார். அரபு நாட்டவர் அனைவரும் அதை ஒப்புக் கொண்டார்களா? இல்லை. அவர் இஸ்லாம் மதத்தை உருவாக்கி சீரிய போதனைகளைச் செய்தார். எல்லோரும் ஏற்றுக் கொண்டார்களா? இல்லை. அதற்கெல்லாம் இருபத்து மூன்று ஆண்டுகள் பிடித்தன.* இறைதூதரான அவரது காலத்திலேயே அவரோடு பலரும் மாறுபட்டார்கள். எதிர்த்தார்கள். நாமெல்லாம் எந்த மூலைக்கு?'' என்றான்.

முகமது நபிகளைப் பற்றி தெளிவாகச் சொன்ன முபாரக்கை வியப்புடன் பார்த்த சுலைமான், ''அவருக்கும் உங்கள் நடவடிக்கைக்கும் என்ன சம்பந்தம்?'' என்று கேட்டான்.

''இதில் புரியாதது என்ன இருக்கிறது? நபிகள் காலத்திலேயே அராபியர் பிரிந்து நின்றபோது இப்போதைய அராபியர் பிரிந்து

* பக்கம் 9. 'தென்மேற்கு ஆசியா வரலாறு' - கா. அசதுல்லா

செயல்படக் கூடாதா? அதில் என்ன அநியாயத்தைக் கண்டுவிட்டாய் நீ?'' என்று கேட்டான் முபாரக்.

''அப்படியானால் நீங்கள் தாவூத்திற்கு எதிரியா?''

''யாரவன் தாவூத்? அவனுக்கும் எனக்கும் என்ன சம்பந்தம்? அவன் என் எதிரியுமல்ல. நண்பனுமல்ல.''

''எங்களைத் தாக்கியதற்கு காரணம்?''

''சுலைமான்! இந்தப் பூர்வக்கடல் எல்லோருக்கும் பொதுவானது. தாவூத் இதில் சொந்தம் கொண்டாடுகிறான். நானும் சொந்தம் கொண்டாடுகிறேன். அவரவர்களுக்கு கிடைப்பது அவரவர்களின் ஆதாயம். அவ்வளவுதான்.''

''நான் தாவூத்தின் உபதளபதி.''

''அதனால் என்ன?''

''அவரது கட்டளையின் பேரில் திபெத்திய மன்னருக்கு பரிசுப் பொருட்களைக் கொண்டு செல்கிறேன்.''

''இருக்கட்டும்.''

''நீங்கள் அதை அபகரித்திருக்கிறீர்கள்.''

''நீ பாதுகாத்து கொள்வதற்கென்ன? உன்னை யார் சரணடையச் சொன்னது?''

''இந்த விஷயம் தாவூத்திற்குத் தெரிந்தால் என்னாகும் தெரியுமா?''

''என்னாகும்?''

''விபரீத விளைவுகள் உண்டாகும்.''

''ஏற்கெனவே பொக்கிஷ கப்பல்களை கைப்பற்றி யிருக்கின்றேன். விபரீதம் எதுவும் நடக்கவில்லை.''

''அப்படியானால் இக்பால் கொண்டு சென்ற பொக்கிஷங்களைக் கைப்பற்றியது நீங்கள்தானா?''

''ஆமாம்.''

''அராபியர் கொடிகளை பறக்கவிட்டுக் கொண்டு தாக்குவது நீங்கள்தானா?''

''சுலைமான்! இதென்ன பைத்தியக்காரத்தனமான கேள்வி? அராபியனான நான் என் மரக்கலங்களில் சீன நாட்டுக் கொடிகளையா பறக்க விடுவேன்?''

''அப்படியென்றால் எங்களை இது வரை தாக்கியது?''

''இந்த கேள்வியை என்னிடம் ஏன் கேட்கிறாய்?''

''எங்களைத் தாக்கிய மரக்கலங்களில் அராபியர் கொடிகள் இருந்தன.''

''அது சரி.''

''எது?''

''அராபியர் மரக்கலங்களில் அராபியர் கொடிதான் இருக்கும்.''

''அப்படியானால் தாக்கியது நீங்கள்தானே?''

''அராபியர் கொடி பறக்கும் மரக்கலங்களில் எல்லாம் நாங்கள் இருக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை.''

முபாரக்கின் பதிலால் குழம்பிப் போன சுலைமான், ''நீங்கள் பேசுவது விளங்கவில்லை'' என்றான்.

''விளங்காமல் போனால் நஷ்டம் எதுவுமில்லை. அதோடு உன்னை நான் வரவழைத்தது உனக்கு விளக்கம் சொல்லிக் கொண்டிருப்பதற்காக இல்லை. நடந்த கதையைப் பேசுவதற்காகவும் இல்லை. நடக்க வேண்டியதைப் பற்றிப் பேசத்தான்'' என்றான் முபாரக்.

அச்சமயத்தில் உள்ளே நுழைந்த ஒற்றன் ''எஜமானரே! மாநக்காவரத்தில் உதயசந்திரன் பிடிபட்டு விட்டானாம்'' என்றான் பரபரப்புடன்.

☆☆☆



96

தூதுவன்

ஒற்றன் செய்தியைச் சொன்னதும் சுலைமானைப் பார்த்த முபாரக், ''சுலைமான்? யாரது உதயசந்திரன்? உன் மாநக்கா வரத்தில் பிடிபட்டுவிட்டானாமே?'' என்று கேட்டான்.

சுலைமானுக்கு மனம் ஒரு நிலையில் இல்லை. மாநக்கா வரத்தில் இருந்தபோது உதயசந்திரனை தேடிப்பிடிக்கும்படி தாவூத் ஆணையிட்டதையும், உதயசந்திரனின் கண்ணில் பட்டால் தன் கதி அதோகதியாகிவிடும் என்று பயந்து பொக்கிஷ கப்பல்களுடன் பயணம் செய்ய ஒப்புக் கொண்டதையும் நினைத்து பார்த்த சுலைமான் ஆபத்தான உதயசந்திரன் மாநக்காவரத்தில் பிடிபட்டுவிட்டான் என்பதை அறிந்து மகிழ்ச்சியடைந்தான்.

அதே சமயம் முபாரக்கிடம் பிடிபட்டு விட்டதால் தன்னை அண்டிய ஆபத்து நீங்கவில்லை என்பதை உணர்ந்து கவலையடைந்தான். முபாரக்கிடமிருந்து விடுதலை யடைந்தால் போதும் என்று கருதிய அவன் உதயசந்திரனைப் பற்றிச் சொன்னால் முபாரக் திருப்தியடைவான் என்று தீர்மானித்து, ''அவனா? மிகவும் ஆபத்தானவன். வஞ்சகன். நன்றி கெட்டவன். கொடியவன்'' என்றான்.

''அப்படியா? அவனோடு நீ பழகியதுண்டா?'' என்று கேட்டான் முபாரக்.

''அதனால்தான் அவனைப் பற்றிச் சொல்கிறேன். தாவூத்திடம் பிடிபட்டது நல்லதாய் போயிற்று. அவனுக்கு மரணம் மாநக்காவரத்தில் தான்'' என்று உற்சாகமாய் சொன்னான் சுலைமான்.

''அவன் நன்றி கெட்டவன் என்று எப்படிச் சொல்கிறாய்?''

''எனக்கே துரோகம் செய்தவன். என்னிடம் உதவியைப் பெற்றுக் கொண்டு ஒப்புக்கொண்ட பணியை செய்யாமல் கழுத்தறுத்தவன்.''

''என்ன பணியை அவனுக்குக் கொடுத்தாய்?''

''அது அது....''

''போகட்டும். என்ன பணியாய் இருந்தால் எனக்கென்ன? இப்போது நாம் நடக்க வேண்டியதைப் பற்றிப் பேசுவோம்.''

''நாம் இப்போது எங்கே இருக்கிறோம்?''

''மலைய நாட்டின் வடகோடியில் இருக்கும் தலைத்தக் கோலத்தில் இருக்கிறோம். இங்கிருந்து உன்னை ஸ்ரீவிஜயத்திற்கு அனுப்பப் போகிறேன்.''

''ஸ்ரீவிஜயத்திற்கா? எதற்கு?''

''ஸ்ரீவிஜயத்துடனான வாணிகத்தில் நீ பலவிதமான தில்லு முல்லுகளைச் செய்திருக்கிறாய். அதற்காக உன்னைத் தண்டிக்க விரும்புகிறார் அந்த நாட்டு அரசர். உன்னைக் கண்டுபிடித்து தன்னிடம் ஒப்படைக்கச் சொல்லியிருக்கிறார். ஆகவே உன்னை அவரிடம் ஒப்படைக்க முடிவு செய்துவிட்டேன்.''

''ஐயோ. அது மட்டும் வேண்டாம்.''

''ஏன்?''

''குற்றவாளிகளை கொதிக்கும் எண்ணையில் போடுவது தான் ஸ்ரீவிஜயத்தின் வழக்கம்.''

''அதற்கு நான் என்ன செய்ய முடியும்? அதோடு நானே கூட உனக்கு தண்டனை அளிக்க வேண்டியிருக்கிறது.''

''நான் செய்த குற்றம் என்ன?''

''முதலில் நான் கேட்கும் கேள்விகளுக்கு பதில் சொல். வசாகா யார்?''

இப்பெயரைக் கேட்டதும் சற்றே அதிர்ந்த சுலைமான் ''வசாகாவா? யார் அது?'' என்றான்.

''நான் கேட்டது உன்னை.''

''எனக்குத் தெரியாது.''

''கனிஷ்கரைத் தெரியுமா?''

''தெரியாது.''

''பெருஞ்சாத்தனை தெரியுமா?''

''தெரியாது.''

''குப்த ராஜ்யம்? குப்தரின் ராணுவம்? இவைகளாவது தெரியுமா?''

''எனக்கெப்படித் தெரியும்? நான் அராபியன்.''

''சுலைமான்! பொய்கள் பயன்படாது என்பதை உணர்ந்து கொள். வாதாபிச் சிறையிலிருந்து விடுபட்ட கனிஷ்கர் எல்லா விவரத்தையும் சொல்லிவிட்டார். அவருக்கும் உனக்கும் வசாகாவிற்கும் இருந்த தொடர்புகளைச் சொல்லிவிட்டார். அந்த பான் இனத்தைச் சேர்ந்த வசாகாவின் மகன் தான் உதயசந்திரன் என்கிறார். இது உண்மையா?''

''எனக்கெதுவும் தெரியாது.''

''சற்று முன்புதானே உதயசந்திரனைப் பற்றி எல்லாம் தெரிந்ததாகச் சொன்னாய்?''

''அது உண்மை. ஆனால், அவன் பிறப்பு ரகசியம் பற்றி எதுவும் தெரியாது.''

''தெரியாமலா அவனை பிறப்பு ரகசியம் பற்றி புதிரைப் போட்டு சாளுக்கிய நாட்டிற்கு அனுப்பினாய்?''

''இது எப்படி உங்களுக்குத் தெரியும்?''

''அயோக்கியனே! பல்லவ இளவரசரைக் கொல்வதற்காக உதயசந்திரனை பணித்தவன் நீ. அகமதுவையும் முகமதுவையும் அனுப்பியவன் நீ. சாளுக்கிய போரின் போது அது நடக்காததால் பல்லவர் படை காஞ்சிக்குத் திரும்பிக் கொண்டிருந்த இளவரசரை நீயும் பான் இனத்து துரோகிகளுமாகச் சேர்ந்து வேலை தீர்த்துவிட்டீர்கள். இப்படி மாபாதகம் செய்த உன்னை நான் காஞ்சியிலேயே தண்டித்திருக்க வேண்டும். தலையைத் துண்டித்திருக்க வேண்டும். அங்கே நீ கிடைக்கவில்லை. ஆனாலும் குற்றவாளிகள் தப்பித்து விடமுடியாது என்பதற்கு நீ உதாரணமாகிவிட்டாய். காஞ்சியில் கிடைக்காமல் போன நீ கடலில் சிக்கிவிட்டாய். இதுதான் விதி'' என்று சொன்ன முபாரக் பணியாளர்களைக் கூப்பிட்டு கட்டளையிட்டான்.

அடுத்த சில நிமிடங்களில் சுலைமான் அந்தரத்தில் கட்டித் தொடங்கவிடப்பட்டான். கைகளும் கால்களும் நன்றாக விரிக்கப்பட்டு தளைகளில் கயிற்றால் கட்டப்பட்டன. பணியாள் ஒருவன் சாட்டை ஒன்றைக் கொண்டு வந்தான்.

முபாரக் அவனைப் பார்த்து, ''இளவரசரை நயவஞ்சகமாகக் கொன்ற இப்பாதகனுக்கு நூறு சாட்டையடிகளைக் கொடு. அதற்குப் பிறகும் இவன் உயிரோடு இருந்தால் மூட்டையில் கட்டி ஸ்ரீவிஜயத்திற்கு அனுப்பு'' என்றான்.

''வேண்டாம். வேண்டாம்'' என்று அலறினான் சுலைமான்.

''எதற்காக அலறுகிறாய்? இளவரசரை வாளால் வெட்டிய போது சந்தோஷப்பட்டாய் அல்லவா? இப்போதும் சந்தோஷப்படு.''

''நீங்கள்... நீங்கள்... முபாரக் அல்ல. உதயசந்திரன்'' என்றான் சுலைமான்.

''அதைப் புரிந்து கொள்ள உனக்கு இவ்வளவு நேரமாயிற்றா? முட்டாள்.

''பொறு உதயசந்திரா. பொறு. உன் பிறப்பு ரகசியத்தைச் சொல்கிறேன். என்னை விட்டுவிடு.''

''எந்த ரகசியமும் எனக்குத் தேவையில்லை சுலைமான். அதனால் எனக்கு ஆகப் போவது ஒன்றும் இல்லை.''

''உதயசந்திரா! நீ பான் இனத்தைச் சேர்ந்தவன் அல்ல. வசாகாவின் மகனுமல்ல.''

''அப்படியானால் நான் யாருடைய மகன்?''

''என்னை இறக்கிவிடு உதயசந்திரா. நரம்புகள் இழுக்கின்றன. சித்திரவதையாக இருக்கிறது.''

''அராபியர்களுக்கு சித்திரவதை செய்துதான் பழக்கமா? அனுபவித்துப் பழக்கமில்லையா?''

''முடியவில்லை உதயசந்திரா. கருணை காட்டு.''

சுலைமானின் கட்டுக்களை அவிழ்க்கச் சொன்னான் உதயசந்திரன்.

திரிசங்கு சொர்க்கத்திலிருந்து விடுபட்டு ஆசனத்தில் அமர்ந்து பெருமூச்செறிந்து ஆசுவாசப்படுத்திக் கொண்ட சுலைமான், ''உதயசந்திரா, குப்த நாட்டில் இருக்கும்போது கனிஷ்கரும், வசாகாவும் என் நண்பர்களாக ராணுவத்தில் இருந்தார்கள். அதேசமயம் தமிழ் நாட்டைச் சேர்ந்த முத்து வணிகரான பெருஞ்சாத்தன் எனக்கு மட்டுமே நண்பராக இருந்தார். போர் இல்லாமல் விவசாயத்தில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோது எங்களுக்கு மட்டுமின்றி பெருஞ் சாத்தனுக்கும் குழந்தை பிறந்தது. வசாகாவின் குழந்தைக்கும் பெருஞ்சாத்தனின் குழந்தைக்கும் முதுகில் ஒரே மாதிரியான முக்கோண மச்சம் இருந்தது. இப்படி இரண்டு குழந்தை களுக்கும் ஒரே மாதிரியான மச்சம் இருந்த விஷயம் எனக்கு மட்டுமே தெரிந்திருந்தது. வசாகாவிற்கோ

கனிஷ்கருக்கோ தெரியாது. பெருஞ்சாத்தனுக்குக் கூடத் தெரியாது. உன்னைக் குழந்தையாகப் பெற்றெடுத்த பெருஞ்சாத்தன் தமிழ்நாட்டிற்குத் திரும்பிவிட்டார். பிறகு எங்கள் வாழ்வில் ஏதேதோ நடந்து விட்டன. பல்லவ நாட்டிற்கு அரேபிய நாடு பகை நாடாயிற்று. பல்லவ நாட்டில் சேதாரங்களை உண்டாக்க மெக்காவிலிருந்து அனுப்பப்பட்ட அராபிய தலைவர்களில் நானும் ஒருவனாக காஞ்சிக்கு வந்தேன். ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாகச் செயல்பட்டார்கள். நான் பல்லவ ராஜ வம்சத்தை அழிப்பதில் ஈடுபட்டேன். அச்சமயத்தில் தான் பல்லவ இளவரசர் மகேந்திரர் படையோடு சாளுக்கிய நாட்டிற்குப் புறப்பட்டார். அங்கேயே அவரை அழிக்க நான் திட்டமிட்டேன். அக்காரியத்தைச் செய்ய அராபியர்களை விட பல்லவ நாட்டைச் சேர்ந்தவர்களே பொருத்தமானவர்களாக இருப்பார்கள் என்று என்று நினைத்து அதற்காக வீரமிக்க இளைஞர்களைத் தேடி அலைந்தேன். நாகைப்பட்டிணத்திற்கு தற்செயலாக வந்தபோது மல்யுத்தம் செய்து கொண்டிருந்த உன் முதுகில் இருந்த முக்கோண மச்சத்தைக் கண்டேன். நீ பெருஞ்சாத்தனின் மகனாகத்தான் இருக்க வேண்டும் நினைத்தேன். அவரைப் பற்றி விசாரித்து அவரைச் சந்தித்து என் ஊகத்தை உறுதி செய்து கொண்டேன். என் திட்டத்திற்கு நீ தான் பொருத்தமானவன் என்று கருதி உன்னை காஞ்சிக்கு கடத்தி வர முகமதுவையும் அகமதுவையும் அனுப்பினேன். இதற்கிடையில் நீயே புறப்பட்டு காக்கை மடுவிற்கு வந்து சேர்ந்தாய். எனது ஆட்கள் உன்னை ஏமாற்றி காஞ்சிக்குக் கொண்டு வந்தார்கள். உன் மனதைக் கலைக்க முயன்றேன். அப்போது உனக்கிருந்த மச்சமும் வசாகாவின் மகனுக்கு இருந்த மச்சமும் நினைவிற்கு வந்தன. அதைக் கொண்டு உனக்கு பிறப்பு சம்பந்தமான ரகசியம் இருக்கிறது என்றும் அது வாதாபியில் தான் அவிழும் என்று உன்னைக் குழப்பினேன். நீயும் அந்த ரகசியத்தை அறியும் ஆவலால் என் திட்டத்திற்கு ஒப்புக் கொள்வதாக குரானின் மீது சத்தியம் செய்தாய்.

''நீ சத்தியம் செய்தது குரானின் மீதல்ல. செங்கல்லின் மீதுதான். ஆனால் அது உனக்குத் தெரியாதல்லவா? ஆகவே குரானின் மீது சத்தியம் செய்ததாக நம்பி பயந்து அந்தப் பணியைச் செய்வாய் என்று நம்பினேன். ஆனால் நீயோ பல்லவ மன்னரைச் சந்தித்த பின் மாறிவிட்டாய். ஆகவே தான் உன்னை மட்டும் நம்பாமல் இளவரசரைக் கொல்வதற்கு அகமதுவையும் முகமதுவையும் அனுப்பினேன். சாளுக்கிய நாட்டில் அது

நிறைவேறவில்லை. இளவரசர் காஞ்சிக்குத் திரும்பும்போது கொலைத் திட்டத்தை நிறைவேற்றிவிட வேண்டும் என்று திட்டமிட்டேன். அந்த நேரத்தில் வாதாபியிலிருந்து வந்த அகமதுவும் முகமதுவும் இளவரசரைப் பாதுகாக்கும் பான் இனத்து வீரப் பல்லவர் படையே அவரைக் கொல்ல விருப்பதாக திடுக்கிடும் தகவலைச் சொன்னான். அவர்கள் தங்கள் திட்டத்தை நிறைவேற்ற முயன்ற சந்தர்ப்பத்திலேயே நானும் புகுந்து இளவரசரை வாளால் வெட்டினேன். படுகாயமடைந்த இளவரசர் அங்கேயே மரணமடைந்தார். நாங்கள் அனைவரும் தப்பினோம்.''

சுலைமான் பிறப்பு ரகசியத்தையும் கொலை சம்பவத்தையும் விவரமாகச் சொன்ன பிறகு உதயசந்திரன் சுலைமானோடு ஒரு வார்த்தையும் பேசவில்லை. பணியாளர்களை அழைத்து ''இவனது கைகால்களைக் கட்டி தகுந்த பாதுகாப்புடன் ஸ்ரீவிஜயத்திற்கு அனுப்பிவிடுங்கள்'' என்று உத்தரவிட்டான்.

☆

உதயசந்திரனைத் தேடிப் பிடிக்கும்படி தாவூத் கட்டளையிட்டதிலிருந்து அவனைப் பற்றி வந்த தகவல்கள் பிரமிப்பூட்டக் கூடியனவாக இருந்தன. உதயசந்திரன் பல்லவர் படையின் உபதலைவனாகவும் ராஜசிம்மரின் அந்தரங்க அன்புக் குரியவனாகவும் இருந்தவன் என்ற தகவல் முதலில் வந்தபோது அவன் முக்கியமானவன் தான் என்று நினைத்தான் தாவூத். சாளுக்கிய நாட்டுப் படையெடுப்பில் அவன் கலந்து கொண்டு பல்வேறு சாதனைகளைச் செய்தவன் என்ற தகவல் வந்தபோது அவன் சாமர்த்தியசாலியாக இருக்க வேண்டும் என்று கருதினான். புயலில் சிக்கி காம்போஜ கடற்கரையில் ஒதுங்கி நகராசூரனை வதைத்ததையும் சுளு இனக்கடல் கொள்ளையர்களைப் பூண்டோடு அழித்ததாகவும் தகவல் வந்தபோது பிரமித்துப் போனான். பிறகு சீன நாட்டிற்குப் பல்லவத் தூதனாகச் சென்று சீன மன்னரின் ஆசியுடன் 'ஜங்க்' இன போர்க்கப்பல்கள் ஐநூறு எண்ணிக்கையுடன் திரும்பி காம்போஜத்தை ஸ்ரீவிஜயத்தின் பிடியிலிருந்து மீட்டதாக அறிந்தபோது அவனால் நம்ப முடியவில்லை. கடைசியாக இலங்காசோகத்திற்கு வந்து பெரும் கடற்போரை தவிர்த்து ஸ்ரீவிஜய இளவரசனின் நண்பனானதை அறிந்தபோது தாவூத் கவலையடைந்தான். அராபியருக்கு எதிராக முளைத்திருக்கும் எதிரி லேசுப்பட்டவனல்ல என்பதை உணர்ந்து அவனை அழிப்பது எப்படி என்று சதா யோசிக்கலானான்.

இந்த நிலையில் உதயசந்திரன் பிடிபட்டதாகத் தகவல் வந்தபோது அவனுக்குக் கை எது கால் எது என்றே விளங்க வில்லை. பரம சந்துஷ்டி அடைந்த அவன் ''எப்படி பிடிபட்டான் எதிரி?'' என்று குதூகலத்துடன் கேட்டான்.

''அவன் மாறுவேடத்தில் வணிக மரக்கலங்களில் சென்று துப்பறிவதாக வணிகர்கள் சொன்னார்கள் தலைவரே. இன்று மாநக்காவரத்திற்கு வந்த மிளகுக் கப்பல் ஒன்றில் வந்திருப்பதாகச் சொன்ன வணிகர்கள் அவனை அடையாளம் காட்டினார்கள். பாய்ந்து சென்று பிடித்தோம்.''

''முரண்டு பிடித்தானா? சாகசம் ஏதாவது செய்தானா?''

''இல்லை தலைவரே. கைது செய்வதாகச் சொன்னபோது அமைதியாக இருந்தான்.''

பெரும் கைகாரனாகத்தான் இருக்க வேண்டும் என்று கருதிய தாவூத், ''ஜாக்கிரதையாக அழைத்து வாருங்கள். அநேகமாக இதோடு நமது பகைவர்களுக்கு முற்றுப் புள்ளி வைத்து விடலாம். நம்மை எதிர்க்கும் எண்ணம் இனி ஒருவனுக்கும் வராது'' என்று சொல்லிவிட்டு தனது குடிசையைச் சுற்றி கணிசமான வீரர்களை நிறுத்தியதோடு குடிலுக்குள்ளும் வீரர்களை ஆயுதபாணிகளாக நிற்க வைத்தான்.

ஆனால் இவன் தான் உதயசந்திரன் என்று கூறி இக்பால் கொண்டு நிறுத்திய இளைஞனைக் கண்டபோது, ''பாலகனைப் போல பால் மணம் மாறாமல் இருக்கும் இவனா உதயசந்திரன்? இவனா பிரமிப்பூட்டும் சாகசங்களைச் செய்தான்?'' என்று தனக்குத் தானே கேட்டுக் கொண்ட தாவூத் அந்த இளைஞன் வீரனாக இல்லாமல் காஷாயம் தரித்த துறவியாக காட்சி யளித்ததைக் கண்டு குழம்பினான்.

அதைக் கவனித்த இக்பால், ''தலைவரே! இவன் மாறுவேடத்தில் இருக்கிறான். உண்மை சொரூபம் வேறு'' என்றான்.

இளம் துறவியைப் பார்த்து, ''இது உண்மையா?'' என்று கேட்டான் தாவூத்.

''எதைக் கேட்கிறீர்கள்?'' - பதட்டமில்லாமல் கேட்டான் துறவி.

''நீ வேஷம் போட்டிருப்பது உண்மையா?''

''ஆன்மாவுக்கு இந்த உடலே ஒரு வேஷம்தான்'' என்றான் துறவி.

அசர வைக்கும் அந்த பதிலைக் கேட்ட தாவூத் 'ஒரு வேளை இவன் உண்மையிலேயே துறவி தானோ? இக்பால் தவறாகப் பிடித்து வந்துவிட்டானோ?' என்று நினைத்து, ''நீ துறவியா? வீரனா?'' என்று கேட்டான்.

''வீரத் துறவிகள் உலகில் இருக்கிறார்கள்'' என்றான் துறவி.

அவனிடம் வாதம் செய்ய விரும்பாத தாவூத், ''நீ தானே உதயசந்திரன்?'' என்று கேட்டான்.

''இல்லை.''

''பின்?''

''அரிச்சந்திரன்.''

''அரிச்சந்திரனா?''

''ஆம். உதயசந்திரனின் நண்பன். ஊழியன்.''

தாவூத் கடுப்படைந்து ''இக்பால்! இதென்ன கூத்து?'' என்று எரிந்து விழுந்தான்.

''இவன் பொய் சொல்கிறான் தலைவரே. இவன் உதயசந்திரன் தான். வணிகர்கள் அடையாளம் காட்டினார்கள்'' என்றான் இக்பால்.

''ஐயா! நான் அரிச்சந்திரன்தான். உதயசந்திரன் ஓர் இமயமலை. அவர் எங்கே? நான் எங்கே?'' என்றான் துறவி வேடத்தில் இருந்த உதயசந்திரனின் நண்பனும் அர்ச்சகர் மகனுமான அரிச்சந்திரன்.

அவன் சொல்வது உண்மைதான் என்பதை உணர்ந்த தாவூத் ''உன்னைக் கைது செய்தபோது இதை ஏன் சொல்லவில்லை?'' என்று கேட்டான்.

''இவர்கள் உதயசந்திரனைக் கைது செய்ய வந்தவர்கள் என்பது எனக்குத் தெரியாது. என்னிடமும் கேட்கவில்லை.''

''அப்படியானால் நீ இங்கே வந்ததற்குக் காரணம்?''

''உதயசந்திரன் என்னைத் தூது அனுப்பினார். ஆகவே வந்தேன்.''

''தூதாகவா? என்னிடமா? எதற்கு?''

''நாங்கள் வேண்டாம் என்று தான் சொன்னோம். அவர் சம்மதிக்கவில்லை. துரியோதனன் இராவணன் ஆகியோருக்கே தூதுவன் அனுப்பப்பட்டிருக்கும்போது தாவூத்திற்கு ஏன்

அனுப்பக் கூடாது? போருக்கு முன்பு தூது செல்வதுதான் முறை என்றார்.''

''அது யார்துரியோதனன்? இராவணன்?''

''ஆணவத்தால் அழிவைத் தேடிக் கொண்ட பகைவர்கள். ஆசையை விட முடியாமல் உயிரை விட நேர்ந்த பாரத நாட்டு மன்னர்கள்.''

''உன் தூதுச் செய்தி என்ன?''

''அராபியரின் பூர்வக் கடல் ஆதிக்கம் தவறானது. அப்படி ஆதிக்கம் செலுத்த அவர்களுக்கு எந்த உரிமையும் இல்லை. எனவே ஆதிக்கத்தை அகற்றிவிட்டு மாநக்காவரத்தை விட்டு நீங்கி விட வேண்டும். அப்படி நீங்கள் நடக்க மறுத்தால் உங்கள் அழிவு நிச்சயம். இதுதான் செய்தி.''

''பாலகனே! நீ கூறிய பாரத மன்னர்கள் இருவரும் தூதினை ஏற்றார்களா?''

''அவர்கள் மட்டுமல்ல. அரக்கர் குலத்தலைவனான சூரபத்மனும்தூதை நிராகரிக்கவே செய்தான். வினாசகாலே விபரீத புத்தி.''

''என்ன சொன்னாய்?''

''கெட்ட காலம் வந்துவிட்டால் புத்தி கெட்டுப் போய் விடும்.''

இதைக் கேட்டு அருகில் இருந்த வீரர்கள் அரிச்சந்திரனின் மீது பாயமுற்பட்டார்கள்.

அவர்களைத் தடுத்த தாவூத் ''அரிச்சந்திரா, நீ சொன்ன பாரத மன்னர்களுக்கோ சூரபத்மனுக்கோ அராபியர்களும் திபெத்தியர் களும் குறைந்தவர்கள் அல்ல. மிகப் பெரும் எதிர்ப்புகளைத் தவிர்த்து இப்பூர்வக்கடலை கடல் கோட்டையாக நாங்கள் மாற்றியது உதயசந்திரன் என்ற தனி மனிதனிடம் ஒப்படைத்து விட்டு ஓடுவதற்காக அல்ல'' என்றான்.

''தவறு ஐயா. உதயசந்திரன் தனிமனிதன் அல்ல. பல்லவ சாம்ராஜ்யத்தின் பிரதிநிதி. பாரத நாட்டின் பிரதிநிதி. இந்தக் கிழக்குக் கடல் நாடுகளின் பிரதிநிதி.''

''கிழக்குக் கடல் நாடுகளின் பிரதிநிதியாக எப்போது ஆனான் உதயசந்திரன்?''

''இலங்காசோகத்தின் ஸ்ரீவிஜயத்துடன் சமரசம் செய்து கொண்டார். காம்போஜம் முதல் சாவகம் வரை அவரை ஏற்றுக் கொண்டன.''

''எங்கே இருக்கிறான் உன் தலைவன்?''

''என்னை அனுப்பும்போது இலாமுரி தேசத்தில் இருந்தார். இப்போது எங்கே இருக்கிறார் என்பது தெரியாது.''

''ஓரிடமாக இருக்க மாட்டாரா உன் தலைவர்?''

''இதற்கு அவர் தான் பதில் சொல்ல வேண்டும்.''

''அவரிடம் எத்தனை மரக்கலங்கள் இருக்கின்றன?''

''கேட்கக் கூடாத கேள்விகளையெல்லாம் கேட்கிறீர்கள். ஆனாலும் எதையும் மறைக்க வேண்டாம் என்று தலைவர் சொன்னார். நான் வரும்போது 500 மரக்கலங்கள் இருந்தன. இப்போது தெரியாது. கூடியிருக்கலாம். அல்லது குறைந் திருக்கலாம்.''

''அதென்ன உத்தேசமான பதில்?''

''திபெத்திற்கு செல்வக்குவியல்களை ஏற்றிக் கொண்டு உங்கள் கடற்படையொன்று வரப்போவதாக அவருக்குச் செய்தி வந்தது. அவற்றை கைப்பற்றப் போவதாகச் சொன்னார். அதற்காக போர் செய்ய வேண்டும். போரிட்டால் எவ்வளவு சேதம் வரும் என்று சொல்ல முடியாதல்லவா?''

அரிச்சந்திரனின் தெளிவான பதில்கள் தாவூத்தை அசர வைத்தன. தனக்கிருக்கும் உபதளபதிகளையும் உதயசந்திரனிடம் இருக்கும் அரிச்சந்திரனையும் ஒப்பிட்டு பார்த்த அவனுக்கு உதயசந்திரனின் மீது பொறாமையாக இருந்தது. அரிச்சந்திரனின் துணிவும் தெளிவும் உதயசந்திரனின் தரத்தை அவனுக்குப் புலப்படுத்தின.

''நல்லது தூதுவரே. விருந்தினர் மாளிகையில் விருந்து உண்டுவிட்டு நீங்கள் செல்லலாம்'' என்றான்.

''உங்கள் பதில்?''

''ஏற்கெனவே சொல்லிவிட்டேன்.''

''அப்படியானால் துரியோதனனைப் பற்றியும் இராவணனைப் பற்றியும் நன்றாகக் கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள்.''

''சூரபத்மனைப் பற்றியும் தெரிந்து கொள்கிறேன்.''

அரிச்சந்திரனை பணியாட்கள் அழைத்துச் சென்றார்கள்.

''தலைவரே! இந்த அதிகப் பிரசங்கியை வெட்டி சாய்க்காமல் விருந்தினர் மாளிகைக்கு அனுப்பி வைக்கிறீர்களே?'' என்று கேட்டான் இக்பால்.

''உன்னைப் போன்ற முட்டாளாக இருந்திருந்தால் வெட்டிப் போட்டிருப்பேன். அவனோ அறிவாளியாக இருக்கிறான்'' என்று சொன்ன தாவூத் ''இக்பால்! இவன் தூதுவனல்ல. ஒற்றன். எதற்காக இங்கே வந்திருக்கிறான் என்பதை அறிவதற்காகத்தான் இவனை விட்டேன். ரகசியமாக அவனை கண்காணித்து வா. முக்கிய செய்தி கிடைக்கும்'' என்றான்.

தாவூத் கூறியது உண்மைதான் என்று நிரூபிப்பது போல விருந்தினர் மாளிகையில் உணவுண்டு உறங்கிய அரிச்சந்திரன் நள்ளிரவு வந்ததும் எழுந்து சுற்றும் முற்றும் பார்த்துவிட்டு பூனை போல வெளியே மெல்ல வந்து காட்டுப் பகுதிக்குச் சென்றான்.

இக்பால் அசந்துபோய் அவனை ரகசியமாகப் பின் தொடர்ந்தான்.

☆☆☆



97

காசிம்கான்

தாவூத் கூறியது போலவே அரிச்சந்திரன் ஒற்றன் தான் என்றும் மாநக்காவரத்திற்கு வந்திருப்பது எதையோ சாதிப்பதற்குத்தான் என்றும் நம்பிய இக்பால் காட்டை நோக்கி நள்ளிரவில் தனியாக சென்று கொண்டிருந்த அரிச்சந்திரனை அவனறியாமல் பின்தொடர்ந்து சென்றதோடு பாதுகாப்பிற்காக பத்து வீரர்களையும் தன்னைத் தொடர்ந்து வரச் சொன்னான். அடர்ந்த காட்டுப் பகுதியில் அதுவும் அர்த்த ராத்திரியில் பந்தம் எதுவும் இல்லாமல் சகஜமாக அரிச்சந்திரன் நடந்து சென்றதைக் கண்ட இக்பால் 'பூர்வ ஜன்மத்தில் இவன் பேயாக இருந்திருக்க வேண்டும்' என்று சொல்லிக் கொண்டான்.

அதே சமயம் பழக்கமான அக்காட்டில் இரவு நேரத்தில் இக்பாலினால் சகஜமாக நடக்க முடியவில்லை. தட்டுத் தடுமாறிக் கொண்டு தான் சென்றான். வனவிலங்குகளின் பல்வேறு சத்தம் வேறு சுற்றிலும் கேட்டபடியால் அவனுக்குச் சற்று அச்சமாக இருந்தது. 'இவனை இத்தனை சிரமத்துடன் பின்தொடர்வதை விட கையில் இருக்கும் ஈட்டியை எறிந்து கொன்றுவிட்டால் என்ன?' என்று கூடத் தோன்றியது இக்பாலுக்கு.

நல்லவேளையாக அரிச்சந்திரன் ஓரிடத்தில் நின்றான். சுற்றும் முற்றும் பார்த்துவிட்டு சுளுந்தைக் கொளுத்தினான். அந்த வெளிச்சத்தில் எதையோ தேடினான். ஓரிடத்தில் உற்றுப் பார்த்துவிட்டு அந்த இடத்தில் தோண்டத் தொடங்கினான். மரக்கட்டையை வைத்துக் கொண்டு கொரகொரவென்று வேகமாகத் தோண்டியதைக் கண்ட இக்பால், ''பூர்வ ஜன்மத்தில் இவன் காட்டுப் பன்றியாகப் பிறந்திருக்க வேண்டும்'' என்று கருதிக் கொண்டான்.

அரிச்சந்திரன் சிறிது நேரம் தோண்டிவிட்டு குழிக்குள் தலையை விட்டு எதையோ பார்த்தான். பிறகு குழியை மூடிவிட்டு அடையாளத்திற்கு கம்பு ஒன்றை நட்டுவிட்டு அருகே இருந்த

சமதளப் பாறையொன்றில் பத்மாசனத்தில் அமர்ந்து கண்களை மூடி தியானத்தில் ஈடுபட்டான்.

இக்பாலுக்கோ அவனது போக்கு புரிந்து கொள்ள முடியாததாக இருந்தது. ''மிகவும் ஆபத்தான எதிரியின் தளத்திற்கு வந்துவிட்டு அர்த்த ராத்திரியில் இப்படித் தனியாக தியானம் செய்கிறான் என்றால் இவனுக்குத் துணிச்சல் அதிகம்தான். இவனே இப்படியென்றால் உதயசந்திரன் எப்படியிருப்பான்?' என்று எண்ணிப் பார்த்துக் கொண்டான். அரிச்சந்திரன் தோண்டிய குழிக்குள் ஏதோ முக்கியமான பொருள் இருக்க வேண்டும் என்று நினைத்த இக்பால் அதை அறியும் ஆவலோடு இருந்ததால் அரிச்சந்திரனின் தியானத்தை அறவே வெறுத்தான். ''இவனுக்குத் தியானம் ஒரு கேடா?'' என்று உள்ளுக்குள் சபித்தான்.

அரிச்சந்திரனின் தியானம் ஒரு நாழிகை நேரத்திற்கு நீடித்தது. பிறகு கண் விழித்த அவன் கண்களை உருட்டினான். உடம்பைச் சிலிர்த்துக் கொண்டு விசித்திரமான குரலில் காடே அதிரும்படி கத்தினான். பாறையின் மீது நடனமாடுவது போல தாறுமாறாகக் குதித்தான். பெருங்குரலில் சிரித்தான்.

அதைக் கண்ட இக்பாலுக்கு, ''பூர்வ ஜன்மத்தில் இவன் மாந்தரீகனாக இருந்திருப்பானோ?'' என்று நினைத்துவிட்டு ''சீசீ! நான் ஏன் இப்படியெல்லாம் நினைக்கிறேன்? ஒரே ஆள் எப்படி பிசாசாகவும், காட்டுப் பன்றியாகவும், மாந்தரீகனாகவும் பிறக்க முடியும்? இவன் ஒரு விசித்திரமானவன். நாம் தான் ஏதேதோ எண்ணிக் குழம்புகிறோம்' என்று தனது நினைப்புகளைக் கடிந்து கொண்டான்.

அரிச்சந்திரனின் கூச்சலும் ஆட்டமும் நின்றது. தான் தோண்டி மூடிய குழியை ஒரு முறை நோக்கிவிட்டு வேகமாக நடந்து சென்றான். அவன் போனபின் தனது வீரர்களை அழைத்த இக்பால், ''ம், சீக்கிரம். ஈட்டிகளை வைத்து குழியை தோண்டுங்கள்'' என்றான்.

இரண்டு வீரர்கள் மண்ணை அகற்றி வேகமாகத் தோண்டினார்கள். ''தலையை விட்டுப் பார் ஏதாவது தெரிகிறதா என்று?'' என்றான் தலைவன்.

ஒருவன் சுளுந்தைக் கொளுத்திப் பிடிக்க இன்னொருவன் குழியில் தலையை விட்டுப் பார்த்துவிட்டு, ''ஒன்றுமில்லை. மண் தான் இருக்கிறது'' என்றான்.

''இன்னும் தோண்டுங்கள்.''

தோண்டிப் பார்த்து, ''ஒன்றுமில்லை'' என்றான் வீரன்.

''இன்னும் தோண்டு.''

ஒரு ஆள் ஆழத்திற்குத் தோண்டிவிட்டு, ''எதுவும் இல்லை ஐயா?'' என்றான் வீரன்.

''நீங்கள் அவன் தோண்டிய இடத்தை விட்டு விட்டு வேறிடத்தில் தோண்டுகிறீர்கள். நீ இடப்புறத்தில் தோண்டு. நீ வலப்புறத்தில் தோண்டு.''

ஏறக்குறைய குளம் வெட்டாத குறையாக பத்து வீரர்களும் மாறி மாறித் தோண்டினார்களேதவிர எதுவும் கிடைக்கவில்லை.

''இன்னும் சற்று அகலமாகத் தோண்டினால் குளமாகி விடும். மழை நீர் தேங்கினால் குளிக்கலாம்'' என்றார்கள் வீரர்கள் வெறுப்புடன்.

இக்பாலோ குழப்பத்தில் இருந்தான்.

'அரிச்சந்திரன் குழியில் எதைக் கண்டான்? அதை ஏன் நம்மால் பார்க்க முடியவில்லை?' என்று தனக்குத்தானே கேட்டுக் கொண்டு அங்கிருந்து கிளம்பினான்.

மறுநாள் காலை விருந்தினர் மாளிகையில் அரிச்சந்திரனை கண்ட இக்பால், ''என்ன அரிச்சந்திரா, கானகம் சுகமாக இருந்ததா?'' என்று கேட்டான்.

''அருமையான கானகம். ரம்மியமான இடம். தவம் செய்ய மிகவும் ஏதுவான இடம்'' என்றான் அரிச்சந்திரன் எந்த விதமான பதட்டமும் இல்லாமல்.

தன்னைப் பின்தொடர்ந்தது பற்றி எதுவும் கேட்காதது அவனுக்கு வியப்பாக இருந்தது.

''காட்டில் ஏதோ குழியைத் தோண்டினாயே அதில் என்ன இருந்தது?''

''ஒன்றுமில்லை.''

''பிறகு எதற்காகத் தோண்டினாய்?''

''என் பாவங்களைப் போட்டுப் புதைப்பதற்கு.''

அரிச்சந்திரனின் பேச்சைக் கேட்ட இக்பாலுக்கு ஒரு மாதிரியாகிவிட்டது. ''சரியான கிறுக்கனாக இருப்பான் போலிருக்கிறது'' என்று எண்ணிக் கொண்டு அவனிடம் எதுவும் பேசவில்லை. கண்காணிப்பை மட்டும் தொடர்ந்தான்.

அரிச்சந்திரன் சில நேரங்களில் காட்டுப் பகுதிக்குச் சென்றான். சில சமயங்களில் கடற்கரை பகுதிக்குச் சென்றான். ஊருக்குள் செல்லவில்லை. யாரிடமும் பேசவில்லை. கடற்கரையில் மட்டும் சில மாலுமிகளிடம் ''ஸ்ரீவிஜயத்திற்குச் செல்லும் வணிகக் கப்பல் எப்போது வரும். நான் போக வேண்டும்'' என்று ஓரிரு முறை விசாரித்தான். சில நாட்கள் இரவில் கடற்கரையிலேயே படுத்து உறங்கினான். ஆறு நாட்கள் கழித்து ஸ்ரீவிஜயத்திற்குச் செல்லும் வணிக மரக்கலம் மாநக்காவரத்திற்கு வந்தது. மறுநாள் இரவு அது ஸ்ரீவிஜயத்திற்குப் புறப்படும் என்பதை அறிந்த அரிச்சந்திரன் மறுநாள் இரவு நேரம் வந்ததும் அம்மரக்கலத்திற்குச் சென்றான். இக்பால் அதனை கவனித்தான். 'நாமும் இந்த மரக்கலத்தில் மாறு வேடத்தில் சென்றால் இவன் எங்கே போகிறான் என்பது தெரிந்துவிடும். அங்கேதான் உதயசந்திரனும் இருப்பான். எப்படியாவது அவனைப் பிடித்துவிட வேண்டும்' என்று தீர்மானித்து திறமையான இருபது வீரர்களுடன் அந்த மரக்கலத்தில் ஏறினான். மரக்கலமும் புறப்பட்டது. ஆனால் மரக்கலத்தில் ஏறிய அரிச்சந்திரன் மரக்கலத்தின் மறுபுறத்தில் கீழே இறங்கி தீவுக்கே வந்துவிட்டதை அவன் அறியவில்லை.

☆

அரிச்சந்திரன் வந்ததிலிருந்து தாவூத்தின் மனம் ஒரு நிலையில் இல்லை. உதயசந்திரன் பிடிபடாமல் அவனது ஊழியன் அரிச்சந்திரன் பிடிபட்டது அவனுக்குப் பெரும் ஏமாற்றமாக இருந்தது. அதோடு உதயசந்திரனின் களம் ஓரிடமாக இல்லை என்றும் மாறிக்கொண்டே இருக்கும் என்ற செய்தி அவனுக்கு கவலையையும் குழப்பத்தையும் அதிகரித்தது.

எல்லாவற்றையும் விட திபெத் மன்னருக்கு சுலைமானின் தலைமையில் அனுப்பிய பொக்கிஷக் கப்பல்களை உதயசந்திரன் தாக்கப் போகிறான் என்ற தகவல் அவனை மருட்டியது. ஏற்கெனவே மன்னருக்கு அனுப்பிய பொக்கிஷக் கப்பல்கள் சூறையாடப்பட்டுவிட்ட நிலையில் அடுத்த முறை அனுப்பிய பொக்கிஷக் கப்பல்களும் சூறையாடப்படப் போவதாகத் தெரிய வந்ததால் இழப்பு கணக்கு அதிகமாகி வருவதை உணர்ந்த அவன் செய்வதறியாமல் குழம்பினான்.

மாநக்காவரத்துக்கு வந்த அரிச்சந்திரனைக் கண்காணித்ததில் உருப்படியான ஒரு தகவலும் கிடைக்காதது அவனுக்கு எரிச்சலாக

இருந்தது. அவன் கடைசியாக ஸ்ரீவிஜயம் செல்லும் கப்பலுக்குச் சென்றதையும் அவனைத் தொடர்ந்து இக்பாலும் சென்றிருப்பதையும் அறிந்து ஓரளவிற்குத் திருப்தியடைந்தான்.

இரண்டு நாள் கழித்து கடற்கரையில் பேரிகைகள் முழங்கின.

தனது குடிலைவிட்டு வெளியே வந்தான் தாவூத்.

கடல் பகுதியில் புதியதாக கப்பல் ஒன்று வந்து நின்றது. அதில் கணக்கற்ற அராபியர் கொடிகள் பறந்து கொண்டிருந்தன.

மரக்கலத்திலிருந்து மரப்பலகையொன்று சாய்வாக இறக்கப்பட்டு அதில் யானை ஒன்று இறங்கி வந்தது. கடற்கரைப் பகுதியில் கடலில் நடந்தே வந்த அந்த யானையின் மீது ஓர் அராபியர் இருந்தார். அவரது மடியில் ஒரு பெட்டகம் இருந்தது.

அவருக்குப் பின்னால் இருந்தவர் அந்தப் பேழை மனிதருக்கு ஆமை ஓட்டினால் ஆன குடையைப் பிடித்து வந்தார்.

வருவது என்ன என்பது தெரிந்துவிட்டதால் பேழை மனிதரை தடபுடலாக வரவேற்றான் தாவூத்.

அவனது குடிலுக்குப் பேழையைக் கொண்டு வந்து வைத்தார் அந்தப் புதிய அராபியர்.

பேழையை தன் தலை சாய்த்து வணங்கிய தாவூத் வந்தவரை உபசரித்தான்.

''இப்பேழையில் இருப்பது உங்களுக்குத் தெரியும் அல்லவா?''

''ஆகா! யானை மீது வந்ததிலிருந்தே இதன் மகத்துவம் தெரிந்துவிட்டதே! நமது அரபு நாட்டின் சக்கரவர்த்தி பெருமான் அனுப்பிய கட்டளை ஓலை தான் இருக்கும். அரே அல்லா'' என்றான் தாவூத்.

''ஓலையை எடுத்துப் படியுங்கள்'' என்றான் அராபியன்.

தாவூத்தும் பயபக்தியுடன் அந்த ஓலையை எடுத்துப் படித்தான்.

ஓலை அவனைத் துளைக்கும் வேலைப் போல் அமைந் திருந்தது.

''தாவூத்! மாநக்கவரத்தில் நீ என்ன செய்து கொண்டிருக் கிறாய்? தூங்கிக் கொண்டிருக்கிறாயா? விழித்துக் கொண்டிருக்கிறாயா? உன் சாதனைப் பட்டியல் ஏன் இதுவரை வந்து சேரவில்லை. எனக்கு மட்டுமல்ல திபெத்திய அதிபருக்கு

வந்து சேர வண்டிய பங்குத் தொகையும் வந்து சேரவில்லை என்று புகார் வந்துவிட்டது. இது அபாயம். அவமானம். திபெத்திய அதிபர் பொறுமை காக்க மாட்டார். நமதுடனான உறவைத் துண்டித்துவிடுவார். இது பெரும் இழப்பு. இன்னும் என்னென்ன இழப்பு நடந்திருக்கிறதோ தெரியவில்லை. எப்படிப் பார்த்தாலும் நீ தளபதியாக இருப்பதற்கான தகுதியை முற்றிலும் இழந்துவிட்டாய். எனவே புதிய தளபதியிடம் பொறுப்பையும் கணக்கையும் ஒப்படைத்துவிட்டு கைதியாக இரு. மற்றதை புதிய தளபதி செய்வார்.''

- என்றிருந்தது ஓலையில்.

அதிர்ந்து போனான் தாவூத்.

இந்த திருப்பத்தை அவன் கனவிலும் எதிர்பார்க்கவில்லை.

அதேசமயம் ஓலையில் குறிப்பிட்டிருந்தபடி தன்னால் அராபியருக்கு - குறிப்பாக மன்னருக்கு இழப்புகள் தான் அதிகம் என்பதையும் ஆதாயம் என்பது அறவே இல்லை என்பதையும் உணர்ந்தான் தாவூத்.

ஆனால் தவறுகளைச் சுட்டிக்காட்டி திருந்துவதற்கு வாய்ப்பளிப்பார் என்று நினைத்த அவனுக்கு மன்னர் தனது பதவியைப் பறித்ததும் புதிய தளபதியை நியமித்ததும், தன்னைக் கைதியாக நிற்கும்படிக் கட்டளையிட்டதும் பேரதிர்ச்சியாக இருந்தது தாவூத்திற்கு. அரிச்சந்திரன் வந்ததிலிருந்து அடுத்தடுத்து அதிர்ச்சிகளாக வந்து கொண்டிருந்ததால் அதற்கு அவனது அபசகுனமான வரவுதான் காரணம் என்று தேவையில்லாமல் அவனைச் சபித்தான்.

இதற்கிடையில், ''படித்தீர்களா?'' என்று கேட்டான் புதிய அராபியன்.

''மன்னர் இவ்வளவு அவசரப்படுவார் என்று நான் நினைக்கவில்லை'' என்றான் தாவூத்.

''மன்னர் அப்படி நினைக்கவில்லை.''

''வேறு எப்படி நினைக்கிறார்?''

''தாமதமாகி விட்டதாக நினைக்கிறார்.''

மேற்கொண்டு அவனுடன் பேச விரும்பாத தாவூத், ''புதியதாக பொறுப்பேற்க வந்திருக்கும் தளபதி யார்?'' என்று கேட்டான்.

''அராபியர் கடற்படையின் பிரதான தளபதி காசிம் கான்.''

''அவரா?''

''ஆம். அவரால் தான் நிலைமைகளை சரி செய்ய முடியும் என்பது மன்னர் பெருமானின் கணக்கீடு.''

''அவர் எப்போது வருவார்?''

''வந்துவிட்டார். மரக்கலத்தில் இருக்கிறார். உங்கள் வரவேற்புக்குக் காத்திருக்கிறார்.''

இதைக் கேட்டதும் தாமதம் செய்யாமல் வரவேற்புக்கு ஏற்பாடு செய்தான் தாவூத்.

கடற்படை வீரர்களின் மகத்தான அணிவகுப்புக்கிடையில் கம்பீரமாக நடந்து வந்தான் அராபிய கடற்படை தளபதி காசிம்கான்.

அராபியரின் பாதுகாவலன் என்றும் அரபுக்கடலின் முடிசூடா மன்னன் என்றும் செங்கடலை குருதிக்கடலாக மாற்றிய குரூரன் என்றும், மேற்கத்திய நாடுகளுக்கு சிம்ம சொப்பனமானவன் என்றும் பேசப்பட்டு வந்த காசிம்கான் அவையெல்லாம் உண்மை தான் என்பதை உணர்த்துவதுபோல சர்வ அலட்சியமாக நடந்து வந்தான். அவனுக்கு இரு பக்கத்திலும் வாளிப்பான இரண்டு வெள்ளை அழகிகள் ஒய்யாரமாக நடந்து வந்தார்கள். தாவூத்தின் குடிலுக்கு அருகே வந்ததும் அங்கிருந்த சிலரை அழைத்து இரண்டு அழகிகளையும் தீவைச் சுற்றிக் காட்டும்படி பணித்தான் காசிம்கான்.

தாவூத்தின் குடிலைப் பார்த்துவிட்டு ''இதுதான் உன் இருப்பிடமா தாவூத்? எளிமையாக இருக்கிறது. ஆனால் இதனால் யாருக்கு நன்மை? இங்கே இருந்து கொண்டு எதைப் பார்க்க முடியும்? அர்த்தமில்லாத எளிமை பயனற்றது. இதற்கு பதிலாக உயரமான ஒரு தூணைக் கட்டி அதன் மீது உன் இருப்பிடத்தை அமைத்திருந்தால் பயனுள்ளதாக இருந்திருக்கும்'' என்று சொன்ன காசிம்கான், ''உன் உபதளபதிகள் எத்தனை பேர்?'' என்று கேட்டான்.

உபதளபதிகளை முன்னால் வரச் சொன்ன தாவூத், ''ஐம்பது பேர்'' என்றான்.

''இங்கே இருக்கும் மரக்கலங்கள் எவ்வளவு?''

''ஆயிரம்.''

''ஆயிரம் மரக்கலங்களுக்கு ஐம்பது உபதளபதிகள் எந்த மூலைக்கு? ஒவ்வொரு கப்பலுக்கும் ஓர் உபதளபதி இருக்க வேண்டும். அது சரி. ஒவ்வொரு கப்பலிலும் எத்தனை மாலுமிகள் இருக்கிறார்கள்?''

''ஐம்பது பேர்''

காசிம்கான் அனைவரையும் அனுப்பிவிட்டு திறந்த வெளியிலேயே ஆசனம் ஒன்றைப் போடச் சொல்லி அமர்ந்து கொண்டு ''உன் சாதனைப் பட்டியலைச் சொல் தாவூத். மன்னர் கேட்கிறார்'' என்றான்.

''தளபதி! மன்னர் இவ்வாறு கேட்பது எனக்கு விளங்க வில்லை. அனைத்து நாடுகளையும் அடக்கி இக்கடலை நம் ஆதிக்கத்திற்குக் கொண்டு வந்ததே பெரிய சாதனைதான். அப்படி ஆதிக்கத்திற்குக் கொண்டு வந்து பல நாடுகளைச் சேர்ந்த வணிகக் கப்பல்களையும் இங்கே வரவழைத்து மறு வர்த்தகம் செய்கிறோம். அல்லது இடைத்தரகு செய்கிறோம். இதனால் நமக்கு நிறைய செல்வம் சேருகிறது. இதுவும் சாதனைதான். இதைவிட வேறென்ன வேண்டும்?'' என்று கேட்டான் தாவூத்.

இதைக் கேட்டு நகைத்த காசிம்கான், ''மன்னர் சொன்னது சரிதான்'' என்றான்.

''மன்னர் என்ன சொன்னார்?''

''நீ இப்படித்தான் பேசுவாய் என்று சொன்னார்.''

''நான் சொன்னது தவறா?''

''உனக்குப் புரியவில்லையா தாவூத்? ஆயிரம் மரக்கலங்கள், 5000 மாலுமிகள், 50 உபதளபதிகள், பணியாளர்கள் என இவ்வளவையும் வைத்துக் கொண்டு நீ இது வரை வரவு செலவு கணக்கைப் பார்த்துக் கொண்டு இருந்திருக்கிறாயா? இதுதான் ஒரு தலைவனின் வேலையா? இதற்கு ஆயிரம் மரக்கலங்களும் 5000 மாலுமிகளும் தேவையா? இவற்றைப் பராமரிக்க இதுவரை நடந்ததெல்லாம் தண்டச் செலவுதானே?''

''மாலுமிகளைப் பட்டினி போடச் சொல்கிறீர்களா?''

''முட்டாள். உனக்கு விஷயம் புரிவதற்கே அறிவு போதாது போலிருக்கிறது. உன்னால் எப்படி செயல்பட முடியும்?'' என்று இகழ்ந்து பேசிய காசிம்கான் ''தாவூத்! இங்கே இருக்கும் இலங்கை முதல் சீனம் வரை உள்ள அனைத்து நாடுகளும் நமது நிபந்தனைகளை ஏற்று அடங்கியிருக்கின்றனவே தவிர

அழிந்துவிடவில்லை. நமது ஆதிக்கத்தை அவர்கள் ஏற்றுக் கொண்டது தற்காலிகமாகத்தான். அதாவது அந்த நாடுகள் வலிமை பெற்று ஒன்றிணையும் வரைதான் நமது ஆதிக்கம் செல்லுபடியாகும். அவை வலிமையும் பெற்று ஓரணியில் திரண்டால் நாம் இங்கே அமர்ந்திருக்க முடியுமா? முடியாது. நீ என்ன செய்திருக்க வேண்டும்? இந்த வரவு செலவு கணக்குகளை வணிகக் குழுவிடம் ஒப்படைத்துவிட்டு ஆயிரம் மரக் கலங்களையும் பயன்பாட்டில் வைத்திருக்க வேண்டும். என்ன பயன்பாடு என்று கேட்கிறாயா? ஒவ்வொரு நாட்டையும் அணுகி அவற்றின் கப்பல் படையை அழித்திருக்க வேண்டும். ஒன்றுடன் ஒன்று இணையாதவாறு மித்ர பேதம் செய்ய வேண்டும். அப்படிச் செய்திருந்தால் எந்த நாடும் வலிமைப் பெற்றிருக்காது. ஒன்று சேர்ந்துமிருக்காது. நீ இங்கேயே குடிசை கட்டிக் கொண்டு சோம்பேறியாக இருந்துவிட்டாய். ஒவ்வொரு நாடாக வலிமை பெற்று வருகின்றன. எல்லாம் நட்பு நாடுகளாகவும் மாறிக் கொண்டிருக்கின்றன.

காசிம்கான் சொன்ன வார்த்தைகள் ஒவ்வொன்றும் இடிபோல இறங்கியது தாவூத்திற்கு. அராபியர் கடற்படைத் தளபதி சொன்னதெல்லாம் சரியானவை என்பதும் புரிந்தது. பதில் பேச முடியவில்லை.

காசிம்கானே தொடர்ந்து, ''இந்த நாடுகளை விடு. பல்லவ நாட்டைப் பற்றிப் பேசுவோம். அந்த நாடு நமது ஆதிக்கத்தை ஆரம்பம் முதல் ஏற்றுக் கொள்ளவில்லை. அந்த நாட்டை தாக்குவதற்கென்ன? ஆயிரம் மரக்கலங்களை வைத்துக் கொண்டிருந்த நீ மட்டும் புத்திசாலியாக இருந்திருந்தால் மகாபலிபுரத்தைத் தாக்கி துறைமுகத்தையும் நகரையும் கைப்பற்றியிருக்கலாம். காஞ்சியைக் கூட பணிய வைத்திருக்கலாம். மிகச்சிறந்த வாய்ப்பை மிகச் சாதாரணமாக விட்டுவிட்டாய். அலட்சியமும் சோம்பேறித்தனமும் தான் இதற்குக் காரணம். போர் வீரர்களான நாம் போர்களை எண்ண வேண்டும். போரில் வீழ்த்திய தலையை எண்ண வேண்டும். நீயோ பணத்தை எண்ணிக் கொண்டிருந்தாய். இங்கே எப்போதே வந்திருப்பேன் நான். ஆனால் அங்கே எகிப்து வாலை ஆட்டியதால் அதை அடக்க வேண்டிய அவசியம் எனக்கு வந்துவிட்டது. செங்கடலை உண்மையாகவே செங்கடலாக மாற்றினேன். எகிப்தில் கைப்பற்றிய இரண்டு அரசகுமாரி களைத்தான் என்னுடன் இங்கே அழைத்து வந்திருக்கிறேன். இப்போது மிகவும்

தாமதமாகிவிட்டது. பகைவர்கள் வலுத்துவிட்டார்கள். நமது செயல்பாடு சிக்கலாகவும் சிரமமாகவும் ஆகிவிட்டது. காரணம் நீ'' என்றான்.

தாவூத்திற்கு வியர்த்துக் கொட்டியது.

தனது அலட்சியம் மிகப் பெரிது என்பதை உணர்ந்தான்.

இந்த நிலையில் பொக்கிஷ கப்பல்கள் சூறையாடப் பட்டதை எப்படிச் சொல்வது என்று திணறினான்.

ஆனால் காசிம்கான் விடவில்லை.

''திபெத்திற்குச் சேர வேண்டிய செல்வக்குவியல்களை அனுப்பிவிட்டாயா தாவூத்?'' என்று கேட்டான்.

''தளபதி, இரண்டு மரக்கலங்களில் அனுப்பினேன். சூறையாடப்பட்டுவிட்டன. இரண்டாவது முறையும் அனுப்பினேன். அதுவும் சூறையாடப்பட்டுவிட்டது'' என்றான் நடுக்கமுடன்.

அங்கேயே தன்னைக் குத்தி கொன்றுவிடுவான் தளபதி என்று எதிர்பார்த்தான்.

ஆனால் காசிம்கானோ ஒரு வார்த்தையும் பேசவில்லை.

''சரி தாவூத். நான் மரக்கலத்திற்குப் போகிறேன். எகிப்திய அரச குமாரிகள் திரும்பியதும் மரக்கலத்திற்கு அனுப்பி வை'' என்று கூறிவிட்டு எழுந்து நடந்தான்.

காசிம்கானின் அமைதி தாவூத்திற்கு திருப்தியை அளிக்கவில்லை. திகிலையே அளித்தது.

என்ன நடக்கப் போகிறதோ என்ற அச்சமே அவனை முழுவதுமாக ஆக்கிரமித்துக் கொண்டிருந்தது.

குடிலுக்குள்ளேயே குமைந்தபடி இருந்தான்.

இரவு நேரமாகியும் பந்தத்தை ஏற்றவில்லை.

பணியாளர்களையும் அழைக்கவில்லை.

அனாதையைப் போலக் கிடந்தான்.

குடிலுக்குள் ஓர் உருவம் நுழைந்ததையோ கதவைச் சாத்தியதையோ அவன் கவனிக்கவில்லை.

☆☆☆



98

மோகனை வரவு

இருட்டில் காலடி வைத்த உருவத்தின் காலில் ஏதோ பட்டுவிட்டதால் உண்டான சத்தத்தில் சித்தம் தெளிந்த தாவூத், ''யாரது?'' என்று கேட்டு எழுந்து கொண்டான்.

''பயப்படாதீர்கள் தலைவரே. நான் உங்களுக்கு உதவத்தான் வந்திருக்கிறேன்'' என்றது உருவம்.

''நீ யார்?'' என்று கேட்டான் தாவூத்.

''நான் மாநக்காவரத்தைச் சேர்ந்தவள்தான். பெயர் கருமோகினி'' என்றது உருவம். சொல்லிவிட்டு பந்தம் ஒன்றை ஏற்றியது.

பந்தப் பிரகாசத்தில் கருமோகினியைக் கண்ட தாவூத் அசந்து போனான்.

பெண்கள் விஷயத்தில் அவனுக்கு ஈடுபாடு இல்லாததால் அவளைப் பற்றியோ அவளுக்கும் சுலைமானுக்கும் இருந்த உறவு பற்றியோ அறிந்திருக்கவில்லை. முதன் முதலாக அராபியர்கள் மாநக்காவரத்திற்கு வந்த போது தீவு முழுக்க கறுத்த நிறம் கொண்ட பெண்கள் ஆடையின்றித் திரிந்ததைக் கண்ட போது கூட அவன் மற்றவர்களைப் போல வெறிபிடித்து அலையவில்லை. அந்தப் பெண்களை எப்படி பயன்படுத்திக் கொள்ளலாம் என்று யோசனை தான் சொன்னான். அழகான பெண்கள் பாலியல் சுகங்களுக்காகவும் அழகற்ற பெண்கள் இதர பணிகளுக்காகவும் ஒதுக்கப்பட்டார்கள்.

அதையடுத்து அராபிய மாலுமிகள் வெறியோடு முனைந்து அழகான பெண்களை அள்ளிக் கொண்டு போனார்கள். தாவூத்தோ ஒருத்தியையும் சீந்தவில்லை.

ஆகவே தற்போது இரவில் தன் குடிசைக்குள் தனிமையில் கருமோகினியைக் கண்டதும் அதுவரை காணாத விந்தையை அருகில் கண்டு அசந்து போன தாவூத் இப்படியொரு அழகி

இத்தீவில் இருக்கிறாளா என்று கேட்டுக் கொண்டு ''இந்த நேரத்தில் எதற்காக வந்தாய்? வேறு நேரம் கிடைக்கவில்லையா உனக்கு?'' என்று கேட்டான். காசிம்கானின் நினைவு உள்ளே அச்சுறுத்திக் கொண்டிருந்ததால்.

''காலையிலிருந்து இங்கே ஒரே கெடுபிடியாய் இருந்தது தலைவரே? எப்படி வர முடியும்? இப்போது யாரும் இல்லாமல் நீங்கள் தனிமையில் இருந்ததால் வந்தேன்'' என்றாள் கருமோகினி.

''சரி. சரி. என்ன விஷயமாக வந்தாய்?''

''நான் எங்கேயிருந்து வருகிறேன் தெரியுமா? சுலைமானிடமிருந்து வருகிறேன்.''

''அவனிடமிருந்தா? எங்கே இருக்கிறான் அவன்?''

''தெரியாது.''

''தெரியாதா?''

''ஸ்ரீவிஜயத்திற்குச் செல்லும் கப்பலில் அனுப்பப்பட்டார். இப்போது எங்கே இருக்கிறார் என்று தெரியாது.''

''அவனை எப்படி உனக்குத் தெரியும்?''

''பொக்கிஷக் கப்பலில் அவரோடு நான் சென்றேன்.''

''பொக்கிஷக் கப்பல் என்ன ஆயிற்று?''

''உதயசந்திரனால் கைப்பற்றப்பட்டது. சுலைமான் சிறை பிடிக்கப்பட்டார். கைதியாக ஸ்ரீவிஜயத்திற்கு அனுப்பப் பட்டார்.''

''நீ எங்கிருந்து வருகிறாய்?''

''தலைத் தக்கோலத்திலிருந்து.''

''அங்கிருந்தா? உதயசந்திரன் அங்கேயா இருக்கிறான்.''

''ஆமாம்.''

''ஆகா. நமக்கு மிக அருகில் இருக்கிறான். ஆனால் ஆனால்....''

''ஆனால் என்ன தலைவரே?''

''என்னால் செயல்பட முடியாது.''

''ஏன் தலைவரே?''

''அது இருக்கட்டும். நீ எதற்காக வந்தாய்?''

''சுலைமான் தான் அனுப்பினார். உதயசந்திரனின் கடற்படை தலைத்தக்கோலத்திலும் இலாமுரி தேசத்திலும் பிரிந்து

கிடக்கிறதாம். இப்போது நீங்கள் தாக்கினால் முறியடித்துவிடலாம் என்று உங்களிடம் சொல்லச் சொன்னார்.''

இதைக் கேட்டதும், ''அரே! அல்லா'' என்று சொல்லிக் கொண்ட தாவூத் ''இந்த நேரம் பார்த்தா இந்த அவலம் வரவேண்டும்?'' என்று கவலையோடு சொன்னான்.

''அதைப்பற்றி நானும் காலையில் கேள்விப்பட்டேன் தலைவரே'' என்றாள் கருமோகினி.

''என்ன கேள்விப்பட்டாய்?''

''தளபதி காசிம்கானின் வருகையைப் பற்றி''

''வேறு என்ன கேள்விப்பட்டாய்?''

''தங்கள் பதவி பறிபோனது பற்றி.''

''மகிழ்ச்சி. என்னால் செயல்பட முடியாது என்றேனே அது இப்போது புரிகிறதா?''

''இப்போது என்ன செய்யப் போகிறீர்கள் தலைவரே?''

''என்ன செய்ய முடியும் நான்? நான் இப்போது ஒரு கைதி?''

''அதனால் என்ன தலைவரே?''

''கைதி என்ன செய்ய முடியும்?''

''தளபதியாகச் செயல்பட முடியாது. வேறு மாதிரி செயல்படலாம் இல்லையா?''

''நீ என்ன சொல்கிறாய்?''

கருமோகினி அவனுக்கருகில் உட்கார்ந்து கொண்டு ''தலைவரே! என் கண்களையே உற்றுப் பாருங்கள்'' என்றாள்.

''எதற்கு?''

''முதலில் பாருங்கள்.''

எதற்கென்று தெரியாமல் அவளது கண்களைப் பார்த்து விட்டு, ''பார்த்தேன்'' என்றான்.

''நன்றாகப் பார்த்தீர்களா?''

''ம்.''

''ஆழமாகப் பார்த்தீர்களா?''

''எதற்கு அதெல்லாம்?''

''தலைவரே! ஒருவரை நம்புவதா வேண்டாமா என்பதை அவர்களது கண்ணிலிருந்து கண்டுபிடித்துவிடலாம். ஆகவே தான் சொன்னேன்.''

''உன்னை நம்புகிறேன் சொல்.''

''உங்களைக் கைதியாக்கிவிட்ட தளபதிக்கு நீங்கள் உதவாதீர்கள்.''

''புரியவில்லை.''

''உங்களுக்குத் தெரிந்த விவரங்களைச் சொல்லாதீர்கள். குறிப்பாக உதயசந்திரனைப் பற்றியோ அவனது இருப்பிடத்தைப் பற்றியோ சொல்ல வேண்டாம். ஒருவேளை கேட்டால் இடத்தை மாற்றிச் சொல்லி விடுங்கள். அலையட்டும். இனி எல்லாமே அவர் பொறுப்புதானே?''

''அதனால் என்ன வந்துவிடப் போகிறது எனக்கு?''

''தலைவரே! பதவி பறிபோன விஷயம் உங்களுக்குப் பெரிதாகத் தோன்றவில்லையா?''

''ஆமாம்''

''அவமானமாகத் தோன்றவில்லையா?''

''ஆமாம்.''

''அநியாயமாகத் தோன்றவில்லையா?''

''ஆமாம் கருமோகினி. வேதனையாக இருக்கிறது. வெறுப்பாக இருக்கிறது. அதற்கென்ன இப்போது?''

''உங்கள் உழைப்பை உங்கள் நாடு உதாசீனப்படுத்தி விட்டது. அவமானப்படுத்திவிட்டது. அந்த நாட்டிற்கு நீங்கள் இனியும் விசுவாசமாக இருக்க வேண்டுமா?''

''கருமோகினி! என்னிடம் தவறுகள் இருக்கின்றன?''

''இருக்கட்டுமே யாரிடம் தான் குறைகள் இல்லை. வானத்தில் வலம் வரும் சந்திரனில் கூட கறை இருக்கிறது. கண்டதில்லையா நீங்கள்?''

''இப்படியெல்லாம் சொல்லி மன்னரிடம் விவாதிக்க முடியாது. என் தவறு மட்டுமே சுட்டிக்காட்டுவார்கள்.''

''அந்த நிலைமையெல்லாம் வரப்போகிறதா என்ன? யாருக்கு வேண்டும் வழக்கும் விசாரணையும்? இனி அவர்கள் எதற்கு? உங்களுக்கென்று ஒரு வழியை ஏற்படுத்திக் கொண்டு அதில் செல்ல வேண்டியதுதானே?''

''என்ன வழி அது?''

சொன்னாள் கருமோகினி.

திகைத்தான் தாவூத்.

''இது என்ன விபரீதமான யோசனை? எப்படி இதை நிறைவேற்ற முடியும்?'' என்று கேட்டான்.

''உங்களுக்கும் அராபியருக்கும் இனி எந்தவிதமான சம்பந்தமும் இல்லை என்ற முடிவுக்கு நீங்கள் வந்துவிட்டால் இந்த வழி தானே சரியான வழி?''

தாவூத்தின் மனதில் பேராசை விதையைத் தூவினாள் கருமோகினி.

முதலில் சுலைமானை பேராசையில் ஆழ்த்தினாள். பிறகு ஜமாலுதீனை ஆழ்த்தினாள். இரண்டுமே நிறைவேறாத பட்சத்தில் தலைத்தக்கோலத்திலிருந்து வணிகக் கப்பலில் மாநக்காவரத்திற்கு வந்து சேர்ந்தாள். தனது பிறப்பு மர்மம் முழுமையாகத் தெரிந்துவிட்ட பின் உதயசந்திரன் சுலைமானை மட்டும் கைதியாக ஸ்ரீவிஜயத்திற்கு அனுப்பி வைத்தானே தவிர மற்றவர்களைப் பற்றிக் கவலைப்படவில்லை. அவர்களை விடுதலை செய்தான். அவனிடம் ஏதாவது சூழ்ச்சி செய்து பார்க்கலாமா என்று நினைத்தாள் கருமோகினி. ஆனால் நினைத்த கணத்திலேயே அந்த நினைப்பு அழிந்துவிடவே மாநக்காவரத்திற்குச் சென்று தாவூத்தையாவது ஆட்டிப் படைத்து காலத்தை ஓட்டலாம் என்று தீர்மானித்து வணிக மரக்கலம் மூலம் மாநக்காவரம் சென்றாள். ஆனால் அவள் கரையிறங்கிய வேளை பொல்லாத வேளையாக இருந்தது. தாவூத்தின் பதவியை பறிக்க காசிம்கான் வந்திருக்கிறான் என்று தெரிய வந்ததும் பெரும் ஏமாற்றமாக இருந்தது. அந்த காசிம்கான் இரண்டு வெள்ளை அழகிகளோடு வந்திருப்பது தெரிந்ததால் அங்கே தனது சாகசம் பலிக்காது என்று கருதினாள். அதேசமயம் தாவூத் இருக்கும் வரை யோகம் தான் என்று கருதியவளாய் அவனை சமயம் பார்த்து நெருங்கி பேராசை வலையை விரித்தாள்.

காசிம்கானின் வரவால் நொந்து போயிருந்த தாவூத்திற்கு கருமோகினியின் யோசனை பிடித்திருந்தது. நியாயமானதாகவும் தோன்றியது. பிற நாட்டு மரக்கலங்களுடனான வணிக பரிவர்த்தனை மூலம் குவித்துள்ள செல்வங்களை முடிந்த மட்டும் களவாடி பூமியில் புதைத்து வைத்து போர் முடிந்து எல்லாம் ஓய்ந்த பின் அதைத் தோண்டி எடுத்துக் கொண்டு எங்காவது போய் விடலாம் என்று யோசனை சொல்லியிருந்தாள் கருமோகினி. தனது உழைப்பை உதாசீனப்படுத்திய அராபிய நிர்வாகத்திற்கு இந்த வகையில் பழி தீர்த்துக் கொள்வது சரியானதுதான் என்று நினைத்த தாவூத்திற்கு பேராசையும் தூண்டுகோலாக இருந்தது.

''காசிம்கானை ஏமாற்றி இக்காரியத்தைச் செய்வது அவ்வளவு எளிதல்ல மோகினி'' என்றான் தாவூத்.

''அது தெரியாதா? அவனது நிம்மதியைக் கெடுத்தால் தளர்ந்து போவான். அப்போது நம்மால் செயல்பட முடியும்'' என்றாள் கருமோகினி.

''அவனது நிம்மதியை எப்படிக் குலைப்பது?''

''அதற்கு நான் இருக்கிறேன்.''

''நீ என்ன செய்வாய்?''

''அவனது இரண்டு வெள்ளை அழகிகளைக் கொல்வேன்.''

''இது நடக்குமா?''

''நடக்கும். அவர்கள் இறந்தால் அவனது நிம்மதி குலையும்.''

''இப்போது தான் எனக்கு சந்தோஷமாகவும் திருப்தியாகவும் இருக்கிறது மோகினி! உன் மோகன வரவு எனக்கு மகத்தான நேரம்.''

''அப்படியா? உங்களுக்குப் பெண்கள் என்றால் பிடிக்காதாமே? உண்மையா?''

''ஆமாம்... இல்லை... அப்படி யார் சொன்னது?'' என்று தடுமாறினான் தாவூத்.

அவள் தனது உடலால் அவனை ஒரு இடி இடித்துவிட்டு மொட்டைத் தலையைத் தடவி முத்தமிட்டாள்.

அவனுக்கு தலை கிறுகிறுத்தது.

''என்னைக் கட்டிப் பிடித்துக் கொள்ளுங்கள்'' என்றாள் கருமோகினி.

அவன் கட்டிப் பிடித்தான். அதோடு நிற்கவில்லை அது நாள் வரை கட்டிப்போட்டு வைத்திருந்த காமத்தை அவிழ்த்து விட்டான். குடிசைக்குள் காம வெள்ளம் கரைபுரண்டு ஓடியது. விவஸ்தையற்ற காமத்திற்கும் வெட்கங்கெட்ட உறவுகளுக்கும் பெயர் போனவளான கருமோகினிக்கு தாவூத்தின் காமமும் வேகமும் சாதாரணமாக இருந்தது. தாவூத்திற்கோ அது அசாதாரணமாகவும் ஆச்சரியமாகவும் இருந்தது. 'இப்படிப்பட்ட சொர்க்கத்தைக் காணாமல் இத்தனை காலமாக குருடனாக இருந்தேனே! இத்தீவிலேயே பூத்த இக்காட்டு மல்லிகையை விட்டு கனக்கு போட்டுக் கொண்டிருந்தேனே! நான் எத்தனை மூடன்? இவள் முன்பாகவே வந்திருந்தால் விந்தைகளைப் புரிந்திருக்கலாமே' என்றெல்லாம் எண்ணி தேன் கூட்டை

உறிஞ்சும் குரங்கைப் போல செயல்பட்டான். சக்கையாய் வெளியேறினாள் கருமோகினி.

☆

காசிம்கான் மறுநாள் முதல் சுறுசுறுப்பாகச் செயல் பட்டான். முதல் வேலையாக நிதி வசூல் விவகாரத்தை தன்னோடு மரக்கலத்தில் வந்த அனுபவம் வாய்ந்த அராபிய வணிகர் ஒருவரிடம் ஒப்படைத்தான். மாநக்காவரத்தில் இருந்த பெரிய தீவுகள் அனைத்திற்கும் விஜயம் செய்தான். எல்லா தீவுகளிலும் காடுகள் மண்டிக் கிடந்தது அவனுக்குப் பிடிக்கவில்லை. ''தாவூத் இங்கே வந்து சேர்ந்ததுமே இக்காடுகளை அழித்திருந்தால் நன்றாக இருந்திருக்கும். இப்போது தாமதமாகி விட்டது'' என்று அதிருப்தியோடு சொல்லிக் கொண்ட அவன் பல மரக்கலங்களில் ஏறி பார்வையிட்டான்.

அவற்றிலெல்லாம் அம்பெறியும் பொறிகள் துரு பிடித்துக் கிடந்தன. பல பொறிகள் செயல்பட முடியாமல் இருந்தன.

''இதென்ன இவையெல்லாம் மரக்கலங்களா? மரத் தொட்டிகளா? இப்படிக் கிடக்கின்றன? இவற்றை வைத்துக் கொண்டு எப்படிப் போர் புரிய முடியும்?'' என்று மாலுமிகளைக் கேட்டான்.

வேறொரு இடத்தில் இரண்டு மரக்கலங்கள் கரைக்கு இழுக்கப்பட்டு அடிப்பாகம் சுத்தம் செய்யப்பட்டுக் கொண்டிருந்தன.

அதைப் பார்த்து, ''இந்த இரண்டு மரக்கலங்கள் மட்டும் சுத்தம் செய்யப்படுவதற்கு ஏதாவது விசேஷ காரணம் உண்டா?'' என்று மாலுமிகளிடம் கேட்டான் காசிம்கான்.

''விசேஷ காரணம் இல்லை தளபதி. எல்லா மரக்கலங்களுமே அடியில் பாசி படிந்திருக்கிறது. அதனால் வேகம் குறையும் என்பதால் இரண்டிரண்டு மரக்கலங்களாக கரையில் இழுத்து சுத்தம் செய்யச் சொன்னார் தலைவர் தாவூத்.''

''இரண்டிரண்டு மரக்கலங்களாக சுத்தம் செய்தால் ஆயிரம் மரக்கலங்களையும் சுத்தம் செய்ய எத்தனை வருஷங்கள் ஆகும்? இதென்ன முட்டாள் தனமான வேலை? இங்கே வந்த புதியதில் இந்தப் பணிகளை ஆரம்பித்திருந்தால் இன்னேரம் முடிந்திருக்கும் அல்லவா? இவ்வளவு காலமாக என்ன செய்து கொண்டிருந்தான் உன் தலைவன்? இது வேண்டாத வேலை. சுத்தம் செய்யும் பணி

இன்றோடு நிற்கட்டும். நாளைக்கு இந்த இரண்டு கப்பல்களும் கடலில் நிற்க வேண்டும்'' என்று உத்தரவிட்டான் காசிம்கான்.

பிறகு மாலுமிகளின் பெயர் பட்டியலை வாங்கிப் பார்த்தபோது அதில் மாலுமிகளின் பெயர்கள் மட்டுமே இருந்ததைக் கண்டு அதிருப்தியடைந்த தளபதி, ''இந்த பட்டியல் எதற்கு? நெற்றியில் ஒட்டிக் கொள்வதற்கா? ஒரு விவரமும் இல்லையே! மாலுமிகளின் வயது விவரம் இல்லை. இந்தக் குப்பையை யார் தயாரித்தது?'' என்று கேட்டான்.

''ஏற்கெனவே இருந்த பட்டியல் இது தளபதி. புதிதாக தயாரித்தது இல்லை.''

''அதைத் தயாரிக்காமல் என்ன செய்து கொண்டிருந்தீர்கள்? இந்தப் பட்டியலில் உள்ளவர்கள் எல்லாம் இப்போது உயிரோடு இருக்கிறார்களா தெரியுமா?''

''தெரியவில்லை தளபதி.''

''இங்கே வந்து சேர்ந்தவர்கள் எல்லோரும் முட்டாள்களாக அமைந்தது அரபு நாட்டின் துரதிர்ஷ்டம்'' என்று கடுகடுத்த காசிம்கான் பட்டியலை மாலுமிகளின் முகத்தில் எறிந்தான்.

எதில் எடுத்தாலும் குறையே நிறைவாக இருந்ததால் தினம் தினம் புதுபுதுக் கட்டளைகளையிட்டும் மாலுமிகளை திட்டியும் அவர்களை வறுத்தெடுத்ததால் மாலுமிகளுக்கு நெருப்பின் மீது நிற்பது போல் இருந்தது. புழுவாக நெளிந்தார்கள்.

ஒவ்வொரு மரக்கலத்திற்கும் ஓர் உபதளபதி இருக்க வேண்டும் என்று வலியுறுத்திய அவன் ஒவ்வொரு கப்பலிலும் இருக்கும் மாலுமிகளில் அதிகம் அனுபவம் வாய்ந்தவனை உபதளபதியாக்கும்படி அந்தந்த மரக்கல மாலுமிகளுக்கு உத்தரவிட்டான் தளபதி.

நிதி விஷயத்தில் நுழைந்தபோதும் அவனுக்கு அதிருப்தியே நீடித்தது. வசூல் செய்யப்பட்ட தொகையில் ஏறக்குறைய பாதியளவு திபெத்திய மன்னருக்கு அனுப்பப்பட்டிருப்பதாகத் தெரிந்தது. ஆனால், அனுப்பப்பட்டவை திபெத்திய மன்னருக்கும் போய் சேராததால் நஷ்டம் தான் பெருமளவிற்குத் தெரிந்தது. பல்வேறு நாடுகளை நிர்பந்தப்படுத்தி பல வகைகளில் வசூல் செய்து பெருமளவில் செல்வத்தை சேர்க்க வேண்டும் என்ற அராபிய மன்னரின் நோக்கம் முறையாக நிறைவேறவில்லை என்பது அவனுக்குச் சந்தேகத்திற்கிடமின்றிப் புரிந்தது.

தாவூத்தை அழைத்து இங்கேயே உயிரோடு புதைத்து விட்டால் என்ன என்று தோன்றியது. மரக்கலங்கள் சம்பந்தமாக பத்து நாட்களாகப் பல்வேறு யோசனைகளையும் ஆலோசனைகளையும் சொல்லிய போதெல்லாம் தாவூத்தைப் பொருட் படுத்தாமலேயே இருந்த காசிம்கான் நிதி விஷயத்தில் அவன் மீது பெரும் கோபம் கொண்டான். அவனை உயிரோடு புதைக்கும் எண்ணத்தை மாற்றிக் கொண்டு ''இவனை மன்னரிடமே அனுப்புவது தான் சரி. அவர் தான் இவனைச் சரியாக கவனித்துக் கொள்வார்'' என்று தீர்மானித்துக் கொண்டான்.

இதேசமயத்தில் தாவூத்தோ இவனது தீர்மானங்களைப் பற்றி அறியாமல் கருமோகினியை காட்டுப் பகுதியில் ரகசியமாகச் சந்தித்து கண்டபடி அனுபவித்து வந்தான். முதலையிடம் சிக்கிய மானைப் போல அவஸ்தைப்பட்ட கருமோகினி அவனிடமிருந்து விலகியிருக்கும் சமயங்களில் காசிம்கான் வட்டாரங்களில் பழகி பணிப் பெண்ணாக இடம் பிடித்தாள்.

இரவு நேரமாகியிருந்தது. தனது மரக்கலத்தில் மேல் தளத்தில் ஆசனத்தைப் போட்டு அமர்ந்திருந்தான் காசிம்கான். அவனுக்கு அருகில் இரண்டு வெள்ளை அழகிகளும் அமர்ந்திருந்தார்கள்.

அவர்களில் ஒருத்தி காசிம்கானைப் பார்த்து ''வந்ததிலிருந்து ஏகப்பட்ட ஏற்பாடுகளை செய்து விட்டீர்களே? என்ன செய்யப் போகிறீர்கள்? எதிரி எங்கே இருக்கிறான் என்பதை கண்டுபிடித்து விட்டீர்களா?'' என்று கேட்டாள்.

''இவ்வளவு காலமாக இங்கே இருந்த தாவூத் எதிரியின் இருப்பிடத்தையும் கண்டுபிடிக்கவில்லை. எதிரியின் நடமாட்டத்தையும் கவனிக்கவில்லை. எதிர் நடவடிக்கையும் எடுக்கவில்லை'' என்றான் காசிம்கான்.

''எதிரி யார்?''

''உதயசந்திரன்.''

''அவன் யார்?''

''பாரத நாட்டில் இருக்கும் பல்லவ ராஜ்யத்தின் கடற்படை தளபதி.''

''அவன் இருப்பிடமும் தெரியவில்லை. நடமாட்டமும் தெரியவில்லை என்கிறீர்கள். அவனை எதற்காகத் தேடிச் செல்ல வேண்டும்? இங்கே இருக்கும் ஆயிரம் மரக்கலங்களை பல்லவ நாட்டை நோக்கி அனுப்பினால் என்ன? கண்ணுக்குத் தெரியாமல் இருக்கும் எதிரியைத் தேடுவதை விட அவனது நாட்டைப் போய்

தாக்கினால் என்ன? பல்லவர் துறைமுகத்தில் ஆயிரம் மரக்கலங்கள் இருக்க வாய்ப்பில்லை அல்லவா?''

''உண்மைதான். எனது தீர்மானமும் அதுதான்'' என்றான் காசிம்கான்.

''அப்புறம் தாமதம் எதற்கு?''

அப்போது பணிப்பெண்ணாக அங்கே வந்த கருமோகினி சீனத்துப் பீங்கான் தட்டில் பழரசங்களைக் கொண்டு வந்து மூவருக்கும் நீட்டினாள்.

காசிம்கான் அதை வாங்கி குடிக்க முற்பட்டபோது ''சற்று பொறுங்கள்'' என்று சொன்ன ஓர் அழகி அவனிடமிருந்த பழரசத்தை வாங்கி கீழே சற்று ஊற்றிவிட்டு கையைத் தட்டினாள். அவளது வளர்ப்பு பூனை வந்து கீழே சிந்தப்பட்ட பழரசத்தை நக்கியது.

''எதற்கு இது?'' என்று கேட்டான் காசிம்கான்.

''இந்தப் பணிப்பெண் புதியவள். இன்று தான் பழரசம் கொண்டு வருகிறாள். இதில் விஷம் கலக்கப்பட்டிருக்கலாம். ஜாக்கிரதையாக இருக்க வேண்டுமல்லவா?'' என்று கேட்டாள் அழகி.

கருமோகினிக்கு வியர்த்தது.

☆☆☆



99

எரிந்த கப்பல்கள்

கருமோகினிக்கு வியர்த்தது.

ஏனென்றால் இரு அழகிகளுக்குமான பழரசத்தில் விஷத்தைக் கலந்திருந்தாள் அவள்.

அந்தப் பழரசத்தையும் அழகிகள் பூனையை விட்டுச் சோதித்துப் பார்க்க முற்பட்டால் தன் குட்டு வெளிப்பட்டு விடுமே என்று வியர்த்தது அவளுக்கு.

உண்மை வெளிப்பட்டுவிட்டால் மரக்கலத் தளமே தனக்கு கொலைக் களமாகிவிடும் என்று எண்ணி திகைத்தாள்.

இதற்கிடையில் சிந்திய பழரசத்தை நக்கிய பூனை கண்களைச் சிமிட்டி தாவி ஓடியது.

''இப்போது நீங்கள் அருந்துங்கள்'' என்று கூறி மீதி பழரசத்தைக் கொடுத்து வெள்ளை அழகி தனக்குத் தரப்பட்ட பழரசத்தைக் குடிக்க முற்பட்டாள்.

''இதைச் சோதிக்கவில்லையா?'' என்று கேட்டான் காசிம்கான்.

''தேவையில்லை. இங்கே நீங்கள்தான் முக்கியம். எங்களுக்கு யார் விஷம் வைக்கப் போகிறார்கள்?'' என்றாள்.

இரு அழகிகளும் பழரசத்தைக் குடித்தார்கள்.

காலிக் கோப்பைகளை வாங்கிக் கொண்டு வேகமாக ஓடினாள் கருமோகினி.

பழரசத்தைக் குடித்த அழகிகள் இருவருமே சிறிது நேரத்தில் சாய்ந்துவிடவே பரபரப்படைந்த காசிம்கான் கைகளைத் தட்டி மாலுமிகளை அழைத்தான். வைத்தியரைக் கூப்பிடச் சொன்னான்.

ஆனால் வைத்தியர் மரக்கலத்தில் இல்லை.

''தீவுக்குப் போயிருக்கிறார்'' என்றார்கள் மாலுமிகள்.

''தீவுக்கா? அங்கு போக யார் அனுமதி கொடுத்தது?'' என்று சீறிய காசிம்கான் ''இருவரையும் தீவுக்குக் கொண்டு செல்லுங்கள். வைத்தியரை வரச் சொல்லுங்கள்'' என்றான்.

எல்லாம் நடந்தது.

வைத்தியர், ''பயனில்லை தளபதி. இவர்கள் அருந்திய பழரசத்தில் கலக்கப்பட்டிருப்பது சக்தி வாய்ந்த நஞ்சு. மாநக்காவரக் காடுகளில் இத்தகைய கொடிய நஞ்சை உடைய காய்கள் நிரம்ப இருக்கின்றன. ரத்தத்தில் கலந்துவிட்டது. இறந்துவிட்டார்கள்'' என்றார்.

தலையில் கையை வைத்துக் கொண்டு உட்கார்ந்துவிட்டான் காசிம்கான்.

இரும்பு மனம் படைத்த அவனது மனம் இரு அழகிகளையும் சடலங்களாகக் கண்டதும் கலங்கியது.

திடீரென சூரியனும் சந்திரனும் மறைந்து விட்டது போலிருந்தது அவ்விரு அழகிகளின் மறைவு.

சற்று முன் உருப்படியான யோசனையைச் சொன்ன அந்த அரச குமாரிகள் சில நிமிடங்களுக்குள் சடலமாகி விட்டது அவனை வாட்டியது.

தனக்கு தரப்பட்ட பழரசத்தை சோதித்து தன்னைக் காப்பாற்றிய அவர்கள் தங்களுக்கு தரப்பட்ட பானத்தை சோதிக்காமல் பாதிக்கப்பட்டு விட்டதை எண்ணி உருகிப் போன அவன் ''எங்கே அந்தப் பெண்? பிடித்து வாருங்கள் அவளை'' என்று கடுகடுத்தான்.

கருமோகினியோ காலி கோப்பைகளைப் போட்டுவிட்டு மரக்கலத்தின் மறுபக்கத்திற்குப் போய் கடலில் குதித்து காட்டுப் பகுதியில் கரையேறி தாவூத் இருந்த மறைவிடத்திற்கு சென்று ''முடித்துவிட்டேன் தலைவரே. அழகிகள் இருவரும் இறந்திருப்பார்கள். காசிம்கான் அழுது கொண்டிருப்பான்'' என்றாள்.

ஈரம் சொட்டச் சொட்ட நின்றிருந்த அவளது கோலத்தைக் கண்டு உன்மத்தம் அடைந்த தாவூத் அவள் மீது தாவினான்.

கருமோகினி நினைத்தது போல் அழகிகளின் மரணத்தால் காசிம்கான் நிம்மதியை இழந்துவிடவில்லை.

அழகிகள் இருவரும் அவனுக்குச் சுகத்திற்கு மட்டுமின்றிச் சுகமான ஆலோசனைகளுக்கும் உதவியாக இருந்தது உண்மைதான். உயிரோடு இருந்தபோது இனிப்பான நிஜங்களாக

இருந்த அவர்களை அகால மரணத்திற்குப் பின் இனிப்பான நினைவுகளாக மாற்றிக் கொண்டு தனது வேலையில் தீவிரம் காட்டினான்.

அழகிகளின் மரணத்திற்குக் காரணமான கருமோகினியைப் பிடித்து தண்டிக்க வேண்டும் என்று பலரும் வற்புறுத்தினார்கள். அது சரிதான் என்றாலும் அதிலேயே தன்னை முழுவதுமாக ஈடுபடுத்திக் கொள்ள காசிம்கான் விரும்பவில்லை. அப்பொறுப்பை ஒரு சில மாலுமிகளிடம் ஒப்படைத்துவிட்டு பல்லவர் கடல் துறைமுகமான மாமல்லபுரத்தை எப்படித் தாக்குவது என்பது பற்றிய ஆலோசனையில் இறங்கினான்.

☆

இதே சமயத்தில் வேறொரு இடத்தில் உதயசந்திரனும் ஆலோசனையில் இறங்கியிருந்தான். மாநக்காவரத்திற்கு நேரெதிராக இருந்த இலாமுரி தேசத்திற்கு இரண்டு நாட்களுக்கு முன்பு தான் அவனது 500 மரக்கலங்களும் பல்வேறு கடல் தளங்களிலிருந்து வந்து சேர்ந்திருந்தன. எப்போது ஸ்ரீவிஜய இளவரசனுக்கு உதயசந்திரன் நண்பனானானோ அப்போதே ஸ்ரீவிஜயம் மற்றும் மலைய நாடு ஆகியவற்றின் கடல் பகுதிகளை தளங்களாகப் பயன்படுத்திக் கொள்ள அனுமதி தந்திருந்தான் ஸ்ரீவிஜய இளவரசன். அது முதல் உதயசந்திரனின் மரக்கலங்கள் பிரிந்து மாப்பாளம், தலைத்தக்கோலம், பண்ணை ஆகிய இடங்களில் தளமிட்டுத் தங்கின. மாநக்காவரத்து மரக்கலங்கள் சிலவற்றைத் தாக்கி அழித்தன.

உதயசந்திரன் பண்ணையில் இருந்த போது* மாமல்ல புரத்திலிருந்து வந்த மரக்கலத்தில் அவனது நண்பர்களான அரிச்சந்திரன், ஐராவதன், பரதன் ஆகியோர் வந்தார்கள். பழைய நண்பர்களான அவர்களைச் சந்தித்ததில் பெருமகிழ்ச்சி யடைந்தான் உதயசந்திரன். அவனைப் பற்றி காம்போஜ மன்னன் பல்லவ மாமன்னர் ராஜசிம்மருக்கு செய்தியனுப்பி யிருந்ததாகவும் அதில் அவனைப் பற்றிய எல்லா விவரங்களும் தெரிவிக்கப்பட்டிருந்ததாகவும் அவற்றை அறிந்து மன்னர் பெரிதும் பரவசப்பட்டதாகவும் சொன்னார்கள் அவனது நண்பர்கள். எல்லோரது நலம் பற்றியும் விசாரித்த உதயசந்திரன் மனநிறைவோடு தனது பணிகளைத் தொடர்ந்தான்.

---

* பண்ணை என்பது ஸ்ரீவிஜயத்தின் மேற்கு கடற்கரைப் பட்டிணங்களில் ஒன்று.

அதில் முக்கிய பணி ஒன்றுக்கு அரிச்சந்திரனைத் தேர்ந் தெடுத்து மாநக்காவரத்திற்கு அனுப்பியிருந்தான் உதயசந்திரன். அவனை அனுப்பிவிட்டு தனது கடற்படையுடன் தலைத்தக் கோலத்திற்கு வந்திருந்தான். இந்த நிலையில்தான் ஆலோசனை நடந்தது. அதில் ஐராவதன், பரதன், கடல்முகன், சீனன், விஜயதசமி ஆகிய ஐவரும் கலந்து கொண்டார்கள்.

''நாம் அரிச்சந்திரனை மாநக்காவரத்திற்கு அனுப்பி ஒரு மாத காலம் ஆகிறது. அவனிடமிருந்து தகவல் வரவில்லை. அவன் சென்ற பணி நிறைவேறியதாகவும் தெரியவில்லை'' என்றான் உதயசந்திரன்.

''அரிச்சந்திரன் மேற்கொள்ள வேண்டிய பணி மிகவும் ஆபத்தானது. எடுத்தோம் கவிழ்த்தோம் என்று செயல்பட முடியாது தளபதி'' என்றான் கடல்முகன்.

''உண்மைதான். அதேசமயம் அரிச்சந்திரனை நாம் தனியாக அனுப்பவில்லை. வணிக கப்பல்கள் மூலம் ஏறக்குறைய மூவாயிரம் பேரை முன்பும் பின்புமாக அனுப்பியிருக்கிறோம். அரிச்சந்திரன் திறமையானவன். ஆகவே அவன் இந்நேரம் தனது பணியை முடித்துவிட்டுத் திரும்பியிருக்க வேண்டும்'' என்றான் உதயசந்திரன்.

அவன் கூறியது உண்மையாக இருக்கவே ஐவரும் மௌனமாக இருந்தார்கள்.

''மாநக்காவரத்தில் ஏதாவது சிக்கலோ அல்லது மாற்றமோ உண்டாகியிருக்க வேண்டும். ஆகவே தாமதமாகிக் கொண்டிருக் கிறது'' என்று சொன்ன உதயசந்திரன், ''அரிச்சந்திரனுக்குத் தாமதமாகிக் கொண்டிருக்கிறது என்பதால் நாமும் தாமதம் செய்து கொண்டிருக்கக் கூடாது. இதுவரை நாம் ஓரிடமாக இல்லாமல் தளங்களை மாற்றிக் கொண்டே இருந்தோம். தாவூத் திபெத்திய மன்னருக்கு அனுப்பி வைத்த பொக்கிஷ மரக்கலங்களை இருமுறை தாக்கி பொக்கிஷங்களையும் மரக்கலங்களையும் கைப்பற்றினோம். கைப்பற்றிய பொக்கிஷங்களையும், மரக்கலங்களையும் ஸ்ரீவிஜயம், சாவகம், புஷ்பகத் தீவு, காம்போஜம் ஆகியவற்றுக்கு அனுப்பி வைத்தோம். அதற்குக் காரணம் அந்த செல்வங்கள் அனைத்தும் மேற்கண்ட நாட்டு மரக்கலங்களிலிருந்து அராபியர்களால் சுரண்டப் பட்டவை. ஆகவே அவற்றை உரியவர்களுக்கே அனுப்பி வைத்தேன். இதற்கிடையில் மாநக்காவரத்திற்கு அருகில் சென்று முதலில் நான்கு பிறகு நான்கு என்று எட்டு அராபியர் மரக்கலங்களை

அனுப்பி வைத்தோம். இப்போது நாம் அராபியர் கடல் தளத்திற்கு வெகு அருகில் வந்துவிட்டோம். அதாவது கடல் வாயிலில் வடக்கே அராபியர் தளம் இருக்கிறது. தெற்கே நாம் இருக்கிறோம். நமது இருப்பிடத்தைத் தெரிந்து கொண்டால் அவர்கள் மூன்றே நாட்களில் இங்கு வந்து தாக்கலாம். அப்படி நடப்பதற்குள் நாம் முந்திக் கொள்வது நல்லது'' என்றான்.

''மாநக்காவரத்தில் ஆயிரம் மரக்கலங்கள் இருக்கின்றன'' என்றான் கடல்முகன்.

''ஆயிரம் என்பது தோராயக் கணக்காக இருக்கும். ஏனென்றால் அவர்களது மரக்கலங்கள் பலவற்றை அழித்திருக்கிறோம். கைப்பற்றியிருக்கிறோம். அவற்றின் எண்ணிக்கை நூறு என்று வைத்துக் கொண்டால் தற்போது அராபியர் வசம் 900 கப்பல்கள் இருக்க வேண்டும். ஆயிரம் என்றே கணக்கிட்டுக் கொண்டே நமது திட்டத்தை தீட்டுவது நல்லது. இந்த வரைபடத்தைப் பாருங்கள்'' என்று கூறி வரைபடத்தைக் காட்டிய உதயசந்திரன் ''மாநக்காவரத்தில் தற்போது மக்கள் புழக்கத்தில் இருக்கும் எட்டுத் தீவுகளை இந்த எட்டுப் புள்ளிகள் காட்டுகின்றன. இவற்றில் நான்கு தீவுகள் பெரியவை. நான்கு தீவுகள் சிறியவை. நாமிருக்கும் திசையிலிருந்து பார்த்தால் முதலில் இருக்கும் முகப்புத் தீவு பெரிதாக இருக்கிறது. இந்தத் தீவுக்குத்தான் வணிகக் கப்பல்கள் வருவதும் போவதுமாக இருக்கின்றன. இதையடுத்து சிறிய தீவு இருக்கிறது. அதையடுத்து மரக்கலங்கள் செல்லக் கூடிய அளவிற்கு அகலமான இடைவெளி இருக்கிறது. அதற்குப் பிறகு இடைவெளி எதுவும் கிடையாது. சிறிய தீவுகள் மூன்றும் பெரிய தீவுகள் மூன்றும் ஆக மொத்தம் ஆறு தீவுகள் வரிசையாகவும் தொடர்ச்சியாகவும் இருக்கின்றன. வணிக ஒற்றர்கள் தெரிவித்த தகவலின் படி இந்தத் தீவுகளைச் சுற்றி நீள்வட்டக் கோடு போட்டது போல அராபியரின் போர் மரக்கலங்கள் இருக்கின்றன. இவற்றை எந்த இடத்திலும் உடைக்க முடியாது. ஆகவே நமது மரக்கலங்களின் எண்ணிக்கை அராபியர் மரக்கலங்களின் எண்ணிக்கையில் பாதிதான். என் யோசனை என்ன வென்றால் நமது 500 கப்பல்களையும் மாநக்காவரத் தீவுகளின் ஏதாவது ஒரு பக்கத்திற்கு அதாவது கிழக்கிலோ மேற்கிலோ கொண்டு சென்று தாக்கினால் சரியாக இருக்கும். 500 கப்பல்களையும் கொண்டு தாக்கினால் அவர்களது மரக்கல வரிசை அழியும். அல்லது பெருமளவில் சேதாரப்படும். அப்படி ஏதாவது நடந்து பிறகு நமது மரக்கலங்கள் தீவின் மறுபுறத்திற்குச் சென்று

தாக்கலாம். அல்லது அப்போது உருவாகும் நிலைமைக் கேற்றபடி நடந்து கொள்ளலாம். என்ன சொல்கிறீர்கள்?'' என்று கேட்டான்.

உதயசந்திரனின் திட்டத்திற்கு யாரும் பதில் மறுப்பு சொல்லவில்லை. திட்டம் மாறுவதாக இருந்தால் அது மாநக்காவரத்தை அணுகிய பிறகு தான் முடியும் என்பது அவர்களுக்குத் தெரிந்தது.

அதையடுத்து மொத்தமுள்ள 500 மரக்கலங்களை நூறு நூறு மரக்கலங்களாகப் பிரித்த உதயசந்திரன் ஒவ்வொரு நூறுக்கும் கடல்முகன், சீனன், ஐராவதன், பரதன் ஆகியோரை தலைவர்களாக நியமித்து ஐந்தாவது பிரிவுக்கு அவனே தலைமையேற்றான். அவனோடு விஜயதசமி இருந்தாள்.

மாநக்காவரத்தை இரவில் நெருங்கும் வகையில் பயண திட்டத்தை வகுத்து ''நம்பிக்கை நட்சத்திரங்களை'' புறப்பட உத்தரவிட்டான் உதயசந்திரன். அவனது 500 மரக்கலங்களும் இலாமுரி தேசத்திலிருந்து புறப்பட்டு வடகிழக்கில் திரும்பி மாநக்காவரத்தை அணுகியபோது மாநக்காவரமே பற்றி எரிவது போல பெரும் தீ கடலில் மூண்டிருந்தது.

''அரிச்சந்திரன் பணியை நிறைவேற்றிவிட்டான்'' என்றான் உதயசந்திரன்.

☆

தனது திட்டத்தை நிறைவேற்ற முற்பட்ட காசிம்கான் உபதளபதிகள் எல்லோரையும் அழைத்தான். அதோடு வணிகர்கள் பலரையும் அழைத்தான். அவர்களிடம் மாமல்ல புரத்து துறைமுக நிலைமையைப் பற்றி கேட்டுத் தெரிந்து கொண்டான். அவர்கள் பல தகவல்களைத் தெரிவித்தார்கள்.

''மாமல்லபுரத்தில் பல்லவர்களின் போர்க்கலங்கள் எவ்வளவு இருக்கும்?'' என்று கேட்டான் காசிம்கான்.

''மாமல்லபுரத்தில் இருநூறு மரக்கலங்கள் இருக்கலாம் ஐயா. அதோடு அதற்கு வடக்கே இருக்கும் மயிலைத் துறைமுகத்திலும் போர்க்கலங்கள் இருக்கலாம்.''

''இரண்டிற்கும் உள்ள தூரம் எவ்வளவு?''

''அரை நாள் பயணம் இருக்கும்.''

''மாமல்லபுரத்திற்கும் பல்லவர் தலைநகருக்கும் உள்ள தூரம்?''

''இதே அளவுக்கு அரை நாள் பயண தூரம் தான்.''

வணிகர்களை அனுப்பிவிட்டு உபதளபதிகளைப் பார்த்த காசிம்கான், ''எல்லோரும் நன்றாகக் கேட்டுக் கொள்ளுங்கள். பல்லவ நாட்டு கடற்படையின் எண்ணிக்கை எப்படிப் பார்த்தாலும் குறைவுதான். ஆகவே, மாமல்லபுரத்தை தாக்குவதற்கு இதுவே சரியான தருணம். உதயசந்திரன் என்னும் எதிரியைத் தேடி அலைவதை விட அவனது அஸ்திவாரமான மாமல்லபுரத்தைத் தாக்கி நம் வசப்படுத்திக் கொள்வதே விவேகமானது. பல்லவர் துறைமுகம் நம் கைகளுக்கு வந்துவிட்டால் உதயசந்திரனும் அங்கே வந்து சேருவான். வந்தால் அவனை முறியடிப்போம். நான் அரபு நாட்டை விட்டு புறப்பட்ட போதே மேலும் பல மரக்கலங்களை அனுப்பி வைக்கும்படி மன்னரிடம் சொல்லிவிட்டுத்தான் வந்தேன். அவையும் வந்து சேரும் பட்சத்தில் நமது பலம் மிகப் பெரியதாகிவிடும். எப்பேர்பட்ட எதிரியும் நம்மை எதிர்கொள்ள முடியாது'' என்று கூறி சற்றே நிறுத்திவிட்டு ''இப்போது நமது முக்கிய வேலை எதிரியை பூண்டோடு அழிப்பதுதான். அதுவரை மாநக்காவரத்தில் வணிக விஷயங்களில் அதிகமான முக்கியத்தைத் தர வேண்டிய அவசியமில்லை. அந்தப் பணிகளைச் செய்ய இங்கே ஒரு சில மரக்கலங்கள் மட்டும் முகப்புத் தீவில் இருந்தால் போதும். நம்மிடம் திரண்ட செல்வத்தில் பாதியை தாவூத் உதயசந்திரனிடம் பறி கொடுத்துவிட்டான். மீதிச் செல்வத்தை மரக்கலத்தில் ஏற்றி அரபு நாட்டிற்கு அனுப்ப உடனடியாக ஏற்பாடு செய்யுங்கள். அந்த மரக்கலம் நாளைக்கு எப்படியும் புறப்பட்டுவிட வேண்டும். மறுநாள் மீதமுள்ள மரக்கலங்களுடன் நாம் மாமல்லபுரத்திற்குச் செல்வோம்'' என்றான்.

அதையடுத்து காரியங்கள் வெகுவேகமாக நடைபெற்றன. எல்லா மாலுமிகளும் சேர்ந்து செல்வக் குவியல்களை மூட்டை மூட்டைகளாகக் கட்டி காசிம்கான் வந்த மரக்கலத்தில் ஏற்றுவதில் முழு மூச்சாக ஈடுபட்டார்கள். திட்டமிட்டபடியே செல்வங்களால் நிரப்பப்பட்ட காசிம்கானின் மரக்கலம் நான்கு பாதுகாப்பு மரக்கலங்களுடன் அரபு நாட்டை நோக்கிப் புறப்பட்டது.

மறுநாள் மாலுமிகள் தீவுகளிலேயே தங்கி தங்களுக்கு வேண்டிய உணவு வகைகளைத் தயாரிக்கச் சொல்லி வயிராற உண்டு களித்தார்கள். அனைவரையும் பாராட்டி தட்டிக் கொடுத்தான் காசிம்கான். இரவு மாலுமிகள் அனைவரும் மரக்கலத்திற்குப் போய் விடும்படியும் மறுநாள் மாமல்ல புரத்திற்குப் புறப்படலாம் என்றும் சொன்னான் காசிம்கான்.

ஆனால் அன்று இரவு நேரம் தொடங்கிய சிறிது நேரத்திற்கெல்லாம் அராபிய மரக்கலங்கள் திடீரென பற்றி எரிந்தன. ஓரிரு மரக்கலங்களில் ஆரம்பித்த தீ பல மரக் கலங்களிலும் வெளிப்பட்டன. அதை உணர்ந்த காசிம்கானும் மாலுமிகளும் மரக்கலங்களை நோக்கி ஓடினார்கள்.

☆

உதயசந்திரன் திட்டம் தீட்டிக் கொடுத்தபடி வணிக மரக்கலத்தில் மாநக்காவரத்திற்கு வந்து சிறைபட்ட அரிச்சந்திரனுக்கு எல்லாமே திட்டமிட்டபடி நடந்தது. நான் சரியாக நடந்து கொள்ளாவிட்டால் தாவூத் தனது கைகால்களை எடுத்துவிடுவான் என்பதை உணர்ந்து கொண்டு தைரியமாக நடந்து கொண்டு புத்திசாலித்தனமாகப் பேசினான். அதற்குப் பலன் இருந்தது. அவனும் உதயசந்திரனும் எதிர்பார்த்தது போல் அவன் கொல்லப்படவில்லை. தாவூத்தால் விடுவிக்கப்பட்டான்.

தான் விடுவிக்கப்பட்டது தாவூத்தின் கருணையால் அல்ல தந்திரத்தால்தான் என்பதை உணர்ந்து கொள்ள அரிச்சந்திரனுக்கு எந்தவிதமான சிரமமும் இல்லை. தன்னை தாவூத்தின் ஆட்கள் கண்காணிக்காமல் இருக்க மாட்டார்கள் என்பதை உணர்ந்த அவன் ஏதோ ரகசிய காரியத்தில் ஈடுபடுவதுபோல் காட்டுக்குள் சென்று நாடகமாடினான். அவனது செய்கையால் அராபிய ஒற்றர்கள் ஏமாந்ததுதான் மிச்சம். கடைசியில் தான் புறப்படுவதாகச் சொல்லி மரக்கலம் ஒன்றில் ஏறி மறுபக்கத்தில் இறங்கி தீவுக்கே வேறு ஓரிடத்தில் வந்து சேர்ந்த அரிச்சந்திரன் ஏற்கெனவே மாநக்காவரத்திற்கு வணிகர்களாக வந்திருந்த வீரர்களைச் சந்தித்து உதயசந்திரனின் திட்டத்தைச் சொன்னான். அராபிய மரக்கலங்களுக்குச் சென்று தனது திட்டம் நிறைவேறுவதற்கான பொருட்கள் அவற்றில் இருந்ததை உறுதி செய்து கொண்டான். திட்டத்தை நிறைவேற்ற நேரத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்தான்.

அராபிய மாலுமிகள் செல்வக் குவியல்களை மரக் கலங்களில் ஏற்றிவிட்டு கரையில் கூடிக் களித்தபோது இதுதான் சமயம் என்று கருதிய அரிச்சந்திரன் மூவாயிரம் வீரர்களை காட்டுப் பகுதிகளிலிருந்து வெளிப்பட்ட அராபியர் மரக் கலங்களுக்கு செல்லும்படி பணித்தான். இரவு நேரம் தொடங்கியதும் தங்கள் வேலையை முடித்துவிட்டு வீரர்கள் மரக்கலத்தை விட்டு நீங்கி கடலுக்குப் போய்விட வேண்டும் என்று கூறினான்.

அதன்படியே மரக்கலத்திற்கு மூன்று மூன்று பேராகப் போய்ச் சேர்ந்த வீரர்கள் இரவு தொடங்கியதும் அம்மரக் கலங்களில் இருந்து வாணங்களையும் வெடிப்பொருட்களையும் பற்ற வைத்துவிட்டு கடலில் குதித்தார்கள். வாணங்களும் வெடிகளும் பெருந்தீயாக மாறி மரக்கலங்களை பற்ற வைத்தன.

இந்த விவரம் எதுவும் காசிம்கானுக்கு விளங்கவில்லை தான். ஆனால் இப்படித்தான் நடந்திருக்க வேண்டும் என்று ஊகித்துக் கொண்டு மாலுமிகளுக்குப் பல்வேறு கட்டளைகளை யிட்டான். அப்போது கடல் பகுதியில் அதுவும் மேற்குப் பகுதியில் கொம்பொலிகள் கேட்கவே கடற்கரை மாளிகையின் உச்சிக்குச் சென்று கவனித்தான். அங்கே கடல் பிசாசுகளைப் போல மரக்கலங்கள் திரண்டிருந்ததைக் கண்டான். அது உதயசந்திரனின் கடற்படைதான் என்பதை உணர அவனுக்குச் சிரமமாக இல்லை.

உதயசந்திரனின் திட்டமும் அவனுக்குப் புரிந்தது.

அராபியரின் மரக்கலங்கள் அதிகமென்பதால் அவற்றை எதிர்கொள்வது சிரமம் என்று கருதி அரிச்சந்திரனை முதலில் மாநக்காவரத்திற்கு அனுப்பி சமயம் பார்த்து மரக்கலங்களைக் கொளுத்தி எண்ணிக்கையினை குறைத்துவிட்டு பிறகு தனது கடற்படையைக் கொண்டு எஞ்சிய மரக்கலங்களைத் தாக்கி அழிப்பதுதான் உதயசந்திரனின் திட்டம் என்பது தெளிவாகப் புரிந்தது அவனுக்கு. மாளிகையை விட்டு இறங்கினான்.

☆

அரிச்சந்திரன் தனது பணியை நிறைவேற்றிவிட்டான் என்று உதயசந்திரன் கூறியபோது அராபியர் மரக்கலங்கள் பல நன்றாகக் கொழுந்துவிட்டு எரிந்து கொண்டிருந்தன. ''மரக்கலங்கள் எவ்வளவு அழிகின்றனவோ அழியட்டும். காத்திருக்கலாம்'' என்றான் உதயசந்திரன்.

ஆனால் காசிம்கானோ அவனைக் காத்திருக்க விடவில்லை.

☆



100

வெற்றியும் வரவேற்பும்

அராபியரின் மரக்கலங்கள் எரிந்து அழியும் வரை அழியட்டும். பிறகு போரைத் துவக்கலாம் என்று உதயசந்திரன் எண்ணிய வேளையில் அதற்கு இடம் கொடாமல் காசிம்கான் சுதாரித்துக் கொண்டிருந்தான். ஏறக்குறைய எல்லா மரக்கலங்களுமே எரிய ஆரம்பித்தாலும் மாலுமிகள் விரைந்து செயல்பட்டதால் மரக்கலங்கள் பலவற்றில் தீ அணைக்கப் பட்டன. தீயால் வெகுவாகப் பாதிக்கப்பட்ட மரக்கலங்களை உதயசந்திரனின் கடற்படையை நோக்கி அனுப்பினான் காசிம்கான். தனது கப்பல்களை நோக்கி தீக்கப்பல்கள் வேகமாக வருவதைக் கண்டு உதயசந்திரனுக்கு வியப்பாக இருந்தது. மாநக்காவரத்தில் இருக்கும் அராபியர் தலைவன் திறமையானவன் தான் என்பது அவனுக்குப் புரிந்தது.

காப்பாற்ற முடியாமல் தீய்க்குப் பலியாகும் மரக்கலங்களை வீணாக்க விரும்பாமல் அவற்றை தனது கப்பல்களை நோக்கி அனுப்பினால் அவை மோதி தனது கப்பல்களுக்கு தீயை தானம் செய்யும் என்ற திட்டத்துடன் எதிரி செயல்படுவது உதய சந்திரனுக்குப் புரிந்தது. ஆனால் கடற்கரை பகுதியிலிருந்து அலைகளை எதிர்த்து எதிரி மரக்கலங்கள் இத்தனை வேகமாக முன்னேறி வருவது எப்படி என்பது முதலில் அவனுக்கு விளங்கவில்லை. பிறகுதான் புரிந்தது. காற்று திசை மாறி வீசுகிறதென்பதையும் அதை அராபியர் தலைவன் கவனித்து விட்டே தீக்கப்பல்களைத் தன் மீது அனுப்புகிறான் என்பதை உணர்ந்த உதயசந்திரன் அருகில் இருந்த விஜயதசமியிடம் ஏதோ கூறியதும் அவனது மரக்கலங்களில் இருந்த மாலுமிகள் சங்கொலிகளை மாறி மாறி எழுப்பி அடையாளங்களைக் காட்டினார்கள்.

அதையடுத்து மாநக்காவரத்தின் மேற்குபுறத்தில் திரண்டிருந்த உதயசந்திரனின் மரக்கலங்கள் தங்களை எதிர் நோக்கி வரும்

தீக்கப்பல்களைச் சந்திக்காமல் இருபுறமும் விலகி மாநக்காவரத்தின் மறுபுரத்திற்கு செல்ல முற்பட்டன. இதன் காரணமாக உதயசந்திரனின் கப்பல்களை நோக்கி வந்த தீக்கப்பல்கள் நடுக்கடலுக்குச் சென்றன. அவை ஏற்கெனவே நன்றாக எரிந்து கொண்டிருந்ததாலும், சுக்கானைத் திருப்ப முடியாத அளவிற்கு மரக்கலத் தண்டுகள் சேதமாகியிருந்ததாலும் அவற்றுக்குப் பின்னாலிருந்து வீசிய காற்று தீயை அதிகப் படுத்தியதாலும் அவற்றால் திரும்பவோ உதயசந்திரனின் கப்பல்களைத் துரத்தவோ முடியாமல் கடல் பகுதியிலேயே வெடித்துச் சிதறின. மூழ்கிப் போயின.

இதே சமயம் மரக்கலங்களை மாநக்காவரத்தின் மறுபுறம் அதாவது கிழக்குப் புறத்தில் உதயசந்திரன் கொண்டு செல்வதை அறிந்த காசிம்கான் தளரவில்லை. கடலில் மூழ்கிவிட்ட தீக்கப்பல்களின் எண்ணிக்கை முன்னூறுக்கு மேலிருக்கும் என்று மாலுமிகள் சொன்னதைப் பற்றி அவன் கவலைப்பட வில்லை. மாநக்காவரத்தின் கிழக்கு பக்கத்திற்குச் சென்றான். மேற்கு கடற்கரையைப் போல கிழக்கு கடற்கரையில் காற்று சாதகமாக இல்லை. காற்றானது பொதுவாக திசை மாறி கிழக்கிலிருந்து மேற்கில் வீசியதால் மேற்கு கடற்கரையில் சாதகமாக இருந்தது. அதனால் தீக்கப்பல்களை வேகமாக அனுப்ப முடிந்தது. ஆனால் கிழக்குப் பகுதியிலோ அதே காற்று நேர்மாறாக கரையை நோக்கி வேகமாக வீசியது. அலைகளும் பெரிதாக எழுந்தன. எனவே மாநக்காவரத்தின் கிழக்குப் பகுதியில் எரிந்து கொண்டிருந்த மரக்கலங்களை தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ள காசிம்கானால் முடியவில்லை. ஆகவே எரியும் மரக்கலங்களை விட்டு மற்ற மரக்கலங்களை திரட்டி உதயசந்திரனின் மரக்கலங்களோடு மோதுவதற்கு ஆயத்தப்படுத்த அடையாள சமிக்ஞைகளை கொம்புகள் மூலம் தெரிவித்தான் காசிம்கான்.

இந்நிலையில் மாநக்காவரத்தின் கிழக்குப் பகுதியில் உதயசந்திரனின் மரக்கலங்கள் திரண்டன. தங்களை நோக்கி அராபியர் மரக்கலங்கள் வருவதைக் கண்ட உதயசந்திரன் விஜயதசமியிடம், ''கிழக்குப் பகுதியில் காற்றும் அலையும் நமக்குச் சாதகமாக இருக்கின்றன விஜயா. அராபியரின் மரக்கலங்கள் இந்த அலைகளையும் காற்றையும் எதிர்த்து வேகமாக முன்னேற முடியாது. ஆகவே நாம் வேகமாக முன்னேறி அவற்றுடன் மோத வேண்டும். மோதும் போது நமது மரக்கலங்களின் அடிப்பாகத்தில் இருக்கும் இரும்புச் சலாகைகள்

நீண்டிருக்க வேண்டும். வேகத்துடன் மோதும்போது அச்சலாகைகள் எதிரி மரக்கலங்களைப் பிளக்கும். உடனே நமது விசையை அழுத்தி சலாகைகளை இழுத்துக் கொண்டு சுக்கானையும் திருப்ப வேண்டும். எங்கெல்லாம் இது முடிகிறதோ அங்கெல்லாம் செயல்படுத்தலாம். சமிக்ஞைகளை அனுப்பு'' என்றான்.

விஜயதசமியும் அவ்வாறே செய்ய அவனது உபதளபதிகளான ஐராவதன், பரதன், கடல்முகன், சீனன் ஆகியோர் தயாரானார்கள்.

காசிம்கான் தனது மரக்கல மாலுமிகளுக்கு உரிய கட்டளைகளை இட்டிருந்தான்.

உதயசந்திரனின் போர்த்திட்டம் என்னவாக இருக்க முடியும் என்பதை அவனால் ஊகிக்க முடிந்தது.

உதயசந்திரனின் மரக்கலங்கள் முன்னேறி வந்தபோது காற்றின் வேகம் மேலும் அதிகரித்தது. அலைகளின் எழுச்சியும் அதிகமாக இருந்தது. அதன் காரணம் அப்போது உதயசந்திரனுக்கு விளங்கவில்லை. மரக்கலங்களை வேகமாகச் செலுத்தி அராபியர் மரக்கலங்களுடன் மோதச் செய்தான். அவன் நினைத்தது நடந்தது. நினைக்காததும் நடந்தது.

தனது மரக்கலங்களை நெருங்கி உதயசந்திரனின் மரக்கலங்கள் வேகமாக மோதும் போது அவற்றை நோக்கி வாணங்களையும் வெடிமருந்துகளையும் கொளுத்தி வீசும்படி காசிம்கான் கட்டளையிட்டிருந்தபடியால் அவனது மாலுமிகள் வாணங்களையும் வெடிமருந்துகளையும் தங்கள் மரக்கல சேமிப்பிலிருந்து எடுத்து வீசியதால் உதயசந்திரனின் மரக்கலங்கள் பலவற்றில் தீப் பற்றிக் கொண்டன.

உதயசந்திரன் இதை எதிர்பார்க்கவில்லை.

தனது மரக்கலங்கள் பிளக்கப்பட்டாலும் பரவாயில்லை எதிரி மரக்கலங்களைச் சேதப்படுத்தாமல் விடக் கூடாது என்ற காசிம்கானின் நோக்கம் அவனுக்குப் புரிந்தது.

எனவே தீயை அணைக்கவும், இரும்புச் சலாகைகளை இழுத்துக் கொள்ளவும், சுக்கானைத் திருப்பி மரக்கலங்களைத் திருப்பவும் அவன் ஆணையிட்டான். ஆனால் காற்றை எதிர்த்து கப்பலைத் திருப்பவும் செலுத்தவும் மிகவும் கடினமாய் இருந்தது. இந்த முயற்சி ஈடேறுவதற்குள் பல மரக்கலங்களில் தீப்பற்றி எரிந்தது.

காசிம்கான் தனது மரக்கலங்கள் பல அடிப்பாகம் பிளக்கப்பட்டு மூழ்கிப் போனாலும் உதயசந்திரனின் கப்பல்கள்

பல பற்றி எரிந்ததைக் கண்டு மகிழ்ச்சியடைந்தான். மூழ்காத கப்பல்களை உதயசந்திரனின் மரக்கலங்களை நோக்கிச் செலுத்த வைத்தான்.

உதயசந்திரனின் மூளை சுறுசுறுப்பாக இயங்கியது. காற்றுக்கும் அலைகளுக்கும் எதிராக மரக்கலங்களைத் திருப்பிச் செலுத்த முடியாததை உணர்ந்த அவன் மரக்கலங்களை கரையை நோக்கியே செலுத்தும்படி உத்தரவிட்டான்.

அந்த நடவடிக்கை காசிம்கானைத் திணற வைத்தது. எரிந்த கப்பல்களும் எரியாத கப்பல்களுமாய் உதயசந்திரனின் கப்பல்கள் தனது எஞ்சிய கப்பல்களை நோக்கி வருவதைக் கண்ட அவனுக்கு காலனே தன்னை நோக்கி வருவதாகத் தோன்றியது. அதோடு அக்கப்பல்கள் பேரலைகளால் தூக்கப்பட்டு வருவதைக் கண்டபோது தனது மரக்கலங்கள் அவற்றால் தாக்கப்பட்டுச் சிதறும் என்பதால் தனக்கு முடிவு நெருங்கிவிட்டதை உணர்ந்து போர் நிறுத்தச் சங்கை ஊதினான்.

ஆனால் அலைகளால் மற்றும் காற்றால் விரட்டப்பட்ட உதயசந்திரனின் மரக்கலங்கள் அவனது மாலுமிகளின் கட்டுப்பாட்டை விட்டுவிலகி விட்டதால் நிற்க முடியாமல் கரையை நோக்கியே வந்தன. அப்படி வந்த கப்பல்களிலிருந்து தீவாணங்களும் கோளங்களும் காசிம்கான் மரக்கலங்கள் மீது வந்து வீழ்ந்தன. அந்த தீவாணங்களும் கோளங்களும் சீன நாட்டிலிருந்து கொண்டு வரப்பட்டிருந்த சக்தி வாய்ந்த தீ சக்திகளாக இருந்ததால் அவை அராபியர் மரக்கலங்களில் விழும் போதே தீச்சிதறல்களாய் வெடித்துச் சிதறியபடி விழுந்ததால் தீ வேகமாகப் பற்றிக் கொண்டது.

அதேசமயம் காற்றின் திசை மாற்றம், வேகம், அலைகளின் பேரெழுச்சி ஆகியவற்றுக்கு எண்ண காரணம் என்று விஜயதசமி கூறியதும் வியந்து போன உதயசந்திரன் தனது மரக்கலங்களுக்கு அபாய அடையாளங்களையும் மாற்று சமிக்ஞைகளையும் எழுப்பினான். அவற்றை மிகச் சரியாகப் புரிந்து கொண்ட மாலுமிகள் காற்றின் வீச்சிற்கு ஏற்ப மரக்கலங்களை இயக்கி மாநக்காவரத்தின் மேற்கு புறத்திற்கு கொண்டு சென்றார்கள்.

அன்றிரவு மாநக்காவரம் வரலாறு காணாத பேரலைகளின் எழுச்சியைக் கண்டது. அத்தீவின் கிழக்குப் புறத்தில் எழுந்த பேரலைகள் ஆழிப் பேரலைகளாக* எழுந்து தீவுக்குள் புகுந்தது.

* சுனாமி

பலத்த சேதாரத்தை உண்டாக்கியது. கரைகள் கடலால் பாதிக்கு மேல் விழுங்கப்பட்டன. இரவு முழுவதும் ஆழிப் பேரலைகள் தீவை நோக்கி பேயாட்டம் போட்டுவிட்டு விடியும் போது ஓய்ந்தன.

மாநக்காவரம் கந்தல் கந்தலாகிக் கிடந்தது. கடற்கரையிலும் தீவிலுமாகச் சடலங்கள் சிதறிக் கிடந்தன. அவற்றுக்கிடையே பூவிழியின் செல்லப் பிராணியான லெமூரின் சடலமும் கிடந்தது. கடல் நீர் தீவுக்குள் புகுந்திருந்தது. விஜயதசமி ஆழிப் பேரலைகளைப் பற்றி தனக்குத் தெரிந்ததை சமயத்தில் கூறியதால் உதயசந்திரனின் மரக்கலங்கள் அப்பேரலைகள் உக்கிரமாவதற்கு முன்பாகவே மேற்குப் பகுதிக்கு வந்து விட்டதால் தப்பின. எனினும் பேரலைகள் இயற்கை சக்திகளாதலால் சில மரக்கலங்களைத் தூக்கி எறிந்தன.

புவியியல் வரலாற்றின் படி எங்கெல்லாம் பூமியின் மேற்பரப்பு லேசான தட்டுகளாக இருந்து மோதுகின்றனவோ அப்போதெல்லாம் கடலின் அடிப்பரப்பு மிகவும் பாதிக்கப்பட்டு ஆழிப் பேரலைகளைத் தோற்றுவித்து நிலப்பகுதியில் அத்துமீறி நுழைந்து விடுகின்றன என்று தெரிய வருகிறது.

ஸ்ரீவிஜயம், மாநக்காவரம், சாவகம் போன்ற கீழைக் கடல் பகுதிகள் லேசான பூமித் தட்டுகளாக இருப்பதாக வரலாற்றியல் கூறுகிறது. அந்தப் பகுதியில் உண்டான பூமி உராய்வு காரணமாகவே ஆழிப் பேரலைகள் உண்டாகி மாநக்காவரத்தைத் தாக்கின.

மறுநாள் உயிர் பிழைத்தவர்கள் திரண்டபோது அதில் காசிம்கானும் இருந்தான்.

''நேற்றிரவு உண்டான ஆழிப்பேரலைகள் உங்களை அழித்ததோடு அராபியரின் கனவுகளையும் தகர்த்து விட்டது என்பதை உணர்ந்து கொள்ளுங்கள் தளபதி. உங்கள் அக்கிரமத்தைக் கண்டு இயற்கை பொங்கி எழுந்திருக்கிறது'' என்றான் உதயசந்திரன்.

காசிம்கான் அசரவில்லை.

''புயலும் ஆழிப் பேரலையும் கடலின் சொத்துக்கள் உதயசந்திரா. அவற்றை எதிர்க்கும் ஆற்றல் கொண்டவர்கள் அராபியர்கள். எனது கடற்படையை நீயும் பேரலைகளும் இப்போதைக்கு அழித்திருக்கலாம். ஆனால் இது எங்களுக்கு முடிவல்ல. எங்கள் மன்னரிடம் நான் சொல்லிவிட்டுத்தான்

வந்திருக்கிறேன். எங்களது மகத்தான கடற்படையொன்று விரைவில் இங்கு வரும். எங்கள் ஆதிக்கம் தொடரும்'' என்றான்.

''தொடராது தளபதி. ஏனென்றால் உங்கள் கடற்படை இங்கே வராது.''

''ஏன்?''

''உங்கள் ஆதிக்கம் அரபிக்கடலுடன் முடிந்துவிட்டது.''

''எப்படிச் சொல்கிறாய்?''

''லட்சத்தீவுகள் பல்லவரது ஆதிக்கத்திற்கு வந்துவிட்டன*. அங்கிருக்கும் மகத்தான பல்லவர் கடற்படையை மீறி ஒரு அராபியக் கப்பலும் கிழக்குக் கடலில் வரமுடியாது.''

''இது உண்மையா?''

''ஆம். அதுமட்டுமல்ல. இலங்கையிலும் பல்லவரது கடற்படை தளம் அமையப் போகிறது. ஆகவே உங்களுக்கு பூர்வக்கடலில் இனி வேலையில்லை. ஆழிப்பேரலைகள் உங்கள் ஆதிக்கத்திற்குச் சங்கொலியாக அமைந்துவிட்டது'' என்றான் உதயசந்திரன்.

காசிம்கானுக்குப் புரிந்துவிட்டது உதயசந்திரன் தங்களது ஆதிக்கத்தை - கடலாதிக்கத்தை - கடல் கோட்டையை தகர்த்துவிட்டான் என்று. அராபியர் அகற்றப்பட்ட நிலையில் திபெத்தியர்களும் தாமாக அகன்று விடுவார்கள் என்பதும் புரிந்தது. பேராசை பெருநஷ்டம் என்பதும் அத்து மீறுபவர்கள் ஆணி வேரோடு அழிக்கப்படுவார்கள் என்பதும் தெளிவாகப் புரிந்ததால் தோல்வியை ஒப்புக் கொண்டு மௌனமாக நின்றான்.

☆

இரண்டு மாதங்கள் கழித்து உதயசந்திரனின் கப்பற்படை மாமல்லபுரத்தில் வெற்றிப் படையாக - அந்நியரின் ஆதிக்கத்தை அகற்றிய அசகாய சூரப்படையாக நங்கூரமிட்டு இறங்கியபோது பல்லவ மாமன்னர் ராஜசிம்மரே நேரில் வந்து வாழ்த்தி வரவேற்றார். மங்கல வாத்தியங்களும், துந்துபிகளும், குடமுழாக்களும், கொம்புகளும் முழங்கின. வேட்டுக்கள் அதிர்ந்தன.

''அராபியரின் கடல்கோட்டையைத் தகர்த்த மாவீரரே வாழ்க! வாழ்க!'' என்று வாழ்த்தொலிகள் விண்ணதிர எழுந்தன.

---

* page 116 'Kanchipuram in Early Sourth Indian History' by – T.V.Mahalingam

பிறகு காஞ்சியை அடைந்தபோதும் மாநகரமே அவனை வாழ்த்தி வரவேற்றது. சேனாதிபதி பகதத்தர் அவனைக் கட்டிப் பிடித்து உச்சி மோந்தார். பேரமைச்சர் ஆசி கூறினார்.

ஆனால் உதயசந்திரனின் கண்கள் பல இடங்களில் அலை பாய்ந்தன.

பௌர்ணமி எந்த இடத்திலும் காணவில்லை.

''எங்கே போயிருப்பாள்?'' என்று அலைபாய்ந்தது அவன் மனம்.

நேராகப் பாண்டவ தூதப் பெருமாள் ஆலயத்திற்குச் சென்று வழிபட்டான்.

''பாண்டவதூதா! எம்பெருமானே! பல்வேறு சோதனை களிலிலிருந்து மீண்டு நாட்டிற்கு வெற்றியைக் கொடுத்தேன். ஆனால் இவை உன் செயலே அன்றி எனது செயலல்ல. என்னால் ஆகக் கூடியதுமல்ல. உன் திருவடிகளைச் சரணமடைகிறேன் ஆண்டவா'' என்று நெஞ்சார வேண்டிக் கொண்டான்.

அர்ச்சகரும் அவனை வாழ்த்தி விட்டு, ''நம்பினார் கெடுவதில்லை. இப்பாண்டவ தூதனை நம்பினால் தோற்ப தில்லை'' என்றார்.

''உண்மைதான் சுவாமி. அதேசமயம் இது தனிப்பட்ட என் ஒருவனின் முயற்சியல்ல. கூட்டு முயற்சி. அதோடு உங்கள் மகன் அரிச்சந்திரன் மாநக்காவரத்தில் தனது அசகாய சூரத்தனத்தைக் காட்டாமல் இருந்திருந்தால் வெற்றி கிடைத்திருக்காது. இந்தப் போர் பலரையும் மாவீரர்களாக்கியிருக்கிறது. அந்த விதத்தில் நீங்களும் பெருமைப்படலாம்'' என்று சொல்லிவிட்டு, ''பௌர்ணமி எங்கே சுவாமி?'' என்று கேட்டான்.

''அவள் எங்கே இருக்க முடியும்? உன் இல்லத்தில் தான்.''

போனான் உதயசந்திரன்.

அவனுக்கு ஆரத்தி எடுத்தாள் பௌர்ணமி.

''நான் வெற்றி பெற்று விட்டேன் பௌர்ணமி. அராபியரை வெற்றி கொண்டு விட்டேன்'' என்றான் உதயசந்திரன்.

அவளோ, ''அதெல்லாம் ஒரு வெற்றியா?'' என்றாள் அலட்சியமாக.

''இதென்ன பௌர்ணமி இப்படிச் சொல்கிறாய்?''

''உங்களது சிறப்பான - மகத்தான வெற்றியைக் காட்டுகிறேன். வாருங்கள் உள்ளே.''

போனான் உதயசந்திரன்.

அங்கே தொட்டிலில் இருந்தது ஒரு குழந்தை.

''பாருங்கள். இதை விடவா நீங்கள் பெரிய வெற்றிகளைப் பெற்றுவிட்டீர்கள்?'' என்று கேட்டாள் பௌர்ணமி.

குழந்தையை வாரி எடுத்து அணைத்த உதயசந்திரன் ''நீ சொல்வது உண்மை தான் பௌர்ணமி. என் பெயரை வரலாறு சொல்கிறதோ இல்லையோ - இவன் சொல்லுவான். உனக்கு மிகவும் நன்றி. இவனுக்குப் பெயர் வைத்துவிட்டாயா?'' என்று கேட்டான்.

''மாமன்னரே வைத்துவிட்டார்.''

''என்ன பெயர் பௌர்ணமி?''

''இதயசந்திரன்''

''மன்னருக்கு இணை மன்னர்தான்.''

☆

மறுநாள் மன்னர் அவனை அழைத்துச் சென்று ''பார்த்தாயா?'' என்று கேட்டார்.

அவர் காட்டியது புதிதாகக் கட்டப்பட்டிருந்த கைலாச நாதர் கோயிலை.

மன்னரிடம் தான் அறிமுகமான போது மணல் கோயிலாக மாதிரி வடிவத்தில் இருந்த கோயில் தற்போது மணற்பாறைகளால் பிரம்மாண்டமாகவும் கலை நயத்தோடும் உண்டாகி யிருந்ததைக் கண்டு பிரமித்து நின்றான் உதயசந்திரன்.

கோயிலின் சிறப்புகளை விவரித்த மன்னர், ''இந்த அங்க ஆலயத்தை வடிவமைத்துக் கட்டியவள் பட்டத்து ராணி ரங்கப்பதாகா.* இந்த அங்க ஆலயத்தை இளவரசன் மகேந்திரன் வடிவமைத்துவிட்டு போருக்குச் சென்று உயிரை இழந்தான்.* இதோ இந்த சிற்பம் ஜேஷ்டா தேவியின் சிற்பம். தீய ஆவிகளின் தெய்வங்களில் ஜேஷ்டா தேவியும் ஒன்று. இளையராணிக்கு பிரம்ம ராட்சஸ் பிடித்திருந்தது அல்லவா? அது நீங்கிய பிறகு ஜேஷ்டா தேவிக்கு சிறப்பு செய்ய நினைத்தாள் லோகமாதேவி. அதன் அடையாளம் தான் இந்த ஜேஷ்டா தேவியின் சிற்பம்.''

---

* page 132 'Kanchipuram in early South Indian History' by – T.V.Mahalingam

* page 177 'தமிழ்நாட்டு வரலாற்று கருத்தரங்கு' பதிப்பாசிரியர். டாக்டர் இரா.நாகசாமி.

ஆலயம் முழுவதையும் கண்டபின் ''திருக்கைலாயம் கூட இப்படி இருக்காது மன்னவா. கயிலை வாழ் சிவபெருமான் இங்கே குடி வந்து விட்டாலும் வரலாம்'' என்றான் உதயசந்திரன் பரவசத்துடன்.

''உண்மைதான் உதயசந்திரா. நான் எதிர்பார்ப்பதும் இதைத்தான். நீ வரவேண்டும் என்று தான் இதன் குடமுழுக்கு விழாவிற்காகக் காத்திருந்தேன். நீ வந்து விட்டாய். நாள் குறிக்கப்பட்டுவிட்டது. பௌர்ணமியன்று விழா. அன்றைக்கு காம்போஜ மன்னரும் மகளும் வருகிறார்கள்'' என்றான் மன்னன்.

உதயசந்திரனின் நினைவு திடீரென காம்போஜத்திற்குச் சென்றது. மன்னர் மகளும் தெய்வப் பிறவியுமான பூவிழியின் மீது சென்றது. அவளை பௌர்ணமி ஏற்பாளோ என்ற கவலையும் பிறந்தது.

இதற்கிடையில் குடமுழுக்கு விழா நடக்கவிருந்த தினத்திற்கு முன் நாள் இரவு பல்லவ மன்னருக்கு ஒரு சொப்பனம் வந்தது. ''பல்லவ மன்னா, நீ செய்யவிருக்கும் குடமுழுக்கு வைபவத்தைத் தள்ளிப் போடு. நாளைக்கே திருநின்றவூருக்குச்* செல். அங்கே எனது அடியார் பூசலார் கட்டியிருக்கும் கோயிலுக்கான குடமுழுக்கு விழாவைக் கண்டு விட்டு வா'' என்று சிவபெருமான் கூறினார்.

குடமுழுக்கு விழாவை நிறுத்திவிட்டு திருநின்றவூருக்குச் சென்றான் ராஜசிம்மன். அங்கே பூசலாரைத் தேடிச் சென்று கண்டான். ''ஐயா! வணக்கம். நான் பல்லவ மன்னன். தாங்கள் ஏதோ சிவாலயம் கட்டி குடமுழுக்கு நடத்தப் போகிறீர்களாமே இன்று! அது எங்கே இருக்கிறது?'' என்று வினவினான்.

''அதோ பாருங்கள் மன்னா'' என்று ஆகாயத்தைக் காட்டினார் பூசலார்.

அவர் சுட்டிக்காட்டிய வானவெளியில் எதுவுமில்லை. வெட்ட வெளியாக இருந்தது.

''ஒன்றும் தெரியவில்லையே சுவாமி?''

''நன்றாகப் பாருங்கள். குடமுழுக்கு நடந்து கொண்டிருப்பதைக் கண்ணாரக் களியுங்கள் மன்னா.''

''குடமுழுக்கு நடைபெறுகிறதா? வானவெளியிலா? என்ன சொல்கிறீர்கள்?''

---

* இது திருவள்ளுவர் மாவட்டத்தில் உள்ளது.

''அதோ விழா முடிந்துவிட்டது. புனித நீரைத் தெளிக்கிறார்கள். சிரசில் ஏற்றுக் கொள்ளுங்கள். என் மீது இதோ விழுந்துவிட்டது. ஆகா! எப்பேர்பட்ட பேறு?''

''பூசலாரே! தாங்கள் கனவு காண்கிறீர்களா?''

''மன்னர் பெருமானே! மக்களுக்கு ஆசை அதிகமானால் கற்பனையான ஆகாச கோட்டையைக் கட்டுவார்கள். எனக்கு இருந்த ஒரே ஆசை சிவபெருமானுக்கு ஆலயம் எழுப்பி குடமுழுக்கு நடத்த வேண்டும் என்பதுதான். அதை நான் கற்களால் கட்டவில்லை. எண்ணங்களால் கற்பனையாகக் கட்டினேன். இன்று இந்த ஆலயத்திற்குப் பெருமான் வருவதாகவும் குடமுழுக்கு விழாவை நடத்தும்படியும் உத்தரவிட்டார். அதைத்தான் செய்து முடித்தேன். ஆனந்தமாக இருக்கிறது.''

''கற்பனையில் கோயில் கட்டி அதற்கு குடமுழுக்கு விழாவா?''*

வியந்தான் மன்னன்.

விளம்பரம் இன்றி ஆர்ப்பாட்டமும் இன்றி இரைச்சல்களும் இன்றி இப்படியொரு குடமுழுக்கு விழாவை நடத்துவது என்றால் அது இப்படியொரு உண்மை அடியவரால்தான் முடியும்.

ராஜசிம்மனுக்கு ஏதோ உணர்ந்தது போல் இருந்தது.

''காஞ்சியில் கைலாயநாதன் கோயிலைக் கட்டி ஊரெல்லாம் பிரமிக்கும்படி சிறப்பாகச் சிற்பங்களோடு வடிவமைத்து அதில் கயிலையில் இருக்கும் பெருமான் குடிவந்துவிடுவான் என்றும் இக்கோயில் உலகம் போற்றும் கலைக்கோயிலாக இருக்கும் என்று நினைத்தோமே அது ஆணவமல்லவா? கற்பனையிலேயே கோயிலமைத்து குடமுழுக்கும் செய்துவிட்ட பூசலாருக்கு முன்பு நான் துரும்பாக அல்லவா ஆகிவிட்டேன்? என் ஆணவத்தை எனக்கு உணர்த்தத்தான் சிவபெருமான் குடமுழுக்கு விழாவைத் தள்ளிவிட்டு இங்கே அனுப்பி வைத்தானோ?'' என்று தனக்குத் தானே கேட்டுக் கொண்ட மன்னன் காஞ்சிக்கு வந்தான்.

மறுநாள் குடமுழுக்கு விழா காஞ்சி கைலாய நாதர் கோயிலுக்கு வெகுசிறப்பாக நடந்தது.

---

* இச்சம்பவங்கள் பெரியபுராணத்தில் பூசலார் நாயனார் புராணத்தில் கூறப்பட்டிருக்கின்றன.

அங்கே ராஜசிம்மன் மன்னனாக இல்லாமல் சங்கர பக்தனாக - ஈசான சரவணனாக - ஈஸ்வர பக்தனாக - சிவ சூடாமணியாக இருந்து வைபவத்தை நடத்தினான்.

மறுநாள் அரசவையில் உதயசந்திரனின் நண்பர்களான அரிச்சந்திரன், ஐராவதன், பரதன், விஜயதசமி, கடல்முகன், சீனன் ஆகியோருக்குத் தகுந்த பதவிகளை அளித்த பல்லவ மன்னன் உதயசந்திரனைப் பார்த்து ''வீரனே! நீ வீரசாகசங்களைச் செய்தது போதும். ஓய்வெடுக்க வேண்டிய நேரம் இது. வேகவதியாற்றையடுத்த வில்வலத்தை உனக்கு அளிக்கிறேன். இனி வில்வலத் தலைவனாக* சிறப்புடனும் ஆனந்தத்துடனும் வாழ்வாயாக'' என்று வாழ்த்தினான்.

☆

மறுநாள்.

பௌர்ணமி பூ தொடுத்துக் கொண்டிருந்தாள்.

''என்ன பௌர்ணமி, பூ தொடுத்துக் கொண்டிருக்கிறாயா?'' என்று அசட்டுத்தனமாகக் கேட்டான் உதயசந்திரன்.

''இல்லை. காய்களை தொடுத்துக் கொண்டிருக்கிறேன்'' என்றாள் பௌர்ணமி.

''நீ கோபப்படமாட்டாய் என்றால் ஒரு விஷயம் உன்னைக் கேட்க வேண்டும்'' என்று தயங்கியபடி கேட்டான் வீரத்தில் எதற்கும் தயங்காத அந்த மாவீரன்.

''என்ன விஷயம்?''

''ஒன்றுமில்லை. நான் காம்போஜத்தில் இருக்கும் போது மன்னர் மகளான பூவிழி...''

''பூவிழிக்கு என்ன?''

''அவள் நல்லவள். வல்லவள். இனியவள். இதமானவள்.''

''என்ன உளறுகிறீர்கள்?''

''அவள் என்னை விரும்புகிறாள். நானும் அவளை விரும்பி விட்டேன். அவள் இப்போது காஞ்சிக்கு வந்திருக்கிறாள்.''

''அதனால் என்ன?''

☆ page 12 Kanchipuram in this Early South Indian History by – T.V.Mahalingam

''நீ அனுமதி அளித்தால்...''

''அளித்தால்?''

''அவளை மணந்து...''

''மணந்து கொள்ளப் போகிறீர்களா? முடியாது. போங்கள் உள்ளே'' என்று அவனைப் பிடித்து அறையிலே தள்ளி கதவைச் சாத்தினாள்.

உள்ளே இருந்தாள் பூவிழி.

''பூவிழி நீயா?''

''நானேதான்.''

''நீ எப்படி?''

''என் சகோதரி சம்மதம் தந்துவிட்டாள்.''

''பௌர்ணமியா?''

''ஆமாம்.''

''எதற்கு?''

''எதற்கா? சீன நாட்டின் மீது படையெடுப்பதற்கு?''

''படையெடுப்பதற்கா? மீண்டுமா?''

''போதும். இது கூடவா தெரியவில்லை? வாருங்கள் இப்படி'' என்று இழுத்தாள் பூவிழி.

''இரு. இரு. பொறு. பொறு'' என்றான் உதயசந்திரன்.

''முடியாது'' என்றாள் பூவிழி.

மறுநாள் இரவு.

''மிகவும் நன்றி பௌர்ணமி'' என்றான் உதயசந்திரன் அவளை அரவணைத்தபடி.

''எதற்கு?''

''உன் பெரிய மனதிற்கு.''

''இல்லை. அவளுக்குத்தான் பெரிய மனம்.''

''எப்படி?''

''என் அனுமதி இல்லாமல் உங்களை மணக்க முடியாது என்றாள் அவள். எத்தனை பேர் இப்படி இருப்பார்கள்?'' என்று சொன்ன பௌர்ணமியின் கண்கள் கலங்கின.

''எதற்கு கலங்குகிறாய் பௌர்ணமி?''

''நீங்கள் முகத்தை பாழாக்கிக் கொண்டு விட்டீர்களாமே?'' என்று கேட்டு அவன் முகத்தை மெதுவாகத் தடவிவிட்டு ''முகம் சீராகாமல் இருந்திருந்தால் என்னாகி இருக்கும்? எத்தனை பெரிய காரியத்தைச் செய்துவிட்டீர்கள்?'' என்று கேட்டாள்.

''நம்பிக்கையோடு தான் என் முகத்தைப் பாழாக்கிக் கொண்டேன் பௌர்ணமி. ஒவ்வொரு வியாதி பிறக்கும்போதும் அதற்கான மருந்தும் எங்கேயோ பிறக்கத்தான் செய்கிறது. முகத்தைக் கெடுக்க ஒரு மூலிகை இருந்தால் அதைச் சீராக்கவும் ஒரு மூலிகை இருக்கும்.''

''எத்தனையோ சவால்கள். எத்தனையோ ஆபத்துகள். எல்லாவற்றையும் கடந்து நீங்கள் வந்து சேர்ந்தது என் பாக்கியம். எனது தெய்வம் என்னைக் கைவிடவில்லை.''

''உண்மைதான் பௌர்ணமி. எல்லாமே எனக்கு கனவு போல இருக்கிறது'' என்றான் உதயசந்திரன்.

''அந்தக் கனவுகள் இனிமேல் வேண்டாம். இன்பமான இல்லறம் தான் இனி. உங்களுக்கு நான் ஒரு கண் என்றால் பூவிழி ஒரு கண். சரியா?''

''சரி'' என்றான் உதயசந்திரன்.

அதை ஆமோதிப்பது போல் அருகில் இருந்த பாண்டவ தூதப் பெருமாள் ஆலயத்திலிருந்து மணியோசை பெரிதாக எழுந்தது.

(நிறைந்தது)

☆☆☆

இந்நூலை உருவாக்குவதற்கு உதவிய நூல்கள்

1. Kanchipuram in Early South Indian History – T.V.Mahalingam
2. Geography and Economics – N.Rangarajan & Ramanuja doss
3. Foreign Notices in South India – NA.Nilakanta Sastri
4. Ancient India - V.D.MahaJan
5. Our world – The National Geographical Society
6. The Oxford History of India – Vincent Smith
7. History of China – R.K.Mujundar and A.N.Srivasta
8. South India & Srilanka – K.K.Pillai
9. Thiruparuthikundram and its Temples – T.N.Ramachandran
10. 500 Things you should know about History – Andrew Langley
11. The Origin of Species – Charles Darwin
12. தமிழ்நாட்டு வரலாறு (பல்லவர் - பாண்டியர் காலம்) - தமிழ்நாடு அரசு வெளியீடு
13. பெரிப்ளூஸ் - வி.எஸ்.வி.ராகவன்
14. புராதன இந்தியா என்னும் பழைய 56 தேசங்கள் - பி.வி.ஜகதீச ஐயர்
15. தமிழக வரலாறு - ந.சுப்ரமணியன்
16. தமிழர் வரலாறு - பி.டி.சீனுவாச ஐயங்கார்
17. இந்தியா 1761 வரை - ஏ.சுவாமிநாதன்
18. சோழர்கள் - நீலகண்ட சாஸ்திரி (தமிழில் கே.வி.ராமன்)
19. பிற்காலச் சோழர் வரலாறு - சதாசிவ பண்டாரத்தார்
20. பண்டைய நாகரீகங்களின் வரலாறு - கி.ர.அனுமந்தன்
21. தமிழக சாவகக் கலைத் தொடர்புகள் - அ.ராகவன்
22. தக்காண வரலாறு - டி.என்.வாசுதேவன்
23. 3000 ஆண்டுகள் தமிழனின் கடல்வழி வணிகம் - ஆர்.என்.சாமி
24. இஸ்லாமிய மதம் - பா.ராகவன்
25. யுவான் சுவாங் இந்திய பயணம் - பொன்.சின்னத்தம்பி முருகேசன்
26. மார்க்கோபோலோ பயணக் குறிப்பு - பொன்.சின்னத்தம்பி முருகேசன்
27. மாமல்லபுரம் - நடன காசிநாதன்
28. தமிழர் இலக்கியம் - கா.கோவிந்தன்
29. தமிழ் இலக்கிய வரலாறு - கிருஷ்ணை - முத்து ராமலிங்கம்

30. பழந்தமிழராட்சி - தேவநேயப் பாவாணர்
31. தமிழ் வரலாற்றுச் சிந்தனைகள் - ந. சுப்ரமணியன்
32. பெரியபுராண ஆராய்ச்சி - மா.ராசமாணிக்கம்
33. கடல்வழி வணிகம் - நரசய்யா
34. இந்திய ஓவியங்கள் - ஸுபா
35. செங்கிஷ்கான் - முகில்
36. பண்டையத் தமிழர் பண்பாடு - ஐயம்பெருமாள் கோனார்
37. தமிழ்நாடு வரலாற்று கருத்தரங்கு - பதிப்பாசிரியர் ரா.நாகசாமி
38. செங்கை மாவட்ட வரலாற்று கருத்தரங்கம் - பதிப்பாசிரியர் ரா.நாகசாமி
39. சங்ககால வரலாற்று ஆய்வுகள் 1 - மயிலை.சீனி.வேங்கட சாமி
40. நரசிம்ம வர்மன் - மயிலை.சீனி.வேங்கடசாமி
41. மகேந்திரவர்மன் - மயிலை.சீனி.வேங்கடசாமி
42. சங்ககாலத் தமிழர் வரலாறு 2 - மயிலை.சீனி.வேங்கடசாமி
43. தமிழுக்கு வழங்கிய கொடை 1 - மயிலை.சீனி.வேங்கடசாமி
44. பௌத்தமும் தமிழும் - மயிலை.சீனி.வேங்கடசாமி
45. அஞ்சிறைத்தும்பி - மயிலை.சீனி.வேங்கடசாமி
46. சமணமும் தமிழும் - மயிலை.சீனி.வேங்கடசாமி
47. ஆய்வுக் கட்டுரைகள் - மயிலை.சீனி.வேங்கடசாமி
48. தொகுப்பு நூல்கள் (மூன்றாம் பகுதி) - மயிலை.சீனி.வேங்கடசாமி
49. காஞ்சிக் கோயில்கள் - க.குளத்தூரான்
50. தமிழர் கடல் சார் வரலாறு - தஞ்சை பல்கலைக் கழக வெளியீடு
51. திருமுறைத்தலங்கள் - பு.மா.செந்தில்நாதன்
52. பல்லவர் வரலாறு - மா.ராஜமாணிக்கம்
53. தெய்வத்தின் குரல் (பாகம் 5) - காஞ்சி சங்கராச்சாரியார்
54. புராதன இந்திய இலக்கிய வரலாற்று கலைச் சொல் களஞ்சியம் - கிருஷ்ணமாச்சாரியார்
55. செங்கடல் - புரட்சிதாசன்
56. இமயமலை - சோ.மோகனா
57. தென்மேற்கு ஆசிய வரலாறு - கா.அசதுல்லா
58. இடைக்கால நாகரீகத்தின் வரலாறு - சி.ர.அனுமந்தன்
59. கடல் கொண்ட தென்னாடு - கண்ணதாசன்
60. சோழர் வரலாறு - மா.ராசமாணிக்கம்

☆☆☆


80
90
100
110
120
20
10
0
R. GODĀVARĪ
R. KRSNĀ
R. PĒNAR
R. KĀVĒRĪ
DVĀRĀVATĪ
HAMSAVATI
AMARAVATI
SIAM
(SYAMARATTHA)
ANGKOR
CAMPA
INDRAPURA
LAVAPURI
KAMBHOJA
SAGARA
KĀNCĪPURA
NĀGAPATTINAM
MĀPAPPĀLAM
TALAITTAKKOLAM
(TAKUAPA)
(JAIYA)
MĀYIRUDINGAM
SABAH
ANURĀDHAPURA
MA-NAKKAVARAM
(NICOBAR IS)
LANGĀSŌKAM
PUNAN
KADĀRAM
(KEDAH)
TAMBRALINGA
BORNEO
PANNAI
(PĀNI)
(JAMBI)
MALAIYŪR
BANGKA
(SIPORA Is)
ŚRĪVIJAYA
(Palembang)
(N. PAGI IS)
(S. PAGI IS)
MADURA
BALI
LOMBOK
JAVA

உதயணனின்

கடல் கோட்டை

வரலாற்று நாவல்

சீதை பதிப்பகம்